மங்கை சிவத்தின்

உதயணன்

சாரதா அம்மையாரின் தொடர்கதை வெளியீடு







மங்கை வேந்தன்

உதயணன்



சீதை பதிப்பகம்,

சென்னை-05. ☎ 97907 06549/97907 06548

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

AVAILABLE @ :

GOWRA PUTHAGA MAIYAM
9, SAINT JOHN CHURCH COMPLEX,
ROCKINS ROAD, TRICHY - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
4A/186, V.R. பிள்ளை தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.

GOWRA AGENCIES
4A/186, V.R. PILLAI STREET,
TRIPLICANE, CHENNAI - 05.
9790706548 / 044 28443791.
gowra09@gmail.com

மாங்கை வேந்தன் / MANGAI VENDAN

விலை : ரூ. **700.00** CODE : **1524**

எழுதியவர் :
உதயணன்
பொருள் : நாவல்

© உரிமை : பதிப்பகத்திற்கே

பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு :
முதற் பதிப்பு – 2016
வெளியீடு :
சீதை பதிப்பகம்
4/7, ராஜா அனுமந்தா தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005.
பக்கம் : 960
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை–2.
ISBN : 978-93-82689-60-7

AUTHOR :
UDHAYANAN
SUBJECT : NOVEL

© RIGHTS : PUBLICATION

PUBLISHER :
S.GOWMAREESWARI M.A., M.L.I.S.,
EDITION :
FIRST EDITION - 2016
PUBLISHED @ :
SEETHAI PATHIPPAGAM
4/7, RAJA ANUMANTHA STREET,
TRIPLICANE, (OPP TO GHOSHA HOSPITAL)
CHENNAI - 600 005.
PAGES : 960
TYPESET BY : JAIJEENA
PRINTED @ :
CLASSIC PRINTERS, CHENNAI - 2.
ISBN : 978-93-82689-60-7

online store : www.gowrabookfair.in
www.facebook.com/gowrabookcentre



அம்மாவுக்கு...

பதிப்புரை

தமிழுக்குப் புதுவரவான நாவல் இலக்கியத்தில் வரலாற்று நாவல்களுக்குச் சிறப்பான இடமுண்டு. சமுதாயத்தால் உருவாகும் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டது. காலச்சூழலை ஒட்டி வாழ்ந்த மக்களின் பண்பாடும் பழக்கவழக்கமும் அந்நாவல் களில் ஓரளவு வெளிப்படக் காணலாம். அந்த வகையில் ஆழ்வார் களில் ஒருவராக வைணவ உலகம் போற்றிப் புகழும் மங்கை மன்னர் எனப்படும் திருமங்கை ஆழ்வாரையும் அவர் காலத்து அரசனாகிய பல்லவமன்னன் இரண்டாம் நந்திவர்மனையும் இந்த நாவலில் நாம் அறிந்து மகிழலாம்.

நந்திவர்மனின் குருநாதராகத் திகழ்ந்தவர் திருமங்கை ஆழ்வார்.வைணவ உலகம் கண்ட பல திருப்பு மையங்களைச் செய்துகாட்டியவர் என்பதைப் போல பல திருப்பங்களையும் அதிரடி மாற்றங்களையும் கொண்டு வந்தவன் இரண்டாம் நந்திவர்மன்.என்னென்ன திருப்பங்கள் என்பதை நாவலைப் படித்து அறிந்து கொள்ளுமாறு வாசகர்களுக்கே விட்டுவிடுகிறோம்.

இந்த 'மங்கைவேந்தன்' என்னும் நாவலைப் படைத்திருப்பவர் சரித்திர நாவல்கள் படைப்பதில் சாம்ராட்டாகத் திகழும் திரு. உதயணன் அவர்கள். பல சரித்திர நாவல்களையும் பழகு தமிழில் படைத்திருப்பவர்.

நாவல் இலக்கிய வரலாற்றில் நல்லதோர் இடத்தைப் பிடித்துள்ள உதயணன் அவர்களுடைய உணர்வோட்டமும் கைவண்ணமும் இணைய இந்த நாவலை அரிதின் முயன்று படைத்துள்ளார். படிப்பவர்கள் ஆழ்வாரைப்பற்றி அரசியலைப் பற்றி வைணவ வழிபாடுகளைப்பற்றி அறிந்து கொள்ளுமாறு இந்த நாவல் படைக்கப்பட்டுள்ளது.

பல வரலாற்று நாவல்களையும் வெளியிட்டுவரும் எமது பதிப்பகத்தின் மூலம் இந்தநாவலும் வெளிவருவது மகிழ்ச்சி தருகிறது. வழக்கம்போல் வாசக அன்பர்கள் படித்து மகிழ்வார்களாக.

முன்னுரை

இந்த நாவலை எழுதுவதற்கு நான் புண்ணியம் செய்திருக்க வேண்டும் என்றே நினைக்கிறேன். ஆழ்வாரது வரலாற்றை எழுதுவதற்கு என் விரல்களுக்குச் சக்தியும் இல்லை. தகுதியும் இல்லை. நான் செய்த சிறு புண்ணியம் தான் இந்த நூலாக்கத்திற்கு வழிவகுத்திருக்க வேண்டும்.

இது ஆழ்வாரது கதை. பல்லவர்களின் கதை. சோழச் சிற்றரசர்களின் கதை. வைணவர்களின் கதை. சைவர்களின் கதை. கோயில்களின் கதை. இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம். அரசியலும் ஆன்மீகமும் இணைந்த வரலாற்றுப் பகுதியை இந்த நாவல் விவரிக்கிறது. பல்லவ மாமன்னன் இரண்டாம் நந்தி வர்மனையும் திருமங்கையாழ்வார் அவர்களையும் இணைத்த வரலாற்றை இந்நாவல் கூறுகிறது. நந்தி வர்மனின் குருநாதராகத் திகழ்ந்தவர் திருமங்கை மன்னனான திருமங்கை ஆழ்வார். பிற ஆழ்வார்களை விடத் திருமங்கை ஆழ்வாரின் வரலாறு சுவை மிகுந்தது. திருப்பங்களையும் அதிரடிகளையும் கொண்டது.

நந்தி வர்மனின் ஆட்சியும் அப்படித்தான். அவன் தான் தில்லை நடராஜர் கோயிலுக்குள் பெருமாள் கோயிலைத் துணிந்து கட்டியவன். காஞ்சியில் பரமேச்சுர விண்ணகரத்தையும் பழையாறையில் நந்திபுர விண்ணகரையும் நிர்மாணித்தவன். சிறப்பு மிக்க இவ்விருவரது பிணைப்பு தேனும் பாலும் கலந்தது போலச் சுவை மிகுந்ததாகும். இச்சுவையை இந்நாவலைப் படிக்கும் போது அன்பர்கள் உணரலாம்.

எனது முந்தைய நாவல்களில் தெரிந்தோ தெரியாமலோ நேரும் பிழைகளை இந்த நாவலில் திருத்திக் கொண்டிருக்கிறேன். அது கூட ஒரு சிறப்புதான். தமிழக வரலாற்றில் அதிரடிகள் நிகழ்ந்த ஒரு சிறப்பான பகுதியைத் தான் இந்த நாவலில் நீங்கள் காண்பீர்கள்.

நாவலுக்கு உரிய நவ சுவைகளையும் அதனதன் போக்கிலேயே தந்திருக்கிறேன். திருமங்கை ஆழ்வாரின் முழுவரலாற்றை இதில் நான் கூறிவிட்டதாகக் கருதமுடியாது. அதே சமயம் அவரது வாழ்க்கையின் சுவையான மற்றும் சுவாரஸ்யமான பகுதிகளைக்

கூறியிருக்கிறேன். அவரது பாசுரங்களைப் பற்றிய சிறப்புகளையும் கூறுகளையும் விவரித்தால் அது கட்டுரை போல் அமைந்து விடும் என்பதால் அவற்றைச் சுருக்கமாகக் கூறியிருக்கிறேன்.

இந்நாவலில் வரும் அத்வைதக் கருத்துகள் யாவும் பகவான் ரமணரது தத்துவங்களே ஆகும். இந்த நாவலுக்காக ஸ்ரீ வைஷ்ணவ திவ்ய தேசங்களைத் தரிசனம் செய்யும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது எம்பெருமானின் அருளால் தான்.

இந்த நாவலை உருவாக்குவதற்கு உறுதுணையாக இருந்தவர் பலப் பலர்.

வரலாற்று ஆசிரியர்கள். இலக்கிய ஆசிரியர்கள்.

சைதை மகாத்மா காந்தி நூலகத் தலைவர் பெரியவர் மகாலிங்கம் அவர்கள்,

எனது சகோதரர் டி.வி. கோபால் அவர்கள்,

எனது சகோதர புத்திரர்கள் டி.வி. ஜெகன்னாதன், டி.வி. ரவி, டி.வி. கிருஷ்ண பிரசாச் அவர்கள்,

எனது நண்பர்களான முத்து. ராமமூர்த்தி, ப. மோகன், சுந்தர், உத்ராடம் அவர்கள்,

இந்நூலுக்கு முகப்போவியம் வரைந்துதவிய "தமிழ்" என்னும் செந்தமிழ் செல்வன் அவர்கள்,

இந்த நூலில் பழைகளைச் சரிபார்த்து திருத்தித் தந்த வி.கே.எம். வித்யாலயாவின் முதல்வர் திருமதி. ராதா முரளி அவர்கள்

ஆகிய எல்லோருக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொருட்செலவு பாராது இந்தப் பெரிய நாவலைப் பதிப்பித்திருக்கும் சீதை பதிப்பகத்தாருக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களது பேராதரவு எனக்குக் கிடைத்த வரப் பிரசாதம் என்றே சொல்ல வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக வாசக அன்பர்களுக்கு என் கோடான கோடி நன்றி. அவர்கள் இல்லையேல் எதுவுமில்லை.

மற்றபடி-

என் செயலால் ஆவது ஒன்றுமில்லை.

இந்நாவலை பகவான் ரமணரது திருவடிகளில் மெய்யன்போடு சமர்ப்பிக்கிறேன்.

வணக்கம்.

சென்னை 600 061

உதயணன்

முதல் பாகம்



குமுதவல்லி

சோழநாட்டின் எழிலார்ந்த பகுதியான வெள்ளைக் குளம் என்னும் சிற்றூரில் இருந்த சிறப்பான செந்தாமரைப் பொய்கையில் மங்கைச் செந்தாமரையைப் போல - அன்றலர்ந்த மலரைப் போல அமிழ்ந்தும், எழுந்தும், நீந்தியும் நீராடிக் கொண்டிருந்த குமுதவல்லியைக் கண்டு பொய்கையில் பூத்திருந்த குமுதமலர்கள் ஏக்கத்துடன் பார்த்தன. அசைந்தன. அசந்தன.

தங்களைப் போல அவள் இருக்கிறாளா அல்லது அவளைப் போலத் தாம் இருக்கிறோமோ என்ற குழப்பம் அந்தக் குமுதங்களுக்கு இருந்ததால் குமுதவல்லியின் அங்கங்களைத் தொட்டுப் பார்த்துக் கொண்டன அவள் நீந்திய போது.

ஏங்கியது மலர்கள் மட்டுமல்ல.

கரையில் இருந்த மான்களும் மயில்களும் கூடத் தான்.

மைனாக்களும் ஏங்கின. மயக்கும் குரலில் இசைக்கும் குயில்களும் ஏங்கின.

தங்களுக்கு இருக்கும் தனிச் சிறப்பையெல்லாம் அவள் அபகரித்து விட்டது போல் அவை எண்ணிக் கொண்டதால் அவள் மீது பொறாமையும் கொண்டன.

அவற்றின் பொறாமையில் அர்த்தமில்லை என்பதை உணர்த்துவது போல் கரையில் வளர்ந்திருந்த மரமல்லி மரங்கள் குமுதவல்லியின் மீது மலர்களைத் தூவின.

இப்படிப் பற்பல உயிரினங்கள் பலவாறு ஏங்கிக் கொண்டிருந்தாலும் வெள்ளைக்குளம் பொய்கை*யில் நீராடிக் கொண்டிருந்த இளம் பெண்ணான குமுதவல்லி கவலைப்பட வில்லை. இந்த உலகமே தனக்குச் சொந்தம் என்று கருதிக் கொண்டவளைப் போல் ஆனந்தமாக நீராடிக் கொண்டிருந்தாள்.

பொய்கை நீரும், பொற்றாமரை மலர்களும், மிதமான காற்றும் அவளோடு விளையாடின. அவளோ நீராடியது போதும் என்று

---

* இது தற்போது திருவெள்ளக் குளம் என்றும் அண்ணன் கோயில் என்றும் அழைக்கப் படுகிறது. சீர்காழியிலிருந்து நாகை செல்லும் மார்க்கத்தில் 10 கி.மீ தொலைவில் உள்ளது.

நினைத்தவளாய் கரைக்கு வந்து அங்கே இருந்த மண்டபத்தில் உடைகளை மாற்றிக் கொண்டு புறப்பட்ட போது மைனாக்கள் படபடத்த விதமானது அவளது புறப்பாட்டை எண்ணி வருத்தம் தெரிவிப்பது போல் இருந்தது.

அழகிற்கு அழகு செய்யும் ஆராவமுதமான குமுதவல்லி பொய்கையிலிருந்து புறப்பட்டு தன் இல்லம் நோக்கி நடந்தாள். பொய்கைப் பகுதி அடர்ந்த சோலைக்குள் இருந்ததால் அவள் தேவதையைப் போல நடந்து சோலையை அலங்கரித்தாள்.

கணிசமான தூரத்திற்குச் சென்றபோது அவளது மலர்ந்த முகம் உலர்ந்தது. கறுத்தது.

அங்கே பாதையின் ஓரத்தில் தாழ்வான உயரத்தில் அமைந்திருந்த சுமைதாங்கிக் கல் ஒன்றின் மீது அமர்ந்திருந்தான் ஓர் இளைஞன்.

அவன் அங்கே மூன்றாவது நாளாகத் தொடர்ந்து வந்து அமர்ந்திருந்ததையும் நீராடி விட்டு அவள் வரும்போது வைத்த விழி வாங்காமல் பார்த்து வருவதையும் கண்டிருந்த குமுதவல்லி "இவனுக்கு வேறு வேலை இல்லையா?" என்று நினைத்தாள்.

"தனித்து வரும் பெண்ணை ருசிப்பது போல் ரசிக்கும் இவனுக்கு நாகரீகம் என்றால் என்னவென்றே தெரியாதா?" என்று தனக்குள் கேட்டுக் கொள்ளவும் செய்தாள்.

இத்தனைக்கும் அவன் சுமைதாங்கிக் கல்லின் மீது அமர்ந்திருந்தானே தவிர அவளிடம் வம்பு செய்யவோ குறும்பு செய்யவோ முயலவில்லை. அவளோடு ஒரு வார்த்தை கூடப் பேசமுற்படவில்லை.

ரசிப்பதற்காகவே பிறந்தவனைப் போல அமைதியாக அமர்ந்திருந்தான். பதற்றமில்லாமல் அவளது அழகை ரசித்தான். அவள் சென்றபின் அகன்றான். மீண்டும் மறுநாள் வந்து அமர்ந்தான்.

அவனது நோக்கம் என்ன என்பது குமுதவல்லிக்குப் புரியவில்லை.

அதேசமயம் -

அவனது நோக்கம் எதுவாக இருந்தாலும் அவனை அவளுக்குப் பிடிக்கவில்லை.

நான்காவது நாளும் ஐந்தாவது நாளும் கூட இந்த நிலை நீடித்தது.

அவனை ஏதாவது செய்தால் தான் உண்டு என்று நினைத்த அவள் ஆறாவது நாள் நான்கு மல்லர்களை அனுப்பி அவனைத் தாக்கும் படிச் சொன்னாள்.

ஆனால் நான்கு மல்லர்களும் போன வேகத்திலேயே திரும்பி வந்தார்கள். நால்வரும் நன்றாக அடி வாங்கியிருந்தார்கள். நால்வருக்கும் ரத்தகாயம் ஏற்பட்டிருந்தது. ஒருவனுக்கு கை முறிந்து இருந்தது.

"நீங்கள் எல்லாம் மல்லர்கள் தானா? வல்லவர்கள் என்று அனுப்பினேன். நீங்களோ அல்லவர்களாகத் திரும்பி வந்திருக்கிறீர்கள். அடிக்க வேண்டிய நீங்கள் அடிப்பட்டுத் திரும்பியிருக்கிறீர்கள். இதுதான் வீர லட்சணமா?" என்று சீறினாள் குமுதவல்லி.

"தேவி! அவன் பார்ப்பதற்குத் தான் பசு போல இருக்கிறான். பாயும் போது புலியாக மாறி விடுகிறான். அவன் மனித வடிவில் இருக்கும் அரக்கன். சாதுவைப் போன்ற கோலமும் சண்டாளனைப் போன்ற வலிமையும் கொண்டவன். அவனை வீழ்த்த வேண்டுமானால் ஒரு ராட்சஷனை உருவாக்கித் தான் அனுப்ப வேண்டும்."

"போதும். அவன் ஏதாவது பேசினானா?"

"கைகளால் மட்டும் பேசினான்."

முரட்டு இளைஞனைப் பற்றித் தந்தையிடம் சொல்லலாமா என்று நினைத்தாள் குமுதவல்லி.

"ஆனால் என்ன வென்று புகார் சொல்வது? அவன் தன்னை ரசிக்கிறானே தவிர வேறு எதையும் செய்வதில்லையே! அவன் மீது என்ன குற்றத்தைச் சுமத்துவது?" என்றெண்ணித் தந்தையிடம் சொல்ல வில்லை.

"குமுதவல்லி! அந்த முரடன் நீ நீராடுவதை ரசிக்க வில்லை என்று உன்னால் உறுதியாகச் சொல்ல முடியுமா?" என்று கேட்டாள் தோழி.

குமுதவல்லி சற்றே மருண்டாள்.

அப்படியும் இருக்குமோ?

இருக்காது.

"அவன் அந்த அளவுக்குக் கள்வனல்ல. அது நிச்சயம்" என்றாள் குமுதவல்லி.

"எப்படிச் சொல்கிறாய்?"

"எப்படி என்று கேட்டால் தெரியாது. ஆனால் நான் கூறுவது உண்மை" என்று சொன்ன குமுதவல்லி மறுநாள் தோழியை அழைத்துக் கொண்டு நீராடச் சென்றாள்.

இளைஞன் தனியாக வரவில்லை.

நான்கு வாலிபர்களோடு வந்திருந்தான்.

குமுதவல்லி தோழியைத் தூண்டி விட்டாள்.

"ஐயா! எதற்காக நான்கு வாலிபர்களை அழைத்து வந்திருக்கிறீர்கள்? பயமா?" என்று இளைஞனிடம் கேட்டாள் தோழி.

"ஆமாம். நான்கு மல்லர்களுக்குப் பதில் நாற்பது மல்லர்கள் வந்தால் சமாளிக்க வேண்டும் அல்லவா? அதனால் தான் இந்த நால்வர்" என்றான் இளைஞன்.

தோழி அவன் கூறியதைக் குமுதவல்லியிடம் கூறினாள்.

இரண்டு நாட்கள் கழித்து வெள்ளைக் குளத்தில் இருந்த பெருமாள் கோயிலில் குமுதவல்லி நடனமாடுவதாக இருந்தது.

நாட்டியத்திற்காகத் தன்னைச் சிங்காரித்துக் கொண்டிருந்த போது அவளிடம் வந்தாள் ஒரு பெண். ஒரு துணி மூட்டையைக் கொடுத்து "இது அவர் கொடுத்தது" என்றாள்.

"எவர் அவர்?"

"சுமை தாங்கிச் செல்வர்" என்று கூறி விட்டுச் சென்றாள் அப்பெண்.

குமுதவல்லி மூட்டையைப் பிரித்தாள்.

அதில் ஓர் ஓலையிருந்தது.

அந்த ஓலையில் -

"அழகின் சிரிப்பே! சிரிப்பின் அழகே. நீ இன்று நாட்டியம் ஆடும் போது மாற்றி மாற்றி அணிந்து கொள்வதற்காக கோசிகம், பீதகம், பச்சிலை, அரத்தம், நுண்துகில், சுண்ணம், வடகம், பஞ்சு, இரட்டு, பாடகம், கோங்கலர், கோபம், சித்திரக்கம்மி, குருதி, கரியல், பேடகம், பரியட்டக் காசு, வேதங்கம், புங்கர்க் காழகம், சில்லிகை, காரியம், பங்கம், தத்தியம், வண்ணடை, சுவற்றுமடி, நூல்யாப்பு, திருக்கு, தேவாங்கு, பொன்னெழுத்து, குச்சரி, தேவகிரி, காத்துவம், இறஞ்சி, வெண்பொத்தி, கைம்பொத்தி, பணிப் பொத்தி ஆகிய முப்பத்தாறு வகை ஆடையணிகலன்களை அனுப்பியிருக்கிறேன். இவற்றை நீ அணிந்து ஆடினால் ஆட்டம்

ஆனந்தமாய் இருக்கும். காண்பர்கள் களிப்பார்கள். அவர்கள் சிந்தையில் நீ கலையா ஓவியமாய்த் திகழ்வாய்.

- சுமைத்தாங்கிச் செல்வன்.

என்றிருந்தது.

அனுப்பியது யாரென்று தெரிந்தது குமுதவல்லிக்கு.

ஆனால் பெருமாள் கோயிலில் நடனமாடிய போது அந்த ஆபரணங்கள் எதையும் அவள் அணியவில்லை.

தனது ஆடை ஆபரணங்களையே அணிந்து நடனமாடினாள். பாடினாள்.

மன்னவன் வந்தானடி - தோழி
மஞ்சத்திலே இருந்து
நெஞ்சத்திலே அமர்ந்த
மன்னவன் வந்தானடி.

மாயவனோ தூயவனோ
நாயகனோ நானறியேன்
மன்னவன் வந்தானடி - தோழி

செந்தமிழ்ச் சொல்லெடுத்து
இசை தொடுப்பேன் - வண்ண
சந்தத்திலே கவிதைச் சரந்தொடுப்பேன்
மூன்று தமிழ்மாலை சூட்டிடுவேன் - இனி
முப்பொழுதும் கற்பனையில்
அற்புதமாய் வாழ்ந்திருக்கும்
மன்னவன் வந்தானடி தோழி.

தூவிய பூவினில் மேனிகள் ஆடிட
நாயக நாயகி பாவனை காட்டவரும்
மன்னவன் வந்தானடி.

சரிகமபதநி சுரமொடு ஜதியொடு
நாத கீத ராக பாவம் தான் பெறவே
மன்னவன் வந்தானடி.

காதற் கவிதை கடலெனப் பெருகிட
மாதர் மனமும் மயிலென நடமிடவே
மன்னவன் வந்தானடி.

சிறுமலர் மணமுற குறுநகை நலம்பெற
மலர்விழி சிவந்திட கனியிதழ்க் கனிந்திடவே
மன்னவன் வந்தானடி.

தித்தித்தால் அது செம்பொற் கிண்ணம்
தத்தித் தாவிடும் தங்கக் கிண்ணம்
சித்தத்தால் ஒரு காதற் சின்னம்
பற்றித் தாவென பாவையின் முன்னம்
மன்னவன் வந்தானடி.*

கோயிலில் உறையும் பெருமாளைத் தன் நாயகனாகவும் மன்னனாகவும் பாவித்துப் பாடி ஆடினாள் குமுதவல்லி.

நிகழ்ச்சியைக் காண வந்த கூட்டத்தோடு கூட்டமாய் இளைஞனும் வந்து அமர்ந்திருந்தான். அவளது பாட்டையும் ஆட்டத்தையும் வெகுவாக ரசித்தான்.

அவள் பாடியாடி முடிந்ததும் எழுந்தான்.

பாடவும் செய்தான்.

ஆடாத மனமும் உண்டோ - நடை
அலங்காரமும் அழகு சிங்காரமும் கண்டு - ஆடாத

நாடெங்கும் கொண்டாடும் புகழ் பாதையில் - வீர
நடைபோடும் திருமேனி தரும் போதையில் - ஆடாத

வாடாத மலர் போலும் விழிப்பார்வையில் - கை
வளையோசை தரும் இன்ப இசைக் கார்வையில் - ஆடாத

ஈடேதும் இல்லாத கலைச் சேவையில் - தனி
இடம் கொண்ட உனைக் கண்டு இப்பூமியில் - ஆடாத

இதழ் கொஞ்சும் கனி அமுதை மிஞ்சும்
குரலில் குயில் அஞ்சும் உனைக் காணவே - ஆடாத

பசுந் தங்கம் உனது எழில் அங்கம்
அதன் அசைவில் பொங்கும் நயம் காணவே - ஆடாத

முல்லைப் பூவில் ஆடும் சிறு வண்டாகவே
முகில் முன்னே ஆடும் வண்ண மயில் போலவே
அன்பை நாடி உந்தன் அருகில் வந்து நின்றே
இன்பமெனும் பொருளை இங்கு கண்டே
தன்னை மறந்து
உள்ளம் கனிந்து
இந்நாள் ஒரு பொன்னாள் எனும் மொழியுடன்** - ஆடாத

முரட்டுக் காளையாக இருந்தாலும் குரல் என்னவோ ஆனந்த ராகமாக இருந்தது.

---

* பாடலாசிரியருக்கு நன்றி.

** பாடலாசிரியருக்கு நன்றி.

குமுதவல்லி பெருமாளை நாயகனாக வரித்துப் பாடினாள்.

இளைஞனோ அவளையே எண்ணிப் பாடியிருந்தான்.

கூடியிருந்தவர்களோ அவர்களது உள்ளுணர்வுகளை அறியாதவர்களாய் ஆடலையும் பாடலையும் ஆனந்தமாக ரசித்து இருவருக்கும் கைகளைத் தட்டிப் பாராட்டுதல்களைத் தெரிவித்தார்கள்.

குமுதவல்லியோ அவனது பாடலால் அசதியே அடைந்தாள்.

கடந்த எட்டு நாட்களாக அமைதியாக இருந்த அவன் கொஞ்சம் கொஞ்சமாகத் தனது சுபாவங்களையும் நோக்கங்களையும் வெளிப்படையாகவே தெரியப்படுத்த முயன்றதை உணர்ந்த அவள் அவ்வாறு வளருவதை மட்டுமே விரும்பவில்லை.

அவளை மட்டுமே விரும்புகிறான் என்பதை அவள் ஓரளவிற்கு மனமார்ந்து ஏற்றாலும் தான் விரும்புகிற மாதிரி அவன் இல்லை என்று கருதியதால் அவனையோ அவனது செயல்பாடுகளையோ அங்கீகரிக்கத் தயாராக இல்லை.

தோழியிடம் தனது நிலையை எடுத்துச் சொல்லிப் புலம்பினாள்.

"குமுதவல்லி! எனக்குப் புரிந்த வரை அந்த இளைஞர் நல்ல வீரர், நல்ல ரசிகர். நல்ல கலைஞர். அவர் மீது உனக்கு வெறுப்பும் அலுப்பும் வருவது சரியாகத் தோன்றவில்லை. நீ உன்னைப் பற்றி மட்டுமே எண்ணுகிறாய். உன் உணர்வுகளை மட்டுமே மதிக்கிறாய். இதுவும் கூட எனக்குச் சரியாகத் தோன்றவில்லை. பிறரது உணர்வுகளையும் நீ மதிக்க முற்படுவது தான் சரி" என்றாள் தோழி.

"கள்ளிச் செடியின் உணர்வுகளை நான் ஏன் புரிந்து கொள்ள வேண்டும்?"

"அந்த இளைஞர் கள்ளிச் செடியல்ல குமுதவல்லி. நான் மேலே கூறியது போல வீரர். ரசிகர். கலைஞர். நீயாகத் தவறாக எண்ணிக் கொண்டு தவறான முடிவுக்கும் வருகிறாய். உனக்காக முப்பத்தாறு விதமான ஆபரணங்களை அனுப்பி வைத்து தனது உணர்வுகளை அழகாகச் சொல்லியிருக்கிறார் அவர். நீயோ அவர் அனுப்பிய ஆபரணத்தில் ஒன்றைக் கூட அணிந்து கொள்ளவில்லை. அவரது மனம் எவ்வளவு வேதனைப் பட்டிருக்கும் என்று எண்ணிப் பார்த்தாயா?"

"அறிமுகம் இல்லாதவர்கள் அனுப்பி வைக்கும் ஆபரணங்களை எல்லாம் நான் ஏற்கமுடியுமா?"

"அவர் உனக்குத் தினமும் அறிமுகமாகிக் கொண்டு தானே இருந்தார்? எட்டு நாட்களுக்குப் பிறகு தானே உனக்கு அவற்றை அனுப்பி வைத்தார்? அதில் தவறு இல்லையே!"

"இது தான் முறை என்று எப்படிக் கூறுகிறாய்?"

"காதல் வழியில் இதுவும் ஒரு முறைதான் குமுதவல்லி. அவர் மிகவும் நாகரீகமாகவும் நளினமாகவும் நயமாகவும் தான் நடந்து கொள்கிறார். நீதான் அதைப் புரிந்து கொள்ளாமல் அவர் மீது குறை சொல்கிறாய்."

"நான் என்ன தான் செய்ய வேண்டும்?"

"அவரைச் சந்தித்துப் பேசு. அவர் விருப்பம் என்ன என்பதை அறிந்து கொள். பிறகு என்ன முடிவு எடுக்கிறாயோ எடு."

தோழி இவ்வாறு சொன்னதும் அரை மனதோடு ஒப்புக் கொண்ட குமுதவல்லி மறுநாள் பொய்கைக்குச் சென்றபோது சுமைதாங்கிக் கல்மீது இளைஞர் அமர்ந்திருப்பதைக் கண்டாள்.

"விடமாட்டான் போலிருக்கிறதே" என்று எண்ணியபடி அவனிடம் சென்ற குமுதவல்லி "ஐயா! நீங்கள் யார்?" என்று வினவினாள்.

"சோழ நாட்டுச் சேனாதிபதி நீலன்" என்றான் இளைஞன். அவனது குரலில் கம்பீரமும் உறுதியும் இருந்தது.

★★★



நீலன்

அந்த இளைஞன் தனநந்தனாக இருக்கக் கூடும் என்று நினைத்திருந்தாள் குமுதவல்லி.

தன்னிடம் உள்ள செல்வத்தைக் காட்டி மயக்கப் பார்க்கிறான் என்று எண்ணியிருந்தாள். அவன் சோழநாட்டுச் சேனாதிபதியாக இருப்பான் என்று சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

அற்போது சற்றே அதிர்ந்தாலும் அவன் பொறுப்புள்ள அதிகாரி என்பதை உணர்ந்து சற்றே திடப்படுத்திக் கொண்ட அவள் "ஐயா! நீங்கள் சோழ நாட்டுச் சேனாதிபதி என்பதை நம்புகிறேன். என் வணக்கத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். அதே சமயம் ஒரு நாட்டின் சேனாதிபதியாக இருந்து கொண்டு முறை தவறி நடந்து கொள்கிறீர்களே, இது சரிதானா?" என்று கேட்டு விட்டு அவனை ஏறெடுத்துப் பார்த்தாள்.

அந்த இளைஞன் நல்ல உடல்கட்டுடன் இருந்தான். தனது பதவிக்கு உரிய ஆபரணங்களும் கழல்களும் நிரம்ப இருந்தாலும் அவற்றையெல்லாம் அணிந்து பகட்டைக் காட்டாமல் எளிமையான ஒரு சில ஆபரணங்களையே அணிந்திருந்தான். இடையில் உடைவாள் உறையில் தொங்கிக் கொண்டிருந்தது. தலையில் கிரீடம் எதுவும் அணியாததால் கார் மேகக் கூந்தல் காக்கையின் இறகுகளைப் போல விரிந்து காணப்பட்டன. அவை அலை அலையாக இறங்கி கழுத்திலும் தோளிலும் புரண்ட விதமானது அழகாக இருந்தது. உண்மையான அழகு அவனது முகத்தில் கம்பீரமாக விரவியிருந்தது. சந்திர வடிவத்தில் பொட்டணிந்திருந்த அவன் காதுகளில் பொன் குண்டலங்களை அணிந்திருந்தான். வீரர்களுக்கே உரிய மீசை முறுக்கேறியிருந்தது. அவனது பழக்க வழக்கங்களில் போதை வஸ்துக்களும் மாமிச வஸ்துக்களும் சேரவில்லை என்பதை அவனது தீட்சண்யமான கண்கள் புலப்படுத்தின.

குமுதவல்லி கேட்ட கேள்விக்குச் சற்றே புன்னகை செய்து இளைஞனான நீலன் "நான் முறை தவறி நடந்தேனா? எப்படி?" என்று கேட்டான்.

"தனியாக வரும் பெண்ணை இக்கல்லின் மீது அமர்ந்து கொண்டு ரசிப்பது எப்படி முறையாகும்?" என்று கேட்டாள் குமுதவல்லி.

"பெண்ணே! நான் அழகின் ரசிகன். அதுவும் அழகான பெண்களின் அழகை அபாரமாக ரசிப்பவன். அழகை ரசிப்பது முறையற்றது என்று யாரும் சொன்னதில்லை" என்றான் நீலன்.

"நீங்கள் ரசிகராக இருக்கலாம். ரசிக்கலாம். ஆனால் அதை மற்றவர்கள் ஏற்க வேண்டுமல்லவா? உங்கள் ரசனையை நான் சிறிதும் விரும்பவில்லை."

"பெண்ணே! பார்ப்பது கூடவா தவறு? ஆண்கள் படைக்கப் பட்டிருப்பது மூடிக் கொண்டிருப்பதற்காக அல்ல. தனக்குத் தெரியும் அழகுகளையும் அற்புதங்களையும் கண்டு ஆனந்திப்பதற்காகத்தான். அதோடு உன்னை நான் ரசித்தேனே தவிர இம்சித்தேனா? இடையூறு செய்தேனா? பேசக் கூட முற்படவில்லை என்பது உனக்குத் தெரியும்."

"ரசித்ததோடு நீங்கள் நிற்கவில்லை. ஆபரணங்களைக் கொடுத்தனுப்பினீர்கள். முன்பின் தெரியாத ஒருத்திக்கு - அறிமுகம் ஆகாத ஒருத்திக்கு ஆபரணங்களை அனுப்பி வைப்பது முறையானது என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்களா?"

"ஆடலரசிக்கு ஆபரணங்களை அளிப்பதும் வெகுமதிகளை வழங்குவதும் இயல்பான விஷயங்கள் தான். இதற்கு எந்தப் பெரியவர்களையும் முறை சொல்ல வேண்டியதில்லை."

"பெருமாள் ஆலயத்திற்கு வந்த நீங்கள் பாடியது அதீதம். நான் பாடிய பாட்டு பெருமாளுக்கு. பக்திப் பூர்வமானது. நீங்கள் பாடியது கொச்சையானது. விகாரமானது."

"இருவருமே உண்மை நிலைகளைத் தான் பாடியிருக்கிறோமே தவிர வலிந்து வந்து வண்கவிதை பாடவில்லை. மனதில் இருப்பது வெளியே வருவது தான் இயல்பானது. உண்மையானது. இதில விகாரமும் இல்லை. விவகாரமும் இல்லை."

"சமத்காரமாகப் பேசுகிறீர்கள் ஐயா. இருப்பினும் உங்கள் நடவடிக்கைகளை இதோடு நிறுத்திக் கொள்ளுங்கள். அதுதான் உங்களுக்கு நல்லது."

"அழகை ரசிப்பதை நான் விடுவதற்கில்லை. உலகிலே அரிதான அழகு பெண்களின் அழகுதான். கண்ணிருக்கும் வரை - இந்த மண்ணிருக்கும் வரை - இந்த மண்ணிலிருந்து விண்ணுக்குச் செல்கிறவரை ரசிக்கவே செய்வேன். அது என் உரிமை. அதை

மல்லர்களாலும் தடுக்க முடியாது. மன்னர்களாலும் தடுக்க முடியாது.”

“ஐயா! அழகு அழகு என்கிறீர்களே - இந்த மானிடர் அழகெல்லாம் நிலையானதல்ல. அழியக் கூடியவை. அதை மோகிப்பது மூடத்தனம்.”

“பெண்ணே! இந்த வயதில் தத்துவ விசாரம் எதற்கு? இந்த அழகு மட்டுமல்ல மானிடரின் வாழ்க்கையே கூட அழியக் கூடியது தான். இது எல்லோருக்கும் தெரியும். ஆயினும் வாழ்க்கையை வேண்டாம் என்று யாராவது புறக்கணிக்கிறார்களா?”

“உங்களோடு பேசிக் கொண்டிருந்தால் எல்லாப் பேச்சுகளுக்கும் பதில் பேச்சு பேசி என்னைச் சாய்த்து விடுவீர்கள். மாய்த்து விடுவீர்கள். உங்கள் நோக்கம் தான் என்ன?”

“இது கூட வா புரியவில்லை? உன்னை நான் மனராத விரும்புகிறேன். உளனுருகக் காதலிக்கிறேன். வாழ்ந்தால் உன்னோட தான் வாழ வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறேன். எனது இன்பியல் வாழ்க்கையின் திறவுகோல் நீ தான. நீ என்னைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும்.”

“எதற்காக? நான் அழகாக இருக்கிறேன் என்பதற்காகவா?”

“அதுவும் ஒரு காரணம் தான்.”

“என்னைக் காட்டிலும் வேறோர் அழகி கிடைத்து விட்டால் என்னை விட்டு விட்டு வண்டு போல் விலகி விடுவீர்களா?”

“வண்டும் நானும் ஒன்றல்ல. வண்டு வேறு. நான் வேறு. மலர் விட்டு மலர் தாவுவது வண்டுகளின் இயல்பு, எனக்கு அப்படியல்ல. நான் தாவ மாட்டேன். மனத்தில் அலைபாய விட மாட்டேன்.”

குமுதவல்லி சிறிது நேரம் வரை மௌனமாக இருந்தாள்.

அப்போது நீலனை நோக்கி வந்த ஒருவன் “சேனாதிபதியாரே! உங்களை உடனடியாக அழைத்து வரும்படி மன்னர் என்னை அனுப்பினார்” என்றான்.

நீலன் எழுந்து கொண்டு “பெண்ணே! என் உள்ளக் கிடக்கையைக் கூறிவிட்டேன். நீ நன்றாக யோசித்து உன் முடிவைச் சொல்” என்று கூறி விட்டு அங்கிருந்து புறப்பட்டான்.

★

சேழமாமன்னர்களின் ஆதிகாலத்துத் தலைநகரமாக விளங்கியது உறையூர். அங்கே கோழியானது யானையை வெற்றி கொண்டதால் அதற்குக் கோழியூர் என்ற பெயரும் உண்டு.

பெரு வேந்தனான கரிகாலன் உறந்தையில் இருந்து தான் ஆட்சி செய்தான்.

சோழ மன்னர்களின் மாண்பு கால வெள்ளத்தில் அடித்துச் செல்லப் பட்டாலும் அவர்களது கோநகரான உறையூர் மட்டும் மகத்துவம் குறையாமல் மகோன்னதமான நகரமாகவே இருந்தது. திருமாவளவன் காலந்தொட்டே அது கோட்டை சூழ்ந்த அரணாகவே இருந்து வந்ததால் எதிரிகள் அதை முறியடிக்க முடியாமல் தோற்று காலன் கோட்டை என்று பெயரிட்டு விட்டுச் சென்று கொண்டிருந்தார்கள்.

அந்தக் காலன் கோட்டையில் எதிரிகளுக்குக் காலனைப் போன்றவனான பரகாலன் என்னும் சேனாதிபதி நீலன் தனது வெண்ணிறப் புரவியான ஆடல்மாவின் மீது அமர்ந்து புயல் போலப் பிரவேசித்தான்.

உறையூரானது கடற்கரைக்கும் உள் நாட்டிற்கும் மத்தியில் ஆற்றங்கரையில் அமைந்திருந்த காரணத்தால் சிறந்த வாணிகத் தலமாக விளங்கியது. கடலிலிருந்து வந்த வணிகர்கள் காவிரிப் பூம்பட்டினம் அழிந்து விட்ட காரணத்தால் நாகையில் இறங்கினார்கள். நாகை விஸ்தாரமான நகரமல்ல என்பதால் உறையூருக்கு வந்து வணிகத்தைக் கடை விரித்ததால் அவ்வூர் அப்போதும் கண் விழித்தபடி இருந்தது. கலகலப்பாக இருந்தது. களையோடு இருந்தது.

ஊரின் மையப்பகுதி வணிக வளாகமாக மாற்றப் பட்டிருந்ததால் வணிகத்தை மையமாகக் கொண்டு ஊர் உயர்ந்தது. பாண்டிய நாட்டு முத்துகளும், சேர நாட்டு முத்துகளும் (மிளகு) அங்கே வந்து குவிந்ததால் தொண்டை நாட்டினர் கூட வந்து அவற்றை வாங்கிச் சென்றார்கள். பாண்டிய நாடும் சேரநாடும் பேரரசுகளாக இருந்தன. சோழநாடு அரசியல் ரீதியாகப் பேரரசாக இல்லை என்றாலும் வணிக ரீதியாக மகத்தானதாக இருந்தது.

சோழ வம்சத்தவர் நீண்ட நெடுங்காலமாக உறையூரையே உறையும் இடமாகக் கொண்டிருந்ததால் வீதிகள் எல்லாம் மாட மாளிகைகள் பெருகியிருந்தன. அந்த வீதிகளில் தேர்கள் ஓடின. வீரபாதி வீரர்கள் அணி வகுத்துச் சென்றார்கள்.

சோழ மன்னர்கள் தேரோட்டுவதில் சிறந்தவர்கள் சோழ மன்னனை ஒருவன் அதன் காரணமாக உருவ பஃறேர் இளஞ் சோழன் என்னும் என்று பெயர் பெற்றிருந்தான். அவனது காலத்திலிருந்து தேர்ப் போர்முறைகள் அரச வம்சத்தவரிடம் நடை பெற்று வந்த

படியால் உறையூரில் தேரோடும் வீதிகள் சமைக்கப் பட்டுச் சிறப்பாகப் பராமரிக்கப் பட்டு வந்தன.

கலைகளில் சோழநாடு முன்னணியில் இல்லை என்றாலும் பின்னணியில் இல்லை. சோழ நாட்டின் எல்லைகள் சுருங்கிய போது கலைகளின் எல்லைகளும் சுருங்கிய படியால் கலைஞர்களின் எண்ணிக்கையும் சுருங்கியது. எண்ணிக்கை குறைந்தாலும் கலையின் ஏற்றம் குறையாததால் ராஜவீதிகளில் இருந்த மாட மாளிகைகளிலும், கூடங்களிலும், கோபுரங்களிலும் கலைஞர்கள் தத்தம் திறமைகளைக் காட்டியபடியால் பண்ணொலிகள் எங்கும் பரவி விண்ணைத் தொட முயன்றன. ஆதலால் ஊர் முழுதும் பேர் சொல்லும் விதத்தில் கலகலப்புடன் காட்சியளித்தது.

உறையூரின் உரைக்கத் தகுந்த சிறப்புகளையெல்லாம் கடுகிச் செல்லும் புரவி மீதிருந்தபடியே கவனித்த வண்ணம் கோபுரத்திற்குச்* சென்றான் நீலன்.

அவனைக் கண்டதும் "மாவீரனே வா! பரகாலனே வா" என்று பெருமிதத்துடன் வரவேற்றான் உறையூர்ச் சோழனான நந்த சோழன்.

"வணக்கம் மன்னவா! எனக்கு ஆசி கூறுங்கள்" என்று கைகளைக் கூப்பினான் நீலன்.

"நீடுழி வாழ்வாயாக! வெற்றி வீரனாக வாழ்வாயாக! நீலா! உன்னிடம் மாவீரம் இருக்கிறது. மகாப் பணிவும் இருக்கிறது. இந்த இரண்டும் ஒரே இடத்தில் இருப்பது அபூர்வம். உன்னை நினைத்தால் எனக்குப் பெருமையாக இருக்கிறது. நீ எனது சேனாதிபதியாக இருப்பது நான் செய்த பாக்கியம். உன்னைக் கண்ணால் காணும் போது தான் சோழ நாட்டின் ஏற்றம் எனக்குத் தெரிகிறது. சில நாட்களாக உன்னைக் காண வில்லையே! எங்குச் சென்றாய்?" என்று வினவினான் சோழ மன்னன்.

"நான் எங்கு சென்று விடப் போகிறேன் அரசே! என்னிடம் இருப்பது உடல் தான். அதன் உயிர் இந்தச் சோழ நாடு. அதை விட்டு விட்டு எங்கே சென்று விட முடியும்?" என்றான் நீலன்.

"உனது தேசப்பற்று பாராட்டத் தகுந்தது. உன் போன்ற சேனாதிபதிகள் என் முன்னோர்களுக்கு இருந்திருந்தால் சோழ நாடு இப்படிச் சுருங்கியிருக்காது. அதன் தென் எல்லை

---

* கோ என்றால் அரசன். புரம் என்றால் அரண்மனை. அரசன் இருந்த அரண்மனை அக்காலத்தில் கோபுரம் என்றே அழைக்கப்பட்டது.

குமரியாகவும் வடவெல்லை கங்கையாகவும் விரிந்திருக்கும்" என்றான் மன்னன் நெகிழ்ச்சியான குரலில்.

"இன்றில்லை என்றாலும் ஒருநாள் அது நடக்கும் மன்னவா. கவலை வேண்டாம்."

"நீலா! திருமாவளவர் என்னும் பெருமா மன்னர் இமயம் வரை படையெடுத்துச் சென்று சோழர் கொடியை நாட்டினார். சோழர்களால் இயலாதது எதுவுமில்லை என்பதை நிரூபித்தார். வீரத்தில் மட்டும் தன்னை நிரூபித்துக் கொள்ளாமல் அனைத்து விஷயங்களிலும் அசகாய சூரராக விளங்கினார். அது பொற்காலம். ஆனால் அக்காலம் எப்படி மாறியிருக்கிறது பார்த்தாயா? கரிகாலருக்கு எதிரிகளே இல்லை பரகாலா. இன்றைக்கு எனக்கோ எதிரிகளைத் தவிர யாருமில்லை. திரும்பும் இடமெல்லாம் எதிரிகள் தான். அதோடு சோழநாடு பேரரசு இல்லை. கழுதை கெட்டு கட்டெறும்பு ஆனது போல் பேரரசு சிற்றரசாகி விட்டது. பல்லவர்களுடன் நட்புணர்வோடு அவர்களது ஆதிக்கத்தில் நாம் இப்போது இருக்கிறோம். நமது ஆதிக்கத்தில் ஆங்காங்கே சிற்சில சிற்றரசுகள் இருக்கின்றன. இந்த நிலையை எண்ணி நான் நொந்து போகாத நாளே இல்லை. வெந்து போகாத வேளையே இல்லை" என்றான் மன்னன் வருத்தத்தோடு.

"கவலையை அகற்றுங்கள் வேந்தே. காலங்கள் மாறும். காட்சிகள் மாறும்."

"நீலா! உன்னை நான் ஏன் அழைத்தேன் தெரியுமா?"

"சொல்லுங்கள் மன்னவா"

"நான் ஏற்கனவே கூறியது போல் சோழ ராஜ்யத்தின் பரப்பளவு மிகவும் குறைவு. அதில் நமது ஆதிக்கத்தில் இருக்கும் சிற்றரசுகளும் குறைவுதான். அவர்கள் நமக்குச் செலுத்தி வரும் திரைப் பணம் தான் நமக்கு நிறைவைத் தருகிறது. இதில் குறைவு ஏற்பட்டால் நமது நிலை கஷ்டமாகி விடும். செந்தலையில் நமது ஆதிக்கத்தில் இருந்து வரும் முத்தரையன் கடந்த ஓராண்டு காலமாக நமக்குத் திறை செலுத்துவதை நிறுத்தி விட்டான். திறை கேட்டு அனுப்பப்பட்ட நமது பிரதிநிதிகளைச் சிறையில் வைத்து விட்டான். இது நமக்கு அவமானம் அல்லவா?"

"நிச்சயமாக அவமானம் தான் மன்னவா. முத்துரையன் தண்டிக்கத் தக்கவன்.

"தலைவணங்க வேண்டியவன் திறை செலுத்தாதது குற்றம். திறை கேட்டுச் சென்றவர்களைச் சிறையில் வைத்தது குற்றம். நடைமுறைகளைக் கைவிட்டு விட்டுச் சுதந்திரமாக அவன்

நடமாடுவதும் குற்றம். அவனைத் தண்டிக்கவே உன்னை அழைத்தேன். நீ படையோடு செல் செந்தலைக்கு. நம்மை அவமதித்தவனின் செந்தலையை நீக்கு. திறைப் பொருளைப் பெற்று வா" என்றான் நந்த சோழன்.

"அப்படியே ஆகட்டும் மன்னவா." என்று கூறிய நீலன் இரண்டு நாட்கள் கழித்துச் செந்தலைக்குப் புறப்பட்டான்.

செந்தலையில் சிங்கார ரசத்திற்கு இடமனித்துச் சிங்காரியுடன் சிங்கபுரத்துச் சிறப்பு கட்டிலில் களிப்புடன் இருந்த முத்தரையனைக் கண்டாமணியோசை கடுப்பாக்கியது.

எழுந்து சென்று கதவைத் திறந்தான்.

வெளியே நின்று கொண்டிருந்த வீரனைக் கடுப்போடு பார்த்து "என்ன? சோழப் படை வந்து விட்டதா?" என்று கேட்டான்.

"இல்லை"

"சோழ மன்னன் வந்து விட்டானா?"

"இல்லை"

"நீலன் வந்து விட்டானா?"

"இல்லை"

"பின்?"

"ஆடல்மா வந்திருக்கிறது" என்றான் வீரன்.

முத்தரையனுக்கு மூச்சே நின்று விடும் போலிருந்தது.

★★★



முத்தரையன்

செந்தலை* என்னும் சந்திரலேகையின் தலைவனான முத்தரையன் சோழ மன்னனுக்கு அளிக்க வேண்டிய திறையை நிறுத்திய போது அவனுக்கு அருகில் நின்றிருந்தவர்கள் அது தவறு என்று அறிவுறுத்தினார்கள்.

ஆனால் எந்த ஒரு உறுத்தலும் வருத்தமும் இல்லாத முத்தரையர் தலைவர் "மனிதர்கள் தவறு செய்கிறவர்கள் தான். தவறு செய்யாத மனிதன் தரணியில் இல்லை" என்றான் இயல்பாக.

'தெரிந்தே தவறு செய்வது அவிவேகம் அல்லவா?" என்று கேட்டார்கள், அவனது நலம் விரும்பிகள்.

"தெரிந்து செய்தால் என்ன? தெரியாமல் செய்தால் என்ன? தவறு தவறு தானே?" என்றான் முத்தரையன்.

"பின் விளைவுகளை யோசித்தீர்களா?"

"என்ன பின் விளைவு? சோழ மன்னன் நம் மீது படையெடுப்பான். அவ்வளவு தானே?"

"படையெடுத்தால் போர் நடக்கும். போர் நடந்தால் நாம் தோற்போம். தோற்றுப் போனால் கைதாவோம். கைதானால் அழிந்து போவோம். நமது ஆட்சியும் மாட்சியும் வீட்சி அடைவது தான் உங்கள் லட்சியமா?"

"ஆட்சி! மாட்சி! வீட்சி! நல்லோர்களே! நாம் முத்தரையர்கள். அதாவது மூன்று தரைகளுக்கு - சேர, சோழ, பாண்டிய நாடுகள் என்னும் மூன்று தரைகளுக்கும் சொந்தக் காரர்களாக இருந்தவர்கள். எப்படிப் பட்ட பாரம்பரியம் நமக்கு? நாம் எவ்வித திறை செலுத்த வேண்டும் பிறர்க்கு?"

தலைவன் கூறுவது வெற்றுரை என்பது அங்கிருந்த ஆலோசகர்களுக்குப் புரிந்தது. முத்தரையர்கள் என்னும் பரம்பரை

---

* தஞ்சைக்கு அருகில் உள்ளது.

முத்தரைகளை ஆண்ட வம்சம் அல்ல என்பதும் முத்துகளைக் கடலிலிருந்து எடுக்கும் இனத்தின் தலைவர்கள் என்பது தான் உண்மை என்பதும் அவர்களுக்குத் தெரிந்திருந்தது.* எனவே தலைவன் தவறான அனுமானத்தால் வறட்டு கௌரவம் பேசுகிறான் என்று கருதினார்கள்.

"பழைய கதை என்பது பழங்கனவு போன்றது. அவலை நினைத்துக் கொண்டு உமியை இடிப்பதைப் போன்றது. சோழர்கள் கூட ஒரு காலத்தில் பேரரசர்களாக இருந்தவர்கள் தான். முத்தரைகளை ஆண்டவர்கள் தான். ஆனால் தற்போது சிற்றரசர்கள். நாமும் தற்போது அப்படித்தான். இன்றைய நிலையைத் தான் நாம் கவனத்தில் கொண்டு பேச வேண்டும்" என்றார்கள்.

"நான் முடிவெடுத்து விட்டால் அதைக் கடவுளே வந்து சொன்னாலும் மாற்றிக் கொள்ள மாட்டேன். நான் பழைய முத்துரையர்களாக மீண்டெழ முடிவு செய்து விட்டேன். சோழனுக்குத் திறை செலுத்த முடியாது" என்று உறுதியாகச் சொன்னான் முத்தரையன்.

அவன் இல்லாத ஊருக்கு வழி தேடுவதாகத் தோன்றியதால் ஆலோசகர்கள் தங்கள் அறிவுரைகளை வீணாக்காமல் அமைதியானார்கள்.

முத்தரையர் தலைவனோ பெருமைப்படத் தக்கத் தகுந்த முடிவை எடுத்து விட்டதாகக் கருதிக் கொண்டான்.

திறை வசூலிக்க வந்த சோழப் பிரதிநிதிகளைச் சிறையில் தள்ளினான்.

திறை கேட்டால் சிறை தான் என்று அறிவித்தான்.

தவறான முடிவெடுத்து விட்டு திமிர்த் தனத்தில் திளைத்த முத்தரையர் தலைவன் காமத்திற்குத் தலைமைப் பதவியை ஏற்றவன் போல் கட்டழகுப் பெண்களை வரவழைத்து அவர்களுக்காக ஒரு கட்டடத்தைச் சந்திரலேகையிலேயே கட்டி அதற்குச் சுந்தரிகள் புரம் என்று பெயரும் இட்டு அதில் இந்திர போகத்தைத் தூய்க்க முற்பட்டான்.

அரசியல் ரீதியாக அவனது அறிவு மழுங்கிப் போனாலும் காம விஷயத்தில் கூர்மையாக இருந்தது.

தனக்குச் சுகமளிக்க வந்த சுந்தரியைக் கட்டிலில் அமர்த்தி-

---

* முத்து + அரையர் முத்தரையர். முத்துகளின் அரசர். பக்கம் 23. 'முத்தில் முகிழ்த்த முத்தரையர்' By. முனைவர். நடன. காசிநாதன்.

"இந்தக் கட்டில் சிங்கபுரத்தில் செய்தது. இந்தப் பட்டு மஞ்சம் சீனத்தில் செய்தது. இந்தத் தலையணை தலைத் தக்கோலத்தில் செய்தது. இதன் பொலிவைப் பார்த்து விட்டுத் தேவர்கள் வந்து கேட்கிறார்கள். கின்னரர்கள் வந்து கேட்கிறார்கள். நான் தான் முடியாது முடியாது என்று மறுத்துக் கொண்டிருக்கிறேன்" என்றான்.

கலகலவென்று சிரித்த கட்டழகி "இந்த உலகத்தைச் சேர்ந்தவர்கள் யாரும் கேட்கவில்லையா?" என்று கேட்டாள் கொஞ்சும் குரலில்.

"தேவர்களுக்கே நான் மறுக்கும் போது இவர்களுக்கா தரப் போகிறேன்? அது தெரிந்து தான் அவர்கள் கோரவில்லை" என்றான் முத்தரையன்.

"அப்படியென்ன இருக்கிறது இக்கட்டிலில்?" என்று கேட்டாள் அழகி.

"இதே கேள்வியை உன்னைப் பற்றி கேட்டால் என்ன பதிலைச் சொல்வாய்?"

"நீங்கள் என்ன கேட்கிறீர்கள்?"

"உன்னிடம் என்னென்ன சிறப்புகள் இருக்கின்றன?"

"அவற்றை நீங்கள் தான் சொல்ல வேண்டும்."

"நான் சொல்வதில் தவறு இருக்கலாம். உன்னைப் பற்றிய உண்மை உனக்குத் தான் தெரியும். ஆகவே நீயே சொல்."

"இந்தக் கட்டிலுக்கான மகத்துவத்தை எனது செயல்பாடுகள் கூட்டும். குறைக்காது."

"அழகான பதிலைச் சொல்கிறாய். சமத்காரமகாவும் சொல்கிறாய். காரியத்தில் அவை இருக்குமா என்று தெரியவில்லை."

"மேலே இருந்து பார்த்தால் கிணற்று நீரின் ஆழம் தெரியாது. இறங்கினால் தான் சரியாகத் தெரியும்."

"என்னை இறங்கச் சொல்கிறாய். நான் இறங்கி விட்டால் மிகவும் ஆபத்தானவனாக மாறி விடுவேன். என்னிடம் புயல் இருக்கிறது. எரிமலை இருக்கிறது."

"எல்லா ஆடவர்களும் பீற்றிக் கொள்வது போலத் தான் நீங்களும் பீற்றிக் கொள்கிறீர்கள."

"அப்படியானால் நான் நானாக வேண்டியது தான். கிணற்றில் இறங்கி விட வேண்டியது தான்."

“நானும் அதைத் தான் சொல்கிறேன்.”

பேச்சை நிறுத்திய முத்தரையன் செயலில் இறங்கினான்.

இருவருமே ஒருவருக்கொருவர் பீற்றிக் கொண்டதால் போட்டி போட்டுக் கொண்டு காமக் கிணற்றில் ஆழ்ந்தார்கள்.

கிணறாக இருந்தாலும் சரி கடலாக இருந்தாலும் காமத்தைப் பொறுத்தவரை அவர்கள் ஆழத்தைக் காண்பவர்களே தவிர அகலத்தைக் காண்பவர்கள் அல்ல.

அவனை வம்புக்கழைப்பது போல் பேசி அழைத்த அழகி செவ்விய தேகத்தைப் பெற்றிருந்தாளாதலால் அவளைப் பல இடங்களில் கவ்விக் கடித்தான் முத்தரையன்.

காம வலி அதிகமாக இருந்ததால் அவனது கடி அவளுக்கு இன்பமாகவே இருந்தது.

அவன் எதிர்பாராத இன்ப ரசங்களை அள்ளி இறைத்தாள்.

அவளைப் பொறுத்தவரை அவன் தோற்றான் என்று தான் சொல்ல வேண்டும்.

அவன் அறிந்திராத கலைகளைக் காட்டி அவனை அசத்தி வெற்றி கொண்டாள்.

அவன் அயர்ந்து கிடந்த போது “இப்போது என்ன சொல்கிறீர்கள்?” என்றாள் அவள்.

இன்பத்தில் ஈடுபடுவதை விட ஈடுபட்ட இன்பத்தை எண்ணிப் பார்ப்பது சில நேரங்களில் பேரின்பமாக இருக்கும்.

அந்த நிலையில் தான் இருவரும் இருந்தார்கள்.

“நீ அழகிகளில் அரக்கி” என்றான் முத்தரையன் இறக்கத்துடன்.

“இப்போதாவது புரிந்ததா?”

“எது?”

“இந்த விஷயத்தில் ஆண்களைத் தோற்கடிக்கக் கூடிய பெண்கள் உண்டு என்பது.”

அவளப்படிக் கூறிய போது கண்டாமணியின் பெரு ஓசை கேட்டது.

பாம்பாகப் பிணைந்து கிடந்த முத்தரையன் அதிர்ந்து போய் விலகினான்.

“ஏன்? என்னவாகி விட்டது?” என்று கேட்டாள் அவள் பேராதை குறையாமல்.

"விபரீதம் ஏதோ நடந்திருக்கிறது. நீ போ. நாளை வா. நாளைக்கு மறுநாளும் வா" என்று கூறி அவளை முத்தமிட்ட முத்தரையன் அவளை அனுப்பி வைத்து விட்டு உள்ளறை மூலமாக தன் இருப்பிடத்தை அடைந்து நீராடி மாற்றுடைகளையும் பல்வேறு ஆபரணங்களையும் அணிந்து அரண்மனைக்கு விரைந்து வந்து வினவினான்.

அவன் எதிர்பார்த்தது சோழர் படையை.

அந்தப் படையை ஏமாற்றி அழிக்கும் திட்டங்கள் பலவற்றை அவன் வைத்திருந்தாலும் கோட்டைக்கு வெளியே வந்திருப்பது ஆடல்மா என்பதை அறிந்ததும் அதிர்ந்தான்.

ஆடல்மா என்பது சோழர் சேனாதிபதியின் புரவி தான்.

ஆனால் செயலில் அது புயல். சீற்றத்தில் அது எரிமலை. சேனாதிபதிக்குப் பதில் அது வந்திருக்கிறதென்றால் நிலைமை விபரீதமாகி விட்டது என்று பொருள்.

அதனை எதிர்த்தவர்கள் பிழைத்ததில்லை. அதைப் பறக்கும் குதிரை என்று மறவர்கள் மொழிவார்கள்.

எனவே அதன் வரவின் காரணத்தை அறிந்த முத்தரையன் சேவகர்களையும் காரியஸ்தர்களையும் அழைத்துச் சோழ மன்னனுக்குச் செலுத்த வேண்டிய திறைப் பொருட்களைத் திரட்டச் சொல்லி அவற்றைத் தேரில் ஏற்றிக் கோட்டை வாயிலுக்குச் சென்று புரவியை வணங்கினான்.

புரவி தனது முன்னங் கால்களை எழுப்பிக் கனைத்தது.

அதற்குப் பின்னால் சற்று தூரத்திலிருந்த சேனாதிபதி நீலன் அங்கு வந்தான்.

அவனையும் வணங்கிய முத்தரையன் "சேனாதிபதி! சோழ மாமன்னருக்குச் சேர வேண்டிய திறை இருமடங்காகத் தேரில் வைக்கப் பட்டிருக்கிறது. கொண்டு செல்லுங்கள்" என்றான்.

"எதற்காக இருமடங்கு?" என்று கேட்டான் நீலன்.

"செலுத்த வேண்டிய திறைக்கு அபராதமாகச் சேர்த்து செலுத்துகிறேன்" என்றான் முத்தரையன்.

"நான் உனது திறையைப் பெறுவதற்காக இங்கு வரவில்லை" என்றான் நீலன்.

"வேறு?"

"மன்னர் கொண்டு வரச் சொன்னது திறையை அல்ல. உன் தலையை."

"ஐயா! இது அநீதி."

"முத்தரையரே! நம்மை ஆள்பவர்களுக்குக் காலம் தாழ்த்தாமல் திறை செலுத்துவது தான் நமது தர்மம். அந்தத் தர்மத்தை மீறினால் மரணம் தான் தண்டனை."

"இனிமேல் இப்படி நடக்காது. இது உறுதி."

"அதை நீங்களே வந்து மன்னரிடம் சொல்லுங்கள்."

★

சோழ மன்னன் முன் நிறுத்தப் பட்டான் முத்தரையன்.

"நீலா! எதற்காக இவனை உயிரோடு கொண்டு வந்தாய்? இவன் பேச்சைக் கேட்க நான் தயாராக இல்லை என்பது உனக்குத் தெரியாதா?" என்று கேட்டான் சோழ மன்னன்.

அதற்குள் முத்தரையன் குறுக்கிட்டு "மன்னர் மன்னா! திறை செலுத்துவதில் இனி எக்காலத்திலும் முறை தவற மாட்டேன். தாமதம் செய்ய மாட்டேன். தங்கள் தூதர்களைச் சிறையில் இருந்து விடுவித்து விட்டேன். மந்த மதியின் காரணமாக வெந்ததைத் தின்று வாய்க்கு வந்ததைப் பேசியும் செய்தும் துவறிழைத்து விட்டேன். தாங்கள் மன்னிக்க விட்டால் நாங்கள் எங்கே போவது? கருணை காட்டுங்கள்" என்று கெஞ்சினான்.

"முத்தரையா! நான் யாரை வேண்டுமானாலும் மன்னிப்பேன். துரோகிகளைக் கூட மன்னித்ததுண்டு. ஆனால் எனக்குத் திறை செலுத்த மறுப்பவர்களை மறந்தும் கூட மன்னிப்பதில்லை" என்று சொன்ன சோழ மன்னன் "திறையை மறுக்கும் தைரியம் உனக்கு எப்படி வந்தது?" என்று கேட்டான்.

"மன்னவா! எங்கள் பழைய பெருமைகளை நினைத்துக் கொண்டேன். கழலை நினைத்துக் கொண்டு அழலை அணிந்து கொண்டு விட்டேன். மதி வேலை செய்வதாக நினைத்துக் கொண்டு விதியை மீறி விட்டேன். உடைந்து விழுந்து விட்டேன்" என்றான் முத்தரையன்.

"உனக்குப் பழைய பெருமை இருப்பதாகக் கூறுவதே பிழை. அது புரியாமல் எப்படி பொய்யான நினைப்பில் ஆழ்ந்தாய்? நீங்களா முத்தரைகளையும் ஆண்டவர்கள்? நினைவு தெரிந்த நாளிலிருந்து ஒரு தரைக்கும் உரிமையற்ற நித்திரையாளர்கள் நீங்கள். நீ ஆளும் தரையே சோழர்களுக்குச் சொந்தமானது. அதோடு உங்களுக்குப் பழம் பெருமை இருப்பதாகவே இருக்கட்டும். சோழர்களுக்கு மிகச் சிறந்த பழம் பெருமை உண்டு. பாரம்பரியம் உண்டு. மகத்துவம் உண்டு. அவற்றை நினைத்துக் கொண்டு இந்த மண்ணுலகமே எங்களுக்குச் சொந்தம் என்று

கூக்குரலிடமுடியுமா? இமயத்தை வென்றவர்கள் சோழர்கள். இன்றைக்கு அவர்களது சொந்தம் உறையூரும் சில ஊர்களும் தான். இது தானே உண்மை? இன்றைய நிலை?" என்று சொன்ன சோழமன்னன் நீலனைப் பார்த்து "இவன் விஷயத்தில் உனது முடிவு ஏதாவது உண்டா நீலா ? இந்தக் குறுமதியானவனை இங்கே கொண்டு வந்தவன் நீ" என்றான்.

"மன்னவா! புறாவுக்கு நீதி செய்தவர்கள் சோழ மாமன்னர்கள். அதே சமயம் நீதிக்குப் பின்னால் அவர்களிடம் எல்லையற்ற கருணையும் இருந்தது. இரண்டுமே சோழர்களது ரத்தத்தில் ஊறியுள்ள மகத்தான கூறுகள். அக்கருணையை முத்தரையரிடமும் தயவு கூர்ந்து காட்டுங்கள். இவர் மறுமுறை இவ்வாறு செய்தால் நானே இவரது தலையை வாங்குவேன். தங்களிடம் பணிந்தவனை மன்னியுங்கள்" என்றான் நீலன்.

"அப்படியே ஆகட்டும் நீலா. வாழ்க உன் வீரம். வாழ்க உன் பண்பு" என்றான் மன்னன்.

விஷயம் சுமூகமாக முடிந்ததால் மறுநாளே சந்தோஷத்துடன் வெள்ளைக் குளத்திற்குச் சென்றான் நீலன்.

குமுதவல்லியைச் சந்தித்தான்.

"என்ன முடிவெடுத்தாய் குமுதவல்லி?" என்று கேட்டான்.

மணப்பதற்குச் சம்மதம் என்று சொன்ன அவள் நிபந்தனை ஒன்றை விடுத்தாள்.

நீலன் அதை எதிர்பார்க்கவில்லை.

★★★



நிபந்தனை

தன் மகள் குமுதவல்லி சாதாரணமாக இல்லை என்பதையும் கொஞ்ச நாட்களாகத் தன்னிடம் கூட அதிகம் பேசவில்லை என்பதையும் அறிந்த அவளது தந்தையான வைத்தியர் பெருமகன் வைகுந்தநாதன் பெரிதும் கவலையுற்றார்.

வைத்தியர் என்ற முறையில் அணுகிப் பார்த்ததில் அவளுக்கு உடல் ரீதியான நோய்கள் ஏதுமில்லை என்பது அவருக்குப் புரிந்தது.

மனரீதியாக அவள் வாட்டமுற்றிருக்கிறாள் என்பதை ஊகிக்க முடிந்தாலும் அது என்ன என்பதை அறியமுடியவில்லை. தாய் குமுதவல்லியிடம் ஜாடை மாடையாக விசாரித்துப் பார்த்தாள். குமுதவல்லியோ மலராது குமுதமாக இருந்தாளே தவிர வாயைத் திறந்து மனநோயைப் பற்றி எதுவும் கூறவில்லை.

"அவளுக்குப் பிராயம் வந்து விட்டது. விவாகம் செய்து விட்டால் சரியாகி விடும்" என்றாள் தாய்.

"ஜாதகம் இல்லையே வேதவல்லி. பொருத்தம் பார்க்காமல் எப்படித் திருமணம் செய்து வைக்க முடியும்? அவசரக் கோலத்தில் செய்யக் கூடிய விஷயமில்லையே விவாகம்? குமுதவல்லியின் எதிர் காலமும் வாழ்க்கையும் மிகச் சிறப்பானதாக அமைய வேண்டும். அதற்காக நாம் பிரதிக்ஞை செய்து கொண்டதை மறந்து விட்டாயா?"

"அப்படியானால் நீங்கள் சீர்காழிக்குச் சென்று பிரசன்னம் பார்த்து விட்டு வாருங்களேன். ஜாதகம் இல்லாத பட்சத்தில் அது தான் சரியாக இருக்கும்."

வைத்தியர் வைகுந்த நாதர் சீர்காழிக்குச் சென்று சுப்பைய தீட்சிதரிடம் பிரசன்னம் பார்த்தார்.

"ஐயா! வைகுந்த நாதரே! உமது மகள் குமுதவல்லி பூர்வ ஜென்மத்தில் தேவலோக மங்கையாகப் பிறந்து பூலோகத்தில் சஞ்சரித்தவள். அவள் செய்த ஓர் பாவம் காரணமாகச் சபிக்கப்

பட்டு இந்த ஜென்மத்தில் தமிழ் மண்ணில் பிறந்திருக்கிறாள். இவளுக்கு ஒரு கடமை விதிக்கப் பட்டிருக்கிறது. அதை நிறைவேற்றவே பிறந்திருக்கிறாள். அதை நிறைவேற்றாமல் அவள் போக மாட்டாள்" என்றார்.

"அது என்ன கடமை தீட்சிதரே?"

சொன்னார் தீட்சிதர்.

"ஐயா! அப்படியொரு மணாளன் அவளுக்குக் கிடைப்பானா? அவளது வாழ்க்கை வளமாக இருக்குமா?"

"அதில் சந்தேகமே இல்லை. அவள் சரித்திரத்தில் தனி இடம் பெறுவாள். பிற்காலத்தில் அவளுக்குக் கோயிலில் சிலை வைத்து அவளை ஆயிரக்கணக்கானவர்கள் தொழுவார்கள். அதைக் காண நாம் இருக்கப் போவதில்லை."

"மகிழ்ச்சியைத் தரும் வார்த்தைகளைச் சொன்னீர்கள் ஐயா. அவ்வாறு நடந்தால் எங்களைத் தவிர வேறு பாக்கியசாலிகள் இருக்க முடியாது. தாங்கள் கூறும் மணாளன் அவளுக்கு எப்போது கிடைப்பான்?"

"மிக விரைவில் கிடைப்பான். கிடைத்து விட்டான் என்றே சொல்லலாம்."

தீட்சிதர் இவ்வாறு சொன்னதும் "ஐயா! எங்கள் மகள் குமுதவல்லி சிறிது நாட்களாகவே நிலைத் தடுமாற்றம் அடைந்தவளைப் போல இருக்கிறாள். எங்களுக்குக் கவலையாக இருக்கிறது" என்றான்.

"அவளது கவலை மழை வருவதற்கு முன் குவியும் மேகங்களைப் போன்றது. மேகங்கள் குவிவது கலையத் தான். திருமணம் என்னும் மழை பொழியும் போது கவலை என்னும் மேகங்கள் நிச்சயமாகக் கலையும். உங்களுக்கும் சரி. அவளுக்கும் சரி."

திருப்தியோடு வெள்ளைக் குளத்திற்குத் திரும்பினார் குமுதவல்லியின் தந்தை.

வீட்டிற்கு வந்தவர் தாயிடம் குமுதவல்லியைப் பற்றி வினவினார்.

இப்போது அவள் ஒருவேளை தான் உண்கிறாள். ஏனப்படி என்று வினவினால் பட்டினி இருக்க முடியவில்லை ஆகவே ஒரு வேளை மட்டும் உண்கிறேன். விரைவில் அதையும் விட்டு விடுவேன். உயிர் போய் விடும். அதுதான் நிம்மதியானது என்கிறாள்" என்றாள் தாய்.

"உயிரை விட விரும்பும் அளவிற்கு அவளுக்கு என்ன பிரச்சினை?" என்று கேட்டு விட்டு சற்று யோசித்த வைகுந்த நாதர் "வா. அவளைப் போய் பார்ப்போம்" என்று கூறி அவளிடம் சென்றார்.

வாடிப் போன செடியைப் போலச் சோர்ந்து அமர்ந்திருந்தாள் குமுதவல்லி.

மலர மறுக்கும் மலரைப் போல - ஒளிர மறுக்கும் விளக்கைப் போல - விடிய மறுக்கும் பொழுதைப் போல - வீச மறுக்கும் காற்றைப் போல இருந்தது அவளது நிலை. அவளது கோலம்.

"மகளே! நீராடப் போகவில்லையா அம்மா?" என்று வினயமாகக் கேட்டார் தந்தை.

முகத்தைத் திருப்பாமலேயே "இல்லை" என்றாள் குமுதவல்லி.

"ஏன் அம்மா? நீராடுவது என்றால் உனக்குக் கொள்ளை ஆசை ஆயிற்றே?"

"ஆசை தான் துன்பங்களுக்குக் காரணம் அப்பா. ஆகவே தான் ஆசையை விட்டு விட்டேன்."

"இதென்ன பேச்சு மகளே! ஆசையை அறுக்கும் வயதா உனக்கு? அதோடு நீ வாழ வேண்டியது இல்லறம் என்னும் நல்லறமே தவிர துறவறமல்ல. நீ பேசுவதைப் பார்த்தால் இல்லறமே வேண்டாம் என்று சொல்வது போல் இருக்கிறது. உன் பிரச்சனை தான் என்ன?"

"நானே எனக்குப் பிரச்சனை அப்பா."

"சூட்சும பேச்சுக்களைப் புரிந்து கொள்ளும் சக்தி இந்த ஸ்தூல உடம்பிற்கு இல்லை மகளே. எதுவானாலும் சொல். தீர்த்து வைக்க நாங்கள் இருக்கிறோம். நீராடவும் மறுத்து உண்ணும் உணவையும் குறைத்து நீ வேதனைப் படுவது எங்களுக்கும் வேதனையைத் தரும் என்பது உனக்குப் புரியவில்லையா?"

குமுதவல்லி மௌனமாக இருந்தாள்.

"மகளே! உன் எதிர்காலம் மிகவும் சிறப்பாக இருக்க வேண்டும் என்று கனவுகளைக் குவித்து வைத்திருக்கிறோம். அது உன் திருமண வாழ்க்கையில் தான் இருக்கிறது. துள்ளித் திரிந்த மான் போல் இருந்த நீ இன்று அள்ளித் தெளித்த நீர்போல் மகிழ்ச்சியின் சுவடு கூடத் தெரியாமல் துவண்டிருந்தால் எப்படி? சொல்" என்றார் வைகுந்த நாதர்.

"என்னை விட்டு விடுங்கள் அப்பா. உங்கள் கனவுகளைக் கலைத்து விடுங்கள்" என்றாள் குமுதவல்லி.

"குமுதவல்லி! இது போல நீ இதுவரைக் கோபித்துக் கொண்டு நாங்கள் பார்த்ததில்லை. அலட்சியப் படுத்திக் கண்டதில்லை. ஒருவேளை எங்களைப் பற்றிய உண்மை உனக்குத் தெரிந்து விட்டதோ என்னவோ! அதனால் தான் இவ்வாறு பேசுகிறாயா என்னவோ! இத்தனை காலமாக எங்களைப் பற்றிய உண்மையை உன்னிடம் சொல்லாதது தவறு என்பது இப்போது தான் புரிகிறது. உன் மனம் வேதனைப்படுமே என்று தான் உன்னிடம் சொல்லாமல் மறைத்தோம்."

வைகுந்த நாதர் இவ்வாறு பேசிய போது குறுக்கிட்ட வேதவல்லி "சுவாமி! பேசாமல் இருங்கள். நமது வாயால் அதைச் சொல்வது பாவம். குற்றம்" என்றாள்.

குமுதவல்லி அவர்கள் இருவரையும் குழப்பத்துடன் பார்த்தாள்.

"என்னப்பா விஷயம்? எதைச் சொல்ல வந்தீர்கள்? அம்மா எதற்காகத் தடுக்கிறாள்?" என்று கேட்டாள்.

"குமுதவல்லி! என் மகளே! அமுதமே! எங்களை மன்னித்து விடு அம்மா. நாங்கள் உன்னைப் பெற்றவர்கள் அல்லர்" என்றார் வைகுந்த நாதர்.

அதிர்ந்து போன குமுதவல்லி "என்ன சொல்கிறீர்கள் அப்பா?" என்று கேட்டாள்.

"நாங்கள் கூறுவது உண்மைதான் மகளே. தாமரைப் பொய்கைக் கரையில் நீ குழந்தையாகக் கிடந்தாய். யார் பெற்றார்கள் என்பது தெரியாது. அங்கே ஏன் கிடத்தினார்கள் என்பதும் தெரியாது. வெண் தாமரையைப் போலிருந்த உன்னைக் கண்டதும் பிள்ளைப் பேறில்லாத நாங்கள் எடுத்து வந்து வளர்த்தோம். ஆளாக்கினோம். இன்று வரை உன்னைத் தேடி ஒருவரும் வராததால் இறைவன் எங்களுக்கு அளித்தப் பிரசாதமாகவே கருதிக் கொண்டோம். இன்று வரை உனக்கு எந்தக் குறையும் வைக்கவில்லை. இனியும் வைக்கக் கூடாது என்பதே என் பிரார்த்தனை."

"அப்பா! தாங்கள் கூறுவது உண்மையானால் நான் பாக்கியம் செய்தவள் என்றே கருதுகிறேன். எனக்கு நீங்கள் தான் பெற்றோர். வேறு யாருக்கும் பெற்றோர் என்று கோருவதற்கு உரிமை கிடையாது. என் ஆயுள் உள்ள வரை இந்தச் சொந்தமும் பந்தமும் மாறாது. தாங்கள் நினைப்பது போல் எனக்கு வருத்தமில்லை. இனி தங்களிடம் என் மனக் குழப்பத்திற்கான காரணத்தை மறைப்பது பாவமாகும்" என்று சொன்ன குமுதவல்லி நீலனைப் பற்றிய விஷயத்தை விவரமாகச் சொல்லி "அவரை மறக்கவும்

முடியவில்லை. மறக்காதிருக்கவும் முடியவில்லை. முடிவெடுக்கும் படி அவர் சொல்கிறார். என்னால் முடிவெடுக்க முடியவில்லை. நேரில் சந்திக்கும் போது உதாசீனம் செய்கிறேன். சந்தித்து விட்டு வந்த பிறகு எனது உதாசீனத்தை நினைத்துச் சங்கடப் படுகிறேன். இப்படியொரு குழப்பம் எனக்கு இது வரை வந்ததில்லை" என்றாள்.

வைகுந்த நாதருக்கு சீர்காழி ஜோசியர் கூறியது நினைவிற்கு வந்தது.

"உன் குழப்பம் என்ன மகளே? நீலன் சோழ நாட்டுச் சேனாதிபதியாக இருப்பது கௌரவமான விஷயம் தானே? உன்னைப் பொறுத்தவரை அவன் நல்ல விதமாகத் தானே நடந்து கொண்டிருக்கிறான்? ஆடவர்களில் இப்படிப்பட்டவர்கள் அரிது மகளே. நாங்கள் உனது எதிர்காலம் சிறப்பாக இருக்க வேண்டும் என்று நினைத்தற்கு ஏற்றாற் போலச் சோழர் சேனாதிபதியே உன்னை விரும்புகிறார். இது மகிழ்ச்சிக்குரிய விஷயமேயன்றி வருத்தப்படக் கூடியது அல்லவே?" என்று கேட்டார்.

குமுதவல்லி மௌனமாய் இருந்தாள்.

"மகளே! உனக்கு நீலன் பிடிக்கவில்லை என்றால் யாரும் கட்டாயப் படுத்தப் போவதில்லை. உன் விருப்பத்திற்கு மாறாக உனக்கு விவாகம் செய்து வைக்க நாங்கள் ஒரு போதும் முயல மாட்டோம். நீலனைத் தவிர்த்து வேறு ஒரு சீலனை நீ விரும்பியிருந்தால் சொல் குமுதவல்லி. அவன் எங்கிருந்தாலும் அழைத்து வந்து விவாகம் செய்து வைக்கிறோம்."

குமுதவல்லி ஏதோ பேச முற்பட்ட போது இல்லத்திற்கு முன்பு இரைச்சல்கள் எழுந்தன.

அதையடுத்து சோழர் சேனாதிபதி நீலன் தனது நான்கு தோழர்களுடன் உள்ளே பிரவேசித்தான்.

அவனது பிரவேசம் குமுதவல்லிக்கு அச்சத்தை அளித்தது.

விரும்பத் தகாதது ஏதேனும் நடந்து விடுமா என்று அவள் கலங்கினாள்.

அதே சமயம் அவளது தாயும் தந்தையும் சோழர் சேனாதிபதி நீலனின் கம்பீரமான தோற்றத்தையும் தீட்சண்யமான முகத்தையும் கண்டு பிரமித்தனர்.

ஜோதிடர் கூறியது நடப்பது போல இருந்தது அவர்களுக்கு

இதற்கிடையில் நீலன் பேச முற்பட்டு "தாங்கள் தான் குமுதவல்லியின் பெற்றோர்களாக இருக்க வேண்டும் என்று

நினைக்கிறேன். துராக்கிருதமாக நான் பிரவேசித்ததற்காக என்னை மன்னியுங்கள். என்னைப் பொறுத்தவரை எந்த விஷயத்திலும் தீர்மானமாகச் செயல்படுவது தான் வழக்கம். முடிவுகளுக்காக கால வரையறை இல்லாமல் காத்திருக்க என்னால் முடியாது. தங்கள் செல்வமகள் குமுதவல்லியை நான் மனதார விரும்பினேன். விரும்புகிறேன். அவளைத் திருமணம் செய்து கொள்ளத் தீர்மானித்தேன். எனது விருப்பத்தை அவளிடமே சொன்னேன். அது விஷயமாக முடிவெடுத்துக் கூறும்படி அவளிடமே கேட்டுக் கொண்டேன். நாட்கள் தான் கழிந்தன. அவளும் வரவில்லை. முடிவும் தெரியவில்லை. ஆகவே தான் முடிவைத் தெரிந்து கொள்ள இல்லத்திற்கு வந்தேன்" என்றான்.

"சேனாதிபதியாரே! குமுதவல்லி ஏதும் அறியாத பேதை. அவளால் எப்படி இது விஷயங்களில் முடிவெடுக்க முடியும்? எங்களை அணுகாமல் அவளையே நீங்கள் அணுகியதும் முடிவு எடுக்கும் படிக் கேட்டதும் சரிதானா?" என்று கேட்டார் வைகுந்தநாதர்.

"ஐயா! எப்படித் தொட்டாலும் மூக்கிற்கும் கைகளுக்கும் தானே தொடர்பு? எனக்குச் சுற்றிவளைக்கும் பழக்கமில்லை. விரும்புகிறவளை நேரடியாகக் கேட்டு விடுவதே உகந்தது என்பது என் கருத்து. இத்தனைக்கும் குமுதவல்லியை நான் வற்புறுத்த வில்லை. தாங்கள் கூறுவது போல் அவள் ஏதுமறியாத பேதையல்ல என்பதை நான் உணர்ந்த பிறகு தான் அவளிடம் பேசினேன். சேனாதிபதியான நான் குமுதவல்லியைக் கவர்ந்து போய் காந்தர்வ விவாகம் செய்து கொள்ள முடியும். ஆனால் திருமணமானது அவ்வாறு நடக்கலாகாது என்பது என் தீர்மானம். வாழ்க்கையானது ராஜபாட்டையைப் போலச் சீராகச் செல்ல வேண்டும் என்றால் திருமணம் செய்து கொள்பவர்கள் மனமொத்தவர்களாய் இருக்க வேண்டும். எனவே தான் வன்முறையில் இறங்காமல் மென்முறையில் இறங்கிச் செயல் படுகிறேன்."

"மகளே! நீ என்னம்மா சொல்கிறாய்? உன் முடிவு எதுவானாலும் சொல். நிறைவேற்றி வைக்கிறோம்" என்றார் வைகுந்த நாதர்.

"இவரை எனக்குப் பிடிக்க வேண்டுமென்றால் - நான் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்றால் - இவர் எனது ஒரே ஒரு நிபந்தனையை ஏற்றுக் கொண்டு நிறைவேற்ற வேண்டும். நிறைவேற்றுவாரா என்று கேட்டுச் சொல்லுங்கள் அப்பா" என்றாள் குமுதவல்லி தன் தந்தையிடம்.

"என்னிடமே கேள் குமுதவல்லி. என்ன நிபந்தனை?" என்று கேட்டான் நீலன்.

அவள் தன் தந்தையைப் பார்த்து "தந்தையே! மணந்து கொண்டால் பரம வைஷ்ணவர் ஒருவரையே மணப்பேன் என்று எனக்குள் பிரதிக்ஞை செய்துள்ளேன். இவர் பஞ்ச சம்ஸ்காரங்களைச் செய்து கொண்டு பரம வைஷ்ணவராக மாறினார் என்றால் நான் திருமணம் செய்து கொள்கிறேன். சொல்லுங்கள் அப்பா. கேளுங்கள் அப்பா" என்றாள்.

அவள் தனது நிபந்தனையைச் சொன்னதும் சேனாதிபதி நீலன் ஒரு கணம் கூட அங்கே நிற்க வில்லை.

நண்பர்களுடன் வெளியேறினான்.

"பார்த்தீர்களா தந்தையே! என்னை மனதார விரும்புவதாகச் சொன்னவர் பதில் கூறாமல் போய் விட்டார் பார்த்தீர்களா? அவர் என்மீது வைத்திருப்பதாகச் சொன்ன அன்பு பலவீனமானது. நிபந்தனை என்ற காற்று வீசியதும் அன்பு என்னும் மணல் கோட்டை இடிந்து விட்டது. அவரது அன்பும் பிரியமும் அவர் சேனாதிபதியாகப் பணிபுரியும் உறையூரைப் போன்ற கற்கோட்டையல்ல தந்தையே. வெறும் மணல் கோட்டை. கலைந்து விட்டது. என் குழப்பமும் அகன்று விட்டது" என்றாள் குமுதவல்லி.

"ஆனாலும் உன் நிபந்தனை மிகவும் கடுமையானது மகளே! படைகளை நடத்தும் சேனாதிபதியான அவர் எப்படி வைஷ்ணவராக மாற முடியும்? அவரை உனக்குப் பிடிக்க வில்லை என்றால் தைரியமாகச் சொல்லியிருக்கலாமே? எதற்கு இந்த நடக்க முடியாத நிபந்தனை?"

"அப்பா! அவர் சேனாதிபதியாக இருந்து கொண்டு எதைச் செய்கிறார்? உயிரைக் கொல்கிறார். பாவங்களைச் செய்கிறார். அதிலிருந்து தடுக்கத் தான் அவருக்கு அந்த நிபந்தனையை விதித்தேன். அது தவறா?" என்று கேட்டாள் குமுதவல்லி.

வைகுந்த நாதர் வியப்பால் விரிந்தார்.

அதே நேரத்தில் -

★★★



திருநறையூர் நம்பி

"சே**சே**னாதிபதி! இந்தப் பெண்மணி தங்களை விரும்புகிறவராகத் தெரியவில்லை. அவர் விதித்துள்ள நிபந்தனையிலிருந்தே இது புரியவில்லையா?"

"சேனாதிபதி! நிபந்தனைகளை விதிக்கும் இடத்தில் இருந்து கொண்டு நிபந்தனைகளைச் சுமந்து கொண்டு வந்திருக்கிறீர்கள். இது தங்கள் பராக்கிரமத்திற்கு உகந்ததா?"

"சேனாதிபதி! அந்தப் பெண்மணியின் மனம் வேறெங்கோ லயித்திருக்கிறது. அதனால் தான் தங்களைப் புறக்கணிக்க கடுமையான நிபந்தனையை விதித்திருக்கிறார். அவரைத் தாங்களும் நிராகரித்து விடுவதே உகந்தது."

"சேனாதிபதி! ஒரு பெண்மணி நிபந்தனை விதித்து அதைத் தாங்கள் ஏற்று நடத்தி விட்டால் அவள் தொடர்ந்து நிபந்தனைகளை விதிப்பதையே வழக்கமாகக் கொள்வாள். நிபந்தனைகளால் தங்களைக் கட்டிப் போடுவாள். ஆகவே நிபந்தனையை உதறித் தள்ளுங்கள். தங்கள் கொள்கையையும் விட்டுத் தள்ளுங்கள்.குமுதவல்லியாரை இன்றே கவர்ந்து சென்று சோழ மன்னரது முன்னிலையில் விவாகம் செய்து கொள்ளுங்கள்."

இப்படியாக நீலனின் நண்பர்கள் தங்கள் கருத்துகளையும் யோசனைகளையும் சொன்னார்கள்.

அவற்றையெல்லாம் பொறுமையுடன் கேட்ட நீலன் "நண்பர்களே! ஒரு பெண்ணின் நிபந்தனைக்குப் போய் நாம் அஞ்சுவதா? நான் பலபோர்களில் ஈடுபட்டிருக்கிறேன். பல நிபந்தனைகளையும் சவால்களையும் சந்தித்திருக்கிறேன். அப்போதெல்லாம் அவற்றைத் தகர்த்து வெற்றியடைந் திருக்கிறேனே தவிர அஞ்சி ஓடியதில்லை" என்றான்.

"சேனாதிபதி! அது நாட்டு விஷயம். இது வீட்டு விஷயம். உங்கள் வாழ்க்கை விஷயம். உங்கள் தனிப்பட்ட விஷயம். இதை ஏற்க வேண்டிய அவசியமில்லை."

"நண்பா! நாட்டை நான் எவ்வாறு கருதுகிறேனோ அப்படித் தான் மனைவியையும் கருதுகிறேன். ஒரு நாட்டைப் பிடிக்க எல்லா எதிர்ப்புகளையும் சவால்களையும் சந்திப்பது போலத் தான் குமுதவல்லியின் நிபந்தனையையும் கருதுகிறேன். நிபந்தனைகளுக்கு அஞ்சி எதிரியிடமிருந்து நான் பின் வாங்கி வந்ததில்லை. அதே போல இவள் விஷயத்திலும் பின் வாங்கப் போவதில்லை.

"தாங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?"

"குமுதவல்லியை என் மனைவியாக எனக்குள் வரித்து விட்ட பிறகு வேறு எந்தப் பெண்ணையும் விரும்ப மாட்டேன். ஆகவே குமுதவல்லியின் நிபந்தனையை நிறைவேற்றி அவளை மணக்கத் தீர்மானித்து விட்டேன்."

"எதற்கும் மீண்டும் ஒருமுறை யோசியுங்கள் சேனாதிபதி."

"அரசியல் ஆனாலும் சரி - ஆன்மீகமானாலும் சரி - அகமுடையாள் விஷயமானாலும் சரி முறையாகத் தீர்மானித்து விட்டுத் தான் செயலில் இறங்குவேன். இது உங்களுக்குத் தெரியாதா?"

நீலன் தீர்மானித்து விட்டால் அவனாலேயே கூட அதை மாற்றிக் கொள்ள முடியாது என்பதை அறிந்திருந்த நண்பர்கள் மேற்கொண்டு அவனுக்கு யோசனை கூற முற்படவில்லை.

யாரிடம் போய் பஞ்ச சமஸ்காரங்களைப் பெறுவது என்ற கேள்வியே எழுந்தது.

வெள்ளக் குளத்திலேயே அது பற்றி வினவிய போது அங்கிருந்த ஓர் வேதியர் "திருநறையூருக்குச்* செல்லுங்கள். அங்கே திருநறையூர் நம்பி என்றொரு சிரேஷ்டர் இருக்கிறார். அநேகருக்குப் பஞ்ச சம்ஸ்காரங்களைச் செய்து வித்த மகாபுருஷர் அவர். உங்களுக்கு அவரே ஏற்றவர். செல்லுங்கள்" என்றார்.

நீலன் தாமதிக்க வில்லை. உடனடியாகத் திருநறையூருக்குப் புறப்பட்டான்.

அங்குச் செல்லும் போது சேனாதிபதி என்ற அதிகாரத்துடன் செல்ல வேண்டாம் என்று நண்பர்கள் சொல்லியிருந்ததால் அவ்வாறே சென்றான் நீலன்.

ஆனாலும் தோரணையை முற்றிலுமாக விட்டு விட முடியவில்லை.

---

* திருநறையூர் தற்போது நாச்சியார் கோயில் என்று வழங்கப் படுகிறது. கும்பகோணம் – குடவாசல் மார்க்கத்தில் 10 கி.மீ. தொலைவில உள்ளது.

அங்கே சென்ற பின் திருநறையூர் நம்பி எங்கிருக்கிறார் என்று பலரிடம் வினவிய போது எல்லோருமே அங்கிருந்த பெருமாள் கோயிலுக்குப் போகும் படிச் சொன்னார்கள்.

நிபந்தனையை நிறைவேற்ற வேண்டும் என்ற வேட்கையே அவனிடம் நிரம்பியிருந்ததால் கோயிலுக்குள் நுழைந்த அவனுக்குப் பெருமாளை தரிசிக்க வேண்டும் என்று தோன்றவில்லை.

நம்பியைத் தேடினான்.

ஆலயத்தில் யாரும் தென்படவில்லை.

"நம்பி சுவாமி!" என்று குரல் கொடுத்த படியே உள்ளே வலம் வந்தான்.

"இதோ நான் தான். இங்கே வா" என்று குரல் மட்டும் வந்ததே தவிர யாரையும் காணவில்லை.

"எங்கே இருக்கிறீர்கள் சுவாமி?" என்று கேட்டான் நீலன்.

"இங்கே இருக்கிறேன்" என்றது குரல்.

"இங்கா? இங்கில்லையா?"

"இங்கும் இருக்கிறேன். அங்கும் இருக்கிறேன். எங்கும் இருக்கிறேன்" என்றது குரல்.

"எங்கும் இருப்பதற்கு நீங்கள் என்ன பெருமானா? இருப்பிடத்தைக் கூறுங்கள் சுவாமி. தங்களிடம் நான் பஞ்சசம்ஸ்காரம் செய்து கொண்டு விரைவாகத் திரும்ப வேண்டும்."

"குளத்திற்கு வா" என்றது குரல்.

திருக்குளத்திற்குச் சென்றான் நீலன்.

அங்கே வைஷ்ணவ சிரேஷ்டர் ஒருவர் உபகரணங்களோடு அமர்ந்திருந்தார்.

"சுவாமி! தாங்கள் தான் நறையூர் நம்பியா?"

"ஆமாம்."

"சற்று முன் பேசியது தாங்கள் தானா?"

"ஆமாம்."

"எங்கும் இருப்பேன் என்றீர்களே அது எப்படி?"

"இப்போது உனக்குப் புரியாது. புரியும் போது உன்னிடம் கேள்விகள் இருக்காது."

"எனக்குத் தாங்கள் பஞ்ச சம்ஸ்காரம் செய்தருள வேண்டும்."

"கோயிலுக்கு வந்த நீ பெருமாளைத் தரிசனம் செய்தாயா?"

'அவர் எங்கும் சென்றுவிட மாட்டார் சுவாமி. எல்லாம் முடிந்த பின் சேவித்துக் கொள்கிறேன்."

"எல்லாம் முடிந்த பின் சேவிப்பதற்கு என்ன இருக்கிறது? சேவித்தல் என்பதே எல்லாம் நல்ல படியாக முடிய வேண்டும் என்பதற்காகத் தானே?" என்று முணுமுணுத்துக் கொண்ட அந்தணர் "எதற்காக உனக்குப் பஞ்ச சம்ஸ்காரம்?" என்று கேட்டார்.

"குமுதவல்லியைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் சுவாமி. அதனால் தான்."

"அவளை மணப்பதற்கும் பஞ்ச சம்ஸ்காரம் செய்து கொள்வதற்கும் என்ன சம்பந்தம்?"

"அதைச் செய்து கொண்டு வந்தால் தான் திருமணம் செய்து கொள்வேன் என்று சொல்லி விட்டாள்."

"விஷயம் அப்படியா? அப்படியானால் பஞ்ச சம்ஸ்காரங்களைச் செய்து கொள்வதில் உனக்கு விருப்பம் இல்லையா?"

"குமுதவல்லியைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும். அது தான் என் விருப்பம்."

"அவளிடம் அப்படி என்ன இருக்கிறது?"

"எல்லாம் அவளிடம் தான் இருக்கிறது."

"மோகம். போகம். சோகம்" என்று முணுமுணுத்துக் கொண்ட அந்தணர். "ஆமாம் நீ யார் என்று சொல்ல வில்லையே!" என்றார்.

"என் பெயர் நீலன். மேனி நீல நிறமாய் இருந்ததால் எனக்கிந்த பெயர். நான் பிறந்தது குறையலூரில்*. சோழ நாட்டுச் சேனாதிபதியாக இருக்கிறேன்."

"சேனாதிபதியாக இருந்து கொண்டு ஸ்ரீ வைஷ்ணவனாக எப்படி இருப்பாய்?"

"சுவாமி! குமுதவல்லியை நான் மணந்து கொள்வதற்குத் தாங்கள் தான் உதவ வேண்டும். என்னிடம் கேள்விகளைக் கேட்காமல் - சங்கடப் படுத்தாமல் பஞ்ச சம்ஸ்காரங்களைச் சீக்கிரமாகச் செய்தருள வேண்டும்."

---

* சோழநாட்டில் திருவாலி என்னும் ஊருக்கு அருகில் உள்ள கிராமம்.

"போகத்தை அனுபவிக்க அத்துணை அவசரமா?" என்று முணுமுணுத்துக் கொண்ட அந்தணர் "பஞ்ச சம்ஸ்காரம் என்றால் என்ன வென்று தெரியுமா?" என்று கேட்டார்.

"தெரியாது சுவாமி."

"பஞ்ச சமஸ்காரம் என்றால் ஐந்து விதமான நியமங்கள். பூணூல் தரித்து நாராயணனின் பன்னிரு திருநாமங்களை உச்சரித்து மேனியில் பன்னிரு திருநாமங்களை அணிய வேண்டும். சங்கு சக்கர இலச்சினையைத் தோளில் பொறிக்க வேண்டும். ஸ்ரீவைஷ்ணவனாகி விடும் பட்சத்தில் திருமால் அடியாருக்குரிய தாஸ்ய நாமத்தை வைத்துக் கொள்ள வேண்டும். தினந்தோறும் எம்பெருமானுக்குத் திருவாராதனை செய்ய வேண்டும். ஓம் நமோ நாராயணாய என்னும் திருமந்திரத்தை உபதேசமாகப் பெற வேண்டும்."

"அப்படியே ஆகட்டும் சுவாமி."

"போய்த் திருக்குளத்தில் நீராடி விட்டு வா."

நீலன் உடனடியாகக் குளத்தில் பாய்ந்து மூழ்கி வெளியே வந்தான்.

அவன் வேகத்தைப் பார்த்து அந்தணர் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டார்.

துண்டைக் கொடுத்து உடம்பைத் துடைத்துக் கொள்ளச் சொன்னார்.

தூய ஆடையைக் கொடுத்து அணிந்து கொள்ளச் சொன்னார்.

பன்னிரு திருமண் காப்புகளை இட்டுக் கொள்ளச் சொன்னார்.

யக்ஞோபவித மந்திரங்களைச் சொல்லி பூணூலை அணிய வைத்தார்.

தணலில் வைத்திருந்த சங்கு சக்கர இலச்சினைகளை எடுத்து இடது தோளிலும் வலது தோளிலுமாகப் பதித்தார்.

அவனைக் குனியும் படிச் சொல்லி அவனது செவியில் 'ஓம் நமோ நாராயணாய' என்று திருமந்திரத்தை ஓதினார்.

"நீலா! இன்று முதல் ஸ்ரீ வைஷ்ணவன். உனது நாமம் இனி கலியன் என்பதாகும்" என்றார்.

"மிகவும் நன்றி சுவாமி. இந்தத் தட்சிணையைத் தயை கூர்ந்து பெற்றுக் கொள்ளுங்கள்" என்று கூறித் துணிப் பையிலிருந்து பத்து பொன் நாணயங்களை எடுத்து நீட்டினான் நீலன்.

"நான் கொடுப்பவனே தவிர பெறுபவன் அல்ல. நாணயங்களை உண்டியலில் இட்டு விடு" என்றார் அந்தணர்.

"நீலன் சற்றே தயங்கி "சுவாமி! குமுதவல்லி சந்தேகக் காரி. எனக்குப் பஞ்ச சம்ஸ்காரங்கள் நடந்ததை அவள் நம்ப மாட்டாள். ஆகவே இங்கே நடந்ததை ஓர் ஓலையில் எழுதிக் கையெழுத்திட்டுக் கொடுங்கள்" என்றான்.

"நான் எழுதி வைக்கிறேன். நீ போய் எம்பெருமானைத் தரிசனம் செய்து விட்டுப் பொன் நாணயங்களை உண்டியலில் போட்டு விட்டு வா" என்றார் அந்தணர்.

நீலன் உடனடியாகச் சென்றான்.

பெருமாளுக்கு ஒரு கும்பிடு போட்டு விட்டு பொன் நாணயங்களை உண்டியலில் போட்டான்.

அவனது நினைவில் குமுதவல்லியே நிறைந்திருந்தாளாதலால் பெருமாளும் உண்டியலும் அவனது கவனத்தைக் கவரவில்லை.

ஓலையைப் பெறுவதற்காகக் குளக்கரைக்கு வந்தான்.

அங்கே அந்தணர் இல்லை.

பஞ்ச சம்ஸ்காரம் செய்து வைத்ததற்கான அடையாளம் எதுவும் இல்லை.

எதுவும் நடந்ததாகவே தெரியவில்லை.

ஆனால் ஓலை மட்டும் இருந்தது.

அது போதும் என்று நினைத்த நீலன் ஓலையை எடுத்து இடுப்பில் செருகிக் கொண்டான். தான் கொண்டு வந்திருந்த ஆடையிலிருந்து வஸ்திரம் ஒன்றைப் போர்த்துக் கொண்டான்.

ஆலயத்தை விட்டு வெளியேறிப் புரவியில் ஏறினான்.

ஆடல்மா புரவி புவி அதிர புயல்போல் பறந்தோடி வெள்ளக் குளத்தை அடைந்தது. குமுதவல்லியின் இல்லத்தின் முன்னால் போய் நின்றது.

இடிபோல் உள்ளே நுழைந்த நீலன் "குமுதவல்லி! குமுதவல்லி" என்று குரல் கொடுத்தான்.

குமுதவல்லியும் அவனது பெற்றோர்களும் வந்தார்கள்.

புயல் போல் ஒரே மூச்சில் பயணம் செய்திருந்ததால் அவனது தேகம் முழுதும் வேர்வை அரும்பி திருமன் காப்புகளை கலைத்துக் கொண்டிருந்த விதமானது நீலவானத்தில் மேகங்கள் கலைந்தோடுவது போலிருந்தது.

அவனது கோலத்தைக் கண்டு அனைவருமே பரவசப் பட்டார்கள்.

"உன் நிபந்தனையை நிறை வேற்றி விட்டேன் குமுதவல்லி. இனி தடை சொல்ல மாட்டாய் அல்லவா?" என்று கேட்டான் நீலன்.

"ஆதாரம் இருக்கிறதா?" என்று கேட்டாள் குமுதவல்லி.

வைகுந்த நாதர் குறுக்கிட்டு "மகளே! நீ இவ்வாறு கேட்பது தவறு. பஞ்ச சம்ஸ்காரம் செய்து கொண்டவர்கள் பொய் கூற மாட்டார்கள். அதைச் செய்து கொள்ளாமல் செய்து கொண்டதாகச் சொல்லும் அளவிற்குச் சேனாதிபதி பொய்யர் அல்ல. நம்பு குமுதவல்லி" என்றார்.

"நிபந்தனையைக் கேட்டதும் ஓடிவிட்டார் என்றாயே குமுதவல்லி. நிபந்தனையை முடித்து விட்டல்லா இவர் ஓடி வந்திருக்கிறார்? இவரது அன்பு பொய் என்றாயே! பொய்யல்ல மெய் என்றல்லவா நிரூபித்திருக்கிறார்? இவரையா நம்ப மறுக்கிறாய்?" என்றாள் தாய்.

"நான் ஆதாரத்துடன் தான் வந்திருக்கிறேன் ஐயா. எனக்குப் பஞ்ச சம்ஸ்காரங்களைச் செய்து வைத்த திருநறையூர் நம்பி எழுதிக் கொடுத்த ஓலையைக் கொண்டு வந்திருக்கிறேன். பார் குமுதவல்லி" என்று கூறி ஓலையை எடுத்துக் காட்டினான் நீலன்.

அதை வாங்கிப் பார்த்த குமுதவல்லி "இதுவா ஆதாரம்? நீங்கள் பொய்யர். ஏமாற்றுக் காரர்" என்று சொல்லி ஓலையை அவனிடமே கொடுத்தாள்.

ஓலையை வாங்கிப் பார்த்த நீலன் அதிர்ந்தான்.

★★★



திருமணமும் சிலர் மனமும்

ஓலை வெற்று ஓலையாக இருந்தது. ஒரெழுத்தும் எழுதப் பட்டிருக்கவில்லை.

திருநறையூர் நம்பி தன்னை இவ்வாறு ஏமாற்றியிருப்பார் என்று அவன் சிறிதும் எதிர் பார்க்கவில்லை.

சந்தேகக் காரியான குமுதவல்லி வெற்று ஓலையைப் பார்த்து விட்டுத் தன்னைப் பொய்யன் என்று கூறியது மெய்யை வருத்தியது.

"எம்பெருமானே! இது என்ன சோதனை?" என்று முதன் முறையாக எம்பெருமானை வேண்டிக் கொண்டான்.

அதற்கு உடனடியாகப் பலன் கிடைத்தது.

"சேனாதிபதி! உங்களை நான் நம்புகிறேன். நான் நம்ப மாட்டேன் என்று சந்தேகித்து ஓலையை எழுதி வாங்க முற்பட்டீர்களே அது தான் தவறு" என்றாள் குமுதவல்லி.

"மிக்க மகிழ்ச்சி குமுதவல்லி. இந்த நம்பிக்கை நம் இருவருக்குமே நல்ல அடையாளம்" என்று சொன்ன நீலன் அவளது பெற்றோரைப் பார்த்து "இனிப் பிரச்சனை எதுவும் இல்லையே? நற்காரியங்களைத் துவங்கலாம் அல்லவா?" என்று கேட்டான்.

குமுதவல்லி குறுக்கிட்டு "அவசரப் பட வேண்டாம் சேனாதிபதி. எனது இரண்டாவது நிபந்தனையையும் நீங்கள் ஏற்று நடத்த வேண்டும்" என்றாள்.

"இன்னும் எத்தனை நிபந்தனைகளை விதிக்க விருக்கிறாய் குமுதவல்லி?" என்று அலுத்துக்கொண்டநீலன் "நிபந்தனைகளால் நடக்கும் விவாகம் இரும்புக் கூண்டுக்குள் அடைய விரும்பும் செயலாகும். உனது நிபந்தனையை நான் ஏற்றதற்குக் காரணம் உன் மீதான அன்பினால் தான். நீயோ அன்பைப் பணயமாக்குகிறாய். அன்பை அவமதிக்கிறாய். ஆடவனை அவமானப் படுத்துகிறாய். இதெல்லாம் நல்லதற்கல்ல பெண்ணே." என்றான்.

அவளோ அவனது வார்த்தைகளைப் பெரிதாக நினைக்க வில்லை.

"தினமும் ஆயிரத்தெட்டு பாகவதர்களுக்கு அன்னதானம் செய்ய வேண்டும். இது தான் என் நிபந்தனை" என்றாள்.

வைகுந்த நாதர் குறுக்கிட்டு "இது தவறு மகளே. திருமணம் முடிந்தபிறகு இந்த அன்னதானத்தை அறமாகச் செய்யலாம். இதைத் திருமணம் நடப்பதற்கான நிபந்தனையாக விதிப்பது இயல்புக்கு மாறானது. மற்றவர்கள் உன்னைப் பற்றி என்ன நினைப்பார்கள் மகளே. யோசித்துப் பார்" என்றார்.

நீலன் குறுக்கிட்டு "இந்த நிபந்தனையையும் ஏற்கிறேன். நிபந்தனைகள் முடிந்து விட்டனவா? இன்னமும் உள்ளனவா? இருந்தால் முழுவதையும் இப்போதே சொல்லி விடு. நினைத்து நினைத்துச் சொல்ல வேண்டாம்" என்றான்.

"அவ்வளவு தான்" என்றாள் குமுதவல்லி.

நீலன் அகன்றான்.

வைகுந்த நாதர் சங்கடத்துடன் அசைந்து "உன் மனம் கல்மனமாக எப்படி மாறியது மகளே! கனிவான உன் குணம் கடுமையானது எவ்வாறு? எதற்கு இப்படியெல்லாம் நிபந்தனைகளை விதிக்கிறாய்? உன்னை விரும்பி விட்ட ஒரே காரணத்திற்காக மாவீரரான அச் சேனாதிபதி பொறுமையாக நடந்து கொள்கிறார். ஒருவரது பொறுமையைச் சோதிக்கலாகாது குமுதவல்லி" என்றார்.

"எல்லாம் நல்லதிற்காகத் தான் அப்பா. கவலைப் படாதீர்கள்" என்றாள் குமுதவல்லி.

அதற்குப் பின் இருதரப்புப் பெற்றோர்களும் கலந்து பேசி சம்பிரதாய முறைப்படி நாள் கோள் ஆகியவற்றைப் பார்த்து திருமணத்தை நிச்சயித்தார்கள்.

திருமணம் பற்றிச் சோழமன்னனிடம் தெரிவித்தான் நீலன்.

"ஆகா! உன் திருமணத்தை நானல்லவா நடத்த வேண்டும் என்றிருந்தேன்! நீயாகத் தீர்மானித்து விட்டாயா? பாதகமில்லை. ஆனால் ஒரு நிபந்தனை" என்றான் சோழ மன்னன்.

"நிபந்தனையா? நீங்களுமா?"

"இனிக்கும் நிபந்தனை தான். கவலைப் படாதே. உனது திருமணம் உறையூரில் என் முன்னிலையில் தான் நடக்கும்.

மறுப்புத் தெரிவித்தால் திருமணத்தை நிறுத்தி விடுவேன்" என்றான் மன்னன்.

நீலனின் முகம் பரவசப்பட்டது.

"கரும்பைத் தின்பதற்குக் கூலியா? மன்னர் மன்னவா! என் மீது தான் உங்களுக்கு எவ்வளவு அன்பு? எவ்வளவு கருணை! என் உயிர் உள்ளவரை தங்களுக்கு விசுவாசமாக இருந்து பணிகளைத் தொடர்ந்து செய்வேன்" என்று நெகிழ்ந்தான்.

"எல்லாம் உன் வீரத்திற்குத் தான் நீலா. உன் வீரத்திற்கு இணை எங்கே இருக்கிறது?" என்றான் சோழமன்னன்.

குறித்த நாளில் உறையூரானது மும்பர் உலகம் போல் விழாக் கோலம் பூண்டது.

தனது இல்லத் திருமணத்தைப் போலக் கருதி சிறப்பான ஏற்பாடுகளைச் செய்திருந்தான் சோழமன்னன்.

மணமேடைக்கு வலப்புறம் நின்று கௌரவம் சேர்த்த மன்னன் சீர்வரிசைகளையும் கொடுத்தான்.

வேதியர்கள் மந்திரம் சொல்ல, நீலன் குமுதவல்லியின் கழுத்தில் மங்கல நாணைச் சூட்ட, அதே நேரத்தில் ஒற்றன் ஒருவன் வந்து மன்னனின் காதில் ஏதோ சொன்னான்.

"அப்படியா?" என்று கேட்டு விட்டு அங்கிருந்து அகன்றான் மன்னன்.

"என்ன விஷயம்?" என்று ஒற்றனிடம் தனது கண்களை உருட்டியவாறு கேட்டான் நீலன்.

"ஒற்றன் அவன் காதிலும் விஷயத்தைச் சொன்னான்.

நீல வண்ண நீலனின் முகம் கறுத்தது.

"அப்படியா?" என்று சொன்னபடி எழுந்தான்.

"மாப்பிள்ளை எங்கே செல்கிறீர்கள்?" என்று கேட்டார் வைகுந்த நாதர்.

"நீலா! இரு. விவாக காரியம் இன்னும் முடியவில்லை" என்றாள் தாய் வல்லித்திரு.

"எங்கே போகிறாய்? முடித்து விட்டுச் செல்" என்றார் தந்தை ஆலிநாடர்.*

நீலனோ எவரது பேச்சையும் கவனிக்காமல் வெளியேறினான் வேகமாக.

---

* 'மருவு தொல்புகழ் ஆலிநாடன் திருமனைவி
இருமை மிக்க பொற்கடக வல்லித்திரு என்பாள்' – அரிசமய தீபம் (பரகால சருக்கம்)

ஒற்றனை வளைத்துக் கொண்ட பெற்றோர்களும் உற்றோர்களும் "நீலனிடம் என்ன சொன்னாய்? என்ன விஷயம்?" என்று வினவினார்கள்.

"உறையூரை நோக்கிக் கொடும்பாளூர்ப் படைகள் முன்னேறுகிறதாம்" என்றான் ஒற்றன்.

★

சோழமன்னனுக்கு முன்னால் போருடைகளை அணிந்து கொண்டு உருவிய வாளுடன் போய் நின்றான் நீலன்.

"நீலா! என்ன இது? உனக்கு இன்று திருமணநாள். நீ இருக்க வேண்டிய இடம் மணமேடை. இங்கே எதற்காக வந்தாய்? எதற்காகப் போருடைகளை அணிந்தாய்?" என்று சற்று கோபத்துடனேயே கேட்டான் சோழமன்னன்.

"மன்னவா! எனது தந்தை ஆலிநாடர் சோழர் சேனாதிபதியாக இருந்தார். அவரது தந்தையும் சேனாதிபதிதான். என்னை நீங்கள் சேனாதிபதியாக நியமித்தீர்கள். பரம்பரை பரம்பரையாகச் சோழ நாட்டுப் படைத்தலைவர்களாக இருந்து பணி செய்து வருபவர்கள் நாங்கள். இந்தப் பணி தான் எங்களுக்கு முதன்மையானது. அதுவும் உறையூரை நோக்கிப் பகைவர்கள் படையெடுக்கும் போது நான் திருமண விருந்துண்டு கொண்டாடிக் கொண்டிருக்க முடியாது. அதோடு குமுதவல்லிக்கு மங்கல நாணினைச் சூட்டி மனைவியாக்கிக் கொண்டு விட்டேன். இனி அங்கே எனக்கு வேலை இல்லை. இங்கே தான். எனக்கு மனைவியும் நாடும் ஒன்று. என் மனைவியைக் காக்க உற்றார் உறவினர் இருக்கிறார்கள். தங்களுக்கு யாருமில்லை. சேனாதிபதியாக நடந்து கொள்ள வேண்டிய வேளை வரும் போது தங்களுக்கு உதவாமல் எப்படி இருக்க முடியும் நான்?" என்றான் நிலன்.

"உத்தம வீரனே! உன்னைப் பாராட்ட எனக்கு வார்த்தைகள் இல்லை. வார்த்தைகளைத் தேடிப் பிடித்துப் பாராட்டினாலும் அது போதாது. கர்ம வீரனே! உன்னை வரலாறு ஓயாமல் பேசும். உன் திட்டம் என்ன?" என்று கேட்டான் மன்னன்.

"மன்னவா! தாங்கள் செய்த திருமணக் கோலாகலங்களால் உறையூர் உற்சாக வெள்ளத்தில் மிதந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையில் எதிரிப் படையை இங்கே அனுமதிப்பது சரியல்ல. எனவே படைகளை அழைத்துக் கொண்டு பகைவனை நோக்கிச் செல்கிறேன். உத்திரவு கொடுங்கள்" என்றான் நீலன்.

"அப்படியே ஆகட்டும். புறப்படு நீலா. உனக்கே வெற்றி" என்றான் மன்னன்.

அதையடுத்து முரசுகள் அதிர போர்த் தாரைகள் முழங்க சோழர் படை புறப்பட்டது.

★

திருமண மண்டபத்திற்கு இச்செய்தி வந்த போது கலங்கினாள் குமுதவல்லி.

அவள் மட்டுமே கலங்கினாள்.

"அப்பா! என்ன இது? தாலி கட்டிய கையோடு வாளைச் சுமந்து கொண்டு புறப்பட்டு விட்டாரே! இதற்காகவா திருமணம் செய்து கொண்டேன்?" என்று கேட்டாள்.

"இப்போது என்ன ஆகி விட்டது என்று கலங்குகிறாய்? சேனாதிபதி தனது நாட்டைக் காக்கச் சேனையோடு போவது தானே முறை? பூனை போல் இங்கேயே முடங்கியிருக்க முடியுமா?" என்று கேட்டார் வைகுந்த நாதர்.

"தந்தையே! அவருக்கு நான் நிபந்தனைகளை விடுத்த போது என்னைக் கடுமையானவள் என்று சொன்னீர்கள். கனிவாக இருக்க வேண்டியவள் கல்லாகி விட்டதாகக் கருதினீர்கள். என் மனம் எப்போதும் கனியாகத் தான் கனிந்திருக்கிறது. அவர் சேனாதிபதியாக இருந்து கொண்டு நூற்றுக் கணக்கானவரை கொன்று குவிப்பது பாவ காரியம் என்று எனக்குத் தோன்றியது. அதைத் தடுக்கவே நிபந்தனைகளைச் சொன்னேன். பஞ்ச சமஸ்காரங்களைச் செய்து கொண்டு ஸ்ரீவைஷ்ணவராக மாறினால் இந்தக் கொலைத் தொழிலில் ஈடுபடமாட்டார் என்று நினைத்தேன். அதேபோல் தினமும் 1008 பாகவத உத்தமர்களுக்கு அன்னதானம் செய்யச் சொன்னது கூட அவரது கவனத்தைத் தர்ம காரியங்களின் பேரில் திருப்புவதற்காகத் தான். எனது கணவர் மாவீரர் என்பதை விடக் காருண்யம் மிகுந்த கருணைமான் என்று அழைப்பதையே விரும்பினேன் தந்தையே. ஆனால் என்ன ஆயிற்று பார்த்தீர்களா? கல்யாண வைபவங்கள் பூரணமாக முடியும் முன்பே கைவிட்டு விட்டு உயிர்க் கொலையே உன்னதமான பணி என்று கிளம்பிப் போய் விட்டாரே! என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள்?" என்றாள் குமுதவல்லி.

"மகளே! உனது நோக்கம் இப்போது தான் புரிந்தது. அது உன்னதமானது. உன்னதமான நோக்கம் என்றைக்கும் வீணாகப் போகாது. நீ சற்றுப் பொறுமையோடு இருக்க வேண்டும்" என்றார் வைகுந்தநாதர்.

"இப்போது போருக்கேச் சென்று விட்டாரே தந்தையே! அவருக்கு ஏதாவது நேர்ந்து விட்டால்?"

"இந்த நினைப்பே உனக்கு வரக் கூடாது. அவரை நீ புரிந்து கொள்ளவில்லை. வீம்புக்குக் கட்டுக் கட்டுபவரல்ல அவர். தீர்மானமானவர். உனக்கிருப்பது போல அவருக்கும் லட்சியம் இருக்கும். லட்சிய புருஷர்கள் எளிதில் வீழ்ந்து விடமாட்டார்கள். உன் நெற்றியில் துலங்கும் குங்குமத்திற்கும் கழுத்தில் ஏறியிருக்கும் திருமாங்கலயத்திற்கும் எந்தப் பங்கமும் வராது. இது திருநாள் மகளே. இந்த நாளில் நீ நம்பிக்கையைப் பெறவேண்டுமே தவிர நம்பிக்கையை இழந்து அபசகுனமாக நினைக்கவோ பேசவோ கூடாது. வெள்ளைக் குளப்பெருமாளை தியானம் செய். நல்லதே நடக்கும்" என்றார் வைகுந்தநாதர்.

மணப்பந்தலில் இருந்தவர்களும் சரி உறையூரில் உறைந்த ஊர் மக்களும் சரி நீலனின் நடவடிக்கையை அங்கீகரித்துப் பாராட்டினார்களே தவிர "என்ன இப்படி ஆகி விட்டது?" என்று அங்கலாய்க்கவில்லை.

"நீலன் சூரன். சூராதி சூரன். பகைவருக்கு காலன். பரகாலன்" என்று வாய் விட்டுப் போற்றவே செய்தார்கள்.

தோழிகளும் குமுதவல்லிக்கு ஆறுதல் சொன்னார்கள். தேறுதல் சொன்னார்கள்.

"உன்னை நினைத்தும் உன் பாக்கியத்தையும் நினைத்துப் பெருமைப் படு குமுதவல்லி. வீட்டையும் நாட்டையும் ஒன்றாகக் கருதும் மனிதர் உனக்கு மணாளனாகக் கிடைத்ததற்காகக் கொண்டாடு. கூத்தாடு. எங்களுக்கு இப்படியொரு புருஷர் கிடைத்திருந்தால் கழைக் கூத்தாடி உறையூரை உறங்கா ஊராக்கியிருப்போம். இப்போது மட்டுமென்ன? ஊர் உனது மணாளனைத் தானே போற்றிப் பாடிக் கொண்டிருக்கிறது?" என்றார்கள்.

அன்றிரவு சோழமன்னனும் வந்து அவளைத் தேற்றினான்.

"நீலன் சாதாரணமானவனல்ல மகளே. பற்பல சாதனைகளைப் புரிவதற்காகப் பிறந்தவன். அவன் நிழலில் இருப்பதற்கு நீ பெருமைப்பட்டுப் பரவசப்படும் நாள் நிச்சயம் வரும். இரண்டொரு நாள் தான். போருக்குச் சென்ற பரகாலன் வெற்றி மாலை சூடி வருவான். அவனை வரவேற்பதற்குத் தயாராக இரு" என்று கூறிப் பெற்றோர் உற்றோருடன் வெள்ளைக் குளத்திற்கு அனுப்பி வைத்தான்.

இதற்கிடையில் வேளிர் வம்சத்து மன்னனான பூதிவிக்கிரம கேசரி கொடும்பாளூரிலிருந்து தனது படையுடன் உறையூரை நோக்கி ஆர்ப்பாட்டமாக வந்து கொண்டிருந்தான்.

"உறையூர் நீலனின் திருமணத்தில் கண்மூடித் தனமான கொண்டாட்டத்தில் மூழ்கிக் கிடக்கும். கோட்டையானது ஆயத்த நிலையில் இருக்காது. நாம் எதிர்பாராமல் தாக்கினால் பழம் வந்து வாயில் விழுவது போல் வெற்றி வந்து என்னைத் தழுவும். அதையடுத்து வெற்றி மீது வெற்றி வந்து என்னைச் சேரும். அதை வாங்கித் தந்த பெருமை என்னையே சேரும்" என்று ஆனந்தமாகப் பேசவும் செய்தான்.

"பகற்கனவுகள் பலிக்காது மன்னவா" என்றான் தளபதி தளராபதி.

"உனக்கு முன்னால் முன்னால் பதி என்று பெயர் வைத்தவர்கள் முட்டாள் முன்னால் முன்னால் இருக்க வேண்டும். தளர்பதி என்ற பெயரே உனக்கு பொருத்தம்" என்று பரிகசித்தான் பூதி விக்கிரம கேசரி.

முன்னால் விரைவிலேயே தனது நினைப்பு பகற்கனவு தான் என்பதை உணர வேண்டிய நிலை வந்தது.

திணறினான்.

★★★



பூதி விக்கிரம கேசரி

கொடும்பாளூர் அரசன் பூதி விக்கிரம கேசரி சோழர்களை மட்டுமின்றிப் பலரையும் வென்று வெற்றிகளைக் குவிக்கப் போவதாக உறுதியோடு சொன்னபோது அது வெற்று வார்த்தை என்பதை உணர்ந்த தளபதி தளராபதி "அரசே! அடிக்கல்லையே நாட்டவில்லை. அதற்குள் அழகாபுரியை அமைத்து விட்ட மாதிரிச் சொல்கிறீர்கள். எப்படி என்று தான் தெரியவில்லை" என்றான்.

"உனக்குப் புரியக் கூடுமானால் நீ தளபதியாக இருந்திருக்க மாட்டாய். தரணியை ஆளும் சக்கிரவர்த்தியாய் இருந்திருப்பாய். அபாயமான ஓர் எதிரியை வெற்றி கொள்ளும் போது அது மகத்தானதாக இருக்கும். அந்த மகோன்னத வெற்றி அடுத்தடுத்து வெற்றிகளை அடுக்கிக் கொண்டே போகும்" என்றான் மன்னன்.

"அபாயமான பகைவன் என்று நீங்கள் கூறுவது சோழ மன்னரைத் தானே?"

"இது என்ன கேள்வி? அவனது உறையூரை நோக்கித் தானே படையோடு போய்க் கொண்டிருக்கிறோம்?"

"இந்தப் படையெடுப்பிற்கு யோசனை கூறியது யார்?"

"நான். நானே தான் கூறினேன். அதற்கென்ன?"

"உங்களுக்கு யோசனை சொல்ல ஒருவரும் இல்லையா?"

"ஆகா! ஆயிரம் பேர் இருப்பார்கள். வெறும் மரமண்டைகள். கொலுப் பொம்மைகளாக இருக்கக் கூடத் தகுதியில்லாத மொட்டைக் கோபுரங்கள். முனை மழுங்கிய ஆயுதங்கள். எனைப் படுத்தும் நோய்கள். அவர்களிடம் ஆலோசனை கேட்பதை விடச் சாக்கடையில் மூழ்கிச் செத்துத் தொலைக்கலாம்."

"இவ்வளவு கீழ்த்தரமான அபிப்ராயங்கள் உங்களுக்கு எப்படி வந்தது? எப்போது வந்தது?"

"முத்தரையர் மீது படையெடுக்கலாம், மலையமான் மீது படையெடுக்கலாம், சேதுராசன் மீது படையெடுக்கலாம் என்று

சொன்னபோது என்னைத் தட்டித் தட்டி, குட்டிக் குட்டி, குனிய வைத்து முடக்கினீர்கள் அப்போது உண்டான அபிப்ராயம் தான் இது."

"உங்களை நாங்கள் தடுத்திரா விட்டால் கொடும்பாளூர் இன்றைக்கு இருந்திருக்காது. நீங்களும் மறைந்து விட்டிருப்பீர்கள். ஆழத்தை நோக்கி அவசரமாகப் பயணம் செய்ய விரும்பிய உங்களைத் தடுத்ததால் தான் நீங்கள் இப்போது கொடும்பாளூர் மன்னராகத் தொடர்கிறீர்கள்?"

"போதும்! வீரனைக் கோழையாக்கும் பாழாய்ப் போன யோசனைகளும் ஆலோசனைகளும் அறவே வேண்டாம் என்று உதாசீனப் படுத்தித் தான் இப்போது நானாகவே யோசித்துப் போர் தொடுக்கப் புறப்பட்டேன்."

"உங்களால் சோழர் படையை வென்று விட முடியுமா?"

"தற்போதைய சோழர் படை கரிகாலனின் படையல்ல. நலங்கிள்ளியின் படையல்ல. கோச்செங்கணானின் படையல்ல. கோழைப் படை. ஓட்டைப் படகு. உடைந்த தேர். அதோடு உறையூரின் நிலை நமக்குச் சாதகமானது. நம்மை எதிர்பார்க்க முடியாத நிலை நிலவுகிறது. அவர்களை முறியடிக்க இதுவே தருணம்."

"ஆனால் கரிகாலனை விடச் சிறந்தவனான பரகாலன் சோழர் சேனாதிபதியாக இருக்கிறான்."

"பரகாலன் என்று பெயர் சூட்டி பாடிக் கொண்டாடி பயந்துச் சாகிறவர்கள் நீங்கள் தான். நானல்ல. இந்தப் போருக்குப் பின் அவனுக்கு இருகால்களும் இருக்கப் போவதில்லை."

"நீங்கள் பகற்கனவு காண்கிறீர்கள் மன்னவா. அது ஒரு போதும் பலிக்கப் போவதில்லை."

"உனக்குத் தளராபதி என்று பெயர் வைத்தார்களே முட்டாள்கள். தளர்பதி என்று வைத்திருந்தால் சரியாக இருந்திருக்கும். உன் அபிப்ராயங்களை மூட்டைக் கட்டி வைத்து விட்டு வாளை எடுத்து வீசுவதற்குத் தயாராக இரு. வாள் கூராக இருக்கிறதல்லவா? துருப் பிடித்துப் போய் விடவில்லையே?"

மன்னனை மாயை ஆட்டிப் படைக்கிறது என்பதை உணர்ந்த தளபதி அவனோடு பேசுவது முட்டாள் தனம் என்று கருதி வாயை மூடிக் கொண்டான்.

உறையூருக்கும் கொடும்பாளூருக்கும் ஒரு நாள் பயணதூரம் தான்.

உறையூரில் கோலாகலத் திருமணம் நடக்க விருந்த நாளுக்கு முன்னாள் இரவிலேயே படைகளை நகர்த்தினான் கொடும்பாளூர் மன்னன். திருமணத்தன்று நடுப்பகலில் உறையூரை அடைந்தால் சூறையாடி விடலாம் என்று திட்டம் போட்டான்.

ஆனால் உறையூருக்கு இருகாத தூரத்திலேயே அவன் எதிர்பாராத காட்சியைக் கண்டான். உறையூர்ப் பெருவெளி என்று அழைக்கப் பட்ட வெட்ட வெளிப் பரப்பை அடைத்துக் கொண்டு சோழர் படைகள் இருந்ததைக் கண்டதும் தளபதி தளராபதியைப் பார்த்து "தளபதி! இதை நான் எதிர்பார்க்கவில்லை" என்றான்.

"நீங்கள் எதிர்பார்த்தது வெற்றி ஒன்றைத் தான். அது தவறு என்பதால் தான் அதைப் பகற்கனவு என்றேன். உங்கள் செவிகளில் அது ஏற வில்லையா அல்லது ஏறியும் உரைக்க வில்லையா என்பது எனக்கு விளங்கவில்லை" என்றான் தளபதி மன்னனைக் கண்டு அஞ்சாமல்.

"உறையூரில் கொண்டாட்டம் இருக்கும் என்றும், கவனம் திரும்பியிருக்கும் என்றும், படைகள் வராது என்றும் நினைத்துத் தானே நாம் புறப்பட்டோம்?"

"நீங்கள் நினைப்பது போலவே எல்லோரும் நினைக்க முடியாது. அதோடு எதிரி முட்டாளல்ல. உங்கள் நினைப்பிற்கு மாறாகச் சோழர்கள் நினைக்க மாட்டார்கள் என்று கருதியது தான் உங்கள் பகற்கனவு."

பதற்றத்தில் இருந்ததால் தளபதி தன்னை உதாசீனமாகப் பேசியதைக் கவனிக்காத கொடும்பாளூர் மன்னன் "எதிரி வியூகம் வைத்திருப்பதாகத் தோன்றுகிறது தளபதி" என்றான்.

"மதியுடைய சேனாதிபதி நடந்து கொள்ளக்கூடிய முறை அது. வெட்ட வெளி இருப்பதால் வியூகத்தை அமைத்துப் போரிடுவது தான் வழக்கம்" என்றான் தளபதி.

"வந்திருப்பது சோழ மன்னனா?"

"இல்லை. காலன். பரகாலன்."

"நீலனா?"

"எனக்குத் தெரியவில்லையே!"

"பார்க்க வேண்டிய அவசியமில்லையே ஊகமே போதும."

"என்ன ஊகம்?"

"தற்போதெல்லாம் சோழமன்னர் போருக்கு வருவதில்லை. சேனாதிபதிதான்."

மன்னன் சற்று யோசித்து விட்டு "யாராக இருந்தாலும் கவலையில்லை. சேனாதிபதி நீலன் எனக்குத் தூசு. நமது போர்த் திட்டத்தைப் பற்றிக் கூறு." என்றான்.

"உங்களுக்குத் தான் சேனாதிபதி தூசு ஆயிற்றே? போர்த் திட்டம் எதற்கு?"

"தளராபதி! உளறாதே. உன்னைக் கேட்பது உன் மன்னன் என்பது நினைவிருக்கட்டும்" என்றான் மன்னன் கோபமாக.

"ஆலோசனை சொன்னபோது அலட்சியப் படுத்தியவர் நீங்கள். ஆலோசனையே வேண்டாம் என்று கூறியவர் நீங்கள். நீங்கள் இஷ்டப்படி எங்களை அவமானப்படுத்தி விட்டு திடீரெனக் கோபப் பட்டால் எப்படி?" என்று தளபதியும் சூடாகக் கேட்டான்.

"தளராபதி! ஆலோசனையைக் கேட்பது - ஆலோசனை வேண்டாம் என்பது - கோபப்படுவது - போற்றிப் பாராட்டுவது - இவையெல்லாம் மன்னனின் உரிமைகள். அதைப் பற்றிக் கேள்வி கேட்க யாருக்கும் தகுதியில்லை. உரிமையில்லை." என்றான் மன்னன்.

"உணர்வுகளை விட்டு விட்டு அடிமையைப் போல வாழ்வது தளபதிகளுக்கு உகந்ததல்ல"

"உன்னை அடிமை என்று யாரும் கூறவில்லை. உனது ஆலோசனையைக் கேட்கிறேன் மன்னன் என்ற முறையில். அதற்கு நீ தளபதி என்ற முறையில் பதிலைச் சொல்" என்றான் மன்னன்.

"சோழர் சேனாதிபதி சூறாவளியைப் போன்றவன். சீறும் எரிமலையை விட ஆபத்தானவன். அவன் தற்போது கொண்டு வந்திருக்கும் படைக்குப் பின்னால் உறையூரிலிருந்து வேறொரு படைப் பிரிவும் வரக் கூடும். அப்படி வருமானால் நாம் சின்னா பின்னப்பட்டு விடுவோம். கொடும்பாளூர் திரும்புவதற்கு ஓர் ஈ காக்கை கூட மிஞ்சாது. தெரிந்தே சாவதை விட உயிரைக் காத்துக் கொள்வதே சரியானது. எதிரியுடன் மோதுவதற்கு வேறு ஒரு சந்தர்ப்பத்தை அமைத்துக் கொள்ளலாம். இப்போதைக்குச் சோழ சேனாதிபதியிடம் சரணடைந்து விடுவது தான் விவேகமானது."

"நீயெல்லாம் எப்படித் தளபதியானாய் தளராபதி? இக்கட்டான நேரங்களில் வீரவுரையாற்றி வீரர்களை எழுச்சி பெற வைக்க வேண்டியவனான நீ போரைத் தவிர்த்து விட்டு ஓடி ஒளிவதற்கு உபாயம் சொல்கிறாயே! உனக்கு வெட்கமாக இல்லை?"

"உண்மை நிலையைச் சொல்வதற்கு வெட்கம் வேண்டியதில்லை. அழிவு நிச்சயம் என்று தெரிந்து விட்ட பிறகு வறட்டு வீரத்தைக் காட்டுவதற்குத் தூண்டுபவன் தளபதியாக மாட்டான். போரிடுவது மட்டுமே சரியானது என்று சொல்வதற்கில்லை. பின்வாங்குவதும் சில நேரங்களில் சரியானது தான்."

மன்னன் தளபதியை விட்டு உபதளபதியைப் பார்த்து "உபதளபதி. எதிரியின் அணிவகுப்பைப் பார்த்தால் அவன் சர்ப்பவியூகம் அமைத்திருப்பது போலத் தெரிகிறது. சர்ப்ப வியூகத்தை எதிர் கொள்ளவும் அழிக்கவும் கருட வியூகம் அமைப்பதே முறை. ஆகவே படையைக் கருட வியூகமாக மாற்று. நானா நீலனா என்று பார்த்து விடுகிறேன்" என்றான்.

மறு வார்த்தை பேசாமல் மாற்று வியூகம் அமைக்க முற்பட்டான் உபதளபதி.

ஆனால் அது நடக்கவில்லை.

உபதளபதி வியூகம் அமைக்க முற்பட்ட போதே சோழர் படை போர்த் தாரைகளையும் முரசுகளையும் முழக்கி விட்டு கொடும்பாளூர்ப் படையை நோக்கி வேகமாக முன்னேறியது.

பாம்பு வடிவத்தில் இருந்த சோழர்படை அப்படியே வேகமாக முன்னேறிக் கொடும்பாளூர்ப் படையைச் சுற்றி வளைத்தது.

நாக வியூகத்தில் நடுவிலிருந்தும் சேனாதிபதி நீலன் "தாக்குங்கள்" என்று பெருங்குரல் கொடுத்ததால் சோழ வீரர்கள் எதிரிப் படையை நெருக்கித் தள்ளினார்கள்.

கொடும்பாளூர்ப் படை சுதாரித்துக் கொள்வதற்குள் சோழர்படை இடிபோல் தாக்கியதால் சிதறியது. சேதாரப் பட்டது.

தப்பி ஓடவோ பிரிந்து தாக்கவோ முடியாத நிலையில் கொடும்பாளூர் வீரர்கள் நேரடிப் போரில் ஈடுபட்டார்கள். ஆனால் சோழ வீரர்கள் போரில் அசுரர்கள் என்பதை நிரூபித்தார்கள். சேனாதிபதி நீலனும் எதிரிகளுக்கும் காலன் என்பதை நிரூபிக்கும் விதமாகச் சுழன்று எதிரி வீரர்களை வெட்டி வீழ்த்தினான். அவனது வாள் சுழன்ற இடங்களில் எதிரி வீரர்களின் தலைகள் வெட்டுண்டன.

எங்கேயும் மோதல்கள். எங்கேயும் ஓலங்கள்.

ஈவு இரக்கம் என்று எதுவும் இல்லாமல் வெறி பிடித்து என்ற மட்டும் நடைபெற்ற களமாக அங்கங்கும் இருந்தபடியாலும்

சோழர் படையின் கை ஓங்கியிருந்த படியாலும் இரண்டு நாழிகை நேரம் நடைபெற்ற போர் ஒரு முடிவுக்கு வந்தது.

போர்க் களத்தில் கொடும்பாளூர் மன்னனைக் காண வில்லையாதலால் தளபதியான தளராபதி எஞ்சிய வீரர்களின் உயிரைக் காப்பாற்றும் விதமாகச் சமாதானத் தாரைகளை ஊதியதால் போர் நிறுத்தப் பட்டது.

சரணடைந்த தளபதிகளையும் வீரர்களையும் கைது செய்து உறையூருக்கு அழைத்துச் சென்றார் சோழர் சேனாதிபதி நீலன்.

★

சோழ மன்னனுக்கு நீலனை எப்படிப் பாராட்டுவது என்றே தெரியவில்லை.

"சரியான நேரத்தில் கச்சிதமாகத் திட்டமிட்டாய். நம்மை அழிக்க வந்த படையை அழித்து வெற்றி பெற்றாய். சரணடைந்தவர்களைக் கைது செய்து கொண்டு வந்து விட்டாய். ஆரம்பம் முதல் முடிவு வரை தொய்வு இல்லாத அருமையான செயல்பாடு. இதை உன்னைத் தவிர வேறு யாராலும் செய்ய முடியாது. பரகாலா! உனது சேனாதிபதி பதவி இன்றோடு முடிகிறது. இனி நீ சேனாதிபதியல்ல. மன்னன். நீ பிறந்த ஆலி நாட்டை உனக்கே வழங்குகிறேன். ஆலி நாட்டின் அழகு மிகுந்த மங்கை நகரைத் தலைநகரமாகக் கொண்டு மங்கை வேந்தனாக ஆள்வாயாக. இதுவே உனக்குத் தகுந்த பரிசு" என்றான்.

நெகிழ்ந்து போன நீலன், "மன்னவா! நான் கடமையைத் தான் செய்தேன்" என்றான்.

"நானும் என் கடமையைத் தான் செய்கிறேன் நீலா. எனது சோழ நாட்டிற்குப் பெருமை சேர்த்த உனக்கு இந்தப் பரிசைத் தருவது என் கடமை. அதை ஏற்க உனக்குச் சகலவிதமான தகுதியும் உண்டு. உன் மனைவியிடம் சென்று இந்தச் சந்தோஷமான செய்தியைச் சொல் நீலா. நல்ல நாளும் கோளும் பார்த்து ஆலி நாட்டிற்கு வந்து உனக்கு முடி சூட்டுகிறேன்" என்று கூறி நீலனைத் தகுந்த மரியாதைகளுடன் வெள்ளைக் குளத்திற்கு அனுப்பி வைத்தான்.

அவனைக் குமுதவல்லியின் பெற்றோர்களும் ஊர் மக்களும் வரவேற்றார்கள்.

குமுதவல்லி வரவேற்க வில்லை.

இல்லத்திற்குள் பிரவேசித்த நீலன் குமுதவல்லியைக் கண்டான்.

அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டு அவனைப் பார்க்க மறுத்தாள்.

"போர்க் களத்தில் வெற்றி பெற்று வந்தவனை வரவேற்பது தான் வீரமங்கையர் மரபு குமுதவல்லி. மறந்து விட்டாயா?" என்று கேட்டான்.

"நான் மறக்க விரும்பியதை நீங்கள் ஞாபகப் படுத்துகிறீர்கள். நீங்களும் மறக்க வேண்டும் என்று நினைத்ததைத் திருமண நாளன்றே செய்து விட்டு வந்திருக்கிறீர்கள். மாலைகளைத் தாங்கி நின்ற கைகளில் குருதியைப் பூசிக் கொண்டு நிற்கிறீர்கள். பரம வைஷ்ணவராக நீங்கள் பவனி வர வேண்டும் என்று நினைத்த என் கனவுகள் தகர்ந்து விட்டன. நீங்களோ பராக்கிரமத்தைக் காட்டும் சேனாதிபதியாகவே காட்சியளிக்கிறீர்கள். இதில் நான் மகிழ்வதற்கு என்ன இருக்கிறது சுவாமி?" என்றாள் குமுதவல்லி.

"உன் மனக்குறை தீர்வதற்கும் நான் மாறுவதற்குமான நாட்களை எண்ணத் தொடங்கு குமுதா! சோழ மாமன்னர் என்னைச் சேனாதிபதி பதவியிலிருந்து விடுவித்து விட்டார். ஆலி நாட்டிற்கு மன்னனாக்க முடிவு செய்து விட்டார். இனி நான் மங்கை நாட்டு மன்னன் மட்டுமல்ல மங்கையான உனக்கு மன்னனாக உன் விருப்பப்படி இருப்பேன். கவலையை விடு."

நீலனின் பேச்சு குமுதவல்லிக்கு ஆறுதலாக இருந்தது.

அதற்கேற்ப சோழ மன்னன் உரிய ஏற்பாடுகளைச் செய்து நீலனை ஆலி நாட்டு மன்னனாக அரியணையில் அமர்த்தி முடி சூட்டி வைத்தான்.

மங்கை வேந்தனாகிய நீலன் குமுதவல்லி விரும்பியது போலவே நடந்து கொண்டானாதலால் அவள் தனது இலட்சியம் நிறைவேறியதாக மகிழ்ந்தாள்.

ஆனால் அந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை.

★★★



மங்கை வேந்தன்

திருமங்கை மன்னனாக முடிய சூடிய நீலனை - கலியனை - பரகாலனை - ஆலிநாடனைக் குமுதவல்லி வெள்ளைக்குள பெருமாள் கோயிலுக்கு அழைத்துச் சென்று வழிபட்டாள்.

"திருமங்கை மன்னரான தாங்கள் இந்த ஊருக்கு விஜயம் செய்து திருவெள்ளைக் குளம் என்று அழைக்கப் பெறும் சிறப்பைத் தந்திருக்கிறீர்கள் சுவாமி!" என்றாள் குமுதவல்லி.

"தவறு குமுதவல்லி. இங்கே திருவாக வீற்றிருக்கும் பெருமான் காரணமாகத் தான் இவ்வூர் திருவெள்ளைக்குளம் என்று அழைக்கப்படும். என்னிடத்தில் எந்தச் சிறப்பும் இல்லை" என்றான் மங்கை வேந்தன்.

அவனது வார்த்தைகள் அமுதமாக விழுந்தது குமுதவல்லியின் செவிகளுக்கு.

மங்கை வேந்தன் மறுநாள் அதே ஊரிலேயே ஒரு மடத்தைக் கட்ட உத்திரவிட்டான். ஒரு மாதகாலத்தில் மடம் கட்டப்பட்டது.

அதில் குமுதவல்லி கேட்டுக்கொண்டபடி 1008 பாகவதர்களுக்கு அன்னதானத்தைத் துவக்கினான்.*

அவனும் குமுதவல்லியுமாக பாகவதர்களுக்கு அன்ன மளித்தார்கள்.

தனது லட்சியம் நிறைவேறியதாகக் கண்டு என்றுமில்லாத ஆனந்தத்தை அடைந்தாள் குமுதவல்லி.

மங்கை வேந்தனிடம் அதைத் தெரிவிக்கவும் செய்தாள்.

"நம் வசம் என்ன இருக்கிறது குமுதவல்லி? அனைத்தும் பெருமாள் செயல். அனைத்திலும் இருப்பவனும் அவன். இயங்குபவனும் அவன்" என்றான் மங்கை வேந்தன்.

"தாங்கள் இப்படி மாறுவீர்கள் என்று சிறிது கூட நான் எதிர்பார்க்கவில்லை சுவாமி. என்னை மன்னியுங்கள்" என்றாள் குமுதவல்லி.

---

* இந்த மடம் தற்போது மங்கை மடம் என்று அழைக்கப் படடு வருகிறது.

"உனக்காக எப்படி வேண்டுமானாலும் மாறுவதற்கு நான் தயாராக இருந்தேன். உனக்காக எது வேண்டுமானாலும் செய்வதற்குத் தயாராக இருந்தேன். நீ நிபந்தனைகளை விதித்த போது நிறைவேற்றுவதற்கு முயன்றேனே தவிர யோசிக்க முற்படவில்லை. தவிர்ப்பதற்கு முற்பட வில்லை."

"சுவாமி! எனக்காக எனக்காக என்கிறீர்களே. என்னிடம் என்ன இருக்கிறது?"

"அழகு இருக்கிறது. சொக்க வைக்கும் அழகு இருக்கிறது. அந்த அழகில் நான் சொக்கிப் போனேன். ஆகவே தான் நிபந்தனைகளை நிறை வேற்றினேன்."

"அழியக் கூடிய இந்த அழகின் மீதா ஆசை வைத்தீர்கள்?"

"அழகு மட்டுமல்ல. அனைத்துமே அழியக் கூடியது தான். அதற்காக யார் ஆசையில்லாமல் இருக்கிறார்கள்?"

தான் எதிர்பார்க்கவில்லை என்றாலும் தனது விருப்பப் படி மாறிய கணவனை அதற்கு மேல் கேள்விகளைக் கேட்டு தேவையற்ற சங்கடங்களை உருவாக்கிக் கொள்ள அவள் தயாராக இல்லை.

தனது பெற்றோர்களிடம் கூறிப் பரவசப் பட்ட போது தந்தை சொன்னார் -

"குமுதவல்லி! உனது திருமணம் சம்பந்தமாகச் சீர்காழி ஜோதிடரிடம் நான் சென்ற போது அவர் என்ன சொன்னார் தெரியுமா? நீ இந்த ஜென்மம் எடுத்தது ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காகத் தானாம். முரடனும் மூர்க்கத் தனம் கொண்டவனுமான ஒருவனே உனக்கு மணாளனாக அமைவான் என்றும், திருமணத்தின் மூலம் அவனைத் திருத்தி நல்லவனாக மாற்றுவாய் என்றும் சொன்னார். அதை உன்னிடம் நான் சொல்ல வில்லை. ஆனால் ஜோதிடர் கூறிய படிதான் அனைத்தும் நடந்திருக்கின்றன. எங்களுக்கும் எல்லையில்லாத மகிழ்ச்சி தான் மகளே. உனக்கு மன்னனே மணாளனாகக் கிடைத்திருக்கிறான். அவன் மன்னனாக மட்டுமில்லாமல் உன் மனத்திற்கு உகந்தவனாகவும் இருக்கிறான்."

"இந்த உன்னதமான நிலை நீடிக்குமா அப்பா?"

"நீ நம்பாதது நடந்திருக்கும் போது நம்பிக்கை வைக்க வேண்டியது உன் கடமை" என்றார் தந்தை.

★

இதற்கிடையில் நிர்வாகத்தைச் சீர்த் திருத்தும் விதமாகத் தனது நண்பர்களான தோலா வழக்கன், நீர் மேல் நடப்பான், நிழலில் ஒதுங்குவான், சாயை பிடிப்பான் ஆகியோர்களைத் தனது அமைச்சர்களாகவும் சபர குலத்தலைவனான உதயணனைத் தன் படைத் தலைவனாகவும் நியமித்தான் மங்கை வேந்தன்.

நியமனங்களைச் செய்து அவர்கள் பதவியேற்றபின் அனைவரையும் கூட்டி வைத்து பேச முற்பட்ட மங்கை வேந்தன் "நமது நாடான ஆலிநாடு மிகவும் சிறியது. அந்த நாட்டின் வேந்தனான நானும் சிறியவன் தான். அப்படி இருக்கும் போது அமைச்சர்கள் எதற்கு என்ற கேள்வி எழலாம். நாடு பெரிதாக இருந்தாலும் சிறியதாக இருந்தாலும் மக்கள் நலன் முக்கியம். அதற்குச் சிறப்பான நிர்வாகம் முக்கியம். நான் ஒருவன் மட்டுமே நிர்வாகத்தைக் கவனித்து விட முடியும் என்பது அதீதமான நம்பிக்கை. அதீதமான நம்பிக்கையானது வறட்டு நம்பிக்கையாகும். அது சரியானது அல்ல. ஆகவே தான் எனது நண்பர்களை அமைச்சர்களாக நியமித்திருக்கிறேன். அதற்கு அவர்களது திறமை மட்டுமே காரணமல்ல. அவர்கள் என்னைத் துல்லியமாகப் புரிந்து கொண்டவர்கள். என் அந்தரங்கத்தை அறிந்தவர்கள். நான் செய்ய நினைப்பதை நான் சொல்லாமலேயே செய்யக் கூடியவர்கள். அவர்களைக் காட்டிலும் இந்தப் பதவிக்கு ஏற்றவர்கள் யாரும் இருக்க முடியாது.

"அடுத்து சேனாதிபதி பதவி. அப்பதவிக்கு நியமிக்கப் பட்டிருப்பவன் வேடர் குலத்து வீரனும் நெல்வேலித் தலைவனுமான உதயணன். நான் கலந்து கொண்ட பல போர்களில் கலந்து கொண்டு வீரத்தைக் காட்டியவன். மின்னலைப் போன்றிருக்கும் அவனது வாள் பகைவரோடு மோதும் போது இடி போல முழங்கும். எனவே அவன் இப்பதவிக்கு மிகவும் பொருத்தமானவன். படையே இல்லாமல் படைத் தலைவன் எதற்கு என்று நீங்கள் கேட்கலாம். படையை உருவாக்கும் பணி இனிமேல் துவங்கும். அதை உதயணனே துவக்குவான். அதோடு நான் திருமங்கை மன்னனாக நியமனம் ஆனது சோழ மாமன்னரின் பெருங்கருணையினால் தான். ஆகவே எனது சேவை அவருக்குத் தேவைப்படும் போது செய்யப்படும். மற்றபடி நான் போர்களை விரும்பவில்லை. போர் புரிவது தான் மன்னனின் சிறப்பு என்று கருதப் படுவதை நான் ஏற்கவில்லை. அப்படியெல்லாம் நினைத்துப் போர்த் தொழிலை வழக்கமாக்கி உயிர்க் கொலைகளில் ஈடுபட நான் விரும்பவில்லை. திருமங்கை மன்னன் போரில் ஈடுபடாமல் மக்களை அமைதியாகக் காத்தான்

என்ற பெயரே எனக்குப் பிடித்திருக்கிறது. ஆலி நாட்டில் அமைதி நிலவ வேண்டுமே தவிர பேரிகைகளின் பேரொலி எழக் கூடாது" என்றான்.

"மன்னர் பெருமானே! தாங்கள் அமைதியை நாடும் அரசராக இருக்க விரும்பலாம். ஆனால் பகைவர்களும் அப்படியே இருப்பார்களா?" என்று கேட்டான் உதயணன்.

"பகைவர்கள் எப்போது உருவாகிறார்கள்? பகைமையை நாம் காட்ட முற்படும் போது தானே? நாம் ஏன் அதைக் காட்டப் போகிறோம்? நாம் புல்லை நட்டால் புல்தான் வளரும். கள்ளியை நட்டால் கள்ளி தான் வளரும்" என்றான் மங்கை வேந்தன்.

"பிறகு நாம் ஏன் படை திரட்ட வேண்டும்?" என்று கேட்டான் உதயணன்.

"பாதுகாப்பு என்பது அவசியமானது. நிலம் வெட்ட வெளியாக இருந்தால் அத்து மீறல்கள் நடக்கும். சுவரைக் கட்டி வைத்தால் பாதுகாப்பாக இருக்கும். தற்காப்பிற்காகத் தான் படை திரட்டப் படுகிறதே தவிர போரிடுவதற்காக அல்ல."

"தங்களுக்கு ராஜ்ய விஸ்தரிப்பில் நாட்டம் இல்லையா?"

"உதயணா! நான் அரச வம்சத்தவன் அல்ல. கள்ளர் குலத்தில் பிறந்த சாதாரணமானவன். எனது மூதாதையர்கள் நாடாளும் மன்னர்களாக இல்லை. நான் அரச வம்சத்தவனாக இருந்து அரச வாரிசாக ஆலி நாட்டு மன்னனாக வில்லை. ஏற்கனவே நான் சொன்னபடி இந்த அரியணையும் வைரமுடியும் சோழ மன்னர் எனக்களித்த அருட்கொடை. ஆகவே எனது ரத்தத்தில் இயற்கையாகவே ஆதிக்க ஆசை இல்லை. இனியும் இருக்காது. கொடையாகக் கிடைத்த நாட்டைக் கண்போல் காத்து அமைதியை நிலை நாட்டுவதே எனது இலட்சியம்."

மன்னன் தனது எண்ணங்களில் தெளிவாக இருந்தான். ஆதலால் மற்றவர்களுக்குக் கேள்வி எழவில்லை.

மங்கை வேந்தன் வேந்தனுக்குரிய கடமைகளைச் செய்து கொண்டிருந்த அதே நேரத்தில் தன் மனைவிக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதில் தவறவில்லை.

தினமும் மங்கை மடத்திற்குச் சென்று 1008 பாகவதர்களுக்கு அன்னமளிக்கத்தவறவில்லை.அந்த அன்னதானகைங்கரியத்திற்குப் பொருள் தேவை அதிகமாக இருந்தாலும் சோழ மன்னன் தனக்களித்த செல்வங்களையும் தன் சொந்த செல்வங்களையும் அதற்காகப் பயன் படுத்திக் கொண்டானாதலால் அன்னதானம் நிறைவாகவே நடந்தது.

குமுதவல்லி தன்னைப் போன்ற பாக்கியசாலி யாரும் இல்லை என்று எப்போதும் குதூகலித்தாள்.

★

திருமங்கை நகரின் அரண்மனையில் நிலா மாடத்தில் முழுநிலா உதித்த வேளையில் வந்து நின்ற மங்கை வேந்தன் வானத்தைப் பார்த்த போது அவனுக்குள் ஒரு நிறைவு உண்டாகி யிருந்ததாலோ என்னவோ அவனது வதனத்தில் அழகான புன்னகையொன்று நிதானமான மின்னலைப் போலத் தவழ்ந்தது.

இரவு நேரம் முகிழ்த்து விட்டதை முழு நிலவு மட்டுமின்றி நகரில் பல இடங்களில் நட்சத்திரங்களைப் போலப் பளிச்சிட்ட விளக்குகளும் உணர்த்தின.

சாதாரணமாக ஆரவாரத்திற்கிடையிலேயே இருந்து பழக்கப் பட்டிருந்த மங்கை வேந்தனுக்கு திருமங்கை நகரில் நிலவிய அமைதி வியப்பாக இருந்தது.

தன்னால் எப்படி அந்த அமைதியைச் சகித்துக் கொள்ள முடிகிறது என்று கேட்டுக் கொண்ட அவன் அதற்குக் காரணம் குமுதவல்லி தான் என்பதை உணர்ந்த போது அவளை உள்ளுக்குள் பாராட்டவும் செய்தான்.

அதே சமயம் அவளால் மாற்றப்பட்டு அமைதியை விரும்பி, விரும்பிய அமைதி உண்மையாகவே தனது தலைநகரில் நிலவுவது அவனுக்கு ஆனந்தமாகவே இருந்தது.

மனிதன் உள்ளும் புறமும் விரும்புவது அமைதியைத் தான். அதை அடைய முற்படும் போது சரியான வழிகளைத் தேர்ந்தெடுக்காததால் அவனுக்கு அமைதி கிட்டுவதில்லை. அமைதியைத் தவிர மற்ற எல்லாமும் கிடைத்து விடுகிறது.

அதை நினைத்துக் கொண்டு பெருமூச்செறிந்தான் மங்கை வேந்தன்.

அப்போது நிலா மாடத்தில் "ஐயோ! அம்மா" என்று யாரோ ஒரு பெண் ஈன சுரத்தில் சத்தமிட்டது கேட்டது.

நிலாமாடத்துப் படிக்கட்டுகள் பக்கம் அந்தச் சத்தம் கேட்டதால் அங்குச் சென்றான் வேந்தன்.

அங்கே இளம்பெண் ஒருத்தி படிக்கட்டில் அமர்ந்தபடி கால்களைப் பிடித்துக் கொண்டிருந்தாள்.

படிக்கட்டுப் பகுதியில் மாடங்களில் எரிந்து கொண்டிருந்த பெரும் அகல் விளக்குகளின் பிரகாசத்தில் அவள் அப்சரஸ் போல இருந்தாள்.

"பெண்ணே! யார் நீ? என்ன நடந்தது?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

அவள் மெல்ல எழுந்து "வந்தனம் மகாராஜா! படிக்கட்டுகளில் ஏறும் போது தடுமாறிவிட்டது. சாய்ந்து விழுந்து விட்டேன்" என்றாள் அவள்.

அவளது குரலும் ரம்மியமாக இருந்தது.

"அடி ஒன்றும் பலமாக இல்லையே?"

"இல்லை மகாராஜா. வெறும் சிராய்ப்பு தான்."

"இந்த நேரத்தில் இங்கு வருவதற்கு யாருக்கும் அனுமதி யில்லையே? எப்படி வந்தாய்? யார் உன்னை அனுமதித்தது?"

"மன்னியுங்கள் மகாராஜா. தாங்கள் திரட்டும் படையில் சேர சேனாதிபதியாரிடம் அனுமதி கேட்டேன். படையில் பெண்களுக்கு இடமில்லை என்று சொல்லி மறுத்து விட்டார். மகாராஜாவிடமே சென்று அனுமதியை வாங்கி வருகிறேன் என்று ஒரு வேகத்தில் சொல்லி விட்டு கட்டுப் பாடுகளை மீறி வந்து விட்டேன் மகாராஜா. குற்றம் தான்" என்றாள் அவள்.

"வீரர்கள் என்னைத் தடுக்க வந்தார்கள். நான் படிக்கட்டில் ஏறி விடவே அவர்கள் கீழேயே நின்று விட்டார்கள்" என்று மேலும் சொன்ன அவள் தலைகுனிந்து நின்றாள்.

"கட்டுப்பாடு விதிப்பது கட்டுப்பட்டு இருப்பதற்குத் தான். அதை மீறுவது என்று முற்பட்டு விட்டால் அதற்கென்ன அர்த்தமிருக்க முடியும்? படையில் சேர விரும்பும் நீயே கட்டுப் பாட்டை மீறினால் உன்னை எப்படிப் படையில் சேர்த்துக் கொள்ள முடியும்? ஆரம்பத்திலேயே தடுமாற்றம். ஆரம்பத்திலேயே அத்து மீறல். நீ எப்படி வீராங்கனையாக இருந்து படையில் பணியாற்ற முடியும்? படையில் ஒழுக்கமும் கட்டுப்பாடும் அடிப்படையான விதிகள். உன்னிடம் அவை இல்லை" என்று உறுதியான குரலில் சொன்ன மன்னன் கைகளைத் தட்டினான்.

கீழே இருந்த வீரர்கள் மேலே வந்தார்கள்.

"ஒரு பெண்ணைத் தடுத்து நிறுத்த உங்களால் முடியவில்லை என்றால் நீங்கள் எதற்கு? மன்னனை யார் வேண்டுமானாலும் சந்திக்கலாம் தான். ஆனால் கட்டுப்பாடு சோதித்திருக்கும் நேரத்திலும் இடத்திலும் சந்திக்க முயல்வது தவறு. இவளை நீங்கள் தடுத்திருக்க வேண்டும்" என்று கடிந்து கொண்ட மங்கை

வேந்தன் அவளைப் பார்த்து "உன் பெயரென்ன?" என்று கேட்டான்.

"தேவதேவி மகாராஜா" என்றான் அவள்.

"பெண்ணே! நான் விதித்திருக்கும் கட்டுப்பாடுகளை யாருக்காகவும் விலக்கிக் கொள்ள முடியாது. உனது அத்து மீறலுக்காக உனக்கு ஒரு நாணயம் அபராதம் விதிக்கிறேன். அதைச் செலுத்தி விட்டு நாளைக்கு வந்து என்னை அரண்மனையில் பார்" என்றான் மன்னன்.

அவள் தலை வணங்கி விட்டுத் தன் இருப்பிடத்திற்குச் சென்று அங்கே இருந்த மனிதனிடம் விவரத்தைச் சொன்னாள்.

"சரியாகத் தான் ஆரம்பித்திருக்கிறாய். நாளைக்கும் சரியாக [illegible] வெற்றியோடு வா" என்றான் அந்த மனிதன்.

★ ★ ★



தேவதேவி

அடுத்த நாள் தேவதேவி மங்கை வேந்தன் விதித்த அபராதத் தொகையான ஒரு நாணயத்தைச் செலுத்திவிட்டு அவனைச் சந்திக்க முறைப்படி அனுமதியை வாங்கினாள்.

அன்று மாலையில் தான் மன்னனைச் சந்திக்க அவளுக்கு அனுமதி கிடைத்தது.

அவளை நன்றாகச் சோதித்த பிறகே உள்ளே அனுப்பினார்கள் சேவகர்கள்.

மன்னனைச் சந்திக்கச் சென்ற போது அங்கே மன்னனைத் தவிர வேறு யாருமில்லை.

உள்ளே சென்று "வணக்கம் மகாராஜா" என்றாள் தலையைச் சாய்த்து.

"நீயா? தேவதேவி தானே உன் பெயர்? அபராதத் தொகையைச் செலுத்தி விட்டாயா?" என்று கேட்டான் மன்னன்.

"செலுத்தி விட்டேன் மகாராஜா. அதே சமயம் இந்த அபராதத் தொகை தேவைதானா மகாராஜா? இதனாலா கருவூலம் நிரம்பப் போகிறது?" என்றாள் தேவதேவி.

"கருவூலத்தை நிரப்புவதற்காக அபராதங்கள் விதிக்கப் படுவதில்லை. தவறுகளுக்காக விதிக்கப்படுகின்றன" என்றான் மங்கை வேந்தன்.

"என் தவறைத் தாங்கள் மன்னித்திருக்கக் கூடாதா?"

"மன்னிப்பு என்பது மீண்டும் தவறு செய்வதற்கான அனுமதிச் சீட்டு. அதை நான் அனுமதிப்பதில்லை. பெண்ணே! தேவையற்ற கேள்விகளால் நேரத்தை வீணடிப்பதை விட்டு விட்டுத் தேவையானதை மட்டும் பேசு" என்றான் மன்னன்.

"நேற்று தெரிவித்த அதே செய்தி தான் மகாராஜா. தங்கள் படையில் சேரத் தாங்கள் அனுமதிக்க வேண்டும்."

'பெண்களைப் படையில் சேர்க்கும் வழக்கமில்லை."

“ஏன் மகாராஜா?”

“அவர்களால் தொடர்ந்து படையில் பணியாற்ற முடியாது. உடல் கூறுகள் அவர்களுக்குத் தடையாக இருக்கும்.”

“அப்படியானால் பெண்களின் வீரம் வெளிப்படாமலேயே மண்ணோடு மண்ணாகப் போய் விட வேண்டியது தானா?”

“அவரவர் அவரவர் பணிகளைச் செய்வதே முறை. இதை நீ புரிந்து கொள்வது நல்லது.”

“பெண்கள் எதற்கு மகாராஜா?”

“இல்லறத்தை நடத்துவதற்கு.”

“ராணியார் இருக்கிறாரே மகாராஜா. அது மட்டும் எப்படி?”

“இந்த நாட்டில் ராணி என்று யாரும் இல்லை.”

“தங்கள் துணைவியார் இருக்கிறார்களே மகாராஜா?”

“அவளுக்கு ராணியாக அமர ஆசையில்லை.”

“அவரைத் தவிர வேறு யாரும் அமரமுடியாதா?”

“அவசியமில்லை. அமரவில்லை.”

“தங்கள் ஆட்சியில் பெண்கள் புறக்கணிக்கப்படுவதாகக் கருதலாமா மகாராஜா?”

“புறக்கணிப்பு எதுவும் இங்கே நடக்கவில்லை. அனைத்தும் இயற்கையாக நடந்து வருகின்றன.”

“மகாராஜா! பதில்களைக் கூறுவதில் தெளிவாக இருக்கிறீர்கள். நான் தற்போது கேட்கிற கேள்விக்கும் அவ்வாறே தெளிவாகப் பதில் கூறுவீர்களா மகாராஜா.”

“பீடிகை போடாமல் கேள் தேவதேவி.”

“தங்களுக்கு அழகிய பெண்கள் என்றால் பிடிக்குமாமே! உண்மை தானா?”

“உண்மை தான்.”

“அதற்கென்ன காரணம் மகாராஜா?”

“அழகு அவர்களிடம் தான் இருக்கிறது. அழகென்ற சொல்லுக்கு அவர்களே அடையாளம். எனக்குப் பிடித்த அழகு அது மட்டும் தான்.”

“நான் அழகாக இருக்கிறேனா பிரபு?”

“இருக்கலாம்.”

“என்னை நன்றாகப் பார்த்து விட்டுச் சரியாகச் சொல்லுங்கள்.”

அப்போது தான் அவளை நிமிர்ந்து பார்த்தான் மங்கை வேந்தன்.

பூவொன்று பூவையாகி வந்து நிற்பது போல் அவள் இருப்பதைக் கண்டான் மன்னன்.

அவள் அங்கு வருவதற்கு முன் சற்று சோர்வாக இருந்தாள்.

சற்று வாடிப் போய் இருந்தாள்.

சற்று பயந்தவளாகவும் தயக்கம் கொண்டவளாகவும் இருந்தாள்.

ஆனால் அவனோடு பேசியபின் அனைத்தும் அவளை விட்டு அகன்று ஆடவர்களை மயக்குவிக்கும் போதைப் பார்வையும் அங்கப் பொலிவும் எழுச்சி பெற்றன.

இப்படித் தான் இருந்தாள் என்று சொல்ல முடியாமல் எப்படியெல்லாமோ இருந்தாள்.

மங்கை வேந்தனுக்கு அவளது தோற்றம் தன்னை அசைக்கும் படியாகத் தான் இருந்தது.

அழகிய பெண்களோடு அவனது தொடர்பு என்பது அரிதானது.

ஆனால் அழகான பெண்களை ரசிப்பதென்பது அபரிமிதமானதாக இருந்தது.

எனவே அது வரை பேசிய கடுமையான பேச்சுகளை மறந்து விட்டு தேவதேவியின் அழகை ரசிக்க முற்பட்டான்.

"என்னையே பார்த்துக் கொண்டிருக்கிறீர்களே தவிர எதையும் சொல்லாமல் இருக்கிறீர்களே மகாராஜா? நான் அழகாக இல்லையா?" என்று கேட்டாள் தேவதேவி.

"ரதி என்ற ஒருத்தி இல்லாதிருந்தால் நீதான் ரதியாகப் பேசப் பட்டிருப்பாய். உன்னிடம் அபாரமான அழகு இருக்கிறது. அந்த அழகும் வித்தியாசமாக இருக்கிறது. இதுநாள் வரை உன்னை யாரும் கவனிக்க வில்லையா? கவனித்திருந்தால் உன்னை விட்டிருக்க மாட்டார்களே?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"மகாராஜா இவ்விதம் பாராட்டுவதற்கு நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும். இந்நாளை நான் பொன்னாளாகக் கருதுவேன் பிரபு. நான் ஒன்று சொல்லவா?"

"சொல். தயக்கப் படாமல் சொல்."

"இது நாள் வரை நான் வெளியே வரும் போதெல்லாம் உடம்பை மட்டுமல்ல முகத்தையும் மறைத்துக் கொண்டு தான் வந்து கொண்டிருந்தேன்."

"ஏன் அப்படி?"

"என் அழகை மகாராஜாவான தாங்கள் மட்டும் தான் காண வேண்டும் என்று நினைத்தேன். அதற்காகவே தங்களை நாடி வந்தேன்."

"படையில் சேரப் போவதாகச் சொன்னாயே?"

"படையில் சேரமுடியாது என்று தாங்கள் கூறிய விவரங்களைச் சேனாதிபதியாரே விளக்கமாகச் சொல்லி விட்டார். ஆகவே அது நடக்காத ஒன்று என்பது தங்களைச் சந்திப்பதற்கு முன்பாகவே தெரிந்து விட்டது. அதோடு படையில் சேரும் நோக்கம் எனக்கு அறவே இல்லை. அதைக் காரணமாகச் சொல்லி தங்களைச் சந்திப்பது தான் எனது நோக்கமாக இருந்தது."

"அழகான உன்னிடம் சாமர்த்தியமும் அழகாகத் தான் இருக்கிறது. உன் உண்மையான நோக்கம் தான் என்ன?"

"தங்களுக்குப் புரியவில்லையா பிரபு?"

"நீயே சொல். நீ பேசுவது கூட அழகாக இருக்கிறது. பேச்சு இசை போல் இருக்கிறது. இசை என்னை வசப்படுத்துகிறது."

"மகாராஜா! யாருக்கும் காட்டாத அழகைப் பாதுகாத்துப் பாதுகாத்து வளர்த்தது தாங்கள் துய்ப்பதற்காகத் தான். தங்களிடம் தான் நான் கலைய வேண்டும். கரைய வேண்டும். என்னை ஏற்றுக் கொள்வீர்களா?" என்று கேட்டு மோகனப் பார்வையை வீசினாள் தேவதேவி.

முகத்தில் மோகனம் அரும்பியதால் அவளது மேனியில் இருந்த இளமையும் துள்ளியது.

மன்னனின் பதிலில் தான் தன்னை அனுப்பி வைத்த மனிதனின் வெற்றி மட்டுமின்றி தனது எதிர்காலமும் இருக்கிறது என்பதை உணர்ந்த தேவதேவி அவனது பதிலை ஆவலோடு எதிர்பார்த்தாள்.

மங்கை வேந்தன் திடீரெனப் பளிச்சிட்ட தீப ஒளிபோல புன்னகையை உதிர்த்து விட்டு "தேவதேவி! அழகை ரசிப்பது வேறு. அழகிற்கு உரியவளை ஏற்றுக் கொள்வது வேறு. இந்த வித்தியாசத்தை நீ புரிந்து கொள்ள வேண்டும்" என்றான்.

இந்தப் பதிலை அவள் எதிர்பார்க்கவில்லை.

"மகாராஜா! தங்கள் பதில் விசித்திரமாக இருக்கிறது. மலரொன்று அழகாக இருந்தால் அதைக் காண்பவர்கள் பறித்துச் சூடிக் கொள்வது தான் இயற்கை. தங்களுக்குத் தெரியாதா இது?" என்று கேட்டாள்.

"பெண்ணே! பெண்களை மலர்களோடு ஒப்பிடுவது உண்டு. ஆனாலும் அழகிய மலர்களைப் பறித்துச் சூடிக் கொள்வது போல் அழகிய பெண்களையெல்லாம் பயன்படுத்திக் கொள்ள முடியாது."

"ஏன் மகாராஜா?"

"விளைவுகள் தான் காரணம்."

"மகாராஜா! வெள்ளைக் குளத்தைச் சேர்ந்த குமுதவல்லி அம்மையின் அழகில் உருகிப் போன தாங்கள் அவரை மனைவியாக ஏற்றுக் கொண்டிருக்கும் போது எனக்கு மட்டும் ஏன் இப்படியொரு பதிலைச் சொல்கிறீர்கள்?"

"குமுதவல்லியை நான் மணந்து கொண்டேன். வேறு யாரையும் மணக்கும் உத்தேசம் எனக்கு இல்லை."

"என்னை மணந்து கொள்ளும்படி நான் கேட்கவில்லை மகாராஜா. ஏற்றுக் கொள்ளும் படித் தான் கேட்டுக் கொள்கிறேன். வேண்டிக் கொள்கிறேன். தங்கள் அந்தப் புரத்தில் நானும் ஒரு விளக்காக இருக்கக் கூடாதா? அந்த அருகதை எனக்கு இல்லையா? வேறு எந்தப் பதவிக்கும் பெண்கள் தகுதியில்லை என்றும் அவர்களது உடல் கூறுகள் அதற்கு உதவாது என்று கூறினீர்களே அது வேண்டுமானால் சரியாக இருக்கலாம். அந்தப்புரப் பாவை விளக்காக இருக்கக் கூடவா அவளுக்குத் தகுதியில்லை? தங்கள் திருவாயினாலேயே அபார அழகியாக ஏற்றுக் கொள்ளப் பட்டவள் தங்களால் நிராகரிக்கப் பட்டு வீதியில் திரிய வேண்டியது தானா? நான் வீணானவள் அல்ல மகாராஜா. வீணையைப் போன்றவள். என்னை வீதியில் எறியாதீர்கள்."

"யோசித்து விட்டுச் சொல்கிறேன் தேவதேவி. நீ இன்று போய் நாளை வா" என்றான் மங்கை வேந்தன்.

தன்னை அனுப்பி வைத்த மனிதனிடம் சென்று விவரத்தைச் சொன்னாள் தேவதேவி.

"இன்றைக்கும் நன்றாகத் தான் நடந்து கொண்டிருக்கிறாய். நல்ல முன்னேற்றம்" என்றான் அந்த மனிதன்.

"நடக்குமா ஐயா?"

"இதென்ன கேள்வி? பெண்ணில் பேரழகில் விசுவாமித்திரரே மயங்கியிருக்கும் போது இந்த நாட்டு மன்னருக்கென்ன?"

"நான் அதைச் சொல்லவில்லை. மன்னர் என்னிடம் மயங்கி விட்டதாகவே நினைத்துக் கொள்ளலாம். எனது அங்க பாணங்களும் பேச்சில் சொட்டும் தேனும் யாரையும் மயக்க வல்லது. ஆண்களை மயக்குவதற்காகவே அவதரித்தவள் நான் என்று அழகிகளே என்னைப் பற்றிக் கூறுவார்கள். எனவே அதைப் பற்றி நான் கேட்கவில்லை மயக்குவது என்பது முடிந்து விட்ட வேலை. ஆனால் அதற்குப் பிறகு நடக்க வேண்டிய வேலையைப் பற்றிச் சொன்னீர்களே அது தான் சந்தேகமாக இருக்கிறது."

"ஏன்?"

"உங்களுக்குப் புரியவில்லையா? பழம் நழுவிப் பாலில் விழலாம். அது சாதாரணம். நீங்கள் கூறுவது மகத்தான விஷயம். எலியைப் புரட்டுவது போல் மலையைப் புரட்ட முடியாது."

"பெண்ணே. ஏறும் வரையில் தான் மலையானது மலைப்பானதாக இருக்கும். ஏறிய பின் இருக்காது. தரையில் இருந்த நாம் மலைமீது இருக்கிறோம் என்ற மகிழ்ச்சியே ஏற்படும். நான் சொன்ன விஷயத்தை இவ்வாறு யோசித்துப் பார். மன்னரைச் சந்திக்க முடியும் என்று எதிர்பார்த்தாயா? இல்லை. ஆனால் அது முடிந்தது. மன்னரோடு தனிமையில் இவ்வளவு தூரம் பேச முடியும் என்று எதிர்பார்த்தாயா? இல்லை. ஆனால் அது முடிந்தது. ஒவ்வொரு நாளும் ஒரு முன்னேற்றம் நிகழ்வது தெரியவில்லையா உனக்கு? மலை உச்சிக்குப் படிப்படியாகத் தான் போக முடியுமே தவிர பறந்து போக முடியாது. உனது முன்னேற்றமும் படிப்படியாக இருக்கட்டும். காரியம் நிறைவேறி விடும். அது மட்டும் நிறைவேறி விட்டால் எனது நிலையே தலை கீழாகி விடும். அப்போது நீயும் நானும் ஆனந்தத்தைத் தவிர வேறு எதையும் காண முடியாது."

"நான் தோற்று விட்டால்?"

"நினைப்பு தான் பிழைப்பைக் கெடுக்கும். நடக்காது என்றே நினைத்துக் கொண்டிருப்பவனுக்கு எதுவும் நடக்காது. தோற்றுப் போவோம் என்று எண்ணுகிறவனுக்கு வெற்றி கிடைக்காது. நமது செயல் எதுவானாலும் தன்னம்பிக்கை தான் முக்கியம். தன்னம்பிக்கையை இழப்பது தன்னையே இழப்பதைப் போன்றது. இதை நினைவில் வைத்துக் கொள். அபசகுன வார்த்தை உன்னிடம் வரக் கூடாது. வந்தால் உன் நாக்கை நானே அறுப்பேன்" என்று

சொன்ன அந்த மனிதன் "நாளைக்கு நீ மன்னனைச் சந்திக்காதே. அவன் உன்னைச் சந்திக்க முயல்கிறானா என்று கவனித்து வா. அழைப்பு வந்தால் போ. மூன்று நாட்கள் வரை அழைப்பு வரவில்லையென்றால் பிறகு செல்" என்றான்.

"ஏன் தாமதம் என்று கோபப்பட்டால்?"

"நான் கூறும் காரணத்தைச் சொல்" என்று சொன்ன அந்த மனிதன் அக்காரணத்தையும் சொன்னான்.

மூன்று நாட்களாயின.

மன்னனும் வரவில்லை. அவனிடமிருந்து அழைப்பும் வரவில்லை.

நான்காம் நாள் அவளாக அவனைச் சந்திக்க முயன்ற போது-

மங்கைநகர் பரபரப்பாக இருந்தது.

நகருக்குச் சோழமன்னன் திடீரென வருகை தந்திருந்ததால் பலரும் பலவிதமாகப் பேசிக் கொண்டார்கள்.

சோழனின் வரவைச் சிறிதும் எதிர் பார்க்காத மங்கை வேந்தன் அவனைச் சிறப்பாக வரவேற்று உபசரித்தான்.

"மன்னர் பெருமானே! ஓர் செய்தி அனுப்பியிருந்தால் சிறப்பான வரவேற்பினை நல்கியிருப்பேனே? இப்படி அறிவிப்பு இல்லாமல் திடீரென வந்து என்னைத் திக்குமுக்காட வைத்து விட்டீர்களே?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

சோழ மன்னன் தனது வருகைக்கான காரணத்தைக் கூறிய போது அதிர்ந்து போனான் மங்கை வேந்தன்.

★★★



அஸ்வமேத யாகம்

"என் இல்லங்களுக்கு வருவதற்கு முன்னறிவிப்பு எதற்கு பரகாலா?" என்று கேட்டான் சோழ மன்னன்.

"வாஸ்தவம் தான் மன்னவா! இருப்பினும் நாட்டையளித்துக் கௌரவப்படுத்திய தாங்கள் முதன் முறையாக வருகை தரும் போது சிறப்பாக வரவேற்க வேண்டும் என்று நான் விரும்புவது தவறாகுமா?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"இப்போது மட்டுமென்ன? நீ உபசரித்த விதத்தில் குறையேது மில்லை. நிறைதான். நிறைய தான். அதை விடு. நானிங்கு வந்தது எதற்காகத் தெரியுமா? உன்னிடம் ஒன்றை யாசித்துப் பெறுவதற்காகத் தான்" என்றான் சோழ மன்னன்.

"மன்னவா! இது என்ன பேச்சு? தாங்களாவது! என்னிடம் யாசிப்பதாவது! இது கொடுமையான வார்த்தை. இந்த ராஜ்யமே தங்களுடையது. நானும் தங்களுடையவன். எனவே எதையும் தாங்கள் கட்டளை மூலமே பெறலாம்."

"உனது புரவி ஆடல்மா இருக்கிறதல்லவா? அது எனக்கு வேண்டும்."

"ப்பூ! இவ்வளவு தானா? இதற்காகவா பீடிகை? இதைத் தாங்கள் யாசிக்க வேண்டுமா? ஆளை அனுப்பியிருந்தால் யோசிக்காமலேயே ஆடல்மாவை தங்களுக்கு அனுப்பி வைத்திருப்பேனே?"

"நன்றாக யோசித்துச் சொல் பரகாலா. இந்த நாடு உனக்கு நான் வழங்கப் பட்டதாக இருக்கலாம். ஆனால் ஆடல்மா எனது உரிமைப் பொருளல்ல. உனக்குரியது. உன்னால் வளர்க்கப் பட்டது. உனக்கு வெற்றிகளை வாரி வழங்கியது. உன்னைக் காட்டிலும் உன் ஆடல்மாவைக் கண்டு ஆடிப் போனவர்கள் பலர். உன்னை விட உன் புரவி மீது பகை கொண்டவர்கள் பலர். உன் சிறப்புக்கு அதுவே காரணம். அப்படிப் பட்ட அதிசயப் புரவியை எனக்கு எப்படிக் கொடுப்பாய்? இப்போது கொடுத்து

விட்டு பிறகு எப்போதாவது கேட்டால் ரசாபாசமாகி விடும். ஆகவே யோசித்துச் சொல்.”

“மன்னவா! என் உடம்பே கூட எனக்கு உடமை இல்லை. அப்படியிருக்கும் போது ஆடல்மா புரவிக்கும் எனக்கு என்ன இருக்கிறது? மாமன்னரான தாங்கள் விரும்புகிறீர்கள் என்றால் அதைத் தருவதைத் தவிர எனக்கு வேறு பாக்கியம் என்ன இருக்க முடியும்?”

“ஆடல்மாவை எனக்குக் கொடுத்து விட்டால் பிறகெப்படி நீ அஸ்வமேத யாகம் செய்வாய்?”

“அஸ்வமேத யாகமா? அதை நான் எதற்காகச் செய்ய வேண்டும்?”

“என்னிடம் பொய் சொல்வதும் விளையாடுவதும் மிகவும் ஆபத்தானது பரகாலா.”

“மன்னவா! இதென்ன ஆரம்பத்திலிருந்தே விபரீத தொனியில் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்? நான் யார்? ஆலிலை அளவு கொண்ட ஆலி நாட்டின் அரசன். ஆட்சிக்கு வந்து ஆறுமாதம் கூட ஆகவில்லை. என்னிடம் படைகளும் இல்லை. போராயுதங்களும் இல்லை. போரையே வேண்டாம் என்று அனைவரிடமும் சொல்லி வருபவன் நான். இந்த நிலையில் நானெப்படி அஸ்வமேத யாகம் செய்ய முயற்சிக்க முடியும்? அதற்கான தகுதியும் இல்லை. சக்தியும் இல்லை. இது தான் உண்மை.”

“பரகாலா! உறையூருக்கு செய்தி வந்தது நீ அஸ்வமேத யாகம் செய்யப் போவதாக அதே செய்தி கொடும்பாளூருக்கு வந்திருக்கிறது. சந்திரலேகைக்கு வந்திருக்கிறது. புகாருக்கு வந்திருக்கிறது. பல்லவ காஞ்சிக்கும் போயிருக்கிறதோ என்னவோ! இப்படிச் செய்திகள் நாலாபுறமும் சென்று கொண்டிருக்கும் போது நீ கூறும் வார்த்தைகளை எப்படி நான் ஏற்க முடியும்?”

“மாமன்னவா! சற்று யோசித்துப் பாருங்கள். தாங்கள் கூறிய ராஜ்யங்களுக்கெல்லாம் அஸ்வமேத யாகப் புரவியை அனுப்ப என்னால் இயலுமா? முடவனால் கூட கொம்புத் தேனைப் பெறமுடியும். மங்கை வேந்தனால் அஸ்வமேத யாகத்தை ஒரு போதும் செய்ய இயலாது. உள்ள நாடே சுமை என்று கருதும் நான் இதர நாடுகளுக்கு எதற்காக அறை கூவல் விடுக்கப் போகிறேன்? அதுவும் தங்களுக்கு அவ்வாறு சவாலிடுவதென்பது கனவிலும் நடவாத செயல்.”

“அப்படியானால் செய்திகள் எப்படி வந்தன?”

"தெரியவில்லை மன்னவா தெரியவில்லை. அது குறித்து விசாரிக்கிறேன். என்னைத் தவறாக மட்டும் எண்ணி விடாதீர்கள்."

"நீ அஸ்வமேதயாகம் செய்ய முற்பட்டால் ஆடல்மாவைத் தான் அனுப்புவாய். அதற்காகத் தான் அதையே கேட்டுப் பெற்று விடலாம் என்று வந்தேன். நீயோ செய்திகளைப் பொய் என்கிறாய். பொய்யாகவே இருக்கட்டும். உன்னை நம்புகிறேன் பரகாலா. நீ வாக்குச் சுத்தமானவன். வருகிறேன்."

"நன்றி மன்னவா. பொய் என்று தெரிந்தும் நேரில் வந்து விசாரித்துப் பார்க்க வந்தீர்களே - இது தான் பேரரசின் பெருங்குணம்" என்றான் மங்கை வேந்தன்.

★

இந்த நிகழ்ச்சி மங்கை வேந்தனைச் சற்றே குழப்பியது.

அமைச்சர்களையும் படைத் தலைவன் உதயணனையும் அழைத்தான்.

"அஸ்வமேதயாக விவகாரம் மிகவும் வினோதமாக இருக்கிறது. எனது எண்ணங்கள் பற்றியும் நோக்கங்கள் பற்றியும் உங்கள் எல்லோரிடமும் சொல்லியிருக்கிறேன். போரும் ஆதிக்க ஆசையும் எனக்குக் கிடையாது என்பதை தெளிவாக்கியிருக்கிறேன். இந்த யாகத்தை யார் செய்வார்களென்றால் ஆதிக்க ஆசையும் சாம்ராஜ்ய ஆசையும் உள்ள அரசர்கள் தான். அந்த ஆசை எனக்கு அறவே இல்லை. அதோடு யாகப் புரவியை நாடு நாடாக அனுப்புவதென்பது பகைமையை வரவேற்பது. அப்படிப் பகைமையை வரவேற்றால் அதை முறியடிக்கும் சக்தி நம்மிடம் இருக்க வேண்டும். நம்மிடம் அது இல்லை. இப்போது தான் படையை உருவாக்கவே ஆரம்பித்திருக்கிறோம். இதுவரை எத்தனை பேர் சேர்ந்திருப்பார்கள் உதயணா?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"ஐயாயிரம் பேர் மன்னவா" என்றான் உதயணன்.

"இந்த ஐயாயிரம் பேர்களை வைத்துக் கொண்டு யாரை எதிர்க்க நம்மால் முடியும்? பேரரசர்கள் செய்யக் கூடிய யாகத்தை நான் எப்படிச் செய்ய முடியும்? நான் செய்யப் போவதாக யார் செய்தியனுப்ப முடியும்?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"மன்னவா! நம்மால் அவமானப் படுத்தப் பட்ட கொடும்பாளூர் மன்னனும் முத்தரையர் மன்னனும் இதைச் செய்திருக்கலாம்" என்றான் உதயணன்.

"இருக்கலாம். ஆனால் நோக்கம் என்னவாக இருக்க முடியும்?"

"இப்படியொரு செய்தியின் மூலம் சோழ மன்னருக்கும் உங்களுக்கும் பிளவை உண்டாக்க நினைத்திருக்கலாம். இதர மன்னர்களோடு பகைமையை ஏற்படுத்தவும் எண்ணியிருக்கலாம்."

"அதாவது நாம் விரும்புவது அமைதி. அது கெட வேண்டும். பகைமையும் பூசல்களும் போர்களும் நடந்து நாடு சீர் கெட வேண்டும். இதுதானே எதிர்பார்க்கப் படுவது?"

"ஆமாம் மன்னவா."

"நான் அஞ்சுவது சோழ மாமன்னரைப் பற்றி மட்டும் தான். வேறு யாரைப் பற்றிய அச்சமும் எனக்கில்லை. நல்ல வேளையாகச் சோழ மன்னரே நேரில் வந்து விசாரித்து சந்தேகத்தை நீக்கிக் கொண்டார். அது போதும் எனக்கு. மற்றவர்களைப் பற்றிய கவலையில்லை."

"அப்படியென்றால் நாம் அஸ்வமேதயாகம் எதுவும் நடத்தப் போவதில்லை என்று அறிவிப்பு செய்து விடலாம் அல்லவா?"

"தேவையில்லை. இருப்பதை இல்லை என்று சொல்வதற்குத் தான் அறிவிப்பு வேண்டும். இல்லாததை இல்லை என்று சொல்வதற்கு வேண்டியதில்லை. இந்த விஷயம் இந்த கணத்திலேயே இறந்து விட்டதாகக் கருதுங்கள்" என்று சொன்ன மன்னன் "உதயணா! நீ சேர்த்திருக்கும் வீரர்களுக்கு ஊதியம் வழங்க வேண்டுமல்லவா?" என்று கேட்டான்.

"இதுவரையில் படையில் சேர்ந்திருக்கும் இளைஞர்கள் ஆர்வம் காரணமாகவே சேர்ந்திருக்கிறார்கள். தங்களிடம் சேர்ந்துள்ள வீரத்தை வெளிப்படுத்த வாய்ப்பு கிடைத்திருப்பதாக நினைக்கிறார்கள். அவர்கள் ஊதியம் எதுவும் கோரவில்லை. அவர்களுக்கான ஆயுதங்களைத் தயாரிப்பதற்குத் தான் பொருள் தேவை. இந்த ஐயாயிரம் இளைஞர்களுக்கு மேலாகவும் நாம் இளைஞர்களைத் திரட்ட வேண்டும். அவர்களை அண்டை ஊர்களிலிருந்தும் அண்டை நாடுகளிலிருந்தும் தான் திரட்ட வேண்டும். அப்படித் திரட்டினால் அவர்களுக்கு ஊதியம் தர வேண்டும்" என்றான் உதயணன்.

"வெளி நாட்டவர்களும் அண்டை நாட்டவர்களும் வேண்டாம் உதயணா. அவர்கள் கூலிப் படைகளாகத் தான் செயல்படுவார்கள். அவர்களைக் கட்டி மேய்ப்பது பேரரசுகளுக்கே சாத்தியம். நம்மைப் பொறுத்தவரை ஆலி நாட்டு மக்கள் தான் படையில் இருக்கத் தகுதியானவர்கள். நாட்டுப் பற்று அவர்களிடம் தான் இருக்கும். ஆகவே நம்

நாட்டிலேயே இளைஞர்களை மேலும் திரட்டுவதற்கு முயற்சி செய். அவர்களுக்கு ஊதியம் கொடுத்தால் தகும்" என்றான் மன்னன்.

"அவ்வாறு அவர்களுக்கு ஊதியம் கொடுப்பதற்கு நம் கருவூலத்தில் எப்போதும் பொருள் இருந்து கொண்டே இருக்க வேண்டும். ஊதியம் கொடுத்துப் பழக்கப் படுத்தி விட்டால் நிறுத்த முடியாது. நிதி நெருக்கடி வந்தால் ஊதியம் தர முடியாமல் போகும். ஊதியம் இல்லையென்றால் அவர்கள் ஒத்துழைப்பு பூரணமாக இருக்காது. சிலர் படையிலிருந்து விலகவும் செய்வார்கள்.

"உதயணா! எல்லா நாட்டிலும் படைகள் இருக்கின்றன. அவற்றுக்கு ஊதியம் தரப்படுகின்றன. அது எப்படி?"

"மன்னவா! மக்களிடம் வசூலிக்கும் வரிப் பணத்தில் பாதி படைகளுக்கு ஊதியமாகப் போகும். போர் நடக்கவிருக்கிறது என்றால் போருக்காக நிதியும் வரியும் வசூலிக்கும் வழக்கம் உண்டு. போர் நடைபெற்றால் அதில் கிடைக்கும் செல்வங்கள் படை வீரர்களுக்குத் தரப்படும். நமது நிலை அப்படியல்ல. நமது நாடு சிறியது. மக்கள் தொகை குறைவு. அவர்கள் செலுத்தி வரும் வரியும் சொற்பம்."

அமைச்சர்களில் ஒருவரான சாயை பிடிப்பான் எழுந்து "மன்னவா! திருமங்கை ராஜ்யம் உண்டானதிலிருந்து வரிகள் பற்றிய சீர்த்திருத்தம் நடைபெறவில்லை. நமது நாடு புதியதாக உருவாக்கப் பட்டதையும் அது பாதுகாக்கப் பட வேண்டியதையும் விளக்கி வரிகளை மறுசீரமைப்புச் செய்தால் நிதி நிலை உயரும். புதிய வரிகளுக்கான ஆலோசனையும் இருக்கிறது. தாங்கள் மக்களிடம் அடிக்கடி தோன்றி இதமான பிரச்சாரங்களை மேற்கொண்டால் அவர்கள் வரிகளைச் செலுத்துவதற்குச் சுணக்கம் காட்ட மாட்டார்கள். மறுப்பு தெரிவிக்க மாட்டார்கள்" என்றார்.

மன்னன் ஒப்புக் கொண்டான்.

இதற்கிடையில் அவனைச் சந்தித்து தன் நோக்கத்தை நிறைவேற்றத் துடித்துக் கொண்டிருந்தாள் தேவதேவி.

"தாமதம் ஆகிக் கொண்டிருக்கிறது ஐயா. அவரை எப்படிச் சந்திப்பது? என்ன சமாதானம் சொல்வது?" என்றெல்லாம் தன்னை அனுப்பி வைத்துக் கொண்டிருந்த மனிதனிடம் புலம்பினாள்.

"பதற்றத்தை விடு தேவதேவி. நீ செய்யப் போகும் காரியத்திற்குத் தடையாக இருப்பது பதற்றம் தான். மன்னர் ஒரு சில நாட்களாக ஏதோ குழப்பத்தில் இருக்கிறார். சோழ மன்னரின் திடீர் விஜயம் அவரைக் குழப்பியிருக்கிறது. அது விஷயமாக ஏதேதோ ஆலோசனைகளில் இருக்கிறார். இப்போது போய் அவரைச் சந்திப்பது உசிதமாக இருக்காது. இன்னும் இரண்டு நாள் போகட்டும். அவரது மனநிலையை அறிந்து கொண்டு பிறகு சொல்கிறேன். அப்போது போகலாம். அதுவரையில் உன் அழகையும் கவர்ச்சியையும் எப்படியெல்லாம் கூட்ட முடியுமோ அதையெல்லாம் செய்து கொள்" என்று சொன்னான் அந்த மனிதன்.

மங்கை வேந்தன் தனது ஆலோசனை அவையில் கூறியபடி ஆலி நாடெங்கும் சென்று மக்களைச் சந்தித்து நாட்டு நிலைமை பற்றியும், படை திரட்டுவது பற்றியும், நிதியின் தேவை பற்றியும், வரிவிதிப்பது பற்றியும் தெளிவாக எடுத்துச் சொன்னான்.

அவனது பேச்சு வார்த்தை ஜாலங்களாக அல்லாமல் உண்மையானதாக இருந்த படியால் மக்கள் அவனது பேச்சையும் அணுகுமுறையையும் பாராட்டினார்கள். நாட்டிற்காக எல்லா ஒத்துழைப்பையும் தருவதற்கு எப்போதும் தயாராக இருப்பதாகச் சொன்னார்கள். ஆலிநாடு சோழ நாட்டின் பகுதியே ஆதலாலும், சோழநாட்டில் மாதம் மும்மாரி பொழிவது வழக்கமாதலாலும், ஆறுகள் அனைத்தும் ஜீவநதிகளாக ஆண்டு முழுவதும் நீரைச் சுமந்து கொண்டிருந்ததாலும் விவசாயம் பெருத்து, விளைச்சல் பெருத்து, விற்பனைகள் பெருத்து, செல்வம் பெருகியதால் மக்கள் வரிகளைச் செலுத்தவதில் சிரமப் படவில்லை.

பத்து நாட்களுக்கு இந்த ரீதியில் பிரச்சாரத்தைச் செய்தான் மன்னன்.

அவனுக்குத் திருப்தியாக இருந்தது.

சொல்லும் விதத்தில் சொன்னால் மக்கள் நிச்சயம் கேட்பார்கள் என்பதை உணர்ந்தான். அந்த மக்கள் அமைதியாக வாழத் தன்னால் இயன்றதைத் தனது இலட்சியமாகவே செய்ய வேண்டும் என்று உறுதி பூண்டான்.

தேவதேவிக்குப் பின்னால் இயங்கிக் கொண்டிருந்த மனிதன் மங்கை வேந்தன் இயல்பு நிலைக்குத் திரும்பி விட்டதை அறிந்து தேவதேவியை அழைத்தான்.

"இதோ பார் தேவதேவி! நீ இப்போது மன்னரைச் சந்திப்பதற்கு அரண்மனைக்குச் செல்ல வேண்டாம். அவர் தற்போது தன்

ஆடல்மா புரவியுடன் பயிற்சியுடன் இருப்பார். அது ஒரு அழகான சோலைவனம். அங்கே இல்லாத மலர்களே இல்லை. அந்த மலர்களையெல்லாம் மீறிய பெண்மலராகவும், பொன் மலராகவும், பொய்யா மலராகவும் செல்ல வேண்டும் நீ. சென்று நீ வெல்ல வேண்டும். இன்றைக்கு உன் அழகை விடக் கவர்ச்சி கொஞ்சம் தூக்கலாக இருக்க வேண்டும். உனது கவர்ச்சிப் பிரதேசங்கள் வஸ்திர தானம் செய்து விட்டது போல் அவருக்குப் புலப்பட வேண்டும். கவர்ச்சியென்னும் கடலில் அவர் விழ வேண்டும். ஆழப் போக வேண்டும். மதி கெட்டு மாதே கதி என்று மாறவேண்டும். நீ கேட்பதைக் கொடுக்க வேண்டும். இன்று நீ வெற்றி பெறத் தவறினால் இனி மேல் பெற முடியாது. போய் வா" என்று கூறி அனுப்பி வைத்தான்.

அவளும் போனாள். பேசினாள்.

எதிர்பாராத ஒரு காரியத்தையும் செய்தாள்.

அதிர்ந்தான் மங்கை வேந்தன்.

★★★



தோலாவழக்கு

சோலைப் பகுதிக்குத் தேவதேவி சென்றபோது அங்கே மங்கை வேந்தன் ஆடல்மா புரவிக்குப் பயிற்சி அளித்து விட்டு அங்கே இருந்த படுக்கைக் கல்லின் மீது அமர்ந்திருந்தான்.

திறந்து கிடந்த அவனது மார்பில் வியர்வை முத்துகள் பூத்துக் கிடந்ததையும் அவனது காகபட்சக் குழல்கள் காற்றில் அசைந்து கொண்டிருந்ததையும், அவன் தன் கைகள் இரண்டையும் இடுப்பில் ஊன்றி கொண்டு புரவியைப் பார்த்துக் கொண்டிருந்ததையும் கண்ட தேவதேவிக்குத் தாபம் பெருக்கெடுத்தது.

இவனை மட்டும் நான் ஆண்டு விட்டால் அது தான் ஆனந்தத்தின் எல்லையாகவும், சொர்க்கத்தின் சொர்ண முற்றமாகவும் இருக்கும் என்று எண்ணிக் கிளர்ச்சிகள் கிளுகிளுக்க அவனிடம் சென்று "வணங்குகிறேன் மகாராஜா!" என்றாள்.

அவளது வரவை விரும்பாதது போல் ஆடல்மா கனைத்தது.

மங்கை வேந்தன் அதனோடு புரவி மொழியில் பேசி அமைதிப் படுத்தி விட்டு "நீயா? நீ எப்படி இங்கு வந்தாய்?" என்று கேட்டான்.

"கடலை நோக்கி நதிகள் வருவது இயற்கை மகாராஜா. அவற்றுக்கு யாரும் வழி சொல்ல வேண்டாம்" என்றாள் தேவதேவி ஒரு வித அபினயத்துடன்.

அவளிடம் கவர்ச்சி எடுப்பாக இருந்ததையும் ஆடைகள் குறைந்து அங்கலாவண்யங்கள் வெளிப்பட்டுக் கூச வைத்ததையும் கண்டு ரசித்த மங்கை வேந்தன் "நானிங்கே இருப்பதாக உனக்கு யார் சொன்னார்கள்?" என்று கேட்டான்.

"இடைவிடாது தேடிக் கொண்டிருக்கும் பக்தனுக்கு இறைவனே தன் இருப்பைக் காட்டுவான் மகாராஜா. தாங்களும் எனக்கு அப்படித் தான்" என்றாள் தேவதேவி.

"பிரம்ம தேவன் உன்னைப் படைக்கும் போது கூடுதல் அழகைத் தந்து உவந்தது போல் சரஸ்வதி தேவியும் உன் நாவில்

அழகான வார்த்தைகளை வடித்து விட்டுப் போயிருப்பாள் என்று தோன்றுகிறது. என்னிடம் யாரும் இத்துணை அழகாகப் பேசியதில்லை" என்றான் மன்னன்.

"பிரியமானவர்களின் பிதற்றல் கூடப் பொன் மொழிகளைப் போலத் தோன்றும் பிரபு. தாங்கள் கருணை நிறைந்த கோடானாக இருப்பதால் சாமான்யப் பெண்ணின் சாதாரணப் பேச்சுக் கூடச் சிறப்பானதாகத் தோன்றுகிறது. உண்மையிலேயே திறமை என்று எனக்கு எதிலுமே இல்லை மகாராஜா."

"பேச்சு மழை போதும் தேவதேவி. நீ இவ்வாறு தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தால் வார்த்தை வெள்ளம் உண்டாகி என்னை அடித்துச் சென்று விடும்."

"என் கோரிக்கையின் மீது ஏதாவது முடிவெடுத்தீர்களா மகாராஜா?"

"அன்றைக்கே எடுத்து விட்டேன் தேவ தேவி. உன்னிடம் சொல்வதற்குத் தான் சந்தர்ப்பம் கிடைக்க வில்லை."

"மலர விரும்பும் அரும்பு நிலையில் இருப்பவள் நான். மலரும் படியான முடிவைக் கூறுங்கள் பிரபு."

"தேவதேவி! நானும் பலகாலம் வரை அரும்பாக இருந்தவன் தான். ஆனால் காலத்தின் கட்டாயமாகத் தற்போது இரும்பாகி விட்டேன். இரும்பு இளகுவதில்லை. நானும் அப்படித் தான்."

"என்ன சொல்கிறீர்கள் மகாராஜா?"

"உன்னை மணக்க இயலாது என்று ஏற்கனவே கூறிவிட்டேன். அந்தப்புர பாவையாக உன்னை வைத்துக் கொள்ளவும் நான் விரும்பவில்லை."

அதிர்ந்து போன தேவதேவி "ஏன் மகாராஜா?" என்று கேட்டாள் அங்கங்களை அசைத்து.

"மனைவி ஒருத்தியே போதும் என்று முடிவெடுத்து விட்டேன். அவளைத் தவிர எந்தப் பெண்ணையும் தொடுவதில்லை என்று [illegible] செய்து விட்டேன்."

"பொய் சொல்கிறீர்கள் மகாராஜா! உங்களைப் பற்றி எனக்குத் [illegible]."

"என்ன தெரியும்?"

"[illegible]க்கே தெரியும்."

"என்னை தெரியும்?"

"[illegible]திற்கே தெரியும்."

"அதுதான் என்ன என்று கேட்கிறேன்."

"அழகான மங்கையரோடு ஆனந்தமாக இருந்து வருபவர் தாங்கள். இன்பியல் சந்தோஷங்களில் கரை கண்டவர்கள் தாங்கள். இவற்றை மங்கையர்களே கூறுகிறார்கள்.*

"தவறு தேவதேவி. அழகை ஆழமாக ரசிப்பவன் நான். அந்த அழகு பெண்ணிடம் இருந்தால் அளவற்று ரசிப்பவன் நான். அழகென்றால் பெண். பெண் என்றால் அழகு என்று நினைப்பவன் தான். பெண்களுக்கும் எனக்குமான சம்பந்தம் அவ்வளவு தான். ஊரும் உலகமும் அதற்குக் கை, கால், தலை என்று பொய் அவயங்களை மாட்டி உருவமும் கொடுத்து விட்டது. இப்போது நீயாவது புரிந்து கொள்" என்றான் மங்கை வேந்தன் நிர்ச்சலனமாக.

தேவதேவிக்கு ஏமாற்றமாக இருந்தது.

"நீங்கள் பொய்யை மறைக்க நெய்யை ஊற்றுவது போல் நழுவல் பேச்சைப் பேசுகிறீர்கள். இது தங்களுக்குத் தகாது" என்றாள் ஆற்றாமையுடன்.

"பிடிவாதமாக ஒரு விஷயத்தை நம்பிக் கொண்டிருப்பவர்களை மாற்றுவதென்பது மிகவும் கடினமான விஷயம். உன் மனத்தில் அவ்வாறு படிந்து விட்ட அபிப்ராயக் கறைகளை நீக்கும் முயற்சி எனக்குத் தேவையில்லாதது. என்னைப் பற்றி இந்த விஷயத்தில் யார் என்ன நினைத்துக் கொண்டாலும் சரி பேசினாலும் சரி எனக்குக் கவலையில்லை. உண்மையென்பது கோபுரத்தைப் போன்றது. அதன் சிறப்பு தான் கோபுரமாக இருக்கிறோம் என்பது தானே தவிர தன் நிழல் எவ்வளவு தூரம் விழுகிறது என்பதில் இல்லை. குமுதவல்லியைத் தவிர எந்த அமுத வல்லியையும் எனது அந்தப் புரத்தில் சேர்ப்பதற்கில்லை. எண்ணங்களை மாற்றிக் கொண்டு புறப்படு" என்றான் மங்கை வேந்தன்.

"என்னை ஒரு முறை நன்றாகப் பாருங்கள் மகாராஜா. என்னையா வேண்டாம் என்கிறீர்கள்?" என்று கேட்டாள் தேவதேவி ஏமாற்றத்தின் விளிம்பில் இருந்தபடி.

"பதிலைச் சொல்லியாகி விட்டது பெண்ணே! போய் வா."

"தாங்கள் செய்வது பெண்பாவம். அது மிகவும் பொல்லாதது."

"எதுவானாலும் நடக்க வேண்டியது தான் நடக்கிறது. சென்று விடு."

---

* திருமங்கை மன்னனான பரகாலர் இளமைக் காலத்தில் காமச் சுகத்தில் திளைத்திருந்தார் என்று பலநூல்களும் கூறுகின்றன. ஆழ்வாரது பாசுரங்களில் கூட குறிப்புகள் உள்ளன.

"உற்ற பெரு மாயையை உடையவனே ஊட்டுதலால்
சிற்றின்பப் பெருங்கடலில் செறிந்து ஆழம் சோதித்தார்."

–வடிவழகிய நம்பி தாசர் பாடல்.

அப்போது அருகில் யாரோ வருவது போல் சத்தம் கேட்டவுடன் ஓடிப்போய் மங்கை வேந்தனை முரட்டுத் தனமாகக் கட்டிப் பிடித்து "என்னைக் காப்பாற்றுங்கள். காப்பாற்றுங்கள்" என்று கூக்குரலிட்டாள்.

பக்கத்திலிருந்து வீரர்கள் நான்கு பேர் வந்தார்கள்.

அதே சமயம் ஆடல்மா புரவி பாய்ந்து வந்து அவளது ஆடையைப் பற்களால் கடித்து அவளைத் தூக்க முயன்றது.

"ஹா" என்று அலறினாள் தேவதேவி.

புரவிக்கு ஏதோ சைகையைக் காட்டினான் மங்கை வேந்தன்.

புரவி அவளைக் கீழே விட்டது.

தேவதேவி மயக்கமடைந்தாள்.

மன்னன் அங்கே வந்த வீரர்களைப் பார்த்து அவளை எடுத்துக் கொண்டு போய் ஆலிநாடர் ஆதூரச் சாலையில் சேர்க்கும் படிக் கட்டளையிட்டு விட்டு ஆடல்மாவின் மீது ஏறி அரண்மனைக்குப் புறப்பட்டான்.

★

ஆலிநாடன் ஆதூரச்சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட தேவதேவிக்கு மயக்கத்தைத் தவிர வேறு உபாதை இல்லை என்று மருத்துவர்கள் கூறியதும் அங்கிருந்து வெளியேறிய அவள் எங்கே செல்வது என்று யோசித்தாள்.

தான் சென்ற காரியம் நிறைவேறாமல் போனதினால் தன்னை அனுப்பியவனிடம் செல்ல அவளுக்குப் பயமாக இருந்தது. காரியம் நிறைவேறாத பட்சத்தில் அவனிடம் சென்றால் தனக்குக் காரியம் நடக்கும் விதமாக கொன்று போட்டு விடுவான் என்று நினைத்த அவள் அவனிடம் போகவில்லை.

அதே சமயம் தேவர்களும் மயங்கக் கூடிய மகோன்னதமான அழகை ரசித்த மங்கை வேந்தன் தன்னை ருசிக்காமல் அனுப்பி விட்டது அவளுக்குக் கோபத்தை உண்டாக்கியது.

மன்னனிடம் கூறியது போல அவள் தன் உடலையும் முகத்தையும் மறைத்துக் கொண்டு வாழவில்லை தான். ஆனால் வழுக்கி விழுந்து விடாமல் பாதுகாத்துக் கொண்டு வந்தாள். "உன் அழகிற்குத் தேவேந்திரன் தான் ஈடானவன்" என்று அவளது தோழிகள் உசுப்பி விட்ட போது தான் தனது அபரிமிதமான அழகு அவளுக்கு விளங்கியது.

அந்நிலையில் தான் சோழநாட்டுச் சேனாதிபதியான நீலன் திருமங்கை மன்னனானான். அவனைக் கண்டதும் "தேவேந்திரன் இவனைப் போலத் தான் இருப்பான்" என்று நினைத்து மயங்கினாள். அவனை அடைவது தான் தனது வாழ்க்கையின் நோக்கம் என்று கருதினாள்.

அந்த நேரத்தில் உதவிக்கு வந்தது போல் வந்தான் அந்த மனிதன்.

அவளைப் பற்றிய விவரங்களையும் அவளது தாபங்களையும் நன்றாகக் கேட்டறிந்தான்.

அவனுக்குள் மூண்டிருந்த தீயைப் பயன்படுத்திக் கொள்ள அவளைப் போன்ற ஒரு பெண் தேவையாக இருந்தது.

இருவரது ஈடுபாடும் மங்கை வேந்தனிடமே இருந்ததால் அவனது திட்டத்திற்கு அவள் சம்மதித்தாள்.

"இதோ பார் தேவதேவி. நமது திட்டம் வெற்றி பெற்றால் உன் கனவும் நிறைவேறும். என் கனவும் நிறைவேறும். திட்டம் வெற்றி பெறாவிட்டால் நீ கனவு கூட காணமுடியாத இடத்திற்கு அனுப்பி வைப்பேன். சம்மதமா?" என்று கேட்டான் அவன்.

அவள் முழுமனதுடன் சம்மதித்தாள்.

அதற்கேற்ப அடுத்தடுத்து இரண்டு நாட்கள் அவளது முயற்சிகள் வெற்றி பெற்றதால் தெம்படைந்தாள்.

ஆனால் மூன்றாவது முறை சந்திப்பு படு தோல்வியடைந்து கனவைச் சிதைத்து விட்டதால் பெரும் கோபம் அடைந்த அவள் மன்னனுக்குக் குறைந்த பட்சம் அவமானத்தையாவது விளைவிக்க வேண்டும் என்று நினைத்துச் சோலையில் அவனைக் கட்டிப் பிடித்துக் காட்டினாள். ஆனால் ஒன்றும் நடக்கவில்லை.

எனவே ஆதூரச் சாலையிலிருந்து வெளியே வந்த அவள் அரண்மனைக்கு முன்னால் கூட்டத்தைக் கூட்டி மன்னன் தன்னைச் சிதைத்து விட்டதாகக் கூறி அழுது புலம்பினாள். தனக்கு நியாயம் வழங்க வேண்டும் இரைந்தாள்.

காவலர்கள் வந்தார்கள்.

"இப்பெண்ணின் புகார் குறித்து தீவிர விசாரணைக்கு உத்திர விட்டிருக்கிறார் மன்னர். நாளைக்கே விசாரணை தொடங்கும். அரண்மனைக்கு முன்னால் அநாகரீகமாக நடந்து கொண்டதால் இவளை இன்று இரவு மட்டும் சிறைக்குள் அடைக்கும் படி உத்தரவு. எல்லோரும் கலைந்து செல்லுங்கள்" என்றார்கள்.

மறுநாள் விசாரணை தொடங்கியது.

அமைச்சர் தோலாவழக்கன் விசாரித்தார்.

"உன் பெயரென்ன?"

"தேவதேவி"

"அதற்கென்ன அர்த்தம்?"

"எனக்குத் தெரியாது."

"தெரியாமல் எப்படி இருக்க முடியும்?"

"அது பெற்றோர்கள் வைத்தது."

"பெற்றோர்கள் எங்கே?"

"அவர்கள் இல்லை"

"அவர்கள் இல்லாமல் நீ எப்படிப் பிறந்தாய்?"

"அவர்கள் என்னைப் பெற்ற பின் இறந்து போனார்கள்."

"எதற்காக இறந்து போனார்கள்?"

"அதெல்லாம் எனக்குத் தெரியாது."

"போய்த் தெரிந்து கொண்டு வா. அதற்குப் பிறகு தான் விசாரணை நடக்கும்" என்று கூறிவிட்டுப் போய் விட்டார் அமைச்சர் தோலாவழக்கர்.

இரண்டு நாட்கள் கழித்து வந்தாள் தேவதேவி.

"பெற்றோர்களுக்கு நோய் வந்ததால் இறந்து விட்டார்களாம்" என்றார்.

"யார் சொன்னது?"

"உறவினர்கள்."

"நோய் எதற்காக வந்தது?"

"தெரியவில்லை."

"போய்த் தெரிந்து கொண்டு வா. பிறகு தான் விசாரணை நடக்கும்."

நான்கு நாட்கள் கழித்து வந்தாள் தேவதேவி.

"யாரும் தெரியவில்லை என்கிறார்கள்" என்றாள்.

"பெற்றோர்கள் இறக்கும் போது உன் வயதென்ன?"

"ஐந்து"

"இப்போது என்ன வயது?"

"பதினெட்டு."

"இவ்வளவு காலமாக இது குறித்து நீ ஏன் அறிந்து கொள்ளவில்லை?"

"யாரும் சொல்லவில்லை?"

"யாரிடமெல்லாம் நீ கேட்டாய்?"

"யாரிடமும் கேட்கவில்லை."

"கேட்காமல் யார் பதில் சொல்வார்கள்?"

"கேட்கவேண்டும் என்று தோன்றவில்லை."

"ஏன் தோன்றவில்லை?"

"தெரியவில்லை."

"உனக்கு கேட்பதற்கு எதுவெல்லாம் தோன்றும்?"

"புரியவில்லை."

"புரிந்து கொண்டு வா. பிறகு தான் விசாரணை" என்றார் அமைச்சர்.

"அமைச்சர் பெருமானே! என் புகாரைப் பற்றி எதையும் கேட்காமல் எதை எதையோ கேட்கிறீர்களே! இது நியாயமா?" என்று கேட்டாள் தேவதேவி.

"இது தோலா வழக்கு" என்றார் அமைச்சர்.

★★★



நிழலில் ஒதுங்குவான்

தேவதேவிக்கு ஒரே குழப்பமாகவும் சலிப்பாகவும் இருந்தது.

தான் கொடுத்த புகாரைப் பற்றி விசாரிக்காமல் அமைச்சர் ஏதேதோ சம்பந்தமே இல்லாத கேள்விகளைக் கேட்டு விட்டு "இது தோலா வழக்கு" என்று கூறிவிட்டு எழுந்து சென்று விட்டாராதலால் இது என்ன வழக்கு? விவஸ்தையற்றதாக இருக்கிறதே? உனக்கு என்னென்ன தோன்றும் கேட்பதற்கு என்று கேட்கிறாரே, இதற்கு என்ன என்ன பதில் கூற முடியும்? இதைப் பற்றி யாரிடம் விளக்கம் கேட்டுப் பெறமுடியும்? பேசாமல் வழக்கும் வேண்டாம் வெண்டைக்காயும் வேண்டாம் என்று போய் விடலாமா" என்று நினைத்தாள் தேவதேவி.

அதே சமயம் மன்னன் தன்னைப் புறக்கணித்து விட்ட அவமானம் உள்ளுக்குள் உறுத்தியது. மன்னனை லேசில் விட்டு விடக் கூடாது என்ற எண்ணமே மேலெழுந்தது.

அமைச்சர் கேட்ட கேள்விக்கு என்ன பதில் கூறுவது என்று யோசித்தாள்.

நான்கு நாட்களுக்குப் பிறகு வந்தாள்.

"ஐயா! தங்கள் கேள்விக்கு என்னால் என்ன பதில் சொல்வது என்று விளங்கவில்லை. மனதில் அவ்வப்போது கேள்விகள் எழுந்து வெளிப்பட துடிக்கும் போது வாயைத் திறந்து கேட்கிறேன். மற்றபடி என்ன கேட்க வேண்டும் என்றெல்லாம் எனக்குள் முன் கூட்டியே தோன்றுவதில்லை" என்றாள்.

"அப்படியென்றால் மன்னர் மீது எப்படிப் புகார் சொன்னாய்?"

"அவர் என்னிடம் தவறாக நடந்து கொண்டார். ஆகவே புகார் சொன்னேன்."

"இதுவரையில் உன்னிடம் எத்துணை பேர் தவறாக நடந்து கொண்டிருக்கிறார்கள்?"

“ஐயா! இது அபாண்டமான கேள்வி. நான் ஒன்றும் குப்பைத் தொட்டியல்ல, கண்டவர்களும் குப்பைகளைக் கொட்டுவதற்கு.”

“கேட்டதற்கு பதில் சொல். இல்லையென்றால் போய் விடு.”

“யாரும் என்னிடம் தவறாக நடந்து கொண்டதில்லை.”

“ஏன்?”

“இதென்ன கேட்கிறீர்கள்?”

“நீ அழகான பெண்தானே?”

“ஆ. ஆமாம்.”

“பேரழகுப் பெண் தானே?”

“ஆமாம்.”

“ஆடவர்களைச் சுண்டியிழுக்கும் சுந்தரி தானே நீ?”

“ஆமாம்.”

“அப்படியிருக்கும் போது ஒரு ஆடவரும் உன்னை நெருங்கவில்லையா?”

“இல்லை.”

“அதெப்படி?”

“நான் என்னைப் பாதுகாத்துக் கொண்டேன்.”

“எப்படி பாதுகாத்துக் கொண்டாய்?”

“என்னை நெருப்பாக வைத்துக் கொண்டேன்.”

“மன்னர் முன்பும் அப்படி இருக்க வேண்டியது தானே?”

“மன்னர் திடீரென அப்படி நடந்து கொண்டு விட்டார்.”

“அவர் இருக்கும் இடத்திற்கு ஏன் போனாய்?”

“அவரைத் தேடி நான் போகவில்லை. நான் போகும் இடத்தில் அவர் இருந்தார்.”

“இதை நான் நம்பமுடியாது.”

“நான் சொல்வது உண்மை.”

“இல்லை பொய் தான். அவரைத் தேடிக் கட்டுப்பாடுகளை மீறி நிலாமாடத்திற்குப் போனவள் நீ. மறுநாள் அவர் இருப்பிடத்திற்குச் சென்று சந்தித்தவள் நீ. அதே போலத் தான் அவர் இருந்த சோலையை நோக்கி நீ சென்றிருக்கிறாய்.”

“இல்லவே இல்லை.”

"உன் பேச்சு முரண்பாடானது. ஆரம்பம் முதலே மன்னரைத் தேடிச் சென்றவள் நீ தானே தவிர அவரல்ல. அவர்மீது களங்கம் ஏற்படுத்தும் நோக்கத்துடனே அவர் இருக்கும் இடத்தை நோக்கி நீ சென்றிருக்கிறாய்."

"இது உங்கள் ஊகம்."

"நீ சொல்வது தான் உண்மையென்றால் சாட்சிகளை அழைத்துக் கொண்டு நான்கு நாட்கள் கழித்து வா."

விசாரணையானது இதே ரீதியில் நடந்து கொண்டே சென்றது.

அமைச்சர் வழக்கிற்குச் சம்பந்தமில்லாத கேள்விகளையே அதிகம் கேட்டதால் செய்வதறியாமல் தவித்தாள் தேவதேவி.

மூன்று மாதங்களுக்கு மேலாக நடந்து கொண்டிருந்த போது ஒருநாள் முதியவர் ஒருவர் வந்து "அமைச்சர் பெருமானே! தாங்கள் நடத்தும் வழக்கு தோலா வழக்காக* இருக்கிறது. இது முறையல்ல. சம்பந்தப்பட்டவர்களை வரவழைத்து இரண்டு நாட்களில் முடிக்கக் கூடிய வழக்கை மூன்று மாதங்களாக நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். இதே ரீதியில் போனால் மூன்று வருடங்கள் ஆகலாம். மூன்று யுகங்கள் கூட ஆகலாம்" என்றார்.

அந்த முதியவர் தான் தனக்குப் பின்னாலிருந்து தன்னை இயக்கியவர் என்பதை உணர்ந்த தேவதேவி தக்க சமயத்தில் மன்னனைக் காப்பாற்ற வந்து விட்டதாக எண்ணி மகிழ்ந்தாள்.

அமைச்சரான தோலா வழக்கன் அவரைப் பார்த்து "நீங்கள் யார்?" என்று கேட்டான்.

"இவளது வளர்ப்புத் தந்தை" என்றார் முதியவர்.

அமைச்சர் தேவதேவியைப் பார்த்து "உனக்கொரு வளர்ப்புத் தந்தை இருப்பதாக இது வரை ஏன் சொல்ல வில்லை?" என்று கேட்டார்.

"மறந்து விட்டேன்."

"வளர்ப்புத் தந்தையை மறந்து விட்டேன் என்றால் நீ யாரைத் தான் மறக்க மாட்டாய்! உனக்கு ஞாபக மறதி அதிகமாக உள்ளது" என்று சொன்ன அவர் "எத்துணைக் காலமாக இவர் உன்னை வளர்த்து வருகிறார்?" என்று கேட்டார்.

"அது வந்து. அதாவது." தடுமாறினாள் தேவதேவி.

முதியவர் குறுக்கிட்டு "மூன்று ஆண்டுகள்" என்றார்.

---

* தோலா வழக்கு என்றால் முடிவுறாத வழக்கு என்று பொருள்.

"சரியாக எப்போது இவளை வளர்ப்பு மகளாக ஏற்றுக் கொண்டீர்கள் என்பதை ஆதாரத்துடன் கொண்டு வந்து சொல்லுங்கள். அதற்குப் பிறகு விசாரணை தொடரும்" என்று கூறிவிட்டு அகன்றார் அமைச்சர்.

அதையடுத்து முதியவரை அவரது இருப்பிடத்தில் சந்தித்த தேவதேவி "உங்களை யார் வரச்சொன்னது? உங்களிடமிருந்து உதவி வரும் என்று நினைத்தால் உபத்திரவம் தான் வந்திருக்கிறது. உங்களை யார் வளர்ப்புத் தந்தை என்று சொல்லும் படிச் சொன்னார்கள்? அதனால் தான் தடுமாறும் படி ஆகிவிட்டது. அதை வைத்துக் கொண்டு அமைச்சர் வழக்கப்படி வழக்கை இழுத்து விட்டார்" என்று பொரிந்தாள்.

"முட்டாள் பெண்ணே! கூட்டம் கூட்டிப் புகார் கொடுத்தாயே மன்னரைப் பற்றி! யாரைக் கேட்டுக் கொண்டு கொடுத்தாய்? என்னைக் கேட்டாயா? உன் இஷ்டப்படி நடந்து கொள்ள உனக்கு யார் அனுமதி கொடுத்தது? உனக்கு உதவுவதற்கே வந்தேன். நீயோ பெண் புத்தி பின் புத்தி என்பதைக் காட்டி விட்டாய். அழகும் அறிவும் சேராது என்பதை நிரூபித்து விட்டாய். அதோடு பல மாதங்களாக நீ என்னைச் சந்திக்கவே இல்லை. அது ஏன்?" என்று அந்த மனிதனும் பொரிந்து தள்ளினான்.

"என் முயற்சி தோற்று விட்டதால் உங்களைச் சந்திக்க வில்லை."

"அந்த முயற்சி தோற்றால் வேறு முயற்சி இருக்கிறது. அது தெரியாமல் அவசரப் பட்டு பைத்தியக் காரத் தனமாக நடந்து கொண்டு புகாரையும் மன்னர் மீதே கொடுத்து விட்டாய். இனி மன்னரை நீ நெருங்க முடியுமா? உனக்குச் சுயபுத்தியானது சாரமற்றதாக இருக்கிறது. பிறர் புகட்டும் புத்தி அலட்சியமாகி விட்டது. மொத்தத்தில் காரியத்தைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கி விட்டாய். பாழாய்ப் போன அமைச்சரிடம் போய் சிக்கி விட்டாய். அவரைப் பற்றி உனக்குத் தெரியாது. அவர் உன்னை அவரைக் காயை வேக வைத்து - உலர வைத்து - எண்ணையில் போட்டு பொறித்து - வற்றலாக்குவது போல் ஆக்கி விடுவார். உன்னையே குற்றவாளி யாக்கிச் சிறையில் தள்ளி விடுவார். நடந்த விசாரணையெல்லாம் போதும். தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என்று நினைத்து இன்றைக்கே ஊரை விட்டு ஓடிவிடு. அதுதான் நல்லது."

"முடியாது. மன்னன் என் அழகை அவமதித்து விட்டான். காலம் காலமாய் கட்டிக் காத்த எனது பேரழகை உதாசீனப்

படுத்தி விட்டான். அவனை அவமானப் படுத்தாமல் ஓய மாட்டேன்."

"அது உன்னால் முடியாது. நான் சொல்வது தான் நடக்கும். என் பேச்சைக் கேள். இல்லையென்றால் நான் ஆபத்தானவன் என்பதை உணர்த்தும் படி இருக்கும்."

"இந்தப் பயமுறுத்தல்களையெல்லாம் மூட்டை கட்டி மூலையில் வையுங்கள் ஐயா. இனி நான் உங்களுடையவள் அல்ல. என் வழியில் நான் போகப் போகிறேன். தொந்தரவு கொடுக்க முயன்றால் உங்களைக் காட்டிக் கொடுக்கவும் தயங்க மாட்டேன்" என்று கூறி விட்டு அகன்றாள்.

அமைச்சர் தோலா வழக்கருக்கு மங்கை வேந்தனைப் பற்றிச் சந்தேகமறத் தெரியுமாதலால் தேவதேவியின் புகார் பொய்யானது என்பதை அறிந்திருந்தார். இருப்பினும் வெளிப்படையாகத் தெரிவிக்கப் பட்டப் புகாருக்கு விசாரணை அவசியம் என்று கருதிய அவர் ஊருக்காக விசாரணையைத் துவக்கினார்.

தனது பெயருக்கேற்ப தோலா வழக்காக மாற்றி அவர் ஆறு மாதங்களாக இழுத்தாரே தவிர உருப்படியாக எதையும் செய்ய வில்லை. எனவே மிகவும் சோர்ந்து போன தேவதேவி விசாரணைக்கு வருவதையே நிறுத்திக் கொண்டாள்.

அமைச்சரோ வழக்கானது நிலுவையில் உள்ளது என்றும் விசாரணைக்கு தேவதேவி எப்போது வருவதானாலும் வரலாம் என்று அறிவிப்பு செய்தார்.

தேவதேவியோ அவர் பக்கம் திரும்பவும் இல்லை.

★

தேவதேவி விஷயம் தடயமற்றுப் போன நிலையில் மங்கை வேந்தன் தனது நண்பனும் அமைச்சனுமான நிழலில் ஒதுங்குவோனிடம் பேசிக் கொண்டிருக்கும் போது "மங்கை மடத்தில் நான் செய்வது வரும் 1008 பாகவதர்களுக்கான அன்னதானம் தொய்வில்லாமல் ஒரு வருட காலமாக நடந்து வருகிறது. இது எனக்கு மகிழ்ச்சியான விஷயம் என்றாலும் வருத்தமாகவும் இருக்கிறது. சந்தேகமாகவும் இருக்கிறது" என்றான்.

"ஏன் மன்னவா!" என்று கேட்டார் அமைச்சர்.

"அன்னதான கைங்கரியத்திற்காக எனது சொந்த செல்வத்தைத் தான் பயன்படுத்தி வருகிறேன் என்பது உங்களுக்கெல்லாம்

தெரியும். ஆனால் என்னிடம் இருந்த செல்வங்கள் முழுவதும் தீர்ந்து விட்டன என்பது உங்களுக்குத் தெரியாது. ஆனாலும் கூட அன்னதானம் தொடர்கிறதென்றால் யார் பொருளுதவி செய்கிறார்கள்? அப்படி யாராவது செய்கிறார்கள் என்றால் அது எனக்கு இழுக்கு அல்லவா? அன்னதான கைங்கர்யம் என் சொந்த விஷயம். தனிப்பட்ட விஷயம். குமுதவல்லிக்காக நடந்து வரும் விஷயம். இந்தக் கைங்கரியத்திற்காக அரசுக் கருவூலத்திலிருந்து பணம் செலவழிக்கப் படுகிறதா என்பது என் சந்தேகம்."

"மன்னவா! கருவூலப் பண்டாரம் என் தலைமையில் தான் இயங்கி வருகிறார். தினசரி வரவு செலவுக் கணக்குகளை என்னிடத்தில் காட்டாமல் அவர் இல்லத்திற்குச் செல்வதில்லை. ஆகவே கருவூலத்திலிருந்து அன்னதானத்திற்கு ஒரு காசு கூடச் செல்வதில்லை என்று தாங்கள் நம்பலாம்."

"பிறகு எப்படி அன்னதானம் நடக்கிறது? அமைச்சரே! நல்ல காரியம் தான் என்றாலும் எனக்குத் தெரியாமல் நடப்பது தவறு. இது விஷயமாக நீர்தான் எனக்கு உண்மை நிலையை அறிந்து சொல்ல வேண்டும். ஒருவரது நிழலில் அவருக்குத் தெரியாமல் ஒதுங்கக் கூடியவன் என்பதாலேயே நிழலில் ஒதுங்குவான் என்ற திருநாமத்தைச் சூட்டினேன். உனது திறமையைக் காட்டி இதில் நடக்கும் உண்மையை அறிந்து சொல்" என்றான் மங்கை வேந்தன்.

இரண்டு நாட்களில் மன்னனிடம் வந்த அமைச்சர் நிழலில் ஒதுங்குவான், "மன்னவா! தங்களின் அன்னதானத்தின் அருமையைக் கருதி அதில் தங்களுக்கும் பங்கு இருக்க வேண்டும் என்று விரும்பிய மக்கள் மங்கை மட நிர்வாகிகளிடம் தானமளித்திருக்கிறார்கள். மங்கை மட நிர்வாகியும் செல்வம் தேவையாக இருந்த படியால் அந்தத் தானங்களைப் பெற்று அன்னதானத்தை நிறுத்தாமல் தொடர்ந்திருக்கிறார். அது பற்றி அவரிடமே கேட்டேன். அன்னதானம் தடைப்படாமல் இருப்பது அவசியமானது என்றும் அதற்குப் பொருள் எந்த வழியில் வந்தாலும் தவறில்லை என்றும் அதற்காக மன்னர் தன்னைத் தண்டித்தாலும் ஏற்கச் சித்தமாக இருக்கிறேன் என்றும் கூறி விட்டார்" என்றார்.

"தவறு மந்திரி! திருடிக் கொண்டு வந்து ஒரு அன்ன தானம் செய்தால் அது பாவமாகும். அப்படித்தான் இது. மக்களுக்கு நாம் தர வேண்டுமே தவிர நமக்குத் தரக் கூடாது. ஏற்கனவே அவர்கள் பலவரிகளைத் தந்து கொண்டிருக்கிறார்கள். தற்போது

தானம் என்ற பெயரில் பொருளைத் தருவது சரியல்ல. அதை உடனடியாக நிறுத்து" என்றான் மங்கை வேந்தன்.

"மன்னவா! மக்கள் அன்னதானத்திற்கு என்று தானம் வழங்குவதை நிறுத்திவிடலாம். அவர்கள் வரிகள் மூலம் செலுத்தும் செல்வங்களைக் கருவூலத்திலிருந்து அன்னதானத்திற்குச் செலவழிக்கலாம். அன்னதானம் என்பது மக்களுக்கும் வழங்கும் அம்சம் தான். தங்களிடம் இருந்தவரை கணக்குப் பார்க்காமல் செலவிட்டீர்கள். இருப்புத் தீர்ந்த பிறகு கருவூலத்திலிருந்து செலவிடுவதே தகுந்தது."

"நான் குமுதவல்லியிடம் பேசிவிட்டு முடிவாகச் சொல்கிறேன்" என்று கூறிவிட்டுக் குமுதவல்லியிடம் சென்றான் மங்கை வேந்தன்.

குமுதவல்லி அவனைப் பார்த்துக் கேட்ட கேள்வி அவனை அதிர வைத்தது.

★★★



வேங்கையான வேந்தன்

"என்ன குமுதவல்லி அன்னதானமெல்லாம் நீ நினைத்த படி நடந்து வருகிறதா? நான் ஒரு மாதமாக மங்கை மடத்திற்கு வர வில்லை திருமங்கையான நீ கவனித்துக் கொள்வாய் என்பதால். எந்தப் பாகவதரும் உணவில்லை என்று திரும்பிச் செல்ல வில்லையே?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

குமுதவல்லி உள்ளே சென்று ஒரு பேழையைக் கொண்டு வந்து கொடுத்தாள். அதைத் திறந்து பார்த்தான் மன்னன். அதில் தங்க நகைகள் இருந்தன.

"எல்லாம் என்னுடைய நகைகள் தான் சுவாமி. அன்னதானச் செலவுக்குத் தருவதற்காக உங்களை எதிர்பார்த்தபடி இருந்தேன். தாங்கள் வராததால் தங்களைக் கேட்காமல் எதுவும் செய்யலாகாது என்று காத்திருந்தேன். இன்றைக்குத் தான் வந்தேன்" என்றாள் குமுதவல்லி.

"இது என்ன பேச்சு? அன்னதானச் செலவுக்கு உனது நகைகளா? நானென்ன நாதியற்றா போய்விட்டேன்?"

"சுவாமி! இதென்ன பேச்சு? விவாகம் முடிந்த பிறகு மனைவி வேறு கணவன் வேறு என்ற நினைப்பு வரலாகுமா?"

"குமுதவல்லி! கணவன் சொல்லைக் கேட்பவள் தான் மனைவி என்பது உண்மையானால் இந்தப் பேழையைக் கொண்டு போய் உள்ளே வைத்துவிட்டு வா."

குமுதவல்லி அவ்வாறே செய்து விட்டு வந்து நின்றாள்.

"எனது கோரிக்கையை தாங்கள் நிறைவேற்றி வருவதற்காக உங்கள் உடமைகளையெல்லாம் செலவழித்து விட்டீர்கள். இந்த நிலையில் எனது உடமைகளைத் தருவது என் கடமையல்லவா சுவாமி?"

"அதற்கான காலம் வரவில்லை குமுதவல்லி. வரவும் வராது. அன்னதானத்திற்காக மக்கள் உதவுவதையே விரும்பாத நான் உன்னிடமிருந்து பறிக்க ஒரு போதும் முயலமாட்டேன்."

"சுவாமி! கோபித்துக் கொள்ள மாட்டீர்கள் என்றால் ஒன்று சொல்லவா?"

"சொல்"

"தங்களுக்கு நிபந்தனைகளை விதித்தது வெறும் என் விருப்பத்தால் அல்ல. அந்த நிபந்தனைகளைக் கடைப் பிடிப்பதன் மூலம் தங்களிடமுள்ள முரட்டுத் தனங்களும் போர்க் குணங்களும் அகன்று தாங்கள் கருணாமூர்த்தியாக விளங்க வேண்டும் என்பது தான் என் லட்சியமாக இருந்தது. அது நிறைவேறி விட்டது. தாங்களும் மாறி விட்டீர்கள். ஆகவே அன்னதானத்தை இனியும் தொடர வேண்டியதில்லை. ஓராண்டுக் காலமாக அந்த அருங் காரியத்தைத் தொடர்ந்து செய்ததே பெரும் புண்ணியம். அதை நிறுத்திக் கொள்ளலாம்."

"உன் பேச்சு எனக்கு வியப்பைத் தருகிறது குமுதவல்லி. உன் நிபந்தனைகளை நான் நிறைவேற்ற முற்பட்டது உன்னை மணக்க வேண்டும் என்ற ஆசையினால் தான் என்றாலும் ஒரு கட்டத்தில் அக்காரியங்கள் புண்ணிய காரியங்களாக மாறி விட்டதை உணர்ந்தேன். உனக்காக என்றில்லாமல் எப்பொழுதுமே அவற்றைத் தொடர்வது என்று தீர்மானித்தேன். நமது அன்னதானத்தை எதிர்பார்த்து தினமும் 1008 பாகவதர்கள் காத்திருப்பார்கள். அவர்களை எப்படி நான் இல்லை என்று சொல்லி ஏமாற்ற முடியும்? சிலகாரியங்களைத் தொடங்கி விட்டால் நிறுத்த முடியாது."

"உண்மைதான் சுவாமி. அதே சமயம் அந்தக் கைங்கர்யத்தைச் செய்வதற்கான பொருள் இல்லாத போது நிறுத்திக் கொள்வது சரியானது தானே? அதோடு...."

"அதோடு என்ன?"

"சோழ மாமன்னருக்குத் தாங்கள் இன்னும் கப்பம் கட்ட வில்லை. அதை வேறு கட்ட வேண்டும் அல்லவா?"

"என்னது? கப்பமா? நான் கட்ட வேண்டுமா? சோழ மன்னருக்கா? இது என்ன புதுக் கதை விடுகிறாய்?"

"இதென்ன எதுவும் அறியாதது போல் பேசுகிறீர்கள் சுவாமி? தாங்கள் சோழ மன்னரது ஆதிக்கத்தில் தானே இருக்கிறீர்கள்? ஆகவே ஆண்டு தோறும் கப்பம் கட்ட வேண்டியது தானே முறை?"

"குமுதவல்லி! நீ பேசுவது தான் முறையற்ற தாக இருக்கிறது. சோழமன்னர் ஆலிநாட்டை எனது சேவைகளுக்காகப் பரிசாக

அளித்தார். என்னை மன்னனாக்கினார். அதெற்கென்ன அர்த்தம்? நான் சுதந்திரமான மன்னன். நான் எதற்காக அவருக்குக் கப்பம் கட்ட வேண்டும்?"

"சுவாமி! உங்கள் நினைப்பு தவறானது. சோழ மாமன்னர் தங்களுக்குப் பரிசாக அளித்த ஆலி நாடு சோழ நாட்டு மண் தான். அந்த மண் சோழ மாமன்னருக்குச் சொந்தம். தாங்கள் அவரது ஆதிக்கத்தில் இருக்கும் சிற்றரசர். ஆகவே அவருக்கு நீங்கள் கப்பம் கட்டத்தான் வேண்டும். இதை நான் சொல்லவில்லை. சோழ மன்னரே கூறினார்."

மங்கை வேந்தனின் கண்கள் உருண்டன. குமுதவல்லியின் தோள்களை முரட்டுத் தனமாகப் பிடித்து "என்ன சொல்கிறாய்? சோழ மாமன்னர் சொன்னாரா? கப்பம் கட்டும் படிச் சொன்னாரா? எப்போது சொன்னார்? யாரிடம் சொன்னார்?" என்று இடிபோன்ற குரலில் கேட்டு அவளை உலுக்கினான்.

மலர் போன்று இருந்த மணாளன் கருங்கல் போல் மாறி விட்டதை அவனது பிடியிலிருந்தும் இடிபோன்ற குரலிலிருந்தும் உணர்ந்து கொண்ட குமுதவல்லி அதிர்ந்து போனாள்.

"சாந்தமடையுங்கள் சுவாமி. அமைதியாக இருங்கள்" என்றாள் அச்சம் நிலவிய குரலில்.

"கேட்டதற்குப் பதில் சொல்" என்றான் கரகரத்த குரலில்.

"என்னிடம் தான் சொன்னார்."

"உன்னிடமா? நான் கப்பம் கட்ட வேண்டும் என்று உன்னிடம் சொன்னாரா? எங்கே? எப்போது?"

"ஒரு வாரத்திற்கு முன் மாமன்னர் என் நலம் விசாரிக்க இங்கே வந்திருந்தார். அப்போது தான் சொன்னார். சாதாரணமாகத் தான் சொன்னார்..."

"அசாதாரணமாகச் சொல்வதென்றால் எப்படிச் சொல்வார்? உன்னைக் கைது செய்து கொண்டு போய் எனக்குச் செய்தி அனுப்புவாரா? மகாராஜா வந்தார். உன்னைக் கண்டார். என்னைக் கட்டச் சொன்னார். என்ன குமுதவல்லி இதெல்லாம்?" என்று சீறி விட்டு இரை தேடிய புலி இரை கிடைக்காததால் இங்கும் அங்குமாய் திரிவது போல நடந்தான் மங்கை வேந்தன்.

மாமன்னன் தன்னை அவமானப் படுத்தி விட்டதாகவே எண்ணிக் குமைந்தான்.

"கப்பம் கட்ட வேண்டிய அவசியமே இல்லை என்கிறேன் நான். இவரோ இங்கு வருகிறார். உன்னைச் சந்தித்து என்னைக்

கப்பம் கட்டச் சொல்கிறார். இது தான் முறையா? இது தான் நீதியா? வெள்ளைக் குளத்திற்கு வந்த மாமன்னரால் திருமங்கை நகரத்திற்கு வரமுடியவில்லையா? உனது நலத்தில் அக்கறை கொண்ட மாமன்னருக்கு என் நலத்தில் அக்கறை இல்லையா? இது என்ன நடைமுறை? இது என்ன நெறிமுறை? இவ்வளவு காலமாக அவரது காலடியில் சேவை செய்து வெற்றிகளைக் குவித்த எனக்கு அவர்தரும் மரியாதை இது தானா? பேரரசர் என்றால் இப்படித்தான் நடந்து கொள்வாரா? நான் அவருக்குத் துச்சமாகி விட்டேனா? இது தான் பண்பா? இது தான் அவர் மீது காட்டும் அன்பா? தவறு குமுதவல்லி. தவறு" என்று வார்த்தைகளை வெடித்தான் மங்கை வேந்தன்.

குமுதவல்லி நடுங்கினாள். கிணற்றைத் தோண்டப் போய் பூதம் கிளம்பிவிட்டதை கதையாகி விட்டதே என்று கலங்கினாள். சாந்தமே உருவாக வந்த வேந்தனைச் சீற்றமே உருவான சிங்கமாக ஆக்கி விட்டோமே என்று அவதியுற்றாள்.

". அப்படியெல்லாம் இல்லை சுவாமி. தவறாக நினைக்காதீர்கள். மாமன்னர் தங்கள் மீது வைத்திருக்கும் அன்பிற்கும் மரியாதைக்கும் எந்தக் குறைவும் இல்லை" என்றாள்.

"அன்பும் மரியாதையும் உண்மையாகவே வைத்திருப்பவர்கள் முறை தவறி நடந்து கொள்ள மாட்டார்கள் குமுதவல்லி. என்னிடம் கேட்க வேண்டியதை உன்னிடம் எப்படிக் கேட்கலாம்?"

"அவர் உங்களை நினைவூட்டும் விதமாகத் தான் சொன்னார்."

"வழக்கே இல்லை என்கிறேன் நான். அதில் நினைவூட்ட என்ன இருக்கிறது? முதலும் தவறு. முற்றிலும் தவறு. இதற்குப் பரிகாரம் தேட வேண்டும். வருகிறேன்" என்று சொல்லித் தரையில் தடவிய உத்தரீயத்தை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு வாள் வீச்சைப் போல் வெளியேறினான் மங்கை வேந்தன்.

★

திருமங்கைக்குச் சென்று அமைச்சர்களையும் சேனாதி பதியையும் அவசர ஆலோசனைக்கு வரும்படிக் கட்டளையிட்டான் மங்கை வேந்தன்.

ஆலோசனைக் கூட்டத்தை இத்துணை அவசரமாக அவன் கூட்டியதில்லையாதலால் அனைவரும் சற்றுப் பதற்றத்துடனே சென்றார்கள்.

அமைச்சர் சாயைப் பிடிப்பானைப் பார்த்து "மந்திரி! நாம் சோழ மாமன்னருக்குக் கட்ட வேண்டிய கப்பத் தொகை எவ்வளவு?" என்று கேட்டான் மங்கை வேந்தன் இறுக்கமான முகத்துடன்.

அன்றலர்ந்த தாமரையைப் போல என்றும் விளங்கும் அவனது முகத்தில் இப்படியொரு இறுக்கத்தை இதுவரை அவர்கள் கண்டதில்லை.

அமைச்சர் சாயை பிடிப்பான் எழுந்து "மன்னவா! நாம் சோழ மன்னருக்குக் கப்பம் செலுத்துவது போன்ற ஒப்பந்தம் எதுவும் இல்லை" என்றார்.

"அதெப்படி? நாம் சோழப் பேரரசில் ஒரு சிற்றரசு தானே? சிற்றரசு பேரரசுக்குக் கப்பம் செலுத்த வேண்டியது தானே முறை?" என்று ஒன்றும் தெரியாதவனைப் போலக் கேட்டான் மங்கை வேந்தன்.

"பிறநாடுகளைப் போரில் வென்று ஓர் பேரரசானது அவற்றைத் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தால் அந்த நாடுகள் கப்பம் செலுத்த வேண்டும். எவ்வளவு தொகை கட்ட வேண்டும், எவ்வெப்போது கட்ட வேண்டும் என்பது குறித்து முறி எழுதப்படும். ஆனால் நம் விஷயம் அப்படியல்ல. ஆலிநாடானது சோழ மன்னர் அவர்களால் பரிசாக அளிக்கப் பட்டது. தங்கள் சேவைக்கான வெகுமதியாக வழங்கப்பட்டது. ஆலிநாடு பரப்பளவில் சிற்றரசாக இருந்தாலும் சுதந்திர நாடு. இந்நாடு சோழ நாட்டிற்குத் திறை செலுத்த வேண்டிய அவசியம் இல்லை" என்றார் சாயை பிடிப்பான்.

"சரியாகத் தான் சொல்கிறீர்களா?"

"சரியாகத் தான் சொல்கிறேன்."

"உறுதியாகத் தான் சொல்கிறீர்களா?"

"உறுதியாகத் தான் சொல்கிறேன்."

"அப்படியானால் நம்மீது தவறேதும் இல்லை அல்லவா?"

"இல்லை மன்னவா"

"ஆனால் நாம் கப்பம் கட்ட வேண்டும் என்கிறார் சோழ மாமன்னர்."

"சோழமன்னர் அவ்வாறு சொன்னாரா? தங்களிடமா?"

"அவர் யாரிடம் சொன்னார் எப்போது சொன்னார் என்பதெல்லாம் மந்திரி தோலா வழக்கன் கவனித்துக்

கொள்ளட்டும். சோழ மன்னர் நாம் கப்பம் கட்ட வேண்டும் என்று கூறியது மட்டும் உண்மை."

"சோழ மாமன்னரிடம் இது விஷயமாக விளக்கத்தைப் பெறலாம் மன்னவா" என்றான் அமைச்சர் சாயை பிடிப்பான்."

"கப்பம் கட்ட வேண்டும் என்றால் எவ்வளவு கட்ட வேண்டி வரும்?"

"தற்போது சோழ மன்னரது ஆதிக்கத்தில் இருக்கும் சிற்றரசுகள் ஆறுமாதத்திற்கு ஒரு முறை நாணயங்களாக ஆயிரம் வராகன், நெல் மூட்டை ஆயிரம், தான்யங்கள் மூட்டை ஆயிரம் செலுத்துகின்றன."

"நமக்கு ஆலிநாடு அளிக்கப்பட்டு ஒரு வருடம் ஆகிறது. நீ சொல்லும் கணக்குப்படி பார்த்தால் நாணயங்களாக இரண்டாயிரம் வராகன்களும், நெல் மூட்டை இரண்டாயிரம், தான்ய மூட்டை இரண்டாயிரம் ஆகியவற்றை செலுத்த வேண்டியிருக்கும் அல்லவா?"

"ஆமாம்."

அமைச்சர் நிழலில் ஒதுங்துவானைப் பார்த்த மங்கை வேந்தன் "மந்திரி! சாயை பிடிப்பான் கூறிய கணக்குப் படிச் சோழ மாமன்னருக்குச் செலுத்துவதற்குப் பொருள் இருக்குமல்லவா?" என்று கேட்டான்.

"இருக்கும் மன்னவா."

"அதைப் பிரித்து எடுத்து மங்கை மடத்தில் நடைபெறும் அன்னதான நிதியில் சேர்த்து விடு."

மன்னன் இவ்வாறு கூறிய போது குறுக்கிட்டான் சேனாதிபதி உதயணன்.

"மன்னவா! சற்றுப் பொறுங்கள். தாங்கள் உணர்ச்சி வசப்பட்டால் நாட்டிற்கு நல்லதல்ல" என்றான்.

"நீ என்ன சொல்லப் போகிறாய்?" என்று கேட்டான் மன்னன்.

"மன்னவா! சோழ மாமன்னர் தங்கள் சேவைக்காக ஆலி நாட்டைப் பரிசாக அளித்தன் மூலம் இந்த நாட்டில் வருவாயை நிர்ணயிக்கும் உரிமையை நீங்கள் பெறுகிறீர்கள். வருவாயைப் பெற்று அனுபவிக்கும் உரிமையையும் பெறுகிறீர்கள். இந்த நாட்டின் நிர்வாகம், பாதுகாப்பு, வளர்ச்சி ஆகியவற்றை நீங்கள் விருப்பப் படி அமைத்துக் கொள்ளலாம். ஆனால் சோழ

மன்னரது ஆதிக்கத்தில் தான் இருக்கிறீர்கள். அவருக்குக் கப்பம் கட்டுவதே சரி" என்றான்.

"உதயணா! நம்மிடம் படை எவ்வளவு இருக்கிறது? அவர்களுக்குப் போதுமான ஆயுதங்கள் இருக்கின்றனவா? போதுமான பயிற்சி இருக்கின்றனவா?" என்று கேட்டான் மன்னன் உதயணனின் விளக்கத்தைப் பற்றிக் கவலைப் படாமல்.

"பத்தாயிரம் வீரர்கள் இருக்கிறார்கள் மன்னவா. அவர்களுக்குப் போதுமான ஆயுதங்களும் பயிற்சியும் உண்டு." என்று சொன்ன உதயணன் "போரில் ஈடுபடப் போகிறீர்களா மன்னவா?" என்றான்.

"போர் வந்தாலும் வரலாம்."

"போரில்லாமல் ஆளப் போவதாகக் கூறினீர்களே!"

"நாம் ஒன்று நினைத்தால் தெய்வம் ஒன்று நினைக்கிறது."

'மன்னவா! கப்பம் கட்டி விடுவது தான் நாட்டில் அமைதியைத் தரும்."

"கௌரவம்? அது போனால் போகட்டும் என்கிறாயா? உதயணா! நீ போருக்கு ஆயத்தம் செய்."

இரண்டு மாத காலம் ஆயிற்று.

உறையூரிலிருந்து சோழர் தூதன் வந்தான்.

அவன் சொன்ன செய்தி மன்னனை எரிமலையாக்கியது.

★★★



கப்பமும் தூதும்

போரில்லாமல் நாட்டை நடத்த வேண்டும் என்று சொல்லியிருந்த மங்கை வேந்தன் தற்போது படைகளைப் போருக்கு ஆயத்தப் படுத்தும்படிச் சொன்னதைக் கேட்டு வருந்தினான் உதயணன்.

கப்பம் கட்டுவது இயலாத காரியம் என்ற பிடிவாதம் இருந்தாலும் அதை மன்னன் சோழ மாமன்னனிடம் இதமாகப் பேசிப் புரியவைப்பது தான் விவேகமான காரியமேயன்றி போருக்கு ஆயத்தமாவது ஆபத்தானது என்று கருதினான்.

மந்திரிமார்கள் நால்வரையும் தனிமையில் சந்தித்து "மன்னர் பெருமானின் மாற்றம் வருத்தமளிக்கிறது அமைச்சர் பெருமக்களே. போர் என்றால் அது அமைதிக்குப் பங்கம் என்று கருதிய நமது மன்னர் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் போருக்கு ஆயத்தமாவது சரிதானா?" என்று கேட்டான்.

"சேனாதிபதி! மன்னர் படைகளை ஆயத்த நிலையில் தான் வைத்திருக்கச் சொன்னார். போருக்குச் செல்லும் படி உத்தர விடவில்லை" என்றார் அமைச்சர்.

"இரண்டிற்கும் அதிக இடைவெளி இல்லை அமைச்சரே. நாள் மட்டும் தான் குறிக்கப் பட வேண்டும்."

"போர் வருமானால் உன்னால் சமாளிக்க முடியாதா சேனாதிபதி?"

"அது வேறு விஷயம் ஐயா. குறுகிய காலமானாலும் படைகளுக்குச் சிறப்பான போர்ப் பயிற்சிகளை அளித்திருக்கிறேன். போராயுதங்கள் தேவையான அளவு தயாரித்திருக்கிறேன். வெடி பொருட்கள் பலவற்றையும் சேகரித்திருக்கிறேன். உபதளபதி உதயன் வியூகங்களைப் பற்றியெல்லாம் அறிந்தவன். எந்த நிலையிலும் குறைந்த நேரத்தில் வியூகங்களை மாற்றியமைக்கும் வீரர்களின் வியூகங்களை உடைக்கும் தகுதி படைத்தவன். வீரர்கள் புதியவர்களாதலால் அவர்களுக்குப் போரிட வேண்டும்

ஆர்வமும் உத்வேகமும் அதிகரித்திருக்கிறது. ஆகவே போரை எதிர் கொள்ளவும் போரில் வெல்லவும் தயாராக இருக்கிறோம்."

"பிறகு எதற்காக வருத்தம்?"

"மன்னரிடம் இருந்த சாத்வீகக் குணங்கள் மறைந்து தாமஸக் குணங்கள் உண்டாகுவதாகத் தோன்றுகிறது. அது நல்லது தானா ஐயா? அதனால் தான் வருத்தம்."

'சேனாதிபதி! நமது மன்னரைப் பற்றி உனக்குத் தெரியவில்லை. அவர் புயல் என்றால் தென்றலும் அவர் தான். அவர் மலை என்றால் மடுவும் அவர் தான். அவர் சோலை என்றாலும் பாலைவனமும் அவர் தான். சாந்தம் அவர் என்றால் ரௌத்திரமும் அவர் தான். போர்ப் படை அவர் என்றால் மலர்க் கொத்தும் அவர் தான். நிலைமைக்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொள்ளக் கூடிய ஆற்றல் அவருக்குண்டு. நீ வருந்த வேண்டியதில்லை."

"குணங்கள் மாறுவதும் பண்புகள் மாறுவதும் சாமர்த்தியங் களாக இருந்தாலும் வெறுக்கத் தான் வேண்டும். விலக்கத் தான் வேண்டும்."

"உன் கடமையை நீ கவனி உதயணா.. அரசர் அவரது கடமையைக் கவனிப்பார்."

அதற்குப் பிறகு உதயணனால் எதுவும் பேச முடியவில்லை.

போர் வீரர்களை முடுக்கி விடும் பணியில் மும்முரமாக ஈடுபடலானான்.

நாட்கள் கடந்தன.

ஆலிநாடு முழுவதும் மன்னர் போரில் ஈடுபடப் போகிறான் என்ற செய்தி காற்றில் ஊடுறுவியது.

அச்செய்தி மக்களுக்குக் கவலையைத் தரவில்லை. மகிழ்ச்சியையே உண்டாக்கியது.

"மங்கை வேந்தர் வீராதி வீரர். சூராதி சூரர். ஆட்டம் போடுபவர்களை அடக்கி ஆளும் அரட்டமுக்கி. அவரை வெல்வாரும் இல்லை. கொல்வாரும் இல்லை. அவர் பரகாலர் மட்டுமில்லை. காலனுக்கும் காலன். வாழ்க மன்னர்" என்று மக்கள் ஆங்காங்கே பேசித் திரிந்தார்கள்.

ஆடிப் பாடினார்கள்.

"பார்த்தாயா சேனாதிபதி! மக்கள் எத்துணை ஆர்வமாக இருக்கிறார்கள் பார்த்தாயா? அவர்களுக்கு அமைதி பிடிக்கவில்லை. ஆரவாரம் பிடிக்கிறது. ஆர்ப்பாட்டம் பிடிக்கிறது.

போரைப் பார்க்க வேண்டும் என்று ஆவலாக இருக்கிறார்கள்" என்றான் மங்கை வேந்தன்.

"மன்னவா! மக்கள் விளைவைப் பற்றி யோசிக்காமல் ஆர்வம் காட்டுகிறார்கள். ஆரவாரம் செய்கிறார்கள். பள்ளம் இருப்பதை அறியாமல் ஓடும் ஆட்டு மந்தையின் செயலைப் போன்றது தான். அவர்கள் ஆபத்தை உணராத ஆர்வலர்கள்" என்றான் உதயணன்.

"நீ பேசும் பேச்சு சேனாதிபதி பேசும் பேச்சாக இல்லை உதயணா. வீர வசனங்களை வீசி எறிந்து படைகளை உற்சாக மூட்ட வேண்டிய நீ எழுந்து கொண்டிருக்கும் உற்சாகத்தை உறங்க வைப்பது போல் இருக்கிறது."

"மக்கள் கயிறு இல்லாமல் தேரைக் காற்றால் இழுக்க முயல்கிறார்கள். படைத் தலைவனான நான் அவ்வாறு நடந்து கொள்ள முடியாது."

"நீ என்ன தான் சொல்ல நினைக்கிறாய்?"

"போருக்குக் கச்சை கட்ட வேண்டாம் மன்னவா. சோழ மாமன்னரிடம் பேசிப் பாருங்கள். என்னை அனுப்பினாலும் பேசத் தயாராக இருக்கிறேன்."

"நாம் அந்தக் கூட்டத்தைத் தாண்டி வந்து விட்டோம் உதயணா. எதைப் பேசுவதென்றாலும் அதைச் சோழ மாமன்னர் தான் பேச வேண்டுமே தவிர நானல்ல" என்றான் மங்கை வேந்தன்.

அவன் உறுதியாக இருந்ததைக் கண்ட குமுதவல்லி உள்ளுக்குள் அழுதாள்.

வெளியே காட்டிக் கொள்ளாமல் "சுவாமி! தங்கள் கோபம், பிடிவாதம், அணுகுமுறை ஆகிய மூன்றும் தவறானவை என்று தோன்றுகிறது. சோழ மாமன்னர் மிகவும் நல்லவர். சொல்லும் விதத்தில் சொன்னால் புரிந்து கொள்வார். சிக்கல் வராது" என்றாள்.

"சொல்லும் விதத்தில் என்றால் எப்படி?"

"அவரிடம் நேரில் சென்று பேசுங்கள்."

"எனக்கு அரசியல் தெரியாது குமுதவல்லி. அதில் குனிந்து போனால் குட்டுதான் விழும். சற்று அயர்ந்தால் தலைமுடியை அறுத்து விடுவார்கள். பொறுமையாக இரு குமுதவல்லி. நான் போற்றுக்குச் சாட்சியாக இரு" என்றான் மங்கை வேந்தன்.

இந்த விஷயத்தில் அவன் பிடிவாதமாகத் தான் இருந்தான். யார் சொல்வதையும் கேட்கவில்லை.

இரண்டு மாதங்கள் கழிந்தன.

சோழ மன்னரிடமிருந்து பிரதான தூதர் திருமங்கை நகருக்கு வந்து மங்கை வேந்தனைச் சந்தித்தார்.

அவரோடு நூறு வீரர்கள் வந்திருந்தார்கள்.

"நான் இதுவரை யாரிடமும் தூது சென்றதில்லை. என்னை உங்களிடம் தூது அனுப்பியிருக்கிறார் சக்கிரவர்த்தி நந்த சோழர். இது தங்கள்பால் அவர் வைத்திருக்கும் மதிப்பைக் காட்டுகிறது" என்றார் தூதர்.

"மகிழ்ச்சி" என்றான் மங்கை வேந்தன் நிதானமாக.

"தாங்கள் இதுவரை சோழமாமன்னருக்குக் கப்பம் கட்டாமல் இருக்கிறீர்கள். அதற்கான காரணத்தையும் தெரிவிக்கவில்லை. மாமன்னர் வருத்தப் படுகிறார்" என்றார் தூதர்.

"இல்லாத ஊருக்கு எப்படி வழியைச் சொல்ல முடியும்? நாங்கள் கப்பம் கட்ட வேண்டியவர்கள் அல்லர் எனும் போது காரணம் சொல்ல வேண்டிய அவசியம் எங்கிருந்து வருகிறது?"

"சோழ மன்னர் ஆதிக்கத்தில் இருக்கும் எல்லா நாடுகளும் கப்பம் கட்ட வேண்டிய சிற்றரசுகள் தான்."

"அதில் ஆலி நாடு எப்படிச் சேரும்? இந்த நாடு எனக்குச் சோழமன்னரால் பரிசாக அளிக்கப் பட்டது. இது சுதந்திர நாடு."

"இல்லை. இந்த நாடு உங்களுக்கு அளிக்கப் பட்ட விதமானது சேனாதிபதிப் பதவியிலிருந்து பதவி உயர்வு தரப்பட்டதைப் போன்றது. பரிசு என்றெல்லாம் கருதிக் கொள்வதும், சுதந்திர நாடு என்று சொல்லிக் கொள்வதும் கற்பனையேயன்றி நிஜமல்ல."

"அப்படியானால் ஆலிநாடு எனக்கு அளிக்கப்பட்டது பெயரளவிற்குத் தானா?"

"அப்படியல்ல. உங்களை மன்னர் கௌரவப்படுத்தி யிருக்கிறார். இது போல் யாருக்கும் அவர் செய்ததில்லை. திருமண நாள் என்று கூடப் பார்க்காமல் போருக்குப் போன பரகாலன் என் மகனை விட உயர்ந்தவன் என்று மாமன்னர் அடிக்கடி சொல்லுவார்."

"அதனால் தான் கப்பம் கட்டும்படி என்னிடம் சொல்லாமல் என் மனைவியிடம் சொல்லி விட்டுப் போனாரா மாமன்னர்?"

"அச்செய்கை உங்கள் மீதுள்ள அன்பிற்கும் மரியாதைக்கும் அடையாளம்."

“மனைவி சொல்லே மந்திரம் என்று கருதி விட்டாரா மாமன்னர்? மனைவி மூலமாகச் சொல்லி விட்டால் இந்தப் பரகாலன் பணிந்து விடுவான் என்று நினைத்து விட்டாரா சோழச் சக்கிரவர்த்தி?”

“பிழையாகவே எண்ணிப் பிழையாகவே தீர்மானமும் செய்து விட்டால் தவறான முடிவுகளே தட்டுப்படும். நீங்கள் அப்படிப் பட்ட நிலையில் தான் இருக்கிறீர்கள்.”

“அப்படித் தான் இருந்துவிட்டுப் போகட்டும். மாமன்னர் தங்களிடம் என்ன சொல்லி அனுப்பி வைத்தார்?”

“ஆலிநாட்டு மன்னராகி ஓராண்டாகி விட்டது. ஈராறு மாதங்களுக்கான திறையினை - அதாவது வராக நாணயங்கள் இரண்டாயிரமும் - பசுக்கள் நூறும், தான்ய மூட்டைகள் ஆயிரமும் உடனடியாக நீங்கள் செலுத்த வேண்டும். செலுத்த மறுத்தால் உங்களைக் கைது செய்து கொண்டு வரும்படிக் கட்டளையிட்டிருக்கிறார். என்னோடு நூறு வீரர்கள் வந்திருக்கிறார்கள்.”

“எனக்கு முன்னால் வந்து என்னைக் கைது செய்வேன் என்று சொல்வதற்கு உமக்குத் துணிச்சல் இருக்க வேண்டும்” என்று சொல்லிக் கள்ளநகை கொண்டான் மங்கை வேந்தன்.

“சக்கிரவர்த்தியின் கட்டளையைத் தான் நான் சொல்கிறேன் மன்னவா. இதில் என் துணிச்சல் எதுவுமில்லை.”

“அப்படியானால் மன்னர் பேரால் என்னைக் கைது செய்து விடுவீர்களோ?” என்று கேட்டபடி ஆசனத்தை விட்டு எழுந்து ஓரடி எடுத்து வைத்தான் மன்னன்.

“என்னோடு நூறு வீரர்கள் வந்திருக்கிறார்கள்” என்றார் தூதர்.

“அதனால் தான் இந்தப் பேச்சு வருகிறதோ? நூறு பேரென்ன ஆயிரம் பேரையும் சந்திக்கத் தயார். வரச் சொல்லுங்கள்” என்று கூறி வாளின் மீது கையை வைத்தான் மங்கை வேந்தன்.

அவனது கண்கள் சிவந்தன.

அமைச்சர்கள் எழுந்து மன்னனைச் சாந்தப்படுத்தி அமர வைத்தார்கள்.

சேனாதிபதி உதயணன் எழுந்து தூதரைப் பார்த்து “தூதரே! சக்கிரவர்த்தியின் ஆணை எதுவாக இருந்தாலும் இங்கே மன்னரது சன்னிதானத்தில் சமர்ப்பிக்கும் போது பணிவு வேண்டும். மிரட்டும் தொனியில் பேசுவதற்கு உங்களுக்கு உரிமையில்லை. எங்கள் மன்னரைக் கைது செய்யும் வரையில் நாங்கள் இங்கே

உறங்கிக் கொண்டிருப்போம் என்று நினைக்கிறீர்களா? நான் உயிரோடு இருக்கும் வரை எங்கள் மாமன்னரின் நிழலைக் கூட உங்கள் வீரர்களால் தொடமுடியாது. உங்கள் வேலை முடிந்து விட்டது. வந்த வேலையும் முடிந்து விட்டது." என்றான்.

தூதர் ஆசனத்தை விட்டு எழுந்து "மன்னவா" நான் இங்கே மிரட்டவோ கௌரவக் குறைவாக நடந்து கொள்ளவோ வரவில்லை.உள்ளதைச் சொன்னேன்.உண்மையைச் சொன்னேன். உங்கள் பதில் தான் என்ன? சொல்வீர்களானால் சக்கிரவர்த்தி அவர்களுக்குத் தெரிவித்து விடுவேன்" என்றார்.

"அது உமக்கு இன்னமும் புரியவில்லையா? இப்போது சொல்கிறேன் கேளுங்கள். ஆலி நாடு சுதந்திர நாடு. யாருடைய ஆதிக்கத்திற்கும் உடன் பட்டது அல்ல. ஆலி நாடன் சுதந்திர மன்னன். சோழ மன்னருக்கு எந்த வகையிலும் கப்பம் கட்ட முடியாது" என்றான் மங்கை வேந்தன்.

"யோசித்துச் சொல்லுங்கள் மன்னவா."

"பலமுறை யோசித்து விட்டேன். அமைச்சர்களோடு ஆலோசித்து விட்டேன். இது தான் என் முடிவு."

"வருகிறேன் மன்னவா."

மலரும் மணமும் போல் இருந்த உறவு முள்ளும் மலரும் போல் ஆகிவிட்டதாக அமைச்சர்கள் கருதினார்கள். உதயணன் கருதினான். மக்கள் கருதினார்கள். மன்னனும் கருதினான்.

ஆனால் அவர்கள் எல்லோருமே அதற்காகக் கவலைப்பட வில்லை. நடக்க வேண்டியது நடக்கிறது என்று நினைத்துக் கொண்டார்கள்.

சோழ மன்னனுக்கும் மங்கை வேந்தனுக்கும் இருந்த உறவு இடர்ப்பட்டு விட்டதில் அதிகம் கவலையடைந்தது குமுதவல்லி தான்.

நடக்கக் கூடாதது நடப்பதாகக் கருதி வேதனைப் பட்டாள்.

மன்னனிடம் சொல்வதற்கு அவளால் இயலவில்லை.

வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிவிட்ட கதையாக மங்கை வேந்தன் பழையபடி முரடனாக மாறி விட்டதாகவே தோன்றியது அவளுக்கு.

தனது நிபந்தனைகள் நிறைவேறியதிலும் இலட்சியம் வெற்றி பெற்றதிலும் பெருமகிழ்ச்சி உண்டாகியிருந்த அவளது உள்ளத்தில் ஆழிப் பேரலைபோல் மேற்படியான நிலைமை வந்து மகிழ்ச்சியின் தடயங்களைக் கூட அழித்து விட்டதால்

செய்வதறியாமல் தவித்த அவள் வெள்ளைக் குளத்துப் பெருமாளை வெள்ளை உள்ளத்துடன் வேண்டிக் கொண்டாள்.

"சுபமுகா! நீ ராணியாக அமர். ராணியின் அதிகாரங்களைக் கையில் எடு. சோழ மன்னருக்குச் சேர வேண்டிய கப்பத்தைச் செலுத்து. பிரச்சனை தீரும்" என்றார்கள் தோழிகள்.

"நீங்கள் தோழிகளே அல்ல. இப்படியுமா யோசனை சொல்வீர்கள்? பதவி என்பது நஞ்சு என்பதால் தானே அதற்காகக் கிஞ்சுகமும் ஆசைப் படாமல் ராணியாக அமர மறுத்தேன்? இது தெரியாதா உங்களுக்கு? அதுவும் என் பதிக்கு எதிராகப் பதவியில் அமர்ந்து அதிகாரம் செய்வதா? இது என்ன மடமை? அவர் ஆதவனைப் போன்றவர். ஏதோ அகால மேகங்கள் அவரை மறைக்கின்றன. அவை விலகும். அவர் மீண்டும் ஒளிர்வார்" என்றாள் குமுதவல்லி.

மேலும் இரண்டு மாதங்கள் கழித்துச் சோழ மன்னனிடமிருந்து மங்கை வேந்தனுக்கு ஓலையானது கட்டளையாக வந்தது.

மங்கை வேந்தன் அதைப் புறக்கணித்தான்.

அதையடுத்த சிலநாட்களில் திருமங்கை நகருக்கு வெளியே பேரிகைகள் விட்டு விட்டு ஒலித்தன.

★★★



போர் மேகங்கள்

கப்பம் கட்டுவது குறித்து யார் கூறியும் மங்கை வேந்தன் கேட்காத நிலையில் ஒருநாள் சோழ மன்னனிடமிருந்து ஓலையொன்று வந்தது.

ஓலையில் மன்னனே கையொப்பமிட்டிருந்தான். சாதாரணமாக ஓலைகளில் மன்னன் எழுதுவதும் இல்லை. கையெழுத்து இடுவதும் இல்லை. ஓலை நாயகம் தான் மன்னரது ஆணையாகச் செய்தியை எழுதிக் கையெழுத்திடுவார். சோழ இலச்சினையை இடுவார்.

மிகவும் அந்தரங்கமானதும், குடும்ப உறவு சம்பந்தமானதுமான ஓலைகளை மட்டுமே மன்னன் எப்போதாவது எழுதுவதுண்டு.

தற்போது மன்னனே கைப்பட ஓலையை அனுப்பியிருந்தது வியப்பாக இருந்தது.

"நீலா! என் அன்பிற்குரியவனே! மாவீரனே! திருமங்கை மன்னா! கப்பம் செலுத்துவதற்காக விதி முறைகளைத் தேட வேண்டாம். கட்டு என்று நான் தெரிவித்தாலே போதும். அதுவே ஆணை. அதுவே விதி. அதைத் தான் முதலில் குமுதவல்லியிடம் உன் மீதுள்ள அன்பினால் சொன்னேன். பிறகு சம்பிரதாய முறையில் தூதனை அனுப்பினேன். நீ கப்பம் செலுத்தவில்லை. முத்தரையன் எனக்குக் கப்பம் கட்டாமலிருந்த போது உன்னைத் தான் அவனிடம் அனுப்பினேன். அப்போது நீ என்ன பேசினாய், எப்படி நடந்து கொண்டாய், நானெப்படிப் பேசினேன் என்பதையெல்லாம் எண்ணிப் பார். கப்பம் செலுத்தாத முத்தரையனுக்கு நான் மரண தண்டனை விதித்தேன்? அவன் கப்பம் செலுத்தியதோடு வருங்காலத்தில் கப்பம் கட்டுவதில் தாமதம் செய்ய மாட்டேன் என்று உறுதியளித்தான். அதன் அடிப்படையில் நீ குறுக்கிட்டு அவனை மன்னிக்கும் படிக் கேட்டாய். யாரையும் மன்னிக்காத நான் உனக்காக மன்னித்தேன். திருமண நாளன்று கொடும்பாளூர்ப் படையைத் தோற்கடிக்கப் புறப்பட்டு வெற்றி கண்ட கர்மவீரன் நீ. கடமை தவறாதவன். உன் கடமை உணர்ச்சிக்காகவும் தேசபக்திக்காகவும் உனக்கு

ஆலி நாட்டை அளித்து அதன் மன்னனாக்கினேன். திருமங்கை மன்னனே! நீ மன்னனானதும் கடமையை மறந்து விட்டாய் போலும். மாவீரர்களும், மன்னர்களும் கடமையை மறந்தால் நாட்டிற்கு அது நல்லதல்ல. இந்த ஓலையைக் கண்ட இரண்டு நாட்களுக்குள் தூதன் தெரிவித்த படி திறையைச் செலுத்தி விடு. அது தான் உனக்கும் நல்லது. உன் நாட்டிற்கும் நல்லது."-

ஓலையை மந்திரிகளிடமும் சேனாதிபதி உதயணனிடமும் காட்டினான் மங்கை வேந்தன்.

"மன்னவா! மாமன்னர் தன் கைப்பட ஓலை எழுதியிருப்பது தங்கள் மீது வைத்துள்ள அபிமானத்தையும் மரியாதையையுமே காட்டுகிறது.ஒரு பேரரசர் இந்த அளவுக்கு இறங்கி வந்து இதமாகக் கேட்பது என்று வரலாற்று அதிசயம். பெருங்கருணையின் அடையாளம். தயை கூர்ந்து கப்பத்தைக் கட்டி விட்டு கருணைமான் சோழமாமன்னருடனான நல்லுறவைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். அதுவே சாலச் சிறந்தது" என்று கேட்டுக் கொண்டான் உதயணன்.

மங்கை வேந்தன் அமைச்சர்களைப் பார்த்து "நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டான்.

"நாங்கள் ஏற்கனவே சொல்லி விட்டோம் மன்னவா. மாமன்னருக்கு நாம் கப்பம் கட்ட வேண்டாம். கட்டவில்லை என்றால் மாமன்னர் நம் நாட்டின் மீது படையெடுப்பார். போர் தொடுப்பார். நாமும் போரிடுவோம்" என்றார்கள் அமைச்சர்கள்.

"உதயணா! படைகளை ஆயத்தப் படுத்தி விட்டாயா?"

"படைகள் போர்ச் சன்னத்துடன் தான் உள்ளன மன்னவா. உங்கள் ஆணை கிடைத்ததும் அலையெனப் புறப்படும்."

"மந்திரிகள் கூறியது குறித்து உன் கருத்தென்ன?"

"வாளேந்திக் களத்திற்கு வராதவர்கள் அமைச்சர்கள். அவர்கள் போரிடலாம் என்று எளிதில் சொல்லி விடுவார்கள். ரணம் என்றால் எப்படி இருக்கும் என்று அவர்களுக்குத் தெரியாது. எங்களுக்கும் தங்களுக்கும் தெரியும். எனவே தான் போரைத் தவிர்க்கலாம் என்று நான் நினைக்கிறேன்."

"உதயணா! என் அமைச்சர்கள் நால்வருமே என் நண்பர்களாக இருந்தவர்கள். என் பாதுகாவலர்களாக இருந்தவர்கள். வாளேந்தியவர்கள். ஆனால் போரிடத்தான் வாய்ப்பு வரவில்லை. வாய்ப்பு வருமானால் போரிட முன்னே வந்து நிற்பார்கள். சேனாதிபதியாக நீயும் உன்னோடு பத்தாயிரம் வீரர்களும் இருக்கும் போது போரிடும் வாய்ப்பு அவர்களுக்கு இல்லை.

அதோடு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு அபூர்வத் திறமை இருக்கிறது. அது உங்கள் யாரிடமும் கிடையாது. ஆகவே அவர்களைப் பற்றிக் குறைவாகவோ தவறாகவோ எண்ண வேண்டாம். நீ சென்று படைகளை அணிவகுத்து நிற்கச் சொல். நான் வந்து பார்வையிடுகிறேன்" என்றான் மங்கை வேந்தன்.

அதையடுத்து நாட்கள் இறுக்கமாக நகர்ந்தன. நகரமெங்கும் போரைப் பற்றிய பேச்சாகவே இருந்தது.

சோழமாமன்னர் பெரும் படையை உடையவர் என்ற அச்சம் பலருக்கு இருந்தாலும் மங்கை வேந்தன் மீது எல்லோருக்குமே அபார நம்பிக்கையும் இருந்தது.

மன்னனும் அவனது வெண்ணிறப் புரவி ஆடல்மாவும் இருந்தால் எந்த எதிரியையும் அழித்து விட முடியும் என்று நம்பினார்கள். அவர்களிடமெல்லாம் மன்னன் அவ்வப் போது அளாவினான். அவர்கள் அவனது வெற்றி நிச்சயம் என்றார்கள்.

ஒரு சிலர் "மகாராஜா! தங்கள் ஆடல்மாவை வைத்து அசுவமேத யாகமும் செய்யலாம். தங்களால் அது முடியும்" என்று சொன்னார்கள்.

"முடியும் தான். ஆனால் அது வேண்டாம். ஏனென்றால் பேரரசாக ஸ்தாபிக்கும் பேராசை எனக்கில்லை. இந்த ராஜ்யத்தையும் உங்களையும் காப்பாற்றுவேனானால் அது போதும். நாள் அசோகரைப் போலவோ கரிகாலரைப் போலவோ சாம்ராஜ்யங்களை ஸ்தாபிக்கப் பிறந்தவனல்ல. சாதாரணமானவன். போர் வருமானால் அது ஆலி நாட்டின் கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காகத் தான் நடத்தப் படும். நீங்கள் எப்போதும் போல் இயல்பாகவும் மகிழ்ச்சியாகவும் இருங்கள். அது போதும்" என்று சொன்னான் மங்கை வேந்தன்.

சோழ மன்னனிடமிருந்து படையெடுப்பு பற்றியோ போரைப் பற்றியோ நேரடியான தகவல் எதுவும் வரவில்லை.

அதே சமயம் ஆலிநாட்டின் சுற்றுப் புரங்களில் இரவு நேரங்களில் அவ்வப்போது ஒற்றைப் பேரிகை ஒலி எழுந்து வந்தது. போரிடும் நாட்டை நெருங்குவதற்கு அடையாளமாக இந்த ஒற்றைப் பேரிகையை முழங்குவது நந்தசோழனின் வழக்கமாக இருந்தது. மக்களும் அதை உணர்ந்திருந்ததால் அடுத்தடுத்து நடக்கக் கூடிய போர் நிகழ்ச்சிகளைப் பற்றி அசை போடலானார்கள்.

ஒரு நாள் சப்பையான கொம்பொலி ஒன்று அடிபட்ட நாய் புலம்புவது போல் கேட்டது. அதையடுத்து சோழ வீரர்கள் நூறு

பேர் எல்லைப் புரத்தில் நுழைந்து ஆலிநாட்டு ஆநிரைகளைக் கவர்ந்து சென்றார்கள்.

"சோழர்படை காததூரத்தில் இருக்கிறது மன்னவா" என்றான் உதயணன்.

"இருக்கட்டும்" என்று ஒற்றைச் சொல்லை மட்டுமே உதிர்த்தான் மங்கை வேந்தன்.

அன்று அரண்மனையையடுத்த வசந்த மண்டபத்தில் குமுதவல்லியோடு அமர்ந்திருந்த மங்கை வேந்தன் அவளது மேனி முழுவதையும் தென்றல் வருடுவது போல் வருடினான்.

அவளுக்கு அது ஆறுதலாக இருந்தது. ஆனந்தமாக இருந்தது.

"இது எதற்கு சுவாமி?" என்று கேட்டாள் குமுதவல்லி.

"தென்றலை விலையில்லா புயலாகச் சேர்கிறது குமுதவல்லி. ஆகவே தான் தென்றலாக இருக்கும் போதே மலர்வல்லியான உன்னைத் தீண்டாது ப்ரார்த்தனை செய்தேன். ஆசைப் பட்டேன். அவ்வளவு தான்" என்றான் மங்கை வேந்தன்.

அவனது குரல் கூட இயல்புக்கு மாறாக இதமாகவும் பரபரப்பாகவும் இருந்தது.

"சுவாமி! தாங்கள் புயலாகக் கூடாது என்பதும் தென்றலாகவே என்றைக்கும் இருக்க வேண்டும் என்பது தான் என் பிரார்த்தனை" என்று சொல்லி அவனது பரந்த மார்பில் தன் கன்னத்தை வைத்தாள் குமுதவல்லி.

மன்னனின் சொல் தேன் போல் இருந்தாலும் அவனது இதயம் இடிபோல் முழங்கிக் கொண்டிருந்ததை அந்த ஸ்பரிசத்தில் உணர்ந்தாள் அவள்.

அவளது தலையை ஆதரவாகத் தடவிக் கொடுத்த மங்கை வேந்தன் "நான் உன் கணவனாக மட்டும் இருந்திருந்தால் நான் தென்றலாக இருந்திருப்பேன். தேனாக இருந்திருப்பேன். உன் கழுத்தில் மாலையாக இருந்து மணம் வீசிக் கொண்டிருப்பேன். ஆனால் உன்னை மணப்பதற்கு முன் சேனாதிபதியாகவும் மணந்த பின் மன்னனாகவும் மாறி விட்டதால் நல் மனம் கல்லாகிறது. கரும்புக் கரங்கள் இரும்புக் கரங்களாகின்றன. கண்ணில் செம்மையும் முகத்தில் கறுமையும் ஏறி என்னை ஒட்டு மொத்தமாக வீரனாக மாற்றி விடுகிறது. பொறுத்துக் கொள் குமுதவல்லி. பொறுத்துக் கொள். இந்தப் போர் அவசியமான போர். கௌரவத்தை நிலை நாட்டப் போகிற போர். இந்தப் போரில் நான் வெற்றி பெறுவேன். அதற்குப் பிறகு போர்கள்

நடக்காது. நடந்தால் அது நமக்குள் விழிப் போராகத் தான் இருக்கும். கவலையை விடு" என்றான்.

குமுதவல்லியை அனுப்பி விட்டு நீண்ட நேரமாக வசந்த மண்டபத்திலேயே அமர்ந்திருந்தான் மன்னன். அவனுக்குள் ஏதேதோ சிந்தனைகள் ஓடிக் கொண்டிருந்தன.

அவனுக்குள் அப்படியென்ன சிந்தனை நீண்ட நேரமாக இருக்க முடியும் என்பதை அறிய முடியாத மயிலொன்று அவனது நீலநிற மார்பைக் கண்டு மயங்கிப் போய் கார்மேகத்தைக் கண்டு விட்டது போல் எண்ணிக் கொண்டு தோகைகளை விரித்து ஆடிய விதமானது அவனது மனத்தை மாற்ற முயற்சிக்கும் செய்கையைப் போல் இருந்தது.

மயில் மட்டுமல்ல. மானும் தான். மரக்கிளையில் மைனாவும் தான். பொந்தில் இருந்தபடி தலையை மட்டும் காட்டி இரவுப் பொழுதிற்காகக் காத்திருந்த பேய்ப்பறவை கூட மன்னனைப் பார்த்து கண்களை உருட்டியது.

அரண்மனையின் கலைக் கூடத்தில் ஆரணங்குகள் எழுப்பிய ஸ்வரங்கள் காற்றிலே பயணித்து வசந்த மண்டபத்திலே பிரவேசித்து மன்னனைத் தழுவி விட்டு மேற்கொண்டு பயணிக்க விரும்பாமல் அவனது செவிகளிலேயே சுழன்றது.

அந்த நிலையில் சிறுமணி ஒலித்தது.

மன்னன் சிந்தனையிலிருந்து விடுபட்டான்.

பறவைகள் இயல்பு நிலைக்கு வந்தன.

காற்றினிலே வந்த கீதம் காற்றோடு சென்றது.

அமைச்சர் நிழலில் ஒதுங்குவான் வந்தான்.

"ஓர் அதிர்ச்சியான செய்தி மன்னவா" என்றார்.

"சொல்லுங்கள்" என்றான் மன்னன்.

சொன்னார் அமைச்சர்.

அவர் கூறியது நம்ப முடியாததாக இருந்தது.

"நீ சொல்வது உண்மையா?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"முதலில் சந்தேகமாக இருந்தது. பிறகு அவனது நிழலில் ஒதுங்கினேன். சந்தேகம் ஊர்ஜிதமாகியது" என்றார் அமைச்சர்.

"மந்திரி! குமுதவல்லி விரும்பாத காரணத்தால் அவளை ராணியாக நான் அமர்த்தவில்லை. அவளைத் தவிர வேறு யாரையும் அமர்த்த விரும்பவில்லை. இது தெரியாமல் நீ கூறும் அந்த மனிதன் தேவதேவியை என்னிடம் அனுப்பி, மயக்கச்

செய்து உரிமை கொண்டாடி ராணியாக அமர முயற்சிகளைச் செய்திருக்கிறான் என்று சொல்கிறாய். தேவதேவி ராணியாக அமர்ந்து விட்டால் அவள் மூலம் தனது நோக்கங்களையும் அபிலாஷைகளையும் அந்த மனிதன் நிறைவேற்றிக் கொள்வான். இல்லையா?"

"ஆமாம்."

"அவை என்னவாக இருக்க முடியும்?"

எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம் மன்னவா! ஆலி நாட்டு அரியணையில் அமரும் நோக்கம் கூட அவனுக்கு இருக்கலாம். அதற்கு நேர் வழிகள் பயனளிக்காது என்று கீழ்மையான குறுக்கு வழியில் இறங்கியிருக்கிறான். அந்த முயற்சி தோற்றதும் சோழமாமன்னனின் மனதைக் கலைக்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறான். அதற்கு தேவதேவியையும் மற்றும் ஒருத்தியையும் பயன்படுத்தியிருக்கிறான். ஒன்றுக்கு இருவர் பொய்க் கட்டடத்தை எழுப்பியதால் அதற்குள் குடி வந்து விட்டார் சோழ மன்னர். கப்பம் விஷயமாகக் கடுகளவு எண்ணம் அவரிடம் இருந்திருக்கலாம். அதைக் குன்றளவு மாற்றி விட்டது அவனது முயற்சிகள். முதலாவதாக மாமன்னர் குமுதவல்லியிடம் வந்து செய்தி சொன்னார். அதில் பயன் கிடைக்காததால் தூதனை அனுப்பினார். அதுவும் வெற்றி பெறாததால் ஓலையை அனுப்பினார். ஓலையும் பயனைத் தராததால் போருக்கு ஆயத்தமாகி விட்டது. போர் உண்டாகும் விதமாக ஒவ்வொரு கட்டத்திலும் காய்களை நகர்த்தியவன் அவன். குமுதவல்லியாரை ராணியாக்கி ஆதாயமடைய முடியாமல் தோற்றுப் போன அவன் உங்களை அழித்து விடத் தீர்மானித்து போரை இழுத்து வந்து விட்டான்."

"அப்படியென்றால் இப்போரில் நான் அழிந்து விடுவேனா?"

"அவன் எண்ணம் அது? போரின் போது என்னென்ன வெல்லாம் செய்ய இருக்கிறானோ - தெரியவில்லை. அவற்றை அறிந்து கொண்டு வந்து உங்களிடம் சொல்வதற்கு அவகாசம் இல்லை. ஆகவே தான் தெரிந்தது வரை உங்களிடம் தெரிவித்து விட வேண்டும் என்று வந்து சொல்லி விட்டேன். நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்."

". அவனை என்ன செய்யலாம்?"

சொன்னார் அமைச்சர்.

யோசித்தான் மன்னன்.

★★★



ஆலிநாட்டுப் போர்

மங்கை வேந்தனுக்கு வியப்பாக இருந்தது. வெறுப்பாக இருந்தது. வேதனையாக இருந்தது.

சோதனையாகவும் இருந்தது.

சோழர் படை காத தூரத்தில் இருக்கும் நிலையில் இது குறித்து அதிகமாக அலட்டிக் கொள்ள விரும்பாத நிலையில் போரை எதிர்கொள்ள படைப் பாசறைக்குச் சென்றான்.

அங்கே உதயணனும் உபதலைவன் உதயனும் அணிவகுத்து நின்றிருந்த வீரர்களிடம் போர் உத்திகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அனைத்து வீரர்களுக்கும் வாளும் கேடயமும் தரப் பட்டிருந்தன.

அவற்றைப் போரின் போது இழக்க நேரிட்டால் உடனடியாக மாற்று ஆயுதத்தைப் பெறும் வகையில் ஆயுதங்கள் பற்பல வண்டிகளில் வைக்கப்பட்டு ஐந்நூறு வீரர்களுக்கு ஒரு வண்டி என்ற கணக்கில் வைக்கப் பட்டிருந்தன. வாள் வீரர்கள், வில் வீரர்களைத் தவிர வேலெறியும் வீரர்களும், கதாயுதம் கொண்ட வீரர்களும் இருந்தார்கள். ஐந்நூறு எண்ணிக்கை கொண்ட படைப் பிரிவு ஒவ்வொன்றிலும் இந்த ஐந்து விதமான வீரர்களும் இருந்தார்கள்.

அதைக் கண்ணுற்ற மங்கை வேந்தன் "சிறப்பான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறாய் உதயணா. உன் அனுபவம் உனக்குக் கைகொடுத்திருக்கிறது" என்று பாராட்டி விட்டு "சோழர் படைக்கும் நமக்கும் என்ன வித்தியாசம்? ஊகிக்க முடிகிறதா உன்னால்?" என்று கேட்டான்.

"படை எண்ணிக்கையில் வித்தியாசம் இருக்கலாம். அவர்களிடம் புரவிப் படை இருக்கலாம். மற்றபடி இருதரப்பிலும் வேறு வித்தியாசம் இருப்பதாக நான் கருதவில்லை" என்றான் உதயணன்.

"எதிரிப்படை காததூரத்தில் இருப்பதாகத் தெரிவித்தாய். அதை எதிர்கொள்ள என்ன மாதிரியான போர்த்திட்டத்தை வகுத்திருக்கிறாய்?" என்று கேட்டான் மன்னன்.

"தங்கள் திட்டம் என்ன மன்னவா?" என்று கேட்டான் உதயணன்.

"இதென்ன திட்டத்தை என்னிடம் கேட்கிறாய்? சேனாதிபதி பதவியிலிருந்து மன்னன் என்ற பதவிக்கு வந்த பிறகு பொறுப்புகள் மாறும் அல்லவா? இப்போது நீ தானே சேனாதிபதி? நீ தான் போர்த் திட்டத்தைச் சொல்ல வேண்டும்" என்று சொன்ன மன்னன் உபதலைவன் உதயனைப் பார்த்து "நீ சென்று அமைச்சர் சாயைப் பிடிப்பானிடம் சென்று நூறு சேவகர்களை அனுப்பச் சொல்" என்றான்.

உதயணனைப் பார்த்து "நீ சொல்" என்றான்.

"மன்னவா! நமது படை சோழர் படையை விடக் குறைவாக இருக்கும் என்று தோன்றுவதால் நாம் அப்படையை வெளியே சந்திக்க வேண்டாம். அது ஆபத்தாக முடியலாம். ஆகவே நாம் திருமங்கை நகரிலேயே இருந்தபடி எதிரியைப் பல படி இழுத்தும் வளைத்தும் போரிட்டால் சமாளித்து விடலாம். வெற்றியும் சுலபம்" என்றான் உதயணன்.

"போரை நீ கூறுவது போல் நடத்தினால் மக்களுக்கு ஆபத்தை விளைவிக்கும் அல்லவா? எதிரிகள் மக்கள் மீது தாக்குதல் தொடுத்தால் என்ன செய்வாய்?" என்று கேட்ட மன்னன் உதயணனின் தோளில் கையை போட்ட படி சிறிது தூரம் அழைத்துச் சென்று "உனக்கொரு விஷயம் தெரியுமா உதயணா?" என்று வினவினான்.

"என்ன விஷயம் மன்னவா?"

"நமக்குள்ளேயே ஒரு புல்லுருவி இருக்கிறான். அவன் தான் இந்தப் போர் நடப்பதற்கே காரணம். அதோடு அவன் சமயம் பார்த்து எதிரிக்கு உதவி செய்து நம்மைத் தோற்கடிக்கத் திட்டமிட்டிருக்கிறான். தெரியுமா?"

"ஐயோ! இப்படியும் நடக்குமா? யார் அந்தத் துரோகி மன்னவா?"

"தெரியவில்லை உதயணா. அவனை இப்போது நான் தேடிக் கொண்டிருக்க முடியாது. அவனது துரோகத் தனத்தால் நமக்கு பெருங்கடி உண்டாகி யிருக்கிறது. இது முன்னமே கசிந்திருந்தால் போரை நிறுத்தியிருப்பேன். நீ கூட போர் வேண்டாம் என்றாய்

கப்பத்தைக் கட்டி விடுங்கள் என்றும் சொன்னாய். நான் தான் புறக்கணித்து விட்டேன். இப்போது போர் குறித்து எனக்கு அச்சமாக இருக்கிறது. நேரடிப் போர் நடைபெற இயலாது என்றே தோன்றுகிறது. வஞ்சக வழி தான் சரி."

"என்ன சொல்கிறீர்கள் மன்னவா! தாங்களா இப்படிப் பேசுவது? படைகள் நெருங்கி வந்து விட்ட நிலையில் வஞ்சக வழியைக் கையாளுவதா? இது அதர்மம் ஆகாதா?"

"அந்த விசாரணை நமக்கெதற்கு உதயணா? போர் என்று வரும் போது தர்மம் மட்டுமே கையாளப் படுவதில்லை. மகா பாரதப் போரைப் பற்றி உனக்குத் தெரியாதா? அதில் கலந்து கொண்ட மகா புருஷர்களை விடவா நாம் பெரியவர்கள்? அவர்களே அதர்மத்தைக் கையாண்ட போது நமக்கென்ன? அதோடு நமக்குள்ளேயே துரோகிகள் முளைக்கும் போது தர்ம நியாயங்களை நாம் பேசிக் கொண்டிருப்பது விவேகமல்ல. அவிவேகம்."

"என்ன செய்யலாம் என்று சொல்கிறீர்கள் மன்னவா?"

"எதிரிப்படையிடம் சென்று நான் சரணடைவதாகக் கூறி அப்படையின் தலைவனை இங்கே அழைத்து வந்து விட வேண்டும். இங்கே அழைத்து வந்து அவனைப் பணயமாக வைத்து அவனது படைகளைச் சரணடையச் செய்து கைதிகளாக்கி விட வேண்டும்" என்ன?"

"எதிரிப் படையிடம் யார் செல்வது?"

"இது என்ன கேள்வி? நீதான். உன்னைத் தவிர வேறு யாரால் துணிச்சலாகச் செல்ல முடியும்? உன்னோடு நூறு சேவகர்களை அனுப்புகிறேன். அவர்களது பாதுகாப்புடன் நீ சமாதானக் கொடிகளைத் தாங்கிய படிச் செல். படைத் தலைவனைச் சந்தி. எல்லாம் நல்லபடியாக முடியும்."

உதயணன் சற்று திணறித்தான் போனான். அதை அவன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

"வேண்டாம் மன்னவா. இது விபரீதமானது" என்று சொல்லிப் பார்த்தான்.

மன்னன் கேட்கவில்லை.

இதற்கிடையில் சேவகர்கள் நூறு பேர் வந்து சேர்ந்ததால் சமாதானக் கொடிகளைத் தயாரித்து அவர்களோடு உதயணனை அனுப்பி வைத்தான் மன்னன்.

"உதயணனைக் கைது செய்திருக்கலாமே மன்னவா?" என்று கேட்டார் அமைச்சர்.

"அந்த வேலையைச் சோழர் படைகளே செய்யட்டும்" என்றான் மன்னன்.

அதையடுத்து போர் ஆயத்தங்களில் ஈடுபட்ட மங்கை வேந்தன் அமைச்சர்கள் நால்வரையும் ஆயுதங்களை ஏந்தச் செய்து தளபதிகளாக மாற்றினான்.

தானும் ஆடல்மாவின் மீது ஏறினான்.

சோழர் படை திருமங்கை நெருங்குவதற்கு முன் முன்னேறிச் சென்று தாக்கும் படி உபதலைவன் உதயன் மூலமாகக் கட்டளைகளைப் பிறப்பித்தான்.

அடுத்த ஒரு நாழிகை நேரத்தில் போர் முரசுகள் வானதிர ஒலித்தன.

திருமங்கையின் தெற்கே படைவீரர்கள் புயல் வேகத்தில் முன்னேறினார்கள்.

படையின் முன்னணியில் தளபதிகளாக மாறிய அமைச்சர்கள் நால்வரும் தங்கள் புரவிகளில் இடைவெளி விட்டு முன்னேறிச் சென்றார்கள்.

திருமங்கை நகருக்கு அரைக்காத தூரத்தில் சோழர் படையை ஆலிநாட்டுப் படை எதிர்கொண்டது.

சோழர் படையில் முன்னணியில் புரவி வீரர்கள் வேலை எரிந்தபடி வந்தார்கள்.

அவர்களைத் தாக்கும்படிக் கட்டளை பிறந்ததும் வில் வீரர்கள் விற்களில் நாணேற்றி அம்புகளை எய்தார்களாதலால் அவை சோழரது புரவிப் படையின் மீது விழுந்து புரவி வீரர்களைச் சாய்த்தன.

புரவிப் படை சற்றே தாக்குதலுக்கு உள்ளாகி விரிந்த போது காலாட்படை அங்கு ஊடுறுவிச் சென்று வாளால் எதிரிகளைத் தாக்கிய படியால் உக்கிரமான போர் தொடங்கியது.

ஆலிநாட்டு நாங்கூர் வீரர்கள் என்று பிரசித்திப் பெற்ற வீரர்கள் இளைஞர்களாக இருந்ததாலும் போர் வெறி பிடித்தவர்களாக இருந்ததாலும் சூறாவளியைப் போலச் செயல்பட்டார்கள்.

அவர்களுக்குத் தலைமை வகித்த அமைச்சர்களும் சோழர் படையில் மின்னலைப் போல ஊடுறுவி வாள் வீச்சில்

ஈடுபட்டதால் சோழர் படை வீரர்கள் வேகமாகச் சாய்ந்து கொண்டிருந்தார்கள்.

சோழர் படையின் மத்திம பாகத்தில் புரவியில் ஆரோ கணித்திருந்த சோழர் தளபதி கருணாகரன் எதையோ எதிர் பார்த்தவனாக இருந்ததால் உரிய கட்டளைகளைப் பிறப்பிக்க வில்லை.

உபதலைவனைக் கொம்பூதி அழைத்த அவன் "இது என்ன? எதிர்பார்த்தபடி எதுவும் நடக்க வில்லையே! போர் துவங்கியதும் தன் படைகள் மீதே வெடிமருந்துகளைக் கொளுத்திப் போட்டு அழித்து விடுவதாகத் தானே சொன்னான் ஆலிநாட்டுச் சேனாதிபதி உதயணன்! அப்படி எதுவும் நடக்கவில்லையே! நடப்பதற்கான அறிகுறிகள் கூடத் தென்படவில்லையே! உதயணனையேக் காணவில்லையே! வேறு யாரோ நால்வர் அல்லவா படைகளைத் தலைமை தாங்குவது போல் தெரிகிறது? ஒன்றும் விளங்கவில்லையே! உதயணன் எங்கே போனான்? அவன் பேச்சை நம்பித் தானே படை எண்ணிக்கையைக் குறைத்து கொண்டேன்? அவனுக்காக நாம் எவ்வளவு நேரம் காத்திருக்க வேண்டும்?" என்று கேட்டான்.

அவருக்காகக் காத்திருப்பதில் அர்த்தமில்லை தளபதி. உதயணனுக்கு ஏதாவது நெருக்கடி உண்டாகியிருக்கலாம். அல்லது திட்டம் மாறி இருக்கலாம். நமக்கு விவரம் வராத நிலையில் தயங்குவது சரியில்லை" என்றான் உபதலைவன்.

"உதயணன் சாமர்த்தியக்காரனாயிற்றே! சொன்னால் சொன்னபடி நடப்பவனாயிற்றே! நெருக்கடி வந்தாலும் சமிக்ஞையைக் கொடுப்பானே?" என்றான் தளபதி கருணாகரன்.

"தளபதி! நமது மன்னர் கூறி விட்டதை மறந்து விட்டீர்களா? திருமங்கை மன்னன் அவனது சேனாதிபதி மற்றும் அமைச்சர்களை விட சாமர்த்தியசாலி. தந்திரசாலி. ஏதாவது தந்திரம் செய்து ஏமாற்றப் பார்ப்பான். ஏமாந்து விடாதீர்கள் என்று சொன்னதை மறந்து விட்டீர்களா? அதோ பாருங்கள். திருமங்கை மன்னன் ஆடல்மாவின் மீது பறந்து வருவது போல் வருகிறான். அவனது புரவி மாயப் புரவி. அசுரப் புரவி. வீரர்களை உதைக்கும். கடிக்கும். அதைக் கட்டுப் படுத்தாவிட்டால் நமது நிலை மோசமாகி விடும். ஆலி நாட்டு வீரர்கள் நம்மைச் சுற்றி வளையம் போல் வருகிறார்கள். இது திருமங்கை மன்னனின் திட்டமாகத் தான் இருக்கும். அந்த வளையம் முற்றுப் பெற்று விட்டால் அதற்குள் சிக்கிக் கொள்வோம். உதயணனை

எதிர்பார்த்துக் கொண்டிராமல் வளையத்தை உடைப்போம்" என்றான் உபதலைவன்.

கருணாகரனுக்கும் அதுவே சரியாகத் தோன்றவே கொம்புகளை ஊதி எதிரியின் வளையத்தை உடைக்கும் படி உத்தரவிட்டான்.

அதையடுத்து சோழ வீரர்கள் முப்புறங்களிலும் கிளர்ந்து முன்னேறியதால் தாக்குதல்கள் அதிரடியாக மாறின.

சோழர் படை சற்றே மந்தப்பட்டு பிறகு சுதாரித்துக் கொண்டதைக் கண்ட மங்கை வேந்தன் அந்த மாற்றத்திற்குக் காரணம் உதயணனின் சதி வேலை நடக்காமல் போய் விட்டது தான் என்பதை உணர்ந்து முரசுகளை முழங்கச் செய்தான்.

அதைக் கேட்டதும் வீரர்கள் "ஆலி நாடருக்கு வெற்றி. திருமங்கை மன்னருக்கு வெற்றி" என்று கோஷமிட்டார்கள்.

அந்தக் கோஷத்தைக் கேட்டதும் சோழர் படைகள் சற்று குழம்பின.

அதைப் பயன்படுத்திக் கொண்ட மங்கை வேந்தன் தன் படைகளை நேருக்கு நேர் மோத விட்டதால் சோழ வீரர்கள் திணறினார்கள்.

சோழர்களின் சேனாதிபதியாக மங்கை வேந்தன் இருந்து போரிட்ட போது எதிரிப்படை எப்படி நெருக்கடிக்கு ஆளாகி நொறுங்கிப் போகுமோ அந்த நிலை தற்போது சோழர் படைக்கு ஏற்பட்டது.

மங்கை வேந்தன் ருத்திரனைப் போல் மூர்க்காவேசமாக சோழர் வீரர்களை வெட்டிச் சாய்த்ததைக் கண்ட கருணாகரன் "இவன் மனிதனே அல்ல. ராட்சஷன். பிரம்ம ராட்சஷன். பிரும்மாவே வந்தாலும் வெட்டி வீழ்த்தவான். இவனை மன்னனாக்கியது நம் சக்கிரவர்த்தி செய்த பெரும் பிழை. அவனை எதிரியாகச் சந்திப்பது என் துரதிர்ஷ்டம் மட்டுமல்ல. சோழ நாட்டின் துரதிர்ஷ்டம். நமது முன்னேற்றம் பெரிதும் தடைபட்டுக் கொண்டிருக்கிறது. ஆலி நாட்டுப் படையின் முன்னேற்றம் தான் தெரிகிறது. நமது வீரர்களை என்னதான் முடுக்கி விட்டாலும் பயனிருப்பதாகத் தெரியவில்லை. வெற்றிக்கு வாய்ப்பில்லாத போது வீரர்களை மாள விடுவது வீண். சரணாகதிச் சங்கை ஊதுவதே சிறந்தது" என்று நினைத்தவனாய் கழுத்தில் கட்டியிருந்த சங்கை எடுத்து மும்முறை ஊதினான்.

சங்கின் ஒலி கேட்டதும் சோழவீரர்கள் போரை நிறுத்தி பின்வாங்கி நின்றார்கள்.

ஆலி நாட்டு வீரர்கள் வெற்றித் தாரைகளை ஊதி ஆரவாரம் செய்தார்கள்.

அமைச்சர்கள் முன்னேறி வந்து தளபதி கருணாகரனைக் கைது செய்தார்கள். "சோழ வீரர்கள் தங்கள் நாட்டிற்குத் திரும்பலாம். இது திருமங்கை மன்னரின் ஆணை" என்றார்கள்.

சோழர் படையில் அழிந்து போனது போக மீதிப் படைகள் தொங்கிய தலையுடன் திரும்பின.

கைதாகிய கருணாகரனுடன் ஆலி நாட்டுப் படைகள் பேரிகைகளை முழக்கியபடி திருமங்கை நகருக்குள் பிரவேசித்தன.

சபாமண்டபத்தில் மங்கை வேந்தன் வெற்றி வீரனாக அமர்ந்தான். அமைச்சர்களும் அமர்ந்தார்கள்.

"நீரும் அமரலாம்" என்றான் மன்னன் கருணாகரனைப் பார்த்து.

"அமர விரும்பவில்லை. அமரலோகம் செல்லவே விரும்புகிறேன்" என்றான் கருணாகரன்.

★★★



பரிகாரம்

"அமர லோகத்திற்குச் செல்லும் நேரத்தை நாம் முடிவு செய்ய முடியாது கருணாகரா. அது வரும் போது தான் நாம் போக முடியும். அதோடு உன் வெறுப்புக்கு என்ன காரணம்? போரில் அடைந்த தோல்வியா?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"ஆம். வீரர்கள் வீரமரணத்தையே விரும்புவார்கள்" என்றான் கருணாகரன்.

"வீரர்கள் துரோகங்களையும் விரும்புவார்களா? காட்டிக் கொடுப்பதை விரும்புவார்களா?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"உதயணனை நம்பிக் காரியத்தில் இறங்கியது தவறு தான்."

"கருணாகரா! போரில் வெற்றி பெற எண்ணுவது சரி. அதற்கு திட்டங்களை வகுப்பது சரி. தந்திரங்களைக் கையாளுவதும் சரி. ஆனால் துரோகிகள் காட்டிக் கொடுப்பதை ஏற்பது சோழ நாட்டுத் தளபதிக்கு கௌரவமானதா, இது உனக்கு மட்டுமல்ல. சோழ மாமன்னருக்கும் இழுக்கு. அவருக்காக நான் பற்பல போர்களில் ஈடுபட்டிருக்கிறேன். ஆனால் துரோகிகளை நம்பிப் போரில் இறங்கியதும் இல்லை. பயனடைந்ததும் இல்லை. சோழர்கள் வீரம் நம்பிக்கையற்றுப் போய் விட்டதா?"

சோழர் தளபதி சிறிது நேரம் வரை மௌனமாக இருந்து விட்டு "இந்தப் போர் அவசியமற்ற போர். உங்களால் தான் நடந்தது. உங்கள் வாள் உங்கள் சோழ வீரர்களை வெட்டிச் சாய்த்திருக்கிறது. இது உங்களுக்கு ஏற்புடையது தானா?" என்று கேட்டான்.

"சோழர் சகோதர வீரர்களை வெட்டி வீழ்த்த வேண்டும் என்று இந்தப் போரில் நான் ஈடுபட வில்லை. இன்னும் சொல்லப் போனால் இப்போருக்குக் காரணம் எங்கள் சேனாதிபதி உதயணன் செய்த துரோகம் தான். அது முன்னமே தெரிந்திருந்தால் போரைத் தவிர்த்திருப்பேன். உங்கள் படை

எங்கள் நாட்டிலிருந்து காத தூரத்தில் இருந்த போது தான் தெரிந்தது. அந்த நிலையில் போரை நிறுத்த இயலாது. எங்கள் வீரர்கள் கன்னிப்போருக்கு ஆயத்தமாகி விட்ட நிலையில் அவர்களை ஏமாற்ற நான் தயாராக இல்லை. அதோடு இந்தப் போரில் ஆலிநாட்டுக் கன்னி வீரர்களும் வீரமரணமடைந் திருக்கிறார்கள்" என்றான் மங்கை வேந்தன்.

பிறகு அவனே பேசமுற்பட்டு "உன்னைக் கைது செய்து கொண்டு வந்தது சிறையில் வைத்து சித்திரவதை செய்வதற்காக அல்ல. சோழ மாமன்னருக்குச் செய்தி சொல்வதற்காகத் தான். நான் பெருமதிப்பு வைத்திருக்கும் மாமன்னரிடம் சொல். ஆலிநாடு சுதந்திர நாடு. அது யாருக்கும் கப்பம் கட்டாது. கட்ட வேண்டும் என்று வற்புறுத்தினால் என் உயிர் இருக்கும் வரை எத்துணைப் போருக்கும் தயாராக இருப்பதாகச் சொல். போர்ச் சேதங்களுக்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டதாக மாமன்னரிடம் சொல். நீ போகலாம்" என்றான்.

"நன்றி மன்னவா. வருகிறேன்" என்று கூறிவிட்டு அகன்றான் கருணாகரன்.

தளபதி அகன்ற பின் மன்னனைப் பார்த்த அமைச்சர் "உதயணன் என்னாகியிருப்பான் மன்னவா?" என்று கேட்டான்.

"குட்டு வெளிப்பட்டு விட்டது. வெட்டு வந்து விழுவதற்குள் உயிர் பிழைத்தால் போதும் என்று தப்பி ஓடியிருப்பான்" என்றான் மங்கை வேந்தன்.

"அவனைக் கைது செய்து ராஜத் துரோகக் குற்றத்தைச் சுமத்தி மரணதண்டனையை அளித்திருக்கலாமே?"

"அவன் செய்தது ராஜதுரோகம் தான். அதே சமயம் அவன் பல போர்களில் என்னோடு இருந்து தோள் கொடுத்தவன். அவனது வீரம் செத்து விடக் கூடாது. அவனுக்கென்று நாடு இருக்கிறது. இனம் இருக்கிறது. அங்கே போய் தனது வீரத்தைக் காட்டிப் பிழைத்துப் போகட்டும்."

"தங்களது வலது கரமாக விளங்கிய அவன் எப்படி வஞ்சகனானான்? கேவலமான துரோகியானான்?"

"மந்திரி! சேறு தன் மீது தெறித்தால் அதைச் சுத்தம் செய்து கொள்வது தான் எல்லோரது வழக்கம். சிலரோ அப்படிச் செய்யாமல் இறங்கி விடுகிறார்கள். உதயணனும் அப்படித் தான். எதன் காரணத்தாலோ கெட்ட எண்ணமானது கீற்றளவிற்கு அவனிடம் தொற்றியிருக்கிறது. அதை அகற்ற வேண்டிய அவனோ காற்றைப் போல பெருக்கிக் கொண்டான். பேராசை

மனிதனுக்கு வந்து விட்டால் பஞ்சமாபாதகங்கள்ச் சுலபமாக அவனிடம் வந்து சேர்ந்து விடுகின்றன."

"உதயணனோடு நூறு சேவகர்களை அனுப்பினீர்களே அது ஏன்?"

"அவர்கள் சேவகர்கள் அல்ல. பல நாட்டைச் சேர்ந்த குற்றவாளிகள். ஆயுள் தண்டனை விதிக்கப் பட்ட கைதிகள். உறையூரிலிருந்து ஆலி நாட்டிற்கு மாற்றப் பட்டவர்கள். அவர்களுக்கும் ஆலி நாட்டிற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. அவர்களை நமது சிறையில் வைத்துக் கொண்டு சோறிட்டுப் பாதுகாக்க வேண்டிய அவசியமில்லை என்று தோன்றியது. அவர்களைச் சேவகர்களைப் போல மாற்றி உதயணனோடு எதிரியிடம் அனுப்பி விடலாம் என்று அமைச்சர் சாயைப் பிடிப்பானிடம்சொல்லியிருந்தேன்.அதுதான்நடந்தது.உதயணன் சோழர் படைத் தலைவனிடம் செல்லவில்லை. சேவகர்களை அழைத்துக் கொண்டு தப்பிச் சென்றிருக்கிறான்" என்று சொன்ன மங்கை வேந்தன் போரில் இருதரப்பிலும் வீரமரணமடைந்த வீரர்களை அடக்கம் செய்யவும் தகனம் செய்யவும் ஏற்பாடு செய்யுங்கள். வீரர்களை இழந்த குடும்பங்களுக்குப் பொருளை வழங்குங்கள்" என்றான்.

★

போர் முடிந்து ஒருவாரம் கழிந்த நிலையில் சோழ மன்னன் "நான் தவறு செய்து விட்டேன் அமைச்சரே. தவறு செய்து விட்டேன். தெரிந்தே தவறு செய்து விட்டேன். பரகாலன் வளர்க்கப் பட்டவன் என்பது நன்கு தெரிந்திருந்தும் அவனைத் தாக்குவதற்குப் படைகளை அனுப்பியது மிகவும் தவறு. படைகளைக் கண்டால் அவன் யமனாகி விடுவான் என்பதை நேரில் பலமுறை பார்த்திருந்தும் படைகளை அனுப்பி வைத்தது முட்டாள் தனமானது. போர் என்றால் பயிர்களைக் கதிர் அறுப்பது போல் எதிரியின் குதிரை வீரர்களின் தலையை அறுத்து வீசுபவன் நீலன். இதுவெல்லாம் தெரிந்தும் அவன் மீது படையெடுக்கச் சொன்னது ஏனோ?" என்று கேட்டான்.

"என்னவோ! ஆலி நாட்டின் மீது படையெடுக்கும் எண்ணத்தில் நீங்களும் இல்லை. ஆனால் என்னென்னவோ செய்திகள் இங்கே வந்தன. அத்திருமங்கை மன்னனான நீலன் தங்களது பெயருக்கும் புகழுக்கும் பங்கம் வரும் விதமாகப் பேசியும் செய்தும் வருகிறான் என்ற செய்திகள் காற்றோடு வரும் நாற்றம் போல் வந்து கொண்டே இருந்தன. அவற்றை யெல்லாம் கேட்டு நீங்கள் கடும்

கோபம் கொண்டீர்கள். நீலனை நன்றி கெட்டவன், பண்பு கெட்டவன் என்றெல்லாம் கோபப்பட்டுப் பேசினீர்கள். ஆனால் நான் உங்களைப் பொறுமை காக்கும் படிக் கேட்டுக் கொண்டேன். நீலன் அவ்வாறெல்லாம் அவதூறு பேசக் கூடியவன் அல்லன் என்று எடுத்துரைத்தேன். நீங்கள் சற்று ஆறுதலடைந்தீர்கள். அப்போது தான் கருணாகரன் வந்து நீலனைப் பற்றி வேறு பல செய்திகளையும் சொன்னான். தான் மட்டுமின்றி இதரச் சிற்றரசர்களையும் கப்பம் கட்ட வேண்டாம் என்று செய்தியனுப்பி அவர்களையெல்லாம் உங்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழும் படித் தூண்டுவதாகச் சொன்னான். அப்போது தான் நீங்கள் எரிமலை ஆனீர்கள். படையெடுத்துச் சென்று நீலனை அழித்து விட்டு வரும்படி தளபதி கருணாகரனிடம் சொன்னீர்கள்."

"நீங்கள் கூறுவதிலிருந்து நான் ஆராயாமல் தவறு செய்து விட்டது உறுதியாகிறது. தேவையற்ற போரில் இரண்டாயிரம் வீரர்கள் அழிந்தார்கள். இருநூறு புரவிகள் அழிந்தன. நூற்றுக் கணக்கான ஆயுதங்கள் இழக்கப் பட்டன. எல்லாவற்றையும் விட சோழர் புகழ் புரையோடி விட்டது. பலகாலமாகக் கட்டிக் காக்கப் பட்ட நமது கௌரவம் கரையுடைந்த ஏரிபோலச் சிதறிப் போய் விட்டது. எங்கே அந்தத் தளபதி?"

"வெளியே நிற்கிறார் வெட்கத்துடன்."

'இப்போது வெட்கப் பட்டு என்ன ஆகப் போகிறது? தலை மொட்டையான பிறகு முடியைப் பற்றிக் கவலைப் படுவதால் என்ன பயன்? கூப்பிடுங்கள் அவனை?"

சோழ மன்னனின் வார்த்தைகள் உறையூர்க் காவிரியில் பொங்கும் வெள்ளம் போல் வெளிப்பட்டது. அவனது பெருங்குரலால் அதிர்ந்து போன காவிரி நதியில் நீந்திக் கிடந்த மீன்கள் துள்ளி எழுந்து கரையில் விழுந்தன.

தனக்கு முன்னால் நிர்ாயுதபாணியாகவும் தொங்கிய தலையுடனும் நின்ற தளபதி கருணாகரனைப் பார்த்த மன்னன் "இன்னும் நீ உயிரோடு இருப்பது வியப்பாக இருக்கிறது கருணாகரா" என்றான் கடுமையான குரலில்.

"எனக்கு மரணதண்டனையை அளித்து விடும்படி திருமங்கை மன்னனிடம் கேட்டுக் கொண்டேன். அவர் சம்மதிக்க வில்லை" என்றான் கருணாகரன்.

"உன் தலையைத் துண்டிக்க நீலனை விட்டால் வேறு எவனும் இல்லையா? மற்றவர் எதற்கு? உனக்குக் கைகளும் வாளும் இல்லையா? உன்னால் உன் தலையை அகற்றிக் கொள்ள

முடியாதா?" இரக்கமின்றிக் கேட்டச் சோழ மன்னன் "நடந்ததைச் சொல். பொய் கலப்பில்லாமல் சொல்" என்றான் இடிமுழக்கக் குரலில்.

உதயணனைப் பற்றிச் சொன்னான் கருணாகரன்.

அதைக் கேட்ட சோழ மன்னனுக்குக் குருதி கொப்பளித்தது.

"உனக்கு வெட்கமாக இல்லை? சோழர் தளபதியான நீ வீரத்தை அடகு வைத்து விட்டு உதயணனின் துரோகத்தை நம்பியதாகச் சொல்கிறாயே! நீ எப்படி சோழர் குலத்தில் பிறந்தாய்? நீ நடத்திய போர் மிகவும் சிறிய போர். ஆனால் நம் சேனாதிபதியாக இருந்த நீலன் பெரும் போர்களை என்னோடும் நான் இல்லாமல் தனித்தும் நடத்தியவன். ஆனால் ஒரு போதும் எதிரியின் துரோகத்திற்கு விலைபோனது இல்லை. தந்திரங்களைச் செய்வானே தவிரத் தரம் தாழ்ந்து போக மாட்டான். நீயோ வெற்றுப் போருக்காக விலை போய் விட்டாய். என்னைப் பற்றி அவன் என்ன நினைப்பான்? சோழ நாட்டைப் பற்றி என்ன நினைப்பான்? சோழ வம்சத்தைப் பற்றி என்ன நினைப்பான்? நீ போரிட்டு தோற்றிருந்தால் கூட கவலையில்லை. துரோகத்தை நம்பி போரைத் தொடங்கி மூக்கறுபட்டு வந்து நிற்கிறாயே - அது தான் கவலைக்குரியது. வெட்கத்திற்குரியது. வேதனைக் குரியது. நீ தளபதியாக இருப்பதற்கு அருகதையற்றவன். அட்டில் சாலையில் சோறு சமைப்பதற்கே சரியானவன். இனி உன் பணி அட்டில் சாலையில் தான். போ" என்று வாளால் பேசுவது போல் வார்த்தைகளால் பேசித் துரத்தியடித்தான் சோழ மன்னன்.

கருணாகரன் சென்றதற்குப் பிறகு அமைதியற்றவனாக இருந்தான் சோழ மன்னன்.

பிறகு அமைச்சரைப் பார்த்து "நாம் பரிகாரம் செய்ய வேண்டும். அமைச்சரே. அப்போது தான் என் மனம் அமைதியடையும். சோழர் கௌரவமும் மீட்கப் படும். நாம் நீலனிடம் பகைமை பாராட்டுவது எந்த விதத்திலும் பயனுடையதல்ல. என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டான்.

"ஆரம்பத்திலிருந்தே எனது கருத்து அதுதான். சூராதி சூரன். வீராதி வீரன். விவேகம் கொண்டவன். வேகமும் கொண்டவன். தோல்வியை அறியாத வெற்றி வீரன் நீலன். அவனுக்கு ஆலி நாட்டை அளித்து நம்மிடமிருந்து அவனைப் பிரித்ததை விட பொன்னும் பொருளும் பரிசாக அளித்து நமது சேனாதிபதியாகவே இருத்திக் கொண்டிருக்கலாம்" என்றார் அமைச்சர்.

"தற்போது அப்படிச் செய்தால் என்ன?"

"எப்படி?"

"மீண்டும் நம் சேனாதிபதியாக ஆக்கிக் கொண்டால்?"

"அவனை ஆலிநாட்டு மன்னனாக்கி விட்டீர்கள். இப்போது எப்படிச் சேனாதிபதியாக்க முடியும்?"

"அவன் திருமங்கை மன்னனாகவே இருக்கட்டும். அதோடு நம் சேனாதிபதியாகவும் இருக்கட்டுமே. நமக்கும் நல்ல சேனாதிபதி கிடைப்பான். அதோடு சேனாதிபதி சேவையைச் செய்வதால் கப்பம் கட்டும் பிரச்சனையும் எழாது."

"நல்ல யோசனைதான் மன்னவா. உடனடியாகத் தூதரை அனுப்புங்கள்."

"நீங்கள் தான் தூதராகச் செல்ல வேண்டும்."

"நானா?"

"ஆம். வேறு யாரை அனுப்பினாலும் அவன் இசைய மாட்டான். நடக்கக் கூடாதது நடந்து விடும். அப்படி எதுவும் நடக்கக் கூடாது அமைச்சரே. தாங்கள் பரம வைஷ்ணவர். நீலனும் வைஷ்ணவனாகி யிருக்கிறான். உங்கள் மீது அவனுக்கு நல்ல மரியாதை உண்டு. நீங்கள் எடுத்துச் சொன்னால் தட்டாமல் கேட்பான். என் ஓலைகளுக்குக் கூட மதிப்பில்லை என்பதால் தான் உங்களைச் செல்லும் படிச் சொல்கிறேன். தயவு செய்து மறுக்காதீர்கள்."

"ஆகட்டும் மன்னவா"

அமைச்சர் அழும்பில் வேள் மன்னன் கேட்டுக் கொண்டபடி ஆலிநாட்டிற்குச் சென்றார்.

அவரைப் பொறுத்தவரை சோழ மன்னனும் திருமங்கை மன்னனும் எதிரிகளாக இருக்கக் கூடாது என்பதே விருப்பமாக இருந்தது. அது ஈடேறும் என்ற எண்ணத்துடனே திருமங்கைக்கு சென்று மன்னனைச் சந்தித்தார்.

அவரைத் தகுந்த முறையில் வரவேற்று உபசரித்தான் மங்கை வேந்தன்.

அழும்பில் வேள் மன்னனின் கருத்தைக் கூறினார்.

"அமைச்சர் பெருமானே! என்னைச் சேனாதிபதி பதவியிலிருந்து மாமன்னர் விடுவித்த போது நான் மகிழ்ந்தேன் என்றால் போர்த் தொழிலிலிருந்து விலகுவதற்கு வாய்ப்பு கிடைப்பதாகவே எண்ணி மகிழ்ந்தேன். மன்னனான பிறகு

போர்களை விரும்பாமல் அமைதியையே விரும்பினேன்" என்றான் மங்கை வேந்தன்.

"நீங்கள் விரும்பியது நடக்கவில்லை நீலரே. போர் நடந்து விட்டது அல்லவா? ஆகவே நடப்பவை நம் கையில் இல்லை. அனைத்தும் திருநாராயணன் திருக்கரங்களில் தான் இருக்கிறது. அது தான் ஸ்ரீ வைஷ்ணவர்களின் நம்பிக்கை. மாமன்னர் தெரிவித்த கருத்து தான் எனக்கும். எனவே அதனை ஏற்று உறையூருக்கு வாருங்கள். சோழ மன்னருக்குக் கூடப் போரில் விருப்பமில்லை" என்றார் அமைச்சர்.

"தங்கள் கருத்தும் அதுதான் என்றால் மறுப்பதற்கு என்னிடம் வார்த்தைகள் இல்லை அமைச்சர் பெருமானே. புறப்படுகிறேன் இப்போதே."

மங்கை வேந்தன் உறையூருக்கு வந்ததும் சோழ மன்னன் பிறப்பித்த கட்டளை அதிர்ச்சியூட்டுவதாக அமைந்தது.

★★★



எதிர்பாராதது

மங்கை வேந்தனைக் கண்டதும் கைகளைத் தட்டி வீரர்களை அழைத்த சோழ மன்னன் "நீலனைக் கைது செய்து சிறையில் அடையுங்கள்" என்று உத்தரவிட்டான்.

அதைக் கேட்டதும் மங்கை வேந்தனை விட அமைச்சருக்கே அதிர்ச்சி அதிகமாக இருந்தது.

"மன்னவா! என்ன இது? தாங்கள் சொன்னது என்ன? செய்வது என்ன? இது அடாது" என்றார் சீற்றத்தை லேசாகக் காட்டி.

"அமைச்சரே! நீலன் எலியாக இருந்திருந்தால் அவனைப் பிடிக்க எனக்கு எந்தச் சிரமமும் இல்லை. ஆனால் அவன் புலி. சோழ நாட்டுப் புலி. பாயும் புலி. பதுங்காத புலி. அதைப் பிடிக்க வேண்டுமானால் தந்திரங்கள் தேவைப் படுகின்றன" என்றான் சோழமன்னன்.

"மன்னவா! தாங்களா இப்படிப் பேசுவது? கருணாகரனிடம் துரோகத்தைப் பற்றியெல்லாம் சொன்னீர்களே! நீலன் விஷயத்தில் நீங்கள் செய்து கொண்டிருக்கும் செயலுக்கு என்ன பெயர்?" என்று கேட்டார் அமைச்சர்.

"நிச்யமாக இது துரோகமில்லை. தந்திரம் தான். சிங்கத்தைப் பிடிக்க வலை விரிப்பதும் யானையைப் பிடிக்க பள்ளங்களைத் தோண்டுவதும் வழிமுறைகளே தவிர துரோகங்கள் அல்ல" என்றான் சோழமன்னன்.

"இந்த அபகாரியத்திற்கு என்னை ஏன் பயன்படுத்தினீர்கள்?"

"நீங்கள் உட்பட என்னிடம் பணிசெய்கிற அனைவருமே எனது பகடைக் காய்கள். எந்தக் காயை எந்த நேரத்தில் எப்படி நகர்த்த வேண்டும் என்று தெரிந்து நகர்த்துகிறேன். அவ்வளவு தான். நான் யாரை வேண்டுமானாலும் மன்னிப்பேன். ஆனால் எனக்குக் கப்பம் கட்டாதவனை மட்டும் மன்னிக்கவே மாட்டேன். இது உங்களுக்கும் தெரியும். இந்த நீலனுக்கும் தெரியும். முத்தரையன் கப்பம் செலுத்த மறுத்தபோது இது அநீதி என்பதை உணர்ந்து

அவனைக் கொண்டு வந்து கப்பத்தைக் கட்ட வைத்தவன் நீலன் தான். முத்தரையனுக்கு ஒரு நீதி. நீலனுக்கு ஒரு நீதி என்று நான் பாரபட்சம் காட்டமுடியாது அமைச்சரே. சோழ நீதி எப்படிப் பட்டது என்பது உலகத்திற்கே தெரியும். சோழர்களின் கால் வழுக்கலாம். சோழநீதி மட்டும் என்றுமே வழுவாது. வழுக்காது. தெரியாதா உங்களுக்கு?"

"தெரிந்து விட்டது மன்னவா. சோழர்களின் வீரம் செத்து விட்டது என்பது தெரிந்து விட்டது. ஆலிநாட்டின் மீது படையெடுத்துச் சென்று நீலனை வென்று கப்பத்தைப் பெற முடியாமல் தோற்று அவனைத் தந்திரத்தால் இங்கு கொண்டு வந்த போதே நீதி செத்துவிட்டது."

"உணர்ச்சி வசப்படாதீர்கள் அமைச்சரே. யானையை அது அறியா வண்ணம் பள்ளத்தில் வீழ்த்திப் பிடிப்பதும் வீரம் தான். போரிட்டுத் தான் பிரச்சனையைத் தீர்க்க முடியும் என்றும் வாள் வீச்சு மட்டும் தான் வீரத்தின் அடையாளம் என்றும் நினைக்காதீர்கள். சமயங்களுக்கு ஏற்ப எதிரிகளுக்கு ஏற்ப மாறுபட்ட விதங்களில் ஈடுபடுவதும் வீரம் தான். இந்த நீலன் மட்டும் கப்பத்தைக் கட்டியிருந்தால் இந்த நிலை வந்திருக்குமா? கப்பம் கட்ட இவன் மறுத்தான். போர் தொடுக்கப் போவதை அறிந்த பிறகும் பிடிவாதம் பிடித்தான். அது ஏன் என்று அவனை கேட்க வேண்டிய நீங்கள் என்னைக் கேட்கிறீர்கள். என் மீது குற்றம் சாட்டுகிறீர்கள். அழகாகத் தான் இருக்கிறது."

மன்னனிடம் இனி நியாயம் பேச முடியாது என்பதை உணர்ந்த அமைச்சர் "நீலனைச் சிறையில் வைத்து என்ன செய்யப் போகிறீர்கள் மன்னவா?" என்று கேட்டார்.

"சிறையில் வைத்து சித்திரவதை செய்வதற்காக இவனை அழைத்து வரச் சொல்லவில்லை. நமக்குச் சேர வேண்டிய கப்பத் தொகையை செலுத்தி விடச் சொல்லுங்கள். விடுவித்து விடுகிறேன்."

அமைச்சர் நீலனைப் பார்த்து "உங்கள் பதில் என்ன பரகாலா?" என்று கேட்டார்.

"கப்பம் கட்டுவது என்பது இயலாத காரியம். அதற்கு நான் ஒப்புக் கொள்ள முடியாது" என்று நெஞ்சை நிமிர்த்திச் சொன்னான் மங்கை வேந்தன்.

"பிடிவாதம் வேண்டாம் பரகாலரே. மாமன்னர் கேட்பதை கொடுத்து விடுங்கள்" என்றார் அமைச்சர்.

"சோழமன்னருக்கு அவரளித்த ஆலி நாட்டையே திருப்பிக் கொடுத்து விடுகிறேன். கப்பம் மட்டும் செலுத்த முடியாது" என்றான் மங்கை வேந்தன்.

"என்ன சொல்கிறீர்கள் மன்னவா?" என்று சோழ மன்னனைப் பார்த்துக் கேட்டார் அமைச்சர்.

"பரிசாகக் கொடுத்ததைத் திரும்பப் பெற்றுக் கொள்ளும் வழக்கம் சோழர்களுக்குக் கிடையாது. அவர்கள் கேட்பது கப்பத்தைத் தானே தவிர நாட்டையல்ல" என்றான் சோழ மன்னன்.

"பரகாலரே! சோழ மன்னர் பேரரசர். தாங்கள் சிற்றரசர். அதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்" என்றார் அமைச்சர்.

"புரிந்து கொண்டு தான் இருந்தேன். இப்படி நயவஞ்சகமாக அழைத்து வந்து என்னைக் கைது செய்ய உத்தரவிட்ட போது நான் புரிந்து கொண்டதை மறந்து விட்டேன்" என்றான் மங்கை வேந்தன்.

சோழ மன்னன் குறுக்கிட்டு "இவனது முரட்டுத் தனமும் பிடிவாதமும் நாம் நன்கு அறிந்த ஒன்று தான். ஒன்றுமறியாத அந்தப் பெண் குமுதவல்லி மட்டும் மனைவியாக இருந்திரா விட்டால் இவனை இக்கணமே கழுவேற்றியிருப்பேன். யாரிடமும் நான் கெஞ்சிக் கொண்டிருந்ததில்லை. நீங்களும் பேசிப் பேசிப் பேச்சுகளை வீணாக்காதீர்கள்" என்றான் உறுதியாக.

அமைச்சர் சற்று யோசித்து விட்டு "மன்னவா! என் மீது உங்களுக்கு நம்பிக்கை இருக்குமானால் பரகாலரைக் கைது செய்து பாதுகாக்கும் பொறுப்பை என்னிடம் ஒப்படையுங்கள்" என்றார்.

"அப்படியே ஆகட்டும் அமைச்சரே. உங்கள் மகுடிக்கு இந்தப் பாம்பு ஆடலாம். ஆனால் பாம்பு பாம்பு தான். எச்சரிக்கையாக இருங்கள். கடித்து விடப் போகிறது" என்று கூறிவிட்டு அகன்றான் சோழமன்னன்.

அதையடுத்து வண்டியொன்றில் ஏற்றப் பட்டான் மங்கை வேந்தன். சம்பிரதாயம் கருதி அவனது கைகள் பின்புறத்தில் இழுத்துக் கட்டப் பட்டன. கண்களும் கட்டப்பட்டன. அந்த வண்டியில் அமைச்சரும் ஏறி அமர்ந்தார். ஐம்பது வீரர்கள் புடைசூழ வண்டியோட்டி வண்டியை ஓட்டிச் சென்றான்.

கரையேறி மீன் விளையாடும் உறையூர் காவிரியாற்றின் குறுக்கே கட்டப் பட்டிருந்த தற்காலிக மரப் பாலத்தைக் கடந்து மறுகரையை அடைந்து கிழக்கில் பயணப்பட்டது வண்டி.

திருவையாற்றில் வண்டி நிறுத்தப் பட்டு எல்லோருக்கும் போஜனம் வழங்கப் பட்டது. மங்கை வேந்தன் எந்த மறுப்பும் சொல்லாமல் போஜனத்தை ஏற்றுக் கொண்டான்.

அதற்குப் பின் பயணம் தொடர்ந்த போது அவனது கைகள் கட்டப்படவில்லை. இரவு நேரம் முகிழ்த்து விட்டதால் அவனது கண்கள் கட்டப்பட வில்லை.

அவனிடம் மெல்லப் பேச்சு கொடுத்த அமைச்சர் "மன்னவா! உங்களுக்குத் தான் ஏன் இந்தப் பிடிவாதம்? மாமன்னருக்குக் கப்பம் வாங்குவதென்பது கௌரவப் பிரச்சனை. அதை நீங்கள் செலுத்தி விட்டால் காலம் காலத்திற்கும் உங்கள் இருவரது உறவும் சுமூகமாக இருக்கும் அல்லவா? மன்னராக இருக்கும் நீங்கள் கைதியாகி இப்படி மாட்டு வண்டியில் பயணம் செய்ய வேண்டுமா?" என்று கேட்டார்.

"அமைச்சர் பெருமானே! வண்டியும் ஒரு நாள் ஓடத்தில் ஏறும். ஓடமும் ஒருநாள் வண்டியில் ஏறும். எந்தப் பதவியும் யாருக்கும் சாஸ்வதமானதல்ல. நான் அரச வம்சத்தவனுமல்ல. அரியணையைத் தேடி அலைந்தவனுமல்ல. திடீரென என்னை வந்து அண்டிய அப்பதவி எப்போது அகலுவதாக இருந்தாலும் நான் கவலைப்பட மாட்டேன். கப்பம் பெறுவது சோழ மாமன்னருக்குக் கௌரவமான விஷயம் என்றால் எனக்கும் அது கௌரவமான பிரச்சனை தான். அதில் எனக்கு உடன்பாடில்லை. அதோடு மிகவும் முக்கியமான விஷயத்தைச் சொல்கிறேன். கப்பம் கட்டுவதற்கு ஒரு வேளை நான் முன் வந்தாலும் என்னிடம் பொருளில்லை என்பது உண்மை" என்றான் மங்கை வேந்தன்.

"என்ன சொல்கிறீர்கள்?"

"ஐயா! என் தர்ம பத்தினியின் வேண்டுகோளின் படி விவாகம் ஆனதிலிருந்து மங்கை மடத்தில் 1008 பாகவதர்களுக்கு தினமும் அன்னதானம் செய்து வருகிறேன். என்னிடம் இருந்த செல்வத்தை மட்டுமே எடுத்து அதற்குப் பயன்படுத்தி வந்தேன். ஒரு வருடம் வரை அவ்வாறு செய்தேன். அதற்குப் பிறகு எனது செல்வம் என ஒரு சல்லிக்காசு கூட இல்லை. மக்களில் சிலர் பொருள் தந்து கொண்டிருந்தார்கள். அது சரியல்ல என்று அதை நிறுத்தினேன். அன்ன தானம் நடத்தியது போதும் என்றாள் முத்தவல்லி. எனக்கு அதற்கு மனமில்லை. இந்த அன்னதானத்தை எதிர்பார்த்து தினமும் காத்திருக்கும் பாகவதர்களை ஏமாற்ற நான் விரும்பவில்லை. அந்த நேரத்தில் தான் நான் கப்பம் கட்ட வேண்டும் என்ற கட்டளை வந்தது. கப்பத்தொகை எவ்வளவாக இருக்கும் என்று அமைச்சர்களிடம் கேட்டறிந்தேன். அப்படியாக

அந்தத் தொகையை அன்னதானத்திற்குச் செலவிடும் படி உத்தரவிட்டேன். மாமன்னருக்கு அடிமைப் பணமாகச் செல்லும் செல்வம் பாகவதர்களுக்கு உணவாகச் செல்வதே உத்தமம் என்று கருதினேன். ஆகவே கப்பம் கட்ட என்னிடம் எதுவுமில்லை."

"மன்னவா! நல்லதைத் தான் செய்திருக்கிறீர்கள். இதைச் சோழ மன்னரிடம் தெரிவித்திருக்கலாமே! அவரும் ஏற்றுக் கொண்டிருப்பாரே!"

"கப்பம் விஷயத்தில் சோழமன்னர் கல்மனதுக்காரர் என்று பல சமயங்களில் நான் உணர்ந்திருக்கிறேன் அமைச்சர் பெருமானே. என் விஷயத்திலும் அப்படித் தான் நடந்து கொள்வார். என்னை உங்கள் மூலம் உறையூருக்கு வரவழைத்துக் கைது செய்ய கட்டளையிட்டதிலிருந்து உங்களுக்குப் புரியவில்லையா? கப்பம் கட்டினால் விட்டு விடுகிறேன் என்று தானே சொல்கிறார்?"

அமைச்சர் சங்கடத்துடன் அசைந்தார். "உங்கள் கப்பம் வந்து அவருக்கு ஆகப் போவது எதுவுமில்லை. கௌரவம் தான். எல்லோரும் தரும் போது நீலனுக்கு மட்டுமென்ன விதிவிலக்கு என்பது தான் அவரது எண்ணம். அதோடு உங்களுக்கொன்று தெரியுமா?" என்று கேட்டார்.

"எதைச் சொல்கிறீர்கள்?"

"சோழமன்னரே சுதந்திர மன்னரல்ல. பல்லவப் பேரரசின் ஆதிக்கத்தில் தான் இருந்து வருகிறார். பல்லவருக்கு ஆண்டு தோறும் திறை செலுத்தி வருகிறார். ஆகவே தான் இந்தக் கெடுபிடி."

"இருக்கட்டும் அமைச்சர் பெருமானே. நிலைமையை நான் கூறிவிட்டேன். என்னைச் சிறையில் வைத்தால் மட்டும் கப்பம் வந்து விடுமா அவருக்கு? சிறையில் இருந்து கொண்டு சம்பாதிக்கவா முடியும்? ஒன்று செய்வீர்களா?"

"என்ன?"

"எனக்கு ஆலிநாடும் வேண்டாம். அரியணையும் வேண்டாம். சேனாதிபதி பதவியும் வேண்டாம். நான் சுதந்திர மனிதனாக இருக்கவே விரும்புகிறேன். எனக்களித்ததையெல்லாம் அவரையே எடுத்துக் கொள்ளும் படி நான் கேட்டுக் கொண்டதாகத் தெரிவிப்பீர்களா?"

"அவசரப் படாதீர்கள் மன்னவா. நல்லது நடக்கும்" என்றார் அமைச்சர்.

அதற்குப் பிறகு அவர்கள் பேசிக் கொள்ள வில்லை. இருவருமே வண்டியில் கண்ணயர்ந்தார்கள்.

அமைச்சரின் மீது மங்கை வேந்தனுக்கு மரியாதையும் மதிப்பும் இருந்த படியால் எங்கே பயணப் படுகிறோம் என்ற கேள்வியை எழுப்பவில்லை.

பொழுது விடிந்தபோது வண்டி திருநறையூரில் நுழைந்தது.

ஏற்கனவே மங்கை வேந்தன் பஞ்ச சம்ஸ்காரங்களை செய்து கொள்வதற்காக அங்கு வந்திருந்தாலும் அவசரம் காரணமாக வந்தபடியால் கோயிலை மட்டும் கண்டிருந்தானே தவிர அவ்வூரின் எழிலைக் காணவில்லை.

எம்பெருமான் எழுந்தருளியிருந்த அத்திருத்தலத்தில் இயற்கையானது எழில் பேரரசியாக விளங்கியது.

இளைய பாக்கு மரங்கள் நிறைந்திருந்தன. அவற்றில் உச்சியில் நச்சும் படியான பழுத்த காய்களும் பழுக்காத காய்களும் பாளை முத்துகளும் குலைகுலையாகத் தொங்கி பாக்கு மரங்களின் தாக்கத்தைத் தம்பட்டமடித்துக் கொண்டிருந்தன.

பலசுளைகளை உடைய பலாப்பழ மரங்களிலிருந்து தேனானது சொட்டிக் கொண்டிருக்க, அவற்றுக்கு அருகிலேயே வாழைகள் பருத்த பழங்களைத் தாங்கிக் கொண்டு பலாவிற்குச் சவாலிட்டுக் கொண்டிருந்தன.

பெடையோடு கூடிய அன்னப் பறவைகள் அப்பேடைகளை விட்டுப் பிரியாமல் தாமரைத் தடாகங்களிலிருந்த தாமரை மலர்களின் இதழ்களை அகற்றி விட்டு தேனை மட்டும் தங்கள் பெடைகளுக்கு ஊட்டி தங்கள் அன்பைக் காட்டிய காட்சிகள் தடாகங்களிலெல்லாம் காணப்பட்டன.

அகில் கட்டைகளையும் சந்தனக் கட்டைகளையும் பொன்னையும் முத்தையும் அலைகளால் மிகுதியாகத் திரட்டி வந்து தள்ளிக் கொண்டிருந்த பொன்னியாறு தான் பொன்னாறு என்பதை நிரூபித்துக் கொண்டிருந்தது.

உப்பங்கழிகளில் நிரம்பியிருந்த சங்குகளை எல்லா இடங்களிலிருந்தும் திரட்டி வரிசை வரிசையாக வீதிகளில் சேர்க்கப் பட்டிருந்ததால் முத்தின் செழிப்பை உணர்த்துவதாக இருந்தது.

மன்மதனைப் போல ஆண்களும் வேல்களைப் போன்ற கண்களையுடைய பெண்களும் நிறைந்திருந்த வீதிகளில் இடையறாது உற்சவங்களால் ஆரவாரம் மிகுந்து காணப்பட்டன.

நான்கு வேதங்களிலும் கைதேர்ந்த சதுர்வேதிகள் அக்ரகாரப் பகுதிகளிலும் மாட வீதிகளிலும் நான்மறைகளை ஓதியபடி ஊருக்கு அருள் அலைகளைக் காப்பாக அளித்துக் கொண்டிருந்தன.

நல்ல ரசிகனான மங்கை வேந்தன் இதனையெல்லாம் ரசித்தபடிச் சென்றான்.

மணிமுத்தா நதியில் அனைவரும் நீராடி வேற்றுடை யணிந்து நம்பிக் கோயிலுக்குச் சென்றார்கள்.

அந்தப் பிரவேசம் தன் வாழ்க்கையின் முக்கிய மாறுதல் களுக்கான பிரவேசமாக அமையப் போகிறதென்பதை மங்கை வேந்தன் அறியவில்லை.

★★★



வேகவதி

நீராடி விட்டு மாற்றுடைகளை அணிந்து மங்கை வேந்தன் கோயிலுக்கு வருவதற்குள் அமைச்சர் வீரர்களை கோயிலுக்கு அனுப்பி ஏற்பாடுகள் சிலவற்றைச் செய்ததோடு சோழ அமைச்சரான தனக்குச் சம்பிரதாய மரியாதைகளைச் செய்ய வேண்டாம் என்று கட்டளையிட்டிருந்தார்.

மங்கை வேந்தன் திருமங்கையின் மன்னன் என்பது அங்கே இருப்பவர்கள் சிலருக்குத் தெரிந்திருக்கலாம் என்று கருதிய அவர் அவனுக்கும் எந்தச் சிறப்பு மரியாதையும் காட்ட வேண்டாம் என்றும் மூன்று நாட்களுக்கு ஆலய நிர்வாகம் தான் சொல்லும் படி நடந்து கொள்ள வேண்டும் என்றும் கூறியிருந்தார்.

அதையொட்டி ஏற்பாடுகள் செய்யப் பட்டிருந்தன.

மங்கை வேந்தன் வந்ததும் ஆர்ப்பாட்டம் எதுவும் இல்லாமல் அமைதியான விதத்தில் பெருமாள் தரிசனத்தைச் செய்து வைத்த அமைச்சர் அவனை ஆலயத்திலேயே இருந்த காலி செய்யப் பட்ட களஞ்சிய அறையில் சிறை வைத்தார். அறையில் அகல் விளக்கு எரிந்தது. கதவு சாத்தப்பட்டுப் பூட்டப் பட்டது.

எங்கே இருந்தால் என்ன சிறை சிறை தான் என்ற நினைபபில் மங்கை வேந்தன் அமைதியாகவே இருந்தான். அன்று முழுதும் அவனுக்குப் பெருமான் பிரசாதம் தரப்பட்டது. பிரசாதத்தை அளித்த அர்ச்சகரைத் தவிர வேறு யாரும் அவனைச் சந்திக்க வில்லை. களஞ்சியத்தின் பக்கம் ஒருவரும் அனுமதிக்கப் படவில்லை.

மறுநாள் கோயிலில் இருந்த புஷ்கரணியில் நீராடவும் மாற்றுடை அணியவும் அவன் அனுமதிக்கப் பட்டு களஞ்சிய அறையில் அடைக்கப் பட்டான். பிரசாதமும் வழங்கப்பட்டது.

அன்று மத்தியானத்தில் வந்தார் அமைச்சர் அழும்பில் வேள்.

“மன்னவா! உங்களை உறையூர்ச் சிறையில் வைப்பதை விட திருநறையூர் ஆலயத்தில் சிறை வைத்ததற்கு என்ன காரணம்

தெரியுமா? பெருமான் நறையூர் நம்பிக்கு அருகில் நீங்கள் இருப்பதே உகந்தது என்பதால் தான். உங்களுக்குச் சிரமம் எதுவும் இல்லையே?" என்று வினவினார்.

"நான் சிரமமில்லாமல் இருக்க வேண்டும் என்பதற்காக நீங்கள் தான் சிரமப்பட்டிருக்கிறீர்கள் அமைச்சர் பெருமானே. மிக்க நன்றி" என்றான் மங்கை வேந்தன்.

"மன்னவா! இந்த ஆலயத்தை மணிமாடக் கோயிலாக அமைத்து விமானத்திற்குப் பொன் வேய்ந்து இவ்வாலயத்திற்காக நில தானங்கள் பலவற்றையும் செய்தவர் யார் தெரியுமா? சோழ மாமன்னர் கோச்செங்கணனான். பல்லவர்கள் காஞ்சியைக் கைப்பற்றுவதற்கு முன் சோழ நாட்டை ஆண்ட பெரு வேந்தர் அவர். மகாவீரர். சேரமான் கணைக்கால் இரும்பொறையைக் கழுமலத்தில் வெற்றி கொண்டவர்" என்றார் அமைச்சர்.

"சோழ மன்னர்களின் புகழைத் தாங்கள் சொல்ல வேண்டியதே இல்லை அமைச்சர் பெருமானே! அகிலமே அறியும்" என்றான் மங்கை வேந்தன்.

"அவனுக்குச் செங்கணான் என்ற பெயர் எப்படி வந்தது தெரியுமா? அவரது தந்தை ஒரு சிற்றரசர். செங்கணான் தனது தாயின் வயிற்றில் இருந்தார். பிரசவிக்கும் நாள் வந்தபோது பிரசவ நேரம் நல்லதாக இருந்தால் குழந்தைக்கு உகந்ததாக இருக்கும் என்று கருதிய சிற்றரசர் ஜோதிடர்களை அழைத்து ஆலோசித்தார். குழந்தையானது நான்கு நாழிகைகளுக்குப் பின் பிறந்தால் பேரரசனாகத் திகழ்வான் என்றார்கள் ஜோதிடர்கள். பிரசவமோ ஒரு நாழிகைக்குள் நடந்து விடும் என்றார்கள் வைத்தியர்கள்.

நான்கு நாழிகை வரைப் பிரசவத்தைத் தள்ளிப் போட முடியுமா என்று கேட்டார் சிற்றரசர். 'ஒரே ஒரு வழிதான் உண்டு. நிறை மாத கர்ப்பிணியைத் தலைகீழாகக் கட்டித் தொங்கவிட்டால் நான்கு நாழிகைக்குப் பிரசவத்தைத் தள்ளிப் போடலாம். ஆனால் அது தாய்க்கு நரக வேதனையாக இருக்கும். தாயின் உயிருக்கு ஆபத்து வந்தாலும் வரலாம்' என்றார்கள் வைத்தியர்கள். சிற்றரசர் செய்வதறியாமல் தவித்தார். அப்போது நிறைமாத கர்ப்பிணியான தாய் "என்மகன் பேரரசனாக விளங்குவான் என்றால் எந்த வேதனையையும் தாங்கிக் கொள்ளச் சித்தமாக இருக்கிறேன். என்னைத் தலைகீழாகக் கட்டித் தொங்கவிடுங்கள்" என்றாள்.

"அவ்வாறே செய்யப்பட்டது. ஒரு தாயும் அதுவரை அனுபவித்தறியாத நரக வேதனையை அனுபவித்தாள் தாய்.

நான்கு நாழிகைக்குப் பிறகு பிரசவம் ஆனது. தாயும் சேயும் பிழைத்தார்கள். நான்கு நாழிகை வரை தாய் தலைகீழாகத் தொங்கியதால் உள்ளே இருந்த குழந்தையின் கண்களில் ரத்தம் இறங்கி சிவந்து போனது. சிவந்த கண்களுடன் பிறந்த குழந்தைக்குச் செங்கணான் என்று பெயர் வைத்தார்கள்."

"மிகவும் அரிய விஷயம் அமைச்சர் பெருமானே! எனக்குப் பரவசமாக இருக்கிறது. இப்படியொரு தாயைப் பற்றி இது வரையில் நான் கேள்விப்பட்டதில்லை" என்றான் மங்கை வேந்தன்.

"அக்குழந்தை வளர்ந்து முடிவில் சோழப் பேரரசனாக விளங்கினான். சோழர்கள் ஆதியிலிருந்தே சிவநேசர்களாதலால் மன்னர் கோச்செங்கணார் காவிரிக்கரையில் எழுபது சிவாலயங்களை எழுப்பித்தார். காவிரியில் நீர் சிவமணத்தோடு ஓடியது."

"அத்தகையவர் இப்பெருமாள் கோயிலுக்கு எப்படிக் திருப்பணிகளைச் செய்தார்?"

"ஒருமுறை பகையரசர்களிடம் தோல்வியடைந்து மனமுடைந்திருந்தார். முனிவர்கள் அவரை இப்பெருமாளைத் தியானித்து மணிமுத்தா நதியில் மூழ்கி எழச் சொன்னார்கள். அவரும் அவ்வாறே தியானித்து நதியில் மூழ்கி எழுந்த போது இத்தலத்து எம்பெருமானான நறையூர் நம்பி காட்சியளித்து அவருக்குத் தெய்வவாள் ஒன்றை அளித்து விட்டுச் சென்றார். கோச்செங்கணார் அந்த வாளைக் கொண்டு பகையரசர்களை வென்று ராஜ்யத்தை மீட்டார்.*

இவ்வாறு சொல்லி சற்று நிறுத்திய அமைச்சர் "கோச்செங்கணானை இன்றைக்கும் நாடு போற்றுகிற தென்றால் அவர் பேரரசராக விளங்கியதால் அல்ல. பேரரசாக இருந்தாலும் காவிரிக் கரையில் எழுபது சிவாலயங்களைக் கட்டி திருவரசாக விளங்கியதால் தான். மனிதனை உயர்த்தவது பதவியல்ல. தொண்டு தான். இதை நீங்கள் புரிந்து கொள்ளுங்கள். இவ்வாலயத்து எம்பெருமானான நறையூர் நம்பி பெரும் வள்ளல் பிரசாதி. கோச் செங்கணானுக்கு தெய்வ வாள் வழங்கியவர். அவரைத் தியானியுங்கள். உங்கள் பிரச்சனை நிச்சயமாகத் தீரும்" என்றார்.

"அப்படியே ஆகட்டும் ஐயா"

---

* பக்கம் 353 'வைணவ திவ்விய தேசங்கள் 108'. பாகம் 1 By. தேவராஜன்.

அமைச்சர் அகன்றார். அடுத்த இரண்டு நாட்களுக்கு வரவில்லை.

மங்கை வேந்தனும் ஆலயச் சிறையில் நம்பியை நினைத்துத் தியானம் செய்தார். இரண்டு நாட்களுக்குச் செய்தார். ஊன் உணவு இன்றிச் செய்தார். மூன்றாம் நாள் இறைவன் கனவில் வந்தான்.

"வேகவதியாற்றங்கரைக்கு வா" என்றான்.

அமைச்சர் வந்ததும் சொன்னான் மங்கை வேந்தன்.

"வேகவதியாறு காஞ்சியில் இருக்கிறது. அங்கு வா என்று எம்பெருமான் கட்டளையிட்டால் அங்கே பிரச்சனைக்கான விடிவு இருக்கும். நீங்கள் எங்கள் வீரர்களுடன் உடனடியாகக் காஞ்சிக்குப் புறப்படுங்கள்" என்றார் அமைச்சர்.

"அமைச்சர் பெருமானே! ஆலி நாட்டில் இருக்கும் அமைச்சர்களில் ஒருவனான நீர்மேல் நடப்பானை மட்டும் என்னோடு அனுப்ப ஏற்பாடு செய்ய முடியுமா?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"வீரர்களை அனுப்பி ஏற்பாடு செய்கிறேன்" என்றார் அமைச்சர்.

அதையடுத்து அமைச்சர் நீர் மேல் நடப்பான் திருநறையூருக்கு வந்து சேர்ந்ததும் ஐம்பது வீரர்களோடு புரவிகளில் காஞ்சிக்குப் பயணப் பட்டான் மங்கை வேந்தன்.

ஒருவார காலத்தில் காஞ்சியை நெருங்கிய நிலையில் "மன்னவா! காஞ்சி மாநகர் தற்போது பல்லவ மன்னரது ஆட்சியில் இருக்கின்றது. போர்கள் சதாசர்வகாலமும் நடந்து கொண்டிருப்பதால் கெடுபிடிகள் நிரம்ப இருக்கும். இந்த நிலையில் நாம் புரவிகளில் சென்றால் புரவிகளைப் பறித்துக் கொண்டு விடுவார்கள். நம்மையும் ஒற்றர்களாகக் கருதி கைது செய்தாலும் செய்து விடுவார்கள். நம் காரியம் நிறைவேறாது. ஆகவே நமது புரவிகளைச் சீவரம் என்னும் கிராமத்தில் விட்டு வைக்கலாம். அங்கே எனக்குத் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் நம் புரவியைப் பாதுகாப்பதோடு காஞ்சிக்குச் செல்வதற்கான ஏற்பாடுகளையும் செய்வார்கள்" என்றான் அமைச்சர் நீர்மேல் நடப்பான்.

மங்கை வேந்தன் சம்மதித்தான்.

அனைவரும் சீவரம் கிராமத்திற்குச் சென்றார்கள்.

அங்கே சென்ற பிறகு தான் அக்கிராமத்தின் சிறப்பு புரிந்தது.

நீர்மேல் நடப்பானையும் மங்கை வேந்தனையும் வரவேற்று உபசரித்த கிராமத்து நண்பர்கள் "இந்த இடம் புனிதமானது. மேற்கேயிருந்து வரும் சேயாறு, பாலாறு மற்றும் வேகவதி ஆகிய மூன்று நதிகளும் இங்கே சங்கமமாவதால் இதற்கு முக்கூடல் என்று பெயர். இச்சங்கமத்திற்குப் பிறகு இது பாலாறு என்னும் ஒற்றை ஆறாகக் கிழக்கில் ஓடி கடலில் கலக்கிறது. எனவே இந்தத் திரிவேணி சங்கமத்தில் அனைவரும் நீராடுங்கள்" என்றார்கள்.

அனைவரும் களைப்பு த்தீர நீராடி உணவுண்ட பின் "இங்கிருந்தே வேகவதியாற்றின் கரையோரமாகப் போகலாம் அல்லவா?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"இவ்வளவு தூரம் வந்து விட்டு காஞ்சிக்குள் விஜயம் செய்யாமல் போவது சரியல்ல. கோட்டைக்குள் சென்று சொன்ன வண்ணம் செய்த பெருமாளைத் தரிசித்து விட்டு வேகதிக்குச் செல்லுங்கள்" என்றார்கள் நண்பர்கள்.

"கோட்டைப் பகுதியில் கெடுபிடிகள் இருக்குமே?" என்றான் நீர்மேல் நடப்பான்.

"உண்மை தான். நீங்கள் எல்லோரும் வைணவர்களாக வேடம் தரித்துக் கொள்ளுங்கள். காஞ்சிக்குத் தவயாத்திரை செல்வதாகக் கூறுங்கள். யாரும் தடை செய்ய மாட்டார்கள். ஏனென்றால் பல்லவ மன்னர் சிறந்த வைஷ்ணவ பக்தர்" என்றார்கள் நண்பர்கள்.

திருமணத்திற்கு முன்பாகவே தான் வைணவனாகி விட்டபடியால் தற்போது வைணவனாகவே காஞ்சிக்குள் நுழைவதற்கு மங்கை வேந்தன் தயங்கவில்லை. அவனும் மற்றவர்களும் அவ்வாறே வேடமிட்டுக் கொண்டார்கள். அனைவரையும் பாரவண்டிகளில் ஏற்றி அனுப்பினார்கள் நண்பர்கள்.

அதற்குப்பின் காஞ்சிக்குச் செல்லவோ அங்கே இருந்த சொன்ன வண்ணம் செய்த பெருமாள் ஆலயத்திற்குள் விஜயம் செய்யவோ எந்தத் தடையும் நேரவில்லை. சீவர நண்பர்கள் கூறியது போலவே அனைவரும் சென்றார்கள்.

மங்கை வேந்தனுக்கு மட்டும் ஒரு கேள்வி இருந்து கொண்டே இருந்தது.

தன்னை திருநறையூர் எம்பெருமான் வேகவதியாற்றங் கரைக்கு வரும்படிச் சொல்லியிருந்தாரே தவிர எங்கே என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லாததால் அவனுக்குள் குழப்பமாகவே இருந்தது.

சொன்னவண்ணம் செய்த பெருமாள் சயன கோலத்தில் பாம்பணையின் மீதிருந்த கோலத்தைத் தரிசித்தான் மங்கை வேந்தன்.

எம்பெருமானுக்குச் சொன்ன வண்ணம் செய்த பெருமாள் என்ற திருநாமம் வந்ததற்குக் காரணம் என்ன என்பதை விளக்கிய அர்ச்சகர் பெருமான் சயனித்திருந்த ஆதிசேஷனின் சிறப்பை விளக்க முற்பட்டு "இந்த ஆதிசேஷனானவன் எம்பெருமான் உலவும் போது குடையாக இருப்பான். அமரும் போது சிம்மாசனமாய் இருப்பான். நடக்கும் போது பாதுகையாக இருப்பான். கடலில் சயனிக்கும் போது படுக்கையாக இருப்பான். திரு இருக்கும் இடத்தில் விளங்கும் மணி விளக்காகவும் சிரசில் கட்டப்படும் பரிவட்டமாகவும் தழுவிக் கொள்வதற்கு அணையாகவும் இருப்பான். இதை உணர்ந்து தான் பொய்கையார்*-

"சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம்
நின்றால் மரவடியாம் நீள்கடலுள் - என்றும்
புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கும்
அணையாம் திருமாற்கு வரவு"**

என்று பாடியருளினார். அப்பொய்கையார் அவதரித்த பொய்கை வெளியே இருக்கிறது. அதையும் சேவித்து விட்டுச் செல்லுங்கள். காரியசித்தி உண்டாகும்" என்றார்.

பின்னாளில் தான் தலயாத்திரை மேற்கொண்டு இதே ஆலயத்திற்கு வந்து பொய்கையாரைப் போல எம்பெருமானை மங்களாசாசனம் செய்யப் போகிறோம் என்பதை அறியாத மங்கை வேந்தன் பெருமாளையும் பொய்கையையும் தரிசித்து விட்டு வைணவ கோஷ்டியாகவே சென்று கோட்டைக்கு வெளியே வந்து வேகவதியாற்றங்கரையை அடைந்தான்.

"மந்திரி! வேகவதி ஆறு கரைபுரண்டு ஓடுகிறது. இந்தக் கரையில் எந்த இடம் என்று நாம் கண்டுபிடிப்பது? குழப்பமாக இருக்கிறதே!" என்று வினவிய மங்கை வேந்தன் திருநறையூர் நம்பியை நினைத்துத் தியானித்தான்.

அவனுக்குள் ஒரு குரல் ஒலித்தது.

"ஆற்றுக்கு அப்பால் உள்ள ஓரிரவிருக்கை*** மண்டபத்திற்குச் செல்" என்றது குரல்.

---

* பொய்கையாழ்வார்.

** நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் பொய்கையாழ்வார் பாசுரம் முதல் திருவந்தாதி. பாசுரம் எண் 2134.

*** தற்போது ஓரிக்கை என்று வழங்கப்படுகிறது.

அமைச்சனைப் பார்த்த மங்கை வேந்தன் "நீர் மேல் நடப்பான்! ஆற்றுக்கு அக்கரையில் இருக்கும் மண்டபத்திற்குச் செல்லும் படி கட்டளை வந்திருக்கிறது. அது பெருமானின் கட்டளையாகவே இருக்க வேண்டும். நாம் அனைவரும் ஆற்றுக்கு அப்பால் போக முடியாது. நீர் மேல் நடக்கும் சக்தி கொண்ட நீ தான் போக வேண்டும். எம்பெருமான் திருநறையூர் நம்பியை நினைத்தபடி அக்கரைக்குச் சென்று மண்டபத்திற்குப் போய்ப் பார்" என்றான்.

தவவலிமை காரணமாகப் பல்வேறு சித்து சக்திகளைப் பெற்றிருந்த நீர் மேல் நடப்பான் சுழன்றோடும் வேகவதி ஆற்றின் நீரில் அனாயாசமாக நடந்து மறுகரைக்குச் சென்றார். கரையின் சமீபத்தில் இருந்த மண்டபத்திற்குச் சென்றார்.

மண்டபத்தில் ஒரு முதியவர் இருந்தார்.

அவரிடம் மண்வெட்டி ஒன்றும் கடப்பாரை ஒன்றும் இருந்தது.

"என்னால் முடியவில்லை. எனக்காக ஒரு குழியை ஆறடிக்கு வெட்டித் தருகிறாயா?" என்று கேட்டார் முதியவர்.

★★★



கண்ணன் என்னும் மன்னன்

நீர்மேல் நடப்பானுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"ஐயா! எதற்காக ஆறடிக் குழியை வெட்ட வேண்டும்?" என்று கேட்டான்.

"என்னைப் புதைப்பதற்குத் தான்."

"எதற்காகப் புதைக்க வேண்டும்?"

"இறந்து விட்டால் புதைக்கத் தானே வேண்டும்?"

"நீங்கள் இறக்கப் போகிறீர்களா?"

"ஆமாம்."

"எப்படிச் சொல்கிறீர்கள்?"

"எனக்குத் தெரியுமாதலால் சொல்கிறேன்."

"உங்களுக்கு உறவு என்று யாரும் இல்லையா?"

"எல்லோருமே உறவுதான். ஆனால் என்னைப் புதைக்க யாரும் வரமாட்டார்கள்."

"ஏன்?"

"வாலிபனே! இங்கே இதற்கு முன் வந்தவர்கள் இருவரும் இப்படித் தான் கேட்டார்கள். முடிவில் என்னைப் பைத்தியக் காரன் என்று சொல்லி விட்டுப் போய் விட்டார்கள். நீயும் அப்படித் தான் போகப் போகிறாயா?"

"இல்லை முதியவரே. நீங்கள் கேட்ட உதவியை நான் செய்கிறேன். கடப்பாரையையும் மண்வெட்டியையும் கொடுங்கள்" என்று கூறி அவற்றை வாங்கிக் குழியை வெட்டத் தொடங்கினான் நீர்மேல் நடப்பான்.

ஆறடி நீளமும் ஐந்தடி ஆழமும் வெட்டிய போது கடப்பாரை யிலிருந்து வினோதமான சப்தம் வரவே கடப்பாரையை லகுவாக வைத்து குத்திய போது குடம் ஒன்று தென்பட்டது. அதை அசைத்து அசைத்து எடுத்தான். அதனுக்குள் தங்கக் காசுகள்

இருந்தன. அடுத்தடுத்து அதே போன்ற குடங்கள் இருப்பதைக் கண்டு பிரமித்துப் போன அவன் ஒரு குடத்தைத் தலையில் வைத்துக் கொண்டு மூச்சைப் பிடித்துக் கொண்டு எம்பினான். குழிக்கு மேலே வந்து "முதியவரே! முதியவரே!" என்றான்.

முதியவரைக் காணவில்லை. மண்டபம் காலியாக இருந்தது.

சுற்றும் முற்றும் பார்த்தான்.

அவர் இல்லை என்பது தெரிந்ததும் பொற்காசுகள் நிறைந்த தங்கக் குடத்தைத் தலைமீது வைத்துக் கொண்டு ஆற்றின் மீது நடந்து கரைக்கு வந்தார்.

மங்கை வேந்தன் முன்பு குடத்தை வைத்து விட்டு மீண்டும் ஆற்றைக் கடந்து குழிக்குச் சென்றார். மொத்தம் பதிமூன்று குடங்கள் இருந்தன. அனைத்தையும் கொண்டு வந்து சேர்ந்த நீர்மேல் நடப்பான் முதியவரைப் பற்றிச் சொன்னார்.

"அந்த முதியவர் வேறு யாருமல்ல. சாட்சாத் திருநறையூர் நம்பியே தான். இங்கே இருக்கும் இப்புதையலைப் பெறுவதற்காகத் தான் என்னை அனுப்பினார். இங்கே முதியவராக வந்து இடத்தையும் காட்டினார். நமது பிரச்சனை தீர்ந்தது. புறப்படுவோம்" என்றான் மங்கை வேந்தன்.

அங்கிருந்த பொற்குடங்களை மூட்டையாகக் கட்டி தலையில் சுமந்த படி ஆற்றங்கரை யோசமாகவே சென்று சீவரம் கிராமத்தை அடைந்தார்கள்.

அதுவரை மங்கை வேந்தன் யார் என்பதை கிராம நண்பர்களுக்குச் சொல்லாதிருந்த நீர் மேல் நடப்பான் தற்போது அவரை இன்னான் என்று சொல்லி காஞ்சிக்கு வந்த காரணத்தையும் கூறிய போது அவர்கள் வியந்ததோடு மன்னனை வணங்கினார்கள். தங்கக் குடங்கள் வெளியே தெரியாதவாறு மூட்டைகளாகக் கட்டி ஒவ்வொரு மூட்டையையும் ஒவ்வொரு புரவியின் மீது தொங்கவிட்டு அவர்களுக்கு விடை கொடுத்தார்கள் நண்பர்கள். அவர்களது உதவிக்காகவும் வழிகாட்டுதலுக்காகவும் பொற்காசுகளைத் தர மங்கை வேந்தன் உதவ விரும்பிய போது அவர்கள் மறுத்து விட்டார்கள்.

"உங்களுக்கு உதவ முடிந்தது என்பாக்கியம் மன்னவா. வழியில் ஆபத்துகள் எதுவும் நேராமல் இருக்கச் சொன்ன வண்ணம் செய்த பெருமாளைப் பிரார்த்தித்துக் கொள்கிறோம்" என்றார்கள் நண்பர்கள்.

மங்கை வேந்தன் வீரன் ஒருவனை உறையூருக்கு அனுப்பி அமைச்சருக்குச் செய்தியைத் தெரிவிக்கும் படி

கூறியிருந்தானதலால் அவன் உறையூருக்குச் சென்ற போது சோழமன்னனும் அமைச்சரும் அவனை வரவேற்றார்கள்.

தான் செலுத்த வேண்டிய கப்பத்திற்கு ஈடான பொன் நாணயங்களை மன்னனிடம் வைத்தான் மங்கை வேந்தன்.

சோழ மன்னனோ அதைத் தொடவில்லை.

"நீலா! எங்களுக்குப் பெருமை இருக்கிறது. பொருள் இருக்கிறது. பாரம்பரியம் இருக்கிறது. படைகளும் இருக்கின்றன. எல்லாம் இருக்கிறது ஒன்றைத் தவிர. அது தான் இறைவன் அருள். அது உன்னிடம் பூரணமாக இருக்கிறது. அது தெரியாமல் உன்னை நான் நோகடித்து விட்டேன். உன்னைக் கைது செய்து அவமானப்படுத்தி விட்டேன். என்னை மன்னித்து விடு. உன் கப்பத் தொகை எனக்கு வேண்டாம். இனி நீ சுதந்திர மன்னன். எனது மேலாதிக்கம் எப்போதும் உனக்குக் கிடையாது. ஆலிநாடு உனது ஆசைத் தொட்டில். இனி அதை நான் ஆட்ட மாட்டேன். நீயே ஆட்டி மகிழ்வாயாக. வஞ்சகமாய் உன்னை வரவழைத்த நான் தற்போது நெஞ்சகம் பூரிக்க தகுந்த மரியாதைகளுடன் அனுப்பி வைக்கிறேன்" என்றான்.

"மன்னவா! எல்லாப் பாராட்டும் அமைச்சர் பெருமானுக்கே சேரும். அவர் வழி காட்டியபடி நடந்து கொண்டதால் தான் எம்பெருமானின் அருள் கிட்டியது" என்றான் மங்கை வேந்தன்.

"உண்மை தான் நீலா. அமைச்சர்கள் அறிவார்ந்தவர்கள். அவர்களின் பண்பே வழிகாட்டுவது தான். அவரது வழிகாட்டுதலை ஏற்காமல் அவருக்கு நான் தவறாக வழிகாட்டி விட்டதால் தான் நடக்கக் கூடாதது நடந்து விட்டது" என்றான் சோழமன்னன்.

மங்கை வேந்தனுக்குத் திருப்தியாக இருந்தது.

அமைச்சர் அழும்பில்வேளின் விருப்பப்படி அவரது இல்லத்தில் விருந்துண்டான்.

அவரிடமிருந்து விடைபெற்ற போது "மன்னவா செங்கணானைப் பற்றி நான் கூறியதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அதோடு திருவரங்கத்திற்கு ஒருமுறை சென்று அரங்கனை திவ்யமாகச் சேவித்து விட்டு வாருங்கள்"என்றார் அமைச்சர்.

★

"இப்போது சந்தோஷம் தானே குமுதவல்லி? எல்லாம் சுமூகமாக முடிந்தது மட்டுமல்ல. இனி பல ஆண்டுகளுக்கு

அன்னதான கைங்கர்யம் செய்யும் அளவிற்கு எம்பெருமான் செல்வத்தை அளித்து விட்டான். சோழ மன்னரும் கப்பம் கட்டு என்று என்னைக் கேட்க மாட்டார். என் கூடவே இருந்து துரோகமிழைத்த சேனாதிபதி உதயணனும் அகன்றான். இனி ஆலி நாட்டில் போருக்கு இடமில்லை. கௌரவப் பிரச்சனைக்கு இடமில்லை. அன்புக்கும் அமைதிக்கும் மட்டுமே இடம். இவ்விரண்டையும் தர நானிருக்கிறேன். எனக்கு நீ என்ன தரப் போகிறாய்?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

குமுதவல்லிக்குக் காற்றில் பறப்பது போல் இருந்தது. நடப்பது கனவா நனவா என்று குழப்பமாக இருந்தது.

"சுவாமி! பெருமான் சற்று சோதித்தானே தவிர எல்லாம் அற்றுப் போய் விடச் செய்து விடவில்லை. அவன் கருணையே கருணை" என்றாள் குமுதவல்லி தேன் சொட்டும் குரலில்.

"அவன் கருணை எங்கும் இருக்கிறது. என்றும் இருக்கிறது. நாம் தான் கவனிப்பதில்லை" என்று சொன்ன மங்கை வேந்தன் "என் கேள்விக்கென்ன பதில்? அதைச் சொல்ல வில்லையே?" என்றான்.

"தருவதற்கு என்ன இருக்கிறது எல்லாவற்றையும் தந்து விட்டபின்?" என்றாள் குமுதவல்லி. சொர்க்கத்தில் இருப்பது போல் இருந்தது அவளுக்கு. கனவில் பேசுவது போல் இருந்தது அவளுக்கு.

"குமுதா! நான் கேட்டதை நீ இன்னமும் புரிந்து கொள்ளவில்லை. நாம் இருவர். நமக்கொருவர் வேண்டாமா?" என்று கேட்டான் மங்கை வேந்தன் அவளது மடியில் படுத்தபடி. என்றுமில்லாத திருப்தியைத் தந்திருந்தது அவளது மடி.

என்றுமில்லாத விசேஷமாக மணாளன் தன் மடியில் தலை வைத்திருந்தபடியால் தன்னை இழந்திருந்த குமுதவல்லி "நமக்கேன் ஒருவர் சுவாமி?" என்று கேட்டாள். கேட்டாளே தவிர தான் என்ன கேட்டோம் என்ற உணர்வே அவளிடம் இல்லை.

"குமுதவல்லி! நீ நன்றாகப் பாடுவாய் அல்லவா? அந்தக் கண்ணனைப் பற்றிப் பாடுகிறாயா? என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"பாடும் சுவாமி" என்று சொல்லிவிட்டுப் பாடலானாள் அவள்.

ஆயர்பாடி மாளிகையில் தாய்மடியில் கன்றினைப் போல்
மாயக் கண்ணன் தூங்குகின்றான் தாலேலோ! - அவன்
வாய் நிறைய மண்ணை உண்டு மண்டலத்தைக் காட்டியபின்
ஓய்வெடுத்துத் தூங்குகின்றான் ஆராரோ! - ஆயர்பாடி

பின்னலிட்ட கோபியரின் கன்னத்திலே கன்னமிட்டு
மன்னவன்போல் லீலை செய்தான் தாலேலோ - அந்த
மந்திரத்தில் அவன் உறங்க மயக்கத்திலே இவன் உறங்க
மண்டலமே உறங்குதம்மா ஆராரோ! - ஆயர்பாடி

நாகப்படம் மீதில் அவன் நர்த்தனங்கள் ஆடியதில்
தாபமெல்லாம் தீர்த்துக் கொண்டான் தாலேலோ - அவன்
மோகநிலை கூட ஒருயோகநிலை போலிருக்கும்
யாரவனைத் தூங்க விட்டார் ஆராரோ! - ஆயர்பாடி

கண்ணனவன் தூங்கி விட்டால் காசினியே தூங்கிவிடும்
அன்னையரே துயிலெழுப்ப வாரீரோ - அவன்
பொன்னழகைக் காண்பதற்கும் போதை முத்தம் பெறுவதற்கும்
கன்னியரே கோபியரே வாரீரோ!* - ஆயர்பாடி

பாடியது தாலாட்டாக இருந்ததால் மங்கை வேந்தனின் கண்கள் மூடியது நித்திரையால். அவனைக் கண்ணனாகவே நினைத்தாள் குமுதவல்லி. தற்போது அவன் கண்ணன் என்னும் மன்னனைப் போல் உறங்குவதாகவே கருதினாள். அவனது முரட்டுக் கேசத்தை வருடினாள். தன் கண்களை மூட விடாமல் அவனைக் காத்தாள்.

★

நெல்வேலி** நகரம் இதே நேரத்தில் நறும்புனலில் தீப் பற்றியது போலச் சீறிக் கொண்டிருந்தது.

சீறிக் கொண்டிருந்தவன் நெல்வேலியின் மன்னன் உதயணன்.

வேடர்குலத்துத் தலைவனும் மகாவீரனுமான உதயணன் தன்னைச் சுற்றியிருந்தவர்களை யெல்லாம் தீப் பொசுக்குவது போல் வார்த்தைகளால் பொசுக்கிக் கொண்டிருந்தான்.

பொசுங்கிக் கொண்டிருந்தார்கள் பேசாமலிருந்தார்கள்.

உதயணனின் இந்த நெருப்புக் கோபத்திற்கு தாங்கள் எந்த விதத்திலும் காரணமில்லை என்பதை நன்கு அறிந்திருந்தாலும் காட்டுத்தீயைப் போலக் கோபப்பட்டு இரையும் அவன்முன்பு

---

* பாடலாசிரியருக்கு நன்றி.

** தற்போது புதுக்கோட்டைக்கு அருகே இருக்கும் நென்மேலி.

பேசுவதால் பயனேதும் இல்லை என்பதாலும் மௌனமாகவே இருந்தார்கள்.

சிங்கம் சீறும் இரை தேவைப்படும் போது, இரை கிடைக்க வில்லை என்று தெரியும் போது தான், தான் சீறியது அர்த்தமற்றது என்பது புரியும்.

அந்த நிலைக்கு வந்த வேடர்குலத் தலைவனான உதயணன் "ஏன், யாரும் பேசமாட்டீர்களா? என்று சற்றுத் தணிந்த குரலில் கேட்டான் சுற்றி அமர்ந்திருந்தவர்களைப் பார்த்து.

"நீங்கள் பேசி ஓயட்டும் என்று தான் மௌனமாக இருந்தோம்" என்றார்கள் சுற்றியிருந்தவர்களில் பிரதானமாக இருந்த மன்மதன்.

"நான் ஓய்ந்து விட்டால் - அதாவது சாய்ந்து விட்டால் - அதாவது மாய்ந்து விட்டால் பேசுவதற்கு உங்களுக்கு என்ன இருக்கும்? ஒருவேளை ஒப்பாரி பாடுவீர்களா?" என்று இடக்காகக் கேட்டான் உதயணன்.

"நாங்கள் ஒன்று சொன்னால் நீங்கள் ஒன்பது வார்த்தை களைச் சேர்த்துக் கொள்கிறீர்கள். உங்கள் கோபமும் அர்த்தமற்றது. பேச்சும் தேவையற்றது" என்றான் விராடன் உறுதியான குரலில்.

"அப்படியானால் இதுநாள் வரை நான் அர்த்தமற்ற விஷயங்களையும் தேவையற்ற காரியங்களையும் தான் செய்து கொண்டிருந்தேன் என்கிறீர்களா?" என்று சீறினான் உதயணன்.

"சமீப காலமாக அப்படித்தான்."

"விராடா! நீ பேசுவது என்னிடம் என்பதை மறந்து விட்டு எதனிடமோ பேசுவது போல் பேசாதே. வாளை வீச வேண்டி வந்தால் வேலைக்காரனும் ஒன்றுதான். விராடனும் ஒன்றுதான். நினைவிருக்கட்டும்."

"உங்கள் வாளையும் வேலையும் எங்கெங்கே எப்படியெப்படி பயன்படுத்த வேண்டுமோ அப்படிப் பயன்படுத்துங்கள். என்னை மிரட்டி ஒன்றும் ஆகி விடாது. நீங்கள் வேடர் குலத்துத் தலைவரே தவிர வேடதாரியல்ல. வேடம் பூண்டு ஏமாற்று வேலைகளில் ஈடுபடும் குள்ளநரியுமல்ல. வேடராக இருப்பவர் வேட்டையாட வேண்டும். நீங்களும் கட்டைப் படகில் அமர்ந்து கொண்டு ஓட்டை போட்டுக் கொண்டிருந்தீர்கள். படகு கவிழ்ந்து விட்டது."

"என்ன சொல்ல வருகிறாய் நீ?"

"வேட்டர் குலத்தில் உங்களைப் போன்ற வீரர் இல்லை என்ற பெருமை உங்களுக்கு உண்டு. அதன் காரணமாகவே நீலர் உங்களைத் தன் படையில் சேர்த்துக் கொண்டு பின் உபசேனாதிபதியாக்கினார். மங்கை வேந்தரானதும் உங்களைச் சேனாதியாக்கினார். கிருஷ்ணருக்குக் கிடைத்த தனஞ்செயனைப் போல நடந்து கொள்ள வேண்டிய நீங்கள் சகுனியாக மாறி உங்களை உயர்த்திய மங்கை வேந்தரையே கவிழ்க்கப் பார்த்தீர்கள். இது துரோகமல்லவா? உங்களுக்கு இது தேவையா? மகாபாரதத்துக்குச் சகுனி கடைசியில் தோற்றுப் போய் போரில் வீழ்ந்து போனான். நீங்கள் மட்டும் எப்படிச் சதியிலும் சூழ்ச்சியிலும் ஈடுபட முடியும்? மங்கை வேந்தர் மட்டுமின்றி சோழ மன்னருக்கும் நீங்கள் வேண்டாதவராகி விட்டீர்கள். இருவருமாக வலையை வீசினால் உங்கள் கதி என்னாகும் என்பது குறித்து யோசித்தீர்கள். பூனை புலியானால் மகிழலாம். புலி பூனையானால் மகிழ முடியுமா? பூனையைப் போலாகி விட்ட நீங்கள் காட்டரசனைப் போலக் காட்டுச் சத்தம போடுகிறீர்கள்."

மன்மதன் உண்மையை உறைக்கும் படி உரைத்ததால் அமைதியாக இருந்த உதயணன் "உங்களையெல்லாம் நாளைக்குச் சந்திக்கிறேன்" என்று கூறிவிட்டு சயன அறைக்குச் சென்று பஞ்சணையில் படுத்தான்.

முட்டாள் தனமாக நடந்து விட்டோமா என்று எண்ணிக் குமைந்ததால் வியர்த்தது.

அப்போது பேய்ப்பறவை ஒன்று பெரிதாக கீறிச்சிட்டது.

அதையடுத்து ஜல்ஜல் என்ற ஓசை மெல்ல எழுந்தது. அவனை நோக்கி வரவும் செய்தது.

★★★



நெல்வேலி அரசன்

கதவு திறந்தே இருந்ததால் தன்னை நோக்கி ஜல்ஜல் என்ற சலங்கை ஒலியோடு வந்த உருவத்தைப் பார்த்து "நீயா?" என்று கேட்டான் உதயணன்.

"நான் தான். தேவதேவியே தான்" என்றாள் வந்தவள்.

அறைக்குள்ளே தீபங்கள் நிறைய எரிந்து கொண்டிருந்ததால் அதற்குள் நுழைந்தபோது தீபமகளைப் போல் தோன்றினாள் தேவதேவி. பேரழகிற்குச் சொந்தக் காரியாக இருந்ததால் அந்த அறை அலங்கரிக்கப் பட்டது போல் இருந்தது.

"அறைக் கதவைச் சாத்தி விடவா?" என்று மெல்லக் கேட்டாள் தேவதேவி.

"அவரவர்களும் என்னைச் சாத்து சாத்து என்று சாத்தி விட்டார்கள். நீ கதவைச் சாத்துகிறாயா? சாத்து" என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்டாளே தவிர அவன் அதை வெளியில் சொல்லவில்லை.

அவள் கதவைச் சாத்தித் தாழிட்டு விட்டு அவனை நோக்கி வந்தாள்.

அவள் அசைந்த விதமும் அங்கங்களை அசைத்த விதமும் அவனை ஈர்க்கக் கூடியதாக இருந்தாலும் அவமானம் என்னும் ஈரம் உலராமல் உள்ளுக்குள் ஊறியிருந்ததால் கட்டிலில் அமர்ந்து கொண்டானே தவிர கட்டுப்பாடுகளை உதறி விடவில்லை.

அவள் அழகுத் தேர் போல் வந்து ஆசனத்தில் அமர்ந்து பார்வை என்னும் அம்பை கண்ணெனும் வில்லில் அவன் மீது தொடுத்த போது அவன் அந்த அம்பை முறித்து எரிந்து விட்டு "நீ எதற்காக வந்தாய்? எப்படி வந்தாய்?" என்று கேட்டான்.

"எனக்கு வியப்பாக இருக்கிறது அரசர் பெருமானே! ஆழி சூழ் உலகமெல்லாம் அழகி என்று என்னை ஆராதித்து கடலலைகளைப் போலக் கால்களைத் தழுவும் போது ஆழி நாட்டு வேந்தரும் வேடர் குலத் தலைவருமான நீங்கள்

இருவர் மட்டும் அசையாமல் இருக்கிறீர்களே! எப்படி? என் அழகிற்கு அவமானமாக இருக்கிறது" என்று விரிந்த விழிகளோடு சொற்களை முத்துகளைப் போலக் கொட்டினாள் தேவதேவி.

"நீ சொன்ன இருவருமே ரசிகர்கள் தான். அழகை ஆராதிப்பவர்கள் தான். அழகிற்காகத் தங்களை இழக்கக் கூடியவர்கள் தான். ஆனால் எதை ரசிப்பதற்கும் மனம் தயாராக இருக்க வேண்டும். மனத்தில் குறை இருக்கும் போதும் காயமிருக்கும் போது யாரும் ரசனையில் இறங்குவதில்லை" என்றான் உதயணன் நிர்ச்சலனமாக.

"உண்மைதான் ஐயா. உங்களுக்கு நேர்ந்ததையெல்லாம் கேள்விப்பட்டேன்.காயங்களை உள்ளும்புறமும்ஆற்றுவதற்காகத் தான் வந்தேன்" என்றாள் தேவதேவி தேமதுரமான குரலில்.

"எதைச் சொல்லித் தேற்றப் போகிறாய்? காயங்களை ஆற்றப் போகிறாய்? என் மனம் தேற்ற முடியாத சோகச் சேறாகிக் கிடக்கிறது. இதில் நீ கைவைத்தால் உன் கையும் சேறாகி விடும். உனக்கிங்கே வேலையில்லை என்பதை உணர்ந்து வந்த வழியே போய்விடு" என்றான் உதயணன் உணர்ச்சி வசப்பட்ட விரும்பாமல்.

"அரசர் பெருமானே! நான் ஒரு கேள்வி கேட்கலாமா? கோபப் பட மாட்டீர்களே?"

"என்னிடமிருந்த கோபமும் தாபமும் வற்றி விட்டன. இருப்பது சோகம் மட்டும் தான். அதை நீ கிளறுகிறாய்."

"வேடர் குலத் தோன்றலே! நல்லவர்கள் நல்ல காரியத்தில் இறங்கி அதில் வெற்றி பெறாவிட்டால் வேதனைப் படுவார்கள். அதில் நியாயம் இருக்கிறது. ஆனால் நல்ல எண்ணம் எதுவும் இல்லாமல் நல்லவனைப் போல் நடித்து கெட்ட காரியங்களில் இறங்கி அதில் வெற்றி பெறாமல் போனால் வேதனை எப்படி வரும்? கெட்ட காரியங்கள் தோற்கத் தானே செய்யும்?" என்று கேட்டாள் தென்றலால் தீண்டுவது போல்.

"தேவதேவி! நல்லவர்கள் நல்ல காரியத்தை இயல்பாகச் செய்கிறார்கள். அது அவர்களது குணம். அதில் அவர்கள் எதிர்பார்ப்பது பிறரது நலன். கெட்டவர்கள் அப்படியல்ல. இயல்புக்கு மாறாகச் செய்கிறார்கள். குணத்திற்கு மாறாகச் செய்கிறார்கள். தங்கள் லாபத்திற்காகச் செய்கிறார்கள். மிகுந்த எதிர்பார்ப்புகளுடன் செயல்படுகிறார்கள்.தோல்வி வரும் போது வேதனை அதிகமாக வரும். அது நியாயமானது தான்."

"உங்கள் இயல்பு என்ன? நீங்கள் நல்லவரா? கெட்டவரா?" அழுதத்தை அளிப்பது போல் கேட்டாள் தேவதேவி.

"கெட்டவனாக யார் பிறக்கிறார்கள்? சொல்லப் போனால் பிறக்கும் போது யாருக்குமே குணம் என்று ஒன்று இருப்பதே இல்லை.அது பின்னால் தான் வருகிறது.பல்வேறு காரணங்களால் வருகிறது. தெரிந்தும் வருகிறது. தெரியாமலும் வருகிறது.

"இவ்வளவு தெளிவாகப் பேசும் நீங்கள் எப்படிக் கெட்டவரானீர்கள்?" என்று பன்னீரைத் தெளிப்பது போல் கேட்டாள் தேவதேவி.

"சிலர் உயரும் போது பொறாமை வருகிறது. அந்த உயர்வை நேர்வழியில் அடைய நீண்ட காலம் ஆகும் என்று புரியும் போது ஏக்கம் வருகிறது. அப்போது தான் குணம் மாறும். நல்லவர்கள் கெட்டவர்களாகிறார்கள். வழிகளும் மாறுகின்றன.:

"உங்கள் ஏக்கம் தான் என்ன?"

"உன்னை உதவிக்கு அழைத்த போதே அதை நீ புரிந்து கொண்டிருக்க வேண்டும். புரிந்து கொள்ள வில்லை என்றால் இனி எப்போதுமே புரிந்து கொள்ள முடியாது."

"புரிந்து கொண்டு தான் கேட்கிறேன். காலம் காலத்திற்கும் இது போன்ற ஏக்கங்களும் பொறாமைகளும் வந்து கொண்டிருக்கும். வெற்றிகள் வருமா?"

"முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படுவது நம்பிக்கையினால் தான். நான் முடவனுமல்ல. மூடனும் அல்ல. எனக்கு அபார நம்பிக்கை இருக்கிறது."

"உங்களுக்கு நான் தொடர்ந்து உதவக் காத்திருக்கிறேன்."

"வேண்டாம்."

அவள் ஆசனத்தை விட்டு எழுந்து கட்டிலில் போய் அமர்ந்து அவனது தோளின் மீது மலர் மாலையைப் போன்ற கையைப் போட்டு "ஏன்?" என்று மதுரமான குரலில் கேட்டாள்.

"நீ சென்று முதலில் ஆசனத்தில் உட்கார். கட்டிலுக்கு வரும் காலம் வரும் போது நீ காட்டில் இருந்தாலும் கட்டித் தூக்கிக் கொண்டு வருவேன்" என்று சொல்லி அவளது கைகளை விலக்கினான் உதயணன்.

அந்தச் செய்கை அவளுக்குப் பிடித்தமாக இருந்தது. விலகி இருக்க விரும்பும் ஆடவன் தான் வேளைவரும் போது விருந்தாக வருவான் என்று கருதிய அவள் ஆசனத்தில் அமர்ந்து கொண்டு

"என் மீது உங்களுக்கு நம்பிக்கையில்லையா? உங்களுக்கு உதவ எனக்குத் தகுதியில்லையா?" என்று கேட்டாள்.

"தேவதேவி! நான் விடுக்கும் அம்பு நான் விரும்பும் இலக்கை நோக்கித் தான் போகவேண்டும். வழி மாறிப் போய் விடக் கூடாது. என் அம்புகளுக்கு வேறு வழிகள் இருக்கக் கூடாது. வேறு இலக்குகள் இருக்கக் கூடாது" என்றான் உதயணன்.

அவன் எதைக் குறிப்பிடுகிறான் என்பது அவளுக்குப் புரிந்தது.

மங்கை வேந்தனை மயக்கச் சென்று தோற்ற போது வழி மாறிப் போய் கூட்டத்தைக் கூட்டி மங்கை வேந்தனின் மீது புகார் கொடுத்ததையும் அது தோலா வழக்காகிப் பயனற்றுப் போனதையுமே உதயணன் குறிப்பிடுகிறான் என்பதை உணர்ந்து கொண்ட அவள் "இனி அவ்வாறு நடக்காது. உங்கள் அம்புகள் உங்கள் வழியிலேயே செல்லும். தங்கள் வழி என்று தடம் மாறாது" என்றாள்.

"நான் மங்கை வேந்தனுக்குத் துரோகம் செய்தவன் தான். அதற்காக எனக்குத் துரோகம் செய்பவர்களை நான் மன்னிக்க மாட்டேன். குரூரமாகத் தண்டிப்பேன்."

"அந்தத் தண்டனை ஒன்று தான் உங்களுக்குத் தெரியுமா?" என்று போதை விழிகளால் பாதை மாறிக் கேட்டாள் தேவதேவி.

"தெரியும்."

"என்ன தெரியும்?"

"நீ கேட்டது தெரியும்."

"நான் என்ன கேட்டேன்."

"தேவதேவி! நான் காமாந்தகன் அல்ல. காமத்திற்கு எதிரியுமல்ல. உன்னிடம் இருக்கும் காம ஊற்றுகளை உணர்ந்து தான் மங்கை வேந்தனிடம் அனுப்பினேன். நீ தோற்றுப் போனது ஒரு விதத்தில் நல்லது தான்."

"எப்படி?"

"தோற்காமல் போயிருந்தால் உன் விலாசம் மாறியிருக்கும். காமமும் வேறிடத்திற்குப் போயிருக்கும். தற்போது அந்த விலாசம் என்னிடமே இருக்கிறது."

"பிறகென்ன அரசரே! அள்ளிக் கொள்ள வேண்டியது தானே?"

"நீ ஏன் வேறு மாதிரி சிந்திக்க மறுக்கிறாய்?"

"நீங்கள் கூறுவது விளங்கவில்லை."

"நீ மயக்கும் மாதுவாகத் தான் காலத்தை ஓட்ட வேண்டுமா? உன் அழகும் அங்கங்களும் அப்படித் தான் பிழைப்பைக் கழிக்க வேண்டுமா? நீ கௌரவமான வாழ்க்கையைப் பற்றி ஏன் எண்ணவில்லை? அதை விட்டுத் தூரத்தில் எதற்காக இருக்கிறாய்?"

"அரசர் பெருமானே! எனக்கு அழகு கூடிய போது மயக்கும் ஆசை தான் வந்ததே தவிர வியக்கக் கூடிய எண்ணங்கள் வரவில்லை. ஆகவே தான் நீங்கள் உதவிக்கு அழைத்த போது மனம் விரும்பி வந்தேன். மங்கை வேந்தரை மயக்கவும் சென்றேன். அவரோ குமுத மலர்களை விரும்பவில்லை. குமுதவல்லியை மட்டுமே விரும்பினார். ஆத்திரமடைந்து அவரை அவமானப் படுத்த முயன்று தோற்றேன். அது எனக்கு பெரிய அவமானமாகிப் போயிற்று. அசதிக்கு ஆளானேன். நான் மயக்கும் பாவையாகத் தான் பயன்படுவேன் என்று நினைத்தேனே தவிர வேறு மாதிரி எண்ணவில்லை."

"எண்ண வேண்டும் தேவதேவி. எண்ண வேண்டும். மயக்கும் எண்ணம் மாறக் கூடாதது அல்ல. மயக்கும் காரியம் தோற்று விட்டால் மயக்க காரியத்தையே தொடர வேண்டும் என்பது கட்டாயமல்ல. மாறலாம். நீ என்னைத் தேடி இங்கு வந்தது நல்லது தான். மாற்றத்தை நான் தருகிறேன். உன்னை நான் மணக்கிறேன். என் ராஜ்யத்தின் ராணியாக ஆக்குகிறேன். அது உனக்குப் பிடிக்குமல்லவா?"

"தாங்கள் உண்மையாகவா சொல்கிறீர்கள்?"

"உன்னை இங்கேயே அனுபவித்துத் துப்பிவிட என்னால் முடியாதா?"

"மன்னவா! தாங்கள் கூறும் பாக்கியத்திற்குத் தேவதேவி தகுதியற்றவள்."

"இல்லை. பெயருக்கேற்ப நீ தேவதேவியாக இரு."

"என்னைத் தங்களோடு இருப்பவர்கள் ஏற்பார்களா?"

"உன்னை இங்கே அனுப்பியவன் மன்மதன் தானே?"

"அது உங்களுக்குத் தெரியுமா?"

"என் மீது மிகுந்த அக்கறை கொண்டவன் மன்மதன். என் தவறுகளைக் கன்னத்தில் அடிப்பது போல் சுட்டிக் காட்டுபவன் அவன். கன்னத்தில் காயம் விழுந்து விட்டால் மருந்திடுபவனும் அவன் தான். உன்னை மருந்தாக அனுப்பியிருக்கிறான். எனது முடிவைச் சொன்னால் ஏற்றுக் கொண்டு ஏற்பாடுகளைச்

செய்வான். நமது திருமணம் விரைவில் நடக்கும். போய்க் கதவைத் திற”

சிலை போல் நகர்ந்து கதவுகளைத் திறந்தாள் தேவதேவி.

வேடர்கள் எழுப்பும் கீட்டியொலியை எழுப்பினான் உதயணன்.

பணிப்பெண்கள் வந்து பணிந்தார்கள்.

“இவள் நமது நாட்டின் ராணியாகப் போகிறவள். அந்தப் புரத்திற்கு அழைத்துச் சென்று பணிவிடை செய்யுங்கள்” என்றான் உதயணன்.

விண்ணுலகத்திற்குப் பறப்பது போல் நடந்தாள் தேவதேவி.

★

மங்கை வேந்தன் நிம்மதியாகவும் அமைதியாகவும் ஆட்சியை நடத்தி அன்னதானத்தையும் நடத்திக் கொண்டிருந்த நிலையில் “சுவாமி! சோழ நாட்டு அமைச்சர் அழும்பில்வேள் தங்களைத் திருவரங்கத்திற்குச் சென்று எம்பெருமானை தரிசனம் செய்யும்படிக் கூறியதை மறந்து விட்டீர்களா? அந்தப் பூலோக வைகுண்டத்திற்கு எப்போது போகப் போகிறீர்கள்?” என்று கேட்டாள் குமுதவல்லி.

“உண்மை தான் குமுதா. அமைச்சர் எது சொன்னாலும் அதற்குப் பொருள் இருக்கும். பயனற்ற விஷயங்களை அவர் சொல்ல மாட்டார். நாம் நல்ல நிலையில் இருக்கும் போது திருவரங்கத்தம்மானைக் கண்குளிரக் கண்டு தரிசனம் செய்ய வேண்டும். அங்கே நான் மட்டும் செல்வது சரியில்லை. தம்பதி சமேதராய் செல்வதே உகந்தது. இருவருமாக அடுத்த வாரம் புறப்படுவோம்” என்றான் மங்கை வேந்தன்.

புறப்பட்டுத் திருவரங்கத்தை அடையவும் செய்தான்.

திருவரங்கமானது தற்போது இருப்பது போன்ற பிரம்மாண்டத்தில் இக்கதை நடந்த காலத்தில் இல்லை. ஆனால் அரங்கன் என்னவோ ஊழிக் காலத்திலிருந்தே பூலோக வைகுந்தனாகத் தான் இருந்தான். அனைவரையும் தன்னை நோக்கி ஈர்த்துக் கொண்டிருநத்தான். இலங்கை வேந்தனின் தம்பி விபீஷணனால் கொண்டு வரப்பட்ட காலத்திலிருந்து தனது இருப்பிடத்தை பரம்பொருளின் அரங்கமாக்கிக் கொண்ட அரங்கன் அனைவருக்கும் அருள்பாலித்துக் கொண்டிருந்ததைக் கண்டு வந்த காவிரி தன்னை இரண்டாகப் பிரித்துக் கொண்டு

அவனுக்கு ஆரம் சூட்டுவது போல் ஓடிய விதமானது எம்பெருமானின் திருவிளையாடல் என்றே எண்ண வைத்தது.

பதினொருவரால் மங்களாசாசனம் செய்யப் பட்ட திருத்தலமாக பின்னாளில் பெருமை பெற்ற திருவரங்கம் கதை நடந்த காலத்தில் மூன்று மதிள்களை மட்டுமே கொண்டதாக இருந்தது. இன்றைக்கு இருப்பது போல பல சன்னதிகள் இல்லாமல் அரங்கனின் சன்னதியே பிரதானமாய் விளங்கியது.

ஸ்ரீமத் இராமானுஜர் காலத்தில் பெரும் ஏற்றம் பெற்ற திருவரங்கம் மங்கை வேந்தன் விஜயம் செய்த காலத்தில் சோலை வனமாகத் திகழ்ந்தது. மதுரையில் மீனாட்சிக்கு அமைந்த கதம்பவனம் போல கதம்பமான மரங்களாலும் சோலைகளாலும் சூழப்பட்ட அரங்கவனமாக இருந்தது திரவரங்கம்.

மதுர மாவண்டு பாட மாமயில் ஆடும் அரங்கமாகவும், நல்லார்கள் வாழும் நளி அரங்கமாகவும், செழிப்புடைய காவிரி வந்து அடி தொழும் அரங்கமாகவும், மல்லிகை வெண் சங்கூதும் படதிலிரங்கமாகவும், பூமருவும் புள்ளினங்கள் புள்ளரையன் புகழ்பாடும் புனலரங்கமாகவும், யாழினிசை வண்டினங்கள் ஆளம் வைக்கும் அரங்கமாகவும், கன்னி நன் மாமதிள்சூழ் பூம்பொழில் காவிரித் தென்னரங்கமாகவும், வண்டுகள் களித்திரைக்கும் பொழில் சூழ்வருபுனல் காவிரித் தென்னரங்கமாகவும், வரம்புற்ற கதிர்ச் செந்நெல் தலைசாய்த்துத் தலைவணங்கும் தண்ணரங்கமாகவும், சித்தர்களும் தொழுதிறைஞ்ச திசைவிளக்காய் நிற்கின்ற அரங்கமாகவும், அருள் கொடுத்திட்டு ஆடியவரை ஆட்கொள்வானான மருமூர் அணியரங்கமாகவும் திகழ்ந்த ஸ்ரீரங்கத்தில் மங்கை வேந்தன் காலடியைப் பதித்த போது திருலீலைகளுக்குத் தயாரானான் அரங்கன்!

★★★



திருப்பணி

‘நீலமேகம் நெடும்பொன் குன்றத்துப்
பால்விரிந்து அகலாது படிந்தது போல
ஆயிரம் விரித்தெழு தலையுடை அருந்திறற்
பாயற் பள்ளிப் பலர்தொழுது ஏத்த
விரிதிரைக் காவிரி வியன்பெருந் துருத்தித்
திருவமர் மார்பன் கிடந்த வண்ணம்’-

என்று சங்ககாலத்துச் சிலப்பதிகாரத்திலே சிறப்பாகப் பாடப்பெற்ற திருவரங்கனின் மண்ணிலே காலை வைத்து பின் திருவரங்கன் ஆலயத்தை அடைந்த போது ஆலய அர்ச்சகர்கள் பூர்ணகும்ப மரியாதையுடன் மங்கை வேந்தனை வரவேற்றனர்.

அவன் ஆலி நாட்டு மன்னனாகவே விஜயம் செய்தான். அவன் ஆலிநாட்டு மன்னன் என்பது பலருக்கும் தெரிந்திருந்தது. அதோடு திருவரங்கத்தை அடுத்த உறையூரில் சோழ மன்னனின் சேனாதிபதியாக இருந்து வெற்றிகள் பலவற்றைக் குவித்திருந்ததும் திருவரங்கப் பெருமக்களுக்குத் தெரியாமலில்லை.

திருவரங்கம் சோழநாட்டின் பகுதியாக இருந்தது. எனினும் சோழர்கள் சிவாலயங்கள் திருப்பணியில் அதிகம் ஈடுபட்டிருந் தார்களாதலால் திருவரங்க ஆலயத்திற்குத் திருப்பணிகள் செய்வதை இரண்டாம் பட்சமாகவே கருதினார்கள்.

மங்கை வேந்தனும் அந்த வழியில் தான் வந்திருக்க வேண்டும். ஆனால் திருமணத்திற்கு முன்னால் குமுதவல்லி அவனை வைணவனாக மாற்றியிருந்தாள். அவனுக்குச் சிறுவயதிலிருந்தே பெருமாள் சம்பந்தமே அதிகமாக இருந்தது.

அவன் பிறந்த குறையலூரை அடுத்த திருவாலி-திருநகரியில் பெருமாள் கோயில்களே இருந்தன. குமுதவல்லியின் பால் ஈர்ப்பு ஏற்பட்ட வெள்ளைக் குளத்தில் இருந்ததும் பெருமாள் கோயில். குமுதவல்லி அவனை வைணவனாகும் படிச் சொன்னபோது பஞ்ச சம்ஸ்காரங்களைச் செய்து கொள்ள அவன் சென்றதும் பெருமாள் தலமான திருநறையூரில் தான். அந்தத் திருநறையூர்

ஆலயத்தில் தான் சோழ அமைச்சர் சிறை வைத்திருந்தார். அவனைக் காஞ்சிக்குச் செல்லும்படி கனவில் வந்து கூறியதும் பெருமான் திருநறையூர் நம்பிதான். அங்கிருந்து காஞ்சிக்குச் சென்று வழிபட்டதும் சொன்னவண்ணம் செய்த பெருமாள் தான். கடைசியாகச் சோழ அமைச்சர் அவனைச் சென்றுவரும் படிக் கூறியது திருவரங்கத்திற்குத் தான். இப்படிச் சிவ வாடையே இல்லாமல் திரும்பும் இடமெல்லாம் பெருமாளின் சுகந்தமே வீசியதால் தற்போது திருவரங்கத்திற்கு வந்திருப்பது பெருமாளின் சங்கல்பத்தால் தான் என்று நினைத்தான் மங்கை வேந்தன்.

மக்களுக்கு மகேசனும் மன்னனும் ஒன்று.

இருவரில் யாரைக் கண்டாலும் வணங்குவார்கள். போற்றுவார்கள்.

அந்த வகையில் மன்னன் மங்கை வேந்தனைக் கண்டதும் வாழ்த்திப் போற்றினார்கள். மலர்களைத் தூவினார்கள்.

"மலர்களை மனிதனின் மீது தூவாதீர்கள். மாதவனின் திருவடிகளில் தூவுங்கள். மாலைகளாகக் கட்டி அவனது திருத்தோள்களில் சாத்துங்கள். அவன் தான் எல்லோரையும் ரட்சிப்பவன்" என்று அன்பொழுக மக்களிடம் சொன்னான் மங்கை வேந்தன்.

"மன்னர் பெருமானே! மாதவனான திருவரங்கன் இந்த உலகைக் காக்கிறான். தாங்கள் நாட்டைக் காக்கிறீர்கள். இருவருமே எங்களுக்குத் தெய்வங்கள் தான்" என்றார்கள் மக்கள்.

"எனது ஆலி நாடு ஆலிலையைப் போலச் சிறியது. நான் ஒரு தூசு" என்றான் மங்கை வேந்தன்.

"மன்னவா! நாங்கள் வணங்கும் கண்ணனாம் திருவரங்கன் குழந்தையாகப் பள்ளி கொண்டது ஆலிலையில் தான். திருவாலி நாடு சிறியது என்றாலும் தங்கள் இதயம் பரந்தது" என்றார்கள் மக்கள்.

எல்லோரையும் கனிவுடன் பார்த்தான் மங்கை வேந்தன். கொள்ளிடக் கரையிலும் அதையடுத்த பகுதியிலும் மக்கள் கூட்டம் கூட்டமாகக் குடியிருப்பதைக் கண்டான். "இந்தக் கொள்ளிடத்தில் வெள்ளம் வந்தால் இவர்களெல்லாம் எங்கே போவார்கள்? பாதுகாப்பற்று இருக்கிறார்களே! இவர்களை யெல்லாம் கொள்ளிடத்திலிருந்தும் காவிரியிலிருந்தும் காப்பாற்றப் பெரும் மதில்களைக் கட்டினால் என்ன? இதை ஏன் மன்னர்கள் செய்யவில்லை? அதில் ஏன் கவனம் செலுத்தவில்லை? அவர்களின் கவனமெல்லாம் போர்களில் தானே இருந்தது?

பிறரை ஆதிக்கப் படுத்துவதில் தானே இருந்தது?" என்று மன்னனுக்கு உரிய விதமாக எண்ணிக் கொண்ட மங்கை வேந்தன் மக்களுக்குத் தனது வணக்கங்களைச் சொல்லி விட்டு ஆலயத்திற்குச் சென்றான்.

சகல மரியாதையுடன் சன்னதிக்கு அழைத்துச் செல்லப் பட்டான். அரங்கனைக் கண்ட கண்கள் வேறொன்றைக் காணாவே என்று மங்களாசாசனம் செய்யப்பட்ட பூலோக வைகுந்தனான பெருமான் குடதிசை முடியை வைத்துக் குணதிசை பாதம் நீட்டி வடதிசை பின்பு காட்டித் தென்திசை இலங்கையை நோக்கிய வண்ணமாய் கருநிற வண்ணமாய் பாம்பணை மீது சயனித்து விளங்கிய திருக்காட்சியைக் கண்டபோது மங்கை வேந்தனின் உடல் உருகியது. கண்கள் கலங்கின. மெய் பரவசத்தில் ஆழ்ந்தது.

"எம்பெருமானே! அருகிலேயே இருந்தும் உன்னை எப்படிக் காணாமல் இத்தனை காலங்களைக் கழித்தேன்? உறையூரில் நடமாடிய எனது இந்தக் கால்கள் தங்கள் சன்னிதியில் பதியாமல் போனது ஏன்? வரவேண்டிய இடமும் வந்து காணவேண்டும் கோலமும் இங்கிருக்க, எங்கெல்லாம் இருந்தேன் நான்? சயனக் கோலத்தில் இருந்தபடியே உனது நீல நனயங்களால் உலகை ரட்சித்துக் காக்கும் அருட் பார்வையை விட்டு விட்டு எதை எதையோ பார்த்துக் கொண்டிருந்தேனே! என் மடமைதான் என்ன? சோழ அமைச்சர் அழும்பில் வேள் மட்டும் சுட்டிக் காட்டாமல் இருந்திருந்தால் இன்னும் எவ்வளவு காலம் தாமதித்திருப்பேனோ தெரிய வில்லை. எல்லாமே உன் சங்கல்பம்" என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்ட மங்கை வேந்தன் அரங்கனை அகம் குளிரச் சேவித்தான். குமுதவல்லி ஆனந்தமாக சேவித்து அனுபவித்தாள்.

ஆலய அர்ச்சகர்களும் ஸ்ரீகாரியமும் அவனை அனைத்துச் சன்னதிகளுக்கும் அழைத்துச் சென்று தரிசனம் செய்வித்தனர். மூன்று பிரகார மதில்களுக்குள் இருந்த சன்னதிகளைத் தரிசித்து விட்டு வெளியே சந்திர புஷ்கரிணி கரையில் இருந்த ஸ்தல விருட்சமான புன்னை மரத்தடிக்கு அனைவரும் வந்தார்கள்.

அங்கே இருந்த பல சன்னதிகளையும் தரிசனம் செய்து வைத்த அர்ச்சகர்ள் "மன்னர் பெருமானுக்கு எங்களது விண்ணப்பம் சொல்லலாமா?" என்று கேட்டார்கள்.

"ஆகா! இது என்ன கேள்வி? எம்பெருமானின் கைங்கர்ய பரர்களான உங்களால் தான் திருவரங்கத்தில் தெய்வீகம் தவழ்கிறது? உங்களது பாராயணங்களைச் செவிமடுத்த பிறகு

தானே அரங்கன் பக்தர்களைத் தரிசனத்திற்கு அழைக்கிறான்? சொல்லுங்கள். தயங்காமல் சொல்லுங்கள்" என்றான் மங்கை வேந்தன்.

"மன்னவா! அரங்கனின் கருவறையும் அதையடுத்த பல சன்னதிகளும் மதில்களால் பாதுகாப்பாக இருக்கின்றன. மூன்றாவது சுற்றுக்கு வெளியே இருக்கும் இந்தப் பகுதியில் இருக்கும் சன்னதிகளுக்கு அந்தப் பாதுகாப்பு இல்லை. ஆகவே இப்பகுதியில் நாற்புரமும் மதில்களை எழுப்பி கோபுரங்களையும் கட்டித் தர வேண்டும். நான்கு பக்கங்களில் இல்லையென்றாலும் வடக்கு, தெற்குப் பகுதியிலாவது கோபுரங்களை அமைத்துத் தரவேண்டும். இத்திருப்பணிகளை மன்னர்கள் தான் நிறைவேற்ற முடியும்" என்றார்கள் அர்ச்சகர்கள்.

"திருவரங்கத்திற்கு வந்த போது நான் நினைத்தேன். இங்கே உள்ள சன்னதிகள் மட்டுமல்ல மக்களும் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று நினைத்தேன். இந்நகருக்கு மாலை சூட்டுவது போல் ஓடும் காவிரி மற்றும் கொள்ளிட நதிகளின் வெள்ளம் இந்த ஊரைப் பாதிக்கக் கூடாத விதமாக மதில் சுவர்களை எழுப்ப ஏன் இதுவரை எந்த மன்னர் வம்சமும் முயற்சி செய்யவில்லை என்று நினைத்தேன். அவற்றுக்குப் பதில் கிடைக்க வில்லை. அது பற்றிய கவலையும் தற்போது வேண்டியதில்லை. நீங்கள் தெரிவித்தபடி மூன்றாவது மதிலை அடுத்த இப்பகுதியில் நாற்புரமும் நான்காவது மதில் சுவர்களையும், தெற்கிலும் வடக்கிலும் இரு கோபுரங்களையும் கட்டித் தர இசைகிறேன். அரங்கனின் சங்கல்பமும் அவ்வாறே இருக்குமானால் நிச்சயமாக நடக்கும்" என்றான் மங்கைவேந்தன்.

"தாங்கள் நீடூழி வாழ வேண்டும் மன்னவா. திருவரங்கனின் அருள் உங்களுக்குப் பரிபூரணமாகக் கிடைக்கட்டும்" என்று வாழ்த்திய அர்ச்சகர்கள் அவனையும் குமுதவல்லியையும் வழியனுப்பி வைத்தார்கள்.

திருமங்கை நகருக்குத் திரும்பிய மங்கை வேந்தன் குமுதவல்லியிடம் "எனது முடிவு சரியா குமுதவல்லி? முதலிலேயே கேட்டிருக்க வேண்டும். அமைச்சர்களிடம் பிரஸ்தாபிப்பதற்கு முன்பாகவாவது உன் சம்மதத்தைக் கேட்க வேண்டும் என்று நினைத்தேன். என்ன சொல்கிறாய்?" என்று கேட்டான்.

"சுவாமி! மிகவும் நல்ல காரியம் தானே இது? இதையா வேண்டாம் என்று சொல்லப் போகிறேன்? தாராளமாகச் செய்யுங்கள். அதை விட ஆனந்தம் தரக் கூடிய விஷயம் வேறில்லை எனக்கு. ஆனால்..."

"ஆனால் என்ன?"

"அந்தத் திருப்பணிக்கு ஆகக் கூடிய செலவு மிகவும் அதிகமாக இருக்கும். அது தான் எனக்குக் கவலையாக இருக்கிறது?"

"அர்ச்சகர்களிடம் சம்மதம் தெரிவித்த போதே இந்த நினைப்பு எனக்கு இல்லாமலில்லை. எம்பெருமான் எனக்கு வேகவதி யாற்றங்கரையில் அளித்த செல்வம் நிரம்பவே இருக்கிறது. அதைக் கொண்டு அந்தத் திருப்பணிகளைச் செய்து விடலாம். அதோடு..."

"சொல்லுங்கள் சுவாமி."

"முன்பு நீ சொன்னதை இப்போது நான் சொல்லப் போகிறேன். தயக்கமாக இருக்கிறது."

"என்னிடம் தயக்கமெதற்கு சுவாமி? நாம் உடலால் வேறு பட்டிருக்கிறோமே தவிர உள்ளத்தால் ஒருவராகத் தான் இருக்கிறோம். சொல்லுங்கள்."

"மங்கை மடத்தில் தினந்தோறும் பாகவதர்களுக்குச் செய்து வரும் அன்னதானத்தைப் படிப்படியாகக் குறைத்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்."

"நான் ஏற்கனவே சொன்னது தான் சுவாமி. தங்களின் முரட்டு சுபாவத்தை மாற்றி உள்ளத்தில் கருணை சுரக்க வேண்டும் என்பதற்காகத் தான் அன்னதானத்தைக் கைங்கர்யமாகச் செய்ய வேண்டும் என்று நிபந்தனை விதித்தேன். தாங்கள் எதிர் பார்த்தற்கு மேலாகவே மாறி விட்டீர்கள். அதற்கு அரங்கன் கோயில் திருப்பணி விஷயமே சான்று."

"குமுதவல்லி! அன்னதானத்திற்குச் செலவிடும் செல்வம் அரங்கன் ஆலயத் திருப்பணிக்கு உதவுமானால் நன்றாக இருக்கும். அதே சமயம் அன்னதானத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் பாகவதர்களைத் திடீரென ஏமாற்றமடையச் செய்து விடக் கூடாது. ஆலயத் திருப்பணி விஷயமாக அவர்களிடம் தெரிவித்துக கொண்டு மறுபுறம் அன்னதானத்தைப் படிப்படியாகக் குறைத்துக் கொள்ளலாம்."

"அப்படியே ஆகட்டும் சுவாமி."

குமுதவல்லி சம்மதம் தெரிவித்த பிறகு தனது திருவரங்கத் திருப்பணி பற்றித் தனது நான்கு அமைச்சர்களிடமும் தெரிவித்த மங்கை வேந்தன் "உங்கள் கருத்தென்ன?" என்று கேட்டான்.

"மன்னவா! தாங்கள் தீர்மானித்து விட்ட விஷயத்தில் நாங்கள் கருத்து சொல்வது சரியல்ல. எம்பெருமான் திருப்பணி நடக்க வேண்டிய ஒன்று தான். அதை மன்னர் பெருமக்கள் தான் செய்ய முடியும். எதற்கும் சிற்பிகளையும் கட்டடக் கலைஞர்களையும்

அழைத்து மேற்கண்ட திருப்பணிக்கு எவ்வளவு செலவாகும் என்பதைக் கேட்டறிந்தால் அதற்கான நிதியைத் திரட்டுவது பற்றி ஆராயலாம்" என்றார்கள் அமைச்சர்கள்.

"அமைச்சர்களே! உங்கள் பேச்சிற்குப் பின்னால் எச்சரிக்கை ஒளிந்திருப்பதை நான் உணருகிறேன். சிற்பிகளிடம் கேட்டு செலவாகக் கூடிய தொகையைப் பற்றி அறிந்து கொண்டு "இந்தத் திருப்பணி நம்மால் இயலாது" என்று முடிவுக்கு வந்து கைவிடும் படி நடந்து விட வாய்ப்பு உண்டு. ஆகவே அந்த முயற்சி வேண்டாம். எனவே வேகவதியாற்றங்கரையில் நமக்குக் கிடைத்த செல்வங்களைக் கொண்டு திருப்பணியைத் தொடங்குவோம். எது எப்படியானாலும் அரங்கன் திருப்பணியில் முன் வைத்த காலை பின் வைக்க நான் தயாராக இல்லை. நீங்கள் நால்வரும் திருவரங்கத்திற்குச் சென்று மதில் சுவர் மற்றும் கோபுரங்களை அமைக்கக் கூடிய வல்லுனர்களைக் கண்டு பிடியுங்கள். அப்பணியைச் செய்வதற்குத் தேவையான பணியாளர்கள் கிடைப்பார்களா என்பது குறித்து விசாரியுங்கள். தேவைப் பட்டால் திருவரங்கத்தில் பறைகளைக் கொட்டச் செய்து பணியாளர்களைத் திரட்டுங்கள். திருப்பணி தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டால் அது தடைப்பட்டுப் போன மாதிரிதான். சம்பந்தப்பட்ட எல்லோரும் தளர்ந்து போய் விடுவார்கள். ஆகவே போர்க்கால நடவடிக்கையைப் போல இது நடக்க வேண்டும்" என்றான் மங்கை வேந்தன் உறுதியான குரலில்.

அதையடுத்து அமைச்சர்கள் நால்வரும் தீவிர முயற்சியில் ஈடுபட்டார்கள். திருவரங்கத்தை யடுத்த கரம்பனூரில்* கோயில் திருப்பணிகளைச் செய்யும் சிற்பிகளும், வல்லுனர்களும் கிடைத்தார்கள். மங்கை வேந்தனின் திருப்பணிகளைச் செய்வதற்கு அவர்கள் சம்மதித்தார்கள்.

அரங்கன் ஆலயத்தில் சிறப்புப் பூஜைகள் நடைபெற்றன. நல்ல நாள் குறிக்கப் பட்டு திருப்பணியும் தொடங்கியது. முதலில் மதில் சுவரை அமைப்பது என்று முடிவுகட்டி அதற்கான கால் கோள் விழாவும் நடைபெற்றது.

மதில் அமைக்கும் பணி ஆரம்பித்து ஆறுமாதம் கடந்த நிலையில் மங்கை வேந்தனை உடனடியாக உறையூருக்கு வரும்படி [illegible] மன்னனிடமிருந்து கட்டளை வந்தது.

அமைச்சர்கள் யோசித்தார்கள்.

★★★



நன்கொடை

அமைச்சர்கள் யோசனையில் ஆழ்ந்தாலும் மங்கை வேந்தன் குழப்பத்தில் விழவில்லை.

உறையூருக்குச் சென்று சோழமன்னனைச் சந்தித்தான்.

"என்ன ஆலிநாடா? கூப்பிடு தூரத்தில் இருக்கும் திருவரங்கத்திற்கு எங்களுக்கு வராத அக்கறை எங்கோ இருக்கும் உனக்கு வந்து விட்டதோ" என்று கேட்டான் சோழ மன்னன்.

குரலில் அன்பு தெரியவில்லை.

"மாமன்னவா! என் செயலால் ஆகக் கூடியது என்று என்ன இருக்கிறது? அரங்கனின் சங்கல்பத்தின் படிதான் அனைத்தும் நடக்கின்றன" என்று அமைதியாகச் சொன்னான் மங்கை வேந்தன்.

"உன் பேச்சு தன்னடகத்தின் வெளிப்பாடு போலவும் இருக்கிறது. ஆணவத்தின் அடையாளம் போலவும் இருக்கிறது. இதில் எது உண்மை?" என்று கரகரத்த குரலில் கேட்டான் சோழமன்னன்.

"இரண்டுமே இல்லை மன்னர் பெருமானே. நான் சொன்னது உண்மைநிலை."

"திருவரங்கம் எங்கள் ஆட்சிப் பகுதியில் இருக்கிறது. எங்களது அனுமதியில்லாமல் நீ எப்படி அங்கே திருப்பணிகளைச் செய்யலாம்?"

"ஆலய திருப்பணிகளை யார் வேண்டுமானாலும் எங்கே வேண்டுமானாலும் செய்யலாம் என்பது தான் எனக்குத் தெரிந்த நடைமுறை."

"தவறு நீலா. தவறு. எங்கோ இருந்து கொண்டு நீ அங்கே திருப்பணிகளைச் செய்தால் உறையூர் மக்கள் எங்களை இகழ மாட்டார்களா? திருப்பணியை நாங்கள் ஏன் செய்யவில்லை என்று கேள்வி கேட்க மாட்டார்களா? நீ உனது செய்கைகளின் மூலம் சோழர்களது புகழ் மீது இகழ் என்னும் மேகம் சூழும்

படிச் செய்து விட்டாய். எங்களுக்கு மேலே நீ இருப்பது போன்ற தோரணையை உண்டாக்கி விட்டாய்."

"ஒரு நாளுமில்லை மாமன்னவா? சோழரது புகழ் என்பது வானத்தைப் போன்றது. மேகங்கள் அதை மறக்க முயல்வது என்பது நடக்க முடியாத ஒன்று."

"மழை பெய்யும் போது வானத்தை மூடுவது மேகங்கள் தான்."

"இருக்கலாம். ஆனால் மேகங்கள் விலகி விடும். வானமே நிரந்தரம். மன்னர் மன்னா! நான் எம்பெருமானைத் தரிசிக்கவே திருவரங்கத்திற்குச் சென்றேன். அங்கே அர்ச்சகப் பெருமக்கள் திருப்பணி கோரிக்கையை வைத்தார்கள். பெருமாள் திருப்பணி என்பதால் உடனடியாகச் சம்மதித்து விட்டேன். தங்கள் அனுமதி வேண்டும் என்று நினைத்துப் பார்க்க வில்லை. அது தவறு தான். என்னை மன்னியுங்கள். தற்போது அனுமதி கேட்டு வேண்டுகிறேன். தொடங்கி விட்ட திருப்பணி தடைப்படலாகாது. தயை கூர்ந்து அனுமதியளிக்க வேண்டும்."

சோழமன்னன் கடகட வென்று சிரித்தான்.

"என்ன நீலா பயந்து விட்டாயா? உனக்குச் சுதந்திரம் அளித்து கப்பம் கட்ட வேண்டாம் என்று நான் கூறியது உண்மை. அதற்காக உனக்கும் எனக்குமான தொடர்பு அறுந்து விட்டதாக நினைத்துக் கொண்டாயா? அது எப்போதும் அறுபடாது. எம்பெருமானின் அருள் நிழலில் இருக்கும் உன் சம்பந்தத்தை எப்போதும் விரும்புபவன் நான். சிலபல காரணங்களால் திருவரங்கத்தில் எங்களால் திருப்பணிகளைச் செய்ய முடியவில்லை. அதற்கு நீயே பொறுத்தமானவன். அது தெரிந்து தான் அரங்கன் உன்னைத் தேர்ந்தெடுத்திருக்கிறான். சிறப்பாகச் செய். சீர்மல்கும் படிச் செய். அத்திருப்பணிக்கு நான் அளிக்கும் நன்கொடையை ஏற்றுக் கொள். அதைப் பெற்றுக் கொள்ளவே உன்னை அழைத்தேன்" என்றான்.

அவன் குரலில் அன்பைத் தவிர வேறு எதுவுமில்லை.

மங்கை வேந்தன் பரவசப் பட்டான். "சோழர் நீதியும் சோழர் கருணையும் தங்களால் உயர்ந்து கொண்டே செல்கிறது மாமன்னவா. அது என்றைக்கும் தாழாது. வீழாது" என்றான்.

அவன் குரலில் ஆனந்தத்தைத் தவிர வேறு எதுவுமில்லை.

★

அமைச்சர்கள் நினைப்புகளுக்கு மாறாகச் சோழ மன்னனிடமிருந்து செல்வங்கள் வந்து சேர்ந்ததால் கோயில் திருப்பணி வேகமாக நடந்தது.

ஆளி நாட்டு நிர்வாகத்தை அமைச்சர் தோலா வழக்கரிடம் தற்காலிகமாக ஒப்படைத்து விட்டு மங்கை வேந்தன் கரம்பனூரில் தங்கியிருந்து திருவரங்கத்தில் நடைபெறும் மதில்கள் கட்டும் பணியைக் கவனித்து வந்தான். இதர மூன்று அமைச்சர்கள் அவனுக்கு உதவியாக இருந்தனர்.

திருப்பணி சிறப்பாக நடைபெறுவதைக் கண்ட திருவரங்கத்து மக்களில் பலர் தாமாக வந்து பணிகளில் உதவி புரிந்தார்கள்.

கட்சியாக இருந்தாலும் சரி-

ஆட்சிக்கு எதிரான போராட்டமாக இருந்தாலும் சரி-

அதிர வைக்கும் போராக இருந்தாலும் சரி-

ஆலயத் திருப்பணியாக இருந்தாலும் சரி-

மக்களின் ஒத்துழைப்பும் பங்களிப்பும் அவசியமானது என்றும் அனைத்துமே மக்களோடு சேர்ந்தால் தான் வெற்றி பெறும் என்பதை உணர்ந்தான் மங்கை வேந்தன்.

கிழக்குப் புற மதிலமைக்க முற்பட்ட போது நந்தவனம் ஒன்று குறுக்கிட்டது.

அதை அழித்தால் தான் மதில் சுவரை நேராக அமைக்க முடியும் என்றார்கள் நிர்மாணிகள்.

ஆலயத்தின் ஸ்ரீகார்யத்தை அழைத்த மங்கை வேந்தன் "இந்த நந்தவனத்தை யாராவது பராமரித்து வருகிறார்களா?" என்று கேட்டான்.

"ஆம் மன்னவா. தொண்டரப்பொடியார்* என்னும் திருமாலடியார் ஒருவர் இருக்கிறார். இந்த நந்தவனத்தை உருவாக்கியவரும் அவர்தான். பராமரிப்பவரும் அவர் தான். இங்கே பூக்கும் பூக்களைப் பறித்து மாலையாகத் தொடுத்து தினமும் அரங்கனுக்கு அளித்து வருகிறார். அரங்கன் அவரது மாலையைச் சாத்திக் கொள்ளாத நாளே கிடையாது என்று சொல்லலாம்" என்றார் ஸ்ரீகார்யம்.

"ஆகா! எனக்குக் கிடைக்காத பேறு அவருக்குக் கிடைத்திருக்கிறது. அது அரங்கனின் பேரருள்" என்று சொன்ன மங்கை மன்னன் மதில் சுவர் நிர்மாணிகளிடம் "இந்த நந்தவனம் எந்தக் காரணம் கொண்டும் சிதையலாகாது. அரங்கனின் தோள்களில் தவழும் மாலைகளைத் தொடுக்கும் திருமாலடியாரின் தாள்கள் பதியும் இந்த வனம் வெறும் வனமல்ல. டிருந்தாவனம். எனவே இதைச் சுற்றி வருகிற மாதிரி மதிலை

---

* பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான தொண்டரப்பொடி ஆழ்வார்.

அமையுங்கள். நாம் அமைக்கும் இந்த நாலாவது மதிலுக்குள் நந்தவனமும் சந்திர புஷ்கரிணியும் நிரந்தர அடையாளங்களாக அமைய வேண்டும்" என்றான்.

அடுத்த சில நாட்கள் கழித்து மதில் சுவர் அமைக்கப் பட்ட விஷயமறிந்த தொண்டரப் பொடியார் மங்கை வேந்தனை சந்தித்தார்.

"ஆலி நாடா! உனது மனம் இந்த நந்தவனத்து மலர்களை விட மென்மையானவை என்பதை அறிந்தேன். மலர்கள் வாடி உதிர்வதைக் கூட நான் காணச் சகிக்கமாட்டேன். அந்த மலர்களைத் தாங்கும் செடிகளையும் கொடிகளையும் பாதுகாக்கும் விதமாக நீ மதில் சுவரை அமைப்பது உன் பரந்த உள்ளத்திற்குச் சான்று. திருப்பணிக்குள் ஓர் அருட்பணியாக இந்த நந்தவனத்தைக் காத்திருக்கிறாய். உன் பராக்கிரமத்தைக் கண்டவர்கள் உனக்கு அரட்டமுக்கி என்றும் அடையார் சீயம் என்றெல்லாம் வண்பட்டங்களை அளித்திருப்பதாகக் கேள்விப் பட்டேன். ஆனால் உனக்குள் அருளானது மாரி போல் சுரப்பதைத் தற்போது நான் கண்டேன். உனக்கு அருள்மாரி* என்ற பட்டம் மிகவும் பொருத்தமானது. அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்றார்.

"சுவாமி! பட்டங்கள் ஆகாயத்தில் பறக்கும். அக்காட்சி அழகாகத் தான் இருக்கும். ஆனால் அவை காற்றோடு போய் விடும். ஆகவே அவற்றைச் சுமப்பவன் எப்போதும் மண்ணில் தான் இருப்பான். அந்த இருப்பு தான் நிஜமே தவிர ஆகாயத்தில் பறக்கும் பட்டங்கள் அல்ல. அவற்றை நான் அங்கீகரிக்கவில்லை. அதோடு நானொன்றும் பெரிதாகச் சாதித்து விடவில்லை. தாங்கள் அரும்பாடு பட்டு அமைத்த நந்தவனத்தை - காலம் காலமாகக் கட்டிக் காத்த அழகுச் சோலையை பிருந்தாவனமாகக் கருதி அதற்குச் சேதம் உண்டாகாதவாறு பார்த்துக் கொள்ளச் சொன்னேன். இயல்பான இக்காரியத்திற்குப் போய்ப் பட்டமும் கேடயமும் எதற்கு?" என்றான் மங்கை வேந்தன்.

"ஆலிநாடா! பட்டங்களையும் விருதுகளையும் பெறுவதற்குத் தான் மக்கள் ஆலாய்ப் பறக்கிறார்கள். ஆர்வமாக அலைகிறார்கள். நீயோ வேண்டாம் என்கிறாய். பட்டங்களை வேண்டாம் என்கிறவன் பட்டங்களைப் பெறத் தகுதியுடையவன். ஆகவே அருள்மாரி என்ற பட்டம் உனக்கு எல்லா விதத்திலும் ஏற்புடையது" என்றார் தொண்டரப்பொடி.

"சுவாமி! தங்கள் திருநாமம் என்ன?"

"அது எனக்கு மறந்து விட்டது ஆலி நாடா. இங்கே அரங்கன் பணியில் ஈடுபட்டதிலிருந்து அவனது அடியார்களுக்கு அடியவனாக அவனுக்கும் கடையவனாகக் கருதி அவ்வாறே இருந்து வருகிறேன். அதனாலேயே எல்லோரும் என்னைத் தொண்டரப் பொடி என்றே அழைக்க ஆரம்பித்து விட்டார்கள்."

"ஆகா! இதைக் காட்டிலும் உத்தமமான பட்டம் ஒருவருக்குக் கிடைக்க முடியுமா? என்னை ஆலிநாடன் என்கிறார்கள். உயர்நிலையில் வைத்து தாழ்த்துகிறார்கள். ஆலி நாடும் அரசப் பதவியும் எனக்கு நிரந்தரமல்ல. என்னை ஆலிநாடன் என்று அழைப்பதே எனக்கு வெட்கத்தைத் தருகிறது. தங்களையோ கீழ்நிலையில் வைத்து மிகவும் உயர்வாகக் கருதிப் போற்றி வருகிறார்கள். இது தான் பேறு. மகத்தான பேறு. என்னை ஆசிர்வதியுங்கள் சுவாமி. அரங்கனின் அருளோடு தங்களைப் போன்ற மகத்தான அடியவர்களின் ஆசியும் இருந்தால் தான் திருப்பணி முழுமையடையும்."

"குறைவொன்று மில்லை ஆலி நாடரே. அரங்கனின் அருள் உங்களுக்கு என்றும் சாஸ்வதம். அதுவே பரமபதம்" என்றார் தொண்டரடிப் பொடியார்.

அவரது ஆசியுரையால் மங்கை வேந்தன் மகிழ்ந்த நேரம் சரியில்லையோ என்னவோ-

மதில் சுவர்கள் நான்கையும் கட்டி முடித்து வடக்கிலும் தெற்கிலும் கோபுரங்களுக்கான அடிக்கலையும் நாட்டி கோபுர வாசலை அமைத்து மேலே கட்டட வேலையைத் தொடரவிருந்த போது நிதித் தட்டுப்பாடு உண்டாயிற்று மங்கை வேந்தனுக்கு.

தன்னிடமிருந்த செல்வங்களையெல்லாம் செலவழித்தான்.

சோழ மன்னன் அளித்த நிதியைச் செலவழித்தான்.

ஆலிநாட்டுக் கருவூலத்தில் இருந்த செல்வமும் செலவாயிற்று.

மங்கை மடத்தில் நடந்து வந்த அன்னதானம் முற்றிலுமாக நிறுத்தப்பட்டு அதற்கான செலவுகளும் திருப்பணிக்குத் திருப்பப் பட்டுத் தீர்ந்து போயிற்று.

குமுதவல்லி தனது நகைகளையெல்லாம் கழற்றிக் கொடுத்தாள். செலவாகியது.

மேற்கொண்டு ஒருவாரத்திற்கு மட்டுமே செலவு செய்வதற்கான நிதிமட்டுமே இருந்தது.

மங்கை வேந்தன் மிகவும் கவலைப் பட்டான்.

குமுதவல்லியிடம் சொல்லி வேதனைப் பட்டான்.

"கவலை எதற்கு சுவாமி? இந்தத் திருப்பணியைத் தாங்களா ஆரம்பித்தீர்கள்? இல்லை. அந்த எம்பெருமான் தான் ஆரம்பித்தான். ஆரம்பித்தவனுக்கு நடத்திச் செல்லத் தெரியாதா? நல்லபடியாக முடித்து வைக்கத் தெரியாதா?" என்று கேட்டாள் குமுதவல்லி.

"எல்லாம் சரிதான். வரவில்லாமல் செலவு மட்டும் இருந்தால் எப்படி?" என்றான் மங்கை வேந்தன்.

"இந்த வரவு செலவுக் கணக்கெல்லாம் பார்க்க நாம் யார்? வரவும் செலவும் எம்பெருமான் தான் சுவாமி?"

"கொஞ்சம் நிஜஉலகிற்கு வந்து நடப்புகளைப் பற்றி யோசி குமுதவல்லி. அடுத்த வாரத்திற்குச் சிற்பிகளுக்கும் பணியாளர் களுக்கும் கொடுப்பதற்கு ஊதியம் இல்லை. அவர்களையெல்லாம் அரங்கனிடமா போய் கேட்கச் சொல்ல முடியும்?"

அனைத்தும் அரங்கனின் சங்கல்பத்தின் படி தான் நடக்கிறது என்று சொன்ன மங்கை வேந்தன் தான் தற்போது இப்போது இப்படிப் பேசினான். நிதி நெருக்கடி அவனைக் குழப்பி நெஞ்சைக் கலக்கியிருந்தது.

அவனது பேச்சைக் கேட்டு அதிர்ந்து போன குமுதவல்லி "சுவாமி! தாங்கள் இவ்வாறு பேசலாகாது. திருப்பணியைத் தொடங்கிய போது எம்பெருமான் அரங்கனைத் தானே நம்பினீர்கள்? சோழமாமன்னர் தங்களை அழைத்து நன்கொடை வழங்கிய போது அதை எதிர்பார்த்தீர்களா? அதைக் கொடுத்தது சோழ மன்னரல்ல சுவாமி. சாட்சாத் எம்பெருமான் தான். அவனை நம்புங்கள். அவன் தாள்களைப் பற்றிக் கொள்ளுங்கள். தங்களைத் தஞ்சம் அடைந்த எவரையும் அவன் கைவிட்டதில்லை" என்றாள்.

மங்கை வேந்தன் சமாதானம் அடைய வில்லை.

அமைச்சர்களைக் கூட்டினான்.

"திருப்பணியில் மிகவும் முக்கியமான கோபுரம் கட்டும் பணி நிறை பெறுகிற நிலையில் நிதி தட்டுப்பாடு வந்து விட்டது. கூடுமானப் பொருட்கள் ஒரு மாதத்திற்குத்தான் வரும் என்கிறார்கள் நிர்மாணிகள். ஆனால் பணி புரிபவர்களுக்கான தின ஊதியத்தை இந்த வாரத்திற்குப் பிறகு வழங்கமுடியாது. அவர்களை ஒரு வார காலம் வரை வேண்டுமானால் காத்திருக்கும்

படிக் கேட்டுக் கொள்ளலாம். அதற்குப் பிறகு ஒரு நாள் கூட தாமதிக்க முடியாது. ஊதியத்தை நம்பியே பணிபுரியும் அவர்கள் ஊதியம் இல்லாவிட்டால் பணியை நிறுத்தி விடுவார்கள். நம்மால் அடுத்த வாரத்தில் நிதியைத் திரட்ட என்ன வழி இருக்கிறது என்று தெரியவில்லை. நிதியும் இல்லாமல் பணியும் நடக்காமல் போனால் கோபுரம் இரண்டும் மொட்டைக் கோபுரங்களாக நிற்கும். அந்த நிலையை என்னால் எண்ணிப் பார்க்க முடியவில்லை. அந்தநிலை வரவே கூடாது" என்று சற்றுப் பதற்றத்துடனேயே சொன்னான் மங்கை வேந்தன்.

அப்போது அமைச்சர் நிழலில் ஒதுங்குவாரிடம் ஒருவன் எழுந்து "மன்னவா! தங்களிடம் பணிபுரியும் ஆர்வத்துடன் ஒருவார காலமாக ஒருவர் வந்து போய் கொண்டிருக்கிறார். இன்றைக்கும் வந்து காத்திருக்கிறார்" என்றார்.

"நமக்கு இப்போது தேவை நிதியே தவிர பணியாள் அல்ல" என்று சொன்ன மங்கை வேந்தன் "அவருக்கு என்ன பணி தெரியும்?" என்று கேட்டான்.

"மன்னவா. அவர் பெயர் தாளுதுவான்." என்று சொல்லி அவர் செய்யக் கூடிய பணியைப் பற்றிச் சொன்னார் அமைச்சர்.

மங்கை வேந்தன் கடுப்பாகிப் போனான்.

★★★



தனநந்தன்

"பூட்டிக் கிடக்கும் எந்தப் பூட்டையும் உடைக்கக் கூடியவர்" என்றார் அமைச்சர் நிழலில் ஒதுங்குவான்.

"மந்திரி! நாமென்ன திருடுவதற்கா திட்டம் போடுகிறோம்? பூட்டை உடைப்பவனும் ஆட்டைத் திருடுபவனுமா நமக்கு இப்போது தேவை? அவனைப் போகச் சொல். தேவையில்லாதவர்கள் நம் திசைப் பக்கமே திரும்ப வேண்டாம்" என்று கடுகடுத்த குரலில் சொன்னான் மங்கை வேந்தன்.

அவனிடம் நிதானம் குறைந்திருந்தது.

அமைச்சர் வெளியே சென்று காத்திருந்த நபரை அனுப்பி விட்டு வந்து அமர்ந்தார்.

"நான் திருடுவதற்கு உங்களிடம் ஆலோசனை கேட்கவில்லை. நிதி திரட்டுவதற்கும் திருப்பணி தடைப்படாமல் இருப்பதற்கும் தான் ஆலோசனை கேட்கிறேன்" என்றான் மங்கை வேந்தன் சற்றே கோபமான குரலில்.

அமைச்சர் சாயை பிடிப்பான் எழுந்து "மன்னவா! சோழ மாமன்னரிடம் நிதியுதவி கேட்கலாமா?" என்று கேட்டார்.

"என்ன பேசுகிறாய் நீ? கேட்காமலேயே அள்ளித் தந்த வள்ளல் சோழமன்னர். அவரிடம் போய்க் கேட்பதா? இதெல்லாம் என்ன யோசனை? உங்களுக்கெல்லாம் மூளை குழம்பி விட்டதா?" என்று கடுகடுப்புடன் கேட்டான் மங்கை வேந்தன்.

அவன் தான் உண்மையிலேயே குழம்பிப் போயிருந்தான்.

"மன்னவா! ஆலிநாட்டில் செல்வந்தர்கள் பலர் இருக்கிறார்கள். மங்கைமட அன்னதானத்திற்கே நிதியளிக்க விரும்பினார்கள். நாம் தான் மறுத்து விட்டோம். ஆகவே அவர்களிடம் நிதியைக் கேட்டால் தருவார்கள்" என்றார் அமைச்சர் நீர்மேல் நடப்பான்.

நிழலில் ஒதுங்குவான் பேசமுற்பட்டு "மன்னவா! நாகையில் பிரபலமான தனவந்தர் ஒருவர் இருக்கிறார். எனக்கு நன்கு

தெரிந்தவர். கோயில் திருப்பணிகளுக்கு அள்ளி வழங்கக் கூடிய வள்ளல். அவரிடம் சென்று நான் கேட்கிறேன். நிச்சயமாகத் தருவார்" என்றார்.

"நிதி கேட்பது என்பது கௌரவப் பிச்சை. அதற்கு எல்லோரும் தயாராகி விட்டீர்கள்."

"அவ்வாறு ஏன் நினைக்கிறீர்கள் மன்னவா? தேரை ஒருவர் மட்டுமே இழுக்க முடியாது. ஊர் கூடித் தான் இழுக்க வேண்டும். திருப்பணி என்பதும் அப்படித் தான். பலரது நன்கொடைகள் வந்தால் தான் அதை முடிக்க முடியும்" என்றார் அமைச்சர்.

"எதுவாக இருந்தாலும் நான் போய் யாரையும் கேட்க மாட்டேன். நீங்களாகப் பார்த்துச் செய்யுங்கள்" என்று கூறிவிட்டு அங்கிருந்து அகன்ற மங்கை வேந்தன் இல்லத்திற்கு வந்த போது குமுதவல்லி ஒரு மூட்டையைக் கொடுத்தாள்.

"என்ன இது?"

"எனக்குத் தெரிந்தவர்களிடமெல்லாம் ஆலயத் திருப்பணிக்கு உதவும் படிக் கேட்டேன். அவர்கள் மனம் உவந்து கொடுத்த நாணயங்கள் தான் இவை" என்றாள் குமுதவல்லி.

"ஊரில் இருந்த பேய்களையெல்லாம் ஒருவன் விரட்டிவிட்டு வீட்டிற்கு வந்தானாம். அவனை வீட்டு வாசலில் பேயொன்று நின்று வரவேற்றதாம். அப்படித் தான் இருக்கிறது இது. அமைச்சர்களிடம் நான் யாரிடமும் யாசிக்க மாட்டேன் என்று கூறி விட்டு வந்தேன். இங்கே என்னவென்றால் நீ யாசித்து விட்டு வந்து இந்தா என்கிறாய்?" என்றான் மங்கை வேந்தன்.

அவன் இந்த அளவிற்கு இதுவரை அநாகரீகமாகப் பேசியதில்லை. எனவே அவனது வார்த்தைகளால் திடுக்கிட்டுப் போன குமுதவல்லி அவ்வுணர்ச்சியை மறைத்துக் கொண்டு "சுவாமி! எம்பெருமானுக்காக நடத்தும் திருப்பணிக்காக யாசிப்பதென்பது புண்ணியமான காரியம் தானேயன்றி வருத்தப்படக் கூடியதல்ல. இருக்கும் போது யாரையும் கேட்க வேண்டாம். இல்லாத போது யாரையாவது கேட்கத் தான் வேண்டும் - செல்வம் என்பது இருக்கும் இடத்திலிருந்து இல்லாத இடத்திற்குச் செல்ல வேண்டும். அது தான் செல்வம். நமக்கு பற்றாக்குறை உண்டாகும் போது அதைக் கேட்டுப் பெறுகிறோம். இது எங்கேயும் நடக்கக் கூடியது தான். தங்களுக்குத் தெரியாதா?" என்று கேட்டாள் குமுதவல்லி.

"யானைப் பசிக்குச் சோளப் பொறி" என்று கூறிவிட்டு அதைப் பெற்றுக் கொண்டு சென்றான் மங்கை வேந்தன்.

"பகவானே! அவரை ஏன் வேதனைப் படுத்தி இப்படியெல்லாம் பேசாத வார்த்தைகளைப் பேச வைக்கிறாய்? அவரென்ன தனது சுக போகத்திற்காகவா நிதியைக் கேட்கிறார்? தங்கள் திருக்கோயில் திருப்பணிக்காகச் சுகபோகங்களை விட்டு அல்லவா முயற்சிக்கிறார்? அவரை ஏன் சோதிக்கிறாய்? கருணை காட்டுங்கள்" என்று வேண்டிக் கொண்டாள் குமுதவல்லி.

அமைச்சர்களில் மூவர் ஆலிநாட்டில் இருந்த ஒரு சில செல்வந்தர்களை அணுகியபோது நிதி கிடைக்கவே செய்தது. அதைக் கொண்டு திருப்பணியைத் தொடர்ந்தான் மங்கை வேந்தன்.

நாகையில் இருந்த தனவந்தனான தனநந்தனை அணுகிய அமைச்சர் நிழலில் ஒதுங்குவான் மிகவும் எதிர்பார்த்திருந்தார். தனநந்தன் நாகை மற்றும் தஞ்சை வட்டாரத்தில் மிகப் பெரிய செல்வந்தனாக இருந்தான். அவனுக்கு நிலபுல சொத்துகளும் ஏராளமாக இருந்தன. ஒருசில சமயங்களில் சிற்றரசர்கள் அவனிடம் நிதியுதவி கேட்டு வருவார்கள் என்றும் பேசப்பட்டு வந்தது. அதோடு அவன் தாராளமாக தானம் செய்வதிலும் பெயர் பெற்றவனாக இருந்தான். எனவே அவன் மனம் உவந்து விட்டால் பெருந்தொகை ஒன்று கிடைக்கும் என்றும் அது கிடைத்து விட்டால் திருப்பணியானது ஒருசில மாதங்களுக்குத் தொடரும் என்பதால் அவனைப் பெரிதாக எண்ணி நாகைக்குச் சென்ற அமைச்சர் ஒரு வாரமாகியும் அவனைச் சந்திக்க முடியாமல் தவித்தார். இத்தனைக்கும் அவன் நாகையில் தான் இருந்தான். அவரை நாகையிலேயே இருக்கும் படியும் நாளை சந்திக்கிறேன் என்றும் ஒருவாரகாலமாகச் சொல்லி வந்தான்.

அமைச்சருக்கு அவனது செயல் புதிராக இருந்தது. அவன் அப்படியெல்லாம் போக்குக் காட்டுகிறவன் அல்ல என்பது பிரசித்தமான படியால் அவர் குழம்பினார்.

அதே சமயம் சயன அறையில் சிங்காரி ஒருத்தியோடு சரசமாடிக் கொண்டிருந்த தனநந்தன் சொர்க்கலோகப் பயணத்திற்கு வழிதேடிக் கொண்டிருந்தான்.

அவனது மாளிகை வளாகத்தில் கீழ்க் கட்டில் அமைச்சர் ஒரு வாரமாகக் காத்துக் கிடந்ததைப் பலரும் பார்த்திருந்தார்கள். அந்த வகையில் தினமும் அங்கு வந்து போய்க் கொண்டிருந்த [illegible] சிரிப்பழகியும் கவனிக்காமல் இல்லை. எதற்காக அவர் காத்துக் கொண்டிருக்கிறார் என்பது விளங்காததால் ஒருநாள் அன்று பஞ்சணையில் தனநந்தன் தனது காமலீலைகளைக் காட்டிக் கொண்டிருந்த போது அது குறித்துக் கேட்டாள்.

"எதற்காகக் காத்திருக்கிறார் என்றா கேட்டாய்? அவர் ஆடவர். ஆகவே தான் காத்திருக்கிறார்" என்று கூறியபடி தனநந்தன் அவளைப் புரட்டினான்.

"நீங்கள் சொல்வது புரியவில்லை" என்றாள் சிரிப்பழகி அவனது விஷமங்களைச் சற்றே தடுத்தபடி.

"இதில் புரியாமல் போவதற்கு என்ன இருக்கிறது? என்னைக் காண்பதற்குப் பெண்கள் வந்தால் உடனடியாக வரச் சொல்வேன். ஆண்கள் வந்தால்? அவர்களை வைத்துக் கொண்டு நான் என்ன செய்வது? காத்திருக்க வேண்டியது தான்" என்று சொல்லி அவன் கையை நகர்த்திய இடம் அபாயகரமானதாக இருந்ததால் தன் கையால் அவனது கைகளைத் தடுத்த சிரிப்பழகி "அவர் எதற்காகக் காத்திருக்கிறார்?" என்று கேட்டாள்.

"எதற்காகவா? நன்கொடை கேட்பதற்காக வந்திருக்கிறார். காத்திருக்கிறார்" என்றான் தனநந்தன்.

"அப்படியென்றால் ஏதாவது கொடுத்து அனுப்பி விடுவது தானே? எதற்காக இத்தனை நாட்களாகக் காத்திருக்கச் செய்கிறீர்கள்?"

"நன்கொடை வேண்டுமென்றால் காத்திருக்கத் தான் வேண்டும்? காத்திருந்தால் தான் அதன் அருமை தெரியும்."

"அவர் யார்?"

"ஆலி நாட்டின் அமைச்சர்."

"அமைச்சரா காத்திருக்கிறார்?"

"நன்கொடை தேவைப்படும் போது அவரது அந்தஸ்து பிச்சைக்காரன் என்பது தான்."

"வேறுயாரும் நன்கொடை கேட்டு வரவில்லையா? யாரையும் காணோமே?"

"விஷயம் தெரிந்தவர்கள் வரவில்லை. விஷயம் தெரியாத அமைச்சர் வந்திருக்கிறார். காத்திருக்கிறார்."

"எது அவருக்குத் தெரியவில்லை?"

"நான் நன்கொடை கொடுப்பதை நிறுத்திப் பலமாதங்களாகி விட்டன. அவருக்குத் தெரியவில்லை."

"அதை அவருக்குத் தெரியப்படுத்தி விட வேண்டியது தானே?"

"சிரிப்பழகி! அர்த்தமற்ற அனாவசியமான இது போன்ற கேள்விகளைக் கேட்பதற்காகத் தான் நீ இங்கு வருகிறாயா?

இதற்காகத் தான் உனக்கும் உன்னைப் போன்ற தங்கப் பதுமைகளுக்கும் செல்வத்தை வாரி வழங்குகிறேனா?" என்று திடீரெனச் சீறினான் தனநந்தன்.

அவன் கோபித்துக் கொண்ட போது தான் அந்த உண்மை அவளுக்குப் புரிந்தது.

"இனிமேல் பேசமாட்டேன். நீங்கள் கோபித்துக் கொள்ளாதீர்கள்" என்று கொஞ்சும் குரலில் கூறி அவனது கைகள் விரும்பிய இடத்திற்கு அவற்றை நகர்த்தினாள்.

"சிரிப்பழகி! நீ என்ன என்னவெல்லாம் உணவாக உண்ணுகிறாய்?" என்று மிகவும் முக்கியமான கேள்வியைக் கேட்பது போல் கேட்டான் தனநந்தன்.

"இது என்ன கேள்வி? எல்லோரும் உண்பதைத் தான் நானும் உண்கிறேன்" என்றாள் அவனது கைகளை அபாயகட்டத்திற்கு நகர்த்தியபடி.

"ஒவ்வோர் அங்கத்திற்கும் ஒவ்வோர் உணவு என்று அளிக்கிறாயா?" என்று கேட்டான் தனநந்தன்.

"ஒவ்வோர் அங்கத்திற்கும் தனித்தனி வாயா இருக்கிறது? என்ன கேள்வி கேட்கிறீர்கள் நீங்கள்? உடம்பு முழுவதற்கும் ஒரே உணவு தான்."

"அப்படியென்றால் இது மட்டும் எப்படி இவ்வளவு பெரிதாக இருக்கிறது?"

"அது அப்படித்தான்" என்றவள் அதற்கு மேல் பதில் சொல்ல முடியாதவளாய் அவனது கையை அபாயகரமான இடத்திற்குக் கொண்டு போய் விட்டு விட்டு கண்களை மூடிக் கொண்டாள்.

அவன் புரிந்து கொண்டான்.

காமத்தில் புரிந்து கொண்டு நடந்து கொண்டால் அதை விடத் திருப்தியான விஷயம் வேறு இருக்க முடியாது.

அவள் அடுத்தடுத்து பலவற்றைப் புரிய வைத்தாள்.

புரிந்து கொண்டதையெல்லாம் அவன் செயல்படுத்தித் திருப்தியடைந்தான்.

ஒன்பதாம் நாள் அமைச்சரைச் சந்தித்த தனநந்தன் "இன்னுமா காத்திருக்கிறீர்கள்? போகவில்லையா?" என்று கேட்டான்.

"காத்திருக்கும் படிச் சொன்னது நீங்கள் தானே ஐயா?"

"நானா? நானா சொன்னேன்?"

"நீங்கள் சொல்லவில்லை. உங்கள் பணியாட்கள் சொன்னார்கள்."

"அவர்கள் உளறியிருப்பார்கள்."

"என்ன ஐயா சொல்கிறீர்கள்?"

"நான் நன்கொடைகளை மட்டுமல்ல நல்லது அல்லாத கொடைகளையும் நிறுத்தி விட்டேன். எட்டு மாதங்களாகி விட்டன."

அமைச்சருக்குப் பெருத்த ஏமாற்றமாக இருந்தது.

"ஐயா! நான் நன்கொடை கேட்க வந்தது என் சொந்த உபயோகத்திற்காக அல்ல. எங்கள் மன்னர் திருவரங்கத்தில் செய்து வரும் ஆலயத் திருப்பணிக்காக." என்றார்.

"மன்னரே பிச்சை எடுக்க ஆரம்பித்து விட்டாரா? மெச்ச வேண்டிய விஷயம் தான்" என்று இகழ்ந்தான் தனநந்தன்.

அமைச்சருக்குப் பெருங்கோபம் மூண்டாலும் அடக்கிக் கொண்டு "நீங்கள் மன்னரைப் பற்றி அவ்வாறு பேசுவது மிகவும் தவறு. ஆலயத் திருப்பணிக்காக நன்கொடைகளைக் கேட்பது பிச்சையாகாது. அது ஓர் அறம். அதில் பங்கு பெறுவதற்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டும்." என்றார்.

"உங்களுக்கெல்லாம் செல்வந்தர்களைக் கண்டால் கண்கள் உறுத்தும். உடம்பு வேர்க்கும். அவர்களிடம் தானம் பெறா விட்டால் கட்டை வேகாது. இதுதான் உண்மை. இதை மறைக்க அர்த்தமற்ற வியாக்கியானங்களைச் செய்து நேரத்தை வீணடிக்கிறீர்கள். போய் வாருங்கள். போய் அழகான பெண்களை அனுப்புங்கள். அவர்களுக்குத் தான் தானம் செய்வேன் நான். மற்றவர்களுக்கு அவமானம் தான்" என்றான் தனநந்தன்.

"உன் ஆணவத்திற்கும் அநாகரீகத்திற்கும் எம்பெருமானே உனக்குப் பாடம் கற்பிப்பான்" உள்ளுக்குள் சொல்லிக் கொண்ட அமைச்சர் அங்கிருந்து புறப்பட்டார்.

திருப்பணி தொடர்ந்து கொண்டிருந்ததே தவிர "எப்போது தடைப்படும்" என்ற சந்தேகம் உள்ளுக்குள் இருந்து கொண்டு துளைத்தபடியால் விருந்தை உண்டு விட்டு வாந்தியை எதிர் பார்க்கும் நிலையில் இருந்தான் மங்கை வேந்தன்.

"மன்னவா! ஆலி நாட்டுச் செல்வந்தர்கள் மற்றும் அண்டை நாட்டுச் செல்வந்தர்கள் பலர் நிதி தரத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் தாங்களே நேரில் வந்து கேட்க வேண்டுமாம்" என்றார்கள் அமைச்சர்கள்.

மங்கை வேந்தன் சற்று யோசித்தான்.

"யாசிப்பது அகௌரவம் என்று நினைத்திருந்தேன். ஆனால் யாசிப்பது கட்டாயம் என்ற நிலை உருவாகி விட்டது. எது எப்படியோ திருப்பணி தடைப்படக் கூடாது" என்று சொல்லி அமைச்சர்கள் கூறிய இடங்களில் சென்று யாசித்தான்.

ஓரிரு செல்வந்தர்கள் மட்டும் உதவினார்கள். மற்றவர்கள் உதவாதது மட்டுமன்றி மன்னனிடம் கேலி வார்த்தைகளை உதிர்த்தார்கள். உண்டியலை ஏந்தி வீதி வீதியாகச் சென்றால் நிறைய நிதி கிடைக்கும் என்றார்கள்.

மங்கை வேந்தன் பெரிதும் குமைந்தான்.

நிழலில் ஒதுங்குவானை அழைத்து "நாகைப் பட்டினத்துச் செல்வந்தன் தனநந்தனிடம் எவ்வளவு செல்வம் இருக்கும்?" என்று கேட்டான்.

அவன் கேட்ட விதமே வித்தியாசமாக இருந்தது.

★★★



தருமாசனம்

"தனநந்தனிடம் இருக்கும் செல்வத்தைக் கொண்டு ஆறுமாதங்களுக்கு கோபுரத் திருப்பணியைச் செய்யலாம் மன்னவா" என்று சாதுரியமாகப் பதிலைச் சொன்னார் அமைச்சர் நிழலில் ஒதுங்குவான்.

"அவனிடம் நன்கொடை கேட்டுச் சென்ற உன்னை ஒன்பது நாட்களாகக் காத்திருக்கச் செய்து கடைசியில் நன்கொடை செய்யும் வழக்கத்தை நிறுத்தி விட்டேன் என்றான். இல்லையா?"

"ஆம், மன்னவா."

"அழகான பெண்களை அனுப்பிவை தானம் செய்கிறேன் என்றான் இல்லையா?"

"ஆம் மன்னவா."

"திருப்பணிக்காக நன்கொடை பெறுவதை இகழ்ந்தான் இல்லையா?"

"ஆம் மன்னவா."

"மொத்தத்தில் தரக்குறைவாகப் பேசி அவமதித்தான் இல்லையா?"

"ஆம் மன்னவா."

"மந்திரி! தனநந்தன் இதன் மூலம் தன்னை யார் என்று உணர்த்தி விட்டான் இல்லையா?"

"ஆம் மன்னவா. அவன் கேடு கெட்டவன்."

"கேடு கெட்டவனிடம் செல்வம் இருப்பது கேடு தானே?"

"ஆம் மன்னவா."

"அது ஆலயப் பணிக்குச் செலவானால் சிறப்பாக இருக்கும். அல்லவா?"

"ஆம் மன்னவா."

"அவனது செல்வங்களை அரங்கன் திருப்பணிக்குச் செலவிடுவது என்று நான் முடிவு செய்து விட்டேன்."

"நல்ல முடிவு மன்னவா. ஆனால் தனநந்தன் அவற்றைத் தரமாட்டானே!"

"அதுதான் தெரிந்து விட்டதே! கேடு கெட்டவனிடம் உள்ள செல்வம் அவனையும் கெடுக்கும். நாட்டையும் கெடுக்கும். இது அவனுக்கு இந்த ஜென்மத்தில் புரியப் போவதில்லை. புரிய வைக்கும் முயற்சியில் நாம் இறங்கப் போவதுமில்லை. அவனிடமுள்ள செல்வத்தை நாம் பெறவேண்டும். நீ சில நாட்களுக்கு முன்னால் எனக்கு அறிமுகப்படுத்த விரும்பினாயே ஒருவனை - தாளுதுவான் - அவனை உடனடியாக வரச் சொல்."

"மன்னவா! தங்கள் நோக்கம்?"

"உனக்குமா புரியவில்லை? மந்திரிக்குப் புரியாவிட்டால் யாருக்குத் தான் புரியும்? நிழலில் ஒதுங்குவான்! நன்றாகக் கேட்டுக் கொள். தாளுதுவானைக் கொண்டு தனநந்தனிடம் செல்வத்தைக் கவர வேண்டும். இதுவே என் தீர்மானம்."

"அது களவு அல்லவா?"

"பெயர் எதுவாக வேண்டுமானாலும் இருக்கட்டும். பயன்படாத செல்வமும் தவறாகப் பயன்படும் செல்வமும் யாரிடம் இருந்தாலும் தவறு தான். அதை எடுத்து ஆலயத் திருப்பணி என்னும் நற்காரியத்திற்குப் பயன்படுத்துவதே சரி. இதற்கெல்லாம் பெயர் வைக்காதே."

"இதை நான் எதிர்பார்க்கவில்லை."

"அதனால் ஒரு பாதகமும் இல்லை. இப்போது தெரிந்து விட்டதல்லவா? கூப்பிடு அவனை."

"மன்னவா! உங்கள் முடிவைப் பூரணமாக நான் ஏற்கிறேன். தாளுதுவானை உடனே வரச் சொல்கிறேன்" என்றார் அமைச்சர்.

மன்னன் தெளிவாகப் பேசுவதாகவே தோன்றியது அவருக்கு.

அன்று பகல் நேரத்தில் மங்கை வேந்தனிடம் வழக்கு ஒன்றைக் கொண்டு வந்தார் தருமாசனத்தின் காரியஸ்தர்.

"என்ன வழக்கு?"

"மனைவி கற்பை இழந்து விட்டாள் என்கிறான் கணவன். அவள் கெட்டுப் போய் விட்டாள் என்கிறான். நியாயம் கேட்கிறான்."

"நியாயம் என்ன நியாயம்? பழுக்கக் காய்ச்சிய இரும்பைக் கொடுத்து அந்தப் பெண்ணைப் பிடித்துக் கொள்ளச் சொல்லுங்கள். இரும்பு சுட்டால் அவள் பத்தினியல்ல. சுடாவிட்டால் பத்தினி" என்று கூறிவிட்டுச் சென்றான் மங்கை வேந்தன்.

அதிர்ந்து போனான் தர்மாசனத்தின் காரியஸ்தன்.

மன்னன் உதிர்த்த வார்த்தை ஞரியானது போலத் தான் தோன்றியது. சரியில்லையோ என்றும் தோன்றியது.

மன்னன் பொறுப்போடு பேசினானா பொறுப்பில்லாமல் பேசினானா என்பதை அவனால் புரிந்து கொள்ள முடிய வில்லை.

திருமங்கை நகரத்து வழக்கு மன்றமான தருமாசனத்தின் தலைவன் மங்கை வேந்தன் தான்.

சாதாரணமாக வழக்குகள் வந்தால் பெரும்பாலும் அவற்றைத் தோலா வழக்கனிடம் ஒப்படைத்து விசாரிக்கச் சொல்வான். அதற்கும் மீறி வழக்கு பிரச்சனையாக இருந்தால் மட்டுமே அவன் தர்மாசனத்தில் அமர்ந்து தீர்ப்பளிப்பான்.

அப்படியெல்லாம் சொல்லாமல் வழக்கைக் கேட்ட மறு நிமிடமே தீர்ப்பளித்து விட்டதை அவனால் ஜீரணிக்க முடியவில்லை. அதோடு மன்னன் கூறியதை மறுபரிசீலனை செய்யும் உரிமை அவனுக்கும் இல்லை. அமைச்சர்களுக்கும் இல்லை. எப்படிச் செயல்படுவது என்று தெரியாமல் தவித்த அவன் மங்கை வேந்தனின் தர்மபத்தினியான குமுதவல்லியிடம் போய்த் தெரிவித்தான்.

"மன்னரா அவ்வாறு சொன்னார்?" என்று நம்ப முடியாமல் கேட்டாள்.

"ஆம். தாயே. அவர் நிதானத்தில் இருந்து கூறிய மாதிரித் தெரியவில்லை. நான் இப்படிக் கூறுவதற்காக என்னை மன்னிக்க வேண்டும்" என்றான் காரியஸ்தன்.

"மனைவி முறை தவறி நடந்தாள் என்ற குற்றச்சாட்டை இப்படித் தான் பரிசோதிப்பார்களா?" என்று கேட்டாள் குமுதவல்லி.

"தர்மாசன விதிமுறைகளில் அப்படியொரு விதிமுறை இருப்பது உண்மைதான். ஆனால் தற்போதெல்லாம் அது போன்ற பரிசோதனைகள் செய்யப் படுவதில் லை. விசாரணை தான் நடத்தப் படுகிறது."

"சரி ஐயா. நான் மன்னரிடம் பேசுகிறேன். அது வரையில் அந்தப் பெண்ணை அது மாதிரியான எந்தச் சோதனைக்கும் ஈடுபடுத்த வேண்டாம்."

"பரிக்க நன்றி தாயே. தங்கள் உதவியை தர்மாசனம் என்றைக்கும் மறக்காது" என்று கூறிவிட்டு பெருமூச்சு விட்டபடி அகன்றான் காரியஸ்தன்.

அன்றுஇரவு வெகுநேரம் கழிந்த பின்பே இல்லத்திற்குத் திரும்பினான் மங்கை வேந்தன். அவனுக்கு உணவளித்துப் பணிவிடைகள் செய்தாள் குமுதவல்லி.

"எனக்குக் கட்டிலும் மெத்தையும் வேண்டாம் குமுதவல்லி. அரங்கனின் திருப்பணி முடியும் வரை நான் தரையில் தான் படுக்கப் போகிறேன்" என்றான் மங்கை வேந்தன்.

"சுவாமி! திருப்பணிகள் நடந்து கொண்டு தான் இருக்கின்றன. அவற்றுக்கு எந்தத் தீங்கும் வராது. தாங்கள் கட்டிலைத் துறக்க வேண்டிய அவசியம் எதுவும் இல்லை" என்றாள் குமுதவல்லி.

"ஒன்றைத் துறந்தால் தான் மற்றொன்று கிடைக்கும் குமுதவல்லி. இது உலக நீதி. நான் கட்டிலைத் துறப்பது எனக்குள் ஒரு வைராக்கியத்தை உண்டாக்கிக் கொள்வதற்காகத் தான். பெரிய காரியங்களைச் சாதிக்கும் போது வைராக்கியம் மிகவும் அவசியம்" என்றான் மங்கை வேந்தன்.

சொல்லி விட்டுத் தரையிலேயே படுத்தான். தலைக்குத் தலையணையை வைத்து விட்டு அவனது கால்களைப் பிடித்து விட்டாள் குமுதவல்லி. அவன் உடனடியாகவே உறங்கிப் போனான்.

"பாவம்! அளவுக்கு மீறிய வருத்தம். உறங்கி விட்டார்" என்று அனுதாபப் பட்ட அவள் அரங்கனையும் வேண்டிக் கொண்டு படுத்தாள்.

மறுநாள் மன்னன் அரண்மனைக்குப் புறப்படவிருந்த போது "சுவாமி! நான் நேற்றைக்கு ஒரு விஷயத்தைக் கேள்விப் பட்டேன். தர்மாசன காரியஸ்தர் சொன்னார். அது உண்மையா?" என்று கேட்ட குமுதவல்லி வழக்கு விவரத்தைச் சொன்னாள்.

"அப்படியா நான் சொன்னேன்?"

"காரியஸ்தர் தான் சொன்னார்."

"சரியாகத் தான் சொல்லியிருக்கிறேன் குமுதவல்லி. முறை தவறியவர்களை அப்படிப் பரிசோதிப்பது நடைமுறையில் இருக்கும் விஷயம் தான்."

"சுவாமி! தாங்களா இப்படிப் பேசுவது, கள், கொலை, கொள்ளை போன்ற வழக்குகளில் அதுவும் ஆதாரங்களும் சாட்சிகளும் கிடைக்காத போது தான் இது போன்ற பரிசோதனைகளை மேற்கொள்வார்கள் என்று எனது தந்தையார் கூறுவார். இந்த விஷயமானது பெண்ணின் கற்பு சம்பந்தப் பட்ட விஷயம். இதைப் பொதுவில் விசாரிப்பதோ, காய்ச்சிய இரும்பைக் கைப்பற்றச் சொல்வதோ சரியாகுமா? மக்களை நேசித்து ரட்சிக்கும் அரசர் இப்படி முன்யோசனையின்றிக் கட்டளையிடலாமா? மன்னரது செங்கோல் இவ்வாறு சாயலாமா? செங்கோல் சாய்ந்தால் கோள்களும் சாய்ந்து கெடும் என்றும், மழை பொய்க்கும் என்றும் சான்றோர்கள் கூறியதை மறந்து விட்டீர்களா? கோல் சாய்ந்து-கோள் சாய்ந்து - மழையும் பொய்த்தால் ஜீவராசிகள் வாழ இயலுமா? மக்களைத் தன்னுயிராய் எண்ண வேண்டிய மன்னர் இப்படி நடந்து கொள்ளலாமா?"*

மங்கை வேந்தன் அவளை ஏற இறங்கப் பார்த்து விட்டு "நீ மிகவும் உணர்ச்சி வசப்பட்டு நான் தவறு செய்து விட்டதாகப் பேசுகிறாய். பெண்கள் தங்கள் தூய்மையை நிரூபிக்க அக்னிப் பரீட்சையே மேலானது என்பதை இராமாயணம் நமக்கு உணர்த்த வில்லையா? மகா பதிவிரதையான சீதா தேவியை இராமபிரான் தீயில் இறங்கச் சொன்னது எதற்காக குமுதவல்லி? சீதா தேவி அக்னியில் இறங்கித் தான் தனது தூய்மையை நிரூபித்தாளே யன்றி உன்னைப் போல் பரிசோதனையைக் குறை கூறி வாதிடவில்லை" என்றான்.

"சுவாமி! ராமபிரான் சீதாதேவியை அக்னி பரீட்சைக்கு உட்படுத்தியது உலகத்திற்காகவே. அவருக்கு எந்தச் சந்தேகமும் இல்லை. இங்கே வழக்கிற்கு வந்திருப்பவர்கள் சாமானியர்கள். கணவன் மனைவி மீதுள்ள சந்தேகம் காரணமாக வழக்கு தொடுத்திருக்கிறான். இதற்குக் கடுமையான சோதனைகள் தேவையில்லை. விசாரணையே போதும்."

"நானிருக்கும் நிலையில் விசாரணையெல்லாம் நடத்திக் கொண்டிருக்க முடியாது."

---

* கோல்நிலை திரிந்திடின் கோள்நிலை திரியும்
கோள்நிலை திரிந்திடின் மாரிவறங் கூறும்
மாரிவறங் கூரின் மன்னுயிர் இல்லை
மன்னுயிர் எல்லாம் மண்ணாள் வேந்தன்
தன்னுயிர் என்னும் தகுதியின் றாகும்.
மணிமேகலை - 7. வரி 8-12.

“நான் பார்த்துக் கொள்கிறேன். தர்மாசனத்தில் ராணியாக அமர்ந்து அவர்களை விசாரிக்கிறேன். தீர்ப்பு வழங்குகிறேன்.”

“மிக்க சந்தோஷம். இப்போதாவது நீ ராணியாக அமர சம்மதித்தாயே. நல்லது தான். உன்னை உன் விருப்பப்படி அனுமதிக்கிறேன். நல்லதைச் செய் குமுதவல்லி. அது தான் தேவை” என்று கூறிவிட்டு அகன்றான் மங்கை வேந்தன்.

அரண்மனையில் தாளுதுவான் வரவழைக்கப் பட்டிருந்ததால் அவனையும் இதர அமைச்சர்களையும் அழைத்துக் கொண்டு காட்டுப் பகுதிக்குச் சென்றான்.

அவன் அரண்மனையில் இல்லாதது குமுதவல்லிக்கு ஆறுதலாக இருந்தது.

தருமாசனம் என்னும் நீதிமன்றத்தில் ராணியாக அமர்ந்த அவள் காரியஸ்தனை அழைத்து வழக்காளிகள் இருவரைத் தவிர யாரையும் உள்ளே அனுமதிக்க வேண்டாம் என்றும் வேறு யாரும் அங்கே இருக்க வேண்டாம் என்றும் கட்டளையிட்டாள்.

முதலில் குற்றம் சாட்டப்பட்ட பெண்ணை மட்டும் அழைத்தாள்.

“உன் மீது உனது கணவன் உனது நடத்தை விஷயமாகப் பெருங்குற்றத்தைச் சாட்டியிருக்கிறான். அது உண்மையா?” என்று கேட்டாள்.

“இல்லை மகாராணி. சிறிது கூட உண்மையில்லை” என்றாள் அந்தப் பெண்மணி.

“நீ சொல்வதை எப்படி நம்புவது?”

“என் தாய் மீது சத்தியமாகச் சொல்கிறேன்.”

“வேறு சாட்சி உண்டா?”

“பழுக்கக் காய்ச்சிய இரும்பைக் கொண்டு வரச் சொல்லுங்கள் மகாராணி. அதைப் பற்றுகிறேன். என் தூய்மையை நிரூபிக்கிறேன்.”

“உன் மீது உன் கணவன் எதற்காக இக்குற்றச் சாட்டைச் சொல்கிறான்?”

“அவருக்கு என்னைப் பிடிக்க வில்லை மகாராணி. அதோடு இன்னொரு பெண்ணை மணக்க விரும்புகிறார். அதற்காகவே என் மீது குற்றம் சாட்டி மனைவி என்ற பந்தத்திலிருந்து விடுவிக்க நினைக்கிறார்.”

“உங்களுக்குத் திருமணமாகி எவ்வளவு காலம் ஆகிறது?”

“பத்து ஆண்டுகள்.”

"குழந்தைகள்?"

"இரண்டு"

"சரி. நீ செல்லலாம்."

அவள் சென்ற பின் அவளது கணவன் வரவழைக்கப் பட்டான்.

"உன் பெயரென்ன?" என்று கேட்டாள் ராணி.

"அரிச்சந்திரன்."

"உன் மனைவி முறை தவறி நடந்து கொண்டாள் என்பதற்கு என்ன ஆதாரம்?"

"மகாராணி. என் பெயர் அரிச்சந்திரன். நான் பொய் சொல்ல மாட்டேன்."

"இருக்கட்டும். நான் கேட்டதற்குப் பதில் சொல். சாட்சி இருக்கிறதா?"

"இருக்கிறது மகாராணி. ஆனால் அது உருவமற்றது. சாட்சி சொல்லாது."

"அது என்ன சாட்சி?"

"மனச்சாட்சி. அது சொல்கிறது. அது பொய் சொன்னதில்லை."

"வழக்கு என்று வந்து விட்ட பிறகு சாட்சி இல்லாமல் குற்றச் சாட்டை ஏற்கமுடியாது. மனசாட்சியை சாட்சியாக வரவேற்க முடியாத நிலையில் நீ உன் குற்றச் சாட்டை உண்மை என்று காட்டுவதற்கு ஒரு வழிதான் இருக்கிறது. பழுக்கக் காய்ச்சிய இரும்பைக் கொண்டு வரச் சொல்கிறேன். அதை நீ இரண்டு கைகளாலும் இறுகப் பற்றிக் கொள்ள வேண்டும். இரும்பு உன் கைகளைச் சுட வில்லை என்றால் உன் குற்றச் சாட்டை ஏற்கிறேன்."

அரிச்சந்திரன் யோசித்தான்.

"இல்லையென்றால் விஷப்பாம்பு இருக்கும் குடத்திற்குள் உன் கையை விடு. நீ குற்றச் சாட்டைக் கூறுவது சரியானது தான் என்றால் பாம்பு உன்னைத் தீண்டாது. என்ன சொல்கிறாய்?"

அரிச்சந்திரனுக்கு வியர்த்துக் கொட்டியது.

★★★



தீர்ப்பும் தவிப்பும்

ராணி கூறிய பரிசோதனை எதையும் சந்திக்க அரிச்சந்திரன் தயாராக இல்லை. குட்டு வெளிப்பட்டு விடும் என்பதை உணர்ந்து கொண்டதால் ராணியின் கால்களில் விழுந்து தனது குற்றச் சாட்டு பொய்யானது என்பதை ஒப்புக் கொண்டான்.

உன் மனைவியிடம் இதே பரிசோதனையைக் கூறிய போது அதற்கு உட்படத் தயாராக இருந்தாள். அதுதான் சத்தியத்திற்கு இருக்கும் தைரியம். இரண்டு குழந்தைகளுக்குத் தந்தையான உனக்கு இன்னொரு பெண்ணை மணந்து கொள்ள வேண்டும் என்ற ஆசை வந்தது கூடத் தவறில்லை. ஆனால் அவளை மணக்க வேண்டும் என்பதற்காக உன் மனைவியின் மீதும் அவள் கற்பின் மீதும் குற்றம் சுமத்தினாயே அது கீழ்த்தரமானது. மனித சுபாவமேயல்ல. அரக்க சுபாவம். அயோக்கியத் தனம். மகாபாவம். அரிச்சந்திரன் என்ற பெயரைக் கொண்ட நீ பொய்யைப் பேசியிருக்கிறாய். மனசாட்சியே சாட்சி என்றாய். எல்லாம் வெறும் பிதற்றல் என்பது இப்போது விளங்கிவிட்டது. உன் மனைவியை அடைவதற்குப் பல ஜென்மங்களாக நீ புண்ணியம் செய்திருக்க வேண்டும். நீ உண்மையை ஒப்புக் கொண்டாலும் மனைவியின் மீது பொய்யான குற்றச் சாட்டைக் கூறி வழக்காக்கி மன்னர் வரை கொண்டு வந்து ரசாபாசமாக்க முனைந்திருக்கிறாய். அது தண்டனைக்குரியது. அதை இந்தத் தர்மாசனம் வழங்குவதை விட உன் தர்ம பத்தினியே வழங்குவது தான் சரி" என்று கூறிய ராணி அவனது மனைவியை அழைத்தாள்.

"அம்மா! உன் கணவன் உன் மீது தவறான குற்றச் சாட்டைச் சுமத்தியதாகச் சொல்லி ஒப்புக் கொண்டான். அவனது செய்கை தண்டனைக் குரியது. அதை நீயே வழங்கு" என்றாள்.

"தாயே! நான் ஒருமுறை கூடத் தவறாக நடந்து கொள்ள வேண்டும் என்று எண்ணியதில்லை. அப்படிப்பட்ட என்மீது இப்போது களங்கம் சுமத்தப்பட்டுள்ளது. அவரோடு வாழும் அருகதை எனக்கில்லை. அவர் யாரோடு வேண்டுமானாலும் வாழ்ந்து கொள்ளட்டும். குழந்தைகளை மட்டும் என்னிடம்

கொடுத்து விடச் சொல்லுங்கள். நாங்கள் வயலாளி பெருமான்* ஆலயத்தில் தேவரடியாளாகச் சேர்ந்து சேவை செய்கிறேன்" என்றாள் அப்பெண்.

அவளது பேச்சைக் கேட்டு அவளது கணவன் மட்டுமின்றி ராணியும் அதிர்ந்தாள்.

"அப்படியெல்லாம் சொல்லாதே அம்புஜவல்லி. தெய்வமான உன்னைச் சிலை என்று நினைத்து நான் கலைந்து போய் விட்டேன். குலைந்து போய் விட்டேன். இனி நான் எத்தனைப் பிறவி எடுத்தாலும் உன் போன்றவள் கிடைக்க மாட்டாள். மாணிக்கத் தேரை மண்மேடாக எண்ணிய பாவி நான். மங்கலக் கலசத்தை மண்பாண்டமாகக் கருதிவிட்ட கயவன் நான். எனது பாவம் தீரவேண்டுமானால் வாழ்நாள் முழுக்க உனக்குச் சேவை செய்தாக வேண்டும். என்னைப் பிரித்து விடாதே வல்லி. என் கண்மணியாகக் கருதி இனி உன்னைக் காப்பேன். என்னை மன்னித்து விடு" என்று கண்ணீர் விட்டான் அரிச்சந்திரன்.

ராணியும் பேசமுற்பட்டு "உன் பேச்சு தவறான பேச்சு அம்புஜ வல்லி. தெய்வச் சிலையை ஒருவன் கல் என்று சொல்லி விட்டால் அது கல்லாகி விடாது. அப்படித்தான் இதுவும். உன்னை இவன் களங்கமானவள் என்று கூறியதாலேயே நீ அப்படி ஆகி விட மாட்டாய். அது சரி என்றால் இப்போது அதே கணவன் உன்னைத் தெய்வம் என்கிறான். மாணிக்கத் தேர் என்கிறான். மரகதக் கலசம் என்கிறானே, அதுவும் உண்மைதானே! அதை ஏன் ஏற்கக் கூடாது நீ? உன் கணவனுக்குச் சபலம் வந்ததால் தவறாகப் பேசி விட்டான். தற்போது சபலத்தை உணர்ந்து உதறி விட்டான். உனக்குச் சேவை செய்வேன் என்கிறான். இதற்கு மேல் நீ மறுப்பதற்கும் வெறுப்ப தற்கும் எதுவுமில்லை. உனது இரு குழந்தைகளைக் காப்பாற்று வதற்குக் கணவனின் தேவை அவசியம். நீ தேவரடியாளாக இருந்து கொண்டு குழந்தைகளை எப்படிக் காப்பாற்ற முடியும். அதோடு தேவரடியாளாக ஆகும் தகுதி உனக்கு இல்லை. நீ கணவனோடு இல்லறம் நடத்த வேண்டியவள். நீ களங்கமற்ற தர்மபத்தினி. உன்மீது குறைகளும் இல்லை. கறைகளும் இல்லை. கணவனோடு சேர்ந்து கரையற்ற சந்தோஷத்துடன் வாழ்க்கையை நடத்து. இதுதான் இந்த வழக்கின் தீர்ப்பு. இது ராணியின் கட்டளை" என்று கூறி இருவரையும் அனுப்பி வைத்தாள்.

தர்மாசன காரியஸ்தன் அவளைக் கையெடுத்துக் கும்பிட்டான்.

"தர்ம தேவதையாகத் தாங்கள் தகுந்த நேரத்தில் வந்து இருவருக்கும் வழிகாட்டினீர்கள் ராணி. ஆலிநாட்டு

---

* திருவாலி-திருநகரியில் எழுந்தருளியுள்ள பெருமாள்.

தர்மாசனத்தின் கௌரவத்தையும் இறையாண்மையையும் காப்பாற்றி உயர்த்தியிருக்கிறீர்கள். தர்மாசனத்தின் சார்பாகத் தங்களுக்கு என் வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றாள்.

குமுதவல்லிக்கு மிகவும் திருப்தியாக இருந்தது. வழக்கானது சரியான வழியில் பயணித்தது அவளுக்கு இதமாக இருந்தது.

மங்கை வேந்தன் கூறியிருந்த படி பரிசோதனை நடந்திருந்தால் அம்புஜவல்லிக்கு எதுவும் சேதம் உண்டாகியிருக்காது என்பது இப்போது புரிந்தது. இருப்பினும் மன்னன் காரியஸ்தனுக்குக் கட்டளையிட்டு விட்டுச் சென்ற போது விபரீதமாக எதுவும் நடந்து விடக் கூடாது என்ற அச்சமே அவளுக்கு இருந்தது. நடைமுறையில் தற்போது இல்லாத பரிசோதனைகளைத் திடீரென நிறைவேற்றினால் மன்னன் மீது மக்கள் கொண்டிருக்கும் மதிப்பும் மரியாதையும் கேள்விக் குறியாகி விடுமே என்று கலங்கினாள். இந்த நிலையில் தான் குறுக்கிட்டு அபவாதம் எழாத வண்ணம் செய்து விட்டதால் மகிழ்ந்தாள்.

அந்த மகிழ்ச்சியை மங்கை வேந்தனிடம் தெரிவிக்க விரும்பினாள். ஆனால் அவன் அரண்மனையில் இல்லை. இல்லத்திற்கும் வரவில்லை.

மறுநாள் அவளுக்கு அவனது ஆக்ஞாபத்திர ஓலை வந்தது. அதில் அவள் அரிச்சந்திரன்-அம்புஜவல்லி வழக்கைத் திறம்பட நடத்தியதற்காகப் பாராட்டு தெரிவித்திருந்த மங்கை வேந்தன் அவளை அரியணையில் அமர்ந்து தனக்குப் பதிலாகச் செங்கோல் புரியும்படிக் கட்டளையிட்டிருந்தான். மறு அறிவிப்பு வரும்வரை அவள் ஆலிநாட்டு அரசியாக விளங்கவேண்டும் என்று முடித்திருந்தான்.

தர்மாசனத்தில் ராணியாக அமர்ந்து வழக்கை நல்ல விதமாகத் தீர்த்திருந்த நிலையில் குமுதவல்லிக்குப் பதவியின் மீதான ஆசை லேசாகத் தோன்றி மறைந்திருந்தது. தற்போது மன்னனே தன்னைத் தற்காலிகமாக அரியணையில் அமரும் படிச் சொன்ன போது தோன்றி மறைந்திருந்த பதவியாசை தலைபைக் காட்டி அவளைப் பார்த்துச் சிரித்தது. அவளும் சிரித்தாள் கொஞ்ச காலத்திற்குத் தானே என்று எண்ணிக் கொண்டாள். அவளுக்குள் குழந்தைக் குதூகலம் குட்டி ஆட்டம் போட்டுக் குதித்தது.

எனவே அரியணையில் அமர்ந்து அழகு பார்த்தாள்.

அவளுக்கு ஆலோசனை சொல்ல மங்கை வேந்தனின் அமைச்சர்கள் இல்லை. அவர்கள் அவனோடு சென்றிருந்தார்கள்.

ஆதலால் அரண்மனையில் இருந்த பல்வேறு காரியஸ்தர்கள் அவளுக்கு உதவினார்கள்.

அங்கொன்றும் தீர்க்கப்பட வேண்டிய அரசியல் பிரச்சனைகள் இல்லாததால் அரியணையானது அவளுக்கு முள்படுக்கையாக இல்லை. மலர் மெத்தையாகவே இருந்தது.

அதை அவள் தந்தையிடமே சொன்னாள்.

"உன் எண்ணம் தவறு மகளே. அரியணை என்பது மலர் மெத்தை யல்ல. அதில் அமர வைக்கும் கருவியான பதவி என்பது அபாயகர மானது. அது ஒரு வேசியைப் போன்றது அம்மா. ஆசைப்பட்டு ஒட்டிக் கொண்டால் விலக முடியாது" என்றார் தந்தை.

"அவர் வந்ததும் ஒப்படைத்து விடுவேன் தந்தையே. தாங்கள் சொல்வது போல் பதவிப் பற்று எதுவும் எனக்கில்லை. இருந்திருக்குமானால் அவர் மன்னராகத் திருமங்கையில் முடி சூடிய போதே நான் ராணியாக அமர்ந்திருக்க மாட்டேனா?" என்றாள் குமுதவல்லி.

அவளிடம் குதூகலம் இருந்ததே தவிர பதவி மீதான மோகம் எதுவும் உண்டாகவில்லை. மங்கை வேந்தன் ஓரிரு நாட்களில் வந்து விடுவான் என்றும் வந்ததும் ஒப்படைத்து விட்டுச் சென்று விடலாம் என்பது தான் அவளது எண்ணமாக இருந்தது.

ஆனால் நாட்கள் பத்தாகியும் மங்கை வேந்தனும் சரி அமைச்சர்களும் சரி ஆலிநாட்டிற்கு வரவில்லை. திருப்பணி நிதிக்காக அலைந்து கொண்டிருப்பார்கள் என்று எண்ணிக் கொண்டிருந்தாள்.

நாட்கள் பத்து ஆகியும் அவர்கள் வராததால் அவளுக்குக் கவலை உண்டாகியது. அவர்களுக்கு ஆபத்து ஏதாவது ஏற்பட்டிருக்குமோ என்ற வருத்தமும் ஏற்பட்டது.

இந்நிலையில் காரியஸ்தன் ஒருவன் வந்து மங்கை வேந்தனைப் பற்றி தெரிவித்த ஒரு செய்தி இடிபோல் இறங்கியது குமுதவல்லிக்கு.

"காரியஸ்தரே! மன்னரைப் பற்றி நீங்கள் கூறுவது செய்தியல்ல. அவதூறு. இதை மறந்து விடாதீர்கள்" என்றுச் சினந்தாள்.

"மகாராணி! நாராசமான வார்த்தைகளை நவில நேர்ந்தது என் துர்ப்பாக்கியம் தான். தங்களைப் பற்றியோ மன்னரைப் பற்றியோ நான் அறியாதவன் அல்ல. அவர் மீது மாறாக மரியாதையை உடையவன் நான். அவர் மீது தவறுதலாக அவதூறு கூறினால் என் நாக்கு அழுகிப் போகும். இல்லை இல்லை. நாக்கை நானே அறுத்துக் கொள்வேன். ஆகவே என் வார்த்தைகளைச் சந்தேகிக்கா

தீர்மானம் முடிந்தவற்றை நன்றாக உறுதி செய்து கொண்ட பிறகு தான் முடிவைப் பற்றிச் சொல்கிறேன். முதலில் யாரிடமும் சொல்ல வேண்டாம் என்று தான் நினைத்தேன். ஆனால் மன்னரது அரியாசனத்தில் தாங்கள் மகாராணியாக அமர்ந்திருக்கும் காரணத்தால் தங்களுக்குத் தெரிவித்தே ஆக வேண்டும் என்பதை உணர்ந்து தெரிவித்து விட்டேன். நான் கூறியது அனைத்தும் உண்மை என்பதை இந்நாட்டின் மீது ஆணையிட்டுச் சொல்கிறேன். என்னை மன்னியுங்கள் தாயே" என்றான் காரியஸ்தன்.

குமுதவல்லிக்கு இதயம் வெடித்து விடும் போலிருந்தது.

"காரியஸ்தரே! நீங்கள் தெரிவித்த செய்தி உண்மை என்று நீங்கள் சத்தியம் செய்து கூறினாலும் அது பொய்யாக இருக்க வேண்டும் என்றே எம்பெருமானை நான் வேண்டிக் கொள்கிறேன். அப்படியொரு காரியம் நடந்திருக்கவே கூடாது. யார் செய்த பாவமோ! நடந்திருப்பதாகச் சொல்கிறீர்கள். ஐயா! இச்செய்தி நமக்குள்ளேயே இருக்க வேண்டும். எந்தக் காரணம் கொண்டும் இதை யாரிடமும் நீங்கள் கூறி விடக் கூடாது. உங்களை நம்பலாம் அல்லவா?" என்று கேட்டாள்.

"மகாராணி! வேண்டுமானால் இதற்கும் சத்தியம் செய்கிறேன். இந்தச் செய்தியை இதோடு மறந்து விடுகிறேன்" என்றான் காரியஸ்தன். குமுதவல்லிக்குள் புயல் வீசியது. ஆழிப் பேரலைகள் ஆர்ப்பரித்தன. கட்டுக் கடங்காத வெள்ளம் கரைபுரண்டு ஓடின. ஐயோ! ஐயோ! என்று மனம் அலறியது.

அச்செய்தியைக் கேட்டதிலிருந்து அவள் உண்ணவில்லை.

மறுநாள் மங்கை வேந்தன் இல்லத்திற்கு வந்தான். அவனது முகம் கறுத்திருந்தது. முழுநிலவு போல் விகசிக்கக் கூடிய அவனது முகம் கார்மேகம் போல் ஆகியிருந்ததைக் கண்டு 'செய்தி உண்மைதான்' என்று நினைத்தாள் குமுதவல்லி.

"உணவு கொண்டு வா குமுதவல்லி. இரண்டு நாட்களாக எதுவும் உண்ணவில்லை" என்றான் மங்கை வேந்தன்.

அவனது குரலும் கெட்டுப் போய்க் கட்டியிருந்தது.

குமுதவல்லி உடனடியாக உணவைக் கொண்டு வந்து வைத்ததும் அரக்கனைப் போல அள்ளி அள்ளி உண்டான் மங்கை வேந்தன். அவனைப் பார்ப்பதற்கு மிகவும் கஷ்டமாக இருந்தது அவளுக்கு. பாவம் என்று ஒரு புறம் அனுதாபப் பட்டாள். அதே சமயம் மறுபுறம் அவனது செய்கையை நினைத்துக் கோபமும் கொண்டாள்.

"சுவாமி! அந்த அரிச்சந்திரன்-புஷ்பவல்லி வழக்கைச் சுமூகமாக முடித்து விட்டேன்" என்றாள் அவனை உற்சாகப் படுத்துவது போல்.

அவனோ "அப்படியா? நல்லது" என்று உற்சாகமில்லாமல் கேட்டபடி உணவுண்பதில் வேகத்தைக் காட்டினான்.

ஒருவாறு உண்டு முடித்து ஆசனத்தில் சாய்ந்து அமர்ந்து கொண்டு பெருமூச்செறிந்து ஆசுவாசப் படுத்திக் கொண்டான்.

"எங்கே போயிருந்தீர்கள் சுவாமி? பத்து நாட்களுக்கு மேலாக உங்களைக் காணவில்லையே! என்னிடம் கூடச் சொல்ல வில்லையே!" என்று மெல்லக் கேட்டாள் குமுதவல்லி.

அவன் ஏதோ நினைவில் இருந்ததால் அவளுக்குப் பதில் சொல்லவில்லை.

அதைக் கவனித்த அவள் "சுவாமி! நான் கேட்டது காதில் விழவில்லையா? என்ன யோசனை?" என்று கேட்டாள்.

அவன் சற்றே தெளிவடைந்து "என்ன கேட்டாய்? எங்கே போயிருந்தேன் என்று தானே கேட்டாய்? நான் எங்கே போகப் போகிறேன் குமுதவல்லி? திருப்பணிக்கு நிதி திரட்டத்தான் போயிருந்தேன்" என்றான்.

"நானும் அப்படித் தான் நினைத்தேன். ஆனாலும் இத்தனை நாட்களாகவா தொடர்ந்து அலைந்து கொண்டிருந்தீர்கள்? வெளி தேசத்திற்குச் சென்றிருந்தீர்களா?"

"ஆமாம். ஆமாம். உள்ளூரிலேயே உலவிக் கொண்டிருந்தால் யார் கொடுப்பார்கள்?"

"கடல் கடந்து சென்றீர்களா?"

"அவசியம் வந்தால் நிச்சயம் செல்வேன். எனக்கு அரங்கன் முக்கியம். அவனது ஆலயம் முக்கியம். அந்த ஆலயத்துத் திருப்பணிகள் முக்கியம். அதற்கான நிதி முக்கியம்."

"எல்லாம் முக்கியம் என்கிறீர்களே! தர்ம நியாயங்கள் முக்கியமல்லவா?"

"இல்லை என்று நான் சொல்லவில்லையே!"

"அப்படியானால் நாகப் பட்டினத்தில் செல்வந்தரான தனநந்தனின் செல்வங்களைத் திருடியிருக்கிறீர்களே அதற்கு என்ன பெயர் சுவாமி?" என்று கேட்டாள் குமுதவல்லி.

அவளது முகம் சிவந்து பந்த ஒளியில் தீக்கனல் போல் காட்சியளித்தது.

★★★



அரியணையில் ராணி

மங்கை வேந்தன் ஆசனத்தை விட்டு எழுந்து "இது என்ன புதுக்கதை? ரசமாக இருக்கிறதே!" என்று கேட்டபடி உலவினான்.

"பொய்யும் சொல்லத் துணிந்து விட்டீர்களா?" என்று கேட்டாள் குமுதவல்லி. அவளது கோபம் கலைந்து போய் வேதனை விரிந்ததால் கண்கள் கலங்கின.

அவளைக் கவனிக்காமலேயே உலவிய அவன் "கனவு ஏதாவது கண்டாயா குமுதவல்லி?" என்று கேட்டான்.

"கனவாக இருந்திருந்தால் களிப்படைந்திருப்பேனே சுவாமி? ஆனால் இது கனவில்லையே?"

"இந்தக் கதையை உனக்குச் சொல்லியது யார்?"

"இந்தக் கேள்வியைக் கேட்பதற்குப் பதிலாக நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லியிருக்கலாமே சுவாமி! பொய்யைச் சொல்லி எதற்காக வீண் பேச்சுகளை வளர்க்கிறீர்கள்?"

"குமுதவல்லி! உனக்கு யார் சொன்னார்களோ? போகட்டும். நீ கேள்விப் பட்டது உண்மைதான்."

"என்ன? உண்மையா? திருடினீர்களா?"

"ஆம் குமுதவல்லி."

"அது தர்மமா? நியாயமா?"

"தர்மகாரியம் தான். நியாயமானது தான்."

"திருட்டைப் போய் நியாயம் என்றும் தர்மம் என்று கூறுவது நீங்கள் ஒருவராகத் தான் இருக்க முடியும். அரசர் நீங்கள். திருட்டைக் கண்டுபிடிக்க வேண்டிய தாங்கள் திருட்டில் ஈடுபடலாமா?"

"குமுதவல்லி! நான் செய்தது திருட்டே அல்ல. இருக்க வேண்டிய இடத்திற்குச் செல்வங்களை மாற்றினேன். அவ்வளவு தான்."

"மன்னரான தாங்கள் இப்படி வியாக்கியானம் செய்வது தகுமா? தங்கள் நாட்டில் திருட்டு நடந்தால் இப்படித் தான் தீர்ப்பு கூறுவீர்களா? திருடர்களை அழைத்துப் பாராட்டுவீர்களா?"

மங்கை வேந்தன் ஆசனத்தில் அமர்ந்தான்.

"கொஞ்சம் தண்ணீர் கொண்டு வா குமுதவல்லி" என்றான்.

அவள் தண்ணீரைக் கொண்டு வந்து கொடுத்து "விஷயத்தைக் கேள்விப் பட்டதிலிருந்து நான் உணவே உட்கொள்ளவில்லை" என்றாள்.

வாங்கியத் தண்ணீரைக் குடிக்காமல் அப்படியே வைத்த மங்கை வேந்தன் "முதலில் நீ உணவருந்து. பிறகு பேசுவோம்" என்றான்.

"நீங்கள் நீரைப் பருகுங்கள்"

"வேண்டாம். முதலில் நீ உணவருந்து. நீ உண்ணவில்லை என்பது முன்னரே தெரிந்திருந்தால் நான் சாப்பிட்டிருக்க மாட்டேன்."

"உணவு தொண்டைக்குள் இறங்காது சுவாமி. விஷயத்தைக் கேள்விப்பட்டதும் தொண்டை உணவை மறுத்து விட்டது."

"திருடிய எனக்கே உணவு இறங்கிய போது உனக்கென்ன? நீ சாப்பிட்டால் தான் நான் மேற்கொண்டு உன்னுடன் பேசுவேன்."

மங்கை வேந்தனின் பேச்சு உறுதியாக இருந்ததால் பிடிவாதம் பிடிக்காமல் குமுதவல்லி உள்ளே சென்று கொஞ்சம் உண்டு விட்டு வந்தாள்.

அவளை அனுதாபத்துடன் பார்த்த மங்கை வேந்தன் "குமுதவல்லி! நான் எங்கே இருந்தாலும் எந்தக் காரியத்தில் ஆழ்ந்திருந்தாலும் உன் நினைவு என்னுடன் இருந்த படியே இருக்கும். நீ தாமரைத் தடாகத்தில் நீராடி விட்டுச் சுமை தாங்கியில் அமர்ந்திருந்த என்னை வெறுப்போடு பார்த்து விட்டுச் செல்வாயே - அதை நினைத்துக் கொள்வேன். மல்லர்களை அனுப்பி என்னைத் தாக்கச் சொன்னாயே - அதை நினைத்துக் கொள்வேன். வெள்ளைக் குளத்துப் பெருமாள் கோயிலில் மன்னவன் வந்தானடி என்று பாடினாயே அதை நினைத்துக் கொள்வேன். நேராக இல்லத்திற்கே வந்து சம்மதம் கேட்ட போது நிபந்தனையை விதித்தாயே அதை நினைத்துக் கொள்வேன். உன்னை என் நினைப்பாகவே நான் வைத்துக் கொண்டிருக்கும் போது நீ உண்ணாமல் இருந்தாய் என்றால் அது எனக்கு எவ்வளவு வேதனையைத் தருகிறது தெரியுமா? இப்போது

சொல்கிறேன். என்னைப் பற்றிய நிலை எதுவாக இருந்தாலும் நீ உண்ணாவிரதம் இருக்கலாகாது. என் விருப்பத்திற்கு மாறான காரியம் அது என்பதை அறிந்து கொள்" என்றான்.

அவனது பேச்சைக் கேட்டு சற்றே நெகிழ்ந்து போனாள் குமுதவல்லி. அதே சமயம் இவ்வளவு அன்பான நினைப்புகளைக் கொண்டவர் எதற்காக இப்படி நடந்து கொண்டார் என்று கேட்டுக் கொள்ளவும் செய்தாள்.

அவனோ அவளது உணர்ச்சிகளை அறிய முற்படாமல் "அந்தச் செல்வந்தன் தனநந்தனிடம் திருப்பணிக்கு நன்கொடை கேட்டு நமது அமைச்சர் சென்றிருந்தார் குமுதவல்லி. ஒரு வாரத்திற்கு மேலாக அவரைக் காத்திருக்க வைத்த தனநந்தன் கடைசியாக தான் தானம் செய்வதில்லை என்று கூறியிருக்கிறார். அதோடு விட்டிருந்தால் பரவாயில்லை. அழகான பெண்ணை அழைத்து வந்தால் தானம் அளிப்பதாகக் கூறியிருக்கிறான். இப்படிச் சொல்லலாமா அவன்? யோசித்துப் பார் குமுதவல்லி. அவன் கண்டபடி பேசியிருக்கிறான். கூசும்படி ஏசியிருக்கிறான். பண்பால் கெட்டுச் சீரழிந்திருக்கிறான். அப்படிப் பட்டவனிடம் செல்வம் இருந்தால் பெண்களுக்குக் கொடுப்பான். பெண்கள் சீரழிவார்கள். அவனும் சீரழிவான். ஊரும் சீரழியும். அதற்கு மாறாக அவனது செல்வம் ஆலயத் திருப்பணிக்குச் செலவானால் அவனுக்குத் தானே புண்ணியம்? அதைத் தானே நான் செய்திருக்கிறேன்? அது தவறாகுமா?" என்று கேட்டான்.

"தங்கள் வாதம் ஏன் இப்படி இருக்கிறது? ஒருவனுக்குப் புண்ணியத்தை அளிக்கும் வழி இது தானா? என்ன பேசுகிறீர்கள் நீங்கள்?"

"அவனுக்குத் தானத்தின் மகத்துவம் பற்றியோ ஆலயத் திருப்பணியின் மகிமையைப் பற்றியோ எடுத்துக் கூறினால் புரிந்து கொள்ளும் நிலையில் அவனில்லை. அவனைப் பக்குவப் படுத்துவதென்பது கட்டாந்தரையை பயிர் நிலமாக மாற்ற முயற்சிப்பதைப் போல் பயனற்றது. அவனிடம் இருக்கும் செல்வமும் அப்படித் தான். தீயகாரியங்களில் பெருஞ்செல்வம் பயன்படுவதானது செல்வத்திற்கே இழுக்கு. செல்வம் உரிய காரியங்களுக்குப் பயன்படும் போது தான் அதன் மகத்துவம் விளங்கும்" என்றான் மங்கை வேந்தன்.

"அதற்காக அவனது செல்வத்தைக் களவாடலாமா? அதுவும் அரசரான தாங்கள் அக்காரியத்தைச் செய்யலாமா? மக்கள் தங்களைப் பற்றி என்ன நினைப்பார்கள்?"

"குமுதவல்லி! நீ ஒரு பக்கத்தை மட்டுமே பார்க்கிறாய். ஆலயத் திருப்பணிக்காக நமது ஆலிநாட்டுச் செல்வந்தர்களிடம் யாசித்தேன். சிலர் கொடுத்தார்கள். சிலர் கேலிக் கணைகளைத் தொடுத்தார்கள். அங்கே போய் கேள். இங்கே போய் கேள் என்று அலைக்கழித்தார்கள். அவமானப் படுத்தினார்கள். உனக்குத் தெரியுமா இது? இந்த நிலையில் தான் நாகையில் இருப்பவன் மகாதர்மவான் என்பதைக் கேள்விப் பட்டு அவனிடம் கேட்டோம். அவன் மறுத்து அவமதித்து விட்டான். என்ன செய்யச் சொல்கிறாய்? அவன் ஆலி நாட்டவனாக இருந்தால் அவன் மீது குற்றம் சாட்டி செல்வங்களை அரசாங்கம் பறிமுதல் செய்ய ஆணையிடலாம். ஆனால் அவன் நாகை நாட்டவன். நாம் அவ்வாறு செய்ய முடியாது. செல்வங்களைக் கவருவது தான் உகந்தது என்று நிழலில் ஒதுங்குவான் அவனது கணக்கனைப் பின் தொடர்ந்து சென்று செல்வம் இருக்குமிடத்தைக் கண்டறிந்தான். அந்த இடத்தில் நானூறு பூட்டுகள் பூட்டப் பட்டிருந்தன. அவை தாளுதுவான் உதவியோடு அகற்றப்பட்டு அங்கிருந்தச் செல்வம் எல்லாம் இரவோடு இரவாகத் திருவரங்கத்திற்கு அனுப்பப்பட்டன. நானூறு பூட்டுகளும் பழையபடி பூட்டப் பட்டன. செல்வம் களவாடப் பட்டதற்கான தடயங்களை யாராலும் கண்டு பிடிக்க முடியாது."

"சுவாமி! இக்காரியத்தைக் கள்வர்கள் செய்யலாம். தாங்கள் செய்யலாமா?"

"நான் கள்ளர் மரபினன். அதன் காரணமாகவோ என்னவோ கள்ளத் தொழிலில் ஈடுபட்டேன். அரங்கன் கோயில் திருப்பணிக்கு முன்னால் என்னை அரசன் என்று எண்ணிக் கொள்வதில்லை. அடியவன் என்று தான் எண்ணிக் கொள்கிறேன். உனக்கொன்று தெரியுமா குமுதவல்லி? அரங்கன் கோயில் நந்தவன கைங்கர்யத்தைச் செய்து வருகிறார் ஒருவர். அவருக்குத் தன் பெயரே மறந்து போய் விட்டது. தன்னைத் தொண்டரடிப் பொடி என்றே அழைத்துக் கொள்கிறார். திருப்பணி விஷயத்தில் நானும் அப்படித் தான். நான் நாகை செல்வந்தனின் செல்வங்களைக் கவரத் தீர்மானித்த போதே அரசப் பதவியில் நீடிப்பதில்லை என்று முடிவு செய்தேன். ஆகவே தான் உன்னை ராணியாக இருப்பதற்கு அனுமதித்தேன். இனி நீ தான் ஆலி நாட்டைப் பரிபாலிக்க வேண்டும். நான் இனி அரியணையில் அமரப் போவதில்லை."

"சுவாமி! இது என்ன தாங்கள் பேசுவது? அரியணையைத் துறந்து விட்டீர்களா?"

"நீ என்ன சொன்னாய்? அரசனாக இருந்து திருட்டுத் தொழிலைச் செய்யலாமா என்று கேட்டாய் அல்லவா? உண்மையில் நான் அரசனாக இருந்து அதைச் செய்யவில்லை. செய்த பின் அரசனாக நீடிக்க விரும்பவில்லை. நீ ராணியாக இருந்து அரிச்சந்திரன்-அம்புஜவல்லி வழக்கைத் திறம்பட நடத்தி பதவிக்குரிய தகுதியை நிரூபித்து விட்டாய். இனி நீ ராணியாகவே தொடர்ந்து விடு."

குமுதவல்லி ஏதோ பேச முற்பட்டாள்.

"பேச வேண்டியதைப் பேசி விட்டேன் குமுதவல்லி. என்னை உறங்கவிடு. மிகவும் களைப்பாக இருக்கிறது" என்று கூறி ஆசனத்தில் சாய்ந்தபடி கண்களை மூடிக் கொண்டான் மங்கை வேந்தன்.

தனநந்தனின் செல்வங்களைக் கவர்ந்தது குறித்து அவன் செய்த வாதமெல்லாம் சாமர்த்தியங்களா அல்லது சரியானவையா என்று அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை.

ஆனால் மங்கை வேந்தன் திருப்பணியை முடிக்கும் விஷயத்தில் மட்டும் மிகவும் உறுதியாக இருக்கிறான் என்பதும் அவனது உறுதியைக் குலைக்க யாராலும் முடியாது என்பதும் சந்தேகமறப் புரிந்தது அவளுக்கு.

அரியணையை அவன் துறந்து விட்டதாகவும் அதை அவளுக்குக் கொடுத்து விட்டதாகவும் அவன் கூறியதை வெறும் உணர்ச்சிப் பெருக்கு என்று கருதியதால் அவள் அதைப் பொருட்படுத்தவில்லை.

ஆனால் மறுநாள் மங்கை வேந்தன் அரண்மனைக்குச் செல்லாமல் எங்கோ சென்று விட்டான். காரியஸ்தர்கள் அவர்களுக்கு முறையான ஆணைகளை மங்கை வேந்தன் பிறப்பித்திருப்பதாகக் கூறி குமுதவல்லியை அரண்மனைக்கு வரும்படி அழைத்த போது தான் அந்த விஷயத்திலும் அவன் உறுதியோடு தான் நடந்து கொண்டிருக்கிறான் என்பது அவளுக்குப் புரிந்தது.

அரண்மனைக்குச் சென்றாள்.

அங்கே அமைச்சர்களும் இல்லை. அவர்கள் மங்கை வேந்தன் ஆலோசிக்கும் இடத்தில் தான் இருப்பார்கள் என்று சொல்லப் பட்டது.

அமைச்சர்கள் இல்லாத பட்சத்தில் பல்வேறு காரியஸ்தர்களை வைத்து எப்படி அரசை நடத்துவது என்று திகைப்பாக இருந்தது அவளுக்கு.

நடந்ததையெல்லாம் யாரிடமும் விவாதிக்க முடியாமல் இருந்ததால் தனது பெற்றோர்களிடம் சொல்லி வழி கேட்டாள்.

"குமுதவல்லி! உன் மணாளர்-மங்கை வேந்தர் எது சொன்னாலும் சரி - எது செய்தாலும் சரி - அது சரியாகத் தான் இருக்கும் என்று நம்பவுது தான் உனக்கு அழகு. நீ அவரைப் பதியாகவும் உன்னைப் பத்தினியாகவும் கருதி வாழ்வதைக் காட்டிலும் அவரை குருவாகவும் உன்னைச் சிஷ்யையாகவும் கருதி வாழ முற்படு. அதுவே சரியானதாக இருக்கும். அவர் உனக்களித்த அரியணையில் அமர்ந்து நிர்வகிப்பது உன் கடமை. உனக்குப் பக்கத்தில் இருந்து வழிநடத்த அமைச்சர்கள் இல்லாமல் போகலாம். அதற்காக நீ கவலைப் படாதே. மனம் தளராதே. எங்களுக்குத் தெரிந்த சான்றோர் ஒருவர் இருக்கிறார். உத்தம நம்பி என்பது அவரது பெயர். அவரிடம் கேட்டுக் கொண்டால் உன்னருகே இருந்து நிர்வாகத்திற்கு அவர் உதவுவார். செம்மையாக நிர்வாகத்தை நீ நடத்தலாம்." என்று ஊக்கமளித்தார் அவளது தந்தை.

இதற்கிடையில் மங்கை வேந்தன் தனது அரியணையைத் துறந்து அதைக் குமுதவல்லியிடம் ஒப்படைத்தது பற்றித் தனது அமைச்சர்களான சாயை பிடிப்பான், நிழலில் ஒதுங்குவான், நீர்மேல் நடப்பான், தோலாவழக்கன் ஆகியோரிடம் கூறியபோது அவர்கள் சற்றே வியந்தார்கள்.

"அப்படியானால் தாங்கள் தொடரப் போகும் பணி..." என்று இழுத்தார்கள் அவர்கள்.

"திருப்பணி தான். அதில் எந்தச் சந்தேகமும் வேண்டாம். அது தான் மகத்தான பணி. அரசுப் பணியல்ல" என்றான் மங்கை வேந்தன்.

அவன் கூறிய 'திருப்பணி'யின் அர்த்தம் என்ன என்பதை உணர்ந்த அவர்கள் "மன்னவா! தாங்கள் அரியைணைத் துறந்து விட்டீர்கள் என்றால் நாங்களும் அமைச்சர் பதவியைத் துறக்கிறோம். பழையபடி உங்கள் நண்பர்களாக மாறுகிறோம். நண்பர்கள் அணியில் ஐந்தாவது நபராக தாளுதுவானும் சேர்கிறார்" என்றார்கள்.

மங்கை வேந்தன் அதற்கு ம்றுமொழி கூறாமல் "அடுத்த ஒரு வாரத்திற்கு எல்லோரும் ஊர் ஊராகச் சென்று பிச்சை எடுப்போம்" என்றான்.

"அது எதற்கு மன்னவா?"

"ஆலயத் திருப்பணிக்கு முயலும் போது பிச்சையெடுப்பதும் ஒன்றுதான். கௌரவம் காரணமாக அந்த வழியைப் புறக்கணித்து விடக் கூடாது" என்றான் மங்கை வேந்தன்.

நண்பர்கள் எதுவும் சொல்லவில்லை.

எல்லோரும் பிச்சைக் காரர்களாக மாறி அண்டை ஊர்களில் பிச்சை எடுத்தார்கள்.

"ஒருவார காலப் பிச்சையில் நமக்குக் கிடைத்தது மிகவும் சொற்பம்" என்றார் சாயை பிடிப்பான்.

"எவ்வளவு கிடைத்தது என்பது முக்கியமல்ல. பிச்சை எடுத்தது தான் முக்கியம். நீலன் அரங்கன் ஆலயத் திருப்பணிக்காகப் பிச்சையும் எடுத்தான் என்பது ஊருக்குத் தெரிய வேண்டும். பிச்சை எடுத்ததில் எனக்கும் பரமதிருப்தி" என்று சொன்ன மங்கை வேந்தன் தனது அடுத்த கட்ட நடவடிக்கையைப் பற்றிச் சொன்னான்.

அந்த நடவடிக்கையில் மிகப்பெரிய திருப்பம் நடக்கப் போகிறது என்பதை அவன் அப்போது அறியவில்லை.

★★★



உத்தமன்

"இனிமேலும் ஊர் ஊராகச் சென்று பிச்சை எடுக்க முடியாது நண்பர்களே. இந்த வழி மேற்கொள்ளப்படவில்லை என்று பின்னால் நம்மை யாரும் கூறிவிடக் கூடாது என்பதற்காகவே ஒருவார காலமாக அந்த முயற்சியில் ஈடுபட்டோம். அதோடு திருப்பணி தொய்வில்லாமல் நடக்க வேண்டுமானால் மாறுபட்ட வழிமுறைகளை மேற்கொண்டாக வேண்டும். நாளை முதல் வழிப்பறிக் கொள்ளையில் நாம் ஈடுபட வேண்டும்" என்றான் மங்கை வேந்தன்.

"நாங்களே சொல்வதாக இருந்தோம். நீங்களாகச் சொல்லாமல் நாங்கள் சொல்வது தகாது என்று மௌனமாயிருந்தோம். நீங்கள் சொல்லிவிட்டீர்கள். நாங்கள் தயார்" என்றார் சாயை பிடிப்பான்.

"வழிப்பறி செய்வதிலும் சிலவழிமுறைகளை வகுத்துக் கொள்ள வேண்டும். நாகைச் செல்வந்தனைப் போல தனத்தை வைத்துக் கொண்டு தானம் செய்யாதவர்கள், செல்வங்களை அளவுக்கு மீறிச் சேர்த்துக் கொண்டு தவறாகச் செலவழிப்பவர்கள் தவறான வழியில் சொத்துக்களைக் குவித்து செலவு செய்யத் தெரியாமல் தவிப்பவர்கள் ஆகியோரை இனம் கண்டு அவர்களை மட்டுமே வழிப்பறி செய்ய வேண்டும். நாம் வழிப்பறி செய்வது எதற்கு என்பது நம் எல்லோருக்கும் தெரிந்திருக்கும். ஆகவே அதை மட்டுமே நினைவில் வைத்துக் கொண்டு காரியத்தில் தீவிரமாக இறங்குங்கள். நாம் யார் என்பது யாருக்கும் தெரியக் கூடாது. வழிப்பறிக் கொள்ளையர் என்பது மட்டுமே நமது அடையாளம். அதற்கேற்ப நமது தோற்றம் மாற வேண்டும். எனக்கு ஆடல்மா புரவி இருக்கிறது. நீங்கள் எல்லோரும் உங்களுக்கென உள்ள புரவிகளைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். அதோடு வழிப்பறி செய்வதற்கு நாம் அறுவர் மட்டும் போதாது. மேலும் சிலர் வேண்டும். அவர்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பைத் தாளுது வானிடம் ஒப்படைக்கிறேன். மீதமுள்ள நால்வரில் நீர்மேல் நடப்பான் மட்டும் என்னோடு இருக்கட்டும். மற்ற மூவர் நான் ஏற்கனவே கூறியபடி வழிப்பறிக்கு உகந்தவர்களை இனம் கண்டு கொண்டு எனக்குத் தெரிவிக்க வேண்டும்" என்றான் மங்கை வேந்தன்.

மற்றவர்கள் போனபின் நீர்மேல் நடப்பான் பேச முற்பட்டு "மன்னவா! தாங்கள் நடத்தவிருக்கும் வழிப்பறியை நினைக்கும் அதே சமயம் குமுதவல்லி நாச்சியாரைப் பற்றியும் நினைக்க வேண்டியிருக்கிறது. நமது நடவடிக்கை பற்றி அறிந்தால் அவர் மிகவும் வேதனைப் படுவார்" என்றார்.

"என்னை எதற்கு இன்னமும் மன்னன் என்று அழைக்கிறாய்?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"மன்னவா! ஆட்சி இருக்கும். போகும். அரியணை வரும். போகும். ஆனால் எங்கள் நெஞ்சத்தில் தாங்கள் எப்போதும் அமர்ந்திருப்பீர்கள். அதற்கு எப்போதும் அழிவு கிடையாது. ஆகவே எங்களுக்கு எப்போதும் தாங்கள் மன்னவர் தான்" என்றார் நீர்மேல் நடப்பான்.

மங்கை வேந்தன் எதையோ நினைத்துச் சற்று சிரித்து விட்டு "குமுதவல்லியை நினைத்தால் எனக்கும் கவலையாகத் தான் இருக்கிறது. ஆனால் என்ன செய்ய முடியும் நண்பா! மனைவிக்குத் தெரிவித்து விட்டு செய்யக் கூடிய காரியங்கள் இருப்பது போல் தெரிவிக்காமல் செய்யக் கூடிய காரியங்களும் உண்டு. இந்தக் காரியத்திற்கு அவளது சம்மதம் நிச்சயமாகக் கிடைக்காது. சம்மதம் கிடைக்காது என்று தெரிந்து நாம் செயலாற்றும் போது அவள் வேதனை அடையத்தான் செய்வாள். எனக்கே கூட வேதனையாகத் தான் இருக்கிறது. என்ன செய்வது? ஆலயத் திருப்பணிக்கு முன்னால் எனக்கு எதுவுமே தவறாகத் தோன்றவில்லை. எடுத்த காரியத்தை முடிக்காமல் விட மாட்டான் இந்த நீலன் என்று நீ முதல் நீல வானம் வரை சொல்ல வேண்டும். எடுத்தற்கெல்லாம் தயங்கியும் மயங்கியும் திருப்பணியை அரை குறையாக விட்டு விட்டான் என்று ஒருவரும் என்னைச் சொல்லக் கூடாது. எனது லட்சியத்திற்காக யார் தடையாக வந்தாலும் தகர்ப்பேன். எந்தக் கஷ்ட நஷ்டம் வந்தாலும் ஏற்பேன்" என்றான்.

அடுத்த சில நாட்களில் மொத்தம் பத்துக் கொள்ளையர்கள் மங்கை வேந்தனோடு வந்து சேர்ந்தார்கள். கொள்ளைத் தொழிலில் அவர்கள் கைதேர்ந்தவர்களாதலால் பல நுட்பங்களை அவனிடம் தெரிவித்தார்கள். வழிப்பறி செய்வதற்கான இடத்தையும் அவர்கள் தெரிவித்த போது "அந்த இடத்தில் என்ன விசேஷம்?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"ஐயா! திருமணங்கொல்லை என்னும் ஊர் ஆலிநாட்டிற்கு அருகில் எல்லைப்புறமாக இருக்கிறது. வடக்கே இருந்து வரும் வணிகர்களும் வண்டிகளும் செல்வந்தர்களும் தெற்கே செல்வதற்கு இந்த ஊரைக் கடந்து தான் போக வேண்டும்.

இப்பகுதியில் மிகவும் அரிதான குன்றுகள் இரண்டு இருக்கின்றன. சோழ நாட்டில் இங்கு மட்டுமே அந்த அபூர்வக் குன்றுகள் இருப்பதால் நாம் அங்கே தங்கலாம். அங்கிருந்த படி எல்லையைக் கடக்கும் வண்டிகளைக் கவனிக்கலாம். அப்பகுதியைக் கடந்து செல்வதற்குள் நான்கு பக்கங்களிலும் சூழ்ந்து கொண்டு தாக்கலாம். ஆகவே நாம் வழிப்பறி செய்வதற்காகப் பல இடங்களுக்கு அலையாமல் இங்கிருந்த படியே அதைச் செய்யலாம்" என்றான் கொள்ளையன்.

"உன் பெயரென்ன?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"உத்தமன்" என்றான் கொள்ளையன்.

"ஆகா! விதியின் விளையாட்டு எப்படி இருக்கிறது பார்த்தாயா? உத்தமன் என்று பெயரை வைத்துக் கொண்டு கொள்ளையிடுகிறாய் நீ."

"பெயரில்என்ன ஐயா இருக்கிறது? பிறக்கும்எல்லோரும்உத்தமர் கள் தானே? நானென்ன கொள்ளையடிப் பதற்காகவா பிறந்தேன்?"

"சரியாகத் தான் சொல்கிறாய் உத்தமா. தாளுதுவான் உன்னிடம் என்ன விவரங்களைச் சொல்லி அழைத்து வந்தானோ தெரியாது. நான் இப்போது சொல்லி விடுகிறேன். நான் மேற்கொண்டிருக்கும் திருப்பணிக்காக அரியணையை விட்டு விட்டு இந்தத் தொழிலில் இறங்க முற்பட்டிருக்கிறேன். இதை எவ்வளவு காலத்திற்குச் செய்ய வேண்டியிருக்குமோ? இப்போதைக்குச் சொல்வதற்கில்லை. அநேகமாக அரங்கன் ஆலயத் திருப்பணி முடிவடையும் வரைக் கூடத் தொடரலாம். இதில் கிடைக்கும் ஒரு குன்றுமணியைக் கூட எனக்காகச் சேர்த்துக் கொள்ளப் போவதில்லை. அனைத்துமே ஆலயத் திருப்பணிக்குத் தான். இந்த நிலையில் நீங்கள் உதவுகிறீர்கள். கொள்ளையில் உங்களுக்குப் பங்கு வைக்க வேண்டும் என்று நீங்கள் கோரினால் அதில் தவறு இல்லை. ஆனால் பங்கு வைப்பதென்றால் எங்களுக்குத் திருப்பணிக்காகச் சேரும் அளவு கணிசமானதாக இருக்காது. உங்க ளுக்கு வழிப்பறி வாழ்வாதாரத்திற்கான தொழில். ஆகவே நீங்கள் பங்கு கேட்பீர்கள். நீங்கள் கேட்பதை எங்களால் தரமுடியாது."

"ஐயா! தாளுதுவார் எங்களுக்கு எல்லா விவரத்தையும் சொன்னார். அவர் எங்களோடு இருந்தவர் தான். நீங்கள் திருப்பணியை ஆரம்பித்து நிதி நெருக்கடியால் தவிக்கிறீர்கள் என்று கேள்விப் பட்டதும் உங்களுக்கு உதவத் துடித்தவர் அவர். அவர் உதவ விரும்பியது கொள்ளை மற்றும் வழிப்பறி மூலமாகத் தான். நாங்களும் அவரோடு சேர்ந்து உதவ முற்பட்டோம்.

அவர்தான் தடுத்து விட்டார். இப்போது அவர் அழைத்ததால் மனம் உவந்து வந்திருக்கிறோம். முன்பே சொன்னது போல நாங்கள் திருடுவதற்காகப் பிறக்க வில்லை. பிறந்த பின்பும் எங்களை யாரும் திருடர்களாக வளர்க்கவில்லை. வளர்ந்து ஆளான போது அனாதைகளானோம். உதவி கேட்டு அலைந்தோம். உதைதான் கிடைக்கவிருந்தது. இல்லாதவர்கள் ஒரு சிலர் உதவினார்கள். இருந்தவர்கள் ஒருவர் கூட உதவவில்லை. ஆகவே தான் அவர்களிட மிருந்து பறிப்பது தான் உகந்தது என்று கருதி கொள்ளையர்கள் ஆனோம். செல்வந்தர்களிடம் கொள்ளை யிட்டோம். இல்லாதவர் களுக்கு நிறைய கொடுத்தோம். நாங்கள் சுக போக வாழ்க்கைக்காக் கொள்ளையில் இறங்கவில்லை. சாதாரண வாழ்வை மேற்கொள்ள வும் இல்லாதவர்களுக்கு உதவுமே இறங்கினோம். தஞ்சைப் பகுதியில் எங்கள் தொழிலை நடத்தி வந்தோம். நீங்கள் அழைப்பு விடுத்த பிறகு திருமணங் கொல்லையை* த் தேர்ந்தெடுதோம். எங்களைப் பொறுத்தவரை லட்சியம் தெளிவாக இருக்கிறது. தங்கள் லட்சிய மும் ஆலயத் திருப்பணி என்பது தெரிந்து விட்டது. எனவே நாங்கள் உங்களுக்கு உதவுவதில் பெருமகிழ்ச்சி யடைகிறோம். பெரும் பகுதி யைப் பங்காகக் கேட்டுத் தொல்லைதர மாட்டோம். கிடைக்கும் செல்வம் கணிசமான அளவு அரங்கனுக்குச் சென்றபிறகு தான் எங்களுக்கு. அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம்."

கொள்ளையன் உத்தமனின் பேச்சு திருப்தியாக இருந்தது மங்கை வேந்தனுக்கு.

★

இதற்கிடையில் குமுதவல்லி தன் தந்தையாரிடம் புலம்பினாள்.

"இதென்ன தந்தையே இவர் இப்படி மாறிப் போய் விட்டார்? நாகைச் சம்பவத்தோடு களவுக் காரியம் கைவிட்டு விடப்படும் என்று நினைத்திருந்தேன். இப்போது களவையே தொழிலாக மாற்றிக் கொண்டு விட்டாரே! வழிப்பறி செய்யும் அளவிற்கு வந்து விட்டாரே! அதெல்லாம் பாவமல்லவா? அவரது முரட்டு சுபாவத்தையே கண்டு பொறுக்காததால் தானே அவருக்கு நிபந்தனைகளை விதித்து வைஷ்ணவராக்கினேன்! விவாகமும் செய்து கொண்டேன்! ஆனால் திருமணத்திற்குப் பிறகு கொஞ்சம் கொஞ்சமாக மாறி விட்டார் தந்தையே. போரில் ஈடுபட மாட்டேன் என்று சொன்னவர் போரில் ஈடுபட்டார். பிறகு நாகையில் செல்வந்தரது செல்வங்களைக் களவாடினார். இப்போது வழிப்பறிக் கொள்ளையராகவே மாறி விட்டார். இதற்காகவா நான் அவரை விவாகம் செய்து கொண்டேன்?

---

* சோழ நாட்டில் உள்ள சிற்றூர். திருவாலி–திருநகரிக்கு அருகில் இருக்கிறது.

அவரது பாவச் செயல்கள் என்னையும் பாதிக்காதா? இது தெரியாதா அவருக்கு? இல்லம் என்று ஒன்றிருப்பதை மறந்து இல்லாள் ஒருத்தி இருக்கிறாள் என்பதையும் மறந்து கொள்ளையே கதி என்று இருக்கும் அவரை என்னென்பது?"

"மகளே! அவர் என்ன செய்கிறார் என்பதை விட எதற்காகச் செய்கிறார்என்பதைகவனித்துப்பார்.அதுதான்முக்கியம்.அரங்கன் கோயில் திருப்பணிக்காகவே அனைத்தையும் செய்கிறார். அரியணையைத் துறந்தார். தன் சுக போகங்களைத் துறந்தார். வீதி வீதியாகச் சென்று பிச்சை எடுத்தார். ஒரு மன்னர் இப்படி யெல்லாம் தாழ்ந்து வருவதை நீ கண்டிருக்கிறாயா? கேள்விப் பட்டிருக்கிறாயா? நிதியைப் பெற அனைத்து வழிகளிலும் முயன்று போதுமான நிதி கிடைக்காததால் தான் வழிப்பறியில் இறங்கியிருக்கிறார். இது காலம் காலமாக நடந்து கொண்டிருக்கப் போவதில்லை. திருப்பணி நடந்து முடிந்து விட்டால் அனைத்துச் செயல்பாடுகளும் நின்று விடும். அந்த நாள் விரைவில் வரவேண்டும் என்று எம்பெருமானை வேண்டிக் கொண்டு உன் கடமைகளைச் செய். அதுதான் உகந்தது" என்றார் தந்தை.

குமுதவல்லி சமாதானமடையவில்லை. நிர்வாகத்தில் தனக்கு வழிகாட்டியாக இருந்து வந்த உத்தம நம்பியிடம் இந்த விவரங் களைச் சொன்ன அவள் "ஐயா, நமது மன்னர் வழிப்பறி செய்து வருவது ஆலி நாட்டு எல்லையில் உள்ள திருமணங் கொல்லையில். நான் சொல்ல வருவது என்ன வென்றால் சட்டத்திற்கு விரோத மான வழிப்பறி நடப்பது நமது நாட்டு எல்லையில். அதைச் செய்வது யார் என்பதும் தெரிந்து விட்டது. நாம் நடவடிக்கையை எடுக்க வேண்டாமா?" என்று கேட்டாள்.

"என்ன நடவடிக்கையை எடுக்க வேண்டும்? அம்மணீ?" என்று கேட்டார் உத்தம நம்பி.

"அரசாங்கம் தன் கடமையைச் செய்ய வேண்டாமா? வழிப்பறி செய்வோரைக் கைது செய்து தண்டிக்க வேண்டாமா?" என்று கேட்டாள் குமுதவல்லி.

"எந்த ஆதாரத்தின் மீது நடவடிக்கை எடுப்பது மகாராணி? வழிப்பறி பல மாதங்களாக நடைபெறுகிறது. ஆனால் இதுவரை யாரும் நம்மிடம் புகார் கூறவில்லை. அதோடு வழிப்பறியில் ஈடுபடும் மங்கை வேந்தர் யாரையும் துன்புறுத்தவோ கொல்லவோ முற்படவில்லை. இன்னும் சொல்லப் போனால் திருமணங் கொல்லை பகுதியில் வருவோரை அவரும் சரி கொள்ளையர்களும் சரி தொடுவது கூட இல்லை. அவர்களிடம் தங்கள் உடமைகளை ஒப்படைத்து விடும்படி எச்சரிக்கை

மட்டுமே விடப்படுகிறது. அவர்களும் உடமைகளை ஒப்படைத்து விட்டுப் போய் விடுகிறார்கள். எந்தப் பிரச்சனையும் உண்டாக வில்லை. ஆகவே மங்கை வேந்தர் மீது நாம் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது."

"புகார் இல்லையென்றால் களவு, வழிப்பறி, கொள்ளை ஆகியவற்றை அரசாங்கம் எதுவும் செய்யாமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமா?"

"அப்படிச் சொல்லவில்லை. நாம் இங்கே மங்கை வேந்தரைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருக்கிறோம். சாதாரணமாக இதர கொள்ளையர்கள் கொள்ளையிடுவது தங்கள் லாபத்திற்காக. ஆனால் மங்கை வேந்தர் தனது லாபத்திற்காக வழிப்பறியில் ஈடுபட வில்லை. ஆலயத் திருப்பணிக்காகச் செய்கிறார். அதுவும் இல்லாதவர் களிடமும் ஏழைகளிடமும் வழிப்பறி செய்வதில்லை. பழுத்த செல்வந்தர்களிடமும், கருமியான தனவந்தர்களிடமும், மக்களை ஏமாற்றும் பெரு வணிகர்களிடமும் தான் செய்கிறார். அவர்களுக்கு அது தான் சரியான நடவடிக்கை. அப்படி இருக்கும் போது மங்கை வேந்தர் மீது நாம் எதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும்?"

பேச்சற்றுப் போனாள் குமுதவல்லி.

இதற்கிடையில் பலமாதங்களுக்குப் பின்பு ஒரு நாள் இல்லத்திற்கு வந்தான் மங்கை வேந்தன்.

சாட்சாத் கொள்ளைக்காரனாக அவன் மாறியிருந்ததை அவனது தோற்றம் புலப்படுத்தியது. அவனது அந்த முரட்டு தோற்றத்தைக் கண்டு கலங்கிய குமுதவல்லி "கள்வராகி விட்டீர்களே சுவாமி! இது அடுக்குமா?" என்று கேட்டாள்.

"நீயும் நானும் வணங்கும் கண்ணன் யார்? கள்வன். ஆயர் பாடியில் தன் தோழர்களோடு வீடு வீடாகச் சென்று வெண்ணை யைத் திருடி உண்டவன் அவன். அவனே செய்யும் போது நான் செய்யக் கூடாதா?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

அவனது பேச்சு அவளை அதிரவைத்தது.

பதிலுக்குப் பதில் பேச அவள் விரும்பவில்லை. பேசினால் அது முடிவுக்கு வராது என்று நினைத்து மௌனமாய் இருந்தாள்.

இதற்கிடையில் ஒருநாள் திருமணங்கொல்லையில் திருமணக் கோஷ்டியொன்று பெருஞ் செல்வங்களுடன் வந்து கொண்டிருந்தது.

★★★



மாற்றுத் திட்டம்

வழிப்பறியைத் துவங்கி பலமாதங்களில் கணிசமான செல்வம் திரண்டது மங்கை வேந்தனுக்கு. கொள்ளையர்களுக்கு ஒரு சிறு பகுதி போக மீதமிருந்த பெரும் பகுதியைச் சாயை பிடிப்பான் மூலம் திருவரங்கத்திற்கு அனுப்பி வைத்தான். ஆனால் ஏழு மாதங்களுக்குப் பிறகு வழிப்பறிக்கு இலக்காகும் விதமாக யாரும் வரவில்லை.

"ஏன்?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"நாம் கடுமையாக இயங்கி வருகிறோம். நம்மிடமிருந்து தப்புவதற்கு வழி தெரியவில்லை. ஆகவே செல்வந்தர்களும் பெரும் வணிகர்களும் திருமணங்கொல்லை வழியாக வருவதைத் தவிர்த்து விட்டு வேறு வழியைத் தேர்ந்தெடுத்திருக்க வேண்டும். அதற்கு அவர்கள் மட்டும் காரணமாக இருக்க முடியாது" என்றான் உத்தமன்.

"வேறு யார்?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"ஆலி நாட்டு அரசும் காரணம் ஐயா. தாங்கள் பதவி வேண்டாம் என்று வந்து விட்டாலும் மகாராணியின் தலைமையில் ஆலி நாட்டு அரசாங்கம் நடந்து கொண்டு தான் இருக்கிறது. தாங்கள் எங்களோடு சேர்ந்து கொண்டு செய்யும் வழிப்பறி விஷயம் மகாராணிக்குத் தெரிந்திருக்க வேண்டும். தங்களைத் தடுக்க முடியாத காரணத்தால் செல்வந்தர்களையும் மற்றவர்களையும் திருமணங்கொல்லை வழியாகச் செல்வதைத் தவிர்க்கும் படி அறிவிப்பு செய்திருக்க வேண்டும்."

"வேறு வழி எங்கே இருக்கிறது?"

"நிறைய இருக்கிறது. எல்லாம் சுற்று வழி. பயண தூரம் இரண்டு மடங்காகும். அது மட்டுமின்றி ஆலி நாட்டிற்குக் கிழக்கே சென்று கடல் மூலமும் பொருட்களைக் கொண்டு செல்லலாம். தாங்கள் கொண்டு செல்லும் பொருட்கள் பத்திரமாகச் செல்ல வேண்டும் என்றால் சுற்று வழியில் செல்லவும் கடல் வழியில் செல்லவும் தயாராகவே இருப்பார்கள்."

"அப்படியென்றால் நாமும் நம் இடத்தை மாற்ற வேண்டுமா?"

"இரண்டு நாட்கள் அவகாசம் கொடுங்கள் ஐயா. நான் சென்று மாற்று இடத்தைப் பற்றி அறிந்து வருகிறேன்" என்றான் உத்தமன்.

நண்பர்களுடன் ஆலோசனை நடத்திய மங்கை வேந்தன் திருவரங்கத்திற்குச் சென்று கோபுரத் திருப்பணியைப் பார்வையிட்டு விட்டு கரம்பனூருக்கு வந்தான். சிற்பிகளையும் ஆலய நிர்மாணிகளையும் அழைத்து விசாரித்தான்.

வழிப்பறி மூலம் கிடைத்த பொருட்கள் ஆறு மாதங்களுக்குப் போதுமானவை என்று அவர்கள் கூறினார்கள்.

மதில் சுவர், கோபுரங்கள் ஆகியவற்றோடு இரண்டாவது திருச்சுற்றில் நூறு கால் மண்ட பம் ஒன்றையும், திருப்பணி நடை பெற்று வரும் நான்காவது சுற்றில் தானிய களஞ்சியம் ஒன்றையும் அமைக்க வேண்டும் என்று ஆலயத்தார் கூறியதை மதித்து மன்னன் அவர்கள் அனைத்துத் திருப்பணிகளும் நிறைவேறும் ஒருவருட காலம் ஆகும் என்றும் தெரிவித்தார்கள். அதற்குள் திருப்பணி நடந்து முடிய வேண்டு மென்பதில் நிதி தொடர்ந்து வந்து கொண்டிருக்க வேண்டும் என்றும் சொன்னார்கள்.

மங்கை வேந்தன் இறுக்கமான முகத்துடன் திருமணங் கொல்லைக்குத் திரும்பினான்.

குன்றின் அடிவாரத்தில் இருந்த கூடாரத்திற்குச் சென்ற போது கொள்ளையன் உத்தமன் அவனுக்காகக் காத்திருந்தான்.

"என்ன ஆயிற்று உத்தமா? வழிப்பறி செய்வதற்கான வழியைக் கண்டு பிடித்தாயா?"

"எந்த வழியிலும் வழிப்பறி செய்ய முடியாது ஐயா. எல்லா மார்க்கங்களிலும் ஆலிநாட்டு மகாராணியார் பாதுகாப்புப் படைகளை அமைத்திருக்கிறார். செல்வந்தர்களுக்கும் வணிகர்களுக்கும் அவர்கள் பாதுகாப்பு செய்கிறார்கள். நாம் கொள்ளையிட வேண்டும் என்றால் பாதுகாப்புப் படையைத் தாக்க வேண்டும். ரத்தக் களறி இல்லாமல் வழிப்பறி செய்ய முடியாது. நம் தரப்பில் இன்னும் பத்து பேர்களைச் சேர்த்துக் கொள்ளலாம். பாதுகாப்புப் படையைத் தாக்கி துவம்சம் செய்து விட்டு கொள்ளையடிக்கலாம். நீங்கள் சம்மதிப்பீர்களா என்பது தெரியவில்லை" என்றான் உத்தமன்.

"வேறு உபாயங்கள் உண்டா?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"ஊர் விட்டு ஊர் செல்லலாம். தில்லை, காஞ்சி, கடல்மல்லை ஆகிய நகரங்களுக்குச் சென்று கொள்ளையடிக்கலாம்" என்றான் உத்தமன்.

மங்கை வேந்தனின் முகம் மேலும் இறுகியது.

"இரண்டு நாட்கள் போகட்டும். என் முடிவைச் சொல்கிறேன்" என்று சொல்லிவிட்டுத் தன் இல்லத்திற்குச் சென்றான் மங்கை வேந்தன்.

அவன் சென்றபோது இல்லத்தில் குமுதவல்லிக்கும் அவளது தந்தைக்கும் வாக்குவாதம் நடந்து கொண்டிருந்தது.

அவனை இருவரும் எதிர்பார்க்காததால் திடுக்கிட்டுப் பேச்சை நிறுத்தினார்கள்.

"எதைப் பற்றிய பேச்சு? யாரைப் பற்றிய பேச்சு?" என்றெல்லாம் அவன் வினவவில்லை.

"உணவு கொண்டு வா குமுதவல்லி. உன் கையால் உணவுண்டு நீண்ட நாட்கள் ஆகி விட்டன" என்றான்.

ஏதோ கேட்க நினைத்த குமுதவல்லி அதை அடக்கிக் கொண்டு உணவைக் கொண்டு வந்து கொடுத்தாள்.

உணவு ஆறிப் போயிருந்தது. அதில் கையை வைத்த போதே அதை உணர்ந்த அவன் சாப்பிட முற்படாமல் எழுந்தான்.

"ஏன் எழுந்து விட்டீர்கள்?"

"உணவு சூடாக இல்லை."

"திருமணங்கொல்லையில் அவ்வப்போது உணவைத் தயாரித்து சூடாகத் தருகிறார்களா?"

"இல்லை. அதனால் தான் இங்கே வந்தேன்."

குமுதவல்லிக்கு ஒரு மாதிரியாகி விட்டது.

"மன்னித்து விடுங்கள் சுவாமி. இதோ சில நொடிகளில் தயாரித்து விடுகிறேன்" என்று சொல்லிப் புயலாகச் செயல்பட்டு பொங்கல் செய்து அவனுக்குப் பரிமாறினாள்.

அதை உண்ட மங்கை வேந்தன் "சுவையான உணவை உண்டு நீண்ட நாட்களாகி விட்டது. பொங்கல் பொங்கலாக இல்லை. அமிர்தமாக இருக்கிறது" என்றான்.

கோபாக்கினியாகச் சீறுவான் என்று எதிர்பார்த்தாள் அவள். அவனோ குழந்தையைப் போல நடந்து கொண்டான்.

உண்டு முடித்து ஆசனத்தில் அமர்ந்த அவனை அன்போடு பார்த்த அவள் "சுவாமி! தயை கூர்ந்து வழிப்பறியை நிறுத்திக்

கொள்ளுங்கள். நான் அரசியாக இருந்து கொண்டு வழிப்பறியைத் தடுக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறேன். தங்களுக்கு எதிராக நடந்து கொள்வது எனக்கு மிகுந்த வேதனையைத் தருகிறது. நான் நடந்து கொள்ளும் முறை சரியில்லை என்று என் தந்தையார் கோபிக்கிறார். கணவருக்கு எதிராகச் செயல்படுவது பாவம் என்று கூறுகிறார். நான் செய்வதறியாமல் தவிக்கிறேன். இச்சங்கடத்திலிருந்து என்னைக் காப்பாற்றத் தங்களால் தான் முடியும். வழிப்பறியைக் கைவிட்டு விட்டு அரியணையில் அமர்ந்து நல்லாட்சியைத் தொடருங்கள். இதுதான் என் வேண்டுகோள்" என்றாள்.

"உன் கடமையை நீ செய்கிறாய். என் கடமையை நான் செய்கிறேன். அவ்வளவுதான். இதுநாள் வரை என் நடவடிக்கைகளில் குறுக்கிடாதிருந்த நீ இப்போது குறுக்கிடத் தொடங்கி விட்டாய். நீ ஏற்பாடு செய்திருக்கும் பாதுகாப்புப் படையுடன் மோதினால் ரத்தக் களறி உண்டாகும். அதை நான் விரும்பவில்லை. ஒருவர் கூட ரத்தம் சிந்தக் கூடாது என்பது தான் என் நோக்கம். நான் உன்னைச் சந்திக்க வந்தது உன்னிடம் ஒரு விஷயத்தைத் தெரிவித்து விட்டுப் போவதற்காகத் தான். என்னால் நீயும் உன்னால் நானும் இனிச் சங்கடப் பட வேண்டியதில்லை. ஆலி நாட்டு எல்லைகளில் வழிப்பறி செய்வதை நிறுத்திக் கொள்ள முடிவு செய்து விட்டேன். மாறாக உன் ஆளுகைக்கு உட்படாத நகரங்களில் கொள்ளையிடுவது என்று நிர்மானித்திருக்கிறேன். தில்லை, காஞ்சி, கடல்மல்லை, குறுங்கோழியூர் ஆகிய நகரங்களில் கொள்ளைகளை மேற்கொண்டால் நிறைய பொருள் கிடைக்கும் என்று கொள்ளையர்கள் கூறுகிறார்கள். திருமணங்கொல்லையில் வழிப்பறி செய்வது போல் இந்த முயற்சி எளிதானது அல்ல. ஆபத்தானது. என் உயிருக்கு ஆபத்து ஏற்பட வாய்ப்புண்டு. அப்படி ஏதாவது நடந்தால் அதாவது நான் மாணமடைந்தால் "என் கணவர் இறக்கும் வரையில் அரங்கனின் திருப்பணியைத் தவிர வேறு எதையும் சிந்தையில் வைத்துக் கொள்ளவில்லை' என்று இந்த உலகிற்கு நீதான் கூறவேண்டும்" என்று சொல்லி விட்டு எழுந்தான் மங்கை வேந்தன்.

"வேண்டாம் சுவாமி. வேண்டாம். இது மிகவும் கேவலம். அந்த அரங்கனே கூட ஏற்கமாட்டான். விட்டு விடுங்கள்" என்று கெஞ்சினாள் குமுதவல்லி.

"அரங்கனே தடுத்தால் கூட கைவிட மாட்டேன் குமுதவல்லி. நினைத்ததை முடிக்காமல் விடமாட்டேன்" என்று கூறிவிட்டு அகன்றான் மங்கை வேந்தன்.

"கேட்டீர்களா தந்தையே! என்ன பேசி விட்டுப் போகிறார் பார்த்தீர்களா? இதை ஒப்புக் கொள்கிறீர்களா?" என்று தந்தையிடம் கேட்டாள் குமுதவல்லி.

"அவர் சொல்வது சரிதான். அவரது நடவடிக்கைகளுக்கு நீ இடையூறுகளை விளைவித்தாய். உன் சம்பந்தமே வேண்டாம் என்று அவர் புது வழியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார். வேறென்ன செய்ய முடியும்?"

"அவரது வழி ஆபத்தானது தந்தையே."

"அதைத் தான் அவரே சொன்னாரே?"

"அவரது உயிருக்கு ஆபத்து வரக்கூடும் அப்பா."

"அதையும் தான் அவர் சொன்னார்."

"நீங்கள் என்ன பேசுகிறீர்கள்? என் வேதனை உங்களுக்குப் புரியவில்லையா?"

"இந்த வேதனை நீயாக இழுத்துப் போட்டுக் கொண்டது."

"தந்தையே! அவரது பெற்றோர்களிடம் பேசிப் பாருங்களேன். அவர்கள் சொன்னால் அவர் கேட்பார்."

"அரங்கனே தடுத்தாலும் கைவிட மாட்டேன் என்று சொல்லியிருக்கிறார் உன் மணாளர். உன் மாமனாரும் மாமியாருமா அவரை மாற்ற முடியும்? எதற்கும் போய்ப் பேசுகிறேன் உனக்காக."

★

மங்கை வேந்தன் ஆலயத் திருப்பணி நிதிக்காக பல்வேறு முறைகளைக் கையாண்டு கொண்டிருந்த நிலையில் உறையூரில் சோழ மன்னனிடம் வந்தான் அழும்பில்வேள்.

"மன்னவா! நீலனைப் பற்றிக் கேள்விப் பட்டீர்களா?" என்று வினவினார்.

"என்ன ஆயிற்று நீலனுக்கு?"

"அரியணையைத் துறந்து விட்டு அதைத் தன் தர்மபத்தினியிடம் ஒப்படைத்து விட்டார். அரங்கன் கோயில் திருப்பணியே கதி என்று முழுமூச்சில் இறங்கி விட்டார்."

"மகிழ்ச்சிக்குரிய விஷயம் தானே?"

"மகிழ்ச்சிக்குரிய விஷயம் தான். ஆனால் வழிமுறைகள்..."

"வழிமுறைகளுக்கு என்ன?"

"நிதி வேண்டி பிட்சைக்குச் சென்றார். அதில் கணிசமான அளவு கிடைக்கவில்லை என்பதால் வழிப்பறி, கொள்ளை என்று இறங்கிவிட்டார்."

"அவன் விருப்பம் அது. நாம் என்ன செய்ய முடியும்?"

"நாம் நிதி உதவி செய்தால் அவரை இத்தீய வழிமுறைகளிலிருந்து விலக்க முடியும்."

"அமைச்சரே! நீலன் மேற்கொண்டிருக்கும் திருப்பணியானது சாதாரணமானது அல்ல. பெரும் பணி. பேரரசர்கள் கூடத் துணியாத மகத்தான பணி. அவன் வழிப்பறியிலும் கொள்ளையிலும் ஈடுபடுபவனல்ல. ஈடுபடுகிறான் என்றால் அவனுக்குள் ஏதோ ஒரு சக்தி இருந்து கொண்டு இயக்குகிறது என்று தான். அர்த்தம். அவனுக்குத் தேவைப்படும் நிதியை நம்மால் அளிக்க முடியாது. அவனை இயக்கும் சக்தி அவனைக் கவனித்துக் கொள்ளும். நாம் தலையிடாமல் இருப்பதே நல்லது." என்றான் சோழ மன்னன்.

மன்னன் கூறியது சரி என்றே தோன்றியது அமைச்சருக்கு.

இரண்டு மாதங்களுக்கு வெளியூர்களில் கொள்ளைகளில் ஈடுபட்டான் மங்கை வேந்தன். ஆயினும் எதிர்பார்த்த அளவுக்குப் பொருள் கிடைக்க வில்லை. அலைச்சலும் அலைக்கழிப்புமே அதிகமாக இருந்தது. எனவே திருமணங்கொல்லைக்கு எல்லோருடன் திரும்பிய போது அவனுக்கு மகிழ்ச்சியான செய்தி கிடைத்தது.

திருமணம் செய்து கொண்ட பசையுள்ள தம்பதியர் தங்கள் உற்றம் மற்றும் சுற்றத்தாருடன் பெரும் செல்வங்களோடு திருமணங்கொல்லை வழியாக வரப் போவதாகச் செய்தி வந்ததும் "இது எப்படி? ஆலிநாட்டு எல்லை வழியாகச் செல்வங்கள் வருவது நின்று போய் விட்டதே! இப்போது எப்படி வரும்?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"நாம் இரண்டு மாதங்களாக இங்கே இல்லாததால் நமது தொல்லை இருக்காது என்ற நினைப்பில் தற்போது வருகிறார்கள் என்று தோன்றுகிறது" என்றான் கொள்ளையனான உத்தமன்.

"எப்படியென்றாலும் நமக்கு இது மகிழ்ச்சியான செய்திதான். அதிருஷ்டம் நம்மைத் தேடி வருகிறது. அந்த அரங்கனே நமக்காக அனுதாபப் பட்டு அனுப்பி வைத்திருக்கிறான். கடந்த சில நாட்களாக என்னை விட்டுப் போயிருந்தத தெம்பு இப்போது வந்து விட்டது. உத்தமா! நீ குன்றின் மீது கவனித்து அவர்களின் வருகையைத் தெரிவி" என்றான் மங்கை வேந்தன்.

மறுநாள் நண்பகலில் குன்றிலிருந்து கீழே வந்த உத்தமன் "ஐயா! நாம் எதிர்பார்த்தவர்கள் வருகிறார்கள். நிறைய வண்டிகளும் கூடவே வருகின்றன" என்றான்.

"உத்தமா! அவர்கள் இக்குன்றை நெருங்கியதும் எல்லோருமாக அந்தக் கூட்டத்தைச் சூழ்ந்து கொள்ள வேண்டும். வண்டிகளில் வரும் மூட்டைகளை நீங்கள் கவர்ந்து எடுங்கள். நான் வருகிறவர்கள் அணிந்து கொண்டிருக்கும் நபர்கள் அணிந்திருக்கும் அணிகலன்களைப் பறிக்கிறேன்" என்றான் மங்கை வேந்தன்.

குன்றை நெருங்கி வந்து கொண்டிருந்த கூட்டமானது தனது விதியை மாற்றியமைக்கப் போகிறது என்பதை அறியாமல் தனது ஆடல்மா புரவியில் அமர்ந்தபடிக் காத்திருந்தான் மங்கை வேந்தன்.

★★★



எட்டெழுத்து மந்திரம்

திருமணக் கோஷ்டி குன்றை நெருங்கியதும் கொள்ளையர் கூட்டம் நாற்புறங்களிலும் சூழ்ந்து கொண்டது.

ஆடல்மா புரவியில் அரக்கனைப் போல் ஆரோகணித்து வந்த மங்கை வேந்தன் கீழே இறங்கி கோஷ்டியின் முன்னே வந்து கொண்டிருந்த திருமணத் தம்பதியினர் முன்பாக வேலை நிறுத்திக் கொண்டு நின்றான்.

மலையொன்று முளைத்து நின்றது போலிருந்தது மங்கை வேந்தனின் தோற்றம்.

தம்பதிகள் இருவரும் தேவ புருஷர்களைப் போலிருந்தார்கள். மன்மதனும் ரதியும் மணம் முடித்துக் கொண்டு வந்தது போல் இருந்தது அவ்விருவரது கோலம்.

மங்கை வேந்தனின் கண்கள் அவற்றைக் கவனிக்கவில்லை. அவர்கள் அணிந்திருந்த அளவற்ற நகைகளையே கவனித்தன.

"ஆகா! ஒவ்வொருவரும் நகைக் கடைகளையே சுமந்திருக் கிறார்களே! இவர்களுக்கு எங்கே இருந்து கிடைத்தது இவ்வளவு அணிகலன்கள்! கண்கள் கூசுகிறதே! இவர்கள் நகைகளை அணிந்திருப்பது போலத் தெரியவில்லையே! நகைகள் அல்லவா இவர்களை அணிந்திருப்பது போல் தோன்றுகிறது! எப்படி இருந்தால் என்ன? இன்றைக்குக் கொழுத்த வேட்டை தான். அரங்கா! உனக்கு அநேக நன்றி" என்று சொல்லிக் கொண்டான்.

அதே நேரத்தில் அச்சமடைந்த தம்பதியர் நடுங்கினார்கள்.

"யார் நீங்கள்? எதற்காக எங்களை வழி மறிக்கிறீர்கள்?" என்று கேட்டான் மணமகன்.

"எதற்கா? உங்களையெல்லாம் அழைத்து விருந்து வைப்பதற்காகத் தான்" என்று கூறி அலட்சியமாகச் சிரித்த மங்கை வேந்தன் "யாரென்று தெரியவில்லையா? கொள்ளைக் காரர்கள். வழிப்பறிக் கொள்ளைக்காரர்கள். ஆறலைக் கள்வர்கள். பயங்கரமானவர்கள். போதுமா அறிமுகம்? எனது

வேலுக்கு வேலை வைக்காமல் நகைகளையெல்லாம் கழற்றி இதில் போடுங்கள்" என்று சொல்லித் தன் உத்தரீயத்தைக் கீழே விரித்தான்.

"ஐயா! இது அடுக்காது. இது தகாது. இது முறையல்ல" என்றான் மணமகன்.

"எது முறையல்ல? நூறு பேர் அணிந்து கொள்ளக் கூடிய நகைகளை நீங்கள் இருவர் மட்டுமே அணிந்திருக்கிறீர்களே அதைச் சொல்கிறீர்களா?" என்று மடக்கினான் மங்கை வேந்தன்.

"எங்கள் நகை. எங்கள் சொத்து. அவற்றை நாங்கள் அணிந்திருப்பது உன் கண்களை உறுத்துகிறதா?"

"ஆமாம். உறுத்துகிறது. அளவுக்கு அதிகமான செல்வம் எங்கே இருந்தாலும் எனக்கு உறுத்தும். வீண் பேச்சு வேண்டாம். கழற்றுங்கள் நகைகளை"

"இது அநீதி. அநியாயம். அதர்மம்."

"அநீதி. அநியாயம். அதர்மம். இதெல்லாம் என் அகராதியில் இல்லாத சொற்கள். எனக்குத் தெரிந்த ஒரே வார்த்தை அரங்கன். அரங்கன். அரங்கன். தான். ம். சீக்கிரம்" என்று கூறி வேலை உயர்த்தினான் மங்கை வேந்தன்.

மணமக்கள் வேறு வழியின்றி எல்லா ஆபரணங்களையும் கழற்றிக் கீழே கிடந்த துணியில் வைத்தார்கள். அவற்றைப் பார்க்க மங்கை வேந்தனின் கண்கள் சந்தோஷத்தால் பளிச்சிட்டன. சமீபல காலமாக ஒரே நேரத்தில் அவ்வளவு நகைகளை அவன் கண்டதில்லை.

மணமக்கள் எல்லாவற்றையும் கழற்றி வைத்து விட்டு "எல்லாவற்றையும் கொடுத்து விட்டோம்" உனக்குத் திருப்திதானா என்று கேட்டார்கள்.

இருவரையும் மேலிருந்து கீழ்வரை பார்த்த மங்கை வேந்தன் மணமகனைப் பார்த்து குறுகுறுவென்று சிரித்து விட்டு "திருடனிடமே திருட்டுத் தனமா?" என்று கேட்டான்.

"என்னப்பா சொல்கிறாய்?"

"உன் பெருவிரலுக்கு அடுத்த விரலில் தங்கக் காப்பு அணிந்திருக்கிறாயே! அதை ஏன் ஒப்படைக்கவில்லை?" என்று கூறி மங்கை வேந்தன் மணமகனின் கால்களைக் காட்டினான்.

"உடம்பில் எல்லா இடங்களிலும் இருந்ததைத் தான் கொடுத்து விட்டேனே! இந்தக் காப்பு காலிலேயே இருந்தால் என்ன?" என்று கேட்டான் மணமகன்.

"பொன் எங்கிருந்தாலும் பொன்தான். கழற்று" என்றான் மங்கை வேந்தன்.

"கழற்ற முடியவில்லை அப்பனே. அதை விட்டு விடக் கூடாதா?"

"மணமகனாக இருந்து கொண்டு காலில் இருக்கும் காப்பைக் கழற்ற முடியாத வாழ்க்கையில் என்ன கழற்றப் போகிறாயோ என்பது தெரியவில்லை. நான் எப்படி லகுவாகக் கழற்றுகிறேன் பார்" என்று இகழ்ச்சியாகச் சொன்ன மங்கை வேந்தன் மண்டியிட்டு அமர்ந்து காலில் இருந்தத் தங்கக் காப்பைக் கழற்ற முயற்சித்தான்.

முடியவில்லை.

"என்ன இது?" என்று முணுமுணுத்துக் கொண்டு காப்பை உறுதியாகப் பற்றி இழுத்தபோது அப்படியே மல்லாந்து விழுந்தான்.

"என்ன அப்பனே! உன்னாலும் கழற்ற முடியவில்லை போலிருக்கிறதே?" என்று கேட்டான் மணமகன்.

மங்கை வேந்தனுக்கு அவமானமாக இருந்தது.

எழுந்து அமர்ந்து குனிந்து விரலில் இருந்த காப்பைப் பற்களால் கடித்து அகற்ற முயன்றான்.

முடியவில்லை.

வியர்த்துப் போயிற்று.

அவற்றைக் கழற்ற முடியாது என்பதும் விளங்கியது.

பேசாமல் விரலைத் துண்டித்து விட்டால் என்ன என்று நினைத்தான்.

"வேண்டாம். மணமகனின் விரலைத் துண்டிப்பது சரியல்ல. காலில் காப்பு தானே! போகட்டும்" என்று நினைத்து எழுந்தான்.

"சரி சரி! உன்னைப் பார்த்தால் பாவமாக இருக்கிறது. இந்தக் காப்பு உன்னிடமே இருக்கட்டும்" என்று சமாளித்த போது மணமகன் சிரித்தான்.

அந்தச் சிரிப்பு வினோதமாக இருந்தது.

"சிரிக்கட்டும். அதனாலென்ன? நமக்குத் தேவையானது கிடைத்து விட்டது. அது போதும்" என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்ட மங்கை வேந்தன் துணியில் குவிந்த நகைகளை ஒழுங்கு படுத்தி மூட்டையாகக் கட்டித் தூக்கினான்.

மூட்டை அசைய வில்லை.

வியப்பாக இருந்தது மங்கை வேந்தனுக்கு.

அந்த மூட்டையைப் போல் நான்கு மூட்டைகளைச் சுமந்து தூக்கியவன் அவன்.

இதைப் போல் தூக்க முடியவில்லையே என்று திகைத்த அவன் தன் முழு வலிமையையும் காட்டி மூட்டையைத் தூக்க முயன்ற போது "நீ என்ன கலியனா?" என்று கேட்டான் மணமகன்.

கலியன் என்றால் மிடுக்கன் என்று பொருள். மங்கை வேந்தனின் செயல் மிடுக்கோடு இருக்கவே மணமகன் அவ்வாறு கேட்டான்.

மங்கை வேந்தனுக்கு வியர்த்துக் கொட்டியதே தவிர மூட்டையைத் தூக்க முடியவில்லை.

நண்பர்களையும் கொள்ளையர்களையும் உதவிக்கு அழைத்தான்.

அவர்களாலும் தூக்கமுடியவில்லை.

சோர்வடைந்து போன மங்கை வேந்தன் மணமகனைப் பார்த்து "என்ன மந்திரம் செய்தாய் என்று தெரியவில்லையே! மூட்டையைத் தூக்க முடியவில்லையே! நீ என்ன மாயாவியா?" என்று கேட்டான்.

"மந்திரம் தான். அருகில் வா அந்த மந்திரத்தைச் சொல்கிறேன். அதைச் சொல்லிப் பார். மூட்டையைத் தூக்க முடியும்" என்றான் மணமகன்.

அதையும் தான் பார்த்து விடுவோம் என்று அலட்சியமாக மணமகனை நெருங்கிக் காதைக் கொடுத்தான்.

மணமகன் கூறிய எட்டெழுத்து மந்திரம் மங்கை வேந்தனின் செவியில் விழுந்ததுமே அவனது உடல் சிலிர்த்தது.

அந்த மந்திரத்தைத் தனக்குள் சொல்லிக் கொண்டு மூட்டையைத் தூக்கினான்.

பஞ்சு மூட்டையைத் தூக்குவது போல் எளிதாகத் தூக்க முடிந்தது.

வியந்து போன மங்கை வேந்தன் மணமகனைப் பார்த்து "மாயக் காரனே! யார் நீ?" என்று கேட்டான் முரட்டுத் தனமான குரலில்.

"திருமங்கை மன்னா!"

"என்ன என்ன? என்னையா அழைத்தாய்! நீயா என்னை அழைத்தாய். என்னை உனக்குத் தெரியுமா?"

"உன்னை மட்டுமல்ல. எல்லோரையும் எனக்குத் தெரியும். நீ கூறியபடி நான் மாயன். மன்னு வட மதுரை மைந்தன். தூய பெருநீர் யமுனைத் துறைவன். ஆயர் குலத்தினில் தோன்றிய அணிவிளக்கு. தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரன். வங்கக் கடல் கடைந்த மாதவன் நான். கேசவன் நான். நாராயணன் நான். பத்மநாபன் நான். கோவிந்தன், நான். விஷ்ணுவும் நான். வானமன் நான். ரிஷிகேஷன் நான். மதுசூதனன் நான். திரிவிக்கிரமன் நான். ஸ்ரீதரன் நான். ராமன், பலராமன், பரசுராமன் எல்லோரும் நான்" என்றான் மணமகன்.

அடுத்த நிமிடம் மங்கை வேந்தனைத் தவிர எல்லோரும் மறைந்தார்கள்.

மணமகனுக்குப் பதிலாக எம்பெருமான் காட்சி தந்தான் ஸ்ரீதேவி பூதேவியரோடு கருட வாகனத்தில் யாருக்கும் அளிக்காத அருங்காட்சியளித்து "கலியா! இப்போதாவது என்னைப் புரிந்து கொண்டாயா? உனது மன உறுதி மெச்சத் தகுந்தது. வழி எதுவாக இருந்தாலும் எடுத்துக் கொண்ட காரியத்தை முடித்தே தீருவேன் என்று உனக்கிருக்கும் ஈடுபாட்டைப் பாராட்டுகிறேன். உனது திருப்பணி தடையின்றி நடக்கும். விரைவிலேயே நீ இது போன்ற காரியங்களை விட்டு விட்டு எனது பக்தியில் ஆழ்ந்து ஆழ்ந்து ஆழ்வானாக மாறுவாய். நான் அர்ச்சா மூர்த்தியாகக் குடி கொண்டிருக்கும் ஆலயங்களுக்கெல்லாம் விஜயம் செய்து மங்களாசாசனம் செய்வாய்" என்றான்.

மங்கை வேந்தன் பதறிப் போனான்.

குலை நடுங்கியது.

"எம்பெருமானே! அகிலமெல்லாம் காத்து ரட்சிக்கும் கருணைக் கடலே உன்னிடமா நான் கொள்ளையடித்தேன்! நான் பாவி" என்று தழு தழுக்கச் சொன்னான்.

"நீ கொள்ளையடித்தது என் நகைகளை அல்ல. என் உள்ளத்தை. அதற்கு நீ மட்டுமல்ல நானும் கொடுத்து வைத்திருக்க வேண்டும். கவலையை விடு" என்றான் எம்பெருமான்.

அக்கணமே மறைந்தும் போனான்.

மங்கை வேந்தனைச் சேர்ந்தவர்கள் கண்ணுக்குத் தெரிந்தார்கள்.

கொள்ளையடிக்கப்பட்ட நகைகள் இருந்தன.

திருமணக் கோஷ்டியை மட்டும் காணவில்லை.

"மன்னவா! என்ன நடந்தது? என்ன நடக்கிறது?" என்று கேட்டார்கள் நண்பர்கள்.

"கண்டதைச் சொல்லமுடியவில்லை" என்றான் மங்கை வேந்தன்.

பிறகு "நகைகளைக் கரம்பனூருக்குக் கொண்டு சென்று திருப்பணியைக் கவனியுங்கள். இரண்டு நாட்கள் கழித்து நானும் வருகிறேன்" என்றான்.

தன்னோடு இருந்தவர்களைத் திருப்பணியைக் கவனிக்கும் படிச் சொன்ன மங்கை வேந்தன் திருமங்கைக்குச் சென்று தன் இல்லத்திற்கு வந்தான். குமுதவல்லி உட்பட யாரிடமும் பேசவில்லை. அவனது பெற்றோர் வந்தபோதும் நலம் விசாரித்ததோடு நிறுத்திக் கொண்டான்.

உணவைக் கூடச் சரிவர உண்ணவில்லை. இல்லத்தில் இருந்தால் இல்லாளுடன் பேச வேண்டி வரும் என்று மங்கை மடத்திற்குச் சென்று அங்கேயே நீண்ட நேரம் இருந்து விட்டு இரவில் மட்டும் இல்லத்திற்கு வந்து அரைகுறையாக உணவை உண்டு தரையில் படுத்து உறங்கினான்.

குமுதவல்லிக்கும் இருப்புக் கொள்ளவில்லை. மங்கை வேந்தனை ஏதோ ஒன்று ஆழமாகப் பாதித்திருக்கிறது என்று மட்டும் அவளால் ஊகிக்க முடிந்ததே தவிர அவனோடு அது பற்றிப் பேசுவதற்கு அச்சமாக இருந்தது.

மங்கை வேந்தனோடு இருந்தவர்கள் திருமங்கைக்கு வந்து விட்டார்களா என்று காரியஸ்தர்களிடம் விசாரித்த போது வரவில்லை என்று தெரிந்ததால் யாரிடம் கேட்பது என்று தெரியாமல் தவித்தாள்.

மங்கை வேந்தனுக்குத் திருமணங் கொல்லையில் நடந்த ஆச்சர்யகரமான சம்பவம் பற்றி யாரிடம் பேசுவது என்பது விளங்கவில்லை. குமுதவல்லியிடம் தான் பேசவேண்டும். ஆனால் அவளோ மனைவியாக நடந்து கொள்ளாமல் அரசியாக நடந்து கொண்டதிலிருந்து அவளிடம் பேசுவதற்கு அவன் விரும்பவில்லை.

குமுதவல்லிக்கும் அது தெரிந்திருந்தது.

"மாப்பிள்ளையின் இந்த நிலைக்கு நீ தான் காரணம் குமுதவல்லி. தன் மனைவியோடு கூட பேசமுடியாத நிலை ஒரு கணவனுக்கு வருமானால் அது துயரமானது. வேதனையானது. சங்கடமானது" என்றார் அவளது தந்தை.

"நான் என்னப்பா செய்தேன்? என் கடமையைத் தானே செய்தேன்?"

"மனைவியின் கடமை மணாளனுக்குத் தானே தவிர நாட்டிற்கு அல்ல."

"அவர் தானே என்னை அரியணையில் அமர்த்தி அரசி யாக்கினார்? அரசியாக அமர்ந்து கொண்டு நாடு எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை என்று இருந்து விட முடியுமா?"

"உன் கணவன் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை என்று நீ நடந்து கொண்டது சரியா?"

"நான் நல்லதைச் சொன்னேன். அவர் கேட்கவில்லை. நான் என்ன செய்ய முடியும்?"

"குமுதவல்லி! மங்கை வேந்தரின் குணம் நிலையாக இல்லை. அடிக்கடி மாறுகிறது. அதற்குக் காரணம் சூழ்நிலையில் கட்டாயமே தவிர அவரது விருப்பமல்ல. திருமண நாளன்றே போருக்குப் போனவர் அவர். அதற்குக் காரணம் அவரது விருப்பமல்ல. சூழ்நிலையில் கட்டாயம். அந்தக் கட்டாயம் தான் அவரை அடிக்கடி மாற்றுகிறது. அதை நீ புரிந்து கொள்ளாமல் நாட்டைப் பாதுகாப்பதாகச் சொல்லி அவருக்கு எதிரான நடவடிக்கைகளை எடுத்து நோகடித்து விட்டாய். யாரிடம் சொல்லி அவர் ஆறுதல் பெறமுடியும் சொல்."

"நான் இருதலைக் கொள்ளியாகத் தவிப்பதை யாருமே உணரமாட்டீர்கள்" என்று வேதனையோடு சொல்லிக் கொண்ட குமுதவல்லி தனது ஆலோசகரிடம் தனது வேதனைகளைக் கூறி அழுதாள்.

"அவரிடம் நீங்கள் தான் பேசி விவரம் அறிய வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

ஆலோசகர் உத்தம நம்பியும் அவ்வாறே மங்கை வேந்தன் அணுகினார்.

மங்கை வேந்தன் பேசிய பேச்சு அவரை அதிரவைத்தது.

★★★



தசவதனன்

குமுதவல்லியின் ஆலோசகரான உத்தம நம்பி மங்கை மடத்திற்கு வந்த போது அங்கே மங்கை வேந்தன் மயிலாடும் பாறை யொன்றில் அமர்ந்திருக்க பாறையில் இடம் கிடைக்காததால் மண்டபத்தில் ஆடிக் கொண்டிருந்தது ஒரு மயில்.

அந்த மயிலாகத் தான் பிறந்திருக்கக் கூடாதா என்ற ஆதங்கத்துடன் அதன் ஆட்டத்தைக் கவனித்துக் கொண்டிருந்த மங்கை வேந்தனை அணுகிய உத்தம நம்பி "வந்தனம் அரசே. நான் ராணி குமுதவல்லியின் ஆலோசகன். உத்தம நம்பி" என்றார்.

"பதவியைத் துறந்து வெளியே வந்து விட்ட என்னை அரசன் என்று குறிப்பிடும் நீங்கள் குமுதவல்லிக்கு எப்படிச் சிறந்த ஆலோசகராக இருக்க முடியும்?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

ஆரம்பமே அபசகுனமாக இருந்ததால் சற்றே தவித்த ஆலோசகர் "ஐயா! அரியணையைத் தங்கள் துணைவியாருக்குத் தற்செயலாகத் தான் விட்டுக் கொடுத்திருக்கிறீர்கள். எப்போது வேண்டுமானாலும் அதில் அமரக் கூடிய உரிமை தங்களுக்கு இருக்கிறது. எத்தனையோ அரச குமாரர்கள் வனவாசம் செய்கிறார்கள். அதனால் அவர்கள் அரசகுமாரர்கள் அல்ல என்று ஆகிவிடாது. தாங்கள் மன்னர் தான். நான் அழைத்ததும் சரிதான்" என்றார்.

"மிகச் சிறிய விஷயத்திற்கு மிகப் பெரிய விளக்கமளிப்பது ஆலோசகர்களுக்குச் சிறப்பைச் சேர்க்காது" என்று சொன்ன மங்கை வேந்தன் "எங்கு வந்தீர்? என்ன விஷயம்?" என்று கேட்டான்.

"தங்கள் துணைவியார்-மகாராணியார்-குமுதவல்லியார் பெரும் தவிப்பில் இருக்கிறார். பெரிய வேதனையில் இருக்கிறார். தன்னிடம் பேச வில்லையே என்று ஏங்கிப் போய் அதற்குக் காரணம் தெரியாததால் அல்லல்பட்டு அவதியில் இருக்கிறார். எனவே தான் என்னை அனுப்பி வைத்தார்" என்றார் உத்தம நம்பி.

"ஆலோசகரே! குமுதவல்லிக்குத் தாகம் எடுத்தால் நீங்கள் தண்ணீர் பருகுவீர்களா?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"மன்னவா! தங்கள் பேச்சு தவறானது. மகாராணியின் வேதனையைப் போக்குவதற்குத் தூதுவனைப் போல் வந்தவன் நான். அவரது தாகத்திற்கு நான் தண்ணீரை அருந்த மாட்டேன். தயை கூர்ந்து கோபத்தைத் தவிர்த்து அவரது தாகத்தைப் போக்குங்கள். அரியணை ஒரு புறம். தாங்கள் ஒரு புறம். இரண்டிற்கும் இடையே சிக்கித் தவிக்கிறார்" என்றார் உத்தமநம்பி.

"நிரந்தரமாகப் பிரிய வேண்டிய காலம் எங்கள் இருவருக்கும் வந்து விட்டது. அதற்குத் தயார் படுத்திக் கொள்ளும் படிக் குமுதவல்லியிடம் சொல்லும்" என்று கூறிவிட்டுக் கரம்பனூருக்குப் புறப்பட்டான் மங்கை வேந்தன்.

திருமணங்கொல்லையில் கடைசியாகக் கொள்ளைச் சம்பவத்தில் அவன் ஈடுபட்டபோது திருமணத் தம்பதியராய் வந்து பிறகு எம்பெருமானாய் காட்சி தந்து மறைந்து விட்டதிலிருந்து குழப்பமும் தெளிவும் மாறி மாறி வந்து கொண்டிருந்தன மங்கை வேந்தனுக்கு.

தான் திருப்பணி விஷயத்தில் மன உறுதியுடன் செயல்படுவதாகத் திருவாய் மலர்ந்தருளிய எம்பெருமான் எல்லாம் நல்லவிதமாக நடைபெறும் என்று தெரிவித்திருந்தாலும் அவன் திருப்தியடைந்து விடவில்லை.

தன்னைப் பாராட்டி நல்வார்த்தைகளை எம்பெருமான் நவின்றிருந்தாலும் திருப்பணிக்கு வேண்டிய செல்வத்தைக் கொள்ளைகள் மூலமும் வழிப்பறிகள் மூலமுமே அவன் கொடுத்து வருவது அவனுக்குக் கவலையாக இருந்தது.

அக்கவலையோடு கரம்பனூருக்குச் சென்று நண்பர்களோடும் சிற்பிகளோடும், நிர்மாணிகளோடும் ஆலோசித்தான்.

திருப்பணிக் கணக்குகளில் பற்றாக்குறை தான் தெரிந்ததே தவிர போதும் என்ற நிறைவு வரவில்லை.

"நான் இனி வழிப்பறியில் ஈடுபடமாட்டேன் அந்த எம் பெருமான் எனக்கு வழிகாட்டட்டும்" என்றான் மங்கை வேந்தன்.

அவனது குரலில் வித்தியாசமான உறுதி தெரிந்தது.

நண்பர்களுக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை.

இதற்கிடையில் ஒருநாள் காஞ்சியை ஆண்ட பல்லவ மன்னனிடமிருந்து ஒரு குழு கரம்பனூருக்கு வந்து மங்கை வேந்தனைச் சந்தித்தது.

"ஐயா! எங்கள் பல்லவப் பேரரசர் - பல்லவ மல்லர் - நந்தி வர்மர் நீங்கள் திருவரங்கத்தில் செய்து வரும் ஆலயத் திருப்பணியைப் பற்றிக் கேள்விப் பட்டார். பரம பாகவதரான அவர் அரங்கன் கோயில் திருப்பணியில் தனது பங்கும் இருக்க வேண்டும் என்று கூறி ஆயிரம் பொற்காசுகளை அனுப்பியுள்ளார். அதைத் தாங்கள் பெற்றுக் கொள்ள வேண்டும். பேரரசர் விரைவில் உங்களைச் சந்திக்க விருப்பதாகச் சொல்லச் சொன்னார்" என்றார் குழுத் தலைவர்.

திருப்பணிக்கான நிதி நல்லவிதமாக வந்ததைக் கண்டு மகிழ்ந்த மங்கை வேந்தன் "எல்லாம் அரங்கனின் திருவுள்ளம். பல்லவ மன்னருக்கு என் நன்றியைத் தெரிவியுங்கள்" என்றான்.

ஆயிரம் பொற்காசுகளைத் திருப்பணிக் கணக்கில் சேர்க்கச் சொன்ன மங்கை வேந்தன் "இன்னும் எவ்வளவு நிதி தேவைப்படும் என்பதை முடிவாகச் சொல்லுங்கள்" என்று கேட்டான் எல்லோரையும் பார்த்து.

அவர்கள் கணக்குகளைப் போட்டார்கள். முடிவடைய வேண்டிய திருப்பணிகளைப் பட்டியலிட்டார்கள். முடிவில் நிதித் தேவை எவ்வளவு என்பதைச் சொன்னார்கள்.

"தேவையைச் சொல்லி விட்டீர்கள்! அதற்கு மேல் ஒரு காசு கூடத் தரமுடியாது. திருப்பணியை முடிக்க வேண்டும். முடிக்காது போனால் உங்களில் ஒருவரையும் உயிரோடு விட மாட்டேன்" என்றான் மங்கை வேந்தன்.

அவனது முகம் சீறிய சிங்கம் போல் மாறிச் சிவந்ததைக் கண்ட எல்லோருமே கலங்கினார்கள்.

★

அன்று மாலை கரம்பனூரிலிருந்து திருவரங்கம் நோக்கி நடந்தான் மங்கை வேந்தன்.

நண்பர்கள் கண்டார்கள் என்றாலும் எதுவும் கேட்கவில்லை. கூடச் செல்லவும் இல்லை.

மங்கை வேந்தனோடு சேர்ந்த கொள்ளையர்கள் திருமணங் கொல்லையில் கடைசியாக நடந்த வழிப்பறியோடு பிரிந்து சென்று விட்டிருந்தார்கள். அந்த வழிப்பறி முடிந்த போது மங்கை வேந்தனின் முகத்தில் உண்டான மாற்றமே அதற்குக் காரணமாக இருந்தது.

தற்போது மங்கை வேந்தன் திரவரங்கத்தை நோக்கிச் சென்ற போது மற்றொருவன் அவனைப் பின் தொடர்ந்து சென்றான்.

சமீப காலக் கொள்ளை நிகழ்ச்சிகளால் மங்கைவேந்தனின் தோற்றமே மாறிப் போயிருந்தது. நீலநிறத்தோடு விளங்கி நீலன் என்று பெயர் பெற்றிருந்த அவனது உடம்பு கறுத்துப் போயிருந்தது. பெண்கள் விரும்பக் கூடிய அவனது அழகு முகம் வாடிப் போய் உலர்ந்து போன மரப் பட்டையைப் போலச் சோபையற்றுக் கிடந்தது. தலைமுடி அதிகமாக வளர்ந்து தோள் வரையில் தொங்கிக் காற்றில் பறந்தது. ஒளி வீசும் கண்கள் ஒளியை இழந்து பஞ்சடைத்தது போல் இருந்தது.

சேனாதிபதியாக இருந்த காலத்திலிருந்தே அவன் அணிந்திருந்த கழல்களையும், பொன்னாபரணங்களையும் திருப்பணிக்கு அளித்து விட்டிருந்த படியால் தேகம் வெறுமனே இருந்த விதமானது தேகாபிமானத்தை விட்டு விட்டத் துறவிகளை நினைவு படுத்துவதாக இருந்தது. கால்களில் அணியும் காலணி களையும் அவன் மறந்து விட்டிருந்ததால் வெற்றுக் கால்கள் திருவரங்கத்தை நோக்கி நடந்தன. உத்தரீயம் ஒன்றை மட்டும் போர்த்துக் கொண்டு வழிப்போக்கனைப் போல இருந்ததால் அவனை யாரும் அடையாளம் கண்டு கொள்ள வில்லை.

திருவரங்கத்திற்குச் சென்ற பிறகு தன்னை யார் என்று அவன் காட்டிக் கொள்ளாமல் திருப்பணி நடக்கும் இடங்களைப் பார்வையிட்டான். தன்னைப் பற்றியும் திருப்பணி பற்றியும் மக்கள் தற்போது என்ன பேசிக் கொள்கிறார்கள் என்பதை அறிய அவனுக்கு ஆர்வமாக இருக்கவே ஆங்காங்கு பலரிடம் பேசிப் பார்த்தான்.

"மங்கை வேந்தரின் மன உறுதி வேறு யாருக்கும் வராது. இந்தத் திருப்பணியை முடிப்பதில் அவரது உறுதி பாறாங்கல்லைப் போன்றிருக்கிறது. அவரைத் தவிர வேறு யாராலும் இதை நடத்த முடியாது" என்றார்கள் மக்கள்.

"இத்திருப்பணியைச் செய்வதற்காக மங்கை வேந்தன் வழிப்பறியிலும் கொள்ளைகளிலும் ஈடுபடுவதாகப் பேசிக் கொள்கிறார்களே! அதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"ஐயா! வழிப்பறியும் கொள்ளைகளும் பல இடங்களிலும் நடந்து கொண்டு தான் இருக்கின்றன. அவற்றைச் செய்பவர்கள் அவற்றில் வரும் வருமானங்களைத் தங்கள் நலத்திற்காகப் பயன் படுத்துகிறார்கள். அது பாவச் செயல். ஆனால் மங்கை வேந்தர் நாணயமானவர். ஒரு நாணயத்தைக் கூட அவர் தனக்காகப் பயன்படுத்துவதில்லை. அனைத்தையும் இக்கோயில் திருப்பணிக்காகத் தான் செலவிடுகிறார். இது போன்ற பெரிய

காரியங்களுக்குச் செல்வம் தான் முக்கியமே தவிர அவை வரும் வழியல்ல" என்றார்கள் மக்கள்.

வேறு சிலர் திருப்பணிக்காகத் தினமும் ஒரு காசு மிச்சப் படுத்தி சேமிப்பதாகவும் கோபுரங்களும் மதில்களும் முழுமையாகக் கட்டி முடித்து சம்ப்ரோக்ஷணம் செய்யும் போது மங்கை வேந்தனிடம் அளிக்கப் போவதாகவும் சொன்னார்கள்.

மங்கை வேந்தன் நெகிழ்ந்து போனான். தனது கொள்ளைகளை அவர்கள் தவறாக நினைக்க வில்லை என்பது அவனுக்கு ஆறுதலாக இருந்தது. மக்களது நினைப்பு என்பது எல்லா விஷயங்களிலும் முதன்மையானது என்பதையும் அது சரியாக இருந்து விட்டால் எல்லாமே சரியாக நடக்கும் என்பதையும் உணர்ந்து கொண்ட மங்கை வேந்தன் அவர்களை உள்ளுக்குள் பாராட்டியபடி ஆலயத்திற்குள் சென்று அரங்கனைத் தரிசனம் செய்தான்.

"என்ன மங்கைவேந்தா? திருப்பணியை முடித்து விடுவாயல்லவா?" என்று அரங்கன் கேட்பது போல் தோன்றியது அவனுக்கு.

"ஆரம்பித்தவன் நீ. முடிக்கப் போகிறவனும் நீ. இடையில் நான் யார்?" என்று முணுமுணுத்துக் கொண்டு வந்த அவன் சந்திர புஷ்கரிணிக் கரையில் வந்து அமர்ந்தான்.

திருக்குளத்து நீர் நிர்மலமாய் இருந்தது. தன் மனமும் நிர்மலமாய் இருந்து சமீப காலங்களில் நிறம் மாறிப் போய் விட்டதையும், விஷம் கலந்த பாலைப் போல் கெட்டு விட்டதையும் எண்ணி நொந்து கொண்ட போது அது வரை அவனைப் பின் தொடர்ந்து வந்து கொண்டிருந்த மனிதன் அவனுக்கு முன்னால் வந்து நின்று "வந்தனம் மகாராஜா. நான் ஒரு சிற்பி. என் பெயர் தசவதனன்" என்றான்.

மங்கை வேந்தனின் கவனம் கலைந்து கிடந்ததால் ஆர்வம் எதுவும் காட்டாமல் "அப்படியா?" என்று மட்டும் கேட்டு விட்டு அருகே இருந்த நந்தவனத்திலிருந்து கேட்ட குயிலின் சத்தத்தைக் கவனித்தான்.

"நீங்கள் திருப்பணி தொடங்கியதிலிருந்து எல்லாவற்றையும் கவனித்து வருகிறேன்" என்று தொடர்ந்து சொன்னான் சிற்பி தசவதனன்.

"சரி" என்றான் மங்கை வேந்தன் சிரத்தையில்லாமல்.

"உங்களைத் தவிர வேறு யாராலும் இந்தப் பணியில் இறங்க முடியாது" என்றான் சிற்பி.

"அதற்கென்ன? எல்லாம் நடந்து கொண்டு தானே இருக்கிறது?" என்றான் மங்கை வேந்தன்.

"உங்கள் திருப்பணி முழுமையாக நிறைவேற இன்னும் கணிசமான நிதி தேவைப்படும்."

"நிர்மாணிகள் சொன்னார்கள்."

"அவர்கள் கணக்கு சரியில்லை. அவர்கள் சொன்னதை விட அதிக நிதி தேவைப்படும். கட்டுமானம் உயர உயர செலவுகள் அதிகமாகும். கட்டுமானம் நிற்காமல் நடை பெறவேண்டும்."

"தெரிந்த விஷயம் தான்."

"நிதிக்கு ஏற்பாடு செய்திருக்கிறீர்களா?"

"அதைத் தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்."

"யோசித்துக் கொண்டிருந்தால் நிதி வராது."

'வழி புலப்படும் முதலில். நிதி வரும் பிறகு."

"எனக்குத் தெரிந்த ஒரு வழி இருக்கிறது. அதில் முயன்றால் திருப்பணிக்குத் தேவையான நிதி முழுமையாகக் கிடைத்து விடும்."

"எப்படி?"

"அதை அவ்வளவு எளிதாகச் சொல்லி விட முடியாது. அதற்குச் சில நிபந்தனைகள் இருக்கின்றன."

"என்ன நிபந்தனை?"

"கிடைக்கும் செல்வத்தில் பாதி எனக்குத் தர வேண்டும்."

மங்கை வேந்தன் சற்று யோசித்தான்.

தனக்குப் புலப்படாத வழி தசவதனனுக்குப் புலப்படவே அவன் மீது மங்கை வேந்தனின் கவனம் திரும்பியது.

"கரம்பனூருக்குச் செல்வோம். அங்கே எனது நண்பர்களுடன் பேசுவோம்" என்றான்.

இருவரும் கரம்பனூருக்குச் சென்றார்கள்.

ஐந்து நண்பர்களையும் சிற்பிக்கு அறிமுகம் செய்து வைத்த மங்கை வேந்தன் விஷயத்தைச் சொன்னான்.

பிறகு சிற்பியைப் பார்த்து "உன் யோசனையைச் சொல்" என்றான்.

"என் நிபந்தனையை ஏற்கிறீர்களா?" என்று கேட்டான் சிற்பி.

"விஷயம் எது வென்று அறியாமல் நிபந்தனையை ஏற்க முடியாது. நீ பங்கு கேட்பதிலிருந்து நீ சொல்லும் வழி கடினமானதாக இருக்க வேண்டும். நாங்கள் அதில் கடுமையாக ஈடுபட வேண்டியதாக இருக்க வேண்டும். உன்னால் இயலாத வேலையாக இருக்க வேண்டும். முதலில் செல்வம் கிடைக்கப் போகும் வழியைச் சொல்" என்றார் தோலா வழக்கன்.

"அது முடியாது. பங்கு உறுதியாக வேண்டும். முறி எழுதப்பட வேண்டும். அதற்குப் பிறகு தான் பேச முடியும்" என்றான் சிற்பி.

"அப்படியே ஆகட்டும். கிடைப்பதில் பாதி உனக்கு நிச்சயம். ஆனால் நீயும் முயற்சியில் ஈடுபட வேண்டும். கஷ்ட நஷ்டங்களில் பங்கு பெற வேண்டும்" என்றார் தோலா வழக்கன்.

"அது சரிதான். முறியை எழுதுங்கள்."

மேலே சொன்னதை ஓலையில் எழுதித் தோலா வழக்கனும் சிற்பியும் கையெழுத்திட்டார்கள்.

"இந்த ஓலை என்னிடம் இருக்கட்டும்" என்று கூறி வைத்துக் கொண்ட சிற்பி "நாகைப் பட்டிணத்தில் பழம் பெரும் புத்த விஹாரம் இருக்கிறது. அதற்குள் பசும் பொன்னால் ஆகிய புத்தர் சிலை இருக்கிறது. அதைத் தான் நாம் பெறவேண்டும்" என்றான்.

"சிற்பி! உனக்கு லவலேசமாவது புத்தியிருக்கிறதா? கொள்ளை யிடுவதை இப்போது தான் நிறுத்தியிருக்கிறேன். மீண்டும் அதே காரியத்திற்கு வழி சொல்கிறாய். எனக்கு விருப்பமில்லை" என்றான் மங்கை வேந்தன்.

"ஐயா! நான் சொன்ன புத்தர் சிலையைக் கவர வேண்டும் என்றால் முற்பிறப்பில் புண்ணியம் செய்திருக்க வேண்டும். இதை நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அது நம் வாழ்நாள் சாதனையாக இருக்கும்" என்று கூறிப் புத்தர் சிலையைப் பற்றி விவரித்தான் சிற்பி.

வியந்து போனான் மங்கை வேந்தன்.

★★★



சிற்பியின் விவரணம்

நாகப் பட்டினத்தில் இருக்கும் புத்த விஹாரத்தில் இருக்கும் பொன்னாலான புத்தர் சிலையைக் கவருவதற்கு வழியைக் கூற முற்பட்ட சிற்பி தசவதனன் "நாகப்பட்டினத்தின் பழைய பெயர் பதரிதிட்டா" என்றான்.

அவன் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த மங்கை வேந்தனும் மற்றவர்களும் நாகப்பட்டினத்தைப் பற்றி அறிந்தவர்களாதலால் சிற்பி அவரைப் பற்றிப் பீடிகை போட்டது பிடிக்கவில்லை.

வானமேயி "சிற்பி! எங்களுக்குக் கதை எதுவும் வேண்டாம். வழி மாத்திரம் வேண்டும்" என்றார் தோலா வழக்கன்.

"ஐயா! நாம் மேற்கொள்ளப் போகும் காரியத்தில் மிகவும் முக்கியமானது பொறுமை. நீங்கள் இப்படி ஆரம்பத்திலேயே பொறுமையை இழந்தால் சரியாக இருக்காது" என்றான் சிற்பி.

"எதில் எதில் பொறுமை காட்ட வேண்டுமோ அதில் பொறுமை காட்டலாம். தேவையற்ற விஷயங்களைக் கேட்பதற்கு பொறுமை இருக்காது. நாகப்பட்டினத்தைப் பற்றி நாங்கள் அறியாதவர்களல்ல" என்றார் தோலாவழக்கன்.

"அப்படியென்றால் அங்கே இருக்கும் புத்தர் விஹாரம் பற்றியும் சிலையைப் பற்றியும் நீங்களே சொல்லுங்கள்" என்றான் சிற்பி.

மங்கை வேந்தன் குறுக்கிட்டு "நீ பேசாமல் இரு தோலா வழக்கா. சிற்பி சொல்வதைச் சொல்லட்டும்" என்றான்.

சிற்பியும் பேச்சைத் தொடர முற்பட்டு "இந்த நாகப் பட்டினமானது ஆரம்பத்தில் நூறு குடும்பங்களைக் கொண்ட சிற்றூராகத் தான் இருந்தது. மாமன்னர் அசோகர் காலத்தில் அங்கே ஒரு விஹாரம் கட்டப்பட்டது. அதற்குப் 'பதரி திட்ட விஹாரை' என்று பெயர். அப்போது நாகர்கள் பலர் பற்பல இடங்களிலிருந்து வந்தார்கள். அவர்கள் பௌத்தர்களாக இருந்த படியால் அந்த விஹாரத்தைப் பராமரிக்கும் விதமாக அங்கே தங்கினார்கள். அது முதற் கொண்டு பதரி திட்டா நாகர் பட்டினம்

என்றப் பெயரைப் பெற்று தற்போது நாகப் பட்டினம் என்று அழைக்கப் பட்டு வருகிறது" என்றான்.

"இந்த விஹாரத்தில் தான் புத்தர் சிலை இருக்கிறதா?" என்று கேட்டார் நிழலில் ஒதுங்குவான்.

"விஹாரமே இல்லை. சிலை எப்படி இருக்கும்?" என்று கேட்ட சிற்பி "அந்த விஹாரம் கால வட்டத்தில் மறைந்து விட்டது. நாகர் இனத்துப் பௌத்தர்கள் பரவை என்ற இடத்திலும் நாகர் ஊர்* என்ற இடத்திலும் பெயர்ந்தார்கள். புகாரில் கடல் கோள் ஏற்பட்டு ஊர் அழிந்து பட்டதால் அங்கே இருந்த மக்களில் பெரும்பாலானவர்கள் நாகப் பட்டினத்திற்கு வந்து குடியேறினார்கள். அதோடு இலங்கையில் உள்ள மணிபல்லவத்திலிருந்து வணிகர்களும் அங்கே வரத் தொடங்கியதால் இது துறைமுகப் பட்டினமாகியது. பேரூராகவும் உருப் பெற்றது. ஆனால் புகாரைப் போல இந்த ஊர் கோட்டையாக அமையாமல் பேரூராகவே அமைந்தது" என்று கூறி நிறுத்தினான்.

அவனது பீடிகையைச் சகித்து கொண்ட மங்கை வேந்தனின் நண்பர்கள் "நல்ல தகவல்கள் தான்" என்றார்கள் பெருமூச்செறிந்தபடி.

சிற்பி அவர்களைப் பொருட்படுத்தாமல் "முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னால் பௌத்த முனிவர் ஒருவர் மிகவும் பிரயாசைப் பட்டு இங்கே புத்த விஹாரம் ஒன்றைக் கட்டினார். நாகப்பட்டினத்திற்கு நாகானனம் என்ற வடமொழிப் பெயர் ஒன்று உண்டு. எனவே இந்த விஹாரத்திற்கு நாகனன விஹாரை என்று பெயரிட்டார். நாம் கவர வேண்டிய பொன்னாலான புத்தர் சிலை தற்போது அங்கு தான் இருக்கிறது" என்றான்.

"சிற்பி! மிகவும் விலை உயர்ந்த பொன்னால் ஆன புத்தர் சிலையை புத்தபிட்சுவானவர் எப்படி நிறுவினார்?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"ஐயா! பௌத்தத் துறவியார் வருகை தந்த போது தமிழகம் முழுவதும் களப்பிரர்கள் என்ற வம்சத்தவரால் ஆளப் பட்டுக் கொண்டு வந்தது. இந்த நாகப் பட்டினமும் அவர்கள் ஆதிக்கத்தில் இருந்தது. அவர்கள் ஆதியிலிருந்தே புத்த மதத்தையும் சமண மதத்தையுமே ஆதரித்து வந்தார்கள். எனவே பௌத்தத் துறவி நாகையில் புத்த விஹாரம் அமைய வேண்டிய அவசியத்தைக் கூறி அப்போது ஆண்டமன்னனிடமே உதவி கேட்டார். ஏற்கனவே அங்கே அசோகர் காலத்தில் கட்டப்பட்ட புத்த

---

* இவ்வூரே தற்போது நாகூர் என்று வழங்கப் படுகிறது.

விஹாரம் இருந்து கால வெள்ளத்தில் அழிந்து விட்டதையும், நாகையில் பௌத்தர்கள் கணிசமாக வாழ்ந்து வருவதையும் மனத்தில் கொண்டு களப்பிர மன்னன் புத்த விஹாரத்தைக் கட்டியதோடு பொன்னாலான புத்தர் சிலையையும் நிறுவிச் சிறப்பித்தான். பௌத்தர்களே அதை எதிர்பார்க்கவில்லை. ஆகவே அவர்களெல்லாம் பரமானந்தப் பட்டு போனார்கள்" என்றான் சிற்பி.

"எளிமையை உபதேசித்தவருக்குப் பகட்டான சிலை நிறுவுவது வேடிக்கையான விஷயம். முரண்பாடான விஷயம். ஏற்க முடியாத விஷயம். புத்தர் சிலையைப் பொன்னால் அமைத்துக் கொண்டு பௌத்தர்களால் எளிமையை எப்படிப் போதிக்க முடியும்? பின்பற்ற முடியும்?" என்று கேட்டார் சாயை பிடிப்பான்.

"ஐயா! புத்தர் பெருமான் பௌத்தர்களுக்கு விலை மதிக்க முடியாத அரிய பொக்கிஷம். அதை வெளிப்படுத்தும் விதமாக அவரது உருவத்தைப் பொன்னால் வடித்திருப்பார்கள். இலங்கையில் புத்தருக்கு வடிக்கப் பட்டிருக்கும் சிலைகள் பிரம்மாண்டமானவை. அதற்கு என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டான் சிற்பி.

"அதை விடு சிற்பி. அங்கே மிகவும் சிறப்பாகப் பொன்னால் செய்யப்பட்ட புத்தர் சிலையை பௌத்தர்கள் பாதுகாத்து வழிபட்டுக் கொண்டிருப்பார்கள் அல்லவா? அதை எப்படிக் கடத்த முடியும்?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"இந்த விஹாரம் நிறுவப்பட்டு ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு களப்பிரர்களைப் பல்லவர்களும் பாண்டியர்களும் சேரர்களுமாக அவரவர்கள் பகுதிகளில் வென்று விரட்டியடித்தார்கள். நாமிருக்கும் சோழ மண்டபலப் பகுதி பல்லவர்களது ஆதிக்கத்தில் வந்தது. பல்லவ மன்னர்கள் சைவர்களாகவும் வைணவர்களாகவும் இருந்தபடியால் புத்தமும் சமணமும் அவர்களது ஆதரவில்லாமல் அனாதைகளாக ஆகத் தொடங்கின. நாகையிலும் அதுதான் நிலையாக இருந்தது. அங்கிருந்த பௌத்தர்கள் ஆதரவில்லாத காரணத்தால் பல்வேறு இடங்களுக்குப் பெயர்ந்தார்கள். அதோடு நாகையில் இருந்த பௌத்தர்களும் அந்த விஹாரத்தை மூடி விட்டுத் தத்தம் இருப்பிடங்களிலேயே இருந்து கொண்டு சிறு சிற்பச் சிலை வடித்து வணங்கலானார்கள். பொதுவாக அவர்கள் சிலைகளை அலங்கரித்து வழிபாடு நடத்துவதில்லை. விழாக்கள் எடுப்பதில்லை. ஆரவாரமற்ற அமைதியான நிலையையே கடைப் பிடித்தார்கள். ஆராமம் என்ற சோலைப் பகுதியில் நடமாடிக் கொண்டு போதி மரத்தின் கீழ் தவமியற்றி வரலானார்கள்."

"இருக்கலாம். ஆனால் புத்த விஹாரத்தை அவர்கள் பாது காக்காமல் இருப்பார்களா?"

"அந்த விஹாரத்தை அவர்கள் பாதுகாப்பதில்லை. மர்மமான யந்திரங்கள் பாதுகாக்கின்றன."

"என்ன சொல்கிறாய்?"

"அந்த விஹாரத்தை அவர்கள் யந்திர சூட்சுமங்கள் மூலம் மூடியிருக்கிறார்கள். அதைத் திறக்க முயன்றால் ஒலி எழும்பும். அந்த ஒலி விசித்திரமான ஒலி. பௌத்தர்கள் அதைக் கேட்டதும் அங்கு வந்து விடுவார்கள்."

"அப்படியென்றால் உள்ளே நுழையவே முடியாதா?"

"உள்ளே நுழைவதற்கு வழிகாட்ட என்னால் முடியும். ஆனால் சிலை இருக்கும் அறைக்குள் நுழையும் வழி எனக்குத் தெரியாது."

"அது என்ன மர்மம்?"

"மர்மம் தான் ஐயா. அதனால் தான் உங்கள் உதவியை நாடுகிறேன். சிலை இருக்கும் இடத்தை அடைய யந்திர நுட்பம் இருக்கிறது. அது தெரிந்தாலொழிய எதையும் செய்ய முடியாது. நான் எவ்வளவோ முயன்றேன் அறிய முடியவில்லை."

"சிற்பியான உன்னாலேயே அறியமுடியவில்லை என்றால் எங்களால் எப்படி அறிய முடியும்?"

"உங்களால் முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆகவே தான் நானாகவே உங்களைத் தேடி வந்தேன்."

"நீ சொல்லும் யந்திர நுட்பத்தை சிற்பி தானே உருவாக்க முடியும்? அவனைக் கேட்கிற விதத்தில் கேட்டால் சொல்லி விடுவான் இல்லையா?"

"அந்தச் சிற்பி யாரென்று தெரியவில்லையே! தெரிந்தால் தானே விசாரிக்க முடியும்?"

தசவதனன் இவ்வாறு கூறியதைக் கேட்டதும் தோலா வழக்கனுக்கு கோபம் வந்து விட்டது.

"முக்கியமான விஷயம் யந்திர நுட்பத்தை அமைத்த சிற்பி விஷயம் தான். அவன் யார் என்றே தெரிந்து கொள்ளாமல் உப்புக்கு உதவாத விவரங்களைச் சொல்லி விட்டுப் பங்கும் கேட்கிறாய். நீயும் உதவாக்கரை. உன் திட்டமும் உருப்படியற்றது. எங்கள் அவசரத்திற்கு உதவாத இந்தத் திட்டம் எங்களுக்கு வேண்டாம். சிலையை நீயே கடத்து" என்று கூறிச் சிற்பியிடம் கொடுத்த முறி ஓலையை வாங்கிக் கிழித்தெறிந்தார்.

"நாம் செல்லலாம் மன்னவா. முக்கியமான நேரத்தில் நமக்கு முட்டாள்கள் தான் கிடைக்கிறார்கள். இவனது பேராசைக்கு

வழிகாட்டும் வேலை நமக்கு வேண்டாம். அதற்கு நமக்கு நேர அவகாசம் இல்லை" என்று கூறிவிட்டு எல்லோருடன் புறப்பட்டார் தோலா வழக்கர்.

சிற்பிக்குப் பெரும் ஏமாற்றமாக இருந்தது.

செய்வதறியாமல் தவித்தபடி அங்கேயே நீண்ட நேரம் வரை அமர்ந்திருந்தான்.

அதே சமயம் அனைவரும் தங்கள் இருப்பிடத்திற்குச் சென்றார்கள்.

"உன் திட்டம் என்ன தோலா வழக்கா?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"மன்னவா! தசவதனன் கூறிய தகவல் உபயோகமானது தான். அதில் இறங்கிக் காரியமாற்றுவதற்கு அவன் தேவையில்லை. ஆகவே தான் அவனை நிராகரித்து விட்டேன். நமது நிழலில் ஒதுங்கிக் குளிர்காய நினைக்கிறான் தசவதனன். இதற்கு அவன் பேரம் பேசியது ஒப்புக் கொள்வதற்கில்லை. நாமாகவே சிற்பி யார் என்பதை அறிந்து சிலையைக் கைப்பற்றலாம். நிழலில் ஒதுங்குவாரை நாகைக்கு அனுப்புவோம். புத்த பிட்சு வேடத்தில் அவர் அங்கே செல்லட்டும். அங்கே உள்ள புத்தபிட்சுக்களிடம் உறவாடினால் யந்திர சூட்சுமத்தை அமைத்தச் சிற்பி யாரென்பதை அறிந்து கொண்டு காரியமாற்றலாம்" என்றார் தோலா வழக்கன்.

மங்கை வேந்தனுக்கு அது சரி என்றே தோன்றியது.

★

நாக அரசனான ஆதி சேஷனால் வழிபட்ட இடமென்பதால் நாகப் பட்டினம் என்றும், நாகர் இனத்தவர் பெருமளவில் வாழ்ந்த காரணத்தால் நாகர்பட்டினம் என்றும், சைவ சமயக் குரவர்களால் நாகைக் காரோணம் என்றும், அயல்நாட்டு மாலுமி தாலுமியால் திக்கௌவா என்றும், சீனர்களால் நகவதனா என்றும், கடல் சூழ் நாகை, கற்றார் பயில் கடல் நாகை, கல்லினால மதில் நாகை, கதிகமழ் நாகை, சோலை குலவு நாகை, கலங்கள் சேர் கடல் நாகை, மாட நெடு வீதி நாகை, வங்கங்கள் கரையார்* நாகை, செல்வக் கடல் நாகை, என்று பலவாறு அழைக்கப் பட்ட துறைமுக நகரமான நாகையில் பதரிதிட்டா என்று அழைக்கப் பட்டதற்குக் காரணமாய் அமைந்திருந்த இலந்தை மரங்கள் நிறைந்த தோப்புப் பகுதியில் புத்த பிட்சுக்கள் மற்றும் துறவிகளல்லாத பௌத்தர்கள் சிலர் குடியிருக்க அவர்களுக்கு முன்னால் சாட்சாத் புத்த

* கப்பல்கள் கரையில் கூடியிருந்து ஆரவாரத்தை எழுப்புவ நாகை.

தேரரைப்* போல உருமாறி அமர்ந்திருந்த நிழலில் ஒதுங்குவான் பேசிக் கொண்டிருந்தார்.

"என்னைப் பார்த்துடப பௌத்தர்கள் பலர் இந்த நாகைப் பட்டினத்தில் பௌத்தம் ஷீணித்துக் கொண்டு வருவதைப் பற்றிக் கேட்டார்கள். பௌத்தத்தின் பொற்காலம் மறைந்து போய் கற்காலம் வந்து விட்டதே என்று புலம்பினார்கள். சீரும் சிறப்புமாக இருந்த விஹாரம் மூடப்பட்டுக் கிடக்கிறதே என்று வருந்தினார்கள். இதற்கெல்லாம் யார் காரணம் எது காரணம் என்றெல்லாம் வினவினார்கள். கைப்புண்ணிற்குக் கண்ணாடி எதற்கு என்று அவர்களிடம் கேட்டேன் நான். அதையே தான் உங்களுக்கும் சொல்லிக் கொள்கிறேன். விழுந்து புதைவதற்கு நாமே குழிகளை வெட்டிக் கொண்டு மற்றவர்களைக் குறை சொல்லலாமா? நம்மைச் சுற்றிக் காடுகளை வளர்த்துக் கொண்டு வழி இல்லையே என்று வருத்தப் பட்டால் மற்றவர்கள் என்ன செய்ய முடியும்? நாம் மகான் புத்தரது வழியில் நடந்து கொள்கிறோமா? பௌத்தத் துறவிகளுக்குப் பத்துக் கட்டுப் பாடுகளை தசசீலம் என்றும் இல்லற பௌத்தர்களுக்கு ஐந்து விதமான கட்டுப்பாடுகளை பஞ்சசீலம் என்றும் வகுத்துக் கொடுத்தார் மகான் புத்தர். அந்தச் சீலங்களை நம்மில் எத்தனை பேர் அவற்றைப் பின்பற்றி நடக்கிறோம்? நமது மகானின் உயர் தத்துவங்களைப் படிப்படியாக உதாசினப் படுத்தி வருவது நாம் தானே? நமக்குரிய சீரிய கொள்கைகளை நாம் கைவிட்டு விட்டால் கொள்கைகள் நம்மை எப்படிக் காப்பாற்றும்? செடிகளை நாம் மரங்களாக வளர்த்தால் தான் அவை நமக்கு நிழல் தரும். செடிகளைக் கவனிக்காது விட்டு விட்டால் மரங்களும் இல்லை. நிழலும் இல்லை. கொள்கைகளில் நாம் எத்தனை உறுதியாக இருக்கிறோமோ அந்த அளவிற்கு நமக்கு ஆதரவு இருக்கும். நமது வாழ்க்கை முறையைப் பார்த்து மற்றவர்கள் பரவசப் பட வேண்டும். நம்மைத் தொடுவதற்கு அஞ்ச வேண்டும். நாம் விஹாரத்து விதானமாய் இருந்தால் நாய்கள் குரைக்கலாமே தவிர குலைக்க முடியாது. நாம் விதானங்களாகவும் இல்லை. நிதானமாகவும் இல்லை. நம்மை நாம் கட்டாந் தரையாக்கிக் கொண்டதால் எறும்புகள் கூட நம்மீது ஊறுகின்றன. நம் சீரழிவுக்கு நாம் தானே காரணம்?"

நிழலில் ஒதுங்குவார் இவ்வாறு கேட்ட போது நான்கு சங்குகள் ஒலித்தன.

★★★



கௌதம தேரன்

சங்கொலியையடுத்து அங்கே அமர்ந்திருந்தவர்கள் எழுந்து நின்றார்கள்.

சங்கொலி நிற்கவும் அங்கே புத்த பிட்சுக்கள் மூவர் வந்து நிற்கவும் சரியாக இருந்தது.

எழுந்து நின்றவர்கள் அந்த மூவரைப் பார்த்து வணங்கி 'புத்தம் சரணம் கச்சாமி,' 'தர்மம் சரணம் கச்சாமி', 'சங்கம் சரணம் கச்சாமி' என்ற அடைக்கல கோஷங்களை எழுப்பினார்கள்.

அவர்களையெல்லாம் தன் கையசைவு மூலம் அமைதிப் படுத்திய அந்த மூவர் நிழலில் ஒதுங்குவான் தங்களைப் பார்த்த பிறகும் எழுந்து கொள்ளாமல் அமர்ந்திருந்ததைக் கண்டு கோபத்திற்கு ஆளாயினர்.

மூவரில் முதல்வன் போல் இருந்த பிட்சு "யார் நீ?" என்று முரட்டுக் குரலில் கேட்டார்.

"பார்த்தால் தெரியவில்லையா?" என்று கேட்டார் நிழலில் ஒதுங்குவான்.

"பார்த்தால் தெரிவது எல்லோருக்கும் தலை மொட்டையாக இருப்பது தான்" என்றார் பிட்சு.

"புரிகிறது" என்றார் நிழலில் ஒதுங்குவான்.

"என்ன புரிகிறது?"

"பலருக்குத் தலை மொட்டையாக இருப்பது புரிகிறது. உள்ளே எதுவுமில்லை என்று புரிகிறது."

"நான் தேரன். மகா தேரன். கௌதம தேரன்."

"இதை மற்றவர்கள் சொல்ல வேண்டும். நீங்களே சொல்லிக் கொள்ளக் கூடாது."

"நீ இந்நாட்டவனாக இருந்தால் இப்படியெல்லாம் பேசிக் கொண்டிருக்க மாட்டாய்."

"நான் இந்நாட்டவன் என்று யாரிடமும் சொல்லிக் கொள்ளவில்லை."

"அப்படியானால் நீ எந்நாட்டவன்?"

"நான் சாவகத்திலிருந்து வருகிறேன். அங்கே பௌத்தம் சீரும் சிறப்புமாக இருக்கிறது. இங்கேயோ சேறும் சகதியுமாக இருக்கிறது. அதற்குக் காரணம் யார் என்று கேட்டார்கள். சொல்லிக் கொண்டிருந்தேன்."

"நீ மகா தேரனா?"

"சாதாரண பிட்சு."

"இங்குப் பேசுவதற்கு உனக்கு யார் அனுமதி கொடுத்தது?"

"இல்லாத மன்னனுக்கு இரத்தினக் கிரீடம் எதற்கு?"

"நீ கூறுவது விளங்கவில்லை."

"இங்கே பௌத்தம் தன் தடயங்களை இழந்து கொண்டு வருகிறது. உயரும் தடம் தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கிறது. இழுப்பார் இல்லாத இரதமாகவும், மன்னன் இல்லாத மாநகராகவும், ஓட்டை விழுந்த மரக்கலமாகவும் இருக்கிறது. இங்கு வருவதே பயனற்ற விஷயம் என்று கருதி பலரும் வருவதைத் தவிர்த்துக் கொண்டிருக்கிறார்கள். திகைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் இங்கே பேசுவதற்கு அனுமதி என்ன வேண்டியிருக்கிறது? வெட்ட வெளிக்கு யார் தலைவன்? வீதியில்லாத ஊருக்கு விவஸ்தை என்ன வேண்டியிருக்கிறது?"

நிழலில் ஒதுங்குவான் இவ்வாறு வார்த்தைகளைக் கொட்டியதைக் கேட்ட கௌதம தேரர் சற்றே அதிர்ந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் "உனக்கு தசசீலம் என்றால் என்னவென்று தெரியுமா?" என்று கேட்டார்.

"தனக்குத் தெரியாதவற்றை மற்றவர்களுக்குச் சொல்லும் மடமை எங்களுக்கு இல்லை" என்றார் நிழலில் ஒதுங்குவார்.

"வார்த்தை ஜாலம் வேண்டியதில்லை. தசசீலம் எவை எவை என்று சொல்ல முடியுமா?" என்று கேட்டார்.

"அமருங்கள். கேளுங்கள்."

"அமர முடியாது. நாங்கள் அமரர்களுக்கும் மேம்பட்டவர்கள்."

"அமரர்களுக்கு மேம்பட்டவர்கள் அமரக் கூடாது என்று எந்த ஆவணமும் இல்லை. அமர்வதும் நிற்பதும் உங்கள் இஷ்டம்"

என்று கூறி விட்டு தசசீலங்களைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தார் நிழலில் ஒதுங்குவான்.

1. பிற உயிர்களைக் கொல்லாதிருத்தல்.

2. பிறர் பொருட்களைக் கவராதிருத்தல்.

3. பிரம்மச்சரிய விரதமிருத்தல். இல்லறவாசியாக இருந்தால் பிறன்மனை விழையாதிருத்தல்.

4. பொய் பேசாதிருத்தல்.

5. மயக்க வஸ்துகளை அருந்தாமல் இருத்தல்.

6. கண்டபடி உணவு உண்ணாமல் இருத்தல்..

7. இசை, நாட்டியம் போன்றவற்றில் ஈடுபாடு கொள்ளாமல் இருத்தல்.

8. தேகாபிமானம் கொள்ளாமல் இருத்தல்.

9. பொன், வெள்ளி போன்ற உயர் உலோகங்களைப் பயன் படுத்தாமல் இருத்தல்.

10. சுக ஆசனங்களைத் தவிர்த்தல்.

கௌதம தேரர் மேற்சொன்ன விவரங்களைக் கேட்டு வியந்தாலும் "இந்த விவரங்களைச் சொல்வதற்கு நீ வேண்டியதில்லை. சாதாரண பிட்சு போதும்" என்றார்.

"நான் சாதாரண பிட்சு என்று தானே சொன்னேன்?"

"உன்னை நாங்கள் நம்ப முடியாது. நீ பௌத்தனல்ல."

"ஐயா! மகான் புத்தர் உயர்நிலை என்னும் ஹர்ஹிந்த் ஞானத்தைப் பெற்றார். அதையடுத்து நான்கு விதமான பிரதிசம்பிதா ஞானத்தையும், ஆறு விதமான அசாதாரண ஞானத்தையும், பதினான்கு விதமான புத்த ஞானத்தையும், பதினெட்டு விதமான ஆவேணிக தர்ம ஞானத்தையும், பத்து விதமான பலங்களையும், நான்கு விதமான வைசா ரத்யங்களையும் படிப்படியாகப் பெற்று போதி மரத்தின் கீழ் பரிபூரண ஞானத்தைப் பெற்றுத் ததாகதர் ஆனார். போதி மரத்தின் கீழேயே அமர்ந்திருந்தார். அதைக் கண்ட தேவர்கள் சிலர் "இவர் அடைய வேண்டிய ஞானம் இன்னும் இருக்கிறது" என்று சந்தேகித்தார்கள். அதை நீக்க நினைத்த மகான் புத்தர் இருப்பிடத்தை விட்டு நீங்கி வானத்தில் அந்தரங்க நிலையில் நின்றார். தேவர்கள் ஐயம் நீங்கினார்கள். ததாகரான மகான் புத்தரையே சந்தேகித்தார் என்றால் சாதாரண புத்தபிட்சுவான நான் எந்த மூலைக்கு? உங்கள் சந்தேகங்களை

என்னால் பேச்சில் தான் தீர்க்க முடியும். அதிசயத்தை நிகழ்த்த முடியாது.”

நிழலில் ஒதுங்குவான் இவ்வாறு கூறியதும் கௌதம தேரர் ஏதோ பேச முற்பட்டார். அப்போது அருகிலிருந்து ஆந்தையொன்று இரையும் சத்தம் கேட்கவே அங்கு அமர்ந்திருந்த மக்களைப் பார்த்து “நீங்கள் எக்கேடாவது கெட்டுத் தொலையுங்கள்” என்று அலுப்புடன் கூறிவிட்டுத் தன்னோடு வந்திருந்த இரு பிட்சுக்களையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டார்.

★

துறைமுகத்தை அடுத்திருந்த போதி மரத்தோப்பில் இருந்த மரக்குடிலுக்கு அவர் சென்ற போது இரவாகி விட்டிருந்தது. சுற்றுப்புர மெல்லாம் சூன்யமாகி விட்டது போல் இருண்டு கிடக்க, அந்தக் குடிலுக்குள்ளேயிருந்து சிறுவிளக்கொன்று சூன்யத்தில் முளைத்த ஞானத்தைப் போலப் பளிச்சிட்டது.

துறைமுக ஆரவாரங்களைக் கடந்து அமைதி தவமும் காட்டுப் பகுதியில் காலாற நடந்த துறவி அந்த இடத்திற்கு இரண்டு நாட்களுக்கு ஒரு முறை வருவது வழக்கமாதலால் தடுமாற்ற மின்றி நடந்தார்.

உயரமான இடத்தில் அமைக்கப்பட்டிருந்த குடிலுக்கு அமைக்கப் பட்டிருந்த படிகளில் ஏறி உள்ளே நுழைந்தார். உள்ளே இருந்த அகல் விளக்கு அணையும் நிலைக்குப் போய்க் கொண்டிருந்தது. திரியைத் தூண்டி விட்டு வெளிச்சத்தில் அங்கிருந்த கட்டிலைப் பார்த்தார். கட்டிலில் மல்லாந்து கிடந்த மங்கையைப் பார்த்தார்.

“எதற்காக ஆந்தை போல் கத்தி என்னை அவசரமாக வரச் சொன்னாய்?” என்று கேட்டார் உள்ளுக்குள் மூண்டு கொண்டிருந்த காமத்தீயை மறைத்துக் கொண்டு.

“அர்த்தமுள்ள காரியத்தைச் செய்து விட்டு அர்த்தமில்லாமல் பேசுகிறீர்களே அடிகளே?” என்று கேட்டு விட்டுக் கட்டிலில் புரண்டாள் காரிகை.

அவளது புரட்சி அவருக்குள் புரட்சியை உண்டாக்கினாலும் “என்ன உளறுகிறாய்?” என்று வறட்டுக் கௌரவத்துடன் கேட்டார் துறவி.

“தாபமும் ஒரு தீபம் தான் அடிகளே. தீபத்தை எரிய விட்ட மாதிரி எனது தாபத்தையும் எரிய விட்டு விட்டீர்கள். தீபம்

எரியலாம். தாபம் எரியக் கூடாது. தணிக்கப்பட வேண்டும். அதற்குத் தான் உங்களை அழைத்தேன்" என்றாள் முகத்தில் தாபத்தைக் காட்டிய கட்டழகி.

"அதற்கு நேர காலமில்லை? நான் முக்கியமான வாக்கு வாதத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தேன். தெரியுமா உனக்கு?" என்று சீறினார் அடிகள்.

"மகா தேரரான உங்களுக்கு அழகு மௌனமேயன்றி வாக்கு வாதமல்ல. உங்கள் மௌனம் மற்றவர்க்கு வாக்காக அமைய வேண்டும். நீங்களோ வாக்கு வாதம் செய்கிறீர்கள்" என்றாள் அவள் ஆடைகளைக் களைந்தபடி.

"அங்கே ஒருவன் அடாவடி செய்கிறான். நான் தலையிடாமல் எப்படி இருக்க முடியும்?"

"பல விஷயங்கள் நாம் தலையிடுவதால் தான் பெரிதாகின்றன என்பதை உணர்ந்து ஒதுங்குபவனே அறிவாளி. மகா தேரரான உங்களுக்கு இது தெரியாதா?" என்று கூறி அவரது கையைப் பிடித்து இழுத்தாள் அவள்.

எதிர்பாராத இழுப்பால் நிலை தடுமாறி விழுந்த அவரைப் பக்குவமாகக் கட்டிலில் சாய்த்தாள் அந்தச் சல்லாபி.

"என்னை நீ இப்படிச் சாய்த்தது தகாது" என்றார் துறவி எதையும் துறக்க முடியாத நிலையில்.

"நீங்களென்ன கோபுரமா? தேரராக இருந்து கொண்டு தெரிவையுடன் சரசமாடும் நீங்கள் கோபுரமும் இல்லை. குன்றும் இல்லை. வேறு என்ன என்பதை நான் சொல்ல வேண்டியதில்லை" என்றாள் அந்தச் சிங்காரி.

அவளது வழுவழுப்பான அங்கங்கள் அவரை உரசியதால் அதற்கு மேலும் உணர்ச்சிகளை அடக்கி வைக்க முடியாமல் காளையைக் கட்டவிழ்த்து விடுவது போல் விட்டார்.

"இது தான் சரி. இது தான் வேண்டும். இதற்குத் தான் நீங்கள். உங்களுக்காகத் தான் நான்" என்று கூறித் தன் அங்கங்களை அவரிடம் ஒப்படைத்தாள் அந்த ஓய்யாரி.

தன் வசம் வரும் அங்கங்களைக் கசக்கி ரசமாக்கும் கலையில் கைதேர்ந்தவரான அடிகள் ரசமாக்கும் காரியத்தில் பரவசத்தோடு ஈடுபட்ட போது அவள் வெட்கத்தை அறவே துறந்து தன்னிலையே மறந்தாள்.

அவளுக்கும் சரி -

அவருக்கும் சரி -

இதை விட இன்பமானது இகத்திலும் இல்லை. பரத்திலும் இல்லை என்பதே கருத்தாக இருந்தது.

ஆகவே அனைத்தையும் மறந்தார்கள்.

இந்த நிலைதான் காமத்தில் உயர்ந்த நிலை. உகந்த நிலை.

இன்பத்தை இயன்றவரைத் தூய்த்த அத்தெரிவை குப்பை போல் கிடந்தாலும் திருப்தியாக இருந்தாள் தாபம் தீர்ந்ததால்.

அடைந்த இன்பத்தை எண்ணி அவளைப் போலவே ஆனந்தப் பட்ட அடிகள் "உன்னை நான் ஏன் தேர்ந்தெடுத்தேன் தெரியுமா? நீ நாகர் குல நங்கை என்பதால் தான். நாக நங்கைகள் இன்பியலில் இணையற்றவர்கள் என்பதால் தான்" என்றார்.

"அதனால் தான் இங்கே வந்ததும் அலட்டிக் கொண்டீர்களா?" என்று கேட்டாள் அந்தக் கணிகை. ஆட்டத்தால் குரல் உடைந்து போயிருந்தது.

"எதற்கும் நேரகாலம் உண்டு" என்றார் அடிகள் மிகச் சரியாகப் பேசி விட்ட பாவணையில் -

அவள் சிரித்தாள்.

"எதற்காகச் சிரிக்கிறாய்!"

"நேர காலத்தைப் பற்றி நீங்கள் பேசக் கூடாது."

"ஏன் என்று தான் கேட்கிறேன்."

"நீங்கள் துறவி. அதுவும் மகாதேரர். பெண்களின் பக்கமே தலையைத் திருப்பக் கூடாதவர். நீங்களோ கூத்தடித்துக் கொண்டாட்டம் போடுகிறீர்கள். உங்களுக்கு நேரகாலம் ஒரு கேடா?"

"முட்டாளே! நான் தேரனும் அல்ல. தீரனும் அல்ல. சோரன். சிபிசோரன். அது தான் என் பெயர். நாகன் நான். நாகத்தீவு என் இருப்பிடம். பிழைப்புக்காக நாகைக்கு வந்த நான் தேரர் மகாதேரர் என்று சொல்லிக் கொண்டு மக்களை ஏமாற்றிக் கொண்டு வருகிறேன். நாகையில் என் ஆட்சியை உருவாக்குவது தான் என் லட்சியம்" என்றார் அவர் கரகரப்பான குரலில்.

அழகி அதிர்ந்து போனாள்.

உதிர்ந்து போன பூவைப் போல் கிடந்த அவள் அதிர்ச்சியால் எழுந்து ஆடைகளைப் புனைந்து கொண்டு "இது உண்மையா?" என்று கேட்டாள் வியப்புடன்.

"ஆமாம். ஆமாம். ஆமாம்" என்று சொல்லிய படி எழுந்து கட்டிலில் அமர்ந்தான் பௌத்த வேடதாரியான சிபிசோரன்.

"அப்படியானால் என்னையும் ஏமாற்றியிருக்கிறீர்கள் இல்லையா?" என்று கேட்டாள் அவள் அதிர்ச்சி நீங்காமல்.

"முட்டாள் பெண்ணே! இதில் ஏமாற்று வேலை எங்கே இருக்கிறது? உன்னை மணந்து கொள்கிறேன் என்றேனா? இல்லை. ராணியாக்குகிறேன் என்றேனா? இல்லை. சொத்து சுகங்களை ஒப்படைக்கிறேன் என்றேனா? இல்லவே இல்லை. பிறகு? ஏமாற்றி விட்டேன் என்று எப்படிச் சொல்கிறாய்? நீ காமக் கணிகை. காசுக்குக் கடை விரிக்கும் கட்டழகி. நீ உன் வேலையைச் செய்தாய். நான் என் வேலையைச் செய்தேன். அவ்வளவு தான்."

"என்னிடமாவது உண்மையைச் சொல்லியிருக்கலாமே?"

"நீ என்ன நாகநாட்டு இளவரசியா? நாகப் பட்டினத்து ராணியா? உன்னிடம் எதற்காக உண்மை சொல்ல வேண்டும்? நான் யார் என்பது மகத்தான ரகசியம். அதைப் போய் பெண்ணான உன்னிடமா சொல்ல முடியும்? பெண்ணிடம் ரகசியத்தை வெளிப்படுத்த நான் மூடனா? இல்லை."

"ஐயா. என்னிடம் உண்மையைச் சொல்லா விட்டால் பரவாயில்லை. ஆனால் நீங்கள் செய்வது மோசடி. மகாபாவம். தூய்மையான துறவி வேடத்தை நீங்கள் ஏற்று மக்களை ஏமாற்றுவது அதர்மம். மதத்தை ஏமாற்றலாம். மக்களை ஏமாற்றக் கூடாது. ஏமாற்ற முடியாது. உங்களைப் பற்றிய உண்மை அவர்களுக்குத் தெரிந்தால் உங்களுக்கு இங்கே ஆட்சியோ அரியணையோ கிடைக்காது. சமாதி தான் கிடை..க்கும். அது கூட மக்கள் விரும்பினால் தான்" என்றாள் அவள்.

சிபி சோரன் யோசித்தான்.

★★★



சோரனும் தேரியும்

அழகியிடம் அவசரப்பட்டு உண்மையை உதிர்த்து விட்டோமா என்று நினைத்தான் நாகத்தீவு நாகனான சிபிசோரன்.

அழகியைப் பார்த்து "நீ சொல்வது உண்மைதான் அழகி. இந்த விஷயத்தில் நீ கூறும் யோசனை என்ன?" என்று அவளை ஆழம் பார்ப்பது போலக் கேட்டான்.

"உங்களைப் பற்றிய உண்மை எனக்கு மட்டுமே தெரியும். நாகை பௌத்தர்களிடம் இதைப் பற்ற வைத்தால் நான் ஏற்கனவே கூறியபடி உங்களுக்கு அரியணை கிடைக்காது. சமாதி தான் கிடைக்கும்" என்றாள் அழகி.

"பெண்ணரசி உன் மீது எனக்குள்ள ஆசையைப் போலவே நம்பிக்கையும் இருக்கிறது. அதனால் தான் உண்மையைச் சொன்னேன். நீயோ என்னை மிரட்டுகிறாய். இது சரியல்ல."

"நீங்கள் பேசிய வார்த்தைகள் மட்டும் புனித வார்த்தைகளா? காசுக்குக் கடை விரிக்கும் காமுகி தானே என்கிறீர்களே. அது அன்பால் வந்த வார்த்தையா? ஆசையால் வந்த வார்த்தையா? நம்பிக்கையால் வந்த வார்த்தையா?"

"நான் அவசரப்பட்டு வார்த்தைகளை உதிர்த்தது உண்மைதான் அழகி. அதை நீ பெரிதாக எடுத்துக் கொள்ள வேண்டாம். என்னை நம்பு. உன்னையும் நான் நம்புகிறேன்."

"கசப்பான வார்த்தைகளையும் கீழ்த்தரமான வார்த்தை களையும் வீசி விட்டு நம்பும் படிச் சொல்கிறீர்கள். வார்த்தைகள் உண்மையான அன்போடு வரும் போது தான் நம்பிக்கையானது அவற்றை அரவணைக்கும்."

"கறை வேறு. குறை வேறு கட்டழகி. கறையைத் தான் அகற்ற முடியாது. குறையை அகற்றலாம். அப்படித் தான் எனது வார்த்தைகள். உனக்கு என்ன வேண்டும் கேள் உன்னிடம் நம்பிக்கை வருவதற்கு?"

“நீங்கள் இகழ்ச்சியாகப் பேசியதை உண்மையாக்க வேண்டும்.”

“என்ன சொல்கிறாய் நீ?”

“நீ என்ன நாகத்தீவு இளவரசியா, நாகப் பட்டினத்து ராணியா என்று இகழ்ந்தீர்கள் அல்லவா? அவற்றை உண்மையாக்க வேண்டும். நாகத் தீவின் இளவரசியாக ஆக்க முடியாமல் போனாலும் பரவாயில்லை. இந்த நாகப் பட்டினத்து ராணியாக ஆக்குவதாகச் சத்தியம் செய்யுங்கள்.”

“நான் மன்னனாக ஆவதற்கே பிரம்மப் பிரத்யனம் தேவையாக இருக்கிறது. இதில் உன்னை ராணியாக்குவது எப்படி அழகி?”

“நீங்கள் மன்னனான பின் என்னை ராணியாக்குங்கள். இப்போதே முடியாது என்று சொன்னால் என்ன அர்த்தம்?”

“சரி. சத்தியம் செய்கிறேன்.”

“இருங்கள். உங்களை நம்ப முடியாது. இங்கே இருக்கும் பரதவர்கள் எனக்கு வேண்டியவர்கள். ஓநாயைப் போல நான் குரல் கொடுத்தால் எந்நேரமானாலும் ஓடி வருவார்கள். அவர்களை அழைக்கிறேன். அவர்களுக்கு முன்னால் சத்தியம் செய்யுங்கள். அப்போது தான் நீங்கள் வாக்கு தவற மாட்டீர்கள்.”

சிபிசோரன் சிரித்தான்.

“எதற்காகச் சிரிக்கிறீர்கள்?”

“நான் சிரித்தால் மென்சிரிப்பாகச் சொல்வார்கள்” என்று சொல்லிக் கொண்டே அவளது கழுத்தைப் பிடித்து நெறிக்கத் தொடங்கினான் சிபிசோரன்.

அழகி இதை எதிர்பார்க்கவில்லை.

அவனது பிடி யமப்பிடியாக இருந்ததால் விடுபட முடியவில்லை.

அவனோ பலத்தையெல்லாம் திரட்டி நெறித்தான். அவளது நாக்கு வெளியே தொங்கியது. கண்கள் பிதுங்கின. உடல் துடித்து ஓய்ந்தது.

சற்றுமுன் வரை காமச் சுந்தரியாக வைத்து சுகம் கண்ட சிபிசோரன் அவளைப் பிணமாக்கிக் கீழே கிடத்தி விட்டு “என்னையா மிரட்டுகிறாய்? சாதாரணப் பெண்ணாக இருந்து கொண்டு தனிமையில் மிரட்டிய நீ முட்டாளே தான். சந்தேகமே இல்லை. இப்போது கூப்பிடு உன் பரதவர்களை. சத்தியம்

செய்கிறேன்" என்று கூறிக் காலால் அவள் உடலைப் புரட்டி விட்டு குடிலை விட்டு வெளியே வந்தான்.

இலந்தை மரத் தோப்பின் வடபகுதியில் இருந்த தன் இருப்பிடத்திற்கு வந்தான். அங்கே அவனைச் சேர்ந்த இரண்டு பிட்சுக்களும் இருந்தார்கள்.

"இந்தப் பெண்கள் பீடைகள். பிணங்கள். ரணங்கள். ரணபத்திரக் காளிகள்" என்றார் வெறுப்புடன்.

"என்ன ஆயிற்று அடிகளே! பெண் தான் உலக இன்பங்களின் ஊற்று என்பீர்கள். இப்போது நேர்மாறாகப் பேசுகிறீர்களே! உங்களுக்கு உபத்திரம் கொடுத்தவள் யார்?" என்று கேட்டார் ஒரு பிட்சு.

"தொல்லை கொடுத்தாள். உயிரை விட்டாள். அவள் கதையை விடுங்கள். நாம் பேச வேண்டியது அந்தச் சாவக நாட்டுச் சாதாரண பிட்சுவைப் பற்றி" என்றான் சிபிசோரன்.

"அவனிடம் பேசுவதற்கு என்ன இருக்கிறது?"

"பிட்சு! எனக்கென்னவோ அவன் உண்மையான பிட்சுவாக இருப்பான் என்று தோன்றவில்லை."

"போலியானவானாக இருந்தால் புத்தரைப் பற்றித் தெளிவாகப் பேசமுடியுமா?"

"அது தான் அவன் சிறப்பு. நாமும் போலி தான். ஆனால் நமக்குப் புத்தரைப் பற்றியோ பௌத்தத்தைப் பற்றியோ அதிகமாகத் தெரியாது. அரைகுறையாகத் தெரிந்து கொண்டு ஒப்பேற்றி வருகிறோம். அவனோ தெளிவாகத் தெரிந்து கொணடு பேசுகிறான். மக்களைக் கவருகிறான்."

"பிறகு எதற்காக அவனிடம் வாதத்தில் இறங்கினீர்கள். வாதம் நீடித்திருந்தால் உங்கள் சாயம் வெளுத்திருக்கும் அல்லவா?"

"உண்மைதான். அந்தப் பெண் ஆந்தையைப் போலக் குரல் கொடுத்தது நல்லதாகப் போயிற்று."

"எப்படியானால் என்ன? அந்தப் பிட்சுவை நாம் வேலை தீர்க்கப் போகிறோம். கவலை என்ன?"

"நானும் அப்படித்தான் நினைத்தேன். அது தவறு என்று தோன்றுகிறது."

"ஏன்?"

"அந்தச் சாவகத்து பிட்சு சாமர்த்தியமானவனாக இருப்பான் என்றே தோன்றுகிறது. நாம் மகாதேரர் என்று சொல்லிக்

கொண்டு இங்கிருக்கும் பௌத்தர்களை மிரட்டிப் பணிய வைத்திருக்கிறோம். மிரட்டல் அதிக காலத்திற்குப் பயன் படாது. அவனோ அன்பினால் பௌத்தர்களை ஈர்த்து வருகிறான். அன்பால் ஈர்க்கப் படும் விஷயமே வெற்றி பெறும்."

"நாமும் அன்பு காட்டலாம் என்கிறீர்களா?"

"அன்பு. அதற்கும் நமக்கும் சம்பந்தமே இல்லை. நம் வழியே வேறு. நோக்கமே வேறு. நாம் அன்பு காட்ட முற்பட்டால் ஆந்தையானது தனது கத்தலைக் குயிலின் குரல் போல் எண்ணிக் கொள்வதைப் போல் ஆகிவிடும். அதெல்லாம் நமக்குச் சரிபட்டு வராது. நான் சொல்ல வந்தது வேறு. அந்தச் சாவகச் காரனை அழிப்பதோ அல்லது பகைத்துக் கொள்வதோ நமக்குப் பாதகமாகத் தான் இருக்குமே தவிரச் சாதகமாக இருக்காது. அதற்குப் பதிலாக அவனோடு நாம் நட்பு பாராட்டிச் சேர்ந்து கொள்வோம்."

"சேர்ந்து கொண்டு?"

"இரண்டு பிரிவாக இல்லாமல் ஒரே பிரிவாகி விட்டால் மக்களிடம் பிரிவு வராது. அது நமக்குச் சாதகம். ஒரே பிரிவில் இருந்தால் சமயம் பார்த்து அவனைத் தீர்த்து விடலாம். நம் மீது சந்தேகம் வராது" என்று சொன்ன சிபிசோரன் "நான் மட்டும் சென்று அவனோடு உறவாடி விட்டு வருகிறேன். அதற்குப் பிறகு மற்றவற்றைப் பார்க்கலாம்" என்றான்.

மறுநாள் நிழலில் ஓதுங்குவான் சொற்பொழிவு நடத்தும் இலந்தை மரத்தோப்பின் முகப்பிற்குச் சென்று சற்று தூரத்திலிருந்து கவனித்தான் சிபிசோரன்.

நிழலில் ஓதுங்குவான் தனக்கு முன்னே அமர்ந்திருந்தவர்களைப் பார்த்துச் சரளமாகச் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தார்.

"மகான் புத்தர் மக்களின் துக்கங்களுக்கான நிவாரணங்களை எடுத்துரைத்தார். எது எதற்குக் காரணம் எது எதற்கு நிவாரணம் என்பதை விளக்கினார். நாம் பேதைமையில் உழல்கிறோம். அப்பேதைமையானது நீங்கினால் செய்கையானது மீளும். அச் செய்கை நீங்கினால் உணர்ச்சியானது மீளும். அவ்வுணர்ச்சி நீங்கினால் அருவுரு மீளும். அந்த அருவுரு நீங்கினால் அதன் காரியமான வாயில் மீளும். அவ்வாயில் நீங்கினால் ஊறு மீளும். அவ்வூறு நீங்கினால் அதன் நுகர்ச்சி மீளும். அந்த நுகர்ச்சி நீங்கினால் வேட்கை மீளும். அவ்வேட்கை நீங்கினால் பற்று மீளும். அப்பற்று நீங்கினால் கருமம் மீளும். கருமம் நீங்கினால் தோற்றம் மீளும். அத்தோற்றம் நீங்கினால் பிறப்பு மீளும். பிறப்பு

நீங்கினால் துன்பமெல்லாம் மீளும். இதுவே துக்க நிவாரணம். இதைப் புரிந்து கொண்டு நடக்கும் மாந்தருக்குத் துன்பமில்லை.* நீங்களெல்லாம் அடிப்படை சீலங்களான பஞ்சசீலம், தசசீலம் ஆகியவற்றையே கடைப்பிடிக்காமல் பௌத்தர்களாகவே வாழ முற்படவில்லை. இப்படி அடிப்படையிலேயே தடம் மாறி திசை மாறித் தடுமாறும் நீங்கள் துக்க நிவாரண வழிகளை எப்போது மேற்கொள்ளப் போகிறீர்கள்?" என்று கேட்டார்.

"ஐயா! எங்களுக்கு வழிகாட்ட சரியான தலைவன் இல்லாதது தான் அனைத்திற்கும் காரணம்" என்றார்கள் பௌத்தர்கள்.

"மகாதேரர் கௌதமர் தான் இருக்கிறாரே?"

"இருக்கிறார். ஆனால் அவர் இவ்வாறெல்லாம் வழிகளைக் கூறுவதில்லை."

"அப்படிச் சொல்லாதீர்கள். எதை எதைக் கேட்டுப் பெற வேண்டும் எதை எதைத் தாமாக வரக் காத்திருக்க வேண்டும் என்று எல்லாவற்றுக்கும் வரன்முறைகள் உள்ளன. நல்வழிகளை நாம் கேட்டு அறிந்து கொள்ள வேண்டும்."

நிழலில் ஒதுங்குவான் இவ்வாறு கூறிய போது அங்கு வந்த பிக்குணி ஒருத்தி அவரைப் பார்த்து நமஸ்கரித்து "அடிகளே! நான் தான் கௌதம தேரி.** என் வணக்கத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்" என்றாள்.

அவளைப் பார்த்து வணங்கிய நிழலில் ஒதுங்குவான் -

போதி
ஆதி
பாதம்
ஓது.
போதி நிழல்
சோதி பாதம்
காதலால் நின்று
ஓதல் நன்றே"

என்றார்.

கௌதம தேரியும் அதை உச்சாடனம் செய்தார்.

"அமருங்கள்."

சுமார் நாற்பது வயது மதிக்கத் தகுந்தவரான அப்பிக்குணி காவி ஆடையும் மொட்டைத் தலையுமாய் எளிமையாகக் காட்சி

---

* மணிமேகலையில் கூறப்படும் துக்க நிவாரணச் செய்தி பவத்திரம் அறவண பாவை நேற்ற காதை வரி 119 முதல் 131 வரை

** பௌத்தர்களின் சிறப்பான மற்றும் உயர்நிலையில் இருந்த ஆண் துறவிகள் தேரர்கள் என்றும் பெண் துறவிகள் தேரிகள் என்றும் அழைக்கப் பட்டனர்.

யளித்தாள். அவளது கண்களில் ஏதோ ஒரு ஒளி இருந்தது. முகம் கருணைமயமாகவும் தெளிவாகவும் இருந்தது.

அவள் வந்து வணங்கி அமர்ந்ததை மறைவிலிருந்து கவனித்த சிபிசோரன் "இவளா? இவள் எதற்காக இங்கே வந்தாள்? இரட்டைச் சோதனையாக அல்லவா எனக்கு வந்திருக்கிறது? இது என்ன போதாத வேளை?" என்று நினைத்துக் கொண்டு அவள் பேசுவதைக் கவனிக்கலானான்.

நிழலில் ஒதுங்குவார் அவளைப் பார்த்து "அம்மணி! இவர்களெல்லாம் தங்களுக்கு வழி காட்டி இல்லை என்று திசை தடுமாறி நிற்கிறார்கள். மகாதேரரான கௌதமர் தங்களுக்கு வழி காட்டுவதில்லை என்று கூறுகிறார்கள். நீங்களோ உங்களைத் தேரி என்று சொல்லுகிறீர்கள். நீங்களாவது இவர்களுக்கு வழிகாட்டலாம் அல்லவா? என்று கேட்டு விட்டு முன்னால் அமர்ந்திருந்தவர்களைப் பார்த்து "நீங்களெல்லாம் இப்போது எழுந்து செல்லுங்கள். மீண்டும் சந்திப்போம்" என்றார்.

அவர்களெல்லாம் அவர்களை வணங்கியபடி எழுந்து சென்றார்கள்.

இந்த நிலையில் தேரியான கௌதமி பேச முற்பட்டு "அடிகளே! இங்கே பிட்சுக்களுக்கு இருக்கும் வரவேற்பும் மரியாதையும் பிக்குணிகளுக்கு இல்லை. நாகையில் நான் ஒருத்தி மட்டுமே இருக்கிறேன் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். காவிரிப் பூம்பட்டினத்தில் துறவு பூண்டு காஞ்சியில் தேரர் பதவியை அடைந்தேன். அங்கிருந்து என்னை நாகைக்குச் சென்று உபதேச வாழ்க்கையை மேற்கொள்ளும் படி இராஜவிகாரத்து பிரதம குருவான புத்த தாசர் என்னைப் பணிக்கவே நானிங்கு வந்தேன். இங்கே வந்த பிறகுதான் என்னிலை எனக்குப் புரிந்தது. இங்கே என்னைத் தவிர பிக்குணிகள் யாரும் இல்லை என்பதை அறிந்தேன். பிக்குணிகளை இங்குள்ள பிட்சுக்கள் சீந்துவதில்லை என்பதை அறிந்தேன். எனது நோக்கம் பற்றி எடுத்துரைப்பதற்காக இங்கிருந்த பௌத்தர்களை அழைத்து அறிவிப்பு வெளியிட்டேன். ஒருவரும் வரவில்லை. மீண்டும் மீண்டும் அழைத்தேன். யாரும் வருவதாக இல்லை. சமீபத்தில் இங்கு வந்த மகாதேரர் கௌதமர் அவர் என்னைச் சந்திக்க விரும்பாதது மட்டுமின்றி யாரும் என்னைச் சந்திக்க வேண்டியதில்லை என்று கட்டளையும் இட்டு விட்டார். நான் சீந்துவார் இல்லாத பண்டமாகவும், ஏந்துவார் இல்லாத அனாதையாகவும் ஆனேன். இங்கேயே ஆற்றங்கரையில் உள்ள பௌத்த சைத்தியத்திற்கு அருகிலேயே தங்கி தவவாழ்வை மேற்கொண்டேன்" என்றாள்.

"நீங்கள் எடுத்த முடிவு தவறு அம்மணி. பௌத்தத்தைப் பொருத்தவரை பிட்சுக்களுக்கும் பிக்குணிகளுக்கும் எந்தவிதமான வித்தியாசமும் இல்லை. வேறுபாடுகளும் இல்லை. இருவருமே சமம் தான். உங்களுக்குத் தரப்பட்ட உபதேச மார்க்கத்தை மேற்கொள்வதற்காக வந்த உங்களை பௌத்தர்கள் புறக்கணிக்கிறார்கள் என்றால் அது தவறு என்பதை உணர்ந்து, புறக்கணிப்பிற்கான காரணங்களை அறிந்து, அவற்றைக் களைந்து புத்ததாசர் இட்ட கட்டளையை நிறைவேற்றியிருக்க வேண்டுமேயன்றி வெறுத்துப் போய் ஒதுங்கியிருக்கலாகாது. அறியாதவர்கள் உங்களைப் புறக்கணிக்கலாம். அறிந்தவரான - தேரியான நீங்கள் உங்கள் கடமையைப் புறக்கணிக்கலாகாது" என்றார் நிழலில் ஒதுங்குவார்.

"அந்த மனஉறுதி இப்போது தான் வந்திருக்கிறது அடிகளே. சாவகத்திலிருந்து நீங்கள் வந்திருப்பதாகவும், மக்கள் உங்கள் பால் ஈர்க்கப் படுவதாகவும் கேள்விப் பட்டேன். உங்களைச் சந்திக்க வந்தேன்."

"மிக்க மகிழ்ச்சி. இனி நீங்கள் இங்குள்ளவர்களுக்கு வழிகாட்டியாக இருப்பதோடு மட்டுமின்றி நாகனான விஹாரத்தையும் திறந்து பகவான் புத்தரை அனைவரும் வழிபட வகை செய்ய வேண்டும்."

"அது இயலாது அடிகளே!"

"ஏன் அம்மணீ?"

இதற்கு கௌதமி கூறிய பதில் நிழலில் ஒதுங்குவான் மட்டுமின்றி மறைவில் ஒதுங்கியிருந்தச் சிபி சோரனையும் அதிர வைத்தது.

★★★



தேரியின் விவரணம்

நாகையில் பொன்னாலான புத்தர் சிலை இருக்கும் நாகானன விஹாரத்தைத் திறந்து வழிபாட்டிற்கு வழிவகுக்கும் படி கௌதம தேரியிடம் நிழலில் ஒதுங்குவான் கேட்டபோது "எதற்காக அடிகளே அதைத் திறக்க வேண்டும்? அது இப்போது உள்ள நிலையிலேயே இருப்பது தான் நல்லது" என்றாள் கௌதமி.

"என்ன சொல்கிறீர்கள் அம்மணீ! புத்த விஹாரங்கள் அமைத்தது வழிபாட்டிற்காகத் தானே தவிர மூடிவைப்பதற்காக இல்லை" என்றார் நிழலில் ஒதுங்குவான்.

"அடிகளே! ஊர் இருக்கும் நிலையைப் பார்த்தீர்கள் அல்லவா? பௌத்தர்கள் இருக்கும் நிலையைப் பார்த்தீர்கள் அல்லவா? மகாதேரர் கௌதமர் இருக்கும் நிலையைப் பார்த்தீர்கள் அல்லவா? ஒரு அக்கறையும் இல்லை. ஓர் ஒழுக்கமும் இல்லை. தாங்கள் சொன்னது போல் பஞ்ச சீலங்களையும் தச சீலங்களையும் பின்பற்றுவதற்குக் கூட இங்கே யாரும் தயாராக இல்லை. இவர்களுக்கு நாகானன விஹாரம் மூடியிருந்தால் என்ன? திறந்திருந்தால் என்ன?" என்றாள் கௌதமி.

"அப்படிச் சொல்லக் கூடாது அம்மணீ. இந்த விஹாரம் மிகுந்த பிரபாசையுடன் இங்கே கட்டப் பட்டது. கட்டியவர்களின் தாராள மனதைக் காட்டுவதற்காகவே பொன்னால் ஆன பிம்பம் உருவாக்கப் பட்டது. சாவகத்திலிருந்து நான் வந்த பல காரணங்களில் ஒன்று இந்த விஹாரத்தையும் உள்ளே உள்ள புத்தர் பீடிகையைத் தரிசிக்க வேண்டும் என்பதால் தான். விஹாரங்கள் அமைக்கப் பட்டதற்குக் காரணம் விஹாரத்திற்கு உரிய பௌத்தர்கள் அங்கே வந்து மகானைத் தரிசித்து தங்கள் மன விகாரங்களை அழித்துக் கொள்வதற்காகத் தான். உபதேசங்கள் மூலம் நாம் காட்டும் வழி ஒருவழி. மற்றொரு வழி விஹாரப் பிரவேசமும் வழிபாடும் தான். இங்கே உள்ளவர்கள் மனம் திருந்தக் கூடிய தூய இடம் விஹாரமே ஆகும். மக்களை நீங்கள் அதற்குள் அழைத்துச் சென்று உண்மையை உணரச் செய்ய வேண்டும்" என்றார் நிழலில் ஒதுங்குவார்.

"நீங்கள் சொல்வது உண்மைதான் அடிகளே. ஆனால் விஹாரத்தில் புத்தரது பொற்சிலையைப் பாதுகாக்க இங்கே வசதிகள் இல்லை."

"ஏன் இல்லை? இந்த நாகப்பட்டினம் பல்லவர்களது ஆட்சியில் தானே இருக்கிறது? அவர்களது நிர்வாகம் தானே இங்கே இருக்கும் ஆலயங்களைப் பாதுகாக்கிறது? இந்த விஹாரத்தைப் பாதுகாக்க மாட்டார்களா?"

"அடிகளே! தமிழகத்தை விட்டுக் களப்பிரர்கள் அகன்று விட்டபின் சமணமும் புத்தமும் இரண்டாம் நிலைக்குத் தள்ளப் பட்டு, கொஞ்சம் கொஞ்சமாகப் பிரிந்து போகும் நிலைக்குச் சென்று கொண்டிருக்கிறது. தற்போது தமிழகத்தில் உள்ள அனைத்து மன்னர்களும் சைவ, வைணவ மதங்களை ஆதரிப்பவர்களாக இருக்கிறார்கள். அதற்கேற்ப சைவ, வைணவ மதத்தலைவர்கள் தோன்றி நாடெங்கும் தத்தம் சமயங்களைப் பரப்பி வருகிறார்கள். மக்களும் சரி மன்னர்களும் சரி அவர்களுக்குப் பின்னால் செல்கிறவர்களாகவே இருக்கிறார்கள். சைவ வைணவ ஆலயங்களைக் கட்டுகிறார்கள். அவற்றுக்கு தானங்களை வழங்கி உயர்த்துகிறார்கள். நாகையிலேயே கூட சிவாலயங்களும் பெருமாள் கோயில்களும் உள்ளன. அவற்றைக் கவனிப்பது போல் புத்த விஹாரங்களையோ சமணப் பள்ளிகளையோ ஆட்சியாளர்கள் கவனிப்பதில்லை. கவனிப்பாரற்ற காரணத்தால் இவ்விரு மதங்களும் செடிகள் முளைத்த கோபுரங்களைப் போல சேதமான நிலையில் இருக்கின்றன. எவ்வளவு காலத்திற்கு இக்கோபுரங்கள் நீடிக்கும் என்பது தெரியவில்லை. நிலைமை பெருமைப்படும்படி இல்லாத காரணத்தால் பௌத்தர்கள் அசிரத்தையாக இருக்கிறார்கள்."

"அம்மணீ! நமது விஹாரங்களைக் காக்க நாட்டு மன்னன் முன் வரவில்லையென்றால் நாம் தான் முன் வரவேண்டும். நமது புனித இடங்களைக் கட்டிக் காப்பது நம் கடமையல்லவா?"

"கடமைதான். ஆனால் இங்கே இருக்கிற பௌத்தர்களை நம்பி விஹாரத்தைப் பாதுகாக்க முடியாது. அதற்கெல்லாம் அர்ப்பணிக்கக் கூடிய பௌத்தர்கள் தேவை."

"நமது உபதேசங்களும் வழிகாட்டுதல்களும் தான் அவர்களை மாற்றும்."

"உங்களைக் கண்ட பிறகு தான் எனக்கு அந்த நம்பிக்கை வந்திருக்கிறது அடிகளே. நீங்கள் இன்னும் கொஞ்ச காலத்திற்கு இங்கே இருந்து பௌத்தர்களை வழிநடத்த வேண்டும்."

"இல்லை அம்மணீ. நான் சாவக நாட்டிலிருந்து தமிழகத்திற்கு வந்தது இங்கேயே தங்கி விடுவதற்காக அல்ல. மகான் புத்தரின் அவதார ஸ்லத்தையும் அவர் ததாகரான கயா ஷேத்திரக்த்திற்கும் விஜயம் செய்வதற்காகத் தான். உங்களை இந்த மக்களுக்கு அடையாளம் காட்டுகிறேன். அது முதற்கொண்டு நீங்கள் சொற்பொழிவுகளை ஆற்றி இவர்களை மாற்றுங்கள். பிறகு விஹாரத்தைத் திறந்து வழிபாட்டிற்கு ஏற்பாடு செய்யுங்கள்."

"அது மட்டும் நடக்காது அடிகளே."

"ஏன்?"

"அந்த நாகானன விஹாரம் நிரந்தரமாக மூடப்பட்டு விட்டது. அதைத் திறக்க முடியாதபடி யந்திர நுட்பங்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன. அவற்றை நிர்மாணித்த சிற்பியான நாகசாமி தமிழகத்திலேயே இல்லை."

"தமிழகத்தில் இல்லையா? ஏன்?"

"அவர் இங்கிருந்தால் அவரைக் கொண்டு விஹாரத்தைத் திறக்க முயற்சிப்பார்கள் என்று தான் அவரை இலங்கைக்கு அனுப்பி விட்டார்கள். அவர் அங்கே எங்கே இருக்கிறார், எப்படி இருக்கிறார் என்பதெல்லாம் தெரியாது. உயிரோடு இருக்கிறாரா என்று கூடத் தெரியாது."

கௌதமி கூறிய இந்தத் தகவலைக் கேட்டு நிழலில் ஒதுங்குவான் மட்டுமின்றி மறைவிலிருந்த சிபிசோரனும் அதிர்ச்சியடைந்தான்.

நிழலில் ஒதுங்குவானைப் பொறுத்தவரை பிட்சு வேடமிட்டு நாகைக்கு வந்த நோக்கம் நிறைவேறியிருந்தது என்றாலும் யந்திர நுட்பத்தை உருவாக்கிய சிற்பி நாகசாமி இலங்கையில் இருப்பதாக அறிந்த போது சற்று வருத்தமாகவே இருந்தது.

"அம்மணீ! சிற்பி ஒருவனின் தொழில் நுட்பம் மட்டும் விஹாரத்தைப் பாதுகாக்க முடியாது. நாளைக்கே இந்த நாகைக்குரிய பல்லவமன்னர் வந்து விஹாரத்தை இடிக்க முற்பட்டால் யந்திர சூட்சுமங்களால் என்ன செய்ய முடியும்?"

"அப்படி நடக்கும் என்று நாங்கள் கருதவில்லை."

"பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் சமண மதத்தை ஆதரித்தான். சைவர்களைக் கொடுமைப் படுத்தினான். பிறகு சைவ மதத்திற்கு மாறினான். திருவதிகையில் இருந்த சமணப் பள்ளியை இடித்துச் சிவாலயத்தைக் கட்டினான். தெரியுமல்லவா?"

"அது எப்போதோ நடக்கும் அரிதான விஷயம் அடிகளே. இங்கே உள்ள நாகானன விஹாரத்திற்கு யந்திர சூட்சுமங்கள்

அமைத்தது கொள்ளையர்களிடமிருந்து பொன்னாலான புத்தர் சிலையைக் காப்பாற்றுவதற்காகத் தான். யாராவது துராக்கிரமமாக முற்பட்டால் மணியோசை எழும்பி பௌத்தர்களை எச்சரித்து விடும். ஆகவே கொள்ளையர்கள் இங்கே தங்கள் கைவரிசையைக் காட்ட முடியாது. இந்த நிலைமையில் விஹாரம் பாதுகாப்பான நிலையில் பூட்டிக் கிடப்பது தான் சரி."

"விஹாரத்திற்குள் செல்வதற்குச் சுரங்க வழி இருப்பதாக பௌத்தர்கள் சொன்னார்களே? அதன் மூலம் கொள்ளையர்கள் வரமுடியாதா?"

"புகைக் கிணற்றுக்குப் பக்கத்தில் ஒரு சுரங்கம் இருக்கிறது. அது சிதைந்து விட்டதாகச் சொல்கிறார்கள். அங்கே சென்றவர்கள் திரும்பியதில்லை. சுரங்கத்திற்குள் பேய்கள் வாசம் செய்வதாகச் சொல்கிறார்கள். சுரங்கம் ஒரு பிரச்சனையல்ல. அதன் மூலம் விஹாரத்திற்குள் சென்று விடுவது பிரச்சனையல்ல. பொன்சிலை இருக்கும் இடம் தான் பிரச்சனை. அங்கே கதவைத் தொட்டால் போதும். மணியோசை எழும்பும்."

அதற்கு மேல் அந்த விஷயத்தைப் பற்றிப் பேசினால் சந்தேகம் வந்து விடும் என்று நினைத்த நிழலில் ஒதுங்குவான் "இங்கேயே பலகாலமாக இருக்கும் உங்களுக்கு இதெல்லாம் நன்றாகவே தெரிந்திருக்கிறது. எந்தப் பிரச்சனையும் ஒரு சமயம் இல்லா விட்டாலும் வேறொரு சமயம் தீரும். கால வெள்ளமானது எதை விட்டு விடும் எதை அடித்துக் கொண்டு போகும் என்பதைச் சொல்ல முடியாது. இந்த விஹாரத்தின் விவகாரமும் ஓர் நாள் தீரும். அதுவரை இங்குள்ள பௌத்தர்களைப் பண்படுத்தலாம். அதுதான் நம்மால் ஆகக் கூடியது. நாளைக்கு வாருங்கள். இங்கே கூடும் பௌத்தர்களுக்கு உரிய முறையில் உங்களை அடையாளம் காட்டி விடுகிறேன். எனது சொற்பொழிவை நீங்கள் தொடரலாம்" என்று கூறிக் கௌதமிக்கு விடை கொடுத்தார்.

அவர் தனது இருப்பிடத்தை மறைவிடத்தில் வைத்துக் கொள்ளவில்லை. காவிரி கடலோடு கடக்கும் முகத்துவாரத்தருகில் இரண்டு பாறைகளையே இருப்பிடமாக்கிக் கொண்டதால் அங்குச் சென்றார். அவரப்படி கல்லே ஆசனம் ஆகாயமே கூரை என்று எளிய விதத்தில் வசித்த போது நாலைந்து நாட்களாக டௌத்தர்கள் அவரைக் கண்டு வியந்தார்கள். சந்தித்தார்கள். வினவினார்கள்.

"சொல்லிக் கொள்வதற்குச் சொற்கள் இருந்தாலும் விஷயம் எதுவும் இல்லை. நான் எல்லோரையும் போலச் சாதாரணமான

புத்த பிட்சு. அவ்வளவு தான். சாவகத்திலிருந்து கயை போகும் விதமாக நாகைக்கு வந்தேன்" என்றார்.

"தங்களைப் போன்ற வெளிநாட்டுத் துறவிகள் தங்குவதற்கு ஊருக்குள் உறைவிடங்கள் நிரம்ப உள்ளன. அங்கே நீங்கள் வசதியாகத் தங்கலாம். விருப்பப் பட்டால் எங்கள் குடியிருப்பிலும் தங்கலாம்" என்றார்கள் அவரிடம் வந்தவர்கள்.

"வசதிகளைத் தேடி அலைபவன் முடிவில் அசதியே அடைவான். துறவிகளுக்கு உறைவிடம் இப்பூமியில் உள்ள வெட்ட வெளியும் குட்டக் குன்றுகளும் தான். அவற்றில் அவர்கள் வாழ்வதே இயற்கையானது. விதிக்கப் பட்ட இயற்கையான வாழ்க்கையை விட்டு விட்டுச் செயற்கையான வாழ்விற்குள் நுழைந்து விட்டால் மீள முடியாது. உடலென்னும் இந்தக் கூட்டையே விட்டு விட விரும்புகிறவன் தான். எனக்கு வேறு கூடும் வேண்டாம். வேறு பாடும் வேண்டாம்."

அவரது எளிமையும் இயல்பான பேச்சும் அவர்களுக்குப் பிடித்துப் போயிற்று.

"அடிகளே! நாகையில் இருக்கும் பௌத்தம் சமீப காலமாக நாய் படாத பாடுகளைப் பட்டு நலிவடைந்து பொலிவடைந்து கிடக்கிறது. அதை உயர்த்தும் வழியும் தெரியவில்லை. நாங்கள் உய்யும் வழியும் தெரியவில்லை."

"கேள்விப் பட்டேன். கண்ணாலும் கண்டேன்."

"பரந்த கடல் போல் விரிந்து கிடந்த எங்கள் மதம் குறுகிப் போன குட்டையைப் போலச் சுருங்கி விட்டது. திசையெல்லாம் ஒலித்து வந்த புத்தர் அடைக்கலச் சரணங்கள் அடியோடு நின்று போய் விட்டன. தொட்டால் துலங்கும் என்று எங்களைப் பற்றி எண்ணிக் கொண்டிருந்த மக்கள் எங்களைத் தொட்டால் தீட்டு என்றும் கண்பட்டால் தீங்கு என்றும் நினைக்கத் தொடங்கி விட்டார்கள். கண்ணீரை விடாமல் கதறி அழுது கொண்டிருக்கிறோம்."

"கவலைப் படாதீர்கள். இந்த நிலைக்கு எது காரணம் என்று ஆராய்வோம். நாளைக்கு இலந்தைமரத் தோப்புக்கு வாருங்கள். பேசுவோம்" என்று கூறி அவர்களை அனுப்பி வைத்த நிழலில் ஒதுங்குவான் மறுநாள் இலந்தை தோப்புக்குச் சென்ற போது கணிசமான பௌத்தர்கள் கூடியிருந்தார்கள்.

அவர்களிடம் சொற்பொழிவாற்றத் தொடங்கினார். அவர்கள் அவரது பேச்சால் ஈர்க்கப் பட்டார்கள்.

★

நிழலில் ஒதுங்குவானிடம் புத்த விஹாரம் பற்றியும் புத்தர் சிலை பற்றியும், சிற்பியைப் பற்றியும் கௌதம தேரி தெரிவித்த செய்திகளை மறைவிலிருந்த படி கேட்ட சிபிசோரன் வியப்பும் அதிர்ச்சியும் அடைந்தான். ஆறுமாத காலமாக நாகையிலேயே இருந்த தனக்குத் தெரியாமலிருந்த சிற்பச் செய்தி தற்போது கௌதமியின் வாய்மொழி மூலம் தெரிந்ததும் நிழலில் ஒதுங்குவானைச் சந்திப்பதை விட்டுவிட்டுத் தன் இருப்பிடத்திற்குச் சென்று தன்னிரு சகாக்களையும் அழைத்துக் கொண்டு கௌதமியின் இருப்பிடத்திற்குச் சென்றான்.

காவிரியின் தென்கரையில் தனித்திருந்த பௌத்த சைத்தியத்திற்கு அருகில் சிறியதோர் கட்டிடத்தில் வசித்து வந்த கௌதமி தவத்தில் அமர முற்பட்ட போது சிபிசோரனும் இரு பிட்சுக்களும் வரவே அவர்களை வரவேற்று அமரச் சொன்னாள்.

"இல்லத்தில் உணவு ஏதும் இல்லை. இன்றைக்கு நாலு பிட்சைக்கும் போகவில்லை. எனவே தண்ணீர் அருந்துகிறீர்களா தேரரே?" என்று கேட்டாள்.

"உன்னிடம் விருந்துண்பதற்கு நான் வரவில்லை" என்று கோபத்துடன் சொன்ன சிபிசோரன் "நீ எப்படி அந்தச் சாவகத் துறவியிடம் சாவகாசமாகப் பேசலாம்?" என்று கேட்டார்.

"பேசுவது தவறா?" என்று கேட்டாள் கௌதமி.

"பேசுவது பிரச்சனையல்ல. யாரிடம் பேசுகிறோம் என்பது தான் பிரச்சனை. அந்தச் சாவகத் துறவி போலியானவன். இங்கே இருக்கும் நமது மத வேலியைத் தகர்க்க வந்தவன். அவனிடம் பேசுவது கட்டுப்பாட்டை மீறிய விஷயம்."

"தாங்கள் பேசும் போது நான் பேசக் கூடாதா? அதோடு அந்தத் துறவி போலியானவர் என்று நீங்கள் கூறுவதை என்னால் ஏற்கமுடியவில்லை."

"துறவியானாலும் பெண் புத்தி பின்புத்தி என்பதற்கு நீயே உதாரணம். அதனால் தான் உன்னை இங்கிருக்கும் பௌத்தர்களிடமே பேசக் கூடாது என்று தடை விதித்தேன். நீயோ அயல் நாட்டவனுடன் அதிக நேரம் பேசி விட்டு வருகிறாய். இது பெருந் தவறு."

"தேரிகள் பேசுவது தவறு என்று எங்கே இருக்கிறது?"

"இந்தக் கேள்வியை ஆறு மாதங்களுக்கு முன்னால் ஏன் கேட்கவில்லை? அப்போது எப்படி நீ அடங்கியிருந்தாய்? நீ தேறாதவள். தேரியல்ல."

"என்னைத் தேரியாக்கியது காஞ்சியின் பிரதான பௌத்த குருநாதர் புத்ததாசர். அவர் நியமனத்தைக் குற்றம் கூறும் தகுதி யாருக்கும் கிடையாது."

அவளை அந்த ரீதியில் மிரட்ட முடியாது என்பதை உணர்ந்து கொண்ட சிபிசோரன் "பொது நீதி என்பது பொது வீதியைப் போன்றதல்ல. பொது வீதியில் மக்களும் போகலாம். மாக்களும் போகலாம். பொது நீதி என்பது உயர்ந்த விதி. அதை மீற முற்படுவது நல்லதே அல்ல. உன்னிடம் வாதம் செய்வது வீண். பேசியதை இப்போது என்ன செய்ய முடியும்? பேசியது பேசியது தான். அதை விடு. அந்தப் போலி மனிதனிடம் என்ன பேசினாய்? அதையாவது சொல்வாய் அல்லவா?" என்று கேட்டான்.

அவள் சொன்னாள்.

அவன் அதிர்ந்தான்.

★★★



சிபிசோரனின் கொலைவெறி

"நானும் அந்தச் சாவகப் பிட்சுவுமாகச் சேர்ந்து நாகப்பட்டினத்தைக் கைப்பற்றி ஆள உத்தேசித்திருக்கிறோம். அது விஷயமாகத் தான் பேசிக் கொண்டிருந்தோம்" என்றாள் கௌதமி.

சிபிசோரன் சற்றே அதிர்ந்தான்.

தான் உத்தேசித்திருந்த சதித் திட்டத்தையே கௌதமி கூறியது அதிர்ச்சி தருவதாக இருந்தாலும் அவள் சாவக பிட்சுவுடன் பேசியவற்றைத் தெளிவாகவே கேட்டிருந்தானாதலால் "என்னிடம் விளையாடாதே கௌதமி. அது மிகவும் ஆபத்தானது" என்றான்.

"விளையாடக் கூடிய பருவங்களையெல்லாம் தொலைத்து விட்டுத்தான் தேரியாகி இருக்கிறேன் ஐயா. இந்த நிலையிலா விளையாடப் போகிறேன்?" என்றாள் கௌதமி.

"நீ சொல்வது பொய் என்பது மகான் சாட்சியாக உண்மை. ஆகவே உண்மையைச் சொல்."

"உண்மையைத் தான் நான் சொல்கிறேன்."

சிபிசோரன் தன்னோடு வந்த இரண்டு பிட்சுக்களையும் வெளியே அனுப்பி விட்டு "இதோ பார் கௌதமி. நீயும் அந்தப் போலி பிட்சுவும் பேசியதை மறைவிலிருந்து நான் கேட்டுக் கொண்டு தான் இருந்தேன். நீங்கள் பேசியது என்ன என்பது எனக்குத் தெரியும்." என்றான்.

"பிறகு எதற்காக ஐயா என்னைக் கேட்கிறீர்கள்?"

"நீ பாதி விஷயத்தைத் தான் சொன்னாய். மீதி விஷயத்தைச் சொல்லவில்லை."

"அது என்ன மீதி விஷயம்?"

"அதைத் தான் நான் கேட்கிறேன்."

"எந்தப் பாதி விஷயத்தைக் கேட்கிறீர்கள்?"

"அதைத் தான் நீ சொல்லவில்லையே!"

"நான் எல்லாவற்றையும் சொல்லி விட்டேன். மீதி என்று எதுவும் இல்லை."

"நாகானன விஹாரத்தைப் பற்றிய ரகசியத்தைப் போலி பிட்சுவிடம் நீ பேசியிருக்கிறாய். வெளிப் படுத்தியிருக்கிறாய். இது எவ்வளவு பெரிய குற்றம் தெரியுமா?"

"நீங்கள் அவரைப் போலியானவர் என்பது புரட்டு."

"ஆனாலும் அவன் அயல்நாட்டான். அவனிடம் எப்படிச் சொல்லலாம்? ஒரு தேரி செய்கிற காரியமா இது?"

"ஐயா! நான் சொன்னது மிகவும் அற்ப விஷயம். அதைக் கொண்டு யாரும் எதுவும் செய்ய முடியாது."

"இங்கே இருப்பவர்களுக்கு அதைப் பற்றித் தெரியவில்லை. மகா தேரனான எனக்கும் தெரியவில்லை. உனக்கு மட்டும் எப்படித் தெரிந்தது?"

"காஞ்சியில் இருந்த போது இந்திர விஹாரத்து பிரதான குருநாதர் எனக்குச் சொன்னார்."

"அந்த விஷயத்தை நீ என்னிடம் தானே சொல்லியிருக்க வேண்டும்? அந்தப் போலி பிட்சுவிடம் எதற்காகச் சொன்னாய்?"

"நீங்கள் தான் என்னைப் பேசுவதற்காக அனுமதிக்க வில்லையே! யாரிடமும் வாயைத் திறந்து பேசக் கூடாது என்று சொல்லி விட்டீர்களே! நான் என்ன செய்ய முடியும்?"

"எதற்கு எதைக் கொண்டு முடிச்சுப் போடுகிறாய்? போகட்டும். நான் கேட்ட கேள்விக்குப் பதிலைச் சொல். இங்கே உள்ள நாகானன விஹாரத்தில் யந்திர சூட்சுமங்களை அமைத்த சிற்பி எங்கே இருக்கிறார்?"

"அதைத் தான் அந்தப் பிட்சுவிடம் சொன்னேனே?"

"கௌதமி! இந்தக் கண்ணாம்பூச்சி விளையாட்டெல்லாம் என்னிடம் வேண்டாம். இலங்கையில் இருக்கிறான் என்றால் எங்கிருக்கிறான்? அனுராத புரத்திலா? மட்டக் களப்பிலா? தம்பளையிலா? கதிர்காமத்திலா? கல்யாணியிலா? ரோகணத்திலா? வெறும் இலங்கையில் என்று சொன்னால் எங்கே போய்த் தேடுவது? இலங்கை என்ன நாகப்பட்டினம் என்று நினைத்துக் கொண்டாயா? எங்கு செல்வது? எப்படித் தேடுவது?"

"நீங்கள் எதற்காகத் தேட வேண்டும் அடிகளே?"

தேரியின் இந்தக் கேள்வியால் சற்றுத் தடுமாறிய சிபிசோரன் பிறகு சுதாரித்துக் கொண்டு "என்ன கேள்வி கேட்கிறாய் நீ?

இலங்கையில் இருக்கும் சிற்பியைக் கொண்டு வந்தால் தானே நாகானன விஹாரத்தைத் திறக்க முடியும்? திறந்தால் தானே உள்ளே இருக்கும் பகவான் புத்தரை தரிசிக்க முடியும்? இங்குள்ள பௌத்தர்களுக்கு இதை நான் செய்தாக வேண்டுமல்லவா? இது என் கடமையல்லவா?" என்றான்.

"இந்தக் கடமை உணர்வு இவ்வளவு நாட்களாக ஏன் தங்களுக்கு வரவில்லை?"

மீண்டும் தடுமாறித் தவித்த சிபிசோரன் "எனக்குக் கடமை உணர்வு இல்லாமல் போய் விடவில்லை. எனக்குக் கடமை உணர்வை உபதேசிக்கும் பொறுப்பை நீ ஏற்றுக் கொள்ள வேண்டாம். நாகானன விஹாரம் சம்பந்தப் பட்ட மர்மங்களை இங்குள்ள பீடைகள் யாரும் எனக்குச் சொல்ல வில்லை. சொல்லியிருந்தால் கல் போல் இருந்திருக்க மாட்டேன். கடலலை போல் செயல்பட்டு விஹாரத்தைத் திறக்கச் செய்திருப்பேன்" என்றான்.

நாகப்பட்டினத்து பௌத்தர்களைப் பீடைகள் என்று சிபிசோரன் குறிப்பிட்டதை அவள் ரசிக்க வில்லை.

"ஐயா! நாகானன விஹாரத்தில் இருக்கும் பொன்னால் ஆன புத்தர் சிலைக்குப் பாதுகாப்பு இல்லை என்பதால் தான் பல ஆண்டுகளுக்கு முன்னால் பௌத்தத் தலைவர்கள் சிற்பியின் மூலம் யந்திர நுட்பங்களை அமைத்து விஹாரத்தை மூடி விட்டார்கள். இந்த விஷயம் காஞ்சியில் உள்ள இந்திரவிஹாரத்து பிரதான குருநாதருக்குத் தெரிந்திருக்கிறது. தமிழக பௌத்தத்திற்கே அவர்தான் தலைமை ஆசார்யர். அவரே இந்த விஹாரத்தைத் திறப்பது பற்றி முயற்சி மேற்கொள்ளவில்லை. அதோடு நாகையில் பௌத்தர்கள் இருக்கும் தற்போதைய நிலைமை தங்களுக்குத் தெரியும். இந்த நிலையில் விஹாரத்தை எதற்காகத் திறக்க வேண்டும்?"

"முட்டாள்களும் மூடர்களும் கூடி எடுத்த முடிவை அறிவாளிகள் அங்கீகரிக்க மாட்டார்கள். தவறுகள் களையப்பட வேண்டும். அதுதான் எல்லா விஷயத்திலும் உலக வழக்கு. உண்மை தெரிந்தபின் விஹாரத்தைத் திறக்காமல் இருப்பது அறிவீனம். மகாதேரனாக இருந்து கொண்டு இந்த அறிவீனத்தை என்னால் அங்கீகரிக்க முடியாது. பாதுகாப்பு விஷயத்தைப் பற்றி நீ கவலைப்பட வேண்டியதில்லை. ஆயிரம் பிட்சுக்களை சுற்றி நிற்க வைத்து விஹாரத்தைக் காக்க எனக்குத் தெரியும். ஆகவே தான் சிற்பியின் இருப்பிடத்தைப் பற்றிக் கேட்டேன்.

இப்போது சொல். அந்தச் சிற்பி இலங்கையில் எங்கே இருக்கிறான்?"

"எனக்குத் தெரியாது ஐயா. தெரிந்திருந்தால் சாவகத்துப் பிட்சுவிடமே சொல்லியிருப்பேனே?"

"சொல்லியிருந்தால் இந்நேரம் உன்தலை தரையில் உருண்டிருக்கும். உன் நல்ல காலம். அவனிடம் சொல்லவில்லை. நான் மகாதேரன். நாகைப் பகுதிக்கு நாயகன். என்னிடம் சொல்."

"எனக்கு உண்மையாகவே தெரியாது ஐயா."

"பச்சைப் பொய். இவ்வளவு விஷயங்களைத் தெரிந்து வைத்திருக்கிறாய். இது மட்டும் தெரியாதா? நான் நம்ப மாட்டேன்."

"நீங்கள் நம்பினாலும் சரி நம்பா விட்டாலும் சரி. நான் உண்மையைத் தான் சொல்கிறேன். எனக்குத் தெரியாது."

"கௌதமி! நீ தேரி. நான் மகாதேரன். நாம் இருப்பது பௌத்தத்தைப் பரப்பி உயர்நிலைக்குக் கொண்டு வருவதற்காகத் தான். இதைப் புரிந்து கொண்டு பதில் சொல். இலங்கையில் எங்கே இருக்கிறான் சிற்பி?"

"நான் தேரியாகவே பேசுகிறேன். தேரியாகவே நடந்து வருகிறேன். எனக்குப் பௌத்தத்தைத் தவிர உயர்ந்தது எதுவும் கிடையாது. எனக்குத் தெரிந்த விஷயங்கள் எல்லாவற்றையும் சொல்லி விட்டேன். நீங்கள் கேட்ட சிற்பியின் இருப்பிடம் எனக்குத் தெரியாது. தெரியாது. தெரியாது."

ஆத்திரமடைந்தான் சிபிசோரன்.

திடீரென கௌதமியின் கைகளைப் பிடித்து முறித்தபடி "மரியாதையாகச் சொல் கௌதமி. இல்லையென்றால் நீ சித்திரவதைக்கு ஆளாவாய்" என்றான் கரகரத்த குரலில்.

"தேரரே! நீங்கள் செய்வது தகாதது. வலிக்கிறது. கையை விடுங்கள்."

"முண்டமே! ஏன் எல்லோரும் எனக்குக் கொலை வெறியைத் தூண்டுகிறீர்கள்? நான் தேரனுமல்ல. தீரனுமல்ல. சோரன். சிபிசோரன் என் பெயர். நான் நாகன். நாகத் தீவில் பிறந்தவன். நாகைக்கு வந்தது இங்குள்ளவர்களை ஏமாற்றிப் பிழைக்கத் தான். நீ மட்டும் சிற்பியின் இருப்பிடத்தைச் சொல்லி விட்டால் பொற்சிலையை எடுத்துக் கொண்டு நாகத்தீவுக்கு போய் விடுவேன். நீயே தலைவியாக நாகையை ஆளலாம். சொல்."

அதிர்ந்து போன கௌதமி "அடப்பாவியே! நீ நாசமாய் போவாய்" என்று முணுமுணுத்தாள்.

அதற்கு மேல் பேச முடியவில்லை.

நாக்கு வெளியே வந்து விட்டது. அவன் அவளது கழுத்தை நெறித்ததால். உயிரை விட்டுச் சடலமாக விழுந்தாள் கௌதமி.

அவளைக் கண்டபடி திட்டிக் கொண்டு வெளியே வந்தான் சிபிசோரன்.

"அடிகளே! தேரியையும் கொன்று விட்டீர்களா?" என்று கேட்டார்கள் வெளியே இருந்த இரு பிட்சுக்கள்.

"அவள் தேரியல்ல. தேறாதவள். பயனற்ற ஜடம். அவள் உயிர் வாழ்வது வீண். ஆகவே தான் முடித்து விட்டேன். ஒரே வாரத்தில் இரண்டு கொலைகளைச் செய்யும் படி ஆகி விட்டது. பெண்களெல்லாம் பேய்கள். பிசாசுகள். பிடிவாதக் காரிகள். பிடிவாதமே அவர்களுக்குப் பிரதானம். அவர்களோடு வாதமிடுபவன் வீணன்" என்று அலுத்துக் கொண்ட சிபிசோரன் "பிட்சுக்களே! இப்போது நமக்கு முன் பெரியதொரு விஷயம் மலைபோல வந்து நின்றுள்ளது. நாகானன விஹாரத்திற்குள் பொன்னாலான புத்தர் சிலை உள்ளதாம். அதை நெருங்க முடியாதபடி எவனோ ஒரு சிற்பி யந்திர சூட்சுமங்களை அமைத்திருக்கிறானாம். அவன் எங்கே என்று தெரியவில்லை. நீங்கள் இருவரும் நாகை முழுவதும் விசாரியுங்கள். அவன் மட்டும் கிடைத்து விட்டால் புத்தர் சிலை நம் கையில். அதற்குப் பிறகு நாமிங்கு இருக்கத் தேவையில்லை. நம் தீவுக்கே சென்று விடலாம். செல்லுங்கள். சென்று விசாரியுங்கள்" என்று கூறி இருவரையும் அனுப்பி வைத்தான்.

கொலை செய்த கௌதமியின் உடலை காவிரியில் இழுத்துப் போட்டு விட்டு ஒன்றுமறியாதவனைப் போல இருப்பிடத்திற்குச் சென்றான்.

அவள் இறந்து போனதை அறியாத நிழலில் ஒதுங்குவான் மறுநாள் இலந்தை மரத் தோப்புக்குச் சென்றபோது கௌதமி வரவில்லை. பௌத்தர்கள் மட்டுமே வந்தார்கள். அவளைப் பற்றி விசாரித்தார். யாருக்கும் அவளது நிலைமை தெரிந்திருக்க வில்லை."

"அன்பார்ந்த பௌத்தர்களே! நீங்களெல்லாம் கௌதம தேரியைப் புறக்கணித்து வருவதாகவும் அலட்சியப் படுத்தி வருவதாகவும் கேள்விப் பட்டேன். இதைத் தெரிந்து தான் செய்கிறீர்களா அல்லது தெரியாமல் செய்கிறீர்களா என்பது

தெரியவில்லை. எப்படியிருந்தாலும் அது தவறு என்பதை உணருங்கள். பெண்களில் இல்லறத்தைப் புறக்கணித்து துறவறம் மேற்கொள்வதென்பது அரிதினும் அரிதான அருட்செயல். துறவறம் பூண்டதோடு மட்டுமின்றி தேரியாக உயர்ந்திருப்பது மிகப்பெரிய காரியம்.கௌதமி தேரியாக உயர்த்தப் பட்டிருக்கிறார் என்றால் அவரது தியாகம் மகத்தானதாக இருக்க வேண்டும். அதை உணர்ந்து தான் காஞ்சியில் உள்ள மகாகுரு அவரை அப்பதவிக்கு அமர்த்தியிருக்கிறார். நாகையில் ஒரு பிக்குணி கூட இல்லாத நிலையில் ஒரு தேரியே இங்கு வந்தும் நீங்கள் அவரை ஏற்காமல் புறக்கணித்திருக்கிறீர்கள். இது ஏன்?" என்று கேட்டார்.

"மகாதேரர் தான் எங்களைத் தடுத்து விட்டார். அவரை மீறி நாங்கள் என்ன செய்ய முடியும்?" என்று கேட்டார்கள் பௌத்தர்கள்.

"வழி காட்டுபவர்களே தேரர்கள். தடை செய்பவர்கள் அல்ல. அதோடு தேரி என்பவர் தேரருக்கு இணையானவர் என்பது உங்களுக்குத் தெரியாதா? தேரியோடு பேசுவதற்கு யாருடைய அனுமதியும் தேவையில்லை என்பது பௌத்தர்களான உங்களுக்குத் தெரியாதா? தேரியைச் சந்திக்கக் கூடாது என்று உங்களையெல்லாம் தடைசெய்த அந்த மகாதேரர் உங்களுக்கு என்ன வழிகாட்டினார்? என்ன நன்மைகளைச் செய்தார்? உங்களையெல்லாம் உரியவழிக்குக் கொண்டு வர உபதேசமாவது அவர் செய்ததுண்டா? இதையெல்லாம் நீங்கள் ஏன் யோசிக்க வில்லை? கௌதமி தேரியோ மிகுந்த ஞானத்தைப் பெற்றவர். அவரோடு பழகிய இரண்டு நாட்களிலேயே அதை நான் புரிந்து கொண்டேன். புத்த ஞானத்தில் அவர் வற்றாத ஊற்று. நல் உபதேசக் காற்று. அவரைப் பாராட்டி அக்காற்றில் தூற்றிக் கொள்வதை விட்டு விட்டு தூர விலக்கி வைத்து வீணாக்கி விட்டீர்கள். அதை உணர்ந்து அவரது உபதேசங்களை நீங்கள் கேட்க வேண்டும் என்பதற்காகவே அவரையும் இங்கே வரச் சொன்னேன். என்ன காரணமோ அவரின்று வரவில்லை. நாளைக்கு நான் நாகையை விட்டுக் கயைக்குப் புறப்பட்டு விடுவேன். நாளை முதல் நான் காட்டி வந்த விளக்கை கௌதமி தேரி உங்களுக்குக் காட்டுவார். ஒரு பிக்குணியும் இல்லாத நாகையில் அவர் தனியாகவும் தேரியாகவும் வந்திருப்பது உங்கள் பேறு. மகா தேரரைப் பற்றிக் கவலைப் படாமல், அவரது அனுமதிக்குக் காத்திராமல் தேரியின் வழியில் நடவுங்கள்" என்று கூறி பௌத்தக் கருத்துக்கள் சிலவற்றைக் கூறிவிட்டு விடைபெற்றுக் கொண்டார் நிழலில் ஒதுங்குவார்.

ஆனால் கௌதமியின் சடலம் காவிரிக் கரையில் ஒதுங்கிக் கிடந்ததைக் கண்டு பௌத்தர்கள் அதிர்ச்சியடைந்தார்கள். மகா தேரர்தான் அவளைக் கொன்றிருப்பாரோ என்று சந்தேகித்தார்கள்.

ஆனால் மகா தேரரோ அங்கு வந்து மகா நாடகம் ஆடினார்.

"நேற்று தான் இவளைச் சந்தித்து நீண்ட நேரம் வரை பேசிக் கொண்டிருந்தேன். உங்களுக்கெல்லாம் உபதேசம் செய்ய வேண்டும்என்றதன் ஆதங்கத்தை என்னிடம்வெளிப்படுத்தினாள். தன்னை அனுமதிக்கும் படி கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள். அவளோடு நீண்ட நேரம் பேசிய போது தான் அவளது ஆழ்ந்த ஞானம் எனக்கு வெளிப் பட்டது. உங்களுக்கு உபதேசம் நல்கும் அனைத்துத் தகுதிகளும் அவளுக்கு இருப்பதை அறிந்து கொண்டேன். அனுமதியும் அளித்தேன். இன்றைக்கு அவள் உபதேசம் செய்வதை நானும் கேட்கலாம் என்று ஆவலாக இருந்தேன். அதற்குள் என்ன ஆயிற்றோ தெரியவில்லை. இங்கே இவள் சடலமாகக் கேட்கிறாள். இவள் மனோதிடம் மிகுந்தவள். உயிரை அற்பமாக மாய்த்துக் கொள்ளும் மூடச் செயலை இவள் செய்திருக்க மாட்டாள். ஏதோ நடந்திருக்கிறது. எனக்கென்னவோ அந்தச் சாவகத்து பிட்சு மீது தான் சந்தேகமாக இருக்கிறது. இவளிடம் துராக்கிருதமாக நடக்க முற்பட்டு அது முடியாமல் இவளைக் கொன்று ஆற்றில் வீசியிருப்பானோ என்றெல்லாம் தோன்றுகிறது எனக்கு. பகவான் புத்தனின் சித்தம் என்னவோ தெரியவில்லை" என்றான்.

மகாதேரனை நம்புவதா சாவக பிட்சுவை நம்புவதா என்று பௌத்தர்களுக்குக் குழப்பம் உண்டாயிற்று.

"சாவகத்து பிட்சுவை விசாரித்து நடந்ததைப் பிறகு அறிந்து கொள்ளலாம். இப்போதைக்கு இந்தச் சடலத்தை இவள் வசித்த இடத்திலேயே அடக்கம் செய்து விடலாம். உடல் உப்பிப் போய் இருக்கிறது. தாமதம் செய்தால் நாற்றமெடுத்து விடும். தேரியின் உடல் அவ்வாறு நாசமடைதல் கூடாது. முதலில் அடக்கம் செய்வோம்" என்றான் சிபிசோரன்.

அப்போது டமாரங்கள் ஒலித்தன.

அதையடுத்து நாகையின் காவல் தலைவன் பரிவாரத்துடன் அங்கு வந்தான்.

★★★



காவல் தலைவன் கடல்முகன்

பத்து வீரர்கள் புடைசூழ புரவியில் வந்திறங்கினான் நாகை நகர் காவல் தலைவன் கடல்முகன்.

கூட்டத்தை விலக்கிக் கொண்டு போய் கௌதமியின் சடலம் ஒதுங்கியிருந்ததைக் கண்டான்.

மகாதேரனிடம் விசாரித்தான்.

"ஐயா! இவள் மகாதேரி. பிட்சுக்கள் மற்றும் பௌத்தர்கள் எல்லோரும் மதிக்கத் தகுந்த பிக்குணி. தற்போது இந்த நிலையில் இருக்கிறாள். பௌத்த சமுதாயமே இருண்டு கிடக்கிறது. இது நாட்டுக்கு நல்லதல்ல" என்றான் சிபிசோரன்.

"அதெல்லாம் இருக்கட்டும். உங்களைச் சேர்ந்த இவளுக்கு இந்த நிலை ஏன் ஏற்பட்டது?" என்று கேட்டான் கடல்முகன்.

"சில நாட்களாக இங்கே சாவகத்தைச் சேர்ந்த போலி பிட்சு ஒருவன் பௌத்தர்களோடு உறவாடி வந்தான். கௌதமியைக் கூட அடிக்கடி சந்தித்து வருவான். அவன்மீது தான் எங்களுக்குச் சந்தேகம்."

"என்ன சந்தேகம்?"

"இவளிடம் அவன் முறைதவறி நடக்க முயன்றிருக்க வேண்டும். இவள் இணங்குவதற்கு மறுத்திருக்க வேண்டும். அதனால் இவளைக் கொன்று ஆற்றில் வீசியிருக்க வேண்டும்."

"சற்று வாரும்" என்று கூறி சிபிசோரனை தனியாக அழைத்துச் சென்றான் காவல் தலைவனான கடல் முகன்.

"இதோ பாரும் துறவி. இது உங்கள் விஷயம் என்று விட்டுவிட நான் தயாராக இருக்கிறேன். அப்படி விட்டுவிட வேண்டு மென்றால் எனக்கு ஆயிரம் பொற்காசுகள் தேவை" என்றான்.

"ஐயா! நான் துறவி. என்னிடம் ஒரு காசு கூட இல்லை."

"கதையெல்லாம் விடாதீர்கள். ஒன்றுமே இல்லாமல் எல்லோரும் பிச்சையாக எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்? நான் கேட்டதைத் தர மறுத்தால் உங்களை மட்டுமின்றி பௌத்தர்கள் அனைவரையும் சிறையில் அடைத்து பட்டினி போட்டுச் சாகடிப்பேன்."

"ஐயா! இந்த பிக்குணியின் மரணத்திற்குச் சாவகத்துச் சிற்பிதான் காரணம் என்ற சந்தேகம் நிலவும் போது என்னிடம் பொற்காசுகளைக் கேட்கிறீர்களே! அவனிடமல்லவா கேட்க வேண்டும்?"

"கேட்போம். ஆனால் அது வேறு. இதுவேறு. இப்போதைக்கு நீங்கள் தான் உங்கள் பங்கிற்கு ஆயிரம் பொற்காசுகளைத் தர வேண்டும். இல்லையென்றால் நான் சொன்னபடி சித்திரவதை நடக்கும்."

"நாங்கள் துறவிகள். துறந்தவர்கள். ஒதுங்கி வாழ்கிறவர்கள். இந்த பிக்குணியின் மரணத்திற்குச் சம்பந்தமில்லாதவர்கள். ஒதுங்கியும் ஒடுங்கியும் வாழும் எங்களிடம் காசு கேட்பது தகாது."

"துறவி! இங்குள்ள பௌத்தர்களைப் பற்றி எனக்குத் தெரியும். இங்குள்ள பௌத்தர்களின் லட்சணம் என்ன என்பதும் எனக்குத் தெரியும். நாகையில் நீங்கள் குடியிருப்பதற்குக் காரணமே நான் தான். நான் நினைத்தால் உங்களையெல்லாம் நாகையிலிருந்து நரகலோகத்திற்கு அனுப்ப முடியும். வீண் பேச்சுகளை விட்டு விட்டு நடக்க வேண்டியதைப் பாருங்கள்."

சிபிசோரனுக்கு ரத்தம் கொதித்தது. காவல் தலைவன் மட்டும் தனியாக வந்திருந்தால் கழுத்தை நெறித்துக் கொன்றிருப்பான். ஆனால் அவனோ பரிவாரங்களுடன் வந்திருந்தான். அதோடு அங்கிருந்த சூழ்நிலையும் சரியாக இல்லை. தாமதமாகும் பட்சத்தில் தான் கொலை செய்த விஷயம் அம்பலமாகி விட்டால் தண்டனைக்கு ஆளாகி உயிரை விடும்படியாகி விடும். எனவே காவல் தலைவன் கேட்பதைக் கொடுத்து விட்டு கௌதமியின் உடலைப் புதைத்து விட்டு விடுபடுவதே உகந்தது என்று உணர்ந்த அவன் பௌத்தர்களிடம் சென்று "அன்பர்களே! நாகப் பட்டினத்துக் காவல் தலைவனைப் போன்ற இழிவான பிறவியை நான் கண்டதில்லை. கையூட்டாக ஆயிரம் பொற்காசுகளைத் தரவேண்டும் என்றும் மறுத்தால் உங்களையெல்லாம் சிறையில் அடைத்துச் சித்திரவதை செய்வேன் என்கிறான். பௌத்தர்களை விட்டு விடு என்னைக் கைது செய்து கொள் என்றேன். முடியாது என்கிறான். அடாவடியாகப் பேசுகிறான். என்னிடம் மட்டும் செல்வம் இருந்திருந்தால் வாய் பேசாமல் - வாதத்தில் இறங்காமல்

காசுகளை வீசி எறிந்திருப்பேன். ஆனால் என்னிடம் நான்கு காவி உடைகள் தான் உள்ளனவே தவிர காசு ஒன்று கூட இல்லை. நாள் தோறும் ஒரு வேளை உணவைப் பிட்சை எடுத்து உண்கிறேன். பல நாட்கள் பட்டினியாகவே இருக்கிறேன். ஆகவே நீங்கள் எல்லோரும் ஆளுக்கு ஒரு காசு கொடுத்தால் கூடப் போதும். ஆயிரம் காசுகள் வந்து விடும். அவற்றை அத்தூர்த்தன் முகத்தில் வீசி விட்டு நம் தேரியின் உடலை அடக்கம் செய்யும் காரியத்தில் ஈடுபடலாம்" என்றான்.

உண்மையானவனைப் போலப் பேசி அங்கிருந்த பௌத்தர்களிடம் பொற்காசுகளைத் திரட்டிக் கொடுத்ததும் காவல் தலைவன் வந்த சுவடு தெரியாமல் அகன்றான்.

"ஐயா! நாகையின் நிர்வாகம் நாறுகிறதே! இதற்கு விடிவு கிடைக்காதா?" என்று கேட்டார்கள் பௌத்தர்கள்.

"ஏன் கிடைக்காது? அதற்கான முயற்சியில் ஏற்கனவே இறங்கி விட்டேன். நம்மிடமிருந்து அநியாயமாக வசூலித்த பொற்காசுகளை இரட்டிப்பாகப் பெற்று உங்களுக்கு வழங்குவேன். இது மகான் புத்தர் மீது ஆணை" என்று சொன்ன சிபிசோரன் கௌதமியின் உடலை பௌத்தர்களை விட்டே தூக்கச் செய்து அவள் வசித்த ஆற்றங்கரையிலேயே அடக்கம் செய்தான்.

"இந்த மகா துறவிக்காக எல்லோரும் இன்று ஒரு நாள் உபவாசம் இருங்கள். அதுவே அவருக்கு நாம் செய்யக் கூடிய இறுதி மரியாதை" என்று கூறிய சிபிசோரன் வானத்தைப் பார்த்து "புத்த பகவானே! வாடும் இந்த பௌத்தர்களுக்கு அமைதியைக் கொடு. அமைதியே ஆனந்தம்" என்று கூறிவிட்டுத் தன் இருப்பிடத்திற்குச் சென்றான்.

அங்கே அவரது சக பிட்சுகள் இருவர் இருந்தனர்.

"உணவு தயாரித்து வைத்திருக்கிறீர்களா? அகோரப் பசி எனக்கு" என்றான் சிபிசோரன்.

பிட்சுகள் இருவரும் அசைவ உணவைக் கொண்டு வந்து வைத்ததும் ஒரு பிடிபிடித்தான் சிபிசோரன்.

"ஐயா! தாங்கள் அசைவ உணவு சாப்பிடலாமா?" என்று கேட்டார் ஒரு பிட்சு.

"தினமும் தான் உண்கிறேன். இன்று மட்டும் ஏன் கேட்கிறாய்?"

"கேட்க வேண்டும் என்று தான் நினைப்பேன். கேட்டதில்லை."

"சந்தேகங்கள் மனதிலேயே இருப்பது என்பது வயிற்றில் உணவு ஜீரணமாகாமல் இருப்பது போன்றது. வெளியேற்றி விட வேண்டும்" என்று சொன்ன சிபிசோரன் "உன் கேள்வி அர்த்தமில்லாதது. சைவ உணவு என்று உலகில் எங்குமே இல்லை" என்றான்.

"என்ன ஐயா சொல்கிறீர்கள்?"

"நீ குழந்தையாய் இருக்கும் போது தாயின் பாலைத் தானே குடித்தாய்?"

"ஆமாம்."

"எல்லோருமே அப்படித் தானே குடித்து வளர்கிறார்கள்?"

"ஆமாம்"

"பால் என்பது என்ன? தாயின் ரத்தம். தாயின் ரத்தம் தான் பாலாகக் குழந்தைக்கு வருகிறது. அடுத்தவர் ரத்தத்தைக் குடிப்பவன் சைவனாக எப்படி இருக்க முடியும்? ஆகவே சைவம் அசைவம் என்பது உணவை வைத்து உண்டான வித்தியாசமல்ல. குணத்தை வைத்து உண்டான வித்தியாசம். சாத்வீகமானவன் சைவன். அசாத்வீகமானவன் அசைவன். இந்த உண்மை பெரும்பாலானவர்களுக்குத் தெரியாது" என்று கூறிய சிபிசோரன் "சிற்பியைப் பற்றி ஏதாவது தகவல் கிடைத்ததா?" என்று கேட்டான்.

"சிற்பியைப் பற்றிய தகவல் கிடைக்கவில்லை. ஆனால் சிற்பியொருவர் கிடைத்துள்ளார்."

"யாரவன்?"

"மிகவும் முதியவர். தொண்டு கிழவர். நடக்கவே அவரால் முடியவில்லை. தூக்கிக் கொண்டு வந்தோம்."

"அந்தக் கிழவனை எதற்காகத் தூக்கி வந்தீர்கள்?"

"எங்களுக்கென்னவோ அவனது விழிகள் திருட்டு விழிகளாகத் தெரிந்தன. சரி வர பதில் கூற மறுக்கிறான். ஓங்கி ஒரு அறை விட்டால் செத்து விடுவான் போலிருந்தது. ஆகவே தான் நயமாகப் பேசி இங்கே தூக்கிக் கொண்டு வந்து விட்டோம்."

"அப்படியா? மிகவும் நல்லது. நான் என் வழியில் விசாரிக்கிறேன். எனக்குப் பதில் சொல்லாதவன் உலகில் எங்கே இருக்கிறான்?" என்று கூறியபடி உணவை உண்டு கைகளைக் கழுவிய சிபிசோரன் பெரிதாக ஏப்பம் விட்டான்.

"எங்கே இருக்கிறான் கிழவன்?"

"இல்லத்தின் பின் புறத்தில் படுக்க வைத்திருக்கிறேன்."

"போகலாம் வாருங்கள்."

அவனது இருப்பிடத்திற்குப் பின்னால் இருந்த திண்ணை யொன்றில் மூட்டையைப் போல் சாய்ந்திருந்தார் வயோதிகச் சிற்பி.

நேரம் இரவை நெருங்கிக் கொண்டிருந்ததால் சுற்றுப் புரம் இருண்டு கொண்டு வந்தது.

வாயால் ஊதினால் பறந்து விடக் கூடியவனைப் போலிருந்த இக்கிழவனா அந்தச் சிற்பியாக இருப்பான் என்று ஒரு கணம் எண்ணிப் பார்த்துக் கொண்ட சிபிசோரன் "வணக்கம் சிற்பி. நலமா?" என்றான்.

சிற்பி அவனை ஊடுறுவிப் பார்த்து விட்டு "நீங்கள் தான் மகாதேரரா?" என்று கேட்டார்.

"ஆம். மகாதேரன் மட்டுமல்ல. மகாவீரன். மகான் கௌதம புத்தரோடு அனுதினமும் எனது அந்தராத்மா பேசும். புத்தரே மீண்டும் என் உடம்பை ஏற்றுப் பிறந்திருப்பதாக பாரதநாட்டு பௌத்த மடாதிபதிகள் கூறுவர். பௌத்த ஆகமத்தில் கூட இது பற்றி மறைமுகமாகக் கூறுவதாகப் பலரும் கூறி வருகிறார்கள். உங்களை இங்கே வரச் செய்தது கூட அந்த மகானின் கட்டளையால் தான் இல்லாவிட்டால் உங்களைப் போன்ற முதியவர்களுக்கு நான் சிரமம் கொடுக்க மாட்டேன்" என்று பச்சையாகப் பொய்யைச் சொன்னான் சிபிசோரன்.

"அப்படியானால் புத்தருக்கு என்னையும் தெரிந்திருக்கிறது. இல்லையா சுவாமி?" என்று மெல்லிய குரலில் கேட்டார் சிற்பி.

"ஆமாம். ஆமாம். உம்மைப் பற்றிய அனைத்துத் தகவல்களையும் மகான் புத்தர் தான் சொன்னார். நாகானன விஹாரத்தில் யந்திர சூட்சுமங்களை அமைத்தது நீங்கள் தான் என்று மும்முறை சொன்னார். மூன்று நாட்களுக்குச் சொன்னார். முற்றிய இரவில் சொன்னார்."

"தவறு அடிகளே. மகான் கூறியது தவறு. நான் அந்தச் சிற்பியே அல்ல."

சற்றே ஏமாந்து போன சிபிசோரன் "மகான் புத்தர் பொய் சொன்னார் என்கிறீர்களா?" என்று கேட்டான் கோபத்துடன்.

"யார் பொய் சொன்னார்கள் என்பது முக்கியமல்ல. நான் சொல்வது உண்மை என்பது தான் முக்கியம். நாகானன

விஹாரத்தில் யந்திர சூட்சுமத்தை அமைத்தது என் பாட்டனார். நானல்ல."

"அப்படியென்றால்?"

"நான் அவரது பேரன்."

"அதை நான் கேட்கவில்லை. விஹாரத்தின் சூட்சுமம் பற்றி உமக்கு எதுவும் தெரியாதா?"

"சூட்சுமங்களைப் பற்றி பாட்டனார் என் தந்தையிடம் கூறினார். தந்தை என்னிடம் கூறினார். வயோதிகம் காரணமாக மறதி கொஞ்சம் இருக்கிறது."

"உங்களால் அதன் சூட்சுமங்களைச் சொல்ல முடியுமா? முடியாதா?"

"உங்களுக்கு அது எதற்காகத் தெரிய வேண்டும் அடிகளே? இங்கே இதற்கு முன் இருந்த தேரர்கள் பலர். அவர்கள் யாரும் இந்தச் சூட்சுமத்தை அறிய முயலவில்லை. நீங்கள் எதற்காக விரும்புகிறீர்கள்?"

"சிற்பி! இதுவரை தேரர்கள் என்ற பெயரில் தேறாதவர்கள் நடத்திய மூடர்கள் ஊர்வலம் முடிந்து விட்டது. அவர்கள் வந்த பாதையை நான் அழித்து விட்டேன். அவர்கள் பார்த்து வந்த பார்வையைத் திருப்பி விட்டேன். கல் என்றும் முள் என்றும் கூறி, போகாமல் விட்டு விட்ட பாதையை நான் திறந்திருக்கிறேன். மகான் புத்தரை பௌத்தர்கள் வழிபடும் இடம் விஹாரம் ஒன்று தான். அதைப் போய் ஆண்டாண்டு காலமாக மூடி வைத்திருந்தார்கள் என்றால் அவர்கள் முழு முட்டாள்கள். நான் அப்படியல்ல. இங்கே வந்ததிலிருந்து இந்த விஹாரத்தைத் திறந்து பௌத்தர்களுக்கு வழிபாட்டிற்கு வகை செய்வதையே லட்சியமாகக் கொண்டேன். அதன் பலனாகத் தான் நீங்கள் கிடைத்திருக்கிறீர்கள்?"

"இந்த விஹாரத்தில் இருக்கும் பொற் சிலையைப் பாதுகாப்பதற் காகத்தான் விஹாரத்தை மூடியிருப்பதாக என் தந்தை கூறியிருக்கிறார்?"

"தவறான முடிவு அல்லவா அது? இதே நாகப் பட்டினத்தில் வைணவ ஆலயங்களும் சிவாலயங்களும் உள்ளன. நாகை மட்டுமல்ல அனைத்து ஊர்களிலும் அவை ஏராளமாக இருக்கின்றன. அவற்றிலெல்லாம் கடவுள் சிலைகள் பொன்னாலும் பஞ்சலோகங்களாலும் செய்யப் பட்டவை தானே? அந்த ஆலயங்களெல்லாம் பாதுகாப்பு என்ற பெயரில் மூடியா வைக்கப் பட்டுள்ளன?"

"அங்கே பாதுகாக்கும் படைகள் இருக்கின்றன."

"இங்கே நாங்கள் இருக்கிறோம். எங்களை மீறி ஒரு ஈ கூட புத்தர் சிலையை நெருங்க முடியாது."

"ஐயா. உங்கள் பேச்சு எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. அதே சமயம் விஹாரத்திற்குரிய யந்திர சூட்சுமங்களை யாருக்கும் சொல்லக் கூடாதென்று சத்தியப் பிரமாணத்தை என்னிடம் வாங்கியிருக்கிறார் என் தந்தை. அதை நான் மீற முடியாதல்லவா?"

"உமக்கு உமது உயிர் வேண்டுமென்றால் மீற வேண்டியது தான்."

"எனக்கு வயது தொண்ணூறு. நான் வாழ்ந்து முடித்தவன். எந்த நொடியிலும் மரணத்திற்காகக் காத்திருப்பவன். இறைவன் தந்த உயிரை இறைவன் தான் எடுக்க வேண்டும் என்பதால் சாகாமல் இருக்கிறேன். நான் விரும்பும் மரணத்தை நீங்கள் அளிப்பதாக இருந்தால் மகிழ்ச்சியே தவிர வருத்தமல்ல."

"பெரியவரே! சூட்சுமத்தை உடைத்தெறிய நான் விரும்புவது என் சுயநலத்தால் அல்ல. பௌத்தர்களின் நலத்திற்காகத் தான். நல்ல காரியம் நடப்பதற்குச் சத்தியத்தை மீறுவது குற்றமாகாது. என் பொருட்டு சத்தியத்தை நீங்கள் மீறினால் என்னைத் தான் பாவம் சூழும். தயவு செய்து சொல்லுங்கள்."

சொன்னார் சிற்பி.

★★★



திட்டம்

இயந்திர சூட்சுமத்தைப் பற்றி விளக்க முற்பட்ட வயோதிகச் சிற்பியைத் தனது இல்லத்திற்குள் அழைத்துச் சென்று ஆசனத்தில் அமரச் செய்தான் சிபிசோரன். அங்கே எரிந்து கொண்டிருந்த தீபங்களை நன்றாகத் தூண்டிவிட்டு அறைக்கு ஒளியை ஊட்டினார்கள் பிட்சுகள். ஆகாரம் ஏதாவது வேண்டுமா என்று கேட்டபோது "பழங்கள் இருந்தால் கொடுங்கள். வேறெதுவும் ஜீரணமாகாது" என்றார் சிற்பி. கனிந்த வாழைப் பழங்கள் இரண்டு கொண்டு வரப்பட்டு அவருக்குத் தரப்பட்டன. "நீங்கள் உண்ணவில்லையா?" என்று கேட்டார் சிற்பி.

"தேரர்கள் காலையில் மட்டும் தான் உண்ண வேண்டும். பிற நேரங்களில் விரதம் இருக்க வேண்டும். இது எங்களுக்கு விதிக்கப் பட்ட கட்டுப்பாடு. அதை மீறலாகாது. தலைவன் சரியாக இருந்தால் தான் தொண்டர்கள் சரியாக இருப்பார்கள். குரு சரியாக இருந்தால் தான் சீடர்கள் சரியாக இருப்பார்கள். தேரர்கள் சரியாக இருந்தால் தான் பௌத்தர்கள் சரியாக இருப்பார்கள்" என்று யோக்கியனைப் போலப் பேசினான் சிபிசோரன்.

"இந்தப் பிட்சுக்கள் உங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர் களாக இருந்தாலும் தற்போது சற்று வெளியில் இருப்பது நல்லது" என்றார் சிற்பி.

"மிகவும் சரி" என்று சொன்ன சிபிசோரன் இருவரையும் வெளியேற்றினான்.

சிற்பி பேச முற்பட்டு "அடிகளே! விஹாரத்தின் வெளி வாயில்கள் மற்றும் மதில்களைப் பொறுத்தவரை எந்தச் சிற்ப சூட்சுமமும் இல்லை. சாதாரணமாகத் திறக்கலாம். நுழையலாம். இருப்பினும் நமது காரியம் நிறைவேறும் வரை பகிரங்கமாக நுழைய வேண்டாம். நள்ளிரவுக்குப் பிறகு மதில் மீது ஏறி ரகசியமாக நுழைய வேண்டும்" என்றார்.

"அது மட்டுமல்ல. வெளிவாயிலைத் திறக்காமல் மதில் மீது ஏறி உள்ளே நுழைந்த பிறகு கருவறைக் கதவைத் திறப்பதற்கு யந்திர சூட்சுமத்தை அறிந்து அதன் மூலம் திறக்கப் போகிறோம். அதை நாம் எல்லோரும் பார்க்கும் விதமாகச் செய்ய முடியாது. அதற்கு யாரும் அனுமதிக்க மாட்டார்கள். ஆகவே அதையும் நாம் ரகசியமாகத் தான் திறக்க வேண்டும். திறந்த பிறகு எல்லோரையும் வரச் சொன்னால் எல்லோரும் பரவசம் அடைவார்களே தவிர ஏன் எதற்கு என்று கேட்க மாட்டார்கள்."

சிபிசோரனுக்குத் தேனில் ஊறிய பலாச்சுளை வாயில் வந்து விழுவது போல் இருந்தது.

"அப்படியே ஆகட்டும்" என்றான் சிபிசோரன்.

"இந்தக் காரியம் நாளை மறுநாள் வரும் அமாவாசையன்று தான் நடைபெறவேண்டும்."

"ஏன்? அமாவாசைக்கு முன்னாள் கூட கும்மிருட்டாகத் தானே இருக்கும்?"

"இருட்டுப் பிரச்சனையை நான் சொல்லவில்லை. இந்த விஹாரத்தில் யந்திர சூட்சுமங்கள் மட்டுமில்லை. மாந்தரீக சூட்சுமங்களும் உள்ளன."

"மாந்தரீக சூட்சுமங்களா?"

"ஆமாம். யந்திர மர்மங்களை அறிந்து யாராவது அவற்றை உடைத்தெறிய முற்படும் போது அவர்களைத் தாக்கிக் கொல்வதற்காக மாந்தரீகர்கள் தீய ஆவிகளை உள்ளே உலவச் செய்திருக்கிறார்கள். அமாவாசையைத் தவிர பிற நாட்களில் அத்து மீறுபவர்களை ஆவிகள் கொன்று விடும். அமாவாசை தினம் மட்டும் அவற்றுக்கு ஆகாது. ஊரெல்லாம் சிரார்த்தச் சடங்குகள் நடக்கும். மந்திரங்கள் ஒலிக்கும். ஆலயங்களில் பூஜைகள் கூடுதலாக நடக்கும். அமாவாசை நாள் பேய் முதலிய தீய சக்திகள் விரட்டப் படும் நாள். அன்றைய தினம் முழுவதும் தூய மந்திர அலைகள் ஊரெங்கும் வீசுவதால் பேய்க் கணங்களும் ஆவிகளும் பிரவேசிக்காது. இடுகாடுகளில் முடங்கிக் கிடக்கும். ஆகவே அன்றைய நாளில் விஹாரத்தில் பிரவேசித்தால் மாந்தீரக சூட்சுமம் நம்மைத் தாக்காது."

சிற்பியின் விவரணத்தைக் கேட்டு வியந்தான் சிபிசோரன்.

இந்த விவரம் தெரியாது போயிருந்தால் உயிருக்கு ஆபத்து நேர்ந்திருக்கும் என்று கருதிய அவன் "மிகவும் நன்றி சிற்பியாரே. மிகவும் நன்றி. மிகவும் முக்கியமான தகவலைச் சொன்னீர்கள். இதை வேறு யாரிடமும் எதிர்பார்க்க முடியாது" என்றான்.

சிற்பி பேச முற்பட்டு "அமாவாசை நாளில் நள்ளிரவு முகிழ்த்து ஒரு நாழிகை கழிந்ததும் நாம் இருவரும் விஹாரத்தின் தெற்கு மதிலுக்கு வெளியே மாட்டு வண்டியொன்றோடு தயாராக இருப்போம். அந்தப் பகுதியில் மரங்கள் நிரம்ப உள்ளன. ஊர் சுற்றும் மாடுகள் அங்கே இரவில் ஓய்வெடுக்கின்றன. அங்கே குப்பைகள் கொட்டப் படுவதால் நாற்றமாக இருக்கும். இரவில் யாரும் அங்கே வரமாட்டார்கள்" என்றார்.

"நன்றாகவே கவனித்திருக்கிறீர்கள். நாங்கள் கூடப் பார்த்ததில்லை."

"தேரராக இருந்து கொண்டு இப்படிச் சொல்லலாமா? விஹாரம் மூடியிருந்தாலும் அதைச் சுற்றி வரலாம் அல்லவா?"

"அப்படி வந்திருந்தால் குப்பைகளை அகற்றியிருப்பேன். பாதையை அமைத்து விளக்குத் தூண்களை நாட்டியிருப்பேன். அப்படிச் செய்திருந்தால் தற்போது திட்டமிட முடியுமா?" என்று சொல்லிச் சிரித்த சிபிசோரன் "யந்திர மர்மங்களை உடைத்து விஹாரத்தைத் திறந்தபின் அதை எப்படிச் சீர் செய்கிறேன் பாருங்கள். நாகை மட்டுமுல்ல. நாக தீபமும், நாகர்தீவும், கடாரமும் வியக்குமளவு பௌத்தச் சொர்க்கமாக மாற்றுகிறேன். கவலையை விடுங்கள்" என்றான்.

"உங்களது லட்சியம் தைரியமானதாகவும் தெளிவானதாகவும் இருப்பதால் தான் நான் சத்தியப் பிரமாணத்தையும் மீறி யந்திர ரகசியத்தை உங்களுக்குச் சொல்கிறேன். தவறாக மட்டும் பயன் படுத்தி விடாதீர்கள்."

"ஆஹா! பௌத்தத்தில் தேரன் என்றால் உயர்ந்த நிலையில் இருப்பவன் என்று மட்டும் அர்த்தமாகாது. உண்மையர்னவனே தேரன். உண்மையை மதிப்பவனே தேரன். உண்மையாக நடப்பவனே தேரன். தன்னளவில் தியாகத்தையும் பிறர் அளவில் காருண்யத்தையும் காட்டுபவனே தேரன். நீங்கள் சந்தேக மடைய வேண்டாம். இந்த விஹாரத்தை வழிபாட்டிற்குத் திறந்து வைத்து விட்டேன் என்றால் விஹார வாயிலிலேயே உயிரை மாய்த்துக் கொள்வேன்."

"அதெல்லாம் வேண்டாம் ஐயா. உங்கள் மீது எனக்குப் பூரண நம்பிக்கை உள்ளது." என்று சொன்ன சிற்பி நாமிருவர் மதிலுக்கு வெளியே இருக்கும் நிலையில் உங்கள் சகாக்கள் இருவர் கயிற்றை எடுத்துக் கொண்டு மதில் மீது ஏறி உள்ளே இறங்க வேண்டும். மதில் சுவர் அதிக உயரமில்லை. ஆகவே கஷ்டமில்லாமல் ஏறலாம். உள்ளே குதித்ததும் சிறு பந்தத்தைத்

தயார் செய்து கொள்ள வேண்டும். போகும் போதே கையில் எடுத்துக் கொண்டு போனால் பிரச்சனையில்லை. உள்ளே இறங்கி பந்தத்தை ஏற்றி தரையில் பார்த்துக் கொண்டே போக வேண்டும். ஓரிடத்தில் செப்பு நிறப்பாறை இருக்கும். இன்னொரு இடத்தில் இரும்பு நிறப்பாறை இருக்கும். மற்றொரு இடத்தில் வெள்ளிநிறப்பாறை இருக்கும். பிறிதோர் இடத்தில் பொன்னிறப் பாறை இருக்கும்..."

"புரிந்து விட்டது."

"என்ன புரிந்துவிட்டது?"

"பொன்னிறப் பாறையை அகற்றினால் கீழே விசை இருக்கும். அதைத் திருகினால் புத்தர்சிலை இருக்கும் கருவறையின் கதவு திறக்கும்."

சிற்பி சிரித்தார்.

"எதற்காகச் சிரிக்கிறீர்கள்?"

"உங்கள் ஊகம் குழந்தைத் தனமான ஊகம். குழந்தைகளால் யூகிக்க முடிந்த ஊகம். அப்படி நினைத்துக் கொண்டு தான் பலரும் பொன்னிறப் பாறையை அகற்றிக் கீழேயிருந்த விசையை அசைத்தார்கள். அதையடுத்துப் பேரோசைகள் எழுந்தன. மக்கள் திரண்டார்கள். கதவைத் திறந்தார்கள். உள்ளே இருந்தவர்களை நையப்புடைத்து கால்களை வெட்டி எறிந்தார்கள்."

"ஐயோ! ஆபத்தானது தான்."

"ஆகவே அந்த முயற்சியில் ஈடுபடாதீர்கள். அதோடு விஹாரத்தின் உட்புறத் தரை மண்ணால் மற்றும் முட்செடிகளால் மூடியிருக்கிறது. அதையெல்லாம் அகற்றினால் தான் மாறுபட்ட பாறைகளை நாம் காணமுடியும். நமக்குப் பாறைகள் எதுவும் தேவையில்லை என்பதால் அவற்றைப் பற்றிக் கவலைப் படாமல் உள்வாயிற் கதவுகளுக்கு வலதுபுறம் எட்டு ஜாண் இடைவெளியில் ஒரு பாம்புப் புற்று தென்படும். அது புற்று போன்ற ஒரு அமைப்பே தவிர உண்மையான புற்று கிடையாது. பெரும்பாலானவர்கள் அதைப் பாம்புப் புற்று என்றே நினைத்தே அதன் பக்கத்தில் கூடப் போக மாட்டார்கள். அந்தப் புற்றருகே சென்று அதை அப்படியே தூக்கிப் பக்கத்தில் வைக்க வேண்டும். புற்று வடிவம் இருந்த இடத்தில் ஒரு விசை சக்கர வடிவில் இருக்கும். அதைச் சாதாரணமாகச் சுற்றினால் சுற்றாது. புத்தம் சரணம் கச்சாமி, சங்கம் சரணம் கச்சாமி, தர்மம் சரணம் கச்சாமி" என்று உச்சரிக்க வேண்டும்.

"அடைக்கலச் சரணங்களை உச்சரித்து விட்டுச் சக்கரத்தைச் சுழற்றினால் சுற்றும். அப்படித்தானே?"

"இல்லை. கச்சாமி சரணங்களைச் சொன்னால் சக்கரம் சுற்றாது. மாறாக புத்தருக்குச் சம்பந்தம் இல்லாத வாசகங்களைச் சொல்ல வேண்டும்."

"என்ன வாசகம் அது?"

"ஸ்ரீராம ராம ராமேதி
ரமே ராமே மனோரமே
ஸஹஸ்ர நாம தத்துல்யம்
ராமநாம வரானனே"

"இது என்ன வாக்கியம் சிற்பியாரே?"

"விஷ்ணு சகஸ்ரநாம வாக்கியம்."

"மகான் புத்தருக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?"

"இல்லை என்று தானே சொன்னேன்? இது மகா வாக்கியம். புத்தருக்குச் சம்பந்தமில்லாத வாக்கியம் தான். ஆனால் புத்தர் சிலை இருக்கும் அறைக் கதவுகளைத் திறக்கக் கூடிய வாக்கியம். யந்திர சூட்சுமங்களை வைத்தவர்கள் இப்படிச் சம்பந்தமில்லாத வாக்கியங்களால் கட்டு போட்டிருப்பார்கள். இது தெரியாத பலரும் சக்கரத்தைச் சுழற்ற முடியாது."

"அப்படியென்றால் இந்த மந்திரத்தைச் சொன்னால் சக்கரத்தைச் சுழற்றலாம் அல்லவா?"

"சுழற்றலாம். ஆனால் மந்திரத்தை எத்தனை முறை உச்சரிக்க வேண்டும் என்பது மறந்து விட்டது."

"நினைவு படுத்திப் பாருங்கள் சிற்பியாரே."

"ஞாபகத்திற்கு வரவில்லை. அதனால் பாதகமில்லை. மந்திரங்களைத் தொடர்ந்து சொல்லிக் கொண்டே இருக்கட்டும். சரியான எண்ணிக்கை வரும் போது சக்கரம் சுழலும். சக்கரம் சுழன்றால் கருவறைக் கதவுகள் சத்தமில்லாமல் திறக்கும். உள்ளே ஐந்தடி உயரமான மேடையில் புத்தரின் பொற்சிலை இருக்கும். கண்கள் கூசும் படியான ஒளிப் பிழம்பாகக் காட்சியளிக்கும்."

"அருமையான திட்டம் சிற்பியாரே. உமக்கு நான் மட்டுமல்ல பௌத்த சமுதாயமே கடமைப் பட்டிருக்கிறது. உங்களது இந்தப் பேருதவி கல்வெட்டில் பதியப்பட்டு விஹாரத்தின் முன்புறச் சுவற்றில் பதிக்கப்படும்" என்று பூரிப்பாகச் சொன்ன சிபிசோரன் "இந்த மாபெரும் உதவிக்காக உங்களுக்கு நாங்கள் தரவேண்டிய தொகை எவ்வளவு?" என்று பவ்யமாகக் கேட்டான்.

"ஐயா! நான் செய்யும் இந்த காரியம் சத்தியப் பிரமாணத்தை உடைக்கும் பாவகாரியம். அதுவும் என் தந்தையிடம் செய்து கொடுத்த சத்தியத்தை உடைக்கும் காரியம். உங்களுக்காக இதை நான் செய்யவில்லை. உங்களை நம்பியுள்ள பௌத்தர்களுக்காகச் செய்கிறேன். ஆகவே இதில் பங்கு வேண்டுமென்றோ வெகுமானம் வேண்டுமென்றோ கோருவது சரியாகாது. அப்படிக் கோருவது பாவத்தின் சுமையை மேலும் நான் ஏற்றிக் கொள்வதைப் போன்றது. நான் சாவுக்கான நாட்களை எண்ணிக் கொண்டிருக்கும் சிற்பி. சேர்த்து வைத்து கூடவே கொண்டு போகப் போவதில்லை. எனவே எனக்கு அப்படியெல்லாம் எதுவும் வேண்டாம். எனது குறுகிய ஆயுள்காலத்தைக் கடத்த தொழில் செய்து ஊதியம் பெறமுடியாது. எனவே அந்த வகையில் ஏதாவது கொஞ்சம் பொற்காசுகளைக் கொடுத்தால் போதுமானது."

"உங்கள் மனதும் எண்ணமும் உயர்ந்தவை. உங்களைப் போல இன்னொருவரை இந்நாளில் மட்டுமல்ல எந்நாளிலும் காணமுடியாது. நீங்கள் எடுத்துக் கூறிய உபாயத்திற்காக நான் இரண்டாயிரம் பொற்காசுகளை அளிக்கிறேன். பெற்றுக் கொள்ளுங்கள்."

"காரியம் முடியட்டும் அடிகளே. பிறகு வாங்கிக் கொள்கிறேன்."

"இல்லை சிற்பியாரே. எதையும் எதிர்பாராமல் யந்திர சூட்சுமங்களைக் கூறிய உங்கள் பெருந்தன்மைக்கு இப்போதே அளிப்பது தான் சரி" என்று சொன்ன சிபிசோரன் உள்ளே சென்று இரண்டாயிரம் பொற்காசுகளை ஒரு பட்டுத் துணியில் முடிந்து அவரிடம் கொடுத்தான்.

"என்னை ஒரு வண்டியில் ஏற்றி என் இருப்பிடத்திற்குக் கொண்டு போய் விட்டு விடுங்கள். நாளை மறுநாள் வண்டியோடு வந்து என்னை ஏற்றிக் கொண்டு செல்லுங்கள்" என்றார் சிற்பி.

★

அமாவாசையன்று நள்ளிரவு.

விஹாரப் பகுதி பரம அமைதியில் ஆழ்ந்திருந்தது.

அதுவரை அங்கொன்றும் இங்கொன்றுமாய் எரிந்து கொண்டிருந்த விளக்குகளும் அணைந்து விட்டபடியால் அந்தப் பகுதி கும்மிருட்டில் மூழ்கியது.

விஹாரம் மூடப்பட்டுப் பலகாலமாகி விட்டபடியால் .ழந்தைகள் அப்பகுதியை சுவீகரித்துக் கொண்டு கூட்டம்

கூட்டமாய் வசித்து வந்தன. இரவு நேரம் தொடங்கி விட்டால் தற்பெருமைக் காரர்கள் மாநாடு கூட்டி இரைவது போல் நூற்றுக்கும் மேற்பட்ட பேய்ப்பறவைகள் விஹாரத்திற்குள் இரைந்து கொண்டாடுவது தினசரி நடப்பாக இருந்தது.

அமாவாசையன்று நடக்கவிருக்கும் சம்பவத்தை எண்ணியோ என்னவோ தற்போது அவை இரையவில்லை. குதூகலிக்கவில்லை. தத்தம் பொந்துகளிலும் விதானத்தின் மேலுமாக அமர்ந்து கொண்டு நடக்கப் போவதைக் கவனிக்கும் விதமாக அமைதியாக இருந்தன. கத்தியே பழக்கப்பட்ட ஓரிரு ஆந்தைகள் மட்டும் கட்டுப்பட முடியாமல் அவ்வப்போது இரைந்து அப்பகுதியில் நிலவி வந்த அமைதியைக் கெடுத்தன.

நள்ளிரவு கழிந்ததுமே விஹாரத்தின் தெற்கு மதில் பக்கம் வந்து சேர்ந்தான் சிபிசோரன். சிற்பி கூறியது போலவே அந்த இடம் குப்பைகளாலும் கால்நடைகளாலும் அசுத்தமாகி நாற்றம் குடலைப் புரட்டியது. சுகந்தமான பகுதிகளில் சுகமாக வாழ்ந்து பழகிவிட்ட சிபிசோரனுக்கு நாற்றம் பிடித்த அந்த இடம் அறவே பிடிக்கவில்லை. பொற்சிலையைப் பெறப்போகும் ஆர்வத்தில் மூக்கைப் பிடித்துக் கொண்டு காத்திருந்தான்.

ஒரு நாழிகை ஆகியும் வரவேண்டியவர்கள் வரவில்லை.

★★★



பாறைப்பள்ளம்

சிற்பியை அழைத்துவர மாட்டு வண்டியுடன் தனது சக பிட்சுகள் நள்ளிரவுக்குக் கணிசமான நேரத்திற்கு முன்பாகவே அனுப்பியிருந்தும் நள்ளிரவு வந்து நாழிகை ஒன்று கழிந்த பின்பும் சிற்பியும் தன் சகாக்களும் வராதிருக்கவே சிபி சோரனுக்குச் சந்தேகம் மூண்டது.

ஏமாந்து விட்டோமா என்று நினைத்தான்.

ஆனால் நல்ல வேளையாக சிற்பியும் சகாக்களும் வந்து சேர்ந்தார்கள்.

"எதற்காக இவ்வளவு தாமதம்?" என்று சீறினான் சிபிசோரன்.

"மாடு பாதி வழியில் படுத்து விட்டது ஐயா. அதை எழுப்பி சரிப்படுத்திக் கொண்டு வருவதற்குத் தாமதமாகி விட்டது" என்றார் பிட்சு.

"மாட்டிற்கும் உங்களுக்கும் ஒரு வித்தியாசமில்லை. இருவருமே மூடங்கள். என்ன மாதரி காரியத்தில் இறங்கவிருக்கிறோம்? இந்த நேரத்தில் மாடு சரியில்லை மேடு சரியில்லை என்கிறீர்களே! உரிய உபகரணங்களையெல்லாம் கொண்டு வந்து விட்டீர்களா?"

"இதோ கயிறு. பந்தம்."

சிற்பி வண்டியை விட்டு இறங்கி வந்து "மந்திரம் ஞாபகமிருக்கிறதா?" என்று கேட்டார்.

"ஞாபகமிருக்கிறது ஐயா."

"ஏதோ சொல்லுங்கள்."

சொன்னார்கள்.

"கடைசி வரி சரியாக இல்லை. 'சகஸ்ரநாம தத்துல்யம். ராம நாம வரானனே' என்று சொல்ல வேண்டும். மந்திரத்தைச் சரியாக உச்சரிக்க வில்லை என்றால் பயன் இருக்காது. ஆகவே இங்கிருந்தே மனதிற்குள் உச்சரித்த படிச் செல்லுங்கள்" என்று சொன்ன சிற்பி "அதோ அந்தப் போதி மரக்கிளையைப் பாருங்கள். மதிலை நோக்கி வளைந்து வளர்ந்திருக்கிறது. அதன்

மீது ஏறி மதிலை அடைந்து உள்ளே குதித்து விடுங்கள். கயிற்றை வீசி ஏறவேண்டியதில்லை" என்றார்.

"அப்படியே ஆகட்டும் ஐயா"

"உள்ளே குதித்ததும் பந்தத்தைக் கொஞ்சமாகப் பற்ற வைத்துக் கொள்ளுங்கள். பந்தம் பெரிதாக இருந்தால் அதன் பிரகாசம் வெளியே உள்ளவர்களுக்குத் தெரிந்து விடும். குறைவான வெளிச்சத்தில் விஹாரத்தின் உள் அறை வாசலை நோக்கிச் செல்லுங்கள். வேறு எதன் மீதும் கவனம் வேண்டாம்" என்றார் சிற்பி.

சரி என்று சொல்லிவிட்டு இருவரும் மரத்தின் மீது ஏறி மதில் சுவருக்கு வந்து உள்ளே குதித்தார்கள். பந்தத்தைக் கொளுத்த முற்பட்ட போது ஏதோ ஒரு அமானுஷ்ய குரல் கேட்கவே இருவரும் அதிர்ந்தார்கள்.

"யாரது?" என்று கேட்பது போல் தோன்றியது

"வெறும் பிரமை. பந்தத்தைக் கொளுத்து" என்றார் ஒரு பிட்சு.

"அவசரப் படாதே. யாராவது இங்கே இருந்தாலும் இருக்கலாம். பந்தத்தை ஏற்றினால் நம்மை அடையாளம் கண்டு கொள்வார்கள். முதலில் அவர் யார் என்பதைப் பார்க்கலாம்" என்றார் மற்றொருவர்.

"இருட்டாக இருக்கிறதே! எப்படி பார்ப்பது?" என்று கேட்டார் முதல் பிட்சு.

"பழகப் பழக இருட்டில் கண் தெரியும். கவலைப் படாமல் என்பின்னே வா" என்று கூறி விட்டு கருவறைக்கு நேரெதிர்த் திசையில் நடந்தார் இரண்டாவது பிட்சு.

வெளியே இருந்த சிபிசோரன் எல்லாமே திட்டமிட்டபடி நடப்பதைக் கண்டு திருப்தியடைந்தான். நாகையை ஆளும் தீர்மானத்தோடு வந்த அவனுக்குப் புத்தரின் பொற்சிலை பற்றிய தகவல் வந்ததும் ஆளும் ஆசை மாண்டது. பொற்சிலை மீதான ஆசை மூண்டது. பொற்சிலை கிடைத்து விட்டால் அதை விற்றுப் பெரும் செல்வத்தை ஈட்டி மரக்கலங்களை வாங்கி நாகர் தீவை மையமாகக் கொண்டு கடற்கொள்ளையை மேற்கொள்ளலாம் என்று திட்டமிட்டான்.

ஆசை பேராசையாகி அது நிறைவேறுவது போல் காரியங்கள் நடந்ததால் மகிழ்ச்சியும் திருப்தியும் அடைந்த அவன் சிற்பியைப் பார்த்து "நானும் பல விஷயங்களில் பல திட்டங்களைத் தீட்டியிருக்கிறேன் சிற்பியாரே. ஆனால் தற்போதைய திட்டத்தைப் போல் கச்சிதமாக எதுவும் அமைந்ததில்லை. அதற்குக்

காரணம் நீங்கள் தான். உங்கள் அறிவும் அனுபவமும் அபாரமானவை. உங்களை என்னோடு வைத்துக் கொள்ள வேண்டும் என்று ஆவலாக இருக்கிறது. சம்மதிப்பீர்களா?" என்று கேட்டான்.

"நான் சம்மதிக்கலாம். என் வயதும் வயோதிகமும் சம்மதிக்காது. அநேகமாக நான் ஈடுபடும் கடைசி காரியம் இதுவாகத் தான் இருக்கும்." என்று சொன்ன சிற்பி "இன்றிரவு எப்படியும் கருவறைக் கதவு திறக்கப்பட்டு விடும். நாம் எல்லோரும் பொற் சிலையைத் தரிசிப்போம். பொழுது விடிந்தபிறகு பௌத்தர்களை அழைத்து உங்களது சாதனையாகச் சொல்லித் தரிசிக்க வைப்போம். அது தான் சரியாக இருக்கும்" என்றார்.

சிபிசோரனின் தீர்மானமே வேறு. கருவறைக் கதவு திறக்கப் பட்டதும் பொற்சிலையைத் தூக்கிக் கொண்டு இரவோடு இரவாக நாகையை விட்டு ஓடிவிடுவது. அதற்குச் சிற்பி ஒத்துழைக்கா விட்டால் அங்கேயே அவரை வெட்டிப் போட்டு விடுவது. இதுவே அவனது தீர்மானமாக இருந்தது.

சகாக்கள் இருவரும் உள்ளே சென்று நேரமாகியதே தவிர தகவல் எதுவும் வராததால் "என்னதான் செய்கிறார்கள் இவர்கள்? நேரமாகிறதே?" என்றான் சிபிசோரன்.

"மந்திரத்தை எத்தனை முறை சொல்ல வேண்டும் என்பது எனக்குத் தெரியாது என்று சொன்னேன் அல்லவா? உள்ளே போனவர்கள் அந்த மந்திரத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்களோ என்னவோ?" என்றார் சிற்பி.

"அவர்கள் அதைச் சொல்லி முடிப்பதற்குள் பொழுது விடிந்து விட்டால் என்ன செய்வது?" என்று கேட்டான் சிபிசோரன்.

"நான் வேண்டுமானால் உள்ளே சென்று பார்த்து விட்டு வரட்டுமா?" என்று கேட்டார் சிற்பி.

"உங்களால் எப்படி மரத்தின் மீது ஏற முடியும்? நான் வேண்டுமானால் பார்க்கிறேன்" என்று சொன்ன சிபிசோரன் மரத்தின் மீது ஏறி மதிலுக்கு வந்தான். உள்ளே குதித்தான்.

சிற்பி தன் உதடுகளைக் குவித்து ஏதோ ஒலியெழுப்பினார்.

அதையடுத்து விஹாரத்து வாயிலில் பந்தங்கள் தோன்றின. ஆரவாரம் எழுந்தது. வாயிற்கதவைத் திறந்து கொண்டு ஏராளமான பேர் உள்ளே நுழைந்தார்கள்.

சிற்பியாக அதுவரை நடித்த நிழலில் ஒதுங்குவான் தனது வேடங்களைக் களைந்து குப்பையில் போட்டு விட்டு இருளில் மறைந்தார்.

"நீ நாகைக்குச் சென்றதில் நஷ்டம் உன் தலைமுடி. லாபம் இரண்டாயிரம் பொற்காசுகள். மற்றபடி நம் நோக்கம் நிறைவேற வில்லை. புத்த விஹாரத்தில் யந்திர சூட்சுமங்களை அமைத்த சிற்பி இலங்கையில் எங்கே இருக்கிறான் என்பது தெரியவில்லை. இல்லையா?" என்று கேட்பான் மங்கை வேந்தன்.

"உண்மையிலேயே நாகையில் இருப்பவர்களுக்குச் சிற்பியின் இருப்பிடம் தெரியவில்லை என்பது தான் உண்மை" என்றார் நிழலில் ஒதுங்குவார்.

"இலங்கைக்குச் சென்று சிற்பியின் இருப்பிடத்தைக் கண்டு பிடிப்பது என்பது இயலாத காரியம். புத்தர் சிலையை மறந்து விட்டுப் புதிய வழியை நோக்கிச் செல்வது தான் சரி" என்றார் சாயை பிடிப்பான்.

மங்கை வேந்தன் தாளுதுவானை நோக்கி "புத்த விஹாரக் கதவுகளை உன்னால் திறக்க முடியாதா?" என்று கேட்டான்.

"மந்திர சூட்சுமங்கள் மற்றும் யந்திரச் சூட்சுமங்களால் பாதுகாக்கப் படும் கதவுகளைத் திறக்க என்னால் முடியாது மன்னவா. கதவை உடைக்கலாம். அதை பகிரங்கமாகத் தான் செய்ய முடியும். யாரும் அறியாமல் ரகசியமாகத் திறக்க முடியாது" என்றார் தாளுதுவான்.

"பகிரங்கத் தாக்குதல் நமக்குப் பயன்படாது. அதே சமயம் சாயை பிடிப்பான் கூறியது போல் நம்மால் இயலாது என்று எதையும் ஒதுக்கி விட முடியாது. அரங்கன் ஆலயத் திருப்பணி முடியும் வரை நம்மால் முடியாது என்று ஒரு காரியமும் இருக்கக் கூடாது. அப்படி இருந்தால் திருப்பணியைக் கைவிட்டு விட்டதாகவே அர்த்தம். திருப்பணிக்கான செல்வத்திற்கு எந்தெந்த வழி புலப்படுகிறதோ அவை எல்லாவற்றையும் நாம் பயன்படுத்தியே ஆக வேண்டும். அந்த வகையில் பொற்சிலையை நாம் கைவிடக் கூடாது. மீதமுள்ள திருப்பணிச் செலவுகளுக்கு அப்பொற்சிலை போதுமான தென்றால் அதைக் கைப்பற்றியே ஆக வேண்டும். எனவே நாம் இலங்கைக்குச் செல்ல வேண்டியது தான்" என்றான் மங்கை வேந்தன்.

"மன்னவா! இலங்கைக்குப் போகவேண்டும் என்றால் கடல் கடந்து போகவேண்டும்" என்றார் நிழலில் ஒதுங்குவார். அவருக்கு அது இயலாது என்று தோன்றியது.

"இதென்ன இப்படிப் பேசுகிறாய்? அயோத்தியில் இருந்த இராமபிரான் இராவணனை வெல்ல இலங்கைக்கு வரவில்லையா? அதற்காகப் பாலம் அமைக்கவில்லையா? அப்படியிருக்கும் போது

நாகையில் இருக்கும் நாம் இலங்கைக்குப் போவது இயலாத விஷயமா? இதோ பார் சாயை பிடிப்பான்! நீ இந்த இரண்டாயிரம் பொற்காசுகளைத் திருப்பணி நிதியில் சேர்த்து விட்டு வா. நீர்மேல் நடப்பானும் தோலாவழக்கனும் நாகைக்குச் சென்று இரண்டு நாட்கள் தங்கியிருந்து கடல் பயணம் மேற்கொள்வது பற்றி ஆராய்ந்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்து விட்டு வரட்டும். மூன்றாம் நாள் நாம் இலங்கைக்குப் புறப்படுகிறோம்" என்று சொன்ன மங்கை வேந்தன் "நீ திறக்க வேண்டிய பூட்டு ஒன்று இருக்கிறது. நீயும் நிழலில் ஒதுங்குவானும் என்னோடு வாருங்கள்" என்றான்.

"இங்கே திருவரங்கத்தில் ஆலய நிர்வாகப் பிரிவில் இருக்கும் ஒரு அதிகாரி - அவன் பெயர் தசாங்கன் என்று நினைக்கிறேன். ஆலயத் திருப்பணிக்காக அவன் தனிப்பட்ட முறையில் பக்தர்களிடம் நிதி வசூலிக்கிறானாம். வசூலிக்கும் நிதியில் ஒரு காசு கூட இதுவரை அவன் திருப்பணிக்குச் செலவிடவில்லை. அவன் வசூலிக்கும் விஷயம் ரகசியமாகவே பெரும்பாலும் நடக்கிறது. அதிகார மையத்தில் இருக்கும் ஒரு சிலருக்கு இது தெரிந்தாலும் என்ன காரணத்தாலோ அவனைக் கண்டிக்கவோ, தட்டிக் கேட்கவோ, காட்டிக் கொடுக்கவோ முயலவில்லை. அவன் இதுவரை ஏராளமான நிதியை வசூல் செய்து திருவெள்ளறையில் ஒரு மலைப் பள்ளத்தில் ரகசிய அறையில் குவித்து வருகிறான். அங்கே தான் அவை இருக்கின்றன என்ற நம்ப முடியாத அளவிற்குப் பள்ளப் பகுதியானது வெகு இயற்கையாக இருக்கும். எனவே அங்கே பாதுகாப்பு வீரர்களோ காவலர்களோ கிடையாது. அங்கு புலி நடமாட்டம் உண்டு. எனவே யாரும் அங்கே செல்வதில்லை. தசாங்கன் தான் வசூல் செய்யும் நிதியை ஒவ்வொரு அமாவாசையின் போதும் திருவெள்ளறைக்குக் கொண்டு சென்று சேர்த்து வருகிறான். இரண்டு நாட்களுக்கு முன்தான் அமாவாசை வந்தது. அவன் அங்கே நிதியைக் கொண்டு வந்து குவித்திருப்பான். இதோடு அடுத்த அமாவாசைக்குத் தான் வருவான். நண்பர்களே! நாம் இதுவரை வழிப்பறி செய்திருக்கிறோம். கொள்ளையடித்திருக்கிறோம். யார் அளவுக்கு மீறி வைத்திருக்கிறார்களோ - யார் தருமம் செய்யாமல் இருக்கிறார்களோ - யார் செல்வத்தைத் தவறாகப் பயன்படுத்துகிறார்களோ அவர்கள் மீது தான் நம் கைவரிசையைக் காட்டியிருக்கிறோம். இந்தத் தசாங்கன் இவர்களையெல்லாம் விட மோசமான அயோக்கியன். ஆலயத் திருப்பணியின் பெயரால் வசூல் செய்து அதற்காகச் செலவிடாமல் தன் கணக்கில் சேர்த்து வருகிறான். நம்பும் மக்களை ஏமாற்றி வருகிறான். அது அடாத

செயல். அதர்மச் செயல். அவனிடம் குவியும் செல்வம் மக்களின் செல்வம். அரங்கன் திருப்பணிக்குச் சேர வேண்டிய செல்வம். ஆகவே அதை நாம் கைப்பற்றியே ஆக வேண்டும். நாளைக்கு அங்கே செல்லலாம்" என்றான் மங்கைவேந்தன்.

"திருவெள்ளறை அருகில் தானே இருக்கிறது? இன்றிரவே போனால் என்ன?" என்று கேட்டார் தாளுதுவான்.

"செல்வம் வைக்கப் பட்டிருக்கும் நிலவறை பாறைப் பள்ளத்தில் இருக்கிறது. அந்தப் பள்ளம் பெருமாள் கோயிலுக்குப் பின்புறத்தில் இருக்கிறது. பகலில் போனால் தான் அந்தப் பள்ளப் பகுதியில் எந்த இடத்தில் நிலவறை இருக்கிறது என்பதை அறிய முடியும். அதற்குப் பிறகு தான் திட்டமிட வேண்டும். நிலவறை இருக்குமிடம் தெரிந்து விட்டால் நாளை இரவு உள்ளே செல்லலாம்" என்றான் மங்கை வேந்தன்.

மறுநாள் மூவரும் பக்த கோடிகளாக வேடமிட்டுக் கொண்டு திருவெள்ளறைக்குச் சென்றார்கள். காரியமே கண்ணாக இருந்ததாலோ என்னவோ கோயிலுக்குள் சென்று பெருமாளைத் தரிசனம் செய்ய வேண்டும் என்று கூட அவனுக்குத் தோன்றவில்லை.

பக்தர்கள் கூட்டம் கணிசமாக இருந்தபடியால் அம்மூவரும் கோயிலைப் பிரதட்சிணம் செய்யும் விதமாகச் சுற்றி வந்தார்கள். பின்புறத்தில் சென்ற ஒற்றையடிப் பாதையில் நடந்தார்கள். ஒருகல் தொலைவில் இருந்த பாறைப் பள்ளப் பகுதிக்குச் சென்றார்கள்.

அப்பகுதி வனாந்தரமாக இருந்தது. பகலாக இருந்ததாலோ என்னவோ நிசப்தமாக இருந்தது. அப்பகுதியில் அவர்களைத் தவிர வேறுயாரும் காணப்படவில்லை.

நீர்மேல் நடப்பா னை பார்த்த மங்கை வேந்தன் "இந்தப் பள்ளப் பகுதி சமதளமாக இருக்கிறது. சீராக இருக்கிறது. முழுவதும் பாறையாக இருக்கிறது. முழுப் பகுதியும் வித்தியாசமின்றி ஒரே மாதிரியாக இருக்கிறது. இதில் எந்தப் பகுதியில் நிலவறை இருக்கிறது என்பது துல்லியமாகத் தெரிய வேண்டுமானால் நீ இந்தப் பள்ளம் முழுவதிலும் அடிபிரதட்சிணம் செய்வது போல நடக்க வேண்டும். நீர்மேல் நடக்கக் கூடிய உனக்கு நிலத்தின் மாறுபாட்டை உணரமுடியும். எனவே நீ நட நடக்க வேண்டியது நடக்கும்" என்றான்.

நீர்மேல் நடப்பான் பாறைப் பள்ளத்தில் அடிமேல் அடிவைத்து நடந்தார். ஒவ்வோர் அடியும் அவர் உணரத் தகுந்த வகையில் நடந்தார். நிலவறை இருக்கும் பகுதி கெட்டியானதாக இருக்காது

என்றும் அங்கே கால்கள் பதியும் போது உணரத் தக்கதாக இருக்கும் என்றும் கருதி நடந்தார்.

நடந்து முடிந்தபின் "மன்னவா! என் அறிவுக்கும் உணர்வுக்கும் எட்டியவரை இந்தப் பாறைப் பள்ளத்தில் நிலவறை எதுவும் இல்லை" என்றார் நீர்மேல் நடப்பான்.

மங்கை வேந்தன் சலனப்படவில்லை.

"வாருங்கள். எல்லோரும் பெருமாளைத் தரிசித்து சேவித்து விட்டு வரலாம்" என்றான்.

மூவரும் கோயிலுக்குச் சென்று பெருமாளைத் சேவித்தார்கள். பெருமாள் தீர்த்தத்தைப் பெற்றார்கள்.

மாலைவரை அங்கேயே அமர்ந்திருந்தார்கள். கோயிலில் தரப்பட்ட பிரசாதங்களை உண்டார்கள்.

அவர்களைப் போலப் பலரும் கோயிலைச் சுற்றிப் பல இடங்களில் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஓரிடத்தில் ஐந்து பேர் அட்டகாசமாகப் பேசிக் சாப்பிட்டுக் கொண்டிருந்ததைக் கவனித்தான் மங்கை வேந்தன். அவர்களில் ஒருவன் பகட்டாக இருந்தான். அவன் ஒரு வேளை தசாங்கனாக இருப்பானோ என்ற சந்தேகம் மங்கை வேந்தனுக்கு வந்தது. அதை உறுதி செய்வதைப் போல அந்தப் பகட்டு மனிதன் "எனக்கு இந்தக் கோயில் வேலை இனி தேவையிருக்காது. வடக்கே போய் விடலாம் என்றிருக்கிறேன். திரவரங்கத்தை விட காஞ்சி அழகான ஊராம். கோட்டைக் கொத்தளங்கள், மாடங்கள், கூடங்கள், கோபுரங்கள், ஆலயங்கள், விஹாரங்கள், சமணப் பள்ளிகள் என திரும்பும் இடமெல்லாம் பிரம்மாண்டமாகத் திகழுமாம். அங்கே போய் விடலாம் என்றிருக்கிறேன்" என்று தன் சகாக்களிடம் கூறிக் கொண்டிருந்தான்.

"இது தசாங்கனே தான். சந்தேகமே இல்லை" என்று முடிவுக்கு வந்த மங்கை வேந்தன் நீர்மேல் நடப்பானைப் பார்த்து "அதோ அவன் தான் அந்த அயோக்கியன். அவனை நீங்கள் இருவரும் கவனித்துக் கொண்டே இருங்கள். உங்கள் பார்வையிலிருந்து தப்பக் கூடாது. என்ன காரணத்தாலோ திருவெள்ளறைக்கு அவன் வந்திருக்கிறான். தேவைப் பட்டால் அவனைக் கொண்டே நிலவறையைக் கண்டுபிடித்து விட வேண்டியது தான்" என்றான்.

இரவு முகிழ்த்தது.

★★★



தசாங்கன்

இரவு நேரம் புலரத் தொடங்கிய கொஞ்ச நேரத்திலேயே அந்தப் பகட்டு மனிதன் தன்னோடு வந்தவர்களை அனுப்பி விட்டு அவன் மட்டும் கோயிலுக்குப் பின்னாலிருந்த ஒற்றையடிப் பாதையில் நடக்கலானான்.

"நீ அவனைப் பின் தொடர்ந்து செல். நாங்கள் இருவரும் உன்னைத் தொடர்ந்து சிறிது தூரத்தில் வருகிறோம். முன்னே போகிறவன் தசாங்கனே தான். சந்தேகமே இல்லை. நிலவறைக்கு என்ன காரணத்தாலோ வந்திருக்கிறான். அவனை விடக் கூடாது. அவனை அறியாமல் நிலவறையைக் கண்டு கொள்ள வேண்டும்" என்று சொல்லி நீர்மேல் நடப்பானை முன்னே அனுப்பினான் மங்கை வேந்தன்.

பள்ளப் பாறையை அடைந்த போது நன்றாக இருட்டி விட்டிருந்தது. துஷ்ட மிருகங்களின் உறுமல் ஒலிகள் லேசாகக் கேட்டன. பள்ளப் பாறைப் பகுதிக்குச் சென்ற தசாங்கன் அனாயாசமாகவே சென்றான். அப்பகுதியில் அவனைத் தவிர யாரும் வந்ததில்லை என்ற காரணத்தால் அவன் திருப்தியோடு சென்றடைந்தான். பள்ளப் பாறையில் சிறிது நேரம் நின்று சுற்று முற்றும் பார்த்தான். அங்கே ஒரு மூலையில் இருந்தச் சுறுந்துக் குச்சிகள் சிலவற்றைப் பற்ற வைத்துக் கொண்டு பள்ளப் பாறையைத் தாண்டி அடர்ந்த காட்டுப் பகுதிக்குள் சென்றான்.

நீர்மேல் நடப்பான் அவனைத் தொடர்ந்தார்.

தசாங்கன் சிறிது தூரமே சென்று விட்டு பெரிய தொரு போதி மரத்தின் கீழே சென்று நின்றான். கீழே தரையை ஓரிடத்தில் சுத்தப்படுத்தினான். அந்த இடத்தில் விசையொன்று இருந்தது. அதைச் சுழற்றினான். பூமி நகர்ந்தது. சுளுந்து வெளிச்சத்துடன் அங்கே வெளிப்பட்ட துவாரத்தில் கீழே இறங்கினான் தசாங்கன்.

நீர்மேல் நடப்பான் அதைக் கவனித்தார். துவாரத்திற்குள் நுழைய முற்படவில்லை. மற்ற இருவருக்காகக் காத்திருந்தார். இருவரும் வந்தபின் தசாங்கன் பூமிக்குள் நுழைந்ததைச் சொன்னார்

மூவருமே ஒதுங்கி நின்று துவாரத்தைக் கவனித்தார்கள். அப்போது மூவருமே எதிர்பாராத அதிர்ச்சியான சம்பவம் நடந்தது.

துவாரத்தின் உள்ளேயிருந்து சிறிய மூட்டை ஒன்றைச் சுமந்தபடி மேலே ஏறி வந்தான் தசாங்கன். அது தான் சரியான நேரம் என்று நினைத்தது போல் புலியொன்று பாய்ந்து வந்து அவனைத் தாக்கியது. தாக்குதல் பலமானதாகவும் எதிர் பாராததாகவும் இருந்ததால் தடுமாறி கீழே விழுந்தான் தசாங்கன்.

புலி அவனது முகத்தில் அறைந்து தோலைப் பீய்த்தது. அக்கணமே தசாங்கன் மாண்டான். புலி அவன் இறந்து விட்டதை அறிந்து அவனுடலைப் மேன்மேலும் பீய்த்தெறிந்து மாமிசத்தை உண்ண முயன்றது.

கோரக் காட்சியைக் கண்ட மூவரும் எதுவும் செய்ய முடியாமல் நின்றார்கள். கணநேரத்தில் தசாங்கன் சடலமாகி புலிக்கு உணவாகிக் கொண்டிருந்ததால் அவனைக் காப்பாற்றுவதற்கு வழியில்லாமல் போயிற்று. புலியானது அவனது உடற்பகுதியிலிருந்து போதுமானவற்றை எடுத்து உண்டு விட்டதால் மூவர் மீது பாய விரும்பாமல் காட்டுப் பகுதியை நோக்கிச் சென்றது.

"பார்த்தாயா நண்பா? விலங்குகள் தங்கள் பசி அடங்கி விட்டால் போய் விடுகிறது. மனிதர்களுக்குப் போதுமான செல்வம் கிடைத்தாலும் அவர்கள் திருப்தியடைவதில்லை. மேன் மேலும் சேர்க்கவே விரும்புகிறான். அப்படி நடந்து கொண்டவன் தான் தசாங்கன். சற்று முன் கோயிலில் அவன் பேசியதைக் கேட்டாய் அல்லவா? நிர்வாக வேலையை விட்டு விட்டு காஞ்சிக்குப் போய் குடியேறி இன்ப வாழ்க்கையை மேற்கொள்ளப் போவதாகச் சொல்லியிருந்தான். அதற்காகவே திருப்பணியின் பெயரால் மக்களை ஏமாற்றி நிதி திரட்டியிருக்கிறான். ஆனால் விதி வேறு மாதிரி அமைந்து விட்டது" என்று சொன்ன மங்கை வேந்தன் "இவனது கிழிந்து போன உடலை இப்படியே விட்டு விட்டால் நரிகளும் ஓநாய்களும் வந்து விடும். நம்மைத் தாக்கவும் முற்படும். ஆகவே இந்த உடலைப் பக்கத்திலேயே புதைத்து விட்டு ரத்தக் கறைகளை மண்ணால் அழித்து விடுங்கள். அதற்கு முன் சுளுந்துக் குச்சிகளைக் கொளுத்துங்கள்" என்றான்.

சுளுந்து குச்சிகளைக் கொளுத்தி வைத்துக் கொண்டு குழி தோண்டப்பட்டு தசாங்கனின் சிதைந்த உடல் புதைக்கப்பட்டு ரத்தக் கறைகள் அகற்றப்பட்டன. தசாங்கன் சுமந்து வந்து மூட்டையில் சிறிதளவு நகைகளும் ஒரு சாவியும் இருந்தது. மேலும் துவாரத்தில் இறங்கினார்கள். நிலவறையில் ஓர் அறை இருந்தது.

அந்த அறைக் கதவில் முப்பதுக்கும் மேற்பட்ட பூட்டுகள் பூட்டப் பட்டிருந்தன.

தாளுதுவனைப் பார்த்து "இதென்ன இத்தனைப் பூட்டுகள் இருக்கின்றன? இவற்றையெல்லாம் எப்படி திறப்பது? உடைப்பது?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"மன்னவா! இதுபோன்ற கதவுகள் பலவற்றை நான் பார்த்திருக்கிறேன். இவை வெறும் அமைப்புதானே தவிர திறக்க வேண்டிய பூட்டுகள் அல்ல. இக்கதவைத் திறப்பதற்கான மூலப் பூட்டு வேறெங்காவது இருக்கும்" என்று கூறிய தாளுதுவான் அவற்றைத் தடவினார். ஓரிடத்தில் சுவற்றில் இருந்த துவாரப் பகுதி அழுந்தியது. அப்பகுதியில் உள்ள பெரிதான ஒரு பூட்டு இருந்தது. தசாங்கன் கொண்டு வந்த சிறு மூட்டையில் இருந்தச் சாவியை எடுத்துப் பூட்டைத் திறந்தார்.

சிறு சத்தம் கேட்டது. அதையடுத்து கதவு ஒரு புறமாக ஒதுங்கி மறைந்தது.

உள்ளே பொற்காசுகள், வெள்ளிக் காசுகள், நகைகள், மணிகற்கள் என பலவும் இருந்தன. அவற்றைக் கொண்டு வந்த பைகளும் இருந்தன. அவற்றில் எல்லாவற்றையும் போட்டுக் கட்டினார்கள். அறை காலியாகியது. கதவு பழையபடி நகர்த்தப் பட்டது. மூவரும் வெளியே வந்து துவாரத்தின் மூடியை மூடினார்கள். அதன் மீது மண்ணைப் போட்டு மறைத்தார்கள்.

"கோயில் பக்கமாக நாம் செல்லவேண்டாம் மன்னவா. பள்ளப் பாறைக்கு மேற்கில் சென்று கொள்ளிடக் கரையோரமாகவே சென்றால் விடிவதற்குள் கரம்பனூருக்குச் சென்று விடலாம்" என்றார் நீர்மேல் நடப்பான்.

மங்கை வேந்தனும் சரி என்றான்.

★

கரம்பனூருக்கு அவர்கள் சென்று திருவெள்ளறையில் கவர்ந்த செல்வங்களைச் சாயை பிடிப்பானிடம் ஒப்படைத்து திருப்பணி நிதியில் சேர்க்கும் படிச் செய்தார்கள். கப்பல் பயணம் குறித்து ஏற்பாடுகளைச் செய்வதற்கு நாகைக்குச் சென்றிருந்த தோலா வழக்கனும், நிழலில் ஒதுங்குவானும் வந்து சேர்ந்தார்கள்.

இலங்கைக்கு வணிகக் கப்பலொன்று புறப்படப் போவதாகவும் அக்கப்பலில் எல்லோரும் வணிகர்களாகச் செல்லலாம் என்றும், பயணத்திற்கான அனுமதிச் சீட்டைப் பெற்று விட்டதாகவும், பயணத்திற்கான தொகையைக் கப்பலில் ஏறும் போது செலுத்தினால் போதும் என்றும் தெரிவித்தார்கள்.

இரண்டு நாட்களே இருந்த காரணத்தால் மங்கை வேந்தனும் தோழர்கள் ஐவரும் அன்றிரவே புறப்பட்டு நாகையை அடைந்தார்கள். அங்கே அவர்கள் சேரும் போது பொழுது விடிந்து விட்டதால் நாகைத் துறைமுகம் சிலிர்த்து எழுந்திருந்தது. அக்கால கட்டத்தில் சோழ மண்டலத்தில் நாகைத் துறைமுகமே பிரதானமான துறைமுகமாகவும் பிரபலமான துறைமுகமாகவும் இருந்தாலும் இரவு நேரங்களில் கப்பல் போக்கு வரவு தடை செய்யப் பட்டிருந்தது. நாகையிலிருந்து இரவில் எந்தக் கப்பலும் கடலில் செல்லாது. அதேபோல வெளிநாடுகளிலிருந்து நாகைத் துறைமுகத்திற்குக் கப்பல்கள் வந்தால் துறைமுகப் பகுதிக்கு அப்பால் நிறுத்தப்படும். கப்பல்கள் நங்கூரத்தைப் பாய்ச்சி நிற்கும். பொழுது விடிந்த பின்பே அவை துறைமுகத்திற்குள் நுழைவதற்கு அனுமதி வழங்கப்படும்.

துறைமுகத்தின் தெற்குப் பகுதியிலிருந்து கப்பல்கள் கடலுக்குள் செல்லும். துறைமுகத்தின் வடபகுதியில் கப்பல்கள் துறைமுகத்திற்குள் வரும். துறைமுகப் பகுதி அடிக்கடி மணலடித்துப் போனாலும் அவ்வப்போது அது அகற்றப்பட்டு ஆழப் படுத்தப் பட்டு வந்ததால் துறைமுகத்திற்குக் கடலிலிருந்து வரும் கப்பல்கள் நன்றாக முன்னேறி வந்து நங்கூரம் பாய்ச்சி நிற்கும். கப்பலுக்கும் கரைக்குமாக அகன்ற பலகைகள் போடப்பட்டு சரக்குகள் கப்பலிலிருந்து கரைக்கு இறக்கப்படும். இறக்கப்படும் பகுதியிலேயே சுங்கச் சாவடிகள் இருந்த படியால் சரக்குகள் சோதனை செய்யப்படும். சரக்குகளின் தன்மை மற்றும் அவை கொண்டு வரப்படும் நாடுகள் ஆகியவற்றைக் கொண்டு சுங்கவரி நிர்ணயிக்கப்பட்டு அங்கேயே வசூலிக்கப் படும். சுங்கவரியைச் செலுத்திய வணிகர்கள் தங்கள் சரக்குகளைப் பாரவண்டியில் ஏற்றிச் சந்தைக்குக் கொண்டு செல்வார்கள். சந்தையிலேயே விற்க வேண்டிய சரக்குகள் சந்தையில் இறக்கப்பட்டுச் சந்தை வியாபாரிகளால் கடைகளுக்குக் கொண்டு செல்லப்படும். மற்றவை உள்ளூர் பட்டினங்களான உறையூர், தஞ்சாவூர், மற்றும் பழையாறைப் பகுதிகளுக்குக் கொண்டு செல்லப்படும்.

நாகைக்குச் சீன தேசத்திலிருந்து சீனக் கற்பூரம், சீனவெடி, சீனக்கற்கண்டு, சீனச் சட்டிகள், பீங்கான் பாத்திரங்கள் அதிக அளவில் அடிக்கடி வந்து கொண்டிருந்தன. அதிலும் சீனக் கற்பூரத்திற்கு உள்ளூர்களில் அதிக வரவேற்பு இருந்தபடியால் அதன் வரவு அதிகமாய் இருந்தது. பெரியோர்கள் தங்களை மறைத்துக் கொண்டு தங்கள் புகழை பல இடங்களில் பரப்புவது போல் சீனக்கற்பூரங்கள் மூட்டைகளில் இருந்தாலும்

அவற்றின் மணம் துறைமுகம் முழுவதும் பரவி இன்பமான சுகந்தத்தைக் காற்றில் கலக்க விட்டு மீன் வாடையைக் குறைத்துக் கொண்டிருந்தது. துறைமுகத்திற்கு இலங்கையிலிருந்தும் பிறபகுதி களிலிருந்தும் வந்து கொண்டிருந்த மீன்களுக்குச் சுங்கம் விதிக்கப் படாததால் அவை கப்பலிலிருந்து படகுகளில் இறக்கப் பட்டு கடற்கரையின் பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பப் பட்டு வந்தது.

மங்கை வேந்தனும் தோழர்களும் நாகைத் துறைமுகத்திற்கு வந்தபோது இந்தக் காட்சிகளைக் கண்டார்கள். அதோடு அரபு நாட்டிலிருந்து புரவிகளும், தென்னிலங்கையிலிருந்து யானைகளும் கப்பல்களில் கொண்டு வரப்பட்டன. அவை கரைகளில் இறக்கப்பட்டு நகருக்குள் அழைத்துச் சென்ற விதமானது கம்பீரமாக இருந்தது. துறைமுகத்திற்கே ஒரு தனி அழகைக் கொடுத்திருந்தது. இருட்டு விலகியதும் ஆயிரக் கணக்கான சூரியக் கதிர்கள் வெளிப்படுவது போல் பொழுது விடிந்த வேளையில் துறைமுகத்தில் பெருகிய மக்கள் கூட்டமானது துறைமுகத்தைச் சூறையாடப் புறப்பட்டது போல் இருந்தது. இருள் என்னும் சோம்பேறியை விரட்டியடிக்க வந்த வீரர் பட்டாளத்தைப் போல் காணப்பட்டது மக்கள் கூட்டம். கூட்டம் பெருகி விட்டால் காவலும் கண்காணிப்பும் இயல்பாகவே பெருகும் என்பதை நிரூபிப்பது போல் புரவி வீரர்கள் கணிசமான அளவில் கூடி மக்களைக் கண்காணித்தும் ஒழுங்கு படுத்தியும் வந்தார்கள். குடிகாரனுக்குப் பகலும் கிடையாது. இரவும் கிடையாது. வெட்கமும் கிடையாது என்பதை உறுதிப்படுத்தும் விதமாகத் துறைமுகப் பகுதியில் போதையில் அந்த அதிகாலை வேளையில் தள்ளாடிக் கொண்டிருந்த குடிமகன்களைக் காவல் வீரர்கள் விரட்டியடித்த காட்சி வேதனையளிப்பதாக இருந்தாலும் அந்த வேதனை வாடிக்கையாக இருந்தபடியால் அவர்களை மக்கள் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. சுங்கச் சாவடியிலிருந்து சரக்குகளை ஏற்றிக் கொண்டு சந்தையை நோக்கி வண்டிகள் தொடர்ந்து சென்று கொண்டிருந்த விதமானது மக்களுக்கும் வணிகத்திற்கும் இருந்த நீண்ட காலத் தொடர்புக்குச் சான்றளிப்பது போல் இருந்தது.

நாகைப் பட்டினத்துத் தலைவனான கடல் முகனுக்கும் துறைமுகத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் எதிலும் எப்போதும் கையூட்டு வாங்கியே பழக்கப் பட்டிருந்ததால் புரவியில் ஆரோகணித்து வந்து ஏமாளிகளை மிரட்டி கிடைத்த வரை லாபம் என்று பொருட்களைப் பெற்றுக் கொண்டிருந்தான்.

அதற்கு மாறாக முகத்துவாரத்திற்கருகே இருந்த துறைமுகத் தலைவனின் மாளிகை சுறுசுறுப்பாக இருந்தது. துறைமுகத்

தலைவனும் துருதுருவென்று இருந்தான். மரக்கலத் தலைவர்கள் அவனை மொய்த்தபடி இருந்தார்கள். நாகைத் துறைமுகத்திற்கு வரும் கப்பல்கள் மற்றும் நாகப் பட்டினத்திலிருந்து புறப்படும் கப்பல்கள் ஆகியவை அவனது கட்டுப் பாட்டில் இருந்த படியால் அவன் பலம் வாய்ந்தவனாக இருந்தான். அவன் நினைத்தால் எந்த மரக்கலத்தையும் இயங்காமல் தடுத்து விட முடியும் என்ற நிலை நிலவியதால் மரக்கலத் தலைவர்கள் அவனது தயவில் இருந்தார்கள். அதே சமயம் நாகப்பட்டின காவல் தலைவன் கடல் முகனைப் போல் துறைமுகத் தலைவன் கையூட்டு பெறும் ஈனனாக இல்லாததால் அவனது மதிப்பு அதிகமாகவே இருந்தது.

இந்த விவரங்களையெல்லாம் தோழர்கள் மங்கை வேந்தனுக்குத் தெரிவித்த போது "இந்த நகரம் சோழரது நேரடி கட்டுப் பாட்டிலும் ஆதிக்கத்திலும் இருந்தால் இன்னும் சிறப்பாக இருக்கும். தூரத்தில் இருக்கும் பல்லவர்கள் கட்டுப்பாட்டில் இருப்பதால் சரிவர கவனம் செலுத்த முடியவில்லை. அவர்களுக்கு சாளுக்கியர்கள், ராஷ்டிர கூடர்கள், கங்கர்கள் ஆகியோரை எதிர்கொள்ளவே சரியாக இருக்கிறது" என்றான் மங்கை வேந்தன்.

தோலா வழக்கன் பேசமுற்பட்ட "மன்னவா! இங்கிருந்து கப்பலில் புறப்பட்டு இலங்கைக்குப் போய்ச் சேரும் வரை என்னைத் தவிர யாரும் பேசவேண்டாம். அனைவர் சார்பாகவும் நானே பேசிக் கொள்கிறேன். யார் பேச வந்தாலும் என்னிடமே பேசுவதாக இருக்கட்டும்" என்றார்.

இலங்கைக்குச் செல்லும் கப்பல் மறுநாள் காலையில் தான் புறப்படும் ஆதலால் அது வரை என்ன செய்வது எங்கே தங்குவது என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"எல்லோரோடும் பழகியபடி நேரத்தைக் கழிக்கலாம் என்றால் சுங்கச் சாவடியை அடுத்த சத்திரங்களில் தங்கலாம். யாரோடும் பேசாமல் தனிமையில் இருக்க வேண்டும் என்றால் கடற்கரைப் பகுதியில் பேய்க்குளம் என்ற பகுதி இருக்கிறது. அங்கே நாம் தங்கினால் யாரும் வரமாட்டார்கள். ஆனால் பேய்கள் வரும். பேய்கள் குளிக்கும் குளம் அங்கே இருப்பதால் தான் அந்தப் பகுதிக்குப் பேய்க்குளம் என்ற பெயர் வந்தது" என்றான் தோலாவழக்கன்.

"மனிதர்களோடு பேசிப் பழகுவதைவிடப் பேய்களிடம் பேசலாம். பழகலாம். அவை சொத்து சேர்த்து வீணடிப்பதில்லை. மக்களை ஏமாற்றி வசூல் வேட்டையில் இறங்குவதில்லை. அங்கேயே போகலாம்" என்றான் மங்கை வேந்தன்.

"இலங்கைக்குச் செல்ல வேண்டிய நிலையில் பேய்கள் உலவும் பகுதியில் தங்க வேண்டாம்" என்றார் தாளுதுவான்.

"பேய்கள் நம்மை எதுவும் செய்யாது நண்பா. மனிதர்கள் பேயை விடக் கொடியவர்கள். அவர்களைக் கண்டால் பேய்கள் அஞ்சும்" என்றான் மங்கை வேந்தன்.

எதற்காக மங்கை வேந்தன் மனிதர்களைப் பற்றி வெறுப்பாகப் பேசுகிறான் என்று நண்பர்களுக்கு விளங்கவில்லை.

அதேசமயம் யாரும் அதை விவாதப் பொருளாக மாற்ற விரும்பவில்லை.

எல்லோரும் பேய்க்குளத்திற்குச் சென்றார்கள். தோலா வழக்கன் கூறியது போல அங்கே பெரியதோர் குளம் இருந்தது. அதில் இருந்த நீர் தூய்மையாக இருந்தது.

"பேய்கள் நீராடுவதால் இந்தக் குளத்தின் நீர் சுத்தமாக இருக்கிறது. மாறாக மனிதர்கள் நீராடி வந்திருந்தால் அசுத்தமாக மாறியிருக்கும்" என்றான் மங்கை வேந்தன். அதோடு "தெய்வம் தன் கரங்களால் தூய்மையாக உருவாக்கிய இடத்தை யெல்லாம் இந்த மனிதன் தனது கைகளால் அசுத்தப் படுத்தி விட்டான். அவனால் முடிந்தது அவ்வளவு தான்" என்றும் சொன்னான்.

அனைவரும் குளக்கரையிலேயே தங்கினார்கள். நாகைக்குப் புறப்படும் போதே உண்பதற்குத் தேவையான உணவு வகைகளை தயாரித்து வந்திருந்த படியால் அவற்றில் கொஞ்சம் எடுத்து எல்லோரும் உண்டார்கள்.

மணற் பகுதியிலேயே மற்றவர்கள் படுக்க, தோலா வழக்கன் மட்டும் "நான் சென்று நாளைக்குப் புறப்படவிருக்கும் கப்பலைப் பற்றியும் கப்பல் தலைவனைப் பற்றியும் விசாரித்து விட்டு நமது பயணத்திற்கான கட்டணத்தைச் செலுத்த முடியுமானால் அதையும் செலுத்தி விட்டு வருகிறேன். நீங்கள் இங்கேயே இருங்கள்" என்று கூறி விட்டுச் சென்றார்.

அவர் திரும்பும் போது நன்றாக இருட்டி விட்டிருந்தது. பந்தம் ஒன்றை உருவாக்கி மணலில் நட்டு வைத்தார்கள். மங்கை வேந்தன் அங்கில்லை. எங்கோ சென்று விட்டு வருவதாகச் சொல்லி விட்டுச் சென்றதாகச் சொன்னார்கள் சகாக்கள்.

அப்போது பந்தம் திடீரென அணைந்தது.

அமானுஷ்ய குரல்கள் கேட்டன.

★★★



பேய்க்குளம்

அமானுஷ்ய குரல்கள் குளத்தைச் சுற்றியே கேட்டன.

“பேய்கள் குளிக்க வந்துள்ளன என்று நினைக்கிறேன்.”

“பேய்களுக்கு தான் உருவம் இல்லையே! அவை எப்படி குளிக்கும்?”

“நமக்குத் தான் பேய்கள் அரூபமாகத் தெரியும். ஆனால் அவற்றுக்கு வடிவம் உண்டு.”

“பேசுவதற்குப் பைசாச மொழியும் உண்டு.”

இப்படி மங்கை வேந்தனின் நண்பர்கள் பேசிக் கொண்ட போது தாளுதுவான் மட்டும் “இதற்குத் தான் இங்கே வரவேண்டாம் என்றேன்” என்றார்.

“இப்போது என்ன ஆகி விட்டது?” என்று கேட்டார் நிழலில் ஒதுங்குவார்.

“பேயென்றால் உனக்குப் பயமா?” என்று கேட்டார் சாயை பிடிப்பான்.

“அதெல்லாம் இல்லை. துறைமுகப் பகுதியில் நடன அரங்குகள் நிரம்ப உண்டு. அழகழகான அணங்குகள் ஆடுவர். பாடுவர். காணவும் கேட்கவும் கொடுத்து வைத்திருக்க வேண்டும். அங்கே போய் கண்டு களித்துக் காலத்தைக் கழிப்பதை விட்டு விட்டு கண்களால் காண முடியாத பேய்களின் குரலை மட்டும் கேட்டுக் கொண்டிருப்பது நன்றாகவா இருக்கிறது?” என்று கேட்டார் தாளுதுவான்.

“அப்படியென்றால் இங்கே நீராடும் பேய்களைக் காண முடியவில்லை என்பது தான் உன் வருத்தமா?”

“அவற்றைத் தான் காணமுடியாதே! வருத்தப் பட்டு என்ன பயன்? கண்ணால் காணக் கூடியவற்றைக் காண்பது தானே கண்களின் பயன்?”

“இதை நீ மங்கை வேந்தனிடமே கூறியிருக்கலாமே?”

"அவர்தான் மனிதர்கள் மீதே வெறுப்பாக இருக்கிறாரே?"

"அவருக்கு அப்படியொரு வெறுப்பு இருந்தால் அதில் அர்த்தமில்லாமல் போகுமா?"

"அர்த்தங்கள் ஆயிரம் இருக்கலாம். ஆனால் அவர் இப்போது இங்கே இல்லையே! பேய்களின் குரல்களை நாம் கேட்கும் படி விட்டு விட்டு அவர் எங்கோ போய் விட்டாரே! அது நியாயமா?"

தோலா வழக்கன் குறுக்கிட்டு "உங்கள் அர்த்தமற்றப் பேச்சை நிறுத்துங்கள். மன்னர் எங்கே போனார்?" என்று கேட்டான்.

"போகுமிடத்தைச் சொல்லவில்லை. வந்து விடுகிறேன் என்று மட்டும் சொன்னார்."

"எங்கே செல்கிறீர்கள் என்று நீங்கள் கேட்கக் கூடாதா?"

"அவரது மனநிலை சரியில்லை."

"மனநிலை சரியில்லாத போது அவரை எப்படி நீங்கள் அனுமதித்தீர்கள்? அது ஆபத்து அல்லவா?"

"தோலா வழக்கரே! மங்கை வேந்தரைப் பற்றி உமக்குத் தெரியாதா? பூவாக இருக்கும் அவர் பூகம்பமாக மாறுவார். தென்றலாக வீசும் அவர் புயலாகச் சீறுவார். அவரது குணம் எப்போது எப்படி மாறும் என்று அனுமானிக்க முடியாது. அவர் வழியில் தான் நாம் செல்ல வேண்டுமே தவிர நம் வழியில் அவரை இழுக்க முடியாது. நடப்பு எப்படியிருந்தாலும் அவரது நினைப்பு தெளிவாகத் தான் இருக்கும். எதற்காகக் கவலைப்படுகிறீர்கள்?" என்று கேட்டார் நீர்மேல் நடப்பான்.

"என் பதற்றம் எனக்கு. நாளை விடியற்காலையில் நாம் அனைவரும் கப்பலில் இருந்தாக வேண்டும். கப்பல் புறப்பட வேண்டிய நேரம் வந்தால் புறப்பட்டு விடும். யாருக்காகவும் காத்துக் கொண்டிருக்காது. துறைமுகத் தலைவன் மிகவும் கண்டிப்பானவன். கப்பல் புறப்படுவதில் தாமதமானால் பயணத்தையே ரத்து செய்து விடுவான். அவனைச் சமாதானப் படுத்த முடியாது. நேற்று வரை நமது கப்பல் பயணத்திற்கான அனுமதி தரப்பட்டிருந்தது. இன்று நான் போய் பார்த்தபோது அனுமதி ரத்தாகி விட்டது. நான் பதறிப் போனேன். துறைமுகக் காவலனிடம் சென்று விசாரித்தேன். இலங்கைக்குப் பத்து புத்த பிட்சுக்கள் அவசரமாகச் செல்ல வேண்டியிருந்ததால் நமக்கு பதிலாக அவர்களுக்கு இடமளித்திருப்பதாகச் சொன்னான் துறைமுகக் காவலன். நான் நீண்ட நேரம் வாதாடி ரத்தான அனுமதியை மீண்டும் பெற்றேன். சரியான நேரத்திற்கு வந்து

கப்பலில் ஏறி விடவேண்டும் என்றும் தாமதித்தால் அனுமதி ரத்தாகி விடும் என்று எச்சரித்தான். மன்னர் குடியிலிருந்து* முக்கியப் பிரமுகர் ஒருவர் வந்து விடவே பேச்சை முடித்துக் கொண்டு அனுமதிச் சீட்டை எனக்குக் கொடுத்தான். இப்போது புரிகிறதா என் பதற்றத்திற்கான காரணம்?"

"தோலா வழக்கரே! இப்போது என்னாகி விட்டது? திரும்பி வந்து விடுகிறேன் என்று சொல்லி விட்டுத் தானே சென்றிருக்கிறார்?"

"அவர் சென்று நீண்ட நேரமாகி விட்டது. நள்ளிரவும் தொடங்கி விட்டது. விடிவதற்குச் சில நாழிகைகளே உள்ளன. விடிந்ததும் நாம் சத்திரத்திற்குச் சென்று நீராடி விட்டு உணவை உண்டு கப்பலுக்குப் போய் விட வேண்டும். மன்னர் வரவில்லை என்றால் அவரை எங்கே என்று தேடிச் செல்வது?"

"உமது கவலை அதீதமானது. மன்னர் வந்து விடுவார். மீதமிருக்கும் உணவை உண்டு விட்டுச் சற்று உறங்குவோம்."

தோலா வழக்கன் அரை மனதோடு உணவை உண்டார். எல்லோரும் மணலில் படுத்தார்கள். அதுவரை பின்னணி இசையைப் போலக் கேட்டுக் கொண்டிருந்த அமானுஷ்ய குரல்கள் அகன்றன. பேய்கள் போனாலென்ன நாங்கள் இருக்கிறோம் என்று அறிவிப்பது போல ஆந்தைகள் குரல் கொடுக்க ஆரம்பித்தன. ஓரிரு ஆந்தைகள் வாராத அந்த மாமணிகளைப் போல வந்திருந்த நண்பர்களை வியப்புடன் பார்த்து விட்டு விழித்தன.

தோலா வழக்கன் மட்டும் உறங்கவில்லை.

பொழுது விடிந்ததே தவிர மங்கை வேந்தன் வரவில்லை.

எல்லோருக்குமே ஒரு மாதிரியாக இருந்தது.

"தோலா வழக்கரே! மன்னருக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்திருக்குமா?" என்று கேட்டார் நீர்மேல் நடப்பான்.

தோலா வழக்கர் அது வரை காட்டி வந்த பதற்றத்தை அறவே விட்டு விட்டு "மன்னருக்கு ஆபத்து வர வாய்ப்பில்லை. வந்தால் அதற்குத் தான் ஆபத்து. அவரைப் பற்றிக் கவலை வேண்டாம். சத்திரத்திற்கு நாம் போவோம். ஆக வேண்டியவற்றைப் பார்ப்போம். கப்பலுக்குப் போவோம். பொழுது விடிந்து விட்டதால் மன்னர் இங்கே வரமாட்டார். நேரே கப்பலுக்கு வந்து விடுவார். நாம் புறப்படுவோம்" என்றார்.

ஐவரும் புறப்பட்டார்கள்.

---

* இலையை மன்னார்குடி.

நீராடி உணவுண்டு தாம் பயணப்பட வேண்டிய சங்கரம் என்னும் கப்பலுக்குச் சென்று மரக்கலத் தலைவனிடம் அனுமதிச் சீட்டைக் காட்டினார்கள்.

"இன்னொருவர் எங்கே?" என்று கேட்டான் மரக்கலத் தலைவன்.

"துறைமுகத் தலைவரோடு பேசிக் கொண்டிருக்கிறார். வந்து விடுவார்" என்றார் தோலாவழக்கன்.

"இரண்டு மணிகள் அடிக்கப்பட்டு விட்டன. கடைசி மணி அடுத்த ஒரு நாழிகைக்குள் அடிக்கப் பட்டு விடும். அதற்குப் பிறகு யார் வந்தாலும் கப்பலில் அனுமதிக்கப் பட மாட்டார்கள்" என்றான் மரக்கலத் தலைவன்.

"வந்து விடுவார். துறைமுகத் தலைவரே அழைத்து பேசிக் கொண்டிருக்கும் போது பேச்சை அறுத்து விட்டு எப்படி வரமுடியும்? அதோடு கப்பல் புறப்படும் நேரம் துறைமுகத் தலைவருக்கும் தெரியுமல்லவா? அனுப்பி விடுவார்" என்றார் தோலா வழக்கர்.

அவர் நன்றாகத் தான் சமாளித்தார். ஆனால் ஒரு நாழிகைப் பொழுது கடந்து கடைசி மணியோசையும் எழுந்தது. மங்கை வேந்தன் வரவில்லை.

அவன் இல்லாமல் கப்பல் புறப்படும். ஆனால் அவன் இல்லாமல் தாம் செல்வது பயனில்லை என்பதை உணர்ந்த தோலாவழக்கர் திடீரென "நிறுத்துங்கள். நிறுத்துங்கள். கப்பல் புறப்பட வேண்டாம்" என்று பெருங்குரல் கொடுத்தார்.

கப்பல் புறப்படுவதற்காக நங்கூரங்கள் தூக்கப் பட வேண்டிய நிலையில் கூக்குரல் எழுந்ததால் மரக்கலத் தலைவன் வந்து "என்ன ஆயிற்று? எதற்காகக் கூவினீர்கள்?" என்று கேட்டான்.

"கப்பலுக்குள் பாம்புகள் புகுந்து விட்டன. ஆபத்து. கப்பலை நகர்த்தாதீர்கள்" என்றார் தோலா வழக்கர்.

"ஆமாம். ஆமாம். நாங்கள் பார்த்தோம். இரண்டு பாம்புகள். நீளமாக இருந்தன. அதோ அங்கே ஊர்ந்ததைக் கண்டோம்" என்றார்கள் நண்பர்கள்.

மரக்கலத்தலைவன் சங்கை எடுத்து ஊதினான். தூக்கவிருந்த நங்கூரங்கள் தண்ணீரிலேயே விடப் பட்டன.

மாலுமிகளை அழைத்து மரக்கலத் தலைவன் கப்பலில் பாம்புகள் நுழைந்து விட்டதாக இவர்கள் சொல்கிறார்கள்.

தேடுங்கள். அவை அழிக்கப் பட்டால் தான் கப்பல் புறப்படும்" என்றான்.

கப்பல் புறப்படுவதில் தாமதம் ஏற்படவே துறைமுகத்தின் துணைத் தலைவன் கப்பலுக்கு வந்தான்.

"ஏன் தாமதம்?" என்று வினவினான்.

"இரண்டு பாம்புகள் கப்பலில் நுழைந்து விட்டன. ஆகவே கப்பல்கள் நிறுத்தப் பட்டன" என்றான் மரக்கலத் தலைவன்.

"சரி சரி. இரண்டு பாம்புகளையும் அடித்துப் போட்டு விட்டுப் புறப்படுங்கள்."

"அது முடியாது."

"முடியாதா? யாரிடம் என்ன பேசுகிறாய்?"

"இரண்டு பாம்புகளை அடித்துப் போட்டு விட்டால் போதாது. மற்ற பாம்புகளையும் அகற்ற வேண்டும்."

"மற்ற பாம்புகளா?"

"ஆம்."

"விளங்கவில்லை."

"இப்போது வந்துள்ள பாம்புகள் எங்கிருந்து வந்தன? வானிலிருந்தா?"

"என்ன சொல்கிறாய்?"

"மரக்கலம் கரையில் ஒதுங்கும் போது பாம்புகள் வந்து அதன் அடிப்பாகத்தில் பற்றிக் கொள்ளும். மரக்கலம் கடலுக்குச் செல்லும் போது அடிப்பாகத்திலிருந்து மேலேறி கப்பலுக்கு வரும். பலரையும் கடிக்கும். இரண்டு பாம்புகள் கப்பலுக்குள் வந்ததிலிருந்து கப்பலின் அடிப்பாகத்தில் வேறு பாம்புகளும் இருக்கலாம் என்று யூகிக்க வேண்டும். அடிப்பாகத்தில் இருக்கக் கூடிய பாம்புகளையும் அழித்தபிறகு தான் கப்பலைச் செலுத்த முடியும்."

"பாம்புகளை அகற்ற எவ்வளவு நேரமாகும்?"

"இக்கப்பல் சங்கரம். மிகவும் பெரியது. யானைகளை ஏற்றிச் செல்வது. இதைச் சற்று கரைக்காக இழுத்துத் தான் அடிப்பாகத்தில் பாம்புகள் உள்ளனவா என்று பரிசோதிக்க வேண்டும். குறைந்தது ஆறு நாழிகை நேரமாகும்."

"சரி சரி! சீக்கிரமாக முடியுங்கள். உன் கப்பல் நகராமல் இதர கப்பல்கள் நகரமுடியாது" என்று கூறிவிட்டுச் சென்றான் துறைமுகத்தின் துணைத் தலைவன்.

பாம்புகள் கப்பலின் அடிப்பாகத்தில் ஒட்டிக் கொண்டு கப்பல் புறப்படும் போது மேலேறி வருவது எப்போதாவது நிகழும் விஷயம் என்றாலும் அலட்சியப் படுத்துவதற்கில்லை. ஒரு பாம்பு நுழைந்தாலும் பலர் உயிரிழக்க நேரிடும்.

அதுவும் மிகப் பெரிய சங்கரம் கப்பலில் ஏராளமான சரக்குகள் ஏற்றப் பட்டிருந்ததால் அதற்கிடையில் புகுந்து விட்ட பாம்பை அழிப்பது லேசான காரியமல்ல. எனவே பரதவர்களும் பாம்பாட்டிகளும் வரவழைக்கப்பட்டு காரியங்கள் வேகமாக நடந்தன.

மங்கை வேந்தன் உரிய நேரத்தில் வந்து சேராததால் கப்பலின் இயக்கத்தைத் தாமதிக்கவே தோலாவழக்கன் பாம்புப் புரளியைக் கிளப்பி விட்டிருந்தார். அதிஷ்டவசமாக கப்பலில் பாம்பு ஒன்று உண்மையாகவே பிரவேசித்திருந்ததால் அது கண்டு பிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டது. நல்லவேளையாக கப்பலின் அடிப் பாகத்தில் பாம்புகள் எதுவும் ஒட்டிக் கொண்டிருக்கவில்லை என்று பரதவர்களும் பாம்பாட்டிகளும் உறுதி செய்தார்கள்.

இதெல்லாம் நடந்து முடிய பத்து நாழிகை நேரம் ஆகி விட்ட நிலையில் மங்கை வேந்தனும் கப்பலுக்கு வந்து சேர்ந்து விட்ட படியால் தோழர்கள் பெருமூச்சு விட்டார்கள். கப்பல் புறப்படும் வரை மங்கை வேந்தன் யாருடனும் பேசவில்லை.

கப்பல் சங்கொலி எழுப்பி புறப்பட்டு ஒரு நாழிகை ஆன பின்பே பேசினான்.

மங்கை வேந்தனை நெருங்கிய தோலா வழக்கன் "மன்னர் இப்படி இதுவரை நடந்து கொண்டதில்லையே" என்று கேட்டு விட்டு அருகில் பார்த்தபோது அதிர்ந்து போனார்.

"மன்னவா! இதென்ன? உடம்பில் ரத்த காயம் ஏற்பட்டிருக்கின்றதே! என்ன ஆயிற்று?" என்று பதற்றத்துடன் கேட்டார்.

இதர தோழர்களும் அதிர்ந்தார்கள்.

"நாகைக்கு வந்ததும் நாகானன விஹாரத்தைப் பார்க்க வேண்டும் என்று தோன்றியது. அதனால் தான் பேய்க்குளப் பகுதியிலிருந்து புறப்பட்டுச் சென்றேன். விஹாரத்தைப் பார்வையிட்ட போது அதற்குள் பொற்சிலை இருக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை. ஒரு சிலரிடம் பேச்சு கொடுத்தபடி இருந்தேன். அப்போது சிற்பி தசவதனன் அங்கே வந்தான். புத்தர் சிலை இருப்பது பற்றி நம்மிடம் சொன்னவன் அவன். என்னைப் பார்த்ததும் புத்தர் சிலை விஷயமாகத் தனக்குச் சிலத் தகவல்கள்

கிடைத்துள்ளதாகத் தெரிவித்து அதைச் சொல்வதற்காக என்னை வெகுதூரத்திற்கு அழைத்துச் சென்றான். சென்ற பிறகு தான் அந்த இடம் நாகர்கள் மிகுதியாக வாழும் நாகூர்* என்பது தெரிந்தது. அங்கே ஓரிடத்திற்கு அழைத்துச் சென்றான். அங்கு எதிர்பாராத விதமாக அவனோடு சிலர் சேர்ந்து கொண்டு என்னைத் தாக்கினார்கள். தங்கச் சிலையைக் கடத்தும் முயற்சியில் தன்னை கைவிட்டு விட்டதற்காகக் கோபம் கொண்டு என்னைத் தீர்த்துக் கட்டவே நாகூருக்கு அழைத்து வந்ததாகக் கூறித் தாக்கினான் தசவதனன். என்னிடம் ஆயுதம் எதுவுமில்லை. அவர்களோ கட்டைகளை வைத்திருந்தார்கள். இருப்பினும் எனக்குத் தெரிந்த வர்ம அடிகளைப் பிரயோகித்து அவர்களை வீழ்த்தினேன். அவர்கள் கட்டைகளால் தாக்கியதால் எனக்குப் பல இடங்களில் காயம் ஏற்பட்டது. அங்கிருந்து மீண்டும் நாகைக்கு வந்து காயங்களுக்கு மருந்திட்டு விட்டு இங்கே வருவதற்குத் தாமதமாகி விட்டது" என்றான் மங்கை வேந்தன்.

"தங்களை அரங்கன் காப்பாற்றி விட்டான். இருப்பினும் இலங்கை சென்றடையும் வரை என்னைத் தவிர வேறுயாரும் பேசவேண்டாம். செயல்பட வேண்டாம்" என்றார் தோலா வழக்கன்.

அப்போது நீர்மேல் நடப்பான் யாரையோ உற்றுப் பார்த்தார்.

"நமக்குப் போட்டியாக அவனும் வந்துவிட்டான்" என்றார்.

★★★



கடற்பயணம்

"யார் அது?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"மகா தேரன் என்ற பொய்யைச் சொல்லிக் கொண்டு இங்கே இருந்த பௌத்தர்களை ஏமாற்றி வந்தவன். பிக்குணியான தேரியைக் கொன்றவன். நாகர் தீவைச் சேர்ந்த நாகர் குலத்தவன். தேரியிடம் நாகானன விஹாரத்தில் அமைந்துள்ள யந்திர சூட்சுமத்திற்கு உரிய சிற்பி இலங்கையில் இருக்கிறான் என்பதை அறிந்து கொண்டு அச் சிற்பியைக் கண்டு பிடிக்க இலங்கைக்குப் புறப்பட்டிருக்கிறான். நாமும் அதற்காகத் தான் செல்கிறோம் என்பது அவனுக்கோ அவனோடு இருக்கும் பௌத்த பிட்சுக்களுக்கோ தெரிய நியாயமில்லை" என்றார் நீர்மேல் நடப்பான்.

மங்கை வேந்தன் தோலா வழக்கனைப் பார்த்து "இக்கப்பலில் பயணம் செய்து நாம் போய்ச் சேர வேண்டிய இடம் எது?" என்று கேட்டான்.

"திரிகோணமலை."

"அது இலங்கையின் கிழக்குப் பகுதியில் அல்லவா இருக்கிறது? நாம் அங்கே தான் போக வேண்டுமா? மணிபல்லவம் என்னும் வடக்கு முனையிலேயே* இறங்கிக் கொள்ளலாம் அல்லவா?"

"நாம் பயணம் செய்யும் கப்பல் சங்கரம் என்ற வகையைச் சேர்ந்தது.மிகவும் பெரியது.எடையும் அதிகம்.மணிபல்லவப் பகுதி சமீபகாலங்களில் மண் மேடிட்டுப் போனதால் பெரிய கப்பல்கள் அங்கே போக முடியாது. கிழக்கே உள்ள திரிகோணமலைத் துறைமுகத்திற்குத் தான் செல்லும். அது சர்வதேசத் துறைமுகம். மலையானது மூன்று பிளவுகளை உருவாக்கி இயற்கைத் துறைமுகமாக மாற்றியிருக்கிறது. சர்வதேசக் கப்பல்கள் எல்லாம் அங்கே பிரவேசிக்க முடியும். அது மட்டுமல்ல."

"வேறென்ன?"

---

* இன்றைய யாழ்ப்பாணம்.

"நாகைப் பட்டினத்தில் நான் ஒரு விஷயத்தைக் கேள்விப் பட்டேன். திரிகோணமலையில் சிற்பிகள் நிரம்ப இருக்கிறார்களாம்."

"இக்கப்பல் எப்போது திரிகோணமலைக்குப் போகும்?"

"திட்டமிட்டபடி கிளம்பியிருந்தால் இன்று இரவு போயிருக்கும். பல நாழிகைகள் தாமதமாகி விட்டதால் நாளைக்குப் பொழுது நன்றாக விடிந்து விட்ட பிறகுதான் செல்லும்."

"நாம் செல்வது சரக்குக் கப்பலா?"

"ஆம் மன்னவா"

"என்ன சரக்குகள் இருக்கின்றன?"

"மிளகுப் பொதிகள் அதிகமாக இருப்பதாகக் கேள்விப் பட்டேன்."

"இக்கப்பலில் எத்தனை பேர் இருப்பார்கள்?"

"நம்மைப் போன்ற வணிகர்கள், தரகர்கள், மாலுமிகள், பணியாளர்கள், புத்த பிட்சுக்கள், மற்றும் மரக்கலத் தலைவன் என்று நூறு பேர் இருப்பார்கள்."

"நாம் சரக்குகள் எதையாவது கொண்டு செல்கிறோமா?"

"இல்லை. இலங்கையிலிருந்து சரக்குகளைக் கொண்டு வரும் வணிகர்களாகச் செல்கிறோம்."

"தோலா வழக்கா! நமக்குப் போட்டியாக வந்திருக்கும் நாக நாட்டவனை நீயும் நீர்மேல் நடப்பானும் கண்காணியுங்கள். நாங்கள் இதர வணிகர்களிடம் பேசிப் பார்க்கிறோம்" என்றான் மங்கை வேந்தன்.

தோலா வழக்கனும் நீர்மேல் நடப்பானும் வணிகர்கள் வேடத்தில் இருந்தார்கள். இருவரும் போலித் துறவி சிபிசோரன் இருந்த இடத்திற்குச் சென்றார்கள். சிபிசோரன் சரக்குப் பெட்டிகள் அடுக்கி வைக்கப் பட்டிருந்த இடத்தில் அமர்ந்து கொண்டிருக்க அவனுக்கு முன்னால் பிட்சுகளும் வணிகர்கள் சிலரும் அமர்ந்திருந்தார்கள். சிபிசோரன் மகாதேரனைப் போலவே சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தான்.

"மகான் புத்தர் மட்டும் அவதரிக்காமல் இருந்திருந்தால் அஹிம்சை என்ற வார்த்தை தெரியாமலேயே போயிருக்கும். இந்த உலகமே கொலைக்களமாக ஆகியிருக்கும். மனித இனம் செய்த பாக்கியத்தால் தான் மகான் புத்தர் பூவுலகில் அவதரித்து

அஹிம்சையைப் போதித்தார். கலிங்க நாட்டை வென்று கலிங்கப் போரில் லட்சக் கணக்கான வீரர்களைக் கொன்று குவித்த மாமன்னர் அசோகர் அந்தப் போரையே தனது கடைசிப் போராக வைத்துக் கொண்டார் என்றால் அதற்கு என்ன காரணம்? மகா வெற்றியைப் பெற்ற மன்னர்கள் மேன்மேலும் போர்களை நடத்தி கொலை வெறியைத் தான் தொடர்ந்திருக்கிறார்கள். ஆனால் உலகமே வியக்கும் மாவெற்றியைப் பெற்ற அசோகச் சக்கிரவர்த்தி மட்டும் போரை நிறுத்திக் கொண்டது எப்படி? புத்தரின் அஹிம்சைக் கொள்கை தான் அவரை மாற்றியது."

சிபிசோரன் இவ்வாறு கூறியபோது தோலா வழக்கரைப் பார்த்த நீர்மேல் நடப்பான் "இங்கே பேசுபவனும் விவரம் தெரியாதவன். கேட்கிறவர்களும் விவரம் தெரியாதவர்கள். ஆகவே தான் இந்தப் போலித்துறவி தவறான தகவலைச் சொல்கிறான். அஹிம்சைக் கொள்கையானது புத்தருக்கு முன்னே தோன்றிய மகாவீரரது காலத்திலேயே உருவாகி விட்டது. அசோகரின் தந்தையார், பாட்டனார், அவருக்கு முன்னோர் காலத்திலேயே அஹிம்சைக் கொள்கை மக்களிடையே பரவி விட்டது" என்றார்.

சிபிசோரன் தொடர்ந்து பேசமுற்பட்டு "ஆசை என்னும் கொடிய வார்த்தையை ஞான ஒளியின் மூலம் கண்டறிந்தவரும் மகான் புத்தர் தான். மக்களின் துயரங்களுக்குக் காரணம் ஆசை என்பதும் துயரங்களுக்கான மாமருந்து ஆசையறுதல் என்றும் சொன்னவர் அவர். அவரது மருந்தை மக்கள் ஏற்றுக் கொண்டிருந்தால் இப்பூவுலகில் ஒருவர் கூடத் துயரத்தில் இருக்க மாட்டார்கள். மனிதன் மட்டமானவன். உள்ளங்கையில் மருந்தை வைத்துக் கொண்டு அது எங்கே என்று தேடிக் கொண்டு அலைவான். பாரத நாட்டு மக்கள் - குறிப்பாக பௌத்தர்கள் அப்படித் தான் ஆகிப் போனார்கள். ஆனால் இலங்கையில் அப்படி இல்லை. பௌத்தம் இலங்கையில் தான் வாழ்கிறது. தழைக்கிறது. அது பௌத்த நாடாகப் பூரணமாக ஒளி வீசிக் கொண்டிருக்கிறது" என்றாள்.

"இதுவும் தவறான தகவல் தான் தோலா வழக்கரே. இலங்கையானது தற்போது புத்த நாடாக இல்லை. பாரத நாட்டைப் போலத்தான் இருக்கிறது. இலங்கையை ஆளும் மன்னர்கள் அஹிம்சையைக் கடைப் பிடிக்கவில்லை ஆசையை விட வில்லை. அவர்கள் கொலைகள் மூலம் தான் அரியணையைக் கைப்பற்றினார்கள். புத்தருக்கு விஹாரங்களை அமைத்தார்களே தவிர அவர்களின் மனம் விகாரமாகவே இருந்தது. புத்தத் துறவிகள் கூட ஆசையை விட வில்லை. அதிகார மையங்கள் மீது மையல் கொண்டு அலைகிறார்கள்" என்றார் நீர்மேல் நடப்பான்.

சிபிசோரனோ எதைப் பற்றியும் கவலைப் படாமல் தவறுதலான தகவல்களையே சொல்லிக் கொண்டிருந்தான் கேள்வி கேட்பதற்கு ஆளில்லாததால்.

இதே நேரத்தில் மங்கை வேந்தனும் தோழர்களும் இதர வணிகர்களிடம் பேச்சுக் கொடுத்தார்கள்.

"தமிழ் நாட்டிலிருந்து மிளகை இலங்கைக்குக் கொண்டு போகிறீர்களே! மலைநாடான இலங்கையில் மிளகு விளைய வில்லையா?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"நீங்கள் வாணிபத்திற்குப் புதியவர்களா?" என்று கேட்டார்கள் வணிகர்கள்.

ஒரு கேள்வியிலேயே தங்களை அடையாளம் தெரிந்து கொண்ட வணிகர்களைக் கண்டு வியந்த மங்கை வேந்தன் வியப்பை மறைத்துக் கொண்டு "ஆமாம்" என்றான்.

"அதனால் தான் இப்படிக் கேட்கிறீர்கள். ஐயா! தென்னிலங்கையில் ஏராளமான மிளகுகள் உண்டாகின்றன. ஆனால் தென்னிலங்கைக்கும் வட இலங்கைக்கும் ஒரே ஆட்சி நடைபெறவில்லை. சிங்களர்கள் இரண்டாகப் பிரிந்து ஆண்டு வருகிறார்கள். ஆகவே தென்னிலங்கையில் விளையும் மிளகுகளை வட இலங்கைக்கு விற்கும் போது இரண்டு மடங்கு விலை யக் கேட்கிறார்கள். ஆனால் சேரநாட்டில் விளையும் மிளகிற்கு அவ்வளவு விலை இல்லை. ஆகவே வட இலங்கையில் உள்ளவர்கள் அவற்றைத் தமிழகத்திலிருந்து பெற்றுக் கொள்கிறார்கள்" என்றார்கள் வணிகர்கள்.

"நீங்கள் கொண்டு செல்வது சேர நாட்டு மிளகுகளா?"

"ஆமாம்"

"சேரநாட்டிலிருந்து நாகைக்குக் கொண்டு வந்து அங்கிருந்து இலங்கைக்குக் கொண்டு சென்று குறைவான விலையில் விற்கிறீர்களே? லாபம் எப்படிக் கிடைக்கும்?"

"நாங்கள் குறைவான விலையில் விற்கவில்லை. உரிய விலையில் விற்கிறோம். ஆகவே அதிகமாக வாங்குகிறார்கள். சுங்கவரியை அவர்களே செலுத்துகிறார்கள். ஆகவே லாபம் தான். சாதாரணமாக இந்தச் சங்கரம் கப்பலில் யானைகளும் புரவிகளும் தான் செல்லும். வாரத்திற்கு ஒரு முறை மிளகுகள் செல்லும். அதிலிருந்து எவ்வளவு மிளகு கப்பலில் செல்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்."

"இவற்றைத் திரிகோணமலையிலேயே விற்று விடுவீர்களா?"

"எங்களோடு தரகர்கள் வருவார்கள். திரிகோண மலையில் அவர்கள் சரக்குகளை வியாபாரிகளிடம் மொத்தமாக விற்று விடுவார்கள். சரக்குகள் பிரிக்கப் பட்டு மட்டக் களப்பு, மசிந்தலை, அனுராதபுரம் ஆகிய நகரங்களுக்குக் கொண்டு செல்லப்படும்."

"திரிகோணமலை பெரிய நகரமா?"

"ஆமாம். இலங்கையின் கிழக்குக் கரையோரத்தில் திரிகோண மலைதான் பிரதான துறைமுகம். சுவதேசி வணிகர் என்னும் உள்நாட்டு வணிகர்களும், பரதேசி வணிகர் என்னும் வெளி நாட்டு வணிகர்களும், நானாதேசி வணிகர் என்னும் பன்னாட்டு வணிகர்களும் சங்கமிக்கும் இடம் திரிகோணமலை. பாரத நாட்டிலிருந்தும், சீனம் போன்ற கீழ்த்திசை நாடுகளிலிருந்தும், அரேபியா, எகிப்து, ரோமாபுரி ஆகிய மேலை நாடுகளிலிருந்தும் பல்வேறு சரக்குகள் இங்கு வந்து திசைமாறிச் செல்கின்றன."

"நல்ல தகவல்களையெல்லாம் சொன்னீர்கள் ஐயா. திரிகோணமலை எதற்குச் சிறப்பு வாய்ந்தத?"

"வணிகத்திற்குத் தான்."

"அங்கே புத்த விஹாரங்கள் நிறைய உள்ளதாமே?"

"ஒரு காலத்தில் புத்த விஹாரங்களும் சிவாலயங்களும் நிரம்ப இருந்தன. அவ்வப்போது நடைபெறும் சச்சரவுகளால் பல இடிக்கப்பட்டுத் தரைமட்டமாகி விட்டன. தற்போது திருகோண மலைநாதர் விஹாரமும், திருகோணேஸ்வரம் ஆலயமும் நல்ல நிலையில் உள்ளன."

"திரிகோணமலையில் சிற்பிகள் நிரம்ப இருப்பதாகச் சொன்னார்கள். அது உண்மையா?"

"உண்மைதான். ஆதியிலிருந்து திரிகோண மலையானது தட்சிண கைலாயம் என்று கருதப்பட்டு வந்ததால் கைலாயத்தைப் போல மிகப்பெரிய ஆலயத்தையும், ராஜ விஹாரத்தையும் உருவாக்க நிறைய சிற்பிகள் இங்கே வந்தார்கள். ஆனால் அரசியல் காரணமாக அந்த ஆலயக் கட்டுமானங்கள் நடைபெறவில்லை. இருப்பினும் சிற்பிகள் இங்கே குடியமர்ந்து விட்டார்கள். இங்கே இருந்து இதர இடங்களுக்குச் சென்று வருகிறார்கள்."

மங்கை வேந்தன் அதோடு பேச்சை நிறுத்திக் கொண்டான். திரிகோணமலையில் சிற்பிகள் இருக்கிறார்கள் என்ற செய்தி உறுதி செய்யப் பட்டதால் அதுவே ஆறுதலாக இருந்தது.

கப்பலின் தளத்திற்கு வந்தபோது படீரென பெரும் சத்தம் ஒன்று எழுந்தது. கடலில் சற்றுத் தூரத்தில் கப்பல் ஒன்று

வெடித்துச் சிதறிக் கொண்டிருந்தது. திடுக்கிட்டான் அவன். வெடித்த கப்பலிலிருந்து தூக்கி எறியப் பட்டவர்கள் தானிருந்த கப்பலை நோக்கி நீந்தியபடி வந்து கொண்டிருந்தார்கள்.

அக்காட்சியைக் கண்டு மங்கை வேந்தன் அதிர்ந்து போன நிலையில் வணிகர்கள் சிரித்தார்கள்.

குழம்பிப் போன மங்கை வேந்தன் "இதென்ன சிரிக்கிறீர்கள்? கப்பல் வெடித்துச் சிதறுவது சிரிப்பிற்குரிய காரியமா?" என்று வினவினான்.

வணிகர்கள் மேலும் சிரிக்கவே "என்ன ஆயிற்று அக்கப்பலுக்கு?" என்று கேட்டான்.

"வயிறு உப்பி விட்டது. வெடித்து விட்டது" என்றார்கள் வணிகர்கள்.

"என்ன சொல்கிறீர்கள்?"

"ஐயா! அந்தக் கப்பலில் முட்டாள் வணிகர்கள் அளவுக்கு அதிகமாக கோதுமை மாவு மூட்டைகளை ஏற்றியிருக்கிறார்கள். வழியில் மழை பெய்திருக்க வேண்டும். மழை நீர் மாவில் கலந்து உப்ப வைத்து விட்டது. மாவு உப்பியதால் கப்பல் வெடித்துச் சிதறிவிட்டது" என்றார்கள் வணிகர்கள்.

"இப்படியொரு அபாயம் நடக்கும் என்று அவர்களுக்குத் தெரியாதா?"

"கடல் பயணமே அபாயகரமானது தான். எந்த நேரத்தில் என்ன நடக்கும் என்று சொல்ல முடியாது. ஆகவே எந்த ஆபத்திற்கும் தயாராக இருப்பவர்கள் தான் கடலில் பயணம் செய்வார்கள். வெடித்த கப்பலில் பயணம் செய்தவர்கள் அநேகமாக நாகர்தீவைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள். கோதுமை மாவை எங்காவது திருடியிருப்பார்கள். அவசரம் அவசரமாக அந்தச் சிறிய கப்பலில் ஏற்றியிருப்பார்கள். மழை நீரிலிருந்து பாதுகாக்கும் ஏற்பாடுகளைச் செய்யாமல் அலட்சியமாக வந்திருப்பார்கள். அலட்சியம் அவர்களைப் பழி வாங்கிவிட்டது."

"அவர்கள் நாமிருக்கும் கப்பலை நோக்கி நீந்தி வருகிறார்களே?"

"நமது கப்பல் அருகில் இருப்பதால் இதில் ஏறிக் கொள்ள வருகிறார்கள்."

"நமது கப்பல் இல்லையென்றால்?"

"அவர்களால் நீண்ட தூரம் நீந்த முடியும். கடல் பாதையை அவர்கள் அறிவார்கள். அதற்குப் பக்கத்தில் வந்து விட்டால் ஏதாவது ஒரு கப்பல் கண்ணில் படும். அதில் ஏறிக் கொள்வார்கள்."

"அவர்களை நமது கப்பலில் இருக்கும் தலைவன் அனுமதிப்பானா?"

"அது அவனது விருப்பம்."

வணிகர்கள் இவ்வாறு சொல்லிக் கொண்டிருக்கும் போதே மரக்கலத் தலைவன் தளத்திற்கு வந்தான். மாலுமிகளை அழைத்து "நீந்தி வருபவர்களை அம்பெய்து கொல்லுங்கள்" என்று உத்தரவிட்டான்.

அதையடுத்து பத்து மாலுமிகள் அம்புகளை எய்தத் தொடங்கியதும் நீந்தி வந்தவர்கள் ஒருசிலர் கொல்லப் பட்டார்கள்.

அப்போது பிட்சு கோலத்திலிருந்த சிபிசோரன் அங்கு வந்து மரக்கலத் தலைவனைப் பார்த்து "இது அதர்மம். அநியாயம். நடுக்கடலில் விபத்திற்கு உள்ளாகி அடைக்கலம் தேடி வருபவர்களைக் கொல்லாதீர்கள். நான் மகாதேரன். நான் சொல்வது மகான் புத்தரின் நெறி. அவர்களைக் காப்பாற்றுங்கள்" என்றான்.

"துறவியாரே! நில நீதி வேறு. நீர் நீதி வேறு. நிலத்தில் செயல்படுவது போல நீரில் செயல்பட முடியாது. நீந்தி வருபவர்களையெல்லாம் ஏற்றிக் கொண்டால் கப்பல் தாங்காது. மூழ்கி விடும். கடல் பயணத்தில் இரக்கம் காட்டத் தொடங்கினால் ஆபத்து தான் விளையும்" என்றாள் மரக்கலத் தலைவன்.

"மகான் புத்தர் காப்பாற்றுவார். என் பேச்சைக் கேள்" என்றான் சிபிசோரன்.

"உங்களுக்குச் சொன்னால் புரியாது. அனுபவப் பட்டால் தான் புரியும். உங்கள் புத்தர் கூட இதை உணர்ந்ததால் தான் பாரத நாட்டிலிருந்து இலங்கைக்கு வான்வழி மூலம் வந்தார்" என்று சொல்லி மாலுமிகளை அகலச் சொன்னான் மரக்கலத் தலைவன்.

அதன் விளைவு....

★★★



மருதி

மரக்கலத் தலைவன் மாலுமிகளை விலகச் சொன்னபோது சிபிசோரன் பேசமுற்பட்டு "அவர்கள் ஏறி வருவதற்கு நூலேணிகளை வீச வில்லையா?" என்று கேட்டான்.

மரக்கலத் தலைவன் அவனது பேச்சை சட்டை செய்யவில்லை.

வணிகர்கள் சிபிசோரனின் உண்மைச் சொரூபத்தை அறியாததால் "துறவிக்குரிய கருணையே கருணை" என்று பேசிக் கொண்டார்கள்.

"பார்த்தீர்களா தோலா வழக்கரே. கருணை என்றால் என்னவென்றே அறியாதவன் கருணைமானைப் போல் அற்புதமாக நடிக்கிறான் பாருங்கள்" என்றான் நீர்மேல் நடப்பான்.

"நீங்கள் புத்தபிட்சுவாக நடிக்க வில்லையா? பௌத்தர்களால் உங்களைச் சந்தேகிக்க முடிந்ததா? அதோடு பிட்சுவாக வேடம் போட்ட நீங்கள் புத்தரைப் பற்றி நன்றாகத் தெரிந்து கொண்டு பௌத்தர்களுக்கு முன்னால் பிழையில்லாமல் பேசினீர்கள். சிபிசோரனோ தப்புப் தப்பாகப் பேசினான். புத்தரைப் பற்றிச் சரிவரத் தெரிந்து கொள்ளாமல் பேசினான். ஆகவே உங்கள் இருவரில் உங்களுக்குத் தான் அதிக மதிப்பெண்கள்" என்றார் தோலா வழக்கர்.

இதற்கிடையில் நீந்தி வந்தவர்கள் நூலேணியை எதிர்நோக்கிக் காத்திருக்கவில்லை. குரங்குகளைப் போல மரக்கலத்தின் ஒரு முனையின் பக்கத்தில் தொற்றி ஏறினார்கள். அவர்கள் ஏறுவதற்கு ஏதுவாக மரக்கலத்தின் வேகம் குறைக்கப் பட்டது. சாமர்த்தியமாக முதலில் இருந்தவர்கள் கப்பலில் இருந்த கயிறுகளை வீசி மற்றவர்களை இழுத்து மேலே ஏற்றப் பட்டார்கள். சுமார் முப்பது பேர் மேலேறி வந்தார்கள்.

"தோலா வழக்கரே! சிபி சோரன் உண்மையான பிட்சுவாக இருந்தால் பிளந்த கப்பலிலிருந்து வந்தவர்களை நமது கப்பலில் ஏற்றிக் கொள்ளும் படி வேண்டிக் கொண்டதில் அர்த்தம்

இருக்கும். அவனோ போலி. அவனுக்கு எதற்கு இந்த வேண்டாத வேலை? அவர்கள் எப்படிப் போனால் இவனுக்கென்ன? எதற்காகப் கருணை காட்டினான்? எங்கோ இடிக்கிறதே!" என்று கேட்டார் நீர்மேல் நடப்பான்.

"உண்மைதான். எனக்கும் இது பிடிபடவில்லை" என்றார் தோலா வழக்கர்.

இந்த நிலையில் மரக்கலத் தலைவனின் அறையில் ஏதோ சத்தம் கேட்டது.

வணிகர்களும் மங்கை வேந்தனின் தோழர்களும் அங்கே சென்றார்கள்.

அங்கே அவர்கள் கண்ட காட்சி அதிர்ச்சியூட்டுவதாக இருந்தது.

உள்ளே மரக்கலத் தலைவனைக் கத்தி முனையில் மிரட்டிக் கொண்டிருந்தாள் ஒரு பெண். அவளுக்குப் பின்னால் சிலர் நின்றிருந்தார்கள். எல்லோரும் முழுவதுமாக நனைந்திருந்ததால் வெடித்துச் சிதறிய கப்பலிலிருந்து வந்தவர்களாகத் தான் இருக்க வேண்டும் என்பது வணிகர்களுக்குத் தெரிந்தது.

"அங்கே என்ன பிரச்சனை? நீங்கள் யார்?" என்று கேட்டார்கள் சில வணிகர்கள்.

ஆனால் அவர்களை யாரும் சட்டை செய்ய வில்லை.

குறுவாளை ஊட்டியில் வைத்து மிரட்டிக் கொண்டிருந்த பெண் மரக்கலத் தலைவனிடம் "ஷ். சீக்கிரம். கப்பல் செல்லும் திசையை மாற்று. கப்பலை நாகர் மலைத் தீவை நோக்கிச் செலுத்து" என்று உறுதியான குரலில் கூறினாள்.

வணிகர்கள் மறுபடியும் ஏதோ பேச முற்பட்ட போது அப்பெண்ணோடு வந்திருந்தவர்கள் அவர்களைத் தாக்க முற்பட்டார்கள்.

"யாராவது சத்தம் போட்டால் உயிர் போய் விடும்" என்று மிரட்டவும் செய்தார்கள்.

மரக்கலத் தலைவன் தனது கோபத்தைக் காட்டி "இப்படி ஏதாவது நடக்கும் என்று எனக்குத் தெரியும். அந்த புத்த சன்யாசியால் வந்த வினை" என்று அலுத்துக் கொண்டான்.

"என்ன புலம்புகிறாய்? யாரது புத்த சன்யாசி?" என்று கேட்டாள் இளம்பெண்.

"யாரா? என் கெட்ட நேரத்திற்குப் பெயர் தான் சன்யாசி. உங்களையெல்லாம் அம்பெய்திக் கொல்லச் சொன்னேன். அந்த சன்யாசி தான் அதர்மம் அநீதி என்று சொல்லி என்னைக் கெடுத்தான். அதன் விளைவு தான் நீ. இதோ பார் பெண்ணே. நீ யாராக இருந்தாலும் சரி. கப்பல் இலங்கைத் தீவை நெருங்கும் நிலையில் இருக்கிறது. இந்த நிலையில் இதை நாகர்மலைத் தீவுக்குத் திருப்ப முடியாது" என்றான் மரக்கலத் தலைவன்.

"அந்தக் கதையை எல்லாம் என்னிடம் விடாதே. இலங்கையை அடைய பொழுது விடியும் நேரமாகும். ஆகவே கப்பலைத் திருப்பு" என்றாள் அவள்.

அறையில் காட்சி மாறியிருந்த இந்த நிலையில் வணிகர்கள் எதுவும் செய்ய முடியாமல் நின்றார்கள்.

மங்கை வேந்தனும் மற்றவர்களும் கவனித்துக் கொண் டிருந்தார்களே தவிர எந்த முயற்சியிலும் இறங்கவில்லை.

அந்த நிலையில் "இங்கே என்ன ரகளை?" என்று கேட்டபடி அங்கே பிரவேசித்தான் சிபிசோரன்.

உள்ளே மிரட்டிக் கொண்டிருந்த பெண்ணைக் கண்டதும் பேரதிர்ச்சியடைந்த சிபிசோரன் "நீயா?" என்றான்.

மரக்கலத் தலைவன் சிபிசோரனைப் பார்த்து "நான் சொன்னேனே கேட்டீர்களா? இரக்கப்பட்டு மரக்கலத்தில் ஏற்றிக் கொள்ளச் சொன்னீர்கள். இப்போது இவள் மரக்கலத்தை நாகர் மலைத் தீவுகளுக்கு மாற்றிச் செலுத்தும் படி மிரட்டுகிறாள். என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்டு விட்டு "உங்களுக்கு இவளைத் தெரியுமா?" என்று கேட்டான்.

பல்வேறு உணர்ச்சிகளுக்கு ஆளாகியிருந்த சிபிசோரன் "மரக்கலத் தலைவரே! நீங்கள் சற்று வெளியே இருங்கள். இவளை நான் விசாரிக்கிறேன்" என்றான்.

மரக்கலத் தலைவன் அப்பெண்ணை ஒருமுறை முறைத்து விட்டு அறையை விட்டு வெளியேறினான்.

அவன் போனதும் கதவைச் சாத்தித் தாளிட்ட சிபிசோரன் அங்கிருந்த ஆசனத்தில் அமர்ந்து கொண்டு "உன்னை இங்கே இப்படி எதிர்பார்க்கவில்லை" என்றான்.

"வேறு எங்கே எப்படி எதிர்பார்த்தீர்கள்?" என்று கேட்டாள் அவள் "எனக்கு வேறு ஆடையைக் கொடுங்கள் முதலில் இந்த உடையுடன் எவ்வளவு நேரம் நிற்பது?" என்றாள்.

"இவ்வளவு நேரமாக வெட்கமில்லாமல் தானே நின்றாய்? இப்போது என்ன வந்து விட்டது?" என்று கேட்டான் சிபிசோரன்.

"குளிர் உயிரை வாங்குகிறது. அதனால் தான் வேறு உடையைக் கேட்டேன்" என்றாள் அவள்.

"அதுதானே பார்த்தேன்! உனக்கும் வெட்கத்திற்கும் தூரம் அதிகம் என்பது எனக்குத் தெரியாதா?" என்று கேட்ட சிபிசோரன் "உனக்கேற்ற ஆடை இங்கே இல்லை" என்றான்.

"நானென்ன அழகிப் போட்டிக்கா போகப் போகிறேன்? கப்பல் தலைவனின் அங்கிகள் இருக்கும் அவற்றை எடுங்கள்" என்று சொன்ன அவள் அவனுக்காகக் காத்திராமல் அறையை அலசினாள். அங்கிருந்த அங்கிகளை எடுத்து, ஈர உடைகளைக் களைந்து விட்டு அணிந்து கொண்டாள்.

ஆடை பொருத்தமாக இல்லாவிட்டாலும் அவளுக்கு அது புதிய அழகைத் தந்திருந்தது. அவளது உச்சி முதல் உள்ளங்கால் வரை அனைத்தும் அவன் ஆண்டு அனுபவித்தது தான் என்றாலும் தற்போது புதியதாகத் தோன்றி மருட்டின.

உணர்ச்சிகளை அடக்கிக் கொண்ட அவன் "இங்கு எதற்காக வந்தாய்?" என்று கடிந்து கொண்டான்.

"என்ன செய்யச் சொல்கிறீர்கள்? நாகப் பட்டினத்து அரசனாக அணிமுடியோடு வருவதாகச் சொல்லி விட்டுச் சென்றீர்கள். ஆறு மாதங்கள் ஆயிற்று. ஆறுதல் செய்தி கூட வரவில்லை? அதோடு நாகர்மலைத் தீவில் கலவரம் உண்டாகி விட்டது. அங்கே காலம் தள்ள முடியாததால் படகில் புறப்பட்டோம். அப்போது தான் ஒரு கப்பல் எங்கள் கண்ணில் பட்டது. அதில் இருக்கும் சரக்கு விலை மதிக்க முடியாததாக இருக்கும் என்று எண்ணி அதைத் தாக்கிப் பிடித்தோம். அதில் இருந்தவர்களைக் கொன்று கடலில் எறிந்தோம். அதற்குப் பிறகு கவனித்த போது தான் அக்கப்பலில் இருந்தது கோதுமை மாவு என்பதை அறிந்தோம். ஏமாற்றமாக இருந்தது. அந்த நிலையில் ஒருநாள் முழுவதும் மழை பெய்தது. மழைநீரில் மாவானது பெருத்தது. அழுத்தம் தாளாமல் கப்பல் வெடித்தது. பிறகு நடந்ததை நீங்கள் பார்த்திருப்பீர்கள். நீங்கள் எப்படி இக்கப்பலில் வந்தீர்கள்" என்று கேட்டாள் அவள்.

"அது இருக்கட்டும். இங்கு வந்தபின் மரக்கலத் தலைவனிடம் கப்பலை நாகர் மலைத் தீவை நோக்கிச் செல்லும் படி மிரட்டினாயே! உன் திட்டம்?" என்று கேட்டான் சிபிசோரன்.

"கப்பலில் ஏராளமான மிளகு மூட்டைகள் இருப்பதாகச் சொன்னார்கள். மிளகு நல்லவிலை போகும் என்பதால் கப்பலை நாகர்மலைக்குச் செல்லும் படிச் சொன்னேன்" என்றாள் அவள்.

"இதோ பார் மருதி. மிளகுப் பொதிகள் விலை உயர்ந்தது தான் என்றாலும் அதை விட விலை உயர்ந்த ஒரு விஷயம் இருக்கிறது. அதனால் தான் இந்தக் கப்பலுக்கு நான் வந்தேன்."

"அப்படியென்ன அபாரமான விஷயம்? நாகப் பட்டினத்திற்கு அரசனாகும் காரியத்தை விட விசேஷமானதா?"

"நாகப் பட்டினத்திற்கு அரசனானால் நல்லது தான். ஆனால் அது நடப்பதற்கு நீண்ட காலம் ஆகும். அந்த நிலையில் தான் புது விஷயம் குறுக்கிட்டது. ஆகவே திட்டத்தை மாற்றிக் கொண்டேன்."

"அது என்ன விஷயம்?"

"நாகப்பட்டினத்தில் நாகானன விஹாரம் இருக்கிறது. அதில் பொன்னால் ஆன புத்தர் சிலை இருக்கிறது. அது இருக்கும் அறையைத் திறக்கும் யந்திர சூட்சுமத்திற்கு உரியவன் அங்கு இல்லை. இலங்கையில் இருக்கிறான். அவனைக் கண்டுபிடித்து சூட்சுமத்தை அறிந்து கொண்டு விட்டால் புத்தர் சிலை நம் வசமாகி விடும்."

"கண்ணெதிரே மிளகுப் பொதிகள் இருக்கும் போது அதைக் கைப்பற்றாமல் இல்லாத ஊருக்கு எதற்காகப் பயணம் செய்ய வேண்டும்? இலங்கையில் அந்தச் சிற்பியை எப்படிக் கண்டு பிடிப்பது? உங்கள் காரியம் பைத்தியக்காரத்தனமானதாக இருக்கிறது."

"முட்டாளைப் போல் பேசாதே. புத்தர்சிலை மட்டும் கிடைத்து விட்டால் நாகர் மலைத் தீவிலேயே நாம் நாக நாட்டை உருவாக்கலாம்."

"சிற்பியை எப்படிக் கண்டு பிடிப்பீர்கள்?"

"அதை நான் பார்த்துக் கொள்கிறேன். நீ உன் திட்டத்தைக் கைவிடு. இந்தக் கப்பல் ஒழுங்காகத் திரிகோணமலைக்குச் செல்ல வேண்டும். நீ குழப்பி விடாதே."

"நான் இப்போது வேறு விதமாகப் பேசினால் மரக்கலத் தலைவன் என்னைக் கொன்று விட மாட்டானா?"

"நான் சிபிசோரன் என்பது இக்கப்டலில் இருக்கும் யாருக்கும் தெரியாது. புத்த பிட்சு வேடத்தில் இருப்பதால் உண்மையான பிட்சு என்று எல்லோருமே என்னை மதிக்கிறார்கள். நான் உன்

மனதை மாற்றி விட்டதாகச் சொன்னால் நம்புவார்கள். உனக்கு ஒரு ஆபத்தும் வராது. போதுமா?"

"நாகப்பட்டின விவகாரம் ஒத்து வர வில்லையா?"

"நாகப்பட்டின விஹாரம் வந்து விட்ட பிறகு வேறு விவகாரம் எதற்கு? நம் தேவைக்கு மேலாகவே விஹார விவகாரம் தரத் தயாராக இருக்கும் போது வேறு விஷயங்களுக்கு எதற்குப் போக வேண்டும்?" என்று கேட்ட சிபிசோரன் அவளது மேலழகுகளையும் கீழ்அழகுகளையும் புதியதாகப் பார்ப்பது போலப் பார்த்தான். அவனுக்கு எப்போதுமே கீழழகுகளின் மீதே அதிக நாட்டம் இருந்ததால் அவற்றை விழுங்கி விடுபவனைப் போலப் பார்த்தான். அவை தற்போது தனக்குத் தேவை என்பதைக் கண்களின் மொழிகளால் உணர்த்தினான்.

"வெளியே இருப்பவர்கள் எல்லோரும் நம்மையே நினைத்துக் கொண்டிருப்பார்கள். நமது வரவுக்காகக் காத்திருப்பார்கள். என்ன சொல்லப் போகிறோம் என்று எதிர்பார்த்திருப்பார்கள். நாம் தாமதம் செய்தால் கதவுகளை உடைக்கவும் முற்படுவார்கள். இந்த நேரத்தில் நாம் உறவாடிக் கொண்டிருக்க முடியாது" என்றாள் மருதி.

"மருதி நீ என் மனைவி. நீயும் நானும் உறவாடுவதை எவனும் தடுக்க முடியாது."

"உங்களுக்குக் காமம் பெருக்கெடுத்து விட்டால் புத்தி லவலேசமும் வேலை செய்வது கிடையாது. நாம் கணவன்-மனைவி என்பது மரக்கலத்தில் இருக்கும் யாருக்கும் தெரியக் கூடாது. தெரிந்தால் உங்கள் மீதுள்ள மரியாதையும் என்மீது உள்ள பயமும் போய் விடும். இலங்கைக்குத் தானே போகப் போகிறோம்? அங்கே போனபிறகு ஒரு நாள் முழுவதும் உறவாடிக் கொண்டே இருந்தால் போகிறது."

"என்னை இப்போது கட்டுப் படுத்த முடியவில்லை மருதி. விஸ்தாரமாக எதையும் செய்ய வேண்டாம். கொஞ்சம் மட்டும்" என்று சொல்லி சிபிசோரன் தன் கண்கள் ஆழ்ந்து பதிந்த இடங்களில் தனது வேலையைக் காட்டினான்.

★

சிபிசோரனும் மருதியும் மரக்கலத் தலைவனின் அறைக்குள் சென்று தாழிட்டுக் கொண்ட போது வெளியே வந்த மரக்கலத் தலைவனை வணிகர்கள் சூழ்ந்து கொண்டார்கள்.

"கப்பல் இலங்கைக்குப் போகுமா? எங்கள் சரக்குகள் அவ்வளவு தானா?"என்று கேட்டார்கள்.

"அந்தப் பெண் யார்? கொள்ளைக்காரியா?" என்று வினவினார்கள்.

"கப்பல் இலங்கைக்குப் போகாமல் கொள்ளைக்காரியின் வசம் செல்கிறதென்றால் சரக்குகளைக் கடலில் போட்டு விடுகிறோம். கொள்கைக்காரிக்குத் தாரை வார்க்கத் தயாராக இல்லை" என்றார்கள்.

"என்னைக் கேட்டால் என்ன செய்வது? இப்படியெல்லாம் நடக்கும் என்று நினைத்துத் தான் உடைந்த கப்பலிலிருந்து நீந்தி வந்தவர்களைக் கொன்று விடும்படிக் கட்டளையிட்டேன். அந்த பிட்சுதான் என்னைத் தடுத்தார். கருணை காட்டும் படிச் சொன்னார். அவரைப் போய் கேளுங்கள்" என்றான் மரக்கலத் தலைவன்.

"அந்த பிட்சுவும் பெண்ணும் அறைக் கதவைத் தாழிட்டுக் கொண்டு என்னதான் செய்கிறார்கள்?" என்று கேட்டார் ஒரு வணிகர்.

"எனக்கென்ன மாயக்கண்களா இருக்கின்றன உள்ளே நடப்பதைக் காண்பதற்கு?" என்று அலுத்துக் கொண்டான் மரக்கலத் தலைவன்.

அதுவரை நடந்தவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்து எதுவும் பேசாமலிருந்த மங்கை வேந்தனின் தோழர்களில் ஒருவரான தோலா வழக்கன் மரக்கலத் தலைவனிடம் வந்து "நமக்கு இப்போது பிரச்சனை அந்தப் பெண்ணும் பிட்சுவும் தான். இருவரும் அறைக்குள் இருக்கிறார்கள். அறையை நாம் வெளியே பூட்டி விட்டால் என்ன?" என்று கேட்டார்.

★★★



அம்பர்

"இது நல்ல யோசனை. அப்படியே செய்யலாம்" என்றார்கள் வணிகர்கள்.

மரக்கலத் தலைவனுக்கும் அப்படித்தான் தோன்றியது.

ஆனால் துரதிருஷ்ட வசமாக அவர்கள் செயல்படுவதற்கு முன் அறையைத் திறந்து கொண்டு சிபிசோரனும் மருதியும் வெளியே வந்தார்கள்.

சிபிசோரன் மரக்கலத் தலைவனைப் பார்த்து "இந்தப் பெண்ணை மாற்றி விட்டேன். இக்கப்பலை திசை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை. இலங்கைக்கே செல்லலாம்" என்றான்.

"அடிகளே! அவள் மனதை எப்படி மாற்றினீர்கள்?" என்று கேட்டான் மரக்கலத் தலைவன்.

"அதுதான் புத்தம். அதுதான் பௌத்தம். அதுதான் அன்பு. அதுதான் கருணை. மகான் புத்தரின் கருணைக்கு முன்பு மலை மடுவாகும். புயல் தென்றலாகும். கடல் குட்டையாகும். இவளது மனத்தை மாற்ற கருணை ஒன்றே கருவி. அதைத் தவிர வேறு எதனாலும் அவளை மாற்றமுடியாது" என்று உண்மையான பிட்சுவைப் போலவே பேசி நடித்த சிபிசோரன் இலங்கையைச் சென்று அடையும் வரை அவளுக்கும் அவளைச் சேர்ந்தவர்களுக்கும் தேவையான உணவையும் உடைகளையும் கொடு. பகவான் புத்தர் எல்லோரையும் காப்பார்" என்றான்.

மரக்கலத் தலைவன் முன் திரண்டிருந்தவர்கள் கலைந்தார்கள்.

சிபிசோரன் தன்னைச் சேர்ந்த பிட்சுக்களோடு சேர்ந்து கொண்டான்.

வணிகர்கள் வணிகர்களோடுச் சேர்ந்து கொண்டார்கள்.

மங்கை வேந்தனும் தோழர்களும் சரக்குகள் இருந்த ஒரு மூலையில் கூடினார்கள்.

நள்ளிரவு நேரம் முகிழ்த்து விட்டதைக் கப்பலில் எழுந்த சிறு ஓசை புலப்படுத்தியது.

எல்லோரும் ஓய்வெடுக்க வேண்டும் என்பதை அந்த ஒலி உணர்த்தியது.

மருதிக்கும் அவளைச் சேர்ந்தவர்களுக்கும் உணவும் உடையும் வழங்கப் பட்டதால் அவர்கள் கப்பலின் தளத்தில் படுத்தார்கள்.

சில நாழிகைகள் வரை வேண்டாத சச்சரவுகள் உருவாகி தற்போதும் முற்றிலுமாக அடங்கிவிட்டதால் கப்பலில் பூரணமாக அமைதி நிலவியது.

தோலாவழக்கர் பேச முற்பட்டு "எல்லாமே நாடகம் என்று தான் நினைக்கத் தோன்றுகிறது. சிபிசோரனுக்கும் அந்தப் பெண்ணிற்கும் சம்பந்தம் இருக்கிறது. நாம் சற்று தாமதித்து விட்டோம். இல்லையென்றால் அவ்விருவரையும் மரக்கலத் தலைவனின் அறையில் வைத்துப் பூட்டியிருக்கலாம்" என்றான்.

"பிரச்சனை தான் தீர்ந்து விட்டதே! இனி அவர்கள் அறைக்கு உள்ளே இருந்தால் என்ன? வெளியில் இருந்தால் என்ன?" என்று கூறிய மங்கை வேந்தன் "நமக்கு எதிராக இப்போது அந்தப் பெண்மணியும் அவளது சகாக்களும் சேர்ந்து கொண்டார்கள் என்று தோன்றுகிறது. திரிகோணமலைக்கு நாம் சென்று சேரும் போது அவர்களின் நடவடிக்கை எப்படி இருக்கும் என்று தெரியவில்லை. அவர்களைச் சமாளிப்பது கூட ஒரு பிரச்சனையாக அமையலாம். ஆகவே திரிகோணமலையை அடைவதற்கு முன்பாகவே அதற்கு ஒரு வழியைக் கண்டாக வேண்டும். பொழுது விடிந்து சில நாழிகைகளில் கப்பல் திரிகோண மலையை அடைந்து விடும் என்றான் மரக்கலத் தலைவன். ஆகவே பொழுது விடிவதற்குள் ஏதாவது செய்தால் தான் நல்லது" என்று கூறிய மங்கை வேந்தன் ஓர் உபாயத்தைச் சொன்னான்.

அதையடுத்து தோலாவழக்கனும் நீர் மேல் நடப்பானும் சிபிசோரனும் அவனது ஆட்களும் படுத்திருந்த இடத்தருகே சென்று ஏதோ தனியிடத்திற்கு வந்து விட்ட மாதிரி பாவனை செய்து கொண்டு அமர்ந்தார்கள்.

"நமது பயண நோக்கம் நிறைவேறுமா?" என்று பேச்சை ஆரம்பித்தார் தோலாவழக்கன்.

"திடீரென்று உங்களுக்கென்ன சந்தேகம்?" என்று கேட்டார் நீர்மேல் நடப்பான்.

"சற்று முன் கப்பலில் நடந்ததைக் கண்டீர்கள் அல்லவா?"

"அதற்கும் நம் விஷயத்திற்கும் என்ன சம்பந்தம்?"

"திடீரென எல்லாமே தலைகீழாக மாறி விட்டதல்லவா? அந்தத் துறவியார் மட்டும் குறுக்கிட்டாவிட்டால் நாம் இப்போது நாகர்மலைத் தீவை நோக்கியல்லவா பயணித்துக் கொண்டிருப்போம் அல்லவா?"

"அது தான் சரியாகி விட்டதே! பிறகென்ன பிரச்சனை?"

"நாம் மிகவும் நம்பிக்கையாகச் செல்கிறோம். அவன் கைவிரித்து விட்டால் நம் நிலை கைகொட்டிச் சிரிக்கிற மாதிரி ஆகிவிடும். நமது வாழ்க்கையும் நம்மை நம்பி இருப்பவர்கள் வாழ்க்கையும் முடிந்து விடும். ஆசைக் கனவுகள் கனவுகளாகவே போய் விடும். ஆனந்தம் என்பது நிறைவேறாத லட்சியமாய் அரைகுறையாகவே அழிந்து விடும்."

"உங்களுக்கு ஏன் நினைப்பு இப்படியெல்லாம் போகிறது?"

"கப்பலில் நடந்த சம்பவம் தான் அந்த நினைப்புகளுக்குக் காரணம். அதைப் பார்த்தபிறகு எதுவேண்டுமானாலும் நடக்கலாம் என்று தோன்றுகிறதே!"

"அச்சம்பவம் நடக்கவில்லை என்றாலும் மனிதர்களின் நிலை அது தான்.எதுவேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் நடக்கும் என்பது தான் மனித வாழ்க்கை. கவலையை விடுங்கள். அம்பரன் வாக்கு சுத்தமானவன். தாக்கிப் பேசினாலும் அவன் நாக்கு பிறழாது."

"அவன் தரப்போகும் சரக்கு தங்கத்தை விட உயர்ந்தது. ஒரு தோலா தங்கம் நூறு வராகன் என்றால் ஒரு தோலா அம்பரின் விலை நானூறு வராகன். அது போல் நான்கு மடங்கு. நாம் பெறப் போகும் அம்பரைக் கொண்டு ஆறு ஊர்கள் வாங்கலாம். அறுபது கிராமங்களை வாங்கலாம். அறுநூறு அடிமைகளை வாங்கலாம். ஆயிரத்து நூறு புரவிகளை வாங்கலாம். புரிகிறதா நான் சொல்வது? அம்பரன் மட்டும் அம்பரைத் தராமல் விட்டு விட்டால் நாம் உயிரை விட்டு விட வேண்டியது தான். மட்டக் களப்பிலேயே நமக்குப் புதைகுழி தோண்டப்படும். நம்மவர்கள் நாகையிலும் நீடூரிலும், நறையூரிலும் தங்கள் உயிரை மாய்த்துக் கொள்வார்கள்."

அதுவரை தோலாவழக்கரும் நீர்மேல் நடப்பானும் பேசிக் கொண்டிருந்ததை படுத்தபடியே கேட்டுக் கொண்டிருந்த சிபிசோரனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவனுக்கு அம்பரைப்

பற்றித் தெரியும். அது தங்கத்தை விட ஐந்து மடங்கு விலை உயர்ந்தது என்பதும் தெரியும். அந்த இருவர் பேச்சிலிருந்து அவர்கள் பெறப் போகும் அம்பரின் விலைமதிப்பு நாகானன் விஹாரத்தில் இருக்கும் பொற்சிலைக்கான விலைமதிப்பை விட எட்டு மடங்கு அதிகம் என்பது அவனுக்குப் புரிந்ததால் அவனது கண்கள் விரிந்தன.

ஆழ்கடலில் இருக்கும் திமிங்கலமானது நோய் வாய்ப் படும் போது அது சுரக்கும் மெழுகு போன்ற பொருள் தான் அம்பர். அது இறுக இறுக முதன்மையான வாசனைப் பொருளாக அமையும். அது எங்கேயும் கிடைக்காது. எங்கேயாவது எப்போதாவது ஆழ்கடல் பகுதியில் குறிப்பிட்ட நோய்க்கு ஆளான திமிங்கலம் கரை ஒதுங்கும் போது தான் கிடைக்கும். அது ஒரு அரிதான சம்பவம். அரபு நாட்டைச் சேர்ந்த செங்கடல் பகுதியில் இச்சம்பவம் ஓரிரு முறை நடந்துள்ளதே தவிர வேறெந்த கடற் பகுதியிலும் நடைபெற்றதில்லை. அராபியர்கள் அந்த அம்பரைக் கொண்டு ஏராளமான வாசனைப் பொருட்களை உருவாக்கி இதர நாடுகளுக்கு அனுப்பி பெருஞ் செல்வத்தை ஈட்டி வந்தார்கள். சமீப காலமாக அம்பர் கிடைப்பது அடியோடு நின்று போய் விட்டதால் அது எங்குமே கிடைக்கவில்லை.

இந்த நிலையில் அந்த அரிய பொருள் இலங்கையில் மட்டக் களப்பில் கிடைப்பதாக அறிந்ததும் சிபிசோரனுக்கு நாக்கில் எச்சில் ஊறியது. மட்டக் களப்பில் உள்ள அம்பர் மட்டும் தனக்குக் கிடைக்குமானால் நாகை புத்தர் சிலையைத் திருடுவதற்காகச் சிற்பியைத் தேட வேண்டிய அவசியம் இல்லை என்பதையும், எதிர்கால வாழ்க்கை பொன் மயமானதாகி விடும் என்பதையும், சொர்க்கத்தை பூவுலகிலேயே சிருஷ்டி செய்து கொள்ளலாம் என்பதையும் உணர்ந்த சிபிசோரன் தோலா வழக்கரையும் நீர்மேல் நடப்பானையும் ஏமாற்றி அம்பரைக் கைப்பற்றி விட வேண்டும் என்று தீர்மானித்தான். தங்க புத்தர் சிலையைக் களவாடும் வேகம் சற்றே குறைந்தது.

எனவே எழுந்து கொண்ட அவன் இருவர் பேசிக் கொண்டிருந்த இடத்திற்கு வந்து "என்ன வணிகர்களே! நீங்கள் உறங்கவில்லையா? மனிதனுக்கு ஒரு நாள் பொழுதில் சிறிது நேரமாவது உறங்க வேண்டும். உறக்கம் என்பது உழைக்கும் நமது அங்கங்களுக்கு நன்றி தெரிவித்து நாம் தரும் ஓய்வாகும்" என்றான் கனிவான குரலில்.

"தாங்கள் உறங்கவில்லையா அடிகளே?" என்று கேட்டார் தோலா வழக்கர்.

"நான் உறங்கிக் கொண்டு தான் இருக்கிறேன்" என்றான் சிபிசோரன்.

"என்ன சொல்கிறீர்கள் அடிகளே?"

"என் கண்கள் திறந்து கொண்டிருக்கும் போது மனம் உறங்கும். கண்கள் உறங்கும் போது மனம் காரியமாற்றும் இது துறவிகள் போக்கு" என்றான் சிபிசோரன்.

தோலா வழக்கர் நீர்மேல் நடப்பானைப் பார்த்தார்.

நீர்மேல் நடப்பான் தோலா வழக்கனைப் பார்த்தார்.

"பேச்சைக் கவனித்தீர்களா?" என்று அவர்கள் கண்கள் பேசின.

"தாங்கள் மிகவும் அபூர்வமானவர் அடிகளே. உங்களை நினைத்தால் எங்களுக்கு ஏக்கமாக இருக்கிறது. பொறாமையாகவும் இருக்கிறது" என்றார் தோலா வழக்கர்.

வறண்டச் சிரிப்பொன்றை உதிர்த்த சிபிசோரன் துறவி பாவனையோடு தனது மொட்டைத் தலையைத் தடவி விட்டுக் கொண்டு "நானொன்றும் அபூர்வமானவன் அல்ல. அசாதாரண மானவன் அல்ல. சொற்பமான துறவிகளில் அற்பமானவன். பகவான் புத்தரின் சித்தம் நான் துறவியாக இருக்கிறேன். பந்தங்கள் என்னை விட்டு அகன்று பத்தொன்பது ஆண்டுகள் ஆகிவிட்டன. பரோப காரமே பணி என்று வாழ்ந்து கொண்டிருக்கிறேன்" என்று பொய்யை அழகாகப் பேசி விட்டு "நீங்கள் இருவரும் ஏதோ கவலையோடு பேசியது போலத் தோன்றியதே! என்ன கவலை உங்களுக்கு?" என்று கேட்டான்.

"லௌகீகக் கவலைகள் அடிகளே. அவற்றைத் தங்களிடம் கூறி தங்களுக்கு வருத்தத்தைத் தருவது சரியாகாது."

"துறவிகளுக்கேது வருத்தம்? அவர்களுக்கு வருத்தமும் இல்லை. மகிழ்ச்சியும் இல்லை. மற்றவர்களின் வருத்தத்தைப் போக்கி மகிழ்ச்சியைத் தருவது தான் துறவிகளின் கடமை. தயங்காமல் சொல்லுங்கள்."

"எங்களது நண்பர் ஒருவர் மட்டக்களப்பில் இருக்கிறார். அவர் எங்களுக்கு அம்பர் தரவேண்டும். அதைப் பற்றித் தான் கவலை."

"அம்பரா? அது இன்னமும் உலகில் இருக்கிறதா? அது கிடைப்பது அபூர்வமாயிற்றே?"

"உண்மை தான் சுவாமி. மட்டக்களப்பில் இருக்கும் நண்பன் அம்பரன் மட்டும் ரகசியமாக அம்பரைச் சேகரித்து விற்று வருகிறான்."

"அப்படியா? உங்களுக்கு அவன் எவ்வளவு தரவேண்டும்?"

"நூறு தோலா அம்பர் தரவேண்டும்."

"நூறு தோலாவா? அவ்வளவா? நம்பவே முடியவில்லையே!"

"தாங்கள் நம்பாவிட்டாலும் அதுதான் உண்மை."

"அவ்வளவு அம்பரை வாங்க உங்களிடம் பணமிருக்கிறதா?"

'அம்பரன் எங்களுக்கு நூறு தோலா அம்பர் தரக் கடமைப் பட்டவன்."

"கடமைப் பட்டவனா? என்ன சொல்கிறீர்கள் நீங்கள்?"

"பத்து ஆண்டுகளுக்கு முன்னால் சோழ நாட்டில் எங்களுக்குச் சொந்தமான இருநூறு வேலி நிலத்தையும் இரண்டாயிரம் பசுக்களையும் அவனுக்கு அளித்தோம். அவற்றுக்கு உரிய தொகையைத் தரும் நிலையில் அவன் இல்லை. வட்டியோடு பிறகு தருவதாகச் சொன்னான். ஒரு வாரத்திற்கு முன்னால் தான் அவனிடமிருந்து தகவல் வந்தது. எங்களுக்குத் தரவேண்டிய தொகைக்கு ஈடாக நூறு தோலா அம்பரைத் தருவதாகவும் அதைப் பெற்றுக் கொள்ள மட்டக் களப்பிற்கு வரும்படியும் சொல்லியிருக்கிறான்."

தோலா வழக்கர் அவ்வாறு கூறியதுமே சிபிசோரன் தங்க புத்தர் சிலையைக் கவரும் திட்டத்தைக் கைவிட்டான். இருவரோடு இணைந்து மட்டக் களப்பிற்குச் சென்று அம்பரனிடம் இருக்கும் அம்பரைச் சுருட்டுவது என்று தீர்மானித்துக் கொண்டான்.

"எல்லாம் சரியாகத் தானே இருக்கிறது? கவலை எதற்கு?" என்று வினவினான்.

"எங்களை வரவழைத்து ஏமாற்றி விட்டால் என்ன செய்வது என்பது தான் எங்கள் கவலை."

"நீங்கள் இதற்கு முன்னால் அம்பரைக் கண்டதுண்டா?"

"இல்லை அடிகளே."

'அப்படியானால் அம்பரன் உங்களை ஏமாற்ற வாய்ப்புண்டு."

"என்ன சொல்கிறீர்கள் சுவாமி?"

"உண்மையான அம்பருக்கும் பொய்யான அம்பருக்கும் வித்தியாசம் உண்டு. அது மிகவும் நுட்பமானது. நுண்ணியமாகக் கவனித்தால் தான் தெரிந்து கொள்ள முடியும்."

"இதென்ன இப்படிச் சொல்கிறீர்கள்? எங்கள் கலவரம் அதிகமாகிறதே! நீங்கள் அம்பரைக் கண்டிருக்கிறீர்களா?"

"சுவாமி! நீங்கள் எங்களுக்குக் கிடைத்தது நாங்கள் செய்த மகா பாக்கியம். தாங்கள் தான் எங்களோடு வந்து உண்மை அம்பரைக் கண்டு பிடிக்கப் பேருதவி புரிய வேண்டும்."

"வணிகர்களே! நான் இலங்கை அனுராதபுரத்தில் நடக்க விருக்கும் பௌத்த சமய மாநாட்டிற்குத் தலைமையேற்று நடத்தவே நாகையிலிருந்து பயணமாகியிருக்கிறேன். அனுராதபுரத்திற்குச் செல்ல வேண்டிய நான் உங்களோடு எப்படி வரமுடியும்?"

"கருணா மூர்த்தி தாங்கள். தயவு காட்டுங்கள் அடிகளே."

"முயற்சிக்கிறேன்."

சிபிசோரன் உள்ளுக்குள் மகிழ்ச்சியோடு இருந்து கொண்டு அதைக் காட்டிக் கொள்ளாமல் பேசினான்.

இவர்கள் இங்கே பேசிக் கொண்டிருந்த அதே நேரத்தில் வேறு இடத்தில் வேறு நாடகம் ஒன்று நடந்து கொண்டிருந்தது.

★★★



சகன்

தோலா வழக்கரையும் நீர்மேல் நடப்பானையும் சிபிசோரன் இருந்த இடத்திற்கு அனுப்பி வைத்த மங்கை வேந்தன் அதே சமயம் நிழலில் ஒதுங்குவானையும் தாளுதுவானையும் சிபிசோரனின் மனைவி சுருதியும் அவளைச் சேர்ந்தவர்களும் இருந்த பகுதிக்கு அனுப்பி வைத்தான்.

சுருதி தனது சகாக்களோடு படுத்தாளே தவிர உறங்கவில்லை. உறக்கம் வரவில்லை. தன் கணவனின் திட்டம் சரியானது தானா என்று யோசித்துக் கொண்டிருந்த படியால் அவளுக்கு உறக்கம் வருவதாக இல்லை. அது மட்டுமின்றி மரக்கலத் தலைவனின் அறையில் கிடைத்த கொஞ்ச நேரத்தில் தன்னைக் கிடத்தி காமத்தைக் கடத்திய சிபிசோரனின் செயலையும் எண்ணிக் கொண்டாள். இரண்டுமே அவளுக்குத் திருப்தியாக இல்லை.

நாகர்மலைத் தீவில் சிபிசோரனின் மனைவியாக அவள் வாழ்ந்தாலும் பெரும்பாலான சமயங்களில் கொள்ளைகளில் ஈடுபட்டு வந்தாள். சில நேரங்களில் சிபிசோரன் அவளோடு இருப்பான். பல நேரங்களில் அவன் இருக்க மாட்டான். சகாக்கள் இருக்க மாட்டார்கள். இந்தச் சகாக்கள் பெரும்பாலும் ஆடவர் களாகவே இருந்த படியால் அவர்களோடு இருந்து இருந்து, பழகிப் பழகி அவளது பெண்ணின் மென்மை மெல்ல மெல்ல மிதந்தகன்று ஆடவனின் தன்மையே அணைத்துக் கொண்டது.

தற்போது மரக்கலத்தில் சகாக்களோடு படுத்துக் கிடந்த அவளுக்கு வெட்கம் என்பது துளியும் இல்லாமல் வறண்டு கிடந்தது. தனது ஒரு காலை பக்கத்தில் படுத்திருந்தவளின் மேலே போட்டுக் கொண்டிருந்தாலும் கிளர்ச்சிக்கு ஆளாக வில்லை. அவனது சகாக்களும் கண்டபடி வாழ்ந்து பழக்கப் பட்டிருந்த படியால் அவர்களும் தற்போது மரக் கட்டைகளாகத் தான் இருந்தார்கள். தன்மீது காலைப் போட்டிருந்த மருதியைச் சற்றே திரும்பிப் பார்த்த சகா "உறங்கி விட்டீர்களா?" என்று கேட்டான்.

அவள் தனது கால்களை தன் வசதிக்கேற்ப நகர்த்திக் கொண்டு "இல்லை" என்றாள்.

"உங்கள் மனதை மாற்றியது உங்கள் கணவர் தானே?" என்று கேட்டான் சகா.

"அதிலென்ன உனக்குச் சந்தேகம்?"

"அவர் எதற்காகத் துறவி வேடத்தில் இருக்கிறார்?"

"யாரையாவது ஏமாற்றுவதற்காகத் தான் இருக்கும்."

"அது யார் என்று உங்களுக்குச் சொல்லவில்லையா?"

"இல்லை."

"ஏன்?"

"நான் கேட்கவில்லை."

"அவர் நாகப்பட்டினத்திற்குச் சென்றது அந்நாட்டிற்கு அரசனாக. சென்று ஆறு மாதங்களுக்கு மேலாகி விட்டது. தற்போது அவர் ஆண்டியின் கோலத்தில் இருக்கிறார். இது உங்களை உறுத்தவில்லையா?"

"உறுத்துகிறது."

"ஆண்டி வேடத்திற்கு வந்து விட்ட அவரால் அரசராக முடியாது. தனது திட்டத்தில் அவர் தோற்று விட்டார். தோற்றுப் போன அவர் உங்களிடம் மாற்றுத் திட்டத்தைச் சொல்லி அனைத்துமே மாற்றி விட்டார். அவரை எப்படி நம்பினீர்கள்?"

"தங்க புத்தர் சிலை கிடைத்தால் நல்ல லாபம் தானே?"

"யந்திர சூட்சுமத்தை உடைக்க சிற்பி வேண்டுமால்லவா? நானாக இருந்திருந்தால் சிற்பியைத் தேடி அலையமாட்டேன். ஆயிரம் பேர்களைச் சேர்த்துக் கொண்டு நாகானன விஹாரத்திற்குச் செல்வேன். சக்தி வாய்ந்த சீன வெடிகளைக் கொளுத்திப் போட்டு விஹாரத்தைத் தகர்ப்பேன். தங்கச் சிலையை எடுப்பேன். அது தான் தீரமான செயல். கடந்த ஆறு மாத காலத்தில் அவர் இதைச் செய்திருந்தால் இந்நேரம் நாமிங்கே படுத்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை."

சக கொள்ளையன் கூறியது சரி என்றே தோன்றியது மருதிக்கு.

"நீ கூறுவது சரிதான்" என்றாள் அவன் மீதிருந்த தன் காலை விலக்கிக் கொண்டு.

"எனக்கென்னவோ அவர் கூறுகிற தங்க புத்தர் சிலை விவகாரம் உண்மையாக இருக்கும் என்று தோன்றவில்லை. அவரது திட்டம் வேறு ஏதாவதாக இருக்கும் என்று தோன்றுகிறது" என்றான் சகா.

"எப்படிச் சொல்கிறாய்?"

"யந்திர சூட்சுமத்தை அமைத்த சிற்பியை இலங்கையில் எப்படிக் கண்டு பிடிப்பார்? மந்திரத்தாலா? சிற்பியை எப்படிக் கண்டு பிடிப்பது என்பது குறித்து உங்களுக்கு ஏதாவது தெரிகிறதா?"

"இல்லை."

"பிறகு எப்படி அவரது திட்டத்தை ஏற்றீர்கள்? என் ஊகம் என்ன வென்றால் கடலில் நாம் தத்தளித்த போது நம்மைக் காப்பாற்றினாரே தவிர நம்மை எதிர்பார்க்கவில்லை. நீங்களோ அவர் இருப்பதை அறியாமல் மரக்கலத் தலைவனை மிரட்டி கப்பலைப் பாதை மாறிப் பயணம் செய்யச் சொன்னீர்கள். அப்போது வந்த அவர் உங்களை அடையாளம் கண்டு கொண்ட பிறகு செய்வதறியாமல் திணறியிருக்கிறார். தனது திட்டம் கெடக் கூடாது என்று நினைத்து உங்களிடம் பொய்யான திட்டம் ஒன்றைக் கூறி அடக்கிவிட்டார். அநேகமாகத் திரிகோண மலையை அடைந்ததும் அவர் செயல்படுவார். அதாவது நம்மையெல்லாம் தந்திரமாக ஒதுக்கிவிட்டு அல்லது ஒழித்து விட்டு தனது உண்மையான திட்டத்தை மேற்கொள்வார். இக்கப்பலை திரிகோணமலைக்குக் கொண்டு செல்லவே நாடகமாடியிருக்கிறார்" என்றான் சகா உறுதியான குரலில்.

அவன் பேசப் பேச ஒவ்வொரு விஷயமும் சரி என்றே தோன்றியது அவளுக்கு. அவன் தன் கணவன் என்றாலும் கயவன் என்பது அவளுக்குத் தெரியும். சுயநலக் காரன் என்பதும் சுயநலத்திற்காக யாருடைய நலத்தையும் அழிப்பவன் என்பதும் அவளுக்குத் தெரியுமாதலால் சகக் கொள்கைக்காரனான சகன் கூறியபடி நிகழ்ச்சிகள் நடக்க வாய்ப்புண்டு என்று கருதினாள்.

சகன் தொடர்ந்து பேச முற்பட்டு "நாம் மட்டும் கப்பலைத் திசைமாற்றி நமது நாகர்மலைத் தீவுகளுக்கே சென்றிருந்தால் எப்படியிருக்கும் என்று யோசித்துப் பாருங்கள். இக்கப்பலில் இருக்கும் மிளகுப் பொதிகள் ஆயிரம் இருக்கும். இந்த மிளகுக் கொடிகள் நமது நாகர்மலைத் தீவுகளில் விளைவது இல்லை. அங்கே இருப்பவர்கள் எப்போதாவது மிளகுப் பொதிகளோடு வரும் கப்பலைச் சூறையாடித் தான் அதைப் பெறுகிறார்கள். இந்த நிலையில் ஆயிரம் மிளகுப் பொதிகளோடு நாம் அங்கே சென்றால் போட்டி போட்டுக் கொண்டு வாங்குவார்கள். நாம் சொல்வது தான் விலையாக இருக்கும். முதல் இல்லாத வாணிகம்.சிரமம் இல்லாத செயல்பாடு. கப்பலில் உள்ளவர்களை வெட்டிக் கடலில் வீசிவிட்டு இப்பொதிகளோடு நாகர் மலைக்குச் சென்றால் நமக்குத் தேவையான செல்வம் கிடைக்கும். இதை விட்டு விட்டு இந்தப் பொதிகளையும் விட்டுவிட்டு திரிகோணமலையில் இறங்கி

இல்லாத சிற்பியைத் தேடி யந்திரச் சூட்சுமத்தை அறிந்து மீண்டும் நாகப் பட்டினத்திற்கு வந்து புத்தர் சிலையைக் கவர்வது என்பது ஏறமுடியாத மலையில் ஏறி ஆழமான பள்ளத்தாக்கில் விழுந்து மாள்வதற்குச் சமம். நம் வழி கொள்ளையர் வழி. நேர் வழி. உடனடியாக லாபம் அடையும் வழி. இதை விட்டு விட்டு உங்கள் கணவர் கூறிய முட்டாள்தனமான வழியை எப்படி ஏற்றீர்கள்? உங்கள் கணவரோடு இருந்ததை விட இல்லாத காலத்தில் தான் நீங்களும் நாமும் நிறைய சம்பாதித்திருக்கிறோம்" என்றான்.

"உண்மைதான் சகா. ஆனால் காலம் கடந்து விட்டது. இப்போது நம்மால் எதுவும் செய்ய முடியாது" என்றாள் மருதி.

"அம்மணீ! உங்கள் கணவர் திட்டப்படி நடந்து கொள்வதற்கு மாறாக நான் ஒரு திட்டத்தைச் சொல்லவா?"

"சொல்."

"கப்பல் திரிகோணமலைக்குப் போட்டும்."

"சரி."

"நம் கைகளில் இருக்கும் பொக்கிஷத்தை நாம் கைவிட வேண்டாம்."

"மிளகுப் பொதிகளைச் சொல்கிறாயா?"

"ஆம்."

"உங்கள் கணவர் இதைப் பற்றிக் கவலைப் பட்டதாகத் தெரிய வில்லை. ஆகவே அவரிடம் தெரியப்படுத்துங்கள். எல்லோருமாகச் சேர்ந்து சரக்குகளுக்கு உரிய வணிர்களைக் கொண்டு கடலில் வீசி விட்டுப் பொதிகளை நமதாக்கிக் கொள்வோம் திரிகோண மலையில் அவற்றை விற்று விட்டு கிடைக்கும் வருவாயைப் பெறு வோம். அதற்குப் பிறகு சிற்பியைத் தேடும் பணியில் இறங்குவோம். எதற்காக நம் கண்முன் இருக்கும் சரக்குகளை விட்டு வைக்க வேண்டும். நம்வழியில் கவர்ந்து கொள்வது தானே தகுந்தது?"

இதற்கு மருதி ஏதோ பதில் கூற முற்பட்டு அங்கே தாளுதுவானும் நிழலில் ஒதுங்குவானும் சிரித்து கொண்டே வந்ததைக் கண்டு பேச்சை நிறுத்தி விட்டு "யார் இவர்கள்? எதற்காகச் சிரிக்கிறார்கள்?" என்று கேட்டாள்.

".அவர்களும் வணிகர்கள் தான். சரக்கை விற்கும் வணிகர்கள் அல்ல. சரக்கைவாங்கும் வணிகர்கள். திரிகோணமலைக்குச் சென்று என்ன வாங்கப் போகிறார்களோ? தெரியவில்லை" என்றான் சகன்.

அப்போது தாளுதுவான் சிரிப்பை நிறுத்தி விட்டு "நான் இதைச்சிறிதும் எதிர்பார்க்கவில்லை அவரை உண்மையான

துறவி என்று தான் நினைத்துக் கொண்டிருந்தேன். கப்பலுக்கு வந்த புதிதில் அவர் சொற்பொழிவு ஆற்றிய போது கூட எனக்குச் சந்தேகம் வர வில்லை. உண்மைத் துறவியைப் போலவே பேசினார்" என்றார்.

நிழலில் ஒதுங்குவான் அதைக்கேட்டு விட்டு "உண்மையான துறவிகள் அதிகமாகப் பேசமாட்டார்கள். உபதேசம் செய்வதும் உபன்யாசம் செய்வதும் மிகவும் குறைவாகவே இருக்கும். இதை வைத்துக் கொண்டு அவர் உண்மைத் துறவியா போலித் துறவியா என்பதைக் கண்டு பிடித்து விடலாம்" என்றார்.

"அவர் போலித்துறவி என்பதில் கூட எனக்கு அவ்வளவாக வியப்பு ஏற்படவில்லை. அவர் அம்பர் வாங்குவதற்காக வந்திருக்கிறார் என்று அறிந்த போது தான் ஆச்சர்யமாக இருந்தது" என்றார் தாளுதுவான்.

அவரது இந்தப் பேச்சைக் கேட்டதும் சுருதியும் சகனும் அதிர்ந்து போனார்கள்.

படுத்த நிலையிலிருந்து எழுந்து உட்கார்ந்து கொண்டார்கள்.

அவர்களின் அசைவுகளைக் கவனித்துக் கொண்டு அதே சமயம் கவனிக்காதது போல் பேச்சைத் தொடர்ந்த நிழலில் ஒதுங்குவான் "இதில் ஆச்சரியப் படுவதற்கு என்ன இருக்கிறத? அவர் துறவியல்ல. நம்மைப் போல ஒரு வணிகர். அவர் அம்பர் வாங்க விரும்புகிறார் அவ்வளவு தானே?" என்றார்.

"இதென்ன இப்படிப் பேசுகிறீர்கள்? அம்பர் என்ன ரப்பர் என்று அற்பமாகநினைத்துக்கொண்டீர்களா? இன்று உலகிலேயே விலை உயர்ந்த பொருள் உண்டென்றால் அது அம்பர்தான். தங்கத்தையும் வைரத்தையும் விட விலையுயர்ந்த பொருள் அது. சாதாரணமாகக் கிடைக்காதது. மட்டக்களப்பில் அது கிடைப்பது ஆச்சரியம் அல்லவா? அதை வாங்க வேண்டுமென்றால் அது அப்போலித் துறவியால் முடியக் கூடியதல்ல. ஆகவே தான் ஆச்சரியப் படுகிறேன்" என்றார் தாளுதுவான்.

"இது சரியான கேள்வி. சரியான சந்தேகம். அம்பரை வாங்கும் அளவிற்கு அப்போலித் துறவியிடம் பொருள் இருப்பதாகத் தோன்றவில்லை. இதில் ஏதோ மர்மம் இருக்கிறது. மட்டக்களப்பில் இருக்கும் அம்பர் வியாபாரிக்கும் போலித் துறவிக்கும் ஏதோ ரகசியத் தொடர்பு இருக்க வேண்டும். ரகசிய வணிகம் இருக்க வேண்டும். அதனால் தான் திசைமாறவிருந்த கப்பலைத் திரிகோணமலைக்கே செலுத்தச் செய்திருக்கிறார். மட்டக்களப்புக்குச் செல்ல வேண்டிய அவசரத்தாலும் அவசியத்தாலும்

தான் அவ்வாறு செய்திருக்கிறார். அவர் யாராக இருக்கும்?" என்று கேட்டார் நிழலில் ஒதுங்குவான்.

"எனக்கென்னவோ அவர் ரகசிய வணிகத் தரகராக இருக்கலாமோ என்று தெரிகிறது. அவர் நாகப் பட்டினத்திலிருந்து வருவதால் தமிழகத்தில் இருக்கும் மன்னர்கள் யாருடனாவது தொடர்புடைய தரகராக இருக்க வேண்டும். மன்னர்கள் தொடர்பு இல்லாமல் அம்பரை யாராலும் வாங்க முடியாது" என்றார் தாளுதுவான்.

"இந்த அம்பர் விலைமதிக்க முடியாத பொருளாக இருப்பதால் போலி அம்பரும் உருவாகியிருக்கிறது. இந்தப் போலித் துறவி போலியான அம்பரை வாங்கி வந்து விடக் கூடாது."

"வித்தியாசம் தெரிந்தவர்களும், வித்தியாசத்தைக் கண்டு பிடிக்கக் கூடியவர்களும் தான் இந்த வணிகத்தில் ஈடுபடுவார்கள்."

"ஊருக்குத் துறவி. அவர் ஈடுபடுவதோ அம்பர் வணிகம். விந்தையான மனிதர்கள். விந்தையான உலகம்."

"அவரை விடு. அவர் எப்படியாவது போகட்டும். நாம் வன்னி நாட்டிற்கு*ச் செல்வதற்கான வழியைப் பார்ப்போம்."

சிறிது நேரம் இருந்துவிட்டுத் தாளுதுவானும் நிழலில் ஒதுங்குவானும் அங்கிருந்து சென்றார்கள்.

"நான் கூறியது சரியாகி விட்டது பார்த்தீர்களா? உங்களை ஏமாற்றி விட்டு அவர் தன் திட்டப்படி நடந்து கொள்ளப் போகிறார். என்ன சொல்கிறீர்கள் இதற்கு?" என்று மருதியிடம் கேட்டான் சகன்.

மருதிக்குள் புயல் உண்டாகிக் கொண்டிருந்தது. கோபாக்கினி மூண்டு கொண்டிருந்தது.

"உங்கள் கணவர் உண்மையானவராக இருந்திருந்தால் உண்மையான திட்டத்தை உங்களிடம் சொல்லியிருக்க வேண்டும். ஆனால் தங்க புத்தர் சிலை பற்றியும் சிற்பியைப் பற்றியும் கூறியிருக்கிறார். இது ஏமாற்று வேலை தானே? அதுவும் அவர் ஈடுபடப் போவது அம்பர் வணிக விஷயம். உலகத்திலேயே மிக உயர்ந்த அதே சமயம் அந்தரங்கமான வணிகம் இது. மன்னர்கள் சம்பந்தப்பட்ட விஷயம் இது. இதில் உங்கள் கணவர் ஈடுபடுகிறார் என்றால், உங்களிடம் பொய் சொல்லிவிட்டு ஈடுபடுகிறார் என்றால் நாம் அவருக்கு ஒரு பொருட்டே இல்லை என்பது தான் உண்மை. புரிகிறதா நான் சொல்வது?"

---

* வன்னி நாடு என்பது இன்றைய இலங்கையில் உள்ள வவுனியா மாகாணத்தைக் குறிக்கும்.

"எழுந்திருசகா.அவரைப்போய்ச்சந்திப்போம்"என்றுசொல்லி இருவரும் எழுந்து கொண்டார்கள். சிபிசோரனும் மரக்கலத் தலைவனும் அவனது அறையில் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அங்கே சென்ற மருதி "மரக்கலத் தலைவரே! நீங்கள் கொஞ்சம் வெளியில் இருங்கள். நாங்களும் அடிகளும் சற்று தனியாக பேச வேண்டும்" என்றார்.

"என்னை என் அறையை விட்டு வெளியேறும்படிச் சொல்லும் உரிமை யாருக்கும் கிடையாது. அதோடு நான் அறியாத விஷயங்கள் எதுவும் கப்பலில் நடக்க முடியாது" என்றான் மரக்கலத் தலைவன்.

"நீ உயிரோடு இருக்க வேண்டுமென்றால் உரிமையைப் பற்றி எதுவும் பேசாமல் வெளியேறி விடு" என்றான் சகன் தன் குறுவாளை உயர்த்தியபடி.

"உங்கள் பேச்சும் போக்கும் தகாதவை. அதன் விளைவை நிச்சயமாக நீங்கள் அடைவீர்கள்" என்று சொல்லி விட்டு வெளியேறினான் மரக்கலத் தலைவன்.

"சகா! நீ சென்று நமது ஆட்களை மரக்கலத் தலைவனின் அறைக்கு வெளியே காவலுக்கு நிறுத்து. இல்லையென்றால் மரக்கலத் தலைவன் இந்த அறையை வெளியில் பூட்டி விடுவான்" என்றாள் மருதி.

சகனும் அவ்வாறே சென்று தனது ஆட்களைக் கொண்டு வந்து நிறுத்தி விட்டு அறைக்குள் வந்து கதவைச் சாத்தித் தாளிட்டான்.

"மருதி! இதெல்லாம் என்ன? எதற்காக இப்படிச் செய்கிறாய்? எல்லாவற்றையும் தான் நான் சுமூகமாகச் செய்து விட்டேனே! மறுபடியும் என்ன பிரச்சனை?" என்று கேட்டான் சிபிசோரன்.

"அதெல்லாம் இருக்கட்டும். உங்கள் திட்டம் என்ன?" என்று கேட்டாள் மருதி.

"அதைத் தான் சொன்னேனே! நாகப்பட்டினத்தில் இருக்கும் விஹாரத்தின் யந்திரச் சூட்சுமங்களை அறிந்து கொள்ள திரிகோண மலைக்குச் செல்கிறோம்" என்றான் சிபிசோரன்.

"உண்மையிலேயே அது தான் உண்மையான திட்டமா?"

"அதில் என்ன சந்தேகம்?"

"அப்படியென்றால் மட்டக்களப்புக்கு எதற்காகப் போகிறீர்கள்? சுற்றிப் பார்ப்பதற்கா?"

அதிர்ந்தான் சிபிசோரன்.

★★★



திரிகோணமலை

தனது திட்டம் தன் மனைவிக்குத் தெரிந்து விட்டது அதிர்ச்சியாக இருந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் "அது உண்மைதான் மருதி" என்றான்.

அவனது பதில் தற்போது மருதிக்கு அதிர்ச்சியாக இருந்தது.

"என்ன சொல்கிறீர்கள்?"

"நாம் தேடும் சிற்பி மட்டக்களப்பில் இருப்பதாக மரக்கலத் தலைவனின் மூலம் தகவல் அறிந்தேன். ஆகவே தான் அங்கே செல்லப் போகிறேன். அதைப் பற்றித் தான் அவனிடம் பேசிக் கொண்டிருந்தேன். எதற்காக அவனை வெளியேற்றினாய்?"

மருதி சுகனின் காதில் எதையோ சொல்லி வெளியேற்றினாள்.

அவன் சென்றபிறகு "சிபி! நீ எந்த அளவிற்கு மோசமானவனோ அந்த அளவிற்கு நானும் மோசமானவள்" என்றாள் மருதி.

"எதற்காக இப்படிப் பேசுகிறாய்? உன் திறமை எனக்குத் தெரியும். என் திறமை உனக்குத் தெரியும். அதனால் தான் நாம் பலகாலமாக இன்பமாக வாழ்ந்து வருகிறோம்" என்றான் சிபிசோரன்.

"நாம் கொள்ளையர்கள் மட்டுமல்ல. கணவன் மனைவி. நமக்குள் ஏதாவது ரகசியம் இருந்து அது மறைக்கப் பட்டால் நம்மை நாம் ஏமாற்றுகிறோம் என்று அர்த்தம்?"

"நமக்குள் ரகசியம் இருப்பதாக நீ நினைக்கிறாயா? அப்படி இருக்குமானால் உன்னை ஏன் இந்தக் கப்பலில் ஏற்றிக் கொள்ளும் படி மரக்கலத் தலைவனிடம் சொன்னேன்? உன்னைச் சேர்ந்தவர்களை எதற்காகக் காப்பாற்றினேன்? தங்க புத்தர் சிலை விவகாரத்தைப் பற்றி ஏன் உன்னிடம் கூறினேன்? உன்னை ஏமாற்றுவதற்காகவா?"

"இதெல்லாம் சரிதான். ஆனால் நீ என்னிடம் சொல்லாமல் விட்டு விட்ட பெரிய விஷயம் ஒன்றிருக்கிறது. அதைச் சொல்லாமல் விட்டது என்னை ஏமாற்றுவதற்காகத் தான்."

"நீ கூறுவது விளங்கவில்லை மருதி."

"ஏன் நடிக்கிறீர்கள். மட்டக் களப்புக்கு நீ போவது அம்பரை வாங்குவதற்காகத் தான்."

சிரித்தான் சிபிசோரன்.

"என்ன பிதற்றுகிறாய்? அம்பரைப் பற்றி உனக்குத் தெரியுமா? தற்போது அந்த அம்பர் உலகில் எங்குமே இல்லை. அம்பரைத் தரும் திமிங்கலங்கள் முற்றிலுமாக அழிந்து விட்டன. அதோடு அம்பரை வாங்கும் அளவிற்கு எனக்கு யோக்கியதை இருக்கிறதா? கிடையாது" என்றான்.

"யோக்கியனைப் போலச் சாமர்த்தியமாகப் பேசுகிறீர்கள். சாமர்த்தியம் வேறு. உண்மை வேறு. நீங்கள் பேசுவது அப்பட்டமானபொய்.மட்டக்களப்பில்அம்பர்இருக்கிறது.அதை வைத்திருப்பவரோடு உங்களுக்கு ரகசியத் தொடர்பு இருக்கிறது. அவர் உங்களை வரச் சொல்லியிருக்கிறார். அதற்காகவே நீங்கள் அங்கே செல்லுகிறீர்கள். எங்களையெல்லாம் ஏமாற்றுவதற்காகத் தங்க புத்தர் சிலை கதையைக் கூறியிருக்கிறீர்கள். இது துரோகம் அல்லவா?"

"இது மிகையான கற்பனை. இந்தக் கதையை உன்னிடம் கூறியது யார்?"

"உங்களிடம் சொன்னவர்கள் தான் என்னிடம் சொன்னார்கள். உங்கள் சாயம் வெளுத்து விட்டது."

"யாரோ சொன்ன பொய்யை நம்புகிறாய். உன் கணவனான நான் சொல்லும் உண்மையை நம்ப மறுக்கிறாய்."

"அப்படியல்ல. யாரோவாக இருந்தாலும் உண்மையைச் சொல்கிறார்கள்.கணவனான நீங்கள் பொய்யைச் சொல்கிறீர்கள்."

"பொய் என்று முடிவுகட்டிக் கொண்டு பேசினால் எல்லாமே பொய்யாகத் தான் தெரியும்."

மருதி இவ்வாறு பேசியபோது சகன் உள்ளே நுழைந்தான்.

"அம்மணீ! மரக்கலத் தலைவர் இவரிடம் மட்டக் களப்பைப் பற்றியோ சிற்பியைப் பற்றியோ எதுவும் பேசவில்லையாம்" என்றான் சகன்.

"நீங்கள் சொல்வது பொய் என்றேனே! நிரூபணமாகி விட்டது பார்த்தாயா? இப்போதாவது உண்மையைச் சொல்லுங்கள்."

"மருதி! இந்த மிரட்டும் வேலையெல்லாம் என்னிடம் வேண்டாம். என்னைப் பஞ்சு என்று நினைத்துத் தொட்டதே

நான் எரிமலை. என்னைப் பூனை என்று எண்ணிச் சீண்டாதே. நான் புலி. ஆதாயத்திற்காக ஆகாயத்திற்கும் செல்வேன். அதளபாதாளத்திற்காகவும் செல்வேன். என் பாதையில் குறுக்கிடுபவர்கள் என் கால்களில் மிதிபட்டுக் காலனிடம் போய்ச் சேருவார்கள்."

சிபி சோரன் இவ்வாறு கூறிய போது மருதி திடீரென அவனது முகத்தில் ஒரு குத்து விட்டாள். அவன் நிலைதடுமாறிய போது அவனது கழுத்தை இறுகப் பிடித்து நெறித்தாள். பக்கத்தில் இருந்த சகன் அவனது முதுகில் குறுவாளால் இருமுறை குத்தினான். பெண்ணாக இருந்தாலும் ஆணுக்குரிய உடலுறுதி இருந்ததால் மருதி அவனது கழுத்தை நெறித்ததில் மூச்சு திணறி இறந்தான் சிபிசோரன்.

தன் கணவனைக் கொன்ற உணர்வு அவளுக்கு வரவில்லை. துரோகி ஒருவனைக் கொன்ற உணர்வே வந்தது.

"நான் செய்தது சரி தானே சகா?" என்று கேட்டாள் சகனிடம்.

"மிகவும் சரி அம்மணீ. கூடவே இருந்து தனியாக லாபம் சம்பாதிக்க முயல்பவர்கள் யாராக இருந்தாலும் கொல்லப் பட வேண்டும் என்பது தான் நம்முடைய சட்டம். அது தான் இங்கே நிறைவேற்றியிருக்கிறது" என்றான் சகன்.

"அறைக் கதவைத் திறந்து மரக்கலத் தலைவனை அழைத்து வா" என்றாள்.

மரக்கலத் தலைவன் வந்து அங்கே இருந்த கோரக் காட்சியைக் கண்டான். மருண்டான்.

"இங்கே என்ன நடந்தது?" என்று கேட்டான்.

"கொலை" என்றாள் மருதி.

"செய்தது யார்?"

"நான் தான்."

"காரணம்?"

"இவன் என் கணவன். துரோகம் செய்தான். கொலை செய்தேன். அது தான் எங்கள் சட்டம்."

"யார் சட்டம்?"

"கொள்ளையர்கள் சட்டம்."

"மரக்கலச் சட்டம் என்ன வென்று தெரியுமா?" எதுவானாலும் என்னிடம் தெரிவிக்க வேண்டும். விசாரிக்க வேண்டும். தண்டனையை நான் தான் முடிவெடுக்க வேண்டும்."

"அதற்கெல்லாம் எங்களுக்கு நேரமில்லை. இப்போதைக்கு மரக்கலத்தில் இருக்கும் எல்லோருக்கும் நான் தான் தலைவி. நான் சொல்கிறபடி தான் எல்லோரும் கேட்க வேண்டும். மறுத்தால் இவனுக்கு நேர்ந்தது தான் மறுப்பவர்களுக்கு நேரும்" என்று சொன்ன மருதி மலக்கலத் தலைவனைப் பார்த்து "இதற்கு ஒப்புக் கொள்ளா விட்டால் உன் கை கால்களைக் கட்டி இந்த அறையிலேயே விடுவேன். உன் மாலுமிகளைக் கொல்வேன்" என்று மிரட்டினாள்.

இரவுப் பொழுது கழிவதற்குள் எதிர்பாராத சம்பவங்கள் நிகழ்ந்து கொண்டிருப்பது மரக்கலத் தலைவனுக்கு வாந்தியை வரவழைப்பதாக இருந்தது. வணிகர்கள் பலமற்றவர்கள். அவர்களைத் துணைக்கு அழைக்க முடியாது. தன்னோடு இருக்கும் மாலுமிகளின் எண்ணிக்கையும் சொற்பம். அவர்களை வைத்துக் கொண்டு சட்டம் பேசினால் மரணம் தான் முடிவாக இருக்கும் என்பதை உணர்ந்த அவன் "எப்படியாவது போங்கள். பொழுது விடியும் வரை கப்பலில் அமைதி நிலவினால் போதும். திரிகோணமலைக்குப் போனபின் யார் எப்படி நடந்து கொண்டாலும் கவலையில்லை" என்றான்.

சிபிசோரனின் உடலைக் கப்பல் தளத்தில் இழுத்து போடச் சொன்ன மருதி அவனோட வந்த பிட்சுகளை அழைத்தாள்.

"இவன் யாரென்று உங்களுக்குத் தெரியுமா? புத்த பிட்சுவும் அல்ல. பௌத்தனும் அல்ல. நாகன். என் கணவன். கொள்ளைக்காரன். துரோகம் செய்த கயவன். ஆகவே நானே கொன்றுவிட்டேன். நீங்களும் இவனைப் போலவே போலி பிட்சுகளா?" என்று கேட்டாள்.

"இல்லை. நாங்கள் உண்மையிலேயே பிட்சுகள் தான். இவரை மகாதேரர் என்று தான் நினைத்தோம். இப்படித் துரோகம் செய்வார் என்பது தெரியாது."

"இவரைக் கொன்றது சரிதானே?"

"சரிதான்."

"உங்கள் உத்தேசம் என்ன?"

"திரிகோணமலையில் இறங்கி விட்டால் போதும். நாங்கள் புத்த விஹாரத்திற்குச் சென்று விடுவோம்."

அடுத்து வணிகர்களை அழைத்தாள் மருதி.

"நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள்?" என்றாள்.

"எங்கள் சரக்கு திரிகோணமலைக்குப் பத்திரமாய் போய்ச் சேர்ந்தால் போதும்" என்றார்கள் வணிகர்கள்.

"கவலை வேண்டாம். உங்கள் விஷயத்தில் நான் தலையிட மாட்டேன்" என்று கூறிய மருதி சிபிசோரனின் உடலைக் கடலில் எரியும் படிச் சொன்னாள்.

"மட்டக் களப்புக்குப் போகவிருக்கும் வணிகர்கள் மரக்கலத் தலைவனின் அறையில் என்னை வந்து சந்தியுங்கள்" என்று கூறி விட்டு மரக்கலத் தலைவனின் அறைக்குச் சென்றாள். அவளோடு சகனும் சென்றான்.

★

"மன்னவா! நீங்கள் எதிர்பார்த்தபடி நடந்து விட்டது. அதே சமயம் எதிர்பாராத கொலை நடந்து விட்டது" என்றார் தோலா வழக்கர்.

"தோலாவழக்கா! சிபிசோரனை புத்தர் சிலைச் சிந்தனையிலிருந்து திசை திருப்பவே உங்களையெல்லாம் அவனிடமும் அக் கொள்ளைக்காரியிடமும் அனுப்பினேன். அம்பரைப் பற்றி ஆசையைக் கிளப்பியதில் இருவருமே நாம் நினைத்தபடி புத்தர் சிலை பற்றியும் சிற்பியைப் பற்றியுமே எண்ணத்தையும் முயற்சியையும் அறவே கைவிட்டு விட்டார்கள். அவர்களுக்குள் கலவரம் மூண்டு ஒருவருக்கொருவர் வெட்டிக் கொண்டு இறப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். அது நடக்கவில்லை. அந்தக் கொள்ளைக்காரி புத்திசாலித் தனமாகச் செயல்பட்டுச் சிபிசோரனை மட்டும் கொலை செய்து விட்டாள்" என்று சொன்ன மங்கை வேந்தன் "அவள் பேச்சு வார்த்தைக்காக அழைத்திருப்பதை மறந்து விடாதீர்கள். நாம் தாமதம் செய்தல் புது விபரீதம் ஏதாவது நடந்தாலும் நடக்கும். ஆகவே தோலா வழக்கனும் நீர்மேல் நடப்பானும் கொள்ளைக் காரியைச் சந்தியுங்கள். சிபிசோரனிடம் பேசியது போலவே அவளிடம் பேசுங்கள். திரிகோண மலையை அடைந்ததும் அவளோடு செல்லுங்கள். அதற்குப் பின் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை நான் கூற வேண்டியதில்லை" என்றான்.

எல்லாம் நல்லபடியே நடந்தது.

தோலா வழக்கரும் நீர்மேல் நடப்பானும் சென்று பேசிய போது அவர்களுக்கு உதவுவதாகச் சொல்லிக் கொண்டாள் மருதி. சிபிசோரன் நினைத்தது போலத் தான் அவளும் நினைத்தாள். மட்டக் களப்பிற்குச் சென்று அம்பர் இருப்பிடத்தை அறிந்து கொண்டபின் தோலா வழக்கரையும் நீர்மேல் நடப்பானையும்

வேலை தீர்த்து விட்டு அம்பரைக் கைப்பற்றிக் கொண்டு போய் விடலாம் என்பதே அவளது திட்டமாக இருந்தது.

அம்பர் வியாபாரி யாரும் மட்டக் களப்பில் இல்லை என்பதையும் அது வெறும் கதை என்பதையும் அவள் அறியவில்லை.

பேராசை வெள்ளத்தில் மிதந்த அவள் அந்த ஆனந்தக் களிப்பில் சக கொள்ளைக்காரனான சகாவோடு சகட்டு மேனிக்கு இழைந்தும் இணைந்தும் மீதிப் பொழுதை மரக்கலத் தலைவனின் அறையிலேயே கழித்தாள்.

★

பொழுது விடிந்து நான்கு நாழிகைகள் கடந்த போது இலங்கையின் திரிகோணமலைச் சிகரங்கள் கண்ணில் தெரிந்ததும் கப்பலில் இருந்த அனைவரும் திருப்திப் பெருமூச்சை வெளியிட்டார்கள். இரவுப் பொழுது முழுவதும் கலவரத்தால் கலக்கப் பட்டிருந்ததால் மண்ணை எப்போது காண்போம் என்ற ஏக்கம் எல்லோருக்கும் ஏற்பட்டிருந்தது. அது தற்போது தீர்ந்தது.

இலங்கையின் பிரதான கிழக்குத் துறைமுகமாக இருந்த திரிகோணமலை மேலைநாடுகளையும் கீழை நாடுகளையும் இணைக்கும் பாலமாகவும் இருந்ததால் கப்பல் போக்குவரவு அதிகமாக இருந்தது. சாதாரணமாக அங்கு வரும் கப்பல்கள் துறைமுகத்திற்குள் பிரவேசிக்கப் பலவாரங்கள் ஆகும். அதுவரை நடுக்கடலிலேயே நங்கூர·மிட்டுக் காத்திருக்க வேண்டும்.

சங்கரா கப்பலின் தலைவன் வாரந்தோறும் திரிகோண மலைக்குக் கப்பலில் வருவது வழக்கமான படியால் துறைமுகத் தலைவர்களுக்குப் பரிச்சயமானவனாக இருந்தான். துறைமுகம் கண்ணில் பட்டதுமே தனது மாலுமிகளைப் படகில் அனுப்பி தனது ரகசிய அடையாளச் சொல்லான 'கருந்தலை' என்ற சொல்லைத் துறைமுகக் காவலனிடம் சொல்லச் செய்ததால் அவனது கப்பல் இரண்டே நாட்களில் துறைமுகத்திற்குள் பிரவேசித்தது.

முக்கோண வடிவத்தில் மலையானது அமைந்திருந்ததால் அத்துறைமுகப் பட்டினம் திரிகோணமலை என்று அழைக்கப் பட்டு வந்தது.

மகா மேருவின் சிகரத்தின் மீது வாயு பகவானும் ஆதி சேஷனும் தங்கள் பலத்தைக் காட்ட முயன்று வாயுபகவான்

மேருவின் சிகரங்களில் ஒன்றைப் பெயர்த்துடக கடலில் வீச, அது விழுந்த இடம் தான் திரிகோணமலை என்றும், வாயுபகவான் வீசிய மலைதான் அங்கே இருக்கும் மலையென்றும் பலரும் சொல்லி வந்தார்கள்.

இமயமலையிலிருந்து பெயர்ந்த பர்வதமாதலால் திரிகோணமலை தட்சிண கைலாயம் என்றும் அழைக்கப் பட்டு வந்தது.

திருமால் மச்சாவதாரம் முடிந்ததும் தனது மீன் உருவத்தை நீக்கிக் கொள்ள தட்சிணக் கைலாயமான திரிகோணமலைக்கு வந்து சிவபெருமானைக் குறித்துத் தவம் செய்து மச்ச உருவத்தை அகற்றிக் கொண்டபடியால் மச்சகேஸ்வரம் என்றும் திரிகோணமலை வழங்கப்பட்டதாகக் கதையொன்றும் நிலவி வந்தது.*

துறைமுகத்தை அடைந்ததும் சரக்குகளை இறக்குவதில் வணிகர்கள் முயன்றார்கள்.

மருதி தன் சகாக்களோடு தோலா வழக்கரையும் நீர்மேல் நடப்பானையும் அழைத்துக் கொண்டு தனியாகப் புறப்பட்டாள்.

சிபிசோரனோடு வந்து ஏமாற்றத்திற்கு ஆளான பிட்சுகள் புத்தரது நாடாசை இயங்கி வந்த இலங்கைக்கு வந்து சேர்ந்ததில் ஓரளவிற்குத் திருப்தியடைந்தவர்களாய் புத்தவிஹாரம் இருக்கும் இடத்தைக் கேட்டபடி நடந்தார்கள்.

இலங்கை மண்ணில் காலை வைத்ததும் அரங்கனின் நினைவு தான் மங்கை வேந்தனுக்கு வந்தது.

"அரங்கா! இந்த இலங்கையின் இளவரசன் விபீஷணன் கொண்டு வந்து வைத்த பொக்கிஷம் தான் நீ. அன்று அவன் உன்னைத் தனியாக மண்ணில் வைத்து விட்டுச் சென்றான். நீயோ உன்னைச் சுற்றிக் கோயிலை அமைத்துக் கொண்டாய். அதை மேலும் விஸ்தரிக்கும் விதமாகவும் பாதுகாக்கும் விதமாகவும் மதில்களையும் கோபுரங்களையும் அமைக்கும் திருப்பணியில் ஈடுபட்டேன். அது முடிவடையாமலும் உன்னைத் தரிசிக்க முடியாமலும் விபீஷணனின் மண்ணிற்கே வந்து சேர்ந்து விட்டேன். என்னைக் கொண்டு நீ நடத்தும் லீலைகளை இத்துடன் முடித்துக் கொள். புத்தர் சிலையைப் பெறும் காரியமே என் கடைசித் திருப்பணியாக இருக்க வேண்டும். அருள் செய் அரங்கனே" என்று வேண்டிக் கொண்டான்.

அவனும் தாளுதுவானும் நிழலில் ஒதுங்குவானும் சாயை பிடிப்பானுமாய் துறைமுகத்தையடுத்த பட்டினப் பகுதியில் இருந்த தர்ம சத்திரத்திற்குச் சென்றார்கள்.

அங்கே அன்னதானம் நடந்து கொண்டிருந்தது.

அதைக் கண்டதும்-

அவன் கண்களில் வெள்ளைக் குளம் தெரிந்தது. குமுதவல்லி தெரிந்தாள். அவள் போட்ட நிபந்தனை தெரிந்தது. அதையடுத்து மங்கை மடத்தில் அவன் ஆரம்பித்த அன்னதானம் தெரிந்தது.

எல்லாமே நேற்றுதான் நடந்தன என்பது போல் தோன்றியது அவனுக்கு.

ஆசை காரணமாக ஏற்பட்ட ஒரு விஷயம் தன்னை எப்படியெல்லாம் மாற்றி இலங்கைக்குக் கொண்டு வந்திருக்கிறது என்பதை எண்ணிக் கொண்ட போது அயர்ச்சியாக இருந்தது.

தர்மசத்திரத்தில் எல்லா வசதிகளும் இருந்தன.

நால்வரும் நீராடினார்கள்.

புத்தாடைகளை வாங்கி அணிந்து கொண்டார்கள்.

அன்னதானத்தை ஏற்று அமுதும் செய்தார்கள்.

மங்கைமடத்தில் நடந்த அன்னதானம் எந்த அளவிற்குச் சிறப்பாக இருந்ததோ அந்த அளவிற்குச் சிறப்பாக இருந்தது திரிகோணமலையின் அன்னதானம்.

அன்று அங்கேயே தங்கி மறுநாள் சிற்பிகளைச் சந்திப்பது என்று தீர்மானித்தார்கள்.

சிற்பிகளின் இருப்பிடத்தைப் பற்றிச் சத்திர நிர்வாகியிடம் மங்கை வேந்தன் வினவியபோது நிர்வாகி கூறிய பதில் அதிர்ச்சியை அளித்தது.

"திரிகோணமலையில் ஒரு சிற்பி கூட கிடையாது" என்றார் நிர்வாகி.

★★★



ஈழத்தாமரை

"இதென்ன இப்படிச் சொல்கிறீர்கள்? இங்கே சிற்பிகள் ஏராளமாக இருப்பதாக அல்லவா சொன்னார்கள்?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"யார் சொன்னது?"

"நாகப் பட்டினத்தில் உள்ளவர்கள்."

"அவர்கள் கூறியது பொய். ஆதிகாலத்திலிருந்தே இங்கே சிற்பிகள் கிடையாது. இங்கே விஹாரங்களும் குறைவு. ஆலயங் களும் குறைவு. திருகோகணேஸ்வரர் கோயில் ஒன்று தான் இங்கே பிரதானமானது. அது கூடச் சிதிலமான நிலையில் தான் உள்ளது. அதைப் புதுப்பிக்க யாரும் முயலவில்லை. சிற்ப வேலைகளில் ஈடுபட்டால் எதிர்பாராத சாவு நேருவதாக இங்கே பலரும் நம்புகிறார்கள். ஆகவே சிற்பிகள் யாரும் இங்கே வருவதில்லை."

நிர்வாகியின் பதிலைக் கேட்டதும் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போல் இருந்தது மங்கை வேந்தனுக்கு. என்ன செய்வது என்று விளங்கவில்லை.

சத்திரத்து நிர்வாகியே பேசமுற்பட்டு "எதற்காகச் சிற்பிகளைத் தேடுகிறீர்கள். நீங்கள் யார்? எங்கிருந்து வருகிறீர்கள்?" என்று கேட்டான்.

தாளுதுவான் குறுக்கிட்டு "நாங்கள் நடுநாட்டைச் சேர்ந்த தமிழர்கள். எங்கள் ஊரில் ஆலயம் ஒன்றை அமைத்திருக்கிறோம். அதில் யந்திர சூட்சுமங்களை அமைப்பதற்காகத் தான் திரிகோணமலைக்கு வந்தோம்" என்றார்.

"தமிழ்நாட்டில் இல்லாத சிற்பிகளா? அதுவும் பல்லவர்கள் இருக்கும் நாட்டிலா சிற்பிகளுக்குப் பஞ்சம்?" என்று கேட்டான் நிர்வாகி.

"நீங்கள் கூறுவது உண்மைதான். அங்கே இருப்பவர்கள் சிற்பங்கள் அமைப்பதில் நுண்கலைஞர்கள் தான். ஆனால் அவர்களுக்கு யந்திர சூட்சுமங்களை அமைக்கத் தெரியாது" என்றார் தாளுதுவான்.

"வியப்பாக இருக்கிறது உங்கள் செய்தி. எதுவானாலும் இங்கே சிற்பிகள் மருந்திற்கும் இல்லை. அனுராதபுரத்தில் சிலர் இருப்பார்கள்" என்று கூறிய நிர்வாகி சிறிது யோசித்து விட்டு எதையோ நினைவூட்டிக் கொண்டவனைப் போல் "உங்களுக்குக் கொஞ்சம் அதிருஷ்டம் இருக்கத் தான் செய்கிறது. அடுத்தவாரம் புளியங்குளத்தில் சிற்பிகள் மாநாடு ஒன்று இருக்கிறது. அங்கே நிறைய சிற்பிகள் கூடுவார்கள்" என்றார்.

நிர்வாகியின் இந்த பதில் கரை தெரியாமல் தவித்தவர்களுக்குத் தெரிந்த கலங்கரை விளக்கம் போல் இருந்தது அவர்களுக்கு.

"புளியங்குளம் எங்கே ஐயா இருக்கிறத?" என்று ஆவலோடு கேட்டார் தாளுதுவான்.

"அது வன்னிநாட்டில்* இருக்கிறது. இங்கிருந்து வடமேற்கே செல்ல வேண்டும்" என்றான் நிர்வாகி.

"இங்கிருந்து அருகில் இருக்கிறதா?"

"இல்லை. வண்டியில் சென்றால் கூட நான்கு நாட்கள் ஆகும்."

"ஐயா! நீங்கள் தான் எங்கள் பயணத்திற்கு உதவ வேண்டும். எங்களுக்கு யாரையும் இங்கே தெரியாது. வழிகாட்டுவதற்கு யாரையாவது அனுப்பினால் கூட நலம்" என்று வேண்டிக் கொண்டார் தாளுதுவான்.

"மாட்டு வண்டியை ஏற்பாடு செய்து விடலாம். அது பிரச்சனை இல்லை. ஆனால் வழிகாட்டுவதற்கு ஆளை நியமிப்பது தான் சற்று சிரமம். எதற்கும் இன்று ஓய்வெடுங்கள். நாளை காலையில் பார்ப்போம்" என்றான் நிர்வாகி.

நிர்வாகியின் பேச்சு நால்வருக்கும் ஆறுதலாக இருந்தது. அதே சமயம் அவன் தெரிவித்த தகவல் உண்மையாக இருக்குமா என்று சந்தேகமாகவும் இருந்தது. பொறுமையோடு அன்றைய இரவைக் கழித்தார்கள்.

மறுநாள் அவர்களுக்கு மூடு வண்டி ஒன்றை ஏற்பாடு செய்த சத்திரத்து நிர்வாகி வண்டியோட்டியை வழிகாட்டியாக நியமித்த போது "இந்தப் பெண்ணா வண்டியை ஓட்டப் போகிறாள்? இவளா வழிகாட்டப் போகிறாள்?" என்று வியப்புடன் கேட்டார் தாளுதுவான்.

"இவள் அசாதாரணமானவன். இலங்கையின் வடபகுதிகளை நன்றாக அறிந்தவள். இதமானவள். சூழ்நிலைகளைக்

---

* இலங்கையில் தற்போது உள்ள வௌனியா மாகாணம்.

கையாளக் கூடியவள். உங்கள் பயணத்திற்கு ஏற்றவள்" என்றான் நிர்வாகி.

பயணத்திற்கு உரிய தொகையைச் செலுத்தி விட்டு வண்டியில் நால்வரும் ஏறி அமர்ந்தார்கள்.

வண்டியோட்டியான பெண்ணும் ஏறி அமர்ந்தாள்.

வண்டியோட்டியான பெண் இளமையானவளாக இருந்தாள். இளமைக்குரிய வளங்கள் அவளது அங்கங்களில் நன்றாகத் தெரிந்தன. வண்டியை அவள் ஓட்டிய விதத்திலிருந்து அதில் அவள் நல்ல பயிற்சியைப் பெற்றிருப்பாள் என்று தோன்றியது. வண்டியில் நால்வரும் வசதியாக அமர்ந்து கொள்ள முடிந்தது. அந்தப் பெண் முகப்பில் அமர்ந்து கொண்டு சாட்டையை ஓங்கிய படி வண்டியை அனாயாசமாக ஓட்டிச் சென்றாள்.

அவளிடம் பேச முற்பட்ட நிழலில் ஒதுங்குவான் "அழகும் இளமையும் கொண்ட பெண்ணான உனக்கு வண்டியோட்டும் பணி பொருத்தமில்லாதது போல் இருக்கிறது பெண்ணே" என்றார்.

அவள் திரும்பாமலேயே "ஏன்?" என்று கேட்டாள்.

"வண்டியோட்டும் பணி கடுமையான பணி. நீயோ மிருதுவானவள். அதனால் தான் சொன்னேன்" என்றார் நிழலில் ஒதுங்குவார்.

"நான் மிருதுவானவள் என்று எப்படிச் சொல்கிறீர்கள்? என்னைத் தொட்டுப் பார்த்தீர்களா?"

"இல்லை"

"பார்க்கிறீர்களா?"

"வேண்டாம்."

"ஐயா! மிருதுவாக இருப்பதும் உறுதியாக இருப்பதும் உடலைப் பொறுத்தவரை இயல்பான விஷயங்கள். பலருக்கு உடல் உறுதியாக இருக்கும். ஆனால் மனம் உறுதியாக இருக்காது. மனம் உறுதியாகவும் எண்ணங்கள் தெளிவாகவும் இருந்தால் பெண்களும் சரி வயோதிகர்களும் சரி எதையும் சாதிப்பார்கள். எனக்கு மாட்டு வண்டியை ஓட்ட மட்டும் தெரியும் என்று நினைக்காதீர்கள். புரவிப் பயணம் தெரியும். தேரோட்டுவது தெரியும். கப்பல்களையும் இயக்குகிறேன்."

"வேறு பணிகள் எதுவும் கிடைக்கவில்லையா?"

"வேறு பணிகள் என்றால் அது என்ன? ஆன்களுக்குக் கவரி வீசுவது. கைகால்களைப் பிடித்து விடுவது. படுக்கையறைப் பாவைகளாக இருப்பது ஆகியவற்றைச் சொல்கிறீர்களா?"

"அப்படியெல்லாம் சொல்லவில்லை."

"சிங்கள ராணுவத்தில் சேர விரும்பினேன். தமிழர் படையில் பணியாற்ற விரும்பினேன். யாரும் ஏற்கவில்லை. நான் கற்ற போர்க்கலைக்கு வாய்ப்பில்லாமல் போகவே இது போன்ற பணிகளில் இறங்கினேன். பெண்கள் ஏதாவது செய்து கொண்டிருந்தால் தான் அவர்களால் ஆரோக்கியமாக இருக்க முடியும். அவர்கள் ஓடும் ஆற்று நீராக இருக்க வேண்டுமே தவிர குட்டையில் தேங்கும் நீராக இருக்கக் கூடாது."

"சரியாகத் தான் சொல்கிறாய் பெண்ணே! உன் பெயர் என்ன?"

"ஈழத் தாமரை என்பது என்பெயர்."

"நீ சிங்களப் பெண்ணா?"

"சிங்களப் பெண்தான். ஆனால் தமிழ் தெரியும். தமிழர்களையும் தெரியும்."

"சிங்களருக்கும் தமிழருக்கும் என்ன வித்தியாசங்களைக் கண்டாய்?"

"இருவருக்குமே ஆதிக்க ஆசை இருக்கிறது. வல்லவன் வெல்கிறான். மற்றவன் தோற்கிறன் இருவருமே ஒரே மாதிரி தான். வித்தியாசங்கள் இல்லை."

"இப்போது இலங்கையில் ஆட்சி புரிவது யார்?"

"சிங்களர் தான்."

மேற்கொண்டு யாரும் பேசவில்லை.

அன்று மதியம் பனகுள ஆற்றங்கரையில் பயணத்தை நிறுத்தி போஜனம் செய்தார்கள்.

திரிகோணமலையிலிருந்து புறப்படும் போதே ஒருநாளுக்குத் தேவையான உணவைத் தயார் செய்து வந்திருந்தார்களாதலால் அனைவரும் உணவுண்டார்கள்.

ஈழத்தாமரை ஊருக்குள் சென்று உணவருந்தி விட்டு வந்தாள்.

"இந்த உணவையே நீயும் உண்டிருக்கலாமே?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"உங்களைப் பார்த்தால் சாத்வீக உணவை மட்டும் உண்பவர்களாகத் தெரிகிறீர்கள். உங்கள் உணவை நான் பகிர்ந்து கொண்டால் உங்களுக்குப் பற்றாக்குறை வந்து விடும். நான் அடிக்கடி பயணத்திலேயே இருப்பதால் கிடைத்ததை உண்பேன். கிடைக்காவிட்டால் பட்டினியும் இருப்பேன்" என்றாள் அவள்.

"வண்டிக் காளைகள் நான்கு நாள் பயணத்திற்கு ஒத்து வருமா? புரவிகளில் சென்றிருந்தால் தோதாக இருந்திருக்குமே?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"உங்களுக்குப் புரவியேற்றம் தெரியுமா?"

"எங்கள் நால்வருக்குமே தெரியும்."

"திரிகோணமலையிலேயே இதைத் தெரிவித்திருந்தால் சத்திரக்காரர் புரவிகளை ஏற்பாடு செய்திருப்பாரே! நீங்கள் எதுவும் சொல்லாததால் தான் மாட்டு வண்டியை ஏற்பாடு செய்திருக்கிறார். இக்காளைகள் புரவிகளுக்குச் சளைத்தது அல்ல. இவற்றுக்கு மணிக்காளைகள் என்று பெயர். எளிதில் சளைக்காது. அதிக எடையை இழுத்துக் கொண்டு நீண்ட தூரத்திற்கு வேகமாக ஓடக் கூடியவை. இவற்றின் விலை புரவிகளின் விலையை விட அதிகம். இக்காளைகள் இலங்கையில் மணிபல்லவத்தில் மட்டும் கிடைக்கின்றன. இக்காளை பூட்டிய வண்டியில் பயணம் செய்வது சுகமானதாக இருக்கும். நீங்கள் களைப்படையாமல் பயணம் செய்யலாம். உறங்கவும் முடியும். உணவு உடைகளை ஏற்றிக் கொள்ளவும் முடியும். எல்லாவற்றையும்விட திரிகோண மலையிலிருந்த அனுராதபுரத்திற்கும், புளியங்குளத்திற்கும், மாதோட்டத்திற்கும் நல்ல பாதை இருக்கிறது. ஆகவே புரவிப் பயணத்தை விட மாட்டு வண்டிப் பயணமே உகந்தது" என்றாள் ஈழத் தாமரை.

வண்டி மீண்டும் புறப்பட்டு நான்கு யோசனை தூரம் சென்ற போது இருட்டி விட்டதால் "இரவு நேரப் பயணம் கிடையாது. காளைகளுக்கு ஓய்வு அவசியம்" என்று சொல்லிப் பயணத்தை நிறுத்தினாள்.

தங்களிடம் இருந்த உணவை நால்வரும் உண்டு முடித்தார்கள். ஈழத் தாமரையையும் கட்டாயப்படுத்தி உணவளித்தார்கள். பயண வழி முழுதுமே நீர்வளம் நிறைந்த தடமாக இருந்ததால் ஓவளைகளில் நீரெடுத்து உண்டு சேகரித்தும் வைத்துக் கொண்டார்கள்.

நால்வரையும் அருகே இருந்த சுமைதாங்கிக் கூடத்திற்கு அழைத்துச் சென்றாள். அங்கே இருபதுக்கும் மேற்பட்ட

சுமைதாங்கிக் கற்கள் இருந்தன. நல்ல வேளையாக அவை காலியாக இருந்ததால் அவற்றின் மீது நால்வரையும் படுக்கச் சொன்ன ஈழத்தாமரை தான் சென்று காளைகளைக் கவனித்து விட்டு வந்து படுத்துக் கொள்வதாகச் சொன்னாள்.

"இங்கே வனவிலங்குகள் வராதா?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"சாதாரணமாக இங்கே வருவதில்லை. அதனால் தான் பயணிகள் படுத்துறங்கச் சுமைதாங்கிக் கற்களை அமைத்திருக்கிறார்கள்" என்று சொன்ன அவள் பந்தங்கள் இரண்டைத் தயார் செய்தாள். ஒன்றை அங்கே செருகிவிட்டு இன்னொன்றை எடுத்துக் கொண்டு காளைகளிடம் சென்றாள்.

சுமைதாங்கிக் கல்லில் மங்கை வேந்தன் படுத்ததைக் கண்டு வேதனைப் பட்ட நிழலில் ஒதுங்குவான் "மன்னவா! தங்கள் நிலை எனக்கு மிகுந்த வேதனையைத் தருகிறது. மன்னவரான தாங்கள் இப்படி அனாதை போல் சுமைதாங்கிக் கல்லில் படுக்க வேண்டியது அவசியம் தானா?" என்று கேட்டார்.

"இதைவிட மோசமான சந்தர்ப்பங்களையெல்லாம் நாம் சந்தித்து விட்டோம் நண்பா. அரியணையைத் துறந்தாகி விட்டது. பலவற்றைக் கடந்தாகி விட்டது. அதையெல்லாம் நாம் மறக்க வேண்டியவைகளே தவிர எண்ணி எண்ணி வேதனைப்பட வேண்டியவர்கள் அல்ல. நாம் நினைக்க வேண்டிய ஒரே விஷயம் அரங்கன் கோயில் திருப்பணி. அது முடிவடையும் வரையில் நமது நிலை எதுவானாலும் ஒன்று தான். கவலையை விடு" என்றான் மங்கை வேந்தன்.

"ஆலயத் திருப்பணி முடிவடைந்த பின் உங்கள் உபதேசம் என்ன?"

"அதை நிர்ணயம் செய்ய நாம் யார்? இந்த நிமிடம் வரை நடந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு சம்பவமும் அரங்கன் நடத்தும் சம்பவங்களேயன்றி நாமாகச் செய்வது அல்ல. எதுவானாலும் அவன் முடிவெடுத்து நடத்துவான் என்றே நம்பு."

மறுநாள் காலை நீராடி விட்டு பக்கத்து ஊருக்குச் சென்றார்கள். அவர்களுக்குத் தயிர் சாதம் கிடைத்தால் போதுமென்றிருந்தது. ஊர்ச் சத்திரத்தில் தயிர் சாதமும் பொங்கலும் முறுக்கும் கிடைத்தன. உண்டது போக அடுத்தடுத்த வேளைகளுக்கும் கட்டுசாதம் கட்டிக் கொண்டு புறப்பட்டார்கள். நண்பகல் வேளையில் யான் ஓயா ஆற்றங்கரைக்கு வந்தார்கள். நீரானது இருகரைகளையும் தொட்டுக் கொண்டு ஓடியது.

"இந்த ஆறு விசித்திரமானது. இதில் எப்போது வெள்ளம் வரும் என்று சொல்ல முடியாது. வேடன் மலையில் திடீர் திடீரென அருவிகளில் நீர் பெருகும். அந்த நீர்ப்பெருக்கு இந்த ஆற்றில் வெள்ளப் பெருக்கை உண்டாக்கும். இதன் காரணத்தை இதுவரை யாரும் கண்டறிய வில்லை. வெள்ளம் வடிந்தால் தான் ஆற்றைக் கடக்க முடியும். இல்லையென்றால் வேடன் மலையைக் கடந்து செல்ல வேண்டும். எதற்கும் சற்று யோசிப்போம். திடீரென வந்த வெள்ளம் திடீரென நின்றாலும் நிற்கும்" என்று கூறி அனைவரையும் ஆற்றங்கரையில் அமரவைத்த ஈழத் தாமரை "நீங்களெல்லாம் எதற்காகப் புளியங்குளத்திற்குச் செல்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"அங்கே நடக்கப் போகும் சிற்பிகள் மாநாட்டைக் காண்பதற்காகச் செல்கிறோம்."

"அங்கே உங்களுக்கென்ன வேலை?"

"சிற்ப நுணுக்கங்களையெல்லாம் தெரிந்த சிற்பி ஒருவர் தேவை. அவரைத் தேர்ந்தெடுப்பதற்காகவே அங்குச் செல்கிறோம்."

"இந்த மாநாட்டில் இலங்கையைச் சேர்ந்த சிற்பிகள் மட்டும் தான் வருவார்கள்."

"அதனால் என்ன? இலங்கையில் பிரம்மாண்டமான விஹாரங்களையும் தகாபாக்களையும் கட்டியவர்கள் இங்கே உள்ள சிற்பிகள் தானே?"

"புளியங்குளத்தில் தர்மசேனன் என்ற அனுபவம் மிகுந்த சிற்பி இருக்கிறார். அவரைச் சந்தித்தால் உங்களுக்குப் பயனுள்ள தகவல்கள் கிடைக்கும்."

"மிகவும் நன்றி பெண்ணே."

"வெள்ளம் குறைவதாக இல்லை. அதைக்கண்ட ஈழத் தாமரை இனியும் காத்திருக்க முடியாது. மாலை நேரமும் வந்து விட்டது. வெள்ளம் போகிற போக்கைப் பார்த்தால் நாளைக்குக் கூட வடியாது என்று தோன்றுகிறது. எனவே நாம் வேடன் மலையைச் சுற்றிக் கொண்டு மறுபுறம் சென்று விடலாம். ஆனால்..." என்று இழுத்தாள் அவள்.

"ஆனால் என்ன? ஏதாவது ஆபத்து இருக்கிறதா?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"அதற்காகவெல்லாம் பார்த்தால் நடக்காது" என்று சொல்லி அவர்களை வண்டியில் ஏறச் சொல்லிப் பயணத்தைத் தொடர்ந்தாள் ஈழத்தாமரை.

"பெண்ணே! மலைப் பாறை கரடுமுரடாக இருக்கும் போல் தெரிகிறதே! வண்டியை நாங்கள் ஓட்டவா?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"மலையைக் கடந்த பின் வண்டியை ஓட்டும் வாய்ப்பை உங்களுக்குத் தருகிறேன். இப்போது வேண்டாம்" என்றாள் அவள்.

மலைப் பகுதியில் சில இடங்களில் பயணிகள் இறங்கி வண்டியைத் தள்ள வேண்டியதாக இருந்தது.

"ஆற்றில் வெள்ளம் இல்லாதிருந்தால் இந்தக் கஷ்டம் இல்லாதிருக்கும்" என்றாள் அவள்.

கணிதசமான தூரத்தைக் கடந்த போது சீரான பாதை தெரிந்தது.

அவர்களை வண்டியில் அமர்த்திய அவள் பந்தம் ஒன்றைத் தயார் செய்து வண்டியின் முகப்பில் மாட்டி வண்டியை ஓட்டினாள்.

கணிசமான நேரம் பயணித்த பின் வனாந்தரமான ஓரிடத்தில் வண்டியை நிறுத்தி விட்டு "நள்ளிரவு நேரமாகி விட்டது. இனிமேல் பயணப்பட வேண்டாம். ஆபத்து" என்றாள்.

"ஏன்?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"முருகப் பெருமான் கொஞ்ச காலம் இந்த மலையில் வேடனாக இருந்த படியால் இந்த மலைக்கு வேடன் மலை என்று பெயர் வந்தது. மிகச் சிறப்பாக இருந்த இந்த மலை இப்போது சீந்துவாரின்றி இருக்கிறது."

"ஏன்?"

"கண்டியில் ஒரு ஆசார்ய பிட்சு இருந்தார். அவருக்கு இலங்கை அரியணையின் மீது பொருந்தாத ஆசை ஏற்பட்டது. பல அரசியல்வாதிகளைத் திரட்டி கண்டியைச் சதிக் கூடாரமாக்கி யிருந்தார். மன்னன் அவரைப் பிடிக்க முற்பட்ட போது அவர் தலைமறைவானார். அவர் வேடன் மலையான இந்த மலையில் இருப்பதாகத் தகவல் வரவே மன்னன் கொலைவெறியுடன் இங்கே வந்தான். இங்கே பவித்திரமான புத்த பிட்சு ஒருவர் தவம் செய்து கொண்டிருந்தார். அவர் தான் கண்டியில் இருந்த சதிகாரத் துறவி என்று மன்னன் தவறாக நினைத்தான். அவர் எவ்வளவு சொல்லியும் கேட்காமல் அவரைத் துண்டுத்,

துண்டாக வெட்டி மலை முழுவதும் வீசினான். பிட்சுவின் அருவம் வெளிப்பட்டது. மன்னனையும் இம்மலையையும் சபித்தது. இங்கே மக்கள் வாழமாட்டார்கள் என்றும் ஆவிகளும், துர்க்கணங்களும், பேய்களும், பிசாசுகளும், கோர சொரூபிகளும், விசித்திர உயிரினங்களுமே வாழும் என்று அருவம் சபித்ததால் அது முதற்கொண்டு இம்மலையில் மனிதர்கள் வருவதில்லை. வாழ்வதில்லை. இது அருவங்களின் சாம்ராஜ்யமாக இருக்கிறது."

ஈழத்தாமரை இவ்வாறு சொன்ன போது நெஞ்சை உலுக்கும் அமானுஷ்யக் குரலொன்று எழுந்தது.

★★★



உத்தமி

"நான் சொன்னேன் அல்லவா? அவற்றின் குரல் தான் இது" என்றாள் ஈழத் தாமரை.

"இப்படிப்பட்ட இடம் என்று தெரிந்து இங்கே எதற்காக வரவேண்டும் பெண்ணே?" என்று கேட்டார் சாயை பிடிப்பான்.

"உங்களுக்குப் பயமாக இருக்கிறதா?"

"பயத்தைப் பற்றிய கேள்வி இங்கில்லை. தெரிந்தும் ஆபத்தில் எதற்காகச் சிக்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காகக் கேட்டேன்."

"மனிதனுக்கு ஆபத்து எங்கேயும் இருக்கிறது. எப்போதும் இருக்கிறது. ஆபத்தைத் தவிர்த்து விட்டு ஒரு மனிதனால் வாழமுடியுமென்றால் அவன் பூரணத் துறவியாக இருக்க வேண்டும். அல்லது தூய பக்தனாக இருக்க வேண்டும்.

"அறிவு முதிர்ச்சியோடு பேசுகிறாய் பெண்ணே. உன் பேச்சே தற்போது ஆறுதலாக இருக்கிறது."

"பொழுது விடியும் வரை இங்கே தான் இருக்க வேண்டும். அதற்குள் என்ன நடக்கும் என்று சொல்ல முடியாது. நீங்கள் நால்வரும் வண்டியிலேயே இருந்து கொண்டு ஓய்வெடுங்கள். வண்டியை விட்டு எதற்காகவும் இறங்காதீர்கள். என்ன சப்தம் வந்தாலும் ஆர்வம் காட்டாதீர்கள். நான் அந்தப் பாறையில் படுத்துக் கொள்கிறேன்."

"நீ எதற்காகத் தனியாகப் படுத்துக் கொள்கிறாய்? நாங்கள் வேண்டுமானால் பாறையில் படுத்துக் கொள்கிறோம். நீ இந்த வண்டியில் படுத்துக் கொள்."

"வழிகாட்டியாக வந்திருக்கும் நான் உங்களைப் பாதுகாப்பவளாக இருக்க வேண்டுமே தவிர உங்களிடம் அடைக்கலமாகச் சுடாது. நான் சொல்வதைக் கேளுங்கள் அதுதான் உங்களுக்கு நல்லது" என்று சொல்லி பந்தத்தை வண்டியிலிருந்து எடுத்து வண்டிக்குக் கீழே நட்டு விட்டுப் பாறையை நோக்கிச் சென்றாள்.

அவர்களுக்கென்னவோ அந்த மலைக்காட்டில் தங்குவதை விட பயணத்தையே தொடர்ந்திருக்கலாம் என்று தோன்றியது. விடை காண முடியாத புதிர்களும் மர்மங்களும் நிறைந்த இடத்தில் இரவைக் கழிப்பதென்பது முட்களை எடுத்து தங்கள் மீது போட்டுக் கொண்டு அவஸ்தைப் படுவதைப் போன்றது என்று அவர்கள் கருதினார்கள். வேடன் மலைப் பகுதி வழியாக வந்ததை விட காட்டாற்று வெள்ளம் வடிந்த பின் அதன் வழியாகவே பயணம் மேற்கொண்டிருக்கலாம் என்றார் நிழலில் ஒதுங்குவான்.

ஆனாலும் வண்டியோட்டியாகவும் வழிகாட்டியாகவும் வந்த ஈழத் தாமரையின் பேச்சிற்கு மாறாக நடந்து கொள்வது சரியல்ல என்றும் தோன்றியது. பெண்ணாக இருந்து கொண்டு அவள் அச்சமற்று இருக்கும் போது தாம் அஞ்சுவது அழகல்ல என்று நினைத்தார்கள்.

தனக்குத் தானே கூறிக் கொள்ளும் ஆறுதல்கள் பெரும்பாலும் தற்காலிகமானதாகவே இருக்கும். அப்படித் தான் இருந்தது அவர்களின் நிலை. ஆகவே அவர்களுக்கு உறக்கம் வரவில்லை. அதுவும் வண்டிக்குள்ளேயே அமர்ந்த நிலையில் உறங்குவதென்பது இயலாத காரியமாக இருந்தது. கண்களைச் சிறிது நேரம் மூடுவதும் திறப்பதுமாக அமர்ந்திருந்தார்கள்.

இரண்டு நாழிகைப் பொழுது அசதியாகக் கழிந்த போது சாயை பிடிப்பானின் கண்கள் எதையோ கண்டு துணுக்குற்றன. கும்மிருட்டாக இருந்த அப்பகுதியில் வெள்ளையான உருவம் ஒன்று ஈழத் தாமரையைத் தூக்குவதைக் கண்டார்.

"மன்னவா! அதோ அதோ! அந்தப் பெண்ணை யாரோ தூக்கிக் கொண்டு செல்கிறார்கள். இல்லை. இல்லை. அங்கே யாரையுமே காணவில்லை. வாருங்கள் பார்க்கலாம்" என்றார்.

"யாரும் அசையாதீர்கள். வண்டியை விட்டு இறங்காதீர்கள். எல்லோரும் விஷ்ணு சகஸ்ர நாமத்தை உச்சரியுங்கள்" என்றான் மங்கை வேந்தன் நிர்ச்சலமாக.

"அப்பெண்ணைக் காப்பாற்ற வேண்டாமா?" என்று கேட்டார் சாயை பிடிப்பான்.

"அவளைப் பற்றிய நினைவு வேண்டாம். நான் சொன்னதைச் செய்யுங்கள்" என்றான் மங்கை வேந்தன்.

அதையடுத்து நால்வரும் விஷ்ணுசகஸ்ர நாமத்தை உரக்கவே பாராயணம் செய்தார்கள்.

ஒரு நாழிகை நேரம் ஆயிற்று பாராயணம் முடிய.

அது முடிந்ததும் நால்வருக்கும் உறக்கம் வந்து உறங்கினார்கள்.

கண்களைத் திறந்த போது பொழுது விடிந்திருந்தது.

நால்வரும் வண்டியை விட்டு இறங்கி பாறை இருந்த இடத்திற்குப் போனார்கள்.

அங்கே ஈழத்தாமரையைக் காணவில்லை.

"ஏதோ ஒரு தீயசக்தி தான் அவளைத் தூக்கிச் சென்று விட்டது. சந்தேகமே இல்லை" என்றார் சாயை பிடிப்பான்.

"நமக்கு வழிகாட்டியவள் அநியாயமாக மறைந்து விட்டாள். அநேகமாக மறைந்து விட்டமாதிரி தான். இறந்து விட்ட மாதிரி தான்" என்றார் தாளுதுவான்.

"சத்திர நிர்வாகிக்கு நாம் என்ன பதில் சொல்வது? இங்கே கண்டதைச் சொன்னால் அவர் நம்புவாரா? நாம் எதற்கும் அவளைத் தேடிப் பார்க்கலாம்" என்றார் நிழலில் ஒதுங்குவான்.

"அது போன்ற எந்த முயற்சியும் வேண்டாம். நம்மை மீறிய மர்ம சக்திகள் செயல்படும் போது நாம் பேசாமல் இருப்பது தான் சரி. நமது செயல்பாடுகள் வேறு. அவற்றின் செயல்பாடுகள் வேறு. அவற்றின் சக்தியும் மாறுபட்டது. அறியமுடியாதது. அவற்றின் செயல்பாட்டில் நாம் குறுக்கிட முடியாது. இந்தப் பிராந்தியத்தின் நிலை குறித்து ஈழத் தாமரை நன்றாகவே அறிந்தவள் தான். இருப்பினும் அவளுக்கு இந்தக் கதி நேரிட்டிருக்கிறது என்றால் அது அவளது விதி. வருத்தத்திற்குரிய விஷயம் தான் என்றாலும் நம்மால் ஆகக் கூடியது எதுவுமில்லை. நம்மை விஷ்ணுசகஸ்ரநாமமே காப்பாற்றியிருக்கிறது. அதற்கு மிஞ்சியது எதுவுமில்லை. இனி இங்கே இருந்து கொண்டு யோசிப்பதற்கோ ஆராய்வதற்கோ இடமில்லை. புறப்படலாம். வண்டியில் ஏறுங்கள். வண்டியை நான் ஓட்டிச் செல்கிறேன்" என்றான் மங்கை வேந்தன்.

"வண்டியை நான் ஓட்டுகிறேன் மன்னவா. எனக்கதில் பரிச்சயம் உண்டு" என்றார் தாளுதுவான்.

"எல்லோருமே மாறி மாறி ஓட்டலாம். ஏறுங்கள்" என்றான் மங்கை வேந்தன்.

வண்டியில் எல்லோரும் ஏறிக் கொள்ள மங்கை வேந்தன் வண்டியை ஓட்டினான்.

பாதையானது சற்றே இறங்குமுகமாக இருந்ததால் மிகவும் எச்சரிக்கையோடு வண்டியை ஓட்ட வேண்டிய தாயிற்று.

ஒருவாறாக வேடன் மலைப் பகுதியைக் கடந்து பாவக் குளம் என்ற நதிதீரத்தை அடைந்தார்கள்.

நதி தீரத்தில் கிராமமும் இருந்ததால் நால்வரும் அங்கே இறங்கி நீராடிவிட்டு கிராமத்திற்குச் சென்று உணவை உண்டார்கள். இலங்கைத் தீவு ஆதியில் பாரத நாட்டுடன் சேர்ந்திருந்து கடல் கோளில் பிரிந்திருந்ததால் பாரத நாட்டுக் கலாச்சாரமும் உணவு முறைகளும் இலங்கையிலும் தழைத்திருந்தன. அதோடு இலங்கை தென்பாரத நிலப்பகுதியோடு சேர்ந்து பின் பிரிந்ததால் தமிழ் நாட்டு உணவு வகைகள் எங்கேயும் கிடைத்தன.

ஆகவே கிராமத்தில் உண்டு விட்டு வழிப் பயணத்திற்குத் தேவையானவற்றைச் சேகரித்துக் கொண்டார்கள். அவர்கள் வந்திருந்த பகுதி வன்னி நாட்டுப் பகுதி என்பதையும் அங்கிருந்து நேர் வடக்கில் பயணம் செய்தால் ஒரு நாள் பயணத்தில் புளியங் குளத்தை அடைந்து விடலாம் என்றும் தெரிந்து கொண்டு பயணப் பட்டார்கள்.

அன்று மாலை அவர்களது பயணத்தில் இரு வழிப் பாதை குறுக்கிட்டது. எந்தப் பாதை புளியங்குளத்திற்குச் செல்லும் என்ற குழப்பம் ஏற்பட்டது. பாதையை உறுதி செய்து கொள்ளாமல் பயணத்தைத் தொடர்வது சரியல்ல என்பதை உணர்ந்த அவர்கள் வண்டியை விட்டு இறங்கினார்கள். ஆனால் விசாரிப்பதற்கு யாருமில்லை. ஆடு மாடுகள் தான் இருந்தன.

"கால்நடைகள் இருப்பதால் இவற்றுக்குரியவர்கள் இங்கே தான் இருப்பார்கள். பார்க்கலாம் வாருங்கள்" என்றான் மங்கை வேந்தன்.

அவன் எதிர்பார்த்த படியே இருவழிச் சாலையிலிருந்து அரைக் கல் தொலைவில் குடிசைகள் சில இருந்தன. அங்கே கன்றுகள் பல கட்டிப் போடப்பட்டிருந்தன. அக்குடிசைகள் மிகவும் நைந்து போயிருந்தன. அதற்குள்ளேயும் வெளியேயும் சிலர் இருந்தார்கள்.

நால்வரைப் பார்த்ததும் அவர்களிடம் அவர்கள் ஓடிவந்தார்கள்.

தங்களைச் சேர்ந்த முதியவர் ஒருவர் நோய் வாய்ப் பட்டிருப்பதாகவும், விரைவில் அவருக்கு முகிய சிகிச்சை அளிக்க வேண்டும் என்றும், சிகிச்சைக்கு உரிய வைத்தியசாலை புளியங்குளத்தில் இருப்பதாகவும் சொல்லி அவரை அழைத்துச் செல்ல உதவும்படி வேண்டிக் கொண்டார்கள்.

கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்து நின்றது போல் இருந்தது அவர்களது வேண்டுகோள். நால்வருமாகச் சேர்ந்து முதியவரைத் தூக்கிச் சென்று வண்டியில் ஏற்றிக் கொண்டார்கள். முதியவரோடு உறவுக்காரப் பெண்ணொருத்தியும் ஏறிக் கொண்டாள். அவள் வழிகாட்ட, தாளுதுவான் வண்டியை ஓட்டப் பயணம் தொடர்ந்தது.

"முதியவருக்கு என்ன பிரச்சனை?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"கொஞ்ச காலமாக முதுகு வலியால் சிரமப்படுகிறார் ஐயா. வயதாகி விட்டதால் அவரது முதுகுத் தண்டு தேய்ந்து விட்டிருக்கும் என்கிறார்கள் இங்குள்ளவர்கள். சதா குனிந்த வாறு காலம் காலமாகச் சிற்ப வேலை செய்து வந்ததால் முதுகுப் பகுதியில் வளைவு உண்டாகியிருக்கும் என்று இவர் அபிப்ராயப் படுகிறார். பிரச்சனை எதுவானாலும் சிகிச்சைக்குப் புளியங்குளத்திற்குத் தான் போக வேண்டும்" என்றாள் அந்தப் பெண்.

அந்த முதியவர் ஒரு சிற்பி என்பதை அறிந்ததும் சாயை பிடிப்பானுக்கு ஆவல் உண்டாயிற்று.

"இவர் சிற்பியா?" என்று ஒரு கேள்வியை கொக்கி போலப் போட்டார்.

"ஆமாம் ஐயா. ஐம்பது வருட காலமாக அனுராதபுரத்திலும், மாந்தளையிலும், மாதோட்டத்திலும், புளியங்குளத்திலும் சிற்பியாகப் பணி புரிந்து தன் வாழ்க்கையை அதற்காகவே அர்ப்பணித்துக்கொண்டவர். அவரது சிற்பமும் அவர் நிர்மாணித்த பல ஆலயங்களும் அவரைப் போலவே சிதிலமடைந்துள்ளன. அவற்றை யாரும் புதுப்பிக்க முன் வரவில்லை. அந்த வருத்தம் அவருக்கு ஆழ்ந்திருக்கிறது. அதனாலேயே கடந்த பத்து ஆண்டுகளாக உளியைத் தொடுவதில்லை" என்றாள் அப்பெண்.

"அவரது வருத்தம் உண்மையானது தான். புளியங்குளத்தில் சிற்பிகள் மாநாடு நடக்கப் போவதாகக் கேள்விப் பட்டோமே அது இவருக்குத் தெரியுமா?" என்று கேட்டார் சாயைபிடிப்பான்.

"தெரியாமலா இருக்கும்? தெரிந்து என்ன ஆகப் போகிறது? உடம்பு இருக்கும் நிலையில் அவருக்கு அது பற்றிய ஆர்வம் இல்லை. அவர் குணமானால் போதும்" என்றாள் அப்பெண்.

"உன் பெயர் என்ன?"

"உத்தமி"

"ஆகா. அழகான பெயர். இவருக்கு நீ என்ன முறை? மகளா?"

"இல்லை. நான் இவரது சகோதரியின் மகள்."

சாயை பிடிப்பான் சற்று யோசித்து விட்டு "முதியவரால் பேச முடியுமா உத்தமி?" என்று கேட்டார்.

"அதிகமாகப் பேசமாட்டார்."

முதியவரைப் பார்த்த சாயை பிடிப்பான் "ஐயா! நாங்கள் நாகப் பட்டினத்திலிருந்து வருகிறோம். நீங்கள் தமிழகத்திற்கு வந்திருக்கிறீர்களா?" என்று கேட்டார்.

"தமிழகத்திற்கு வரவேண்டும் என்பது என் தணியாத ஆசை. நான் எத்தனையோ சிற்பங்களை வடித்திருந்தாலும் பல்லவ மாமன்னர்களைப் போல நுட்பமான சிற்பங்களை உருவாக்கியதில்லை. உங்களைப் போல தமிழ் நாட்டிலிருந்து வருகிறவர்கள் பல்லவ சிற்பங்களைப் பற்றியெல்லாம் சொல்வார்கள். அதையெல்லாம் கேட்கும் போது அங்குச் செல்லச் வேண்டும் என்றும் அந்தச் சிற்பங்களைப் போல இலங்கையிலும் வடிக்க வேண்டும் என்றும் ஆசைப் பட்டிருக்கிறேன். ஆனால் அதற்கான வாய்ப்பு எனக்குக் கிடைக்காமல் போனது எனக்கு வருத்தம் தான்" என்றார் முதியவர் தள்ளாடும் குரலில்.

"உங்களுக்குச் சிற்ப நுணுக்கங்களெல்லாம் தெரியுமா?"

"சிற்பம் என்பதே நுணுக்கமானது தானே?"

"சிற்பங்களில் யந்திர சூட்சுமங்களை அமைக்க உங்களால் முடியுமா?"

"அதைத் தெரிந்து கொண்டிருக்கிறேன். ஆனால் எங்கேயும் அமைத்ததில்லை."

சாயை பிடிப்பானுக்குப் புளியங்குளத்தில் தர்மசேனன் என்னும் நுட்பங்கள் தெரிந்த சிற்பி இருப்பதாக ஈழத் தாமரை கூறியது நினைவுக்கு வரவே "ஐயா! உங்கள் பெயரை நான் தெரிந்து கொள்ளலாமா?" என்று கேட்டார்.

"சிற்பாயனன்" என்றார் முதியவர்.

"புளியங்குளத்தில் சிற்பக்கலையில் வல்லுனரான தர்மசேனன் என்னும் சிற்பி இருப்பதாகக் கேள்விப் பட்டோம். அவரை உங்களுக்குத் தெரியுமா? அவர் எங்கிருக்கிறார் என்பதைச் சொல்ல முடியுமா?"

முதியவர் சற்று யோசித்து விட்டு "நீங்கள் கூறுவது அநேகமாக அவராகத் தான் இருக்க வேண்டும். எனக்குத்

தெரிந்தவர் தான். புளியங்குளத்தில் ஒரு தர்மசேனர் தான் இருக்கிறார். அவரிடமிருந்து பல நுட்பங்களை நான் அறிந்து கொண்டிருக்கிறேன். யந்திர சூட்சுமங்கள் அமைக்கும் முறை கூட அவருக்கு நன்றாகத் தெரியும். ஆனால் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் அவர் இறந்து விட்டார்" என்றார்.

சாயைபிடிப்பானுக்குச் சற்று ஏமாற்றமாக இருந்தது.

இதற்கிடையில் முதியவரே பேசமுற்பட்டு "சிற்பிகளைப் பற்றியே பேசுகிறீர்களே யார் நீங்கள்? புளியங்குடிக்கு எதற்காகச் செல்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"ஐயா! புளியங்குளத்தில் சிற்பிகள் மாநாடு நடக்கிறது என்று கேள்விப் பட்டோம். அங்கே சிற்பிகள் அதிக அளவில் கூடுவார்களாம். அவர்களைப் பார்ப்பதற்காகத் தான் செல்கிறோம்."

"பார்ப்பதற்காகவா நாகப்பட்டினத்திலிருந்து வருகிறீர்கள்?"

"யந்திர சூட்சுமங்களை அமைக்கும் சிற்பிகளைக் காண்பது எங்கள் நோக்கம். தர்மசேனர் என்ற சிற்பியைப் பற்றிச் சொன்னார்கள். அவரைக் காணலாம் என்று ஆர்வமாக இருந்தோம். அவர் இறந்து விட்டதாக நீங்கள் சொன்னீர்கள். யாரை எப்படிச் சந்திப்பது என்று யோசிக்கிறோம்."

"எனக்கு நீங்கள் உதவி செய்திருக்கிறீர்கள். என்னை வைத்திய சாலையில் சேர்த்து விடுங்கள். மாநாடு தொடங்க இரண்டு நாட்களாகும். அதற்குள் எனக்கு உடல் தேறுவதற்கு வாய்ப்பு உண்டு. நானே கூட உங்களுக்கு உதவ முடியுமானால் உதவுகிறேன்" என்றார் முதியவர்.

அதிருஷ்டமும் துரதிருஷ்டமும் மாறி மாறி வருவதை உணர்ந்த சாயை பிடிப்பான் "உங்களுக்கு மிகவும் நன்றி ஐயா. நீங்கள் மட்டும் உதவ முடியுமானால் எங்கள் நோக்கம் நிறைவேறும்" என்றார்.

பிறகு யாரும் எதுவும் பேசிக் கொள்ளவில்லை.

அன்றிரவு புளியங்குளத்தை அடைந்தார்கள்.

அங்குச் சென்றதும் வைத்தியசாலைக்குப் போகும் வழியைக் காட்டினாள் உத்தமி.

வண்டி அவள் காட்டிய வழியில் சென்றது.

வைத்திய சாலையின் முன்னால் நின்றது.

நால்வரும் இறங்கி முதியவரைத் தூக்கிச் சென்று வைத்திய சாலையில் விட்டார்கள்.

"எல்லோருக்கும் நன்றி ஐயா. இனிமேல் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்" என்றாள் உத்தமி.

"நாங்கள் வருகிறோம் முதியவரே. மாநாடு தொடங்கும் போது உங்களை வந்து பார்க்கிறோம். முடிந்தால் வந்து உதவுங்கள்" என்றார் சாயை பிடிப்பான்.

"என் உடல் தேற வேண்டும் என்று வேண்டிக் கொள்ளுங்கள். எல்லாம் அவன் செயல்" என்றார் முதியவர்.

நால்வரும் விடைபெற்றுக் கொண்டு தங்குவதற்கான இடத்தைத் தெரிந்து கொண்டு அங்கே பயணமானார்கள்.

அப்போது சாயைபிடிப்பானைப் பார்த்து ஒரு கேள்வியைக் கேட்டான் மங்கை வேந்தன்.

"எனக்கென்னவோ அப்படித் தோன்றவில்லை" என்றான் சாயை பிடிப்பான்.

"எனக்கும் தான்" என்றார் தாளுதுவான்.

மங்கை வேந்தன் நிழலில் ஒதுங்குவானைப் பார்த்து "நீ உன் வேலையைச் செய்"என்றான்.

வண்டியிலிருந்து இறங்கிக் கொண்டார் நிழலில் ஒதுங்குவார்.

வைத்திய சாலைக்குச் சென்றார்.

அங்கே முதியவரும் இல்லை.

உத்தமியும் இல்லை.

★★★



புளியங்குளம்

நேரம் நள்ளிரவைத் தாண்டி விட்டது.

புளியங்குளத்தின் மையப் பகுதியில் இருந்தது ஒரு தங்கும் விடுதி.

ஊர் முழுதும் உறங்கி விட்ட நிலையில் அந்த விடுதி மட்டும் ஆடலும் பாடலுமாய் இருந்தது.

ஊருக்கு வரும் வேற்றூர் விருந்தாளிகளை மகிழ்விக்கும் மனமகிழ் மன்றமாகத் திகழ்ந்தது அந்த விடுதி.

ஆட்டமும் பாட்டமும் விடுதி முழுக்க வியாபித்து விடுதியில் இருந்தவர்களை உற்சாகப் படுத்திக் கொண்டிருந்தது.

இரவுப் பொழுது மனிதர்களுக்கு உறங்கி ஓய்வெடுப்பதற்காக இயற்கை அளித்த கொடை.

அதை உணர்ந்தவர்கள் உறங்கி ஓய்வெடுக்கிறார்கள். உற்சாகமாகக் கண்விழித்து கடமைகளை ஆற்றப் புறப்படுகிறார்கள்.

ஆனால் அதை உணராத சில செல்வந்தர்களும், இளம் பருவத்தினரும், கொழுத்துப் போனவர்களும் உறக்கத்தைக் கெடுத்துக் கொண்டு இரவுப் பொழுதை ஆடலிலும், பாடலிலும், கூடலிலும் கழித்து அதையே பேரின்பமாக நினைத்து தங்கள் நேரத்தையும் ஆரோக்கியத்தையும் கெடுத்துக் கொள்கிறார்கள்.

அவர்கள் இரவு நேரத்தில் ஆட்டம் போட்டு ஆரவாரம் செய்து கொண்டிருந்ததை அறவே விரும்பாத ஆந்தைகள் சில "எங்களுக்கென்று ஒதுக்கப்பட்ட இரவுப் பொழுதை ஏன் இப்படி ஆரவாரம் செய்து எங்கள் நிம்மதியைக் குலைக்கிறீர்கள்?" என்று கேட்பது போல் ஆங்காங்கே மரங்களில் அமர்ந்து கொண்டு இரைந்தன.

ஆந்தைகளைப் பற்றி மட்டுமல்ல ஆண்டவனைப் பற்றிக் கூடக் கவலைப்படாத மனிதர்கள் அந்த விடுதியில் ஆடல் பாடல்களை

ரசித்து ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தார்கள். பணத்திற்கு ஆடியவர்களும் பாடியவர்களும் பணம் கொடுத்தவர்கள் விரும்பியவாறு நடந்து கொண்டதால் பண்பாடு, பாரம்பரியம் என்பதெல்லாம் ஓரம் கட்டப் பட்டு வக்கிரமான விஷயங்கள் களை கட்டின.

இதே நேரத்தில் விடுதியில் அறையொன்றில் படுத்துக் கொண்டிருந்த முதியவர் இந்தக் கொண்டாட்டங்களையெல்லாம் கண்டு கொள்ளவில்லை.

"உத்தமி! கால்களைக் கொஞ்சம் பிடித்து விடுகிறாயா?" என்று கேட்டார்.

"கால்களைப் பிடித்து விடுவதா? இருக்கிற ஆத்திரத்திற்கு கால்களை வேண்டுமானால் ஒடித்து விடுகிறேன்" என்று சீறினாள் அவள்.

"உத்தமி என்ற பெயரை வைத்துக் கொண்டு உதாசீனம் செய்வதும் உடைப்பேன் ஒடிப்பேன் என்றும் மிரட்டுவது தவறு உத்தமி" என்றார் முதியவர்.

"போதும். முதலில் இந்தக் கிழவனுக்குரிய ஒப்பனைகளைக் களையுங்கள். சகிக்கவில்லை" என்றாள் அவள்.

"வேடம் இருந்தால் என்ன? உள்ளுக்குள்ளே இருப்பது உறுதியான அவயங்கள் தானே?" என்று கேட்டார் முதியவர்.

"குமட்டிக் கொண்டு வருகிறது. அதனால் தான் சொன்னேன். நீங்களாகக் கழற்றுகிறீர்களா? நான் கழற்றட்டுமா?"

"நீ கழற்றுவது தான் அழகு. பெண்களாகக் கழற்றுவது கண்கொள்ளாக் காட்சி" என்று வேறு அர்த்தத்தில் சொன்னார் முதியவர்.

"உங்களுக்குக் கொஞ்சம் கூட வெட்கமில்லை."

"எனக்கு மட்டுமல்ல. உனக்கும் அது வேண்டாத விஷயம் தான். நமக்குள் தடையாக இருக்கக் கூடியது வெட்கம் ஒன்று தான். அது இருக்குமானால் நாம் சேர்ந்திருக்கவே மாட்டோம்."

"நான் உங்கள் ஆசைநாயகி தானே தவிர அடிமையல்ல."

"எப்படி அழைத்தாலும் பொருள் ஒன்று. நான் கூறுகிற மாதிரி நீ நடந்து கொள்ள வேண்டும். அதற்காகத் தான் உனக்குப் பொன் தருகிறேன். பொருள் தருகிறேன். நலம் தந்திருக்கிறேன். நிலம் தந்திருக்கிறேன்."

அவளுக்கு ஒரு மாதிரியாகி விட்டது.

"நானொன்றும் உரிமையை மறுக்கவில்லை" என்றாள்.

"பிறகெதற்குக் கோபம்? தாபம்?"

"நாகைக்குள் எதற்கும் நான் தயார் தான். ஆனால் என்னை இலங்கைக்கு வரவழைத்து பிறகு புளியங்குளத்தருகே வரவழைத்து, சிதிலமான குடிசையில் தங்கவைத்து, உளவு வேலை பார்க்கச் சொல்லி, சகோதரி மகளாக நடக்கச் சொல்லி... என்னால் முடியவில்லை. அலைச்சலைத் தாங்கமுடியவில்லை."

"அலைச்சல் புகைச்சல் எல்லாம் எதற்கு? அந்த நால்வரது நடவடிக்கைக்கு ஏற்ப நடக்க வேண்டிய கட்டாயம். காரியம் முடியும் வரை கண்ணும் கருத்தாகவும் இல்லாவிட்டால் நமக்கு ஈமக் காரியங்கள் நடந்து விடும். அதுவும் புளியங்குளத்திற்கு வந்து விட்டோம். இனி அலையவேண்டியதில்லை. சிற்பிகள் மாநாடு முடிந்ததும் ஊர் திரும்பி விடலாம். அதற்குத் தான் நீ எத்துணை பாக்கியசாலி என்பதைப் புரிந்து கொள்வாய். என்னை அடைந்தது நிரந்தர சொர்க்கத்திற்கு இணையானது என்பதை உணர்வாய். சலிப்பை விடு. சந்தோஷம் ஒன்றையே நாடு."

சற்றே சமாதானம் அடைந்த அவள் "அந்த நால்வரை நீங்கள் எதற்காகத் தொடர்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"அது ரகசியம் உத்தமி. இரண்டு நாட்கள் பொறு. எனக்குத் தெரிந்ததும் உனக்குச் சொல்கிறேன்."

"இப்போது சொன்னால் தான் என்னவாம்?"

"என் நிபந்தனையை ஏற்றால் சொல்லுகிறேன்."

"என்ன நிபந்தனை?"

சொன்னார் முதியவர்.

"உங்களுக்கு வேறு வேலையே இல்லையா?" என்று குறுங் கோபத்துடன் கேட்டாள் உத்தமி.

"நமக்குள் வேறு எதை எதிர்பார்க்கிறாய்? உன்னை எதிரே அமரவைத்துக் கொண்டு தவம் செய்ய வேண்டுமா நான்?"

"விடுதியில் ஆட்டமும் பாட்டுமாக இருக்கிறது. கோலாகலம் கொடி கட்டிப் பறக்கிறது? அதைப் போய் பார்க்கலாம் அல்லவா?"

"நான் ஆடாத ஆட்டமா? பாடாத பாட்டா? கேட்காத பாட்டா?"

"இது மட்டும் என்ன? புதியது ஒன்றுமில்லையே?"

"இல்லை உத்தமி. இது எப்போதும் புதியது தான். ஒவ்வொரு நாளும் இது புதியதாகவே இருக்கும்."

"அது எப்படி?"

"கையாளும் முறை. வித்தியாசமான உத்தி. எதிர்பாராத செயல்பாடு. இவை இருந்தால் இந்த விஷயம் எப்போதும் புதியது. எங்கேயும் புதியது."

"நீங்கள் அப்படியொன்றும் புதுமையாக எதையும் வெளிப்படுத்த வில்லையே!"

"அதற்குப் புளியங்குளம் வரவேண்டும் என்ற விதி இருக்கிறது. என்ன செய்வது?"

"நல்ல கதை"

"இன்பமான கதையும் தான். ஆரம்பிக்கலாமா தாமதித்தால் பொழுது விடிந்து விடும்."

"என்னை வலையில் வீழ்த்தி விட்டீர்கள்."

"அதெல்லாம் இருக்கட்டும். நிபந்தனையை முதலில் நிறைவேற்று."

நிறைவேற்றினால் உத்தமி.

நிறைவு செய்தார் முதியவர்.

நிறைவடைந்த போது பொழுது விடிந்திருந்தது.

"இப்போது சொல்லுங்கள் அந்த விஷயத்தை" என்றாள் உத்தமி.

"இன்றிரவு சொல்கிறேன். இன்று நாம் வேடத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். நீ குறி சொல்லும் பெண்ணாக மாறி விடு. நான் ஜோதிடனாக மாறுகிறேன். இரண்டிற்கும் இங்கே வரவேற்பு உண்டு என்று கேள்விப் பட்டிருக்கிறேன்" என்றார் முதியவர்.

இருவரும் நீராடி விட்டு வேடங்களை மாற்றிக் கொண்டார்கள். உணவைக் கொண்டு வரச் சொல்லி உண்டார்கள்.

சிற்பிகள் மாநாட்டையொட்டி பலரும் புளியங்குடிக்குத் திரண்டபடியால் முதியவர் தங்கியிருந்த விடுதிக்கு நிறைய பேர் வந்து தங்க முற்பட்டார்கள்.

இரண்டு நாட்களுக்கு முன்பாகவே முதியவர் வந்து விட்டதால் தங்கும் விஷயத்தில் பிரச்சனை இருக்கவில்லை. அவரைப் போலவே மங்கை வேந்தனும் மற்றவர்களும் சத்திரம் ஒன்றில் சௌகரியமாகத் தங்கினார்கள்.

புளியங்குளம் பெருநகரமாகவும் இல்லாமல் சிறு கிராமமாகவும் இல்லாமல் இரண்டிற்கும் இடைப்பட்ட ஊராக இருந்தது. அங்கே சிற்பிகள் மாநாடு நடப்பதையொட்டிக் கெடுபிடிகள் மற்றும் காவல் ஏற்பாடுகள் கூடியிருந்த படியால் ஊர் கலகலப்பாக இருந்தது. மாநாட்டையொட்டிப் பலரும் வருவார்கள் என்பதால் அண்டைக் கிராமங்களில் இருந்த வணிகர்கள் பல்வேறு பொருட்களைக் கொண்டு சந்தை வெளியை அமைத்திருந்ததால் அதற்காகவும் மக்கள் கணிசமாக வந்திருந்தார்கள்.

பெரும்பாலானவர்கள் வண்டிகளிலேயே வந்திருந்த படியால் வண்டிகளையும் காளைகளையும் ஊர் எல்லையிலேயே நிறுத்தி அவற்றைப் பாதுகாப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப் பட்டு அதற்கு கட்டணம் வசூலிக்கப்பட்டது.

இதற்கிடையில் தன்னோடு பயணம் செய்த முதியவரையும் இளம் பெண்ணையும் கண்காணிக்கும் படி அனுப்பி வைக்கப் பட்ட நிழலில் ஒதுங்குவானும் மங்கை வேந்தன் தங்கியிருந்த சத்திரத்திற்கு வந்தார்.

"மன்னவா! தாங்கள் சந்தேகித்தது சரிதான். அந்த முதியவரும் பெண்மணியும் வைத்திய சாலைக்குள் நுழைவது போல் நுழைந்திருக்கிறார்களே தவிர வைத்தியம் எதுவும் செய்து கொள்ளாமலேயே வெளியேறி விட்டார்கள். நான் விசாரித்துப் பார்த்து விட்டேன்" என்றார்.

"அவர்கள் நமது வண்டியில் தற்செயலாக ஏறிக் கொள்ளவில்லை. திட்டமிட்டே பயணம் செய்திருக்கிறார்கள்" என்றான் மங்கை வேந்தன்.

"இதில் திட்டமிடவோ நமது வண்டியில் பயணம் செய்யவோ அவர்களுக்கென்ன அவசியம்? அந்தக் குடிசைப் பகுதியிலிருந்து புளியங்குளத்திற்கு அவர்களால் வரமுடியாதா? நமது வண்டி அவசியமா? ஒரு வேளை திட்டமிட்டு நம்மோடு வந்திருந்தால் இப்போதும் நம்முடன் தானே இருந்திருக்க வேண்டும்? ஏன் பிரிந்து விட்டார்கள்?" என்றுகேட்டார் நிழலில் ஒதுங்குவான்

"நண்பா! நாம் யார் என்பதில் அவர்களுக்குச் சந்தேகம் வந்திருக்கிறது. நம்மைப் பின் தொடர்ந்தே வந்திருக்கலாம். எங்கே இருந்து பின் தொடர்கிறார்கள் என்பதை நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை. ஆகவே சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ள நம்மோடு பயணம் செய்ய விரும்பி நோயாளியாக நடந்திருக்கிறார் முதியவர். அவருக்கு உதவியிருக்கிறாள் அந்தப் பெண்" என்றான் மங்கை வேந்தன்.

"அப்படியானால் நம்மை யார் என்று அவர்கள் தெரிந்து கொண்டிருப்பார்களா?"

"சாயை பிடிப்பான் கொடுத்த பேச்சுகளிலிருந்து ஓரளவு தெரிந்து கொண்டிருக்கலாம். நமது குரல்கள் பரிச்சயமாக இருக்கும் பட்சத்திலும் நம்மை யாரென்பதை உணர்ந்திருக்கலாம். ஆகவே தான் புளியங்குளம் வந்த பிறகு பிரிந்து விட்டார்கள்."

"அவரிடம் நாம் நமது உண்மையான நோக்கத்தைக் கூறவில்லை. நாகப்பட்டினத்து நாகானன விஹாரத்தில் யந்திர சூட்சுமங்களை அமைத்த சிற்பி நாகசாமியைத் தேடிக் கொண்டு தான் நாம் வந்திருக்கிறோம் என்பதை அவரிடம் நாம் யாரும் பிரஸ்தாபிக்க வில்லை. பொதுவாகத் தான் பேசினோம். ஆகவே நமது பேச்சால் அந்த முதியவர் ஒரு பயனையும் அடைந்திருக்க முடியாது."

"இது பற்றிப் போகப் போகத் தான் பார்க்க வேண்டும்" என்று சொன்ன மங்கை வேந்தன் "நாம் நாளை காலை முதல் தனித் தனியாக இந்த ஊரில் சென்று மாநாட்டிற்கு வரும் சிற்பிகளைப் பற்றி அறிய வேண்டும்" என்றான்.

மங்கை வேந்தனுக்குச் சிற்பிகள் மாநாடு இந்தப் புளியங் குளத்தில் நடப்பதற்கான காரணம் புலப்படவில்லை. அநுராதபுரமே அதற்கு ஏற்ற இடம் என்று கருதியிருந்தான். ஆனால் பொழுது விடிந்தபிறகு ஊரில் அலைந்த போது தான் அதற்கான காரணம் தெரிந்தது.

புளியங்குளத்தின் வடஎல்லையில் பெரியதோர் கல்மலை இருந்தது. சிற்பங்கள் மற்றும் ஆலயங்களை அமைக்கத் தேவையான படிமப் பாறைகள் அந்த மலையில் நிரம்ப இருந்தன. இலங்கையில் பெரும்பாலான இடங்களில் சிற்பங்களுக்கும் ஆலயக் கட்டுமானங்களுக்கும் தேவையான கற்கள் அந்த மலையிலிருந்து தான் வெட்டிச் செல்லப் பட்டு வந்தன.

மலையடிவாரத்தில் அருங்காட்சியகம் ஒன்று அமைக்கப்பட்டு அதில் நூற்றுக் கணக்கான சிற்பங்கள் பார்வைக்கு வைக்கப் பட்டிருந்தன. அவை பெரும்பாலும் இலங்கையில் இலங்கைச் சிற்பிகளால் செதுக்கப் பட்டவையாகவே இருந்தன. மற்றவை காம்போஜத்திலிருந்தும் ஒருசில பாரத நாட்டிலிருந்தும் கொண்டுவரப் பட்டவையாக இருந்தன. அச்சிற்பங்களில் புத்தர் உருவச் சிலைகளே பல்வேறு வடிவங்களில் மிகுதியாகக் காணப்பட்டன. ஆகவே புளியங்குளத்தில் சிற்பிகள் கூடுவது ஏற்புடையது தான் என்று கருதினான் மங்கை வேந்தன்.

அந்த மாநாட்டைக் காணவும் சிற்ப அருங்காட்சியகத்தைக் காணவும் புத்த பிட்சுகள் அதிகமாக இருந்தார்கள். ஆதிகால இலங்கையில் இருந்து வந்த பௌத்தமத உண்மைத் துறவிகளின் எண்ணிக்கை கால வட்டத்தில் குறைந்து விட்டிருந்தது. ஆசையை விட வேண்டிய துறவிகள் ஆசையை விடுவதை விட ஆசையை அரவணைக்கவே விரும்பினார்கள். அதிகார பீடங்களில் அமர முடியவில்லை என்றாலும் அங்கே அமர்ந்து அரசர்களை ஆட்டிப் படைக்கக் கூடிய சக்திகளாக மாறினார்கள். அவர்களின் ஆசைகள் அரசர்களிடமிருந்து ஆணைகளாக வெளி வரலாயின. இலங்கையில் இதர மதச் சின்னங்களை விட பௌத்தச் சின்னங்களே அதிகம் இருக்க வேண்டும் என்று விரும்பிய அவர்கள் அதை அரசர்களிடம் வலியுறுத்தினார்கள். எனவே இலங்கையைச் சிங்களர்கள் ஆண்ட போதெல்லாம் புத்த விஹாரங்களும் புத்தர் சிலைகளும் அதிகமாக கட்டப் பட்டன. இதர மதத்துச் சின்னங்கள் புறக்கணிக்கப் பட்டதோடு சிதிலமடைந்த சின்னங்கள் திருப்பணி செய்யப் படாமல் அழிவதற்கு இலக்காகப் பட்டன.

ஒரு கட்டத்தில் ஆட்சியாளர்கள் அரியணைப் போட்டியிலும் போர்களிலும் காலம் கழித்து வந்த படியால் புத்தத் துறவிகள் பௌத்தச் சின்னங்களை வளர்ந்து விஸ்தரிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்கள். அதன் காரணமாக மாநாட்டிற்கு வரும் சிற்ப வல்லுனர்களைச் சந்திப்பதற்காகவும் அழைப்பு விடுவதற்காகவும் வந்திருந்தார்கள்.

மங்கை வேந்தனும் அவனது தோழர்களும் பற்பல சிற்பிகளைச் சந்திக்கவே செய்தார்கள். ஆனால் அவர்களில் நாகசாமி என்ற பெயரைத் தாங்கிய எந்தச் சிற்பியும் இல்லாதது அவர்களுக்கு ஏமாற்றமாக இருந்தது.

மறுநாள் மாநாடு தொடங்கியது.

பிரதான புத்த பிட்சு ஒருவரே மாநாட்டைத் துவக்கி வைத்தார்.

சிற்பிகள் பலரும் மேடையில் தோன்றித் தங்களது சிற்பப் படைப்புகளைப் பற்றியும் சிற்பத் துறைகளுக்குத் தாங்கள் வந்தது பற்றியும், இலங்கையைப் பொறுத்தவரை சிற்பங்களுக்கு ஏற்றம் கொடுத்தது புத்தத் துறவிகளே என்றும் பேசினார்கள்.

"இந்நாட்டு புத்த மகாதுறவிகளுக்கு சிற்பிகள் சமூகம் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறது. இந்நாட்டின் ஆட்சியாளர்கள் தங்களது அரியணையைத் தங்கத்தால் அமைக்கலாமா ரத்தின கற்களால் அமைக்கலாமா என்று தான் யோசித்தார்கள்.

செயல்பட்டார்கள். அவர்களது எண்ணங்களையும் செயல்பாடுகளையும் சிற்பக் கலையின் பால் திருப்பியவர்கள் தான் புத்த மகா துறவிகள். தாங்கள் அழிந்தாலும் காலத்தால் அழிய முடியாத சிற்பப் பிரம்மாண்டங்களைச் சிருஷ்டிக்க அவர்கள் திருவுள்ளம் கொண்டதால் தான் இலங்கையானது பௌத்த சிலாசாசனங்களைத் தாங்கி புத்த தேசமாக விளங்குகிறது. எனவே அந்தப் புத்த மகா துறவிகளுக்கு 'சிற்ப ரட்சகர்கள்' என்ற உயரிய விருதினைச் சிற்ப கலைஞர்களான நாங்கள் இந்த மாநாட்டில் வழங்குகிறோம். இதனை இலங்கையின் பிரதான புத்த மகா சபை அங்கீரிக்க வேண்டும்" என்று பாராட்டினார்கள்.

"இதுவா மாநாடு?" என்று சலித்துக் கொண்டான் மங்கை வேந்தன்.

"இதற்கேன் இவர்கள் ஒன்று கூட வேண்டும்?" என்று சலித்துக் கொண்டார் முதியவர் வேடத்தில் வந்து பின் ஜோதிடர் வேடத்திற்கு மாறியவர்.

பிரதான புத்த பிட்சுவே "போதும்" என்றார் வெறுப்புடன்.

★★★



அமங்கலச் சிற்பி

மங்கை வேந்தனைப் போலவே அவனோடு வந்த முதியவரும் பல சிற்பிகளிடம் பேச்சுக் கொடுத்தார். பலருக்கு ஆருடம் சொன்னார். அவரோடு வந்த உத்தமியும் பல சிற்பிகளுக்குக் குறி சொல்வது போல் நடித்தாள்.

ஆனால் எதிர்பார்த்த பலன் கிட்டவில்லை.

அன்றிரவு தங்கும் விடுதிக்குச் சென்ற அவர் கடுப்போடு பேசினார்.

வேடத்தைக் கலைத்தார். கத்தினார்.

"என்ன ஆயிற்று உங்களுக்கு? காலையிலிருந்து நன்றாகத் தானே இருந்தீர்கள்?" என்று கேட்டாள் உத்தமி.

"மடையர்கள். தடியர்கள். ஒருவருக்கும் தெரியவில்லை. உதவாக் கரைகள். இதற்காகவா நான் நாகையிலிருந்து வந்தேன்? எனக்கு நரகத்திற்கு வந்தது போல் இருக்கிறது. நாயைப் போல கத்திக் கத்திச் சாகலாம் போலிருக்கிறது" என்றார் முதியவராக நடித்தவர்.

"விஷயத்தைச் சொல்லி விட்டுப் புலம்பக் கூடாதா?"

"எதற்கு? நீயும் என்னுடன் சேர்ந்து கையை அலம்புவதற் காகவா?"

"இப்படி நீங்கள் நடந்து கொண்டால் நான் வெளியே போய் விடுகிறேன். நீங்கள் புலம்பி புலம்பி உருளுங்கள். புரளுங்கள்."

முதிய வேடதாரி கைகளைப் பிசைந்து கொண்டு அறையிலேயே நடந்தார்.

"நாகசாமி! நாகசாமி! இந்தப் பெயரை உச்சரித்து உச்சரித்து நாக்கு வறண்டது தான் மிச்சம். ஒருவனுக்குக் கூட அவனைப் பற்றித் தெரியவில்லை. தமிழ் நாட்டிலேயே யந்திர சூட்சுமத்தைப் பற்றி மிகவும் தெரிந்த ஒரே சிற்பி அவன். நாகப் பட்டினத்தில் நாகநாதனை விஹாரத்தில் யந்திர சூட்சுமத்தை அமைத்து அதைத்

திறக்க முடியாமல் செய்த ஒரே சிற்பி அவன். தமிழ்நாட்டைச் சேர்ந்த அவனை அங்கே இருக்கக் கூடாதென்று அங்கிருந்த பௌத்தர்கள் இலங்கைக்கு விரட்டி விட்டார்கள். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த சம்பவம் இது. அது முதற்கொண்டு அந்தச் சிற்பியைத் தேடி அலைந்தேன். அலைந்தேன். என்னையே தொலைத்துக் கொண்டது தான் மிச்சம். இலங்கையில் கூட வந்து இரண்டு முறை தேடினேன். அலைச்சல் தான் மிச்சம். ஒரு துப்பும் கிடைக்கவில்லை.

"இந்த நிலையில் தான் ஆலி நாட்டு மன்னனான மங்கை வேந்தனைச் சந்தித்தேன். அரங்கன் கோயில் திருப்பணியில் ஈடுபட்டிருந்த அவன் நிதிக்காக அலைந்து கொண்டிருந்தான். அதைப் பயன்படுத்தி, அவனையும் பயன்படுத்தி, சிற்பி நாகசாமியைக் கண்டு பிடித்து, யந்திர சூட்சுமத்தை அறிந்து, நாகானன விஹாரத்தில் இருக்கும் பொன்னாலான புத்தர் சிலையைக் கவர்ந்து, விற்று இருவரும் பங்கு போட்டுக் கொள்ளலாம் என்று அவனிடம் பேச்சு வார்த்தை நடத்தினேன். அவன் ஒப்புக் கொள்ளாமல் என்னை ஒதுக்கி விட்டான்."

"வண்டியில் வந்தவர் ஆலி நாட்டு மன்னரா?" என்று கேட்டாள் உத்தமி.

"ஆமாம்" என்று சொன்ன வேடதாரியும் சிற்பியுமான தசவதனன் "என்னை அவன் புறக்கணித்தாலும் அவனை நான் கண்காணிக்கவே செய்தேன். நான் கொடுத்த தகவலை வைத்துக் கொண்டு சிற்பி நாகசாமியைக் கண்டுபிடிக்க இலங்கைக்குப் புறப்பட அவன் சித்தமானான். ஆத்திரமடைந்த நான் நாகையிலேயே அவனைத் தீர்த்துக் கட்ட முயன்றேன். அவன் தப்பி விட்டான். அவனோடு இலங்கைக்கு நானும் பின் தொடர்ந்து சென்று அவன் எப்படி சிற்பி நாகசாமியைக் கண்டு பிடிக்கிறான் என்பதை அறிந்து கொள்ள உன்னை அழைத்துக் கொண்டு அவனுக்கு முன்பாகவே திரிகோணமலைக்குச் சென்று காத்திருந்தேன். அவன் அங்கு வந்ததிலிருந்து நிழலைப்போல அவனைப் பின் தொடர்ந்தேன். சத்திரத்தில் தங்கிய அவனிடம் சத்திர நிர்வாகி புளியங்குடியில் சிற்பிகளின் மாநாடு நடைபெறுவதாகச் சொன்னதைக் கேட்டேன். உன்னை அழைத்துக் கொண்டு தேரில் பயணம் செய்து புளியங்குளத்திற்குப் புறப்பட்டேன். அங்குச் சென்று சிற்பி நாகசாமியை விசாரித்து கண்டு பிடித்து விடலாம் என்று நினைத்தேன்.

"இடையில் வேறு எண்ணம் தோன்றியது. மங்கை வேந்தன் என்னை விட விவரமானவன். விவேகி. அவனைக் கொண்டே

சிற்பியின் இருப்பிடத்தை அறிந்து கொள்வதே சிலாக்கியமானது என்று முடிவு கட்டினேன். திட்டம் தீட்டினேன். அவனோடு சேர்ந்து கொள்வதற்கு இருவழிச் சாலை சங்கமப் பகுதியே ஏற்றது என்று கருதி உன்னை அழைத்துக் கொண்டு முதியவர் வேடத்தில் வந்து குடிசைப் பகுதியில் தங்கினேன். எல்லாமே நான் எதிர்பார்த்தது போலவே நடந்தது. அவனோடு பயணம் செய்து புளியங்குடிக்கு வந்தோம். வைத்தியசாலைக்கு வந்தபின் அவனிடமிருந்து பிரிந்து விட்டு மறுநாள் வேறு வேடம் புனைந்து கொண்டு அவனுக்குப் பின்னாலேயே நிழலைப் போலத் தொடர்ந்தோம். அவன் சிற்பி நாகசாமியைப் பற்றி விசாரித்தான். விவரம் தெரியவில்லை. நாமும் முயன்றோம். முடியவில்லை. புரிகிறதா. என் வெறுப்பிற்கான காரணம்?" என்று முடித்தான் தசவதனன்.

"இப்போது என்னாகி விட்டது என்று காலில் வெந்நீரை ஊற்றிக் கொண்டது போலக் கத்துகிறீர்கள்? நாளைக்குத் தானே சிற்பிகள் மாநாடு நடக்கப் போகிறது? அப்போது பல்வேறு சிற்பிகள் வருவார்கள் அல்லவா? அதில் நீங்கள் தேடும் நாகசாமி சிற்பியும் வருவார் தானே? அப்போது அவரைச் சந்தித்துப் பேசினால் போகிறது? காரியம் முடிவதற்கு முன்பே சலித்துக் கொண்டால் எப்படி?" என்று கேட்டாள் உத்தமி.

"எனக்கென்னவோ அந்தப் பீடை பிடித்த நாகசாமி மாநாட்டிற்குக் கூட வரமாட்டான் என்று தான் தோன்றுகிறது. அவன் இலங்கைக்கே வரவில்லை. அல்லது இலங்கைக்கு வந்த அவன் உயிரோடு இல்லை. இப்படித் தான் என்னால் எண்ண முடிகிறது. சிற்பங்களில் யந்திர சூட்சுமங்களை அமைப்பவர்கள் ஆயிரத்தில் ஒருவராகத் தான் இருப்பார்கள். தமிழகத்திலேயே நாகசாமி ஒருவர் தான் இருப்பார் என்பது என் அபிப்ராயம். அவர் இலங்கைக்கு வந்திருந்தால் சிற்பிகளுக்கெல்லாம் அவரைத் தெரிந்திருக்கும். யாரைக் கேட்டாலும் அவரைப் பற்றிச் சொல்லியிருப்பார்கள். ஆனால் இங்கே ஒருவனுக்கும் தெரியவில்லை. ஆகவே அவன் உயிரோடு இல்லை என்பதே உண்மை" என்றான் தசவதனன்.

"இந்த உண்மை புளியங்குளத்திற்கு வந்த பிறகு தான் தோன்றியதா? நாகையில் இருக்கும் போது ஏன் தோன்றவில்லை. ஆலிநாட்டு மன்னரிடம் பேசுவதற்கு முன் ஏன் தோன்றவில்லை? கொஞ்சம் கூடப் பொறுமை இல்லாத உங்களுக்கெல்லாம் பேராசை எதற்கு? எதற்காக அரும்பாடு பட்டு இவ்வளவு தூரத்திற்குப் பயணப்பட வேண்டும்? என் உயிரை வாங்க

வேண்டும்? நீங்கள் அதற்கு மட்டும் தான் லாயக்கு?" என்றாள் உத்தமி மனம் திறந்து.

அவள் தன்னை இகழ்கிறாள் என்று தெரிந்தும் குழப்பம் காரணமாக மௌனமாய் இருந்தான் தசவதனன்.

அவளே பேசமுற்பட்டு "நீங்கள் சிற்பிதானே?" என்றாள்.

"ஆமாம்."

"உங்களுக்கு யந்திர சூட்சுமங்களைப் பற்றித் தெரியாதா?"

"சிற்பக் கலையில் யந்திர சூட்சுமம் என்பது தனிப் பிரிவு. அதை எல்லாச் சிற்பிகளும் கற்றுக் கொள்வதில்லை. கற்றுக் கொடுப்பதும் இல்லை. சிற்பம் என்பது வெளிப்படை. யந்திர சூட்சுமம் என்பது ரகசியம். ரகசியக் கலையை எல்லாச் சிற்பிகளுக்கும் கற்பிப்பதில்லை. அந்தக் கலைக் குறிப்புகள் எழுத்து வடிவம் பெறாமல் கைதேர்ந்த சிற்ப குருமார்கள் மூலம் நம்பத் தகுந்த ஒரு சிலருக்கு மட்டுமே கற்பிக்கப்படுகின்றன. யாருக்கும் எதைச் சர்வ சகஜமாக வெளியிட்டு விடுவதில்லை என்ற சத்தியப்பிரமாணம் வாங்கிய பிறகே அது கற்பிக்கப் படுகிறது. ஆகவே எனக்கது கிட்டவில்லை. அதோடு சிற்பம் வடிக்கும் கலையையே நான் கைவிடும்படி ஆகிவிட்டது.

"ஏன்?"

"சிற்பத்திற்காக நான் தேர்ந்தெடுத்த பாறைகளில் நான்கு முறை தேரைகள் வெளிப்பட்டன. மண்டபத் தூண்களில் சிற்பங்களை அமைக்கும் போது முடியும் தறுவாயில் மூன்று முறை சிதைந்து போய் விட்டன. ஆகவே நான் சிற்பத் தொழிலுக்கே அருகதை யற்றவன் என்று தொண்டைமண்டலச் சிற்பிகள் பேரவை எனக்குத் தடை விதித்து விட்டது. அந்த அறிவிப்பைச் சோழ நாட்டிலும் வெளியிட்டு விட்டார்கள். ஆகவே நான் உளியைத் தொட்டு ஐந்தாண்டுகள் ஆகின்றன. ராசியில்லாத சிற்பி என்றும் அமங்கலச் சிற்பி என்றும் எனக்கு முத்திரையைக் குத்தி மூலையில் உட்காரவைத்து விட்டார்கள். எனக்குச் சிற்பத் தொழிலே மறந்து விட்டது. உளியை எடுத்தால் கைகள் நடுங்குகின்றன. என்னைத் தகுதியற்றவனாக்கிய சிற்ப விசித்திரங்களின் மூலமே எனக்கேற்பட்ட நஷ்டத்தை சரி செய்து கொள்ள வேண்டும் என்று தீர்மானித்தேன். அப்போது தான் நாகை நாகானன விஹாரத்தில் பொன்னாலான புத்தர் சிலை இருப்பதும் அதை அணுக முடியாமல் யந்திர சூட்சுமங்கள் பாதுகாப்பாக இருந்ததும் எனக்குத் தெரியவந்தன. சூட்சுமத்தை அறிய நானும் எப்படியெல்லாமோ அலைந்தேன். நாகப் பட்டினம் முழுதும்

நாகப் பாம்பைப் போல் ஊர்ந்து திரிந்தேன். யந்திர சூட்சுமத்தை அமைத்த சிற்பி இலங்கைக்குச் சென்று விட்டான் என்ற விவரம் மட்டும் ஓராண்டிற்குப் பிறகு எனக்குத் தெரிந்தது. இரண்டு முறை இலங்கைக்கு வந்தேன். அறியமுடியவில்லை. அந்த நேரத்தில் தான் ஆலி நாட்டு மன்னன் மங்கை வேந்தனைச் சந்தித்தேன்."

பெருமூச்செறிந்தாள் உத்தமி.

"இதில் இவ்வளவு விஷயங்கள் இருக்கிறதா?" என்று கேட்டு விட்டு "நாளைக்கு மாநாட்டிற்கு நாகசாமியே வந்தால் கூட அவரிடமிருந்து யந்திர சூட்சுமத்தை நீங்கள் எப்படி அறிய முடியும்? அவர் தான் உங்களுக்கு எப்படிச் சொல்வார்?" என்று கேட்டாள்.

"சொல்ல மாட்டார் தான். இந்த இடத்தில் தான் மங்கை வேந்தனையும் அவனைச் சேர்ந்தவர்களையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். என் ஒருவனால் முடியாது."

"அவர்களை வைத்துக் கொண்டு என்ன செய்வீர்கள்?"

"நாகசாமியைக் கடத்துவோம். ஓரிடத்தில் வைத்து சித்திரவதை செய்து சூட்சுமத்தை அறிவோம். தேவைப்பட்டால் அவனை நாகப் பட்டினத்திற்கே கொண்டு சென்று நாகானன விஹாரத்தில் இருக்கும் சூட்சுமத்தை அகற்றச் செய்வோம்."

"ஆலிநாட்டு மன்னர் இப்போது எப்படி உதவுவார் உங்களுக்கு?"

"அவர் என்னை நிராகரித்தற்குக் காரணம் நாகசாமியைப் பற்றிய தகவல் எதுவும் எனக்குத் தெரியாமல் இருந்ததால் தான். நாளைக்கு அந்தத் தகவல் தெரிந்தால் என்னோடு இணைய அவர்களுக்கு என்ன தடை? யந்திர சூட்சுமங்களை அறிந்தாலும் அதைக் கொண்டு நாகானன விஹாரத்தில் செயல்பட வேண்டுமே! அதற்கு என் உதவி அவசியம் தேவை. ஆகவே என்னோடு கூட்டுச் சேருவார்கள்."

"இது உங்கள் கனவு தான். நிறைவேறும் என்று தோன்றவில்லை."

"இப்படியெல்லாம் என் மனசாட்சியும் கூறுவதால் தான் நான் கொதித்துப் போனேன். பைத்தியக்காரனைப் போலச் சிதைந்து போனேன். இப்போது நீயும் சொல்கிறாய். எல்லோரையும் கொன்று விட்டால் என்ன என்று வெறி வருகிறது எனக்கு" என்றான் தசவதனன்.

"உங்கள் கனவு வெற்றி பெறாது என்று சொன்னேனே தவிர வெற்றி பெறக் கூடாது என்று சொல்லவில்லை. உங்கள் கனவு

வெற்றி பெற்றால் எனக்கும் அதில் லாபம் தானே?" என்று சொன்ன உத்தமி "நான் ஒரு யோசனையைச் சொல்லட்டுமா?" என்றாள்.

"சொல்."

"நீங்கள் தசவதனன் என்பதை ஆலிநாட்டு மன்னரிடம் வெளிப்படுத்தவே கூடாது."

"மேலே சொல்."

"நாகையில் உங்களை நிராகரித்து விட்டு தன்னிச்சையாக அவர் தனது ஆட்களுடன் இங்கே வந்திருப்பதற்குக் காரணம் யந்திர சூட்சுமத்தை அறிந்து நாகானன விஹாரத்தில் இருக்கும் பொற்சிலையை முழுவதுமாகக் கவர வேண்டும் என்பது தான். நாகசாமியை அவர் நெருங்கி விட்டார் என்றே தோன்றுகிறது. இந்த நேரத்தில் நீங்கள் தசவதனனாக அவருக்கு முன்னே நின்று கூட்டணி வைத்துக் கொள்ளலாம் என்று சொன்னால் ஏற்கமாட்டார். போட்டியாக வந்து விட்டதாகக் கருதி உங்களை அழிக்கவும் முயலலாம்."

"உண்மைதான்."

"எனவே அவரை அணுகுவதானால் தசவதனனாக அணுகாமல் புதியவனாக அணுகுங்கள். நாகசாமியைப் பற்றிப் பல தகவல்களைத் தெரியும் என்று சொல்லுங்கள். அவரைக் கடத்திச் சென்றால் தான் விஷயத்தை அறிய முடியும் என்று ஏதாவது கட்டுக் கதையை அவிழ்த்து விடுங்கள். பொய் சொல்லவா உங்களுக்குத் தெரியாது? உங்களை நிராகரிக்க முடியாதவாறு செய்ய வேண்டியது உங்கள் சாமர்த்தியம். அப்படிச் செய்தால் உங்களுடன் சேருவார்கள். யந்திர சூட்சுமத்தை அறிந்த பிறகு சமயம் பார்த்து அவர்களை வேலை தீர்த்து விட்டு நாம் நாகைக்குப் போவோம்."

"நல்ல யோசனை தான் உத்தமி. இந்த காரியத்தை என்னை விட நீ செய்யலாம் என்று தோன்றுகிறது. ஏன் என்றால் என் குரல் அவர்களுக்குத் தெரியும். காட்டிக் கொடுத்து விடும்."

"முதியவராக நடித்த போது குரலை மாற்றிக் கொள்ள வில்லையா? அது போல் மாற்றிக் கொள்ளுங்கள். பெண்ணாக இருந்து கொண்டு சிற்பியைப் பற்றியும் சிற்பங்களைப் பற்றியும் பேசினால் அவர்கள் நம்புவது சந்தேகம். ஆகவே நீங்களே அதைச் செய்வது தான் நல்லது. நான் வேண்டுமானால் அவர்கள் சத்திரத்திற்குச் சென்று குறி சொல்லி விட்டு வருகிறேன் ஒருவர் உதவ வருவார் என்று."

“நல்லது உத்தமி. நீ வயதானவளைப் போல் போவது நல்லது. இப்படியே போனால் உன்னை அடையாளம் தெரிந்து விடும்.”

உத்தமியும் முதிர்கன்னி போல் வேடமணிந்து கொண்டு மங்கை வேந்தன் தங்கியிருந்த சத்திரத்திற்குச் சென்றாள். அங்கே ஏற்கனவே பல குறி சொல்லும் பெண்களும், ஜோதிடர்களும் இருந்தார்கள். அவர்களிடமும் சிற்பிகள் உட்பல பலரும் குறி கேட்பதும் ஆருடம் கேட்பதுமாக இருந்தார்கள்.

மங்கை வேந்தன் தங்கியிருந்த அறையை விசாரித்துக் கொண்டு அங்கே சென்றாள் உத்தமி.

சத்திரத்தின் உள்ளேயும் பல அறைகளில் ஆருடமும் குறியும் கேட்டப் பட்டவாறு இருந்ததைக் கண்ட உத்தமி மங்கை வேந்தனும் அவன் தோழர்களும் இருந்த அறைக்குச் சென்றாள். அறை திறந்தே இருந்தது. அங்கே மங்கை வேந்தனும் தோழர்களும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

“குறி கேட்கிறீர்களா ஐயாக்களே?” என்று கேட்டபடி முகத்தைக் காட்டினாள் உத்தமி.

மங்கை வேந்தன் அவளைப் பார்த்தானே தவிர அழைக்க வில்லை.

“மன்னவா! ஊர் முழுவதுமே குறி சொல்வதும் ஆருடம் சொல்வதுமாக இருக்கிறது. சத்திரத்தில் கூட அப்படித் தான் இருக்கிறது. நமது நிலையும் திருப்திகரமாக இல்லை. இவள் என்ன தான் சொல்கிறாள் என்று பார்ப்போமே” என்று சொன்ன சாயைப் பிடிப்பான் உத்தமியை உள்ளே அழைத்து அமர வைத்து மங்கை வேந்தனுக்குக் குறி சொல்லும் படிக் கேட்டுக் கொண்டார்.

உத்தமியும் மங்கை வேந்தனின் வலது கையைப் பிடித்து தன் கையில் இருந்த கோலால் தடவிய படி பொதுவாக ஏதேதோ கூறினாள். “நீங்கள் ஏதாவது கேட்க விரும்பினால் கேளுங்கள் ஐயா” என்றாள்.

மங்கை வேந்தனுக்கு நாகசாமி சிற்பியைப் பற்றிய எண்ணமே ஓடிக் கொண்டிருந்ததால் “நாங்கள் இங்கே வந்த நோக்கம் நிறைவேறுமா பெண்ணே?” என்று கேட்டான்.

அவள் கண்களை மூடி ஏதேதோ மந்திரங்களை உச்சரிப்பது போல் பாவனை காட்டினாள்.

அருகேயிருந்து நரியொன்று ஊளையிட்டது.

★★★



மகாசேனர்

நரி ஊளையிட்டதுமே கண்களைத் திறந்தாள் உத்தமி. அவளது முகமும் மலர்ந்தது.

"குறி சொல்பவர்களுக்கு நரியின் ஊளைச் சத்தம் நல்ல சகுனம் ஐயா" என்று சொல்லி விட்டுக் கோலால் கையை அழுத்தித் தடவி விட்டு அதில் எதையோ பார்ப்பது போல் பார்த்து "உங்கள் நோக்கம் நிறைவேறும். உங்கள் காரியம் நடக்கும். உங்களுக்கு உதவுவதற்காகவே ஜேஷ்டா தேவி ஒருவரை அனுப்பி வைப்பார். அவரைப் பற்றிக் கொள்ளுங்கள். வெற்றி நிச்சயம்" என்றாள்.

"பெண்ணே! எங்களுக்கு உதவுபவரை நாங்கள் எப்படி அடையாளம் காண்பது?" என்று கேட்டார் சாயைப் பிடிப்பான்.

உத்தமி மங்கை வேந்தனின் கையை மீண்டும் கோலால் தடவி விட்டுக் கண்களை மூடினாள். பிறகு கண்களைத் திறந்து "அவர் ஒரு ஜோதிடராக இருப்பார் அவரது வலது நெற்றியில் பெரியதொரு மச்சம் இருக்கும்" என்றாள்.

"மிகவும் நன்றி பெண்ணே" என்று சொன்ன மங்கை வேந்தன் ஒரு தங்க நாணயத்தைக் கொடுத்தான்.

அவள் புறப்பட்டுச் சென்றதும் தாளுதுவானுக்குக் கண்ஜாடை காட்டினான் மங்கை வேந்தன்.

அதையடுத்து உத்தமியைக் கண்காணிக்கப் புறப்பட்டார் தாளுதுவான்.

"மன்னவா! நாம் திரிகோணமலையை விட்டு வந்து ஒருவாரம் ஆகப் போகிறது. கொள்ளைக் காரன் சிபிசோரனின் மனைவி மருதியோடும் அவளது ஆட்களோடும் நமது தோலா வழக்கரையும், நீர் மேல் நடப்பானையும் அனுப்பியிருக்கிறோமே, அவர்கள் நிலை என்னவாகியிருக்கும்?" என்றார் நிழலில் ஒதுங்குவான்.

"நமது பாதையில் அவர்கள் வராமல் இருக்க வேண்டும் என்பதற்காகவே அவ்விருவரையும் அவர்களோடு அனுப்பி

வைத்தோம். அவர்களது பணி கொள்ளையர்களை மட்டக் களப்பிற்கு அழைத்துச் செல்வது அல்ல. பயண வழியில் சமயம் பார்த்து அவர்களை ஏமாற்றி விட்டுத் திரிகோணமலைக்குத் திரும்பி நமக்காகக் காத்திருக்க வேண்டியது தான். இதிலொன்றும் சிரமம் இருக்கப் போவதில்லை. அநேகமாக அந்த இருவரும் திரிகோணமலைக்கு இந்நேரம் திரும்பியிருப்பார்கள்" என்றான் மங்கை வேந்தன்.

"நாம் தேடும் சிற்பி நாளை நடக்கும் மாநாட்டிற்காவது வருவார் என்று நம்பலாமா?"

"நான் அப்படித் தான் நினைக்கிறேன். அவர் யந்திர சூட்சுமங்களை அமைப்பவராதலால் இது போன்ற மாநாடுகளுக்கு மட்டும் தான் வரக் கூடியவராக இருப்பார்."

"நம்மோடு வண்டியில் வந்த முதியவரைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?"

"சந்தேகமே வேண்டாம். அந்த முதியவர் நாகைச் சிற்பி தசவதனன் தான். நாம் அவனை அறுத்து விட்டு இலங்கைக்குக் கிளம்ப முற்பட்டோம். ஆத்திரமடைந்த அவன் நாகையிலேயே என்னைத் தீர்த்துக் கட்ட முயன்று தோற்றான். பிறகு நம்மை அறியாமல் நம்மைத் தொடர்ந்து இலங்கைக்கும் வந்திருக்கிறான். முதியவர் வேடம் தரித்து இங்கேயும் வந்து விட்டான். நம்மை இங்கே தீர்த்துக் கட்ட முயற்சிக்கலாம். அல்லது நமது உதவியோடு நாகசாமியை அணுகி யந்திர சூட்சுமத்தை அறிய முயலலாம். எதுவானாலும் நாளைக்குத் தான் தெரியும்" என்றான் மங்கை வேந்தன்.

இந்த நிலையில் குறி சொன்ன பெண்ணைக் கண்காணிக்கச் சென்ற தாளுதுவான் திரும்பி வந்து 'மன்னவா! அவள் நம்மை விட்டு அகன்று வேறு சிலருக்குக் குறி சொன்னாள். சத்திரக் காரர்கள் வெளியேறச் சொன்னதால் குறி சொல்லும் பிற பெண்களோடு சேர்ந்து அவளும் வெளியேறி விட்டாள்" என்றார்.

★

மறுநாள் காலை விமரிசையாகவே துவங்கியது சிற்பிகள் மாநாடு.

சாதாரணமாக புத்தமதத்தின் வட இலங்கை மாகாணங்களுக்குத் தலைவரான பிரதான ஆசாரியார் விழாக்களுக்கு வருவதில்லை.

"எனக்கேற்ற விழா என்றைக்குக் கொண்டாடப் படுகிறதோ அன்று தான் நான் வருவேன். அப்படியொரு விழா என்

வாழ்நாளில் வரப்போவதுமில்லை. நானும் வரப் போவதில்லை" என்று சொல்லி விழாக்களைத் தவிர்த்து வந்தார் அவர்.

பிரதான தலைவரும் மகா தேரருமான மகாசேனர் இவ்வாறு ஆணவமாகப் பேசுவது பிட்சுக்களுக்குப் பிடிக்க வில்லை என்றாலும் அவர்தான் நிரந்தரத் தலைவர் என்று கருதப் பட்டு வந்ததால் அவரது ஆணவத்தை ஜீரணித்துக் கொண்டு தொடர்ந்து அவருக்கு அழைப்பு விடுத்துக் கொண்டே வந்தார்கள்.

சில சமயங்களில் வடஇலங்கை மன்னர்கள் கூட அவரை அழைத்ததுண்டு.

"மன்னா! எனக்கு எல்லாமே தூசுகளாகவே தெரிகின்றன. தூசுகள் வேண்டுமானால் கோபுரத்தில் வந்து ஒட்டிக் கொள்ளலாமே தவிர கோபுரம் தூசுகளைத் தேடி என்றைக்குமே செல்லாது. அதோடு விழாக்கள் உங்களைப் போன்று விழக்கூடிய விரைவு மனிதர்களுக்கேயன்றி என்னைப் போன்ற தொழக் கூடிய நிறைவான துறவிகளுக்கு அல்ல" என்று சொல்லுவார்.

அதற்குப் பின் மன்னர்கள் எந்த விழாவிற்கும் அவருக்கு அழைப்பு விடுவதில்லை. முடிசூடும் விழாவிற்குக் கூட அவரை அழைக்காத போது தான் தன்னிலை புரிந்தது மகாசேனருக்கு. அளவுக்கு மீறி அலட்டிக் கொண்டதும் புரிந்தது. அலட்டலைத் தொடர்ந்தால் தன்னிலை அவலநிலைக்குச் சென்று விடும் என்பதை உணர்ந்து அவர் தவித்த போது புளியங்குளத்தில் நடைபெறவிருந்த சிற்பிகள் மாநாட்டிற்கு அழைத்தார்கள் பிட்சுகள்.

அந்த விழாவில் கலந்து கொள்வது தான் நல்லது என்று கருதிய அவர் பிடியை விட்டுக் கொடுக்காமல் "உங்களுக்கெல்லாம் எத்தனை முறை சொல்வது? திரும்பத் திரும்ப அழைக்கிறீர்களே! நான் மகாமேரு. பொம்மையல்ல நீங்கள் உங்கள் இஷ்டப்படி ஆட்டி வைக்க" என்றார்.

"அதற்கில்லை ஐயா. இலங்கையைப் பொறுத்த வரை சிற்பக் கலைக்கு அடிப்படையாக இருந்து வருவது தாங்கள் தான். பௌத்தத் துறவிகள் தான். அவர்கள் இல்லை என்றால் இலங்கையில் சிற்பக்கலை இல்லை. ஆகவே தாங்கள் இந்த மாநாட்டிற்கு வந்து தலைமை தாங்குவது மிகவும் சிறப்பானது. இந்த மாநாட்டில் நூற்றுக்கும் மேற்பட்ட சிற்பிகள் வருகை தருகிறார்கள். இலங்கையில் உள்ள எல்லாச் சிற்பிகளையும் ஒரு சேரக் காண்பது மிகவும் அரியது. நீண்ட காலமாக நடைபெறாமலிருந்த மாநாடு தங்கள் காலத்தில் நடைபெறுவது

எங்கள் பாக்கியம். சிற்பிகளும் நீங்கள் வந்து தலைமை தாங்காவிட்டால் மாநாட்டை நிறுத்தி விடுவோம் என்று சொல்கிறார்கள்" என்றார்கள் பிட்சுகள்.

"மன்னனை அழைப்பது தானே? நான் எதற்கு?" என்றார் மகாசேனர்.

"சிற்பிகள் மாநாட்டிற்குத் தாங்கள் தலைமை வகிப்பதே பொருத்தமானது. சிற்பிகள் தங்களைத் தான் விரும்புகிறார்கள்."

இதற்கு மேல் பிடிவாதம் பிடித்தால் வாய்ப்பு பறிபோய் விடும் என்பதை உணர்ந்த மகாசேனர் "விழா மகத்தானதாக இருக்க வேண்டும். வரவேற்பு பிரம்மாண்டமானதாக இருக்க வேண்டும். எனது எழுபது வயதானதைக் குறிக்கும் வகையில் நான் பவனி வரும் தேருக்கு முன்னும் பின்னும் எழுபது யானைகள் வர வேண்டும். எழுபது வாத்தியங்கள் இசைக்கப் பட வேண்டும். எழுபது சிற்பிகள் பேச வேண்டும்" என்றெல்லாம் ஒரு பட்டியலைச் சொன்னார்.

பிட்சுகளுக்கு வியப்பாக இருந்தது.

மகாசேனரின் எதிர்பார்ப்பு மன்னனை விடப் பெரிதாக இருந்ததால் மலைத்துப் போனார்கள்.

யானைகளுக்கு எங்கே போவது என்று அவர்களுக்கு விளங்கவில்லை.

எனவே "யானைகளை ஏற்பாடு செய்வது எங்கள் சக்திக்கு அப்பாற்பட்டது. மன்னரால் தான் முடியும்" என்றார்கள்.

"ஏற்பாடு செய்யும் படி மன்னனிடம் சொல்லுங்கள். நான் சொன்னேன் என்று சொல்லுங்கள். முடியாதென்று சொல்லி விடுவானா மன்னன்?" என்று கேட்டார் மகாசேனர்.

பிட்சுகள் மகாபாடுகளைப் பட்டு மகாசேனர் விரும்பியபடி மகோன்னதமாக ஏற்பாடுகளையும் வரவேற்புகளையும் செய்து சிற்பிகள் மாநாட்டைத் தொடங்கி வைத்தார்கள்.

அதையெல்லாம் கண்டபிறகு "ஆஹா! விழா என்றால் எவ்வளவு பிரம்மாண்டம்? ஆரவாரம்? அமர்க்களம்? இவற்றை யெல்லாம் வறட்டு கௌரவம் பேசி இவ்வளவு காலமாக இழந்து விட்டோமே! இனி ஒரு விழாவையும் புறக்கணிக்கக் கூடாது. உயிர்போகும் வரை விழாக்களில் தொடர்ந்து பங்கேற்க வேண்டும். ஒவ்வொரு நாளும் ஒரு விழா என்று நடக்க வேண்டும். இதுவே என் லட்சியம்" என்று எண்ணிப் பெருமிதப் பட்டுக் கொண்டார் மகாசேனர்.

சிற்பிகள் ஒவ்வொருவராகப் பேசியபோது அவரைப் புகழ்ந்தார்கள். ஆனால் அனைவரும் அதில் மட்டுமே ஈடுபட்டதால் மகாசேனருக்குக் கடுப்பு உண்டாயிற்று. புகழ்ச்சிகள் செயற்கையாக இருந்தன. யாரோ சொல்லிக் கொடுத்து ஒவ்வொரு சிற்பியும் பேசுவது போல் தோன்றவே ஆசனத்தை விட்டு எழுந்து "போதும்" என்று கைகளை உயர்த்தினார்.

"இது என்ன மாநாடு? ஒருவர் பின் ஒருவராக என்னைப் பாராட்டுவது தான் மாநாட்டின் நோக்கமா? நீங்கள் எல்லாம் புகழ்ந்தால் தான் எனக்குப் புகழ் வந்து சேருமா? நான் யாரும் எட்ட முடியாத உயரத்தில் ஏற்கனவே இருந்து கொண்டிருக்கிறேன். என்னை உயர்த்த வேண்டுமானால் இன்னொரு உலகத்தைச் சிருஷ்டி செய்து தான் என்னை அமர்த்த வேண்டும். உங்கள் புகழுரைகள் எல்லாம் மலரில்லாத நார்கள். மரமில்லாத வேர்கள். அவற்றால் எனக்கு ஒரு பயனுமில்லை. எனக்கு விருது வழங்குகிறார்களாம். அதை புத்த மகாசபை அங்கீகரிக்க வேண்டுமாம். இதென்ன பிதற்றல். புத்த மகாசபையை நான் தான் அங்கீகரிக்க வேண்டும். என்னை அங்கீகரிக்க அவர்கள் யார்? புத்த மகாசபை எனக்கு ஏவல் செய்யும் சபை. ஏற்றம் தரும் சபை. உங்கள் விருதுகளை எருதுகளுக்கு வழங்குங்கள். எனக்கு வேண்டாம். நான் விழாக்களுக்கு வருவதில்லை. வராமலிருப்பதையே விரதமாகக் கொண்டவன் நான். சிற்பிகள் மாநாடு என்று சொல்லி இந்த பிட்சுகள் என்னிடம் மன்றாடியதால் தான் அரைமனதோடு ஒப்புக் கொண்டேன். ஆனால் இங்கே வந்த பிறகு தான் இங்கு வந்திருப்பது சிற்பிகள் அல்ல காக்கைக் கூட்டங்கள் என்று புரிந்தது. மகா கேவலம். இலங்கை முழுவதிலிருந்து வந்திருக்கும் சிற்பிகளான உங்களுக்குப் பேசுவதற்கு விஷயம் இல்லாமல் போய் விட்டதா? மாநாடு என்று கூட்டி விட்டு ஒருவர் கூட சிற்பக்கலையைப் பற்றியும் அதன் சிறப்பு பற்றியும், நுட்பங்களைப் பற்றியும் பேச வில்லை. அப்படிப் பேசுவதற்கு இங்கே யாரும் இல்லையா? இல்லையென்றால் இது மாநாடு இல்லை. மகாகேடு. இத்துடன் நிறுத்திக் கொள்ளலாம்" என்றார் கடுமையான குரலில்.

மகாசேனர் இவ்வாறு பேசியது அங்கே அமர்ந்திருந்த மங்கை வேந்தனுக்கும் அவனது தோழர்களுக்கும் பின் வரிசையில் ஜோதிடர் வேடத்தில் தசவதனனுக்கும், சற்று தள்ளி அமர்ந்திருந்த உத்தமிக்கும் ஆறுதலாக இருந்தது.

அப்போது பிட்சு ஒருவர் எழுந்து மகாசேனரிடம் ஏதோ பேசி விட்டு "இப்போது மகா சிற்பியான நாகசாமி அவர்கள்

பேசுவார்" என்றதும் மங்கை வேந்தன் மகிழ்ந்தான். தசவதனனும் மகிழ்ந்தான்.

நாகசாமி சிற்பியைக் கண்டதும் "அரங்கா!" என்று மனதில் சொல்லிக் கொண்டான் மங்கை வேந்தன்.

தசவதனனுக்கோ பொன்னால் ஆன புத்தர் சிலை தன் கைகளுக்கு வந்து விட்ட மாதரி இருந்தது.

உத்தமிக்கு தசவதனனுடன் வானில் பறப்பது போல் இருந்தது.

மங்கை வேந்தனின் தோழர்கள் அரங்கனை வேண்டிக் கொண்டார்கள்.

நாகசாமிக்கு வயது எழுபது இருக்கலாம். ஆனாலும் இரும்பு மனிதரைப் போல உறுதியாக இருந்தார். கற்களில் கலை வண்ணம் கண்டவராதலால் அவரது உடம்பும் கல்வண்ணம் பெற்றிருந்தது.

அவர் பேச முற்பட்டு "நான் தமிழகத்தில் இருந்த சோழ நாட்டுச் சிற்பி. கருங்கற்களைக் கொண்டு உறுதியான சிற்பங்களைப் படைத்திருக்கிறேன். நாகைப் பட்டினத்தில் நாகானன விஹாரத்தையும் உருவாக்கியவன் நான். அந்த உருவாக்கம் மிகச் சிறந்தது என்று என்னால் சொல்ல முடிந்தாலும் தொண்டை மண்டலத்தில் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு அரசாட்சி செய்யும் பல்லவர்கள் புதுமுறையில் சிற்பங்களை அமைத்திருப்பதைக் கண்ட போது வியந்து போனேன். இவையல்லவா சிற்பம் என்று அசந்து போனேன். அவர்கள் கருங்கற்களுக்கு மாறாக மணற் பாறைகளைக் கண்டு பிடித்தார்கள். அவை மிருதுவானவை. உளிகளுக்கு ஒத்துழைப்பவை. அப்பாறைகள் மாமல்லபுரம் என்னும் அவர்களது துறைமுகப் பட்டினத்தில் இயற்கையாகவே அமைந்திருந்ததால் அப்பாறைகளைச் செதுக்கிக் கோயில்களாகச் சமைத்திருக்கிறார்கள். கடற்கரையில் மணற்பாறைகளால் ஆன எழில் மிகுந்த கோயிலை எழுப்பி'பிருக்கிறார்கள். அப்பாறைகளைக் காஞ்சிக்கு எடுத்துச் சென்று ராஜ சிம்மப் பல்லவர் எழிலார்ந்த சிவாலயத்தை உருவாக்கியிருக்கிறார். அவற்றை நேரம் போவது தெரியாமல், வைத்த கண் வாங்காமல் பார்த்து ரசித்துக் கொண்டே இருக்கலாம். அப்பாறைகள் சிற்பிகளுக்கு லகுவானதாக இருக்கின்றன. அந்த அரியவகைப் பாறைகள் இலங்கையில் இல்லை. எனவே பல்லவநாட்டிலிருந்து மணற் பாறைகளைக் கொண்டு வந்து இங்கே புத்த விஹாரம் ஒன்றை எழுப்ப வேண்டும் என்பது என் அவா. அது நிறை

வேண்டுமானால் இங்கே வீற்றிருக்கும் சிற்ப ரட்சகரான ஆச்சார்யர் மனம் வைக்க வேண்டும். அவரன்றி யாராலும் அதைச் செய்ய முடியாது" என்று கூறி முடித்தார்.

மகாசேனர் எழுந்து "சிற்பி நாகசாமி அவர்களின் பேச்சு தான் மாநாட்டிற்கு உரிய பேச்சு. அரிய பேச்சு. அற்புதமான பேச்சு. அவர் தெரிவித்த தகவல் மிக முக்கியமானது. இலங்கை மன்னனை பல்லவ மன்னனோடு தொடர்பு கொண்டு மணற் பாறைகளைக் கொண்டு வரவும் இங்கே புத்த விஹாரத்தை எழுப்பவும் உறுதி கூறுகிறேன். அந்த விஹாரத்தை நாகசாமியே அமைப்பார்" என்று கூறி அவருக்குப் பணமுடிப்பைப் பரிசாகத் தந்தார்.

மங்கை வேந்தன் நிழலில் ஒதுங்குவானைப் பார்த்து "நீ நாகசாமியின் இருப்பிடத்தை அறிந்து வா" என்றான்.

தசவதனன் உத்தமியைப் பார்த்து சமிக்ஞை செய்தான்.

நிழலில் ஒதுங்குவானும் உத்தமியும் அகன்ற பிறகு தசவதனன் மங்கைவேந்தனை அணுகி "நீங்கள் நாகசாமியைச் சந்திப்பதற்காகத் தானே வந்திருக்கிறீர்கள்? நாளை காலை உங்களைச் சந்திக்கிறேன். உங்களுக்கு உதவுகிறேன். சத்திரத்திலேயே இருங்கள்" என்று கூறிவிட்டு அகன்றான்.

★★★



தசவதனின் திட்டமும் முடிவும்

மாநாடு நல்லபடியாக முடிந்தது. பல்வேறு சிற்பிகளின் பாராட்டுரைகளால் மகிழாத மகாசேனர் நாகசாமி ஒருவரது பேச்சில் மகிழ்ந்தார். திருப்தியடைந்தார்.

மாநாடு முடிந்தபிறகு சிறிது நேரம் வரை நாகசாமியிடம் பேசி விட்டே மேடையை விட்டு அகன்றார் மகாசேனர்.

ஒரு சில நிமிடங்களில் எல்லோரது கவனத்தையும் ஈர்த்திருந்த நாகசாமி அவற்றால் ஆர்ப்பரித்துக் கொள்ளாமல் அமைதியாகவே நடந்து சென்றார்.

சத்திரத்திற்குத் தனது தோழர்களோடு வந்த மங்கை வேந்தன் "நாகசாமியைப் பார்த்தாகி விட்டது. அவரது இருப்பிடத்தை நிழலில் ஒதுங்குவான் கண்டு பிடித்து வந்து விடுவார். அவரிடம் நாகானன விஹாரத்து யந்திர சூட்சுமத்தை எப்படி அறிவது?" என்று கேட்டான்.

"நேரடியாகக் கேட்டால் சொல்ல மாட்டார்" என்றார் தோலாவழக்கர்.

"மாநாட்டுப் பந்தலில் நமக்கு உதவுவதாக ஒருவர் சொன்னாரே அவர் யார்?" என்று கேட்டார் சாயை பிடிப்பான்.

"குறி சொன்ன பெண்மணி நமக்கு ஒருவர் உதவுவார் என்று சொன்னாளே, அந்த நபர் அவராகத் தான் இருக்குமோ?" என்று வினவினார் தாளுதுவான்.

"அவரைப் பார்த்தால் ஜோதிடரைப் போலத் தெரிகிறது. ஆனாலும் நம்மிடம் நாகசாமியைப் பற்றி அவன் வினவியது தான் புரியவில்லை" என்றார் நீர்மேல் நடப்பான்.

"அந்த மனிதர் தசவதனன் தான். சந்தேகமே இல்லை. குறி சொன்ன பெண்மணி உத்தமியாகவே இருக்க வேண்டும். இருவரும் ஏதோ திட்டம் போட்டுத் தான் நடந்து கொள்கிறார்கள். நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்" என்றான் மங்கை வேந்தன்.

"சிர்'பி நாகசாமி புளியங்குளத்தில் வசிப்பவராக எனக்குத் தோன்றவில்லை. மாநாட்டிற்காக இங்கே வந்திருப்பார் என்றே தோன்றுகிறது. அப்படி இருக்கும் பட்சத்தில் அவர் இங்கே தங்க மாட்டார். இன்றிரவு இருந்து விட்டு மறுநாள் கிளம்பி விடுவார். அதற்குள் அவரிடமிருந்து ரகசியத்தை அறிய வேண்டும்" என்றார் தோலா வழக்கர்.

"நிழலில் ஒதுங்குவான் வரட்டும். என்ன செய்தி சொல்கிறார் என்று பார்ப்போம். அதற்குப் பிறகு முடிவு செய்வோம்" என்றான் மங்கை வேந்தன்.

இது ஒரு புறமிருக்க -

நள்ளிரவு நேரத்தில் தங்கும் விடுதிக்கு வந்த உத்தமி நாகசாமி தங்கியிருக்கும் இடத்தைச் சொன்னதும் அவளைக் கட்டிக் கொண்டான் தசவதனன்.

"விடுங்கள். ஒரே அலுப்பாக இருக்கிறது" என்று சொல்லி அவனிடமிருந்து விலகினாள் உத்தமி.

"நாம் சொர்க்கலோகம் படைக்கும் நாள் வந்து விட்டது உத்தமி. நாளை பொழுது விடிந்ததும் நாகசாமியைச் சந்தித்து ரகசியத்தை அறிவேன். அடுத்து நாம் நாகைக்குச் செல்கிறோம். தங்கச் சிலையைக் கடத்துகிறோம். அதற்குப் பிறகு நீ சொல்லும் நாட்டிற்குச் சென்று நமக்கென்று ஓர் ஆட்சியை-ராஜ்யத்தை அமைப்போம். தினமும் கூடிக் கூடிக் குதுகலிப்போம்" என்றான் தசவதனன்.

அவன் குரலிலேயே குதூகலம் இருந்தது.

"அவரிடமிருந்து ரகசியத்தை எப்படி அறிவீர்கள்?"

"அதை நீயே நாளைக்குப் பார்."

"ரகசியத்தை அறிந்து கொள்வது உங்களுக்கு எளிதானதாக இருக்கலாம். ஆனால் புத்தர் சிலையைக் கடத்துவது எளிதானதாக இருக்காது."

"எனக்கு கஷ்டமான காரியம் ஒன்றே ஒன்று தான்."

"என்ன அது?"

சொன்னான் அவன்.

"உங்களுக்கு வெட்கம் என்பது அறவே இல்லை. சீ."

"உத்தமி! இந்த இரவு இன்ப இரவு. இனிமையான இரவு. இணையில்லாத இரவு."

"எதற்காக இந்தச் சொல் மழை?"

"நீ ஒத்துழைத்தால் இந்த இரவே காம மழையை உண்டாக்கலாம்."

"உங்களுக்கு வேறு வேலையே இல்லையா?"

"உன்னை இணங்க வைப்பது தான் எனக்கு கஷ்டமான காரியம் என்றேனே, இப்போது ஒப்புக் கொள்கிறாயா?"

"நாளைக்கு முக்கிய வேலை காத்துக் கொண்டிருக்கும் போது இது எதற்கு இப்போது?"

"இதற்குப் போதுகள் ஏது? ஆணும் பெண்ணும் தான் தேவை. நேரகாலம் பற்றிய கவலை இல்லை. அதோடு ஆனந்தமான நிலை தற்போது. இப்போது அனுபவிக்காமல் வேறு எப்போது அனுபவிப்பது?"

"சரி"

"மறக்க முடியாத அனுபவமாக இருக்க வேண்டும்."

"சரி..."

"வா. அடுத்த அறைக்குப் போவோம்."

"அங்கு எதற்கு?"

"வா. போகலாம்."

இருவரும் சென்றார்கள்.

தசவதனன் பணியாளனை அழைத்து ஏதோ சொன்னான்.

அவன் கேட்ட வஸ்து குவளையில் வந்தது.

கதவைத் தாளிட்ட தசவதனன் "இந்த எண்ணெயை நாம் இருவரும் பூசிக் கொள்ள வேண்டும்."

"அது எதற்கு?"

"பூசிக் கொள். பிறகு பார்."

குவளையில் இருந்த எண்ணை அவர்களது அங்கங்களைத் தழுவியது.

அவர்கள் புதிய சொர்க்கத்திற்குச் சென்றார்கள்.

"இதையெல்லாம் எங்கே கற்றீர்கள்? புதியதாக அல்லவா இருக்கிறது?" என்று ஆனந்தக் கிறக்கத்துடன் கேட்டாள் உத்தமி.

"இது போல் நிறைய இருக்கின்றன. நீ அசந்து போவாய். .ுதிர்ந்து போவாய்" என்று ஆனந்தக் களிப்பில் சொன்னான் ுசவதனன்.

". ுதெல்லாம் எனக்கு வேண்டும்."

"நிச்சயமாகக் கிடைக்கும்."

"ஆலிநாட்டு மன்னரிடம் என்ன பேசினீர்கள்?"

"நாகசாமி விஷயத்தில் உதவுவதாகவும் இந்தச் சத்திரத்திற்கு வரும்படியும் சொன்னேன். நீதானே குறி சொன்னாய்?"

"அவருக்கு என்ன உதவியைச் செய்வீர்கள்?"

"நாளைக்கு நான் நாகசாமியிடம் சென்று யந்திர சூட்சுமத்தை அறிவேன். மங்கை வேந்தன் உதவி கோரி என்னிடம் வருவான். அவனிடம் யந்திர சூட்சுமத்தைப் பற்றித் தவறான தகவலைச் சொல்லித் திசை திருப்புவேன். அவன் ஏமாறுவான். நான் சிலையைக் கவர்வேன்" என்று சொன்ன தசவதனன் விடியும் வரை அவளை விடாமல் தூய்த்து விட்டு நாகசாமியைச் சந்திக்கத் தயாரானான்.

உத்தமி அணிந்திருந்த நகைகளையெல்லாம் கேட்டான்.

"அவை எதற்கு?"

"நாம் பெறப் போவது மாபெரும் ரகசியம் அதற்கு என்னிடம் உள்ள தங்கக் காசுகள் மட்டும் போதாது. உன் நகைகளையும் கொடு. பலமாகக் கவனித்தால் தான் காரியம் நடக்கும். தங்கச் சிலை நமக்குக் கிடைத்து விட்டால் உனக்கு இரண்டு மடங்கு நகைகளை நான் வாங்கித் தருகிறேன். மகத்தான எதிர்காலம் நமக்காகக் காத்திருக்கிறது. கேள்விகளைக் கேட்காமல் நகைகளைக் கழற்று" என்றான் தசவதனன்.

அவள் எதுவும் பேசாமல் நகைகளைக் கழற்றிக் கொடுத்தாள். நகைகளைத் தனியாகவும் நாணயங்களைத் தனியாகவும் வைத்துக் கொண்ட தசவதனன் அவளை அழைத்துக் கொண்டு சிற்பி நாகசாமியின் இருப்பிடத்திற்குச் சென்றான்.

நாகசாமியின் இருப்பிடம் புளியங்குளத்தின் எல்லைப் பகுதியில் தனித்து இருந்தது. அவரது இருப்பிடத்தைத் தவிர சுற்றுப் புறத்தில் வேறு எந்த குடியிருப்பும் இல்லை. ஆட்களின் நடமாட்டமும் இல்லை. அதுவும் நல்லது தான் என்று கருதிய தசவதனன் நாகசாமியின் இருப்பிடத்திற்கு முன்னால்இருந்த ஆலமரப் பகுதியில் உத்தமியை இருக்கும் படிக் கூறிவிட்டு அவன் மட்டும் உள்ளே சென்றான்.

நாகசாமியின் இருப்பிடம் பெரிதாக இருந்தது. மாளிகையைப் போல் இருந்தது. மாளிகையின் கதவுகள் சாத்தப் பட்டிருந்தன. தசவதனன் கதவைத் தட்டினான்.

திறக்கவில்லை.

தட்டினான்.

திறக்கவில்லை.

குரல் கொடுத்தான்.

கதவு திறந்தது. நாற்பது வயது மதிக்கத் தகுந்த ஒரு மனிதர் வந்தார்.

"கதவைத் தட்டினேன். திறக்கவில்லையே?" என்று வினவினான் தசவதனன்.

"இங்கே நாய்களும் குரங்குகளும் கூடக் கதவைத் தட்டுகின்றன. ஆகவே தான் திறப்பதில்லை" என்றார் அந்த மனிதர்.

தசவதனனுக்குக் கோபம் கிளர்ந்தாலும் அடக்கிக் கொண்டு "நீங்கள் சொல்வது சரிதான். சிற்பியார் நாகசாமி அவர்களைச் சந்திக்க வேண்டும்" என்றான்.

"அவர் யாரையும் சந்திக்க விரும்பவில்லை" என்றார் அந்த மனிதர்.

தசவதனன் உத்தமியின் நகைகள் இருந்த முடிப்பை எடுத்து "இதை வைத்துக் கொள்ளுங்கள்" என்றான்.

அந்த மனிதனும் அதை வாங்கிப் பிரித்துப் பார்த்து விட்டு "உள்ளே வாருங்கள்" என்றான்.

"செல்வம் வேலை செய்வது போல எதுவும் வேலை செய்யாது. செல்வம் என்ற ஒன்று கண்டு பிடிக்கப் படாமல் இருந்திருந்தால் இந்த உலகமே இயங்கமுடியாமல் ஸ்தம்பித்துப் போயிருக்கும்" என்று சொல்லிக் கொண்டு உள்ளே நுழைந்தான் தசவதனன்.

"உட்காருங்கள்" என்று ஆசனத்தைக் காட்டினான் அந்த மனிதன்.

"என்ன விஷயமாகச் சிற்பியைச் சந்திக்க வேண்டும்?" என்று கேட்கவும் செய்தான்.

"அது பற்றி அவரிடம் தான் பேச வேண்டும். ரகசியமானது" என்றான் தசவதனன்.

"எதுவாக இருந்தாலும் என்னிடம் தான் முதலில் சொல்ல வேண்டும். நான் போய் அவரிடம் கூறுவேன். அவர் சம்மதித்தால் மட்டுமே அவரிடம் செல்ல உங்களை அனுமதிப்பேன்."

"அவருக்குக் கொடுக்கத் தங்க நாணயங்களைக் கொண்டு வந்திருக்கிறேன்."

"என்ன கொண்டு வந்திருந்தாலும் இதுதான் நடைமுறை."

"தசவதனன் விவரத்தைச் சொன்னான்.

தங்க நாணயங்களை வாங்கி எண்ணிப் பார்த்துக் கொண்ட அந்த மனிதன் உள்ளே சென்றான்.

அரை நாழிகை கழித்து வெளியே வந்த மனிதன் "உள்ளே வாருங்கள்" என்று கூறி தசவதனனை உள்ளே அழைத்துச் சென்றான்.

உள் அறை ஒன்றுக்குச் சென்றதும் தசவதனின் கன்னத்தில் ஓங்கி ஓர் அறை கொடுத்த அந்த மனிதன் "உங்களுக்கெல்லாம் வேறு வேலை இல்லை? புத்தியில்லை? கண்டவர்களிடம் சொல்லுவதற்காகவா யந்திர கூட்சுமங்கள் அமைக்கப் படுகின்றன? அவரை என்னவென்று நினைத்தக் கொண்டிருக்கிறீர்கள்? முட்டாள்களே! மூடர்களே!" என்று சகட்டு மேனிக்குத் திட்டி விட்டு கண்டபடி அடிக்கவும் தொடங்கினார்.

தாக்குதல் எதிர்பாராததாகவும் பலமாகவும் இருந்ததால் தசவதனன் திணறினான். அவன் பதில் தாக்குதல் தொடுக்க இடமளிக்காமல் கட்டைகளால் அடித்து நொறுக்கினார் அந்த மனிதர். ரத்த காயங்களும் ரத்தப்பெருக்கும் ஏற்பட்டதாலும் மூச்சு திணறியதாலும் மயங்கி விழுந்தான் தசவதனன்.

அந்த மனிதர் கட்டைகளை எரிந்து விட்டு கட்டையைப் போல் கிடந்த தசவதனனை இழுத்துச் சென்றார். மாளிகைக்கு வெளியே இழுத்துப் போய் ஆலமரத்தடியில் போட்டு விட்டுத் திரும்பினார்.

மாளிகைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டார்.

ஆலமரத்திற்குப் பின்னால் நின்றிருந்த உத்தமி முன்னால் வந்து தசவதனனைக் கண்டாள். அதிர்ந்து போனாள். இப்படியொரு திருப்பத்தை அவள் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. தசவதனன் எதற்காக இப்படித் தாக்கப் பட்டான் என்பது அவளுக்கு விளங்க வில்லை. அவனது காயங்களைக் கண்டாள். பல இடங்களில் தோல் உரிந்து ரத்தம் பெருகிக் கொண்டிருந்தது. மூக்கு உடைந்து ரத்தம் ஒழுகிக் கொண்டிருந்தது. மண்டையிலும் பலமான தாக்குதல் நடைபெற்றிருந்ததற்கு அடையாளமாக அங்கேயும் ரத்தம் வடிந்து கொண்டிருந்தது. கால்களில் சேதம் உண்டாகி ஓரிடத்தில் எலும்பு தெரிந்தது. நெற்றியில் வெட்டு விழுந்திருந்தது.

அவனை உடனடியாக வைத்தியசாலையில் சேர்த்தால் தான் அவன் உயிர் பிழைப்பான் என்பதும் உயிர் பிழைத்தாலும் பூரண குணமாகி இயங்குவதற்குப் பலமாதங்கள் ஆகும் என்பதும் உத்தமிக்குப் புரிந்தது. அவனை அந்த நிலைக்குக் கொண்டு வர

பெரும் செல்வம் தேவை. தன்னிடம் இருந்த நகைகளும் போய் விட்டதால் வைத்தியம் செய்வற்கு அவளிடம் ஒரு காசும் இல்லை.

யோசித்தாள் உத்தமி.

யந்திர சூட்சுமங்களை அறிந்து தங்கச் சிலையை கவருவதற்கு தசவதனன் மட்டும் முயலவில்லை. மங்கை வேந்தனும் முயல்கிறான்.

தசவதனின் நிலையோ கவலைக்கிடமாக இருக்கிறது. அவனைப் பிழைக்க வைக்கப் பொருள் சம்பாதிக்க வேண்டும். சம்பாதித்து வைத்தியம் பார்த்த பிறகு அவன் உடல்நலம் தேறி முயற்சி செய்ய வேண்டும். அதற்குப் பலமாதங்கள் ஆகும்.

ஆனால் அதற்குள் மங்கை வேந்தன் ரகசியத்தை அறிந்து கொண்டு தங்கச் சிலையைக் கவர்ந்து கொண்டால் தான் ஏமாற வேண்டியதாக இருக்கும். தசவதனனைக் காப்பாற்றுவது அர்த்தமில்லாமல் போய் விடும். தனது நிலைமை மோசமாகுமே தவிர உயராது.

உத்தமி யோசித்தாள்.

"தசவதனன் யார்? என் கணவனா? இல்லை. ஆருயிர்க் காதலனனா? இல்லை. நாடாளும் மன்னனா? இல்லை. படைநடத்தும் தளபதியா? இல்லை. பெரும் செல்வந்தனா? இல்லை. அந்தஸ்தை இழந்த சிற்பி. ஆற்றல்களை இழந்த சிற்பி. சிலைகளை உருவாக்கிச் சம்பாதிக்க முடியாத மனிதன். குறுக்கு வழியைப் பெரிதாக எண்ணி வெற்றிபெற முடியாமல் குற்றுயிரும் கொலையுயிருமாய்க் கிடக்கும் துரதிருஷ்டசாலி. இனி இவன் எழுந்து நின்று எழுச்சி பெறுவதென்பது முறிந்து போன தேரைப் பழுது பார்ப்பது போன்ற காலவிரயமான காரியமாகும். இத்தனைக்கும் அவன் தனக்குக் கொடுத்திருக்கும் அந்தஸ்து அடிமை என்பது தான்" என்று நினைத்த உத்தமி ஒரு முடிவுக்கு வந்தாள்.

★★★



உத்தமியின் விவரணம்

உடைந்து போன பாண்டத்தை ஒட்டுவதற்கு உத்தமி விரும்பவில்லை. ஊசிப் போன பண்டத்தை உண்பதற்கு அவள் முயலவில்லை. புத்தர் சிலை கிடைத்தபின் தனக்குச் சொர்க்க லோகத்தைப் படைப்பதாக தசவதனன் சொன்னதெல்லாம் தண்ணீரில் எழுதிய வார்த்தைகளாகி விட்டன. காற்றில் கரைந்தொழிந்த நறுமணமாகி விட்டன. அவனால் தனக்கு உயர்வைத் தரமுடியாது. தரும் நிலையில் அவனில்லை. அவனது உடல் தேறினாலும் மனம் தேறும் என்று சொல்ல முடியாது. தன்னை ஏமாற்ற முயன்றாலும் முயலலாம். கொல்லுவதற்குக் கூடத் தயாராகலாம். அப்படிப்பட்டவனுக்கு எதற்குச் சிகிச்சை அளிக்க வேண்டும். அணைந்து கொண்டிருக்கும் தீபத்தைத் தூண்டி பிரகாசத்தைப் பெறலாம். ஆனால் அழிந்து கொண்டிருக்கும் தசவதனனைக் காப்பாற்றிப் பயன் பெற முடியாது என்று கருதிய உத்தமி அவனது உடலை இழுத்து யாரும் காணமுடியாத அளவிற்குப் புதருக்குள் தள்ளினாள்.

மங்கை வேந்தன் தங்கியிருந்த சத்திரத்தை நோக்கிச் சென்றாள்.

இதற்கிடையில் மங்கை வேந்தனிடம் வந்த நிழலில் ஒதுங்குவான் "மன்னவா! தசவதனன் சிற்பி நாகசாமியின் இருப்பிடத்திற்குச் சென்றான். குற்றுயிரும் கொலையுயிருமாக மயங்கிய நிலையில் வெளியே கொண்டு வந்து வீசப்பட்டான். என்ன நடந்தது என்று தெரியவில்லை. நிச்சயமாக யந்திர சூட்சுமம் அவனுக்குத் தெரிந்திருக்க முடியாது" என்றார்.

"சூட்சுமம் தெரியாமல் போனால் போகிறது. அவனை யார் அடித்திருப்பார்கள். சிற்பி நாகசாமி அப்படிச் செய்திருப்பார் என்று தோன்றவில்லை" என்றான் மங்கை வேந்தன்.

"சிற்பி நாகசாமி அந்த இடத்தில் இருக்கிறாரா என்று எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. அவருக்குப் பதிலாக முரடர்கள் உள்ளே

இருந்து கொண்டு அவனைத் தாக்கியிருக்கலாம்" என்றார் நிழலில் ஒதுங்குவான்.

"நாகசாமி அங்கே இருப்பதாகச் சொன்னது நீ தானே?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"அது நேற்றைய இரவு நிலை. இன்றைக்கு மாறியிருக்கலாம்."

"பொழுது விடிவதற்குள் சிற்பி அங்கிருந்து வெளியேறியிருக்க வாய்ப்பில்லை நண்பா. அவர் அந்த இல்லத்தில் தான் இருக்கிறார். அவரோடு வேறு சிலரும் இருக்கலாம். அவர்கள் தசவதனனைத் தாக்கியிருக்கலாம்" என்று சொன்ன மங்கை வேந்தன் "தசவதனின் நிலை என்ன?" என்று கேட்டான்.

"மயங்கிய நிலையில் அவனைப் பார்த்து விட்டு நான் வந்து விட்டேன். ஒருவேளை அவனது கூட்டாளியான உத்தமி அங்கே இருக்கலாம். அவனைக் கவனித்துக் கொண்டிருக்கலாம்" என்றார் நிழலில் ஒதுங்குவான்.

"அப்படித் தான் இருக்கும். எப்படி இருந்தாலும் நாம் செயல்பட வேண்டியது தான். நாகசாமியை நான் சந்திப்பது என்று முடிவு செய்து விட்டேன்" என்றான் மங்கை வேந்தன்.

"வேண்டாம் மன்னவா. இப்போது தான் தசவதனன் தாக்கப் பட்டிருக்கிறான். இந்த நிலையில் தாங்கள் போவது நல்லதல்ல" என்றார் நிழலில் ஒதுங்குவான்.

அந்த நிலையில் அங்கு வந்தாள் உத்தமி.

அவளைப் பார்த்ததும் எல்லோருமே சற்று அசரவே செய்தார்கள்.

"வணக்கம் செலுத்துகிறேன் மன்னர் பெருமானே! என்னைத் தாங்கள் மறந்திருக்க மாட்டீர்கள்" என்றாள் உத்தமி பணிவான குரலில்.

"அது இருக்கட்டும். தசவதனன் எங்கே?" என்று நேரடியாகவே விஷயத்திற்கு வந்தவனாய் வினவினான் மங்கை வேந்தன்.

"தங்களுக்கு எல்லாமும் தெரியுமா?" என்று கேட்டான் உத்தமி.

"தெரியும். உனக்கும் அவனுக்கும் உள்ள உறவு பற்றியும் தொடர்பு பற்றியும் தெரியாது. அது தெரிய வேண்டிய அவசியமும் இல்லை" என்றான் மங்கை வேந்தன்.

"பிறகு "நீ இங்கே எதற்காக வந்தாய்? நான் கேட்ட கேள்விக்கு உன் பதில் என்ன?" என்று வினவினான்.

"மன்னர் பெருமானே! நான் அவரது கூட்டாளி. அதைத் தவிர எங்களுக்குள் எந்த ஒட்டும் இல்லை. உறவும் இல்லை. சிற்பி நாகசாமியிடம் சென்று நாகானன விஹாரத்தில் இருக்கும் யந்திர சூட்சுமத்தை அறிந்து கொண்டு பொன்னாலான புத்தர் சிலையைக் களவாடவே நாங்கள் சிற்பியின் இருப்பிடத்திற்குச் சென்றோம்" என்றாள் உத்தமி.

"தெரிந்த விஷயங்களைச் சொல்ல வேண்டியதில்லை பெண்ணே. தசவதனன் இப்போது எங்கே?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"அவர் உயிரோடு இல்லை ஐயா. இறந்து விட்டார்" என்று ஒரு குண்டைப் போட்டாள் உத்தமி.

"என்ன ஆயிற்று அவனுக்கு?" என்று உணர்ச்சி வசப்படாமல் கேட்டான் மங்கை வேந்தன்.

"சிற்பியின் இல்லத்திற்குச் சென்றார். கதவைத் தட்டினார். திறக்கவில்லை. குரல் கொடுத்தார். கதவு திறந்தது. நாற்பது வயது மதிக்கத் தகுந்த ஒரு மனிதர் வந்து உள்ளே அழைத்துச் சென்றார். அங்கே என்ன பேசினார்களோ-செய்தார்களோ தெரியவில்லை. ஒரு நாழிகை கழிந்த பிறகு அந்த மனிதர் தசவதனனை இழுத்து வந்து ஆலமரத்தடியில் போட்டு விட்டுப் போனார். அவருக்காகக் காத்திருந்த நான் அவரது நிலையைக் கண்டு அதிர்ந்தேன். அவர் மயக்கமாக இருந்தார். மண்டை உடைந்திருந்தது. பல இடங்களில் ரத்தம் பெருகிக் கொண்டிருந்தது. நான் அருகே இருந்த தடாகத்தில் எனது ஆடையை நனைத்துக் கொண்டு வந்து அவரது முகத்தில் பிழிந்து துடைத்து விட்டேன். அவர் கண்களைத் திறந்தார். கண்களில் பயம் தெரிந்தது. அடிக்காதே அடிக்காதே என்று முனகினார். நான் உத்தமி. பயப்படாதீர்கள் என்றேன். அவரது கண்களில் நீர் பெருகியது. அழாதீர்கள். உங்களுக்கு என்ன ஆயிற்று என்று கேட்டேன். அதற்கு அவர் பதில் சொல்லாமல் எனக்கொரு உதவி செய் என்றார். சொல்லுங்கள் என்றேன். சிற்பி நாகசாமியிடமிருந்து நாகானன விஹாரத்து யந்திர சூட்சுமத்தை அறிந்து கொண்டு விட்டேன். ஆனால் என்னால் நாகப் பட்டினத்திற்கு வரமுடியாது. இன்னும் கொஞ்ச நேரத்தில் என் உயிர் பிரிந்து விடும். ஆகவே யந்திர சூட்சுமத்தை இங்கே இருக்கும் மங்கை வேந்தரிடம் சொல்லிவிடு. வி:ஹாரத்தில் இருக்கும் பொற்சிலையைக் கவர்ந்து அவராவது திருப்பணிக்குப் பயன்படுத்திக் கொள்ளட்டும் என்று சொல்லி யந்திர சூட்சுமத்தைச் சொன்னார். நானோ அவருக்கு வைத்தியம் பார்ப்பதாகச் சொன்னேன். வைத்தியம் பயனளிக்காது என்று

சொன்ன அவர் உனக்கு நான் தருவதாகச் சொன்ன பங்கைத் தரமுடியவில்லை. அதை மங்கை வேந்தரிடம் பெற்றுக் கொள். யந்திர சூட்சுமம் பற்றி இங்கே சொல்லாதே. நாகப் பட்டினத்திற்குச் சென்றபின் சொல்லி உனக்குரிய பங்கைப் பெற்றுக் கொண்டு சந்தோஷமாக இரு என்றார். உங்களை யார் அடித்தது என்று கேட்டேன். அவர் பதில் சொல்லவில்லை. இறந்து விட்டார்" என்றாள் உத்தமி. கண்கள் கலங்கி நீர் பெருகியது.

"நல்லது உத்தமி. நீ எப்போது விரும்புகிறாயோ அப்போது சொல் யந்திர சூட்சுமத்தை. நீ கோரும் பங்கைத் தருவதில் எனக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை. நாளைக்கு நாம் திரிகோண மலைக்குப் போகிறோம். நீ போய் நீராடி விட்டு ஓய்வெடு. எந்தக் கவலையும் கொள்ளாதே" என்று அவளிடம் சொன்ன மங்கை வேந்தன் சாயைப் பிடிப்பானிடம் "இவளை அழைத்துச் சென்று கவனி. மிகவும் துயரப் பட்டிருக்கிறாள். ஆறுதல் கூறி உணவுக்கு ஏற்பாடு செய். அவளை எங்கேயும் அலைய விடாதே. இங்கேயே ஓய்வெடுக்கட்டும்" என்றான்.

சாயை பிடிப்பான் அவளை உள்ளே அழைத்துச் சென்றதும் தோலா வழக்கனைப் பார்த்த மங்கை வேந்தன் "நீயும் நானும் நாகசாமியிடம் செல்லலாம் வா" என்றான்.

"ரகசியம் தான் உத்தமியிடம் வந்து விட்டதே! நீங்கள் போக வேண்டுமா?" என்று கேட்டார் நிழலில் ஒதுங்குவான்.

"இவ்வளவு தூரம் வந்து விட்டுச் சந்திக்காமல் செல்வது சரியல்ல" என்று கூறிய மங்கை வேந்தன் "உத்தமி இந்த இடத்தை விட்டு வெளியே செல்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள். நான் நாகசாமியிடம் செல்வது அவளுக்குத் தெரிய வேண்டாம்" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான்.

சிற்பியிடம் எப்படிப் பேசவேண்டும் என்பதையும் சிற்பியின் இருப்பிடத்தில் இருக்கும் போது எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றியும் தோலா வழக்கனிடம் விளக்கிய மங்கை வேந்தன் "முடிந்தவரை நீயே பேசு. தேவைப் பட்டால் நான் பேசுகிறேன்" என்றான்.

"அப்படியே ஆகட்டும் மன்னவா. அதே சமயம் தசவதனன் அங்கே சென்று தாக்குதலுக்கு இலக்காகி இரண்டு நாழிகைகள் தான் ஆகியிருக்கின்றன. இந்த நிலையில் நாமும் இப்போதே செல்வது சரியா?" என்று கேட்டார் தோலாவழக்கர்.

அதோடு அவரே தொடர்ந்து "தாக்கப்பட்ட தசவதனன் இறந்து விட்டதாக உத்தமி சொல்கிறாள்" என்றார்.

"எதுவானாலும் நாம் தாமதிக்க முடியாது நண்பா. நாகசாமியின் இருப்பிடம் தற்போது இங்கிருந்தாலும் அவர் புளியங்குளத்தைச் சேர்ந்தவராக இருப்பார் என்று எனக்குத் தோன்றவில்லை. மாநாட்டிற்காக வந்து அந்த இல்லத்தில் தங்கியிருக்க வேண்டும். மாநாடு முடிந்து விட்டது. தசவதனன் விஜயம் வேறு நடந்திருக்கிறது. இந்த நிலையில் சிற்பி அந்த இடத்தைக் காலி செய்து விட்டுப் புறப்பட்டாலும் வியப்பதற்கில்லை. ஆகவே தாமதிக்காமல் சென்று அவரைச் சந்திப்பதே சரி. அவரை விட்டு விட்டால் பிடிக்க முடியாது" என்றான் மங்கை வேந்தன்.

"யந்திர ரகசியத்தைப் பற்றித் தசவதனன் அறிந்திருக்கிறான். உத்தமியிடம் சொல்லியிருக்கிறான். அது போதாதா நமக்கு?"

"உத்தமி அந்த ரகசியத்தை நம்மிடம் கூறவில்லை. நாகப் பட்டினத்திற்கு வந்த பிறகுதான் செல்வாள் என்று தோன்றுகிறது. ஆகவே அவளை மட்டுமே நம்பி நாகசாமியைச் சந்திக்காமல் இருப்பது பெருந்தவறு. வா போகலாம்."

நாகசாமியின் இல்லத்திற்குச் சென்று குரல் கொடுத்தார் தோலாவழக்கர்.

அதே மனிதர் வந்து கதவைத் திறந்து "என்ன விஷயம்?" என்றார் கண்டிப்பான குரலில்.

"ஐயா! வணக்கம். இவர் சோழ மண்டலத்தில் உள்ள ஆலிநாட்டு மன்னர் பரகாலர். சோழ மன்னரின் ஆத்ம நண்பர். சிற்பியார் நாகசாமியைச் சந்திக்க வேண்டும்" என்றார் தோலா வழக்கர்.

"உள்ளே வாருங்கள். ஆசனங்களில் அமருங்கள்" என்றார் மனிதர்.

அமர்ந்தார்கள்.

"சிற்பியைத் தேடி இங்கே எப்படி வந்தீர்கள்? அவர் இங்கு வருவது உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டார் மனிதர்.

"எங்களுக்கு அது தெரியாது. இங்கே சிற்பிகள் மாநாடு நடக்கிறது என்பது தெரியும். அதற்கு அவர் வருவார் என்று நாங்கள் நினைத்து வந்தோம். நேற்றிரவு அவர் மாநாட்டு மேடைக்கு வந்து மணற்பாறைச் சிற்பங்களைப் பற்றிப் பேசிய போது அவரைக் கண்டு மகிழ்ந்தோம். இருப்பிடத்தைக் கண்டு பிடித்து அவரைச் சந்திக்க வந்திருக்கிறோம்" என்றார் தோலாவழக்கர்.

"உங்களைப் பார்த்தால் நல்லவர்களாகத் தோன்றுகிறது. சற்றுமுன் இங்கே வந்த ஒருவனை நன்றாக அடித்து விரட்டினேன். உங்களையும் அப்படிச் செய்யும் படியாக நேர்ந்து விடக் கூடாது என்று விரும்புகிறேன். பேசாமல் எழுந்து சென்று விடுங்கள். யந்திர சூட்சுமத்தைப் பற்றிய அறிய வந்திருக்கிறேன் என்று சொல்லித் தாக்குதலுக்கு இலக்காகி மரணத்தைத் தழுவாதீர்கள்."

மங்கை வேந்தன் குறுக்கிட்டு "உங்கள் ஊகம் தவறு. நீங்கள் குறிப்பிடுவது நாகப் பட்டினத்தில் இருக்கும் நாகானன விஹாரத்து யந்திர சூட்சுமத்தைத் தான் என்று நினைக்கிறேன். நாங்கள் அதைப் பற்றிப் பேசவரவில்லை. பேசுவதற்கு அதில் எதுவும் இல்லை. விஹாரத்தின் யந்திர சூட்சுமங்கள் அகற்றப்பட்டு பொன்னால் ஆன புத்தர் சிலை களவாடப்பட்டு ஒரு மாத காலம் ஆகிவிட்டது. அழிக்கப்பட்ட யந்திர சூட்சுமத்தைப் பற்றி பேசுவதற்கு என்ன இருக்கிறத? நான் தற்போது திருவரங்கத்தில் பெரிய பெருமாள் கோயில் திருப்பணியைச் செய்து வருகிறேன். கோபுரத் திருப்பணி நடந்து கொண்டிருக்கிறது. அதில் சிற்பக் கலையில் கைதேர்ந்த சிற்பிகள் அனைவரது கைவண்ணமும் இருக்க வேண்டும் என்பது எங்கள் அவா. நாகசாமியும் மகா சிற்பிகளில் ஒருவர். சோழ நாட்டவர். அவரது கைவண்ணமும் கோபுரத் திருப்பணியில் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அவரை அழைத்துச் செல்வதற்காகவே நானே நேரில் வந்திருக்கிறேன். அவரைச் சந்தித்து விண்ணப்பிக்க வேண்டும்" என்றான்.

யந்திர சூட்சுமம் அகற்றப்பட்டு விட்டது என்று சொன்ன போதே அந்த மனிதனின் முகம் மாறிப் போனதை மங்கை வேந்தன் கவனிக்கவே செய்தான்.

"இருங்கள். இதோ வந்து விடுகிறேன்" என்று கூறி உள்ளே சென்றார் அந்த மனிதர்.

"அவர் முகத்தில் மாற்றத்தைக் கவனித்தாயா?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"கவனித்தேன். மன்னவா. ஆனால்..."

"ஆனால் என்ன?"

"பொய் சொல்லியிருக்கிறீர்கள். அதை நிலை நிறுத்த வேண்டும். சிற்பி அதை நம்ப வேண்டும்."

"முயல்வோம்" என்றான் மங்கை வேந்தன்.

இதற்கிடையில் உள்ளேயிருந்து யாரோ கோபமாகப் பேசும் குரல் எழுந்தது. மங்கை வேந்தனோடு பேசிய மனிதனின் குரலும் கேட்டது.

அரை நாழிகை கழித்து வெளிப்பட்ட மனிதன் மங்கை வேந்தனை மட்டும் உள்ளே அழைத்துச் சென்றான்.

உள்ளே சிற்பி நாகசாமி தூணைப் பிடித்த படி நின்றிருந்தார்.

மங்கை வேந்தனைப் பார்த்தார். ஏற இறங்கப் பார்த்தார்.

"நீங்கள் தான் ஆலி நாட்டு மன்னர் என்பதற்கு என்ன அத்தாட்சி?" என்று கேட்டார்.

"என்ன அத்தாட்சி இருந்தால் நீங்கள் நம்புவீர்கள்?" என்று நிதானமாகக் கேட்டான் மங்கை வேந்தன்.

அதற்குச் சிற்பியால் பதில் கூற முடியவில்லை.

சற்று பொறுமையோடு இருந்து யோசித்து விட்டு "நாகானன விஹாரத்தில் அமைக்கப்பட்டிருந்த யந்திர சூட்சுமம் அழிக்கப் பட்டு விட்டது என்று உங்களால் சத்தியம் செய்ய முடியுமா?" என்று கேட்டார்.

★★★



நாகசாமியும் மங்கை வேந்தனும்

மங்கை வேந்தன் அசரவில்லை.

"முடியாது" என்றான் திடமான குரலில்.

"ஏன்?" என்று கேட்டார் சிற்பி.

"சிற்பி! நான் இங்கே வந்தது நாகானன விஹாரத்தைப் பற்றியோ அதிலிருந்த யந்திர சூட்சுமத்தைப் பற்றியோ உங்களிடம் பேசுவதற்காக அல்ல. ஆலிநாடு நாகைக்கு அருகில் இருக்கும் நாடு. நாகையில் நடப்பது ஆலி நாட்டிற்குத் தெரியும். நேரிலும் பார்த்து விட்டேன். நீங்கள் அதை நம்ப வேண்டும் என்பது என் எதிர்பார்ப்பு அல்ல. உங்களை நம்ப வைப்பது என் வேலையும் அல்ல. நீங்கள் நம்பா விட்டால் எனக்கு எந்தக் கவலையும் இல்லை. தேவையில்லாத விஷயத்தில் சத்தியம் செய்வது எனக்கு வழக்கமல்ல" என்றான் மங்கை வேந்தன்.

நாகசாமியின் ரத்தம் கொதித்தது. கோபத்திற்கு ஆளான அவர் "அவமானம். இது பெரிய அவமானம். சிற்பிக்கு ஏற்பட்ட அவமரியாதை. நாகப் பட்டினத்தில் இருக்கும் பௌத்தர்கள் ஏமாற்றுக்காரர்கள். யந்திர சூட்சுமத்தை அமைத்த போது அதைக் கட்டிக்காப்பதாகப் பிரமாணம் செய்து விட்டு இப்போது முதுகில் குத்தி விட்டார்கள்" என்றார் கோபத்துடன்.

அவரோடு இருந்த மனிதர் பேச முற்பட்டு "உங்களுக்கு மட்டுமே தெரிந்த யந்திர சூட்சுமம் மற்றவர்களுக்கு எப்படித் தெரிய முடியும்? எதற்காகப் பௌத்தர்களைக் கோபிக்கிறீர்கள்? விஹாரத்தின் பாதுகாப்பிற்காக அவர்கள் அமைக்கச் சொன்ன சூட்சுமத்தை அவர்களே எப்படி அழிப்பார்கள்?" என்று கேட்டார்.

நாகசாமி அதற்கு பதில் சொல்லாமல் "ஆலிநாட்டு மன்னருக்கு முன்னால் இங்கு வந்தவன் யந்திர சூட்சுமத்தை அறிந்து கொள்வதற்காக வந்ததாகச் சொன்னான். இவரோ சூட்சுமத்தை அழிந்து விட்டதாகச் சொல்கிறார். இதில் எது உண்மை?" என்று கேட்டார்.

மனிதர் மங்கை வேந்தனைப் பார்த்து "இதற்கு நீங்கள் தான் பதில் சொல்ல வேண்டும்" என்றார்.

"நான் எதற்காகப் பதில் சொல்ல வேண்டும்? எனக்கு முன்னால் வந்தவருக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? அவர் பேசியதற்கு நான் என்ன பதில் கூற முடியும்? அது குறித்து நீங்கள் விசாரித்துக் கொள்ளுங்கள். என்னிடம் எதற்காகச் சம்பந்தமில்லாதக் கேள்விகளைக் கேட்கிறீர்கள்? சிற்பியாரே! நான் இங்கே வந்த காரணத்தைப் பற்றி விசாரிக்காமல் எனக்குத் தேவையற்ற கேள்விகளை என்னிடம் கேட்பது சரியா? அரங்கன் கோயில் திருப்பணியில் உங்கள் கைவண்ணம் இருக்க வேண்டும் என்று ஆலிநாட்டிலிருந்து நானே வந்திருப்பதைக் கருத்தில் கொள்ளாமல் முடிந்து போன விஷயத்தைப் பற்றி என்னிடம் விசாரிக்கிறீர்களே! உங்களுக்கு விருப்பம் இல்லையென்றால் சொல்லி விடுங்கள். தேவையற்ற பேச்சு எதற்கு?" என்றான் மங்கை வேந்தன்.

சிற்பி நிலைகுலைந்தவராக அங்கிருந்த ஆசனத்தில் அமர்ந்து கொண்டு அருகில் இருந்த மனிதரைப் பார்த்து "தர்மா! நீ போய் இருவருக்கும் பருகுவதற்கு மோர் கொண்டு வா" என்றார்.

மங்கை வேந்தன் பேச முற்பட்டு "சிற்பியாரே! தமிழகத்துச் சிற்பியான உங்களுக்குத் திருவரங்கத்தின் பெருமையைப் பற்றிக் கூறத் தேவையில்லை. அரங்கனின் மகிமையைப் பற்றி நீங்கள் அறியாமல் இருக்க மாட்டீர்கள். நிச்சயமாக அது பூலோக வைகுண்டம் தான். பக்தர்களைத் தன்பால் ஈர்த்து உரிய காலத்தில் மோட்சத்தை வழங்கும் எம்பெருமானே அரங்கன். அவனது ஆலயத்தில் திருப்பணிகளைச் செய்கிறேன் என்றால் அது நான் முந்தையப் பிறவிகளில் செய்த புண்ணியமேயன்றி வேறில்லை. அப்புண்ணிய காரியத்தில் பலரையும் சேர்த்துக் கொண்டிருக்கிறேன். தமிழகத்தில் மட்டுமின்றி கங்கநாட்டிலிருந்தும் ராஷ்டிர கூட நாட்டிலிருந்தும் சிற்பிகளை வரவழைத்து திருப்பணிகளைச் செய்து வருகிறேன். நானாக அழைப்பது போக தாமாகவே சிற்பிகள் பலர் வந்து தங்களது சிற்பம் ஒன்றாவது கோபுரத்தில் இடம்பெறவேண்டும் என்று ஈடுபாடு காட்டி வருகிறார்கள். நீங்கள் நாகானன விஹாரத்தில் யந்திர கூட்சுமத்தை அமைத்தது பற்றிப் கேள்விப்பட்டேன். யந்திர கூட்சுமம் இன்றைக்கு அந்த விஹாரத்தில் அழிந்து விட்டாலும் அந்த நுட்பம் உயிரோடு தான் இருக்கிறது. நீங்களும் உயிரோடு இருக்கிறீர்கள். ஆகவே உங்கள் எ ஸவண்ணமும் அங்கே இடம் பெற வேண்டும் என்று விரும்பி முற்பட்ட போது தான் நீங்கள் இலங்கைக்கு இடம் பெயர்ந்து விட்டதை அறிந்தேன். எப்படியாவது உங்களைச் சந்தித்து விடுவது என்ற

வைராக்கியத்துடன் இலங்கைக்கு வந்தேன். இங்கே சிற்பிகள் மாநாடு நடப்பதாகச் செய்தி கிடைத்தது. இலங்கையில் கால் வைத்த வேளை நல்ல வேளை என்று கருதி இங்கே வந்தேன். மாநாட்டில் நீங்கள் பங்கு கொண்டு பேசிய போது மகிழ்ந்தேன். உங்கள் இருப்பிடத்தை அறிந்து இங்கு வந்தேன். என் வேண்டுகோளை நீங்கள் ஏற்க வேண்டும்" என்றான்.

மனம் ஒடிந்த நிலையில் இருந்த நாகசாமிக்கு மங்கை வேந்தனின் பேச்சு ஆறுதலாக இருந்தது.

"ஆலி நாட்டு மன்னரே! உங்கள் திருப்பணி மகத்தானது தான். அதே சமயம் நான் அமைத்த யந்திர சூட்சுமமும் மகத்துவமானது தான். அது அழிக்கப் பட்டு விட்டது என்றால் என்னால் வேதனையைத் தாங்க முடியவில்லை" என்றார்.

"சிற்பியாரே! இதற்காக மனத்தை விடலாமா? மிக அரிய சிற்பங்களும் கட்டுமானங்களும் காலத்தால் அழிவது உண்டு தானே? அதற்காக நாம் என்ன செய்ய முடியும்? சிற்பங்களை வடிப்பதோடு சிற்பியின் கடமை முடிந்து விடுகிறது. அதற்குப் பிறகு காலம் தான் சிற்பங்களைத் தாங்குகிறது. புகழுக்கு வழி வகுக்கிறது. முடிவில் அழிவையும் சந்திக்கிறது" என்றான் மங்கை வேந்தன்.

"சிற்பங்கள் அழியலாம். ஆனால் பாதுகாப்பு காரணமாக மிகவும் சிரமப்பட்டு அமைக்கப்படும் நுட்பமான யந்திர சூட்சுமமும் அழியும் என்றால் அதற்கென்ன சிறப்பு இருக்க முடியும்?"

"ஐயா! நீங்கள் கருவூலம் போன்ற பெட்டகங்களுக்குப் பாதுகாப்ப செய்ய யந்திர சூட்சுமங்களைச் செய்திருந்தால் அது சரி. நீங்களோ வழிபாட்டிற்குரிய விஹாரத்திற்குச் செய்திருக்கிறீர்கள். அங்கே இருக்கும் பொற்சிலைக்குப் பாதுகாப்பு வேண்டும் என்று பௌத்தர்கள் உங்களை விட்டு யந்திர சூட்சுமங்களை அமைத்திருக்கலாம். ஆனால் புத்தரை வழிபட விரும்பும் பௌத்தர்கள் எல்லாத் திசைகளிலிருந்தும் வருகிறார்கள். அவர்களுக்கு அந்த விஹாரத்தில் இருக்கும் புத்தரைக் காண வேண்டும் என்றும் வழிபட வேண்டும் என்று ஆசையாக இருக்கும் அல்லவா? பூட்டிக் கிடக்கும் விஹாரத்தை உடைக்க முயல்வது இயல்பு தானே?"

"ஆலிநாட்டு அரசே! இது உடைக்கக் கூடிய விஷயமல்ல" என்று சொன்ன சிற்பி நாகசாமி யந்திரச் சூட்சுமத்தைப் பற்றி விளக்கி "அந்த நுட்பம் எனக்கு மட்டுமே தெரியும். வேறு யாருக்கும் தெரியாது. யாராலும் அதை உடைக்க முடியாது" என்றார்.

ரகசியம் வெளிப்பட்டது மங்கை வேந்தனுக்குத் திருப்தியாக இருந்தது. அதை அறிவதற்காகத் தான் போட்ட தந்திரம் பலித்து விட்டதில் பெரும் ஆறுதலை அடைந்தான். இருப்பினும் உணர்ச்சி வசப்படாமல் "சிற்பியாரே! சிற்பங்களையும் சிற்பங்கள் நிறைந்த ஆலயங்களையும் தகர்க்கக் கூடிய அளவிற்குச் சீனநாட்டு அதிர்வெடிகள் தமிழகத்திற்கு வந்து கொண்டிருக்கின்றன. பாறைகளைப் பிளக்கவும் அவை பயன்படுகின்றன. ஆற்றுக்குள் புதைந்திருக்கும் பாறைகளை அந்த வெடிகளைப் பயன்படுத்திப் பிளக்கிறார்களாம். அவற்றுக்கு முன்னால் யந்திர சூட்சுமம் என்ன செய்யும் என்று யோசித்துப் பாருங்கள். எனக்குத் தெரிந்த வரையில் நாகையில் இருக்கும் பௌத்தர்கள் மாந்தரீகர்களை வரவழைத்து யந்திர சூட்சுமங்களை அறிந்து அழித்து விட்டு புத்தர் சிலையைக் கொண்டு போய் விட்டார்கள்."

சிற்பி மிகவும் நொடிந்து போனவராக அமர்ந்திருந்தார். அவரது ஜீவன் சக்தியற்று போய் விட்ட மாதிரி இருந்தது.

இதற்கிடையில் தர்மர் மோர் நிறைந்த குவளையுடன் அங்கே வந்தார்.

சிற்பியோ அதை அருந்தவில்லை. அவர் அருந்தாததால் மங்கை வேந்தனும் அருந்தவில்லை.

தர்மர் சிற்பியைப் பார்த்து "அருந்துங்கள் ஐயா. காலையிலிருந்து நீங்கள் எதுவும் அருந்தவில்லை" என்றார்.

"பானத்தை அருந்துவதற்கும் பண்டங்களை உண்பதற்கும் எனக்குத் தகுதி இல்லை தர்மா. சமணர்களைப் போலச் சல்லேகனை புரிந்து இறந்து விடலாமா என்று யோசிக்கிறேன்" என்றார் சிற்பி.

"நீங்கள் பௌத்தர். சல்லேகனைக்கும் உங்களுக்கும் சம்பந்தமில்லை" என்றார் தர்மர்.

"செத்தபின் பௌத்த உடல் சமண உடல் என்று வேறு வேறாகச் சொல்ல முடியாது தர்மா. உயிர் இருக்கும் வரை தான் வித்தியாசம். குரோதம் எல்லாம். சாவதற்கு எந்த வழியாக இருந்தால் என்ன? போகப் போவது உயிர்தானே?" என்றார் சிற்பி.

மங்கை வேந்தன் பேச முற்பட்டு "ஐயா, நடந்து முடிந்து விட்டதையே நினைத்துக் கொண்டிருந்தால் வேதனை தான் மிஞ்சும். நாகானன விஹாரத்து யந்திர சூட்சுமம் அழிந்திருக்கலாம். ஆனால் நீங்கள் இருக்கிறீர்கள். உங்கள் கைகளில் யந்திர சூட்சுமம் இருக்கிறது. அதை இலங்கையில் அமைக்கலாம். நாகையில் அமைத்ததை விடச் சிறப்பாகவும் அமைக்கலாம். எதற்காகக் கவலைப் படுகிறீர்கள்? திருவரங்கத்திற்கு வாருங்கள்.

எனது ஆலயத் திருப்பணியில் கலந்து கொள்ளுங்கள். மனம் அமைதியடையும். கவலைகள் அகலும். தெம்பு பிறக்கும்" என்றான்.

"இல்லை அரசே. எனக்குத் தமிழகத்திற்கு வரவே வெட்கமாக இருக்கிறது. அங்கே இருக்கும் பௌத்தர்களைக் கண்டால் கொலை வெறி வந்தாலும் வரும். யார் யாரைக் கொல்வேன் என்று சொல்ல முடியாது."

"இப்போது அதுபற்றி யோசிக்க வேண்டாம். சிலநாட்கள் போகட்டும். பிறகு யோசியுங்கள். நீங்கள் எப்போது வேண்டு மானாலும் திருவரங்கத்திற்கு வந்து திருப்பணியில் பங்கு கொள்ளலாம். நான் புறப்படுகிறேன். உங்களுக்கு என் நன்றி" என்று கூறிவிட்டுப் புறப்பட்ட மங்கைவேந்தன் வெளியே இருந்த தோலாவழக்கனை அழைத்துக் கொண்டு சத்திரத்தை அடைந்தான்.

"உத்தமி என்ன செய்கிறாள்?" என்று கேட்டான்.

"உறங்கிக் கொண்டிருக்கிறாள்" என்றார் நிழலில் ஒதுங்குவான்.

"நாம் இன்று மாலையே புறப்படுகிறோம். மொத்தம் எத்தனை பேர்?"

"நாம் அறுவர். உத்தமி ஒருத்தி. மொத்தம் ஏழு."

"ஏழு பேர் ஒரே வண்டியில் பயணம் செய்ய முடியாது. இரண்டாவது வண்டிக்கு ஏற்பாடு செய் தாளுதுவான். நாம் வந்த வண்டியைச் சாயை பிடிப்பான் தயார் செய்யட்டும். இரண்டும் ஆயத்தமானதும் நாம் புறப்படுவோம்" என்று சொன்ன மங்கை வேந்தன். நிழலில் ஒதுங்குவானைப் பார்த்து "நீ இன்று இரவுக்கு வேண்டிய உணவை சேகரித்து வைத்துக் கொள். பயணத்தின் போது தேவைப்படும் பொருட்கள், நமக்குத் தேவையான ஆடைகள் ஆகியவற்றை நீர்மேல் நடப்பான் ஆயத்தப் படுத்தட்டும்" என்றான்.

தோலா வழக்கனைப் பார்த்து "நீ போய் அந்தப் பெண் உத்தமியை எழுப்பி அழைத்து வா" என்றான்.

உத்தமி வந்தாள்.

"பெண்ணே! தசவதனன் உன்னிடம் என்ன சொன்னான்?" என்று கேட்டான்.

". அதைத் தான் சொன்னேனே மன்னவா" என்றாள்.

"யந்திரச் சூட்சுமத்தை எங்களிடம் கூறும் படி அவன் சொன்னதாகச் சொன்னாய். அந்தச் சூட்சுமத்தை நாகப் பட்டினத்திற்குச் சென்ற பிறகு தான் எங்களிடம் சொல்லும் படிச் சொன்னானா?"

"ஆமாம்."

"எங்களிடம் பங்கு கேட்கும் படியும் அவன் தான் சொன்னானா?"

"ஆமாம்."

"உத்தமி! எங்களுக்கு யந்திர சூட்சுமம் தேவையில்லை. புத்தர் சிலையும் தேவையில்லை. ஆகவே உன் உதவியும் தேவையில்லை. உன்னை நாகப் பட்டினத்திற்கு அழைத்துச் செல்ல நாங்கள் தயாராக இல்லை. நீ உன் வழியில் நாகைக்குச் செல். நாங்கள் இன்று மாலை திரிகோணமலைக்குப் புறப்படுகிறோம்."

"அரசே! தாங்கள் இப்படிப் பேசலாமா? பெண்ணான நான் எப்படித் தனியாக நாகைக்குச் செல்லமுடியும்?"

"நீ சொல்வது உண்மை. அதே சமயம் எங்கள் மீது நம்பிக்கை இல்லாத உன்னை எங்களோடு ஏன் அழைத்துச் செல்ல வேண்டும் சொல்."

"உங்களை நம்பவில்லை என்று நான் சொல்ல வில்லை மன்னவா"

"நம்பிக்கை இருக்குமானால் யந்திர சூட்சுமத்தை இங்கேயே எங்களிடம் சொல்லியிருக்க வேண்டும்."

"உங்களோடு என்னை அழைத்துச் செல்ல வேண்டும் என்பதற்காகத் தான் அப்படிச் சொன்னேன். உண்மையைச் சொல்லி விட்டால் என்னை இங்கேயே விட்டு விடுவீர்களோ என்ற பயத்தில் தான் அவ்வாறு சொன்னேன்."

"யந்திர சூட்சுமமே எங்களுக்கு வேண்டாம் என்று சொல்கிறேன்" என்று சொன்ன மங்கை வேந்தன் "உத்தமி! நாங்கள் யாரென்பதை நீ அறிந்திருக்கலாம். தசவதனன் கூறியிருக்கலாம். ஆனால் இங்கே எதற்காக நாங்கள் வந்தோம் என்பது உனக்குத் தெரியாது. தசவதனனுக்கும் தெரியாது. யந்திர சூட்சுமத்தை அறிவதற்காகத் தான் நாங்கள் வந்திருக்கிறோம் என்று அவன் கூறியிருந்தால் அது பொய். யந்திர சூட்சுமத்தை அறிந்து அதைத் தகர்த்து நாகானன விஹாரத்தில் இருக்கும் பொன்னால் ஆன சிலையைக் கவருவதற்கு நாங்கள் திருடர்கள் அல்ல. நாங்கள் இங்கு வந்ததற்கான காரணம் வேறு. ஆகவே உன்னை நாகைக்கு அழைத்துச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை." என்றான்.

விழித்தாள் உத்தமி.

★★★



மீண்டும் பயணம்

தசவதனன் தனக்கு ஆசைகாட்டிய போது பேராசையில் மூழ்கியவள் உத்தமி.

தன் நிலை உயரும் தனக்குச் செல்வங்கள் வந்து குவியும் என்பதாலேயே அவனோடு ஒத்துழைத்தாள்.

நாகசாமியின் இல்லத்திலிருந்து குற்றுயிரும் கொலையுயிருமாய்த் தசவதனன் வந்து விழுந்த போது அவன் மீதான நம்பிக்கை நசிந்து விடவே அவனைக் காப்பாற்றவும் முன்வராமல் கைவிட்டாள்.

ஆனால் அவன் மூட்டியிருந்த பேராசைத் தீ அணையவில்லை.

மங்கை வேந்தனும் தன்னைப் போலவே யந்திர சூட்சுமத்தை அறிந்து புத்தர் சிலையைக் களவாட முயற்சிப்பதாகத் தசவதனன் கூறியிருந்ததால் மங்கை வேந்தனோடு ஒட்டிக் கொண்டு களவில் பங்கு கொண்டு ஆதாயமடையலாம் என்று தீர்மானித்தாள்.

மங்கை வேந்தனோடு சேருவதற்கு எது சரியான உபாயமாக இருக்கும் என்று யோசித்தாள். யந்திர சூட்சுமத்தைப் பற்றித் தெரிந்த மாதிரி காட்டிக் கொள்வது தான் சரியான வழி என்று முடிவு செய்தாள். அதை முதலிலேயே கூறி விட்டால் தன்னை மங்கை வேந்தன் நாகைக்கு அழைத்துச் செல்ல மாட்டான் என்பதால் நாகைக்குச் சென்றபின் கூறுவதாகச் சொன்னாள்.

ஆனால் தற்போது யந்திர சூட்சுமத்தைப் பற்றியத் தகவலே தனக்கு வேண்டாம் என்று மங்கை வேந்தன் கூறி விட்டதால் செய்வதறியாமல் தவித்தாள்.

சற்றே சுதாரித்துக் கொண்டு "மன்னவா! நாகானன விஹாரத்தில் இருக்கும் பொன்னால் ஆன புத்தர் சிலையைத் தாங்கள் பெற முயற்சிப்பது அரங்கன் கோயில் திருப்பணிக்குத் தானே? தங்கள் சொந்த லாபத்திற்காக அல்லவே! தசவதனனும் அதைத்தான் சொன்னார். அதை ஏன் மறுக்கிறீர்கள்? ஆலயத் திருப்பணிக்கு அந்தச் சிலை உங்களுக்குத் தேவை தானே?" என்று வினவினாள்.

மங்கை வேந்தன் தோலா வழக்கனைப் பார்த்தான்.

தோலா வழக்கன் மங்கை வேந்தனைப் பார்த்தார்.

மங்கை வேந்தன் பேச முற்பட்டு "பெண்ணே! நீ சொல்லும் வார்த்தைகள் உண்மையாக இருக்குமானால் அரங்கன் கோயில் திருப்பணிக்காகத் தான் புத்தர் சிலையைப் பெற முயற்சிக்கிறேன் என்று நீ கருதுகிறாய் என்றால் பங்கு கேட்பது சரியா? யந்திர சூட்சுமத்தைப் பற்றிச் சொல்வதற்கு நேர காலம் குறிப்பது சரியா?" என்று கேட்டான்.

"யந்திர சூட்சுமத்தைப் பற்றி இப்போது நான் சொல்ல வேண்டும். அவ்வளவு தானே?"

"அது உன் விருப்பம். எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் சொல். நாங்கள் ஈடுபடும் இறைவன் தொண்டில் நீயும் உன்னை ஈடுபடுத்திக் கொள். பங்கு என்று இல்லாமல் போனாலும் உனக்கு எல்லா வகையிலும் நாங்கள் ஆதரவாக இருப்போம்."

உத்தமிக்கு நாகப்பட்டினத்திற்குப் போனால் போதும் என்றிருந்தது.

எனவே யந்திர சூட்சுமம் இதுதான் என்று கூறிச் சில தகவல்களைச் சொன்னாள்.

"மகிழ்ச்சி பெண்ணே. எங்களோடு நீ நாகைக்கு வா. எங்களோடு இருந்து உதவு. எல்லாம் நல்லபடியாக இருக்கும்" என்று சொல்லிப் பேச்சை முடித்துக் கொண்டான்.

தோழர்கள் அவன் கூறியபடி அனைத்து ஏற்பாடுகளையும் செய்தார்கள்.

முதல் வண்டியில் மங்கை வேந்தன், தோலா வழக்கன், நீர்மேல் நடப்பான், நிழலில் ஒதுங்குவான் ஆகியோரும் -

இரண்டாவது வண்டியில் சாயை பிடிப்பான், தாளுதுவான், உத்தமி ஆகியோரும் அமர்ந்து கொள்ளப் பயணம் துவங்கியது.

அவர்களுக்குள்ளேயே வண்டியை இயக்கும் பணி நிர்ணயிக்கப் பட்டது.

பயணம் துவங்குவதற்கு முன் தன் தோழர்கள் எல்லோரிடமும் உத்தமியிடம் எச்சரிக்கையாக இருக்கும் படிச் சொன்னான் மங்கை வேந்தன்.

"அவள் மீது உங்களுக்கு நம்பிக்கை இல்லையா?" என்று கேட்டார் தோலாவழக்கர்.

"ஆமாம்" என்றான் மங்கை வேந்தன்.

"அவள் நல்லவள் போல நடிக்கிறாள் என்று நினைக்கிறீர்களா?"

"அவள் எப்படி நடித்தாலும் நமக்கொன்றும் இல்லை."

"பிறகு?"

"அவள் கூறிய யந்திர சூட்சுமம் பொய்யானது."

"எப்படிச் சொல்கிறீர்கள்?"

"உண்மையான சூட்சுமத்தை நாகசாமி என்னிடம் கூறினார். உத்தமி வேறு எதையோ கூறுகிறாள்."

"நாகசாமி கூறிய சூட்சுமம் பொய்யாக இருக்கலாம் அல்லவா?"

"அவர் பொய் கூற வேண்டிய அவசியம் இல்லை. அவரோடு நான் பேசியது தான் அதற்குச் சாட்சி. அதோடு அவர் கூறிய விவரப்படி தசவதனனிடம் அவர் யந்திர சூட்சுமத்தைப் பற்றி எதுவும் கூறவில்லை. சூட்சுமத்தை அறிய பலர் அவரை நாடியிருப்பார்கள் போலிருக்கிறது. அது அவருக்குப் பிடிக்கவில்லை. எனவே தான் அது விஷயமாக அவரது உதவியாளன் தர்மனிடம் தசவதனன் கேட்டபோது கண்டபடி தாக்கி வெளியேற்றியிருக்கிறார்கள். ஆகவே தசவதனன் யந்திர சூட்சுமத்தை அறிந்ததாகவும் அதைச் சாகும் தருவாயில் தன்னிடம் கூறியதாகவும், அந்த விவரத்தை என்னிடம் தெரிவிக்கச் சொன்னதாகவும் உத்தமி கூறிய எல்லாமே பொய். அவனது நிலை மோசமாக இருந்ததால் அவனைக் கைவிட்டு விட்டு நம்மிடம் சேர்ந்திருக்கிறாள் அவள். யந்திர சூட்சுமம் என்று எதையோ ஒன்றைக் கற்பனையாகச் சொல்லியிருக்கிறாள். நம்மோடு இருந்து நமக்குக் கெட்டதைச் செய்வதற்காகவே நாடகமாடி நம்மோடு வருகிறாள். ஆதாயம் ஒன்று தான் அவளது குறிக்கோள். அதற்காக அவள் எதையும் செய்வாள். ஆகவே தான் எல்லோரையும் எச்சரிக்கையாக இருக்கும் படிச் சொன்னேன்."

"அப்படியானால் அவளை நாம் எதற்காக நம்மோடு அழைத்துச் செல்ல வேண்டும்?"

"எதற்கும் இருக்கட்டும். நாகைக்குச் சென்றபின் பார்த்துக் கொள்வோம். இதற்கிடையில் அவள் யார் என்பதை அறிந்து கொள்ளுங்கள்" என்றான் மங்கை வேந்தன்.

பயணம் தொடங்கி இரண்டு நாட்கள் கழிந்தன. தங்களுக்கும் காளைமாடுகளுக்கும் ஓய்வு தேவைப்படும் போதெல்லாம் பயணத்தை நிறுத்தி ஓய்வெடுக்கச் செய்தான் மங்கை வேந்தன். உத்தமி யாரிடமும் பேச்சுக் கொடுக்கவில்லை. சம்பிரதாய வார்த்தைகளை மட்டுமே பேசினாள். அவள் இருந்த வண்டியை இயக்கிய தாளுதுவானும் சாயைப் பிடிப்பானும் அவளிடம் பேச முற்படாமலேயே பயணம் செய்தார்கள்.

சகஜமாகப் பேசிப் பழகும் உத்தமிக்கு இந்த இறுக்கமான நிலை பிடிக்கவில்லை. இரண்டு நாட்களுக்கு மேல் அவளால் தாக்குப் பிடிக்க வில்லை. மூன்றாவது நாள் பயணத்தின் போது வண்டியில் தன்னோடு அமர்ந்திருந்த சாயை பிடிப்பானிடம் பேச முற்பட்டு "ஐயா! நீங்களெல்லாம் பேசவே மாட்டீர்களா?" என்று வினவினாள்.

"பெண்களிடம் நாங்கள் அதிகம் பேசுவதில்லை" என்றாள் சாயைப் பிடிப்பான்.

"வியப்பாக இருக்கிறதே! ஆடவர்கள் சாதாரணமாகப் பெண்களோடு பேசுவதற்கும் பழகுவதற்கும் விரும்புவது தானே உலக இயற்கை?" என்று கேட்டாள் உத்தமி.

"மற்றவர்கள் அப்படி இருக்கலாம். நாங்கள் அப்படியல்ல" என்றார் சாயை பிடிப்பான்.

"ஏன் அப்படி?"

"பெண்கள் பொய்யர்கள். நிறைய பொய் சொல்பவர்கள். ஆகவே அவர்களை எங்களுக்குப் பிடிக்காது."

"தலைகீழாகச் சொல்கிறீர்கள் ஐயா. நீங்கள் கூறியது முழுக்க முழுக்க ஆடவர்களுக்கே உரியது."

"உலகம் அப்படித்தான் காலம் காலமாகக் கூறிக் கொண்டிருக்கிறது. ஆனால் நான் கூறுவது தான் நிதர்சனம்."

"என்னையும் அப்படித் தான் நினைக்கிறீர்களா?"

"பெண் தானே நீ?"

"ஐயா! இது அபாண்டம். ஆதாரமில்லாத பேச்சு."

"பெண்ணே! ஆலிநாட்டு மன்னர் மங்கை வேந்தரைப் பற்றி உனக்குத் தெரியாது. ஒருவரோடு கொஞ்சம் பேசினால் போதும். அவர் உண்மையானவரா பொய்யானவரா என்பதை துல்லியமாகச் சொல்லி விடுவார். நீ பொய்யானவள் என்றும் ஒரு வார்த்தை கூட உண்மையாகப் பேசவில்லை என்று கூறிவிட்டார். ஆகவே உன்னிடம் பேச நாங்கள் முற்படவில்லை."

"மன்னர் இப்படிப் பட்டவராக இருப்பார் என்று நான் நினைக்கவே இல்லை. அவரிடமே இது பற்றி நான் கேட்பேன்."

"தாராளமாகக் கேள். எங்களிடம் சொன்னதைத் தான் உன்னிடமும் சொல்வார்."

"நான் பொய்யானவள் என்றால் எதற்காக என்னை வண்டியில் அழைத்துச் செல்கிறார்? இறக்கி விட வேண்டியது தானே?"

"அப்படியா? நல்லது" என்று சொன்ன சாயை பிடிப்பான் தாளுதுவானிடம் வண்டியை நிறுத்தும் படிச் சொன்னாள்.

அதிர்ந்து போன உத்தமி "எதற்காக வண்டியை நிறுத்துகிறீர்கள்?" என்று கேட்டாள்.

"நீ இறங்கிக் கொள்வதற்காகத் தான்."

நீங்கள் எப்படி இறக்கி விடலாம்?"

"மன்னர் எல்லோரிடமும் சொல்லி இருக்கிறார் நீ இறங்க விரும்பினால் இறக்கி விடும் படி."

"நான் இறங்க விரும்பவில்லை."

"வம்பு பேசாமல் வா. இல்லையென்றால் எந்த இடத்திலும் உன்னை இறக்கி விடுவோம்."

ஏதோ பேசலாம் என்று ஆரம்பித்த பேச்சு விபரீதத்தில் முடியப் போகவே பேச்சை நிறுத்திக் கொண்டாள் உத்தமி.

வண்டி வேலன் மலைப் பக்கம் வந்தபோது தங்களுக்கு வண்டி ஓட்டிய இளம்பெண்ணான ஈழத்தாமரை மலையில் மர்மமாக மறைந்து விட்டதை எண்ணிக் கொண்டான் மங்கை வேந்தன்.

"திரிகோண மலைக்குச் சென்றதும் சத்திரத்து நிர்வாகி ஈழத் தாமரையைப் பற்றிக் கேட்டால் என்ன சொல்வது?" என்று கேட்டான்.

"உண்மையைச் சொல்வோம் மன்னவா" என்றார் தோலாவழக்கர்.

மங்கைவேந்தன் சிரித்தான்.

"எதற்காகச் சிரிக்கிறீர்கள்?"

"நாம் ஆரம்பத்திலிருந்து ஒவ்வோர் இடத்திலும் பொய்யைத் தான் சொல்லி வருகிறோம். அதை எல்லாருமே நம்பினார்கள். இப்போது உண்மையைச் சொல்லலாம் என்கிறாய். நிர்வாகி நம்புவாரா?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"பொய்களையே தொடர்ந்து பேச முடியாது.உண்மைகளையும் சில நேரங்களில் பேசத்தான் வேண்டும்" என்றார் தோலாவழக்கர்.

மீண்டும் சிரித்த மங்கைவேந்தன் "நமக்கு எல்லாமே தலைகீழாக அமைந்திருக்கிறது. சாதாரணமாக உண்மையை மட்டுமே பேசுகிறவர்களுக்கு எப்போதாவது பொய்யைப் பேசும் படி நேரிடும். அது தான் உலக இயற்கை. நாமோ நேர்மாறான நிலையில் இருக்கிறோம்" என்று சொல்லி விட்டு தன் மனத்தில் "அரங்கா! எம்பெருமானே! என் இதயத்தில் குடி கொண்டிருக்கும் பரம்பொருளே! உண்மையைப் பேசி உண்மையாக நடிக்க

வேண்டிய எங்களை பொய்யர்களாக்கி வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறாயே! இது இன்னும் எத்தனை நாட்களுக்கு? கருணை காட்டு காகுத்தா. எனது பணியை விரைவில் நிறைவேற்ற அருள் செய். அதற்குப் பிறகு உன்னையே நினைந்து - உன்னையே பக்தி செய்து - உன்னிடமே சரணமடையும் உயர்நிலைக்கு எங்களை அழைத்துச் செல்" என்று வேண்டிக் கொண்டான்.

தற்போது ஆற்றில் வெள்ளப் பெருக்கு இல்லாமல் வற்றியிருந்தால் ஆபத்தானதும் மர்மமானதுமான மலை வழியில் செல்லாமல் ஆற்றைக் கடந்தே பயணம் செய்தார்கள். ஆற்றைக் கடந்தபின் இரவுநேரம் துவங்கி விட்டபடியால் வண்டிகளை நிறுத்தி விட்டு எல்லோரும் இறங்கினார்கள். பந்தங்களைத் தயார் செய்து தரையில் நட்டு விட்டு உணவை அருந்த முற்பட்டார்கள்.

"நாங்கள் அருந்தும் உணவு வறட்சியானது. ருசி இல்லாதது. உனக்குப் பிடித்திருக்கிறதா பெண்ணே?" என்று உத்தமியிடம் கேட்டான் மங்கை வேந்தன்.

"எனக்குப் பிடித்ததெல்லாம் கிடைக்க வேண்டும் என்று நான் பிடிவாதம் பிடிக்க முடியுமா மன்னவா?" என்று கேட்டாள் உத்தமி.

மங்கை வேந்தன் வேறெதுவும் பேசவில்லை. தனது வார்த்தைகளால் அவனைக் கட்டி விட்டோமா என்று நினைத்து சற்றே வருந்திய அவள் பெண்களைப் பற்றிய அவனது கருத்து பற்றிப் பேசலாமா என்று நினைத்தாள். அப்பேச்சும் சிக்கலாகி விடும் என்று நினைத்த அவள் அது விஷயமாகப் பேசாமல் "நான் தங்களுடன் பயணம் செய்யலாமா மன்னவா?" என்று கேட்டாள்.

"நானே நினைத்திருந்தேன். நீயே கூறிவிட்டாய்" என்று சொன்ன மங்கை வேந்தன் தன் வண்டியில் பயணம் செய்த நீர் மேல் நடப்பானை இரண்டாவது வண்டியில் செல்லும் படிக் கூறினான்.

உணவு உண்டு முடித்ததும் சில நாழிகை வரை ஓய்வெடுத்து விட்டு எல்லோரும் புறப்பட்டார்கள்.

சுற்றுப் பகுதியில் அமானுஷ்ய குரல்கள் கேட்டபடி இருந்தன.

"எல்லோரும் விஷ்ணு சகஸ்ர நாமத்தை உச்சரித்துக் கொள்ளுங்கள்" என்றான் மங்கை வேந்தன்.

"மன்னவா! காமத்தைப் பற்றித் தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று கேட்டாள் உத்தமி.

★★★



உத்தமியின் போக்கு

சகதோழர்களை விஷ்ணுசகஸ்ர நாமத்தை உச்சரிக்கும் படி மங்கை வேந்தன் கூறியபோது உத்தமிக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஆனால் அதைப் பற்றிக் கேட்டுச் சிக்கலை வரவழைத்துக் கொள்ள விரும்பாமல் அமைதியாகவே இருந்தாள்.

ஒரு நாழிகை வரை பயணிகள் விஷ்ணு சகஸ்ர நாமத்தை உச்சரித்தபடி பயணித்தார்கள். மர்மம் நிறைந்த காட்டுப் பகுதியைக் கடந்ததாக உணர்ந்த மங்கை வேந்தன் "போதும். நாம் ஆபத்தைக் கடந்து விட்டோம்." என்று சொன்னான்.

வண்டியை ஓட்டிவந்த தோலாவழக்கன் வண்டிக்குள் வந்து அமர வண்டியோட்டும் பணியை நிழலில் ஒதுங்குவான் மேற்கொண்டார்.

அப்போது உத்தமி மங்கை வேந்தனுடன் பேச முற்பட்டு "காமத்தைப் பற்றித் தங்கள் கருத்தென்ன மன்னவா?" என்று கேட்டாள்.

வண்டியில் இருந்தவர்கள் இவளென்ன வெட்கமில்லாமல் பேசுகிறாளே?" என்று எண்ணவில்லை.

மங்கை வேந்தனும் "காமம் என்ற சொல்லுக்கு முன்னால் காதல் என்ற ஒரு சொல் இருக்கிறது பெண்ணே. அது அழகானது. அலாதியானது. இந்த இரண்டு வார்த்தைகளுமே ஒன்று தான் என்று சில இலக்கியங்கள் சொன்னாலும் நடைமுறையில் இரண்டும் வேறு பட்டவை. காதல் தென்றலைப் போன்றது. காமம் புயலைப் போன்றது. காதல் அனுபவம் எனக்கும் உண்டு" என்றான்.

உத்தமி மங்கை வேந்தனிடமிருந்து இந்தப் பதிலை எதிர்பார்க்க வில்லை. இவ்வாறு இனிமையாகப் பேசுவான் என்று எதிர் பார்க்கவில்லை. தனக்குக் காதல் அனுபவம் உண்டு என்று சொன்னதையும் எதிர்பார்க்கவில்லை.

அவள் கணிகையர் குலமாதலால் காதலுக்கு அவளுக்கு நேரம் ஒதுக்கப்படவில்லை. ஆகவே காதலில் ஈடுபடவில்லை. கணிகை

என்ற வகையில் கணிசமான தொகைக்கு தசவதனனுக்கு விற்கப் பட்டதால் அவளுக்குக் காம அனுபவமே கிட்டியிருந்தது.

இந்த நிலையில் காதல் என்பது தென்றலைப் போன்றது என்றும் காமம் என்பது புயலைப் போன்றது என்றும் மங்கை வேந்தன் சொன்ன போது அவளுக்கு ஏக்கமாக இருந்தது. தென்றலைப் போன்ற காதலை அனுபவிக்காமலேயே அந்தச் சோலையைக் கடந்து காமமென்றும் காட்டுக்குள் வந்து விட்டதாக உணர்ந்து சஞ்சலப் பட்டாள்.

அனுபவித்த காமம் ஆனந்தமாக இருந்தாலும் அது மங்கை வேந்தன் கூறியது போலப் புயலாகவே இருந்ததை உணர்ந்த அவள் காதலெனும் இதமான கீதத்தைக் கேட்காமல் போய் விட்டதாகக் கருதிக் கவலைப்பட்டாள்.

அக்காதல் மங்கைவேந்தனிடம் மலர்ந்திருக்கிறது என்பதை அறிந்த போது அவளுக்கு ஏக்கம் அதிகரித்தது.

"தாங்கள் கூறுவதைக் கேட்கும் போது மகிழ்ச்சியாக இருக்கிறது மன்னவா. காதலித்த பெண்ணைத் தாங்கள் திருமணம் செய்து கொண்டீர்களா?" என்று கேட்டாள்.

"ஆம். அந்த பாக்கியம் எனக்குக் கிடைத்தது. உனக்கு அந்த அனுபவம் இல்லையா?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

அவனுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் திணறிய அவள் சற்றே சுதாரித்துக் கொண்டு "இல்லை" என்றாள்.

"ஏன்? காதலுக்கான எல்லா அம்சங்களும் உன்னிடம் இருக்கின்றனவே?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"இருக்கிறது. ஆனால் மலருவதற்கு முன்பே மொட்டு பறிக்கப் பட்டு மேயப்பட்டு விட்டது" என்று சொல்ல நினைத்த அவள் அப்படிச் சொல்லவில்லை.

"தெரியவில்லை மன்னவா. காரணம் என்ன வென்று தெரிய வில்லை. ஆனால் அந்த இதமான உணர்வு இப்போது வருவது போல் உணர்கிறேன். வரலாமா வேந்தே?"

"காதல் வருவதற்கு அனுமதி எதற்கு? செடியில் பூ பூப்பது போல் மனதில் காதல் இயற்கையாகவே தோன்றுகிறது."

"மிகவும் அழகாகவும் தெளிவாகவும் பேசுகிறீர்கள் மன்னவா. உங்கள் பேச்சைக் கேட்பதே இன்பமாக இருக்கிறது."

"தசவதனன் உன்னிடம் பேசியதில்லையா?"

மங்கை வேந்தனின் இந்தப் பேச்சு முள்ளை எடுத்துக் குத்துவது போல் இருந்தது.

"இதை எதற்காகக் கேட்கிறீர்கள் அரசே?" என்று கேட்டாள்.

"நீ அவனோடு தானே வந்தாய்?"

உத்தமிக்கு மனம் உடைந்தது.

"பாவி! பணபலத்தைக் கொண்டு அடிமையாக வாங்கி என்னை அழித்தவன். என் மனதில் என்ன உணர்வுகள் உள்ளன என்பதை அறியாமல் தன் உணர்வுகளை என்னுள்ளே பதித்தவன். என்னிடம் அவன் எதிர்பார்த்தது.ம் அனுபவித்ததும் காமம் தான். அவன் பேசியதெல்லாம் பசப்பு வார்த்தைகள். அவற்றை நினைத்தால் கசப்பு தான் வருகிறது. அவன் பேச்சு எங்கே? மங்கை வேந்தனின் பேச்சுஎங்கே?" என்று தனக்குள் கேட்டுக்கொண்ட அவள் "அவரது பேச்சில் அனல் இருக்குமே தவிர இதம் இருக்காது. இனிமை இருக்காது. அவற்றை உங்களிடம் தான் காண்கிறேன்" என்றாள்.

"நீ ஒரு பெண். பெண் என்றால் மலர். மலராகிய நீ ஆடவனுக்கு உளவாளியாகி காடுமலையெல்லாம் பயணப்படுவது இயற்கைக்குப் புறம்பானது என்பது உனக்கு விளங்கவில்லையா? அவன் இறந்து விட்டதாகவும் சொல்கிறாய். ஆக நீ பெற்றது என்ன?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

அவளுக்கு அழுகை வந்து விட்டது.

"உத்தமி! அழுகை ஒரு ஆறுதல் தான். ஆனால் அதுவே தீர்வாகி விடாது. அழுகையை நிறுத்து. உன்னைப் பற்றிய உண்மையை நீ இதுவரை கூறவில்லை. அதனால் தான் உனக்கு அமைதி வராமல் அழுகை வருகிறது. உண்மை கசப்பாக இருக்கலாம். ஆனாலும் அது வெளிப்பட வேண்டும். அமுங்கியே இருந்தால் அமைதி கிட்டாது."

தானாகப் பேச்சு கொடுத்து தன்னைக் காட்டிக் கொடுத்துக் கொள்வது உத்தமிக்குப் புரிந்தது. தசவதனனுக்கும் தனக்கும் உளவாளி என்ற உறவை மீறி அந்தரங்கமான உறவு இருக்க வேண்டும் என்று மங்கை வேந்தன் கருதுவதாகவும் நினைத்தாள். அதைத் தன் வாயாலேயே சொல்லுவதற்கு அவன் முனைவதாகவும் கருதினாள்.

அவளுக்கு மங்கை வேந்தனின் மீது மாறுபட்ட எண்ணங்கள் வந்து கொண்டிருந்தன. தசவதனனின் எதிரி என்று நினைத்த அவள் பிறகு அவனால் தான் தனக்கு ஆதாயம் இருக்கும் என்று எண்ணி அவனோடு சேர்ந்தாள். அவனை ஏமாற்ற நினைத்து அது முடியாமல் அவனது தயவுக்கு ஆளானாள். .அவன் மீது எச்சரிக்கையும் வந்தது. பிறகு பேச்சுக் கொடுத்ததில் .அவன்மீது மயக்கம் வந்தது. மரியாதை வந்தது. தற்போது குழப்பம் வந்தது.

யந்திர சூட்சுமம் பற்றித் தான் கூறியது பொய் என்பது நாகைக்குப் போனதும் மங்கை வேந்தனுக்குத் தெரிந்து விடும். அதற்குப் பிறகு அவன் தன்னை அவனோடு வைத்துக் கொள்ள மாட்டான். தான் தனியாக இருந்து எதையும் சாதிக்க முடியாது. தன் எதிர்காலம் கேள்விக் குறியாகி விடும். மிஞ்சி மிஞ்சிப் போனால் கணிகையாகக் காலம் தள்ளலாம். அவ்வளவு தான்.

அவளுக்கு அதில் திருப்தியில்லை. சிலை கவர்தல் மூலம் கணிசமான தொகை தனக்குக் கிடைக்க வேண்டும் என்பது தான் அவளது ஆதங்கமாகவும் ஆசையாகவும் இருந்தது. நல்லவளாக மாறித் திருப்பணியில் ஈடுபட அவள் தயாராக இல்லை. ஆனால் தனது ஆசை நிறைவேறுவதற்கான வழி தெளிவாக இல்லை என்பதால் குழம்பினாள்.

மங்கை வேந்தனிடம் எப்படிப் பேசுவது என்று அவளுக்கு விளங்கவில்லை. தசவதனனுக்கும் தனக்கும் இருக்கும் உறவைத் தானாகவே சொல்லி விட்டால் அதற்குப் பிறகு மங்கை வேந்தன் தன்னைப் புறக்கணித்து விடுவான் என்று நினைத்த அவள் அவனாக எப்படி வேண்டுமானாலும் நினைத்தக் கொள்ளட்டும் என்று கருதி "நான் உண்மையைத் தான் பேசுகிறேன் அரசே. தாங்கள் தான் என்னை நம்ப மறுக்கிறீர்கள். பெண்கள் எங்கேயும் பாவப்பட்ட ஜென்மங்களாகத் தான் வாழ்கிறார்கள். அவர்களின் மனத்தைப் புரிந்து கொண்டு நடத்துபவர்கள் உலகில் சொற்பமானவர்களாகத் தான் இருக்கிறார்கள்" என்றாள் அனுதாபத்தைப் பெறும் விதமாக.

"அப்படித் தான் இருக்கட்டும். விடு உத்தமி. நாகப் பட்டினத்திற்கு உன்னைக் கொண்டு போய்ச் சேர்த்து விடுகிறேன். அதற்குப் பின் உன் வழியில் நீ செல்" என்று கூறிப் பேச்சை முடித்துக் கொண்டான் மங்கை வேந்தன்.

அவளோ "இல்லை. இல்லை. உங்கள் முயற்சிகளுக்கு நான் உதவுவேன்" என்றாள்.

அவனோ அதற்குப் பதிலேதும் சொல்லவில்லை.

திரிகோணமலையை அடைவதற்கு இரண்டு நாள் பயண தூரமே இருந்த நிலையில் ஓடைக்கருகில் எல்லோரும் ஓய்வெடுத்தார்கள்.

மங்கை வேந்தன் தோலாவழக்கனுக்கு ஏதோ சமிக்ஞை செய்தான்.

அதையடுத்து தோலாவழக்கன் எழுந்து நீரோடை வழியாகவே சற்று நடந்தார்.

உத்தமியும் "நானும் சற்றுக் காலாறி விட்டு வருகிறேன் மன்னவா" என்று கூறிவிட்டுப் புறப்பட்டாள்.

"எல்லோருக்கும் அரைநாள் ஓய்வு. யார் யார் எங்குச் செல்ல வேண்டுமோ என்று வாருங்கள். அதற்குப் பிறகு பயணம் தொடர்ந்தால் ஓய்வு கிடையாது. திரிகோணமலையில் தான் எல்லாம்" என்றான் மங்கை வேந்தன்.

இதற்கிடையில் நீரோடைக் கரை ஓரமாகவே நடந்த தோலாவழக்கன் சிறிது தூரத்தில் இருந்த பாறை மீது அமர்ந்தார். பிறகு படுத்தார்.

அவரைப் பின் தொடர்ந்து சென்ற உத்தமி அவருக்கருகில் சென்று குரல் கொடுத்தாள்.

கண்களை மூடிப் படுத்திருந்த தோலாவழக்கன் கண்களைத் திறந்து "என்ன?" என்று கேட்டார்.

"என்ன, தனியாக வந்து விட்டீர்கள்?" என்று கேட்டாள்.

"தனியாக இருக்க விரும்பினேன். வந்தேன்" என்றான் தோலாவழக்கன்.

"நான் வந்தது உங்கள் தனிமைக்குப் பங்கம் வந்து விட்டதா?" என்று கேட்டாள் உத்தமி.

"அதுதான் வந்து விட்டாயே! பிறகென்ன?" என்று கேட்ட தோலாவழக்கன் "உட்கார். என்ன விஷயம்?" என்று வினவினார்.

அவள் உட்கார்ந்து கொண்டு "நீங்கள் எல்லோருமே ஏன் கற்களைப் போல இருக்கிறீர்கள்? உங்களுக்கெல்லாம் உணர்ச்சியே கிடையாதா?" என்று கேட்டாள்.

"ஏன் அப்படிக் கேட்கிறாய்?"

"உங்களோடு ஒரு பெண் பயணம் செய்வது உங்களுக்கெல்லாம் தெரியவில்லையா? உங்களுக்கு உணர்ச்சிகளே கிடையாதா? இப்படி இருந்தால் பைத்தியம் பிடிக்காதா?"

"எங்களை என்ன செய்ய வேண்டும் என்று சொல்கிறாய்?"

"இப்படிக் கூடவா கேட்பீர்கள்? இதற்கு நான் பதில் சொல்ல வேண்டுமா? மன்னருக்குக் காதல் வந்ததாகச் சொன்னார். காதலியைக் கரம் பிடித்ததாகவும் கூறினார். உங்களுக்கெல்லாம் காதல் வரவில்லையா? வாலிபர்கள் தானே நீங்கள்?"

"எங்களுக்குக் காதல் வரவில்லை என்று யார் சொன்னது உனக்கு? நீ காதலிக்கத் தயாராக இருக்கிறாயா? நான் தயார்."

"இதென்ன இப்படிக் கேட்கிறீர்கள். காதல் என்பது தென்றலைப் போன்றது என்றல்லவா மன்னர் சொன்னார்?"

"அது அவரது அனுபவம். எல்லோருக்கும் அப்படித் தான் இருக்க வேண்டுமா?"

"நான் சரியென்று சொல்லி விட்டால் காதலிக்க முன் வந்து விடுவீர்களா?"

"நான் தயாரென்று முன்பே கூறி விட்டேன். நீ தான் பதில் சொல்ல வேண்டும்."

சிறிது நேரம் மௌனமாய் இருந்த அவள் "உங்களுக்கும் மன்னருக்கும் உள்ள உறவு எப்படி?" என்று கேட்டாள்.

"நீ பார்த்துக் கொண்டு தானே இருக்கிறாய்?"

"சரியாகப் புரியவில்லை."

"உனக்கு எது புரியவேண்டும்?"

"நீங்கள் அவருக்கு நண்பர்களா? சீடர்களா?"

"எப்படி வேண்டுமானாலும் இருப்போம்."

"சரியாகச் சொல்லுங்கள். நீங்கள் அவரது நண்பர்களா? சீடர்களா?"

"உனக்கென்ன தெரிய வேண்டும்?"

"நீங்கள் அவரோடு குறிப்பிட்ட காரியத்தை முடிக்கக் கூட்டுச் சேர்ந்திருக்கிறீர்கள் என்பது என் அனுமானம்."

"அப்படித்தான்."

"நானும் அப்படிக் கூட்டு சேரலாமா?"

"அதை மங்கை வேந்தன் தான் முடிவு செய்ய வேண்டும்."

"உங்களால் முடியாதா?"

"அவர் உன்னை நம்பவில்லை. நம்பினால் தான் நாங்கள் உனக்கு உதவ முடியும். நீ யார் என்ற உண்மை அவருக்குத் தெரிய வேண்டும்."

செ.ான்னாள் அவள்.

"உன்னைக் கூட்டுச் சேர்த்தால் நீ பங்கு கேட்பாய்."

"நீங்கள் கேட்பீர்கள் அல்லவா? அது போல நானும் கேட்பேன். நியாயம் தானே?"

"உன்னைச் சேர்த்தால் எங்கள் பங்கு குறையும்."

"நான் ஒரு ரகசியம் சொல்லட்டுமா?"

"சொல்."

சொன்னாள் அவள்.

அதிர்ந்தார் தோலாவழக்கர்.

★★★



உத்தமியின் திட்டம்

"உங்கள் மன்னரிடம் யந்திர சூட்சுமம் பற்றிச் சொன்னேனே, அது பொய்.

உத்தமியின் இந்தப் பேச்சைக் கேட்டு அதிர்ந்தார் தோலா வழக்கர்.

இருப்பினும் அதிர்ச்சியைக் காட்டிக் கொள்ளாமல் "அப்படியா? எதற்காக அவரிடம் பொய் சொன்னாய்?" என்று கேட்டார்.

"எனக்கு அவரைப் பிடிக்கவில்லை. பெண்களெல்லாம் பொய்யர்கள் என்ற கருத்தைக் கொண்டவராம். சாயை பிடிப்பான் கூறினார். அவருக்கு என் மீது இரக்கம் இல்லை. என்னை உதாசீனம் செய்கிறார். மன்னருக்குரிய பண்புகள் அவரிடம் இல்லை.அதோடு தனக்கு உதவ வேண்டும் என்கிறாரே தவிர பங்கை தரத் தயாராக இல்லை.கடைசியாகப் பேசியதைக் கவனித்தீர்களா? நாகப்பட்டினத்திற்கு வந்ததும் என்னைக் கழற்றி விடப் போகிறாராம். அவரை எனக்கு அறவே பிடிக்க வில்லை. அவரையும் ஒரு பெண் காதலித்தாளாம். எப்படி என்று தெரியவில்லை.

"எனக்கும் அவரைப்பிடிக்காது தான். என் பங்கு கிடைக்கும் வரை அவரோடு இருப்பேன். பிறகு விலகி விடுவேன்."

"அது நஷ்டக் கணக்கு. நான் லாபக் கணக்கைச் சொல்கிறேன்."

"இருக்கிறதா அப்படி?"

"ஆம்."

'அப்படியானால் இரு. எனது சகாக்கள் யாராவது பக்கத்தில் இருக்கிறார்களா என்று பார்த்து விட்டு வருகிறேன். நீயும் இந்தப் பக்கமாகப் பார்."

இருவரும் பார்த்து விட்டு வந்தார்கள். யாரும் இல்லை என்பதை உறுதி செய்து கொண்டார்கள்.

"இப்போது சொல்" என்றார் தோலாவழக்கர்.

"மன்னர் நான் கூறிய யந்திர சூட்சுமத்தை நம்பிக் கொண்டிருக்கட்டும். நான் உண்மையான சூட்சுமத்தை உங்களிடம் சொல்கிறேன். நாகைக்குப் போனதும் மன்னரோடு சண்டையிட்டுக் கொண்டு நாம் பிரிந்து விடுவோம். நாம் இருவரும் சேர்ந்து சூட்சுமத்தை உடைத்து புத்தர் சிலையைக் கைப்பற்றுவோம். கடல் வழியாகச் சென்று தலைமறைவாகி விடுவோம். பங்கு நம் இருவருக்கு மட்டுமே இருக்கும். இது லாபக் கணக்கல்லவா?"

"உத்தமி! நீ உண்மையிலேயே பெரிய கைகாரி. மன்னரையே உன்னால் ஏமாற்ற முடிகிறதென்றால் உனக்குத் திறமை மட்டுமல்ல. அதிருஷ்டமும் இருக்கிறது என்பது உண்மை. யந்திர சூட்சுமத்தைச் சொல்.

சொன்னாள் அவள்.

"உன் திட்டம் எனக்குச் சம்மதம். ஆனால் நீயும் நானும் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். மன்னர் மற்றவர்களைக் கண்காணிப்பதில் கைதேர்ந்தவர். நம் மீது சந்தேகம் வந்து விட்டால் நாம் தொலைந்தோம். அவரிடம் நீ பேசுவதைத் தவிர்த்து விடு. அவரோடு பயணம் செய்யாமல் இரண்டாவது வண்டியிலேயே வா. அது தான் நல்லது."

"உங்களை எனக்கு மிகவும் பிடித்து விட்டது. விஷயங்களை மிகக் குறைந்த நேரத்தில் புரிந்து கொள்கிறீர்கள். பெண் என்பதால் அவள் கூறுவது முட்டாள்தனமாக இருக்கும் என்று எண்ணவில்லை. இதுதான் உங்கள் சிறப்பு. உங்கள் எச்சரிக்கை உண்மையானவை. அப்படியே நடந்து கொள்கிறேன். நான் இரண்டாவது வண்டியிலேயே பயணம் செய்கிறேன்."

"அந்த வண்டியில் உள்ளவர்களோடு அதிகம் பேச வேண்டாம்" என்றார் தோலாவழக்கர்.

ஒப்புக்கொண்ட அவள் அங்கிருந்து புறப்பட்டாள்.

சிறிது நேரம் கழித்துத் தோலாவழக்கரும் புறப்பட்டார்.

அரை நாள் ஓய்வுக்குப் பிறகு பயணம் தொடர்ந்தது.

"மன்னவா! நீங்கள் சொன்னபடி தான் இருக்கிறது. நீங்கள் சொன்னமாதரி தான் நடந்தது. உத்தமி வெறும் உளவாளி அல்ல. தசவதனின் அடிமை. ஆசைநாயகி. என்னைத் தனிமையில் சந்தித்ததும் தனிக் கூட்டணிக்கு வழி ஏற்படுத்திக் கொண்டாள். புதியதாக யந்திர சூட்சுமம் ஒன்றையும் சொன்னாள்" என்று சொன்ன தோலாவழக்கர் அவள் பேசியதையெல்லாம் சொன்னார்.

"அவள் என்னிடமும் சரி உன்னிடமும் சரி யந்திர சூட்சுமத்தைப் பற்றிக் கூறியது பொய். இப்படிப் பொய்யான சூட்சுமத்தைச் சொல்லிப் புத்தர் சிலையைக் கவர்வதற்கு ஆசைப்படுவது வியப்பாக இருக்கிறது. பைத்தியக் காரத்தனமாக இருக்கிறது. யாரோடு அவள் கூட்டு வைத்துக் கொண்டாலும் உண்மையான யந்திர சூட்சுமத்தை அறியாமல் அவளால் என்ன செய்ய இயலும்? ஆனாலும் அந்தப் பெண்ணிற்கு இருக்கும் பேராசை மலையை விடப் பெரிதாக இருக்கிறது. நாகப் பட்டினத்திற்குப் போவதற்குள் இன்னும் என்னவெல்லாம் செய்வாளோ தெரியவில்லை" என்றான் மங்கை வேந்தன்.

"என்னை முழுவதுமாக நம்பி விட்டாள். அவளை நம்புவதாக நானும் நடித்து விட்டேன். ஆகவே வேறு முயற்சி எதிலும் இறங்க மாட்டாள் என்றே தோன்றுகிறது" என்றார் தோலாவழக்கர்.

பயணம் இரண்டு நாட்களுக்கு நடந்து அனைவரும் திரிகோண மலையை அடைந்தார்கள். அங்கே முன்பு தங்கிய சத்திரத்திற்குச் சென்று தங்கினார்கள்.

"ஈழத் தாமரை எங்கே?" என்று கேட்டான் சத்திரத்து நிர்வாகி.

உண்மையைச் சொன்னான் மங்கை வேந்தன்.

"இதை எப்படி நம்புவது?" என்று கேட்டான் நிர்வாகி.

பல இடங்களில் பொய்யைச் சொல்லிப் பலரை நம்ப வைத்திருந்த நிலையில் நிர்வாகியிடம் உண்மையைச் சொல்லி நம்ப வைக்க முடியாமல் போனதை எண்ணிச் சிரித்துக் கொண்ட மங்கை வேந்தன் "உங்களை நம்ப வைக்க என்னால் இயலாது. இதுவும் உண்மை" என்றான்.

"சாமர்த்தியமாகப் பேசும் நீங்கள் வேடன் மலையில் ஈழத் தாமரை மறைந்து விட்டதை அறிந்ததும் உங்களில் ஒருவரை அனுப்பி எனக்கு ஏன் தகவல் சொல்லவில்லை?" என்று கேட்டான் நிர்வாகி.

"என்ன நடந்தது என்பது புரியவில்லை. அந்த இடத்திலிருந்து புறப்பட்டுப் போனால் போதும் என்ற உணர்வு தான் எங்களுக்கு இருந்தது. ஆகவே அந்த மர்மம் சூழ்ந்த இடத்திலிருந்து உங்களுக்குத் தகவல் சொல்லி அனுப்ப வேண்டும் என்று தோன்றவில்லை. ஈழத்தாமரை மறைந்து விட்ட நிலையில் நாங்கள் நான்கு பேர் மட்டுமே இருந்தோம். நாங்களே வண்டியை ஓட்ட வேண்டிய நிலை. புளியங்குளத்திற்கு எப்படிச் செல்வது என்று புரியாத நிலை. ஆகவே தான் யாரையும் அனுப்பவில்லை. திரும்பி வந்தபிறகு சொல்லிக் கொள்ளலாம் என்று இருந்து விட்டோம்."

"ஈழத்தாமரை உங்களுக்கு வண்டியோட்டியாக வந்ததினால் தான் மறைந்து போனாள். அது எங்களுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு."

"உண்மைதான். ஆனாலும் நடந்த நிகழ்ச்சி மிகவும் எதிர்பாராதது. எங்களோடு நீங்கள் வந்திருந்தாலும் உங்களால் எதுவும் செய்திருக்க முடியாது. அமானுஷ்ய விஷயங்களை நம்மால் எதிர்க்க முடியாது."

"எதுவானாலும் இழப்பு இழப்பு தான். அதற்கு நீங்கள் என்ன ஈடுகட்டப் போகிறீர்கள்?"

"நடந்தது உயிர் இழப்பு. உயிர் இழப்பிற்கு ஈடு செய்ய எதுவும் கிடையாது."

"அது தெரியும். அவள் இல்லாத இழப்பு எனக்குப் பெரிய நஷ்டம். இருபதாயிரம் பொன் நாணயங்களைக் கொடுங்கள்."

"உங்களது கோரிக்கை மிகவும் சரி. ஆனால் எங்களிடம் இருபதாயிரம் பொன் இல்லை. புளியங்குளுத்திற்கு இரண்டாவது வண்டியைத் தயார் செய்து வந்ததில் கையிருப்பு தீர்ந்து விட்டது. நாகைக்குச் செல்வதற்குக் கூட நாங்கள் இரந்து தான் பெற வேண்டும். இருபதாயிரம் நாணயங்களை எங்கள் பேரில் கடனாகப் பதிவு செய்து கொள்ளுங்கள். நாங்கள் நாகைக்குத் திரும்பிய பின் அந்தத் தொகையைத் திரட்டி உங்களுக்குச் செலுத்தி விடுகிறேன்."

"போன காரியம் என்ன ஆயிற்று?"

"திருப்திகரமாக இல்லை."

"இப்போது என்ன செய்யப் போகிறீர்கள்?"

"விளங்கவில்லை. உணவில்லாமல் பட்டினி கிடக்க முடியும். ஆனால் கப்பலில் நாகப்பட்டினத்திற்குச் செல்ல திரவியம் வேண்டும். என்ன செய்வதென்று தெரியவில்லை."

நிர்வாகி சற்று யோசித்து விட்டுச் சொன்னான்.

"நாளைக்குத் திரிகோணமலை தருமாசன விசாரணை அவையைக் கூட்டுகிறேன். அங்கே நீங்கள் எனக்குச் செலுத்த வேண்டிய ஈட்டுத் தொகையான இருபதாயிரம் பொற் காசுகளுக்கான முறியை எழுதிக் கையொப்பமிடுங்கள். தருமாசன அதிகாரிகளும் கையொப்பமிட்டு ஆவண ஓலையைப் பாதுகாப்பில் வைத்துக் கொள்வார்கள். ஈட்டுத் தொகையைச் செலுத்திய பிறகு முறி ஓலை அழிக்கப்படும். ஈட்டுத் தொகை

மூன்று மாதங்களுக்குள் செலுத்த வேண்டும். செலுத்தும் வரை உங்களில் ஒருவரை நாங்கள் பிணையாக வைத்திருப்போம். அந்த நபர் யார் என்பதை முடிவு செய்து கொண்டு நாளைக்கு விசாரணை அவைக்கு வந்து விடுங்கள்."

நிர்வாகி சரியாகப் பேசியதால் அதை மறுத்துப் டேச மங்கை வேந்தன் முற்படவில்லை.

"சரி" என்றான்.

நிர்வாகியே பேச முற்பட்டு "உங்கள் உணவிற்கும், நாகைப் பயணத்திற்கும் உரிய தொகையைத் தருகிறேன். இங்கேயே தங்கிப் பயணத்திற்கான நேரத்தைக் குறித்து வாருங்கள். இந்தத் தொகையையும் இருபதாயிரம் பொற்காசுகளைத் திருப்பும் போது செலுத்தி விடுங்கள்" என்றான்.

"சரி" என்றான் மங்கை வேந்தன்.

தோலாவழக்கர் குறுக்கிட்டு "ஐயா! நாங்கள் புளியங் குளத்திலிருந்து கொண்டு வந்த இரண்டாவது வண்டி மற்றும் காளை ஆகியவற்றை நாங்கள் கொண்டு செல்லப் போவதில்லை. ஆகவே அவற்றை நீங்கள் எடுத்துக் கொண்டு அதற்கான தொகை யை ஈட்டுத் தொகையிலிருந்து கழித்துக் கொள்ளுங்கள்" என்றார்.

"அவற்றுக்கு என்ன தொகை தேறும் என்பதை நாளைக்குச் சொல்கிறேன். இப்போதைக்குச் சத்திரத்தில் நீங்கள் தங்கிய அதே அறையில் தங்கி ஓய்வெடுங்கள்" என்று சொன்ன நிர்வாகி உத்தமியைப் பார்த்து விட்டு "இந்தப் பெண் யார்?" என்று கேட்டான்.

"சிற்பியின் மகள். நாகப்பட்டினத்திற்கு வருகிறாள். துணைக்கு யாரும் இல்லாததால் எங்கள் உதவியை நாடினாள். அழைத்து வந்தோம்" என்றார் தோலாவழக்கர்.

நிர்வாகி மேற்கொண்டு எதுவும் பேசாமல் தங்குவதற்கான அறையை ஏற்பாடு செய்தான்.

அறைக்குச் சென்று அவரவர்களும் நீராடி விட்டு வேற்றாடைகளை அணிந்து கொண்டார்கள். அவர்கள் உண்பதற்கு உணவை அனுப்பி வைத்தான் சத்திரத்து நிர்வாகி.

உணவை உண்ட போது "யாரது ஈழத்தாமரை மன்னவா? அவள் என்னைப் போன்ற பெண் தானே? அவளுக்கு ஈட்டுத் தொகை இருபதாயிரம் பொற்காசுகளா? மிகவும் அதிகம்." என்றாள்.

மங்கை வேந்தன் தோலா வழக்கரைப் பார்த்தான்.

தோலா வழக்கர் மங்கை வேந்தனைப் பார்த்தார்.

"ஒரு பெண்ணின் உயிருக்கு எவ்வளவு விலை உத்தமி?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

உத்தமி விழித்தாள்.

"உன்னையே எடுத்துக் கொள்ளலாம். உனக்கு என்ன விலை?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"மனித உயிருக்கு விலை கிடையாது. நிர்ணயிக்க முடியாது அரசே" என்றாள் உத்தமி.

"மனித உயிர் விலை மதிப்பற்றது என்கிறாய். அப்படியானால் இருபதாயிரம் பொற்காசுகள் என்பது மிகவும் அற்பம்."

"ஈழத் தாமரை அப்படி என்ன செய்தாள்? அவளுக்கென்ன விசேஷம்?"

"உனக்கு நேர்மாறு" என்று மங்கை வேந்தன் சொல்லவில்லை.

"அது தெரிந்து நீ என்ன செய்யப் போகிறாய்? உனக்கு விளங்காத விஷயங்கள் பல இருக்கின்றன உத்தமி. அவற்றைப் புரிந்து கொள்ள முயற்சிக்காதே" என்று சொன்ன மங்கை வேந்தன் தோலாவழக்கரை ஒரு பார்வை பார்த்தான்.

உடனே தோலா வழக்கர் "மன்னவா! நீங்கள் இவ்வளவு கடினமாகப் பேசியிருக்க வேண்டாம். அவள் என்ன கேட்டு விட்டாள் என்று கோபித்துக் கொள்கிறீர்கள்? அவள் பாவம்" என்றார்.

"எல்லாம் எனக்குத் தெரியும். பேசாமல் இரு" என்றான் மங்கை வேந்தன்.

தோலாவழக்கர் "நான் வெளியேறுகிறேன்" என்று சொல்லி எழுந்தார்.

"நானும் போகிறேன்" என்று உத்தமியும் எழுந்தாள்.

இருவரும் எழுந்து அறைக் கதவைத் திறக்க முற்பட்டார்கள்.

கதவு திறக்கவில்லை.

"தாளுதுவான்! நீ போய் என்ன வென்று பார்" என்றான் மங்கை வேந்தன்.

தாளுதுவானும் எழுந்து கதவைப் பல இடங்களில் தட்டிப் பார்த்து விட்டு "கதவு வெளியே பூட்டப் பட்டிருக்கிறது மன்னவா. திறக்க வா?" என்று கேட்டார்.

★★★



குழப்பமும் குதூகலமும்

"வேண்டாம் தாளுதுவான். நாம் இப்போது சத்திரத்து நிர்வாகியின் தயவில் இருக்கிறோம். இப்போது நாமாகத் தந்திரமான முறையில் கதவைத் திறப்பது சாதகமாக இருக்காது. நாம் ஏதும் அறியாதது போல் ஓய்வெடுப்போம். பொழுது விடிந்த பின் பார்த்துக் கொள்ளலாம்" என்றான் மங்கைவேந்தன்.

தோலாவழக்கரும் மறுப்பேதும் பேசாததால் அமைதியடைந்து எல்லோரும் அந்த விசாலமான அறையில் ஓய்வெடுத்தார்கள்.

மறுநாள் பொழுது விடிந்தது.

கதவு திறக்கப்படவில்லை.

அனைவரும் நீராடி முடித்த நிலையில் கதவு திறக்கப்பட்டு உணவு வந்தது.

உணவோடு சத்திர நிர்வாகியும் வந்தான்.

"அறையை ஏன் வெளியில் பூட்டி விட்டீர்கள்?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"தருமாசன விசாரணை நடக்க வேண்டும். இருபதாயிரம் பொற்காசுகளுக்கான முறியை நீங்கள் எழுத வேண்டும். அது முடிவதற்குள் நீங்கள் தப்பிச் சென்று விடக் கூடாதல்லவா? ஆகவே தான் பூட்டிவிட்டோம்" என்று நிதானமாகக் கூறினான் நிர்வாகி.

"எங்கள் மீது நம்பிக்கை இல்லையா?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"எச்சரிக்கையோடு இருப்பது நல்லது அல்லவா?" என்றான் நிர்வாகி.

"இன்று விசாரணை நடைபெறும் அல்லவா?"

"இல்லை. தருமாசனத்துத் தலைவர் ஊரில் இல்லை. அவர் வந்த பிறகு தான் விசாரணை நடக்கும்."

"அவர் எப்போது வருவார்?"

"தெரியாது. இரண்டு நாட்களில் வரலாம் என்று எதிர்பார்க்கப் படுகிறது. அது ஒரு வாரகாலமாகவும் ஆகலாம்."

"ஒரு மாத காலமாகவும் ஆகலாமா?"

"அதற்கு வாய்ப்பில்லை."

"அவர் வரும் வரை நாங்கள் கைதிகளைப் போல அறையிலேயே அடைந்து கிடக்க வேண்டுமா?"

"அப்படிக் கருத வேண்டியதில்லை. உங்களுக்குத் தேவையான உணவு வேளை தவறாமல் வரும். உங்களை யாரும் கொடுமை படுத்தப் போவதில்லை. உங்களைப் பிரிக்கப் போவதில்லை. பேச்சிற்குத் தடை விதிக்க வில்லை. ஓய்வுக்காலமாகக் கருதி அமைதியாக இருங்கள்."

"இந்தப் பெண்ணிற்கு மட்டும் தனி அறையை ஒதுக்க முடியுமா? எங்களுக்குச் சங்கடமாக இருக்கிறது."

"இல்லை. இல்லை. நான் இங்கேயே இருக்கிறேன்" என்றாள் உத்தமி.

நிர்வாகி அதை ஏற்கவில்லை. அவளை அழைத்துக் கொண்டு வெளியேறினான். அவளுக்குத் தனி அறையைக் கொடுத்தான்.

"நிர்வாகி இவ்வளவு கடுமையைக் காட்டுவது தேவைதானா மன்னவா?" என்று கேட்டார் நிழலில் ஒதுங்குவார்.

"இவன் திறமையான நிர்வாகி. கடுமை எதையும் காட்டவில்லை. மிகச் சரியாக நடந்து கொள்கிறான். ஆலி நாட்டில் நீங்களெல்லாம் நிர்வாகிகளாக இருந்தீர்கள். ஆனால் சத்திரத்து நிர்வாகியோடு ஒப்பிடும் போது உங்களையெல்லாம் சற்று குறைவாகத் தான் எண்ண வேண்டியிருக்கிறது. நீங்கள் அவனது நடைமுறையை மட்டும் கவனிக்காமல் ஈழத்தாமரையின் இழப்பையும் கவனியுங்கள். வேறொரு மனிதன் நிர்வாகியாக இருந்தால் நம்மையெல்லாம் கட்டிப் போட்டு வதைத்திருப்பான். இவனோ எது சரியோ அதைச் செய்கிறான். நம்மை வதைக்க இவனாலும் முடியும். அப்படிச் செய்தால் நமது உயிர் போகுமே தவிர இழப்பீடு அவனுக்குக் கிடைக்காது. இழப்பீடு தான் அவனுக்கு முக்கியமே தவிர நமது உயிரல்ல. அந்தத் தொகையை நாம் நாகப் பட்டினத்திற்குச் சென்ற பிறகு தான் தரமுடியும் என்றோம். அதற்கு என்ன உத்திரவாதம்? அதற்காகத் தான் தருமாசன அமைப்பைக் கூட்டுகிறான். அதில் முடிவாகும் வரை நம்மைச்

சுதந்திரமாக விட்டால் நாம் தப்பி விடுவோம் என்று நினைத்துச் சிறை வைத்திருக்கிறான். உண்மையிலேயே கதவுகளைத் திறந்து நம்மை வெளியே விட்டிருந்தால் நான் தப்புவதற்குத் தான் திட்டமிட்டிருந்தேன்" என்றான் மங்கை வேந்தன்.

"ஏன் அப்படி?"

"நாம் ஆரம்பத்திலிருந்து என்ன செய்து வருகிறோம்? பொய் - ஏமாற்று வேலை - கொள்ளை வழிப்பறி ஆகியவற்றைத் தானே? அப்படியெல்லாம் செய்ததால் தானே நமக்குச் செல்வம் கிட்டியது. கிட்டியதால் தானே திருப்பணி நடக்கிறத? புளியங்குளத்தில் கூட சிற்பி நாகசாமியிடம் பொய்யைத் தான் பேசி ரகசியத்தை அறிந்தோம். ஆகவே இங்கேயும் அப்படிச் செய்வதினால் என்ன வந்து விடப் போகிறது? நமது திருப்பணி நோக்கம் நிறைவேறும் வரை நம் செயல்பாடுகள் அனைத்தும் நியாயத்திற்குப் புறம்பானவை. தர்மத்திற்குப் புறம்பானவை. வெட்கப் படத் தக்கவை. இங்கே ஏமாற்றுவதற்கு நிர்வாகி இடம் தரவில்லை. சரியாக நடந்து கொண்டு நம்மை அறையில் முடக்கி விட்டான்."

"உத்தமியை ஏன் வேறு அறைக்கு வெளியேற்றி விட்டீர்கள்?"

தோலாவழக்கரைப் பார்த்துச் சிரித்தான் மங்கைவேந்தன்.

"நேற்றிரவு அவள் நடந்து கொண்டதைப் பார்த்தீர்கள் அல்லவா? தோலா வழக்கன் தன்னோடு கூட்டுச் சேர்ந்து விட்ட தைரியத்தில் எனக்கு முன்பாகவே சண்டை போடவும் தயாராகி விட்டாள். அவனோடு வெளியேறவும் முயன்றாள். அவள் பேராசைக் காரி மட்டுமல்ல. ஆபத்தானவள். நம்மோடு இங்கேயே தங்கினால் நம் மீது பொய்ப் புகாரைச் சொல்லி நிர்வாகி மூலம் தருமாசன விசாரணைக்கு ஆளாக்கி விடுவாள். நமக்கு பின்னடைவு நேரலாம். அதையெல்லாம் தவிர்க்கத் தான் அவளை வெளியேற்றினேன். இந்த விஷயத்திலும் சத்திரத்து நிர்வாகி விவேகத்துடன் நடந்து கொண்டிருக்கிறான்."

"அவளையும் பூட்டி வைப்பானா நிர்வாகி?"

"எப்படி வைத்திருந்தாலும் கவலையில்லை. அவள் தப்பித்து ஓடினால் கூட நல்லது தான். ஆனால் போகமாட்டாள். தோலா வழக்கனோடு கூட்டணி வைத்திருக்கிறாள் அல்லவா?"

மங்கை வேந்தன் சொன்னதைக் கேட்டுத் தோலா வழக்கர் சிரித்துக் கொண்டார்.

அன்றும் சரி மறுநாளும் சரி உணவு மட்டும் வேளா வேளைக்கு வந்தது. நிர்வாகி வரவில்லை.

தொந்தரவு இல்லையென்றாலும் வெளி உலகத்தை அறிய முடியாமல் அடைந்திருப்பது அவர்களுக்கு அவஸ்தையாக இருந்தது.

வெளியே ஏதேதோ நடப்பது போன்று அவர்களுக்குத் தோன்றியது.

பணியாளர்களைக் கேட்ட போது "எதையும் கேட்காதீர்கள். திரிகோணமலை தேறுமா என்று தெரியவில்லை" என்றார்கள்.

அவர்களிடம் பதற்றமிருந்தது.

மற்றொரு முறை கேட்ட போது "மழை. பேய்மழை" என்றார்கள்.

மழை பெய்வதையும் காற்று வீசுவதையும் அவர்களால் உணர முடிந்தது.

சில நேரங்களில் பேரோசை எழுவதையும் அறிய முடிந்தது.

உத்தமியைப் பற்றி விசாரித்தார்கள்.

"அறையில் தான் இருக்கிறாள். வெளியே போயிருந்தால் செத்திருப்பாள்" என்றார்கள் பணியாளர்கள்.

ஐந்து நாட்களாகியும் அறை திறக்கப்பட வில்லை. என்ன நடக்கிறது என்பதும் விளங்க வில்லை.

மறுநாள் பணியாளர்கள் கொடுத்ததாக ஒரு பேழையைக் கொடுத்து விட்டுப் போனார்கள்.

அதற்குள் தங்க நாணயங்களும் ஒரு ஓலையும் இருந்தது.

"இது உங்கள் வண்டிக்கும் அதற்குரிய காளைக்கும் உரிய தொகை. செலவிற்கு வைத்துக் கொள்ளவும். நாகைக்குச் செல்வதற்குக் கட்டணம் செலுத்தப் பட்டு விட்டது. அநேகமாக இன்றிலிருந்து மூன்றாவது நாள் கப்பலில் செல்லலாம்" என்றிருந்தது ஓலையில்.

மறுநாள் நிர்வாகி வந்தான்.

"தருமாசனத் தலைவர் சற்று நேரத்தில் இங்கேயே வருகிறார். ஓலையை எழுதிக் கொடுத்து விடுங்கள்" என்று கூறிவிட்டுச் சென்றான்.

ஒரு நாழிகை கழித்து மணியோசை எழுந்தது.

பணியாளன் வந்து "தலைவர் வந்து கொண்டிருக்கிறார்" என்று கூறிவிட்டுச் சென்றான்.

மேலும் ஒரு நாழிகை கழித்து மணியோசை எழுந்தது.

"வந்து விட்டார்.சொன்னபடி நடந்து கொள்ளுங்கள்"என்றான் பணியாளன்.

அதையடுத்து உள்ளே நுழைந்த நபரைக் கண்டதும் அங்கிருந்த ஆறு பேருமே வியந்தார்கள்.

வந்த நபர்-

ஈழத் தாமரை.

"தாமரை! நீயா?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"நானே தான். பேயில்லை. பிசாசு இல்லை" என்றாள் ஈழத்தாமரை.

தாமரை பெண் வடிவம் கொண்டு அலங்கரித்து வந்தது போல் இருந்தது அவளது கோலம்.

"வேலன் காட்டில் நீ மறைந்து விடவில்லையா?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"நான் மறைந்து போயிருந்தால் தான் உங்களுக்குத் திருப்தியா?" என்று கேட்டாள் ஈழத்தாமரை.

"ஆகா. வழிகாட்டியான நீ மறைய வேண்டும் என்று யார் தான் நினைப்பார்கள்? உட்கார் தாமரை. ஐந்து நாட்களாகச் சுவற்றையே பார்த்துக் கண்கள் பூத்திருந்த நிலையில் விழிகளைத் தடவிக் கொடுப்பது போல் இருக்கிறது உன் வரவு. உன்னை உயிரோடு பார்ப்பது எங்களுக்கு எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது தெரியுமா? அரங்கன் திருப்பணியே நிறைவடைந்தது போல் இருக்கிறது" என்றான் மங்கை வேந்தன்.

நெகிழ்ந்து போன ஈழத்தாமரை "அப்படியெல்லாம் சொல்லாதீர்கள். ஆலயத் திருப்பணி எங்கே? நானெங்கே?" என்று கேட்டு விட்டு உட்கார்ந்த அவள் "எல்லோரும் நலமாக இருக்கிறீர்களா? புளியங்குளம் பயணம் பயனுடையதாக இருந்ததா?" என்று கேட்டாள்.

"அதற்கெல்லாம் குறைவொன்றும் இல்லை தாமரை. நாங்கள் இங்கே வந்து விட்டதைத் தான் பார்க்கிறாயே! அதை விடு. காற்றில் கலந்தது போல் மலையில் மறைந்த நீ எப்படி மீண்டாய்?"

"மறைந்தது உண்மை. மீண்டதும் உண்மை. இடையில் நடந்தது என்ன என்பது எனக்குத் தெரியாது."

"உண்மையில் என்ன தான் நடந்தது?"

"அந்த மலைக்காட்டில் அமானுஷ்ய மர்மம் இருப்பது பற்றி உங்களிடம் சொன்னேன் அல்லவா! பாறையில் படுத்திருந்த

போது அது தான் நடந்தது. யாரோ என்னைத் தூக்குவதை மட்டும் உணர்ந்தேன் அதற்குப் பிறகு எனக்கு உணர்வில்லை. உணர்வு வந்த போது அதே இடத்தில் படுத்திருந்தேன். எழுந்து வந்தேன். உங்களில் யாரையும் காணவில்லை. வண்டியும் இல்லை. புளியங்குளத்தை நோக்கிச் சென்றிருப்பீர்கள் என்று நினைத்தேன். உங்கள் நோக்கம் வெற்றி பெற வாழ்த்தி விட்டு திரிகோணமலைக்கே திரும்பி விட்டேன். என்னைக் கவர்ந்த அனுமாஷ்ய சக்திக்கு என்னைப் பிடிக்க வில்லை போலிருக்கிறது. திரும்பக் கொண்டு வந்து போட்டு விட்டது."

"அந்த அமானுஷ்ய சக்தி நன்றாக இருக்கட்டும். உன்னைப் போலவே எல்லோரையும் காப்பாற்றட்டும். நல்ல உள்ளம் கொண்ட உன் வாழ்த்து தான் எங்களுக்கு இந்த நேரம் வரை நன்மையைச் செய்திருக்கிறது. உன்னைப் போன்றவர்கள் இருப்பதால் தான் நாட்டில மழை பெய்கிறது. மறக்க முடியாத உதவியை நீ செய்திருக்கிறாய். அரங்கன் ஆலய கோபுரம் கட்டி முடிக்கும் போது எங்காவது ஓரிடத்தில் உன்னைச் சிற்பமாக வடிக்கச் சொல்வேன்" என்று தெளிவாகவும் கனிவாகவும் சொன்ன மங்கை வேந்தன் "சத்திரத்து நிர்வாகி கூறியதெல்லாம் பொய்யா?" என்று கேட்டான்.

"உங்களோடு சற்று விளையாடியிருக்கிறார். நீங்கள் உண்மையைப் பேசியதும் பணிவு காட்டியதும் அவருக்குப் பிடித்துப் போய் விட்டது. எல்லா உதவிகளையும் அவரே செய்தார். உங்கள் வண்டிக்குரிய தொகையையும் உங்களுக்கு அனுப்பி விட்டார்"

"நிர்வாகியிடம் மட்டும் தான் பெண்ணே நான் உண்மையைப் பேசினேன். மற்ற எல்லா இடங்களிலும் பொய் தான்" என்று உள்ளுக்குள் நினைத்துக் கொண்ட மங்கை வேந்தன் "எதற்காக எங்களை இங்கே வைத்துப் பூட்டினார்?" என்று கேட்டான்.

"உங்களைப் பாதுகாப்பதற்காகத் தான். கடந்த மூன்று நாட்களாக வரலாறு காணாத புயல் திரிகோணமலையில் வீசியது. அது போலவே மழை. எங்கேயும் வெள்ளம். எனவே தான் உங்களை வெளியே விடாமல் இங்கேயே வைத்துப் பாதுகாத்தார். உங்கள் கடல் பயணத்திற்கான அனுமதிச் சீட்டை வாங்கி விட்டார் என்றாலும் புயல் காரணமாகத் துறைமுகம் மூடப் பட்டிருக்கிறது. கப்பல்கள் நடுக்கடலுக்கு அனுப்பப் பட்டிருக்கிறது. துறைமுகம் திறக்கப்பட்டு மரக்கலங்கள் வருவதற்கு இரண்டு நாட்கள் ஆகலாம். புயல் கரையைக் கடந்து மேற்கே சென்று விட்டது. மழை நின்று போய் வெள்ளம் வடிந்து

கொண்டிருக்கிறது. இனி நீங்கள் இங்கே அடைபட்டுக் கிடக்க வேண்டாம். வெளியே செல்லுங்கள். ஆனாலும் எச்சரிக்கையாக இருங்கள். கப்பல் புறப்பாடு உறுதியானதும் உங்களுக்குத் தேவையான துணிமணிகளையும் உணவையும் கொண்டு வந்து தருகிறேன்" என்று கூறிவிட்டு ஈழத்தாமரை விடைபெற்றுக் கொண்டாள்.

அறையை விட்டு வெளியே வந்த போது அனைவரையும் வரவேற்பது போல் குளிர் காற்று அவர்களைத் தழுவியபோது ஆனந்தமாக இருந்தது.

அதேசமயம் புயலும் மழையும் அக்கடற்கரைப் பட்டினத்தைப் புரட்டிப் போட்டிருந்தன. காணுமிடங்களிலெல்லாம் மரங்கள் வேரோடு பெயர்ந்து விழுந்திருந்தன. உளுத்திருந்த மாடங்கள் உடைந்திருந்தன. வெள்ளம் ஓடவில்லை என்றாலும் பள்ளங்கள் இருந்த இடங்களிலெல்லாம் தண்ணீர் நிரம்பியிருந்தது.

துறைமுகமானது அமைதியாக இருந்தது. ஒரு கப்பலும் கண்ணில் படவில்லை. துறைமுகத்தையடுத்த வியாபார கூட்டங்களும் சுங்கச் சாவடிகளும் சுவடுகளைத் தொலைத்து விட்ட சத்திரத்தைப் போலக் காணப்பட்டன. சுறுசுறுப்பாக இயங்கும் அங்காடிகளெல்லாம் புயல் வரவிருந்த நேரத்தில் முற்றிலும் அகற்றப்பட்டிருந்ததால் அங்கே ஆக்கிரமிப்பு செய்திருந்த கடல்நீர் பின்வாங்கியிருந்தது. கடலரசன் கலக்கமெய்தியது போலக் கடல் நீர் நிறம் மாறிக் கறுத்திருந்தது.

இரண்டு நாட்கள் கழித்து மங்கை வேந்தனும் மற்றவர்களும் நாகைக்குப் புறப்பட்டார்கள்.

நாகைக்குச் சென்றபோது நாகானன விஹாரம் அவர்கள் எதிர்பார்த்த நிலையில் இல்லை.

★★★



உத்தமியின் போக்கு

மங்கை வேந்தனும் அவனது தோழர்களும் வெளியே வந்த போது அவர்களுடன் உத்தமியும் வெளியே வந்து குளிர் காற்றின் இன்பத்தை அனுபவித்தாள். துறைமுகப்பகுதி சேதாரமாகிக் கிடந்ததைக் கண்டபோது அவளுக்கு தசவதனனின் நினைவு தான் வந்தது.

அவனிடம் காமப்புயல் வீசும் போது தனது நிலை ஏறக் குறைய தற்போது துறைமுகம் இருக்கும் நிலையில் தான் இருக்கும் என்று உள்ளுக்குள்ளேயே சொல்லிக் கொண்ட அவள் அதே சமயம் அவன் தன்னைச் சேரதாரப்படுத்துவது இன்பமாக இருந்ததையும் நினைவு கூர்ந்தாள்.

தன்னை நாகப்பட்டினத்திலிருந்து திரிகோணமலைக்கு அழைத்து வந்து நான்கு நாட்கள் தங்கியபோது சத்திரம், தோப்பு, கடற்கரை, குடிசை என்று பல இடங்களுக்கும் கொண்டு போய் காமப் புயலை வீச வைத்திருந்தான் தசவதனன். அதையெல்லாம் எண்ணிக் கொண்ட அவளுக்குப் புளியங்குளத்தில் அவனுக்கு நேர்ந்த கதி வருத்தமாக இருந்தாலும் அவனால் பயனில்லை என்பதை உணர்ந்து தன்னைத் தேற்றிக் கொண்டாள்.

தனக்குத் தோலாவழக்கரின் துணை கிடைத்தது அவளுக்கு ஆறுதலாக இருந்தது. சேதாரமான அங்காடிப் பகுதியும் துறைமுகமும் விரைவிலேயே புத்துயிர் பெற்று விடுமாதலால் தன்னிலையும் அதுபோலவே உயர்ந்து விடும் என்று எண்ணிக் கொண்ட அவள் அவர்களோடு மகிழ்ச்சியாகவே உலவினாள்.

புயல் காற்று திடீரென உருவானதற்குக் காரணமென்ன என்று மங்கை வேந்தன் வினவிய போது "இது திடீர்ப் புயலல்ல. வடகிழக்குப் பருவக் காற்று முடிவடையும் காலத்தை அடைந்து விட்டதால் கடலில் புயல் உண்டானது" என்று பலரும் கூறினார்கள்.

"இந்தப் புயல் நாகப் பட்டினத்தைத் தாக்குமா?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"புயலின் திசை தென் மேற்கில் அமைந்திருக்கிறது. இது இலங்கையைக் கடக்கும் போதே வேகத்தை இழந்து விடும். தமிழகத்திற்குப் பாதிப்பு இருக்காது. மழை வேண்டுமானால் ஆங்காங்கே பெய்யலாம்."

இரண்டு நாட்கள் கழித்து துறைமுகம் இயல்பு நிலைக்குத் திரும்பியது. வெறிச்சோடியிருந்த கடல் பகுதியில் புற்றீசல்களைப் போலப் கப்பல்கள் மிதந்தன. சுங்கச் சாவடிகளும் அங்காடிகளும் உயிர் பெற்றன. புயலால் உண்டான அமைதி முற்றிலுமாக அகன்று ஆரவாரம் எங்கும் எழுந்தது.

ஈழத்தாமரை வந்தாள்.

"நீங்கள் நாகைக்குச் செல்லும் கப்பல் இன்று மாலை புறப்படுகிறது. சரக்குக் கப்பலும் அல்ல. சங்கரம் போன்ற பெரிய கப்பலும் அல்ல. சிறிய கப்பல். பயணிகள் கப்பல். நாளை காலை நாகைக்குச் சென்று விடும்" என்று சொன்ன ஈழத்தாமரை பயணத்திற்கான உலோக அனுமதிச் சீட்டு, மாற்றுடைகள், உணவு ஆகியவற்றைக் கொடுத்தாள்.

"ஈழத்தாமரை! பெரும் பதற்றத்திலும் சோர்விலும் இருந்த எங்களை உனது வரவு தான் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. பல்வேறு கேள்விகளோடும் குழப்பங்களோடும் நாகையிலிருந்து திரிகோணமலைக்கு வந்தோம். இப்போது அவை நீங்கி அமைதியாகச் செல்கிறோம். அதற்கு நீயே காரணம். ஆலயத் திருப்பணி பூரணமடைந்தாலும் அதற்கும் நீதான் காரணமாக இருப்பாய். உனக்கு அந்த அரங்கனின் அருள் பரிபூரணமாகக் கிடைக்கும். மிக்க நன்றி. விடைபெறுகிறோம்" என்றான் மங்கை வேந்தன்.

ஈழத்தாமரையும் சத்திர நிர்வாகியும் "உங்கள் திருப்பணி நிச்சயமாக வெற்றி பெறும். சென்று வாருங்கள்" என்று கூறி வழியனுப்பி வைத்தார்கள்.

மாலையில் எந்தப் பிரச்சனையும் இல்லாமல் அவர்கள் கப்பலேறினார்கள். கப்பல் புறப்பட்டது.

எல்லோரும் பேசிக் கொண்டிருந்த நிலையில் மங்கை வேந்தன் மட்டும் தளத்திற்கு வந்து பாய்மரத் தண்டைப் பிடித்தபடி யோசனையில் ஆழ்ந்தான்.

மாலை நேரம் நழுவிச் சென்று இரவு நேரம் தழுவிய போது எங்கும் இருளானது ஆட்சி செய்யலாயிற்று. கடலில் அந்த இருள் தவழ்ந்திருந்தாலும் வானில் சந்திரனும் நட்சத்திரங்களும் விளக்குகளைப் போலத் தோன்றின.

"பூமியில் என்ன விதமான விளக்குகள் இருந்தாலும் வான விளக்குகளின் அழகு அவற்றுக்கு வராது. பூமி விளக்குகள் வெப்பமானவை. வானவிளக்குகள் குளிர்ச்சியானவை. எனக்கு மறுபிறவி ஒன்றிருந்தால் அதில் வான விளக்காகத் தோன்ற விரும்புகிறேன் நான்" என்று பல சந்தர்ப்பங்களில் இரவு நேர வானத்துக் கோலத்தைப் பார்த்துப் பரவசப்பட்டு பேசக் கூடியவனான மங்கை வேந்தன் அவற்றையெல்லாம் மறந்து யோசனையில் ஆழ்ந்திருந்தான்.

"மன்னவா! எதைப் பற்றி யோசனை?" என்று வினவினார் நிழலில் ஒதுங்குவான்.

"நடக்க வேண்டியவற்றைப் பற்றித் தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். நாகை விஹாரத்தில் இருக்கும் பொற் சிலையைக் கவர்ந்து விட்டால் ஆலயத் திருப்பணி நிறைவேறி விடும். ஆனால் விஹாரத்தில் இருக்கும் சிலையை எப்படி எடுப்பது என்று தான் தெரியவில்லை" என்றான் மங்கை வேந்தன்.

"சிற்பி நாகசாமி கூறிய யந்திர சூட்சுமத்தை உடைத்தால் சிலையைக் கைப்பற்றலாமே?" என்றார் நிழலில் ஒதுங்குவான்.

"அதை எப்படிச் செய்வது என்று தான் யோசிக்கிறேன். ரகசியமாகச் செய்ய வேண்டிய வேலை அது. தெரியுமல்லவா?"

"நானும் நாகப்பட்டினத்துப் போலி பிட்சுவான சிபி சோரனும் சிலையைக் கவர்வது போல நாடகம் ஆடினோம் அல்லவா? அதைப் போலவே முயல வேண்டியது தான். அது தான் வழி. நள்ளிரவில் இருண்டு கிடக்கும் விஹாரத்தின் தெற்குப் புறத்தில் மதில் மீது ஏறி உள்ளே இறங்குவோம். யந்திர சூட்சுமம் எங்கே இருக்கிறதோ அதைக் கண்டு அகற்றுவோம். சிலை இருக்கும் அறையை அடைவோம். சிலையைக் கைப்பற்றுவோம்."

"நீ கூறுவது பேசுவதற்கு எளிதாக இருக்கிறது. செயலில் அப்படி இருக்காது. வேறு வழியை யோசி. நானும் யோசிக்கிறேன்" என்றான் மங்கை வேந்தன்.

இதற்கிடையில் தோலாவழக்கரைக் கப்பலின் ஒரு மூலைக்கு அழைத்துச் சென்ற உத்தமி "விஹாரத்தில் இருக்கும் பொற்சிலையை ஆலிநாட்டு மன்னர் கவர நினைக்கிறாரே அது ஆலயத் திருப்பணிக்காகத் தானா?" என்று கேட்டாள்.

"இது என்ன அர்த்தமற்ற கேள்வி?" என்று கேட்டார் தோலாவழக்கர்.

"ஏன்? என்ன ஆயிற்று?"

"நாகைக்குச் சென்றதும் நாம் பிரியப் போகிறோம். யந்திர சூட்சுமத்தை அகற்றிச் சிலையைக் கவரப் போகிறோம். அது தானே நம் திட்டம்? மன்னரைப் பற்றிய கவலை எதற்கு?"

"நீங்கள் கூறுவது சரிதான்."

"சிலையை எடுக்கப் போவது நாம். நாம் எடுத்து விட்டால் மன்னர் எப்படி எடுக்க முடியும்? திருப்பணிக்குச் செலவழிக்க முடியும்? மிகவும் ஆபத்தான அதே சமயம் மகத்தான திட்டத்தை நிறைவேற்றப் போகிறோம். இந்த நேரத்தில் இப்படித் தான் நீ முட்டாள் தனமாகப் பேசுவதா?"

"தவறு தான் ஐயா. மன்னர் நினைவாகவே இருந்தது. மன்னர் என்ன செய்யப் போகிறார் என்ற கவலை இருந்தது. ஆகவே அவ்வாறு கேட்டு விட்டேன். மன்னித்து விடுங்கள்."

"ஆனால் ஒரு விஷயம் உத்தமி. நீ யந்திர சூட்சுமத்தைக் கூறியதால் தான் உன்னோடு நான் கூட்டணி வைத்தேன். அந்தச் சூட்சுமம் மட்டும் தவறாக இருந்தால் உன்னைப் பெண்ணென்று பார்க்க மாட்டேன். கழுத்தை நெறித்துக் கொல்வேன்."

தோலாவழக்கரின் இந்தப் பேச்சைக் கேட்டதும் அதிர்ந்தாள் உத்தமி. அவள் கூறிய யந்திர சூட்சுமம் பொய்யானது என்பது அவளுக்குத் தெரியுமாதலால் தோலாவழக்கர் எச்சரிப்பது போல் ஆகி விடுமோ என்று பயந்தாள். அவருக்கு உடனடியாகப் பதிலைச் சொல்ல முடியவில்லை.

"என்ன மௌனமாக இருக்கிறாய்? என்ன யோசனை?" என்று வினவினார் தோலாவழக்கர். "நான் கூறிய யந்திர சூட்சுமம் மன்னருக்கும் தெரிந்திருக்குமோ என்று யோசனையாக இருக்கிறது."

"என்ன உளறுகிறாய்? அவருக்கெப்படி அது தெரியும்? அதோடு நீ தானே அவரிடம் அதைப் பற்றிச் சொன்னாய்? அது பொய் என்று சொல்லி வேறு தகவலைச் சொன்னது நீ தானே? இவ்வளவிற்குப் பிறகு மன்னருக்குத் தெரிந்திருக்குமோ என்று உளறுகிறாயே! பைத்தியம் பிடித்து விட்டதாக உனக்கு?"

"உத்தமிக்கு உண்மையிலேயே பைத்தியம் பிடித்த மாதிரி தான் இருந்தது. அதிக ஆர்வம் காரணமாகவும் அதிகப் பேராசை காரணமாகவும் தான் உளறுவதாகவும் தோன்றியது. எனவே மேற்கொண்டு எதுவும் பேசாமல் யோசனையில் ஆழ்ந்தாள்.

மங்கை வேந்தனுக்கும் அவனது தோழர்களுக்கும் நாகாகளை விஹாரத்தில் இருக்கும் சிலையைக் கடத்துவதில் வேறு யோசனை தோன்றவில்லை.

நள்ளிரவு நேரம்.

மங்கை வேந்தன் மட்டும் கப்பல் தளத்தில் படுத்திக் கிடந்தான். கடற் காற்று அவனைக் கரைப்பது போல் வீசியது.

அவனுக்குப் பொற்சிலையைக் கவர்வது பற்றியே சிந்தனை ஓடிக் கொண்டிருந்ததால் அதற்கு அப்பால் சிந்தனை ஓடவில்லை.

அந்த நேரத்தில் அங்கு வந்தாள் உத்தமி.

"உறங்கி விட்டீர்களா அரசே?"

"இல்லை" என்றான் மன்னன் அசையாமலேயே.

"யந்திர சூட்சுமத்தை எப்படி அகற்றப் போகிறீர்கள் அரசே?"

"என் கூட்டாளிகளிடம் யோசனை கேட்டேன். ஒருவரும் உருப்படியாக யோசனை எதுவும் சொல்லவில்லை. நீ தான் சொல்லேன்."

"எனக்கென்ன தெரியும் வேந்தே!"

"நீ சாமர்த்தியம் நிறைந்தவள். சிற்பி தசவதனனுடன் பழகியவள். அவன் இறக்கும் போது யந்திர சூட்சுமத்தைப் பற்றி உன்னிடம் சொல்லியிருக்கிறான். அதை எப்படி அகற்றுவது என்று சொல்ல வில்லையா?"

"சொல்லியிருந்தால் அதைத் தங்களிடம் சொல்லாமல் இருந்திருப்பேனா மன்னவா?"

"ஒருவருமே யோசனை சொல்லவில்லை. ஆனால் பங்கு மட்டும் கேட்கிறீர்கள்?"

"அரசே! தங்களுக்கு ஒரு தகவல் சொல்லவா? அதற்காகத் தான் இங்கே வந்தேன்?"

"சொல்"

"தோலா வழக்கரை நம்பாதீர்கள்."

"ஏன்?"

"அவர் உங்களுக்குத் துரோகம் செய்ய முயல்கிறார்."

"அவன் என் நண்பன். அப்படியெல்லாம் செய்ய மாட்டான்."

"நான் சொல்வது சத்தியம்."

"அவன் என்ன துரோகம் செய்யப் போகிறான்?"

"காட்டில் தனிமையில் இருந்த என்னிடம் ஆசை காட்டினார். நாகப் பட்டினத்திற்குச் சென்ற பிறகு என்னோடு சேர்ந்து தனி

கூட்டணி அமைத்து புத்தர் சிலையைக் களவாடிச் செல்ல முடிவு செய்திருக்கிறார்."

"அப்படியா?"

"ஆம் அரசே. என்னை வற்புறுத்துகிறார். பயமுறுத்துகிறார். எனக்கோ அவருடன் கூட்டணி வைத்துக் கொள்ள விருப்பமில்லை. கடைசிவரை தங்களுடனேயே இருக்க விரும்புகிறேன். தங்களுக்குச் சேவை செய்யவே விரும்புகிறேன். என்னைக் கைவிட்டு விடாதீர்கள். தோலாவழக்கரை நம்பாதீர்கள். எச்சரிக்கையாக இருங்கள்."

"எல்லாவற்றையும் நாகப் பட்டிணத்திற்குச் சென்றபின் பார்த்துக் கொள்ளலாம். நீ அமைதியாக இரு" என்றான் மங்கை வேந்தன்.

உத்தமியின் போக்கு அவனுக்குச் சிரிப்பாக இருந்தது. எதற்காக அடிக்கடி கட்சி மாறுகிறாள் என்று நினைத்தான். அவள் குழப்பத்தில் இருப்பதும் அவனுக்குப் புரிந்தது.

உண்மையில் உத்தமி குழப்பத்தில் தான் இருந்தாள். தோலா வழக்கரைப் பெரிதாக நம்பியிருந்த அவள் அவர் தன் கழுத்தை நெறித்துக் கொன்று விடுவேன் என்று மிரட்டிய போது அவர் மீது அச்சம் ஏற்பட்டது அவளுக்கு. தான் கூறிய யந்திர சூட்சுமம் பொய் என்பதாலேயே அவளுக்கு அச்சம் தோன்றியது. எனவே மன்னனிடம் அவரைக் காட்டிக் கொடுத்து விட்டு மன்னனின் பக்கம் சேர்ந்து கொள்ள முயன்றாள். மன்னனிடம் வந்து காட்டிக் கொடுக்கவும் செய்தாள்.

இருப்பினும் அவளுக்குக் குழப்பம் தீரவில்லை.

உள்ளுக்குள் ஒரு விதக் கொலை வெறி மூண்டது.

மங்கை வேந்தனையும் அவனைச் சேர்ந்தவர்களையும் ஒழித்து விட்டால் என்ன என்று தோன்றியது.

ஒருவித தீர்மானம் செய்து கொண்டு மரக்கலத் தலைவனின் அறைக்குச் சென்றாள்.

மரக்கலத் தலைவன் தனது அறையில் மதுவைப் பருகியபடி அமர்ந்திருந்தான்.

நள்ளிரவில் அவனுக்கு அது வழக்கம்.

உள்ளே நுழைந்த உத்தமி "மரக்கலத் தலைவரே! வணக்கம்" என்றாள்.

சிவந்த கண்களுடன் இருந்த மரக்கலத் தலைவன் "என்ன?" என்று படி மேலும் சற்று மதுவைக் குடித்தான்.

"மரக்கலத்தில் இருக்கும் வரை உங்கள் ஆணை தானே செல்லுபடி ஆகும்?"

"ஆமாம். அதற்கென்ன?"

"மரக்கலத்தில் வணிகர்கள் வேடத்தில் ஆறு கொள்ளைக் காரர்கள் இருக்கிறார்கள். மரக்கலத்தில் இருப்பவர்களை யெல்லாம் கொன்று விட்டு மரக்கலத்தைக் கடத்த திட்ட மிட்டிருக்கிறார்கள்."

"பொய்."

"சத்தியம்."

"நம்பமாட்டேன்."

"இப்போதாவது நம்புவீர்களா?" என்று சொல்லி எதிர்பாராத காரியத்தைச் செய்தாள் உத்தமி.

அதிர்ந்து போனான் மரக்கலத் தலைவன்.

★★★



எதிர்பாராத முடிவு

"பெண்ணே! இதென்ன கோலம்? சீ.." என்று அதிர்ந்து போய் விட்டான் மரக்கலத் தலைவன்.

"வேறென்ன செய்வது? சத்தியம் செய்தால் கூட நம்பமாட்டேன் என்றால் உங்களை நம்ப வைப்பதற்கு இது தான் சரி" என்றாள் உத்தமி வெட்கமில்லாமல்.

"உன்னைத் தவிர வேறு யாரும் இப்படி நடந்து கொள்ள மாட்டார்கள். முதலில் ஆடையை எடுத்து அணிந்து கொள்"என்றான் மரக்கலத்தலைவன்.

"உங்களுக்கு என்னைப் பிடிக்கவில்லையா? இந்த நிலையில் நானிருப்பதைப் பார்த்து உங்களுக்கு ஆசை வரவில்லையா?" என்று கேட்ட உத்தமி அறைக் கதவைச் சாத்தினாள்.

நிறைய குடித்திருந்த அவனுக்கு ஒரு மாதிரியாகத் தான் இருந்தது. தானாக வரும் விருந்தை ஏன் மறுக்க வேண்டும் என்று அவனுக்குள் இருந்த மது கேட்டது.

உத்தமியும் சும்மாயிராமல் தனது பெயருக்கும் குணத்திற்கும் சம்பந்தம் இல்லாதவளாய் நெருங்கிச் சென்று அவனைக் கட்டிப் பிடித்தாள்.

மானே விரும்பும் போது வேங்கைக்கு என்ன?

உத்தமியை முழுவதுமாக ஏற்றான் மரக்கலத் தலைவன்.

இரண்டு நாழிகை நேரம் அவனுக்கு இன்பமாகக் கழிந்தது.

தெம்போடு எழுந்தான்.

மரக்கலத் தலைவன் இனி தன் சொற்படி நடப்பான் என்ற நம்பிக்கை வந்ததால் உத்தமியும் தெம்படைந்தாள்.

"எங்கே இருக்கிறார்கள் அந்த அயோக்கியர்கள்? காட்டு" என்று மரக்கரத் தலைவன் சொன்னதும் கிறுகிறுத்தது உத்தமிக்கு.

"கொள்ளையர் தலைவன் தளத்தில் தான் படுத்திருக்கிறான். மற்றவர்கள் கீழே இருக்கிறார்கள்" என்று சொல்லி மரக்கலத்

தலைவனை அழைத்துச் சென்ற உத்தமி மங்கை வேந்தனைக் காட்டி "இவன்தான். மரக்கலத்தில் உங்கள் தீர்ப்பு தானே இறுதியானது?" என்று வினவினாள்.

"ஆமாம். நான் தான் எல்லாம். யாரும் என் தீர்ப்பில் குறுக்கிட முடியாது" என்று சொல்லிவிட்டு மங்கை வேந்தனைப் பார்த்து "டேய்! எழுந்திரு" என்றான் அவனது முகத்தைப் பார்க்காமல்.

மங்கை வேந்தன் புரண்டு எழுந்ததும் "நீங்களா?" என்று வியந்து கேட்டான் மரக்கலத் தலைவன்.

"ஏன்? என்ன ஆயிற்று?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

அவன் உத்தமியைப் பார்த்து "இவரைத் தான் சொன்னாயா?" என்று கேட்டான்.

"ஆமாம். இவனும் இவனோடு சேர்ந்த ஐந்து பேர்களும் தான்."

"அடிப்பதரே! இவர்களையா கொள்ளைக் காரர்கள் என்றாய்? திரிகோண மலையின் சத்திரத்து நிர்வாகி எனது சகோதரர். இவரைப் பற்றியும் இவரோடு வந்த ஐந்து பேர்களைப் பற்றியும் விவரமாகச் சொன்னார். இவர்களுக்குத் தேவையான உதவிகளைச் சொல்லி நாகப் பட்டினத்திற்கு பத்திரமாகக் கொண்டு போய் விடும்படிக் கேட்டுக் கொண்டார். இவர்களா கப்பலில் இருப்பவர்களையெல்லாம் கொன்று விட்டு மரக்கலத்தைக் கடத்தப் போவதாகச் சொன்னாய்? முட்டாளே. நீ பெண்ணே அல்ல. பேய். பேயுமல்ல. இழிபிறவி. உனக்கு நான் தண்டனையளிக்கிறேன். என்ன தண்டனை தெரியுமா?" என்று கூறிவிட்டு அவளை அப்படியே தூக்கிக் கடலில் எறிந்தான்.

எறியும் போது அவளது தலை எதிர்பாராத விதமாக மரக்கலத்தில் பக்கப் பலகையில் மோதி விழுந்ததால் கடலில் விழுவதற்கு முன்பாகவே அவளது மண்டை உடைந்தது. கடலில் விழுந்ததும் உயிரும் போயிற்று.

"மரக்கலத் தலைவரே! இது என்ன இப்படிச் செய்து விட்டீர்கள்?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"சதி செய்து உங்களையெல்லாம் கொன்று விட என்னை இங்கே அழைத்து வந்தாள். எதையும் செய்யக் கூடிய அவள் சாகசக்காரி. ஆபத்தானவள். உயிருடன் வாழத் தகுதியற்றவள். வேறு எந்தத் தண்டனையும் அவளுக்குப் பொருத்தமாக இருக்காது. மரண தண்டனையே சரி. அவளை நான் கடலில் எறியத் தான் எண்ணினேன். விதி அவளது மண்டையை உடைத்துக் கடலில் வீழ்த்தி விட்டது. இதற்காக நீங்கள் கவலைப் படாதீர்கள்." என்றான் மரக்கலத்தலைவன்.

உத்தமியிடம் உத்தமகுணங்களும் இல்லை. பெண்ணிற்குரிய இயல்பான குணங்களும் இல்லை. அவள் ஆபத்தானவள் என்பது உண்மைதான். ஆனாலும் அவளது முடிவு ஜீரணிக்க முடியாததாக இருந்தது மங்கை வேந்தனுக்கு. தன் தோழர்களை அழைத்து இது பற்றிக் கூறியபோது அவர்களும் அவனைப் போலவே நினைத்தார்கள்.

"அந்தப் பேராசைகளோடும் தீயகுணங்களோடும் இருந்த அவள் இறந்ததே நல்லது மன்னவா. அவள் உயிரோடு இருந்திருந்தால் அமைதியான வாழ்வு அவளுக்குக் கிடைக்காது" என்றார் தோலாவழக்கர்.

மரக்கலம் விடியற்காலை நேரத்தில் நாகப்பட்டினத் துறை முகத்தை அடைந்தது.* துறைமுகத்தை விட்டுச் சத்திரம் ஒன்றுக்கு வந்து தங்கி நீராடி உணவை முடித்தார்கள்.

நிழலில் ஒதுங்குவானைப் பார்த்த மங்கை வேந்தன் "நீ தானே போலித் துறவியுடன் விஹாரத்திற்குச் சென்றாய்? தெற்கு மதில் பக்கம் தானே கேட்பாரற்றக் கிடக்கிறது? நீ போய் நிலவரத்தைப் பார்த்து விட்டு வா. மற்றதை முடிவு செய்வோம்" என்றான்.

அவர் விஹாரத்திற்குச் சென்று விட்டு வந்த தகவல் அதிர்ச்சிகரமானதாக இருந்தது.

"மன்னவா! விஹாரம் முன்னிருந்த நிலையில் இல்லை. நான்கு புறங்களும் சுத்தம் செய்யப் பட்டு தூண்விளக்குகள் அமைக்கப் பட்டிருக்கின்றன. தெற்குப் புறம் இருந்த மரமும் வெட்டப் பட்டிருக்கிறது" என்றார் நிழலில் ஒதுங்குவான்.

"நீயும் சிபிசோரனும் விஹாரத்திற்குள் செல்வதற்கு முயன்றீர்களே அச்சம்பவம் தான் தற்போதைய ஏற்பாடுகளுக்குக் காரணமாக இருக்கலாம். ஆனாலும் கூட யந்திர சூட்சுமத்தை நீக்கினாலன்றி புத்தர் சிலையை அகற்ற முடியாது. அதோடு விஹாரம் மூடிய நிலையிலேயே இருக்கிறது. அப்படி இருக்கும் போது இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகளெல்லாம் எதற்கு என்று தோன்றுகிறது" என்று சொன்ன மங்கை வேந்தன் "நமக்குக் கொஞ்சம் அவகாசம் தேவைப் படுகிறது. ஆகவே நீ பழைய படியே புத்தபிட்சுவாக மாறி மக்களைச் சந்தி. சாயை பிடிப்பான், நீ சென்று நம் அறுவருக்கும் புரவிகளை ஏற்பாடு செய். முடிந்தால் ஆலி நாட்டிற்கே சென்று ஏற்பாடு செய்து கொண்டு வந்தாலும் சரி. இரண்டு நாட்களாகும் ஆலி நாட்டிற்குச் செல்லும்

---

* மங்கை வேந்தன் தமிழகத்திலிருந்து இலங்கைக்குச் சென்று யந்திர நுட்பத்தை அறிந்து வந்ததைப் பல நூல்கள் கூறுகின்றன. பிரதானமாகக் கீழ்கண்ட வைணவ நூல் தெரிவிக்கிறது. பக்கம் 82-83. 'ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவம்' By பின்பழகிய பெருமாள் ஜீயர்.

நிலையில் அங்குள்ள நிலை என்ன என்பதையும் அறிந்து வா. குமுதவல்லியை எக்காரணம் கொண்டும் சந்திக்காதே. நாம் இலங்கைக்குச் சென்றது, தற்போது இங்கு இருப்பது யாருக்கும் தெரிய வேண்டாம். குறிப்பாக குமுதவல்லிக்குத் தெரியக் கூடாது" என்றான்.

நிழலில் ஒதுங்குவான் வணிக வேடத்தைக் களைந்தார். பழையபடி இலந்தை மரத் தோப்பிற்குச் சென்றார். அங்கே ஓரிரு பிட்சுகள் உலவிக் கொண்டிருந்தாலும் அவரிடம் எதுவும் பேசவில்லை. பேசாமல் பெரியதோர் இலந்தை மரத்தின் கீழ் அமர்ந்து கொண்டு தியானத்தில் ஆழ்ந்தார். மங்கை வேந்தனின் சீடர்கள் அனைவரும் யோகப் பயிற்சியும் தியானப் பயிற்சியும் பெற்றவர்கள். சித்து வேலைகள் சிலவற்றிலும் ஈடுபடக் கூடியவர்கள். வர்மக்கலையில் வல்லவர்கள். சகலகலா வல்லவர்களாக அவர்கள் திகழ்ந்த படியால் தற்போது நிழலில் ஒதுங்குவான் தியானத்தில் அமர்ந்து கண்களை மூடியதும் உண்மையாகவே தியானம் கை கூடியது. தன்னிலை மறந்த நிலையை அடைந்தார்.

அவரப்படி அசைவற்ற நிலையில் தியானத்தில் ஆழ்ந்திருப்பதைப் பிட்சுகள் கண்டார்கள். அவர் ஏற்கனவே அத்தோப்புப் பகுதிக்கு வந்து போதனைகளைச் செய்து மனத்தைக் கவர்ந்தவர் என்பதை அறிந்து கொண்டார்கள். மூன்று நாழிகைக்கு மேலாகியும் அவரது தியானம் கலையவில்லை. அவர்மீது எறும்புகளும் பூச்சிகளும் ஊர்ந்தன. அவர் அசையவில்லை. பிட்சுகள் வியந்தார்கள். மகாதேரர் என்று சொல்லிக் கொண்டு அவர்களை மிரட்டி வாழ்ந்த சிபிசோரனும் சரி - தேரி கௌதமியும் இப்படித் தன்னிலை மறந்த ஆழ்நிலை தியானத்தில் அமர்ந்து அவர்கள் கண்டதில்லை.

தியானத்தில் இருந்த நிழலில் ஒதுங்குவான் எட்டு நாழிகைக்குப் பிறகு தியானத்தைக் கலைத்து கண் விழித்த போது தனக்கு முன்னால் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் அமர்ந்திருப்பதைக் கண்டு வியந்தாலும் வியப்பைக் காட்டிக் கொள்ளவில்லை.

எழுந்து தன் உடம்பிலிருந்த பூச்சிகளைத் தட்டிவிட்டு வேறிடத்திற்கு வந்து அமர்ந்தார்.

"அடிகளுக்கு வந்தனம். தாங்கள் திடீரென்று மறைந்து விட்டீர்களே! எங்குச் சென்றீர்கள்?" என்று கேட்டார்கள் சில பிட்சுகள்.

நிழலில் ஒதுங்குவான் லேசாகச் சிரித்து "பெரும் ஞானிகள் உடலால் பல இடங்களுக்குச் செல்வார்கள். ஆனால் ஆத்மா

அவர்கள் விரும்பும் இடத்திலேயே இருக்கும். மகான் புத்தர் அப்படித் தான் இலங்கைக்குச் சென்றார். அந்த வகையில் என் ஆத்மா இங்கே உங்களோடு எப்போதுமே இருக்கிறது. தேவையான போது உடம்பை விட்டு விடுகிறேன்" என்றார்.

"தங்களால் தன்னிலை மறந்த தியானத்தில் எப்படி இருக்க முடிகிறது?"

"பயிற்சியில் தான் இயலுகிறது. மற்றபடி அதில் அதிசயம் ஒன்றும் இல்லை."

"அடிகளே! தாங்கள் இங்கே வந்திருந்த போது நல்வழியைக் காட்டினீர்கள். ஆனால் போலி தேரர் நாகானன விஹாரத்தில் பிரவேசித்து மகான் புத்தரின் சிலையைக் கடத்த முற்பட்டதைக் கண்டபோது உறைந்து போய்விட்டோம்."

"போலியான மகாதேரர் தகாத காரியத்தில் ஈடுபட்டார். உண்மையான தேரியான தேரியோ உயிரை விட்டு விட்டாள். எல்லாமே தலைகீழாக இருக்கிறது" என்று சொன்ன நிழலில் ஒதுங்குவான் மகாதேரர் தகாத காரியம் செய்ய முற்பட்டதால் நீங்கள் எதற்காக உறைந்து போக வேண்டும்? மகான் புத்தரது சிலையைத் தான் அவரால் கைப்பற்ற முடியவில்லையே?" என்று கேட்டார்.

"உண்மைதான் அடிகளே. இருப்பினும் அந்த நிகழ்ச்சி எங்களை மிகவும் பாதித்து விட்டது."

"மகான் புத்தர் அவதரிக்க வேண்டும் என்று கோடான கோடி மக்கள் பலகாலமாக வேண்டியதன் பலனாகப் புத்தர் அவதரித்தார். அவர் தற்போது இருந்திருந்தால் இவர்களுக்காகவா நாம் அவதரித்தோம் என்று வேதனைப் பட்டிருப்பார்? எளிமையே வாழ்க்கை என்று போதித்து வாழ்ந்த மகானுக்குப் பொன்னால் சிலை செய்வது, இது அறிவா? அறிவீனமா? விலை மதிக்க முடியாத சிலையைச் செய்து விட்டு அது பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று விஹாரத்தையே மூடி விட்டது அறிவா? அறிவீனமா? அச்சிலை இருக்கும் இடத்தைப் பார்க்கவும் முடியாமல் யந்திர சூட்சுமத்தை அமைத்தது அறிவா? அறிவீனமா? சூட்சுமத்தை அமைத்த சிற்பியை இலங்கைக்கு அனுப்பி அது பற்றி ஒருவரும் அறிந்திராமல் செய்தது அறிவா? அறிவீனமா? சிலையைக் கவர முற்பட்ட போலித் தேரரின் செய்கையை கண்டு எதுவும் செய்யாமல் எப்போதும் போல் பௌத்தர்களாகிய நீங்கள் முடங்கிக் கிடப்பது அறிவா? அறிவீனமா? இவற்றையெல்லாமா மகான் புத்தர் விரும்பினார்? இதுதானா அவரது உபதேசம் உணர்த்திய உண்மை? உங்களையெல்லாம் பார்க்கும் போது

வெறுப்பாகவும் இருக்கிறது. வேதனையாகவும் இருக்கிறது. விஹாரத்தைத் திறந்து, வழிபாட்டிற்கு வழி வகுத்து, புத்தர் விக்ரகத்தைப் பாதுகாப்பதே அறிவார்ந்த காரியம். அதற்கு ஏன் நீங்களெல்லாம் முயற்சி செய்யவில்லை?"

"யந்திர சூட்சுமம் என்னதென்று அறியாமல் நாங்கள் என்ன செய்ய முடியும்?"

"அது தெரிந்து விட்டால் விஹாரத்தைத் திறந்து வழிபாட்டிற்கு ஏற்பாடு செய்து விடுவீர்களா?"

"இரண்டொரு நாளில் யந்திர சூட்சுமத்தை உடைக்க ஒருவன் வரப்போகிறான். அவனைக் கேட்டு மேலே ஆக வேண்டியதைக் கவனியுங்கள் என்று நான் சொல்வதற்குத் தயார். நீங்கள் செயல் படத் தயாரா?" என்று கேட்டால் நிழலில் ஒதுங்குவான்.

"தயாராக இருக்கிறோம்."

"நீங்கள் நூறு பேர் போதாது. இன்னும் வேண்டும். வெறும் பௌத்தர்கள் போதாது. மக்களும் வேண்டும். மகானின் உத்தரவு எனக்கு அசரீரியாக வரும். அப்போது சொல்கிறேன்" என்றார் நிழலில் ஒதுங்குவான்.

இதற்கிடையில் ஆலி நாட்டிலிருந்து ஆறு புரவிகள் வந்தன. அவற்றில் மங்கை வேந்தனின் ஆடல்மாவும் வந்திருந்தது. அதன்மீது யாரும் அமர்ந்து வரவில்லை. மங்கை வேந்தனைக் கண்டதும் முகத்தில் உரசி நின்று தனது அன்னியோன்னியத்தைக் காட்டியது.

"ஆலிநாடு எப்படி இருக்கிறது?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"ஒரு குறைவும் இல்லை வேந்தே. சோழ மன்னர் தனது அமைச்சர் விழுப்பரையரை அங்கே அனுப்பியிருக்கிறார் தாங்கள் வரும்வரை நாட்டின் நிர்வாகத்தைக் கவனிக்க. தாங்கள் வந்ததும் நாட்டை ஒப்படைத்து விட்டுத் திரும்பி விடுவாராம். தாங்கள் எப்போது வருவீர்கள் என்று கேட்டார்" என்றார் சாயைபிடிப்பான்.

அரங்கன் உத்தரவு எப்படியிருக்கிறதோ என்று சொன்ன மங்கை வேந்தன் அன்றிரவு புத்தர் சிலையைக் கடத்தும் திட்டத்தைச் சொன்னான்.

★★★



கடல்முகனின் இல்லம்

சாயை பிடிப்பானை ஆலிநாட்டிற்கும் நிழலில் ஒதுங்குவானை இலந்தை மரத் தோப்பிற்கும் அனுப்பி வைத்த மங்கை வேந்தன் தோலா வழக்கரையும் நீர்மேல் நடப்பானையும் பார்த்து "நான் பலவாறு யோசித்து விட்டேன் நண்பர்களே நாகானன விஹாரம் இருக்கும் நிலையில் ரகசியமாக முயற்சி செய்து பொற்சிலையைக் கவர்வது என்பது மிகவும் கடினம். தக்க தருணத்திற்காகக் காத்திருந்தால் தாமதமாகும். யந்திர சூட்சுமத்தை அறிந்து விட்ட பின் தாமதம் செய்வது நமக்குப் பாதகமாகவே முடியும். ஆகவே பகிரங்கமான முயற்சியைத் தான் மேற்கொள்ள வேண்டும்" என்று சொல்லித் தனது திட்டத்தைச் சொன்னான்.

சொல்லி விட்டு "திட்டத்தின் வெற்றி நீங்கள் பேசுவதில் தான் இருக்கிறது. கவனமாகப் பேசுங்கள்" என்று எச்சரித்தான்.

அதையடுத்து தோலாவழக்கரும் நீர்மேல் நடப்பானும் நாகப்பட்டினத்தில் காவல் தலைவனான கடல்முகனின் இருப்பிடத்தை நோக்கிச் சென்றார்கள். கடல்முகனின் இருப்பிடம் நகரத்தின் தோரணவாயிலை அடுத்த வாழைத் தோப்பிற்குள் இருந்தது.

காவல் தலைவன் என்ற பதவி இருந்ததே தவிர கடல்முகன் காவல் பணியைச் சிரத்தையாகச் செய்யவில்லை. அதற்கு அவனிடம் நாட்டமும் இல்லை. நாகப்பட்டினம் பலவிதங்களில் பணம் புழங்கும் இடமாக இருந்தபடியால் கடல்முகன் பணம் வசூலிப்பதற்குத் தன் பதவியைப் பயன்படுத்தி வந்தான். எங்கே தவறு நடந்தாலும் சரி - தகராறு நடந்தாலும் சரி அங்கே விஜயம் செய்யும் அவன் தவற்றையோ தகராறையோ சரி செய்வதில்லை. யாரிடம் அதிகமாகக் கறக்க முடியுமோ அதைக் கறந்து கொண்டு சென்று விடுவான். அதோடு அவனது நடவடிக்கை முடிந்து விடும்.

பௌத்த பெண் பிட்சுவான கௌதமியைச் சிபிசோரன் கொலை செய்து விட்டு அது வெளியே வந்த சமயத்தில்

கடல்முகன் அங்கு வந்தான். சிபிசோரனிடம் பேசிப் பணம் பெற்றுக் கொண்டு பிரச்சனை தீர்க்கப் பட்டதாகக் கூறி விட்டு அகன்றான். இலந்தைத் தோப்பில் பிட்சு வேடத்தில் சென்றிருந்த நிழலில் ஒதுங்குவான் அந்தச் சம்பவத்தை மங்கை வேந்தனிடமும் தோழர்களிடமும் கூறியிருந்தார்.

"கையூட்டுப் பெறும் இவர்களிடம் சாமர்த்தியம் இருக்கும். அதே சமயம் பணத்திற்காக இவர்கள் எதையும் செய்யக் கூடியவர்களாக இருப்பார்கள். எனவே அவர்களில் ஒருவனான கடல்முகனை அவனது வழியிலேயே செல்வது போல் சென்று நமக்குச் சாதகமாக்கிக் கொள்ள வேண்டும்" என்று சொல்லித் தன் தோழர்கள் இருவரையும் அவனிடம் அனுப்பியிருந்தான் மங்கைவேந்தன்.

இருவரும் கடல்முகனின் இல்லத்திற்குச் சென்றார்கள்.

அங்கே அவனை மொய்த்தபடி பலர் இருந்தார்கள்.

தோலாவழக்கர் "எல்லோரும் வெளியேறுங்கள் தலைவரைத் தவிர. ம். சீக்கிரம்" என்று கர்ஜனை செய்தார்.

கடல்முகனை மொய்த்துக் கொண்டிருந்தவர்கள் அவ்விருவரையும் பார்த்தார்கள்.

அவர்கள் மறுபேச்சு பேசுவதற்குக் கூட தோலாவழக்கர் இடம்தரவில்லை.

"தலைவரோடு பேச வேண்டும். போகிறீர்களா இல்லையா?" என்று கேட்ட தோலாவழக்கரும் நீர்மேல் நடப்பானும் அவர்களில் சிலரைப் பிடித்து வெளியே இழுத்தனர்.

இருவரது கோலமும் கொள்ளையர்கள் கோலமாக இருந்ததாலும் அவர்களின் செய்கை மூர்க்கமாக இருந்ததாலும் கடல்முகனின் ஆட்கள் சற்றே ஆடிப் போனவர்களாய் எதிர்க்க முற்பட்ட போது தோலாவழக்கர் இடையிலிருந்து குறுவாளை எடுத்து ஒருவர் மீது விட்டார். அதனால் ஒருவர் "ஹா" என்று கூச்சலிட்டார்.

"நாங்கள் கொள்ளையர்கள். இரக்கமற்றவர்கள். யாராவது எதிர்ப்பைக் காட்ட முற்பட்டால் கொலை புரியத் தயங்க மாட்டோம். உடனே வெளியேறுங்கள். உயிரைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்" என்றார் தோலாவழக்கர்.

ஆசனத்தில் அமர்ந்திருந்த காவல் தலைவன் கடல் முகனுக்கு எதுவும் விளங்கவில்லை.

"இங்கே என்ன நடக்கிறது?" என்றான்.

அச்சமயத்தில் நீர்மேல் நடப்பான் இருவரது கழுத்துப் பகுதியில் மர்ம அடியைப் பிரயோகித்ததால் இருவரும் பிணம் போல வீழ்ந்தார்கள்.

நிலைமை மோசமாவதை உணர்ந்தார்கள் கடல் முகனின் ஆட்கள். அவர்கள் அனைவருமே கடல்முகனுக்குத் தாளம் தட்டி ஆதாயம் பெறுபவர்களாக இருந்தார்களே தவிர வீரர்களாகவோ சாமர்த்தியம் நிறைந்தவர்களாகவோ இல்லை. எனவே உயிருக்கு அஞ்சி வெளியே ஓடினார்கள்.

"இவர்களையும் இழுத்துச் செல்லுங்கள். வேலை முடிந்தபின் அவர்களை உயிர்ப்பிக்கிறேன்" என்றார் நிழலில் ஒதுங்குவார்.

எனவே நரம்படிக்கு ஆளாகிச் செயலற்றுக்கிடந்த இருவரையும் இழுத்துக் கொண்டு சென்றார்கள் கடல்முகனின் ஆட்கள்.

அனைவரும் வெளியேறியதும் கதவைச் சாத்தித் தாளிட்டார் தோலா வழக்கர்.

அவரும் நீர்மேல் நடப்பானும் அங்கிருந்த ஆசனங்களில் அமர்ந்தார்கள்.

புயலானது தனது இல்லத்திற்குள் வீசி அடங்கியது போலிருந்தது கடல் முகனுக்கு.

ஏதேதோ நடந்தும் தான் எப்படி எதுவும் செய்யாமல் இருந்தோம் என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்ட அவன் இருவரையும் பார்த்தான்.

அவர்களது செயல் மட்டுமின்றி தோற்றமும் கொள்ளைக் காரர்கள் தான் என்பதை உணர்த்தியது. இருந்தாலும் தன் பதவி அவர்களை விடப் பெரியது என்று கருதிய காவல் தலைவன் "யார் நீங்கள்? காவல் தலைவனின் இல்லத்தில் அத்துமீறி நுழைய யார் உங்களுக்கு அனுமதி அளித்தது?" என்றுச் சீறினான்.

"கொள்ளைக்காரர்கள் அனுமதியைக் கேட்டுக் கொண்டு காரியங்களில் இறங்குவதில்லை" என்றார் தோலாவழக்கர்.

"நீங்கள் கொள்ளைக்காரர்கள் என்றால் இங்கே எதற்காக வந்தீர்கள்?"

"உங்களுக்கு அறிவிப்பதற்காக வந்தோம்."

"என்ன அறிவிப்பு?"

"எங்கள் தலைவர் - இலங்கையின் பிரதான கொள்ளைத் தலைவர் நாகைக்கு விஜயம் செய்திருக்கிறார்."

"நான் யார் தெரியுமா? நாகையின் தலைவன். காவல் தலைவன். நான் ஆணையிட்டால் நீங்களெல்லாம் கழுவில் ஏற வேண்டும்? என்னிடம் விளையாடுவது ஆபத்து."

"உன்னைச் சேர்ந்தவர்களை நாங்கள் வெளியேற்றிய போது வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாயே? எங்களைக் கழுவில் ஏற்றுவது தானே? இதோ பார் கடல் முகா! இந்த நிமிடமே உன்னைக் கொலை செய்து விட்டு எங்களால் தப்பிக்க முடியும். ஆபத்தான நிலையில் இருப்பது நீதானேயன்றி நாங்களல்ல. ஆகவே உளறுவதை நிறுத்திவிட்டு நாங்கள் சொல்ல வந்ததைக் கேள்" என்று மரியாதையைக் கைவிட்டு அதிகாரத் தோரணையில் உறுதியான குரலில் சொன்னார் தோலா வழக்கர்.

கடல்முகன் வீரத்திற்குப் பெயர் பெற்றவன் அல்ல. வீராப்புக்குப் பெயர் பெற்றவன். வாதத்திற்கு ஏற்றவனல்ல. விதண்டாவாதத்திற்கு ஏற்றவன். அவனது முனையும் முனைப்பும் பணம் வசூலிப்பதில் தான் கூர்மையாக இருந்தன. எனவே தோலாவழக்கர் மரியாதையின்றிப் பேசியதையும் மிரட்டியதையும் கண்டு அவன் வீறு கொண்டு எழவில்லை. தோலாவழக்கர் கூறியது போல ஆபத்தான நிலையில் இருப்பது தான் தான் என்பதும் தான் ஆணையிடுவதற்கு முன்பாகவே தனது தலை கொய்யப் படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதும் புரிந்ததால் சற்றே அதிர்ந்து போன அவன் அதிர்ச்சியை அடக்கிக் கொண்டு "என்ன சொல்லப் போகிறீர்கள்?" என்று கேட்டுவிட்டு மீசையை முறுக்கினான்.

"கடல்முகா! இந்த மீசை முறுக்குகளையெல்லாம் காட்டி பெரும் வீரனைப் போல அடையாளம் காட்ட முயற்சிக்காதே. நீ மீண்டும் மீசை மீது கையை வைத்தால் கையையும் துண்டிப்பேன். மீசையையும் அகற்றுவேன்" என்றார் தோலாவழக்கர்.

கடல்முகனின் அதிர்ச்சி அதிகரித்தது. லேசாக அஞ்சவும் செய்தான். கையை மீசையிலிருந்து அகற்றி விட்டு "மிரட்டாமல் விஷயத்தைச் சொல்லுங்கள்" என்றான்.

"கடல்முகா! எங்கள் தலைவர் நாகானன விஹாரத்தில் இருக்கும் பொன்னால் ஆன புத்தர் சிலையைக் கடத்தப் போகிறார். அதை உன்னிடம் சொல்லவே எங்களை அனுப்பி வைத்தார். நாங்கள் புறப்படுகிறோம்" என்று சொல்லி எழுந்தார் தோலாவழக்கர்.

கடல்முகனின் கண்கள் அதிர்ச்சியாலும் ஆச்சரியத்தாலும் அகன்றன.

பொற்சிலையைக் கடத்தப் போவதாகச் சொன்னது ஆச்சரியமாக இருந்ததென்றால் அந்த விஷயத்தைத் தன்னிடமே கூறியது பேராச்சரியமாக இருந்தது கடல்முகனுக்கு.

"நீங்கள் பேசுவது பைத்தியக் காரத்தனமானது. விஹாரத்தில் இருக்கும் பொற் சிலையை புத்தரே வந்தாலும் கைப்பற்ற முடியாது" என்றான்.

"முட்டாளே! புத்தரை ஏன் இழுக்கிறாய்? அவர் மகான். நீ மூடன். சர்வ மூடன். புத்தரால் ஆகாதது புவனத்தில் ஒன்றுமில்லை. சிலையை எடுக்க முடியாது என்று எப்படிச் சொல்கிறாய்?"

"நீ சிலை இருக்கும் அறையில் நுழையவே முடியாது. கதவைத் தொட்டாலே கண்டாமணி அடிக்கும். ஊர் கூடிவிடும்."

"கதவைத் திறந்து விட்டால்?"

"அப்போதும் முடியாது. யந்திர சூட்சுமம் பிரதிஷ்டை செய்யப் பட்டுள்ளது. அது யாருக்கும் தெரியாது. அதை அகற்ற ஒருவராலும் இயலாது."

"கடல்முகா! இதெல்லாம் தெரியாமலா சிலையைக் கடத்துவதாகச் சொன்னோம்?"

"உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியும்."

"பொய்."

"நீ நம்ப வேண்டும் என்ற அவசியம் எங்களுக்கில்லை."

"நான் நாகையின் காவலன்."

"தெரிந்து தான் உன்னிடம் விஷயத்தைச் சொன்னோம்."

"என்னை மீறி உங்களால் சிலையைக் கைப்பற்ற முடியாது."

"உன்னை இப்போதே கொன்று விட்டால்?"

"எனது நிர்வாகம் இருக்கிறது. அது அனுமதிக்காது."

"நீ அனுமதித்தால் முடியுமல்லவா?"

"என்ன? என்ன? என்ன சொன்னாய்?"

"கடல்முகா! எதற்காக வாயைப் பிளக்கிறாய்? உன்னைப் பற்றி எங்களுக்குத் தெரியும்,"

"என்ன தெரியும்?"

"நீ காவல் தலைவன் அல்ல. கொள்ளைக்காரன். நகரத்தைக் காப்பது உன் பணியல்ல. கொள்ளையடிப்பதே உன் பணி. ஆகவே அலட்டிக் கொள்ளாதே. நீ அற்பமானவன்" என்று இகழ்ந்த தோலா வழக்கர் "நீ பௌத்தனா?" என்று கேட்டார்.

"இல்லை."

"அப்படியானால் விஹாரத்தில் இருக்கும் புத்தர் சிலை எக்கேடு கெட்டால் உனக்கென்ன?"

"நான் பௌத்தன் அல்ல என்றாலும் பௌத்தர்களுக்குரிய வற்றைப் பாதுகாக்க வேண்டியவன்.

"உன் லட்சணத்தைத் தான் சொன்னேனே! எதற்காக மீண்டும் மீண்டும் அசட்டு வீரத்தைக் காட்டுகிறாய்? நாங்கள் சிலையைக் கடத்துவது உறுதி. உன்னால் என்ன செய்ய முடியுமோ செய்து கொள்."

சற்றே தடுமாறிய கடல்முகன் "சற்றுமுன் ஏதோ சொன்னீர்களே?" என்று இழுத்தான்.

"என்ன சொன்னோம்?"

"என்னவோ சொன்னீர்கள்?"

"அது தான் என்ன?"

தோலா வழக்கர் சற்றே அசதியுற்றவரைப் போல் நடித்து "கடல்முகா! உனக்குப் பதவி பெரிதா? பணம் பெரிதா?" என்று கேட்டார்.

"இரண்டும் தான்."

"பதவி இல்லையென்றால் உனக்குப் பணம் இல்லை. அல்லவா?"

"ஆமாம்."

"பதவி நிரந்தரமல்ல. எப்போது வேண்டுமானாலும் போய் விடும். நீ இங்கே நடந்து கொண்டிருக்கும் லட்சணத்திற்கு உன் பதவி போனால் நாகப் பட்டினத்தில் நடமாட முடியாது. எங்காவது சென்று பிச்சைதான் எடுக்க வேண்டும்."

"அப்படியெல்லாம் இல்லை."

"ஏன்? நிறைய சேர்த்து விட்டாயா? இதோ பார் கடல் முகா. முட்டாளைப் போல் பேசாதே. முட்டாளிடம் பேசுவது போல் பேசாதே. நாங்கள் புத்தர் சிலையைக் கவர்ந்து விட்டால் நீ சிறையில் தான் ஆயுட் காலத்தைக் கழிக்க வேண்டும்.

பதவி வேண்டாம் அதே சமயம் கடைசி காலம் வரை பணம் வேண்டும் என்றால் வெட்டி வார்த்தைகளை விட்டு விட்டு நான் சொல்வதைக் கேள்.”

“சொல்லுங்கள்.”

“நாம் எல்லோருமே ஒரே இனத்தவர். அதாவது கொள்ளைக் காரர்கள். நாங்கள் பகிரங்கமாகச் செய்கிறோம். நீ பதவி என்கிற போர்வையில் செய்கிறாய். இரண்டிற்கும் வித்தியாசம் இல்லை. நாங்கள் செய்யப் போகும் கடத்தலை உன்னால் தடுக்க இயலாது. உன் நிர்வாகத்தாலும் தடுக்க முடியாது. உன்னை இங்கேயே பணயமாக்கிக் கொண்டு சென்றால் உன் தரப்பில் எதுவும் செய்ய முடியாது. நடக்காததைப் பேசி வீணாகப் போவதை விட எங்களோடு சேர்ந்து விடு. உனக்குப் பாதி. எங்களுக்குப் பாதி.”

“என்ன சொல்கிறீர்கள்?”

“புத்தர் சிலையில் உனக்குப் பாதி. எங்களுக்குப் பாதி.”

“இது நடக்குமா?”

“நடக்காதென்றா பிழைப்பை நடத்தி வருகிறாய்?”

“நான் என்ன செய்ய வேண்டும்?”

“எங்கள் தலைவரைச் சந்திக்க வேண்டும்.”

“நான் தயார். கதவைத் திறவுங்கள்.”

திறந்தார் தோலாவழக்கர்.

வெளியே நூறு பேருக்கு மேல் ஆயுதங்களுடன் நின்றிருந்தார்கள்.

★★★



மங்கைவேந்தனும் கடல்முகனும்

புத்தர் சிலையைக் கடத்துவதில் கூட்டுச் சேர்ந்தால் சிலையைப் பாதிப் பாதியாகப் பிரித்துக் கொள்ளலாம் என்று தோலாவழக்கர் கூறியது நாகப்பட்டினத்து காவல் தலைவனான கடல்முகனுக்குப் பிடித்திருந்தது.

நாகானன விஹாரத்தில் இருக்கும் பொன்னாலான புத்தர் சிலையை ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் அவன் பார்த்திருக்கிறான். சிலையானது ஏறக்குறைய மூன்றடி உயரம் இருக்கும் அகலம் இரண்டடி இருக்கும். அதை உருக்கி அதில் பாதியைப் பெற்றால் வாழ்நாள் முழுதும் கஷ்டப் படாமல் சுகமாக வாழலாம். காவல் தலைவன் என்ற பதவி வேண்டியதில்லை. ஆங்காங்கே கையூட்டுப் பெறுவதற்காக அலையவேண்டியதில்லை. கையூட்டுப் பெறுவது ரொம்ப காலத்திற்குக் கை கொடுக்காது. என்றைக்காவது ஒருநாள் குற்றவாளியாக நிறுத்தப் பட்டு தண்டனையை அடைய வேண்டிவரும். அது எப்படிப் பட்டதாக இருக்கும் என்று சொல்ல முடியாது. ஆயுள் முழுக்கச் சிறையிலேயே காலம் தள்ளும் படி இருக்கலாம்.

மாறாக, புத்தர் சிலையைக் கவர்ந்து அதில் பாதியைப் பெற்று எங்காவது ஓடிவிட்டால் பிரச்சனை இல்லை. மீதி ஆயுட்காலத்தைச் சுகமாகக் கழித்து விடலாம். புத்தரது பொற்சிலை பூட்டப்பட்ட விஹாரத்திற்குள் இருப்பதை விட யாருக்காவது பயன்படுவது தான் சரி. அது ஏன் நாமாக இருக்கக் கூடாது என்றெல்லாம் மனக் கோட்டைகளைக் கட்டிக் கொண்டான் காவல் தலைவன்.

விஹாரத்தில் அமைக்கப் பட்டிருக்கும் யந்திர சூட்சுமத்தைக் கொள்ளையர் தலைவன் அறிந்திருப்பதாகத் தோலாவழக்கர் கூறியது நம்ப முடியாத அளவிற்கு வியப்பானதாக இருந்தது. கொள்ளையர் தலைவனைச் சந்தித்தால் எல்லாம் விளங்கி விடும் என்று எண்ணிக் கொண்டு திட்டத்திற்கு ஒப்புதல் தெரிவித்து கதவைத் திறக்கும் படிச் சொன்னான்.

தோலாவழக்கர் கதவைத் திறந்தார்.

வெளியே சுமார் நூறு பேர் ஆயுதபாணிகளாக நின்றிருந்தார்கள். அவர்கள் முகத்தில் கொலை வெறி மண்டிக் கிடந்தது.

தோலாவழக்கர் மீதும் நீர்மேல் நடப்பான் மீதும் பாய்வதற்குத் தயாராக இருந்தார்கள்.

கடல்முகன் அவர்களைப் பார்த்து "என்ன விஷயம்? எதற்காக இங்கே திரண்டிருக்கிறீர்கள்? கையில் என்ன ஆயுதம்?" என்று கேட்டான்.

"எங்களைத் தாக்கிய இவர்களைக் கொல்ல வேண்டும்" என்றார்கள் ஆயுதபாணிகள்.

"நான் உங்களுக்கு ஆணையிட்டேனா? ஆயுதத்தை எல்லோரும் கீழே போடுங்கள். இவர்கள் நம் நண்பர்கள். முக்கியமான ஒரு விஷயத்திற்காக வந்திருக்கிறார்கள். வழியை விடுங்கள்" என்றான் கடல்முகன்.

"கொள்ளைக் காரர்களா நம் நண்பர்கள்?"

"இவர்கள் கொள்ளைக்காரர்கள் அல்ல. அப்படி நடித்தார்கள்."

"எதற்காக?"

"இரண்டொரு நாட்களில் எல்லோருக்கும் நம் எல்லோருக்கும் பெரும்பரிசு காத்திருக்கிறது. உணர்ச்சி வசப்படாமல் கலைந்து செல்லுங்கள்."

"நம்மில் ஒருவர் மீது குறுவாளை எறிந்திருக்கிறார்கள். இருவரை முடக்கிப் போட்டிருக்கிறார்கள்."

"யாரையும் கொல்லவில்லை. முடக்கியவர்களைக் கொண்டு வாருங்கள். சரி செய்வார்கள்."

ஆயுதபாணிகள் நரம்படியால் உணர்ச்சியற்று கிடந்த இருவரைக் கொண்டு வந்தார்கள்.

நீர்மேல் நடப்பான் அவர்கள் கழுத்தில் நரம்பொன்றைத் தட்டி விட்டதும் அவர்கள் துள்ளினார்கள். சுயநினைவை அடைந்து எழுந்து நின்றார்கள்.

"பிரச்சனை தீர்ந்து விட்டது. எல்லோரும் கலைந்து செல்லுங்கள். நள்ளிரவில் மீண்டும் கூடுவோம். கள் விருந்துண்போம்."

கடல்முகன் இவ்வாறு சொன்னதும் அவனது ஆட்கள் அனைவரும் கலைந்து சென்றார்கள்.

கடல்முகன் அவர்களிடம் சாமர்த்தியமாகவும் தெளிவாகவும் பேசியதைக் கண்டு தோலாவழக்கர் வியந்தார்.

"இவன் மட்டும் யோக்கியனாக இருந்தால் இந்த நகரம் மிகவும் உயர்ந்திருக்கும்" என்று சொல்லிக் கொண்டார்.

மூவரும் புறப்படும் போது இரவு நேரம் முகிழ்த்திருந்தது. கடல்முகன் மோசமான நிர்வாகியாக இருந்தபடியால் நாகை நகரம் பல இடங்களில் இருண்டு கிடந்தது. வீதி விளக்குகள் அங்கொன்றும் இங்கொன்றுமாய் ஏற்றப் பட்டிருந்ததால் பெரும்பாலான வீதிகள் இருளில் ஆழ்ந்திருந்தன. 'அதுவும் நல்லதிற்காகத் தான்' என்று சொல்லிக் கொண்டார் தோலாவழக்கர்.

எல்லோரும் சத்திரத்தை அடைந்தார்கள். அங்கே மங்கை வேந்தன் கொள்ளையன் வேடத்திலேயே இருந்தான். இயற்கையாகவே மங்கை வேந்தன் கம்பீரமானவன் ஆதலால் கொள்ளையன் வேடத்தில் வசீகரமானவனாக இருந்தான். கடல் முகனுக்கு அவனைக் கண்டதும் லேசாக அச்சம் துளிர்த்தது. கொள்ளையர்களிடம் வகையாக வந்து சிக்கிக் கொண்டோமோ என்று நினைத்தான்.

இதற்கிடையில் கடல்முகனை மங்கை வேந்தனுக்கு அறிமுகம் செய்து வைத்த தோலாவழக்கர் "காவல் தலைவர் நமக்கு உதவுவதாகவும் நம்மோடு கூட்டு சேரவும் சம்மதித்திருக்கிறார். சிலையைக் கடத்திய பின் நமக்குப் பாதி அவருக்குப் பாதி என்று கூறியிருக்கிறேன். அவருக்கு திருப்தி" என்றார்.

"காவல் தலைவர் எந்த விதத்தில் நமக்கு உதவுவார் என்பதை அறியாமல் பாதி பாதி பங்கு வைத்தது தவறு" என்றான் மங்கை வேந்தன்.

"இல்லை. இல்லை. அப்படியில்லை. நீங்கள் என்ன உதவி கேட்டாலும் செய்வதற்கு நான் தயாராக இருக்கிறேன். பாதி பாதி பங்கை மாற்ற வேண்டாம்" என்றான் கடல்முகன்.

"காவல் தலைவரே! படாத பாடு பட்டு யந்திர சூட்சுமத்தைக் கண்டு பிடித்தது நான். அதை அகற்றப் போவதும் நான். பெரும் பகுதிப் பணி என்னுடையது. இதில் உங்கள் பணி என்ன இருக்கிறது?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"ஐயா! நீங்கள் செய்யப் போகும் காரியம் மிகவும் ஆபத்தானது. மக்களுக்குத் தெரிந்தால் - முக்கியமாக பௌத்தர்களுக்குத் தெரிந்தால் காரியம் கெட்டு விடும். அது மட்டுமல்ல. உங்களில் ஒருவரையும் உயிரோடு விட மாட்டார்கள். அடித்தே கொன்று

விடுவார்கள். அப்படி அசம்பாவிதம் எதுவும் நடக்காத வண்ணம் உங்களுக்குப் பாதுகாப்பு கொடுப்பது என் பணி. அதற்கு நான் பூரணமாக ஒத்துழைக்க வேண்டும்" என்றான் கடல்முகன்.

"இவர் கூறுவது மிகவும் சரி தலைவரே. இவரது பொறுப்பு முக்கியமானது. பணி அவசியமானது" என்றார் தோலாவழக்கர்.

"நீங்கள் எப்படி எங்களுக்குப் பாதுகாப்பு கொடுப்பீர்கள்?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"உங்கள் திட்டத்தைச் சொன்னால் அதற்கேற்ப ஏற்பாடுகளைச் செய்வேன்."

"கடல்முகரே! நாளைக்கு அடுத்த நாளுக்கு அடுத்தநாள் அமாவாசை. அன்றிரவு தான் நமது திட்டம் நிறைவேறப் போகிறது."

"மிகவும் சரி."

"நள்ளிரவில் நாகானன திட்டி வாசலைத் திறக்க வேண்டும். நாங்கள் உள்ளே நுழைவோம். யந்திரச் சூட்சுமத்தை அகற்றி விட்டுச் சிலையைக் கைப்பற்றுவோம். அக்காரியம் முடிய மூன்று முதல் நான்கு நாழிகைகள் ஆகலாம். அதுவரை விஹாரத்துச் சுற்றுப் பகுதியில் ஒருவரும் வரக்கூடாது. விஹாரத்திற்குள் யாரும் நுழையக் கூடாது. நீங்கள் பாதுகாப்பாக வெளியே இருக்க வேண்டும்."

"விஹாரம் இருக்கும் பகுதியில் விளக்குகள் அணையும் படி பார்த்துக் கொள்கிறேன். விஹாரத்திலிருந்து சற்றுத் தொலைவு வரை இருக்கும் விளக்குகளும் அணைக்கப்படும். நல்ல இருள் அப்பகுதியில் சூழும் படி ஏற்பாடு செய்து விடுகிறேன். ஆனால் ஒரு திருத்தம்."

"என்ன?"

"நானும் உங்களோடு விஹாரத்திற்குள் வருவேன்."

"இதுதான் உங்கள் நிபந்தனை என்றால் உங்கள் உதவியே எனக்கு வேண்டாம்."

"இதென்ன இப்படிச் சொல்கிறீர்கள்? நான் உங்கள் கூட்டாளி உங்களோடு உள்ளே வந்தால் என்ன?"

"எல்லோரும் உள்ளே வந்து விட்டால் வெளியே யார் பாதுகாப்பது?"

"எனது சகாக்கள் இருக்கிறார்கள்."

"அவர்களையெல்லாம் நான் நம்பமுடியாது. உங்களை மட்டும் தான் நம்புகிறேன்."

"சகாக்கள் என் விசுவாசிகள். என் பேச்சை மீறமாட்டார்கள். அவர்களை நம்பலாம்."

"அவர்கள் எத்தனை பேர் இருப்பார்கள்?"

"நூறு பேர் என்று வைத்துக் கொள்ளலாம்."

"அவர்களை உதவிக்கு அழைத்தால் பங்கு கேட்பார்கள். அதோடு நிறைய பேர் கூடினால் ஆரவாரம் உண்டாகும். காரியம் கெட்டு விடும்."

"பங்கு விஷயத்தைப் பற்றி நீங்கள் கவலைப் படவேண்டாம். என் பங்கில் அவர்களுக்குக் கொடுப்பேன்."

"இருந்தாலும் நூறு பேர் தேவையில்லை. ரசாபாசமாகி விடும். அதிக பட்சமாகப் பத்துப் பேரை அழைத்துக் கொள்ளலாம். அவர்களை விஹார வாயிலில் காவல் வைத்து விட்டு நாம் உள்ளே செல்லலாம்."

"இது சரி."

"பத்துப் பேர் போக மற்றவர்களை என்ன செய்வீர்கள்?"

"அமாவாசை இரவு நேரத்தில் அவர்களை என் இல்லத்திற்கு வரவழைத்து மது விருந்து படைத்து மயங்கி விழவைக்கிறேன். இல்லத்தைப் பூட்டிக் கொண்டு வந்து விடுவேன். பிரச்சனை எதுவும் வராது."

"உங்களுக்கு உதவும் பத்துப் பேர் திடீரென உங்களுக்கு எதிராகத் திரும்பி விட்டால்?"

"நான் தேர்ந்தெடுக்கும் பத்துப் பேர் எனக்கு எதிராகத் திரும்ப மாட்டார்கள். ஏனென்றால் அவர்களது குடுமி என் கையில் இருக்கிறது."

"நல்லது காவல் தலைவரே. எதற்கும் அவர்களிடம் நமது காரியத்தைப் பற்றி எதுவும் சொல்ல வேண்டாம்."

"அதை நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் யாரும் கவலைப்பட வேண்டாம்."

மங்கை வேந்தன் சிறிது நேரம் வரை மௌனமாக இருந்து விட்டு "காவல் தலைவரே! நான் உங்களிடம் இதுவரை மென்மை யாகவும் பொறுமையாகவும் பேசுவது என் சுபாவத்திற்கு நேர்மாறானது. யாரிடமும் இப்படி நான் பேசியதில்லை. பேச்சு எனக்குப் பிடிக்காத ஒன்று. மற்றபடி நான் குரூரமானவன். ஈவு இரக்கம் சிறிதும் இல்லாதவன். என்னோடு இருந்தவர்களையே தவறு செய்யும் போது சித்திரவதை செய்து கொன்றிருக்கிறேன். இதை நீங்கள் நினைவில் வைத்துக் கொள்வது நல்லது" என்றான்.

"எதற்காக இப்படி மிரட்டுகிறீர்கள்?"

"மிரட்டவில்லை. உண்மையைச் சொல்கிறேன். என்னுடன் சேர்ந்து கொண்ட மாதிரி சேர்ந்து கொண்டு உன்வேலை ஏதாவது செய்து காரியத்தைக் கெடுக்க முற்பட்டால் உன் தோலை உரித்து நாகானன விஹாரத்து வாயிலில் தொங்க விடுவேன். இது சத்தியம்."

மங்கை வேந்தன் இவ்வாறு கூறிய போது பந்த ஒளியில் அவனது கண்களும் முகமும் நெருப்பாகச் சிவந்ததைக் கண்ட கடல்முகன் உள்ளுக்குள் நடுங்கியவனாய் "எனக்கு ஆதாயம் தரும் காரியம் இது. இதை நானே கெடுத்துக் கொள்வேனா? என்னைப் பூரணமாக நம்பலாம்" என்றான்.

"நான் அனுபவ ரீதியாகப் பேசுகிறேன் காவல் தலைவரே. ஆதாயத்திற்காகவே வாழ்கிறவர்கள் நாங்கள். அதைத் தவிர வேறு எதற்காகவும் மூச்சு விடுவதில்லை. அதற்காக என்னோடு இருப்பவர்கள் சில சமயங்களில் பேராசையில் மூழ்கி விடுகிறார்கள். மொத்தத்தையும் தங்களுக்கே வேண்டும் என்று தனித் திட்டம் போடுவார்கள். அப்படிப் பட்டவர்களை யெல்லாம் நான் தோலை உரித்துச் சித்திரவதை செய்து கொன்றிருக்கிறேன். நீயும் அது போல் பேராசையில் வீழ்ந்து தனித்திட்டம் என்று தீட்ட முற்பட்டால் நான் சொன்னது நடக்கும். எனது ஆட்கள் இருநூறு பேர் துறைமுகத்தில் வணிகர்கள் போல் திரிகிறார்கள். நான் கையசைத்தால் போதும் ஊரையே கொளுத்தி விடுவார்கள். உன் உதவி இல்லாமலேயே நாகானன விஹாரத்தில் நான் வெற்றி பெறமுடியும். செய்து காட்டட்டுமா?"

"வேண்டாம் தலைவரே. வேண்டாம். காரியமே இப்போது முக்கியம். அது வெற்றி பெறுவதைத் தவிர வேறு சிந்திக்க மாட்டேன். சந்தேகம் வேண்டாம். எனக்கு விடை கொடுங்கள். அமாவாசையன்று நள்ளிரவில் நாகானன விஹாரத்து வாயிலில் சந்திப்போம்" என்று கூறிவிட்டு அகன்றான் கடல்முகன்.

அவன் சென்றபின் "ஏற்பாடுகள் இதுவரை சரியாகத் தான் இருக்கின்றன தோலாவழக்கா. ஆலிநாட்டிற்குச் சென்றிருக்கும் சாயைபிடிப்பான் அநேகமாக நாளை மறுநாள் புரவிகளுடன் வந்து விடுவான். புரவிகளை விஹாரத்திற்கு மேற்கே இருக்கும் தோப்பில் இருக்கச் செய்து விடலாம். இலந்தை மரத் தோப்பில் பௌத்தர்களைச் சந்திக்கச் சென்றிருக்கும் நிழலில் ஒதுங்குவானுக்கும் ஒரு வேலையை வைத்திருக்கிறேன். அமாவாசையன்று இரவு அவன் பௌத்தர்களை அழைத்துக் கொண்டு புகைக்கிணறு பக்கமாக அழைத்துச் செல்வான்

அவர்களின் கவனத்தைத் திருப்புவதற்காக" என்று சொன்ன மங்கை வேந்தன் தாளுதுவானைப் பார்த்து "நீ வணிகன் வேடத்தில் உலவி கடல்முகனைக் கண்காணித்து வா. அவன் மீது கொஞ்சம் சந்தேகம் வந்தாலும் என்னிடம் வந்து சொல்" என்றான்.

தனது இருப்பிடத்திற்கு வந்த கடல்முகன் சந்தோஷமாக இருந்தான். நடுநிசியானாலம் தனது ஆட்களை வரச் சொல்லி மது விருந்தளித்து விடியும் வரைக் கொண்டாடினான்.

அவனைப் பொறுத்தவரை நகரத்தில் பலரிடம் கையூட்டுப் பெறமுடியுமே தவிர நாகானன விஹாரத்தில் இருக்கும் பொற்சிலையைக் களவாட முடியாது. அந்தக் காரியம் மங்கை வேந்தனால் முடியும் என்று திட்டவட்டமாகக் கருதிய காரணத்தால் அவனோடு கூட்டுச் சேர்ந்து அவனுக்கு உதவி பங்கு பெறுவது தான் உத்தமம் என்பதை உணர்ந்து மங்கை வேந்தனுக்கு உதவுவதில் உண்மையாக நடந்து கொண்டானே தவிர வேறு மாதிரியான சிந்தனையிலோ செயலிலோ இறங்கவில்லை.

அமாவாசையன்று தனக்கு உதவுவதற்கென்று விசுவாசமான ஆட்கள் பத்துப் பேரைத் தேர்ந்தெடுக்கவும் செய்தான். அமாவாசை சீக்கிரமே வந்து விடக் கூடாதா என்றிருந்தது அவனுக்கு.

இல்லத்தில் அடைந்திருக்க விரும்பாமல் கட்டிலைத் தூக்கிக் கொண்டு வாழைத் தோப்பிற்குள் சென்றான். குளுமையான இடத்தில் கட்டிலைப் போட்டு அதில் படுத்து கண்களை மூடினான்.

அப்போது இரண்டு தளிர்க்கரங்கள் அவனது தோளில் பதிந்தன.

★★★



புத்தர் சிலை

கடல்முகனின் தோள்களின் மீது தளிர்க் கரங்களைப் பதித்த உருவம் தனது தலையை அவனை நோக்கி இறக்கி உதடுகளின் சங்கமத்தை உண்டாக்க முனைந்த போது அந்தத் தலையையும் கரங்களையும் விலக்கி விட்டு எழுந்து உட்கார்ந்தான் கடல்முகன்.

"ஏன் எழுந்து விட்டீர்கள்? பழுதாகி விட்டீர்களா?" என்று வியப்புடன் கேட்டது பெண் உருவம்.

"காரியம் முடிவதற்குள் பழுதாகி விடக் கூடாதே என்று தான் எழுந்து கொண்டேன்" என்றான் கடல்முகன்.

"இந்தக் காரியத்தில் பழுது எப்படி வரும்? ஆசைகள் அல்லவா விழுதுகளைப் போல மேன் மேலும் வளரும்! பிணைக்கும்!" என்றாள் பெண்.

"நான் குறிப்பிடும் காரியம் வேறு."

"அதென்ன காரியம்? என்னை விடவா பெரிய காரியம்?"

"உன்னை விட - உன்னைப் போல ஆயிரம் பெண்களை விடப் பெரிய காரியம். உங்களால் ஒருபோதும் முடியாத காரியம்."

"அப்படி ஒன்று இந்த உலகில் இல்லை. இந்த உலகமே இங்குதான் அடக்கம்" என்று சொல்லி அதைக் காட்டினாள் அவள்

"பெண்கள் அழிவது ஆணவத்தினால் தான்." என்றான் அவன்.

பெண்ணிற்குக் கோபம் வந்து விட்டது.

"இவ்வளவு நாட்களாக நீங்கள் மூழ்கியிருந்தது அங்கே தானே? இப்போது என்ன வந்து விட்டது?"

"உன் காமம் எனக்குத் தேவைதான். அது மட்டுமே என் தேவையல்ல. அதோடு என் தேவைகளையெல்லாம் உன்னால் பூர்த்தி செய்து விட முடியாது."

"காவல் தலைவரே! இந்தக் காரியம் முடிந்த பின் உங்கள் காரியம் நடக்கலாகாதா? பிறகாரியங்கள் சிறப்பாக நடக்க இந்தக் காரியம் தெம்பைத் தராதா? எதற்காகப் பாசாங்கு செய்கிறீர்கள்?"

"வெட்கங்கெட்டுப் பேசாதே வெண்தாமரை. அப்படிப் பேசுவது உன் அழகை மாசுபடுத்துகிறது."

"என்னைப் போன்றவர்கள் வெட்கங்கெட்டு இருந்தால் தான் உங்களைப் போன்றவர்கள் நெருங்க முடியும்."

"இப்போது நான் நெருங்க விரும்பவில்லை. நெருப்பாகவே இருக்கவே விரும்புகிறேன். போய் விடு."

"தாபத்தோடு வந்த என்னைத் தவிர்க்கும் உங்களுக்குச் சாபமிடுகிறேன். நீங்கள் நாசமாய்ப் போவீர்கள்."

"உடலை விற்கும் நீயெல்லாம் சாபம் விட்டு அது பலிக்கு மென்றால் இந்நேரம் உலகம் அழிந்திருக்கும்" என்று தனக்குள் சொல்லிக் கொண்டான் கடல்முகன்.

அவள் அகன்றாள்.

அவனைப் பொறுத்தவரை பொற்சிலையை விடப் பெரிது எதுவும் இல்லையாதலால் சிற்பி செதுக்காத பொற்சிலையாய் வந்த பெண்ணை உதாசீனம் செய்தான்.

இதற்கிடையில் ஆலிநாட்டிற்குச் சென்றிருந்த சாயை பிடிப்பான் வந்தார்.

அவர் ஒரு புரவியில் வர நான்கு புரவிகளில் வீரர்கள் வந்தார்கள். மங்கை வேந்தனின் ஆடல்மா தனியாக வந்தது. மங்கை வேந்தனைத் தவிர வேறு யாரையும் அது சுமப்பதில்லை.

ஆறுபுரவிகளையும் திட்டமிட்டபடி தோப்புப் பகுதியில் இருக்கும் படிச் சொன்ன மங்கை வேந்தன் அமாவாசையன்று நள்ளிரவுக்குப் பிறகு ஆறு புரவிகளும் நாகானன விஹாரத்தின் மேற்குப் பகுதிக்கு வந்து இருளில் மறைந்திருக்கும் படிச் சொன்னான்.

அமாவாசையன்று மாலையில் வந்த தாளுதுவான் கடல்முகனின் அசைவில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை என்பதை உறுதி செய்தார்.

அன்றிரவு தனது சகாக்களுக்கு மது விருந்தை வயிறு முட்டப் படைத்து மயக்கமடைய வைத்த கடல்முகன் தனக்கு விசுவாசமான பத்துப் பேர்களுடன் நாகானன விஹாரத்திற்கு முன் வந்து சேர்ந்தான்.

அதே சமயம் இலந்தை மரத் தோப்பில் இருந்த நிழலில் ஓதுங்குவான் தன் அழைப்பை ஏற்று வந்திருந்த பௌத்தர்களைப் பார்த்து "அன்பர்களே! இந்நாள் நமக்கு நன்னாள். பூரண பௌர்ணமியன்று ஞான ஒளியைப் பெற்ற மகான் புத்தர் பூரண அமாவாசையன்று நமக்கு ஒளி காட்டியிருக்கிறார். நாகானன

விஹாரத்தில் இருக்கும் யந்திர சூட்சுமத்தை அறியப் போகும் நபர் சிறிது நேரத்தில் புகையுனிக் கிணற்றருகே* வருவார் என்று மகான் எனக்கு அசரீரியாக வந்து அருளியிருக்கிறார். வாருங்கள். அனைவரும் போவோம். நாளை நாகானன விஹாரம் திறக்கப் படும். பகவான் புத்தரின் பொற்சிலை சொரூபத்தை நாம் கண்ணாரக் கண்டு வழிபடுவோம்" என்று கூறி அழைத்துச் சென்றார்.

கிணற்றருகே சென்றதும் "யந்திர சூட்சுமத்தை அறிந்தவன் சாதாரணமானவனாக இருக்க முடியாது. அவன் மாயாவியாகவும் இருக்கலாம். அப்படி இருந்தால் இக்கிணற்றுக்குள்ளேயிருந்தும் வரலாம். யாரும் பதற்றமடையக் கூடாது. பொறுமையிழக்கக் கூடாது. எல்லோரும் மறைவிடங்களில் இருந்து கொண்டு இக்கிணற்றின் மீதே கண்ணையும் கருத்தையும் வைத்திருக்க வேண்டும். அவன் வந்ததும் எல்லோருமாகச் சேர்ந்து அவனை மடக்கி ஆற்றங்கரைக்குக் கொண்டு செல்ல வேண்டும். அவனிடமிருந்து யந்திர சூட்சுமத்தை அறிய வேண்டும். அவன் வாயைத் திறக்க மறுத்தால் திறப்பதற்கு என்னிடம் சித்தி சக்திகள் உள்ளன. கவலை வேண்டாம். நமக்கு இப்போது தேவை பொறுமையும் கவனமும் தான். அவன் வருவதற்குத் தாமதமாகலாம். பொறுமையை இழந்து விடக் கூடாது. இவ்வளவு தூரம் நமக்கு வழிகாட்டிய மகான் புத்தர் நல்ல முடிவைக் காட்டாமல் விட மாட்டார். நமக்கெல்லாம் எதிர்காலம் ஒளி மயமானதாகி நுழைவதற்குக் கதவைத் தட்டிக் கொண்டிருக்கிறது. அந்த நல்ல நாள் நாளைய நாளாக இருக்கட்டும் என்று கருதி எல்லோரும் மறைவிடத்திற்குச் செல்லுங்கள். கவனத்தைக் கிணற்றின் மீது செலுத்துங்கள்" என்றார் நிழலில் ஒதுங்குவான்.

இதே நேரத்தில் நாகானன விஹாரத்திற்கு முன்பு அனைவரும் கூடிய போது நள்ளிரவு நேரமாகியிருந்தது. அதை உறுதி செய்வது போல் தூரத்திலிருந்து நரியொன்று ஊளையிட்டது.

கடல்முகனோடு வந்த பத்துப் பேர்களை ஆலயத்தில் முகப்பில் நிறுத்தினான் மங்கை வேந்தன். அவர்கள் வேறு எங்கும் போய் விடாமல் பார்த்துக் கொள்ளும் விதத்தில் சாயை பிடிப்பானை அவர்களோடு பேசிக் கொண்டிருக்கும் படி நிறுத்தினான். நீர் மேல் நடப்பானையும், தோலாவழக்கரையும், தாளுதுவானையும், கடல் முகனையும் விஹாரத்தின் திட்டி வாசல் மூலமாக

---

* ஆழ்கிணற்றிலிருந்து காரிவாயு வெளிப்பட்டதை அக்காலத்தில் புகை என்று கருதினார்கள். ஆகவே அக்கிணற்றுக்கு புகையுனிக் கிணறு என்ற பெயர் வந்தது. பக்கம் 152 'நாகப்பட்டினம்' By கோவை. இளஞ்சேரன்.

உள்ளே அழைத்துச் சென்றான் மங்கை வேந்தன். அவர்களிடம் தேவையான உபகரணங்கள் இருந்தன.

மங்கை வேந்தன் இருபந்தங்களைத் தயார் செய்யும் படிச் சொல்லவும் தாளுதுவான் தன்னிடமிருந்த உபகரணங்களைக் கொண்டு இரண்டு பந்தங்களைத் தயார் செய்தான். அவற்றைப் பிடித்துக் கொண்டு சிலை இருந்த விமானத்திற்கு இடப்பக்கம் சென்றான் மங்கை வேந்தன். அங்கே அபிஷேக நீர் வெளியே விழும் வழியான கோமுகத்திற்குக் கீழே பந்தத்தைக் காட்டச் சொன்னான். அங்கே கல்வெட்டு ஒன்று இருந்தது. அதுதான் யந்திர சூட்சுமம் என்பதை அறிந்த மங்கை வேந்தன் கல்வெட்டுப் பகுதியில் இருந்த சிறு துவாரத்தில் கையை விட்டான். அதற்குள் ஒரு இரும்புச் சாவி இருந்தது. அதை எடுத்துக் கொண்டு கோமுகத்தை விட்டு அகன்ற மங்கை வேந்தன் தோலா வழக்கனைப் பார்த்து "நீ பந்தத்தைத் தாங்கிய படி அந்த விமானத்தின் பகுதியில் நில். நான் விமானத்தின் மீது ஏறுகிறேன்" என்று சொல்லி சிலை இருந்த கருவறை விமானத்தில் மீது ஏறினான்.

அவன் விமானத்தின் மீது இருளில் லாவகமாக ஏறுவதைக் கண்ட கடல் முகன் "இவன் பூர்வ ஜன்மத்தில் குரங்காகத் தான் இருந்திருக்க வேண்டும்" என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். விஹாரம் பலகாலமாக மூடப்பட்ட நிலையிலேயே இருந்ததால் அதற்குள் பதினைந்து ஆந்தைகள் நிரந்தரமாகக் குடி கொண்டிருந்து. சந்தோஷமாகக் காலத்தைக் கடத்தி வந்தன. இரவு நேரமானது ஊரை மிரட்டுவது போல் இஷ்டத்திற்கும் இரைந்து மகிழ்ந்தன. தொல்லையற்றுக் கிடந்த விஹாரத்தில் நடுநிசி நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் பிரவேசித்ததால் திகைப்புற்ற அவை இரைச்சலை எழுப்பாமல் விஹாரத்தின் பல பகுதிகளில் அமர்ந்து கொண்டு நடப்பவற்றைப் பார்த்துக் கொண்டிருந்த விதமானது அங்கே நடைபெறவிருக்கும் விபரீதத்திற்குச் சாட்சிகளாக அமர்ந்திருப்பது போல் இருந்தது.

விமானத்தின் மீது ஏறிய மங்கை வேந்தன் இரும்பு சாவியை எடுத்து விமான மகுடத்தில் நுழைத்துச் சுழற்றியதும் மகுடம் கடகடவென்று சுழன்றது. பிறகு நின்றது. அந்த மகுடத்தை லேசாக அசைத்துப் பெயர்த்தான். மகுடம் கைக்கு வந்தது. அதைக் கீழே இருந்த கடல்முகனிடம் கொடுத்து விட்டு தோலா வழக்கரிடமிருந்து பந்தத்தை வாங்கி அந்தத் துவாரத்தில் காட்டினான். கண்கள் கூசின.

அதற்குக் காரணம் உள்ளே இருக்கும் பொற்சிலையில் பளபளப்பு தான் என்பது புரிந்தது அவனுக்கு. சிலையை மேலேயிருந்து எடுக்க முடியவில்லை. ஏனென்றால் உலோகச் சக்கரம் ஒன்று சிலைக்கு மேலே சுழன்று கொண்டிருந்தது. அதை நிறுத்தினாலன்றி புத்தர் சிலையைத் தொட முடியாது என்பது அவனுக்குப் புரிந்தது. கீழே இறங்கினான். தோலாவழக்கர், தாளுதுவான், நீர்மேல்நடப்பான், கடல்முகன் ஆகிய மூவரையும் ஒருவர் பின் ஒருவராக மேலே ஏறச் சொல்லி சக்கரத்தைப் பார்க்கும் படிச் சொன்னான். எல்லோரும் பார்த்து விட்டு இறங்கினார்கள்.

"சுழலும் சக்கரத்தை நிறுத்துவதற்கு யந்திர சூட்சுமத்தில் எந்தத் தகவலும் இல்லை. எப்படி நிறுத்தவது?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"கதவை உடைத்துக் கொண்டு உள்ளே சென்று சக்கரத்தைத் தகர்த்து விடலாம்" என்றான் கடல்முகன். அவனுக்கு மங்கை வேந்தன் யந்திர சூட்சுமத்தை அறிந்து கொண்டு சரியாக அவற்றை இயக்கியது பேராச்சரியத்தை அளித்திருந்தது. கண்களைப் பறிக்கும் புத்தர் சிலையைப் பட்டும் படாமலும் பார்த்ததுமே அவனுக்கு மெய் சிலிர்த்தது. அதில் பாதி தனக்குக் கிடைக்கப் போகிறது என்ற எண்ணம் அவனைத் திக்கு முக்காட வைத்தது. அவன் அதைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. மங்கை வேந்தன் ஏதோ தந்திரம் செய்யப் போகிறான் என்று தான் கருதியிருந்தான். ஆனால் மங்கை வேந்தன் அவ்வாறு தந்திரமோ மந்திரமோ செய்யாமல், ஏமாற்று வேலையில் ஈடுபடாமல், ரகசியம் எதுவுமின்றி வெளிப்படையாகவே காரியங்களைச் செய்து தன்னையும் விமானத்தின் மீது ஏற்றி உள்ளே பார்க்கும் படிச் செய்ததால் கடல்முகனுக்கு மங்கை வேந்தனின் மீது மதிப்பும் நம்பிக்கையும் உண்டாயிற்று.

மேலேயிருந்து சிலையைக் கண்டு விடவே அதைக் கைப்பற்றும் ஆசையும் வேகமும் மூண்டது. கருவறைக் கதவை உடைக்கலாம் என்று யோசனை சொன்னான்.

"கதவைத் திறக்கலாம். உடைக்க வேண்டிய தில்லை. திறப்பதற்குக் கல் சாவி இருக்கிறது. ஆனால் கதவை உட்புறத்திலிருந்து தான் திறக்க முடியும். வெளிப் புறத்திலிருந்து திறக்க முடியாது. திறக்க முற்பட்டால் ஆங்காங்கே மறைந்திருக்கும் மணிகள் பேரோசை எழுப்பும்" என்றான் மங்கை வேந்தன்.

"உள்ளே எப்படிப் போக முடியும்?" என்று கேட்டான் கடல்முகன்.

"விமானத்தின் மகுடம் அகற்றப்பட்டதால் உண்டான துவாரத்தில் ஒருவர் நுழையலாம். ஆனால் சக்கரம் சுழன்று கொண்டிருப்பதால் அது முடியாது" என்று சொன்ன மங்கை வேந்தன் சற்று யோசித்து விட்டு "கடல்முகா! நீ உன் ஆட்களை அனுப்பி உடனடியாக வாழை மட்டைகளைக் கொண்டு வரச் சொல். அவற்றைக் கொண்டு சக்கரத்தின் சுழற்சியை நிறுத்த முயல்வோம்" என்றான்.

"ஆஹா! உங்கள் யோசனையே யோசனை!" என்று சிலாகித்த கடல்முகன் விஹாரத்தின் முன் வாசற் கதவில் இருந்த திட்டி வாசலைத் திறந்து கொண்டு வெளியே வந்து தனது சகாக்களைப் பார்த்து "உங்களில் எட்டு பேர் நமது வாழைத் தோப்புக்குச் சென்று வாழை மட்டைகளை வெட்டி வாருங்கள். ம். சீக்கிரம்" என்று கட்டளையிட்டான்.

வெளியே சகாக்களோடு பேசுவதற்காக அமர்த்தப் பட்டிருந்த சாயைப் பிடிப்பான் கடல் முகனைப் பார்த்து "வெளியே எந்தத் தொந்தரவும் இல்லை என்று தலைவரிடம் சொல்லுங்கள்" என்றார்.

"ஆகட்டும்" என்று சொல்லி விட்டு உள்ளே நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டான் கடல் முகன்.

அவன் வெளியே சென்றிருந்த சமயத்தில் "இந்தச் சுழலும் சக்கரத்தைப் பற்றி சிற்பி நாகசாமி என்னிடம் சொன்னாலும் அதை நிறுத்தும் உபாயம் பற்றி எதுவும் சொல்லவில்லை. அதை ஊகத்திற்கு விட்டு விட்டார். அநேகமாக வாழை மட்டைகளைச் சுழலும் சக்கரத்தில் ஆங்காங்கே நுழைத்தால் சுழற்சி தடை பட்டு சுழல்வது நிற்கும். நான் மகுட துவாரத்தில் உள்ளே இறங்கி கதவை உட்புறத்திலிருந்து திறக்கிறேன். எல்லோரும் உள்ளே வாருங்கள். புத்தர் சிலையைப் பெயர்ப்போம். அதற்கு பிறகு யார் யார் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். அப்படியே நடந்து கொள்ளுங்கள்" என்று சொன்ன மங்கை வேந்தன் "புகையுணி கிணற்றுக்குச் சென்றிருக்கும் நிழலில் ஒதுங்குவான் நமது புரவிகள் இருக்கும் இடத்திற்குச் சரியாக வந்து விடுவான் அல்லவா?" என்று வினவினான்.

"நள்ளிரவு கழிந்து நாலாவது நாழிகையில் கிணற்றருகே குழப்பத்தை உண்டாக்கி விட்டு நமது புரவிகள் இருக்கும் இடத்திற்குச் சென்று அவற்றை இந்த விஹாரத்தின் மேற்கு மதிலுக்குக் கொண்டு வருவார். நாம் வெளியேறி விடலாம். நாம்

சமிக்ஞை செய்தால் வெளியே இருக்கும் சாயை பிடிப்பானும் மேற்குப் புறம் வந்து விடுவார்" என்றார் தோலாவழக்கர்.

இதே நேரத்தில் புகைக் கிணற்றருகே பௌத்தர்களுடன் மறைவிடத்தில் பதுங்கியிருந்த நிழலில் ஒதுங்குவான் தான் செயல்பட வேண்டிய நேரம் நெருங்குவதை உணர்ந்தார்.

அவரது நல்லவேளையோ என்னவோ-

சற்றும் எதிர்பாராத விதமாக கிணற்றுப் பகுதியை நோக்கி கடல்முகனின் ஆசைநாயகியான வெண்தாமரை வந்து கொண்டிருந்தாள். கடல்முகன் நாகானன விஹாரத்தருகே இருப்பதாக ஏதோ ஒரு செய்தி அவளுக்கு வந்தது. கடல்முகன் ஏதோ குற்றம் புரியவிருக்கிறான் என்று நினைத்தாள். தன்னை உதாசீனப்படுத்திய அவனைக் காட்டிக் கொடுக்கும் எண்ணத்துடன் வந்து கொண்டிருந்த அவளைக் கண்டதும் ஆந்தையைப் போல் குரலெழுப்பினார் நிழலில் ஒதுங்குவார். பௌத்தர்கள் வெளிப்பட்டு அப்பெண்ணைச் சூழ்ந்து கொண்டார்கள்.

"அவளை அப்படியே இலந்தைத் தோப்புக்கு இழுத்துச் செல்லுங்கள்" என்றார்.

அவர்களோடு செல்வது போல் போக்குக் காட்டி விட்டு புரவிகள் இருந்த இடம் நோக்கி விரைந்தார்.

விஹாரத்தில் வேலைகள் வெற்றிகரமாக நடந்தன.

வாழை மட்டைகளைக் கொண்டு சக்கரத்தின் சுழற்சியை நிறுத்தி விட்டு உள்ளே இறங்கிக் கதவைத் திறந்தான் மங்கை வேந்தன்.

அந்த நேரத்தில் நீர்மேல் நடப்பான் கடல் முகனை அவன் எதிர்பாராத விதமாக கழுத்தை நெறித்து நரம்படிகளைப் பிரயோகித்ததால் அவன் கீழே விழுந்து மயக்கமானான்.

மங்கை வேந்தன் கடப்பாரையைக் கொண்டு பீடத்தை இடித்தான். பொற்சிலையைப் பெயர்த்தான். கயிற்றில் கட்டி வெளியே கொணர்ந்தான். தோலாவழக்கரும் தாளுதுவானும் மதில் மீது ஏறிச் சிலையை இழுத்தார்கள். மங்கை வேந்தன் மயில்போல் குரல் கொடுத்தான் சாயை பிடிப்பானுக்கு.

நள்ளிரவில் புத்தர் சிலை கடத்தப்படுவதை அதுவரை அமைதியாக இருந்து கவனித்த ஆந்தைகள் அரற்றுவது போல் இரைந்தன.

★★★



கண்ணாங்குடி

குமுதவல்லியை முதன்முதலாகப் பார்த்து மையல் கொண்ட வெள்ளைக் குளத்தின் தாமரைப் பொய்கைக் கரையில் அமர்ந்திருந்தாள் குமுதவல்லி. குமுதம் போலிருந்த அவளுக்கு அருகில் கொள்கைக் குன்று போல் அமர்ந்திருந்தான் மங்கை வேந்தன்.

அவனது வேடம் அரசனுக்கு உரியதாக இல்லை. சேனாதிபதிக்கு உரியதாக இல்லை. கொள்ளைக் காரனுக்கு உரியதாக இல்லை. வணிகனுக்கு உரியதாக இல்லை. வேடம் எதுவுமே இல்லாமல் இயற்கையாக இருந்தான். இயல்பாக இருந்தான். இது தான் தனக்குரியது. இது தான் உண்மை என்று பறை சாற்றுவது போல் பரம வைஷ்ணவனாக இருந்தான். உடலெங்கும் பன்னிரண்டு திருமண் காப்புகள் பளிச்சென்று இருந்தன. தலையில் வைஷ்ணவர்களுக்குரிய சிகையும் மார்பில் பூணூலும் நிரந்தர அடையாளங்களைப் போல் துலங்கின. கிரகஸ்தன் ஆனபடியால் பஞ்சகச்ச வேஷ்யைப் பாங்காக உடுத்தியிருந்தான். அங்கவஸ்திரம் மார்புக்குக் குறுக்கே மடிப்பாகப் போடப் பட்டிருந்தது.

தன்னை மணப்பதற்கு மங்கை வேந்தன் வைஷ்ணவனாக மாற வேண்டும் என்று நிபந்தனையைப் போட்டவள் குமுதவல்லி. திருமணத்திற்காக அவ்வாறு மாறிய அவன் ஆலயத் திருப்பணி குறுக்கிட்ட போது வேறு எப்படியெல்லாமோ மாறிப் போய் அவளுக்கு வேதனையைத் தந்தான். தன்னை அவன் ஏமாற்றி விட்டானே என்றும் அது பாபமாயிற்றே என்றும் அது ஆகாதே என்றும் உள்ளுக்குள் பதறியிருந்தாள் அவள்.

ஒரு கட்டத்தில் அவளை அவன் பிரிந்து விட்டதாகவே அறிவித்த போது பெற்றோரிடம் சென்று கதறினாள் குமுதவல்லி.

"இதற்குத் தான் எனக்கு விவாகம் செய்து வைத்தீர்களா தந்தையே! இதற்காகவா நான் நிபந்தனைகளை விதித்து வெற்றி பெற்றதாக மகிழ்ந்திருந்தேன் தந்தையே! பூத்துக் குலுங்கிய மலர்ச் செண்டு போல் வைஷ்ணவராகி ஆற்றொழுக்கு போல்

தடையில்லாமல் அன்னதானங்களைச் செய்து வந்தவர் தான் ஒரு வைஷ்ணவர் என்பதை மறந்து -வைஷ்ணவருக்குரிய அனுஷ்டானங்களை மறந்து - தனது உடமைகளையெல்லாம் விற்று - தனது கடமையான கப்பம் செலுத்தும் பணியை நிறுத்தி - நான் முற்றிலும் விரும்பாத போர்களில் ஈடுபட்டு - ஆலிநாட்டிற்கு மன்னராகி - அந்நாட்டுக் களஞ்சியத்திலிருந்து பொன்னையும் பொருளையும் செலவிட்டு - செலவுக்கு ஏதுமில்லாததால் பிச்சையெடுத்து - பிறகு அதுவும் போதாததால் களவு செய்து - வழிப்பறி செய்து - கொள்ளையிட்டு - அரசைத் துறந்து - எங்கெங்கோ எப்படியெல்லாமோ நடந்து கொண்டு - கடல் கடந்து இலங்கைக்குச் சென்று திரும்பி - நாகையில் இருந்த புத்தரது பொற்சிலையைத் திருடி - யாரும் எதிர்பார்க்க முடியாத பாவங்களைச் செய்து விட்டாரே! இவற்றையெல்லாம் சகித்துக் கொள்ள நான் என்ன குற்றம் செய்தேன்? என்ன பாவம் செய்தேன்? நான் உயிரை விட்டு விடட்டுமா தந்தையே? ஸ்ரீவைஷ்ணவர் ஒருவரின் தர்மபத்தினியாகத் தான் இருக்க விரும்பினேனே தவிர கொள்ளைக்காரனின் மனைவியாக இருக்கக் கனவிலும் விரும்பவில்லை. இது தானா என் விதி?" என்று புலம்பினாள்.

"புலம்பாதே மகளே. சோதனை வரும் போது உறுதியாக நிற்பது தான் கற்புக் கடம் பூண்ட பொற்புடைப் பெண்களின் குணமாக இருக்க வேண்டும். இதே சோழநாட்டில் பலநூறு ஆண்டுகளுக்கு முன்னால் கண்ணகி என்னும் கற்புக்கரசி இருந்தாள். தனது கணவன் கோவலன் தன்னை விடுத்து ஆடலரசி மாதவியிடம் சென்ற போது அவள் மனம் உடையவில்லை. பிறகு அவளது கணவன் மதுரையில் கொலையுண்ட போதும் மனம் தளரவில்லை. தன் கணவன் குற்றமற்றவன் என்பதை நிரூபித்தாள். அதற்குப் பின் தனது கற்பின் சக்தி எப்படிப்பட்டது என்பதை நிரூபிக்கும் விதமாக மதுரை நகரையே எரித்தாள். அந்த மன உறுதி உனக்கு வர வேண்டும் குமுதவல்லி. ஆற்றில் பெருவெள்ளம் வரும் போது எதை எதையோ அடித்துக் கொண்டு போய்க் கடலில் சேர்க்கும். கரையிலும் சேர்க்கும். அப்போது அதன் நிறமும் மாறியிருக்கும். போக்கும் மாறியிருக்கும். வெள்ளம் வடிந்து இரண்டு மூன்று நாட்கள் கழிந்தால் ஆறானது இயல்பு நிலைக்கு வந்து விடும். அமைதியாக ஓடும். அதில் ஓடங்கள் ஆடும். உன் கணவன் என்னும் ஆற்றில் திருப்பணி என்னும் வெள்ளம் ஓடுகிறது. வெள்ளம் வடியும் வரை காத்திரு. அதற்குப் பின் இயல்பான ஆற்றைக் காண்பது போல் உன் கணவனைக் காண்பாய்" என்றார் தந்தை.

தந்தை கூறியது எல்லாம் அப்படியே நடந்தது. இலங்கையிலிருந்து திரும்பிய மங்கை வேந்தன் பொற்சிலையை உருக்கிப் பணமாக்கி திருப்பணி நிதியில் சேர்த்து அடுத்த இரண்டு ஆண்டுகள் வரை திருவரங்கத்திலேயே தங்கி முழுமூச்சுடன் திருப்பணியை வெற்றிகரமாக முடித்தான். நான்காவது சுற்று மதில்கள், கோபுரங்கள், உள்மண்டபம், தானியக் களஞ்சியம் ஆகிய அனைத்தையும் குறைவின்றிக் கட்டி முடித்ததோடு நாளும் கோளும் பார்த்து மறையோர்கள் வழிகாட்டியபடி தன் உயர்வுக்குக் கால்கோளிட்ட சோழமன்னனை வைத்து சம்ப்ரோக்ஷண வைபவத்தையும் பார்புகழ நடத்தி தனது இலட்சியத்தை நிறைவேற்றினான் மங்கை வேந்தன்.

எடுத்த காரியத்தை எது தடுத்தாலும் கைவிடாமல் நிறைவேற்றிய மங்கை வேந்தனைப் பார்த்து சோழ மன்னனான நந்தச் சோழன் "பரகாலரே! நீர் சாதாரண குறுநிலத்தை ஆளப் பிறந்தவரல்ல. பேரரசைக் கட்டியாள அவதரித்த அவதார புருஷர். உங்களது மகிமை இன்று தான் உலகிற்குப் புரிந்தது. இனி நீர் சோழ நாட்டையே ஆளலாம். என் அரியணை உமக்கே உரியது" என்றான்.

"என் மரியாதைக்குரிய மன்னர் பெருமானே! பேரரசு என்பது ஆலி நாடோ சோழ நாடோ அல்ல. இந்தப் பூமண்டலம் கூடப் பேரரசு அல்ல. அண்ட சராசரங்கள் அடங்கிய பிரபஞ்சம் தான் உண்மையான பேரரசு. அதன் சக்கிரவர்த்தி தான் நம் எம்பெருமான். நம்மைக் காவல் செய்யும் அவனுக்கு ஏவல் செய்யவே நாம் பிறந்திருக்கிறோம். திருப்பணியானது அவனது சங்கல்பத்தால் நடந்து முடிந்ததும் எனக்கு மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை ஆகிய மூன்றும் மறைந்தொழிந்தன. அரங்கனும் என்னுள்ளே ஆழ்ந்து என்னைப் பக்தியென்னும் கடலுக்குள் ஆழ்ந்து செல்லும் படிக் கட்டளையிட்டிருக்கிறான். இனி நான் ஆழ்வானாக இருப்பேனேயன்றி ஆள்வானாக இருக்க மாட்டேன்" என்றான் மங்கை வேந்தன்.

"திருமங்கை ஆழ்வாராகிய திருமங்கை மன்னரே! உங்களுக்கு முன் நாங்கள் தூசுகளாக இருக்க, நீங்களோ மாசு மறுவற்ற எம்பெருமானின் பக்தராக நிற்கிறீர்கள். உங்களை அனைவரும் நெஞ்சார வாழ்த்துகிறோம். உங்களது ஆன்மீகப் பணி துவங்கட்டும். துவளாமல் ஓங்கட்டும்" என்றான் சோழ மன்னன்.

பூரணமான மகிழ்ச்சியில் இருந்த குமுதவல்லி "சுவாமி!" என்று அழைத்தாள்.

மங்கை வேந்தனோ வேறு நினைவுகளில் ஆழ்ந்திருந்தான்.

அவற்றையெல்லாம் நினைத்த போது அவனுக்குச் சிரிப்பாக இருந்தது. வேடிக்கையாக இருந்தது.

நாகையில் இருந்த நாகானன விஹாரத்தில் இருந்த பொன்னாலான புத்தர் சிலையை நாகை நகரத்துக் காவல் தலைவனான கடல் முகனின் உதவியுடன் கடத்தியது அவனுக்குச் சிரிப்பையே தந்தது. கடல்முகனைப் போன்ற முட்டாள்கள் நாகப் பட்டினத்தின் காவல் தலைவனாக இருந்ததை விட அந்த நகருக்கு வேறு துரதிருஷ்டம் இருக்க முடியாது என்றும் அவனே அப்பதவியில் நீடித்தால் நாகானன விஹாரத்தையே கூட கடத்தி விட முடியும் என்றும் நினைத்தான் மங்கை வேந்தன்.

முன்னேற்பாடாகக் கொண்டு வந்திருந்த புரவிகளில் ஏறி மங்கை வேந்தனும் அவனது ஐந்து தோழர்களும் விஹாரத்தை விட்டுப் புறப்பட்டு தென்மேற்குத் திசையில் பயணம் செய்து கண்ணங்குடியை* அடைந்தார்கள்.

அனைவருமே களைப்படைந்து விட்டதால் ஓய்வு தேவைப் பட்டது. விடியும் வரை கண்ணங்குடியில் இளைப்பாறுவதென்று முடிவு கட்டப் பட்டது. புத்தர் சிலையை எப்படிப் பாதுகாப்பது என்ற பிரச்சனை எழுந்தது.

கண்ணங்குடி அப்படியொன்றும் பெரிய ஊராக இல்லை. பெருங்கிராமம் என்று வேண்டுமானால் சொல்லலாம். கிராமமாக இருந்த காரணத்தால் வசதிகள் எதுவும் கிரமமாகச் செய்யப் படவில்லை. வீதிகள் என்று முறையாக இல்லாததால் விளக்குகள் இல்லை. விளக்குகள் இல்லாததால் வெளிச்சமும் இல்லை. அமாவாசை நாளான படியால் விண்வெளியும் இருண்டு கிடந்தது. வீடுகள் பல ஆங்காங்கே இருந்தாலும் அவையும் ஓய்வெடுத்து விட்டது போல் அமைதியாக இருந்தன. அவற்றுக்குள் பலரும் களத்து மேட்டில் சிலருமாகப் படுத்திருந்தவர்களும் ஆழ்ந்த உறக்கத்தில் அடங்கி விட்டிருந்தார்கள். பேய் போல் காட்சியளித்த புளியமரத்தின் கீழே போய் நின்ற அவர்கள் புரவிகளைக் கட்டிப் போட்டார்கள். புளியமரத்திற்குப் பக்கத்தில் விளைநிலம் இருந்ததைக் கண்ட மங்கை வேந்தன் அந்த நிலத்தில் புத்தர் சிலையைப் புதைத்து வைப்பது பாதுகாப்பானது என்று சொல்லிப் புதைத்து வைத்தான். எல்லோருக்கும் உறக்கம் வந்து உறுத்தியது. உறங்காமல் இருக்க விரும்பினாலும் அது நடக்கக் கூடிய காரியமாக இல்லை.

---

* திருக்கண்ணங்குடி என்று தற்போது வழங்கப்படும் இப்புண்ணிய தலமானது நாகப்பட்டினம் - சிக்கல் மார்க்கத்தில் ஆழியூருக்கு ஒரு கி.மீ. தூரத்தில் உள்ளது.

எனவே மங்கை வேந்தன் அப்புளியமரத்தைப் பார்த்து "ஏ! புளியமரமே! நாங்கள் அசதியால் உறக்கத்தைத் தழுவப் போகிறோம். ஆகவே நீதான் உறங்காமல் இருந்து புத்தர் சிலையைப் பாதுகாக்க வேண்டும்" என்று கூறிவிட்டுப் படுத்தான். தூக்க மங்கை வந்து அவனைத் தழுவிக் கொண்டாள்.

பொழுது விடிந்த போது அவனுக்குச் சிலிர்ப்பு ஏற்பட்டது. கண் விழித்தான். புளியமரமானது தனது இலைகளையெல்லாம் அவன் மீது உதிர்த்தது. இலைகளை உதிர்த்து விட்டு எழுந்த போது புத்தர் சிலையைப் புதைத்து வைத்த நிலத்தை உழுவதற்காக உழவர்கள் வந்து கொண்டிருந்தார்கள். அந்த ஆபத்தான சூழ்நிலையை உணர்த்தவே புளியமரமானது இரவெல்லாம் உறங்காதிருந்து உழவர்களைக் கண்டதும் இலைகளை உதிர்த்து அவனை எழுப்பியது. அது தன் கடமையைச் சிறப்பாகச் செய்ததை உணர்ந்த மங்கை வேந்தன் "உறங்காப் புளியே!* நீ வாழ்க" என்று பாராட்டி விட்டு எல்லோரையும் எழுப்பிக் கொண்டு நிலத்தை நோக்கிச் சென்றான்.

அங்கே சென்ற உழவர்களைப் பார்த்து "இங்கே என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று வினவினான் மங்கை வேந்தன்.

மங்கை வேந்தன் கொள்ளைக்காரன் வேடத்திலேயே இருந்ததால் அவனையும் அவனது சகாக்களையும் பார்த்துச் சற்றே சலசலத்தாலும் உழவர்கள் சுதாரித்துக் கொண்டு "பார்த்தால் தெரியவில்லையா? கலப்பையும், ஏரும், எருதுமாய் வந்திருக்கிறோமே புரியவில்லையா? நிலத்தை உழுவதற்குத் தான்" என்றார்கள்.

அவர்கள் ஐந்து பேர் இருந்தார்கள். அவர்களைத் தவிர அடுத்தடுத்து இருந்த நிலப் பகுதியில் உழுவதற்கு யாரும் வரவில்லை.

மங்கை வேந்தன் அந்த ஐந்து பேர்களையும் பார்த்து "இங்கே நீங்கள் உழுவதற்கில்லை" என்று கூறிவிட்டுத் தோலா வழக்கரைப் பார்த்ததும் அவர் முன்னே வந்து "ஆமாம். இங்கே உழுவதற்கு உங்களை மட்டுமல்ல யாரையும் அனுமதிக்க மாட்டோம்" என்றார்.

"எங்கள் நிலத்தை உழுவதற்கு நீங்கள் யார் அனுமதிப்பதற்கு?" என்று கேட்டார்கள் உழவர்கள்.

"இது உங்கள் நிலமல்ல. எங்கள் நிலம்" என்றார் தோலாவழக்கர்.

"காலம் காலமாக உழுது பயிரிட்டு விளைவித்து வருகிறவர்கள் நாங்கள் தெரியுமா?"

"தெரியும். அது தவறு என்பதால் தான் நாங்கள் வந்திருக்கிறோம்."

"எதற்கு வந்திருக்கிறீர்கள்?"

"எங்களுக்குரிய நிலத்தில் இதுகாறும் நீங்கள் அத்து மீறி உழுது பயிரிட்டது குற்றம். பயிரிட்டதைப் பயன்படுத்திக் கொண்டது குற்றம். இங்கே மீண்டும் உழுவதற்கு வந்தது குற்றம். நிலம் எங்களுடையது என்று கூறிய பிறகும் ஒப்புக் கொள்ளாமல் எதிர்ப்பேச்சு பேசுவதும் குற்றம்."

"வியப்பாக இருக்கிறதய்யா உங்கள் பேச்சு. திடீரென்று குத்துக் கல்லைப் போல வந்து நின்று கொண்டு நிலத்திற்குச் சொந்தம் கொண்டாடுவதும் குற்றம் கூறுவதும் வேடிக்கையாக இருக்கிறது. நாங்களொன்றும் ஏமாளிகள் அல்ல."

"ஏமாளிகள் அல்ல. குற்றவாளிகள். இங்கே உள்ள இருபது காணி நிலம் எங்களுக்குச் சொந்தமானது. அதை உங்களுக்குரியதாக எண்ணிச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் நீங்கள் குற்றவாளிகளேயன்றி ஏமாளிகள் அல்ல."

"அவ்வளவு நிலம் உங்களுக்குச் சொந்தம் என்றால் இத்தனை காலமாக எங்கே ஒளிந்து கொண்டு உறங்கிக் கொண்டிருந்தீர்கள்?"

"ஒளியவும் இல்லை. உறங்கவும் இல்லை. உங்களைப் போன்றவர்கள் அபகரித்துக் கொண்டிருக்கும் எங்கள் நிலங்கள் ஏராளம். தொண்டை நாட்டிலும் சோழ நாட்டிலும் உள்ள எங்கள் நிலங்களை ஒவ்வொன்றாக மீட்டு வருகிறோம். இப்போது கண்ணங்குடியில் உள்ள எங்கள் நிலத்தை மீட்க வந்திருக்கிறோம்."

பேச்சு வளர்ந்து கொண்டே போனது. இதற்கிடையில் இதர உழவர்களும் ஊர்மக்களும் அங்கே வந்து விட்டதால் ஆரவாரம் உண்டாயிற்று.

முடிவில் ஊர்ப் பஞ்சாயத்துச் சபையை உடனே கூட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

புளியமரத்தின் கீழேயே பெருந்துண்டு விரிக்கப்பட்டு அதில் வந்து அமர்ந்தார் பஞ்சாயத்துச் சபையின் தலைவர் பச்சோந்தி.

நாளும் பொழுதும் வயிற்றை வளர்ப்பதியிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தபடியால் அவரது வயிறு பெருத்துப் போயிருந்ததால் அவர் பகாசூரனைப் போல இருந்தார்.

வந்து அமர்ந்ததும் சட்டி நிறையக் கூழையும் கள்ளையும் குடித்து விட்டு தோலா வழக்கரைப் பார்த்து "நான் கோபக்காரன். ஆபத்தானவன். ஈவு இரக்கமற்றவன்" என்றான் கண்களை உருட்டி.

"ஒரு நீதி ஸ்தாபனத்தின் தலைவருக்கு உரிய குணங்கள் எதுவும் உங்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை. அதை நீங்களே ஒப்புக் கொள்கிறீர்கள். அதைப் பற்றிய கவலை எங்களில் யாருக்கும் இல்லை. நாங்கள் கவலைப் படுவது நீதியைப் பற்றித் தான். அது கிடைக்கவில்லை என்றால் எங்கள் வாய் பேசாது. வாள் பேசும். நடுநாட்டிலும், தில்லையிலும், குடந்தையிலும் நீதியை மறுத்த காரணத்தால் எங்கள் வாளுக்கு இரையானவர்கள் எட்டு பேர். அதில் பஞ்சாயத்துச் சபை தலைவரும் அடக்கம். பெயர் பரமானந்தம். மற்றொருவர் பரஞ்சோதி. அடுத்தவர் அமாவாசை...." என்று தோலாவழக்கர் கூறிக் கொண்டே சென்ற போது பச்சோந்தி சற்றே அசைந்து "போதும். உன் வழக்கைப் பற்றி மட்டும் பேசு" என்றான்.

"எங்களை ஒருமையில் பேசினால் சிறுமையே நடக்கும். மரியாதையுடன் பேசுவது தலைவருக்கு நல்லது. மற்றவர்களுக்கும் நல்லது" என்றார் தோலாவழக்கர்.

"சரி. சரி. வழக்கைக் கூறுங்கள்."

"நாங்கள் உரிமையைக் கோருகிறோம். அதை வழக்காக மாற்றியவர்கள் உழவர்கள். இந்தச் சபையைக் கூட்டியதும் அவர்கள் தான்."

தலைவர் உழவர்களைப் பார்த்து "என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"ஐயா! இவர்கள் கூறுவது மிகவும் வேடிக்கையாக இருக்கிறது. கடந்த முப்பது ஆண்டுகளாக நாங்கள் ஆண்டு வரும் நிலம் இது. எங்கள் சம்பாத்யம் இது. இது வரை ஒருவரும் இதில் உரிமை கொண்டாடியதில்லை" என்றார்கள் உழவர்கள்.

"உங்கள் சம்பாத்யம் என்கிறீர்களே அதற்கு ஆவணங்கள் இருக்கிறதா?" என்று கேட்டார் தோலா வழக்கர்.

"நாங்கள் யாரிடமிருந்தும் நிலத்தை வாங்கவில்லை. எங்களுக்குரியநிலம் இது. இதற்கு ஆவணங்கள் வேண்டியதில்லை."

"உழவர்கள் கூறுவது சரி" என்றார் பச்சோந்தி.

"உழவர்கள் கூறுவது பொய். இந்த நிலம் எங்கள் தந்தையார், பாட்டனார், முப்பாட்டனார் என்று பரம்பரை பரம்பரையாக ஆண்டு அனுபவிக்கப் பட்டு வந்தது. இந்த நிலத்தைத் தஞ்சையைச் சேர்ந்த நிலக் கிழாரான நீலமேகன் என்பவரிடமிருந்து எங்கள் மூதாதையர்கள் ஐந்து கழஞ்சு பொன்னுக்கு வாங்கியிருக்கிறார்கள். நாங்களும் எங்கள் தந்தையும் இலங்கைக்குச் சென்று சிலகாலம் தங்கியிருந்து போது இந்த நிலம் இந்த உழவர்களால் அபகரிக்கப் பட்டு விட்டது. என் தந்தையார் தனது சொத்து விவரங்களைச் சொல்லி விட்டு இலங்கையிலேயே காலமாகி விட்டார். அந்த விவரங்களின் அடிப்படையிலேயே இந்த நிலத்தைக் கோருகிறோம்."

"உங்கள் கூற்றுக்கு என்ன ஆதாரம்? எங்கே ஆவணம்?" என்று கேட்டார் தலைவர்.

★★★

65

தாமோதர நாராயணப் பெருமாள்

"ஆதாரமில்லாமலா ஊரை விட்டு ஊருக்கு வந்து உரிமை கேட்போம்? நாங்கள் கூறியதற்கான தகவல்களுக்கான ஆவணங்கள் முழுதுமாக எங்களிடம் இருக்கின்றன" என்றார் தோலாவழக்கர்.

பஞ்சாயத்துச் சபைத் தலைவர் ஒரு சட்டி நிறைய தண்ணீரைக் குடித்து விட்டு "எங்கே அந்த ஆவணங்கள்? காட்டுங்கள்" என்றார்.

"முடியாது" என்றார் தோலாவழக்கர்.

"முடியாதா? ஆவணங்களைக் காட்ட முடியாதா? ஏன்?"

"எங்களுக்கு நம்பிக்கையில்லை. குறிப்பாக உங்கள் மீது சிறிதும் நம்பிக்கையில்லை."

"சபைத் தலைவனான என் மீதே நம்பிக்கை இல்லையா? இது என்ன வினோதம்?"

"நீங்கள் வழக்கை விசாரிப்பதற்கு முன்பாகவே ஆபத்தானவன் மோசமானவன் என்றெல்லாம் கூறிக் கொள்கிறீர்கள். அதோடு உங்களோடு கூடியிருப்பவர்கள் இந்தக் கிராமத்து மக்கள். நாங்கள் ஆதாரங்களைக் காட்டிய பிறகு நிதியை வழங்க மறுத்தால் என்ன செய்வது?"

"ஆதாரங்களைக் காட்ட மறுத்தால் நீதி வழங்க முடியாது. அதோடு தண்டனையும் வழங்கப்படும்."

"எங்களுக்குத் தண்டனை வழங்கக் கூடியவன் இன்னும் பிறக்கவில்லை தலைவரே. நாங்கள் ஆதார ஆவணங்களைக் காட்டிய பின் அவற்றின் அடிப்படையில் பிறழாமல் நீதி வழங்குவேன் என்று அனைவரின் முன்பாகச் சத்திய பிரமாணம் செய்ய வேண்டும்."

"நீங்கள் எங்களுக்கு நிபந்தனை போட முடியாது. இருப்பினும் இது உழவர் பிரச்சனை. சொத்துப் பிரச்சனை. வாழ்வாதாரப் பிரச்சனை. ஆகவே நீதி முறையாக வழங்கப்படும்."

"எங்கள் நிலம் எங்களுக்கு வழங்கப் பட்டு விட்டால் இந்த உழவர்கள் என்ன செய்வார்கள்?"

"அது எங்கள் பிரச்சனை. நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை."

"சற்று முன் நீங்கள் தான் இது வாழ்வாதார பிரச்சனை என்றீர்கள். கவலைப் படாமல் இருக்க முடியுமா? நாங்களும் மனிதர்கள் தான். இந்த உழவர்களும் மனிதர்கள் தான். நீங்கள் உருவத்தில் பெருத்திருந்தாலும் மனிதர் தான். ஒருவர் வாட ஒருவர் ஆடக் கூடாது! இந்த நிலம் எங்களுக்கு உரிமையாக்கப் பட்டதும் இந்த உழவர்களே அதில் விவசாயம் செய்யட்டும். விளைச்சலில் பாதியை எங்களுக்குத் தந்தால் போதும். அவர்களது வாழ்வாதாரம் பாதிக்கப்படக் கூடாது."

"முதலில் உங்கள் ஆவணங்களைக் காட்டுங்கள்."

"நாளைக்கு இதே நேரத்தில் அவற்றை இங்கே சமர்ப்பிக்கிறோம்."

"நாளைக்கா? அது முடியாது."

"ஏன் ஐயா முடியாது? வழக்கு விசாரணை தொடங்கிய முதல் நாளிலேயே எல்லாம் காட்டப் பட வேண்டும் என்றோ தீர்ப்பு வழங்கப்பட வேண்டும் என்றோ எந்தச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது? நில ஆவணங்கள் அனைத்தும் கரம்பனூரில் இருக்கின்றன. இங்கு வந்த அவசரத்தில் கண்ணங்குடி ஆவணத்திற்குப் பதிலாக கண்ணமங்கை ஆவணங்களைக் கொண்டு வந்து விட்டோம். கண்ணங்குடி ஆவணங்களைக் கொண்டு வர எங்கள் ஆட்கள் கரம்பனூருக்குச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் நாளைக்கு வந்து விடுவார்கள்."

"கண்ணமங்கை ஆவணங்களைக் காட்டுங்கள்."

"எதற்கு?"

"பார்க்க வேண்டும்."

"காட்ட முடியாது. இந்த வழக்கிற்கும் அந்த ஆவணங்களுக்கும் சம்பந்தமில்லை. அதை நீங்கள் கோர முடியாது."

"சரி. நாளைக்கு இந்த வழக்கிற்குரிய ஆவணங்களைச் சமர்ப்பித்தாக வேண்டும். இது இச்சபையின் கட்டளை."

"அப்படியே ஆகட்டும். வழக்கு முடியும் வரை உழவர்கள் நிலத்தில் இறங்கக் கூடாது."

"அதுவும் சரிதான். அவ்வாறே உழவர்களுக்கு கட்டளையிடுகிறேன். சபை கலைகிறது" எனறான் தலைவன் பச்சோந்தி.

அவரால் எழுந்து கொள்ள முடியவில்லை. நான்கு பணியாளர்கள் சேர்ந்து தூக்கி விட்டார்கள். பழுதான தேர் நகருவது போல் நடந்தார் தலைவர்.

புளியமரத்தின் கீழே மங்கை வேந்தனும் மற்றவர்களும் வந்து அமர்ந்தனர்.

தோலாவழக்கரைப் பார்த்த மங்கை வேந்தன் "முதல் கட்ட நடவடிக்கையை நல்லபடியாக நடத்தி விட்டாய் தோலாவழக்கா. நாளைக்கு ஆவணங்களைத் தருவதாகக் கூறியிருக்கிறாய். என்ன செய்வதாக உத்தேசம்?" என்று கேட்டான்.

தோலாவழக்கர் "மன்னவா! இங்கே உழவர்கள் மற்றும் மக்களின் போக்கு எப்படி இருக்கிறது என்பதைக் கவனித்து விட்டு ஒரு முடிவுக்கு வருவோம்" என்றார்.

அவர்களிடம் விலைமதிக்க முடியாத பொற்சிலை இருந்தது. ஆனால் உணவுக்கு ஒரு காசு கூட இல்லை.

சிரித்துக் கொண்ட மங்கை வேந்தன் "தோலா வழக்கா! நீ, நான், நிழலில் ஒதுங்குவான் ஆகியோர் ஊரை நோட்டம் பார்த்து விட்டு வரலாம். மற்ற மூவரும் இங்கேயே இருந்து கொண்டு சிலை புதைக்கப் பட்டிருக்கும் நிலத்தைக் கண்காணித்தபடி இருக்கட்டும்" என்றான்.

மூவரும் மூன்று திசைகளில் புறப்பட்டார்கள்.

மங்கை வேந்தனுக்குத் தாகமாக இருந்தது. ஓரிடத்தில் கிணற்றில் - பெண்கள் நீர் இறைத்துக் கொண்டிருந்தார்கள்.

அவர்களை அணுகி நீர் தருமாறு கேட்டான்.

காலையில் நடந்த வழக்கு விசாரணையை அப்பெண்கள் கண்டிருந்தார்கள். வேற்றூர்க்காரர்களான மங்கை வேந்தனுக்கும் அவனைச் சேர்ந்தவர்களுக்கும் உதவி செய்தால் ஊர்க்காரர்கள் தங்கள் மீது கோபம் கொண்டால் என்ன செய்வது என்று அஞ்சிய அவர்கள் மங்கை வேந்தனுக்குத் தண்ணீர் தர மறுத்தார்கள்.

"தண்ணீர் கூடவா தர மாட்டீர்கள்? ஏன்?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"வெளியூர்காரர்களுக்கு நீர் தருவதில்லை" என்றார்கள் பெண்கள்.

"வெளியூரிலிருந்து இந்த ஊருக்கு ஆற்று நீர் வந்தால் பயன்படுத்திக் கொள்வீர்களா? மாட்டீர்களா?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"அதற்கெல்லாம் எங்களால் பதில் கூற முடியாது" என்றார்கள் பெண்கள்.

"நீர் எல்லோருக்கும் பொதுவானது. அதை நீங்கள் தர மறுக்கிறீர்கள். இது தர்மமல்ல. இவ்வூரில் இருக்கும் கிணற்று நீரெல்லாம் பயன்படுத்த முடியாத உப்பு நீராகிப் போனால் என்ன செய்வீர்கள்?" என்று கேட்டு விட்டு அங்கிருந்து அகன்றான் மங்கை வேந்தன்.*

பெண்களுக்குக் கஷ்டமாகத் தான் இருந்தது. ஊர்ப் பகையைத் தேடிக் கொள்ளக் கூடாது என்பதால் நீர் தர மறுத்தனர். அவர்கள் மட்டுமல்ல. ஊரின் பல பகுதியிலும் மக்கள் அவர்களுக்கு ஆதரவு தரவில்லை.

மங்கை வேந்தன் மக்களின் நடவடிக்கைக்கான காரணத்தை உணர்ந்து கொண்டான். தன் தரப்பில் தொடுத்த வழக்கு தர்மத்திற்குப் புறம்பான அடாவடியானச் செயல் என்பதும் அவனுக்குப் புரிந்ததால் வினைக்கு வினைதான் விளைகிறது என்று சமாதானமாகி கண்ணங்குடியில் இருந்த ஸ்ரீதாமோதர நாராயணப் பெருமாள் ஆலயத்திற்குச் சென்று திருக்குளத்தில் நீராடி ஈர உடையுடன் சென்று தரிசித்தான். நீராடிய போது அவனது கொள்ளையன் வேடம் கலைந்தது. வைஷ்ணவக் கோலம் மீண்டது.

தரிசனம் செய்து விட்டு அங்கிருந்து மகிழ மரத்தடியில் வந்து அமர்ந்தான். மகிழ மரத்தின் நிழல் அவருக்கு ஆறுதலாக இருந்தது. அதனால் மகிழ்ந்த அவர் "மகிழமரமே! நீ காயா மகிழமாக நீடித்து வாழ்வாயாக" என்று வாழ்த்தினார்.**

அப்போது அங்கே வந்தார் ஒரு முதியவர். "ஈர ஆடையோடு இருக்கிறாயே இந்த ஆடைகளை அணிந்து கொள்" என்று சொல்லி உலர்ந்த ஆடைகளைக் கொடுத்தார்.

"நீங்கள் யார் ஐயா?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"தாமோதர நாராயணப் பெருமாள்" என்றார் முதியவர்.

"இது உங்கள் திருநாமமா?"

"திருநாமமும் அதுதான். பெருமாளும் நான் தான்."

---

* கண்ணங்குடி பெண்கள் தனக்கு கிணற்று நீரைத் தர மறுத்ததால் கிணறுகள் எல்லாம் ஊறாக் கிணறுகளாக மாறும் படி மங்கை வேந்தன் சபித்து விட்டதாகக் கூறப்படுகிறது. மன வேதனையில் அவர் பேசியது உண்மையாக மாறியது என்று கருதலாம். இன்றைக்கும் அவ்வூர் கிணறுகளில் உள்ள நீர் உப்பு நீராகவே உள்ளது. பெருமாள் கோயிலில் உள்ள கிணற்று நீர் மட்டும் நல்ல நீராக உள்ளது.

** காயா மரம் என்றால் என்றைக்கும் காய்ந்து போகாத பசுமையுடன் இருக்கும் மரம் என்பதாகும். மேற்படியான மகிழமரம் நீண்ட காலம் வரை பசுமையாக இருந்து 1990ஆம் வருடம் வீசிய புயலில் அழிந்து விட்டது. அந்த இடத்தில் புதிய கன்று நடப்பட்டு தற்போது பசுமையாக இருந்து வருகிறது. பக்கம் 403 'வைஷ்ணவ திவ்ய தேசங்கள் 108' By. தேவராஜன்.

மங்கை வேந்தன் சிரித்துக் கொண்டே அந்த ஆடையை வாங்கி அணிந்து கொண்டு நன்றி தெரிவித்த போது "நீ வைஷ்ணவனா? உன் பெயர் என்ன?" என்று கேட்டார் முதியவர்.

"வைஷ்ணவன் என்று சொல்லிக் கொள்ளத் தகுதியற்றவனாக இருக்கிறேன், ஐயா. என் பெயர் என்று பல இருந்தாலும் திருடன் என்ற பெயர் தான் பொருத்தமானது" என்றான் மங்கை வேந்தன்.

"அதனால் என்ன? திருமண் காப்பை இட்டுக் கொள்" என்று கூறித் திருமண்ணையும் ஸ்ரீசூர்ணத்தையும் கொடுத்தார் முதியவர்.

மங்கை வேந்தன் திருமண் காப்பை அணிந்து கொண்டான்.

"உன் தோழர்களையும் அழைத்து நீராடச் சொல். உலர்ந்த ஆடைகளை எடுத்து வருகிறேன். எல்லோரும் உறங்காப் புளியிடமே தங்குங்கள். உணவை எடுத்து வருகிறேன்" என்று கூறி விட்டு அகன்றார் முதியவர்.

மங்கை வேந்தனால் எதையும் மறுக்க முடியவில்லை. இயந்திரத்தைப் போல இயங்கினான்.

அனைவரும் நீராடிவிட்டு உலராடையை அணிந்து கொண்டு திருமண் காப்பைத் தரித்துக் கொண்டு புளியமரத்தின் கீழே வந்து அமர்ந்தார்கள்.

"இந்த ஊர் மக்கள் நமக்கு ஒத்துழைக்க மறுக்கிறார்கள். பேசவே தயங்குகிறார்கள். அவர்களையெல்லாம் கூட்டி நல்ல வார்த்தைகளைச் சொல்லித் தயக்கத்தைப் போகட்டுமா மன்னவா?" என்று கேட்டார் நிழலில் ஒதுங்குவார்.

புத்த பிட்சு வேடமிட்டு நாகப் பட்டினத்தில் பௌத்தர்களுக்கு உபதேசம். செய்திருந்த அனுபவத்தை வைத்துக் கொண்டு அவ்வாறு கேட்டார் அவர்.

"வேண்டாம் நண்பா. ஒத்துழைக்காத மக்களை விடு. ஒத்துழைக்கும் முதியவரை நினை. எல்லோரும் கைவிடும் போது எம்பெருமான் கைகொடுப்பது போல் முதியவர் உதவுகிறார். அது நம் பாக்கியம்" என்றான் மங்கை வேந்தன்.

இதற்கிடையில் முதியவர் உணவுப் பண்டங்களையும் தண்ணீரையும் கொண்டு வந்து கொடுத்தார்.

"இந்த ஊரில் கேட்டும் தராத மக்களுக்கிடையில் கேட்காமலேயே எல்லாவற்றையும் தருகிறீர்களே ஐயா, உங்களுக்கு நாங்கள் எப்படி நன்றி தெரிவிப்பது?" என்று வினவினான் மங்கை வேந்தன்.

“யார் யாருக்கு என்ன வேண்டுமோ அவற்றை அறிந்து தேவையான போது அளிப்பவன் நான். எனக்கு நன்றி எதுவும் தேவையில்லை. அன்பு மட்டுமே போதுமானது” என்றார் முதியவர்.

“உண்மையில் தாங்கள் யார்?” என்று மீண்டும் கேட்டான் மங்கை வேந்தன்.

“தாமோதர நாராயணப் பெருமாள்” என்று கூறிவிட்டு அகன்றார் முதியவர்.

பொய்யும் புரட்டும் திருட்டும் களவுமே காரியங்களாக இருந்த படியால் அறிவு மங்கியிருந்தது மங்கை வேந்தனுக்கு. எனவே தான் தன்னோடு பேசியதும் தனக்கு உதவியதும் சாட்சாத் பெருமான் தான் என்பதை உணர முடியாதவனாக இருந்தான்.

உணவை உண்டபின் தெம்படைந்த அவர்கள் தங்கள் புரவிகளைத் தேய்த்து விட்டார்கள்.

அவர்களைக் கொள்ளையர்களுக்கு உரிய தோற்றத்தில் பார்த்திருந்த மக்கள் தற்போது வைஷ்ணவர்களாகக் கண்டதும் வியந்தார்கள். அவர்களுக்கு ஆடைகளையும், உணவையும், தண்ணீரையும் முதியவர் ஒருவர் அளித்ததையும் கண்டு ஆச்சரியப்பட்ட அவர்கள் தயக்கத்தையும் பயத்தையும் விட்டு விட்டு அவர்களோடு வந்து பேசினார்கள்.

மங்கை வேந்தனும் அவர்களோடு சகஜமாகப் பேசினான்.

மக்கள் அவர்களோடு சகஜமாகப் பேசிப் பழகுவதைக் கேள்விப் பட்ட பஞ்சாயத்துத் தலைவன் பச்சோந்தி அங்கு வந்தான். அவர்களது கோலத்தைப் பார்த்து விட்டு “இது என்ன கோலம்?” என்று வினவினான்.

“இது கோலமல்ல. உண்மை” என்றான் மங்கை வேந்தன்.

“நீங்கள் வைஷ்ணவர்களா?”

“ஆமாம்.”

“அதை ஏன் என்னிடம் சொல்லவில்லை.”

“நாங்கள் வந்தது அதைச் சொல்வதற்காக அல்ல. எங்கள் நிலத்தைப் பெறுவதற்காக”

“பலரைக் கொன்றதாகச் சொன்னீர்களே! வைஷ்ணவர்கள் அப்படிச் செய்வார்களா?”

“அநீதி நடக்கும் போது அதை எதிர்ப்பதும் அழிப்பதும் மனிதரது கடமை. பகவானே கூட அநீதிகளும் அதர்மங்களும்

பெருகும் போது அவற்றை அழிப்பதற்காக அவதாரம் எடுப்பேன் என்று கூறியிருக்கிறார்."

தலைவன் ஏதோ பேசமுற்பட்ட போது மக்கள் குறுக்கிட்டு "தலைவரே! நீங்கள் வழக்கை விசாரித்தால் போதும். தேவையில்லாமல் பேசி நேரத்தை வீணடிக்க வேண்டாம். பேசாமல் செல்லுங்கள்" என்றார்கள்.

"நாளைக்கு ஆவணங்களோடு சபைக்கு வர வேண்டும். எச்சரிக்கை" என்று கூறிவிட்டு ஏதோ சாதித்து விட்டவனைப் போலக் கத்தையாய் இருந்த மீசையைத் தடவிய படிச் சென்றான் பச்சோந்தி.

அவன் சென்ற பின் "நீங்கள் எந்த ஊர் ஐயா?" என்று கேட்டார்கள் மக்கள்.

"யாதும் ஊரே யாவரும் கேளீர்."

"அப்படியென்றால்?"

"எல்லாமே எங்கள் ஊர்தான். எல்லோரும் எங்கள் உறவினர்கள் தான்."

"அது உண்மையென்றால் இங்கே உள்ள எட்டு காணி நிலத்தை உரிமை கொண்டாடி வந்தீர்களே. அது எப்படி? எல்லோரும் உறவினர்கள் என்றால் எதற்காக இந்தச் சண்டை?" என்று துடுக்காகக் கேட்டாள் ஓர் இளம்பெண்.

★ ★ ★



திருமங்கை ஆழ்வார்

மங்கை வேந்தன் லேசாகச் சிரித்து விட்டுச் சொன்னான்.

“எட்டு காணி நிலத்தை உழவர்களுக்கே கொடுத்து விட நாங்கள் சித்தமாக இருக்கிறோம். ஆனால் நிலம் எங்களுக்குச் சொந்தமானது என்பதை நிலை நாட்டாமல் அதைச் செய்ய முடியாது. நாங்கள் ஏமாளிகள் அல்லர் என்பதை நிரூபிக்கவே ஆவணங்களைக் கொண்டு வரச் சொல்லியிருக்கிறோம். அனேகமாக அவை நாளை வந்தவுடன் நியாயச் சபையில் சமர்ப்பித்து எங்கள் உரிமையை நிலை நாட்டுவோம். அடுத்த கணமே நிலத்தை உழவர்களுக்கே சாசனம் செய்து வைக்கிறோம். நாங்கள் கூறுவது சரிதானா?”

“மிகச் சரியான பேச்சு. எல்லோரும் ஏற்கிறோம். நீங்கள் நிலத்தைக் கையடக்கப் படுத்திக் கொண்டாலும் எங்களுக்கு மகிழ்ச்சியே. நீங்கள் மிகவும் உயர்ந்தவர்கள்” என்றனர் மக்கள்.

உழவர்களும் அவ்வாறே சொன்னார்கள்.

“அன்புள்ளம் கொண்ட குடிமக்களே உங்கள் பேச்சு உங்கள் உயர்வைத் தான் உணர்த்துகிறது. எங்களிடம் உயர்வு எதுவும் இல்லை.எல்லோரும் சென்று உங்கள் வேலையைத் தொடருங்கள். நிம்மதியாக உறங்குங்கள். காலையில் சந்திப்போம்” என்றான் மங்கை வேந்தன்.

எல்லோரும் அகன்றார்கள்.

“மன்னவா! தங்கள் திட்டம் என்ன?” என்று கேட்டார்கள் தோழர்கள்.

“இன்றிரவு நிலத்தில் புதைத்து வைத்திருக்கும் புத்தர் சிலையைத் தூக்கிக் கொண்டு விட வேண்டியது தான்” என்றான் மங்கை வேந்தன்.

"பிறகு எதற்காக மக்களிடம் இந்தப் பாச நாடகம்?" என்றார்கள் தோழர்கள்.

"நண்பர்களே! நாம் இதுவரை எல்லோரையும் ஏமாற்றித் தான் காரியத்தைச் செய்து வந்திருக்கிறோம்.பிறரை ஏமாற்றுவதென்பது எப்போதும் வெற்றி பெறுகிற விஷயமல்ல. அதுவும் மக்களை ஏமாற்றி விட்டுக் காரியத்தைச் சாதிப்பதென்பது மிகவும் சிரமமான காரியம். நமது திருட்டுத் தனம் ஒருவருக்குத் தெரிந்து விட்டால் ஊரே கூடி விடும். ஊர் கூடி விட்டால் எது வேண்டுமானாலும் நடக்கலாம். நம் உயிரும் மிஞ்சாது. ஆகவே தான் மக்கள் நம்மை நம்புவதற்கும் மதிப்பதற்கும் நாடகமாடினேன்."

"இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கிறதா?"

"நிச்சயமாக இல்லை. அதோடு நமது காரியங்களின் இலக்கு நமது மகிழ்ச்சியோ லாபமோ இல்லை. அரங்கன் ஆலயத் திருப்பணி மட்டுமே இலக்கு. இலட்சியம். அநகேமாக இந்த புத்தர் சிலைக்குப் பிறகு நமக்குப் பொருள் தேவைப் படாது. பொய்யும் புரட்டும் தேவைப்படாது. கொள்ளையும் கடத்தலும் தேவைப் படாது. யாரையும் ஏமாற்ற வேண்டிய அவசியமோ வஞ்சிக்க வேண்டிய அவசியமோ இருக்காது. மகாபாரதப் போரின் போது தன் உறவினர்களையும் ஆச்சார்யர்களையும் எதிர்த்துப் போரிட அர்ஜுனன் தயங்கிய போது கர்ம வினை பற்றியும் கடமை உணர்ச்சியைப் பற்றியும் அவனுக்குக் கீதையாக உரைத்தார் பகவான். அந்த எம்பெருமான் எனக்கும் கடமையைத் தான் உள்ளுக்குள் இருந்து உரைக்கிறான். தயங்காதே மற்றதை நான் பார்த்துக் கொள்கிறேன் என்கிறான். என்னது இயக்கமும் அவன். இயக்குபவனும் அவன். என்னிடம் இப்போது எந்த விதமான தயக்கமோ குற்ற உணர்ச்சியோ இல்லை. திருப்பணி முடிவடைந்து சம்ப்ரோக்ஷணம் நடக்கட்டும். அதற்குப் பிறகு எம்பெருமானின் திருவடிகளைச் சரணடைந்து பாவங்களுக்கான பிராயசித்தம் உண்டா என்று மன்றாடுகிறேன். எனது உயிர் தான் பிராயசித்தம் என்றால் அதை அவன் திருவடிகளிலேயே சமர்ப்பிக்கிறேன். நடந்த மற்றும் நடக்கும் குற்றங்களுக்கெல்லாம் நானே பொறுப்பாளி. நீங்கள் யாரும் இல்லை."

"மன்னவா! இது என்ன இப்படிச் சொல்லி எங்களையும் உங்களையும் பிரித்து விட்டீர்கள்? எங்களை வழிநடத்துபவர் நீங்கள். எங்களின் ஒளி விளக்கு நீங்கள். எங்கள் பாதையே நீங்கள் தான். எங்கள் வாழ்க்கையும் நீங்கள் தான். தங்கள் உயிரைப் பிராயச் சித்தமாக பகவான் கேட்டால் எடுத்துக் கொள்ளுங்கள்

எங்கள் உயிரை என்று எங்கள் பிராணனை அடுத்தடுத்துச் சமர்ப்பிப்போம்.”

“உணர்ச்சி வசப்படுவதற்கு இது நேரமில்லை தோழர்களே. எல்லாமே எம்பெருமானின் சங்கல்பத்தின் படி நடக்கிறதென்று கருதிச் செயல்படுங்கள். மக்களிடம் பேசி நம்மீது அவர்களுக்கு நம்பிக்கை வரும்படிச் செய்திருக்கிறேன். நம் மீது யாரும் சந்தேகிக்க மாட்டார்கள். கண்காணிக்கவும் மாட்டார்கள். ஆகவே இன்று நள்ளிரவு ஊர் உறங்கிக் கொண்டிருக்கும். இருளும் சூழ்ந்தபடி இருக்கும். நிலத்தில் இருக்கும் சிலையைத் தோண்டி எடுக்க வேண்டும். தோண்டிய தடம் தெரியாத வண்ணம் மூடி மறைக்க வேண்டும். சிலையை வைக்கோலால் மூடிக் கட்ட வேண்டும். புரவிகளின் மீது ஏற்றிப் புறப்பட்டு விட வேண்டும்.”

இரவு நேரம் வந்தது.

மங்கை வேந்தன் கருதியபடி மக்கள் அவரவர் வேலைகளைப் பார்த்துக் கொண்டு ஒடுங்கினார்கள். மங்கை வேந்தனும் அவனது தோழர்களும் என்ன செய்கிறார்கள் என்று யாரும் கவனிக்க முற்படவில்லை. உழவர்களுக்கும் அவர்கள் மீது நம்பிக்கையும் மரியாதையும் உண்டானபடியால் தத்தம் இல்லங்களில் உறங்கலானார்கள்.

நடுநிசி வந்தது. அதை உணர்த்து போல ஆலமரத்தில் அமர்ந்திருந்த ஆந்தை ஒன்று அலறியது. நிலப்பகுதியில் உலவிய இரண்டு நரிகளும் மங்கை வேந்தன் செய்யவிருந்த காரியத்தை எண்ணிப் புலம்புவது போல் ஊளைச் சத்தத்தை எழுப்பின. தெருநாய்கள் ஒன்றிரண்டு மக்கள் மங்கை வேந்தனின் பேச்சில் மயங்கிப் போய் உறங்கி விட்டதைப் பார்த்து ஏளனம் செய்வது போல் குரைத்து விட்டுப் படுத்துக் கொண்டன.

மங்கை வேந்தனின் தோழர்கள் நிலத்தில் இறங்கித் தோண்டினார்கள். புத்தர் சிலையை எடுத்தார்கள். வைக்கோலால் சுற்றிக் கட்டி மங்கை வேந்தன் அமர்ந்திருந்த ஆடல்மா புரவி மீது வைத்தார்கள். சிலையைத் தன் மீது சார்த்திக் கொண்ட மங்கை வேந்தன் கடிவாளத்தைப் பிடித்து இழுத்தான். ஆடல்மா பாய்ந்தது.

தோழர்கள் சிலையை எடுத்த இடத்தில் மண்ணைப் போட்டு மூடி விட்டுத் தத்தம் புரவிகளில் ஏறி மங்கை வேந்தனைப் பின் தொடர்ந்தார்கள்.

"போகிறார்களே! போகிறார்களே!" என்று கூக்குரலிடுவது போல் ஆந்தைகள் பல இரைந்தன.

மறுநாள் பொழுது விடிந்த போது அவர்களைக் காணாத மக்கள் சந்தேகப்பட்டுக் கூக்குரலிடவில்லை.

"நல்லவர்கள், வழக்கைத் தொடர விரும்பாமல் நிலத்தை உழவர்களுக்கே விட்டு விட்டு இரவோடு இரவாக சென்று விட்டார்கள். எங்கே இருந்தாலும் அவர்கள் நன்றாக இருக்கட்டும்" என்று வாழ்த்தவே செய்தார்கள்.

அதே சமயம் நிலம் சம்பந்தப் பட்ட வழக்கு முடிவுறாமலேயே இருப்பதாக இன்றைக்கும் கண்ணங்குடி மக்களால் கருதப் பட்டு வருகிறது. அது மட்டுமின்றி அவ்வூர் வழக்குகள் பல தீர்க்கப் படாமல் தோலா வழக்குகளாக நீடிப்பதாகவும் சொல்லப் படுகிறது.

★

கரம்னூருக்கு வந்தடைந்தான் மங்கை வேந்தன். பொன்னாலான புத்தர் சிலை உருக்கப்பட்டு நாணயங்களாக அடிக்கப் பட்டன. நிதிப் பிரச்சனை முற்றிலுமாக நீங்கிய படியால் மங்கை வேந்தன் நிர்மாணித்திருந்தபடி மதில் சுவர்களும், கோபுரங்களும், மண்டபமும், களஞ்சியங்களும் சிறப்பாகக் கட்டி முடிக்க இரண்டு ஆண்டுகள் ஆயின. மங்கை வேந்தன் கடம்பனூரில் தங்கி அரங்கன் திருப்பணியைத் தொடர்ந்து கவனித்தான். இலங்கையில் தனக்கு உதவிய ஈழத்தாமரையை நினைவூட்டும் விதமாக கோபுரம் ஒன்றில் அவளது சிலை ஒன்றையும் வைத்தான்.

திருப்பணிகள் முடிந்ததும் சம்ப்ரோக்ஷணம் நடை பெறுவதற்கான நாளும் கோளும் குறிக்கப் பட்டன.

தனக்குச் சேனாதிபதி பதவியை அளித்து, நாட்டைக் கொடுத்து அதன் மன்னனாக்கி, தனக்குத் திருமணத்தையும் செய்து வைத்து, ஆலயத் திருப்பணியில் நிதியுதவி அளித்து பல விதங்களில் உதவிய சோழமன்னனைக் கொண்டே சம்ப்ரோக்ஷணத்தை நிறைவேற்றினான் மங்கை வேந்தன். அந்த வைபவத்தையடுத்து ஒரு மண்டல காலத்திற்கு விசேஷ பூஜைகள் அரங்கனுக்கு நடைபெற்றன. ஆயிரக் கணக்கான மக்கள் காவிரியின் வெள்ளம் போல் திரண்டு பூலோக வைகுண்டத்தின் மகத்தான சம்ப்ரோக்ஷண வைபவத்தையும் மண்டல பூஜைகளையும் கண்டு ரசித்தனர். 'ரங்கா! ரங்கா' என்ற முழக்கம் திருவரங்கமெங்கும் எழுந்து திசையெல்லாம் எதிரொலித்தது.

திருப்பணி முடிவடைந்தது. சம்ப்ரோக்ஷணம் நடந்ததற்குப் பின் மங்கை வேந்தன் பரம வைஷ்ணவனானான். கோலம் வைஷ்ணவ கோலமாக மாறியது. அவனது தோழர்களும் வைஷ்ணவனானார்கள்.

★

குமுதவல்லியை முதன்முதலாகக் கண்டு காதல் வயப்பட்ட தாமரைத் தடாகத்தின் கரையில் அமர்ந்திருந்த மங்கை வேந்தன் இலங்கையில் நடந்ததிலிருந்து திருவரங்கத்தில் ஆலய சம்ப்ரோக்ஷணம் நடந்தது வரை எண்ணிப் பார்த்துக் கொண்டிருந்ததால் தன் பக்கத்தில் தாமரையைப் போலவே அமர்ந்திருந்த குமுதவல்லி "சுவாமி!" என்று அழைத்தது காதில் விழவில்லை.

"சுவாமி! என்று மீண்டும் அழைத்தாள் குமுதவல்லி.

நினைவலைகள் அறுந்து நிஜஉலகிற்கு வந்த மங்கை வேந்தன் "என்ன குமுதவல்லி?" என்று வினவினான்.

அவனது குரல் அதுவரை இல்லாத மதுரத்தைச் சுமந்திருந்ததைக் கண்டாள் குமுதவல்லி.

"எங்கே போய் விட்டீர்கள் சுவாமி?" என்று கேட்டாள்.

"போகக் கூடாத இடங்களுக்கெல்லாம் போய் விட்டேன். இனி நான் போகக் கூடிய இடம் ஒன்றே ஒன்று தான். அது தான் எம்பெருமானின் இருப்பிடம். வைகுண்டம்" என்றான் மங்கை வேந்தன்.

"பூலோக வைகுண்டத்தைத் தானே சொல்கிறீர்கள்?"

"அது தானே குமுதவல்லி இப்போது எனக்கு கிடைக்கக் கூடியது? பரமபதமான வைகுண்டம் எனக்கு எளிதில் கிட்டி விடுமா? அது என்ன கிட்டி விடும் இடத்திலா இருக்கிறது? எட்டுவதற்கு என்ன தகுதி வந்து விட்டது எனக்கு? நான் செய்த பாவங்கள் ஒன்றா இரண்டா? இவை எப்போது கழிவது? நான் உய்வடைவது?" என்று கேட்டான் மங்கை வேந்தன்.

"நீங்கள் எந்தப் பாவமும் செய்யவில்லை. மனம் தளராதீர்கள்" என்றாள் குமுதவல்லி.

"நான் செய்த பாவம் கணக்கில் அடங்காது குமுதவல்லி. அதுவும் உனக்கு நான் செய்த துரோகம் மிகப் பெரிது."

"துரோகமா?"

"ஆம். நான் நல்லவனே அல்ல. பெண்பித்தன். இளநங்கையர் பலரோடு கூடிக் களித்தக் கசடன்.* இளம் பருவத்தைக் காமத்தில் கழித்தவன் நான். அதையெல்லாம் மறைத்து உன்னை விரும்பினேன். திருமணமும் செய்து கொண்டேன். அது துரோகமல்லவா?"

"அதெல்லாம் இப்போது எதற்கு?"

"என் மீது உனக்குக் கோபமாகவும் வெறுப்பாகவும் இல்லையா குமுதவல்லி?"

"நடப்பவையெல்லாம் நமது காரியங்கள் என்றும் நாமே அதன் கர்த்தாக்கள் என்றும் நினைத்தால் தான் கோபமும் வெறுப்பும் எல்லாம் வரும். அனைத்தும் எம்பெருமானின் சங்கல்பம் என்று நினைத்தால் கோபமில்லை. தாபமில்லை. வெறுப்பு இல்லை. வேதனை இல்லை."

"எப்படிப்பட்ட உத்தமி நீ குமுதவல்லி. உன்னைப் போல என்னால் நினைக்க முடியாமல் போயிற்றே! உனக்கு துரோகம் செய்தது மட்டுமல்ல. உன்னை மணந்து பிறகு நான் கள்வனானேன்.** அறியாமையாலும் அறிந்தும் பல தீமைகளைச் செய்தேன். பொய் பித்தலாட்டம் என்று நாட்கள் தொடர்ந்தன. ஒருநாள் இருநாள் அல்ல. வருடங்கள். பல வருடங்கள்..."

"தாங்கள் வெறும் கருவி. இயக்கியது எம்பெருமான். அவனது லீலைகளில் நாம் யார் குறை காண்பதற்கு?"

"உனக்கொன்று தெரியுமா குமுதவல்லி? திருமணங் கொல்லையில் எம்பெருமானிடமே என் கைவரிசையைக் காட்டினேன். அப்போது பகவான் பெருங்கருணையுடன் எனக்குத் திருமந்திரத்தை ஓதி அருளினான். நானோ அந்த அஷ்டாட்சரத்தை அலட்சியப் படுத்தி விட்டு கொள்ளைகளில் தொடர்ந்து ஈடுபட்டேன்."

---

* "வாடினேன் வாடிவருந்தினேன் மனத்தால்
பெருந்துயர் இடும்பையில் பிறந்து
கூடினேன் கூடிஇளையவர் தம்மோடு
அவர்தரும் கலவியே கருதி
ஓடினேன்..."

திருமங்கை ஆழ்வாரின் பெரியதிருமொழி 1-1.

** "கள்வனேன் ஆனேன் படிறு செய்திருப்பேன்
கண்டவர் திரிதந்தேனேனேலும்..."

திருமங்கை ஆழ்வாரின் பெரியதிருமொழி 1-1-5.

"அவனது லீலைகள் முடிவடையும் வரை நீங்கள் அவ்வாறெல்லாம் நடந்து கொண்டீர்கள். தற்போது அவனது லீலைகள் முடிந்துவிட்டன. தனக்குத் தேவையான திருப்பணிகளை அவன் நிறைவேற்றிக் கொண்டான். உங்களிடம் இது வரை இருந்த பொய் விலகி மெய் வந்து மெய்யை அரவணைத்துக் கொண்டிருக்கிறது."

"உண்மைதான் குமுதவல்லி. தற்போது எனக்குள் நீக்கமற நிறைந்திருப்பவன் எம்பெருமான் மட்டுமே. அவன் உபதேசித்த அஷ்டாட்சர மந்திரத்தின் சக்தி எனக்கு விளங்கி விட்டது. நமோ நாராயணா என்று சொன்னால் நல்லது நடக்கும் குமுதவல்லி. அந்நாமத்தை உச்சரிப்போருக்கு உயர்ந்த குலத்தைக் கொடுக்கும். செல்வத்தைக் கொடுக்கும். துயரைப் போக்கும். மோட்சத்தைத் தரும். ஆற்றலைக் கொடுக்கும். தாயை விட அதிக நன்மையை அளிக்கும்.

"குலம் தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிலம் தரம் செய்யும் நீள்விசும்பு அருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலம் தரும் மற்றும் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயினசெய்யும்
நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன்
நாராயணா என்றும் நாமம்"*

மங்கை வேந்தன் தன் மணாளன் என்ற நிலையிலிருந்து மேம்பட்டு விட்டான் என்பதை உணர்ந்த குமுதவல்லி மகிழ்ச்சியும் பரவசமும் அடைந்தாள். நாராயணா என்னும் நாமத்தின் மகிமையை மங்கை வேந்தன் தன் தோழர்களுக்குச் சொன்னான். எம் பெருமான் தனக்குள் இருந்து கொண்டு அவன் மீதான பக்தியில் ஆழ்ந்து ஆழ்ந்து செல்லும் படி உரைப்பதாகச் சொன்னான். அரசனாக இருந்த தன்னை ஆழ்வானாக ஆக்கியிருப்பதாகவும் தன்னை நாடெங்கும் பயணம் செய்து திருமாலின் திருக்கோயில்களை மங்களாசாசனம் செய்யும் படிக் கட்டளையிட்டிருப்பவதாகவும் கூறினான்.

மங்கை வேந்தன் திருமங்கை ஆழ்வாராக மாறினார். தோழர்கள் சீடர்கள் ஆனார்கள்.

★★★

* திருமங்கை ஆழ்வார் பெரியதிருமொழி 1-1-9.

இரண்டாம் பாகம்



காஞ்சி மாநகர்

கல்வி மட்டுமின்றி கலைகளிலும் கரையிலா காஞ்சி மாநகரானது அரசகுமாரனைக் காண வந்த சிங்காரியைப் போல் சிறப்பிலும் கரையிலாக் கோட்டையாகக் காட்சியளித்தது. கோட்டையின் உள்ளேயேயும் வெளியேயும் ஆனந்தமும் ஆர்ப்பாட்டமும் கை கோர்த்திருந்தன. கோயில்களால் நிரம்பி வழிந்த அக்கோயில் மாநகரம் மாலை முகிழ்த்த வேளையில் மேலை வாயிலில் வீழ்ந்த கதிரவனின் பொன்னிறக் கிரணங்கள் தழுவியதால் இது காஞ்சி நகரமா காஞ்சன நகரமா என்று காண்போரை வியக்க வைத்தது. கோட்டைக்குள் இருந்த நகரம் அவ்வப்போது புதுப்பித்துக் கொண்டிருந்த காரணத்தால் தூசுபடாத கன்னிகையைப் போலவும் மாசுபடாத மலர் மஞ்சத்தைப் போலவும்* இருந்தது. நகரத் தெருக்களும், தெருக்களில் இருந்த மாடங்களும், மாளிகைகளும், கூடங்களும் கோபுரங்களும் தோரணங்களாலும் மலர்களாலும் அலங்கரிக்கப் பட்டிருந்தன. மக்கள் தெருக்களில் ஆடிப்பாடிக் கொண்டிருந் தார்கள். உவச்சர்கள் பல்வேறு இசைக்கருவிகளை இசைத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களையெல்லாம் பாராட்டுவதுபோல் தென்றல் காற்று அவர்களைத் தழுவிச் சென்றது.

அக்காலத்தில் தமிழகத்தில் இருந்த பல கோட்டைகளில் காஞ்சி நகரக் கோட்டை பிரம்மாண்டமாகவும் பிரசித்தமாகவும் இருந்தது. பல்லவர்கள் ஆட்சி மலரத் தொடங்கியதுமே வல்லவர்கள் ஆட்சி தொடங்கிவிட்டதென்று நல்லவர்களும் நல்லன அல்லாதவர்களும் உணரத்தகுந்த வகையில் கோட்டை பலப்படுத்தப்பட்டது. பாதுகாக்கப்பட்டது.

சக்கரவர்த்தி ஹர்ஷவர்த்தனரையே தோற்கடித்த சாளுக்கிய சத்யாச்ரியனான புலிகேசி வாதாபியிலிருந்து காஞ்சியை நோக்கிப் படையெடுத்து வந்தபோது கோட்டையைக் கைப்பற்றப் பலகாலம்

---

* இந்த வாக்கியத்தை மாசுபடாத கன்னிகையைப் போலவும் தூசு படாத மலர் மஞ்சத்தைப் போலவும் என்று மாற்றியும் வாசிக்கலாம்.

ஆகியும் கைப்பற்ற முடியவில்லை என்பதிலிருந்தே அதன் பலத்தைப் பற்றிச் சந்தேகம் வேண்டியதில்லை. காஞ்சியானது இரண்டு முறை சாளுக்கியர் வசம் சென்றாலும் கோட்டையானது தாக்குதலுக்கு இலக்காகி சேதாரமடையவில்லை. எதிரிகளும் அக் கோட்டையை விரும்பியபடியால் அக்கோட்டையையும் சரி அவற்றுக்குள் இருந்த கலைபொக்கிஷங்களான ஆலயங்களையும் சரி அழிக்க முற்படவில்லை. போற்றிப் பாதுகாக்கவே செய்தார்கள். எனவே பல்லவர் காலத்தில் காஞ்சிக் கோட்டை கண்கவர் கோட்டையாகவே விளங்கியது.

அக்கோட்டையின் நாற்புர மதில்கள் மீது வீரர்கள் முரசுகளையும் தாரைத் தப்பட்டைகளையும் முழங்குவதற்குத் தயாராக வைத்திருந்தார்கள். வடக்கு வாயிலில் பிரமுகர்கள் பலர் மாலைகளோடு காத்திருந்தார்கள். மகாமந்திரியான பிரம்மாதிராஜர், கடிகையின் தலைவர் தரணிகண்ட போசர், முத்தரையத் தலைவரான காடக முத்தரையர், முன்னாள் சேனாதிபதியான மல்லவடி அரையர், காரியஸ்தரான ஜேஷ்டபாத சோமயாஜி ஆகியோர் மாலைகளோடு காத்திருந்ததைக் கண்ட அரபுநாட்டு யாத்ரீகரான சுலைமானுக்கு வரப்போவது யாராக இருக்கும் என்பது கேள்வியாக இருந்தது.

ராஷ்டிர கூட நாட்டிலிருந்து இரண்டு நாட்களுக்கு முன்பாகத் தான் அவர் காஞ்சிக்கு வந்திருந்தார். அரபு நாட்டிலிருந்து ராஷ்டிர கூடத் தலைநகரான மான்ய கடகத்திற்கு வந்து பலமாதங்கள் தங்கியிருந்த அவரை ராஷ்டிரகூட மன்னன் வைரமேகன் தான் காஞ்சிக்கு அனுப்பியிருந்தான்.

“காஞ்சியில் என்ன இருக்கிறது?” என்று கேட்டார் சுலைமான்.

“எல்லாம் இருக்கிறது” என்றான் ராஷ்டிர கூட மன்னன்.

“இது என்ன பதில்? இதை வைத்துக் கொண்டு காஞ்சிக்கு எப்படிச் செல்வது?” என்று கேட்டார் சுலைமான்.

“ராஷ்டிர கூடத்தில் இல்லாதவை எல்லாம் காஞ்சியில் இருக்கிறது. சிறந்த நிர்வாகம், சிறந்த கலை, சிறந்த படை, சிறந்த அதிகாரிகள் என்று அங்கே இருப்பதெல்லாம் சிறந்தவை தான். அங்கே இருக்கும் மன்னன் எல்லாவற்றையும் விடச் சிறந்தவன்” என்றான் ராஷ்டிர கூட மன்னன்.

“யான் அவன்?”

“பல்லவ மல்லன். நந்திவர்மன். எனது மருமகன்”

“மருமகனா?”

"ஆம். எனது மகள் ரேவாதேவியின் கணவன்."

"அதனால் தான் காஞ்சியை உயர்வாகச் சொல்கிறீர்களா?"

"நீங்கள் நேரில் போய்ப் பாருங்கள். நான் சொல்வது பொய்யா உண்மையா என்று தெரிந்துவிடும்".

இவ்வாறு கூறிய ராஷ்டிர கூட மன்னன் அறிமுக ஓலை யொன்றையும் தயாரித்து அராபிய யாத்ரீகர் சுலைமானிடம் கொடுத்து காஞ்சிக்கு அனுப்பியிருந்தார்.

சுலைமானோ அறிமுக ஓலையைப் பயன்படுத்திக் கொள்ள அவசரம் காட்டவில்லை. அதோடு காஞ்சியில் பல்லவ மன்னன் நந்திவர்மன் இல்லை என்பதும் தெரிந்ததால் அறிமுக ஓலையைப் பத்திரப்படுத்திக் கொண்டு அதை யாரிடமும் காட்டாமல் சாதாரண யாத்ரீகனைப் போலவே இரண்டு நாட்களுக்குக் காஞ்சியில் உலவினார்.

அங்கே அவர் கண்ட காட்சிகள் கண்கொள்ளாக் காட்சி களாகவும் கண்ணேறு படத்தகுந்த காட்சிகளாகவும் இருந்தன. அனைத்தும் வேறு எதனோடும் ஒப்பிட முடியாத சிறப்புகளாக - சாட்சிகளாக விளங்கினன. ராஷ்டிர கூட மன்னன் கூறியிருந்த சிறப்புகள் எல்லாம் வெறும் தூசு அளவுதான் என்பதையும் நகரத்தின் சிறப்பு தேவலோகத்தையே நிகர்க்கக் கூடியது என்பதைக் காஞ்சிக்குள் பிரவேசித்த பிறகே உணர்ந்தார் சுலைமான்.

ஆங்காங்கே மக்களிடம் பேச்சுக் கொடுத்தார். பாங்காக பதில் சொன்னார்கள். அனைவரிடமும் இன்முகமும் இன்சொல்லுமே இருந்தன. இடும்பையும் இறுக்கமும் சாயலாகக் கூட இல்லை. கடிகை என்னும் சர்வகலாசாலைக்குச் சென்றார். அங்கே கற்பிக்காத கலைகளே இல்லை என்பதைக் கண்டபோது சர்வகலாசாலை என்றால்இப்படித் தான் இருக்க வேண்டும் என்றும் இதில் பயின்று வருபவன் சர்வகலாவல்லவனாக இருப்பான் என்றும் நினைத்தார். அதுபோன்றதொரு சர்வகலாசாலையை அவர் தனது அரபுநாட்டிலும் காணவில்லை. பாரத நாட்டில் அதுவரை விஜயம் செய்த பகுதிகளிலும் காணவில்லை.

எதற்கும் சர்வகலாசாலை உபாத்தியாயர் ஒருவரிடம் "ஐயா! இங்கே காமக்கலை பயில்விக்கப்படுகிறதா?" என்று கேட்டார்.

"சொல்லித் தெரிவதில்லை மன்மதக் கலை. அது பருவத்தில் தானாக வரும். அக்காலத்தில் முனிவர்கள் காமக்கலையைப் பற்றி பவித்திரமான உணர்வோடு ஓலை எழுதி வைத்திருக்கிறார்கள்.

அதைப் படிக்கலாம். ஆனால் காம வகுப்புகள் இக் கடிகையில் கிடையாது. அந்த அனுபவம் வேண்டுமென்றால் பரத்தையர் பகுதி இருக்கிறது. அங்குச் சென்றால் அது குறித்து அனைத்து விஷயங்களையும் அனுபவப் பூர்வமாக அறிந்து கொள்ளலாம்" என்றார் உபாத்தியாயர்.

உபாத்தியாயரின் பதில் திருப்திகரமாக இருந்தது சுலைமானுக்கு.

வேறொரு உபாத்யாயரைப் பார்த்து "கடிகையைப் பற்றிக் கேள்விப் பட்டேன். இங்கு ஒரு முட்டாளை நான் பார்க்க வேண்டுமே! காட்ட முடியுமா?" என்று கேட்டார்.

"இதற்கு நாங்கள் பதில் கூறுவது நாகரிகமாக இருக்காது. ஆகவே நிர்மலமான தண்ணீரில் உங்களைப் பார்த்துக் கொள்ளுங்கள். உங்கள் கேள்விக்குப் பதில் கிடைக்கும்" என்றார் ஆசிரியர்.

முட்டாள் என்று தன்னைத் தான் ஆசிரியர் குறிப்பிடுகிறார் என்பதை உணர்ந்து கொண்டாலும் சுலைமான் அவர் மீது கோபப் படவில்லை. கடிகையில் முட்டாள்கள் இல்லை என்பதையே ஆசிரியரது பேச்சு உணர்த்தியதாக உணர்ந்த அவர் "உங்கள் பேச்சிற்கும் நாகரிகத்திற்கும் நன்றி ஐயா" என்று தெரிவித்துக் கொண்டு கடிகையை விட்டு வெளியே வந்தார்.

ஓரிடத்தில் மக்கள் சிலரிடம் பேச்சுக் கொடுத்த போது "உங்கள் மன்னர் கோழை என்று கேள்விப்பட்டேனே உண்மையா?" என்று கேட்டார்.

"குருடர்களால் காட்சியின் அழகை உணர முடியாது. செவிடர்களால் இசையின் இனிமையை அறிய முடியாது. முடமானவர்கள் கூட மலைமீது ஏறலாம். முட்டாள்களால் ஆகக் கூடியது ஒன்றுமில்லை. உங்கள் கருத்தும் அப்படித் தான்" என்றார்கள் மக்கள்.

சுலைமான் அசந்து போனார்.

எங்கே போனாலும் –

யாரை விசாரித்தாலும் –

இன்ப அதிர்ச்சியே கிடைத்தது அவருக்கு.

இவ்வளவு காலமாகக் காஞ்சிக்கு வராமல் போனது காலத்தை வீணாக்கி விட்டது போல் தோன்றியது அவருக்கு.

இதற்கிடையில் காஞ்சி விழாக் கோலம் பூண்டு ஆரவாரப் பட்டபோது யாரை எதிர்பார்த்து இந்தக் குதூகலம்,

கொண்டாட்டம் என்பதைப் புரியாமல் அந்தணர் ஒருவரிடம் கேட்டபோது அதற்கு அந்தணர் கூறிய பதில் வினோதமாக இருந்தது.

"என்ன சொல்கிறீர்கள் அந்தணரே? பிழையாகப் பேசி விட்டீர்கள் என்று நினைக்கிறேன்" என்றார் சுலைமான்.

"இல்லை ஐயா. சரியாகத் தான் சொல்கிறேன். எங்கள் மாமன்னர் நந்தி வர்மப் பல்லவர் பெண்ணாகடப் போரில் பாண்டியனிடம் தோற்றுவிட்டுக் காஞ்சிக்குத் திரும்புகிறார். அவரை வரவேற்கத்தான் இந்த ஆரவாரம். இந்தக் கொண்டாட்டம். இந்தக் குதூகலம்" என்றார் அந்தணர்.

"சுத்தப் பைத்தியக்காரத்தனமாக இருக்கிறதே! தோற்றுப் போய்த் திரும்பும் மன்னனுக்கு யாராவது வரவேற்பு விழா நடத்துவார்களா?" என்று கேட்டார் சுலைமான்.

"அப்படி நடத்தக் கூடாது என்று எங்காவது விதி இருக்கிறதா?"

"நான் எங்கேயும் பார்த்ததில்லை".

"காஞ்சியில் பாருங்கள்".

"பைத்தியக்காரத் தனமாகத் தோன்றுகிறதே!"

"நீங்கள் அராபியரா?"

"ஆமாம்"

"அராபியரே! மன்னர்களுக்குப் போர் சகஜம். போரில் வெற்றியும் தோல்வியும் சகஜம். அவை மட்டுமே மன்னனை மக்களுக்கு அடையாளம் காட்டுவதில்லை. அவற்றுக்கு அப்பால் நிறைய அம்சங்கள் இருக்கின்றன. அவைதான் மக்களின் நல்வாழ்விற்கும் செழிப்பிற்கும் பெருமைக்கும் வழி வகுக்கின்றன. அவைதான் மக்களுக்கு முக்கியம். இடையில் வரும் போர் முக்கியமல்ல. அதில் வரும் தோல்வி முக்கியமல்ல. வெற்றி வந்தாலும் தோல்வி வந்தாலும் மன்னர் மன்னர்தான். எந்த நேரமானாலும் மக்கள் மன்னர் பக்கம் தான். அவர்கள் மன்னரின் தோல்வியால் துவளமாட்டார்கள். மன்னரையும் துவளவிட மாட்டார்கள். இது காஞ்சியின் சிறப்பு. இச் சிறப்பை நீங்கள் எங்கேயும் காணமுடியாது".

"என்னால் நம்பமுடியவில்லை அந்தணரே."

"எங்கள் மன்னரைப் பற்றி மேலும் சொன்னால் உங்களுக்குப் பைத்தியம் பிடித்தாலும் பிடிக்கலாம்."

"என்ன சொல்கிறீர்கள் நீங்கள்?"

,"எங்கள் மாமன்னர் ஆட்சிக்கு வந்து ஐம்பது ஆண்டுகள் ஆகப் போகின்றன. இதுவரை பலபோர்கள் நடைபெற்றுள்ளன. ஒன்றில் கூட அவர் வெற்றி பெற்றதில்லை."

"இது உண்மையா?"

"கடல்கடந்து எங்கோ இருந்த நாட்டிலிருந்து பல்லவ நாட்டை ஆள்வதற்குத் தனது பன்னிரண்டாவது வயதில் காஞ்சிக்கு வந்தவர் நந்திவர்மர். காஞ்சிக்கு வந்தபோது இங்கிருந்த அரச வம்சத்தவர்கள் சார்பாக பல்லவடி அரையர் யானைப் படைகளோடு காஞ்சியில் நுழைய முடியாதபடி எதிர்த்தார். நந்திவர்மரால் அவரை வெற்றி பெறமுடியவில்லை."

"பிறகு?"

"சமரசமுயற்சி நடந்து அதன் பிறகுதான் அரியணையில் ஏறினார். அரியணை ஏறிய சிலகாலத்திற்குள்ளாகவே சாளுக்கிய விக்கிரமாதித்தன் காஞ்சியின் மீது படையெடுத்தான். அவனைச் சந்திக்க முடியாமல் நந்திவர்மர் காஞ்சியை விட்டு வெளியேறித் தெற்கில் சென்றார். அங்கே பாண்டியர் படையுடன் போரிட்டுத் தோற்றார். சேனாதிபதி உதயசந்திரன் வந்து அவரை மீட்கும் படி ஆயிற்று."

"பிறகு?"

"சாளுக்கிய விக்கிரமாதித்தன் காஞ்சியை விட்டு வெளி யேறும் வரை நந்திவர்மர் ராஷ்டிர கூட மன்னரது நாட்டில் தஞ்சமடைந்திருந்தார். பிறகு காஞ்சிக்கு வந்தார். காஞ்சிக்கு வந்து பல ஆண்டுகளுக்குப் பிறகு விக்கிரமாதித்தனின் மகன் கீர்த்தி வர்மனுடன் போர் நடந்தது. அதிலும் நந்திவர்மர் தோற்றார். தற்போது பெண்ணாகடத்தில் பாண்டியனோடு போர் நடைபெற்றது. அதில் தோல்வியடைந்து திரும்புகிறார்."

"இப்போது புரிகிறது. மக்களின் ஆரவாரமும் ஆர்ப்பாட்டமும் நியாயமானவை தான். உங்கள் மன்னருக்குத் தோல்வி தானே வாடிக்கையாக இருக்கிறது? அதைத்தானே அவர் மக்களுக்குத் தருகிறார்! மக்களுக்கு வேறு வழியில்லாமல் அவரது தொடர் தோல்விகளைக் கொண்டாடுகிறார்கள். அவர்கள் பாவம்."

அந்தணர் லேசாகச் சிரித்துவிட்டு "நீங்கள் அராபியர் என்று தெரிகிறது. இங்கு எதற்காக வந்தீர்கள்?" என்று வினவினார்.

"நான் அரபுநாட்டு யாத்ரீகன். பலநாடுகளுக்கு விஜயம் செய்து அந்நாட்டின் குறைநிறைகளைக் கண்டு சுட்டிக் காட்டுவேன். பதிவு செய்வேன்" என்றார் சுலைமான்.

"செல்லும் நாட்டில் மன்னர்களின் போர்கள் பற்றித் தான் உங்கள் கவனமும் கருத்தும் இருக்குமா? அதை வைத்துக் கொண்டு தான் மன்னர்களையும் மகிமைகளையும் முடிவுகட்டுவீர்களா? அது தான் உங்கள் அளவுகோலா? அப்படியிருந்தால் உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்ளுங்கள். இங்கே பலமாதங்கள் தங்கியிருந்து போரைத் தவிர இதர அம்சங்களில் கவனத்தைத் திருப்புங்கள். அயல்நாட்டு யாத்ரீகர்களுக்கு அதுதான் முக்கியம். சிறப்பு" என்று கூறிவிட்டு அகன்றார் அந்தணர்.

அடுத்த சிலநாழிகைகளில் காஞ்சி அமளிதுமளிப்பட்டது. கோட்டை மதில்கள் மீதிருந்த பேரிகைகளும் தாரைத் தப்பட்டைகளும் முழங்கின. வேட்டுகள் அதிர்ந்தன. தனது படைகளோடு புரவியில் வந்து நின்ற பல்லவ மன்னன் நந்திவர்மன் எல்லோரையும் நோக்கிக் கைகளை அசைத்தான்.

கோட்டை வாசலில் நிறுத்தப் பட்டிருந்த யானைகள் வரவேற்பது போல் பிளிறின.

அதையடுத்து முதலமைச்சர் முதல் அனைத்துப் பிரமுகர்களும் அவனது கழுத்தில் மாலைகளைச் சூட்டி வரவேற்றார்கள்.

"இந்த மகத்தான வரவேற்புகளுக்காகவும் ஆரவாரக் கொண்டாட்டங்களுக்காகவும் நான் தொடர்ந்து தோல்வி அடைந்து வருகிறேன் போலிருக்கிறது" என்று சொல்லிச் சிரித்தான் மன்னன்.

கோட்டைக்குள் நுழைந்து நகர வீதிக்குள் பிரவேசித்தபோது மக்கள் ஆர்ப்பரித்து மலர்களைத் தூவினார்கள். அப்போது மன்னனின் தலைக்கு மேலே வானத்தில் குடை பிடிப்பது போல் நாரைகள் நூற்றுக் கணக்கில் ஒருங்கே சேர்ந்து பறந்த போது அந்த அதிசயக் காட்சியைக் கண்ட மக்கள் பரவசத்துடன் குரல் கொடுத்தார்கள். "வாழ்க மன்னர் வாழ்க மன்னர்" என்று முழங்கினார்கள்.

"மன்னனது பலநடவடிக்கைகள் எனக்குப் புரியவில்லை என்பது உண்மைதான். ஆனால் மன்னன் காஞ்சிக்குள் பிரவேசிக்கும் போது பறவைகள் குடைபிடிக்கும் அதிசயம் எனக்குப் பிடிபடவே இல்லை. யுகபுருஷர்களுக்கு இப்படிப்பட்ட அதிசயங்கள் நேரும் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். நம் நந்திவர்மன்..." என்று ஏதோ இழுத்தார் மகாமந்திரியான பிரம்மாதிராஜர்.

"நமது மன்னர் யுகபுருஷரல்ல என்பது தானே தங்கள் கருத்து? அவர் யுகபுருஷராக இருக்க வேண்டிய அவசியமில்லை.

அவரைப் பற்றிய ஏதோ ஒரு விசேஷத்தை நமது பட்ட பட்டாரகர் அறிந்திருக்கிறார். அந்த விசேஷம் காரணமாகத் தான் மன்னருக்கு இத்தகைய அதிசயம் நடக்கிறது" என்றார் காடக முத்தரையர்.

இதே நேரத்தில் காஞ்சிக்கு வடக்கே சில காத தூரத்தில் இருந்த திருமால்பேறு என்னும் கிராமத்தில் அடர்ந்த கானகத்தில் இடிந்துபோன மண்டபத்தில் அமர்ந்திருந்த மனிதனோ "பல்லவ மன்னனுக்கு நிகழ்வது அதிசயமல்ல. துர்ச்சகுனம். அடுத்தடுத்து தோல்விகளைக் காணும் அவன் அடுத்து காணப் போவது கோரமரணம் தான். அதையளிக்கப் போவது நானாகவும் இருக்கலாம்" என்றான்.

★★★



திருமால்புரம்

காஞ்சிபுரம் - அரக்கோணம் ரயில் தடத்தில் திருமால்பூர் ரயில் நிலையத்திலிருந்து ஐந்து கிலோமீட்டர் தொலைவில் உள்ள திருமால் பேறு என்னும் திருமால்புரத்தில் இருந்த மணிகண்டேசுரர் என்னும் சிவாலயத்திலிருந்து எழுந்த கண்டாமணியோசையும், முரசொலியும், வேகமாக ஒலித்து நின்றதும் வேதியர்களின் வேத ஒலி தொடங்கி காற்றில் கலந்து வந்த விதமானது இந்த உலகை ரட்சிப்பது வேதங்களும் வேதநாயகர்களும்தான் என்று அறிவிப்பது போலிருந்தது.

திருமால் ஒரு சந்தர்பத்தில் தனது சக்ராயுதத்தை இழந்தார். அதை மீட்க மணிகண்டேஸ்வரரை வேண்டிக் கொண்டு ஆயிரம் தாமரை மலர்களால் அர்ச்சனை செய்தார். அப்போது ஒரு மலர் குறைந்ததால் தாமரைக் கண்ணனான திருமால்* தனது ஒரு கண்ணைப் பறித்து பூவுக்குப் பதிலாக அர்ச்சனை செய்தார். சிவபெருமான் மனம் உவந்து திருமாலுக்குச் சக்ராயுதத்தைப் பெற்றுத் தந்தார். ஆக திருமால் தன் சக்கரத்தை மீண்டும் பெறும் பேற்றைப் பெற்றதால் அவ்வூர் திருமாற்பேறு என்றும் திருமால்புரம் என்றும் வழங்கப்பட்டதாக மணிகண்டேஸ்வரர் ஆலய தலபுராணம் கூறுவதை ஓதுவார்கள் ஓதி ஓதிப் பெரிதாக ஊதி வந்த காரணத்தால் சைவர்களும் சிவபிராமணர்களும் அந்தத் தலத்தை மிகஉயர்வாகக் கருதி வழிபட்டார்கள்.

அந்தத் தலபுராண வரலாற்றை மெய்ப்பிக்கும் விதமாகத் திருமால்புரத்தில் உள்ள திருமாலின் உற்சவ மூர்த்தியின் கையில் தாமரையும், கண்ணும் இருக்கின்றன.**

அச் சிவாலயத்தின் பக்கத்தில் ஓடிய பாவியாற்றங்கரையில் ஆலமரத்தின் கீழே விசாரணைசபை ஒன்று தினமும் இயங்கி வந்தது. ஆலயத்திற்குத் தானமாக வழங்கப்பட்ட நிலங்கள் பல இருந்தன. ஆலய நிர்வாகத்திற்கும் பராமரிப்பிற்குமாக

---

* தாம்வீழ்வா எமன்தோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு. - திருக்குறள் 1103

** பக்கம் 5 'திருமால்புரம்' By ப. பூபாலன்

தனவந்தர்கள் நிலங்களையும் தங்கள் சொத்துகளையும் வழங்கியிருந்தார்கள்.

சமீபகாலமாக அந்தச் சொத்துகள் சம்பந்தமாக வரி ஏய்ப்பு நடப்பதாகப் புகார்கள் வந்து கொண்டிருந்ததால் வேலூர் கோட்டத்துத் தலைவர் அது குறித்து விசாரிக்க குழு ஒன்றை அனுப்பியிருந்தார்.

பிரம்மதேயக் கிழவர்கள், நாட்டார்கள், நகரத்தார்கள் எனப் பலரும் அடங்கிய விசாரணைக் குழு வரிஏய்ப்பு விவகாரத்தை விசாரித்தது.

விசாரணைக் குழுவினரோடு வேலூர் கோட்டத்தின் முதன்மை அதிகாரி, நடுவிருக்கை ஆனத்தி, வாய்க் கேழ்வி, ஓலை எழுதும் ஓலை நாயகம், புரவு வரி அதிகாரி, வரி மந்திர், வரிபொத்தகக் கணக்கு அதிகாரி ஆகியோரும் வந்திருந்தார்கள்.*

அன்று விசேஷமாகக் கோட்டத்தலைவன் கொடுமுடியே நேரில் வந்து விசாரணை செய்தான்.

வந்திருந்த வழக்குகள் முழுவதும் வரி ஏய்ப்பு வழக்கு களாகவே இருந்தன.

மொத்தம் வந்த பன்னிரண்டு வழக்குகளில் மக்கள் யாரும் சம்பந்தப்படவில்லை. கோயிலில் பணிபுரியும் சிவ பிராமணர்களே சம்பந்தப் பட்டிருந்தார்கள். அதிர்ந்து போன கொடுமுடி அங்கே கூடியிருந்த அவையோரைப் பார்த்தான். அவர்களது முகம் இறுகியிருந்தது.

"இது மிகவும் வெட்கக் கேடானது. நீங்களெல்லாம் சிவனுக்குச் சேவைசெய்யும் அடியார்கள். அதை நல்லபடியாக நாள் தவறாமல் செய்வதற்காகத் தான் உங்களுக்கு நிலங்கள் வழங்கப்பட்டன. அவற்றுக்கு ஆண்டுதோறும் வரி கட்ட வேண்டும் என்பது வரையறுக்கப்பட்ட விதி. அந்தத் தொகையைக் கொண்டு ஆலய விழாக்கள் நடை பெறவேண்டும் என்பதே நடைமுறை. ஒன்றுக்குப் பத்துப் பேராக இருந்து கொண்டு நாலரை ஆண்டுகளாக ஒரு குன்றிமணி அளவுகூட வரியாகச் செலுத்தாமல் ஏய்ப்பு செய்து ஏமாற்றியிருக்கிறீர்கள். நீங்கள் கோயில் பணிகளைச் செய்பவர்கள் மட்டுமல்ல. பிராமணர்கள். அந்தணர்கள். அந்தணர் என்போர் அறவோர் என்பது ஆன்றோர் வாக்கு. நீங்களோ அதை அடியோடு மறந்து விட்டு குறையோராக நடந்து கொண்டிருக்கிறீர்களே தவிர மறையோராக நடந்து கொள்ளவில்லை. இறைவனுக்கு

* இவர்களெல்லாம் தொண்டை மண்டலக் கோட்டங்களில் இருந்து வந்த பல்வேறு அதிகாரிகள். இவர்களைப் பற்றியும் வரி ஏய்ப்பு விசாரணையைப் பற்றியுமான செய்திகள் திருமால்புரக் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

உரிய திரையே வரி. அதில் தகிடுதத்தம் செய்பவர்கள் யாராக இருந்தாலும் தண்டனைக்குரியவர்கள் தான். நீங்கள் செலுத்த வேண்டிய தொகைக்கு இருமடங்கு தொகையை அபராதமாக விதிக்கிறேன். வரித் தொகையை இரண்டு மாதங்களுக்குள் செலுத்தவேண்டும். அது வரையில் நீங்கள் ஆலயப்பணியில் ஈடுபடக் கூடாது. இரண்டு மாதங்களில் தொகையைச் செலுத்தாவிட்டால் நீங்கள் கைது செய்யப்பட்டுக் காஞ்சிச் சிறைக்கு அனுப்பப் படுவீர்கள்" என்றான்.

அப்போது புறா ஒன்று பறந்து வந்து அவனது மடியில் விழுந்தது. அதன் குறுங்கால்களில் இருந்த குறு ஓலையை எடுத்துப் படித்தான் கொடுமுடி. அதில் மயில் என்று மட்டும் எழுதியிருந்தது. அதைக் கண்டதும் அவன் முகம் மாறியது. "இவள் ஏன் இங்கு வந்தாள்?" என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்டான்.

பிறகு ஓலையை இடுப்பில் செருகிக் கொண்டு புறாவைப் பறக்க விட்டான்.

அவையோரைப் பார்த்து "நான் விதித்த தண்டனை சரிதானா?" என்று வினவினான்.

"மிகவும் சரியான தண்டனை. நாங்களாக இருந்தாலும் இதைத் தான் விதித்திருப்போம். தர்ம தேவதையைப் போல திடீரென நீங்களே வந்து தீர்க்கமான தண்டனையை வழங்கி யிருக்கிறீர்கள். கோட்டத் தலைவர் என்றால் இப்படித் தான் இருக்கவேண்டும்." என்று பாராட்டினார் பிரம்மதேயக் கிழவர்.

"எல்லோரும் கலைந்து செல்லலாம். விசாரணை முடிந்து விட்டது" என்றான் கோட்டத்தலைவன்.

மணியோசை எழுப்பப்பட்டது.

எல்லோரும் கலைந்து சென்றனர்.

நேரம் மாலை நேரம் முடிவடையும் நிலையில் இருந்ததால் திருமால்புரம் எங்கும் தெருவிளக்குகளும், திருவிளக்குகளும், பெரு விளக்குகளும் ஏற்றப்பட்டன. எல்லா விளக்கும் விளக்கல்ல. நானே என்றைக்கும் உள்ள நந்தா விளக்கு என்று ஆலயத்து இறைவன் கூறுவது போல மணிகண்டேஸ்வரர் கோயிலில் மணிக்கதவங்கள் திறக்கப்பட்டதால் கலகலவென்று சத்தங்கள் எழுந்தன.

விளக்குகளைப் பற்றியோ மணிக்கதவங்களின் ஒலிகளைப் பற்றியோ கவலைப் படாமல் ஊரின் தென் எல்லைப் பகுதியில் இருந்த பரத்தையர் வீதிக்குச் சென்றான் கோட்டத் தலைவன்

கொடுமுடி. தனவந்தர்களும் பிரமுகர்களும் பரத்தையர் இல்லங்களுக்குச் செல்வது அக்காலத்தில் மரபாகவே இருந்த படியால் கோட்டத் தலைவன் அங்கே சென்றது குறித்து யாரும் தவறாகக் கருதவில்லை.

அந்த வீதியின் கடைசி இல்லத்திற்குச் சென்ற கொடுமுடி கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றதும் கதவை மூடித் தாளிட்டார். நாய் ஒன்று வெளியே குரைத்தது.

உள் கட்டிற்கு வந்த கோட்டத் தலைவன் சமையல் கூடத்திற்குச் சென்றான். அங்கே விதவிதமான பலகாரங்கள் தட்டுகளில் வைக்கப்பட்டிருந்தன. அவற்றை ஒரு வெட்டு வெட்டிய கோட்டத் தலைவன் குவளை நிறைய குளிர்ந்த நீரைக் குடித்து விட்டுப் பெரிதாக ஏப்பம் விட்டான்.

"இவளே ஒரு விருந்து. இவள் தயாரித்து வைக்கும் பலகாரமும் ஒரு விருந்து. இங்கே வந்து விட்டால் எப்போதும் இரண்டு விருந்துகள் தான்" என்று சொல்லிக் கொண்டு உள்ளறைக்குச் சென்று கதவை லேசாகத் தட்டினான்.

யாரும் திறக்கவில்லை. அவனாகக் கதவை அழுத்தினான். கதவு திறந்து கொண்டது.

உள்ளே இருட்டாக இருந்தது.

அறையைப் பிரகாசப் படுத்தும் அகல் விளக்குகள் அணைந் திருந்தன.

அவற்றை ஒவ்வொன்றாக ஏற்றினான் கோட்டத் தலைவன்.

அறை பிரகாசப்பட்டது.

அறையில் இருந்த கட்டிலில் வெண்பட்டு மஞ்சத்தில் படுத்திருந்தாள் அவள்.

அவளைக் கட்டிலோடு சேர்த்துக் கட்டியிருந்தது.

அவள் குப்புறப் படுத்திருந்தநிலையில் அவ்வாறு கட்டப் பட்டிருந்ததைக் கண்ட கோட்டத் தலைவன். "மயிலழகி! மயிலழகி!" என்று குரல் கொடுத்தான்.

அவளிடமிருந்து பதில் வரவில்லை.

கட்டிலருகே சென்று கட்டுகளை அவசரம் அவசரமாக அவிழ்த்தான்.

அவள் அப்படியே படுத்திருந்தாள். அவளைக் காலி லிருந்து உச்சந்தலை வரை ஒருமுறை பார்த்துவிட்டு அவளைப் புரட்டினான்.

அவளது கண்கள் அரைவாசித் திறந்திருந்தன.

"உன்னை யார் இப்படிக் கட்டியது?" என்று கேட்டார் கோட்டத் தலைவன்.

"பணிப்பெண்" என்றாள் மயிலழகி மெல்ல.

"ஏன்?" என்று கேட்டான் தலைவன்.

"நான் தான் கட்டச் சொன்னேன்."

"எதற்காக?"

"கட்டியிருந்தால் தானே நீங்கள் அவிழ்ப்பீர்கள்?"

"எதற்காகக் கட்ட வேண்டும்? அவிழ்க்க வேண்டும்?"

"அதுதானே எங்கேயும் நடக்கிறது?"

"அது வேறு. இது வேறு. கயிற்றால் எதற்காகக் கட்டிக் கொண்டாய்?"

"நாங்கள் கட்டுப்பட்டு இருக்க வேண்டும் என்று தானே நீங்கள் விரும்புகிறீர்கள்?"

"குடித்திருக்கிறாயா?"

"கொஞ்சம்."

"குடித்து விட்டுத் தான் புறாவை அனுப்பினாயா?"

"ஆமாம்."

"நீ இங்கு வருவதாகச் சொல்லவில்லையே! என்னை மட்டும் தானே அனுப்பினாய்?"

"ஆமாம்."

"பிறகு ஏன் வந்தாய்?"

"நான் சொன்னபடி நீங்கள் நடந்து கொள்கிறீர்களா என்பதைக் காண்பதற்காகத் தான். நான் சொன்னபடி நடந்து கொண்டீர்களா?"

"இல்லை"

"ஏன்?"

"சந்தர்ப்பம் தான் காரணம்"

"அப்படியென்ன சந்தர்ப்பம்?"

"மயிலழகி! நான் மட்டும் இருந்திருந்தால் நீ சொன்னபடி நடந்து கொண்டிருப்பேன். அங்கோ அதிகாரிகள் மட்டுமல்ல நாட்டார், நகரத்தார், பிரம்ம தேயத்தார் என்று விவரமறிந்த

முக்கியஸ்தர்களும் வந்திருந்தார்கள். அவர்களை மீறி நடந்து கொள்ள முடியாது."

"உங்களுக்கு அதிகாரம் இருக்கிறதல்லவா?"

"கையில் விளக்கு இருக்கிறதென்பதற்காக ஊரைக் கொளுத்தி விட முடியாது."

"நான் கேட்டதற்கு மட்டும் பதில் கூறுங்கள் கோட்டத் தலைவரே. நான் பதில் கூற வேண்டிய இடம் ஒன்றிருக்கிறது."

"மயிலழகி! எனக்கு அதிகாரம் இருக்கிறது. அதை துஷ்பிரயோகம் செய்ய வேண்டுமென்றால் அதற்கான சந்தர்ப்பம் சரியாக இருக்க வேண்டும். அதிகார துஷ்பிரயோகத்தைப் பகிரங்கமாகச் செய்ய முடியாது. அது ஆபத்தில் தான் போய் முடியும்."

"உங்கள் தீர்ப்பினால் ஆதாயம் வரவில்லை. நமது ஆட்கள் தண்டிக்கப்பட்டு விட்டார்கள். நமக்கு உதவுபவர்களை நீங்கள் தண்டித்து விட்டீர்கள். அவர்கள் நம்மை விட்டு விலகி விடுவார்கள். நம்மோடு சேருபவர்களும் நம்மைச் சேர்ந்தவர்களும் நம்மை விட்டுப் பிரிய நேர்வது நமக்கு நல்லதா?"

அதுவரை படுத்தபடியே பேசிக் கொண்டிருந்த மயிலழகி படுக்கையை விட்டு எழுந்து மயிலைப் போல நகர்ந்து "நீங்கள் நான் சொன்னபடி நடந்து கொள்ளவில்லை என்பது தெரிந்துதான் புறாவை அனுப்பினேன். அதைக் கண்ட பிறகாவது சுதாரித்துக் கொள்வீர்கள் என்று நினைத்தேன். நீங்கள் சுதாரித்துக் கொள்ளவில்லை. சரிந்து விழுந்து விட்டீர்கள். இதற்கு மேல் நானென்ன செய்ய முடியும்?" என்று கேட்டு விட்டு நின்றாள்.

"மயிலழகி! இப்போது குடியொன்றும் முழுகிப் போய் விடவில்லை." என்றான் கோட்டத்தலைவன்.

"பானையை உடைத்து விட்டீர்கள். அதை எப்படி ஒட்ட வைப்பது?" என்று கேட்டாள் மயிலழகி.

கோட்டத் தலைவன் ஒன்றைச் சொன்னான்.

"அதெல்லாம் முடியாது. இன்று என்னைத் தொடுவதற்கு உங்களை அனுமதிக்க முடியாது" என்றாள் மயிலழகி.

"நான் சொன்னதற்கு அனுமதித்தால் தான் குடிமுழுகிப் போக வில்லை என்பதை என்னால் விளக்க முடியும்" என்றான் கோட்டத் தலைவன்.

மயிலழகி ஒரு வறட்டுச் சிரிப்பைச் சிரித்துவிட்டு "நான் நிருமால் புரத்திற்கு தேவ தாசியாக வந்தவள். சிவபெருமானுக்கு

ஆயுட்காலம் வரை அடியாளாக இருந்து தொண்டு செய்ய நேர்ந்து கொண்டவள். ஆறுமாதங்களாக அந்தப் பணியில் ஆழ்ந்து ஆனந்தத்தின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டவள். எங்களை வானுறை மகளிர் என்பார்கள். சொர்க்கபுரி வாசிகள் என்பார்கள். தேவர்களின் கன்னியர் என்றும் கடவுள் கன்னியர் என்றும் போற்றுவார்கள். வணங்கவும் செய்வார்கள். அப்படிப்பட்ட புகழுக்குரியவளாக வாழ்ந்து வந்த என்னை இந்தக் காமாந்தக அதிகாரிகள் கடவுளுக்குப் பணி செய்ய அனுமதிக்காமல் தங்களுக்குப் பணிசெய்யவும் தங்களோடு படுக்கவும் விரும்பினார்கள். ஆலயங்களிலிருந்து அகற்றி அந்தப் புரங்களுக்குக் கொண்டு சென்றார்கள். ஆட்டம் போட்டார்கள். சீரழித்தார்கள். உடைந்த சிற்பங்களைப் போல ஆக்கினார்கள். புகழுக்கு ஆளாக இருந்த எங்களை இகழ்ச்சிக்கு ஆளாக்கினார்கள். தேவ சேவை புரிந்த எங்களைத் தேக சேவைக்கு மாற்றினார்கள். அதன் விளைவுதான் தற்போது நீங்கள் என்னிடம் விரும்புவது" என்றாள்.

"பழைய சோற்றை உண்ணலாம். பழைய கதைகளைப் படிக்கலாம். உன்னைப் போன்றவர்களின் பழைய நிலை யாருக்கும் பயன்படாது. பயன்படாத எதையும் பேசவேண்டாம்" என்றான் தலைவன்.

"உங்களுக்கு இவை தானே வேண்டும்? எடுத்துக் கொள்ளுங்கள்" என்றாள் மயிலழகி.

★★★



மயிலழகி

கோட்டத்தலைவன் கேட்ட இரண்டு விஷயங்களை மயிலழகி ஒப்படைத்தவுடன் புதையலைக் கண்ட பராரியைப் போலப் பாய்ந்து சுவைத்தான் கோட்டத் தலைவன் கொடுமுடி. இரண்டு நாழிகைகளுக்கு நீடித்தது அவனது ரசனை. அவனது இயக்கம்.

"உன்னிடம் இருக்கும் மலைகள் தான் என்னை எப்போதும் உன்மத்தம் கொள்ள வைக்கும். அந்த எழில் மலைகளைக் கண்ணும் கருத்துமாகப் பாதுகாக்க வேண்டும் நீ" என்று சொல்லிவிட்டு ஆசனத்தில் அமர்ந்தான்.

அவளும் எழுந்து அமர்ந்து கொண்டு "உங்கள் வேலை முடிந்து விட்டால் போதுமா?" என்று கேட்டாள்.

"போதாது. போதாது. உன் ஆசைகளும் நிறைய வேண்டும்" என்றான் கொடுமுடி ஆனந்தமாக.

"எனக்கு எது பிடிக்கும் என்பது உங்களுக்குத் தெரியாதா?"

"ஆஹா."

"சொன்னால் போதுமா?"

"இதோ" என்று சொன்ன கோட்டத்தலைவன் அவள் விரும்பியதைத் தந்தான்.

அவளுக்கு ஆஹா என்றிருந்தது.

நான்கு நாழிகை வரை இன்பமே கதி என்று இருவரும் இணைந்தார்கள். திளைத்தார்கள்.

"உங்கள் வயதென்ன கோட்டத் தலைவரே?" என்று முனகினாள் மயிலழகி.

"அறுபது" என்றான் கோட்டத்தலைவன்.

"அறுபதிலுமா இப்படி?" என்றாள் மயிலழகி.

"எண்பதிலும் எனக்கு ஏறுமுகம் தான்" என்றான் கோட்டத்தலைவன்.

"பெண்கள் விரும்புவது இதைத் தான்" என்று சொல்லிப் புரண்டாள் மயிலழகி.

கோட்டத் தலைவன் பழையபடி ஆசனத்தில் அமர்ந்தான்.

அவளும் கட்டிலில் அமர்ந்து கொண்டு சிரித்தாள்.

"எதற்காகச் சிரிக்கிறாய்?" என்று கேட்டான் கோட்டத் தலைவன்.

"எதற்காகவோ சிரித்தேன்."

"அதெப்படி எதற்காகவோ சிரிக்க முடியும்? காரணத்தைச் சொல் மயில். நானும் தான் தெரிந்து கொள்கிறேன்."

"அவற்றை மலைகள் என்று சொன்னீர்களே..."

"ஆமாம் எழில் மலைகள். மயில் மலைகள்"

"அதை எண்ணித்தான் சிரித்தேன்."

"அதில் சிரிப்பதற்கு என்ன இருக்கிறது?"

"அவைகளை வர்ணிக்க வேறு மாதிரி தோன்றவில்லையா உங்களுக்கு?"

"எனக்கு அவை மலைகள் தான். அப்பப்பா" என்று அசந்து போன கோட்டத்தலைவன் "அதற்காகவா சிரித்தாய்? இருக்காது" என்றான்.

"உண்மைதான்."

"பிறகென்ன காரணம்?"

அவள் சொன்னாள்.

"அதுவா? அதற்கென்ன? அது சகஜம் தான்" என்றான் கோட்டத்தலைவன்.

"நான் கேள்விப்பட்டதில்லை. பார்த்ததில்லை."

"போதும் போதும். அதையெல்லாமா சொல்லிக் கொண்டிருப்பாய்? விடு விடு."

அவளோ சிறிது நேரம் சிரித்து விட்டுத்தான் ஓய்ந்தாள்.

பிறகு கேட்டாள்.

"இப்போது சொல்லுங்கள். வரி ஏய்ப்பு வழக்கை என்ன செய்யப் போகிறீர்கள்?"

சொன்னான் அவன்.

சொல்லி விட்டு அகன்றான்.

அப்போது இரவுப் பொழுதானது துவங்கி முற்றியிருந்தது. நள்ளிரவு வருவதற்குச் சில நாழிகைகளே இருந்தன.

மயிலழகி நீராடிவிட்டு பகட்டான ஆடை அணிகலன்களை அணிந்தாள். பழங்களையும் பாலையும் மிதமாக உண்டாள்.

கோட்டத்தலைவன் குறிப்பிட்ட தனது எழில் மலைகளை நினைத்துக் கொண்டு திருப்தி பட்டுக் கொண்டாள்.

பரத்தையர் வீதியில் இரவுக் காலங்களில் பலரது போக்குவரவு இருக்குமாதலால் அவர்களது வசதிக்காகப் பல மாட்டு வண்டிகள் தயாராக இருந்தன. மயிலழகி வீட்டின் முன்னால் அவளுக்குச் சொந்தமான மாட்டு வண்டி ஒன்று தயாராக இருந்தது. அதில் ஏறி அமர்ந்தாள். வண்டி புறப்பட்டது.

பாலி நதிக்கரை ஓரமாகவே மேற்கில் ஒரு காத தூரம் சென்றதும் வண்டி நின்றது. நின்ற இடத்திற்கு அருகில் அடர்ந்த காட்டுப் பகுதி இருந்தது. வண்டியை விட்டுக் கீழே இறங்கிய மயிலழகி வண்டிக்காரனைப் பார்த்து எட்டு நாழிகைகள் கழித்து வரும்படிக் கூறி அனுப்பி வைத்தாள்.

காட்டுப் பகுதியை நோக்கித் தனியாக நடந்தாள். அவளது வரவைக் கண்டு வியந்த நரியொன்று நின்று ஊளையிட்டு விட்டு ஓடியது. காட்டின் முகப்பில் போய் நின்ற மயிலழகி மயிலைப் போலவே குரல் கொடுத்தாள்.

சில நிமிடங்கள் கழித்து காட்டின் உட்பகுதியிலிருந்து மயில்குரல் ஒலித்தது. அதையடுத்து பந்தம் ஏந்திய இரு நபர்கள் முகப்பிற்கு வந்தார்கள்.

"அவர் வந்து விட்டாரா?" என்று கேட்டாள் மயிலழகி.

"வந்து விட்டார் அம்மணி. வந்து ஒரு நாழிகை ஆகிறது. மிகவும் கோபமாக இருக்கிறார்" என்றார்கள் பந்தங்களோடு வந்தவர்கள்.

பாந்தமாக வந்திருந்த மயிலழகி "சரி நடவுங்கள்" என்று கூறி அவர்களோடு நடந்தபோது ஆந்தைகள் இரைந்தன.

"ஊரில் இருந்தாலும் உங்கள் இடையூறு. காட்டில் இருந்தாலும் உங்கள் இடையூறு. உங்களுக்கெல்லாம் வேறு வேலையே இல்லையா?" என்று கேட்பது போல இருந்தது அவற்றின் இரைச்சல்.

"நேற்று இந்தக் காட்டில் ஒரு புலி நடமாடியிருக்கிறது" என்றான் பந்தவாசி.

மயிலழகி எதுவும் பேசாமல் நடந்தாள்.

கணிசமான தூரத்திற்கு நடந்தபின் இடிந்து போன மண்டபம் ஒன்று கண்ணில் பட்டது. அங்கே நான்கு பேர் அமர்ந்திருந்தார்கள். அவர்களுக்கு முன்னாலும் பின்னுமாக நான்கு பந்தங்கள் எரிந்து கொண்டிருந்தன.

அந்த நால்வரில் ராஜதோரணையுடன் இருந்த ஒருவன் உயரமான பாறையில் அமர்ந்திருந்தான். மயிலழகி அங்கே வந்தவுடன் மற்ற மூவர் அவளது எழிலான கோலத்தைக் கண்டு பிரமித்தார்கள். "வன தேவதை என்று சொல்வார்களே அவள் இப்படித் தான் இருப்பாளோ?" என்று நினைத்தார்கள். அவர்களுக்குள் காமக் கிளர்ச்சிகள் தோன்றி மறைந்தன.

ஆனால் ராஜதோரணையுடன் இருந்த மனிதனோ அவளைக் கண்டு அசரவில்லை. அவளைச் சுற்றி வீசிய நறுமணத்தில் மயங்கவில்லை. காம உணர்வில் தகிக்கவில்லை.

"அழகிற்கும் அலங்காரத்திற்கும் குறைவில்லை." என்று முணுமுணுத்தான்.

பிறகு அவளைக் கோபத்தோடு பார்த்து "நன்றாக ஆட்டம் போட்டு நாடகக் காரியைப் போல் வந்து நிற்கிறாய். வெந்து தணிந்த காட்டில் வேகாதவர்களைப் போல நாங்கள் காத்திருக்கிறோம். நான் இருக்கும் இடமா இது?" என்று கேட்டான்.

அவள் பதில் கூறாமல் மௌனமாக நின்றாள்.

"பதில் கூறுங்கள் அம்மணீ. மௌனமாக இருப்பதற்காகவா அர்த்த ராத்திரியில் வந்தீர்கள்? அந்தப் பாறையில் அமர்ந்து கொண்டு நடந்ததைச் சொல்லுங்கள்" என்றார்கள் அங்கிருந்த இதர மனிதர்கள்.

"ஐயா! தாங்கள் கோபப்படும் அளவிற்கு இங்கே எதுவும் நடந்து விடவில்லை" என்றாள் மயிலழகி நின்று கொண்டே.

"என்ன சொல்கிறாய் நீ? சும்மாயிருந்த கொள்ளிக் கட்டையைக் கொண்டு வந்து தலையில் தேய்த்திருக்கிறாய் மயிலழகி. கோட்டைத் தலைவன் கொடுமுடியை நீ அழைக்காமலேயே இருந்திருக்கலாம். அழைத்து வந்தாய். அவனோ எல்லோருக்கும் தண்டனையை வழங்கிக் காரியத்தைக் கெடுத்து விட்டான். சிவபிராமணர்கள் அபராதத்தைச் செலுத்துவார்களா? நமக்கு உபகாரத்தைச் செய்வார்களா? அவர்கள் தரும் பணம் தான் நமக்கு பலம். நம் காரியங்களுக்கு டலம். நம் வேகத்திற்கும் பலம். நம்பிக்கைக்கும் பலம். அந்தப் பலத்தை அழித்து விட்டான் கோட்டத் தலைவன் கொடுமுடி. நமக்கு வரவேண்டிய பணம் போய்விட்டது. நமக்கு சிவபிராமணர்களும் இதர

குற்றவாளிகளும் காட்டி வந்த ஆதரவும் போய்விடும். திருமால் புரத்தில் இனி நமக்கு வேலையில்லை. நமது கேந்திரங்களில் ஒன்று சாய்ந்து விட்டது. இதற்காகவா நீ செயல்பட்டுக் கொண்டிருக்கிறாய்?" என்று சீறினான் ராஜதோரணையில் இருந்த மனிதன்.

"ஐயா! கோட்டத் தலைவர் கூறுவதைச் சற்று யோசித்துப் பாருங்கள். விசாரணை சபையில் வெறும் அதிகாரிகள் மட்டும் இருந்திருந்தால் அவர் தன் அதிகாரத்தைக் காட்டியிருப்பார். அதிகார துஷ்பிரயோகத்தைக் காட்டியிருப்பார். வரிஏய்ப்புச் செய்தவர்களை மன்னித்து எச்சரித்திருப்பார். ஆனால் சபையில் பிரமதேயக் கிழவர்கள், நாட்டார்கள், நகரத்தார்கள் என்று விஷயம் தெரிந்த பெரியோர்கள் இருந்தபடியால் அவரால் வெளிப்படையாகத் தன் அதிகார துஷ்பிரயோகத்தைக் காட்ட முடியவில்லை" என்றாள் மயிலழகி.

"இதெல்லாம் ஒரு காரணமா? பயணம் செய்யும் பாதையில் தடைகள் இருந்தால் அகற்றி விட்டு முன்னேற வேண்டுமே தவிர தடைகளை எண்ணித் தயங்கி அங்கேயே படுத்துவிடக் கூடாது. ஊர்ப் பெரியவர்களும் பிரமுகர்களும் வந்திருக்கிறார்கள் என்றால் சபையை ஒத்தி வைத்திருக்கலாமே! அதற்குக் கோட்டத் தலைவருக்கு அதிகாரம் இருக்கிறதல்லவா? அதை ஏன் அவர் செய்யவில்லை? சாமர்த்தியக்காரர்கள் தனக்கேற்ற சந்தர்ப்பத்தை உண்டாக்கிக் கொள்ளவேண்டுமே தவிர கிடைத்த சந்தர்ப்பத்தைக் குறைகூறி நிலைமையைக் கெடுத்துவிடக் கூடாது. கொடுமுடி ஒரு முட்டாள். அவனைக் கொன்று விடுவது தான் நல்லது. நமக்குத் தேவை சாதிப்பவர்கள் தானே தவிர சமாதானம் கூறித் தப்பித்துக் கொள்கிறவர்கள் அல்ல" என்று உறுதியான குரலில் கூறினான் ராஜ தோரணையில் இருந்த மனிதன்.

மயிலழகி ஏதோ பேச முயன்றபோது அவளைத் தடுத்த அம்மனிதன் "நாம் மிகப் பெரிய முயற்சியில் இருக்கிறோம். அதற்குப் பணமும் தேவை. பேர்களும் தேவை. நமக்கும், நமது கொள்கைக்கும், நமது இலக்கிற்கும் பயன்படக் கூடியவர்கள் உத்தமர்கள் அல்ல. உலுத்தர்கள். நல்லவர்கள் அல்ல. வல்லவர்கள். சத்தியவான்கள் அல்ல. சாமர்த்தியசாலிகள். அவர்கள் நம் பக்கம் இருந்தால் மட்டும் போதாது. நமக்கு வேண்டிய பணத்தைத் தருபவர்களாகவும் இருக்க வேண்டும். ஒரே கல்லில் இரண்டு மாங்காய்கள் விழும் விதமாக யார் கிடைப்பார்கள் என்று பலநாட்கள் யோசித்தேன். முடிவில் தொண்டை மண்டலத்தில் இருக்கும் இருபத்து நான்கு கோட்டத் தலைவர்கள்

எனக்கு நினைவுக்கு வந்தார்கள். அவர்களை மடக்கினால் அவர்களது சரீர உழைப்பும் கிடைக்கும். செல்வப் பெருக்கும் கிடைக்கும். அதற்காகப் படாத பாடு பட்டு இது வரை பன்னிரண்டு கோட்டங்களை வளைத்திருக்கிறேன். அவர்கள் அனைவரும் நான் சொல்வதைச் செய்வார்கள். நமக்குத் தேவையான பொருளுதவியைச் செய்வார்கள். அந்தப் பட்டியலில் பதிமூன்றாவது கோட்டமாகச் சேர்ப்பதற்காகத் தான் வேலூர்க் கோட்டத்தைச் சேர்க்க விரும்பிப் பொறுப்பை உன்னிடம் ஒப்படைத்தேன். அது தோற்று விட்டது. நமது முயற்சிகள் வெற்றியை மட்டுமே பெற வேண்டுமே தவிர தோல்வி அடையவே கூடாது. நமக்குத் தோல்வி வருவதென்பது பானை உடைவதைப் போன்றது. ஒட்டவும் முடியாது. பயன்படுத்தவும் முடியாது" என்றான்.

"ஐயா! திருமால்புர விவகாரம் தோல்வியில் முடியவில்லை. வெற்றியில் தான் முடிந்திருக்கிறது."

"என்ன உளறுகிறாய்? நடந்ததையெல்லாம் நமது ஆட்கள் பார்த்திருக்கிறார்கள். வரி ஏய்ப்பு செய்தவர்களுக்கு அபராதமும் தண்டனையும் விதித்திருக்கிறான் கோட்டத் தலைவன் கொடுமுடி."

"நானும் அப்படித்தான் நினைத்தேன். தலைவர் விளக்கிய போது தான் எல்லாம் புரிந்தது."

"என்ன புரிந்தது?"

"தலைவர் ஊரறிய தண்டனையை மட்டும் தான் விதித்திருக் கிறாராம். ஆனால் அதை நிறைவேற்றப் போவதில்லையாம்."

"அது எப்படி?"

"அதிகாரிகள் அவர் பக்கம். ஆகவே அபராதத்தை வசூலிக்க வேண்டாம் என்று கட்டளையிடுவாராம். சிவ பிராமணர்களை இரண்டு நாட்களுக்கு மட்டும் பணி நீக்கம் செய்வாராம். அது இரண்டு மாத பணிநீக்கத்திற்குச் சமமாம். ஆகவே எதுவும் பாதிக்கப்படவில்லை என்றும் வேலூர்க் கோட்டம் தங்கள் வசம் வந்து விட்டதாகவே கருதலாம் என்றார். வரி ஏய்ப்பும், சொத்துகள் வருமான ஊழலும் பெருகும் என்றார். கவலைப்பட வேண்டாம் என்று சொல்லச் சொன்னார்."

"நீ கூறுவது உண்மையாக இருக்குமானால் மகிழ்ச்சிதான். வேலூர் கோட்டம் நம் கைக்கு வந்து விட்டது என்றால் மீதியிருக்கும் கோட்டங்கள் பதினொன்று தான். அதில் ஐந்து நம் வசம் வந்து விட்டால் போதும். நமது முக்கிய நடவடிக்கையைத்

தொடங்கிவிடலாம். நீ எதற்கும் வேலூர்க் கோட்டத் தலைவன் மீது ஒரு கண்ணை வைத்திரு. அவன் கூறியது உண்மைதானா என்பதை உறுதி செய்து கொள். ஒரு மாதம் கழித்து என்னை வந்து பார். உனக்கு முக்கியப் பணி ஒன்றிருக்கிறது. இப்போது நீ போகலாம்" என்றான் ராஜதோரணையுடன் இருந்த மனிதன்.

மயிலழகி இரண்டு பந்தமேந்திகளுடன் திரும்பிச் சென்றாள். அவளோடு வந்த சுகந்தம் அவளோடு திரும்பிச் சென்றது. சொர்க்கமானது கைக்கு எட்டி வாய்க்கு எட்டும் போது எட்டிச் சென்று விட்டதாக எண்ணி ஏங்கினார்கள் அங்கிருந்த நால்வர்.

ராஜதோரணையுடன் இருந்த மனிதன் அவர்களின் முகபாவனைகளைக் கவனித்து விட்டு "இந்தச் சதைப் பிண்டங்களின் மீது உங்களுக்கேன் இவ்வளவு ஆசை? இது சாம்பலாகப் போகும் சதை. அவளோடு வீசிய சுகந்தம் அவளது உடம்பு சுடுகாட்டில் எரியூட்டப்பட்ட பிறகு இருக்கப் போவதில்லை. இவளுக்கே கூட வயதாகி விட்டால் நீங்கள் சீந்துவீர்களா?" என்று கேட்டான்.

"ஐயா! உங்களுக்கு மட்டும் பெண்கள் விஷயத்தில் ஆசையில்லையா?"

"இருக்கிறது. ஆனால் மோகமில்லை. பற்று இல்லை. காரியங்கள் நடக்க நாம் கருவிகளாக இருக்க வேண்டும். அவ்வளவு தான்."

"ஐயா! பல்லவ மன்னர் நந்திவர்மர் அவதார புருஷரா?"

"எதற்காக இப்படியொரு கேள்வியைக் கேட்கிறீர்கள்?"

"காஞ்சியில் அவர் பிரவேசிக்கும் போது அவருக்கு மேலே நாரைகள் குடை பிடிப்பது போலப் பறந்து வருகின்றனவே அதனால் தான் கேட்கிறோம்."

"இதுவா அவதாரப் புருஷனின் லட்சணம்? பறவைகளையும் மிருகங்களையும் பழக்கத் தெரிந்தவன் மனிதன். பழக்கும் விதத்தில் பழக்கினால் அது அவன் விருப்பப்படி நடந்து கொள்ளும். இதில் அதிசயம் என்ன இருக்கிறது? அதோடு நாரைகள் அவனது தலைக்கு மேலே வந்தால் என்ன ஆகி விடப்போகிறது? இத்தனைக்கும் நந்தி வர்மன் போரில் வென்றதே இல்லை. தோற்றுத் தோற்றுத் திரும்பி வரும் அவனது தலைக்கு மேல் குடைபிடிப்பது போல் பறக்கும் நாரைகளுக்கு இந்த விஷயம் தெரியாது அல்லவா? அதெல்லாம் ஒரு விஷயமாகவே நீங்கள் கருத வேண்டாம். நான் தற்போது செம்போத்துப் பறவைகளை வளர்த்து வருகிறேன். அவை மந்திரப் பறவைகள். எனது

பிரம்மாஸ்திரம் அது. அதைக் கொண்டு தான் நந்தி வர்மனை வீழ்த்தப் போகிறேன்."

"அப்படியானால் அதை இப்போதே செய்துவிட வேண்டியது தானே? எதற்காகக் காலம் கடத்துகிறீர்கள்?"

"எதற்கும் காலநேரம் இருக்கிறது. நந்திவர்மன் தனி மனிதன் அல்ல. மரம். ஆலமரம். விழுதுகளைப் பாய்ச்சியிருக்கும் விசால மரம். அவற்றையெல்லாம் அகற்றி விட்டுத்தான் மூல மரத்தை நெருங்க வேண்டும்" என்றான் ராஜதோரணையுடன் இருந்த மனிதன்.

அப்போது அமானுஷ்ய குரல் ஒன்று எழுந்தது. நால்வரும் நடுங்கினார்கள்.

★★★



நந்திவர்மன்

பிற்காலப் பல்லவர்கள் மரபை கி.பி. ஆறாம் நூற்றாண்டில் துவக்கி வைத்த சிம்மவிஷ்ணுவின் வம்சம் பரமேஸ்வர வர்மனோடு முடிந்துவிட்ட நிலையில் காஞ்சியை ஆள்வதற்கு ஆளில்லாத நிலை உருவாயிற்று. பல்லவ வாரிசு என்று சொல்லிக் கொண்டு வந்தவர்களுக்கு ஆதரவு இல்லை. ஆதாரமும் இல்லை. நிலைமை நீடித்தால் சேதாரம் அதிகமாகிவிடும் என்று நினைத்தார்கள் காஞ்சியின் முக்கியஸ்தர்கள்.

சிம்ம விஷ்ணுப் பல்லவரது ஆட்சிக்காலத்தில் அவரது சகோதரரான பீமவர்மர் பிரிந்து சென்றது அவர்களுக்கு நினைவிற்கு வந்தது. பீமவர்மரின் வம்சம் எங்கேயாவது இருக்கக் கூடும் என்று நம்பினார்கள். வலையை வீசினார்கள். அந்த வலையில் கிடைத்தார் இரண்யவர்மர். சிம்ம விஷ்ணுப் பல்லவரின் சகோதர வம்சத்து விருட்சத்தைக் கண்டுபிடித்து ஆனந்தமடைந்த அவர்கள் அவரே தகுந்த பல்லவ வாரிசு என்று உறுதி செய்து காஞ்சியை ஆள அழைப்புச் செய்தார்கள்.

ஆனால் இரண்ய வர்மர் என்பது வயதைக் கடந்து விட்ட படியால் அரியணையில் ஏற மறுத்து விட்டார். தனது நான்கு புதல்வர்களை அழைத்தார். அவர்களில் மூத்த சகோதரர்கள் மூன்று பேரும் அரியணையில் அமரவும் ஆட்சி புரியவும் மறுத்து விட்டார்கள்.

பதவிகளை வேண்டாம் என்று ஒதுக்கிய காலம் அது. சாம்ராஜ்ய அரியணையைப் புறக்கணித்த காலம் அது. இரண்ய வர்மரும் அவரது மூன்று மூத்த புதலவர்களும் அரியணையை ஏற்க மறுத்த போது கடைசிப் புதல்வனும் பன்னிரண்டே வயதானவனுமான பல்லவ மல்லனைக் காஞ்சி முக்கியஸ்தர்கள் அணுகி மிகவும் வேண்டிக் கொண்டார்கள். உண்மையான பல்லவ வாரிசு அரியணையில் அமராவிட்டால் சாளுக்கியர்களோ - ராஷ்டிர கூடர்களோ - பாண்டியர்களோ அமர்ந்து விடுவார்கள் என்றும் சிம்ம விஷ்ணு மகாராஜா களப்பிரர்களை வென்று

உருவாக்கிய பல்லவ ராஜ்யம் தடயமின்றி அழிந்து விடும் என்று எச்சரித்தார்கள்.

"அஞ்ச வேண்டாம். நானிருக்கிறேன்" என்றான் பன்னிரண்டு வயது பாலகனான பல்லவ மல்லன். முக்கியஸ்தர்கள் அவனைக் காஞ்சிக்கு அழைத்து வந்தார்கள். நந்திவர்மன் என்று பட்டப் பெயரைச் சூடிக் கொண்டு பல்லவ அரியணையில் அமர்ந்தான் பல்லவ மல்லன். அரியணையில் அமர்ந்து ஆண்டுகள் ஐம்பது ஓடிவிட்டன.

★

பெண்ணாகடத்தில் பாண்டியருக்கும் பல்லவருக்கும் நடந்த போர் பெரும் காரணங்களுக்காக நடக்கவில்லை. பெரும் விளைவுகளையும் உண்டாக்கவில்லை.

ஒருவர் ராஜ்யத்தை மற்றொருவர் அபகரிக்க முயல்வதாகச் செய்திகள் வந்தன. அதைத் தட்டிக் கேட்பதற்காகவும் தட்டி வைப்பதற்காகவும் இரு படைகளும் நகர்ந்தன. பெண்ணாகடத்தில் சந்தித்துப் போரிட்டன. போரில் நந்திவர்மன் தோற்றுப் போனான். காஞ்சிக்கு அவன் திரும்பிய அதே நேரத்தில் பாண்டியனும் அவன் படைகளும் மதுரைக்குத் திரும்பின.

மற்றபடி எந்த விளைவும் உண்டாகவில்லை.

"மன்னவா! போரில் தாங்கள் வெற்றி பெற்றீர்கள். இருப்பினும் பல்லவ மன்னனுக்கு எந்த நிபந்தனையும் விதிக்க வில்லை. குறைந்த பட்சம் நந்திவர்மனைச் சிறிது காலத்திற்கு மதுரையில் சிறையில் வைத்திருக்கலாம்" என்றான் அமைச்சர் மாறன் காரி.

"அமைச்சரே! போரில் ஒருவன் தோற்று விட்டான் என்பதால் அவனைப் பற்றிக் குறைவாக எண்ண வேண்டியதில்லை. அகௌரவப் படுத்த வேண்டியதில்லை. பல்லவர்கள் நமக்குப் பகைவர்கள் தான் என்றாலும் நந்திவர்மன் மீது எனக்கு மதிப்பும் மரியாதையும் உண்டு. அவன் தோற்று விட்டான் என்பதால் அந்த மதிப்பும் மரியாதையும் குறைந்து விடாது. அவன் போரை முழுக்கவனத்துடன் நடத்தவில்லை. நடத்தியிருந்தால் முடிவு வேறு மாதிரி இருந்திருக்கும்" என்றான் பாண்டிய மன்னன் நெடுஞ்சடையன்.

"மன்னவா! நந்திவர்மன் இதுவரை போரில் வென்றதே இல்லை. பாண்டியருடன் நந்திபுரத்தில் நடைபெற்ற போரில் பெரும் தோல்வியை அடையவிருந்தான். படைத்தலைவனான உதயசந்திரன் மட்டும் சரியான நேரத்தில் வராமலிருந்தால்

அப்போரிலேயே நந்திவர்மன் மாண்டிருப்பான்" என்றார் மாறன்காரி.

"மீண்டும் மீண்டும் தோற்பவர்கள் தடயமில்லாமல் சோர்வடைந்து விடுவார்கள். ஆனால் நந்திவர்மன் விஷயத்தில் நேர்மாறாக நடக்கிறது. அவன் சோர்வடையவில்லை. முடியாது என்று ஓடிவிடவில்லை. ஐம்பது ஆண்டுகளாக காஞ்சியின் மன்னனாகத் தான் தொடர்கிறான். காஞ்சியில் எழுச்சி தான் தொடர்கிறதே தவிர வீழ்ச்சி இல்லை. மக்கள் மன்னன் மீது விருப்பத்தைப் பொழிகிறார்களே தவிர வெறுப்பைக் கண்களில் கூடக் காட்டுவதில்லை. தோற்று வரும் மன்னனை விழாக் கொண்டாடி வரவேற்கிறார்கள். இதை வேறு எங்காவது கேள்விப் பட்டிருக்கிறீர்களா நீங்கள்? தோற்கும் மன்னனைப் படைகள் விரும்பாது. காஞ்சியிலோ அதற்கு நேர்மாறாகத்தான் வீரர்கள் அவனை விரும்புகிறார்கள். படைகளில் புகைச்சல் இல்லை. எழுச்சிதான் பூக்கிறது" என்றான் பாண்டியன்.

"நந்திவர்மனைப் பற்றி உன் அபிப்ராயம் தான் என்ன?" என்று கேட்டான் அமைச்சர்.

"கர்ணனுக்குப் பின்னால் தர்மம் இருந்தது நந்திவர்மனுக்குப் பின்னால் ஏதோ இருக்கிறது. அவனைக் காக்கிறது. அவனை இயக்குகிறது. அவன் போர் நிகழ்ச்சிகளைப் பொருட்படுத்துவதில்லை. அதை விடப் பல்வேறு நிகழ்ச்சிகளை மகத்தானதாக நடத்தி வருகிறான். ஆலயநிர்மாணம் அதில் மிகவும் முக்கியமானது. மூவேந்தர்களான சேர சோழ பாண்டியர்கள் நீண்டகாலமாகப் போர்களில் தான் கவனம் செலுத்தி வருகிறார்கள். சோழமன்னர் செங்கணாற்குப் பிறகு சோழர்கள் ஆலய நிர்மாணத்தில் ஈடுபடவில்லை. சேரர்களும் பாண்டியர்களும் பின் தங்கியே இருக்கிறோம். ஆனால் தமிழகத்திற்குப் புதியவர்களான பல்லவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதிலிருந்து தமிழகம் முழுவதும் கலைப் பொக்கிஷங்களை உருவாக்கிக் காலத்தால் அழிக்க முடியாத அடையாளங்களாக ஆக்கி வருகிறார்கள். மகேந்திர வர்மரில் ஆரம்பித்து நரசிம்ம வர்மர், பரமேஸ்வர வர்மர், இராஜ சிம்மர் என்று அடுத்தடுத்து வந்த மன்னர்களெல்லாம் மாலையைத் தொடுப்பது போல மலைகளைத் தொடுத்து ஆலயங்களாகவும் சிற்ப விசித்திரங்களாகவும் மாற்றியிருக்கிறார்கள். நந்திவர்மனும் அதைத் தொடர்கிறான். இன்னும் விஸ்தாரமாகத் தொடர்கிறான். நந்திபுரத்தில் நம்மிடம் தோற்ற அவன் அங்கே பெருமாளுக்கு விண்ணகரம் அமைத்திருக்கிறான். நந்திபுர விண்ணகரம்

என்று பெயர் சூட்டியிருக்கிறான். நாமெல்லாம் வெற்றி பெற்ற இடங்களில் வெற்றித் தூண்களை எழுப்புகிறோம். அவனோ தோற்றுப் போன இடங்களில் ஆலயங்களை அமைக்கிறான். தன்னை அரசன் என்று கருதுவதை விட அடியவன் என்றே கருதுகிறான். பரம பாகவதனான அவனைத் திருமாலடியவனான நான் மதிப்பது விஷேஷமான விஷயம் இல்லை" என்றான் பாண்டியமன்னன் நெடுஞ்சடையன்.

"ஆகா! இரு மன்னர்களும் திருமாலைப் போற்றும் பெருமன்னர்கள். மதம் உங்கள் இருவரையும் இணைக்குமானால் அது மக்களுக்கு நல்லது" என்றார் அமைச்சர்.

★

காஞ்சி மக்களின் வியப்பான அதே சமயம் ஏகோபித்த வரவேற்புகளையும் பிரமுகர்களின் மரியாதைகளையும் ஏற்றுக் கொண்டு தன் கூடல்மா புரவியிலேயே நகர்வலம் வந்த பின் எல்லோரிடமும் விடைபெற்றுக் கொண்ட பல்லவ மன்னனான நந்திவர்மன் தன் ராணியைக் காண்பதற்காக அந்தப் புரத்திற்குச் சென்றான்.

அவனைக் கண்டதும் "வாருங்கள்" என்ற ஒற்றைச் சொல்லை மட்டுமே அவள் உதிர்த்தாள்.

அதைக் கண்ட மன்னன் "ஊரெல்லாம் என் பேரை ஓதுகிறார்கள். முதலமைச்சர் முதலாக அனைத்துப் பிரமுகர் களும் மாலையணிவித்து வரவேற்கிறார்கள். ஒரு முறையாவது நீ எனக்கு மாலை சூட்டி வரவேற்பாய் என்று நினைக்கிறேன். இப்போதும் "வாருங்கள்" என்ற வார்த்தை மட்டும் தானா? வரவேற்க மாட்டாயா? வாய் நிறைய வாழ்த்தமாட்டாயா? மாலை யொன்றைக் கட்டி என் கழுத்தில் சூட்டமாட்டாயா?" என்று கேட்டான்.

"நீங்கள் என்றைக்கு வெற்றி பெற்றுத் திரும்புகிறீர்களோ அன்றைக்குத் தான் நீங்கள் விரும்பியதெல்லாம் நடக்கும்" என்று அமைதியாகச் சொன்னாள் ராணி.

"ஆகா! அது இந்த ஜென்மத்தில் நடக்காதல்லவா?" என்றான் நந்திவர்மன்.

"என்ன பேச்சு இது? உங்களுக்குப் போரில் வெற்றி பெற வேண்டும் என்ற எண்ணமே இல்லையா?" என்று கேட்டாள் ராணி.

"அந்த எண்ணம் எதற்கு ரேவா! வெற்றி பெற வேண்டும் என்ற எண்ணம் வெறியைத் தூண்டும். அதர்மத்தைத் தூண்டும். பேராசையைத் தூண்டும். அழிவை வரவழைக்கும்."

"நன்றாக இருக்கிறது உங்கள் பேச்சு? மன்னர்கள் என்றால் போரும் வெற்றியும் தான் இருகைகளாக இருக்க வேண்டும் என்று சொல்வார் என் தந்தை. தேவாசுரப் போர் - இராமாயணப் போர் - மகாபாரதப் போர் என்று நடந்த மகத்தான போர்களை நீங்கள் கேள்விப்பட்டதில்லையா? போர்கள் தானே அவற்றில் பிரதானமாகப் பேசப் படுகின்றன? நமது பல்லவ வம்சத்திலேயே மாமன்னர் நரசிம்மரும் ராஜ சிம்மரும் மகத்தான வெற்றிகளைக் கண்டார்களே அது பற்றி உங்களுக்குத் தெரியாதா? யாரும் சொல்ல வில்லையா? போர் உணர்வைத்தூண்ட வில்லையா?"

"உடம்பு இருக்கும் வரை எத்தனையோ உணர்வுகள் தூண்டப்படும். தூண்டப்படும் உணர்வுகளுக்கெல்லாம் செவிசாய்க்கக் கூடாது என்பார் எனது பப்ப பட்டாரகர்."*

"இந்தத் தத்துவ விசாரணையெல்லாம் மகாராஜாக்களுக்கு வரக்கூடாது."

"ராணி! போரானது இதுவரை லட்சக்கணக்கானவர்கள் உயிரைத் தான் ஒவ்வொரு முறையும் பறித்திருக்கிறது. பலரைக் கைம்பெண்களாக ஆக்கி இருக்கிறது. போர்நடந்த இடங்களில் எல்லாம் பலரது அழுகுரல்கள் ஒலித்துக் கொண்டே இருக்கிறது இதற்குப் பின்னும் நீ போரையா விரும்புகிறாய்?"

"யாருமே போர் செய்யாமல் இருந்து விட்டால் பிரச்சனை இல்லை. உயிர் வதை இல்லை. நீங்களோ போருக்குப் போகிறீர்கள். தோற்றுப் போய் வருகிறீர்கள். பலரது வீரமரணங்கள் நடக்கின்றன. இது எந்த வகையில் பெருமைக்குரியது?"

"ரேவா! தோல்விகளைத் தாங்கிக் கொள்வதற்கு எவ்வளவு மனஉறுதி வேண்டும் தெரியுமா? அதோடு எனது தோல்விகள் ராஜ்யத்தைப் பாதிக்கவில்லை. ராஜவம்சத்தைப் பாதிக்கவில்லை. மக்களையும் பாதிக்கவில்லை."

"நீங்கள் கூறுவதையெல்லாம் என் தந்தையாரிடம் சொன்னேன். அவர் ஒப்புக்கொள்ளவில்லை. 'பல்லவ மல்லன் ஆயிற்றே! வீராதி வீரனாக இருப்பான். சூராதி சூரனாக இருப்பான் என்று தானே உன்னை அவனுக்கு மணமுடித்தேன்! அவனுக்கு வீரம் என்றாலே என்னவென்று தெரியாது போலிருக்கிறதே' என்று இகழ்கிறார். எனக்கு நெஞ்சே வெடித்து விடும் போலிருக்கிறது."

---

* தொனதொரு

"கவலையை விடு ராணி. உனது மகன் தந்திவர்மன் இருக்கிறான். நான் பெறாத வெற்றிகளைப் பெற்று வெற்றி வீரனாகத் திகழ்வான். உன் நெஞ்சத்தைக் குளிர்விப்பான்."

"நன்றாகச் சொன்னீர்கள். தந்திவர்மனுக்குப் போர் என்ற வார்த்தையே நாராசமாக இருக்கிறதாம். நமது கௌரவச் சின்னமும் பெருமுரசுமான சமுத்ர கோஷத்தை அழிக்க வேண்டுமாம். கோயில்களில் திருச்சன்னம் எழுப்பும் ஒலிதான் காஞ்சியில் கேட்க வேண்டுமாம். முரசுகள் ஒலி கேட்கக் கூடாதாம். அந்த ஒலி ஆலயங்களில் உறைந்திருக்கும் பெருமானுக்கு இடையூறாக இருக்குமாம். எப்படி இருக்கிறது?"

"ஆகா! நான் செய்த தவத்தின் பயனால் தான் இப்படிப்பட்ட மகன் எனக்குப் பிறந்திருக்கிறான். எனக்குக் கூட இந்த வயதில் இப்படிப்பட்ட ஞானம் வரவில்லை. தந்திவர்மனை இனி தவவர்மன் என்றே அழைக்கலாம் போலிருக்கிறதே."

"நல்ல தந்தை. நல்ல மகன். இவ்வளவு நேரம் நான் பேசியதெல்லாம் விழலுக்கு இரைத்த நீர் தானா? சரிசரி. வாருங்கள். களைப்பாக இருக்கும். உணவருந்துங்கள்" என்றாள் ராணி.

அப்போது அங்கு வந்தான் நந்திவர்மனின் மகனும் பதினைந்து வயது பாலகனுமான தந்திவர்மன்.

அவனைக் கண்டதும் ஆயர்பாடியில் ஓடித் திரிந்த கிருஷ்ணபாலகனே நினைவுக்கு வந்தான் நந்திவர்மனுக்கு.

"வா தந்திவர்மா! நீடுழி வாழ்வாயாக. ஏதாவது விசேஷமா?" என்று கேட்டான்.

"தாங்கள் தோல்வியுடன் திரும்பும் நாளெல்லாம் எனக்கு விசேஷநாள் தான் தந்தையே!" என்றான் தந்திவர்மன்.

"கோட்டை வாயிலில் உன்னைக் காணோமே! எங்கு சென்றிருந்தாய்?"

"தாங்கள் தங்கள் தவப்பயனாக உருவாக்கிக் கொண்டிருக்கும் விண்ணகரம் முடிவடையும் நிலையில் இருக்கிறதல்லவா? அதில் சில திருத்தங்களைச் சொல்லிக் கொண்டிருந்தேன். விண்ணகரத்தில் பிரதிஷ்டை செய்யப் போகும் பெருமாள் விக்கிரகங்கள் திருமுக்கூடலிலிருந்து அமாவாசையன்று காஞ்சிக்குப் புறப்படுகின்றன. பெருமாளோடு பவனி வர ஆயிரம் வேதியர்களை ஏற்பாடு செய்து விட்டேன். கஞ்ச மலைக் காடுகளில் உருவான செம்மரங்களில் தேர்களைக் கட்டி அதற்கு இரும்புச் சக்கரங்களைப் பொறுத்தி விட்டேன். விக்கிரகங்கள்

அவற்றில் பாதுகாப்பாகக் காஞ்சிக்கு வந்து சேரும்" என்றான் தந்திவர்மன்.

"தந்தைக்கேற்ற தனயன் நீ தான் தந்திவர்மா. நீ ராஜ்யத்திற்குச் செய்யும் சேவை சில காலத்தில் மறைந்து விடலாம். எம்பெருமானுக்காகச் செய்யும் சேவை காலத்தைக் கடந்து நிற்கும். உன் கவனம் அதிலேயே இருக்கட்டும்" என்றான் நந்திவர்மன். அவன் நெஞ்சம் நிறைந்திருந்தது.

"தந்தையே! நான் ஒரு விஷயத்தைக் கேள்விப்பட்டேன்."

"சொல் தந்திவர்மா"

சொன்னான் தந்திவர்மன்.

அது நந்திவர்மன் எதிர்பாராததாக இருந்தது.

யோசனையில் ஆழ்ந்தான்.

★★★

71 ஞானகுருவும் ராஜகுருவும்

பப்ப பட்டாரகரான ஞானகுருவுக்கு முன்னே போய் நின்று வணங்கி "என் வந்தனங்களை ஏற்றுக் கொள்ளுங்கள் குருநாதரே" என்றான் நந்திவர்மன்.

"நீடுழி வாழ்வாயாக. வா நந்திவர்மா. வந்து அமர்ந்து கொள்" என்றார் ஞானகுரு.

ஞானத்தைப் பற்றி முற்றும் அறிந்திருந்தாராதலால் அவரது முகத்தில் தீட்சண்யமும் தெய்வீகமும் குடியேறித் திருமுகமாகக் காட்சியளித்தது. அவரது முகத்தைக் கண்டால் கண்டவர்களுக்குக் கண்களின் பயன் கிடைத்து விடும் என்று சொல்வார்கள். நந்திவர்மன் முதல் பலருக்கும் அவருக்கு முன்னால் போய் நின்றாலும் சரி அமர்ந்தாலும் சரி - உணர்வுகள் ஒடுங்கிவிடும். அமைதி ஆக்கிரமித்து விடும். பேசுவதற்கு வருபவர்கள் பேச்சற்றுப் போவார்கள். அவராகவே பேசினால் தான் மற்றவர்களுக்குப் பேச்சு வரும்.

அந்த நிலையில் ஞானகுருவே பேசமுற்பட்டு "பெண்ணாகடப் போர் என்னாயிற்று?" என்று கேட்டார்.

"தோற்று விட்டேன் குருநாதரே" என்றான் நந்திவர்மன்.

"ஏன்?" என்று; கேட்டார் ஞானகுரு.

"போரின் போது கவனம் பிசகி விட்டது" என்றான் நந்தி வர்மன்.

"ஏன்?" என்று கேட்டார் ஞானகுரு.

"தெரியவில்லை."

"தெரிய வேண்டும் நந்திவர்மா. தோல்வி வரலாம். ஆனால் அதற்கான காரணம் அவசியம் தெரிந்தாக வேண்டும். போர் என்பது விளையாட்டான விஷயமல்ல. பொழுது போக வேண்டும் என்று யாரும் போர் புரிவதில்லை. பிறர் பாராட்ட வேண்டும் என்றும் பயப்பட வேண்டும் என்றும் சிலர் போர்

செய்யக் கூடும். போருக்கான காரணம் எப்படியிருந்தாலும் போரின் முடிவிற்கான காரணம் அவசியம் தெரிந்தாக வேண்டும். அடுத்தமுறை சந்திக்கும் போது பெண்ணாகடப் போரில் உன் கவனத்தைச் சிதைத்தது எது என்பதை அறிந்து எனக்குச் சொல்ல வேண்டும்."

"ஆகட்டும் குருநாதரே" என்று சொன்ன நந்திவர்மன் "குருநாதரே! நான் காஞ்சிக்குப் பிரவேசம் செய்யும் போது என் தலைக்கு மேலே குடை பிடிப்பது போல் நாரைகள் பறக்கின்றன. அதை அதிசயம் என்று எல்லோரும் கருதுகிற நிலையில் சிலர் காரணம் தெரியாமல் குழம்புகிறார்கள். அவர்களில் ஒருவராக இருக்கிறார் மகாமந்திரி பிரம்மஸ்ரீராஜர். அவரது குழப்பம் எனக்கு வருத்தமாக இருக்கிறது. அவரிடம் மட்டுமாவது அந்த அதிசயத்திற்கான காரணத்தைச் சொல்லி விடலாமா?" என்று கேட்டான்.

"காரணம் இதுதான் என்று திட்டமாக உனக்குத் தெரியுமா?"

"நீங்கள் தானே சொன்னீர்கள்?"

"அது ஊகம் தான். உண்மையாக இருக்க வேண்டும் என்று அவசியம் இல்லை."

"ஊகத்தைத் தான் சொன்னால் என்ன?"

"உண்மையாகவே இருந்தாலும் சொல்ல வேண்டியதில்லை. நந்திவர்மா! சில விஷயங்கள் ஏன் நேருகின்றன என்பது நமக்குப் புரிவதில்லை. ஆகவே அதை மற்றவர்களிடம் சொல்ல வேண்டியதில்லை. தெரிய வேண்டிய விஷயங்கள் உரிய காலத்தில் தாமாகவே வெளிப்படும். பிரம்மஸ்ரீராஜர் பெரும் அறிவாளி. காலக் கிரமத்தில் அவராகவே தெரிந்து கொள்வார். அவரைப் பற்றி நீ கவலைப்பட வேண்டியதில்லை" என்று சொன்ன பப்ப பட்டாரகர் "மன்னவா! நான் இந்த பூதவுடலை விட்டுவிடுவதற்கான அறிகுறிகள் எனக்குள் தெரிகின்றன. அந்த நாள் வெகுவிரைவில் வரக்கூடும். அதேசமயம் உனக்குப் புதிய ஞானகுரு ஒருவர் கிடைப்பார். உன்னால் அவரும் அவரால் நீயும் உயர்நிலையை அடைவீர்கள்" என்றார்.

"குருநாதரே! நான் காஞ்சியில் எனது கனவுச் சின்னமாகக் கட்டிவரும் விண்ணகரத்திற்கு ஆபத்து விளைவிக்கச் சிலர் திட்டமிட்டுவதாக எனது மகன் தந்திவர்மன் கூறுகிறான். எனக்கு வருத்தமாக இருக்கிறது" என்றான் மன்னன்.

"ஏன்?" என்று கேட்டார் குருநாதர்.

"ஆலயம் கட்டுவது எனது பூர்வ ஜென்ம புண்ணியம் என்று நினைப்பவன் நான். என் ஆட்சி போனாலும் நான் கவலைப் படமாட்டேன். போர்களில் தோல்வியைத் தழுவுவது குறித்தும் நான் கவலைப்படவில்லை. ஆனால் விண்ணகர விஷயத்தில் நான் அப்படி இருக்க முடியாது. அதற்கு ஆபத்து நேர்ந்தால் அதுபோல இன்னொன்றைச் சமைக்க என்னால் முடியாது. ஆலயத்தைச் சமைக்கும் சிற்பிகள் எல்லோரும் முதிர்ந்தவர்கள் மட்டுமல்ல. முதியவர்கள். அவர்களில் பெரும்பாலானவர்களுக்கு வாரிசுகள் இல்லை. ஆலயங்களை அமைக்கும் பணி எனது காலத்திற்குப் பிறகு நடக்காது என்றே தோன்றுகிறது."

"நந்திவர்மா! நான் உனக்கு ஞானகுரு மட்டுமல்ல. ஆன்மீக குருவும் கூட. உன்னிடத்தில் பக்தி மற்றும் ஞானம் இரண்டையும் திணித்தவன் நான். இருப்பினும் நீ பக்தி மார்க்கத்திலேயே அதிக ஈடுபாட்டைக் காட்டினாய். பரம பாகவதனாக மாறித் திருமாலுக்கு அடியவனாகி அவனது உறைவிடங்களான விண்ணகரங்களின் உயர்வுக்குத் தடங்களை அமைக்கலானாய். இருப்பினும் "விண்ணகரத்தை எம்பெருமான் காப்பாற்றுவார் கவலைப்படாதே" என்று உனக்குச் சொல்ல நான் தயாராக இல்லை. நீ அரசன். எச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து விண்ணகரத்தைக் காப்பாற்று" என்று கூறிவிட்டு ஞானகுரு மௌனமானார்.

அதற்குப் பிறகு அவர் பேசமாட்டார் என்பதை உணர்ந்த அவன் எழுந்து கொண்டான்.

ஞானகுருவையடுத்து தனது ராஜகுருவைச் சந்திப்பதற்காக அரண்மனைக்குச் சென்றான்.

காஞ்சியின் அழகு அவனைப் பலநேரங்களில் வியக்கச் செய்ததுண்டு. அந்த அழகுதான் ஸ்கந்தபுரத்தில் இருந்த சமுத்திர குப்தனையும், வாதாபியில் இருந்த புலிகேசியையும் காஞ்சியை நோக்கிப் படையெடுக்க வைத்தது. நந்திவர்மன் அரியணையில் அமர்ந்ததுமே சாளுக்கிய விக்கிரமாதித்தன் படையோடு வந்து காஞ்சியைப் பிடித்துக் கொண்டான். பாண்டியர்கள் தெற்கிலிருந்தும் கங்கர்கள் மேற்கிலிருந்தும் காஞ்சியைப் பிடிக்கச் சரியான சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியிருக்கிறார்கள்.

அதையெல்லாம் எண்ணிப் பார்த்த நந்திவர்மனுக்கு வடமொழிப் புலவரான பாரவி காஞ்சியைக் க..ஞ்சிசுந்தரியாகப் பாவித்து 'அவந்தி சுந்தரிகதா' என்ற நூலை எழுதியது நினைவிற்கு வந்தது.

உண்மையில் காஞ்சி ஒரு பெண்ணைப் போன்று அழகானது. பெண்ணுக்கு உரியவர்கள் அவளுக்கு மேன்மேலும் ஆபரணங்களை அணிவித்து அழகு பார்ப்பது போல காஞ்சியை ஆண்ட மன்னர்கள் அதற்குத் தத்தம் ஆட்சிக் காலத்தில் அழகு சேர்த்தார்கள். பல்லவ மன்னர்கள் மட்டுமல்ல சோழ மாமன்னர் கரிகாலர் காலத்திலிருந்தே அது தான் நடந்தது.

பாதுகாப்பற்றுக் கிடந்த அபலைக்கு வீடு கட்டிக் கொடுத்தது போல் காஞ்சியைச் சுற்றி மதில்களை எழுப்பி அதைக் கோட்டையாக ஆக்கினார் கரிகாலர். அவருக்குப் பின்னால் வந்தவர்கள் கோட்டையைப் பலப்படுத்தியதோடு நகரத்தை அழகுபடுத்தினார்கள். ராஜபாட்டைகளும் தேரோடும் வீதிகளும் அமைக்கப்பட்டன. அகன்ற வீதிகளில் எல்லாம் மாட மாளிகைகளும் கூட கோபுரங்களும் எழுப்பப்பட்டன. அரண்மனை அகலப்படுத்தப்பட்டு விதானங்களில் பொன் வேயப்பட்டன.

தங்கள் இருப்பிடங்கள் சிறந்தால் மட்டும் போதாது தங்களைக் காக்கும் இறைவனின் இருப்பிடங்களும் சிறப்புற வேண்டும் என்று ஆலயங்களைக் கட்டினார்கள். கட்டப் பட்டிருந்த ஆலயங்களைப் புதுப்பித்தார்கள். விதானங்களைப் பொன்னால் வேய்ந்தார்கள். விண்ணுலகத்தின் கட்டிட நிர்மாணியான மயனே மயங்கும் மாநகரமாக மாறியது காஞ்சி.

எங்கோ இருந்த தன்னை விதி காஞ்சிக்கு அழைத்து வந்து மன்னனாக்கி அரியணையில் அமர்த்தியதை எண்ணி நந்திவர்மன் அடிக்கடி வியந்திருக்கிறான். அந்த வியப்பு கலையப் பல ஆண்டுகள் பிடித்தது. பிரமிப்பிலிருந்தும் பரவசத்திலிருந்தும் மீண்டு யதார்த்த நிலைக்கு வந்தான்.

தோல்விகளுக்கிடையில் காஞ்சி தன்னை விட்டு அகலாமல் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக பிணைந்திருந்ததை உணர்ந்து தற்போது ஒருவிதத் திருப்தியுடன் அரண்மனைக்கு வந்தான்.

அரண்மனையில் ராஜகுருவிற்குச் சிறப்பான மாளிகை தரப்பட்டிருந்தது.

அவர் அதை வேண்டாம் என்று மறுத்த போது "ஐயா! நீங்கள் துறவியல்ல. குரு. அதுவும் எனது ராஜகுரு. நான் அரண்மனையிலும் நீங்கள் வெற்று மனையிலும் இருந்தால் அது தவறாகவே கருதப்படும். அதோடு எனக்கு அத்தியாவசிய மான ஆலோசனைகளைக் கூறக் கூடிய தாங்கள் எனக்கு அருகில்தான் இருக்க வேண்டும்" என்று சொல்லி அரண்மனை

வளாகத்திலேயே சிறப்பான மாளிகையில் தங்கச் செய்தான் நந்திவர்மன்.

அவரை அரசவையில் அழைத்து ஆலோசனை பெறுவது அவனுக்கு உகந்ததாகப் படவில்லை. எனவே எந்த அவையில் எது நடந்தாலும் முடிவில் அவரது மாளிகைக்கு வந்து அவரது ஆலோசனையைக் கேட்பான்.

"அரசவையில் ஆன்றோர்களும் சான்றோர்களும் இருக்கிறார்கள். அமைச்சர்களும் தளகர்த்தர்களும் இருக்கிறார்கள். அனைவரும் அனுபவஸ்தர்கள். அவர்களை மீறி நான் எதைக் கூறிவிடமுடியும்? என்மீது உனக்கு மதிப்பு இருந்தால் போதும். வேறெதுவும் வேண்டாம்" என்றார் அவர்.

"அப்படியில்லை ஐயா. நட்சத்திரங்கள் லட்சக்கணக்காக இருந்தாலும் கதிரவன் ஒன்று தான். அப்படிப்பட்டவர் நீங்கள். அரசவையில் பலமுறை சொல்லப்பட்ட விஷயங்களில் நீங்கள் நன்றாக ஆய்ந்து சரியான முடிவுகளைக் கூறியிருக்கிறீர்கள். மாறபட்ட முடிவுகளை வழங்கியிருக்கிறீர்கள். ஆகவே உங்களை வெறும் சிலைபோல் வைத்துக் கொண்டு மரியாதை செய்வது எனக்கு உடன்படாலில்லை. நீங்கள் உயிர்ச்சிலை. உயர்சிலை. உங்கள் கருத்தைக் கேட்காமல் எந்தத் திட்டமும் உருவாகாது. எனவே ஆட்சிக்காலம் வரை என்றில்லாமல் ஆயுட்காலம் வரை நீங்கள் தான் எனக்கு ஆலோசனை வழங்கிக் காக்க வேண்டும்" என்று நந்திவர்மன் மிகவும் வேண்டிக் கொண்டதால் அவரும் ஒப்புக்கொண்டு தன்னைக் கேட்கும் சமயங்களில் தகுந்த ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் அறவுரைகளையும் சொல்லி வந்தார்.

ஒருமுறை மன்னன் உடல்நலம் சரியாக இல்லாமல் துன்பப்பட்ட போது ராஜகுரு மன்னனாகவே செயல்பட்டு நிர்வாகத்தைக் கவனித்தார். அதற்கு அவர் யாரிடமும் ஆலோசனை கேட்கவில்லை. அதே சமயம் அவரது நிர்வாகம் சீராகவும் சிறப்பாகவும் இருந்ததால் ஒருவரும் எதுவும் சொல்லவில்லை. மன்னன் மிகவும் திருப்தியடைந்தான்.

"எனக்கு மட்டும் யாரும் மறுப்பு சொல்லவில்லை என்றாலும் உங்களையே அரியணையில் அமர்த்தி விடுவேன் குருநாதரே. ஆயிரம் யானை பலம் உங்களுக்கு. ஆயிரம் கதிரவன் ஒளி உங்களுக்கு. ஆயிரம் அறிவாளிகள் அறிவு உங்களுக்கு. நீங்கள் அபூர்வ சிருஷ்டி" என்று பாராட்டினான்.

"அதை மட்டும் செய்து விடாதே மன்னா. அது மகாபாவம். சிம்மாசனம் என்பது வாரிசுகளுக்கே உரியது. மற்றவர்களை

அதில் அமர வைப்பது அதர்மம். ராஜநீதிக்குப் புறம்பானது. இந்தப் பல்லவ அரியணைக்கு உரிய வாரிசை அமர்த்த வேண்டும் என்பதை உணர்ந்த பெரியோர்கள் எங்கேயோ இருந்த உன்னைத் தேடி வந்ததை மறந்து விட்டாயா? சான்றோர்கள் சான்றோர்கள் தான் என்பதை நிரூபித்தவர்கள் அவர்கள். அவர்களில் ஒருவர் கூட அரியணையில் அமர்ந்திருக்கலாம். அப்படிச் செய்யாமல் நீ இருக்குமிடத்தைத் தேடி வந்து உன்னை அழைத்து வந்தார்கள். ஆகவே அவரவர்கள் அவரவர் இடத்தில் இருப்பதே இயற்கை நியதி" என்றார் ராஜகுரு.

"ஐந்து வருடங்களுக்கு முன்னால் வாராத மாமணிபோல் வந்தீர்கள். ஐம்பது வருடகால அரசனான எனக்குக் குருவானீர்கள். ஐந்தே வருடங்களில் எனக்கு ஐம்பது வருட ஆட்சித்திறனை அளித்தீர்கள். எனக்காகவே பிறந்தவரோ நீங்கள் என்றெல்லாம் கூட நான் எண்ணுவதுண்டு" என்றான் மன்னன்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை. பச்சை விறகை எவ்வளவு உரசினாலும் தீ பற்றாது. நீ உலர்ந்த விறகாக இருந்தாய். தீண்டியதும் பற்றிக் கொண்டாய். இதில் என் பங்கு எதுவுமே இல்லை. எனக்கென்று ஒரு சிறப்பும் இல்லை. ஒருவனை அதிகமாகப் புகழ்வது அவனை அவமானப்படுத்துவது போன்றது. நீ என்னைப் போற்றிப் பாராட்டுவதை அப்படித்தான் நான் கருதுகிறேன். இனிமேல் மீண்டும் மீண்டும் என்னைப் போற்றாதே மன்னவா. ஆண்டவனை எவ்வளவு வேண்டுமானாலும் போற்று. ஆயுள் முழுவதும் அவனைப் போற்றினால் கூட அது கடுகளவாகவே இருக்கும். நாம் அவனுக்குக் கடன் பட்டவர்கள். கடனைத் தீர்க்கவே மீண்டும் மீண்டும் பிறக்கிறோம்" என்றார் ராஜகுரு.

தன்னைப் புகழாத மனிதனை விரோதியாகவே கருதும் காலத்தில் புகழ்வதை அகழ்வது போல் கருதிய ராஜகுரு மன்னனின் மதிப்பீட்டில் உயர்ந்து நின்றார். ஆகவே அவருக்குச் சிறப்பான இருப்பிடத்தை அளித்துக் கண்ணும் கருத்துமாகப் பாதுகாத்தான்.

பெண்ணாகடம் போருக்குப் போகும்போது அவரிடம் அனுமதி கேட்டபோது "தாராளமாகச் செல். அதே சமயம் வெற்றி வீரனாகத் திரும்பு" என்று கூறியிருந்தார் ராஜகுரு.

தற்போது போரில் வெற்றி வீரனாக மன்னன் திரும்பா விட்டாலும் ராஜகுருவைச் சந்திக்க தயங்கவில்லை.

அரண்மனை வளாகத்திலிருந்த மாளிகைக்குச் சென்ற போது அது பூட்டியிருந்தது. மாளிகை தனக்கு வேண்டாம் என்று கூறி

ராஜகுரு காலையில் தான் வெளியேறிவிட்டார் என்றும் சந்தை வெளிக்கு அருகே ஒரு குடிலுக்குக் குடிபோய் விட்டார் என்றும் செய்தி கூறப்பட்டது.

"காரணம் என்ன என்பதை ராஜகுரு சொன்னாரா?" என்று கேட்டான் மன்னன்.

"சொல்லவில்லை மகாராஜா. அதேசமயம் இந்த மாளிகைக்கு மீண்டும் வரமாட்டேன் என்று மட்டும் உறுதியாகச் சொன்னார்" என்றார்கள் பணியாளர்கள்.

மன்னன் உடனடியாக அவர்கள் கூறிய சந்தை வெளிக்குச் சென்றான். அந்த இடம் மேற்குப் பகுதியில் வெள்ளைக் குளத்திற்கு அருகில் இருந்தது.

அவனங்குச் சென்றபோது இருட்டி விட்டிருந்தது. சந்தை வெளிப் பகுதிக்குப் பின்னால் இருந்த வெள்ளைக் குளக் கரைக்கு மேற்கே சுடுகாடு இருந்ததால் சந்தைவெளிக்குச் செல்லும் பாதை சுடுகாட்டுப் பாதை என்றே அழைக்கப்பட்டது. மன்னன் அந்தப் பாதையில் புரவியில் சென்ற போது சிறிது நேரத்திற்கு முன்னால் அந்தப் பாதையில் சவ ஊர்வலம் சென்றதற்கான தடயங்கள் இருந்தன.

அந்தத் தடத்தில் சுடுகாட்டுப் பணிக்கு உரியவர்களே பெரும்பாலும் குடிசைகளைக் கட்டிக்கொண்டு வாழ்ந்து வந்தார்கள். சவ ஊர்வலத்திற்குப் பறை கொட்டுபவர்களும் அப்பகுதியில் வாழ்ந்து வந்த படியால் குடிசைகள் பலவற்றில் பறைகள் தொங்கிக் கொண்டிருந்தன. பறைகளோடு ஒலிக்கும் தாரைகளும் குடிசை வாயில்களுக்கு அருகில் நிறுத்தப் பட்டிருந்தன. சுடுகாட்டுப் பகுதியில் பறைகளும் தாரைகளும் கொட்டப் பட்டதால் அவற்றின் ஒலிகள் சந்தைவெளியில் ஊர்ந்து வந்தன. அவற்றோடு நரிகள் சில எழுப்பிய ஊளைச் சத்தங்களும் ஆந்தைகளின் இரைச்சல்களும் அவ்வப்போது எழுந்து இருப்பிடத்தின் தன்மையைப் புலப்படுத்தின.

ராஜகுரு இருந்த குடிசையை அடையாளம் காட்டினான் பணியாளன்.

★★★



ராஜகுருவின் விவரணம்

மன்னன் குடிசைக்குள் சென்றபோது உள்ளே ராஜகுரு இல்லை.

குடிசையில் பந்தம் மட்டும் ஒன்று எரிந்து கொண்டிருந்தது.

மன்னன் வெளியில் வந்தான்.

பணியாளனைப் பார்த்து "ராஜகுரு உள்ளே இல்லை. தேடு" என்றான்.

தேடச் சென்ற பணியாளன் ஒரு நாழிகை ஆகியும் வரவில்லை.

அவன் சென்ற திசைக்கு எதிர்த்திசையில் மன்னன் சென்றான்.

சுடுகாட்டுப் பகுதி சத்தங்கள் அடங்கி அமைதியாக இருந்தது.

அங்குக் கொண்டு வரப்பட்ட உடல் தகனம் செய்யப்பட்டு விட்டதால் தீச்சுவாலை அடங்கித் தணலாக இருந்தது.

ஆட்டம் போடும் மனிதன் அடங்கும் விதம் இது தான் என்று விளக்குவது போல் இருந்தது அந்தக்காட்சி.

காட்டிற்கு வேறு வரவு எதுவும் இல்லாததாலோ என்னவோ பணியாளர்கள் யாரும் இல்லை. குடிசைக்குத் திரும்பி விட்டிருந்தார்கள். இதற்கிடையில் யாரோ ஒருவர் அங்கே பாடமுற்பட்டது மன்னனுக்குக் கேட்டது.

நம்வாழ்வில் காணா சமரசம்
உலாவும் இடமே...

ஜாதியில் மேலோரென்றும்
தாழ்ந்தவர் தீயோரென்றும் - பேதமில்லாது
எல்லோரும் முடிவில் சேர்ந்திடும் காடு
தொல்லையின்றியே தூங்கிடும் வீடு
உலகினிலே இது தான்
நம் வாழ்வில் காணா சமரசம்
உலாவும் இடமே

ஆண்டியும் எங்கே அரசனும் எங்கே
அறிஞனும் எங்கே அசடனும் எங்கே
ஆவி போனபின் கூடுவார் இங்கே
ஆகையினால் இதுதான்
நம் வாழ்வில் காணா சமரசம்
உலாவும் இடமே.

சேவை செய்யும் தியாகி சிருங்கார போகி
ஈசன் தன் பாதம் தன்னை நாடிடும் யோகி
எல்லோரும் இங்கே உறங்குவதாலே
உண்மையிலே இதுதான்
நம் வாழ்வில் காணா சமரசம்
உலாவும் இடமே.*

"பாடலைக் கேட்டு மன்னன் அசந்தான். பாடல் தான் எத்துணை உண்மை? சுடுகாட்டில் தானே சமரசம் நிலவுகிறது! பேதங்கள் சாம்பலாகி வித்தியாசங்களை மறைப்பது இந்த இடம்தானே! நான் மன்னன் என்றோ பிச்சைக்காரன் என்றோ சாம்பலானது கூறக் கூடுமா? இது தெரியாதா மக்களுக்கு? இருந்தும் ஏன் பேதங்கள்! பிணக்குகள்!" என்று ஒருகணம் உண்மைத் தத்துவத்தை உணர்ந்த மன்னன் அந்தப் பாடலைப் பாடியது ராஜகுரு தான் என்பதைக் கண்டதும் வியப்பு மேலிட்டவனாய் "குருநாதரே! தாங்களா! நீங்கள் ஏன் இங்கு வந்தீர்கள்?" என்று கேட்டான்.

"நான் மட்டுமல்ல. நீயும் வரவேண்டிய இடம் தான் மன்னா இது" என்றார் ராஜகுரு. அப்போது நரி ஒன்று அவர் மீது பாய்ந்த போது இடது கையால் ஓர் அடி கொடுத்தார் ராஜகுரு. நரி அங்கேயே செத்து விழுந்தது.

"குருநாதரே! உங்களது இடது கைக்கே இவ்வளவு வலிமையா?" என்று கேட்டான் மன்னன்.

"உடலுக்கு வலிமை எங்கிருந்து வருகிறதென்று தெரியுமா? மனத்திலிருந்து தான். மனத்தில் பலம் இருந்தால் உடலுக்கு பலம் தானாக வரும். அது சரி. நீ ஏன் இங்கு வந்தாய்?" என்று கேட்டார் ராஜகுரு. வலது கையில் ஊன்றியிருந்த கோலை ஊன்றிய படி நடந்தார்.

அவரது அந்த நிலை மன்னனை வாட்டியது.

"குருநாதரே! உங்களுக்கென்று மாளிகையை ஒதுக்கி சகல சௌகரியங்களையும் செய்திருந்தும் இங்கே அதுவும்

---

* பாடலாசிரியருக்கு நன்றி

நள்ளிரவில் அலைய வேண்டிய அவசியம் என்ன?" என்று கேட்டான்.

"மாளிகை வாசம் - சகல சௌகரியங்கள் - சந்தோஷங்கள் எல்லாம் நாமிங்கே சடலமாக வரும் போது வருவதில்லை மன்னா. நீ உன் அரண்மனைக்குச் செல். நான் என் குடிசைக்குச் செல்கிறேன். நிலையில்லாத மனிதன் திடமான கட்டடங்களில் வாழ்வது முரண்பாடானது."

சுடுகாட்டில் மேற்கொண்டு எதுவும் பேசவிரும்பாத மன்னன் "நாம் இங்கே வரவேண்டிய காலம் வரும்போது வரலாம் குருநாதரே. இப்போது இங்கிருந்து செல்வோம் வாருங்கள். மன்னனும் ராஜகுருவும் சந்திக்கும் இடம் சுடுகாடாக இருக்க வேண்டாம்" என்றான்.

ராஜகுரு எதுவும் பேசாமல் நடந்தார். நேராகக் குடிசைக்குச் சென்றார்.

"அரண்மனைக்குச் செல்லலாம்" என்று மன்னன் கூறிய வார்த்தைகளைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. குடிசைக்குள் ஆசனம் எதுவும் இல்லாததால் தரையிலேயே அமர்ந்தார்.

இதற்கிடையில் மன்னன் அந்த இரவு நேரத்தில் அங்கு வந்திருப்பதை அறிந்து காவல் வீரர்கள் பலர் அங்கே வந்து விட்டனர்.

ராஜகுரு அங்கே இருக்கிறார் என்பதை அறிந்த அவர்கள் அவரை அழைத்துச் செல்லச் சிவிகை ஒன்றையும் கொண்டு வந்திருந்தார்கள்.

அவர்களையெல்லாம் தூரத்திலேயே நிறுத்திவிட்டு மன்னன் குடிசைக்குள் வந்து தரையிலேயே அமர்ந்தான்.

"ஏன் அரண்மனை வாசஸ்தலத்தை விட்டு என்னிடம் தெரிவிக்கவும் செய்யாமல் இந்தப் பகுதியில் இருக்கும் குடிசைக்கு வந்து விட்டீர்கள் குருநாதரே? என் மீது கோபமா? குற்றமா" என்று வினவினான்.

"என் இருப்பிடத்தை மாற்றிக் கொள்ள நான் யாரிடம் அனுமதிபெற வேண்டும் மன்னா?" என்று கேட்டார் ராஜகுரு.

"அனுமதி தேவையில்லை. இருப்பிடத்தை மாற்றிக் கொள்வ தற்குக் காரணம் என்று ஒன்று இருக்க வேண்டும் அல்லவா?"

"மன்னா! நாய் ஒன்று தான் எஜமானன் தள்ளைத் துன்புறுத்தினாலும் அவனையே சுற்றிச் சுற்றி வரும். வேறு எந்த விலங்கிற்கும் விசுவாசம் கிடையாது. மனிதர்களைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். சிறிய பிணக்குத் தோன்றினாலும் கணக்கை மாற்றிக் கொள்வார்கள்."

"என்னிடத்தில் பீடிகை எதற்கு குருநாதரே? நான் செய்த பிழை என்ன?"

"நந்திவர்மா! பற்பல பதவிகளில் பலர் அமர்ந்திருக் கிறார்கள். அந்தப் பதவிகளில் அவர்கள் தொடர்ந்து அமரவேண்டுமானால் அதற்கு ஒரு அர்த்தம் இருக்க வேண்டும். இல்லாது போனால் அப்பதவியில் அமர்ந்திருப் பவர்கள் விலகிக் கொள்வார்கள். நான் உனது ராஜகுரு என்ற பதவியை விட்டு விலகி விட்டேன். விலகிவிட்ட பிறகு மாளிகையை விட்டும் வெளியேறி விட்டேன்."

"என்ன ஆகி விட்டது என்று விலகிவிட்டீர்கள்?"

"ராஜகுரு என்ற பதவிக்கு உயர்வை அளித்த நீ சமீபகாலமாக அந்த உயர்வைத் தாழ்த்திக் கொண்டு வருகிறாய். அது எனக்கு ஏற்புடையதாக இல்லை. அது குறித்து உன்னோடு விவாதிப்பது எனக்கு அகௌரவம். ஆகவே பதவியிலிருந்து விலகி விட்டேன்."

"எதை நீங்கள் குறிப்பிடுகிறீர்கள்?"

"பெண்ணாகடப் போரை நடத்த நீ அனுமதி கேட்ட போது நான் என்ன சொன்னேன்? வெற்றி வீரனாகத் திரும்பு என்றேன். வெற்றிக்கான வழியையும் சொன்னேன். உண்மையா இல்லையா?"

"உண்மைதான்."

"பல்லவ ராஜ்யமானது விஸ்தாரமாகி பாண்டிய நாட்டு எல்லைகளைத் தொடக் கூடிய நிலையில் இருந்தது. அதை முறியடிப்பதற்காகவே பாண்டிய மன்னன் நெடுஞ்சடையன் மதுரையிலிருந்து படைநடத்தி வந்தான். அவனுக்குச் சோழச் சிற்றரசர்கள் ஆதரவு அளித்தார்கள் நம்மிடமிருந்து சுயாட்சி பெற விரும்பியதால். எனவே பாண்டியப் படைகள் சோழ நாட்டிற்குள் பிரவேசித்த போது சோழர்கள் எதிர்ப்பது போலப் போக்குக் காட்டினார்களே தவிர எதிர்க்கவில்லை. பாண்டியர் படையின் மார்க்கத்தை நான் கணித்தேன். அப்படை வரும் வழியில் காவிரிக்கரையில் பெண்ணாகடக் கோட்டை இருந்தது. அதில் உன்னைப் போய் ஆக்கிரமித்துக் கொண்டு பாண்டியர்களை எதிர்கொள்ளும் படிச் சொன்னேன்.

உனது படைத் தலைவர்களுக்குக் கூடத் தோன்றாத யோசனையை உனக்குச் சொன்னேன். ராஜகுருவாக இருந்து நான் காட்டிய வெற்றி மார்க்கம் அது. நீயோ அதைக் கோட்டை விட்டாய். எனது ஆலோசனை சிறப்பானது என்றும் உகந்தது என்றும் கருதுபவனாக இருந்திருந்தால் நீ கோட்டை விட்டிருக்க மாட்டாய். தோற்றிருக்க மாட்டாய். மொத்தத்தில் என் யோசனையை நீ புறக்கணித்து விட்டாய். பிறகு எதற்கு ராஜகுரு?"

"குருநாதரே! உங்கள் யோசனையைப் புறக்கணிக்கும் எண்ணம் எனக்கு எள்ளளவும் இல்லை. பல்லவர் படை தெற்கு நோக்கிச் சென்ற போது கெடிலம் ஆற்றில் திடீர் வெள்ளம் பெருக்கெடுத்ததால் படைகள் முன்னேற இரண்டு நாட்கள் தாமதமாகி விட்டன.

ஆகவே நாங்கள் செல்வதற்குள் பாண்டியப் படை பெண்ணாகடத்தை அடைந்து கோட்டையைப் பிடித்துக் கொண்டது. நிலைமை தலைகீழாகி விட்டது."

"போர்க் காலங்களில் நிலைமைகள் எதிர்பாராத விதத்தில் மாறும். அதற்கேற்ப நம்மை மாற்றிக் கொள்ள வேண்டும். நீ அவ்வாறு செய்யத் தவறியதின் விளைவுதான் தோல்வி."

"அப்படியில்லை ஐயா. நாங்களும் எங்கள் அணுகு முறையை மாற்றிக் கொண்டு தான் போரிட்டோம். ஆனால் பாண்டியர்களுக்குச் சோழச் சிற்றரசர்கள் மறைமுகமாக உதவிய காரணத்தால் தான் தோல்வி தவிர்க்க முடியாததாகி விட்டது."

"இதை நம்புவதற்கு நான் குழந்தையல்ல மன்னா. நீ வெற்றி பெறுவதற்கு முனைப்புக் காட்டவில்லை. உன் செயல்பாடு இதுவரை அப்படித்தானே இருந்திருக்கிறது. நீ தோல்விகளை விரும்புபவன். தோல்விகளின் துணைவன். உனக்கு எந்தவிதமான போர்த்திட்டமும் ஏற்புடையதாகாது. நான் உனக்கு ராஜகுருவாகப் பதவியேற்ற போது நீ ஒரு போரில் கூட வெற்றி பெறவில்லை என்பதை அறிந்தேன். அச்சமயத்தில் தான் பெண்ணாகடப் போர் வந்தது. இந்தப் போரில் உன்னை வெற்றி வீரனாக மாற்றிக் காட்டுவதாகப் பிரதிக்ஞை எடுத்தேன். படுப்பான திட்டத்தையும் சொன்னேன். நீயோ பழைய கதையையே அரங்கேற்றி வருகிறாய். ராஜகுரு யோசனைக்குப் பிறகும் தோல்விதான் உனது முகம் என்றால் நான் எதற்கு?"

"குருநாதரே! எனக்கு என்ன சாபமோ தெரியவில்லை. போர்களில் தோல்விகளே கிட்டுகின்றன. உங்கள் ஆலோசனை யையும் புறக்கணித்தேன் என்று மட்டும் சொல்லாதீர்கள்."

"சொல்லமாட்டேன். ஒரு வாக்குறுதியை எனக்கு நீ அளிப்பாயா?"

"சொல்லுங்கள்."

"நான் ராஜகுருவாக நீடிக்க வேண்டும் என்றால் ஒரு போரிலாவது நீ வெற்றிவாகை சூடவேண்டும். அதற்கான களத்தை நானே தேர்வு செய்து தருகிறேன். என்ன சொல்கிறாய்?"

மன்னன் சிரித்தான்.

"எதற்காகச் சிரிக்கிறாய்?"

"எல்லோரும் என்னிடம் வெற்றியைத்தான் விரும்புகிறார்கள். ஆனால் உண்மையான வெற்றி எது என்பதை உணர்வதில்லை."

"நீ வேதாந்தியாகப் பேசாமல் வேந்தனாகப் பேசு. வேந்தனாக நடந்து கொள்."

"நல்லது குருநாதரே. இறைவனின் சங்கல்பம் அவ்வாறு இருக்குமானால் அது நிச்சயமாக இருக்கும். நீங்கள் அரண்மனைக்கு வாருங்கள்."

"இரு. இரு. நான் நீண்ட நாட்களாகச் சொல்லி வரும் தில்லை விவகாரம் என்ன ஆயிற்று?"

"யோசித்துக் கொண்டு தான் இருக்கிறேன் குருநாதரே."

"எவ்வளவு காலத்திற்கு யோசிப்பாய்? நான் சொல்லியே ஆறுமாதங்கள் ஆகிவிட்டன."

"உண்மைதான் ஐயா. எனக்கென்னவோ அது தேவை யில்லை என்று தோன்றுகிறது."

"நீ திருமால் பக்தன் தானே?"

"முகுந்தனே எனது இறைவன். முகுந்தனின் திருவடிகளைத் தவிர வேறு எவருடைய அடிகளையும் தொழமாட்டேன்."*

"நீ கூறுவது சத்தியம் என்றால் நான் கூறுவதைச் செய்வதற்கு உனக்கேன் தயக்கம்?"

"குருநாதரே! அகிலமே போற்றத் தகுந்த விதத்தில் காஞ்சியில் வைகுண்ட நாதனுக்கு விண்ணகரத்தை எழுப்பிக் கொண்டிருக்கிறேன். விரைவில் அது முடிவடைய இப்பிரதிஷ்டைக் குரிய காரியங்கள் வேகமாக நடந்து கொண்டிருக்கின்றன. ஏற்கனவே நந்திபுரத்தில் ஒரு விண்ணகரத்தை எழுப்பி

* பாகம் 186 பல்லவர் வரலாறு. By. இராச மாணிக்கனார்.

யிருக்கிறேன். இந்த நிலையில் நீங்கள் கூறிய யோசனைப் படி நடந்து கொள்வதற்குத் தயக்கமாக இருக்கிறது."

"நந்திவர்மா! நீ வழிப் போக்கனோ யாத்ரீகனோ அல்ல தயங்கிக் கொண்டிருப்பதற்கு. மன்னன் நீ. மாமன்னன் நீ. சாம்ராஜ்யாதிபதி நீ. நீ தயங்கினால் எப்படி? திருமாலுக்கு ஆலயம் எழுப்புவதற்கு கணக்கு என்று இருக்கிறதா என்ன? இல்லை.

பரமபாகவதனான நீ நினைக்கும் இடத்தில் திருமாலுக்கு ஆலயங்களை எழுப்பலாம். உனக்கில்லாத உரிமை யாருக்கு இருக்கிறது? மன்னர்கள் முயலாவிட்டால் வேறு யார் முயல்வார்கள்? மன்னனின் செய்கைகளுக்குத் தடை போட யாரால் முடியும்? யாருக்கு அந்தத் தகுதியும் திராணியும் இருக்கிறது? எல்லாவற்றையும் யோசித்து விட்டுத் தான் இந்த யோசனையைச் சொன்னேன். சோழ நாடு இப்போது உன் ஆதிக்கத்தில் தான் இருக்கிறது. தில்லை என்னும் சிதம்பரம் சோழ நாட்டில் தான் இருக்கிறது. உன் கட்டுப்பாட்டில் இருக்கும் அந்த நகரத்தில் தான் நடராஜர் கோயில் இருக்கிறது. உனது கட்டுப்பாட்டில் இருக்கும் நடராஜர் கோயிலில் திருமாலுக்கு ஒரு கோயிலை ஏன் நீ கட்டக் கூடாது?" என்று கேட்டார் ராஜகுரு.

★★★



யோகினி

"குருநாதரே! எம்பெருமான் முகுந்தனுக்குத் தாங்கள் கூறுவது போல் எத்துணை ஆலயங்களை வேண்டுமானாலும் எழுப்பலாம். ஆனால் சிவாலயம் ஒன்றுக்குள் பெருமாளுக்கு ஆலயம் எழுப்புவது அவசியம் தானா?" என்று கேட்டான் நந்திவர்மன்.

"மன்னா! உலகமறியாதவனைப் போலப் பேசுகிறாய். வியப்பாக இருக்கிறது எனக்கு. திருவரங்கத்திற்கு அருகில் இருக்கும் கரம்பனூர் கோயிலில்* மும்மூர்த்திகளுக்கும் விக்கிரகம் இருக்கிறது. வழிபாடு நடக்கிறது. அப்படி இருக்கும் போது தில்லை நடராஜர் கோயிலுக்குள் பெருமாள் கோயிலைக் கட்டுவது எப்படித் தவறானதாகும்?" என்று கேட்டார் ராஜகுரு.

"ஐயா! கரம்பனூர் விஷயம் வேறு. கோயிலைக் கட்டும் போதே மும்மூர்த்திகளுக்கு என்று வரையறுக்கப் பட்டு கட்டப்பட்டது. அங்கே பிரச்சனை இல்லை. தில்லையின் நிலவரம் வேறு. அது சைவர்களின் கோட்டை. அங்கிருக்கும் நடராஜர் கோயில் சைவர்களுக்கு கையலாயத்தைப் போன்றது. தில்லை மூவாயிரவருக்கு அது சிவ பீடம். சோழர்களுக்கு அத் தெய்வம் குல தெய்வம். அனைத்து சைவ விழாக்களும் அங்கே நிறைவாகவும் சிறப்பாகவும் நடைபெற்று வருகிறது. அங்கே போய்ப் பெருமாள் கோயிலைக் கட்டி எதற்காகப் பிரச்சனையை உருவாக்க வேண்டும்?"

"நந்திவர்மா! கடல்மல்லையில்** நடந்த விவகாரம் உனக்குத் தெரியுமா? கடற்கரையில் முதன் முதலில் பெருமாளுக்குத் தான் கோயில் கட்டப்பட்டது. அதைக் கட்டியவர் நரசிம்மப் பல்லவர் என்று கூறுகிறார்கள்.*** ஆனால் அவருக்குப் பிறகு வந்த அவரது பேரரான இராஜசிம்மப் பல்லவர் சிறந்த சிவபக்தர்.

---

* தற்போது உத்தமர் கோயில் என்று அழைக்கப்படுகிறது.

** இன்றைய மாமல்லபுரம்

*** தொல்லியல் துறைமுன்னாள் இயக்குனர் முனைவர். இரா. நாகசாமி அவர்கள் இந்தக் கோயில் முதலில் கட்டப்பட்டது என்றும் அது நரசிம்ம வர்மனால் கட்டப்பட்டிருக்கலாம் என்றும் கூறுகிறார்.

இக்காஞ்சியில் கைலாயநாதர் கோயிலை மிகஅற்புதமாகக் கட்டிச் சிற்பக் கலைக்குப் பெருமையைச் சேர்த்தவர் அவர். அக் கோயிலைப் பார்த்து விட்டுத் தான் நீ அதற்கு நேர்எதிர்திசையில் விண்ணகரத்தைக் கட்டுகிறாய். கிழக்கு நோக்கி அமைந்திருக்கும் கைலாசநாதர் கோயிலுக்கு எதிரில் மேற்கு நோக்கி அமையும் வண்ணமாய் விண்ணகரம் கட்டப்பட்டு வருகிறது. சிவனைப் பெருமாள் பார்க்கிறமாதிரியும் பெருமாள் சிவனைப் பார்ப்பது போலவும் அமைந்த அமைப்பு அது. அதை விடு. சிவநேசச் செல்வரும் சைவசிகாமணியுமான பல்லவ மாமன்னர் காஞ்சியில் சிவபெருமானுக்குச் சிவாலயம் எழுப்பியதோடு நின்றிருக்கலாம். அவர் அப்படி இருந்துவிடவில்லை. கடல்மல்லையில் இருந்த பெருமாள் கோயிலுக்கு மேற்கிலும் கிழக்கிலுமாக இரண்டு சிவாலயங்களைக் கட்டினார்.* சிவனேசச் செல்வரான அவர் பெருமாள் கோயிலைப் பற்றிக் கவலைப்படாமல் ஈசனுக்குக் கோயிலைக் காட்டினார். யாராவது அதற்கு எதிர்ப்பு தெரிவித்தார்களா? இல்லை நந்திவர்மா. சிவனடியார்கள் சிவனைத் தொழுகிறார்கள். திருமால் அடியார்கள் பெருமாளைத் தொழுகிறார்கள். எல்லாம் இயல்பாகத் தானே நடக்கின்றன? அதுபோலத்தான் தில்லை நடராஜர் கோயிலில் பரமபாகவதனான நீ பெருமாளுக்கு ஒரு கோயிலைக் கட்டு. நடராஜரைத் தரிசிப்பவர்கள் நடராஜரைத் தரிசிப்பார்கள். திருமால் அடியார்கள் பெருமாளைத் தரிசிப்பார்கள்."

"குருநாதரே! வழக்கத்திற்கு விரோதமாக சிவலாயத்தில் பெருமாள் கோயில் ஒன்றை நாம் கட்டினால் தில்லையில் உள்ள மூவாயிரவர் திருவரங்க ஆலயத்திற்குள் ஒரு சிவன் கோயிலைக் கட்டும் படிச் சொன்னால் என்ன செய்வது?"

"தில்லை வாழ் சைவர்களுக்கு நீயே யோசனையைச் சொல்லிக் கொடுப்பாய் போலிருக்கிறதே! நல்ல மன்னன் நீ. கடல்மல்லையில் ராஜசிம்மர் பெருமாள் கோயிலை மறைத்து சிவாலயம் கட்டியபோது மக்களில் யாரும் நீ கேட்பது போல் கேட்கவில்லை. அப்போது கேட்காதவர்கள் இப்போது கேட்பார்களா? நீ மன்னனாக இருந்து செயல்களைச் செய். உன்னை மீறி எதுவும் நடக்காது. நீ கூறியது போல் திருவரங்க ஆலயத்திற்குள் சிவாலயம் எழுப்ப வேண்டும் என்று தில்லை வாழ் அந்தணர்கள் கோரிக்கையை வைத்தால் மன்னன் என்ற முறையில் அதை

---

* இதை தற்போதும் கடற்கரை கோயிலில் காணலாம். அக்கோயில்கள் முதலில் வழிபாட்டுத் தலங்களாக இருந்தன. கடல் சீற்றத்தில் பழுதான போது அவை வழிபாட்டுத் தலங்களாக இல்லை. பலநூற்றாண்டுகளுக்குப் பிறகு விஜயநகர மன்னர்கள் மாமல்லபுரம் நகரத்தில் புதியதாக ஒரு கோயிலைக் கட்டி அதில் புதியதாகப் பெருமாள் சிலையை பிரதிஷ்டை செய்தார்கள். இந்த விவரம் அந்த ஆலயத்திலேயே பதிவு செய்யப்பட்டுள்ளன.

நிரா கரிக்க உனக்குச் சகல உரிமையும் உண்டு. மன்னனாக இருப்பவன் அன்பை மட்டுமே காட்டுபவனாக இருக்கக் கூடாது. தன் உரிமைகளை நிலைநாட்டுபவனாகவும் இருக்க வேண்டும். பசுவும் மன்னன் தான். பாயும் புலியும் மன்னன் தான். இவ்விரண்டையும் மக்களுக்கு உணர்த்துவதற்கு மன்னனானவன் தயங்கக் கூடாது. மயங்கக் கூடாது. மன்னன் எந்த மதத்தைத் தழுவி நிற்கிறானோ அந்த மதத்திற்காகச் சகலத்தையும் செய்யக் கூடியவன் என்பதை மகேந்திரப் பல்லவர் காலம் தொட்டுப் பல்லவர்கள் நிரூபித்து வந்திருக்கிறார்கள். நீ மட்டும் தயங்க வேண்டிய அவசியம் என்ன? நீ பரம பாகவதன். உனது காலத்தில் வைணவம் உயர்வு பெறாவிட்டால் வேறு யார் காலத்தில் உயர்வு பெறும்? பெருமாள் கோயில்களுக்கு உன் காலத்தில் ஏற்றம் வராவிட்டால் வேறு யார் காலத்தில் வரும்? மகேந்திர வர்மர் சமணராக இருந்த போது சமணப்பள்ளிகளை ஆதரித்தார். அதே மன்னர் சைவ மதத்தைத் தழுவியபோது சமணப்பள்ளியை இடித்து விட்டு சிவாலயத்தைக் கட்டினார். யாரால் என்ன செய்ய முடிந்தது? உனக்கு முன்பாக பல காரியங்கள் புரட்சிகரமாக நடந்தேறியிருக்கின்றன. உன் ஆட்சியிலும் நடைபெற வேண்டும்."

"அதெல்லாம் சரிதான் குருநாதரே. தில்லை நடராஜர் கோயிலில் பெருமாள் கோயிலைக் கட்ட வேண்டும் என்று எதற்காக குறிப்பாகச் சொல்கிறீர்கள்?"

"குறிப்பாகச் சொல்லவில்லை. எங்கே வேண்டுமானாலும் பெருமாள் கோயிலைக் கட்ட முடியும் என்பது உன் காலத்தில் நிரூபிக்கப்பட வேண்டும். உன் செயல்களுக்கு அங்கீகாரம் கிடைக்க வேண்டுமே தவிர எதிர்ப்பு தலைகாட்டக் கூடாது. அதற்கு ஆரம்பமாகத் தில்லைத் திருச்சிற்றம்பலம் இருக்கட்டுமே என்று தான் சொன்னேன். சைவமும் வைணவமும் வேறு வேறு என்று மக்களுக்கு வித்தியாசத்தை உண்டாக்கக் கூடாது. இரண்டும் ஒன்று தான் என்ற சமத்துவ உணர்வு வரவேண்டும். அதற்கு நான் கூறிய காரியங்கள் மிகவும் உதவும்."

"நல்லது குருநாதரே. உங்கள் நோக்கம் நன்றாகத்தான் இருக்கிறது. வேண்டியவற்றுக்கு நான் ஆவன செய்கிறேன். நீங்கள் இந்தக் குடிசையை விட்டு விட்டு அரண்மனை மாளிகைக்கு வாருங்கள். அப்போதுதான் என்னால் நிம்மதியாகக் காரியமாற்ற முடியும்" என்றான் நந்திவர்மன்.

ராஜகுரு மறுப்பு தெரிவிக்கவில்லை.

★

மறுநாள் சேனாதிபதிகளில் ஒருவரான காடக முத்தரையரை அழைத்தான் மன்னன்.

"சேனாதிபதி! உங்களுக்கு நான்கு நாட்களுக்கு மாற்றுப் பணியை வழங்குகிறேன். தில்லைக்குச் சென்று நிலவரத்தைக் கண்டு வாருங்கள்" என்று சொல்லி ராஜகுரு கூறிய விஷயத்தைக் கூறினான்.

முத்தரையர் "இது என்ன விபரீதம்?" என்று கேட்பதைப் போலப் பார்த்தார்.

"இப்போது எதுவும் சொல்ல வேண்டாம். தில்லைக்குச் செல்லுங்கள். அங்கே இருக்கும் அந்தணர்களான தில்லை மூவாயிரவரைச் சந்தியுங்கள். தீட்சிதர்களைச் சந்தியுங்கள். மக்களைச் சந்தியுங்கள். நான் கூறிய விஷயத்தைக் கூறி அவர்களிடம் யோசனையைக் கேட்க வேண்டாம். மன்னனின் உத்தேசம் இதுதான் என்று உறுதியாகவே சொல்லி அவர்களின் கருத்தைக் கேளுங்கள். அவர்கள் என்ன சொன்னாலும் சரி. அவற்றை அப்படியே கேட்டுக் கொண்டு வந்து சொல்லுங்கள். உங்கள் கருத்தைச் சொல்ல வேண்டாம். மன்னனின் விசேஷப் பிரதிநிதியாகச் செல்லுங்கள். நான்கு நாட்களுக்கு மேல் அங்கே இருக்க வேண்டாம். வந்து விடுங்கள்" என்றான் மன்னன்.

"அப்படியே ஆகட்டும் மன்னவா" என்று கூறிவிட்டுச் சென்றார் காடகமுத்தரையர்.

★

காஞ்சியின் பிரபலமான கைலாச நாதர் ஆலயத்திற்கு அருகிலேயே அநேகதங்காவதம் என்ற சிவாலயம் ஒன்றிருந்தது. கைலாச நாதர் கோயிலை இராஜ சிம்மன் கட்டுவதற்கு முன் அச்சிவாலயம் பிரசித்திப் பெற்ற ஆலயமாகத் திகழ்ந்தது. இராஜசிம்மன் புதிய ஆலயத்தைச் சிற்ப விசித்திரமாக அமைத்து விழாக்களை அடுத்தடுத்து நடந்து வந்தபடியால் மக்கள் கூட்டமும் யாத்ரீகர்கள் கூட்டமும் கைலாசநாதர் கோயிலில் குவிந்தது.

நந்திவர்மன் முடி சூடிய புதிதில் காஞ்சியைக் கைப்பற்றிய சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்தன் முதன் முதலில் விஜயம் செய்தது கைலாயநாதர் ஆலயத்திற்குத்தான். அங்கே இருந்து சிற்பங்களும் ஓவியங்களும் அவனை வசீகரித்தன. சாதாரணமாக எதிரியின் நாட்டைக் கைப்பற்றும் மன்னர்கள் அந்த ஊருக்குப் பெருமை சேர்க்கும் கலைச் செல்வங்களை அழிப்பதற்குத் தங்கள் படைகளுக்கு உத்திரவிடுவான். ஆனால் சாளுக்கிய

விக்கிரமாதித்தன் அதற்கு நேர்மாறாக நடந்து கொண்டான். கைலாசநாதர் கோயிலை யாரும் சிதைக்கக் கூடாது என்றும் சிதைப்பவர்கள் பெரும் பாவிகள் என்றும் சொன்ன அவன் அதைத் தனது கட்டளையாகவே அக்கோயில் கல்வெட்டில் பொறிக்கச் செய்தான்.*

ஆக மாற்று தேசத்து மன்னர்களும் நேசிக்கும் ஆலயமாக கைலாசநாதர் கோயில் அமைந்து விட்டபடியால் அதன் அருகில் இருந்த அனேகதங்காவத ஆலயம் ஆரவாரங்களை ஒழித்து அமைதியின் உறைவிடமாக ஆயிற்று. சிறிய ஆலயமும் அதற்குப் பின்னால் மாமரத்தோப்பும் அமைதியின் அடையாளங்களாக இருந்தன.

ஆலயம் அங்கே அமைவதற்கு முன்னால் யானையைக் குலச் சின்னமாகக் கொண்ட பௌத்தர்கள் அங்கே வாழ்ந்திருந்த படியால் அநேகதங்காவதம் என்று அப்பகுதி அழைக்கப்பட்டது.**1

பிறகு அங்கே சிவாலயம் எழுப்பப் பட்டபின் விநாயகர் அனேகபேஸ்வரர் என்ற பெயரில் அங்கிருந்த சிவபெருமானை வழிபட்டார். வல்லபியை மணம் முடிப்பதற்கு வரமும் பெற்றார்.2

வினாயகர் வரம் பெற்ற அந்த சிவாலயத்தில் இருந்த மாமரத்தோப்பில் இடை இடையே தாலிப் பனைமரங்கள் வளர்ந்திருந்தன. மரங்களின் உயரம் குட்டையாகவும் ஓலைகள் பட்டையாகவும் கனமாகவும் இருந்தன. அக்காலத்தில் அரசாங்கச் செய்திகளைத் தாங்கிச் செல்லும் ஓலைகளாகத் தாலிப் பனைமர ஓலைகளே பிரதானமாக இருந்தன.

முதிர்ந்த பனை ஓலைகளைப் பறித்து, சுத்தம் செய்து, அளவாக வெட்டி நூறு நூறு என்று அடுக்கி வைத்து பட்டு நூலில் கட்டப்படும் பணியைப் பெண்கள் அங்கே செய்து வந்தார்கள். பல்லவ அரசு பெரும்பாலும் அவ்வோலைகளையே வாங்கிப் பயன்படுத்தி வந்தது. அரசாங்கத்தைத் தவிர்த்து தனவந்தர்களும், வணிகர்களும், புலவர்களும் கூட அவற்றை வாங்கிப் பயன்படுத்தி வந்தார்கள். ஓலைகள் மிகவும் குறைந்த விலையில் விற்கப்பட்டன. ஏறக்குறைய தர்மகாரியம் போலவே அப்பணி நடந்து கொண்டிருந்தது.

அப்பணியை இளம்பெண் ஒருத்தி ஒழுங்குபடுத்தி கண்காணித்துக் கொண்டிருந்தாள். அவளிடம் அபூர்வமான அழகு உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை அமைந்திருந்தது.

---

* கன்னட மொழியில் அமைந்த இக்கல்வெட்டை ஆலயத்தில் காணலாம்.

** பக்கம் 69 'காஞ்சிபுரம் மாவட்டக் கலைகள்' தொகுதி 2. பதிப்பாசிரியர் நடன காசிநாதன் மற்றும் மா. சந்திரமூர்த்தி.

ஆனால் அவளைக் காண்பவர் எவரும் அவளது அழகில் மயங்கி விடாத வண்ணம் அவள் முகத்தில் அமைதியும் தீட்சண்யமும் நிலவியது. சாதாரண இளம் பெண்களுக்குரிய வண்ண ஆடைகளும், எண்ண முடியாத பொன்னாபரணங்களும், பல்வேறு ஒப்பனைகளும் அவளிடம் இல்லை. வெண்ணிற ஆடையை மட்டுமே அணிந்திருந்தாள். நெற்றியில் குங்குமப் பொட்டு மட்டுமே ஆபரணம் போல விளங்கியது. அவள் அதிகமாகப் பேசுவதில்லை. அங்கே இருப்பவர்களையும் அங்கே வருபவர்களையும் பேச்சைக் குறைக்கும்படி சொல்லுவது அவளது வழக்கம்.

இளம் ஞானியைப் போலக் காட்சியளிக்கும் அவள் சில நேரங்களில் தன்னோடு பேச விரும்பும் மனிதர்களோடு சற்றுப் பேசுவாள். அந்தப் பேச்சு அசாதாரணமானதாக இருக்கும். யோகிகள் பேசுவது போல் இருக்கும். மற்றபடி அவளது மௌனமே பலருக்கும் போதுமானதாகவும் இதமானதாகவும் இருக்கும்.

சில ஆண்டுகளுக்கு முன்னால் பறவையைப் போல அங்கு வந்த அவள் நடந்து கொண்டவிதம் அனைவரையும் வியக்க வைத்தது. அங்கே காய்ந்து போய் குலைந்து கிடந்தத் தாலிப் பனைமரங்களை அவள் உயிர்ப்பித்தாள். ஓலை நறுக்குகளாக அவற்றை மாற்றும் பணியை மேற்கொண்டாள். அதற்காகச் சில பெண்களை உதவிக்கு வைத்துக் கொண்டாள்.

அவளை எல்லோரும் யோகினி என்றே அழைத்தார்கள். அவளது பெயரையோ, ஊரையோ, குலத்தையோ யாரும் கேட்கவில்லை.

ஒருசமயம் அவளைப் பற்றிக் கேள்விப்பட்ட மன்னன் நந்திவர்மன் அவளை அங்கு வந்து சந்தித்தான். அவளைக் கண்டதுமே அவனுக்குள் அமைதி உண்டாவதை உணர்ந்தான். அவள் சாதாரணமானப் பெண்ணல்ல யோகினி தான் என்று கருதினான்.

அவள் செய்து வந்த ஓலைப்பணி அவனை மிகவும் கவர்ந்தது.

"இளம்பெண்ணிற்குரிய லட்சணங்கள் முழுமையாக இருந்தாலும் நடப்புகள் யாவும் அவ்வாறு இல்லை." என்றான் மன்னன் அவளிடம்.

"தோற்றமும் பொய். நடப்பும் பொய். எல்லாம் மாயை மகாராஜா" என்றாள் அவள்.

"இதை உன் அறிவு உணர்த்தியதா? அனுபவம் உணர்த்தியதா?" என்று கேட்டான் மன்னன்.

"அறிவு ஆணவத்தையே படியச் செய்யும். உண்மையை மறுக்கத் தூண்டும். சுய அனுபவம் தான் உண்மையை உணர்த்தும்." என்றாள் அவள்.

"மிக்க மகிழ்ச்சி. நீ காஞ்சியில் இருப்பது காஞ்சிக்குப் பெருமை. உனக்கு ஏதாவது குறைவு உண்டா இங்கு?" என்று கேட்டான் மன்னன்.

"இருப்பது நிறைவாக இருக்கிறது மகாராஜா" என்றாள் அவள்.

அதற்குப் பிறகு அவன் அடிக்கடி அனேக தங்காவதத் தோப்பிற்கு வந்து அவளைச் சந்தித்து விட்டு ஒரு சில வார்த்தை களைப் பேசினான்.

அவள் காஞ்சிக்கு வந்து சில ஆண்டுகளே ஆகியிருந்த படியால் அவள் வந்ததற்குப் பிறகு பெண்ணாகடம் போர் வந்தது. ஞானகுரு, ராஜகுரு ஆகியோரிடம் அனுமதி கேட்டது போல் அவளிடம் அனுமதி கேட்டான்.

"அனுமதி கேட்பது யார்?" என்று கேட்டாள் யோகினி.

நந்திவர்மன் சற்று ஏறிட்டுப் பார்த்துவிட்டு "நான் தான்" என்றான்.

★★★



அத்வைத அணங்கு

நந்தி வர்மன் சற்று யோசித்து விட்டு "என்னைத் தான் சொல்கிறேன்" என்றான்.

"அதாவது உங்கள் உடம்பைத் தானே மகாராஜா?"

"ஆமாம்"

"நல்லது. போருக்குச் சென்று வெற்றியோடு திரும்புங்கள்" என்றாள் யோகினி.

நந்திவர்மன் பெண்ணாகடப் போருக்குச் சென்று தோல்வி யுற்றுத் திரும்பிய பின் ஞானகுரு, ராஜகுரு ஆகியவர்களைச் சந்தித்து யோகினியைச் சந்திப்பதற்காகப் புறப்பட்டான்.

மன்னன் வருகிறான் என்று அறிந்து தோப்புப் பகுதி பதற்றத்திற்கு ஆளாக வில்லை. ஆரவாரத்திற்குத் தயாராகவில்லை. எப்பொழுதும் போல பணிகள் நடந்தன. எப்போதும் போல அமைதி நிலவியது.

ஒருசிலர் யோகினியிடம் தங்கள் சந்தேகங்களைக் கேட்டுத் தெளிவுபெற விரும்பினார்கள்.

அவர்களை அனுமதித்து; தனக்கு முன்னால் அமர வைத்து "கேளுங்கள்" என்றாள் யோகினி.

"தாயே! பிரம்மச்சரியம் என்றால் என்ன?" என்று கேட்டார் ஒருவர்.

"காமத்தில் ஈடுபடாதிருத்தல் தான் பிரம்மச்சரியம் என்று பலரும் நினைக்கிறார்கள். அது ஒரு சிறு பகுதி தான். பிரம்மத்தில் எப்போதும் ஆழ்ந்திருத்தலே பிரம்மச்சரியம். ஆன்மாவில் நிலைத்திருப்பதே பிரம்மச்சரியம். காமத்திற்கும் இதற்கும் சம்பந்தமில்லை" என்றாள் யோகினி.

மற்றொருவர் முன்வந்து "இந்த உலகம் வெறும் பொய்த் தோற்றம் என்கிறீர்கள். அப்படி எதுவும் இல்லை என்கிறீர்கள். அது எங்களுக்கு விளங்கவில்லை. உலகத்தை நாம் கண்ணால்

காண்கிறோம் அல்லவா? அதை இல்லை என்று எப்படிச் சொல்வது?" என்று கேட்டார்.

"நீங்கள் உறங்குகிறீர்களா?"

"உறங்குகிறேன்."

"உறங்கும் போது இந்த உலகம் தெரிகிறதா? உலகைப் பற்றிய உணர்வு இருக்கிறதா?"

"இல்லை."

"உறக்கத்தில் நீங்கள் உயிரோடுதான் இருக்கிறீர்கள். இருப்பினும் உலக உணர்வோ உடல் உணர்வோ இல்லாமல் இருக்கிறீர்கள். அது எப்படி?"

"உறக்கத்தில் எப்படித் தெரியும்?"

"சரி. உறக்கத்திலிருந்து விழித்தவுடன் உலகம் தெரிகிறது. உடல் உணர்வு தெரிகிறது. அது எப்படி? ஒன்று உண்மையானது என்றால் எப்போதும் காணக்கூடியதாகவும் உணரக்கூடியதாகவும் இருக்க வேண்டும். விழித்திருக்கும் போது தெரிவதும் உணரக் கூடியதுமாக இருப்பதும் உறங்கும் போது தெரியாமலும் உணரமுடியாமலும் இருப்பதுமாக இருந்தால் அது எப்படி உண்மையானதாக இருக்க முடியும். ஆகவே தான் அவை பொய் என்று கூறப்படுகிறது" என்று சொன்ன யோகினி சிறிது நேரம் அமைதியாக இருந்து விட்டுப் பிறகு சொன்னாள்.

"உறங்குவதற்கு முன் உலகம் தெரிகிறது. உலக நடப்புகள் தெரிகின்றன. நம்மிடம் உள்ள வியாதிகளும் வலிகளும் தெரிகின்றன. அவற்றுக்குக் காரணம் எண்ணங்கள் நம்மோடு இருப்பது தான். உறங்கும் போது எண்ணங்கள் அகன்று விடுவதால் எல்லாம் அகன்று விடுகின்றன. விழித்துக் கொண்டதும் எண்ணங்கள் வந்து நம்மோடு ஒட்டிக் கொள்கின்றன. அப்போது மேலே சொன்ன எல்லாமும் தெரிகின்றன. உணரப்படுகின்றன" என்றாள்.

"அதற்காக நாம் உறங்கிக் கொண்டே இருக்க முடியுமா தாயே?"

"வேண்டியதில்லை. பாம்பு கயிறு போல் தெரிகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அதற்குத் தீர்வு என்ன? கயிறுக்குப் பதிலாகப் பாம்பைக் கொண்டு வந்து வைப்பதல்ல. பாம்பைக் கயிறாக எண்ணும் எண்ணம் தான் மாறவேண்டும். இந்த உலகம் உண்மை என்று கருதும் எண்ணம் தான் மாற வேண்டுமே தவிர உலகத்தை மாற்ற முடியாது."

"விளங்கவில்லை தாயே."

"உறங்கும் போது எதையும் உணரமுடியாமல் செய்யும் எண்ணங்களை விழித்திருக்கும் போது அகற்ற முடியுமானால் உலகம் நமக்குத் தெரியாது. ஆன்மா மட்டுமே உணரத்தக்கதாகவும் அதற்கு அயலாக எதுவும் இல்லை என்பதும் விளங்கும்."

"அதற்கு வழி?"

"தியானத்தில் ஆரம்பிக்கலாம்."

"தியானம் என்பது என்ன?"

"வேறு நினைவுகள் இல்லாமல் இருப்பது தியானம். தியானத்தில் மனம் கட்டுப்படும். அது ஆரம்பவழி. மனத்தைக் கொண்டே மனத்தை அழிக்க வேண்டும். அது இடைவிடாத பயிற்சியால் வரும். அப்படி வரும்போது விழிப்பு நிலையிலும் சரி உறக்க நிலையிலும் சரி இருப்பது ஆன்மா மட்டுமே என்பதை உணரலாம்."

யோகினி இவ்வாறு சொன்னதும் கேள்வி கேட்டவர் பரவசமடைந்தபடிச் சென்றார்.

மற்றொருவர் பேசமுற்பட்டு "கர்மங்களைப் பற்றிக் கூறுங்கள் தாயே" என்றார்.

"கர்மங்கள் மூன்று வகை என்று சொல்கிறார்கள். கடந்த பிறவிகளில் நாம் நமது வினைகளால் சேர்த்து வைத்திருக்கும் புண்ணிய-பாவங்கள் சஞ்சித கர்மம் ஆகும். நாம் பிறக்கும்போது இருக்கும் கர்மக் கணக்கு அது. அவற்றில் இப்பிறவியில் நாம் அனுபவிக்க வேண்டியது எதுவோ அதற்குப் பிராரப்த கர்மம் என்று பெயர். இவை போக மீதியுள்ளதும் இப்பிறவியில் நாம் சேர்த்த புண்ணிய பாவங்களும் சேர்த்து என்ன கணக்கு வருகிறதோ அது ஆகாமிய கர்மம் எனப்படும்." என்று சொன்ன யோகினி "இந்த கர்மம் எல்லாம் யாருக்கு? என்பதை அறிவது தான் ஞானம்" என்றாள்.

அந்தநிலையில் மன்னன் நந்திவர்மன் தோப்பில் பிரவேசித்தான்.

தோப்பில் இருந்த வெண்ணிற மயில்கள் அவனைக் கண்டதாலோ என்னவோ தோகையை விரித்து ஆடின. கறுமையாக இருந்த சீனத்து காக்கைகள் இரண்டு அந்த மயில்களைக் கண்டு கீக் கீக் என்று கத்தின. அக் காட்சியானது ஞானத்தைக் கண்டு அஞ்ஞானம் அலறுவது போலிருந்தது.

தோப்பில் அந்த வெண்மைநிற மயிலைப் போல் வெண்ணிற ஆடையில் அமர்ந்திருந்தாள் யோகினி. அவளுக்கு முன்னால் அமர்ந்திருந்தவர்கள் அகன்று விட்டிருந்தார்கள்.

"வாருங்கள் மகாராஜா. அமருங்கள்" என்றாள் யோகினி.

"தென்றல் புயலை வரவேற்பது போல் இருக்கிறது உன் பேச்சு" என்று சொன்ன மன்னன் "நீ வெள்ளாடை அணிந்து வெள்ளை மனத்தோடு இருப்பதால் தான் இங்கே உள்ள மயில்களும் வெண்ணிற மயில்களாகவே உள்ளனவா?" என்று கேட்டான்.

"கறுப்புக் காக்கைகளும் உள்ளன மகாராஜா. பகலும் இரவும் கலந்திருப்பது போல் எங்கும் எதுவும் கலந்திருக்கின்றன." என்றாள் அமைதியாக.

அவளால் மட்டுமே அப்படிப் பேசமுடியும் என்று தோன்றியது மன்னனுக்கு.

"யோகினி! நீ வாழ்த்தியனுப்பிய போதும் போரில் நான் வெற்றி பெறவில்லை" என்றான் மன்னன்.

"ஞானிகளுக்கு வெற்றியில்லை. தோல்வியில்லை. போரும் இல்லை." என்றாள் யோகினி.

"உன் பேச்சு உனக்கே உரியது. உன்னால் மட்டுமே பேசமுடியும். நீ ஞானி" என்றான் மன்னன்.

"நான் ஞானியல்ல மகாராஜா. அத்வைதி. அவ்வளவுதான்."

"உனக்கும் எனக்கும் இருக்கும் இடைவெளி மிகவும் அதிகம் யோகினி. ஞானத்திற்கும் அஞ்ஞானத்திற்கும் உள்ள இடைவெளியைப் போன்றது."

"மகாராஜா! அத்வைதிக்குத் தன்னைத் தவிர அயலாக எதுவுமில்லை. ஆகவே உங்களுக்கும் எனக்கும் என்று இரண்டு விஷயங்களுக்கு இடமில்லை. ஆகவே இடைவெளி இல்லை."

"நான் அத்வைதனாகச் சிந்திக்க இப்போது இயலாது என்றே தோன்றுகிறது. நான் மனங்களில் மட்டும் சிக்கியிருக்கவில்லை. மதங்களிலும் சிக்கியிருக்கிறேன். என் மதத்தைத் தவிர இதர மதங்களின் மீது ஈடுபாடு அற்றுப் போய் வருகிறது."

"ஏதோ ஒரு மத சித்தாந்தத்தை நாம் அபிமானித்தால் பிற மதச் சிந்தாந்தங்களைக் கண்டிக்க நேர்கிறது. மதத் தலைவர் களுக்கும் மடாதிபதிகளுக்கும் இதுதான் பிரச்சனை. யதார்த்தம். அவர்களைப் பின்பற்றுபவர்களுக்கு இதுதான் நிலை."

"இதிலிருந்து நாம் மீளவே முடியாதா?"

"நாம் எதிலும் சிக்கியிருக்கவில்லை. சிக்கியிருப்பதாக நினைத்துக் கொண்டிருப்பதால்தான் அவதிப்பட வேண்டியிருக்கிறது. நம்மிடமிருந்து நினைப்பை அகற்றினால்

தான் நாம் யார் என்பது புரியும். நாம் யார் என்பது புரிந்து விட்டால் மற்றவை எதுவும் நமக்குத் தட்டுப்படப் போவதில்லை. அதுவே ஞானத்தின் இறுதி.”

அவளோடு தத்துவ விசாரணையில் ஈடுபட மன்னன் விரும்பவில்லை. அதோடு பரமபாகவதனாக இருந்து கொண்டு திருமாலுக்கு விண்ணகரங்களை எழுப்பி இறைவனை விக்கிரக வடிவில் தரிசிக்க வைத்த ஆழ்வார்கள் வழியில் தீவிரமாக ஈடுபட்டு வந்தவனுக்கு நேர்மாறாக யோகினி அத்வைதச் சிந்தாந்தங்களையே* பேசிவந்ததால் அதை ஏற்கவும் முடியாமல் மறுக்கவும் முடியாமல் தொடர்ந்து அவளோடு அந்த மார்க்கத்தில் பேச விரும்பாமல் அவள் செய்து வரும் ஓலைப் பணிகளைப் பாராட்டிவிட்டு அங்கிருந்து புறப்பட்டான்.

★

காஞ்சிக்கு வந்து தன்னை இன்னாரெனக் காட்டிக் கொள்ளாமல் நகரின் பலபகுதிகளுக்கு விஜயம் செய்த அராபிய யாத்ரீகரான சுலைமான் எங்கேயும் குறைகாண முடியாதவராய் வியந்தார். அவருக்கு மன்னனின் மீதுதான் குறையாக இருந்தது. அது சரிதான் என்று நிரூபிப்பது போல் திடீரென ஒருநாள் மன்னனின் கட்டளை என்று சொல்லி வீரர்கள் அவரைக் கைது செய்து சிறையில் வைத்தார்கள். சிறையில் அறைக்குள் அடைக்காவிட்டாலும் சிறையை விட்டு வெளியே செல்ல முடியா வண்ணம் கண்காணித்தார்கள் சிறைத்துறைப் பணியாளர்கள்.

ஐந்து நாட்கள் சிறையில் இருந்த அவரை விடுவித்து ஆறாம் நாள் விருந்தினர் மாளிகையில் ஓய்வெடுக்கச் செய்து ஏழாம் நாள் மன்னனுக்கு முன்னால் கொண்டு போய் நிறுத்தினார்கள்.

சுலைமான் சற்றே கோபமடைந்து “நான் அராபிய யாத்ரீகன். ராஷ்டிர கூட நாட்டில் பல மாதங்கள் இருந்து விட்டு அந்த நாட்டின் சிறப்புக்களைக் கண்டறிந்து காஞ்சிக்கு வந்தேன்” என்றார்.

“தெரியும்” என்றான் மன்னன்.

“தெரிந்துமா என்னைச் சிறையில் வைத்தீர்கள்! ராஷ்டிர கூட மன்னர் என்னை இப்படி அவமானப்படும்படி நடந்து கொண்டதில்லை. அதோடு என்னைக் காஞ்சிக்கு அனுப்பி வைத்த அவர் ராஷ்டிர கூடத்தில் காணாதவற்றைக் காஞ்சியில்

---

* இந்தப் பிரபஞ்சத்தில் இருப்பது ஒரு பொருள்தான். அதுதான் ஆத்மா. அதையன்றி வேறு எதுவும் இல்லை. இருப்பதாகத் தோன்றுவது மாயை என்பதுதான் அத்வைத சித்தாந்தம்.

காண்டீர்கள் என்றார். அவற்றில் ஒன்றா இது?" என்று கேட்டார் சுலைமான்.

"ராஷ்டிர கூட மன்னர் சரியாகவே கூறி இருக்கிறார். உங்களைச் சிறை செய்தது அவற்றில் ஒன்று தான்" என்றான் மன்னன்.

"இது பல்லவ நாட்டிற்குப் பெருமையில்லை. சிறுமை" என்றார் சுலைமான்.

"சுலைமான் அவர்களே! உங்களைப் போன்ற யாத்ரீகர்கள் எங்களைப் போன்ற மன்னர்களுக்கு முக்கியமானவர்கள். நீங்கள் சுற்றுலாவாசிகளாகப் பிற நாட்டிற்கு வருவதில்லை. பலவற்றையும் கண்டு ஆராய்ந்து அலசி குறிப்புகளாகப் பதிவு செய்கிறீர்கள். அவை எங்களைப் பற்றியும் எங்கள் நாட்டைப் பற்றியும் பிற்காலத்தவர் அறியக்கூடிய வரலாற்றுப் பதிவுகளாக அமைகின்றன. இக் காஞ்சிக்கு நூறு வருடங்களுக்கு முன்பாகச் சீன யாத்ரீகரான யுவான் சுவாங் வருகை புரிந்தார். அவர் பாரத நாடு முழுவதிலும் பயணம் செய்தார். இலங்கைக்கும் பயணம் செய்தார். அவரது பயணக் குறிப்புகள் எங்களுக்கு உதவுகின்றன. அதுபோலவே உங்களது பயண அனுபவங்களும் பதிவுகளும் அமைய வேண்டும் என்று கருதினேன். நீங்கள் காஞ்சியில் எந்த இடத்திற்கும் செல்லலாம் சிறைச் சாலையைத் தவிர. ஆகவே தான் உங்களைக் கைதியாக அனுப்பி வைத்தேன். அங்கே நீங்கள் பயணியாக இல்லாமல் கைதியாக இருந்தால் உண்மை நிலையை உணரமுடியும் என்று நினைத்தே ஐந்து நாட்களுக்கு உங்களை அங்கே கைதியாக வைத்திருந்தேன். ராஷ்டிர கூட மன்னர் தந்திதுர்க்கர் இந்த அனுபவத்தைத் தங்களுக்கு அளித்திருக்க மாட்டார். நான் அளித்தேன் நீங்கள் சிறையில் உள்ள உண்மை நிலையை அனுபவ ரீதியாக அறிய வேண்டும் என்று உங்கள் மீது குற்றம் சுமத்தப்படவில்லை. நீங்கள் சிறைக்கு விஜயம் செய்ததாகவே சிறை வளாகத்தில் சிலாசாசனம் செய்யச் சொல்லியிருக்கிறேன். இந்த அனுபவத்தை நீங்கள் அவமானமாகக் கருதுவீர்கள் என்றால் என்னை மன்னிக்க வேண்டும்" என்றான் மன்னன்.

சுலைமானுக்கு எல்லாமே விசித்திரமாக இருந்தது.

"மகாராஜா என்னை ஒவ்வொரு விஷயத்திலும் வித்தியாசமாக வியக்க வைக்கிறார். சிறை அனுபவத்தை நான் அவமானமாகத் தான் கருதினேன். நீங்கள் அதை மாற்றிவிட்டீர்கள். நீங்கள் பார்க்கும் கோணம் ஆரம்பத்தில் எங்களைப் போன்றவர்களுக்குச் சந்தேகத்தை அளித்தாலும் முடிவில் சந்தோஷத்தையே

அளிக்கிறது. தோற்று வரும் மன்னனுக்குக் காஞ்சி நகர மாந்தர் விழா எடுத்தபோது இப்படியும் ஒரு பைத்தியக்காரத்தனம் உண்டா என்று தான் என்னை நான் கேட்டுக்கொண்டேன். உங்களிடம் வந்து ஆவேசமாகக் கேட்கவேண்டும் என்று நினைத்தேன். ஆனால் அதற்கு மக்களும் பிரதானிகளும் அளித்த பதில்கள் என்னை அமைதிப்படுத்தி விட்டன. இப்படிப்பட்ட மக்களையும் பிரதானிகளையும் பெற்ற நீங்கள் உண்மையில் பாக்கியசாலி தான்" என்றார்.

"விரைவிலேயே மக்களுக்கு ஏமாற்றத்தைத் தரவிருக்கிறேன் சுலைமான் அவர்களே. என்னையும் தோல்வியையும் இணைத்தே பார்த்த மக்களுக்கு வெற்றியை ஈட்டி காட்டப் போகிறேன். அதுவரையில் நீங்கள் தமிழகத்தில் இருக்கக் கூடுமானால் அதையும் பதிவு செய்யுங்கள்" என்றான் மன்னன்.

பதிவு செய்வதற்கு எல்லாவற்றையும் விட முக்கியமான விஷயம் ஒன்றிருக்கிறது என்பதை உணர்த்துவது போல் பாலாற்றங்கரையை அடுத்த திருப்பருத்திக் குன்றத்தில் ஐந்து பேருக்கு முன்னால் ராஜதோரணையில் அமர்ந்திருந்த மனிதன் கடகடவெனச் சிரித்தான்.

★★★



புருஷோத்தமன் ஜாலம்

காஞ்சியில் களப்பிரர்கள் ஆட்சி நடந்த போது சமணம் உச்சாணிக் கொம்பில் இருந்தது. பாலாற்றங்கரையில் இருந்த திருப்பருத்திக்குன்றம் சமணர்களின் கலைப்பீடமாய் விளங்கியது. களப்பிரர்கள் வீழ்ந்து பல்லவர்கள் காஞ்சியைக் கைப்பற்றிய போது சமணத்திற்கு முன்னால் கேள்விக்குறி எழுந்தது.

ஆனால் மகேந்திரப் பல்லவர் சமண மதத்தவராக முகிழ்த்த போது சமணம் செழித்தது. காஞ்சியில் காலூன்றியது. திருப்பருத்திக்குன்றம் சமணர் குன்றமாகவும் சமணக் காஞ்சியாகவும் உயர்வு பெற்றது.

சமணராக இருந்த மகேந்திரவர்மர் சைவரானார். சிவபக்த சிரோன் மணியானார். அவரைத் தொடர்ந்து வந்த பல்லவ மன்னர்கள் சைவ மதத்திற்கு ஆதரவு அளித்து சைவ மன்னர்களாகவே வாழ்ந்து சிவாலயங்களைக் குடைவரைக் கோயில்களாகவும் கற்றளிகளாகவும் அமைத்தார்கள். அவர்கள் காலத்தில் சமணம் அழியவில்லையே தவிர உயரவில்லை.

நந்திவர்மன் வந்து முடிசூடியபோது வைணவம் ஏற்றம் கண்டது. தான் பிறந்ததே திருமாலுக்குச் சேவை செய்வதற்காகத் தான் என்று கருதியதாலும் திருமாலான முகுந்தனைத் தவிர வேறு தெய்வங்களை வணங்க முற்படாததாலும்* திருமாலுக்கு விண்ணகரங்களை எழுப்புவதில் கவனமாக இருந்தான். வைணவத்திற்கு உயர்வு தரும் காரியங்களில் ஈடுபாடு காட்டினான். இதர சமயங்களைப் பற்றிக் கவலைப்படவில்லை.

ஒரு சமயம் சமணர்களுக்கு வழங்கப்பட்டிருந்த நிலத்தைப் பறித்து வைணவ அடியார்களான சதுர்வேதிகளுக்கு வழங்கினான். சமணர்கள் கலங்கினார்கள். உன்னத கலைப்பீடமான திருப்பருத்திக் குன்றம் அழிவுப் பாதைக்குச் சென்று விடுமோ என்று அஞ்சினார்கள். மன்னனின் பார்வை அதன் மீது

---

* பக்கம் 104 இலக்கிய சாசன வழக்காறுகள் By. மு. ராகவையங்கார்

திரும்பாமல் இருந்தாலே போதும் என்று நினைத்தார்கள். பௌத்தர்களின் நிலையும் அதுவாகவே இருந்தது.

சமணத்திற்கும் பௌத்தத்திற்கும் உறைவிடமாகவும் வளர்புரமாகவும் இருந்த காஞ்சி நந்திவர்மனின் காலத்தில் அவ்விரு மதங்களுக்கும் கேள்விக் குறியாயிற்று. மன்னன் அம் மதத்தினரை ஒடுக்க முயலவில்லை. அவர்களாகவே ஒடுங்கினார்கள். ஓரமாக நின்று கொண்டார்கள்.

ச்ரமணாசிரமான திருப்பருத்திக்குன்றம் வண்டுகள் போல் சமணர்களாலும் சமணத்துறவிகளாலும் மொய்க்கப்படும் பண்டமாக இருந்த நிலை மாறிப்போய் அவலத்தில் சிக்கிய அபலைப் பெண்ணின் நிலையில் இருந்தது. வெளியூர் சமணர்களின் போக்கு வரவு கணிசமாகக் குறைந்ததால் அவ்வூர் ஆரவாரம் இழந்து, களையையும் இழந்து கைம் பெண்ணைப் போலக் காட்சியளித்தது.

இராஜசிம்மப் பல்லவர் காலத்தில் கட்டப்பட்ட சமண விஹாரத்தை மையமாகக் கொண்டு வாழ்ந்து வந்த சமணர்கள் தங்களிடம் உள்ள செல்வங்களைக் கொண்டு விஹாரத்தை அபிவிருத்தி செய்ய முடியாமல் இருப்பது நிலைத்தால் போதும் என்று நினைக்கலானார்கள்.

விஹாரத்திற்கு அருகில் இருந்த தர்மகுரா மரம் மிகவும் பழைமையான விருட்சமாக இருந்த படியால் சமணத்துறவிகள் அம்மரத்தின் கீழே அமர்ந்து சமணப் பரப்புரைகளைச் செய்து வந்தார்கள். உரைகளைக் கேட்க ஊரே கூடி எள் விழுவதற்குக் கூட இடமில்லாமல் போகும் நிலைமாறி தற்போது ஐம்பது பேர் மட்டும் உபதேசங்களைக் கேட்க வந்தார்கள். உபதேசம் செய்த வர்கள் கவலையோடு அக்காரியத்தைச் செய்து வந்த படியால் கேட்க வந்தவர்களின் கவலைகளைத் தீர்க்க முடியவில்லை.

கேட்பதற்கு ஆட்கள் குறைந்து வந்தபடியால் உபதேசிகளின் எண்ணிக்கை குறைந்து, பின்னர் உபதேசங்கள் குறைந்து முடிவில் நின்று போனது. ஒடிந்து விட்ட கிளையை ஒட்ட வைக்கலாம். ஒடிந்து போன சிற்பத்தை எதுவும் செய்ய முடியாது. அப்படியே விட்டுவிட வேண்டியதுதான். அந்த நிலையில்தான் சமணம் இருந்தது. புனிதமான தர்மகுரா மரத்தடியில் துறவிகள் அமர்ந்து தவம் செய்யவில்லை. ஆறு பேர் அமர்ந்திருந்தார்கள். ஒருவன் ராஜதோரணையில் இருந்தான். அவனுக்கு முன்னால் ஐந்து பேர் அமர்ந்திருந்தார்கள். அவர்களின் இயற்பெயர்களை அகற்றிவிட்டு அதற்கு மாறாக அசடன், அலசன், அதரன்,

அவயன், அபயன் என்று வேறு பெயர்களை வைத்த அந்த மனிதன் கடகடவெனச் சிரித்த போது "எதற்காக இப்படிச் சிரிக்கிறீர்கள் புருஷோத்தமரே? நீங்கள் இப்படிச் சிரித்து நாங்கள் பார்த்ததில்லையே?" என்று கேட்டான் அசடன்.

"சிரிக்க முடிந்த போது சிரித்து விடுங்கள். இல்லையென்றால் சிரிப்பதற்கான வாய்ப்பே இல்லாமல் போய் விடும்" என்றான் புருஷோத்தமன்.

"சிரிக்கும் அளவிற்கு என்ன சந்தோஷம் வந்து விட்டது?" என்று கேட்டான் அசலன்.

"அறிவாளிகள் முட்டாள்களாக நடந்து கொள்ளும் போது சிரிப்பும் சந்தோஷமும் வருவது வியப்பான விஷயமல்ல" என்றான் புருஷோத்தமன்.

"நீங்கள் புதிர்போட்டுப் பேசுவது தான் வியப்பான விஷயம்" என்றான் அதமன்.

"அதமா! சில விஷயங்களைப் புதிர்களைப் போலத் தான் பேசமுடியும். சகஜமாகவும் பகிரங்கமாகவும் பேசமுடியாது. அந்த விவாதத்தை விடுவோம். நமது திட்டங்கள் ஒவ்வொன்றாக நிறைவேறும் நேரத்தை நெருங்கிக் கொண்டிருக்கின்றன என்பதைத் தான் சொல்ல வந்தேன். அந்தச் சந்தோஷத்தில் தான் சிரித்தேன்" என்றான் புருஷோத்தமன்.

"நாம் நிறைய திட்டங்களை வைத்திருக்கிறோம். அதில் எதைத் தாங்கள் குறிப்பிடுகிறீர்கள்?"

"பல்லவ மன்னன் காஞ்சியில் பெருமாளுக்கு விண்ணகரம் ஒன்றைக் கட்டி வருகிறான் அல்லவா? அதன் கட்டுமானம் ஏறக்குறைய முடிந்து விட்டது. இன்னும் ஓரிரு வாரங்களில் விக்ரகப் பிரதிட்டை நடந்து விடும். அதையடுத்து இரண்டு மாதங்களில் குடமுழுக்கு நடக்கும்."

"இதில் நாம் சந்தோஷப்பட என்ன இருக்கிறது?"

"குடமுழுக்கு நடந்தால் சந்தோஷமில்லை. நடக்கா விட்டால் சந்தோஷம் தானே?"

"நடக்காவிட்டாலும் நமக்கென்ன சந்தோஷம் வரப் போகிறது?"

"அதமா! குடமுழுக்கு விழா நடப்பதற்கு விண்ணகரம் இருக்கவேண்டும் அல்லவா? விண்ணகரமே இல்லாது போய்விட்டால்?"

"ஐயா! நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? விண்ணகரம் இல்லாமல் எப்படிப் போகும்? ஏதாவது மாயம் செய்யப் போகிறீர்களா?"

"அப்படிச் சொன்னாலும் சரிதான்."

"என்ன மாயம் செய்யப் போகிறீர்கள்?"

"என்னிடம் செம்போத்துப் பறவைகள் இருப்பதாகச் சொன்னேன் அல்லவா?"

"ஆமாம். அவற்றுக்கு மந்திர சக்தி இருப்பதாகச் சொன்னீர்கள். அவற்றைக் கொண்டு நந்திவர்மனை அழிப்பதாகச் சொன்னீர்கள்."

"நந்திவர்மனை அழிப்பதற்கு முன்பாக அவன் அழியாக் கலைவண்ணம் என்று கருதும் விண்ணகரம் அழியும். அது அவனுக்கு மிகப் பெரும் இழப்பல்லவா?"

"விண்ணகரத்தை எப்படி அழிக்கப் போகிறீர்கள்? அது மணலால் கட்டப்பட்ட ஆலயம் அல்ல புருஷோத்தமரே. கல்லால் எழுப்பப்பட்ட கனமான கோயில். அசைக்க முடியாது."

"நான் அதை அசைக்கப் போவதில்லை. அழிக்கப் போகிறேன், எனது பறவைகளின் மூலம்."

"எப்படி?"

"நாளைக்கு நீங்கள் ஐவரும் விண்ணகரத்திற்குப் போய்ப் பார்த்து விட்டு வந்து பேசுங்கள்."

ஐவரும் மறுநாள் விண்ணகரத்திற்குச் சென்றார்கள்.

அங்கே விண்ணகர விமானத்தின் மீது ஒரு செம்போத்துப் பறவை அமர்ந்திருந்தது. நீளமான மூக்கோடு செந்நிறத்தில் அமர்ந்திருந்த அப்பறவை விதானத்தில் ஏற்றப்பட்ட விளக்கு போல அழகாக இருந்தது.

"இது எப்படி விண்ணகரத்தை அழிக்கும்?" என்று தங்களுக்குள்ளேயே கேட்டுக் கொண்ட ஐவர் அதே கேள்வியை அன்றிரவு புருஷோத்தமனிடம் கேட்டார்கள்.

"விண்ணகரத்தைச் சுற்றிப் பாதுகாப்பு போடப்பட்டிருக்கிறதா? கோயிலுக்குள் செல்ல யாராவது அனுமதிக்கப்படுகிறார்களா?" என்று கேட்டான் புருஷோத்தமன்.

"இல்லை. ஆலயத்தைச் சுற்றி பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருக்கிறது. சிற்பிகளும் பிரமுகர்களும் மட்டுமே அனுமதிக்கப்படுகிறார்கள். ஆனால் ஆலயத்தை வெளியிலிருந்து நாற்புறமும் அணை முடிகிறது" என்றான் அபயன்.

"ஆனால் சிற்பப் பொக்கிஷங்கள் உள்ளே இருக்கின்றன. அவற்றைக் குடமுழுக்கு விழாவிற்குப் பிறகு தான் காணமுடியும்."

"நீங்கள் எப்படி உள்ளே இருக்கும் சிற்பப் பொக்கிஷங்களைப் பார்த்தீர்கள்?"

"இக் கேள்வியை இப்போது என்னிடம் கேட்காதீர்கள். அதே சமயம் இதற்கான விடை விரைவிலேயே உங்களுக்குக் கிடைக்க வரும்."

"நாங்கள் கேட்ட கேள்விக்கு நீங்கள் பதில் சொல்ல வில்லையே! ஆலய விதானத்தின் மீது அமர்ந்திருக்கும் ஒரே ஒரு செம்போத்துப் பறவை ஆலயத்தை எப்படி அழிக்கும்?"

"நாளைக்கு நீங்கள் ஐவரும் மீண்டும் விண்ணகரத்திற்குச் சென்று பாருங்கள்" என்றான் புருஷோத்தமன்.

ஐவரும் மறுநாள் விண்ணகரத்திற்குச் சென்றார்கள்.

ஆலய விதானத்தின் மீது இரண்டு செம்போத்துப் பறவைகள் அமர்ந்திருந்தன. மதில் சுவர்மீது மற்றொரு பறவை அமர்ந்திருந்தது. மக்கள் அவற்றை வேடிக்கை பார்த்து அவற்றின் வரவு குறித்தும் அழகு குறித்தும் சிலாகித்துக் கொண்டார்கள்.

"ஒரு பறவைக்குப் பதிலாக மூன்று பறவைகள் வந்துள்ளன. மற்றபடி வேறு எந்த விசேஷமும் இல்லையே?" என்று கேட்டுக் கொண்ட ஐவர் அன்றிரவு அதே கேள்வியைப் புருஷோத்தமனிடம் கேட்டார்கள்.

"பறவைகளைக் கண்டு மக்கள் ஏதாவது பேசிக் கொண்டார்களா?" என்று கேட்டான் புருஷோத்தமன்.

"நந்திவர்மரைப் பறவை மன்னர் என்றார்கள். அவர் கோட்டைக்கு வரும் போது அவருக்கு மேலே கிரீடம் சூட்டுவது போல் வானத்தில் நாரைகள் பறப்பது போன்ற அதிசயத்தைப் போலவே செம்போத்துப் பறவைகளும் அதிசயம் புரிவதாகப் பேசிக் கொண்டார்கள்" என்றான் அதிகன்.

"முட்டாள் தனமான பேச்சு" என்றான் புருஷோத்தமன்.

"என்ன சொல்கிறீர்கள் நீங்கள்?"

"பறவைகளை அனுப்பியது நான். அது எப்படி அதிசயமாகும்? முட்டாள் தனமாக யோசிக்கும் மக்களாக இருக்கிறார்கள் காஞ்சி நகர மக்கள். அது போகட்டும். வேறு ஏதாவது பேசினார்களா?"

“மன்னர் கட்டி வரும் விண்ணகரத்தை வரவேற்க இந்தப் பறவைகள் விண்ணுலகத்திலிருந்து வந்திருப்பதாகப் பேசிக் கொண்டார்கள். பார்ப்பதற்கு அமைதியாகவும் சாதுவாகவும் இருக்கும் இந்த மூன்றுப் பறவைகளா விண்ணகரத்தை அழிக்கப் போகின்றன?”

“நீங்கள் ஐவரும் நாளைக்கு மீண்டும் சென்று விண்ண கரத்தைப் பாருங்கள்” என்றான் புருஷோத்தமன்.

“நாளைக்கு என்ன நடக்கும்?” என்று கேட்டான் அசலன்.

“பாருங்கள். நாளைக்கு மறுநாளும் பாருங்கள். பார்த்து விட்டுச் சொல்லுங்கள்” என்றான் புருஷோத்தமன்.

மறுநாள் அவர்கள் விண்ணகரத்திற்குச் சென்ற போது பத்திற்கும் மேற்பட்ட செம்போத்துப் பறவைகள் விண்ணகரத்தின் மீது அமர்வதும் அவற்றைச் சுற்றிப் பறப்பதுமாக இருந்தன. உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அக்காட்சியை கண்ட ஐவரும் பரவசப்பட்டார்கள்.

அக்காட்சியைக் காண்பதற்காகவே மக்கள் கூட்டம் கூட்டமாக வந்ததால் காவலர்கள் அவர்களைக் கட்டுப்படுத்தச் சிரமப்பட்டார்கள்.

அக்காட்சியை பிரமுகர்கள் பலரும் கண்டார்கள். மகாமந்திரியான பிரம்ம ஸ்ரீராஜரும் கண்டார்.

சிற்பிகளிடம் சென்று “இந்தப் பறவைகளால் உங்களுக்கு உபத்திரவமாக இருக்கிறதா?” என்று கேட்டார்.

“உற்சாகமாக இருக்கிறது ஐயா. ஒரு உபத்திரமும் இல்லை. இது தெய்வீக வரவு. தெய்வீகப் பரவசம்” என்றார்கள் சிற்பிகள்.

மறுநாள் பறவைகளின் எண்ணிக்கை இருபதாகியது. அவை தங்கள் அலகில் அத்திப் பழங்களைக் கொத்திக் கொண்டு வந்து ஆலயத்தின் பல்வேறு பகுதிகளில் அமர்ந்து அனைவருக்கும் பரவசத்தை அளித்தன. சிலநேரங்களில் அனைத்துப் பறவைகளும் மதில் மீது வரிசையாக அமர்ந்த விதமானது படைவீரர்கள் அணிவகுத்துப் பாதுகாப்பது போல் அருமையாக இருந்தது. வேறு சில நேரங்களில் அவை அத்திப் பழங்களைக் கொண்டு வந்து மக்களிடம் போட்டன.

மக்கள் அதைத் தங்களுக்குக் கிடைத்த அரிய பிரசாதமாகக் கருதி உண்டார்கள். பறவைகள் இப்படி ஜாலவித்தைகளைக்

காட்டிக் குதூகலத்தைத் தந்த காட்சிகளைக் கண்ட ஐவர் "இதுதான் புருஷோத்தமன் ஜாலமா?" என்று நினைத்தார்கள்.

மன்னனும் ராஜகுருவும் கூட விண்ணகரத்திற்கு வந்து அந்த விந்தையைக் கண்டார்கள்.

"உன்மீது பறவைகளுக்கு இருக்கும் ஒட்டுதல் இணையற்றது நந்திவர்மா. உன் செயல்களை அவை மக்களைப் போலவே அங்கீகரிக்கின்றனவா?" என்று வினவினார் ராஜகுரு.

இதையே புருஷோத்தமனிடம் ஐவர் வினவினார்கள்.

இரவு நேரம் முகிழ்த்து நான்கு நாழிகைகள் ஆகியிருந்தன.

புருஷோத்தமன் ஐவருக்கு பதில் கூற முற்பட்டபோது ஏதோ அமானுஷ்ய குரல்கள் எழுந்தன.

"இது என்ன?" கேட்டார்கள் ஐவர்.

"பேய்ப்படையின் ஆரவாரம்" என்றான் புருஷோத்தமன்.

★★★



துலாபாரர்

புருஷோத்தமனின் பதில் ஐவரை அதிரவைத்தன.

"என்ன சொல்கிறீர்கள் ஐயா? பேய்ப் படையின் ஆரவாரமா? கேட்கவே அச்சமாக இருக்கிறதே?" என்று கேட்டான் அபயன்.

"திருமால் புரத்தில் நாம் சந்தித்தபோது கூட இந்த ஆரவாரம் கேட்டதே நினைவிருக்கிறதா?" என்று கேட்டான் புருஷோத்தமன்.

"ஆமாம். ஆமாம். ஆனால் அந்த ஆரவாரத்திற்கும் உங்களுக்கும் சம்பந்தம் இருக்கும் என்று நாங்கள் நினைக்கவில்லை."

"இப்போது தெரிந்து கொள்ளுங்கள். நான் எனது மாந்தரீக சக்திகளால் பேய்ப்படை ஒன்றை உருவாக்கியிருக்கிறேன். நந்திவர்மனை அழிப்பதில் நான் தோற்றுவிட்டால் எனக்குப் பதிலாகப் பேய்ப்படை அவனை அழிக்கும்."

"பேய்ப்படை எப்படி இருக்கும்?"

"அது உங்களால் காணமுடியாது. மாந்தரீகச் சக்தி உள்ளவர்களால் தான் காணமுடியும். அதைப் பற்றிய கவலையெல்லாம் உங்களுக்கு வேண்டாம். அவற்றை நான் பார்த்துக் கொள்கிறேன்."

"பேய்ப் படையை விடுங்கள். தங்களது பறவைப் படையைப் பற்றிப் பேசுங்கள். காணக் கிடைக்காத காட்சியாக இருக்கிறது. கண் கொள்ளாக் காட்சியாக இருக்கிறது. இன்றைக்கு மன்னரும் ராஜகுருவும் கூட வந்து அக்காட்சியைக் கண்டார்கள். பறவைகளுக்கும் மன்னருக்கும் ஏதோ பூர்வஜென்ம பந்தம் இருப்பதாகச் சொன்னார் ராஜகுரு."

"எல்லோரும் முட்டாள்களாகப் பேசுகிறார்கள். முட்டாள்களாக நடந்து கொள்கிறார்கள். ராஜகுரு கூட அப்படி இருப்பது எனக்குச் சிரிப்பாக இருக்கிறது. விடுங்கள். அது அவரவர் தலைவிதி. எனது பறவைகளை நான் எப்படிப் பழக்கி வைத்திருக்கிறேன் என்பதை எல்லோரும் பார்த்திருப்பீர்கள். இன்னும் இரண்டு மாத காலத்திற்கு இக்காட்சியும் மாட்சியும்

தொடரும். பார்த்துக் கொண்டிருங்கள். அதற்குப் பிறகு அவற்றைக் கொண்டே விண்ணகரத்தை எப்படி அழிக்கிறேன் என்பதையும் பாருங்கள். இப்போது எல்லோரும் செல்லுங்கள். நான் பிறகு வருகிறேன்" என்றான் ராஜதோரணையில் இருந்த புருஷோத்தமன்.

அசடன், அலசன், அதமன், அவயன், அபயன் ஆகிய ஐவரும் அகன்றார்கள்.

புருஷோத்தமன் ஆந்தையைப் போலக் குரல் கொடுத்து விட்டு "நீங்கள் இப்போது வரலாம்" என்றான்.

அதையடுத்து பந்தம் ஒன்றை ஏந்திக் கொண்டு சமணத் துறவி ஒருவர் அங்கு வந்தார்.

பந்த ஒளியில் அவரைப் பார்த்த புருஷோத்தமன் "எல்லாமே தலைகீழாக இருக்கிறது அடிகளே. இருட்டிய பிறகு வெளியே வராதவர்கள் நீங்கள். ஆனால் நீங்களோ இருட்டிய பிறகு பந்தத்தை வேறு சுமந்து கொண்டு வருகிறீர்கள்" என்றான்.

"எல்லாமே தலைகீழாக நடப்பதாக நீங்களே சொல்லிவிட்டீர்கள். நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது?" என்றார் துறவி.

"நீங்கள் சொல்வது எனக்குப் புரிகிறது. பல்லவர் ஆட்சியில் எல்லாமே தலைகீழாக நடப்பதால் உங்கள் நடைமுறைகளும் மாறிவிட்டன. அப்படித்தானே?"

"அப்படித்தான்."

"இனி பந்தம் தேவையில்லை. அணைத்து விட்டு அமருங்கள்."

துறவி பந்தத்தைத் தரையில் அழுத்தி அணைத்த நேரத்தில் அருகிலிருந்த பறையொலிகள் கேட்டன.

அவர்கள் இருந்த தர்மகுரா மரத்திற்குத் தெற்கே சுடுகாடு இருந்தது. அங்கே தகனம் செய்வதற்காகச் சடலம் வந்ததாலோ என்னவோ பறையொலிகள் கேட்டன.

"பறையொலிகளைக் கேட்டீர்களா ஐயா? இரவு நேரத்தில் இடுகாட்டிற்குச் சடலம் வரக்கூடாது என்று விதி இருக்கிறது. தற்போது யாரும் அதை மதிப்பதில்லை. அறுபது நாழிகையும் சுடுகாட்டில் போக்குவரத்து இருந்து கொண்டிருக்கிறது. உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா? சில வருடங்களுக்கு முன்னால் காஞ்சியில் மிகப்பலத்த மழை பெய்தது. வரலாறு காணாத மழை. வெள்ளமானது பாலாற்றில் மட்டுமல்ல. ஊர் முழுதும் வெள்ளம். இந்தத் திருப்பருத்திக் குன்றத்திலும்

வெள்ளம். இங்கே இருக்கும் சுடுகாட்டிலும் வெள்ளம். வருந்தத்தக்க விதத்தில் மாண்டு போனவரது சடலங்கள் சுடுகாட்டிற்குக் கொண்டு வரப்பட்டன. அவற்றை எரிக்கவும் முடியவில்லை. புதைக்கவும் இயலவில்லை. அதேசமயம் காட்டிற்கு வந்த சடலங்கள் வீட்டிற்குத் திரும்பலாகாது என்பது விதி. அதனால் சுடுகாட்டில் இருந்த மரங்களில் தூளிகளைக் கட்டிச் சடலங்களை வைத்திருந்தார்கள். வெள்ளம் வடிந்தபின் அவை தகனம் செய்யப்பட்டன. கடுமையான சந்தர்ப்பமாக இருந்தாலும் அப்போது விதிகள் பின்பற்றப்பட்டன. தற்போது சாதாரணமான நேரத்தில் கூட விதிகள் பின்பற்றப் படுவதில்லை. ஆட்சியின் அலங்கோலத்திற்கு இதை விடவா சாட்சி வேண்டும்? காஞ்சியில் தற்போது நடப்பது அரசாட்சி அல்ல. பேயாட்சி" என்றார் துறவி துலாபாரர்.

"நல்லாட்சி தானே பல ஆண்டுகளாக நடந்து வந்தன? சமணர்களும் பௌத்தர்களும் வாழ்வாங்கு வாழ்ந்து தானே வந்தார்கள்? உய்வதற்கு வழியில்லை எந்த மூலையிலிருந்து யாரோ ஒரு சமணர் புலம்பினால் கூட காஞ்சிக்குப் போ என்றல்லவா இதுவரையில் சொல்லி வந்தார்கள்? இப்போது? காஞ்சியை விட்டுப் போனால் போதும் என்றல்லவா நிலைமை இருக்கிறது? இதற்கு யார் காரணம்?" என்று கேட்டான் புருஷோத்தமன்.

"ஐயா! இந்த தர்மகுரா மரம் சமணர்களுக்கு ஞானபீடம். பௌத்தர்களுக்குப் போதிமரம் எப்படியோ அப்படித்தான் இந்த மரம் எங்களுக்கு. போதிமரத்தின் கிளைகளை பாரதநாட்டில் மட்டுமின்றி இலங்கையிலும் ஸ்ரீ விஜயத்திலும் நட்டு விருட்சங்களாக்கினார்கள் பௌத்த மன்னர்கள். ஆனால் இந்த தர்மகுரா மரம் அப்படியல்ல. இந்த மரம் கங்கைக் கரையில் முதன் முதலாக முளைத்தது. பிறகு அது இங்கு கொண்டு வரப்பட்டு நடப்பட்டது. இந்த மரம் வேறு எங்கும் இல்லை. இது எத்துணைச் சிறப்பு? சமண ஆச்சார்யர்கள் அனைவரும் இங்கேதான் தனது சொற்பொழிவுகளை அரங்கேற்றினார்கள். சமணர்களுக்கு இந்த மரம் தான் சமணதர்மாசனம். இங்கே மகா ஆச்சார்யர்களும் நீதிமான்களும் மட்டுமே அமரலாம். ஆனால் தற்போது இங்கே மான்கள் உலவுகின்றன. மரநாய்கள் படுத்து உறங்குகின்றன. பன்றிகளும் அதன் குட்டிகளும் கூடிக் குலவுகின்றன. இப்போது நாமிங்கே அமர்ந்திருக்கிறோம். இங்கே ஒரு விஹாரத்தைக் கட்டுங்கள் என்று பல்லாயிரம் முறை கூறிவிட்டோம். ஒருகல் கூட இதுவரை ஊன்றப்படவில்லை. சமணக் காஞ்சி கோபுரமாக இருந்தது. இன்றைக்குப் குப்பை மேடாகக் காட்சியளிக்கிறது. இந்த அவலத்திற்கும் அழிவிற்கும் நந்திவர்மன்

என்னும் தொந்திவர்மனே காரணம்" என்று ஆத்திரத்தோடு சொன்னார் துறவி.

"தவறு அடிகளே. உங்கள் நிலைமைக்கு நந்திவர்மன் காரணமல்ல. நீங்களே தான்" என்றான் புருஷோத்தமன்.

"ஐயா! இது என்ன பேச்சு? மண்ணை எடுத்து எங்கள் மீதே போட்டுக் கொள்வோமா நாங்கள்?"

"அடிகளே! சமணம் கோபுரமாக இருந்ததாகச் சொன்னீர்கள். பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் சைவ மதத்தைத் தழுவியபோதே சமண-பௌத்த மதங்களுக்கு இந்த ஆட்சி கரைச்சலைக் கொடுக்கத் தொடங்கிவிட்டது. அப்போதே சமணர்கள் சுதாரித்துக் கொள்ள முயன்றிருக்க வேண்டும். தன்மீது 'தூசு விழ ஆரம்பித்ததுமே துடைத்துக் கொள்ளாமல் தூசானது மழைபோல் கொட்டி மறைத்து விட்ட பிறகு புலம்பினால் பயன் என்ன? ஆட்சியாளர்களுக்கு மடாதிபதிகள் எந்த விதத்திலும் குறைந்தவர்கள் அல்ல. மன்னர்கள் நாடுகளுக்கு அதிபதிகள் என்றால் நீங்கள் மதங்களுக்கு அதிபதிகள். உங்கள் மீதோ உங்கள் மதத்தின் மீதோ கையை வைக்க எந்த மன்னனுக்கும் உரிமையில்லை. பல்லவர்கள் மதவிஷயத்தில் அத்து மீறினார்கள். அப்போதே நீங்கள் கொந்தளித்துக் குதறியிருக்க வேண்டும். நீங்களோ சொதப்பலாகவே நடந்து கொண்டதால் உங்கள் மீது சமாதி கட்டப்பட்டு வருகிறது. சாதுவான பசு கூட தன்னைச் சீண்டுபவர்களை முட்டும். சாது என்ற பெயரில் இருக்கும் சமணர்களான நீங்களோ இக்கெட்டு வந்த போது எதிர்ப்பதை விட்டு விட்டுச் சப்பணம் போட்டு அமர்ந்து சதுரங்கம் ஆடிக் கொண்டிருந்தீர்கள். இதற்கு ஆட்சியாளர்களை எப்படிக் குறை கூற முடியும்?" என்றான் புருஷோத்தமன்.

"தலையை நிமிர்த்தினாலே கழுத்தில் கத்தியை வைத்து விடுகிறார்களே என்ன செய்ய முடியும் ஐயா? அனைத்து மதங்களையும் சமமாக பாவித்து வளர்க்க வேண்டிய மன்னர்கள் வித்தியாசம் பார்த்து - ஏற்ற தாழ்வுகளைக் கற்பித்து குறிப்பிட்ட மதங்களைக் குனிய வைத்துக் குட்டினால் யார் தான் என்ன செய்ய முடியும்? அதுவும் இந்த நந்திவர்மன் என்னும் தொந்தி வைணவமதத்தைத் தவிர இதர மதத்தை ஏறெடுத்துப் பார்க்கவும் தயாராக இல்லை. மதிக்கத் தயாராக இல்லை. இதர மதங்களை நாடி பிடித்தும் சில நேரங்களில் தேடிப் பிடித்தும் அதிர்ச்சி வைத்தியம் செய்து அலற வைக்கிறான். சமணமும் பௌத்தமும் அவனுக்கு மதங்களாகத் தெரியவில்லை. எதிரிகளாகத்

தெரிகிறார்கள். காலுக்குக் கீழே இருக்கும் மண்ணைப் பறிக்கும் போது மேலுக்கு எம்பிப் பறக்கவா முடியும்?"

"நீங்கள் செயல்பட வேண்டிய நேரத்தில் சும்மா யிருந்து விட்டு செயல்பட முடியாத நேரத்தில் நிறைய பேசுகிறீர்கள். நீண்டுப் புலம்புகிறீர்கள்? சமணர்களது தொகையும் பௌத்தர்களின் தொகையும் காஞ்சியில் மிகப் பெரிதாக இருந்தபோது நீங்கள் மதப்போர் புரிந்திருக்க வேண்டும். மதயானைகளைப் போலச் செயல்பட்டிருக்க வேண்டும். உங்கள் எதிர்ப்பையும் எழுச்சியையும் காட்டும் விதத்தில் காட்டியிருந்தால் ஆட்சியாளர்கள் மிரண்டு போயிருப்பார்கள். அரண்டு போயிருப்பார்கள். அடங்கிப் போயிருப்பார்கள். வடநாட்டிலிருந்து வாடைக் காற்றுபோல் வந்து தென்னகத்தைக் கலக்கிய நீங்கள் காற்றில் பறந்து கொண்டிருக்க வேண்டும். கலங்கிய குட்டையாக இருக்கிறீர்கள். கழிக்கப்பட்ட மட்டையாக இருக்கிறீர்கள். அழுகி விட்ட கொட்டையாக இருக்கிறீர்கள். ராஜபாட்டையானது சுரங்கப் பாதையான கதை உங்கள் கதை. அது போகட்டும். உங்களுக்கு இந்தத் திருப்பருத்திக் குன்றத்தில் என்ன பதவி? என்ன அதிகாரம்? என்ன செல்வாக்கு? எதைச் சாதிக்கமுடியும்? உங்கள் கட்டுப்பாட்டில் எவ்வளவு சமணர்கள் இருப்பார்கள்?" என்று கேட்டான் புருஷோத்தமன்.

"எனக்குப் பதவி இருந்தது. அதன் பெயர் தலைமைத் துறவி. எனக்கு அதிகாரம் இருந்தது. அது எல்லையற்றது. எனக்குச் செல்வாக்கு இருந்தது. அதை வர்ணிக்க முடியாது. நான் சாதித்திருக்கிறேன். அதற்கு அளவே கிடையாது. எனது கட்டுப்பாட்டில் திருப்பருத்திக் குன்றத்தில் பத்தாயிரம் சமணர்கள் இருந்தார்கள். இது பத்து வருடத்திற்கு முந்தைய நிலை. தற்போது நந்திவர்மன் என் பதவியையும் அதிகாரத்தையும் பறித்துவிட்டான். பதவியும் அதிகாரமும் இல்லாததால் செல்வாக்கு இல்லை. சாதிக்க முடியவில்லை. இங்கே இருக்கும் சமணர்கள் காக்கைகள் கூடுவது போல் கூடி வந்தார்கள். தற்போது வெண்ணிற மேகங்களைப் போல் கலைந்து கொண்டிருக்கிறார்கள். குலைந்து கொண்டிருக்கிறார்கள்" என்றார் துறவி.

"பட்டமரமாக நிற்கிறீர்கள். பூத்துக் குலுங்க விரும்பு கிறீர்கள். இல்லையா?"

"எனது வேதனைகளைத் தீர்த்துக் கொள்ள உங்களிடம் வந்தேன் புருஷோத்தமரே. நீங்கள் வேதனைகளை அதிகமாக்குகிறீர்கள்."

"இல்லை அடிகளே. இருவருமே உண்மைகளைப் பேசுகிறோம். உண்மைகளை உணர்கிறோம். உங்கள் உத்தேசம் என்ன?"

"இறுதி மூச்சை விட்டுக் கொண்டிருக்கும் சமணம் உயிர்ப்பிக்கப் படவேண்டும். ஆல்போல் தழைத்து விழுதுகளைப் பாய்ச்ச வேண்டும்."

"நான் அதைக் கேட்கவில்லை. பட்டமரமாகி விட்ட சமணத்தைத் துளிர்ப்பிக்க என்ன திட்டங்களை வைத்திருக்கிறீர்கள்?"

சொன்னார் துறவி.

"உங்கள் திட்டமானது மணல்மேட்டைக் கலைப்பது போன்றதல்ல. இரும்புக் கோட்டையைத் தகர்ப்பது போன்றது. அந்த இரும்புக் கோட்டையின் தலைவன் கரும்பு வர்மன் அல்ல. நந்திவர்மன். அவனைச் சுற்றி ஞானகுரு, ராஜகுரு, முதலமைச்சர் பிரம்ம ஸ்ரீராஜர், கடிகையின் தலைவர் தணிகண்ட போசர், காரியஸ்தர் சோமயாஜி, மகாசேனாதிபதி காடக முத்தரையர், கோட்டைத் தலைவர் பல்லவடி அரையர், படைத்தலைவன் உதயசந்திரன் ஆகியோர் அனுபவம் வாய்ந்தவர்களாக, சிம்மங்களாக நிற்கிறார்கள். இவர்களை எதிர்த்து வெற்றி காண்பது என்பது முடியாத விஷயம் என்று முடிவாகவே சொல்லிவிடலாம். நீங்கள் இந்த எஃகுக் கோட்டையை வெளிப்படையாக எதிர்க்கும் காலம் இப்போது கனிந்திருக்கவில்லை என்பதை உணருங்கள். மத்தகஜங்களை மரஈட்டிகளைக் கொண்டு வீழ்த்த முடியாது. ஆகவே நான் ஒரு வழியைச் சொல்கிறேன். நான் கடைப்பிடிக்கும் வழியைச் சொல்கிறேன். அதுவே கடைத்தேறும் வழி. வேறு வழி கடைந்தெடுத்தாலும் கிடைக்காது. நந்திவர்மனும் அவனது ஆட்சியும் வீழ்ந்தாலன்றி நமது நோக்கம் நிறைவேறாது. என்னோடு நீங்கள் இணையுங்கள். உங்கள் தரப்புச் சமணர்களைத் திரட்டுங்கள். நான் சொல்வது போல் செயல்படுங்கள். பல இடங்களில் ஓட்டை போட்டால் கோட்டை பலமிழக்கும். வீழும். என்ன சொல்கிறீர்கள்?"

"உங்கள் திட்டம் என்ன?"

சொன்னான் புருஷோத்தமன்.

"நல்லவழி. சரியான வழி" என்றார் துறவி.

"அடுத்த அமாவாசைக்குச் சரியாக இருபத்தொன்பது நாட்கள் இருக்கின்றன. அன்றைக்குச் சந்திப்போம். அப்போது உங்களை ஆதரிக்கும் சமணர்களின் எண்ணிக்கையைச் சொல்லுங்கள். நான் வருகிறேன்" என்று கூறிவிட்டு எழுந்தான் புருஷோத்தமன்.

நள்ளிரவு ஆகி விட்டது என்பதை உணர்த்துவது போல் கூடுகாட்டிலிருந்து ஒரு நரி ஊளையிட்டது.

கனத்த இதயத்துடன் திரும்பி நடந்த துறவி ஊர் பக்கமாகச் செல்லாமல் சுடுகாட்டுப் பக்கமாகச் சென்றார். சமீபகாலமாக அவரது பயணம் இரவிலேயே நடந்து வந்தபடியால் தடுமாற்றமில்லாமல் பேயைப் போல நடந்து சென்றார். அவரது தடுமாற்றமில்லாத நடையைக் கண்டு சுடுகாட்டில் நீண்ட காலமாக இருந்து வந்த இரண்டு முதுபெரும் பேய்கள் வியந்து நின்றன. காட்டிற்கு வரும் சடலங்கள் நின்று விட்டபடியால் மயான அமைதி பரிபூரணமாக நிலவியது. இரவு நேரத்தில் இடைவிடாமல் இரையும் ஆந்தைகள் என்ன காரணத்தாலோ அமைதி காத்து பல்வேறு மரக்கிளைகளில் அமர்ந்திருந்தன.

அவற்றையெல்லாம் அவர் பொருட்படுத்த வில்லை. சமணம் மட்டுமே அவரது நினைவில் அல்லாடியது. தன் காலத்தில் சமணம் பூரணமான சாவைக் கண்டு சமாதியாகிவிடும் என்று அவரது உள்ளுணர்வு கூறியது. அதே சமயம் தன் உயிரைக் கொடுத்தாவது அதைத் தடுக்க வேண்டும் என்ற உறுதியும் கூடவே எழுந்தது.

சுடுகாட்டிலிருந்து ஒருகல் தொலைவில் சிறியதொரு கிராமம் இருந்தது. அங்கே பத்து வீடுகளே இருந்தன. ஒவ்வொரு வீட்டின் மேலும் கண்ணாடி விளக்குகள் எரிந்தன. ஒரு வீட்டின் மீது மட்டும் சிவப்புத் துணி சுற்றப்பட்டிருந்ததால் விளக்கு சிவப்பாகக் காட்சியளித்தது.

அந்த வீட்டிற்குச் சென்று விட்டு நான்குமுறை கதவைத் தட்டினார் துறவி.

“இன்றைக்கும் அவளுக்குத்தான் அதிர்ஷ்டம்” என்று இதர வீடுகளில் இருந்த இளம்பெண்கள் வாட்டத்துடன் கதவுகளைச் சாத்திக் கொண்டார்கள்.

சிவப்பு விளக்கு வீட்டின் கதவைத் திறந்தாள் ஓர் இளம்பெண்.

★★★



பவானி

"இன்றைக்கென்ன இவ்வளவு தாமதம்? திரும்பும் நேரத்தில் வருகிறீர்களே?" என்று கேட்டாள் இளம்பெண்.

"எதுஎதுவோ திரும்பிக் கிடக்கின்றன. திறந்து கிடக்கின்றன. இந்த நிலையில் உன் கேள்வி வேறு. அலுப்பு. அலுப்பு. அலுப்பு. அலுப்பு. என்னைச் சீக்கிரம் திருப்பி அனுப்பு" என்றார் துறவி.

"உள்ளே வாருங்கள். வாயிற்படியிலேயே நின்று பேசினால் அலுப்பாகவும் கழுத்தறுப்பாகவும் தான் இருக்கும்" என்று அறைக்கு அழைத்துச் சென்று கட்டிலில் அமர வைத்து "என்ன உண்ணப் போகிறீர்கள்? வழக்கம் போல வாழைப்பழமும் அதிரசமும் தானா?" என்று கேட்டாள் இளம்பெண்.

"பவானி! அந்த இரண்டும் வேண்டாம். எனக்கு இன்று மது வேண்டும். புலால் வேண்டும்" என்றார் துறவி.

"ஐயா! நீங்கள் துறவி. மதுவையும் மாமிசத்தையும் கேட்கலாமா?"

"நான் வந்திருப்பது விஹாரமல்ல. விகாரமான இடம். இங்கே நடக்கப்போவது தவமல்ல. காமம். இதற்குப் பிறகு எதற்குத் தடை? எதற்குத் தயக்கம்? போய் இரண்டையும் கொண்டு வா."

துறவி அவ்விரண்டையும் கேட்டது புதிய விஷயமாக இருந்தாலும் பவானிக்கு அவை பழகிப் போன பழைய விஷயங்களாக இருந்ததால் தனக்கென்று சமைத்து வைத்திருந்த புலால் உணவையும் மதுவையும் கொண்டு வந்து கொடுத்தாள்.

துறவி மதுவை எடுத்து ஒரே மூச்சில் குடித்துவிட்டு புலால் உணவை கடித்துக் குதறி உண்டதைக் கண்டு வியந்து போன பவானி "அடிகளே! உங்களுக்கு இதெல்லாம் கூட நல்ல பரிச்சயம் தானா? நம்பமுடியவில்லையே!" என்று வினவினாள்.

"மது, புலால், மாது, காமம் இவையெல்லாம் கூட்டணிகள். ஒன்றோடு ஒன்று சேர்ந்து கொள்வது அவற்றின் இயல்பு.

இதற்கெல்லாம் வியக்காதே" என்று சொல்லி ரசித்துச் சுவைத்தார் துறவி.

"அடிகளே! உங்களை நானொன்று கேட்கலாமா?"

"கேள்."

"உங்களுக்கு ஏன் இந்த நிலை?"

"எந்த நிலை?"

"மது, மாமிசம், மாது, காமம்..."

"இதில் வியப்பதற்கு என்ன இருக்கிறது?"

"இதெல்லாம் துறவிகளின் லட்சணங்களா?"

"நான் துறவியல்ல."

"என்ன சொல்கிறீர்கள்?"

"என் மதம் என்றைக்கு ஆட்சியாளர்களால் துகிலுரிக்கப் பட்டதோ அன்றைக்கே நான் துறவை விட்டு விட்டேன்."

"ஏன்?"

"சுற்றியிருந்த நான்கு சுவர்களும் விழுந்து விட்டபின் நான் எதற்காக உள்ளே உட்கார்ந்திருக்க வேண்டும்? மதம் என்னும் மனைவி களவாடப்பட்டு, கற்பழிக்கப்பட்டு விட்டபின் பரிகாரம் தேடி எங்கே போவது? எனவே தான் பலகாரத்தைத் தேடி வந்து விட்டேன்."

"நீங்கள் திருப்பருத்திக் குன்றத்தின் தலைமைத் துறவி."

"அதனால் தான் எனக்கு வலி அதிகம். எனக்கு மதுவும் மாதுவும் தான் வலி நிவாரணிகள்."

"மதத்தைக் கைவிட்டு விட்டீர்களா? கை கழுவி விட்டீர்களா?"

"அப்படி விட்டு விட முடியாது பவானி. காலநேரம் இப்போது சாதகமாக இல்லை. காலநேரத்திற்காகக் காத்திருக்க வேண்டிய நேரம் இது. பொறுப்பு என்பது மட்டும் கட்டாயமல்ல. பொறுத்திருக்க வேண்டியதும் கட்டாயம் தான்."

"உங்களை நினைத்தால் எனக்குக் கவலையாக இருக்கிறது."

"கவலைப்படுவதற்கு நீ ஒருத்தியாவது இருக்கிறாயே. சந்தோஷம்" என்று சொல்லிவிட்டு "சரி சரி வந்த காரியத்தை முடிக்கலாம். தினமும் ஓர் அங்கம் என்பது என் கணக்கு. இன்று யந்த அங்கம்?" என்று கேட்டார் துறவி.

அங்கத்தைச் சுட்டிக் காட்டிய பவானி சிரித்தாள்.

"எதற்காக நீ இப்போது சிரிக்கிறாய்?"

"சுவாமி! நீங்கள் எவ்வளவு காலமாக உண்மைத் துறவியாக இருந்தீர்கள்?"

"அது இருக்கும் முப்பது ஆண்டுகள். அதைப்பற்றி இப்போதைக்கு என்ன?"

"முப்பது ஆண்டுகளாகப் பெண்கள் சகவாசம் இல்லாமலா இருந்தீர்கள்?"

"ஆமாம்."

"எப்படி?"

"எப்படி என்றால்?"

"எப்படி முடிந்தது என்று கேட்கிறேன்."

"அதெல்லாம் முடிந்து விட்ட கதை. எப்படி முடிந்த தென்றால்? ஒரு வைராக்கியம். துறவு மீது இருந்த ஈடுபாடு. மதத்தின் பேரில் இருந்த ஆர்வம்."

"அதெல்லாம் ஏன் போய்விட்டன முப்பது ஆண்டுகளுக்குப் பின்னால்?"

"அது சொந்தக் கதை. சோகக் கதை. துரோகக் கதை. மதம் அழிக்கப்படும்போது துறவு எப்படித் துள்ளி நிற்கும்? வைராக்கியம் தான் நீடிக்க முடியுமா? முடியாது. வெள்ளம் வரும்போது அனைத்தும் அடித்துச் செல்வது போலத்தான் இதுவும்."

"முப்பது ஆண்டுகளாகப் பெண்களின் சுவாசத்தையே அறியாத நீங்கள் கொஞ்ச காலத்திலேயே காமத்தில் கரை கண்டவராக இருக்கிறீர்களே! அதை எண்ணித்தான் சிரித்தேன்."

"சிரிக்க வேண்டிய அவசியமில்லை பவானி. துறவிகள் துறந்து இருந்தாலும் எல்லாவற்றையும் தெரிந்து வைத்திருப் பார்கள். அதோடு இந்தக் கலையை யாரும் கற்றுக் கொண்டு களத்தில் இறங்குவதில்லை."

"கட்டிளங் காளைகள் கூட உங்களைப் போல ஈடுபடமாட் டார்கள். ஆகவே உங்களை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. நீங்கள் துறவைத் துறந்தது எனது பாக்கியம் தான்" என்று சொன்ன பவானி தான் சுட்டிக் காட்டிய அங்கத்தைச் சொல்லி "அங்கே என்ன இருக்கிறது அள்ளுவதற்கு?" எனறு கேட்டாள்.

"சிற்பிக்குத்தான் கல்லுக்குள் இருக்கும் சிற்பம் தெரியும். மற்றவர்களுக்குத் தெரியாது. பேசியது போதும் பவானி.

ஏற்கனவே புருஷோத்தமனிடம் நிரம்பவே பேசிவிட்டேன். நீயும் பேசி அறுக்காதே" என்று சொல்லி அவளது அந்த அங்கத்தில் தன் கலைத்திறனைக் காட்டினார்.

பவானிக்கு வியப்பு. "இதில் போய் இவ்வளவு இருக்கிறதா? இவர் துறவியே இல்லை. காமாந்தகச் சக்கரவர்த்தி" என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்டு அவர் அளித்த இன்பங்களை ஆனந்தமாக ஏற்றுக் கொண்டாள்.

ஒரே அங்கத்திலேயே இரண்டு நாழிகைவரை இன்ப ஜாலங்களைக் காட்டி விட்டு விலகிய துறவி துலாபாரர் "உனது இந்த அங்கத்திற்கு இணை எதுவும் இல்லை. மன்மதன் இருந்திருந்தால் உன்மத்தம் அடைந்து உன்னை வானுலகத்திற்கே தூக்கிச் சென்றிருப்பான்" என்று பாராட்டவும் செய்தார்.

"மன்மதன் வந்தாலும் சரி - இந்திரனே வந்தாலும் சரி அவர்களை நான் ஏற்கமாட்டேன். நீங்கள் சற்றுமுன் காட்டிய கலையில் அவர்கள் இருவரும் வெறும் மாணவர்கள். நீங்களோ பெரும் தலைவர். உபாத்தியாயர். நீங்கள் தான் எனக்கு வேண்டும். துறவிதான் எனக்குப் பிடித்த உறவு" என்றாள் பவானி காமக்கிறக்கத்தில்.

"உனது வார்த்தைகள் எனக்கு மகிழ்ச்சியை அளித்தாலும் எல்லா மகிழ்ச்சியையும் சுவடு தெரியாமல் செய்ய வைக்கும் அவலம் எனக்கு வேதனையாக இருக்கிறது. என் உடல் அவல மாக இருந்தால் உதறியிருப்பேன். என் பொருளாதாரம் அவலமாக இருந்தால் உதாசீனப் படுத்திருப்பேன். எனக்கு வந்திருப்பது மத அவலம். மகத்தான அவலம். அதை நான் நீண்டகாலத்திற்குத் தாங்கிக் கொண்டிருக்க வேண்டும். அவலம் அகற்றப்பட்டு ஆனந்தம் கைகூடி விட்டால் மன்மதனே அலறக் கூடிய காமக் கலைகளை உன்னிடம் காட்டுவேன். உன்னை ஒரு ஆட்டு ஆட்டுவேன். பதவி என்னும் மாலையை உனக்குச் சூட்டுவேன். நான் எப்படிப்பட்ட சமணன் என்பதை ஆட்சியாளர்களுக்குக் காட்டுவேன். அவர்களை இந்த நாட்டை விட்டு ஓட்டுவேன். எதிரிகளின் கைகளுக்கு விலங்குகளைப் பூட்டுவேன்."

"ஐயா! நீங்கள் கூறுவது வெறும் கனவு என்றே எனக்குத் தோன்றுகிறது. நடக்குமா?"

"இந்தப் பல்லவர்கள் யார்? நாடில்லாத நாடோடிகள். ஆதவாகனரை அண்டிப் பிழைத்த ஊழியர்கள். அவர்களால் எப்படிக் காஞ்சியைப் பிடிக்க முடிந்தது? களப்பிரர்களை விரட்டியடித்து காஞ்சியைப் பல்லவர் காஞ்சியாக எப்படி

மாற்ற முடிந்தது? இன்றைக்குத் தென்னகத்தில் பலம் பொருந்திய பேரரசாக உயர எப்படி முடிந்தது? வெறும் கனவு என்று எண்ணியிருந்தால் முடிந்திருக்குமா? அவநம்பிக்கையில் ஆழ்ந்திருந்தால் ஆட்சியைக் கைப்பற்றியிருக்க முடியுமா? நானும் அப்படித்தான். என்னிடம் வைராக்கியமானது மலைபோல இருக்கிறது. நம்பிக்கை என்பது கடல்போல் விரிந்திருக்கிறது. எனது திட்டங்கள் வானத்தைப் போல் விஸ்தாரமானவை."

"என்ன திட்டங்களை வைத்திருக்கிறீர்கள்?"

"நிறைய உண்டு. அதில் ஒன்று தான் சற்று முன் புருஷோத்தமனிடம் பேசிய திட்டம்."

"புருஷோத்தமன் யார்?"

"அவனது பூர்வீகம் தெரியாது. ஆனால் நந்திவர்மனை அழிக்க நினைக்கும் பயங்கர ஆயுதம் என்பது மட்டும் தெரியும். அவன் புத்திப் பூர்வமாக யோசிக்கிறான். திட்டமிடுகிறான். தற்போதுகூட ஒரு திட்டத்தை அவன் தந்திருக்கிறான்."

"அது என்ன திட்டம்?"

"அது உனக்கெதற்கு? படுக்கையோடு உன் எண்ணங்களை நிறுத்திக் கொள். காமத்தோடு உன் செயல்களை நிறுத்திக் கொள்."

"ஏன் அப்படி? பெண்களுக்கு அறிவுகிடையாது என்பது உங்கள் எண்ணமா?"

"என்ன சாதித்திருக்கிறார்கள் இந்தப் பெண்கள் இந்தப் படுக்கையைத் தவிர்த்து. அதோடு சமணத்தில் பெண்களுக்கு எந்த உரிமையும் கிடையாது. துறவுக்குக் கூட அவர்களுக்கு அனுமதியில்லை."

"நான் சமணமதத்தைச் சேர்ந்தவள் இல்லையே! என்னை விடுங்கள். காஞ்சியில் ஒரு யோகினி இருக்கிறாளே தெரியாதா? அவள் அறிவுச் சுடர். ஞானச் சுடர். மன்னரே அவளை மதித்துப் போற்றுகிறார்."

"அவளைப் போல காஞ்சியில் எத்தனை பேர் இருக்கிறார்கள்? ஒருவரும் இல்லை. இங்கொன்றும் அங்கொன்றுமாய் இருக்கிறார்கள். மொத்தத்தில் இந்தத் தமிழகத்தில் பத்து பேர் இருக்கலாம்."

"நான் முட்டாள் என்பதுதான் உங்கள் தீர்மானமா?"

"அப்படிச் சொல்லவில்லை பவானி. நீ அறிவாளியாகவும் இருக்கலாம். என் பிரச்சனையை உன்னிடம் எதற்காக இழுக்க வேண்டும் என்றுதான் அமைதியாக இருக்கிறேன்."

"நமது இரத்தம் கலந்துவிட்டது. நாம் இருவரல்ல. ஒருவர். பிறகென்ன தயக்கம்?"

"பவானி! புருஷோத்தமன் அசகாய சூரன். சதி செய்து காரியம் ஆற்றி அதில் வெற்றிபெறுவதில் வல்லவன். என்ன காரணத்தாலோ அவனுக்குப் பல்லவ மன்னனின் மீது ஆறாப்பகை ஆழமாக மூண்டுள்ளது. பல்லவ மன்னனையும் அவனது ஆட்சியையும் அடியோடு வேரறுக்க முனைகிறான். நானும் அதே எண்ணத்திலும் வேட்கையிலும் இருக்கிறேன். அவன் ஏந்தியிருக்கும் ஆயுதங்களில் என்னையும் ஒன்றாக ஏற்றுக் கொண்டான். அவனது திட்டம் என்னவென்றால் திருப்பருத்திக் குன்றத்திலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் உள்ள சமணர்களைத் திரட்ட வேண்டும். ஒரு படைத் தொகுதி அளவிற்கு உருவாக்க வேண்டும். காஞ்சியில் எழுப்பப்பட்டு வரும் விண்ணகரக் கோயில் குடமுழுக்கு விழாவின் போது அனைத்து மதங்களைச் சேர்ந்தவர்களையும் சம்பிரதாயம் என்ற விதத்தில் அழைப்பு விடுப்பான். அப்போது என் தலைமையிலான துறவிப் படையை அழைத்துக் கொண்டு அங்கு நான் செல்வேன். சமயம் பார்த்துத் துறவிப் படையை ஏவி அவனைக் கொல்வேன். இதுதான் திட்டம்."

"இதைத்தான் புருஷோத்தமன் சொன்னாரா?"

"ஆமாம்."

"இந்த திட்டத்தில் மன்னருக்கு எதுவும் ஆகாது. நீங்கள் முற்றிலுமாக அழிந்து போவீர்கள். உங்களில் ஒருவர் கூட மிஞ்சப் போவதில்லை."

"எப்படிச் சொல்கிறாய்?"

"உங்களில் யாரையும் சீந்துவதற்குத் தயாராக இல்லை என்பது மன்னரின் நடவடிக்கைகள் மூலமாகவே தெரிகிறது. விண்ணகரக் கோயில் குடமுழுக்கு விழாவில் உங்களையெல்லாம் அழைப்பான் என்று எப்படி எதிர்பார்க்கிறீர்கள்? சம்பிரதாயத்திற்காக உங்களை மட்டுமாவது அழைக்கலாம். நீங்கள் துறவிப் படையோடு அங்கே போய் நின்றால் மன்னனுக்குச் சந்தேகம் தான் வரும். உடனே அனைத்துச் சமணர்களையும் கைது செய்து சிறையில் அடைப்பான். அனைவரையும் பட்டினி போட்டுக் கொல்வான்."

துறவி யோசித்தார்.

"நீ சொல்வது சரியாகத்தான் இருக்கிறது. அதே சமயம் புருஷோத்தமன் தவறான திட்டங்களைச் சொல்லமாட்டானே? சொதப்பும் கணக்குகளைப் போட மாட்டானே?" என்று கேட்டார்.

"குடமுழுக்கு விழாவின் போது எதிரிகளுக்குக் கூட அழைப்பு விடுத்து மரியாதை செய்வது வழக்கமாக இருந்து வருகிறது. அந்த நினைப்பில் அவர் அத்திட்டத்தைச் சொல்லி யிருப்பார். ஆனால் நந்திவர்மர் சிக்கலானவர் ஒரு காரியத்தை எதற்காக செய்கிறார் என்பதை யாராலும் கணிக்க முடியாது. அவர் ஒரு புதிர். வினோதமானவர். இல்லையென்றால் ஈடுபடும் போர்களில் எல்லாம் தோற்றுப் போவாரா? தோற்றுவிட்டு வரும் அவரை மக்கள் வரவேற்பார்களா?" என்றாள் பவானி.

"நந்திவர்மனைப் பற்றி நீ கூறுவது முற்றிலும் சரி. ஒருமுறை எங்களிடம் நா ஒழுகப் பேசி விட்டுப் போன மன்னன் மறுநாளே எங்களுக்குத் தானமாக வழங்கியிருந்த நாலுவேலி நிலத்தைப் பறித்து பிராமணர்களுக்கு வழங்கிவிட்டான். ஏன் எதற்கு என்று கேட்டால் கொடுத்தவன் எடுத்துக் கொண்டான் என்று சொல்லி விட்டுப் போய் விட்டான். நய வஞ்சகன். நம்பிக்கை துரோகி."

"பிறகெப்படி அவனை நம்பித் துறவிப் படையை விண்ணகர விழாவிற்குக் கொண்டு செல்கிறீர்கள்?" என்று கேட்ட அவள் "வீணாக உங்கள் துறவிகளைப் பலிகொடுக்காதீர்கள். உங்கள் துறவுக் கோலமே மன்னனுக்குப் பிடிக்காத கோலமாகி விட்ட பின் அது எதற்கு? நீங்கள் துறவை விட்டது போல் உங்கள் துறவிகளும் தற்காலிகமாகத் துறவுகளை விடட்டும். வீரர்களுக்குரிய ஆடைகளை அணியட்டும். வீரர்கள் அணியும் தலைப் பாகையை அணியட்டும். வீரர்களாகவே மாறட்டும். மன்னனின் படையில் சேரட்டும். படையில் சேரும் வீரர்களை வரவேற்பார்களே தவிர விரட்ட மாட்டார்கள். வீரர்களாகச் சேரும் வீரர்களுக்கு உணவும் கிடைக்கும். ஊதியமும் கிடைக்கும். சமயம் பார்த்து போரின் போது ஒன்று திரண்டால் மன்னனைக் கொல்ல முடியும்."

புருஷோத்தமனின் திட்டத்தைவிட பவானியின் திட்டம் சிறப்பானதாகத் தோன்றியது.

"மாணிக்கம் குப்பையில் இருக்கும். செந்தாமரை சேற்றில் தான் பூக்கும். அதை நீ உணர்த்தி விட்டாய் பவானி. உன்னை இதர பெண்களைப் போல உதறிவிடமுடியாது. உன் திட்டம் சர்க்கரை திட்டம். இனிக்கும் திட்டம்" என்று கூறி அவளை வாரியணைத்து மகுடத்தில் கிடத்தினார்.

"சுவாமி! இன்றைக்கு உண்டானது முடிந்துவிட்டது" என்றாள் பவானி.

"இப்போது தான் ஆரம்பம்" என்று சொல்லி அவளது எல்லா அங்கங்களையும் பதம் பார்த்த துறவி விடிந்த பின் வெளியேறியதைக் கண்ட இதர இல்லங்களின் இளமங்கைகள் பெருமூச்சு விட்டார்கள்.

பொழுது நன்றாக விடிந்தபின் மன்னனிடம் வந்தார் மகாசேனாதிபதி காடகமுத்தரையர்.

"நீங்கள் என்னைக் கட்டுப்படுத்தி விட்டதால் பேசாமல் இருந்தேன். இல்லாவிட்டால் பத்துப் பேர் தலைகளையாவது வாங்கியிருப்பேன்" என்றார்.

★★★



பெருமக்கள் ஆலோசனை

மூத்தரையர் வம்சத்தில் பிறந்திருந்தாலும் காடக முத்தரையர் அரச வம்சத்தவரல்ல. செந்தலையில் பிறந்திருந்தாலும் அவர் சேவை புரிந்தது சீர்மல்கும் காஞ்சியில். அக்காஞ்சிப் பல்லவர்களுக்கு உகந்தவராய் இருந்தபடியால் படிப்படியாக உயர்ந்து படை திரட்டுபவராகவும் நிர்வகிப்பவராகவும் ஆனார். காஞ்சியின் பிரமுகர்களில் ஒருவரானார். எங்கோ இருந்த பல்லவ மல்லனான நந்திவர்மனைக் காஞ்சிக்குக் கொண்டு வந்த முக்கியஸ்தர்களில் முக்கியமானவராக இருந்தார். நந்திவர்மன் அரியணையில் அமர்ந்ததும் அவன் அவரைச் சேனாதிபதியாக்கினான். வயதாலும் அனுபவத்தாலும் அவர் மகாசேனாதிபதியானார்.

படை நடத்துவதில் மட்டுமின்றி நிர்வாக விஷயங்களிலும் நல்ல அறிவையும் தீட்சண்யத்தையும் பெற்றிருந்ததால் அவர் மீது நந்திவர்மனுக்கு மதிப்பு இருந்தது.

அவர் தில்லைக்குச் சென்று நடராஜர் ஆலயத்திற்குள் பெருமாள் ஆலயத்தை அமைப்பது குறித்து பேசிவிட்டு காஞ்சிக்குத் திரும்பி தெரிவித்த செய்தியும் பேசிய விதமும் தில்லையில் நடக்கக் கூடாதது ஏதோ நடந்திருக்க வேண்டும் என்று கருதிய மன்னன் "அங்கே யாரையெல்லாம் சந்தித்தீர்கள் முத்தரையரே?" என்று வினவினான்.

"தில்லை மூவாயிரவர் என்னும் அந்தணர்களைச் சந்தித்தேன். ஆலயத்தில் பணிபுரியும் தீட்சிதர்களைச் சந்தித்தேன். வைஷ்ணவர்கள் சிலரைச் சந்தித்தேன். பொதுமக்கள் பலரையும் சந்தித்தேன்" என்றார் முத்தரையர்.

"வைஷ்ணவர்கள் என்ன சொன்னார்கள்?"

"நல்ல காரியம். சீக்கிரமாக நடக்கட்டும் என்றார்கள்."

"பொது மக்கள்?"

"பொது மக்களில் இருசாரார் இருக்கிறார். பெருமாள் கோயிலைக் கட்டினால் ஒரே இடத்தில் இருதெய்வங்களையும் சந்திக்க முடியும் என்று சொல்லி விருப்பம் தெரிவிக்கிறார்கள். மறுசாரார் அங்கே நடராசர் கோயிலுக்குள் பெருமாள் கோயில் கட்டுவது அவசியம் இல்லை என்கிறார்கள். அதே சமயம் மன்னர் விரும்புகிறார் என்றால் தங்களுக்கு ஆட்சேபனை எதுவும் இல்லை என்கிறார்கள். தில்லை மூவாயிர வரும் தீட்சிதர்களும் தான் கடுமையாக எதிர்க்கிறார்கள். சுடுசொற்களை வீசுகிறார்கள். உங்கள் பெருமாளுக்கு வேறு இடமில்லையா என்று கேட்கிறார்கள். நந்திவர்மருக்கு அறிவு வேலைசெய்யவில்லையா என்று கேட்கிறார்கள். அதுமட்டுமல்ல மகாராஜா. பெருமாள் கோயில் கட்டும் பொருட்டு மன்னர் தில்லை மண்ணில் கால் வைத்தால் தலையிருக்காது என்கிறார்கள். எனக்கு மட்டும் நீங்கள் கட்டுப்பாடு விதிக்காமல் இருந்திருந்தால் அவர்களில் பத்து பேர்களின் தலைகளையாவது சாய்த்திருப்பேன்."

"தங்கள் குணம் தெரிந்து தான் உங்கள் கருத்துக்களைக் கூடச் சொல்ல வேண்டாம் என்று சொல்லியிருந்தேன்."

"மகாராஜா! எதிர்ப்புக் காட்டுவதற்கு தீட்சிதர்களுக்கும் மூவாயிரவர்களுக்கும் உரிமை இருக்கிறது. அதைத் தெரிவிக்க முறையில்லையா? நாகரீகம் இல்லையா? மன்னரது உத்தேசம் என்று கூறிய பிறகு அநாகரீகமாகப் பேசுவதும் கொலை மிரட்டல் விடுவதும் சரியாகுமா? அவர்களைப் போன்றவர்களுக்கு அது உகந்ததாகுமா? பெருமை சேர்க்குமா?"

"முத்தரையர் அவர்களே! தீட்சிதர்களும் அதி தீவிர வீர சைவர்கள். அவர்களது பேச்சு சூடாகத்தான் இருக்கும்."

"நான் பேசினால் அவர்கள் தாங்க மாட்டார்கள். தலை வெடித்து விடும்."

"தில்லையில் நமது ஆதிக்கத்தில் ஆண்டு வரும் சோழ மன்னரைச் சந்திக்கவில்லையா?"

"அவர் தில்லையில் இல்லை. தஞ்சைக்குப் போயிருக்கிறாராம்" என்று சொன்ன காடகமுத்தரையர் "நானொன்று சொல்லலாமா மகாராஜா?" என்று கேட்டார்.

"நாளை மறுநாள் மூத்தவர்கள் ஆலோசனையைக் கூட்டுகிறேன். அங்கே சொல்லுங்கள்" என்றான் மன்னன்.

சொன்னது போலவே மறுநாளைக்கு மறுநாள் கூட்டிய அவையில் மகாமந்திரி, கடிகையின் தலைவர், காரியஸ்தர், காட க

முத்தரையர், கோட்டைத் தலைவர், ராஜகுரு ஆகியோரை அவைக்கு வரும்படி கேட்டுக் கொண்டான் மன்னன்.

அனைவரும் வந்தார்கள்.

ஞானகுரு இதுபோன்ற அவைகளுக்கு வருவதில்லை. அதோடு அவர் உடல்நலம் குன்றியிருந்தார்.

மன்னன் பேசமுற்பட்டு "முக்கிய விஷயங்கள் எதுவாக இருந்தாலும் உங்களையெல்லாம் நான் ஆலோசிக்காமல் இருந்ததில்லை. அந்த வகையிலேயே உங்களையெல்லாம் அழைத்திருக்கிறேன். அனைவரும் வந்திருக்கிறிர்கள். அதற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது தில்லை விஷயத்தைக் காடக முத்தரையர் அவர்கள் விளக்கிச் சொல்வார்" என்று கூறி விட்டு அமர்ந்தான்.

காடக முத்தரையரும் தில்லைக்குச் சென்று திரும்பியது வரை அட்சரம் பிசகாமல் எடுத்துரைத்தார்.

அவர் பேசிவிட்டு அமர்ந்ததும் மகாமந்திரி பிரம்மஸ்ரீ ராஜர் பேசமுற்பட்டு "தில்லையில் உள்ள நடராஜர் ஆலயத்திற்குள் பெருமாள் கோயிலைக் கட்டும் படி மன்னருக்கு யோசனை சொன்னது யார்?" என்று கேட்டார்.

"என்னிடம் வந்து விட்ட பின் அது என் கருத்தென்றே கருதலாம் அமைச்சர் பெருமானே" என்றான் மன்னன்.

"மகாராஜா! இந்த முயற்சி இல்லாத ஊருக்குப் பாதை போடுவது போன்றது. உங்களைப் போலவே நானும் திருமாலடியவன் தான். என் சிந்தனையில் எப்போதும் இருப்பவன் திருமால் ஒருவன் தான். அத்திருமாலுக்குக் காஞ்சியிலேயே தனிக் கோயில்கள் திரும்புமிடமெல்லாம் இருக்கின்றன. காஞ்சிக்கு அப்பால் நான்கு திசைகளிலும் பெருமாள் கோயில்கள் இருக்கின்றன. பெருஞ் சிறப்புடன் இருக்கின்றன. நந்திபுரத்தில் தாங்கள் எழுப்பிய விண்ணசரம்* அனைவராலும் பேசப்படும் ஆனந்த நிலையமாக இருக்கிறது. காஞ்சியிலேயே கூட தாங்கள் நிர்மாணித்து வரும் விண்ணகரம் விண் இருக்கும் வரை மண்ணுலகத்தோர் மட்டுமின்றி விண்ணுலகத்தோரும் போற்றத் தகுந்த ஆலயமாக விளங்கப் போகிறது. அப்படி இருக்கும் போது முழுக்க முழுக்க சிவ அலைகள் வீசிக் கொண்டிருக்கும் தில்லை நடராஜர் கோயிலுக்குள்ளே பெருமாள் ஆலயம் எதற்காகக் கட்டப்பட வேண்டும்?" என்று கேட்டார்.

"அமைச்சர் பெருமானே! கடல்மல்லையில்* ஐலசயனப் பெருமாள் கோயிலுக்கு முன்னும் பின்னும் சிவாலயங்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன. தெற்கே காவிரிக் கரையில் உள்ள கரம்பனூரில் (உத்தமர் கோயில்) மும்மூர்த்திகளுக்கும் சிலாவிக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன. இவ்விரண்டு இடங்களில் என்ன அலை வீசுகிறது? சிவ அலையா? விஷ்ணு அலையா?" என்று கேட்டான் மன்னன்.

மகாமந்திரி சற்றே அதிர்ச்சியுடன் தலையை ஆட்டினார்.

"உங்கள் கேள்விக்கு என்னால் பதில்கூற இயலாது மகாராஜா. அக்கோயில்கள் எந்தச் சூழ்நிலையில் அவ்வாறு அமைக்கப்பட்டன என்பதைச் சொல்வதற்கில்லை. நாம் தில்லையைப் பற்றி மட்டும் பேசுவதே உகந்தது" என்றார்.

"உங்களது பதில் எனக்குத் திருப்தியளிக்கவில்லை அமைச்சர் பெருமானே! புதியதாக ஒரு காரியத்தில் இறங்கும் போது முன்னுதாரணங்கள் உள்ளனவா என்று பார்ப்பது மரபு. அதுவும் அரசாங்கம் அவ்வாறு ஈடுபடும் போது மூன்று காரணங்களைக் கண்டறிவது இன்றியமையாதது. அரசாங்கத்திற்கு முன்னுதாரணங்கள் எதுவுமின்றி புதிய காரியங்களை செய்வதற்கு முழு உரிமை உண்டு என்பது தங்களுக்குத் தெரியாததல்ல. தில்லை விஷயத்தில் முன்னுதாரணங்கள் இருப்பதால் அவற்றைச் சுட்டிக் காட்டினேன்" என்றான் மன்னன்.

"முன்னுதாரணங்கள் தவறாக இருக்குமானால் அதை நாம் பின்பற்றாமல் இருப்பது தான் உத்தமமானது" என்றார் மகாமந்திரி.

"அப்படியென்றால் கடல்மல்லைக் கோயில் மற்றும் கரம்பனூர்க் கோயில் கட்டப்பட்ட விதம் தவறான உதாரணங்கள் என்பது தான் முதலமைச்சரின் கருத்தா?" என்று கேட்டார் காடக முத்தரையர்.

"முத்தரையரே! சிவாலயங்களுக்கென்று தனி ஆகமங்களும் வழிபாடுகளும் உண்டு. பெருமாள் ஆலயங்களுக்கென்று தனி ஆகமங்களும் வழிபாடுகளும் உண்டு. திருவிழாக்களும் வாகனங்களும் கூட வேறு வேறு தான். அதனால் தான் சிவாலயங்களையும் விண்ணகரங்களையும் தனித்தனியாக அமைத்தார்கள். மன்னர் குறிப்பிடும் கடல் மல்லையிலும் கரம்பனூரிலும் இவற்றையெல்லாம் மீறி எப்படி ஆலயங்களை அமைத்தார்கள் என்று தெரியவில்லை. விதிகளை யாரோ மீறி

* மாமல்லபுரம்.

விட்டார்கள் என்பதால் நாமும் மீறலாம் என்று முனைவது சரியல்ல என்பது என் கருத்து" என்றார் முதலமைச்சர் பிரம்மஸ்ரீராஜர்.

இந்நிலையில் கடிகைப் பல்கலைக் கழகத்தின் தலைவரும் காஞ்சியில் எல்லோராலும் மதிக்கப்பட்டவருமான தரணிகண்ட போசர் பேசமுற்பட்டு "மகாராஜா! சிவ அலையும் பெருமாள் அலையும் ஆலயங்களில் மட்டுமல்ல. அகிலம் முழுதும் சேர்ந்தே வீசுகின்றன. எனவே அலையைப் பற்றிய பேச்சு தேவையில்லை. தில்லை விஷயத்தில் நாம் முக்கியமாகக் கருதவேண்டியது தில்லைவாழ் மக்களின் எதிர்ப்பைத் தான். தற்போது எதிர்ப்பு தெரிவிப்பது தீட்சிதர்களும் தில்லை வாழ் மூவாயிரம் அந்தணர்களும் தான் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. அவர்கள் அயல்நாட்டினர் அல்ல. தில்லை மக்களின் ஒரு பகுதி தான். ஆகவே மக்கள் எதிர்ப்பை மீறி அங்கே பெருமாள் கோயிலைக் கட்ட முற்படுவது மக்களை நாம் மதிக்கத் தயாராக இல்லை என்பதையே காட்டும். மக்கள் சக்தி மகா சக்தி. அதை எதிர்த்துக் கொண்டு காரியங்களை ஆற்றுவது மக்கள் விரோதப் போக்காகும்" என்றார்.

"ஐயா! மக்களின் இயல்பு விந்தையானது. காலத்திற்குக் காலம் மாறக் கூடியது. இக்காஞ்சிநகர மக்களையே எடுத்துக் கொள்ளுங்கள். போரில் நான் தோற்று வரும்போதெல்லாம் எனக்கு விழா எடுக்கிறார்கள். மக்கள் இயல்பா இது? இப்படி வேறெங்காவது நடந்திருக்கிறதா? வீரதீர பராக்கிரம மன்னர்களை விரும்புவது தான் மக்கள் இயல்பு. போரில் புறமுதுகில் காயம் பட்டு வீழ்ந்தவன் தன் மகனாக இருந்தால் இவனைப் பெற்ற வயிறா இது என்று இகழ்ந்து கொள்வாளாம் தாய். அது தான் தமிழக மக்கள் இயல்பு. பண்பு. என் விஷயத்தில் காஞ்சிநகர மக்கள் நேர்மாறாக நடந்து கொள்கிறார்கள். இதற்கு என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டான் மன்னன்.

"காஞ்சி மக்களின் மாறுபட்ட இயல்பைக் கண்டு நாங்கள் வியக்கவே செய்கிறோம். இது ஒரு அதிசயம். நீ கோட்டைப் பிரவேசம் செய்யும் போது உனக்குக் குடை பிடிப்பது போல் பட்சிகள் பறப்பது மற்றொரு அதிசயம். எங்களுக்குக் காரணம் தெரியவில்லை. இந்த அதிசய மக்களின் இயல்பைக் கொண்டு தில்லைவாழ் மக்களையோ தஞ்சைவாழ் மக்களையோ எடை போடக் கூடாது. தற்போது தில்லையின் நிலவரம் என்ன என்பதே ஆராயப்படவேண்டிய விஷயம்" என்றார் தரணி கண்ட போசர்.

"கடல் மலையிலும் கரம்பனூரிலும் இரு மூர்த்திகளுக்கும் ஒரே இடத்தில் அமைத்தபோது மக்கள் எப்படி அனுமதித் தார்கள்?" என்று கேட்டார் காடக முத்தரையர்.

"முத்தரையரே! பழைய கதையை மறுபடியும் நாம் பேசவேண்டியதில்லை. நீங்கள் கூறிய அந்த இரண்டு இடங்களில் சிவனுக்கும் திருமாலுக்கும் ஒரே வளாகத்தில் கோயில்களைக் கட்டியபோது மக்கள் எதிர்க்கவில்லை என்று சொல்ல முடியாது. எதிர்த்திருக்கலாம். பின்னால் எதிர்ப்பைக் கைவிட்டிருக்கலாம். என்ன நடந்தது என்பது உறுதியாகத் தெரியாத போது அவற்றைப் பற்றித் தற்போது பேசுவதால் பயனில்லை. ஊகங்களை வைத்துக் கொண்டு தற்போதைய நிலைமைக்குத் தீர்வுகாண வேண்டாம்" என்றார் தரணிகண்ட போசர்.

காரியஸ்தரும் அரண்மனை விவகாரங்களில் மிகுந்த அனுபவம் வாய்ந்தவரும், முக்கிய காரியங்களுக்கு முதன்மை வகிப்பவரும், நந்திவர்மனுக்கு முன்பிலிருந்தே அரண்மனை நிர்வாகத்தைத் திறம்பட நடத்தி வந்தவருமான ஜேஷ்டபாத சோமயாஜி பேச முற்பட்டு "பெருமக்களே! மகாராஜா கூறியபடி மக்களின் இயல்பு மாறிக் கொண்டே இருக்கும். உதாரணத்திற்குப் பாண்டிய மன்னர் நமது காஞ்சியைக் கைப்பற்றிக் கொண்டு நமது மன்னரை வெளியேற்றி விட்டு நல்லாட்சி புரிந்தால் அவனைப் பாராட்டத் தொடங்கி விடுவார்கள். நமது மன்னரை மறக்கவும் முற்படலாம். மன்னராட்சியில் மன்னர் தான் மகாசக்தி. அவருக்குப் பிறகு தான் மக்கள். ஒவ்வொரு காரியத்திற்கும் மக்களிடம் சம்மதம் கேட்டுக் கொண்டிருக்க முடியாது. மக்களுக்காக அஞ்சிக்கொண்டு இருக்க முடியாது. மன்னரது தற்போதைய விருப்பம் தில்லை நடராஜர் கோயிலுக்குள் பெருமாள் ஆலயம் ஒன்றை உருவாக்குவது தான் என்றால் அதை மக்கள் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்" என்றார்.

காடகமுத்தரையர் பேச முற்பட்டு "அமைச்சர் பெருமானே! நமது பல்வ மன்னரான மகேந்திர வர்மர் சமணராக இருந்து ஆட்சி செய்து வந்தபோது திருநாவுக்கரசர் என்னும் சிவனடியாருக்குக் கொடுமைகளை இழைத்தார். அதைக் கண்டு மக்கள் கொதித்தார்களா? மன்னனை எதிர்த்தார்களா? இன்றைக்குத் தில்லை நடராசரைத் தலைக்கு மேலே தூக்கி வைத்துக் கொண்டு அம்பலவாணரை விட அதிகமாகத் தாண்டவமாடும் தில்லை மூவாயிரவரும், தீட்சிதர்களும் இருக்கத்தான் செய்தார்கள். இத்தனைக்கும் திருநாவுக்கரசர் தில்லை அம்பலவாணர் மீது அடுக்கடுக்காகப் பதிகங்களைப்

பாடிக் குவித்தவர். அவருக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தார்களா? எதிர்த்துக் குரல் கொடுத்தார்களா? இல்லை. அதே மகேந்திர வர்மர் மனம் மாறி மதம் மாறி சைவத்திற்கு வந்து சிவனடியார் திருநாவுக்கரசரைத் தனது குருவாக ஏற்றுக் கொண்டார். திருப்பாதிரி புலியூரில் சமணப் பள்ளியை இடித்து விட்டு அங்கே சிவாலயத்தைக் கட்டினார். யாரால் என்ன செய்ய முடிந்தது? ஆகவே மன்னரது எண்ணத்தில் உதிக்கும் ஒன்று நிறைவேற்றப் படவேண்டுமானால் யாருடைய அனுமதிக்காகவும் காத்திருக்க வேண்டியதில்லை. யாருடைய எதிர்ப்பையும் பொருட்படுத்த வேண்டியதில்லை. தில்லை நடராஜர் பெருமான் ஆலயத்தில் அவர் பெருமாள் கோயிலைக் கட்டுவதற்குத் தயங்க வேண்டாம் என்பது என் கருத்து" என்றார்.

தரணி கண்ட போசர் பேச முற்பட்டு "காடக முத்தரையர் மீண்டும் மீண்டும் பழைய சம்பவங்களையே ஊகங்களாகச் சொல்லித் தற்போதைய காரியத்திற்கு நியாயம் கற்பிக்கிறார்" என்றார்.

அப்போது மணியோசை எழுந்தது.

★★★



பிரம்ம ஸ்ரீராஜர்

மணியோசையை அடுத்து பணியாளன் மன்னனைப் போற்றி விட்டு "தில்லைச் சோழமன்னரிடமிருந்து ஓலை வந்திருக்கிறது மகாராஜா" என்றான்.

"ஓலையை வாங்கி வா" என்றான் மன்னன்.

பணியாள் ஓலையை வாங்கி வந்து கொடுத்ததும் ஓலைக் குழலிலிருந்து ஓலையை எடுத்துப் படித்த மன்னன் அதை அப்படியே வைத்துக் கொண்டு கோட்டைத் தளபதி பல்லவடி அரையரைப் பார்த்து "உங்கள் கருத்தென்ன?" என்று கேட்டான்.

நந்திவர்மன் காஞ்சிக்கு அழைத்து வரப்பட்ட போது அவனை ஏற்க மறுத்தவர் பல்லவடி அரையர். அரியணைக்கு வாரிசு இருக்கிறதென்று வாதிட்டவர் அவர். அந்த வாரிசுகளின் சார்பாக நின்று நந்திவர்மனைக் கோட்டைக்குள் விடமறுத்துப் போருக்கு அழைத்தார். பிரம்மஸ்ரீராஜர், தரணிகண்ட போசர், ஜேஷ்டபாத சோமயாஜி ஆகியோர் அவரிடம் விவாதம் செய்து பல்லவ அரியணையில் அமரக் கூடிய தகுதி மற்றும் உரிமை நந்திவர்மனுக்கே உண்டு என்று நிலைநாட்டிய பிறகு தான் பல்லவடி அரையர் போரிடும் எண்ணத்தையும் எதிர்ப்பையும் கைவிட்டு நந்திவர்மனை ஏற்றார்.

நந்திவர்மன் மன்னனானதும் அவரையே கோட்டைத் தளபதியாக நியமித்தான். அதற்கு நன்றி தெரிவிக்கும் விதமாக பல்லவர்களுக்கே சிறப்புச் சேர்க்கும் விதத்தில் சமுத்ர கோஷம் என்ற மகாமுரசை சிருஷ்டித்து மன்னனுக்கு அர்ப்பணித்தார்.

அவர் தற்போது பேசமுற்பட்டு "மகாராஜா! தில்லையைப் பொறுத்தவரை அங்கே ஆளுமையைக் காட்டுபவர்கள் மூவாயிரம் அந்தணர்களும் தீட்சிதர்களும் தான். அவர்கள் பிடிவாதக்காரர்கள். வீர சைவர்கள். அவர்கள் வைத்தது தான் சட்டமாக இருக்கிறது. மக்கள் அனுசரித்துப் போக முற்பட்டாலும் தங்கள் நிலையை மாற்றிக் கொள்ளாதவர்கள் அவர்கள். அவர்களுக்குத் தில்லை நடராஜர் கோயில் ஒரு

கோட்டை அதற்குள் வேறு யாருடைய இடையூறையும் அவர்கள் அனுமதிப்பதில்லை. அதோடு அவர்களது முழு கவனமும் அந்தக் கோயிலின் மீது தான். வேறு எந்தக் கோயிலைப் பற்றியும் அவர்கள் கவலைப் படுவதில்லை. கடல்மல்லை பற்றியோ கரம்பனூரைப் பற்றியோ கூறினால் அது அவர்களது காதில் ஏறாது. அதோடு சோழர்கள் தற்போது நமக்கு அடங்கிய சிற்றரசர்கள் என்றாலும் சைவ அபிமானிகள். அவர்களது தெய்வம் தில்லை அம்பலவாணன் தான். ஆகவே தில்லை மூவாயிரவரை அவர்கள் தொடர்ந்து ஆதரித்து வருவதால் மூவாயிரவர் கை எப்போதுமே ஓங்கியிருக்கிறது. உங்கள் திட்டத்தை ஒரு போதும் ஏற்க மாட்டார்கள்" என்றார்.

மகாமந்திரி பிரம்மஸ்ரீராஜர் பேச முற்பட்டு "தில்லை மூவாயிரவர் பிடிவாதக்காரர்கள் என்பதும் வெறித்தனமானவர்கள் என்பதும் பிரசித்தம். ஆகவே அவர்களை மீறி நாம் கோயிலைக் கட்ட முற்பட்டால் வன்முறையில் இறங்குவார்கள். நாட்டின பலபகுதிகளில் மதக்கலவரத்தைத் தூண்டவும் செய்வார்கள். ஆகவே நடராஜர் கோயிலில் பெருமாள் கோயிலைக்கட்டுவது வேண்டாத வேலை. பிரச்சனையை நாமாகச் சென்று வரவேற்பதைப் போன்ற காரியம்." என்று கூறிவிட்டு ராஜகுருவைப் பார்த்து "தாங்கள் எதுவும் சொல்ல வில்லையே?" என்றார்.

ராஜகுரு மெல்லச் சிரித்துவிட்டு "நான் இங்கே எதுவும் சொல்லாததற்குக் காரணம் பெருமாள் கோயிலை அங்கே கட்டும்படிச் சொன்னதே நான் தான்" என்றார்.

"தாங்களா சொன்னீர்கள்? நம்ப முடியவில்லை" என்றார் மகாமந்திரி.

ராஜகுரு பேசமுற்பட்டு "நீங்கள் எல்லோருமே மற்றவர் களின் மனநிலையைப் பற்றித் தான் பேசுகிறீர்களே தவிர மன்னனது மனநிலையைப் பற்றி யோசிக்கவே இல்லை. நந்திவர்மன் பல்லவ மன்னன் என்பது இரண்டாவது விஷயம். பதவி இல்லாமல் கூட அவன் வாழ்வான். அவனுக்கு முதன்மையான விஷயம் மதம் தான். அவன் திருமாலடியான். பரமபாகவதன். வைஷ்ணவத்திற்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவன். திருமழிசை பிரான் 'மறந்தும் புறந் தொழா மாந்தர்' என்று அருளியதை வேதவாக்காகவே கொண்டு வாழ்ந்து வருபவன் அவன். அவன் திருமாலாகிய முகுந்தனைத் தவிர - கண்ணபிரானைத் தவிர - ராமச்சந்திர மூர்த்தியைத் தவிர - மாதவனைத் தவிர - கேசவனைத் தவிர - தாமோதரனைத் தவிர - திரிவிக்ரமனைத் தவிர - பத்மநாபனைத் தவிர - கோவிந்தனைத்

தவிர - வேறெந்த தெய்வத்தையும் மனதாலும் நினைக்காதவன். அவனது நினைவு முழுவதும் பெருமாள் தான். அவன் செய்ய நினைப்பது எல்லாமும் பெருமாளுக்குத் தான். அப்பெருமாளுக்கு விண்ணகரங்களை எழுப்புவதற்கு அவனுக்குச் சலிப்பு என்பதே வருவதில்லை. தில்லை நடராஜப் பெருமான் கோயில் பெரிய கோயில். அங்கே வருகிற பக்தர்கள் அதிகம். அங்கு வருகிறவர்கள் ஒரே இடத்தில் சிவனையும் திருமாலையும் வணங்கும் படிச் செய்தால் அது பக்தர்களுக்கு மகிழ்ச்சியாகத் தானே இருக்கும்? பரவசமாகத் தானே இருக்கும்? தற்போது கரம்பனூர் ஆலயத்தில் ஒரே இடத்தில் மும்மூர்த்திகளைத் தரிசனம் செய்வது போல பக்தர்கள் நடராஜர் கோயிலிலும் தர்மம் செய்வார்கள் அல்லவா? இதிலென்ன தவறு? இப்படிச் செய்வதற்கு மன்னனுக்கு உரிமையில்லையா? தில்லை மூவாயிரவருக்காக அவன் ஏன் தயங்கவேண்டும்?" என்றார்.

"நமது மன்னருக்குத் தோன்றாத - தோன்றக் கூடாத ஆசையை ராஜகுரு அவர்கள் அவருக்கு எழுப்பியிருப்பதாகவே கருதுகிறேன். ஒரு காரியத்தைச் செய்யும் போது நமது விருப்பம் - நமது அதிகாரம் - நமது கண்ணோட்டம் ஆகியவற்றை மட்டும் அளவு கோலாகக் கொண்டு செய்ய முயன்று அதில் வெற்றி பெற்று விடமுடியும். மற்றவர் விருப்பம் - மற்றவர் கொள்கை - மற்றவர் சுதந்திரம் - மற்றவர் கண்ணோட்டம் ஆகியவற்றைப் புறக்கணித்து விட்டுக் காரியத்தில் வெற்றி பெற்றால் நிகழ்காலத்தில் இல்லை என்றாலும் எதிர்காலத்தில் பிரச்சனையை உருவாக்கும். அதுவும் மதவிஷயத்தில் இது நிச்சயமாக நடக்கும். குறிப்பிட்ட ஒரு மதத்தை அதிகாரத்தால் அடக்கி வைத்தால் அது எப்போதாவது வெடிக்கும். அப்படி எதிர்காலப் பிரச்சனைக்கு நமது மன்னர் கால்கோள் இட வேண்டாம்" என்றார் மகாமந்திரி

காடக முத்தரையர் பேசமுற்பட்டு "ஐயா! நான் தில்லைவாழ் அந்தணர்களையும் தீட்சிதர்களையும் நேரில் சந்தித்து விட்டு வந்ததால் சொல்கிறேன். அவர்கள் எதிர்ப்பை மட்டும் காட்டியிருந்தால் பரவாயில்லை. இழிவாகப் பேசுகிறார்கள். நமது மன்னர் இது விஷயமாகத் தில்லையில் காலை வைத்தால் அவரது தலை போய்விடுமாம். இதை நான் அச்சம் என்று கொண்டு கூறவில்லை. இது அகங்காரத்தின் உச்சம். அலட்சியத்தின் உச்சம். இதில் அந்தணர்களுக்குரிய லட்சணம் இல்லை. அதிகார வர்க்கத்தின் தலைக் கனமே மிதமிஞ்சிக் காணப்படுகிறது. நமது மன்னரை இழிவுபடுத்தும் எந்தச் சக்திக்கும் நாம் அடிபணியலாகாது. நடராஜர் கோயிலில் உடனடியாகப் பெருமாள் கோயிலைக் கட்டியே தீரவேண்டும்" என்றார்.

"உங்கள் பேச்சு தில்லை மூவராயிரவர் மற்றும் தீட்சிதர்கள் மேலுள்ள கோபத்தையும் அவர்களைப் பழிவாங்க வேண்டும் என்ற வேகத்தையும் தான் காட்டுகிறது. யாரோ ஓரிருவர் தன்னிலை மறந்து இழிவாகப் பேசியிருப்பார்கள். அதைக் கொண்டு அங்குள்ள அனைவருமே அப்படிப் பேசக் கூடியவர்கள் என்ற முடிவுக்கு வந்து விட வேண்டாம். முத்தரையரே! நான் யார்? மகாமந்திரி என்பது எனக்கு இரண்டாம் பட்சம் தான். அதற்கு முன் நான் பரம வைஷ்ணவன் என்பதே முதல் சிறப்பு. மன்னரை விட மூத்தவன். அவருக்குப் பல ஆண்டுகளுக்கு முன்பாக - அதாவது பிறந்தது முதலே நான் வைஷ்ணவன் தான். எனக்கும் திருமால் பக்தி தான் முக்கியமானது. சிவாலயங்கள் முழுவதிலும் பெருமாள் கோயில்களைக் கட்டினால் எனக்கு மகிழ்ச்சியாகவே இருக்கும். நான் தனி வைஷ்ணவனாக இருந்திருந்தால் மன்னரின் விருப்பத்திற்கு முழு ஆதரவு தந்திருப்பேன். முன்னின்றும் நடத்தியிருப்பேன். ஆனால் நான் முக்கியமான பதவியில் இருக்கிறேன். பதவிக்குரிய பொறுப்புகளை நான் மறந்து விட்டோ அல்லது உதாசீனப் படுத்திவிட்டோ நடந்து கொள்ள முடியாது. மன்னருக்கு நல்வழி காட்டுவது என் கடமை. இடித்துரைப்பது என் பணி. அதைத் தான் இப்போது செய்கிறேன்" என்றார் மகாமந்திரி.

ராஜகுரு எழுந்து "மிக்க நன்றி பிரம்மஶ்ரீராஜரே. யாராக இருந்தாலும் தனக்குரிய பதவிக் கண்ணோட்டத்துடன் தான் பேசவேண்டும் நடந்து கொள்ளவேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டி விட்டீர்கள். மகாமந்திரிக்கு உரிய பொறுப்பை வெளிப்படுத்தினீர்கள். எனக்கும் ஒரு பதவி தரப்பட்டிருக்கிறதல்லவா? ராஜகுரு என்பது என் பதவி. அப்பதவிக்கும் சில பொறுப்புகளும் அதிகாரங்களும் உண்டு. நீங்கள் மன்னருக்கு வழிகாட்டலாம். மன்னனை இடித்துரைக்கலாம். எனக்கு வழிகாட்ட முடியாது. இடித்துரைக்க முடியாது. நானிங்கே இருப்பதையே மறந்து விட்டு நீங்கள் பேசியது எனக்கும் அறிவுறுத்தியது மாதிரி தான். இது எனக்கு அவமானம். என்மீது உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் தவறான அனுமானம். மன்னருக்கு நானொன்றைக் கூறுகிறேன் என்றால் சகல அம்சங்களையும் அலசிப் பார்த்துவிட்டுத் தான் சொல்வேனே தவிர எதையும் ஆராயாமல் வழிப் போக்கனைப் போலச் சொல்லிவிட்டு ஓடுகிறவன் அல்ல. பெண்ணாகடப் போரில் வெற்றிக்கான வழியைச் சொன்னேன். மன்னன் அந்த வழியில் சென்றிருந்தால் வெற்றியோடு வந்திருப்பான். அவன் வேறு வழியில் போனான். தோற்றான். தில்லை நடராஜர் கோயில்

விஷயத்திலும் நான் நல்வழியைத் தான் காட்டியிருக்கிறேன். மன்னன் எல்லா மதங்களையும் சமமாகப் பாவிக்க வேண்டும் என்று சொல்வது வெறும் மாயை. வெறும் வேஷம். மன்னனும் மனிதன் தான். அவனுக்கென்று ஒரு மதமும், ஒரு கொள்கையும், ஒரு சுதந்திரமும் இருப்பதை யாரும் பறிக்கவோ தடுக்கவோ முடியாது. மன்னன் தன் அபிலாஷைகளைத் துறந்து விட்டு மக்களுக்காக வாழ வேண்டும் என்று கருதுவது அதர்மம். என் வழிகளை சமீப காலமாக மன்னன் புறக்கணித்து வந்ததால் தான் அரண்மனையைப் புறக்கணித்து விட்டுக் குடிசைக்குச் சென்றேன். இப்போது நீங்கள் எல்லோருமே என்னைப் புறக்கணிக்கிறீர்கள் என்பது எனக்கு இன்று புரிந்துவிட்டது. இங்கே அமர நான் விரும்பவில்லை. அரண்மனையில் வசிக்க விரும்பவில்லை. இந்தப் பதவியும் தேவையில்லை. குடிசைக்கே செல்கிறேன்" என்று கூறி விட்டு யாரது பதிலையும் எதிர்பாராமல் அவையை விட்டு வெளியேறினார்.

மன்னன் அவரைத் தடுக்கவில்லை.

சோழ மன்னனிடமிருந்து வந்திருந்த ஓலையை முதலமைச்சரிடம் கொடுத்தான்.

ஓலைச் செய்தியை அனைவரும் படித்தார்கள்.

"நடராஜர் கோயிலில் பெருமாள் கோயில் கட்ட வேண்டாம் என்றும் அதற்குப் பலத்த எதிர்ப்பு இருக்கிறதென்றும் தில்லையில் உள்ள சோழச் சிற்றரசர் தெரிவித்திருக்கிறார். கோயில் கட்ட முற்பட்டால் தில்லையில் பெருங்கலவரம் மூளும் என்று அபிப்ராயப் படுகிறார். கலவரம் ஒருவேளை மூண்டால் அதைத் தன்னால் தடுக்க முடியாது என்றும் கோயிலைக் கட்டுவதானால் காஞ்சியிலிருந்து ஒரு படைப்பிரிவை கொண்டு வந்து பாதுகாப்பு செய்யும் படியும் கேட்டுக் கொண்டிருக்கிறார். இதிலிருந்து அவர் தில்லை மூவாயிரவரிடமும் தீட்சிதர்களிடம் சமாதானப் பேச்சில் ஈடுபடவில்லை அல்லது ஈடுபட்டு வெற்றியடைய வில்லை என்பது தெரிகிறது. ஆகவே இந்த விஷயத்தில் அவரது உதவியை எதிர்பார்க்க முடியாது" என்றான் நந்திவர்மன்.

மகாமந்திரி பேசமுற்பட்டு "இதிலிருந்து தில்லையில் நிலைமை கடுமையாக இருக்கிறது என்று தெரிகிறது. அங்கே உள்ளவர்களைப் பகைத்துக் கொண்டு சோழச் சிற்றரசரால் இருக்க முடியாது. ஆகவே அவர் தெரிவித்துள்ள செய்தி சரியானது தான். முதிர்ந்த தேனடைக்குள் வெற்றுக் கையை வைப்பது போன்ற இந்த முயற்சி வேண்டாம் என்பது தான் இப்போதும் என் அபிப்ராயம். ஆயினும் ராஜகுரு கோபமடைந்

திருக்சிறார். நான் தெரிவித்த கருத்துகளைத் தனக்கு ஏற்பட்ட அவமானமாகக் கருதுகிறார். கோயில் கட்டும் எண்ணத்தை உங்களிடம் கூறியது அவர்தான் என்பதை முதலிலேயே கூறியிருந்தால் இந்த அவையே கூடியிருக்காது" என்றார்.

"அமைச்சர் பெருமானே! ராஜகுருவின் கருத்துக்கு மேலே வேறு கருத்து எதுவும் கிடையாது என்று நான் நினைக்கவில்லை. ராஜகுரு ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் வந்தவர். நீங்களெல்லாம் கடல்தாண்டி வந்து என்னை அழைத்து வந்து அரிய அரியாசனத்தில் அமர்த்திய சூத்ரதாரிகள். அரசியல் அனுபவம் வாய்ந்தவர்கள். எனது நாற்பதாண்டு ஆட்சிக்குத் தூண்களாக இருந்தவர்கள். எப்போதும் உங்களைப் புறக்கணிக்கும் எண்ணம் எனக்குக் கிடையாது. உங்கள் கருத்துகளை ஏற்காமல் போனாலும் கேட்டுக் கொள்ளாமல் போனதில்லை. நீங்களும் தரணி கண்ட போசரும் பழைய விஷயங்களைப் பேச விரும்பவில்லை. கடல்மல்லையிலும் கரம்பனூரிலும் ஒரே வளாகத்தில் சிவனுக்கும் பெருமாளுக்கும் கோயில் கட்டியது பற்றிக் கருத்தில் கொள்ள வேண்டாம் என்கிறீர்கள். எனக்கு அதில் உடன்பாடு இல்லை. இந்தக் கோயில் விஷயம் மட்டுமல்ல எல்லா விஷயத்திலுமே கடந்த காலத்தில் என்ன நடந்தது என்பதை அறிவதும் ஆராய்வதும் அவசியம் என்றே நான் கருதுகிறேன். இப்படிப்பட்ட ஆராய்ச்சி கடிகைப் பல்கலைக்கழகத்தில் நடைபெறுவதை எல்லோரும் அறிவீர்கள். கோயில் கட்டும் விதத்தில் கடந்த காலத்தில் சான்றுகள் இருக்கும்போது நாமும் அதைப் பின்பற்றத் தயங்க வேண்டியதில்லை என்பது என் கருத்து. அந்த அடிப்படையிலேயே தில்லை நடராஜர் கோயிலில் என் பெருமாள் எம்பெருமானுக்கும் ஒரு கோயிலைக் கட்டலாம் என்று விரும்புகிறேன். இந்த ஆசை எனக்குள்ளேயே இருந்திருக்கிறது. யாரிடமும் நான் அதைச் சொல்லவில்லை. அணையாமல் கனன்று கொண்டே இருந்த அந்த நெருப்பை ராஜகுரு ஊதி விட்டார். அவ்வளவுதான். எதற்கும் ஒருமுறை நானே தில்லைக்குச் சென்று அந்தணர் மூவாயிரவரையும் தீட்சிதர்களையும் சந்திக்க விரும்புகிறேன். அவரது பிடிவாதங்களையும் பகையுணர்வையும் நீக்க விரும்புகிறேன். அந்த முயற்சி வெல்கிறதா என்று பார்க்கலாம்" என்றான்.

அவையை விட்டு அகன்று அந்தப் புரத்திற்குச் சென்றான். ராணி அவனிடம் ஒன்றைக் கேட்டாள்.

★★★



மன்னனின் விவரணம்

"பிரபு! காஞ்சிக்கு நான் ராணியாக வருவேன் என்று நான் கனவிலும் நினைத்தது கிடையாது. ராஷ்டிர கூடத் தலைநகர் மான்யகடகத்தில் உறையும் சந்திரமௌலீஸ்வரரை வழிபட்டதின் பயனாகத் தான் இந்த பாக்கியம் எனக்குக் கிடைத்தது என்று தான் என் தந்தையாரிடம் சொல்லி வந்தேன். நான் துதித்த அச்சிவபெருமானுக்கு ஏதேனும் சேவை செய்ய வேண்டும் என்றும் அது காலத்தைக் கடந்து நிற்கவேண்டும் என்று கருதியிருந்தேன். மான்யகடகத்தில் ராஷ்டிர கூட அரசகுமாரியாக இருந்த போது எனது அந்த ஆசை நிறைவேறவில்லை. பல்லவ ராணியாக ஆனபின்பு அந்த ஆசை எனக்குள்ளேயே வளர்ந்தது. தாங்கள் பரமபாகவதராக இருந்துவந்தபடியால் தங்களிடம் சொல்லமுடியாமல் தவித்துக் கொண்டிருந்தேன். தவிர்த்துக் கொண்டிருந்தேன். தவிர்த்துக் கொண்டும் தவித்துக் கொண்டும் காலத்தைக் கடத்திக் கொண்டிருந்தால் காலம் தான் கழியுமே தவிர ஆசை நிறைவேறாது என்பதை உணர்ந்த நான் அதை உங்களிடம் தெரிவித்தேன். நீங்கள் மறுப்பு தெரிவிக்கவில்லை. வெறுப்பு தெரிவிக்கவில்லை. முழுமனதோடு அனுமதியளித்து காஞ்சியில் சிவலாயம் ஒன்றை அமைப்பதற்கு அமிர்தகணத்தாருக்கு* உத்தரவிட்டீர்கள். நான் விரும்பியபடியே அச்சிவாலயம் காஞ்சியில் மிகவும் சிறப்பாகக் கட்டிமுடிக்கப்பட்டு விட்டது. தாங்கள் எழுப்பிவரும் விண்ணகரத்தைப் போல் வரலாற்றுப் பெட்டகமாகவும் சிற்பக் களஞ்சியமாகவும் இல்லாவிட்டாலும் எனது அற்ப ஆசையை நிறைவேற்றும் ஆலயமாக அமைந்து விட்டது. தங்களுக்கு மிகவும் நன்றி" என்றாள் ராணி ரேவாதேவி.

"எதற்கு நன்றி?" என்று கேட்டான் நந்திவர்மன்.

"விண்ணகரங்களைத் தவிர வேறெந்த ஆலயமும் அமையலாகாது என்று கூறாமல் சிவாலயத்தை அமைக்க எல்லா விதத்திலும் ஒத்துழைப்பு அளித்ததற்காகத் தான்" என்றாள் ராணி.

"ரேவா! நான் திருமாலைத் தவிர வேறு தெய்வத்தை வணங்க முற்படாதவன் தான். எம்மதமும் சம்மதம் என்ற கொள்கையை நான் ஏற்றுக் கொண்டவன் அல்ல. ஏதாவது ஒரு கொள்கையை ஏற்று அதில் உறுதியாக இருக்க வேண்டும் என்பது என் கருத்து. அப்படித்தான் வாழ்ந்து வருகிறேன். அதேசமயம் உண்மையான பக்தியும் ஈடுபாடும் கொண்ட இதர மதத்தவருக்கு நான் இடையூறு செய்வதில்லை. தடை போடுவதில்லை. சமணர்கள் விஷயத்திலும் பௌத்தர்கள் விஷயத்திலும் நான் எடுத்த சில நடவடிக்கைகளுக்குக் காரணம் அவர்கள் வேற்று மதத்தவர்கள் என்பதால் அல்ல. அவர்கள் தங்கள் மதத்தில் நேர்மையோடு இல்லாமல் போனதால் தான். மதத்தை மதத்திற்காகப் பயன்படுத்தாமல் மாறுபட்டுப் பயன்படுத்த முற்பட்ட போது தான் தலையிட்டேன். நடவடிக்கை எடுத்தேன். நீ அப்படியல்ல. சிவபெருமானின் பரம பக்தை. உன் தந்தையாரே சொல்லியிருக்கிறார். உண்மையான பக்திக்கு நான் எப்போதும் மதிப்பளிப்பவன். ஆகவே தான் காஞ்சியில் சிவலாயம் ஒன்றை நீ கட்ட விரும்பிய போது மனப்பூர்வமாகச் சம்மதித்தேன். இதற்கு எதற்கு நன்றி?"

"பிரபு! நான் கட்டியுள்ள சிவாலயத்தில் நான் இருக்கும் போதெல்லாம் எனக்கு அமைதி கிடைக்கிறது. பரவசம் கிடைக்கிறது. உண்மையான பக்தர்களுக்கு இங்கே உள்ள சிவபிரான் அமைதியை மட்டும் தரமாட்டார். பரவசத்தை மட்டும் தரமாட்டார். முக்தியும் தருவார் என்று நம்புகிறேன். ஆகவே பெருமானுக்கு முக்தீஸ்வரர்* என்றே நாமகரணம் சூட்டியிருக்கிறேன்."

"அது உன் விருப்பமானால் சரிதான்."

"அந்த ஆலயத்திற்கு தாங்கள் முன்னின்று குடமுழுக்கு விழா நடத்த வேண்டும்."

"தேவி! எனது மூதாதையர் இராஜசிம்மப் பல்லவர் சிவசூடாமணியாக இருந்து இக்காஞ்சியில் அற்புதமான கைலாசநாதர் ஆலயத்தைக் கட்டினார். இன்று வரை அங்கு நான் விஜயம் செய்ததில்லை. அது உனக்கே தெரியும். அப்படியிருக்கும் போது நீ கட்டியுள்ள சிவாலயத்திற்கு நான் எப்படி குடமுழுக்கு விழா நடத்த முடியும்? பல்லவ மகாராணியான நீயே முன்னின்று நடத்தலாமே?"

"தங்கள் கருத்து அதுவானால் நான் வற்புறுத்தப் போவ தில்லை. மேலும் ஒரு விண்ணப்பம்."

"சொல்."

"ஆலயத்தைக் கட்டிக் காக்கவும் சேவைகள் செய்யவும் பரிவார அமைப்பு தேவை. அர்ச்சகர்கள் தட்டளி கொட்டுபவர்கள், ருத்திர கணிகையர்கள், மந்திராச்சாரியர்கள்*, விளக்குத் தவசிகள், ஆகியோர்களைப் போதுமான அளவிற்கு நியமிக்க வேண்டும்."

"இதெல்லாம் ஒரு கோரிக்கையா ராணி? இவர்களை யெல்லாம் நீயே நியமித்துக் கொள்ள முடியும்."

மன்னனின் பேச்சுகளால் மகிழ்ச்சி அடைந்தாள் ராணி.

தில்லை நடராஜர் ஆலயத்தில் பெருமாள் கோயிலை அமைக்கும் விஷயமாக ராணியிடம் கருத்துக் கேட்கவே அந்தப் புரத்திற்கு வந்திருந்த மன்னன் அந்த விஷயத்தை அப்போது ஆலோசிக்க விரும்பவில்லை.

அவன் வழக்கம் போலவே யோகினியிடம் யோசனை கேட்கச் சென்றான்.

அங்கே யோகினிக்கு முன்னால் ராஜகுரு அமர்ந்திருப்பதைக் கண்டதும் அவரை வணங்கி விட்டு "நீங்கள் யோகினியிடம் வருவதுண்டா?" என்று கேட்டான்.

"நந்திவர்மா! உன்னோடு இருக்கும்போது எனக்கு அலுப்பாக இருக்கிறது. யோகினிக்கு முன்னால் இருக்கும் போது ஆனந்தமாக இருக்கிறது. உன்னோடு இருக்கும்போது எனக்கு ஆரவாரங்களே கேட்கின்றன. யோகினிக்கு முன்னால் இருக்கும் போது அமைதி வந்து அணைத்துக் கொள்கிறது. உனக்கு முன்னால் இருக்கும் போது எனக்குச் சுகதுக்கங்களே நினைவுக்கு வருகின்றன. யோகினிக்கு முன்னால் இருக்கும் போது சந்தோஷம் மட்டுமே உணர்வாக இருக்கிறது. நான் தான் எதுவும் வேண்டாம் என்று அரண்மனையை விட்டு வந்து விட்டேனே! இங்கும் எதற்காக வந்து தொல்லை கொடுக்கிறாய்?" என்று கேட்டார் ராஜகுரு.

அவரது குரலில் உறுதி இருந்தது. வருத்தமும் இருந்தது.

"தில்லைக்கு உங்களை அழைத்துச் செல்லவே இங்கு வந்தேன் குருநாதரே" என்றான் மன்னன்.

---

* பிராமணர்களில் ஒருவகையினர் அவ்வாறு அழைக்கப்பட்டார்கள். மேற்குறிப்பிட்டவர்களில் உருத்திர கணிகையர் 32 பேர் நியமிக்கப்பட்டதாகக் கல்வெட்டு கூறுகிறது.

பக்கம் 79 'இலங்கையில் இந்து சமயம்' By. பேராசிரியர். சி. பத்மநாபன்.

"நான் எதற்காக அங்கே வரவேண்டும்? நான் எங்கேயும் வர விரும்பவில்லை" என்றார் குருநாதர் உறுதி குறையாமல்.

"உங்களுக்கென்று விருப்பமோ வெறுப்போ கிடையாது என்பது எனக்குத் தெரியும் குருநாதரே. பிறர் நலனுக்காகவும் உயர்வுக்காகவும் வாழ்ந்து வருபவர் நீங்கள். என் வேண்டுகோளை மறுக்காதீர்கள்."

"அரண்மனையில் இருப்பவர்களில் காடக முத்தரையரைத் தவிர மற்றவர் எல்லோருமே எனக்கு எதிரானவர்களாக இருக் கிறார்கள். என் கருத்துக்கு மாற்றுக் கருத்து சொல்பவர்களாக இருக்கிறார்கள். ராஜகுருவின் ஆலோசனையை நீ மீறியதே தவறு. தற்போது அமைச்சர் முதலானவர்களும் மீறுகிறார்கள் என்றால் நான் எதற்கு? மாசு படாமல் மருவியிருந்த என்னை ராஜகுருவாக்கி விட்டு இப்போது நீங்களே தூசு படவைக்கிறீர்கள். இதெல்லாம் என்ன? நான் பொம்மையல்ல மன்னா, அவரவர்களும் ஆட்டுவதற்கு. நான் கல்லாக இருந்தால் அது தெய்வமாக இருக்க வேண்டும். நான் புல்லாக இருந்தால் அது தெய்வத்தின் தலையில் இருக்க வேண்டும். நான் பொன்னாக இருந்தால் அது மன்னனின் கிரீடமாக இருக்க வேண்டும். நான் மண்ணாக இருந்தால் அது பூலோகமாக இருக்க வேண்டும். நான் ராஜகுரு. ராஜசேவகன் அல்ல. என்னை அவமதித்தது போதும் விட்டுவிடு. ராஜவிலங்குகளிலிருந்து விடுதலைதான் எனக்கு வேண்டும். நான் தில்லைக்கும் வரமாட்டேன். திருக்கைலாயத்திற்கும் வரமாட்டேன்."

"குருநாதரே! உங்கள் மீது மலர்மாரி பொழியும் மன்னனாக நான் இருக்கும்போது நீங்களாகவே எதற்காக மண்மாரி பொழிந்து கொள்கிறீர்கள். நீங்கள் என்றைக்கும் ராஜகுரு. எனக்கு யார் ஆலோசனை சொன்னாலும் தங்கள் ஆலோசனை தான் முக்கியமானது. தில்லை விவகாரத்திற்கு அடிக்கல் நாட்டியது நீங்கள். தற்போது கட்டடம் கட்ட முற்படும்போது விலகிக்கொள்வது எனக்கு நீங்கள் தரும் தண்டனையாகும்."

"நீ என்ன முடிவெடுத்திருக்கிறாய்?"

"முடிவெடுக்கத் தான் உங்களைத் தில்லைக்கு அழைக்கிறேன்."

"உன்னோடு பிரம்மஸ்ரீராஜர் வருகிறாரா? தரணி கொண்ட போசர் வருகிறாரா?"

"இல்லை. காடக முத்தரையர் மட்டும் வருகிறார்."

"இங்கே நீ வந்தது, யோகினியிடம் வந்தது இவள் யோசனைபக் கேட்பதற்காகவா?"

"அது ஒரு வழக்கம்."

"சரி. சரி. கேட்டு விட்டுக் குடிசைக்கு வா."

"குடிசைக்கா?"

"ஆமாம். முடிவுகளை அடிக்கடி மாற்றுவதை விட மூச்சை விட்டு விடலாம். அரண்மனையில் நான் அறிவித்தது அறிவித்தது தான். அரண்மனை வாசம் எனக்கு ஆரண்ய வாசம். வேண்டாம். இனி எனக்குக் குடிசைதான் அரண்மனை" என்று கூறிவிட்டு அங்கிருந்து அகன்றார் ராஜகுரு.

தனக்கு முன்னால் அமர்ந்த மன்னனை நமஸ்கரித்தாள் யோகினி.

மன்னன் சிறிது நேரம் வரை மௌனமாக இருந்தான்.

"பிரச்சனை என்னை நோக்கி வருகிறதா? பிரச்சனையை நோக்கி நான் செல்கிறேனா என்பது எனக்குப் புரியவில்லை யோகினி" என்றான் அமைதியான குரலில்.

"பிரச்சினை என்று எதைக் குறிப்பிடுகிறீர்கள் மகாராஜா?" என்று கேட்டாள் யோகினி.

தில்லையில் பெருமாள் கோயில் பிரச்சனையைப் பற்றிக் கூறினான் மன்னன்.

"பெருமாள் கோயிலை அங்கே அமைப்பது தவறில்லை என்று தான் எனக்குத் தோன்றுகிறது. உனக்கென்ன தோன்றுகிறது?" என்று கேட்டான்.

"எனக்கெதுவும் தோன்றவில்லை மகாராஜா" என்றாள் யோகினி.

"ஏன்?"

"மகாராஜா! லௌகீக விஷயங்களை நாம் உண்மை என்று நினைக்கும் வரை பிரச்சனைகள் இருந்து கொண்டுதான் இருக்கும். நான் அப்படி நினைப்பதில்லை. ஆகவே பிரச்சனை களும் தோன்றுவதில்லை. தீர்வுகளும் தோன்றுவதில்லை."

அவள் வழக்கம் போல அத்வைதத்தைப் பேசினாள். அதைக் கண்ட நந்திவர்மன் "யோகினி! நீ ஞானி. அனைத்தும் மாயை என்று கருதுபவள். உனக்கு எல்லாம் தெரியும். நான் எப்போது மோட்சத்தை அடைவேன் என்பதை உன்னால் சொல்ல முடியுமா?" என்று வினவினான்.

"நான் ஞானி என்பது உண்மையானால் எனக்கு அயலாக எதுவும் இல்லை. நான் ஞானி அல்ல என்பது உண்மையானால்

உங்களுக்குத் தெரிந்தது தான் எனக்கும் தெரியும்.* நான் யார் என்பது தான் நான் அறிய விரும்பும் விஷயம். அதைத் தான் தினமும் எனக்குள் கேட்டு வருகிறேன். மோட்சம் என்பது அடைய வேண்டிய பொருளல்ல. முக்தி என்பதும் அடைய வேண்டிய விஷயமல்ல. எல்லாம் நமக்குள்ளேயே இருக்கிறது. அதை உணர்வது தான் மோட்சம், முக்தி எல்லாமும். நாம் மற்றவற்றைத் தான் உணர முற்படுகிறோமே தவிர நம்மை உணர முற்படுவதில்லை" என்றாள் யோகினி.

"கிரகஸ்தனாக இருந்து கொண்டு ஒருவன் தன்னை உணர முடியுமா?"

"கிரகஸ்தனாக இருந்தாலும் சரி பிரம்மச்சாரியாக இருந்தாலும் சரி அவனை உபத்திரப் படுத்துவது மனம் தான். அந்த மனத்தை அழிப்பது தான் முக்கியமே தவிர கிரகஸ்தனா சன்யாசியா என்பது முக்கியம் அல்ல. நிலைகள் முக்கியமல்ல. இடங்கள் முக்கியமல்ல. மனதை அழிப்பதே முக்கியம். அதுவே தன்னை உணரும் வழி."

யோகினி அவ்வாறு சொன்னபோது ஒரு கிரகஸ்தர் வந்து மன்னனை வணங்கினார். யோகினியையும் வணங்கினார்.

"நானிருக்கும் போது நீ எப்படி இங்கு வந்தாய்?" என்று மன்னன் கேட்கவில்லை.

"யோகினியிடம் என்ன கேட்க வந்தீர்களோ அதைக் கேட்டுக் கொள்ளுங்கள்" என்றான்.

"மன்னர் நீடூழி வாழவேண்டும்" என்று சொன்ன அந்தக் குடும்பஸ்தர் "தாயே! எனக்கு வயது எழுபது. இனி என்னால் எழுவதற்கும் கூடச் சிரமமாக இருக்கக் கூடும். வயோதிகம் என்னை வாட்டுகிறது. குடும்பப் பிரச்சனைகள் என்னை வதைக்கின்றன. பிரச்சனைக்குள் புகுந்து தீர்வு காண என்னால் இயலவில்லை. எனக்கு வாழ்க்கை கசந்துவிட்டது. என்னை விரும்புவர்களை விட வெறுப்பவர்களே அதிகமாகி விட்டார்கள். வெறுப்பவர்கள் இடையே வாழ்வது நரகமாக இருக்கிறது. நான் யாருக்கும் கெடுதல் செய்ததில்லை. நான் மோட்சமடைய நீங்கள்தான் வழிகாட்ட வேண்டும்" என்றார்.

யோகினி சற்று யோசித்து விட்டு "ஏகம்பவாணன் ஆலயத்திற்குச் சென்று அங்கே மாமரத் திருச்சுற்றில் இருக்கும் சிம்ம வாகன விநாயகரை மூன்று வாரங்களுக்கு எருக்கம்

பூக்களால் அர்ச்சனை செய்யுங்கள். உங்கள் விருப்பம் நிறைவேறும்" என்றாள்.

"மிகவும் நன்றி தாயே. நான் நிச்சயமாக மோட்சமடைந்து விடுவேன்" என்று கூறிவிட்டு அகன்றார் குடும்பஸ்தர்.

"யோகினி! மோட்சத்தைப் பற்றி எனக்கு ஒரு பதிலும் இவருக்கு ஒரு பதிலும் கூறினாய். ஏன் இப்படி?" என்று கேட்டான் மன்னன்.

"தன்னை உணர்வது தான் மோட்சம் என்று தங்களுக்குக் கூறியது போல் அவரிடம் சொல்வதற்கு எனக்கு எந்தவிதமான கஷ்டமும் இல்லை. அப்படி நான் கூறியிருந்தால் அவர் திருப்தியடைந்திருக்க மாட்டார். அவரது பக்குவம் அப்படி. அவரவர் பக்குவத்திற்கு ஏற்ப நான் பதில்களைக் கூறுகிறேன். நான் கூறிய விஷயம் தவறானதும் அல்ல. பக்தியும் ஞான மார்க்கத்திற்கான வழிதான். அவரது பக்குவத்திற்கேற்ப பக்தி மார்க்கத்தையே உபாயமாகச் சொன்னேன். அவருக்குத் திருப்தியும் நம்பிக்கையும் உண்டாகியிருக்கிறது. மற்றவை போகப் போக வரும்" என்றாள் யோகினி.

"உன் போன்ற வழிகாட்டிகளால் தான் உலகம் இயங்கு கிறது. உன் பணி ஓங்கட்டும்" என்று சொல்லிவிட்டு அகன்றான் மன்னன்.

"உலகமே பொய் என்று எவ்வளவு சொல்லியும் மன்னர் உண்மை என்றே நினைக்கிறார். இல்லாத உலகத்தை எப்படி நாங்கள் இயக்குவது?" என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள் யோகினி.

★

இரண்டு நாள் கழித்து ராஜகுருவோடும் காடக முத்தரையரோடும் தேரேறித் தில்லைக்குப் புறப்பட்டான் மன்னன் நந்திவர்மன்.

"முத்தரையரே! நான் ஏற்கனவே தில்லையில் இருக்கும் சோழச் சிற்றரசனுக்கு ஆணை அனுப்பிவிட்டேன். நீங்கள் சென்றதும் அவனைத் தஞ்சைக்கு அனுப்பி விட்டு தில்லையில் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுங்கள். நடராஜர் கோயிலில் பெருமாள் கோயில் எடுப்பது பற்றி வீதிகளிலோ கோயிலுக்குள்ளோ யாரும் பிரஸ்தாபிக்கக் கூடாது என்று ஆணையிடுங்கள். ஆணையை மீறிப் பேசுபவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்று அறிவிப்புச் செய்யுங்கள். நடராஜரை வழிபடும் போதும் பூஜைகளைச் செய்யும் போதும் மட்டும்

தில்லை மூவாயிரவர் நடராஜர் கோயிலில் இருக்கலாம் என்றும் பிறநேரங்களில் அவர்கள் தத்தம் இல்லங்களிலேயே இருக்க வேண்டும் என்று உத்தரவு போடுங்கள். மறு ஆணை வரும்வரை தில்லை நகருக்குள் எத்தரப்பினராயினராக இருந்தாலும் பரப்புரைகள், உபன்யாசங்கள், பிரசங்கங்கள் எதையும் செய்யக் கூடாது என்று தடை உத்தரவைப் பிறப்பியுங்கள். அங்கே இருக்கும் சோழர்படைகளை வீதிகளிலும் நடராஜர் கோயிலைச் சுற்றியும் காவலுக்கு நிறுத்தி கலவரத்திற்கு வித்திடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். சந்தேகப் படும்படி நடமாடுபவர்களைத் தயவு தாட்சண்யம் இன்றிக் கைது செய்யுங்கள். நீங்கள் முதலில் சென்று இந்த ஏற்பாடுகளைச் செய்யுங்கள். நான் ஒரு நாள் கழித்து வருகிறேன்" என்று சொல்லி, காடகமுத்தரையரைத் தனித்தேரில் அனுப்பி வைத்தான்.

"நந்திவர்மா! நீ முத்தரையருக்கு விதித்திருக்கும் கட்டளைகள் கடுமையானவை. இவை தேவை தானா?" என்று கேட்டார் ராஜகுரு.

"தில்லையில் நான் கால் வைத்தால் என்தலை இருக்காது என்று சொன்னவர்கள் அல்லவா அவர்கள்? அத்தகையவர்களை எதற்காகச் சுதந்திரமாக நடமாட விட வேண்டும்? குருநாதரே! தற்போதெல்லாம் பொறுப்பில்லாமல் நடந்து கொள்வதும் வன்முறையில் ஈடுபடுவதும் தான் சுதந்திரம் என்று பலரும் கருதுகிறார்கள். அது தவறு என்பதை நாம் அவர்களுக்கு உணர்த்தியாக வேண்டும்" என்றான் மன்னன்.

காடக முத்தரையர் முன்னதாகவே தில்லைக்குச் சென்று மன்னனின் கட்டளைகளைத் திறம்பட நிறைவேற்றி நகரத்தை ஓர் இரும்பு வளையத்திற்குள் கொண்டு வந்தார். ஓரிருவரைக் கைது செய்யவேண்டிய அவசியமும் வந்தது.

இந்த நிலையில் மன்னனும் ராஜகுருவும் தில்லையை அடைந்து நடராஜர் கோயிலின் வடக்குக் கோபுரத்தருகே சென்றபோது எதிர்பாராத நிகழ்ச்சி ஒன்று நடந்தது.

★★★



கொலை நகரம்

பல்லவ மன்னனை வரவேற்க தில்லையின் வடக்கு எல்லையிலேயே காடக முத்தரையர் வாத்ய வித்யாதரர்களோடும், வெடிகளை எழுப்பும் வேட்டுவர்களோடும், யானையும் புரவியுமாய் காத்திருந்து சிறப்பாக அக்காரியத்தைச் செய்து முடித்து விட்டு அனைவரும் புடைசூழ நகருக்குள் பிரவேசிக்கச் செய்தார். அரண்மனைக்குச் செல்ல நடராஜர் ஆலயத்தைக் கடந்து செல்ல வேண்டுமாதலால் அக்கோயிலின் வடக்குக் கோபுரத்தை அனைவரும் அடைந்தபோது அந்த எதிர்பாராத நிகழ்ச்சி நடந்தது.

கோபுரத்தின் உச்சியில் ஒருவர் தோன்றினார். நமச்சிவாய என்று ஓங்கிக் குரல் கொடுத்தார். மறுகணமே உச்சியிலிருந்து தரையில் குதித்தார். மண்டை உடைந்து, எலும்புகள் நொறுங்கி, சதைப் பற்றுகள் சிதறி இறந்து போனார்.

"இவர் வீர சைவராக இருக்கவேண்டும் மகாராஜா. தனது எதிர்ப்பை பயங்கரமான முறையில் காட்டியிருக்கிறார். உயிர் விட்டிருக்கிறார்" என்றார் முத்தரையர்.

நந்திவர்மன் எதுவும் கூறவில்லை. கோயிலின் பக்க வீதியில் நடந்தான். நடந்த வீதிகளில் எல்லாம் பல்லவர்களின் பாம்பு உருவம் பதித்த பதாகைகள் பறந்தன. பதாகைக் கம்பங்களை ஒட்டி வீரர்கள் நூறடிக்கு ஒருவராக வாளேந்தி நின்றிருந்தார்கள். இல்லங்களில் இருந்தவர்கள் வாயில்களுக்கு வந்து மன்னனைப் பார்த்துக் கைகளை அசைத்தார்கள். அவர்களையெல்லாம் மன்னன் வணங்கினான். தில்லை மூவாயிரவர் வாழும் அக்கிரகாரப் பகுதி விசாலமாக அகன்ற தெருக்களோடும், உயர்ந்த மாடங்களோடும் விளங்கின. அவற்றில் வெளிப்பட்ட அந்தணர்கள் மன்னனைக் கண்டார்களே தவிர கைகளை அசைக்கவோ வந்தனம் தெரிவிக்கவோ முற்படவில்லை. அவர்களை மன்னன் கவனித்தாலும் மௌனமாகவே நடந்தான்.

அரண்மனைக்கு வந்ததும் பரிவாரங்களையும் வாத்ய வித்யாதரர்களையும் போகச் சொன்னான். மன்னன்

அரண்மனைக்கு வந்து விட்டான் என்பதை அறிவிக்கும் பொருட்டு அதிர்வேட்டு ஒன்று முழங்கியது.

உள்ளே சென்று அமர்ந்ததும் "தில்லை வாழ் அந்தணர்கள் செல்வச் செழிப்போடு இருப்பார்கள் போல் தெரிகிறது" என்றார் ராஜகுரு.

"முத்தரையரே! நாளைக்கு நான் தில்லை அந்தணர்களையும் திருக்கோயில் தீட்சிதர்களையும் சந்திக்கிறேன். அதற்கு முன் அதிகரண போஷகர்* மூலம் தில்லை மூவாயிரவர் மற்றும் தீட்சிதர்களின் சொத்துக் கணக்குகளைப் பதிவு செய்து கொண்டு வாருங்கள்" என்றான் மன்னன்.

"மன்னா! இதெல்லாம் எதற்கு?" என்று கேட்டார் ராஜகுரு.

"அந்தணர்கள் செல்வச் செழுப்பில் இருப்பதாக நீங்கள் சொன்னீர்கள் அல்லவா? அதன் உண்மையை அறிந்து கொள்ள விரும்புகிறேன். ஆகவே தான் சொத்துக் கணக்குகளைக் கேட்டேன்."

"இது தெரிந்தால் அந்தணர்களின் கோபம் அதிகமாகும். ஏனென்றால் அவர்கள் வீரசைவர்கள்."

"மக்களின் சொத்துக் கணக்குகளைப் பார்ப்பதற்கு மன்னனுக்கு உரிமை உண்டு. அதைக்கண்டு வீரசைவ அந்தணர்கள் கோபிக்க வேண்டியதில்லை. கோபித்தால் பார்த்துக் கொள்வோம்" என்றான் மன்னன்.

அன்று முழுவதும் பல்வேறு அதிகாரிகளை வரவழைத்து தனது சந்தேகங்களைக் கேட்டான். சிற்பிகளை அழைத்து நடராஜர் கோயில் அமைப்பு பற்றியும் சிறப்புகளைப் பற்றியும் கேட்டறிந்தான்.**

"இவர்களையெல்லாம் கேட்பதை விட நீ ஒருமுறை நடராஜர் ஆலயத்திற்குச் சென்று பார்த்துவிட்டு வரலாமே?" என்று கேட்டார் ராஜகுரு.

மன்னன் அதற்குப் பதிலேதும் சொல்லவில்லை.

அன்று மாலை முத்தரையரிடம் "நீங்கள் தில்லை மூவாயிரவரிடம் பத்துப்பேர், தீட்சிதர்களிடம் பத்துப்பேர் என்று அவர்களாகவே தேர்ந்தெடுத்துக்கொண்டு நாளை என்னை வந்து சந்திக்கும்படிச் சொல்லுங்கள்" என்றான்.

---

* பேரூர் அவைகளின் தலைவர்.

** சிதம்பரத்தில் உள்ள நடராஜர் கோயில் தற்போது செறிந்த சிற்பங்களோடும், மண்டபங்களோடும், பொன் வேய்ந்த விமானங்களோடும் காட்சியளிக்கிறது. இக்கதை நடந்த எட்டாம் நூற்றாண்டில் இந்த அளவிற்குச் சிறப்பாக இல்லை. சோழர்கள் எழுச்சி பெற்ற பிறகுதான் கோயிலும் சிறப்புப் பெற்றது. அவர்களுக்குப் பின்னால் வந்த பிற அரச வம்சங்களும் கோயிலில் தங்களது திருப்பணிகளைச் செய்தார்கள்.

இரவு உணவுண்டு விட்டுச் சயன அறைக்குச் சென்றான்.

சயன அறை விளக்குகளால் பிரகாசித்தது. அந்த அறையை அது நாள் வரை பயன்படுத்தி வந்த சோழச் சிற்றரசன் சுகவாசியாக இருந்திருக்கிறான் என்பதற்கு நிறைய அடையாளங்கள் இருந்ததைக் கண்டான் நந்திவர்மன்.

பணியாளர்களை அழைத்து கட்டில், தலையணை தவிர ஏனைய பொருட்களையெல்லாம் வெளியேற்றி அறையைச் சுத்தம் செய்யச் சொன்னான். ஒரு பந்தத்தைத் தவிர மற்றவைகளை அகற்றச் சொன்னான்.

"மன்னா! இதெல்லாம் எதற்காக?" என்று கேட்டார் ராஜகுரு.

"பிடிக்கவில்லை. அகற்றிவிட்டேன்" என்றான் மன்னன் சுருக்கமாக.

குருநாதரை அவருக்கென்று ஒதுக்கப்பட்ட சயன அறைக்கு அனுப்பிவிட்டு தனது அறையில் இருந்த கட்டிலில் வந்து படுத்தான் மன்னன். அசதியாக இருந்தாலும் உறக்கம் வருவதாக இல்லை. பந்தமானது அணையும் வரை ஏதேதோ எண்ணங்களில் ஆழ்ந்திருந்தான்.

பந்தம் அணைந்த சிறிது நேரத்தில் அவனுக்கு லேசான உறக்கம் வந்தது. உறக்கம் வந்த அதே நேரத்தில் அறைக்கதவு தட்டப்பட்டது.

"வெளியில் காவலுக்கு ஆட்கள் இருப்பார்களே! அவர்களை மீறி எப்படிக் கதவு தட்டப்படுகிறது?" என்று தனக்குள்ளேயே கேட்டுக் கொண்ட மன்னன் கட்டிலை விட்டு எழுந்தான். அறைக் கதவைத் திறந்தான்.

பந்தம் அணைந்து விட்டதால் அறை இருளில் மூழ்கியது. மன்னன் கதவைத் திறந்ததும் வெளியே தோன்றிய உருவம் எதிர்பாராத விதத்தில் குறுவாளை நந்திவர்மனின் தோள்மீது வீசிவிட்டு ஓடியது. மன்னனின் உள்ளுணர்வு அவனை எச்சரித்துக் கொண்டிருந்த காரணத்தால் உருவம் குறுவாளை வீசியபோது சற்றே ஒதுங்கி விட்டதால் தோளில் பதியவேண்டிய குறுவாள் தோளின் மீதிருந்த உத்தரீயத்தைக் கிழித்துக் கொண்டு கீழே விழுந்தது.

அறைக்கு வெளியே வந்து பார்த்தான் மன்னன். யாரையும் காணவில்லை. பாதுகாப்பிற்கு நிற்க வேண்டிய காவலர்களும் இல்லை. மன்னன் கீழே கிடந்த குறுவாளை எடுத்துக் கொண்டு கட்டிலில் வந்து படுத்தான். பதற்றப்படாமல் யோசித்தான்.

★

விடிவதற்கு இரண்டு நாழிகைக்கு முன்னால் பேரிரைச் சலாக இருந்தது.

"ஐயோ! ஐயோ" என்று குரல்கள் மன்னர் இருந்த அறையைச் சுற்றி எழுந்தது.

மன்னன் இருந்த அறை தீப்பற்றி எரிந்தது.

காடகமுத்தரையர் வந்து பணியாட்களைக் கொண்டு தண்ணீரை வாரி தீயில் வீசும்படிக் கட்டளையிட்டார்.

நீரின் வேகத்தை விட நெருப்பின் வேகம் அதிகமாக இருந்ததால் நெருப்பே வென்றது. அந்த அறை முற்றிலும் எரிந்து சாம்பலாகியது. தண்ணீர் அடிக்கப்பட்டதால் புகை மண்டலம் உருவாகி எரிச்சலை உண்டாக்கியது. எரிந்துவிட்ட அறைப் பகுதியில் உள்ளே நுழைய முடியவில்லை.

இந்த நிலையில் அங்கே வந்த குருநாதர் "ஐயோ" என்றார். மறுகணமே மயங்கி விழுந்தார்.

பொழுது நன்றாக விடிந்தபோது எல்லாமே முடிந்து விட்டது போல் அரண்மனைக்கு வெளியே இடிந்து போனவராய் ராஜகுரு அமர்ந்திருக்க, முத்தரையரும் அதிகாரிகளும் செய்வதறியாமல் நின்றார்கள்.

"மகாராஜாவுக்கு நானே யமனாகி விட்டேன். தில்லை விவகாரத்தை அவரிடம் நான் சொல்லியிருக்கவே கூடாது. அதுதான் எல்லாவற்றுக்கும் காரணம். தில்லை நகரம் திருநகரமாக இருக்கும் என்று நினைத்திருந்தேன். ஆனால் அது கொலை நகரமாக இருக்கும் என்று சிறிதும் எதிர்பார்க்கவில்லை. காஞ்சி மக்களுக்கு நாம் என்ன சமாதானம் செய்ய முடியும்? எப்படிச் செய்ய முடியும்? மகாமந்திரியும் தரணிகொண்ட போசரும் வேண்டாம் வேண்டாம் என்று சொல்லிய போது வேண்டும் வேண்டும் என்று சொல்லி இங்கே வந்தார் என் பரமார்த்த சீடரான நந்திவர்மர். மகாமந்திரி முதலிய பெருமக்களுக்கு நான் என்ன பதில் சொல்ல முடியும்? இப்படிப்பட்ட துயரத்தையும் இக்கட்டையும் நான் சந்தித்ததே இல்லை" என்று கண்ணீர் மல்கப் புலம்பிய ராஜகுரு "ஏன் முத்தரையரே! மகாராஜாவின் எலும்புகள் கூடவா கிடைக்கவில்லை?" என்று வினவினார்.

"இல்லை ஐயா. தீயின் வெப்பம் இருமடங்காக இருந்தது. தண்ணீரால் அதை வெற்றி கொள்ள முடியவில்லை. ஆகவே அதிர வைக்கும் வெப்பமானது எலும்புகளைத் தீய்த்துச் சாம்பலாக்கி விட்டன" என்றார் முத்தரையர்.

"அப்படியானால் மன்னரின் சாம்பலைத்தான் காஞ்சிக்குக் கொண்டு போக வேண்டுமா? முடியாது முத்தரையரே. முடியாது. என்னையும் எரித்து என் சாம்பலையும் எடுத்துச் செல்லுங்கள்" என்று தவிப்புடன் சொன்னார் ராஜகுரு.

அப்போது நடராஜர் ஆலயத்து தீட்சிதர்கள் சிலர் வந்து "காடக முத்தரையர் பெருமானே! இது என்ன நாங்கள் கேள்விப்படுவது? பல்லவ மாமன்னர் அறையில் வைத்து எரிக்கப் பட்டாரா? அது எப்படி நடக்க முடியும்? அரண்மனைக் காவலர்கள் எங்கே போனார்கள்? அவர்கள் இருக்கும் போது மாமன்னர் இருந்த அறையை யார் வந்து எரிக்க முடியும்? தங்கள் கட்டுப்பாட்டில் தானே அரண்மனை இருக்கிறது? மன்னரோடு தானே நீங்கள் இருக்கிறீர்கள்? உங்களையும் மீறி இப்படியொரு அவலம் நடக்க முடியுமா?" என்று கேட்டார்கள்.

அப்போது குறுக்கிட்ட ராஜகுரு "எங்கள் மாமன்னரது மரணத்திற்கு நீங்களே காரணம். இது உங்களால் நிகழ்த்தப்பட்ட கொடூரமான கொலை" என்றார் கொதிக்கும்.

"ராஜகுரு நாதரே! தாங்களா இப்படி பேசுவது? தாங்கள் இப்படிப் பேசலாமா? ஆலயத்தில் இருந்து கொண்டு அம்பலவாணருக்குத் திருச்சேவை செய்கிற சிவனடியார்கள் நாங்கள். எங்களுக்கு மகேசனும் மாமன்னரும் ஒன்று தான்" என்றார் தீட்சிதர்.

"அதனால் தான் மாமன்னர் தில்லையில் காலை வைத்தால் தலை இருக்காது என்றீர்களோ? உங்களைப் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது என்று எண்ண வேண்டாம். எங்கள் மாமன்னரை நீங்கள் மகேசனாகக் கருதவில்லை. மாற்றானாகவும் பகைவனாகவுமே கருதியிருக்கிறீர்கள். அதனால் தான் உங்கள் நடராஜர் கோயிலில் பெருமாளுக்கும் ஒரு கோயில் அமைக்க அவர் உத்தேசித்த போதுதான் மேற்கண்ட குரூரமான வார்த்தைகளைக் கூறியிருக்கிறீர்கள். ஆகவே நீங்கள்தான் உங்கள் சொற்படி செயல்பட்டிருக்கிறீர்கள் என்று அபிப்ராயப் படுகிறேன். மறுக்க முடியுமா உங்களால்?"

"இது அபாண்டமான கற்பனை ஐயா. மாமன்னரின் பெருமாள் கோயில் விவகாரத்தில் எங்களுக்கு கருத்து வேறுபாடு இருப்பது உண்மைதான். கருத்து வேறுபாடுகளைப் பேச்சு வார்த்தையில் தீர்ப்போமே தவிர மாமன்னரைக் கருவறுக்க மாட்டோம். நாங்கள் வீர சைவர்கள். கொலை, தீ வைப்பு போன்ற கோழைத் தனங்கள் ஒவ்வாதவை. எங்கள் எதிர்ப்பை நீங்கள் நேற்று பார்க்கவில்லையா? கோபுரத்திலிருந்து குதித்து தற்கொலை

செய்து கொண்டவர்கள் நாங்கள். உயிர்த்தியாகம் செய்வோமே தவிர உயிர்க்கொலை செய்ய மாட்டோம். அதோடு மாமன்னரின் இருப்பிடமும் அரண்மனையும் காடக முத்தரையர் அவர்கள் கட்டுப்பாட்டிலும் காவலிலும் உள்ளது. அவர் காலனைப் போன்றவர் என்றும் அவர் இருக்கும் இடம் காலன் கோட்டை என்று கேள்விப்பட்டிருக்கிறோம். அவரை மீறி - அவரது காவலை மீறி நாங்கள் எப்படி வரமுடியும்? இந்த கோழைத்தனத்தைச் செய்ய வேண்டும்? எதிரிகளைக் கூட நாங்கள் வேலைதீர்க்க முயன்றதில்லை."

"நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்? நீங்களெல்லாம் அப்பாவிகள் என்றும் அப்பழுக்கற்றவர்கள் என்றும் அரண்மனையில் இருந்தவர்கள் பாதகச் செயலைச் செய்தார்கள் என்கிறீர்களா?"

"தாங்கள் இப்படியெல்லாம் தவறான ஊகங்களையே கற்பித்துக் கொண்டு பேசுகிறீர்கள். இதை நாங்கள் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. இங்கே வந்தது எங்கள் அதிர்ச்சியையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதற்காகத் தான். உங்களது அநியாயமான குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொள்வதற்காக அல்ல. சிவா மகா தொண்டில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் எங்களைக் கொலைகாரர்களாகச் சித்தரிப்பது மகாராஜ குருவான தங்களுக்குத் தகாது. மாமன்னரது மரணத்தை மகா துயரமாக அனுஷ்டிக்கும் வகையில் ஆலயக் கதவுகளை மூ டலாமா என்று கேட்பதற்காகவே வந்தோம்" என்று தீட்சிதர்கள் சொன்னபோது -

"வேண்டாம். அதற்கு அவசியமில்லை" என்று கூறியபடி அங்கு பிரவேசித்தான் மன்னன் நந்திவர்மன்.

யாரும் அதை எதிர்பார்க்கவில்லை.

வியப்பும் மகிழ்ச்சியுமே அடைந்தார்கள்.

"மன்னவா! எங்களால் நம்பமுடியவில்லை. எப்படித் தீயிலிருந்து தப்பினீர்கள்?" என்று வினவினார் காடக முத்தரையர்.

"நந்திவர்மா! நீ இறைத் தூதன். தூதனென்ன? இறைவனே நீ தான். உனக்கு இறப்பு இல்லை. அதை உணராமல் நான் என்னென்னவோ நினைத்து விட்டேன். பேசி விட்டேன். நான் தீக்குளிக்கத் தீர்மானித்திருந்தேன். உன்னோடு வந்த நான் நீ இல்லாமல் எங்கேயும் போக விரும்பவில்லை. நீ மாமன்னன் மட்டுமல்ல. என் சீடன். நான் உண்மையான குரு என்பதை உணர்த்தும் விதமாக மரணத்தைத் தழுவாமல் மன்னனாகவே

வந்து நிற்கிறாய். நீ எப்படித் தப்பினாய்?" என்று கேட்டார் ராஜகுரு.

தீட்சிதர்கள் மன்னனை வணங்கி "எங்கள் மீது பெரும் பழி வரவிருந்தது.தாங்கள் உயிரோடு வந்து பழியை நீக்கினீர்கள்.அந்தத் தில்லை அம்பலவாணன் தான் தங்களுக்கு அருளியிருக்கிறான். தாங்கள் எப்படித் தப்பினீர்கள் என்பதெல்லாம் தேவையற்ற விஷயங்கள். தப்பி வந்ததே போதும். தம்பிரான் - எம்பிரான் புண்ணியம். நீடூழி வாழ வாழ்த்துகிறோம்" என்றார்கள்.

ராஜகுரு முத்தரையரைப் பார்த்து "முத்தரையரே! நீங்கள் இன்னமும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். மன்னனின் பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டும். நகரத்தை இரும்பு வளையத்திற்குள் கொண்டு வந்தால் போதாது. மாமன்னரைச் சுற்றி இரும்பு வளையப் பாதுகாப்பை அமைக்க வேண்டும்" என்றார்.

"நான் தான் உயிரோடு இருக்கிறேனே! இந்தப் பேச்சுக்கள் எல்லாம் எதற்கு? நான் நீராடி விட்டு வருகிறேன். உணவுக்கு ஏற்பாடு செய்யுங்கள். எரிந்து போன சயன அறை இருந்த இடத்தைச் சுத்தப்படுத்த ஆணையிடுங்கள்" என்று கூறிவிட்டுப் பணியாளர்களுடன் நீராடச் சென்றான் மன்னன்.

சயன அறைக்குத் தீ வைக்கப்பட்டது குறித்து மன்னனாகவே பேசட்டும் என்று ராஜகுருவும் காடகமுத்தரையரும் மௌனமாகவே இருந்தார்கள்.

உணவருந்தும் போது மன்னனாகவே பேசமுற்பட்டு "நான் சயன அறையில் இருந்தபோது நள்ளிரவில் கதவு தட்டப்பட்டது. நான் சந்தேகத்துடன் கதவைத் திறந்தேன். வெளியே இருந்த உருவம் என்னைக் கொல்லும் முயற்சியில் குறுவாளை வீசி விட்டு ஓடிவிட்டது. நான் சுதாரித்துக் கொண்டதால் வாள் என்னைப் பதம் பார்க்கவில்லை. அக் கொலை முயற்சியைக் கண்டபின் நான் அறையில் இருக்க விரும்பாமல் கதவைச் சாத்திவிட்டு வெளியேறி விட்டேன். அதற்குப் பிறகு நான் அறைக்குள் இருப்பதாக நினைத்தவர்கள் அறைக்குத் தீ வைத்திருக்கிறார்கள். ஆக இரவில் என்னைத் தீர்த்துக் கட்ட இருமுறை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.தோல்வியில் முடிந்தன. முயற்சித்தவர்கள் யாராக இருக்கும் என்பதை என்னால் ஊகிக்க முடிகிறது. ஆனால் எப்படி முடிந்தது என்பது புரியவில்லை" என்றான்.

★★★



தில்லை கொட்டகாரம்

கொலை முயற்சிகள் இரண்டுமுறை ஒரே இரவில் நடைபெற்றதாக மன்னன் கூறியபோது ராஜகுருவும் காடக முத்தரையரும் அதிர்ச்சியடைந்தார்கள்.

"சந்தேகமே இல்லை. நான் கூறியது சரிதான். தில்லைவாழ் அந்தணர்கள் மூவாயிரவரும் தீட்சிதர்களும் தான் இதைச் செய்திருக்க வேண்டும்" என்றார் ராஜகுரு.

"அவர்களைச் சந்தேகிக்கக் காரணம் இருப்பது உண்மை தான். ஆனால் அவர்களாக அவ்வாறு செய்ய முடியுமா? அரண்மனையில் இருப்பவர்களில் சிலரோ அல்லது பலரோ அவர்களுக்கு உதவுகிறார்கள். அவர்கள் உதவியில்லாமல் இப்படி நடப்பதற்கு வாய்ப்பில்லை" என்றான் மன்னன்.

"தீட்சிதர்களைப் பிடித்துக் கிட்டியில் கட்டி விசாரித்தால் உண்மை தெரிந்து விடும்" என்றார் ராஜகுரு.

மன்னன் அதைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

"காடக முத்தரையரே! எனது ஊகம் உண்மையானால் இந்த அரண்மனையில் இருக்கும் பலர் உங்களது கட்டளைகளை ஏற்பது போல் ஏற்று உங்களை ஏமாற்றியிருக்கிறார்கள். என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டான் மன்னன்.

"ஆம் மகாராஜா. அப்படித்தான் நானும் நினைக்கிறேன். அரண்மனையில் உள்ளவர்களையெல்லாம் சிறை செய்துவிட்டு வைஷ்ணவ இளைஞர்களைப் பாதுகாப்பிற்கு ஏற்பாடு செய்து விடட்டுமா?" என்று கேட்டார் முத்தரையர்.

"வேண்டாம். அநேகமாக கொலைமுயற்சிகள் மேற்கொண்டு நடக்காது. இரண்டு முறை முயன்று தோற்றுவிட்டவர்கள் தற்போது தயங்கவே செய்வார்கள். அதோடு அவர்களது போக்கு நமக்குப் புரிந்துவிட்டது. இந்தச் சலசலப்புக்கெல்லாம் அஞ்சுபவன் நானல்ல. எதிரியை அழிப்பது தான் பிரச்சனைக்குத் தீர்வு என்று நினைப்பவர்கள் அறிவாளிகள் ஆகமாட்டார்கள். கொலை முயற்சிகளைப்பற்றியவிசாரணைகூட வேண்டியதில்லை. அப்படிச்

செய்வது நாம் அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்த மாதிரி ஆகி விடும். அதை விடுங்கள். நான் ஏற்கனவே சொன்னபடி தில்லை மூவாயிரவர் மற்றும் தீட்சிதர்களில் பத்துப் பத்துப் பேரை மட்டும் நான் சந்திக்க வேண்டும். உடனடியாகத் தில்லை நகர்க் கொட்டகாரத்திற்கு அவர்களை வரச் சொல்லுங்கள். நாங்களும் வருகிறோம்" என்று சொன்ன மன்னன் ராஜகுருவை நோக்கி "நான் செய்தது சரியா குருநாதரே?" என்று கேட்டான்.

"மிக்க சரி. இப்படித் தான் இருக்க வேண்டும் இப்படித்தான் நடக்க வேண்டும் என்று திடமாக இருப்பவனே மன்னன். என் சீடன். உனது நோக்கம் நிறைவேறும்" என்றார் ராஜகுரு.

ஒரு நாழிகை கழித்து வந்தார் காடகமுத்தரையர்.

"மகாராஜா! தில்லை வாழ் அந்தணர் மூவாயிரம் பேரில் பத்துப் பேரையும் கோயில் தீட்சிதர்களில் பத்து பேரையும் மட்டும் தங்களைச் சந்திக்க வரும்படிச் சொன்னேன். அவர்கள் மறுத்து விட்டார்கள். சந்திப்பதாக இருந்தால் அனைவரும் தான் வருவார்கள். அதோடு அவர்களது சுதந்திரத்தைப் பறித்து கட்டுப்பாட்டை நாம் விதித்திருக்கிறோம் அல்லவா? அதை நீக்க வேண்டுமாம். சுதந்திரத்தைப் பறித்ததற்காகத் தாங்கள் மன்னிப்புக் கேட்க வேண்டுமாம்" என்றார்.

"சற்றுமுன் தீட்சிதர்கள் நான் இறந்து விட்டதாகக் கருதி துக்கம் விசாரித்து விட்டு வாழ்த்தி விட்டுப் போனார்கள். இப்போது நான் உயிரோடு இருப்பதைப் பார்த்து விட்டு மன்னிப்புக் கேட்கச் சொல்கிறார்கள். அவர்களது சுதந்திரத்தை நாம் நிரந்தரமாகப் பறித்து விடவில்லை. வன்முறையோ அசம்பாவிதமோ நடக்கக் கூடாது என்பதற்காகத் தான் தற்காலிகமாகக் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறோம். மன்னனோடு பேச்சு வார்த்தை நடத்துவதற்கு வழிமுறைகள் உண்டு. பிரச்சனை வரும்போது அனைவரும் கூடப் பேசமுற்படுவதற்குப் பெயர் பேச்சு வார்த்தையல்ல. போராட்டம். எங்கேயும் எப்போதும் எல்லா விஷயங்களிலும் பிரதிநிதிகள் மூலம் தான் பிரச்சனைகள் பேசப்படுமே தவிர ஊர் முழுதும் திரண்டு பேசமுடியாது. அனைத்தையும் உணர்ந்துதான் பத்துப்பேரை வரச் சொன்னேன்" என்று காடக முத்தரையரைப் பார்த்துச் சொன்ன மன்னன் "என்ன சொல்கிறீர்கள் குருநாதரே?" என்று கேட்டான்.

"மிகவும் சரி மன்னா" என்றார் ராஜகுரு.

"இங்கே என்மீது கொலைமுயற்சிகள் நடந்திருக்கும் போது ...ரையுமே சந்திக்காமல் நான் போயிருக்கலாம். ஆனாலும் முன் ...வைத்த காலை பின்னே வைப்பது சரியல்ல என்றே பேசுவதற்குத்

தீர்மானித்தேன். நான் பத்துப் பேர்களை வரச் சொன்னேன் என்றால் அது என் வேண்டுகோள் அல்ல. என் ஆணை.

அரசாணையைப் புறக்கணிக்கும் யாரையும் நான் சகித்துக் கொள்ளமாட்டேன். தில்லை மூவாயிரவரையும் தீட்சிதர்களையும் அரசாணையைப் புறக்கணித்த குற்றத்திற்காக உடனே சிறையில் அடையுங்கள். காஞ்சியிலிருந்து ஒரு படைப் பிரிவை வரவழைக்கப்பட்டு தில்லை நகரைக் காவல் புரியட்டும்" என்றான் மன்னன்.

அந்த நிலையில் தில்லைக் கோயிலின் ஆளுங் கணத்தின் தலைவர் அம்பலக் கூத்தன் ஓடோடி வந்தார்.

"மகாராஜா! தாங்கள் கூறியபடியே தீட்சிதர்கள் பத்துப் பேரும் தில்லைவாழ் அந்தணரில் பத்துப் பேரும் தில்லை நகர்க் கொட்டகாரத்தில் தங்களைச் சந்திக்கக் காத்திருக்கிறார்கள். தாங்கள் தயை கூர்ந்து அங்கே வந்தருள வேண்டும்" என்றார்.

மன்னன் எதையும் பேசிக்கொள்ளாமல் கொட்டகாரத்தை நோக்கிச் சென்றான். அங்கே தில்லைவாழ் அந்தணர்களும் தீட்சிதர்களும் இருபது பேர் அமர்ந்திருந்தார்கள்.

மன்னன் பேச முற்படுவதற்குள் தீட்சிதர் ஒருவர் பேச முற்பட்டு "எங்கள் எதிர்ப்பைக் காட்டும் விதமாக தீட்சிதர் ஒருவர் வடக்கு கோபுரத்தின் மீதிருந்து கீழே குதித்து உயிர்த்தியாகம் செய்து கொண்டார்" என்றார்.

"நான் தேவையற்ற விஷயங்களைப் பேசுவதற்காக இங்கே வரவில்லை" என்று கரகரத்த குரலில் சொன்னான்.

"அம்பலவாணரை ஆதியிலிருந்து பூஜை செய்து வந்த தீட்சிதத் தம்பிரான் கோபுரத்திலிருந்து குதித்து உயிர்த்தியாகம் செய்து கொண்டது மகாராஜாவுக்குத் தேவையற்ற விஷயமா?" என்று கேட்டார் தீட்சிதர்.

"அது தியாகமல்ல. மிரட்டல். எதிர்ப்பைக் காட்டுவதற்கு தற்கொலைகளையும் கொலைகளையும் மேற்கொள்வது அனுதாபத்திற்குரியவை அல்ல.

அருவருக்கத் தக்கவை. அதைப் பற்றிய பேச்சு இப்போது வேண்டாம். தில்லை நடராஜர் கோயிலுக்குள் பெருமாள் கோயிலைக் கட்டுவதற்கு எனது ஆணை ஒன்றே போதும். யாரிடமும் அது குறித்துப் பேசவேண்டிய அவசியமில்லை. இதை முதலில் நீங்களெல்லாம் புரிந்து கொள்ள வேண்டும்" என்று நிர்தாட்சண்யமாகச் சொன்னான் மன்னன்.

"மகாராஜா! எங்கள் உணர்வுகளைத் தாங்கள் புரிந்து கொள்ளுங்கள். தில்லை அம்பலவாணர் எங்கள் குலதெய்வம். தில்லை மாநகர் எங்கள் தாய். இவ்விரண்டும் எங்கள் கண்கள். எத்தனைப் பிறவி எடுத்தாலும் தில்லையிலே பிறக்க வேண்டும் என்று தவம் கிடப்பவர்கள் நாங்கள். தொல்லைகள் வந்தாலும் அது தில்லையில் என்றால் எல்லையில்லா மகிழ்ச்சியடைபவர்கள் நாங்கள். அது மட்டுமல்ல. பழுத்துச் செத்தாலும் பிறந்து செத்தாலும், பாழுடலம் கொழுத்துச் செத்தாலும் மெலிந்து செத்தாலும், கொலைப்படினும், புழுத்துச் செத்தாலும், புதைத்தாலும், காலில் புரியைக் கட்டி இழுத்துச் சென்றாலும் சிதம்பரத்தே சென்று இறத்தலே நன்று* என்னும் கடப்பாடு கொண்டவர்கள் நாங்கள்" என்று தீட்சிதர் கூறிக்கொண்டே வந்தபோது -

"நாங்கள் என்று குறிப்பிடுவது யாரை?" என்று கேட்டான் மன்னன்.

"தில்லை மூவாயிரவரும் தீட்சிதர்களும் தான்" என்று சொன்ன தீட்சிதர் "தில்லையை அம்பலவாணனின் சொந்த அம்பலமாகவே காலம் காலமாகக் கருதி வருகிறோம். அம்பலவாணரைக் கேட்டால் கூட அவ்வாறே கூறுவார். அவரது ஆலயத்தில் எக்காலமும் சிவ அலைகளே வீசிக் கொண்டிருக்கின்றன. அவற்றை மறிக்கும் விதமாக அந்த ஆலயத்திற்குள் பெருமாள் கோயிலைத் தாங்கள் கட்ட முயற்சிப்பது தங்கள் சிறப்புக்கு உகந்ததல்ல" என்றார்.

"தீட்சிதர்களே! அந்தணர்களே! இறைவனின் அருள் அலைகள் எங்கும் வீசிக் கொண்டிருக்கின்றன என்பதை உங்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அவற்றைச் சிவ அலைகள் என்றும் பெருமாள் அலைகள் என்று பிரித்து அதையொட்டிச் சிவாலயங்கள் என்றும் விண்ணகரங்கள் என்றும் பிரிக்க வேண்டாம். காவிரிக் கரையில் அக்காலத்தில் திருக்கரம்பனூரில் (தற்கால உத்தமர் கோயில்) ஒரே ஆலயத்தில் மும்மூர்த்திகளையும் பிரதிஷ்டை செய்து இன்றுவரை பிரச்சனை எதுவுமில்லாமல் அனைவரும் வழிபட்டு வருகிறார்கள். அங்கே என்ன அலை வீசுகிறது? எந்த அலையை எந்த அலை தடுக்கிறது?" என்று கேட்டுச் சிறிது நேரம் வரை மௌனமாக இருந்தான்.

எதிரே இருந்தவர்கள் எதுவும் பேசவில்லை.

---

* தில்லைக் கலம்பகம். பாடல் எண் 28.

மன்னனே பேசமுற்பட்டு "கடல் மல்லையில் என்ன நடந்திருக்கிறது என்பது உங்களுக்கெல்லாம் தெரியும் என்று நினைக்கிறேன். அங்கே கடல் அலைகள் தரையைத் தொடும் இடத்தில் ஜலசயனப் பெருமாளுக்கு முதலில் கற்றளி கட்டப்பட்டது. பிற்காலத்தில் அக்கோயிலை மறைக்கும் வண்ணமாக கிழக்கிலும் மேற்கிலும் சிவாலயங்கள் கட்டப்பட்ன. இன்றைக்கும் அங்கே மக்கள் இரு தெய்வங்களையும் வணங்குகிறார்கள். ஒரு பிரச்சனையும் இல்லை. தில்லையில் மட்டும் என்ன பிரச்சனை?" என்று கேட்டான்.

"தில்லை அம்பலவாணரது கோயிலைப் பிற கோயில்களோடு ஒப்பிடலாகாது. இது திருக்கைலாயமேதான். அக்கைலாயத் திற்குள் எதற்காகப் பெருமாள் கோயிலைக் கட்ட வேண்டும்?" என்று கேட்டார் தில்லை வாழ் அந்தணர் மூவாயிரவரின் தலைவரான சிவநாதர்.

"தில்லைக் கோயில் மற்ற கோயில்களோடு ஒப்பிடக் கூடாது என்று சொல்வதை நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன். அதோடு நாங்கள் நாங்கள் என்று கூறிக்கொள்வது நீங்கள் மட்டும் தான். எதிர்ப்பு தெரிவிப்பது நீங்கள் மட்டும்தான். ஆனால் தில்லையில் இருப்பது நீங்கள் மட்டுமே அல்ல. மக்கள் இருக்கிறார்கள். பலதரப்பட்ட மக்கள் இருக்கிறார்கள். அவர்களது எண்ணிக்கை உங்களை விட அதிகம். நடராஜர் ஆலயத்திற்குள் பெருமாள் கோயிலைக் கட்டுவதை அவர்கள் எதிர்க்கவில்லை. சொல்லப்போனால் நீங்கள் ஆலயத்தில் பூஜை செய்பவர்கள். அவர்கள் அங்கே வந்து வழிபாடு செய்பவர்கள். அவர்கள் உங்களைப் போலத் தில்லைக் கோயிலை இதர கோயில்களோடு ஒப்பிடக் கூடாது என்று கூறவில்லை. கோயில்கள் எங்கே இருந்தாலும் எப்படி இருந்தாலும் அங்கே செல்லவும் வழிபாடு செய்யவும் தயாராகவே இருக்கிறார்கள். பெரிய ஆலயமாக இருக்கும் நடராஜர் கோயிலுக்குள் பெருமாள் கோயில் ஒன்றையும் கட்டினால் மக்கள் இரு தெய்வத்தையும் வணங்க முற்படுவார்களே தவிர எதிர்க்க முற்படமாட்டார்கள். ஆகவே தான் இங்கே பெருமாள் அமைக்க நான் விரும்புகிறேன். திருக்கரம்பனூர் கோயிலும் கடல்மல்லைக் கோயிலும் முன்னுதாரணங்களாக இருப்பதால் இந்த முயற்சியை நான் மேற்கொள்கிறேன்" என்றான் மன்னன்.

"மகாராஜா! தாங்கள் கூறிய முன்னுதாரணங்கள் எல்லோராலும் பின்பற்றப்பட வேண்டும் என்ற அவசியம் இல்லை" என்றார் ஒரு தீட்சிதர்.

"முன்னுதாரணங்களைப் பின்பற்றுவதென்பது தவிர்க்க முடியாதது. அந்தந்தக் காலகட்டத்தில் நடக்க வேண்டியவை நடந்தே தீரும்" என்றான் மன்னன்.

"மன்னர் இதர மதங்களை மதிக்க வேண்டும். இதர மதவாதிகளின் உணர்வுகளை மதிக்க வேண்டும். அவர்களது வழியில் தலையிடக் கூடாது" என்றார் மற்றொரு தீட்சிதர்.

"இது உங்களிடம் இருக்கும் தவறான எண்ணம். மதவாதிகள் இருப்பது மக்களையும் மகேசனையும் இணைக்கும் பாலமாக நடந்து கொள்வது தான். மக்களுக்கும் மகேசனுக்கும் மதஉணர்வுகளை வித்தியாசங்களாகத் தூண்டக் கூடாது" என்றான் மன்னன்.

"சிவாலயங்களுக்கும் பெருமாள் கோயில்களுக்கும் என்று தனித்தனி ஆகமங்கள் இருக்கின்றன. தனித்தனி வழிபாடுகள் இருக்கின்றன. தனித்தனி விழாக்கள் இருக்கின்றன. நடராஜர் ஆலயத்தில் பெருமாள் கோயிலை அமைத்தால் இவற்றில் எல்லாம் குழப்பமும் பிரச்சனையும் ஏற்படும்" என்றார் வேறொரு தீட்சிதர்.

"திருகரம்பனூர் ஆலயத்தில் மும்மூர்த்திகளும் இருக்கிறார்கள். நீங்கள் கூறிய விஷயங்களில் அங்கே எந்தப் பிரச்சனையும் இல்லை. இங்கே மட்டும் எப்படி வரும்?" என்றான் மன்னன்.

"காஞ்சியில் பெருமாளுக்கு விண்ணகரம் ஒன்றை எழுப்பிவரும் நிலையில் இங்கே எதற்குப் பெருமாள் கோயில்?" என்று கேட்டார் தில்லை மூவாயிரவரின் தலைவர் சிவநாதர்.

"காஞ்சியில் நான் விண்ணகரத்தை எழுப்பி வருகிறேன். என் மனைவியும் ராணியுமான ரேவாதேவி சிவாலயம் ஒன்றை எழுப்பி வருகிறாள். ஆண்டவனுக்குக் காலம் காலமாக எத்தனை எத்தனையோ ஆலயங்கள் எழுப்பபட்டு வருகின்றன. காஞ்சியிலும் குடந்தையிலும் ஏராளமான ஆலயங்கள் அமைந்துள்ளன. பக்தி இயக்கம் நன்றாகச் சூடுபிடித்திருக்கும் நிலையில் கோயில்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டுதான் போகுமேயன்றி குறையாது. நான் தில்லைக்கு வந்த போது தில்லை மூவாயிரவர் மற்றும் தீட்சிதர்களின் சொத்துக் கணக்குகளைக் கொண்டு வரச் சொல்லிப் பார்வையிட்டேன். உங்களில் பலருக்கு ஒருவருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட இல்லங்கள் உள்ளன. இதை நான் கூறுவதற்குக் காரணம் நாம் நமது தேவைக்கு அதிகமாகச் சொத்துகளையும் இருப்பிடங்களையும் வைத்துக் கொள்ளும்போது நாம் பரம்பொருளுக்கு எத்தனை ஆலயங்களைக் கட்டினால் என்ன? நடராஜர் கோயில் பெரிய

கோயிலாதலால் அதற்குள்ளேயே ஒரு பெருமாள் கோயிலையும் கட்டினால் பக்தர்கள் ஒரே இடத்தில் இரு தெய்வங்களையும் வணங்குவார்கள் என்பதால் தான்" என்றான் மன்னன்.

"தங்கள் விருப்பம் அதுவானால் தில்லையிலேயே தனியாகப் பெருமாளுக்குப் பெரியதாக ஒரு கோயிலைக் கட்டலாமே?" என்று கேட்டார் சிவநாதர்.

"எதைச் செய்தாலும் அது என் வாழ்நாளுக்குள் அமைய வேண்டும். அதுதான் மனநிறைவைத் தரும். என் வயது உங்களுக்கெல்லாம் தெரியும். காஞ்சியில் கட்டப்படும் விண்ணகரம் கட்டி முடிக்கப்பட்டு சம்ப்ரோக்ஷணம் நடைபெறுவது சாத்தியம். ஆனால் தில்லைக்குள் பெரியதோர் கோயிலைத் தனியாகக் கட்டுவது இயலாத ஒன்று" என்றான் மன்னன்.

"அப்படியானால் தாங்கள் நடராஜர் கோயிலில் கட்ட உத்தேசிருக்கும் பெருமாள் கோயில் மட்டும் தங்கள் ஆயுட்காலத்தில் கட்டி முடிந்துவிட முடியுமா?" என்று கேட்டார் சிவநாதர்.

"முடியும் என்ற நம்பிக்கை நேற்றிரவே வந்து விட்டது."

"நேற்றிரவா? எப்படி?"

"என்னைத் தீர்த்துக் கட்டிவிட இருமுறை முயற்சிகள் நடந்து தோல்வியடைந்த பின் என் ஆயுள் கெட்டி என்பது எனக்குத் தெரிந்துவிட்டது. தில்லையில் கோயிலைக் கட்டி முடிக்கும் வரை என் ஆயுள் நிச்சயமாக நீடிக்கும்."

"நமது ஆயுள் நமது கையில் இல்லை என்பது பரம பாகதவரான மன்னருக்குத் தெரியாதா?"

"தெரியும். அதற்காக நம்பிக்கையை இழக்க முடியாது. சோர்ந்து போய் உட்கார்ந்து விடக்கூடாது. நமது முயற்சியை நாம் செய்தாக வேண்டும்."

"மகாராஜா! ஆடவல்லான் ஆலயத்தில் பெருமாள் கோயிலைக் கட்ட விரும்பும் தாங்கள் திருவரங்கன் ஆலயத்திற்குள் ஒரு சிவபெருமான் கோயிலைக் கட்டித் தரமுடியுமா?" என்று கேட்டார் தில்லைவாழ் அந்தணர்களின் தலைவர் சிவநாதர்.

அதைக் கேட்டதும் காடக முத்தரையரின் கண்கள் சிவந்தன.

★★★



மன்னன் எடுத்த முடிவு

மன்னன் நந்திவர்மனோ காடகமுத்தரையரை அமைதியாக இருக்கும்படிச் செய்கை செய்து விட்டு "அந்தணரே! நீங்கள் பேசுவது விதண்டாவாதம். தனக்குக் கண்பார்வை பறிபோனால் எதிரிக்கும் அதே போல் கண்பார்வை பறிபோக வேண்டும் என்று நினைப்பவர்கள் பேசுவதைப் போன்றது உங்கள் பேச்சு. இடக்கான பேச்சு. குதர்க்கமான வாதம்" என்றான் அமைதியாக.

"இப்படியொரு விருப்பம் வீரசைவர்களுக்கு இன்றில்லை என்றாலும் பின்னாளில் வரக்கூடும் என்று நான் கருதுவதில் தவறில்லை மகாராஜா" என்று அயராமல் சொன்னார் சிவநாதர்.

"எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பதை இப்போது கூற முடியாது. அயல் நாட்டைச் சேர்ந்தவர்களும் அயல் மதத்தைச் சேர்ந்தவர்களும் பாரதநாட்டில் கொஞ்சம் கொஞ்சமாக ஊடுறுவி வருகிறார்கள். தங்கள் மதத்தை தத்தம் இருப்பிடங்களில் பரப்பி வருகிறார்கள். அவர்களுக்கு நமது மதங்களின் மீதோ தெய்வங்களின் மீதோ நம்பிக்கை கிடையாது. இப்போதைக்கு மதத்தை மட்டும் பரப்பி வரும் அவர்கள் தங்கள் எண்ணிக்கையும் பலமும் பெருகும்போது படைகளைத் திரட்டலாம். ஆட்சியைப் பிடிக்கலாம். ஆட்சியாளர்களாகி விட்டால் நமது மதங்களை மட்டுமின்றியும் ஆலயங்களையும் விக்கிரகங்களையும் அழிக்கலாம்.* எது வேண்டுமானாலும் நடக்கலாம். அதற்காக நாமிப்போது அஞ்சிக் கொண்டோ முயற்சி எதுவும் செய்யாமலோ இருந்துவிட முடியாது. உங்கள் பேச்சும் அணுகுமுறையும் எனது முயற்சியைத் தகர்க்கும் விதமாகவே அமைந்து வருகின்றன. எனது ஆட்சியில் நான் தீர்மானிப்பதை முடிந்த அளவிற்கு எதிர்ப்புகள் இன்றி நடத்தி முடிக்கவே விரும்புகிறேன். இதுபோன்ற காரியங்கள் முற்காலத்தில் நடந்திருப்பதால் அவற்றை முன்னுதாரணங்களாகக் கொண்டு செய்ய முற்படுகிறேன். அதற்காகவே தில்லைச் சிவனடியார்களான மகேஸ்வரர்களிடமும், கோயில் ஸ்ரீகாரியமாக அகத்தொண்டு

* இது பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் மாலிக்காபூர் தென்னாட்டை நோக்கிப் படையெடுத்து வந்ததிலிலிருந்து தொடர்ந்து பலகாலம் நடந்தது.

புரிந்து வரும் தில்லை அந்தணர் மூவாயிரவர்களிடமும், கோயில் நாயகம் செய்து வருகிற அரசியல் அதிகாரிகளிடமும், சமுதாயம் செய்வார்களாகிய ஊர் மக்களிடமும் பேச விரும்பினேன். ஏகோபித்த ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெற முயன்றேன். கோயில் நாயகர்களும் சமுதாயம் செய்வார்களும் எனக்கு ஆதரவு தர இசைந்து விட்டார்கள். அவர்களை விட எண்ணிக்கையில் குறைந்த தீட்சிதர்களும் அந்தணர் மூவாயிரவரும் தான் மறுப்பும் எதிர்ப்பும் தெரிவித்து பகைவர்களைப் போலவே நடந்து கொள்கிறீர்கள். தங்களிடம் பக்தியை விடப் பிடிவாதமே பிரதானமாக இருக்கிறது. மதப்பற்றைவிட மதவெறியே அதிகமாக இருக்கிறது. பிரச்சனை சுமூகமாக முடிவதைவிட சிக்கலாக மாறுவதையும் வளர்வதையும் விரும்புகிறீர்கள். உங்களிடம் பேசிக் கொண்டிருப்பது நேரம் விரையமாவதாக அமைகிறது. இனி நானாகவே முடிவெடுப்பது தான் சரியாக இருக்கும்" என்றான் தீட்சண்யமாக.

"பெருமாள் கோயிலை எங்கள் அம்பலவாணர் கோயிலில் எங்கே கட்டப் போகிறீர்கள்?" என்று கேட்டார் ஒரு தீட்சிதர்.

"ஆலய மண்டபங்களையும் சுற்றுப் பிரகாரங்களையும் இடித்து விட்டுக் கட்டப் போகிறீர்களா?" என்று கேட்டார் மற்றொரு தீட்சிதர்.

"கோபுரம் ஒன்றை இடித்து விட்டு அதற்குப் பதிலாகப் பெருமாள் கோயிலுக்கு ஏற்ற வகையில் வேறு கோபுரம் கட்டப் போகிறீர்களா?"

"நாங்களாகவே ஓரிடம் சொல்கிறோம். கோயிலுக்கு வெளியே இருக்கும் குளத்திற்குத் தெற்கே கொஞ்சம் திறந்தவெளி இருக்கிறது. அங்கே கட்டிக் கொள்ளுங்கள்."

இப்படி தீட்சிதர்களும் அந்தணர்களும் பலவாறு பேசிய போது அவர்களைத் தடுத்து நிறுத்திய மன்னன் "நேற்றிரவு என் மீதான இரண்டு கொலை முயற்சிகள் நடந்து தோற்றபின் சயன அறையை விட்டு வெளியேறிய நான் மாற்றுடை அணிந்து ஒதுவார் போல் வேடம் தரித்து ஆலயத்திற்குச் சென்று எல்லா இடங்களையும் பார்வையிட்டு ஒரு தீர்மானத்திற்கு வந்தேன். உங்கள் அம்பலவாணர் இருப்பது சிற்றம்பலம். நான் பெரு மாளுக்கு அமைக்கப் போவது தெற்றியம்பலம்* தான்" என்றான்.

எதிரே அமர்ந்திருந்தவர்களுக்கு ஒருவித மகிழ்ச்சி. திருப்தி.

"வெறும் தெற்றியம்பலந் தானே? இதற்காகவா இவ்வளவு ஆர்ப்பாட்டம்?" என்று நினைத்தார்கள்.

---

* திண்ணை அளவிலான சிறிய இடத்தில் அமைக்கப்படும் ஆலயம்.

பக்கம் 130 "தில்லைப் பெருங்கோயில் வரலாறு" By ந. வெள்ளை வாரணர்

"எல்லாம் சரி. பெருமாள் கோயிலை எந்த இடத்தில் அமைக்கப் போகிறீர்கள்? அதைச் சொல்லவே இல்லையே?" என்று கேட்டார் ஒரு தீட்சிதர்.

சொன்னான் மன்னன்.

அதைக் கேட்டு எதிரே அமர்ந்திருந்த அனைவரும் எழுந்து நின்று "இது அநீதி. இது அதர்மம். அநியாயம். எங்களை அவமானப்படுத்தும் செயல். சைவ சமயத்தையே இழிவு படுத்தும் காரியம். இது அம்பலவாணருக்கே அடுக்காது. இதை ஒரு நாளும் நாம் ஒப்ப மாட்டோம்" என்று ஒரு சேர குரல் கொடுத்தார்கள்.

தில்லை மூவாயிரவரின் தலைவரான சிவநாதர்

"தில்லை மூவாயிரவர் பூசைபுரி பாதம்
தேவருடனே இருவர் தேடரிய பாதம்
வல்லமா காளியோடு வாதுபுரி பாதம்
மாமுனிவற் காயமனை மார்பிலுதை பாதம்
சொல்லவே பரவையிடம் தூதுசென்ற பாதம்
தொல்புலி பதஞ்சலியும் தொண்டு செய்யும் பாதம்
அல்லலாம் ஏழ்பிறவி தீரநட மாடும்
ஆதிபுலி யூரார் திருஅம்பலவர் பாதம்*"

"கேட்டீர்களா மகாராஜா! தில்லைச் சிற்றம்பலத்திலே தீர்க்க நடமாடி அந்த அசைவினால் கோள்களை அசைக்கும் அம்பலவாணனின் திருப்பாதங்களின் உயர்வைக் கேட்டீர்களா? தேவர்கள் முதலாக பிரம்மனும் திருமாலும் கூடத் தேடிக் கண்டறியமாட்டாத திருவடி எங்கள் தில்லைக் கூத்தரசனின் திருவடி. அதற்கு நீங்கள் மாசு கற்பித்து விட்டீர்கள். சிதம்பர ரகசியமாக விளங்கும் அதிஷ்டானத்திற்கு அருகில் பெருமாளைப் பிரதிஷ்டை செய்தால் அது பெரும் பாவம். உங்கள் சாம்ராஜ்யம் அழியும்..." என்று சிவநாதர் உணர்ச்சி வசப்பட்டுச் சீறிக் கொண்டிருந்தபோது வெகுண்டெழுந்தான் மன்னன்.

அவர்கள் பாடிய பாடலில் "தேவருடனே இருவர் தேடரிய பாதம்" என்ற வார்த்தை அவனுக்கு மிகுந்த கோபத்தை மூட்டியது.

"இந்தச் சைவர்களுக்கு எப்போதும் அபவாதம்தான் ஆனந்தம். திருமாலை இகழ்வதுதான் இவர்கள் சிவனைப் போற்றும் லட்சணம். சிவனின் முடியை பிரம்மாவும் அடியைத் திருமாலும் தேடிச் சென்று காணாமல் திரும்பியதாகக் கட்டுக் கதையொன்றை காலம் காலமாகச் சொல்கிறார்கள். நான் பரமபாகவதன் என்பது தெரிந்தே வேண்டுமென்று இந்தப் பதிகத்தைப்

*தில்லைக் கலம்பகம் பாடல் எண் 18.

பாடுகிறார்கள். செல்வச் சிறப்பும் சமயத் திமிருமே இவர்களது சொத்துகள். குணங்கள். எவ்வளவு காலத்திற்குப் பேசினாலும் இவர்களை மாற்ற முடியாது. வேண்டுமென்றே பிடிவாதம் பிடிக்கிறவர்கள். பக்திமான்கள் என்று சொல்லிக் கொண்டு கத்தியை ஏந்திக் கொலை புரியவும் தயங்காதவர்கள். உடலால் மட்டும் அம்பலவாணனின் பக்கத்திலே இருக்கிறார்களே தவிர இவரது சிந்தனைகள் அவனிடம் இல்லை. அயல் விஷயத்தில்தான் இருக்கிறது. ஒரு சிறு எண்ணிக்கையில் இருந்து கொண்டு சிதம்பரத்தையே ஆட்டிப் படைக்கிறார்கள். இவர்களது கொட்டத்தை அடக்குவதற்காகவே பெருமாள் கோயிலைக் கட்டியாக வேண்டும்" என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்ட மன்னன்,

"போதும் உங்கள் பேச்சு. எப்படியெல்லாம் பேசக்கூடாதோ அப்படியெல்லாம் பேசுகிறீர்கள். உங்களையெல்லாம் வரவழைத்து இது விஷயமாக எதுவும் பேச வேண்டாம் என்று பலரும் என்னிடம் சொன்னார்கள். நான் தான் அதை ஏற்காமல் பக்தர்களிடமும் பூஜைகளைச் செய்யும் பெரியோர்களிடமும் அவசியம் பேசிப் பார்க்க வேண்டும் என்று சொல்லிவிட்டு இங்கே வந்தேன். என் கணக்கு தவறு என்பதை நான் தில்லையில் பிரவேசித்தது முதல் இப்போது வரை நிரூபித்து விட்டீர்கள். நான் என் வாழ்நாளில் பயனற்ற காரியம் ஒன்றைச் செய்தேன் என்றால் அது உங்களோடு இதுவரை பேசியது தான். நான் என் வாழ்க்கையில் நேரத்தை வீணடித்தேன் என்றால் அது உங்களோடு இந்தக் கணம் வரை பேசிக்கொண்டிருந்தது தான். நான் என் வாழ்க்கையில் என் பெருந் தன்மையைச் சேதாரமாக்கிக் கொண்டேன் என்றால் அது உங்களுக்கு முன்பாகத் தான். முன் வைத்த காலை பின் வைக்க மாட்டேன் என்று ஏற்கனவே நான் சொல்லியிருக்கிறேன். என்னைக் கொடுங்கோலன் என்று அழைத்தாலும் பரவாயில்லை. அதற்காகக் கவலைப்படப் போவதில்லை. நாளை மறுநாள் அமாவாசையன்று பெருமாள் கோயில் கட்டும் பணி துவங்கும்" என்று கர்ஜிக்கும் குரலில் சொன்னான்.

காடக முத்தரையரைப் பார்த்தான் மன்னன்.

"முத்தரையரே! நாம் இங்கே பிறப்பித்த தடை உத்தரவு நீடிக்கிறது. ஆலயத்தில் வழிபாட்டு நேரம் தவிர வேறு நேரங்களில் ஆலயத்திற்குள் யாரையும் அனுமதிக்க வேண்டாம். மற்ற நேரங்களில் அவரவர் தத்தம் இல்லங்களிலேயே தங்கியிருப்பது நல்லது. தேவைப்பட்டால் ஓரிருவர் வெளியே செல்லலாம். யாரும் எங்கேயும் கூடக் கூடாது. கூட்டங்களில் பேசக்கூடாது. நான் நேற்றிரவே காஞ்சிக்கு ஒற்றனை அனுப்பிவிட்டேன். அநேகமாக நாளைக்கு ஒரு படைப்பிரிவு வந்துவிடும் தில்லைக்கு.

அவர்கள் தில்லையைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருப்பார்கள். அமாவாசையன்று நான் சொன்ன இடத்தில் பெருமாள் கோயிலைக் கட்டும் பணியைத் துவக்க வேண்டும். யாராவது எதிர்ப்புக் காட்டினால் தாட்சண்யம் இன்றிச் சிறையில் அடைத்து விடுங்கள். சிற்பிகளை அரண்மனைக்கு வரச் சொல்கிறேன். கட்டு மானம் குறித்து அவர்களிடம் பேசிவிட்டால் பணியைத் துவக்கி விடலாம். பணி நான்கு மாதத்திற்குள் முடிய வேண்டும்" என்றான்.

தீட்சிதர்களும் அந்தணர்களும் திக்பிரமை பிடித்தவர்களைப் போலச் சிறிது நேரம் நின்றுவிட்டு பின் கலைந்தார்கள்.

அரண்மனைக்குச் சென்றபின் பேசமுற்பட்ட ராஜகுரு "உனது அணுகுமுறை சற்றுக் கடினமானது தான்" என்றார் லேசான வருத்தத்துடன்.

"சற்றுக் கடினமானது என்று சொல்லாதீர்கள் குருநாதரே. மிகவும் கடினமானது என்றே சொல்லலாம். குழந்தை அடம்பிடிக்கும்போது அதைநிறுத்ததாய்முதலில்கொஞ்சுகிறாள். அதில் பலன் இல்லாத போது இரண்டடி அடிக்கிறாள். இந்த விஷயமும் அப்படித்தான். அன்பு பயன்படாத போது அதிகாரம் தான் பயன்படும். தீட்சிதர்களிடம் பொறுமையாகத் தான் பேசினேன். எனது கோபங்களை மறைத்துக் கொண்டு தான் பேசினேன். அவர்கள் ஒரு கட்டத்திலும் இணக்கமாகப் பேச முயலவில்லை. கடைசியில் அந்த அந்தணர் அம்பலவாணரின் திருவடிப் பெருமைகளைப் பேசுவதாகக் கருதி திருமாலை இகழ்ந்தபோது அவர்களை ஒருக்காலும் திருத்த முடியாது என்ற முடிவுக்கு வந்து என் முடிவை அறிவித்தேன்" என்றான் மன்னன்.

"எனக்கு வருத்தமாக இருக்கிறது."

"ஏன்?"

"நடராஜர் கோயிலுக்குள் பெருமாள் கோயிலைக் கட்டும்படி உன்னிடம் வற்புறுத்தியவன் நான். கட்டாயப் படுத்தியவன் நான். அது இந்த அளவிற்குப் போகும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை."

"நீங்கள் வருத்தப்பட வேண்டியதில்லை குருநாதரே. தில்லை அம்பலவாணர் ஆலயத்தில் பெருமாள் கோயிலை அமைக்க வேண்டும்என்ற ஆசைஎனக்கேஇருந்தது உண்மைதான்.அது தனை லாக இருந்தது. நீங்கள் தீயாக மாற்றினீர்கள். அவ்வளவு தான்."

"நீ சமண பௌத்த மதங்களை ஒதுக்கியது பிரச்சனையாக வில்லை. அவர்கள் அடங்கிப் போய் விட்டார்கள். ஆனால் சைவர்கள் அப்படியல்ல. வைஷ்ணவர்களுக்கு இணையான வர்கள். இந்தப் பிரச்சனை அவர்களுக்கு மதப்பிரச்சனை

மட்டுமல்ல. கௌரவ பிரச்சனையாகவும் இருக்கும். தற்போது அடங்கியிருப்பது போல் இருந்தாலும் உள்ளுக்குள் கனன்று கொண்டே இருக்கும். மன்னனாக இருக்கும் நீ திருமாலை நேசிக்கிறவனாக இருக்கிறாய். ஆனால் சோழ மன்னர்கள் தற்போது சிற்றரசர்களாக இருந்தாலும் சிவ நேசர்களாகவே இருக்கிறார்கள். அவர்களை வைத்துக்கொண்டு தீட்சிதர்களும் தில்லை மூவாயிரவரும் எதிர்காலத்தில் பிரச்சனைகளைப் பெரிதாக்குவார்கள். தில்லையில் சைவ - வைஷ்ணவப் பூசல்கள் நடக்கும். அமைதி குலையும்."*

"பிற்காலத்தில் எது நடந்தாலும் எனக்குக் கவலையில்லை குருநாதரே. இந்தப் பல்லவ குலமே கூட அழிந்து போகலாம். காலத்தின் கோலங்கள் என்னவென்று நமக்குத் தெரியாது. நிகழ்காலத்தில் நான் செய்ய நினைப்பதை நிச்சயமாக நான் செய்வேன்."

"உன் உறுதி எனக்கு மகிழ்ச்சியானது மட்டுமல்ல கௌரவமானதும் கூட. நீ நீடூழி வாழ்வாயாக."

அன்று மதியம் சிற்பிகளும், கோயில் நிர்வாகிகளும், கருவூலக் காப்பாளருமாக வந்தார்கள்.

மன்னன் தான் ஏற்கனவே வரைந்து வைத்திருந்த சீலை வரைபடத்தைக் காட்டி தான் கட்டவிருக்கும் பெருமாள் கோயில் இடம்பெறும் பகுதியைச் சுட்டிக் காட்டி "பெருமாளுக்குக் கோயிலைக் கட்டுகிறேன் என்று சொல்லி நடராஜர் கோயிலில் பெரும் சேதாரங்களை ஏற்படுத்த நான் விரும்பவில்லை. ஆகவே தான் இந்த இடத்தைத் தேர்ந்தெடுத்தேன். இங்கே இருக்கிற உட்புற மதிலைமட்டும் கொஞ்சம் இடித்து வாயிற்படியாக மாற்றி விட்டால் உள்ளே இருக்கும் காலியிடத்தில் நாம் பெருமாளுக்கு மேற்கூரை அமைத்து உள்ளே பெருமாள் மூர்த்தத்தைப் பிரதிஷ்டை செய்கிறோம். நாம் பிரதிஷ்டை செய்யப்போவது பெருமாளின் மூல விக்ரகம் மற்றும் உற்சவ விக்ரகம் மட்டும் தான். காஞ்சியில் இருக்கும் கோயில்களைப் போல பலசன்னதிகளை அமைக்கப் போவதில்லை.** தெற்றியம்பலம்

---

* ராஜகுரு குறிப்பிட்டது போல் நடராஜர் கோயிலுக்குள் நந்திவர்மன் பெருமாள் கோயிலைக் கட்டி விட்டாலும் அங்கே அடிக்கடி சைவ-வைணவப் பூசல்கள் அரங்கேறிக் கொண்டே இருந்தன. அவற்றின் உச்ச கட்டமாக 11 ம் நூற்றாண்டில் சோழ நாட்டை ஆண்ட இரண்டாம் குலோத்துங்கன் நந்திவர்மன் பிரதிஷ்டை செய்த பெருமாள் மூர்த்தத்தைப் பெயர்த்துக் கடலில் எறிந்தான்.

** நந்திவர்மன் கட்டிய பெருமாள் கோயிலும் பெருமாள் மூர்த்தமும் இரண்டாம் குலோத்துங்கனால் அகற்றப்பட்டன. கி.பி. 1539ல் விஜயநகர மன்னர் அச்சுகராயர் அதே கோயிலை மீண்டும் கட்டிப் பெருமாள் சிலையைப் பிரதிஷ்டை செய்தார். 1597ல் செஞ்சியை ஆண்ட வையப்பகிருஷ்ணப்ப கொண்டம நாயக்கன் அக்கோயிலில் பற்பல சன்னதிகளை உருவாக்கிய போது தில்லையில் பற்பல போராட்டங்கள் நடந்தன. எனவே பெருமாள் கோயில் விரிவாக்கம் தொடரவில்லை.

என்று சொல்லத்தகுந்த அளவில் சிறிய கோயில் அமைப்பாக, சித்திரக் கூடமாக அமைத்தால் போதுமானது. பக்தர் ஒருவர் நின்றால் பெருமாளை வணங்கலாம். அதோடு அங்கிருந்தபடியே வடக்கில் திரும்பினால் நடராஜரையும் வணங்கலாம். ஆகவே தான் இந்த இடத்தில் பெருமாள் கோயிலை அமைக்கச் சொல்கிறேன்" என்றான்.

"தங்கள் கருத்து மிகவும் சரியானது மகாராஜா. இருக்கிற இடத்திலேயே சிறிய கோயிலை அமைக்கச் சொல்கிறீர்கள். உட்புறமதில் சுவரை மட்டும் சற்றே இடித்து வாயிலாக அமைக்கச் சொல்கிறீர்கள். இது அனைவருக்கும் ஏற்புடையதாக இருக்கும்" என்ற சொன்ன சிற்பிகள் "பெருமாள் மூர்த்தம் எப்படி இருக்க வேண்டும் மகாராஜா?" என்று கேட்டார்கள்.

"தில்லை கடலுக்கு அருகில் இருப்பதால் பாற்கடலில் பாம்பணையில் துயிலும் பெருமாளாகவே - பள்ளி கொண்ட பெருமாளாகவே அமைத்து விடலாம்" என்றான் மன்னன்.

அதையொட்டிக் காரியங்கள் வேகமாக நடந்தன. காஞ்சியிலிருந்து படைப்பிரிவு வந்து சேர்ந்த அதே நேரத்தில் தனக்கு விசுவாசமானவனும் திறமையானவனுமான தஞ்சாவூர்ச் சோழனான பராங்குசனை*, தில்லைநகர் சோழச் சிற்றரசனாக நியமித்தான் நந்திவர்மன். அமாவாசையன்று பெருமாள் கோயில் அமைக்கும் பணியும் துவங்கியது.

பராங்குசனைப் பார்த்த மன்னன் "பராங்குசா! நீ இங்கே எப்படி இருக்க வேண்டும் என்று சொல்ல வேண்டியதில்லை. நிலைமைக்கு ஏற்ப நடந்து கொள். நான் விதித்த தடையை நீக்க உனக்கு அதிகாரத்தை வழங்குகிறேன். ஆனால் யாருடைய சுதந்திரமும் பெருமாள் கோயில் கட்டுவதற்குத் தடையாக இருக்கக் கூடாது. அதுதான் முக்கியம். கோயில் கட்டி முடிக்கப்படும் வரை இங்கே கலகமோ கலவரமோ நடக்கக் கூடாது. நடக்க முயன்றால் அவர்கள் யாராக இருந்தாலும் கைது செய்து சிறையில் வைத்து விடு. இந்தப் பணியை உன்னை நம்பி விட்டு விட்டுப் போகிறேன்" என்றான்.

இதே நேரத்தில் காஞ்சியில் எதிர்பாராத நிகழ்ச்சி ஒன்று நடந்திருந்தது.

★★★

---

* பாளையச் செப்பேடு செய்தி. பக்கம் 26. சோழர் வரலாறு. By சி. கோவிந்த ராசனார் மற்றும் சி. கோ. தெய்வநாயகம்.



புருஷோத்தமன் திட்டம்

காஞ்சிக்குத் திரும்பும் வழியில் ராஜகுரு கேட்டார்.

"பராங்குசனை எதற்காகத் தில்லைக்குச் சிற்றரசனாக நியமித்தாய்? அவனது விசுவாசம் மட்டும் தான் காரணமா?"

"குருநாதரே! அது மட்டுமல்ல காரணம். அவன் சோழ வம்சத்தவன் என்றாலும் அபூர்வமாக வைணவப் பற்று கொண்டவன். தற்போதைய நிலையில் அங்கு அவன் இருந்தால் தான் கோயில் கட்டும் பணியை ஈடுபாட்டுடன் செய்ய முடியும். தீட்சிதர்களும் அந்தணர்களும் அவனை மயக்கவோ மனமாற்றம் செய்யவோ முடியாது. அவர்களைக் கைது செய்ய வேண்டிய நிலை வந்தால் கைது செய்வதற்குத் தயங்கமாட்டான். இது நாள்வரை இருந்த சோழமன்னன் சைவ மதத்தை ஆதரிப்பவன். இங்கே பிரச்சனை வந்தால் முழுமனதோடு அடக்க முற்படமாட்டான். நமக்கு அவன் எழுதிய கடிதத்தைத் தான் பார்த்தோமே?" என்றான் மன்னன்.

"தீர்க்கதரிசி நீ நந்திவர்மா, அதனால்தான் உன் ஆட்சி ஐம்பது ஆண்டிற்கும் மேலாக நீடிக்கிறது. வேறெந்தப் பல்லவ மன்னனுக்கும் கிடைக்காத பாக்கியம் இது. அதே சமயம் சிவன் கோயிலுக்குள் பெருமாள் கோயிலை அமைப்பதற்கு வரலாறு உன்னைக் குறை கூறும்."

"கூறட்டுமே! மகேந்திரவர்மர் மதம் மாறாத போதும் மாறிய போதும் எப்பெப்படி நடந்து கொண்டார் என்பதை வரலாறு பதிவு செய்து வைத்திருக்கிறது. ஆனால் பல்லவர் ஆட்சியில் சகலகலா வல்லவராகத் திகழ்ந்த ஒரே மாமன்னர் அவர்தான். அதற்காக வரலாறு அவரைப் போற்றவில்லையா? காலம் அவரை நினைவு வைத்திருக்கவில்லையா? மன்னன் என்றாலும் மனிதன் என்றாலும் அவனுக்கு ஏற்றமும் உண்டு. இறக்கமும் உண்டு. புகழும் உண்டு. இகழும் உண்டு. வெற்றியும் உண்டு. தோல்வியும் உண்டு. கவலைப்படுவதற்கு என்ன இருக்கிறது குருநாதரே?" என்றான் மன்னன்.

காஞ்சிக்கச் சென்றபின் மகாமந்திரி தில்லை விவகாரங்களை விசாரித்தார்.

மன்னன் மீது நடந்த கொலை முயற்சியைக் கேட்டு "தில்லை சைவர்களுக்கு சைவத்தின் மீது இருக்கும் விசுவாசம் மிகவும் பெரியது. அரியது" என்றார் மகாமந்திரி.

கடைசியில் பெருமாள் கோயிலைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்து வந்துவிட்டு வந்ததைக் கூறியபோது "இதை உங்கள் வெற்றி என்று கருதுகிறீர்களா?" என்று கேட்டார் மகாமந்திரி.

"மூவராயிரவர் மற்றும் தீட்சிதர்களின் ஒப்புதலோடு நடந்திருந்தால் வெற்றியாகக் கருதியிருப்பேன். அவர்களை எதிர்த்துக் கொண்டு ஆரம்பித்திருப்பதால் தோல்வி என்று தான் கருதுகிறேன்" என்றான் மன்னன்.

"ராஜ குருவுக்கு இதில் மகிழ்ச்சியா மகாராஜா?"

"அவர் வெறுப்பு விருப்புக்கு அப்பாற்பட்டவர்" என்றான் மன்னன்.

தில்லை விவகாரத்தை மறந்து விட்டு காஞ்சியில் வளர்ந்து வந்த விண்ணகரத்தின் மீது கவனத்தைச் செலுத்தினான் மன்னன்.

அங்கே செம்போத்துப் பறவைகள் கூட்டம் கூட்டமாக விண்ணகரத்தின் மீது பறப்பதும், கோயில் பகுதிகளில் ஆங்காங்கே அமர்வதும், சிவப்புநிறமான பழுத்த அத்திப் பழங்களை அலகுகளில் பற்றிவந்து போடுவதும், அதை மக்கள் தெய்வீகப் பிரசாதங்களாகக் கருதி உண்பதும் மன்னனுக்கு விரும்பத்தக்கக் காட்சிகளாக இருந்தன.

மக்களும் சரி, சிற்பிகளும் சரி, பணியாளர்களும் சரி அவற்றை விரட்ட முற்படவில்லை. அவர்களை நோக்கி நெருங்கி வந்த போது அவர்கள் தடவிக் கொடுத்தார்கள். பேசுவது போல் பேசினார்கள். அவை கீச் கீச்சென்று கத்தியபடி பறந்து வானத்திற்குச் சென்றன. இரவு நேரத்தைத் தவிர இதர நேரங்களில் அவை விண்ணகரத்தைச் சுற்றியே பறந்த வண்ணம் இருந்தன.

திருமுக்கூடலில் நிர்மாணிக்கப்பட்ட தெய்வ விக்கிரங்கள் மூன்றும் கருவறைக்குக் கொண்டு வரப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டன. அமர்ந்த கோலத்தில்அமைக்கப்பட்டிருந்த பெருமாள் சிலை தரைத் தளத்திலும், சயன கோலத்தில் அமைக்கப்பட்டிருந்த சிலை முதல் தளத்திலும், நின்ற கோலத்தில் அமைக்கப்பட்டிருந்த பெருமாள் சிலை இரண்டாவது தளத்திலும் பிரதிஷ்டை செய்யப்பட்டன. மூன்றாவது தளத்தில்


The Vaikunta Perumal Temple
at
Kanchipuram

இருந்த அறை காலியாகவே விடப்பட்டது. அதற்கென்ன காரணம் என்பதை மன்னன் யாரிடமும் சொல்லவில்லை.

பிரதிஷ்டை செய்த பெருமாளுக்குச் சம்ப்ரோக்ஷணம் (குடமுழக்கு) செய்வதற்கான நாளை ஞானகுரு குறித்துக் கொடுத்தார். வேதியர்கள் சரிபார்த்துச் சம்மதித்தார்கள். குறித்த நாளில் குடமுழுக்கு நடப்பதற்கான யாகசாலைகளை அமைக்கும் பொறுப்பை அமிர்த கணத்தாரிடம் ஒப்படைத்தான் மன்னன்.

பெருமாள் மூர்த்தங்களைப் பிரதிஷ்டை செய்த நாளிலிருந்து மன்னனுக்கு தினமும் ஏதாவதொரு கனவு வந்து கொண்டிருந்தது. அந்தக் கனவில் யாரோ ஒருவர் தோன்றி அவனுக்கு உபதேசித்து வந்தார். அவர் யார் என்பதும் தெரியவில்லை. என்ன உபதேசிக்கிறார் என்பதும் புரியவில்லை.


ஞானகுருவிடம் வினவினான் மன்னன்.

"நந்திவர்மா! எனக்கும் அது போன்ற காட்சிகள் வருகின்றன. ஆனால் அதற்கும் நீ கண்ட காட்சிகளுக்கும் சம்பந்தம் உண்டா. என்பது தெரியவில்லை. முன்பு நான் சொன்னது போல் புதிய ஞானகுரு உனக்கு விரைவிலேயே கிடைப்பார். தற்போது அவர் இமாலயத்திலிருந்து தெற்கே வந்து கொண்டிருக்கிறார். பெருமாள் கோயில் ஒவ்வொன்றுக்கும் சென்று பெருமானைப் பாடி மங்களா சாசனம் செய்து வருகிறார். அவர் காஞ்சிக்கு வரும்போது சிறப்பாக வரவேற்று உபசரி. அவர் உனக்குப் பலவிதங்களிலும் வழிகாட்டுவார். காஞ்சியில் உள்ள அனைத்துப் பெருமாள் கோயில்களுக்கும் அவரை அழைத்துச் சென்று மங்களாசாசனம் செய்யும்படிக் கேட்டுக்கொள். சம்ப்ரோக்ஷணம் நடைபெறவிருக்கும் விண்ணகரமும் அவரால் பாடல் பெறவேண்டும். விண்ணகர சம்ப்ரோக்ஷணம் முடிந்து நாற்பது நாட்களுக்கான மண்டலாபிஷேகமும் முடிந்த பின் நான் இந்தப் பூதஉடலை விட்டு விடுவேன். எனது உடலைப் பாலாற்றங்கரையில் அடக்கம் செய்து விடு" என்றார் ஞானகுரு.

"தங்கள் அந்திமம் வந்து விட்டதாக உணர்கிறீர்களா ஞானகுரு அவர்களே?" என்று கேட்டான் மன்னன்.

"ஆம் மன்னவா. ஞானிகளுக்கு இந்த உடல் ஒரு சுமை. இந்த உடலோடு வாழ அவர்கள் விரும்புவதில்லை. உடலை நோயாகவே கருதுகிறார்கள். பிராரப்த கர்மத்தின் காரணத்தால் ஞானிகள் கொஞ்சகாலத்திற்கு உடலைச் சுமந்து விட்டு விடுதலை பெறுகிறார்கள். அவர்களது ஆத்மா அழியாமல் நிலைத்து நின்று நித்யானந்த நிலையை அடைகிறது" என்று சொன்னார்

ஞானகுரு மன்னனிடம் ஒரு விஷயத்தைக் கேட்டபோது மன்னன் வியந்தான். அவர் கூறியபடி செய்வதாகவே சொன்னான்.



இரண்டு நாட்கள் கழித்து விண்ணகரத்தின் மேலே அவனும் மக்களும் கண்டகாட்சி பரவசம் ஊட்டுவதாக இருந்தது. வானத்தில் கருடப் பறவையொன்று பறக்க அதன்மீது காக்கை ஒன்று சிறகை விரிந்து அமர்ந்திருந்தது. காக்கையை கருடன் விலக்க வில்லை. அதைச் சுமந்தபடியே விண்ணகரத்தைச் சுற்றிப் பறந்த விதமானது அரிய காட்சியாகவும் அற்புதக் காட்சியாகவும் இருந்தது.

மக்கள் "கோவிந்தா! கோவிந்தா" என்றார்கள்.

"மகாராஜா! மகாராஜா" என்றார்கள்.

காஞ்சியில் இன்னும் என்னென்ன அதிசயங்கள் நடக்குமோ என்று பிரமித்தார்கள்.

★

கைலாசநாதர் கோயிலையொட்டிய ஓடையின் கரையில் புருஷோத்தமனும் அவனைச் சேர்ந்த அசடன், அபயன், அலசன், அதமன் மற்றும் அவயன் ஆகியோர் அமர்ந்திருந்தார்கள்.

கைலாசநாதர் கோயில் பிரசித்தமாக இருந்த காரணத்தால் கோயில் வளாகத்தில் கூட்டம் நிரம்பி வழிந்தது. கூட்டத்தினரில் சிலர் தரிசனத்தை முடித்துக்கொண்டு கோயில் வளாகத்தில் அமர முடியாமல் சற்றுத் தள்ளியிருந்த ஓடைக்கரையில் அமர்ந்து ஆசுவாசப்படுத்திக் கொண்டார்கள். ஓடை நீரை எடுத்து, கைலாசநாதர் கோயில் பெருமானுக்கு அபிஷேகம் செய்து வந்தபடியால் நீர் தூய்மையாகக் கருதப்பட்டது. ஓடை நீரை அசுத்தப்படுத்த யாரும் முற்படவில்லை.

மாலை நேரமாக இருந்தபடியால் மேலைவானத்தில் இறங்கிக் கொண்டிருந்த கதிரவன் காதலிக்குக் காதலன் கொடுக்கும் பறக்கும் முத்தத்தைப் போல தனது வெள்ளிக் கதிர்களை கைலாசநாதர் கோயில் விதானத்தில் பாய்ச்சியபடியால் ஆலய விதானமானது பொற்கலசம் போலப் பிரகாசித்தது. அந்த அற்புத அழகைக் கண்டு சிரிப்பது போல ஆலய விதானத்தில் தங்கியிருந்த புறாக்கள் சிறகுகளை விரித்துப் பறந்தன.

ஆந்தையொன்று தலவிருட்சத்தில் அமர்ந்து கொண்டு திடீரென குரல்கொடுத்த விதமானது 'இரவுப்பொழுது துவங்கப் போகிறது. அது எங்கள் நேரம். அடங்குங்கள்' என்று எச்சரிப்பது போல இருந்தது. ஆலயத்திற்கு வருகை தந்த மக்களில் பலர் அந்த ஆந்தையின் அபசகுன இரைச்சலை உள்ளுக்குள் வெறுத்துக் கொண்டார்கள்.

அந்தப் பகுதி முழுவதும் ஆரவாரமாய் இருந்தது.

ஓடைக் கரையில் இருந்த புருஷோத்தமன் தனது சகாக்கள் ஐவருக்கும் மாம்பழத்தைக் கொடுத்து "உண்ணுங்கள்" என்றான்.

அதை வாங்கிக் கொண்ட அவர்கள் "ஐயா! இது என்ன பழம்?" என்று கேட்டார்கள்.

"ஞானப்பழம்" என்றான் புருஷோத்தமன்.

"ஐயா! ஞானப்பழத்திற்குக் கொட்டை உண்டா?" என்று கேட்டார்கள்.

"உடலுக்குள் உயிர் இருப்பது போல் எல்லாப் பழத்திற் குள்ளும் கொட்டை இருக்கிறது" என்றான் புருஷோத்தமன்.

"ஐயா! விண்ணகரத்தைச் சுற்றிப் பறக்கும் உங்கள் பறவைகள் கொண்டு வந்து போடும் பழங்களில் கொட்டை இல்லை" என்றான் அபயன்.

"கண்ணுக்குப் புலப்படாத பல விஷயங்கள் உண்டு. அதனால் அவை இல்லை என்று ஆகிவிடாது. கோட்டையைப் பற்றி பேசவேண்டிய நாம் கொட்டையைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பது அறிவீனம். முதலில் பழத்தை உண்ணுங்கள். மிகவும் இனிக்கும். கொல்லிமாலைச் சாரலில் கிடைக்கும் இப்பழங்களின் இனிப்பிற்கு இணை எங்கும் கிடையாது" என்று சொன்ன புருஷோத்தமன் "இந்தக் கைலாசநாதர் கோயில் எவ்வளவு அழகாக இருக்கிறது பார்த்தீர்களா? மக்கள் எப்படித் திரளாக வருகிறார்கள் பார்த்தீர்களா? ஆரவாரமும் குதூகலமும் கொண்டாடிக் கட்டிப் பறப்பதைப் பார்த்தீர்களா?" என்று கேட்டான்.

"எல்லோருக்கும் தெரிந்த விஷயம் தானே?" என்றான் அசலன்.

"இக்கோயிலின் சிறப்பு, இக்கோயிலில் கூடும் கூட்டம், இங்கே காணப்படும் குதூகலம், ஆரவாரம் ஆகிய வற்றையெல்லாம் கண்டு பொறாமையில் துடித்தான் ஒருவன். இங்கே இருப்பதையெல்லாம் வேறொரு இடத்திற்கு மாற்ற வேண்டும் என்று தீர்மானித்தான். இக்கோயிலுக்கு நேரெதிராகக் கிழக்கில் ஓர் ஆலயத்தை நிர்மாணிக்க, ஆரம்பித்தான். இங்கே கிழக்கு நோக்கிக் கா'ட்சித் தரும் சிவபெருமானுக்கு தரிசனம் தருவது போல் அந்த ஆலயத்தில் பெருமாளை பிரதிஷ்டை செய்திருக்கிறான். நான் எதைச் சொல்கிறேன் யாரைச் சொல்கிறேன் என்பது புரிகிறதா?" என்ற கேட்டான் புருஷோத்தமன்.

"விண்ணகரத்தையும் நந்திவர்மனையும் தானே சொல் கிறீர்கள்? அந்த ஆலயத்திற்குக் குடமுழுக்கு நடைபெற்றவுடன் இக்கைலாசநாதர் கோயிலுக்கு உள்ள சிறப்பு அங்கே போய்விடும். இங்கே கூடும் கூட்டம் அங்கே போய் விடும். இங்கே உள்ள குதூகலமும் ஆரவாரமும் அங்கே போய் விடும். அப்படித்தானே ஐயா? நந்திவர்மன் விரும்புவதும் அதைத்தானே?" என்று கேட்டான் அவயன். "ஆனால் நீங்கள் வரவழைத்த அதிசயப் பறவைகளால் குடமுழுக்கிற்கு முன்பாகவே கூடத் தொடங்கி விட்டதே கூட்டம்? நேற்று கருடப்பறவையின் மீது காகம் அமர்ந்திருந்த காட்சி எல்லோரையும் அசத்தி விட்டது. அதுவும் உங்கள் கைங்கர்யம் தானா?" என்று கேட்டான் அசலன்.

புருஷோத்தமன் சிரித்தான்.

"எல்லாமே என் திருவிளையாடல் தான். மக்கள் முதல் மன்னன் வரை ரசிக்கிறார்கள். பரவசப்படுகிறார்கள். உண்மைதானே?" என்று கேட்டான் புருஷோத்தமன்.

"எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை. பறவைகளை அனுப்பினீர்கள். மக்கள் அவற்றை ரசிக்கும்படிச் செய்தீர்கள். பரவசப்படும்படிச் செய்தீர்கள். அவற்றைக் கொண்டு விண்ணகரத்தை எப்படி அழிப்பீர்கள்?" என்று கேட்டான் அபயன்.

"குடமுழுக்கு விழா ஆரம்பிக்கும். யாக சாலைகளில் ஹோமம் நடக்கும். மன்னர் முதலானவர்கள் விமானத்தின் மீது ஏறுவார்கள். அப்போது என் பறவைகள் அங்கே வரும். அவற்றின் அலகுகளில் பழங்கள் இருக்காது. கந்தகக் குண்டுகள் இருக்கும். யாகசாலைகளின் மீது பறந்து கந்தகக் குண்டுகளை ஹோம குண்டத்தில் போடும். தீயில் விழுந்ததும் அவை வெடிக்கும்.

ஒரே நேரத்தில் பல குண்டுகள் வெடித்தால் கோயில் பகுதிகள் வெடித்துச் சிதறும். மன்னனின் கனவுக் கோயில் சிதையும். அவனும் கீழே விழுந்து இடிபாடுகளில் சிக்கி இறப்பான். மக்கள் அலறி ஓடுவார்கள். எங்கும் குழப்பம் உண்டாகும். என்ன நடந்தது எப்படி நடந்தது என்று மற்றவர்கள் அறிவதற்குள் ஆலயத்திற்குள் இருந்தவர்கள் கூற்றுவன் கோட்டையை அடைந்திருப்பார்கள். சிற்பக் களஞ்சியமான கோயில் உடைந்து சிதைந்து பாறைக் குவியலாக நிற்கும். எப்படி என் திட்டம்?" என்று கேட்டான் புருஷோத்தமன்.

"மிகவும் பயங்கரம் ஐயா. இப்படியொரு கோரத்தைப் பறவைகளால் சிருஷ்டிக்க முடியும் என்பதைக் கனவிலும் காணமுடியாது. இது நடக்குமா?" என்று கேட்டான் அசலன்.

"நடக்கும் என்றால் நடக்கும். நடக்காது என்றால் நடக்காது. நான் செய்கிற காரியம் எள்ளை முள்ளின் மீது போடுவதல்ல. மலையையே தகர்க்கும் மகத்தான காரியம். அதைச் சரியாகத் திட்டமிடாமலா செய்வேன்? மனிதர்கள் வேண்டுமானால் வாக்கு மாறலாம். செயல்களில் பிழை செய்யலாம். பறவைகள் அப்படியல்ல. அவை பிறழாது. தவறு செய்யாது. பழக்கப்பட்ட விதம் அப்படி. சொன்னதைச் செய்யும். குடமுழுக்கு விழாவிற்கு மூன்று நாட்களே இருக்கின்றன. நீங்கள் எல்லோரும் வான வேடிக்கையைக் காணத் தயாராகுங்கள். விண்ணகரத்தை முழுமையாகக் காணவேண்டுமென்றால் இப்போதே பார்த்துக்கொள்ளுங்கள். இல்லையென்றால் கற்குவியல்களைத் தான் காணவேண்டும். மன்னனைத் தரிசிப்பதாக இருந்தாலும் மூன்று நாட்களுக்குள் முடித்துக் கொள்ளுங்கள். இல்லையென்றால் அவனது சடலத்தைக் கூட முழுமையாகக் காண முடியாது. இனி நாம் சந்திக்கப் போவது மிகப் பெரிய சம்பவம் நடந்ததற்குப் பிறகு தான். இப்போது புறப்படுங்கள். இருள் சூழும் நேரமாகி விட்டது" என்று கூறி ஐவரையும் அனுப்பிவைத்த புருஷோத்தமன் "இந்தச் சமணத்துறவி துலாபாரர் ஏன் என்னை வந்து சந்திக்க வில்லை? சந்திக்க வேண்டிய நாளும் வந்து நாட்கள் நாலும் கடந்து விட்டனவே! ஏன் அவர் வரவில்லை? அவர் வந்தால் நான் திட்டமிட்டிருக்கும் இன்னொன்றையும் குடமுழுக்கின் போது நடத்திவிடலாமே?" என்று நினைத்தான்.

அவன் நினைத்த அதே நேரத்தில் துறவி துலாபாரர் கணிகையின் இல்லத்திற்குச் சென்று கதவைத் தட்டினார்.

★★★



துறவும் உறவும்

கதவைத் திறந்தாள் கணிகை பவானி.

“நீங்களா?” என்று கேட்டாள்.

“வேறு யாரையாவது எதிர்பார்த்தாயா?” என்று கேட்டான் துறவி.

“இந்திரனிலிருந்து மன்மதன் வரை யார் வந்தாலும் வரவேற்க மாட்டேன் என்று சொன்னேனே, மறந்து விட்டீர்களா?” என்று கேட்டாள் பவானி.

“எனக்கு ஞாபகம் இருக்கிறது. உனக்கு இருக்கிறதா?”

“முதலில் உள்ளே வாருங்கள். உள்ளே வரும்போது நம்பிக்கையுடன் வாருங்கள். சந்தேகத்தோடு இந்த இல்லத்திற்கு வந்தால் இனிப்புகள் கசக்கும். துவர்ப்புகள் புளிக்கும். குளிர்ந்தவை சுடும். சூடானவை பனிக்கும்.”

“உன்னிடம் எல்லாச் சுவையும் உண்டு என்கிறாய்” என்று கூறியபடி உள்ளே வந்து கட்டிலில் அமர்ந்தார் துறவி.

“எதற்காக மொட்டை அடித்துக் கொண்டீர்கள்? முடி நன்றாக வளர்ந்து கொண்டு வந்ததே” என்று கேட்டாள் பவானி.

“உனக்கு முடி தான் பிடிக்குமா? நான் செல்கிறேன்” என்று சொல்லி துறவி எழுந்த போது உட்காருங்கள் அடிகளே. எனக்கு இளங்காளைகளைப் பிடிக்காது. துறவிகளைத்தான் பிடிக்கும். காகபட்ச குழலைக் கொண்ட இளைஞர்களைத் தான் பிடிக்காது. முடியில்லாத மொட்டைத் தலைத் துறவிகளைத் தான் பிடிக்கும். அவ்வளவு ஏன்? உங்களை மட்டும் பிடிக்கும். போதுமா? என்றாள் பவானி.

“பெண்ணே! ஊருக்கு இன்னும் நான் துறவியாகத்தான் இருக்கிறேன். திருப்பருத்திக் குன்றத் துறவிகளுக்கு நான் தலைவனாகத் தான் இருக்கிறேன். ஆகவே எனக்குக் காவி உடை முக்கியம். மொட்டைத் தலை முக்கியம். அதை விடு. நான் கேட்கும்

கேள்விக்குப் பதில் சொல். சொர்க்கம் எங்கே இருக்கிறது?" என்று கேட்டார் துறவி.

"சொர்க்கத்திற்கு வந்து விட்டு அது எங்கே என்று கேட்கிறீர்களே?"

"தவறான பதில். சரியான பதிலைச் சொல்."

"நரகத்திற்குப் பக்கத்தில் சொர்க்கம் இருப்பதாகச் சொல்கிறார்கள்."

"நரகம் எங்கே இருக்கிறது?"

"வானுலகத்தில் இருக்கிறது என்று சொல்கிறார்கள்."

"அதற்குப் பக்கத்தில் சொர்க்கமா?"

"ஆமாம்."

"அங்கே போய் விட்டு வந்தவர்கள் தான் அதைச் சொன்னார்களா?"

"இப்படிக் கேட்டால் எப்படி? சொல்பவர்கள் சொல்வதைக் கேட்டுவிட்டுத்தான் சொல்கிறேன்."

"கட்டுக் கதை. பொய்க் கதை. மக்களை ஏமாற்றுவதற்காக பிற மதத்தினர் கூறிவரும் கற்பனைக் கதை. உண்மையான சொர்க்கம் எங்கே இருக்கிறது தெரியுமா?"

"எங்கே இருக்கிறது?"

சொன்னார் அடிகள்.

"சீ! இதென்ன பேச்சு! வெட்கங் கெட்டப் பேச்சு?" என்று அசதியடைந்தாள் பவானி.

"நீ வெட்கமடைய என்ன இருக்கிறது? நான் சொன்னது உண்மையா பொய்யா என்று உனக்குத் தெரியவில்லையா? இது தெரியாமல் நீ இவ்வளவு காலமாகக் கணிகையாக இருப்பது வெட்கக் கேடு."

"எனக்குத் தெரியாமலொன்றும் இல்லை. நன்றாகத் தெரியும். ஆனால் நீங்கள் சொன்ன விதம் தான் பயங்கரமாக இருக்கிறது. நாற்பது வருடகாலம் துறவியாய் இருந்த நீங்கள் இப்படிப் பேசுவது அதிசயம்."

"பவானி. விவரம் தெரியாமல் பேசுகிறாய். காம சாஸ்திரங்களை எழுதி வைத்தவர்கள் கணிகைகளோ கட்டிளங் காளைகளோ இல்லை. பழுத்த முனிவர்கள். அவர்களெல்லாம் காமக் களியாட்டங்களை நடத்தி விட்டுக் காம சாஸ்திரங்களை

எழுதவில்லை. தவத்தால் பெற்ற ஞானத்தால் எல்லாவற்றையும் அறிந்தார்கள். எதையும் அனுபவிக்காமல் அனுபவ சாலிகளைப் போல எழுதி வைத்தார்கள். காமத்தைப் பற்றி அவர்களை விட ஆழமாகவும் அகலமாகவும் இன்று வரை வேறு யாரும் எழுதவில்லை. நான் துறவியாக இருந்தவன். ஆகவே ஒளிவுமறைவு இல்லாமல் சொல்கிறேன். இப்போது சொல். சொர்க்கம் எங்கே இருக்கிறது?"

"பெண்களின் கால்களுக்கிடையில்"

"இதைச் சொல்ல வெட்கம் எதற்கு? தயக்கம் எதற்கு? ஆயாசம் எதற்கு? இப்படிப்பட்ட சொர்க்கங்கள் உலகில் கோடிக்கணக்காக இருக்கின்றன. இதை விட்டு அவை வானுலகத்தில் இருப்பதாகச் சொல்லி ஏமாற்றுபவர்களைப் பற்றி என்ன சொல்வது?"

"இப்போது எதற்கு இந்த வியாக்கியானம்? இதற்காகவா இங்கு வந்தீர்கள்?" என்று கேட்டாள் பவானி அவரது பேச்சு பிடிக்காததால்.

துறவி துலாபாரர் அதற்குப் பதில் சொல்லவில்லை.

"பவானி! நீ சொன்னாயே ஓர் உபாயம், அது கைகூட வில்லை."

"எதைச் சொல்கிறீர்கள்?"

"இங்கே உள்ள துறவிகளை வீரர்களாக்கி ஒரு படைப் பிரிவாக மாற்றி பல்லவர் படைக்குள்ளே சேர்க்கச் சொன்னாய் அல்லவா? பல்லவர் படைக்குள் இருந்து பிரளயங்களை உருவாக்குங்கள் என்றாய் அல்லவா?"

"ஆமாம்."

"அந்த யோசனையை ஒரு துறவியும் ஏற்கவில்லை. அவர்களுக்கு அது பிடிக்கவில்லையாம். மொட்டை அடித்துக் கொண்டு நோகாமல் உட்கார்ந்து வேளா வேளைக்குச் சாப்பிட்டுக் கொண்டிருந்தால் போதும் என்றிருக்கிறது அவர்களுக்கு. அவர்களுக்கு மதத்தைப் பற்றிய கவலை இல்லை. நொடிந்து போன மதத்தை இடிந்து போன சுவராக நினைத்தாலும் அச்சுவற்றை மீண்டும் எழுப்பும் முனைப்பு அவர்களிடம் சிறிதும் இல்லை. மன்னனிடம் பிச்சை எடுத்தாவது வாழ விரும்புகிறார்களே தவிர சாகசங்களைச் செய்யத் தயாராக இல்லை. கர்நாடக நாட்டிலும் மகதநாட்டிலும் சமணர்கள் வீரத் துறவிகளாக இருந்தார்கள். வீரத்தால் மதத்தை வளர்த்தார்கள். சகிப்புத் தன்மையும் சமத்துவமும் சமணத்தின் அடி வேர்கள் என்பதை உணர்ந்திருந்தாலும் மதத்திற்கு ஆபத்து வந்த போது அவற்றையெல்லாம் ஒதுக்கி

வைத்துவிட்டு வீரத்தைக் கையில் ஏந்தினார்கள். ஆபத்தை விளைவிக்க முயன்றவர்களை அகற்றினார்கள். சுவர் இருந்தால் தானே சித்திரம் வரை முடியும்? சுவை இருந்தால் தானே உணவை உண்ண முடியும்? அதை உணர்ந்து நடந்தார்கள் அவர்கள். பாரத நாட்டில் இருக்கும் சிறந்த சமணப் பீடங்களில் ஒன்றான இத்திருப்பருத்திக் குன்றத்தில் பல்லவர்களால் சமணத்திற்கு ஆபத்து வந்திருக்கும் போது சமணர்கள் வீரத்தைக் காட்டாமல் சோரம் போய் இருக்கிறார்கள். தங்களைத் தாமே ஓரம் கட்டி ஒதுங்கியிருக்கிறார்கள். ஆட்சியாளர்கள் தரப்பிலிருந்து பேரம் ஏதாகிலும் நடக்குமா என்று காத்திருக்கிறார்கள். தங்களை அழுத்தும் பாரத்தை நீக்காமல் மழுங்கியே இருக்கிறார்கள். மயங்கியே இருக்கிறார்கள். பேச்சிலும் காரமில்லை. செயலிலும் காரமில்லை. பரிகாரங்களைக் காணாமல் பலகாரங்களை உண்டு உருண்டு கிடக்கிறார்கள். இவர்களை வைத்துக் கொண்டு என்ன செய்ய முடியும் நான்?"

இல்லத்திற்குள் நுழைந்ததும் காமத்தைப் பற்றியும் சொர்க்கத்தைப் பற்றியும் தேங்காயை உடைப்பது போல் வெளிப்படையாகப் பேசிய துறவி தற்போது அவற்றின் சாயல் கூட இல்லாமல் வருத்தத்துடன் தனது சமயத்தின் நிலை பற்றிப் பேசியதைக் கண்டு அவர்மீது அனுதாபம் கொண்ட பவானி "திருப்பருத்திக் குன்றத்துச் சமணர்கள் முடிவாக என்ன தான் சொல்கிறார்கள்?" என்று கேட்டாள்.

"பல்லவ மன்னன் நந்திவர்மனிடம் போய்ப் பிச்சை எடுக்கலாம் என்கிறார்கள்."

"அது தான் சாதகம் என்றால் நீங்கள் ஏன் தயங்க வேண்டும்?"

"உன் இல்லத்திற்கு வந்து போவதால் என்னைப் பிச்சைக்காரன் என்று நினைத்து விட்டாயா? சூடு சொரணையற்றவன் என்று முடிவு செய்து விட்டாயா? கர்நாடகச் சமணர்கள் பிச்சை யெடுத்து சமணத்தைக் காப்பாற்ற வில்லை. வாளை எடுத்துக் காப்பாற்றினார்கள். நான் மட்டும் மன்னனின் தாளில் விழுந்து பிச்சை கேட்க வேண்டுமா? பவானி! இன்றைக்குத் தமிழகத்தில் இருக்கும் சைவ - வைணவ மதங்களுக்கு முன் கால் பதித்தவை தான் சமண - பௌத்த மதங்கள். ராஜ மதங்களாக விளங்கியவை. மத்தகஜங்களாகத் திகழ்ந்தவை. சைவ - வைணவ மதங்கள் நரிகளைப் போல உலவுகின்றன. நரிகளுக்கு முன்னால் யானை கும்பிடு போடுமா? அர்த்தமற்று இருக்கிறது உன் பேச்சு."

"சமணர்களாகிய நீங்கள் தான் தோளை நிமிர்த்திப் பேசுகிறீர்கள். பௌத்தர்கள் அப்படி இல்லையே!"

"அவர்களைப் பற்றி நான் பேசுவதற்கு விரும்பவில்லை. இங்குள்ள சமணர்களே எனக்கு இணக்கமாக இல்லாத போது பௌத்தர்களைப் பற்றி எப்படிக் கவலைப்பட முடியும்? அவர்கள் என்ன செய்கிறார்களோ செய்து கொள்ளட்டும். எங்கள் வேலையை நாங்கள் பார்த்தால் போதும்."

"இங்கே உள்ள சமணர்கள் உங்களுக்கு இணக்கமாக இல்லாத போது என்ன செய்வதாக உத்தேசம்?"

"எனக்கு இரண்டு காரியங்கள் நடக்க வேண்டும். இரண்டிற்கும் உன் ஒத்துழைப்பு தேவை. உன் அர்ப்பணிப்பு தேவை."

"அது நிச்சயமாக உண்டு."

"நன்றாக யோசித்து விட்டுச் சொல் பவானி. ஒப்புக் கொண்டு பிறகு பின் வாங்கக் கூடாது."

"என்மீது உங்களுக்கு நம்பிக்கையில்லையா?"

"வெறும் நம்பிக்கை போதாது. வைராக்கியம் வேண்டும். மன உறுதி வேண்டும். தியாக மனப்பான்மை வேண்டும்."

"எதற்காகப் பீடிகைகள் போடுகிறீர்கள்? விஷயத்தைச் சொல்லுங்கள்."

"முதல் விஷயத்தைக் கேள். நானிங்கு வரும்போதும் இங்கிருந்த செல்லும் போதும் அண்டை வீட்டு இளம் பெண்கள் ஏங்குகிறார்கள். பொறாமைப் படுகிறார்கள். உள்ளுக்குள் சாபம் போடுகிறார்களோ என்னவோ! என்னால் எல்லோரது ஏக்கங்களையும் தாபங்களையும் தீர்க்க முடியாது. யாராவது ஒருத்தியினுடைய ஏக்கங்களையாவது போக்க வேண்டும். ஆகவே அண்டை வீட்டு இளம்பெண் ஒருத்தியை நீ தான் இங்கே அழைத்து வரவேண்டும். இந்த விஷயத்தில் உன் ஒத்துழைப்பு எனக்கு மிகவும் அவசியம்" என்றார் துறவி.

"நீங்களே அவள் வீட்டிற்குப் போகலாமே! இங்கே ஏன் அழைக்க வேண்டும்?" என்று கேட்டாள் அவள்.

"நான் முதலிலேயே வற்புறுத்திச் சொன்னது இதற்காகத் தான். ஒப்புக் கொண்டபின் பின்வாங்கக் கூடாது என்று சொன்னேன். உன் பேச்சு உன் தயக்கத்தின் வெளிப்பாடு. மறுப்பின் முனைப்பு. நான் செல்கிறேன் பவானி. இனி உன்னிடம் வரமாட்டேன். உங்கள் பகுதிக்கே வரமாட்டேன். திருப்பருத்திக் குன்றத்துச் சமணர்களுக்கும் உனக்கும் வித்தியாசம் இல்லை. ஒத்துழையாமையே உங்களுக்குப் பொதுவானது" என்று கூறித்

தான் கொண்டு வந்திருந்த பொற்காசுகளைக் கட்டிலில் போட்டு விட்டு எழுந்தார் துறவி.

"கோபப்படாதீர்கள் அடிகளே. உங்கள் விருப்பம் வினோதமாக இருக்கிறது. நானே போய் இன்னொருத்தியை எப்படி அழைத்து வருவது என்று யோசித்தேன். மற்றவர்களின் ஏக்கங்களைப் பற்றி நீங்கள் கவலைப்பட ஆரம்பித்தால் அதற்கு முடிவே இருக்காது. இருப்பினும் பேச்சு மாற விரும்பவில்லை. போய் ஒருத்தியை அழைத்து வருகிறேன். ஏக்கங்களைத் தீர்த்து வைக்கும் காரியங்களை இதோடு நிறுத்திக் கொள்ளுங்கள்" என்று கூறி விட்டு வெளியே சென்றாள் பவானி.

அவள் வெளியே சென்றதும் துறவி தன் இடுப்பிலிருந்து ஏதோ ஒரு குப்பியை எடுத்துத் திறந்து அதிலிருந்த திரவத்தைக் குடித்தார். அதையடுத்து அங்கே வைக்கப்பட்டிருந்த மதுவை எடுத்து ஒரு குவளை நிறைய கபக் கபக்கென்று குடித்தார். இரவில் பவானி எப்போதுமே தயாராக வைத்திருக்கும் மதுரமான திராட்சைப் பழங்களை உண்டு விட்டு நிஷ்டையில் அமர்ந்தார்.

நிஷ்டையில் அமர்ந்த கொஞ்ச நேரத்திலேயே குப்பியிலிருந்து அவர் குடித்த திரவம் வேலை செய்யலாயிற்று. நரம்புகள் முறுக்கேறின. அவருக்குத் திருப்தியாக இருந்தது. "இனி கவலையில்லை. இரண்டு பெண்களையும் திருப்திகரமாகக் கையாளலாம்" என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்டார்.

வெளியே சென்ற பவானி இளம்பெண்ணுடன் திரும்பிய போது துறவி நிஷ்டையில் இருப்பதைப் பார்த்து விட்டு "இது என்ன? இளம்பெண்ணை வரச் சொல்லி விட்டு நிஷ்டையில் அமர்ந்து விட்டாரே?" என்று நினைத்தாள். அப்போது இளம்பெண், பவானியைப் பார்த்து "பவானி! அதைட் பார்" என்றாள். அவள் சுட்டிக் காட்டியதைக் கண்டதும் பவானியின் கண்கள் விரிந்தன.

"நான் இதுவரை இப்படிப் பார்த்ததில்லை" என்றாள்.

இளம்பெண் லேசாகச் சிரித்து விட்டு பவானியின் காதில் ஏதோ சொன்னாள்.

"அப்படியா?" என்று பவானியும் கிசுகிசுத்தாள்.

பிறகு துறவியைப் பார்த்து "அடிகளே!" என்று குரல் கொடுத்தாள்.

துறவி கண் விழித்து "வந்து விட்டீர்களா?" என்றார் தூக்கத்திலிருந்து எழுந்தவர் போல்.

"என்ன அடிகளே! நிஷ்டையில் அமர்ந்து விட்டீர்கள்? அதற்கு இதுவா இடம்?" என்று கேட்டாள்.

"பல வருடப் பயிற்சி. எப்போதும் வரும். எங்கேயும் வரும்" என்றார் துறவி.

"வியப்பாக இருக்கிறது அடிகளே" என்று சொன்ன பவானி "இதோ, இவள் தான் சங்கவி. எதிர்வீட்டுக்காரி. அழைத்து வந்து விட்டேன். நான் செல்கிறேன்" என்றாள்.

"நீ எதற்காகப் போகவேண்டும்?" என்றார் துறவி.

"இவள் இருக்கும் போது நான் எதற்கு?"

"இரண்டு பேரும் எனக்கு வேண்டும்."

"இரண்டு பேருமா? வேண்டாம் அடிகளே. உங்களால் முடியாது."

"எனக்கு இருப்பது யானை பலம். இரண்டு பேர் என்ன இருபது பேரைச் சமாளிப்பேன்" என்றார் துறவி.

"நான் சொன்னேனே, சரியாகி விட்டது பார்த்தாயா?" என்று பார்வையாலேயே பவானியிடம் பேசினாள் இளம்பெண் சங்கவி.

"எதற்காக நேரத்தை வீணடிக்கிறீர்கள்? கட்டிலுக்கு வாருங்கள்" என்று சொன்ன துறவி சங்கவியைப் பார்த்து "உன் அனுபவம் என்ன?" என்று கேட்டார்.

"போதுமான அனுபவம் இருக்கிறது ஐயா" என்றாள் சங்கவி.

"அப்படியானால் இதற்கு என்ன அர்த்தம்?" என்று கேட்டு ஒரு வார்த்தையைச் சொன்னார் துறவி.

சங்கவி பதில் கூறமுடியாமல் மௌனமாக இருந்தாள்.

"இதுதானா உன் அனுபவம்? நீ தெரிந்து கொள்ள வேண்டியது நிரம்ப இருக்கிறது. இன்றைக்கு இருவருக்குமே சொல்லி கொடுக்கிறேன்" என்று சொல்லி விட்டு கற்றுக் கொடுக்க ஆரம்பித்தார் துறவி.

அவர் கற்று கொடுத்த விதம் அபாரமானதாக இருந்தது.

அது வரை அவர்கள் கற்காத அதிசயமாக இருந்தது.

அதுவரை உணர்ந்திராத அனுபவமாக இருந்தது.

இருவரையும் அவர் மாறிமாறிப் பயில்வித்த விதம் அவர் காமத்தில் வித்தகன் என்பதைப் புலப்படுத்தியது.

வெட்கம் என்பது அறவே இல்லாமல் அவர் போட்ட ஆட்டம் அவர்களை அசத்தியது.

அதிலும் இளம்பெண்ணான சங்கவி மிரண்டே போனாள்.

அவர் பவானியின் இல்லத்திற்கு வந்தபோது ஏங்கி ஏங்கித் தவித்த அவளுக்குத் தற்போது கிறுகிறுத்தது.

"இப்படிப்பட்டவரை எந்தப் பெண்தான் விரும்பாமல் இருக்க மாட்டாள்? ஒருநாள் லீலையிலேயே பல நாட்களுக்கான திருப்தியை அளிக்கும் இவர் துறவியல்ல. மனிதனுமல்ல. மிருகமும் இல்லை. எல்லாம் கலந்த அதிசயப் பிறவி" என்று தனக்குள் சொல்லி வியர்த்துப் போனாள்.

பொழுது விடிவதற்கு நான்கு நாழிகைகள் இருந்த போது அவளை வீட்டிற்கு அனுப்பி வைத்த போது "எனக்குப் பொற்காசுகள் வேண்டாம் அடிகளே. அது போதும். அதுவே போதும்" என்று கூறிவிட்டுப் பறந்தாள் அவள்.

பவானியும் உற்சாகமாக இருந்தாள்.

"நாளுக்கு நாள் உங்கள் பலம் கூடுகிறது. நாளுக்கு நாள் உங்கள் முறைகளும் மாறுகின்றன. இப்படியே போனால் நீங்கள் துறவுக்குத் திரும்புவது கஷ்டம் அடிகளே" என்றாள் பெருமூச்செறிந்தபடி.

"தவறு பவானி. துறவு போய் விட்டதே என்ற கவலைதான் காமத்தில் என்னைக் கடுமையாக்கியிருக்கிறது. துறவு மீண்டு வரும் போது காமம் பொசுங்கி விடும்" என்றார் துறவி.

"நான் ஒன்று கேட்டால் கோபிக்க மாட்டீர்களே?"

"கேள்"

"நாங்கள் இருவர் வரும் போது நீங்கள் ஊக்கமருந்து ஏதாவது சாப்பிட்டீர்களா?"

"பவானி! பெண்ணிற்கு முன் இந்த விஷயத்தில் ஆடவன் தோற்கக் கூடாது. அதுவும் நீங்கள் இருவர். அதற்கு ஊக்க மருந்து அவசியம். அது முடிந்த விஷயம். விட்டு விடு. நான் கூறப் போகும் இரண்டாவது விஷயத்தைக் கேள். அதற்கும் உன் ஒத்துழைப்பு அவசியம்" என்று சொல்லி விஷயத்தைச் சொன்னார் துறவி.

பவானி வியந்தாள்.

★★★



கணிகைகள்

தனது முதல் விருப்பத்தைத் துறவி நிறைவேற்றிக் கொண்ட விதத்தை எண்ணிக் கிறங்கிப் போயிருந்த பவானி துறவி கூறிய இரண்டாவது விஷயத்தைச் சரியாக வாங்கிக் கொள்ளவில்லை.

துறவி ஊக்க மருந்தை உண்டிருக்கிறார் என்று இளம்பெண் சங்கவி கூறியதைத் துறவி உறுதிப்படுத்தியதை அறிந்த பவானி "இந்தத் துறவிக்குத்தான் எத்துணை முனைப்பு? ஏதோ வந்தோம் போனோம் என்றில்லாமல் ஊக்க மருந்தை உட்கொண்டாவது திருப்தியடைய வேண்டும் என்று நினைத்துச் செயல்படும் இவரா துறவி? இவர் எதற்குத் துறவியானார்? துறவு தான் திறந்து கொண்டு விட்டதே! அதை மீண்டும் அடைய எதற்கு முயற்சிக்கிறார்? இதில் இல்லாத எது அதி"ல் இருக்கிறது? சமணர்களும் சமணமும் எக்கேடு கெட்டால் இவருக்கென்ன? இவருக்கு யார் மகுடம் சூட்டப் போகிறார்கள்? அறுந்து போன துறவும் உடைந்து போன பானையும் ஒன்று என்று இவருக்கு ஏன் புரியவில்லை? முறிந்து போன மதமும் திரிந்து போன பாலும் பழையநிலைக்குத் திரும்பாது என்பது இவருக்குத் தெரியாமல் போய் விட்டதா?" என்றெல்லாம் அவளது எண்ணம் சென்றது.

"என்ன பவானி, நீ இன்னும் அந்த நினைப்பிலேயே இருக்கிறாயா? ஊக்க மருந்தின் மகத்துவம் அது. அதைப் பற்றி இன்னொரு நாள் விரிவாகச் சொல்கிறேன். உனக்கும் தயாரித்துக் கொடுக்கிறேன். இப்போது என் இரண்டாவது விருப்பத்தைக் காது கொடுத்துக் கேள்" என்று துறவி குரல் கொடுத்த பிறகு தான் "சொல்லுங்கள் அடிகளே" என்றாள் பவானி.

"முதல் விஷயத்தில் நீ கொடுத்த ஒத்துழைப்பு அபாரம். அதைப் போலவே இரண்டாவது விஷயத்திலு.ம் ஒத்துழைக்க வேண்டும். அது மிகவும் முக்கியம்" என்றார் துறவி.

"விஷயத்தைச் சொல்லுங்கள் ஐயா."

"திருப்பருத்திக் குன்றத்துச் சமணர்கள் மந்தப்பட்டு விட்டதால் வெந்துப் போய் விட்ட நான் தனியாக முயற்சியில் இறங்குவது தான் விவேகம் என்று தீர்மானித்து விட்டேன். மன்னன் நந்திவர் மனைக் கொல்ல வேண்டும் அல்லது வெல்லப் பாகு போல உருக வேண்டும். அவனைக் கொல்வது மிகவும் சிரமம். அவன் போனால் அவன் மகன் தந்திவர்மன் வருவான். அவனது பணிகளைத் தொடர்வான். நமக்குப் பயனிருக்காது. ஆகவே அவனை நம் எண்ணத்திற்கு ஏற்ப வளைக்கத் தீர்மானித்து விட்டேன்."

"புரிந்து விட்டது."

"என்ன புரிந்து விட்டது?"

"மன்னனை மயக்கி என் கைப்பாவையாக்க வேண்டும். அவ்வளவு தானே?"

"பெண்புத்தி பின் புத்தி என்பதைக் காட்டி விட்டாய். நந்தி வர்மன் பெண்பித்தன் அல்ல. ஏக பத்தினி விரதன். ஆன்மீகத்தில் தன்னை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் அவனைக் காம அலைகளால் தீண்ட முடியாது. நீ வளைக்க வேண்டியது அவனது ராஜகுருவை."

"என்ன சொல்கிறீர்கள் அடிகளே? ராஜகுரு மீசையும் தாடியும் நரைத்துப் போன முதியவர். அவரிடம் காமக் கணைகளை எப்படித் தொடுக்க முடியும்?"

"நான் துறவி. என்னைக் காமம் அண்டவில்லையா?"

"உங்கள் வயது சரியான வயது. ராஜகுருவின் பிராயம் எழுபதை நெருங்கும் பிராயம்."

"காமத்திற்கும் வயதிற்கும் சம்பந்தமில்லை. வயதானாலும் ஆடவர்கள் சிங்கங்களைப் போல் சீறவே விரும்புவார்கள். சீறுவதற்காக ஊக்க மருந்துகளை பயன்படுத்துவார்கள். தங்களை அழகான பெண்கள் நாடுவதில்லையே என்ற ஏக்கம் அவர்களுக்கு இருக்கும். உன்னைப் போன்ற அழகி நெருங்கிச் சென்றால் அவர்கள் ஆனந்தத்துடன் ஏற்றுக் கொள்வார்கள். உனக்கு ஈடுகொடுக்கச் சகலத்தையும் செய்வார்கள்."

"அதுசரி. அவரை மயக்கி என்ன ஆகப் போகிறது?"

"ராஜகுரு தான் மன்னனின் மூளையாக இருந்து வருகிறார். அவர் சொல்வதைத் தான் மன்னன் கேட்கிறான். அவரை வளைத்து விட்டால் அவர் மூலம் நமது லட்சியங்களையும் அபிலாஷைகளையும் மன்னனிடம் திணிக்கலாம். செயல்படுத்தலாம். வாழைப் பழத்தை வாயில் திணிப்பதைப் போன்ற லகுவான காரியம்

இது. இதைப் பெண்களால் தான் செய்ய முடியும். அதுவும் பேரழகியான நீ இதை எளிதாகச் செய்யலாம். சிறப்பாகச் செய்யலாம்."

"போயும் போயும் நான் ஒரு கிழவனிடமா சிக்க வேண்டும்?" என்று கேட்டுவிட்டு உள்ளே சென்று விட்டாள் பவானி.

துறவிக்குச் சங்கடமாகத் தான் இருந்தது. பவானி ஒரு கணிகை. துறவியிடம் மட்டுமே சகவாசம் வைத்திருப்பதாகச் சொல்லிக் கொள்கிறாள். துறவி அதை ஆராயமுற்பட்டதில்லை. தான் வரும்போதெல்லாம் உரிய பொற்காசுகளை வழங்கத் தவறுவதில்லை. அவர் காமத்தில் காட்டும் ஜால வித்தைகளில் அவள் மயங்கிப் போய்க் கட்டுண்டு கிடப்பது உண்மை தான்.

ஆனால் எந்த உரிமையில் அவளை ராஜகுருவிடம் அனுப்ப முடியும்? துறவி அதை நினைத்துப் பார்த்தார். பவானி அக்கேள்வியைக் கேட்டால் என்ன பதில் கூறுவதென்று அவருக்குத் தெரியவில்லை. யோசித்தபடி அமர்ந்திருந்தார்.

உள்ளே போன பவானி நீராடிவிட்டு வந்தாள்.

"நீங்களும் போய் நீராடுங்கள்" என்றாள்.

அவரும் சென்று நீராடிவிட்டு வந்தார். பொழுது விடிந்து விட்டிருந்தது. வெளியே செல்வதற்கு அவருக்குச் சங்கடமாக இருந்தது. அந்தப் பகுதிக்கு வருபவர்கள் இரவில் வருவார்கள். இரவிலேயே சென்று விடுவார்கள். பகலில் போக்குவரத்து வைத்துக் கொள்வதில்லை.

அது பவானிக்கும் தெரிந்திருந்ததால் அவரை இல்லத்தி லேயே தங்கச் சொல்லி காலைநேர உணவு வகைகளைக் கொடுத்து உபசரித்தாள்.

இருவரும் இல்லத்துப் புழக்கடையில் இருந்த சிறு சோலையில் போய் அமர்ந்தார்கள்.

"பவானி! உன்னை ராஜகுருவிடம் அனுப்புவதற்கு எனக்கு எந்த விதமான உரிமையும் கிடையாது. உரிமை அடிப்படையில் உன்னிடம் பேசவில்லை. உதவி கேட்கும் அடிப்படையில் தான் கேட்கிறேன். கண்ட பெண்களை இந்த வேலையில் ஈடுபடுத்த முடியாது. நேற்றிரவு வந்த சங்கவியைக் கூட அனுப்ப இயலாது. என்னையும் என் நோக்கத்தையும் முழுவதுமாகப் புரிந்து கொண்டவர்களை மட்டுமே ஈடுபடுத்த முடியும். அப்படிப் பார்த்தால் உன்னை விட பொறுத்தமானவள் யாரும் இல்லை. நம்பத் தகுந்தவள் யாரும் இல்லை. நீ கேட்கும் சன்மானத்தைத்

தருகிறேன். நீ செய்யப் போகிற காரியம் தனிப்பட்ட என் ஒருவனது ஆதாயத்திற்காக அல்ல. ஒட்டு மொத்த சமண மதத்தினருக்காகச் செய்யப் போகிற காரியம். அதுவும் எனது சமணர்கள் யாரும் ஒத்துழைக்காத பட்சத்தில் தான் வேறு மாதிரி தீர்மானித்து உன் உதவியைக் கோருகிறேன். நீ மறுத்து விட்டால் அது எனக்குப் பெருத்த பின்னடைவாகி விடும்" என்று உருக்கமாகக் கேட்டுக் கொண்டார் துறவி.

"அடிகளே! நாங்கள் பிறந்தது எங்கள் உடலைப் பலருக்கும் அர்ப்பணிப்பதற்காகத் தான். ஆகவே ராஜகுருவிடம் அர்ப்பணிப்பதில் எனக்கொன்றும் தயக்கமில்லை. ஆனால் அந்தப் பணியில் எனக்குத் திருப்தியில்லை. சோர்வு தான் அதிகமாக இருக்கிறது" என்றாள் பவானி.

"இந்த விஷயத்தில் உனக்குச் சோர்வு வந்து விட்டதென்றால் அது துரதிஷ்டம். அசம்பாவிதம். உற்சாகமில்லாதவளை எதில் உட்படுத்தினாலும் அபவாதமே நடக்கும். நான் வேறு ஆளைப் பார்த்துக் கொள்கிறேன்" என்று சொன்ன துறவி பதிலுக்குக் காத்திராமல் எழுந்து வெளியேறலானார்.

பகல் என்றும் பாராமல் பவானியின் இல்லத்தை விட்டு வெளியேறிய அவர் நேராக எதிர் இல்லத்திற்குச் சென்றார்.

அது சங்கவியின் இல்லம்.

துறவியைக் கண்டதும் ஆனந்தப்பட்டுப் போன சங்கவி "நீங்களா? வரவேண்டும். வரவேண்டும். ஓரிரவு தான் கழிந்தது. அதற்குள் என் இல்லத்திற்கு வந்து விட்டீர்கள். நான் மிகவும் பாக்கியசாலி அடிகளே. வந்து அமருங்கள். என்ன சாப்பிடுகிறீர்கள்?" என்று சுறுசுறுப்பாகக் கேட்டாள்.

ஆசனத்தில் அமர்ந்த அவர் "பகல் என்றும் பாராமல் உன் இல்லத்திற்கு வந்திருக்கிறேன். அதற்குக் காரணம் உன்னிடம் எனக்கோர் உபகாரம் ஆக வேண்டும் சங்கவி" என்றார்.

"உபகாரமென்ன உயிரையே தருகிறேன். முதலில் எதையாவது அருந்துங்கள்" என்றாள் சங்கவி.

"நல்ல மதுவாக இருந்தால் கொஞ்சம் கொடு."

"ஆகா! இதோ தருகிறேன்" என்று கூறிவிட்டு உள்ளே சென்று ஒரு குவளையில் மதுவைக் கொண்டு வந்து கொடுத்தாள்.

அதை மெதுவாகவே குடித்த அவர் "மது மிகவும் சுவையாக இருக்கிறதே! இதற்காகவே இங்கு வரலாமா நான்?" என்று கேட்டார்.

"நீங்கள் எதற்காக வேண்டுமானாலும் இங்கே வரலாம் அடிகளே. உங்களை வரவேற்க எப்போதும் நான் தயாராக இருப்பேன்" என்று சொன்னாள் சங்கவி மகிழ்ச்சியுடன்.

"நான் கேட்கப் போகும் உதவி என்ன என்பதை அறிந்தால் நீ என்னை வரவேற்கமாட்டாய் சங்கவி. பின்வாங்கி விடுவாய். ஏனென்றால் இதே உதவியைப் பவானியிடம் கேட்டேன். அவள் ஒப்புக் கொள்ளவில்லை."

"அவள் ஒப்புக் கொள்ளாவிட்டால் என்ன? அவளுக்கும் எனக்கும் என்ன ஒப்பந்தமா இருக்கிறது? சொல்லுங்கள் அடிகளே."

"நான் கேட்கப் போகும் உதவிக்கு என்னிடம் எந்தவிதமான தார்மீக உரிமையும் இல்லை. அதனால் தயங்க வேண்டியிருக்கிறது."

"எந்த விதமான தயக்கமும் வேண்டாம். கட்டளையிடுங்கள். செய்கிறேன்."

"சங்கவி! என் கண்ணே! எனது சமண மதத்தைப் பல்லவ மன்னன் அழித்து விட்டான். அந்த மதம் உயிர் பெற வேண்டும். அதை மன்னனைக் கொண்டு தான் செய்ய வேண்டும். அந்த அளவிற்கு மன்னனை மாற்ற வேண்டும். அதற்கு அவனை மயக்க முடியாது. அவரது ராஜகுரு மூலம் தான் செய்ய வேண்டும். ஏனென்றால் ராஜகுரு எதைச் சொன்னாலும் கேட்பவன் மன்னன். அதற்கு ராஜகுருவைத் தயாரிக்க வேண்டும். அவரை நீ உன் வலையில் வீழ்த்தி நீ கூறுவதைக் கேட்கும் கைப்பாவையாக மாற்ற வேண்டும். ராஜகுருவுக்கு வயது கொஞ்சம் அதிகம். ஆனால் சபலம் அதை விட அதிகம். அதுவே உனக்கு ஆயுதம். அவரது சபலத்தைப் பயன்படுத்திக் கொண்டு அதையே ஆயுதமாக்கி அவரை வீழ்த்தவேண்டும். அது சில நாட்களுக்குள் நடக்க வேண்டும். நடத்திக் காட்டுவாயா என் கண்மணி?"

"இதற்குப் போயா இத்தனைப் பீடிகைகள்! தயக்கங்கள்! நிச்சயமாகச் செய்து முடிக்கிறேன்."

"உனக்கு எவ்வளவு சன்மானம் வேண்டும்?"

"எதுவும் வேண்டாம். நேற்றிரவு கொடுத்தீர்களே அது தான் என் சன்மானம். எப்போது கேட்டாலும் அதை நீங்கள் கொடுக்க வேண்டும். சம்மதமா?"

"இது சன்மானமல்ல. அபிமானம். அது எப்போதும் உண்டு. வா. பள்ளியறைக்குப் போவோம்."

"இப்போதேவா அடிகளே?"

"ஏன்? என்ன தயக்கம் உனக்கு?"

"இப்போது பகலாயிற்றே?"

"கண்ணை மூடிக் கொண்டால் இரவாகி விடுகிறது."

"அடிகளே! முற்பிறவியில் நீங்கள் மன்மதனாகப் பிறந்திருக்க வேண்டும்."

"மன்மதன் வெறும் சுண்டைக்காய். நான் மத யானை. வா உள்ளே."

சங்கவி பெரிதும் மகிழ்ந்து அவரை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றாள்.

சென்றது தான் தெரியும். மாலைவரை வித்தியாசமான சொர்க்கங்களைக் கண்டாள் சங்கவி.

எந்தக் கட்டத்திலும் அவர் சளைக்கவில்லை. மதுவை வேறு அருந்தியிருந்தாராதலால் எல்லா விஷயங்களும் நீடித்து அவளுக்கு இன்பப் பெருக்கை அள்ளிக் கொடுத்தன.

"இங்கே வருபவர்களுக்குக் கற்றுக் கொடுப்பவள் நான். நீங்களோ எனக்குக் கற்றுக் கொடுக்கிறீர்கள். இப்படியெல்லாம் புதிய புதிய இன்பங்களைத் தர எங்கே கற்றீர்கள்?" என்று கம்மிய குரலில் கேட்டாள் சங்கவி.

"கற்பதற்கு எங்கே போவது? நாமாகப் புதுமைகளைக் கண்டறிய வேண்டியது தான். காமத்தில் முழு விருப்பம் உள்ளவன் தான் நிறைய ஆராய்கிறான். அனுபவிக்கிறான். பிறருக்கும் கொடுக்கிறான்" என்றார் துறவி அவளை விட்டு விலகியபடி.

"நீங்கள் துறவியானது துரதிருஷ்டம் அடிகளே."

"இல்லை சங்கவி. துறவியானபின் தான் இது சம்பந்தமாக நிறைய விஷயங்களைக் கற்றேன். ஆராய்ந்தேன். நாற்பது வருடமாகத் துறவியாக வாழ்ந்து அதைக் கைவிட்டேன். நாற்பது ஆண்டுகளாக அடக்கி வைக்கப்பட்டிருந்த காமத்தைக் குறுகிய காலத்திற்குள் வெளிப்படுத்த நேர்ந்ததால் வெள்ளப் பெருக்கு நேர்ந்தது போல் வெளிப்படுகிறது. அவ்வளவுதான்" என்று சொன்ன துறவி "சங்கவி! நீ காஞ்சிக்குப் போய் அலைய வேண்டியதில்லை. அவர் நாளைக்குத் திருப்பருத்திக் குன்றத்திற்கே வருகிறார். அவரது தந்தையின் சமாதி இங்கே இருக்கிறது. தந்தையின் நினைவு நாளில் அவருக்கு அஞ்சலி செலுத்த சமாதிக்கு வருகிறார். நீ அங்கேயே அவரைச் சந்தித்து உனது வலையை வீசலாம்" என்றார்.

"நிச்சயம் வீசுவேன் ஐயா."

"வீசுவது முக்கியமல்ல சங்கவி. வலையில் அவர் சிக்க வேண்டும். மீளக் கூடாது."

"நிச்சயம் சிக்குவர் ஐயா."

"மிக்க மகிழ்ச்சி கண்ணே. இரவு நேரமாகி விட்டது. நான் விடைபெற்றுக் கொள்கிறேன்."

"சற்று இருங்கள் அடிகளே" என்று கூறிவிட்டு வெளியே சென்ற சங்கவி மீண்டும் வந்து "இந்தாருங்கள் அடிகளே" என்று பொற்காசுகளை கொடுத்தாள்.

"இதென்ன நீ எனக்குத் தருகிறாய்? தலை கீழாக இருக்கிறதே?"

"நீங்கள் எனக்கு வாரி வழங்கியதற்கு நான் சன்மானம் தருகிறேன். அவ்வளவு தான்."

"ஆகா! உன் அருமை இப்போது அல்லவா தெரிகிறது? நீ எனக்கு மட்டும் சொந்தமாக இருக்க வேண்டும் என்றல்லவா தோன்றுகிறது. இந்த நேரத்தில் போய் உன்னை ராஜகுருவிடம் அனுப்புகிறேனே!"

"கவலைப்படாதீர்கள் அடிகளே. ராஜகுருவை மயக்கு வேனே தவிர என் உடலை அவருக்கு ஒருபோதும் தரமாட்டேன். அது மட்டுமா இனிமேல் நீங்கள் மட்டுமே எனக்கு விருந்தாளி. சரிதானா?"

மகிழ்ச்சி மிகுதியால் துறவி அவளைக் கட்டிப்பிடித்து முத்தமழை பொழிந்து விட்டு வெளியே சென்றார்.

அவர் சென்றதை பவானியின் கண்கள் அசூயையுடன் பார்த்தன.

நேராகச் சங்கவியின் இல்லத்திற்கு வந்தாள்.

"என்ன சங்கவி! என் இடத்தை நீ பிடித்து விட்டாய் போலிருக்கிறதே?" என்று கேட்டாள்.

"உன்னோடு என்னைச் சேர்த்துக் கொண்டவள் நீ. உன் இடத்தில் நீயாக இணைத்துக் கொண்டவள் நீ. துறவிக்கு உதவ மறுத்து விட்டவள் நீ. அவராகத் தான் இங்கே வந்தார். நான் அவரை அழைக்கவில்லை" என்றாள் சங்கவி.

"உன்னிடம் உதவி கேட்டாரா? ஒப்புக் கொண்டாயா?"

"ஆமாம்."

"சங்கவி! நமக்கு அரசியல் எதற்கு? நமக்கு நம் தொழில் தான் பிரதானம்."

"நாற்பது வருடங்களாகத் தலைமைத் துறவியாக இருந்தவர் அரசியலுக்கு வரலாம். நாம் வரக் கூடாதா?"

"அரசியல் புதைச் சேற்றைப் போன்றது. ஆபத்தானது. அதில் போய் சிக்கிக் கொள்ளாதே. துறவி நம்மை ஏமாற்றுகிறார்."

"நான் அப்படி நினைக்கவில்லை. அவர் ஒரு பொக்கிஷம்" என்றாள் சங்கவி.

மறுநாள் துறவி கூறியது போலவே திருப்பருத்திக் குன்றத்திற்கு வந்தார் ராஜகுரு.

★★★



திருப்பருத்திக் குன்றத்தில் ராஜகுரு

மறுநாள் காலையில் திருப்பருத்திக் குன்றத்திற்குப் பல்லக்கில் வந்த ராஜகுரு தர்மகுரா மரத்தருகே பல்லக்கை நிறுத்திச் சொல்லி இறங்கிக் கொண்டார். திருப்பருத்திக் குன்றத்துத் தலைமைத் துறவியான துலாபாரர் அவரை வரவேற்கும் விதமாகக் கைகளைக் கூப்பினார். ராஜகுரு எதையும் கவனித்ததாகத் தெரியவில்லை. தன்னுடன் வந்த பரிவாரங்களை மரத்தின் கீழேயே இருக்கும்படிச் சொல்லி விட்டுத் தனியாக நடந்தார்.

தன் வணக்கத்தை அவர் அங்கீகரிக்காமல் சென்றதைக் கண்ட துறவி துலாபாரர் "என்மீது உங்களுக்கு அவ்வளவு அலட்சியமா? மன்னனை விட அதிகமாக அலட்டிக் கொள்கிறீர்களே! இருக்கட்டும் இருக்கட்டும். சங்கவியின் வலையில் சிக்கி அவளது கைப்பாவையாக நீங்கள் ஆகப் போவது உறுதி. ஆன பிறகு உங்கள் கைப்பாவையாக மன்னன் ஆடப் போவது உறுதி. அவன் உங்கள் கைப்பாவையான பிறகு அவன் மூலம் சமணம் பழைய உச்சியை அடையப் போவது உறுதி. அதற்குப் பின் நீங்கள் என் கைப்பாவையாக ஆகப் போவது உறுதி. அதற்கப்புறம் நீங்கள் என் கைகளில் சித்திரவதைப் படப்போவது உறுதி. அப்போது பார்க்கலாம் உங்கள் அலட்சியத்தையும் ஆணவத்தையும்" என்று உள்ளுக்குள்ளேயே கறுவிக் கொண்டார்.

ராஜகுரு அங்கே இதரத் துறவிகளைக் கூட ஏறெடுத்துப் பார்க்கவில்லை. பார்வையைச் சிதற விடாமலும், கவனத்தைச் சிதற விடாமலும், ஒரே இலக்குடன் புறப்பட்ட வில்லைப் போல் நடந்தார். சுடுகாட்டிற்குப் பக்கத்திலே இருந்த ஒற்றையடிப் பாதையில் நடந்தார். சுடுகாட்டில் உலவிக் கொண்டிருந்த ஒரு நரி தனியாகச் செல்லும் அவர்மீதுப் பாய்ந்து பிறாண்டலாமா என்று ஒரு கணம் யோசித்தது.

ஆனால் அவர்மீது உண்டான அச்சத்தால் அந்த முயற்சியைக் கைவிட்டு விட்டுச் சுடுகாட்டில் இருந்த மணலை அளைந்து படுத்துக் கொண்டு ஊளைச் சத்தத்தை மட்டும் எழுப்பியது.

ஒற்றையடிப் பாதையில் கணிசமான தூரத்திற்குச் சென்று இடது புறம் திரும்பியபோது நான்கு சமாதிகள் ஒருபுறம் தனியானதொரு சமாதி மறுபுறமும் தெரிந்தன. தனியாக இருந்த சமாதியை நோக்கிச் சென்றார் ராஜகுரு. அச்சமாதியைக் காப்பது போல் இருபுறமும் வளர்ந்திருந்தப் புளியமரங்கள் அதன்மீது ஏராளமாக இலைகளை உதிர்த்திருந்த விதமானது சமாதியைக் காப்பது போலத் தோன்றியது.

ராஜகுரு சமாதியின் முன்னே போய் நின்றார். அதன்மீது விழுந்திருந்த இலைக் குப்பைகளை அகற்றவில்லை. அதன்மீது மலர்கள் எதையும் தூவவில்லை. அமைதியாக நின்றார். ஏறக்குறைய இரண்டு நாழிகை நேரத்திற்குச் சிலையைப் போல மௌனமாகவே இருந்தார். கண்கள் லேசாகக் கசிந்ததைப் புளியமரத்தில் இருந்த பேய் ஒன்று பார்த்து விட்டு வருந்தியது.

கண்களைத் துடைத்துக் கொண்டு திரும்பிய போது வினோதமான சத்தம் கேட்டது. சத்தம் வந்த திசையை நோக்கினார். அங்கே ஒருபெண் வேப்பமரம் ஒன்றில் தூக்கில் தொங்க ஆரம்பித்திருந்தாள்.

கணநேரம் தாமதித்திருந்தால் அவள் தொங்கிப் போயிருப்பாள். அவள் உடலில் தங்கியிருந்த உயிர் போயிருக்கும். பதறிப் போன ராஜகுரு "அடே பெண்ணே" என்று குரலிட்டபடி அங்கே சென்று அவளைத் தாங்கிக் கொண்டார். தன் தோளின் மீது அவளது கால்களைத் தாங்கிக் கொண்ட அவர் "சுருக்கை அவிழ்த்து விட்டுக்கொள்" என்றார் ராஜ தோரணையுடன்.

அந்தத் தோரணை அவளை அச்சப்படுத்தியது. கழுத்தில் போட்டுக் கொண்டிருந்த முடிச்சை அவிழ்த்து விட்டுக் கொண்டாள். கயிற்றின் பிடிப்பு போனதும் அவரது கழுத்தின் மீதே சரிந்து அமர்ந்தாள். ராஜகுரு அப்படியே கீழே அமர்ந்ததும் அவள் கீழே இறங்கினாள்.

"பெண்ணே! யார் நீ? பார்ப்பதற்கு இளம்பெண்ணாக இருக்கிறாய்? எதற்காகச் சாகத் துணிந்தாய்?" என்று கேட்டார் ராஜகுரு.

"கிழவிகள் சாகத் துணியமாட்டார்கள் ஐயா. இளம் பெண்கள்தான் சாகத் துடிப்பார்கள். அவர்களுக்குத் தான் மான அவமானங்கள் எல்லாம். கிழவிகளுக்கு அல்ல" என்றாள்.

"உன் பெயரென்ன?"

"சங்கவி."

"தூக்கில் தொங்கும் அளவிற்கு உனக்கென்ன பிரச்சனை?"

"என்னை எதற்காகக் காப்பாற்றினீர்கள் ஐயா?"

"நான் யார் தெரியுமா?"

"தெரியாது."

"ராஜகுரு. மன்னரின் ராஜகுரு. மன்னனையும் மக்களையும் காப்பவன் நான். எனக்கு முன்னால் ஒருவரும் சாகக் கூடாது. அதுவும் தற்கொலை செய்து கொள்ள முயற்சிப்பவர்கள் யாராக இருந்தாலும் அனுமதிக்க மாட்டேன்."

"ஏன் ஐயா அப்படி?"

"எந்தச் சக்தி உயிரைத் தந்ததோ அந்தச் சக்திக்குத்தான் உயிரைப் பறிக்கும் உரிமை உண்டு. மற்றவர்க்கு இல்லை."

"போரில் ஒருவருக்கொருவர் வெட்டி வீழ்த்துகிறார்களே ஐயா?"

"அது போர் தர்மம். தற்கொலை எந்தத் தர்மத்திலும் சேரவில்லை."

"படுகிறவளுக்குத் தான் பாடு. படுகிறவளுக்குத்தான் வலி. பார்ப்பவர்களுக்கு இல்லை."

"படுவது, பாடு படுவது ஆகியவையெல்லாம் வாழ்க்கையின் அம்சங்கள். கர்ம வினையின் விளைவுகள். அவற்றை அனுபவித்துக் கழித்தால் தான் வினை தீரும். அனுபவிக்கப் பயந்து உயிரை விட்டால் வினைகள் தீராது. உயிரை அளித்தவனின் உரிமையில் தலையிட்டதற்காகப் புதிய பாவங்கள் தான் சேரும். நினைவில் வைத்துக் கொள்."

"ஐயா, நான் அழகாக இருக்கிறேனா?"

"அதற்கென்ன இப்போது?"

"ஐயா, மலர்கள் அழகாக மலர்வது சூடுவதற்காகத் தானேயன்றி வாடுவதற்கல்ல. அழகாக இருக்கும் பெண்கள் வாழ்வதற்காகத்தானே தவிர வீழ்வதற்காக அல்ல."

"நீ வீழ்வதற்குத் தானே முனைந்தாய்?"

"வாழ்வதற்கு வாய்ப்பில்லாத போது வீழ்வதைத் தவிர ஏது வேறு வழி?"

"முட்டாள் பெண்ணே! வாழ்க்கை என்பது நான்கிற்கு நான்கு கட்டமல்ல. மிகப் பரந்தது. கடலைப் போலவும் வானத்தைப் போலவும் விஸ்தாரமானது. இதில் உள்ள வாய்ப்புகள் கோடி கோடி. உனக்கு மட்டும் வாய்ப்பில்லாமல் போய் விட்டதா?"

"என்னை யாரும் திருமணம் செய்து கொள்ள மறுக்கிறார்கள் ஐயா. மன்றாடினாலும் மனமிரங்க மாட்டேன் என்று வெறுத்து ஒதுக்கிறார்கள்."

"ஏன்?"

"நான் தாழ்ந்த குலமாம். மனைவியாக ஏற்க முடியாதாம். வேறு எப்படி வேண்டுமானாலும் ஏற்றுக் கொள்கிறார்களாம்."

ராஜகுரு மேற்கொண்டு எதுவும் பேசவில்லை.

அவளை அழைத்துக் கொண்டு நடந்தார். சுடுகாட்டில் சாம்பல் குவியலில் படுத்திருந்த நரி அக்காட்சியைப் பார்த்துவிட்டுப் பொறாமைப் பட்டது. "கிழவனுக்கு இப்படியொரு யோகமா?" என்று நினைத்தது.

ராஜகுரு தன் பல்லக்கு இருந்த இடத்திற்கு வந்தார்.

பல்லக்கில் அவளை அமரச் சொன்னார்.

அவள் உட்கார்ந்ததும் "இவளை என் மனைக்குக் கொண்டு செல்லுங்கள். நான் பிறகு நடந்தே வருகிறேன்" என்றார்.

"எங்களில் இருவர் காத்திருந்து தங்களைத் தோளில் தூக்கிச் செல்கிறோம்" என்றார்கள் தூக்கிகள்.

"வேண்டாம்!" என்றார் ராஜகுரு.

பல்லக்கு புறப்பட்டது.

இக்காட்சியைச் சற்று தூரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்த தலைமைத் துறவி துலாபாரர் "சங்கவி கெட்டிக்காரி. பல்லக்கில் போகிறாள். அவளது வலையில் ராஜகுரு சிக்கி விட்டார்" என்று சொல்லிக் கொண்டு மகிழ்ந்தார்.

ராஜகுரு அங்கே இருந்த சமணர்களை அருகே அழைத்தார்.

"உங்கள் தலைமைத் துறவி எங்கே? இங்கே தானே இருப்பார்?" என்று கேட்டார்.

அப்போது அருகில் இருந்த தலைமைத்துறவி துலாபாரர் "இதோ இருக்கிறேன். வந்து விட்டேன். வந்தனம் ஐயா. தாங்கள் சமாதிக்குச் செல்லும்போதே நமஸ்கரித்தேன். தாங்கள் தான் கவனிக்கவில்லை" என்றார்.

"எல்லோரும் என்னை மன்னிக்க வேண்டும். அஞ்சலி செலுத்தப் போகும் போது என் சிந்தனைகளை நான் சிதற விடுவதில்லை. ஆகவே யாரையும் பார்ப்பதில்லை. எதையும் கேட்பதில்லை" என்றார் ராஜகுரு பணிவான குரலில்.

"அப்படியானால் தாங்கள் தான் எங்களை மன்னிக்க வேண்டும்" என்றார் துறவி.

"விடுங்கள். மனிதனை மனிதனே மதிப்பதிலும் மன்னிப்பதிலும் அர்த்தமில்லை. இப்போதெல்லாம் மதிப்பும் மன்னிப்பும் வார்த்தைகளாகவே இருந்து விடுகின்றன. இதயத்தில் இருப்பதில்லை." என்று சொல்லிச் சம்பிரதாயங்களை ஒதுக்கிய ராஜகுரு "உங்கள் நலம் விசாரிப்பது கூட சம்பிரதாயம் தான். இருந்தாலும் அதைத் தவிர்ப்பது நாகரீகமாகாது" என்றார்.

"தங்கள் பேச்சு எங்களுக்கெல்லாம் இதமாக இருக்கிறது ராஜகுரு நாதரே. மன்னர் கூட இப்படி விசாரிப்பதில்லை" என்றார் துறவி.

"வெறும் விசாரிப்பதில் என்ன பயன் இருக்கிறது? காற்றோடு போகும் மணம் போல் போய்விடும் அது நமக்கெதற்கு? மன்னர் விசாரிக்காமல் இருக்கலாம். ஆனால் எங்கும் நல்லதே செய்கிறார். அதுதானே முக்கியம்?" என்றார் ராஜகுரு.

"தாங்கள் தவறாக நினைக்கக் கூடாது. எங்களுக்கு அதாவது சமணர்களுக்கு மாமன்னர். நல்லது செய்யாமல் விட்டால் கூடப் பரவாயில்லை. நல்லது அல்லாதவற்றைச் செய்து வருகிறார். எங்கள் வளர்ச்சியைத் தளர்த்தி விட்டு அமைதியை அழித்து வருகிறார்."

"என் சீடனைப் பற்றி நீங்கள் பேசுவது உண்மையல்ல. அவதூறு."

"இல்லை ஐயா. இங்கே உள்ளவர்களை வேண்டுமானால் கேட்டுக் கொள்ளுங்கள்."

"மன்னர் எதற்காகச் சமண வளர்ச்சியை அழிக்க வேண்டும்?"

"மத நல்லிணக்கம் அவரிடம் இல்லை. வைணவம் மட்டும் வளர்ந்தால் போதும் என்று நினைக்கிறார்."

"மன்னர் அப்படிப் பட்டவரல்லர். அவர் அப்படி நடந்து கொண்டிருந்தால் நீ அணுகிப் பேசியிருக்கலாம்."

"பேசினோம். பயனில்லை."

"போராடியிருக்கலாம்."

"போராட்டம் நடத்துவது துறவிகளின் இயல்பு அல்ல ராஜகுருநாதரே."

"துறவிக்குள் இருப்பவனும் மனிதன். உரிமைகளுக்காகப் போராடுவது மனிதனின் கடமை. அது துறவிகளுக்கும் பொருந்தும்."

"மாமன்னரை எதிர்த்துப் போராடுவதை நாங்கள் தவறாகவே கருதுகிறோம். மன்னர் மனம் மாறுவார் என்று நம்புகிறோம். மன்னரின் ராஜகுருநாதரான தங்களிடம் கோரிக்கையாக வைக்கிறோம்."

அங்கிருந்த துறவிகள் சிலரும் துறவிகளல்லாத சமணர்கள் சிலரும் மன்னனைப் பற்றி ராஜகுருவிடம் குறைகளைச் சொன்னார்கள். அவரும் அவற்றையெல்லாம் பொறுமையோடு கேட்டுக்கொண்டு "மன்னர் பரமபாகவதர். அவர் பெருமாளுக்கும் வைஷ்ணவத்திற்கும் ஏற்றம் தர முயல்வது தவறில்லை. அவர் காலத்தில் ஏற்றம் தராவிட்டால் வேறு யார் தர முடியும்? ராஜசிம்மர், மகேந்திரவர்மர், நரசிம்ம வர்மர் ஆகியோர் காலத்தில் சைவம் ஏற்றம் பெற்றது. மகேந்திரவர்மரின் முதற்பாதி சமணம் உயர்ந்திருந்தது. பிற்பாதி சைவம் உயர்ந்தது. இதையெல்லாம் நான் ஏன் சொல்கிறேன் என்றால் மன்னர்களைச் சார்ந்து தான் மதங்கள் இருக்கின்றன. வாழ்கின்றன. உயர்கின்றன. நமது மன்னரின் நிலையும் அதுதான். அவர் வைணவத்தின் மீது ஆராக்காதல் வைத்திருக்கிறார் என்பதை உணர்ந்த நான் தில்லையில் இருக்கும் சிவபெருமான் கோயிலுக்குள் பெருமாள் கோயிலைக் கட்டும்படி யோசனை சொன்னேன். தில்லைவாழ் அந்தணர்கள் மூவாயிரவரின் எதிர்ப்புகளை மீறி அங்கே பெருமாள் கோயில் கட்டப்படுகிறது. இதையெல்லாம் நாம் சகித்துக் கொண்டு தான் வாழவேண்டும்" என்றார்.

"ராஜகுருநாதரே! தில்லையில் நடராஜப் பெருமான் ஆலயத்திற்குள் மன்னர் பெருமாள் கோயிலைக் கட்டுகிறார் என்று சொல்கிறீர்களே - இதெல்லாம் நல்லதற்குத் தானா?" என்று கேட்டார் துறவி.

"ஒரு பிரச்சனையும் இல்லை. கடவுளுக்கான ஆலயம் எங்கே வேண்டுமானாலும் கட்டப்படலாம். அதற்கு வரைமுறை கிடையாது. மன்னர் விரும்பினால் திருப்பருத்திக் குன்றத்தில்கூட பெருமாள் கோயிலைக் கட்ட முடியும்" என்றார் ராஜகுரு.

"அப்படியொரு முயற்சி நடந்தால் நாங்கள் உயிர்த்தியாகம் செய்வோம்."

"அப்படியெல்லாம் ஒன்றும் நடக்கப் போவதில்லை. கவலைப்படாதீர்கள். விண்ணகரக் குடமுழுக்கு விழா நடக்கட்டும். மன்னரிடம் உங்கள் நிலைகுறித்துப் பேசுகிறேன். நல்லதே நடக்கும்" என்று சொன்ன ராஜகுரு "நீங்களெல்லாம் உங்கள் சுற்றுப்புரத்தில் என்ன நடக்கிறதென்று கவனிக்கவே

மாட்டீர்களா? சுடுகாட்டை உங்கள் எல்லையாக நினைத்துக் கொண்டு அதற்கு அப்பால் என்ன நடந்தாலும் கண்டுகொள்ள மாட்டீர்களா? நான் பல்லக்கில் ஏற்றி அனுப்பி வைத்தேனே ஒரு பெண்ணை - அவள் நான் சமாதி அஞ்சலி செய்யும்போது மரத்தில் தூக்கில் தொங்க முயற்சித்திருக்கிறாள். அவள் வேளை நல்லவேளையாக இருந்ததால் நான் கவனித்துக் காப்பாற்றினேன். இல்லையென்றால் அவள் இன்றைக்கு மரணத்தைத் தழுவியிருப்பாள். நீங்களெல்லாம் இனிமேல் எங்கள் சுற்றுப்புரங்களில் என்ன நடக்கிறது என்பதைக் கவனிக்க வேண்டும். அசம்பாவிதங்கள் நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பூச்சிகளுக்குக் கூடத் தொல்லை வரக்கூடாது என்று கருதும் சமணர்களாகிய நீங்கள் மனித உயிர் பற்றிக் கவலைப்படாமல் இருக்கிறீர்கள். இனி அப்படி இருக்கக் கூடாது" என்று அறிவுரைகளைச் சொல்லிவிட்டுக் கிளம்பினார் ராஜகுரு.

துறவி மாட்டு வண்டியைப் பயணத்திற்கு ஏற்பாடு செய்வதாகச் சொன்ன போது ராஜகுரு அதை மறுத்து விட்டு நடந்தே சென்றார்.

★

திருப்பருத்திக் குன்றத்திலிருந்து பல்லக்கில் பயணம் செய்தபோது பரமானந்தமாக இருந்தது சங்கவிக்கு.

ஒரு நாளுக்கு முன்னால் துறவியின் காமச் சிகரத்தைக் கண்டு கிளுகிளுப்படைந்திருந்த அவள் தற்போது பல்லக்கில் பயணம் செய்ததால் எல்லை மீறிய மகிழ்ச்சியை அடைந்தாள். காமத்தில் கிடைக்கக் கூடிய எதுவும் அவளுக்குப் பிரமிப்பைத் தந்து விடாது. இத்துறவி இல்லையென்றால் இன்னொரு கிறுக்கன் இவரை விடப் பெரும் காமாந்தகனாக அமைவான். ஆனால் பல்லக்குப் பயணம் அப்படியல்ல. அது எல்லோருக்கும் கிட்டாது. பல்லக்குப் பயணம் எல்லோருக்கும் தரப்பட்ட உரிமையல்ல. எனவே தனக்குக் கிட்டவே முடியாத பயணம் கிட்டிய போது எட்ட முடியாத உயரத்தை எட்டிவிட்டது போலப் பேரானந்தம் அடைந்தாள்.

அதோடு அந்தப் பயணத்தைத் தான் வலையில் வீழ்த்தப் போகும் ராஜகுரு அவர்களே ஏற்பாடு செய்தது அவளுக்குத் திருப்தியாக இருந்தது. வயதானவரான அவரை மயக்குவது சிரமமாக இருக்கும் என்று எண்ணியிருந்தாலும் தனது முதல் முயற்சியே வெற்றி பெற்று பல்லக்கு வரை உயர்த்தி விட்டதால் தனக்கு நல்ல காலம் பிறந்திருக்கிறது என்றே கருதினாள்.

பல்லக்கில் ராஜகுருவும் வந்திருந்தால் மகோன்னதமாக இருந்திருக்கும் என்று எண்ணிய அவளுக்கு அவரது நோக்கம் புரியவில்லை. தன்னை யாரும் மணந்து கொள்ளத் தயாராக இல்லை என்றும் வேறு விதங்களில் பராமரிக்கத் தயாராக இருப்பதாகவும் சொன்னபோது ராஜகுரு எதுவும் பேசாமல் தன்னைப் பல்லக்கில் ஏற்றி வைத்து அனுப்பியதால் அவரது எண்ணம் என்னவாக இருக்கும் என்பது அவளுக்குப் புரிவதாக இல்லை.

எதுவாகத்தான் இருந்தால் என்ன? மதுவாக இருந்து மயக்கும் விதத்தில் மயக்கினால் எதுவும் சரியாகி விடும் என்று எண்ணிக் கொண்டாள்.

பல்லக்கு காஞ்சியை அடைந்து அங்கே இருந்த வெள்ளைக் குளத்துச் சுடுகாட்டிற்குப் பக்கத்தில் அமைந்திருந்த குடிசைக்கு முன்னால் இறக்கப்பட்ட போது "இதுவா அவரது இருப்பிடம்?" என்று கேட்டாள்.

"ஆமாம் அம்மணி. அரண்மனை இருப்பிடம் அவருக்குப் பிடிக்கவில்லை. சில காலமாக இங்கே தான் இருக்கிறார்" என்று கூறினார்கள் பல்லக்குத் தூக்கிகள்.

அவளுக்குச் சற்று ஏமாற்றமாக இருந்தாலும் 'அதையெல்லாம் பிறகு பார்த்துக் கொள்ளலாம்' என்று நினைத்துக் கொண்டாள்.

வேளாவேளைக்கு அவளுக்குச் சோறு வந்தது. ராஜகுரு வரவில்லை. இரவுப் பொழுதும் வந்தது. பணியாட்கள் பந்தம் ஒன்றைக் கொண்டு வந்து உள்ளே வைத்துவிட்டு "ராஜகுரு வந்து விடுவார். எங்கேயும் போகாதீர்கள்" என்று கூறிவிட்டுச் சென்றார்கள்.

அவர்கள் போனபின் பறையொலி கேட்டது. அதையடுத்துச் சவ ஊர்வலம் ஒன்று செல்வதைக் கண்டாள் சங்கவி. அவளுக்கு என்னவோ போலிருந்தது. பறையொலி அடங்கியதும் குடிசைக்குள் நுழைந்தது ஓர் உருவம்.

சங்கவி திகைத்தாள்.

★★★



வாலிபன்

உள்ளே நுழைந்தவன் ஒரு வாலிபனாக இருந்தான்.

கட்டுடலும் கட்டழகும் வாய்ந்தவனாக இருந்தான். புருஷ லட்சணங்கள் அவனிடம் பூரணமாக இருந்தது.

தனது வாடிக்கையாளர்களில் ஒருருவர் கூட அவனைப் போன்று அழகானவர்களாக இருந்ததில்லை.

எனவே அவனைக் கண்டதும் சங்கவிக்குக் கொஞ்சம் கிளர்ச்சியாகத் தான் இருந்தது.

ஆனால் தற்போதைய வேளை ஆபத்தான வேளை என்பதாலும், ராஜகுருவை வலையில் வீழ்த்த வேண்டிய பெரிய பொறுப்பு இருந்ததாலும், ராஜகுரு எந்த நேரத்திலும் வர்க் கூடும் என்பதாலும் உடல் கிளர்ச்சியை அடக்கிக் கொண்ட அவள் "யார் நீ?" என்று கோபமாகக் கேட்டாள்.

"ஏன்? பார்த்தால் தெரியவில்லையா?" என்று கேட்டான் வாலிபன்.

"அது தெரிகிறது. எதற்காக இங்கே வந்தாய்?" என்று கேட்டாள் சங்கவி.

"தனியாக இருக்கும் ஒரு பெண்ணிடம் இந்த இரவு நேரத்தில் ஆடவன் எதற்காக வருவான்? தவம் செய்வதற்காகவா?" என்று கேட்டான் வாலிபன்.

"வாலிபனே! இந்த இடம் யாருடையது தெரியுமா? மாமன்னரது ராஜகுருநாதருடையது" என்றாள் சங்கவி.

"அப்படியா?"

"ஆமாம்."

"அது உண்மையானால் இங்கே நீ எதற்காக இருக்கிறாய்?"

சங்கவி சற்றே விழித்தாள்.

"அது உனக்குத் தேவையில்லாத விஷயம்" என்றாள் சுதாரித்துக் கொண்டு.

"சரியாகச் சொன்னாய். எனக்கு அது தேவை யில்லாத விஷயம் தான். நான் இங்கே வந்தது இந்த இருப்பிடத்தைப் பற்றி ஆராய்வதற்காக அல்ல. இந்த இடம் மன்னருக்குச் சொந்தமான இடமாகவே இருக்கட்டும். அதனால் என்ன? இப்போது இங்கே நாம் இருவர் மட்டும் தானே இருக்கிறோம்?"

"அதனால்?"

"ஆக வேண்டியதைப் பார்க்கலாமே பேச்சை விட்டு விட்டு."

"வாலிபனே! மரியாதையோடு சொல்லிக் கொள்கிறேன். இங்கிருந்து போய் விடு."

"மரியாதைகளையும் பேதங்களையும் தொலைக்க வேண்டிய சந்தர்ப்பத்தில் அவற்றைப் பற்றி எதற்காகப் பேசுகிறாய். நீ என்னை மரியாதைக் குறைவாகப் பேசினாலும் எனக்குக் கவலையில்லை."

"மூடனே! நானொன்றும் குப்பைத் தொட்டியல்ல கண்டவர்களும் துப்புவதற்கு!"

"நான் அப்படிச் சொல்லவே இல்லையே! நீ எதற்காகக் கற்பனை செய்து கொள்கிறாய்? நீ கற்பக விருட்சமாகவே இரு. நாம் ஆனந்தமாக இருப்பதற்கு எது தடை?"

"என் மனம் தான் தடை. நான் கன்னிப்பெண். உடல் தூய்மையைப் பாதுகாத்து வருபவள். நல்லதொரு திருமணத்திற்காகக் காத்திருப்பவள். உன்னைப் போன்ற காமாந்தகர்களிடம் என்னை இழப்பதற்குத் தயாராக இல்லை. உன்னைக் கும்பிட்டுக் கேட்டுக் கொள்கிறேன். என்னை விட்டு விடு."

"பெண்ணே! காலையில் நீ வந்ததிலிருந்து உன்னைக் கவனித்து வருகிறேன். காத்திருந்து வருகிறேன். உனக்குக் காவலாக இருந்த அனைவரும் சென்று விட்டபின் உள்ளே நுழைந்தேன். இதெல்லாம் உன்னை அடைவதற்காகத் தானே தவிர விட்டு விட்டு ஓடி விடுவதற்காக அல்ல."

"நான் ராஜகுருநாதர் அவர்களால் அழைத்து வரப்பட்டிருக்கிறேன். ராஜாங்க வேலை ஒன்றை நிறைவேற்றும் பொறுப்பு எனக்கிருக்கிறது. இந்த நிலையில் நீ தவறாக நடந்து கொண்டால் ராஜகுரு உன்னைச் சும்மா விடமாட்டார். கிட்டியில் கட்டிச் சித்திரவதை செய்வார்."

"ராஜகுருவைப் பற்றி உன்னை விட எனக்கு நன்றாகத் தெரியும். என்னை மிரட்டிப் பயனில்லை. எனக்கு இணங்கி விடுவதே நல்லது. சரியானது."

"ஐயா! இதென்ன பிடிவாதம்? இதென்ன கொடுமை? கன்னிப்பெண் ஒருத்தியை அவளது விருப்பத்திற்கு மாறாக இச்சிக்க நினைப்பது பாவம் என்று உங்களுக்குத் தோன்ற வில்லையா?"

"இது என்ன பேச்சு? மான்களின் விருப்பத்தைக் கேட்டுக் கொண்டா வேங்கைகள் பட்சிக்கின்றன? நானும் அப்படித்தான்."

"பெண்ணின் கற்பு என்பது உயிரைப் போன்றது. நீங்கள் தூசினைப் போல் நினைக்கிறீர்கள். கொஞ்ச நேரச் சுகத்திற்காக என் வாழ்க்கையைச் சிதைத்து விடாதீர்கள்."

"பெண்ணே! நாம் எப்போது இறக்கப் போகிறோம் என்பது நமக்குத் தெரியுமா? தெரியாது. ஆகவே சந்தோஷம் கிடைக்கும் போது அனுபவிப்பது தான் வாழ்க்கை வாய்மை, தூய்மை என்பதெல்லாம் அர்த்தமற்ற வார்த்தைகள். நமது வாழ்க்கை அகராதியில் இப்படிப்பட்ட அர்த்தமற்ற வார்த்தைகளை நிரம்பவே எழுதி வைத்திருக்கிறார்கள். ஆகவே நீ எதுவும் பேசாதே. பேசியே பொழுதை ஓட்டி விடலாம் என்று கனவு காணாதே. நானும் இனிமேல் பேசுவதற்குத் தயாராக இல்லை. காரியத்தில் இறங்க வேண்டியது தான்" என்று சொல்லி வாலிபன் அவளது கையைப் பிடித்தான்.

அப்போது பறையொலி கேட்டது.

பறையொலியை அடுத்துச் சவ ஊர்வலம் ஒன்று ஆரவாரத்துடன் வந்து கொண்டிருந்தது.

வாலிபன் இதை எதிர்பார்க்காததால் ஏமாற்றமடைந்தான்.

அந்த ஏமாற்றத்தை வார்த்தைகளில் புலப்படுத்தி "பேசியே கெடுத்து விட்டாய். ஏமாற்றி விட்டாய். இன்றைக்குப் போகிறேன். மீண்டும் வருவேன். அப்போது ஒருகணம் கூடப் பேசப்போவதில்லை. முழுக்க முழுக்கச் செயல்தான்" என்று கூறிவிட்டு குடிசையை விட்டு வெளியேறினான்.

சவ ஊர்வலம் தன்னைக் காப்பாற்றியதால் சவமாகச் சென்றவரை வாழ்த்தினாள்.

அந்த ஊர்வலம் குடிசையைக் கடந்து வெள்ளைக் குளத்தை நோக்கிச் சென்றதும் ராஜகுரு குடிசைக்குள் வந்தார்.

சங்கவி எழுந்து வந்து அவரை வணங்கி விட்டு ஓரமாக நின்றாள்.

ராஜகுரு அங்கே இருந்த அவரது பட்டு நாற்காலியில் அமர்ந்தார்.

"சாப்பிட்டேன் ஐயா" என்று சொன்ன சங்கவி "என்னைத் தனியாக விட்டு விட்டு எங்கே போய் விட்டீர்கள் ஐயா?" என்று கேட்டாள்.

"என் அலுவல்களைக் கவனிக்க வேண்டாமா? நான் இல்லா விட்டால் என்ன? உன்னைக் கவனித்துக் கொள்ளப் பணியாளர்கள் இருப்பார்களே! உனக்கு உணவு முதலிய வசதிகளைச் செய்து கொடுத்திருப்பார்களே?" என்று கேட்டார் ராஜகுரு.

"இருந்தார்கள் ஐயா. இரவுநேரம் வந்ததும் உணவளித்து விட்டு தங்களுக்காகக் காத்திருக்கும்படிச் சொன்னார்கள். பிறகு போய் விட்டார்கள். அவர்கள் போனபின்..."

"போனபின் என்ன ஆயிற்று?"

நடந்ததைச் சொன்னாள் சங்கவி.

"இதை நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை ஐயா. அதுவும் தங்கள் இருப்பிடத்திலேயே இப்படி நடந்தது எனக்குக் கவலையாக இருக்கிறது. தங்கள் இருப்பிடம் என்று குறிப்பிட்டுச் சொன்ன போதும் அவன் தனது நோக்கத்தைக் கைவிடவில்லை. மன்னரது இடமாக இருந்தாலும் கவலைப்பட மாட்டேன் என்கிறான்.

நான் தற்கொலை செய்யவிருந்ததைத் தடுத்தீர்களே, இப்போது பார்த்தீர்களா? முன்பின் தெரியாதவன் வந்து அநியாயம் செய்ய முற்படுகிறான். இதற்குத் தான் எல்லோரும் விரும்புகிறார்களே தவிர என்னைத் திருமணம் செய்து கொள்ள முன்வரவில்லை. நான் ராசியில்லாதவள். நான் பாவி. நான் வாழ்வது தவறு. சாவதே சரி" என்று சொல்லி அழுதாள் சங்கவி.

பணியாளர்கள் ராஜகுருவுக்குப் பணியாரங்களையும், பழங்களையும், பாலையும் கொண்டு வந்து வைத்தார்கள்.

"நீயும் கொஞ்சம் சாப்பிடு" என்று கூறி எல்லாவற்றிலும் கொஞ்சம் எடுத்துக் கொடுத்தார் ராஜகுரு.

அவள் மறுக்காமல் வாங்கிச் சாப்பிட்டாள். அனைத்தும் சுவையாக இருந்தன.

இருவரும் உண்டபின் பணியாட்கள் பாத்திரங்களைக் கொண்டு சென்றனர்.

ராஜகுரு தனது ஆசனத்தில் கொஞ்ச நேரம் கண்களை மூடி மௌனமாக இருந்து விட்டு "பெண்ணே! பெண்களுக்குப்

பாதுகாப்பு எங்குமே இல்லை. திருமணம் செய்து கொண்ட பெண்களுக்கும் பாதுகாப்பு கிடையாது. இது பாலியல் சம்பந்தப்பட்ட விவகாரம். ஆண் மீது பெண்ணுக்கும் பெண்மீது ஆணுக்கும் ஈர்ப்பு ஏற்படுவது இயல்பு.

இது எப்போது வேண்டுமானாலும் நடக்கலாம். போரின் போது வீரர்கள் பல்வேறு பட்ட பெண்களைக் கவர்ந்து வந்து அனுபவிக்கிறார்கள். இது நம் நாட்டை விட மேலைநாடுகளில் மிகவும் அதிகம். பெண்களை அடிமையாக்கி மகிழும் நாடுகள் மேலைநாடுகள். ஆகவே பெண்கள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ள வேண்டும்" என்றார்.

"இங்கே தனித்திருக்கும் போது இரவு நேரத்தில் திடும் மென்று வாலிபன் பிரவேசித்தால் நான் என்ன செய்ய முடியும்?"

"கைகளும் கால்களும் இருக்கின்றன அல்லவா? அவன் எதிர்பார்ப்பதற்குள் நீ தாக்கு. அவன் ஓடிவிடுவான்" என்று சொன்ன ராஜகுரு "அந்த வாலிபன் எப்படி இருந்தான்?" என்று கேட்டார்.

"அழகாகத்தான் இருந்தார்."

"உடம்பு!"

"அதுவும் தான்."

"அவன் உன்னை மணக்க விரும்பினால் ஏற்றுக் கொள்வாயா?"

"மாட்டேன் ஐயா."

"ஏன்?"

"தனிமையில் இருக்கும் பெண்ணை இச்சிக்க முயல்பவன் அயோக்கியன். அவனை எப்படி மணக்க முடியும்? காமந்தகன். ஏற்கனவே காமத்தில் ஈடுபட்டுக் கெட்டுப் போனவன். நான் தூய்மையானவள். கற்புக்கடம் பூண்டவள்.

அவன் எனக்கு ஏற்றவனே அல்ல. எனக்குத் திருமணமே இல்லாமல் போனாலும் பரவாயில்லை. இவனைப் போன்றவர்கள் வேண்டவே வேண்டாம்."

"அவன் வேண்டாம் என்றால் விடு. நான் உன்னைத் திருப் பருத்திக் குன்றத்திலிருந்து ஏன் அழைத்து வந்தேன் தெரியுமா?"

"நானும் அதைக் கேட்க வேண்டும் என்று தான் இருந்தேன் ஐயா."

"சங்கவி! பெண்களின்மீது நான் அனுதாபம் கொண்டவன். அவர்கள்மீது தூசு பட்டுவிட்டாலும் மாசுபட்டு விட்டது போல் கருதுபவன் நான். இந்த உலகத்தில் பெண்கள் பிறந்தது உலகையும் உலகோரையும் குளிர்விப்பதற்காகத் தான். உலகத்திற்குச் சூரியனும் சந்திரனும் வெளிச்சத்தைக் கொடுத்தாலும் உலகில் உள்ளோர்க்கு வெளிச்சத்தைத் தருவது பெண்கள். அவர்கள் தோன்றாமல் இருந்திருந்தால் ஆண்களில் பலபேருக்குப் பைத்தியம் பிடித்திருக்கும்.

வேலைகள் சரிவர நடக்காது. இன்பம் என்ற வார்த்தை இல்லாமலேயே போயிருக்கும். அவர்கள் புண்ணியம் செய்த பிறவிகள். ஆனால் ஆடவர்கள் அதை உணர்வதே இல்லை. ஆதிகாலத்திலிருந்து ஆண், பெண் என்ற இருகுலங்களே இருந்தன. அது மனிதர்களுக்குப் போதுமானதாக இருந்தது. அவர்களுக்கு ஆசை உண்டான போது - உயர்வு தாழ்வு உண்டானபோது குல வித்தியாசங்கள் உண்டாகி மனிதனைச் சுற்றியிருந்த கண்ணுக்குத் தெரியாத உத்தம குண அலைகள் மறைந்து போயின. மனிதன் மாறிவிட்டான். மிருகத்திற்கும் அவனுக்கும் வித்தியாசம் இல்லை என்ற நிலைக்கு வந்து விட்டான். அதன் விளைவுதான் மனிதன் பெண்களை மதிப்பதில்லை. வதைக்கிறான்."

ராஜகுரு கூறியதை நிறுத்திய போது "அவர் எப்பேர் பட்ட மனிதர்?" என்ற வியப்பு உண்டாகியது சங்கவிக்கு.

அவர் என்ன சொல்லப் போகிறார் என்பதை அறிய ஆவலாகக் காத்திருந்தாள்.

அவர் மூடியிருந்த கண்களைத் திறந்து கொண்டு "உனக்குத் திருமணம் செய்து வைப்பதற்காகத் தான் உன்னை அழைத்து வந்தேன். மகிழ்ச்சியா? உனக்கு யார் வேண்டும்? ராஜகுமாரனா? வீராதி வீரனா? தனநந்தனா? வியாபாரியா? உழைப்பாளியா? யார் வேண்டும் என்று சொல்" என்று கேட்டார்.

அவளுக்குத் தான் யார் என்பது தெரியும். தனக்கு இடப்பட்ட பணி என்ன என்பதும் தெரியும். தன்னை யாரும் திருமணம் செய்து கொள்ள முன்வரவில்லை என்று பொய்தான் சொன்னாளே தவிர அவளுக்குத் திருமணம் செய்து கொள்ளும் எண்ணம் துளியும் இல்லை. அவளுக்குத் திருப்பருத்திக் குன்றத்துத் தலைமை துறவி துலாபாரருடன் விதவிதமாகச் சல்லாபம் செய்யத் தான் பிடித்திருந்தது. ஆகவே ராஜகுருவைப் பார்த்து "எனக்கு நீங்கள் சொன்ன யாருமே வேண்டாம் ஐயா" என்றாள்.

"ஏன்?"

"அவர்கள் யார் மீதும் எனக்கு நம்பிக்கை இல்லை."

"யாரையும் நம்பாமல் யாராலும் வாழ முடியாது. சிலரையாவது நம்ப வேண்டும்."

"தங்களை நம்புகிறேன் ஐயா. தங்களிடம் பணிவிடை செய்யும் பணிமகளாக வைத்துக் கொள்ளுங்கள். அதுபோதும்."

"அவசரப் படாதே. விண்ணகரக் குடமுழுக்கு விழா இரண்டொரு நாளில் முடிந்து விடும். அதற்குப் பிறகு உனக்கு நல்லதொரு வழியைக் காட்டுகிறேன். குடமுழுக்கு விழா முடியும் வரை நானிங்கே வரமாட்டேன். மன்னரோடு நான் இருக்க வேண்டும். நீ இங்கேயே இரு. பணியாளர்கள் உனக்கு உதவியாக இருப்பார்கள்" என்று சொல்லிவிட்டுக் கண்ணை மூடினார் ராஜகுரு. உடனே அவருக்கு உறக்கம் வந்துவிட்டது.

சங்கவிக்கோ உறக்கம் வருவதாக இல்லை.

ராஜகுருவிடம் பணிப்பெண்ணாகச் சேர்ந்து விட்டால் விரைவிலேயே படுக்கையறைப் பாவையாக மாறி நினைத்ததைச் சாதித்துக் கொள்ளலாம் என்று நினைத்துத் திருப்தியடைந்தாள்.

மறுநாள் ராஜகுரு அங்கிருந்து சென்றார்.

பல்லக்கில் சென்றார்.

பணிப்பெண்கள் வந்து அவளுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தார்கள்.

குடிசையை விட்டு வெளியே செல்ல வேண்டாம் என்று அவர்கள் கூறியதால் அவளுக்குக் குடிசை சிறை போலிருந்தது. நேரத்தைக் கடத்துவதற்குச் சிரமமாக இருந்தது.

பணிப்பெண்கள் ராஜகுருவின் உத்தரவின் பேரில் பல்வேறு ஆடைகளை கொடுத்திருந்தார்களாதலால் அவற்றை அணிந்து கொண்டு அழகு பார்த்தாள் சங்கவி.

குடிசை இருந்த குறுகிய வீதியில் அடிக்கடி சவ ஊர்வலம் வந்து போய்க் கொண்டிருந்தது. வெறுப்பாக இருந்தாலும் சவ ஊர்வலம் தான் வாலிபனிடமிருந்து தன்னைக் காப்பாற்றியது என்பதால் சகித்துக் கொண்டாள்.

இரவு நேரமானபோது அவள் கேட்ட அசைவ உணவுகளைக் கொண்டு வந்து கொடுத்தார்கள் பணிப்பெண்கள். அவற்றைத் திருப்தியாக உண்டு முடித்தாள்.

“நாங்கள் அந்தத் திடலில் அமர்ந்திருக்கிறோம் அம்மணீ. தேவைப்பட்டால் கூப்பிடுங்கள்” என்று சொல்லி விட்டுச் சென்றார்கள் பணிப்பெண்கள்.

குடிசைக்குள்ளேயே இருக்க விரும்பாத அவள் மெல்ல வெளியே வந்தாள். வெள்ளைக் குளம் அருகே சென்றாள். அதற்குப் பின்னால் இருந்த சுடுகாட்டிற்குச் சென்றாள். மயானம் அமைதியாக இருந்தது. அங்கே இருந்தபடி ஊளையிடும் நரிகள் கூட மந்தமாகப் படுத்துக் கிடந்தன. எரிந்துபோன மரக்கிளைகளில் அமர்ந்திருந்த ஆந்தைகள் கூட மறதிக்கு ஆளானது போல் அமைதியாக இருந்தன. மேலும் அங்கிருக்க விரும்பாமல் குடிசைக்குத் திரும்பினாள்.

அங்கே அமர்ந்திருந்தான் வாலிபன்.

★★★



பரமேச்சுர விண்ணகரம்

சங்கவி அதிர்ந்து போனாள்.

வாலிபனோ இயல்பாக இருந்தான்.

“மறுபடியும் வந்து விட்டாயா?” என்று கோபத்தோடு கேட்டாள் சங்கவி.

“நான்சொன்னதைச் செய்வேன். செய்வதைத் தான் சொல்வேன்” என்றான் வாலிபன்.

“பணிப்பெண்கள் இருக்கிறார்கள். நான் குரல் கொடுத்தால் வந்து விடுவார்கள்” என்றாள் சங்கவி.

“வர மாட்டார்கள்”

“ஏன்?”

“அவர்களை அனுப்பி விட்டேன்.”

“அவர்களை அனுப்ப நீ யார்?”

“காசுகள் கொடுத்தால் போய் விடுவார்கள்.”

“பொய்.”

“சந்தேகமாக இருந்தால் குரல் கொடுத்துப் பார்.”

குரல் கொடுக்க எத்தனித்தாளே தவிர குரல் கொடுக்க வில்லை.

பணிப்பெண்கள் இல்லை. ராஜகுருவும் மூன்று நாட்களுக்கு வரமாட்டார். என்று எண்ணிப் பார்த்த அவளுக்கு ஆசை துளிர்விட்டது.

வாலிபனைப் பார்த்தாள்.

ராஜகுருவின் ஆசனத்தில் ராஜாவைப் போல் அமர்ந்திருந் தான் வாலிபன்.

“உன் பெயர் என்ன?” கேட்டாள் அவள் சற்றே மயங்கிய நிலையில்.

“மன்மதன்.”

"இயற்பெயரா? தொழிற் பெயரா?"

"நான் இயல்பாகவே மன்மதன்."

"உன்னை எனக்குப் பிடித்திருக்கிறது. ஆனால்..."

"ஆனால் என்ன?"

"பயமாக இருக்கிறது."

"எதற்காக பயம்?"

"யாராவது பார்த்து விட்டால்?"

"இப்போது பிணங்கள் கூட இல்லை. ஒருவரும் பார்க்க மாட்டார்கள்."

"யாராவது வந்து விட்டால்?"

"திரும்பிப் போக மாட்டார்கள்."

சங்கவிக்கு உள்ளுக்குள் குதூகலமாக இருந்தது. கற்புக்கடம் பூண்டவள் என்று ராஜகுருவிடம் கூறியிருந்த அப்பொய்யழகி, கற்பை மட்டுமின்றி கண்ணியத்தையும் பலமுறை இழந்திருந்த அந்த இளம்பெண், தற்போது வாலிபனிடம் உறவாட விரும்பினாள்.

இருவரும் விரும்பி விட்டபின் இடர்ப்பாடுகள் எதுவுமில் லாததால் சொர்க்கத்தைச் சிருஷ்டித்துக் கொண்டார்கள்.

கால்களுக்கிடையே சொர்க்கம் என்று துறவி சொன்னதை நினைத்துக் கொண்டு தன்னைப் பூரணமாக வாலிபனிடம் ஒப்படைத்தாள் சங்கவி.

வாலிபன் அழகான பெண்களிடம் மன்மத லீலைகளைக் காட்டுவதில் சமர்த்தனாக இருந்தபடியால் தனது விருப்பப்படி அவளைப் பயன்படுத்திக் கொண்டான்.

நள்ளிரவு வந்தபோது நான்கு பொற்காசுகளைக் கொடுத்து விட்டுக் கிளம்பினான்.

"நாளைக்கும் வா மன்மதா. இடம், பொருள், ஏவல் ஆகியவற்றைப் பார்த்து விட்டு வா" என்றாள் சங்கவி.

★

விண்ணகரக் குடமுழுக்கு விழாவிற்கு ஒருநாளே இருந்த நிலையில் அதைப் பார்க்க விரும்பினார் மன்னரின் ஞானகுரு. அவரை ஆலயத்திற்குத் தேரில் அழைத்து வந்து கையைப்பிடித்து அழைத்துச் சென்றான் மன்னன். ஆலயக் கட்டுமானம் மற்றும்

பூசு வேலைகள் முடிவடைந்து ஆலயமானது உண்மையான விண்ணுலக நகரமாகவே காட்சி தந்தது. ஆலயத்தைச் சுற்றிப் பந்தல்கள் போடப்பட்டு மக்கள் அங்கேயே தேக்கி வைக்கப்பட்டார்கள். ஆலயத்திற்குள் அனுமதிக்கப்படவில்லை. ஆலயத்திற்குள் மறுநாள் நடக்கவிருந்த குடமுழுக்கு விழாவிற்காக அலங்கரிப்பதற்கு இருந்த மா, வாழை, கமுகு, தென்னை, பனை ஆகிய மரங்களின் இலைகளும் குலைகளும் ஏராளமாகக் குவிக்கப்பட்டிருந்தன. உள்ளே பல இடங்களில் கட்டப்பட வேண்டிய கொடிகளும், தோரணங்களும் தயாராக இருந்தன. ஆலயத்தில் மதில்கள் ஏறக்குறைய கோட்டைச் சுவற்றைப் போலவே கட்டப்பட்டிருந்ததால் அவற்றின் மீது முரசுகள் வைக்கப்பட்டு குடமுழுக்கு நடைபெறும் போது அவற்றை முழக்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

ஆலயத்திற்குள் சாஸ்திரப்படி ஓம குண்டங்கள் அமைக்கப்பட்டுச் சுமார் ஐம்பது வேதியர்கள் மந்திரங்களை ஓதி ஆலயத்திற்குத் தூய்மையை உண்டாக்கிக் கொண்டிருந்தார்கள். யாகசாலையில் மத்திய மேடையில் விமானக் கலசத்தின் மீது புண்ணியநீரை ஊற்றுவதற்காகத் தங்கக் குடங்களில் பல்வேறு நதிகளின் தூய்மையான நீர் சேகரித்து வைக்கப்பட்டிருந்தன. பாலிகை மேடையும் அதன் பக்கத்திலேயே இருந்தது.

முக்கிய பிரமுகர்களான ராஜகுரு, கடிகைப் பல்கலை கழகத்தின் தலைவர் தரணிகண்ட போசர், காரியஸ்தரான வெங்கடபாத சோமயாஜி, சேனாதிபதி காடகமுத்தரையர் ஆகியோர் ஆலயத்தின் பலபகுதிகளைக் கண்டு அங்கே திருத்தங்களைச் சொல்லிச் சரிசெய்து கொண்டிருந்தனர். தீபங்களைச் செருகுவதற்குப் பல்வேறு இடங்களில் குழி மாடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றில் தீ வட்டிகளைச் செருகி சரிவர எரிகிறதா என்று சோதனை பார்த்தனர்.

ஞானகுருவைக் கண்ட பிரமுகர்கள் வந்து அவரை வணங்கினார்கள்.

“பெரியோர்களும், அறவோர்களும், அறிவுசால் சான்றோர் களுமாக நீங்கள் இங்கே பற்பல பணிகளை ஆற்றுவது மிகவும் திருப்தியளிக்கும் விஷயம். என்னால் தான் எதையும் செய்ய முடியவில்லை. ஒவ்வோர் அடியை எடுத்து வைப்பதற்கும் சிரமமாக இருக்கிறது. எனது துரதிருஷ்டம் அது” என்றார் ஞானகுரு.

“சுவாமி! உங்கள் வயதில் நாங்கள் உயிரோடு இருப்போமா என்று சொல்லமுடியாது. தாங்களோ வயதை வென்று ஞான

குருவாக வீற்றிருக்கிறீர்கள். நீங்கள் இருப்பதே எல்லோருக்கும் மகிழ்ச்சியான விஷயம் தான்" என்றார்கள் பிரமுகர்கள்.

"நந்தி வர்மன் பாக்கியவான். அதனால் தான் நீங்களெல்லாம் அவனுக்குக் கிடைத்திருக்கிறீர்கள். உண்மையில் அவனைக் கொண்டு வந்து மன்னனாக அமர வைத்ததே நீங்கள் தானே! நீங்கள் நீடூழி வாழ வேண்டும்" என்றார்.

பிரமுகர்கள் அகன்றபின் ஞானகுருவைக் கையைப் பிடித்து அழைத்துச் சென்று மூல விமானத்தின் பக்கங்களில் அமைத்திருந்த சிற்பங்களைக் காட்டினான்.

"இதோ பாருங்கள் ஐயா, இது சப்தரிஷி மண்டலத்தை அலங்கரிக்கும் சப்த ரிஷிகள்.

இது எட்டுக்கரங்களோடு விளங்கும் அஷ்ட புஜப் பெருமாள்.

இது கண்ணன் அசுரன் கேசிகனை வதம் செய்தது.

இது கோபியருடன் கண்ணன் அளாவளாவுவது.

இது கிருஷ்ணரும் பலராமரும் அக்ரூரரின் தேரில் ஏறி மதுராவுக்குச் செல்வது.

இது கிருஷ்ணன் சாணூரனுடன் போரிட்டு அழிப்பது.

இது கிருஷ்ணனும் மதுரா மன்னன் கம்சனும் சண்டையிடும் காட்சி.

இது மகாவிஷ்ணு கஜேந்திரனைக் காப்பது.

இது இராமர் இலங்கையைக் கடக்கக் கடலருகே நிற்பது.

இது பாற்கடலைக் கடையும் காட்சி.

இது அசுரர்கள் அமுதத்தை எடுத்துக் கொண்டு ஓட முற்படுவது.

இது நரசிம்மர் இரண்யகசிபுவை மடியில் வைத்து மார்பைக் கிழிக்கும் காட்சி.

இது இரண்யகசிபுபை அழித்த நரசிம்மரைப் பிரகலாதன் வணங்குவது.

இது கண்ணன் காளிங்கனின் மீது நர்த்தன மாடுவது.

இது மஹாவிஷ்ணு வாமனனாக வருகிறது.

இது திரிவிக்ரம கோலம்.

இதில் நான்முகனும் விஷ்ணுவும்.

இது கண்ணன் மலையைக் குடையாகப் பிடித்தது.

இது ஹயக்கிரீவர் கோலம்.

இங்கே பகவான் கலியுக முடிவில் கல்கி அவதாரம் எடுக்கவிருக்கும் காட்சி.*

மன்னன் இவ்வாறு சுட்டிக் காட்டியதும் "மிகப் பெரிய சேவையைச் செய்திருக்கிறாய் நந்திவர்மா. நீ நூற்றுக்கு நூறு பரம வைஷ்ணவனேதான். சந்தேகமே இல்லை. இந்த நாட்டின் இரு கண்களான மகாபாரதத்தையும் இராமாயணத்தையும் பலர் சுவடிகளாகவே வைத்திருக்கும் நிலையில் அவற்றையெல்லாம் காலத்தால் அழிக்க முடியாத அருஞ்சிற்பங்களாக ஆக்கி வைத்திருக்கிறாயே! உன்னை எவ்வளவு பாராட்டினாலும் தகும்" என்றார்.

"பாராட்டுவதென்றால் ஒட்டுமொத்தப் பல்லவர்களையும் பாராட்டுங்கள் ஐயா. சிம்மவிஷ்ணு மகாராஜா காலத்திலிருந்து உருவாக்கப்பட்ட சிற்பங்கள் இவை. ராஜசிம்மப் பல்லவர் இதே காஞ்சியில் கைலாசநாதனே வியக்கும் வண்ணமாய் எழுப்பிய சிவாலயத்தைத் தாங்கள் காணவில்லையா? அதிலே திருச்சுற்றில் சிலை நுட்பங்கள் அனைத்தையும் வடித்திருக்கவில்லையா? அவற்றைக் கண்டேன் நான். அவையெல்லாம் சிவ புராணங்கள் சம்பந்தப்பட்டவையாய் இருந்தன. அதற்கு மாறாக நானும் ஒரு கோயில் அமைக்க வேண்டும் - அது பெருமாள் கோயிலாக இருக்க வேண்டும். அங்கே பெருமாள் சம்பந்தப்பட்ட லீலாவினோதங்களைச் சிற்பங்களாகத் தீட்ட வேண்டும் என்று தீர்மானித்தேன். அதைத் தான் நிறைவேற்றியிருக்கிறேன்" என்றான் நந்திவர்மன்.

"நிறைய விஷயங்களைத் தீர்மானிக்கலாம், ஆனால் எத்தனை பேர் நிறைவேற்றுகிறார்கள்? அரசனும் அரசாங்கமும் அறிவிக்கும் திட்டங்கள் பற்பல. நிறைவேற்றும் திட்டங்கள் மிகச்சில. அப்படியில்லாமல் எண்ணியதை நீ நிறைவேற்றியிருக்கிறாய். உன் போன்ற மன்னர்களைத் தான் நாடு விரும்புகிறது" என்றார் ஞானகுரு.

"ஞானகுருநாதரே! பெருமாள் கோயில்கள் பெரும்பாலும் விண்ணகரங்கள் என்று அழைக்கப்படுகின்றன. விண்ணகரம்

---

* இது போன்ற ஆலய மூல விமானத்தில் நாற்புறமும் அமைக்கப்பட்டுள்ள சிலைகளை இப்போதும் காணலாம். ஆனால் அவற்றில் பல அடையாளம் காணமுடியாத நிலையில் உள்ளன. இவற்றை ஆராய்ந்து புகைப்படங்களோடு சிற்பத்தைப் பற்றிய விவரங்களை 'D. Dennis Hadson' என்பதை இரண்டு நூல்களாக வெளியிட்டுள்ளார். அவற்றில் முழுவிவரங்களையும் காணலாம்.

1. The Vaikunta Perumal Temple at Kanchipuram
2. The Body of God.



என்றால் விண்ணிலே உள்ள நகரம் என்று பொருள். விண்ணிலே உள்ள நகரம் என்றால் அது வைகுந்தம் தான். அதன் காரணத்தாலேயே பெருமாள் இருக்கும் கோயில்கள் விண்ணகரங்கள் என்று அழைக்கப்பட்டன. இங்கே குடிகொண்டிருப்பவர் வைகுந்த நாதர். அதாவது பரமேஸ்வரர். ஆகவே இவ்வாலயத்திற்குப் பரமேச்சுர விண்ணகரம் என்று அழைக்கலாம் அல்லவா?" என்று கேட்டான் மன்னன்.

"உன்னதமான பெயர். உத்தமமான பெயர். பொருத்தமான பெயர். விரைவிலேயே வடதேசத்திலிருந்து வரும் மகான் ஒருவர் இந்த ஆலயத்தை மங்களாசாசனம் செய்வார். இந்த ஆலயம் திவ்ய தேசமாகச் சிறப்பு பெறும். வைணவர்கள் மட்டுமின்றி அனைத்துத் தரப்பு மக்களும் பெருமாளைத் தரிசிப்பார்கள். காலம் காலமாக இந்த ஆலயத்தின் புகழ் பேசப்படும்" என்று சொன்ன ஞானகுரு "நான் சொன்னதைச் செய்து விட்டாயா?" என்று கேட்டார்.

"ஆம் குருநாதா."

"குருநாதரே! ஆலய விமானத்தில் வடித்துள்ள சிற்பங்களைக் கண்டீர்கள். கருவறையைச் சுற்றியுள்ள மண்டபச் சுவர்களிலும் சிற்பங்களை வடித்திருக்கிறேன். அவற்றையும் தாங்கள் வந்து காண வேண்டும்."

"இல்லை மன்னவா! எனது கால்கள் தளர்ந்துவிட்டன. இப்போது நடக்க முடியாது. ஆகவே என்னென்ன சிற்பங்கள் என்பதைச் சொல். மூச்சடங்கும் போது நினைவில் வைத்துக் கொள்வேன்."

சொன்னான் நந்திவர்மன்.

"ஒன்று புராணம். மற்றொன்று வரலாறு. உன்னைப் போல் வருங்காலத்தை மனதில் வைத்துக் கொண்டு செயல்படும் மன்னர்கள் அதிகமில்லை. பல்லவர்களே இதில் சிறந்தவர்கள்" என்றார்.

ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள தெய்வத் திருவுருவங்களைக் குடமுழக்கு விழாவிற்கு முன் தரிசிக்க அனுமதியில்லை என்பது கோயில் சாஸ்திரமாக இருந்தபடியால் கருவறையில் திரை போடப்பட்டிருந்தது.

எனவே விமானத்தை மட்டும் சுற்றிக் கொண்டு வந்தார் ஞானகுரு.

செம்போத்துப் பறவைகள் செய்யும் ஜாலங்களைக் கண்டார். சில பறவைகள் செந்நிறப் பழங்களைக் கொண்டு வந்து யாகக் குண்டங்களில் போட்டன.

அக்காட்சியைப் புருஷோத்தமனின் சகாக்களான அசலன், அபயன், அதர்மன், அசடன், அவயன் ஆகியோர் மக்களோடு மக்களாக ஆங்காங்கே நின்றபடி பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அடுத்த நாள் இதே நேரத்தில் இதே பறவைகள் கந்தகக் குண்டுகளைக் கௌவிக் கொண்டு வந்து யாக குண்டங்களில் போடப் போவதையும், ஆலயம் வெடித்துச் சிதறப் போவதையும் காண ஆவலாக இருந்தார்கள்.

மன்னன் ஞானகுருவைத் தேரில் ஏற்றி அனுப்பிவிட்டு ஆலோசனை அறையில் நீண்டநேரம் வரை ஆலோசனை நடத்திக் கொண்டிருந்தான்.

"மன்னவா! நாளை நடைபெறப் போகும் குடமுழுக்கு விழா நீ உன் வாழ்நாளில் இதுவரை செய்திராத மகோன்னதமான காரியம். பலரது கண்ணேறுபடுவதற்கு வாய்ப்பிருக்கிறது. எனவே தோஷ பரிகாரம் எதையாவது செய்து விடுவது நல்லது" என்றார் கடிகைப் பல்கலைகழகத்தின் தலைவரான தரணிகண்ட போசர்.

"என்ன செய்யலாம்?"

"புதிய ஆலயத்தை நிர்மாணித்துக் குடமுழுக்கு செய்வ தென்பது பெரும் போரில் ஈடுபடுவது போன்றது. போருக்கு முன்னால் களப்பலி கொடுப்பது போல் இதற்கும் ஏதாவது களப்பலி செய்து விடுவது நல்லது."

மன்னன் சற்று யோசித்து விட்டு "சரி, செய்து விடலாம்" என்றான்.

அரண்மனையில் மகாமந்திரி பிரம்ம ஸ்ரீராஜர் குடமுழுக்கு விழாவிற்கு வருகை தந்திருந்த விருந்தினர்களை உபசரிக்கும் பணியில் இருந்தார். நந்திவர்மன் இக்குடமுழுக்கு விழாவிற்கு தனது மாமனாரும் ராஷ்டிர கூட மன்னருமான தந்தி துர்க்கருக்கு மட்டும் அழைப்பு விடுத்திருந்தான். அவரோ தனது உடல்நிலை சரியில்லை என்று சொல்லி பிறகு எப்போதாவது அவசியம் வந்து தரிசிப்பதாகச் செய்தி யனுப்பியிருந்தார்.

தொண்டை மண்டலத்தில் இருந்த இருபத்து நான்கு கோட்டங்களில் காஞ்சி இருந்த எயிற்கோட்டத்தைத் தவிர இதர கோட்டத் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப் பட்டிருந்தது. அவற்றில் பத்து கோட்டத் தலைவர்கள் மட்டுமே வந்திருந்தார்கள்.

கோட்டைத் தலைவரான பல்லவடி அரையர் தனது நீண்டகால அனுபவத்தால் கோட்டை வாயில்களில் நுழைபவர்களை இனம் தெரிந்து சோதித்து அனுப்பும் பணியைத் திறம்படச் செய்தார்.

மறுநாள் வேதகோஷங்கள் முழங்க குடமுழுக்கு விழா கோலகலமாகத் துவங்கியது.

மக்கள் குடமுழுக்கு விழாவை மட்டும் கண்டு களிக்காமல் செம்போத்துப் பறவைகளின் அணிவகுப்புகளையும் காணவந்திருந்தார்கள். அன்று அதிகாலையில் கருடப்பறவை ஒன்று காக்கையைச் சுமந்து பறந்து சென்றது எல்லோரையும் பரவசப்படுத்தியது.

அதையடுத்து விமானத்தின் உச்சியில் பேய்ப் பறவை ஒன்று வந்து அமர்ந்ததும் எல்லோரும் அதிர்ந்தார்கள்.

★★★



குடமுழுக்கு விழா

பேய்ப் பறவையான ஆந்தையின் வரவு அபசகுனமாயிற்றே என்று கருதிய மக்கள் இனி என்ன ஆகுமோ என்று கலக்க மடைந்தார்கள்.

மன்னனும் மற்றவர்களும் ஆலயத்திற்குள் பிரவேசித்துக் கொண்டிருந்தார்கள். மங்கல வாத்தியங்கள் இசையை எழுப்பித் தாலாட்டிக் கொண்டிருந்தன. சதுர்வேதிகளும் த்ரிவேதிகளும் எழுப்பிய வேத கோஷங்கள் விண்ணையே அதிர வைத்ததால் அங்கே இருந்த கதிரவன் மேக ஆடையை இழுத்து மறைத்துக் கொண்ட காரணத்தில் வெய்யில் மறைந்து இதமான சீதோஷ்ணம் உருவாயிற்று. சுட்டெரிக்கும் வெப்பத்தைச் சுட்டரிக்கும் பெருமானின் அளப்பறிய சக்தியே இது என்று மக்கள் நினைத்தபடி பெருமாள் கோஷங்களை எழுப்பினார்கள்.

ஆனால் பொழுது விடிந்ததுமே விண்ணகரத்திற்கு வந்து விடும் செம்போத்துப் பறவைகள் இன்னமும் வராதது அவர்களுக்கு ஏமாற்றமாக இருந்தது. தினந்தோறும் நிகழும் அந்தத் தெய்வீகக் காட்சியைப் பார்த்துப் பார்த்து மகிழ்ச்சியில் பூத்துப் பூத்துக் குலுங்கும் அவர்கள் பறவைகளின் வரவைக் காணாமல் சற்றே சோர்ந்தார்கள்.

சாதாரண நாட்களிலேயே நேரம் தவறாமல் வானத்தில் பிரவேசித்து மாலைவரை மாயாஜாலங்களைப் புரிந்து வந்த பறவைகள் குடமுழுக்கு விழா நடக்கும் முக்கிய நாளில் வராததற்கும் பேய்ப் பறவையின் பிரவேசத்திற்கும் தொடர்பைக் கற்பித்துக் கொண்டு தவித்துக் கொண்டிருந்தார்கள்.

தவித்தது அவர்கள் மட்டுமல்ல. புருஷோத்தமனின் ஐந்து சகாக்களும் தான். மக்களை விட அதிகம் தவித்தது அவர்கள் தான். குடமுழுக்கு விழாவைக் காட்டிலும் பறவைகள் கந்தகக் குண்டுகளைக் கொண்டு வந்து யாகக் குண்டங்களில் போட்டு அதனால் எழும் மகிழ்ச்சியில் ஆலயம் சின்னாபின்னமாகும் சம்பவமே அவர்களுக்கு முக்கியமானதாக இருந்ததால்

பறவைகள் வராதது அவர்களை அதிர வைத்தன. குடமுழுக்கு விழாவன்று தான் வரமுடியாது என்று புருஷோத்தமன் திட்டமாகக் கூறியிருந்த படியால் யாரிடமும் வினவ முடியாமல் தத்தளித்த அவர்கள் நான்கு திசைகளிலும் கண்களை ஓட்டியபடி இருந்தார்கள்.

மன்னன் நந்திவர்மன் தலையில் குடமுழுக்குச் செய்வதற்கான நீர்க்குடத்தைச் சுமந்து கொண்டு விமானத்தின் மீது ஏறுவதற்கான படிகளின் தொடக்கத்தில் நின்றிருந்தான். அவனது கோலம் அரசனின் கோலமாக அலங்காரமாக இல்லை. பரம பாகவதனுக்குரிய எளிமையாக இருந்தது. பக்திப் பூர்வமாக இருந்தது. விஷ்ணு சகஸ்ரநாமத்தை உள்ளுக்குள் உச்சரித்துக் கொண்டிருந்தான்.

அவனுக்குப் பிறகு படிகளில் நீர்க்குடங்களோடு ஏறுவதற்காக இளவரசன் தந்திவர்மனும், அவனையடுத்து ராஜகுருவும், மகாமந்திரியும், தரணி கொண்ட போசரும், காரியஸ்தர் சோமயாஜியும், காடக முத்தரையரும், பல்லவடி அரையரும், கோட்டத் தலைவர்களும் தயாராக இருந்தார்கள்.

அவர்களது கண்களும் செம்போத்துப் பறவைகளை எதிர்நோக்கியிருந்தன என்றுதான் சொல்ல வேண்டும்.

ஆனால் பறவைகள் வருவதற்கான அறிகுறிகள் எதுவும் இல்லை.

இந்த நிலையில் வேதியர்கள் நிர்ணயித்த நேரம் வந்து விட்டதற்கு அடையாளமாகத் திருச்சின்னம் ஒலித்தது.

நந்திவர்மன் படிக்கட்டில் ஏறி விமானத்தை அடைந்தான்.

விஷ்ணு சகஸ்ரநாமத்தின் இறுதி ஸ்லோகத்தைச் சற்று உரக்கவே உச்சரித்தான்.

‘வனமாவி கதீ சார்ங்கீ
சங்கீ சக்ரீ ச நந்தகீ
ஸ்ரீமான் நாராயணோ விஷ்ணு
வாஸுதேவோ (அ) பிரக்ஷது’

மங்களவாத்தியங்கள் முழங்கின. மதில் மீதிருந்த முரசுகள் முழங்கின. யானைகள் பிளிறின. மக்கள் கோவிந்தா கோவிந்தா என்று முழங்கினார்கள். மன்னர் குடத்தில் இருந்த புனித நீரில் பாதியை விமானக் கலசத்தில் பெய்து விட்டு மீதி நீரை கீழே சூழ்ந்திருந்த மக்கள் மீது தெளித்து விட்டு மறுபுறம் இருந்த படிகளில் இறங்கினான். அவனையடுத்து மற்றவர்கள்

வரிசைப்படி புனித நீரை ஊற்றினார்கள். மன்னன் கீழே வந்தபோது அவனோடு ராணி ரேவா தேவியும் சேர்ந்து கொண்டாள். இருவருமாகக் கருவறைக்குச் சென்றார்கள். அங்கே அர்ச்சனை நடந்தது. விமானத்தின் அடுத்தடுத்த தளங்களுக்குச் செல்ல உட்புறத்திலேயே படிகள் இருந்தன. மன்னனும் ராணியும் அதில் ஏறி முதல் தளத்தில் இருந்த சயனகோலப் பெருமாளுக்கும், இரண்டாவது தளத்தில் இருந்த நின்றகோலப் பெருமாளுக்கும் அர்ச்சனைகளைச் செய்து தீர்த்த பிரசாதத்தையும் துளசி பிரசாதத்தையும் பெற்றார்கள். மன்னன் மட்டும் மூன்றாவது தளத்திற்குச் சென்று அங்கிருந்த வெற்றிடத்தை வணங்கி விட்டுக் கீழே இறங்கினான்.

மன்னனும் ராணியும் கீழே இறங்கி வந்தபின் மற்றவர்கள் தரிசனத்திற்கு வந்தார்கள். பிரமுகர்கள் தரிசனம் செய்துவிட்டு ஆலய வாசலை விட்டு வெளியேறியபின் பக்தர்கள் உள்ளே அனுமதிக்கப்பட்டார்கள்.

ஆனால் பறவைகள் மட்டும் வரவே இல்லை.

★

குடமுழுக்கு விழா நடந்து முடிந்த நாள் இரவு தனது குடிசைக்கு வந்தார் ராஜகுரு.

இரவு தொடங்கிப் பல நாழிகைகள் ஆகி விட்டிருந்தன.

பல்லக்கிலிருந்து இறங்கிய ராஜகுரு பணியாட்கள் கொண்டு வந்த பலகாரங்களையும் தண்ணீரையும் உள்ளே வைத்துவிட்டு வெளியே அவர்களைக் காத்திருக்கும்படிச் சொன்னார்.

அவர் வருவதற்கு இரண்டு நாழிகைக்கு முன்புதான் சங்கவியுடன் சல்லாபம் செய்துவிட்டு வெளியேறியிருந்தான் வாலிபனான மன்மதன்.

காமத்தைத் திருப்திகரமாக அனுபவித்த களைப்பில் சுருண்டு படுத்திருந்தாள் சங்கவி. அரை மயக்கத்தில் இருந்ததால் ராஜகுரு உள்ளே வந்ததை கவனிக்க முடியவில்லை.

அவளைக் கண்டதும் "என்ன சங்கவி! உறங்கி விட்டாயா?" என்று கேட்டு ஆசனத்தில் அமர்ந்தார்.

அதிர்ந்து போய் எழுந்த அவள் "வந்தனம் ஐயா!" என்று வணக்கம் தெரிவித்து விட்டு "மூன்று நாட்களாக என்னைத் தவிக்கவிட்டு விட்டுப் போய் விட்டீர்களே! உங்களுக்குக் கல் மனது" என்றாள்.

மூன்று நாட்களாக நன்றாக உண்டுவிட்டு வாலிபனோடு கண்டபடி காமத்தைத் தூய்த்துக் களிப்போடு இருந்த அவள் பொய் வருத்தத்துடன் வார்த்தைகளை விட்டாள்.

"ஒன்றும் பிரச்சனை இல்லையே! அந்த வாலிபன் வந்து மிரட்ட வில்லையே!" என்று கேட்டார் ராஜகுரு.

"அவன் வரவில்லை ஐயா. ஆனாலும் புதிய இடத்தில் பெண்ணான நான் தனிமையில் இருப்பது கொடுமையில்லையா? உங்களை எதிர்பார்த்து எதிர்பார்த்து தவித்துப் போய் விட்டேன். தளர்ந்து போய் விட்டேன்" என்றாள் சங்கவி.

"உண்மைதான். அதே சமயம் உன்னைத் தவிக்க வைக்க வேண்டும் என்றா சென்றேன்? இல்லை. குடமுழுக்கு விழா முடியும் வரை மன்னனுக்குத் துணையாக இருக்க வேண்டியதாகி விட்டது. விழா மிகவும் முக்கியமானது இல்லையா?"

"குடமுழுக்கு விழா நன்றாக நடந்ததா குருநாதரே?"

"ஆகா! நந்திவர்மனின் வாழ்க்கையில் இது ஒரு மறக்க முடியாத அடையாளம். வரலாறு மறுக்க முடியாத விழா. ஒரு மன்னன் நூறு போர்களில் வெல்வதும் ஒரு ஆலயத்தை நிர்மாணிப்பதும் ஒன்று சங்கவி. அதுவும் சிற்ப விசித்திரங் களுடன் ஆலயத்தை அமைப்பதென்பது அரும்பெரும் செயல். இராஜசிம்மப் பல்லவர் கைலாச நாதர் ஆலயத்தைக் கட்டினார். அதைக் கண்டு நாளும் பொழுதும் ஏங்கித் தவித்த நமது மன்னர் அதே போன்று ஓர் ஆலயத்தை அமைக்க உறுதி பூண்டார். நிறைவேற்றி விட்டார் பலர் வாக்குறுதி கொடுப்பார்கள். அது நாக்களவில் நின்று விடும். சிலர் சூளுரைப்பார்கள். வேகாத பண்டத்தைப் போல் பாதியிலேயே நின்றுவிடும். இன்னும் சிலர் பிரதிக்ஞை எடுப்பார்கள். ஆனால் நேர்மாறாகச் செய்வார்கள். எனது சீடனான மன்னன் நந்திவர்மன் திட்டமிடுவான். நடக்கக் கூடியதைச் சொல்வான். நடத்திக் காட்டுவான். காரியங்கள் அவனது கரத்தைப் பற்றிக் கொண்டு நடத்திக் கொண்டு போகும். இவனைப் போன்ற மன்னர்கள் அடிக்கடி தோன்றுவதில்லை. எப்போதாவது தோன்றுவார்கள். துருவ நட்சத்திரம் போல் சிறந்து விளங்குவார்கள்."

ராஜகுருவின் பேச்சு சங்கவிக்கு ரசிக்கவில்லை. உண்டு விட்டு உறங்கலாம் என்றிருந்தது.

நல்ல வேளையாக ராஜகுரு பலகாரங்களைத் தட்டுகளில் எடுத்து வைக்கச் சொன்னதால் அவ்வாறே செய்தாள் சங்கவி.

ராஜகுரு அதிகமாக உண்ணவில்லை. சம்பிரதாயத்திற்கு உண்பதைப் போல உண்டார். காமக் களிப்பில் திளைத்து களைத்திருந்த அவளோ பலகாரங்களை விரும்பிச் சாப்பிட்டாள்.

சாப்பிட்டு முடித்தபின் தனது ஆசனத்தில் சுவாதீனமாக அமர்ந்து கொண்ட ராஜகுரு "உன் விஷயத்தில் நான் ஒரு முடிவு எடுத்து விட்டேன் சங்கவி" என்றார்.

"மிக்க மகிழ்ச்சி ஐயா. நல்ல முடிவாகத் தான் எடுத் திருப்பீர்கள்" என்றாள் சங்கவி.

"நீ தாழ்ந்த குலமாக இருந்தாலும் சேற்றில் முளைத்த செந்தாமரை. கன்னித் தன்மையைக் காப்பாற்றி வரும் தூய்மையின் அடையாளம். ஆனாலும் எல்லோருக்கும் குலம் தான் பெரிதாகத் தெரிகிறதே தவிர உன் தூய்மையும், வாய்மையும், வேதனையும் தெரியவில்லை. இளைஞர்கள் பலரிடம் விசாரித்து விட்டேன். வீரர்கள் பலரிடம் கேட்டுப் பார்த்து விட்டேன். அதிகாரிகள் சிலரையும் அரச குமாரர்கள் சிலரிடமும் பேசிப் பார்த்து விட்டேன். ஒருவர் கூடத் திருமணம் செய்து கொள்ளத் தயாராக இல்லை. உன் இனத்தில் பிறந்தவர்கள் ஆசை நாயகிகளாக இருப்பதற்குத் தான் தகுதி படைத்தவர்களாம். அந்த அந்தஸ்து தர எல்லோருமே தயாராக இருக்கிறார்கள்" என்றார் ராஜகுரு.

"நான் ஏற்கனவே சொன்ன நிலைதானே ஐயா இது? எனக்குத் திருமணம் செய்து கொள்வதில் தான் விருப்பமே தவிர ஆசைநாயகியாக இருக்க விருப்பமில்லை. மன்னரே விரும்பினாலும் ஏற்க மாட்டேன். இத்தனை ஆண்டுகளாக நான் தவித்துத் தவித்து எனது கற்பைப் பாதுகாத்து வருவது கணிகையாக மாறி கண்டவர்களுக்கும் அதைப் பகிர்வதற்காக அல்ல. ஆகவே தான் என்னை மாய்த்துக் கொள்ள முயன்றேன்" என்றாள் சங்கவி உத்தமியைப்போல்.

"மாய்த்துக் கொள்ளும் விஷயத்தைப் பற்றி மட்டும் பேசாதே. பிறகு நான் கோபக்காரனாகி உன்னைக் காராக்கிருகத்தில் வாழ்நாள் முழுவதும் இருப்பதற்கு ஆணையிடுவேன். நீ இளந்தளிர். இளம் பயிர். இளம் காய். இளம் பருவம். இது வளர்ந்து தழைத்துச் சுகப்பட வேண்டுமே தவிர தனிச்சையாகத் தற்கொலை செய்து கொண்டுப் பேயாக அலையக் கூடாது. உன் விருப்பம் திருமணம் தானே! உன்னை நானே திருமணம் செய்து கொள்கிறேன்."

சங்கவிக்குக் குமட்டிக் கொண்டு வந்தது.

தாடியும் மீசையும் தலைமயிரும் நன்றாக முற்றிவிட்ட கிழவரைப் போய் மணப்பதா என்று ஒரு கணம் யோசித்துத் தவித்தாள்.

ராஜகுரு பேசத் தொடங்கி "என்னை மணப்பதால் என்ன நடக்கும் என்பதைச் சொல்கிறேன். முதலில் உன் அந்தஸ்து உயரும். உன்னைக் குலத்தால் உயர்ந்தவனான நான் மணப்பதால் நீ இழிந்த குலம் என்ற நினைப்பு முற்றிலும் நீக்கப்பட்டு எனக்குச் சமமாகக் கருதப்படுவாய். என்னைக் குருவாக மதிக்கும் மன்னன் உன்னைக் குருபத்தினியாக மதிப்பான். நாம் நமது இருப்பை அரண்மனைக்கு மாற்றிக் கொள்ளலாம். எனக்குள்ள அதிகாரம் உனக்கும் இருக்கும்" என்றார்.

"எல்லாம் சரி. நீங்கள் குடுகுடு கிழவராயிற்றே! துறவி துலாபாரரும், வாலிபன் மன்மதனும், இளம் வாலிபர்களும் அள்ளித் தந்த இன்பக் கடலை உங்களால் தர முடியுமா? உங்களைத் தொடுவதற்கே அருவருப்பாக இருக்கிறதே?" என்று உள்ளுக்குள் நினைத்தாள் சங்கவி.

அதேசமயம் துறவி கூறியிருந்த காரியத்திற்கு ராஜகுருவை மணந்து கொள்வது சரியாக இருக்கும் என்றும் தோன்றியது.

அவள் மௌனமாய் இருப்பதைக் கண்ட ராஜகுரு "என்ன பேச்சையே காணோம்? இந்தக் கிழவனைப் போய் மணப்பதா என்று யோசிக்கிறாயா? சங்கவி! நான் இதுநாள் வரை மணமே செய்து கொள்ளவில்லை. மணமுள்ள மலர்களைப் போல் மங்கைகள் பலர் வந்தபோது மறுத்து விட்டதற்குக் காரணம் உன்னை மணப்பதற்காகத்தானோ என்னவோ! நான் வயதானவன் என்றாலும் இளங்காளை என்பதை இப்போதே நிரூபிக்க முடியும். அதோடு நீ அனாதை அபலை. என்னிடம் சிக்கியிருக்கிறாய். உன்னை பலாத்காரமாக இப்போதே அடைந்து எனது ஆசைநாயகியாக ஆக்கிக் கொள்ள முடியும். ஆனால் நான் அத்துணைக் கொடுமைக்காரனல்ல. அப்படிச் செய்ய விரும்பியவனும் அல்ல. உடலால் நானும் தூயவன். நீயும் தூயவள். நாம் திருமணம் செய்து கொள்வது சரியானது. சிறப்பானது. என்ன சொல்கிறாய்?" என்று கேட்டார்.

"நமது திருமணத்தை எல்லோரும் ஏற்பார்களா?"

"எனது திருமணத்தை எதிர்க்க இங்கே எவன் இருக்கிறான்?"

"கேலி செய்ய மாட்டார்களா?"

"ராஜகுருவைக் கேலி செய்ய ஒருவன் இனிமேல்தான் பிறக்க வேண்டும். இருப்பவர்கள் தப்பித் தவறிக் கேலி செய்தால் அவர்களது நாக்கை நானே அறுப்பேன்."

"மன்னர்?"

"மன்னர் தலைமையிலேயே திருமணம் நடக்கும்."

சங்கவி யோசித்தாள்.

"ராஜகுரு வயோதிகர் என்பதைத் தவிர வேறு குறைபாடு எதுவும் இல்லை. கல்யாணமாகாதவர் என்கிறார். காளையைப் போல வேலையைச் செய்ய முடியும் என்கிறார். தனக்கு அதிகாரங்கள் வரும் என்கிறார். அவரை மதிக்கும் மன்னன் அவளையும் மதிப்பான். வேறென்ன வேண்டும்? ஒருவேளை அவர் காம ஆட்டத்தில் இயலாதவராக இருந்தால் வாலிபன் மன்மதனை அழைத்துக் கொள்ளலாம். அல்லது திருப்பருத்திக் குன்றத்திற்கே சென்று துறவி துலாபாரரிடம் உறவு கொள்ளலாம். அதோடு ராஜகுருவை மயக்க வேண்டிய நிலையே வரவில்லை. அவரைத் திருமணம் செய்து கொண்டு விட்டால் அதிகாரத்தின் மூலமாகவே எதையும் சாதிக்கலாம். நமக்கு இதைவிடச் செழிப்பான வாழ்வு கிடைக்காது. சிறப்பான வாழ்வு கிடைக்காது. செமத்தியான வாழ்வு கிடைக்காது. வேண்டாம் என்று மறுத்தால் திருப்பருத்திக் குன்றத்திற்குத் தான் போக வேண்டும். அது கூட முடியுமா என்று தெரியவில்லை. தான் மறுக்கும் பட்சத்தில் கட்டாயமாகப் பலாத்காரம் செய்து சாகும் வரை சிறையில் வைப்பேன் என்று சொல்கிறார். அதிகாரமும் அந்தஸ்தும் உள்ள மனிதனைப் புறக்கணிக்கவே கூடாது" என்று பலவாறு யோசித்த அவள் "எனக்கு எதுவும் தெரியாது குருநாதரே. நீங்கள் தான் வழிகாட்ட வேண்டும்" என்றாள்.

அதையடுத்து ராஜகுரு பேசிய பேச்சு அதிர வைத்தது.

★★★



மாறிய வலை

சங்கவி அதை முற்றிலும் எதிர்பார்க்காததால் அதிர்ந்தாள்.

"சுவாமி! என்மீது உங்களுக்கு நம்பிக்கையில்லையா? ஐயா! நான் ஆதரவற்ற அபலை. உலகமறியாப் பேதை. சக்கரமற்ற தேர். வேரில்லாத விருட்சம். விலை போகாத வெட்டிவேர். வாழ்க்கையே வேண்டாம் என்று முடிவு செய்து தற்கொலைக்கு முயன்ற தற்குறி. நிம்மதியாகச் செத்துமிருப்பேன். என்னைச் சாக விடாமல் காப்பாற்றி உதவுவதாகச் சொல்லி இங்கே கொண்டு வந்து திருமணமும் செய்து கொள்வதாக அறிவித்து விட்டு இப்படிப் பேசுகிறீர்களே, இது நியாயமாகுமா? எனக்கு உங்கள் கருணையும் வேண்டாம். உதவியும் வேண்டாம். என்னைத் திருப்பருத்திக் குன்றத்திற்கே செல்ல விடுங்கள். என் விதி எதுவோ அது நடக்கட்டும்" என்று கலங்கியவளாய்ப் பேசினாள்.

"எதற்காகப் பதற்றமடைகிறாய் சங்கவி? நீ தூய்மையானவள் தானே? கற்புக் கடம் பூண்டவள் தானே? சோதித்தால் அது உறுதியாகப் போகிறது. அவ்வளவு தானே?" என்றார் ராஜகுரு.

தான் யார் என்பது சங்கவிக்கு நன்றாகத் தெரியும். தனக்கும் கற்புக்கும் - தனக்கும் தூய்மைக்கும் வெகுதூரம் என்பதும் தெரியும். அதோடு சற்று முன்புதான் வாலிபன் மன்மதனோடு சரச மாடியிருந்தாள். ஆகவே கன்னித் தன்மையை ராஜகுரு சோதித்தால் தன் நிலை கந்தலாகி விடும் என்பதை உணர்ந்த அவள் "என்னிடம் நம்பிக்கையில்லாமல் தான் என்னைத் திருமணம் செய்து கொள்வதாகச் சொன்னீர்களா சுவாமி?" என்று கேட்டாள்.

"பெண்ணே! உனக்கு இராமாயணம் தெரியுமா? இராமனின் தர்ம பத்தினி சீதை இலங்கையில் இராவணனின் சிறையில் இருந்தாள். பிறகு விடுவிக்கப்பட்டாள். அவள் கற்புக் கடம் பூண்ட தெய்வம் என்று தெரிந்திருந்தும் இராமன் அவளை அக்னிப் பிரவேசம் செய்யச் சொன்னான். அதற்குக் காரணம் சந்தேகமல்ல.

சீதையின் மகத்துவத்தை உலகத்திற்கு உணர்த்துவதற்காகத் தான்" என்றார் ராஜகுரு.

"என்னிடம் மகத்துவம் இல்லை ஐயா. யாருக்கும் என்னைப் பற்றித் தெரியவேண்டியதில்லை. நீங்கள் போதும்."

"உன்னைச் சோதனை செய்து பார்க்க வெளியிலிருந்து மருத்துவர்கள் யாரையும் வரவழைக்கப் போவதில்லை. எனக்கே தெரியும் அந்தச் சோதனை."

"வேண்டாம் ஐயா. திருமணத்திற்கு முன்பே கற்பைச் சோதனை செய்ய விரும்பும் நீங்கள் திருமணத்திற்குப் பிறகு எதற்கெடுத்தாலும் சந்தேகப்படுவீர்கள். ஆடவர்களின் சந்தேகம் கொடுமையானது. எளிதில் நீங்காதது."

"சரி அதைவிடு. இப்போது நான் கேட்கும் கேள்விக்குப் பதிலைச் சொல்!"

"என்ன கேள்வி சுவாமி?"

"உன்னை இயக்குவது யார்? என்னிடம் அனுப்பியது யார்?"

"சுவாமி! இதென்ன இப்படிக் கேட்கிறீர்கள்? என்னை யார் இயக்கப் போகிறார்கள்? யாருமற்ற அனாதை நான். கரைகளற்ற குட்டை நான். வெட்ட வெளியே எனது வீடு. நீங்கள் தான் சாகவிருந்த என்னிடம் வந்தீர்கள்?"

"சங்கவி! நீ தற்கொலை செய்து கொள்ள வரவில்லை என்பது தெரியும். நான் சென்ற இடத்தில் ஆடு மாடுகள் கூட வருவதில்லை. அங்கே ஓடாமுனிப் பேய் ஒன்று வாழுகிறது. தனியாக வரும் யாரையும் அது பீடிக்காமல் விடுவதில்லை. கொஞ்ச நாட்களுக்குப் பீடித்து விட்டுப் பிறகு கொன்று காட்டில் வீசி விடும். நான் ஒருவன் தான் தைரியமாக அங்கு வருவேன். எனக்குச் சித்து வேலைகள் தெரியுமாதலால் பேய்க் கணங்கள் என்னை அணுகாது. நான் அங்கு வந்திருப்பதைத் தெரிந்து தான் யாரோ உன்னை அங்கே அனுப்பியிருக்கிறார்கள். அதனால் தான் நீயும் வந்து என் கவனத்தைக் கவருவதற்காகத் தற்கொலை செய்து கொள்வது போல் நாடக மாடியிருக்கிறாய். அது பலித்தும் விட்டது. அதற்குப் பிறகு நீ பேசியதெல்லாம் பொய்கள் என்பதும் தெரிந்து விட்டது. ஆகவே கேட்கிறேன். உன்னை என்னிடம் அனுப்பியது யார்? எதற்காக அனுப்பினார்கள்?"

கதி கலங்கிப் போனாள் சங்கவி.

தான் திட்டமிட்டதை அவர் சரியாகச் சொல்லிவிட்டதால் தன் சாயம் வெளுக்க ஆரம்பிக்கிறதோ என்ற கிலி அவளுக்கு உண்டாக்கியது.

ஆரம்பத்தில் இருந்த ராஜகுருவுக்கும் தற்போது இருக்கும் ராஜகுருவுக்கும் நிரம்ப வித்தியாசம் இருந்ததால் அவரது உண்மைச் சொரூபம் என்ன என்பது விளங்காமல் தவித்த அவள் சற்றே சுதாரித்துக் கொண்டவளாய் "என்ன சொல்கிறீர்கள் சுவாமி? நீங்கள் நினைப்பது போலெல்லாம் எதுவுமில்லை. நான் தற்கொலை செய்துகொள்ள வந்தது உண்மை. அங்கே ஜடாமுனி பேய் இருப்பதெல்லாம் எனக்குத் தெரியாது" என்றாள்.

"உனக்குத் தெரியாத விஷயங்களைப் பற்றி நான் கேட்கவில்லை. தெரிந்ததை மட்டுமே கேட்கிறேன். சொல்!"

"நான் கூறுவது தான் உண்மை."

"சங்கவி! பெண்கள் மீது எனக்கு அனுதாபம் உண்டு என்று சொன்னது பொய். பெண்களை எனக்கு அறவே பிடிக்காது. அதுவும் பொய் சொல்கிற பெண்களையும் ஏமாற்ற நினைக்கும் பெண்களையும் நான் சித்திரவதை செய்து உயிரைப் போக்குவேன். நல்லவர்களுக்கு நான் கருணைமான். மற்றவர்களுக்குக் காலன்."

"ஐயா! எதற்காக அபலைப் பெண்ணை அவலப்படுத்து கிறீர்கள்? நான் உங்களுக்கு ஒரு தீங்கும் செய்யவில்லையே!"

"பெண்ணே! என்னிடம் நாடகமாடுவது மிகவும் ஆபத்து."

"நான் நடிக்கவில்லை."

"நடிக்கிறாய் என்பதை ஆதாரத்துடன் சொல்லவா?"

"ஆதரமா?"

"ஆம். நீ தூய்மையானவள் அல்ல. கற்பை இழந்து கெட்டுப் போனவள்."

"இது அபாண்டம். அதர்மம்."

"இங்கே வந்த வாலிபனோடு சல்லாபம் புரிந்தவள் நீ."

"இல்லவே இல்லை."

"முதல் நாள் வந்தவன் நிலைமை சரியில்லாததால் சென்று விட்டான். மறுநாள் வந்தான். அவனோடு சல்லாபம் செய்தாய். மறுநாளும் வரும்படி நீயே சொன்னாய். கடந்த மூன்று நாட்களாக அவனோடு காமச் சங்கமம் புரிந்தவள். இன்றைக்கு நான் வருவதற்கு முன்பு கூட அவனோடு சல்லாபம் புரிந்திருக்கிறாய்."

"அப்படியெல்லாம் இல்லை சுவாமி. யாரோ உங்களுக்குத் தவறாகத் தகவல் சொல்லியிருக்கிறார்கள்."

"எனக்குத் தகவல் சொன்னது வேறு யாரோ இல்லை. வாலிபன் மன்மதன் தான்."

"அவன் பொய் சொல்லியிருக்கிறான். நீங்கள் நம்பி விட்டீர்கள்."

"முட்டாள். அவனை அனுப்பி வைத்ததே நான் தான். உன்மீது எனக்கு ஆரம்பத்திலிருந்து துளி நம்பிக்கையும் இல்லை. முதலில் நீ உடலால் தூய்மையானவளாக இருக்கிறாயா என்பதைச் சோதிக்கவே மன்மதனை அனுப்பினேன். கன்னி கழியாதவள் என்று சொன்னாயே அது சரிதானா என்று உறுதி செய்து கொள்ளவே அவனை அனுப்பினேன். நீ கடைந்தெடுத்தக் காமுகி என்பதையும் கணிகை என்பதையும் அறிந்தேன். என்னை நீ ஏமாற்றியதையும் அறிந்தேன். வேறு எந்த விதத்தில் ஏமாற்ற இருக்கிறாய் என்பதை அறிய வேண்டும். சொல் இப்போது! உன்னை அனுப்பியது யார்? அனுப்பிய காரணம் என்ன?"

ராஜகுருவை தன் வலையில் சிக்க வைக்க வந்தவள் ராஜகுருவின் வலையில் சிக்கி விட்டதை உணர்ந்தாள்.

மன்மதனிடம் சல்லாபம் செய்த விஷயம் உண்மையான தாகையால் அவரிடம் அதை எப்படி மறுப்பதென்று அவளுக்கு விளங்கவில்லை.

அவரே தொடர்ந்து "இன்னமும் உனக்கு நம்பிக்கை வரவில்லை என்றால் மன்மதன் உன்னிடம் என்னென்ன காமக் கலையில் ஈடுபட்டான் என்பதை விளக்கமாகச் சொல்கிறேன். இன்றிரவு அவன் வந்ததுமே..." என்று பேசிய போது -

"வேண்டாம் ஐயா. வேண்டாம். மன்மதனுடன் நான் சல்லாபித்தது உண்மை" என்றாள் சங்கவி. அவளது உடல் வியர்த்தது.

"அப்படியென்றால் நீ தூய்மையானவள் என்று சற்று முன்வரை கூறியது பொய்யாகிறது. அதிலிருந்து நீ கூறிய எல்லாமே பொய் என்பது தெரிகிறது. இப்போதாவது உண்மையைச் சொல்" என்றான் ராஜகுரு.

"வேறெதும் இல்லை ஐயா. என்னை நம்புங்கள்."

ராஜகுரு எழுந்து அவளது கன்னத்தில் பளார் என்று அறைந்தார். எதிர்பாராத நிலையில் அவர் பலமாக அறைந்ததால் அப்படியே சுழன்று கீழே விழுந்தாள்.

"நாயே! எழுந்திரு" என்றார் ராஜகுரு.

அவள் எழுந்து நடுங்கியபடி நின்றாள்.

"சொல்."

அவள் மௌனமாக இருக்கவே எரிமலையான அவர் அவளது கழுத்தை நெறித்து அப்படியே தூக்கினார்.

அவள் மரணவாயிலுக்குப் போவதை அறிந்து கீழே இறக்கி விட்டு "சொல். உன்னைச் சாகடிக்காமல் அதே சமயம் உயிர் போகும் அளவிற்குச் சித்திரவதை செய்வேன்" என்று எச்சரித்தார்.

அவளுக்குப் போன உயிர் திரும்ப வந்தது போல் இருந்தது. காமக் களியாட்டம் போட மட்டுமே தயார் படுத்தியிருந்த அவளால் இதுபோன்ற கடுமையான சித்திரவதைகளைத் தாங்க இயலவில்லை. தான் வந்த காரியம் எளிதில் முடியும் என்றுதான் அவள் எண்ணியிருந்தாளே தவிர இப்படியொரு இக்கெட்டில் முடியும் என்று சிறிதும் நினைக்கவில்லை.

எதற்காக இந்தப் பணியை ஏற்றுக் கொண்டோம் என்று நினைத்தாள் சங்கவி. துறவியின் அலாதியான காமத்தை அனுபவித்தோமா சென்றோமா என்றில்லாமல் எதற்காக இந்த ஆபத்தான வேலையில் இறங்கினோம் என்று நினைத்தாள். தனது எதிர்வீட்டுக் கணிகையான பவானி தன்னைத் தடுத்ததை நினைத்தாள். துறவி தெரிந்தே தான் சிக்கலில் சிக்க வைத்து விட்டாரோ என்று நினைத்தாள்.

துறவி மீது அவளுக்கு ஆத்திரம் வந்தது. மனதிற்குள்ளேயே அவரைச் சபித்தாள். ராஜகுருவையும் சபித்தாள். இருவருமே அவளது வெறுப்புக்கும் சாபத்திற்கும் ஆளானார்கள். ராஜகுருவை ஏறெடுத்துப் பார்ப்பதற்கே அவளுக்குப் பயமாக இருந்தது. துறவியைப் பற்றிச் சொல்லாமல் அங்கிருந்து தப்ப முடியாது என்பதை உணர்ந்த அவள் ராஜகுருவிடம் எல்லா உண்மைகளையும் சொன்னாள்.

சொல்லிவிட்டு "என்னை விட்டு விடுங்கள் ஐயா" என்றாள்.

அவர் பதில் பேசவில்லை.

மறுநாள் வெள்ளைக்குளக் கரையில் உயிரற்ற சடலமாகக் கிடந்தாள் சங்கவி.

★

குடமுழுக்கு நடைபெற்று முடிந்த மூன்றாம் நாள் -

திருக்கழுக்குன்றத்தை அடுத்த வல்லம் என்னும் கிராமத்தில் இருந்த இரண்டடுக்கு குடைவரையில் இரண்டாவது அடுக்கில் அமர்ந்திருந்த அபயன் அங்கே இருந்தவர்களைப் பார்த்தான்.

பிறகு புருஷோத்தமனைப் பார்த்தான்.

"மிகவும் அருமை புருஷோத்தமரே! குடமுழுக்கு விழா இவ்வளவு சிறப்பாக நடந்ததை எங்கேயும் நான் கண்டதில்லை.

ஒரு பிரச்சனையும் இல்லாமல் சீரும் சிறப்புமாக நடந்த குடமுழுக்கு இதுவாகத் தான் இருக்கும். என்ன இருந்தாலும் மன்னர் மன்னர் தான். நாம் நாம் தான். புலி வேறு. புலி வேடம் போடுவது வேறு. இது நமக்கு ஏன் புரியாமல் போனது என்பது தான் புரியவில்லை" என்றான்.

"நான் ஆரம்பத்திலேயே எது நடக்காது என்று நினைத்தேனோ அது நடக்கவில்லை. எது நடக்கும் என்று நினைத்தேனோ அது தான் நடந்திருக்கிறது. இதற்கு நீங்கள் இவ்வளவு மெனக்கெட்டிருக்க வேண்டியதில்லை" என்றான் அவயன்.

"மந்திரமும் தந்திரமும் நிலையானவை யல்ல. திடீர் எனக் காலை வாரி விட்டுவிடும். நம்மாலேயே முடியாத விஷயத்திற்கு வெற்றுப் பறவைகளை நம்பியது அறிவீனம்" என்றான் அசலன்.

"தங்களை நான் மிகவும் நம்பியிருந்தேன். குடமுழுக்கு விழாவன்று கோயில் இடிந்து விழுந்திருந்தால் அதற்கு நானே காரணம் என்று ஊர் முழுவதும் சொல்லி வரலாற்றில் இடம்பிடிக்கலாம் என்று நினைத்திருந்தேன். நீங்களோ இப்போது என்னை வாயைத் திறக்க முடியாதபடிச் செய்து விட்டீர்கள்" என்றான் அதர்மன்.

சகாக்கள் ஐவரும் புருஷோத்தமனை மாறி மாறி ஏசிக் கொண்டிருந்தனர்.

புருஷோத்தமன் எதுவும் பேசவில்லை.

புறப்படுவதற்காக எழுந்தான்.

"ஐயா! இது என்ன! நாங்கள் பேசிக் கொண்டிருக்கிறோம். நீங்கள் எழுந்து செல்கிறீர்களே?" என்று கேட்டார்கள் சகாக்கள்.

"நீங்கள் பேசவில்லை. ஏசுகிறீர்கள். ஏசுகிறவர்களிடம் பேசுவதற்குக் கூசுகிறேன்" என்றான் புருஷோத்தமன்.

"ஐயா! நாங்கள் நொந்து போய்ப் பேசுகிறோம். வெந்து போய்ப் பேசுகிறோம்" என்றார்கள் சகாக்கள்.

"நான் மட்டுமென்ன குதூகலத்தில் கொப்பளித்துக் கொண்டா இருக்கிறேன்? இத்தனைக்கும் பறவைகளை விட்டுப் பரமேச்சுர விண்ணகரத்தைத் தகர்க்கும் திட்டத்தில் நீங்கள் வெறும் பார்வையாளர்கள். அசைந்த ஒரு தூசிற்கும் நீங்கள் பொறுப்பல்ல. வெறும் பார்வையாளர்களான உங்களுக்கே இவ்வளவு கோபம் - ஏமாற்றம் - வேதனை என்றால் எனக்கு எவ்வளவு இருக்கும் என்று யோசித்தீர்களா? பறவைகள் ஒரு போதும் பிழை செய்யாது. பிழை செய்வது மனிதர்கள் குணம். எனக்கு உங்கள்மீது தான்

சந்தேகமாக இருக்கிறது. உங்களில் யாரோ அல்லது நீங்கள் எல்லோருமோ இந்த திட்டத்தைப் போட்டுக் கொடுத்து விட்டீர்கள் என்று நினைக்கிறேன்" என்றான் புருஷோத்தமன்.

"ஐயா! இது அபாண்டம். திட்டத்தைக் காட்டிக் கொடுத்திருந்தால் இங்கே வந்து உங்களை ஏசுவோமா? நாங்கள் உங்கள் திட்டங்களுக்கு உயிர் கொடுத்தாவது வெற்றிக்கு உதவுவோம் என்று சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.எங்களையா இவ்வாறு சந்தேகிக்கிறீர்கள்?" என்று கேட்டார்கள் சகாக்கள்.

"கெட்ட நேரம் வந்து விட்டால் குட்டுகள் அடுத்தடுத்து வரும் போலிருக்கிறது."

"என்ன சொல்கிறீர்கள் தலைவரே?"

சொன்னான் புருஷோத்தமன்.

அதிர்ந்தார்கள் சகாக்கள்.

★★★



சகாக்களின் போக்கு

"உண்மையா தலைவரே? இது உண்மையா?" என்று கேட்டார்கள் சகாக்கள்.

"உங்களிடமெல்லாம் பொய் சொல்லி நேரத்தை வீணடிக்கவா நான் இருக்கிறேன். என் கஷ்டம் ஒன்றென்றால் துரதிருஷ்டம் வேறொன்று" என்று அலுத்துக் கொண்ட புருஷோத்தமன் தொடர்ந்து பேசமுற்பட்டு "தொண்டை மண்டலத்தில் இருப்பது இருபத்து நான்கு கோட்டங்கள். இதில் காஞ்சி இருக்கும் எயிற்கோட்டத்துடன் சேர்த்து மொத்தம் பதினோறு கோட்டத் தலைவர்கள் பல்லவ மன்னனை ஆதரிக்கிறார்கள். மீதமுள்ள பதின்மூன்று கோட்டத் தலைவர்கள் என்னை ஆதரிக்கிறார்கள். இது உங்களுக்குத் தெரியுமல்லவா?" என்று கேட்டான்.

"தெரியும் தலைவரே! நீங்கள் தானே அவர்களை ஒவ்வொருவராக மடக்கி உங்கள் பக்கம் சேர்த்தீர்கள்?"

"எதற்குச் சேர்த்தேன்? தத்தம் கோட்டங்களில் அவர்கள் ஆயுதங்களையும் வீரர்களையும் ரகசியமாகச் சேர்த்து நான் கூறும்போது காஞ்சியைக் கைப்பற்ற வேண்டும் என்பதற்காகத் தானே?"

"ஆமாம். ஆமாம்."

"தற்போது எல்லாமே போய்விட்டது. பதின்மூன்று முட்டாள்களால் காரியம் கெட்டுவிட்டது. கட்டப்பட்டு வந்த தேர் முறிந்து விட்டது. வளர்ந்து வந்த மரம் பிளந்து விட்டது. சேகரிக்கப்பட்ட தானியங்கள் தீக்கிரையாகி விட்டன. என் திட்டம் குலைந்து போன கட்டடமாக மாறிவிட்டது."

"என்ன சொல்கிறீர்கள் தலைவரே?"

"கோட்டத்தலைவர்கள் பதின்மூன்று பேர் என்னை ஆதரித்தாலும் அந்த ஆதரவு நமக்கான காலம் கனியும் வரை வெளிப்படையாக இருக்கக் கூடாது என்றும் கமுக்கமாக இருக்க

வேண்டும் என்றும் நான் சொல்லியிருந்தேன். பதின்மூன்று முட்டாள்கள் அதை மறந்து விட்டார்கள்."

"என்ன செய்தார்கள் தலைவரே?"

"பதின்மூன்று முட்டாள்களும் குடமுழுக்கு விழாவுக்கு வரவில்லை. தங்கள் நிலையைப் பகிரங்கப்படுத்தி விட்டார்கள்."

"அதனால்?"

"அவர்களில் ஒருவனைத் தவிர பன்னிரண்டு பேர்களையும் கைது செய்து சிறையில் அடைத்து விட்டான் நந்திவர்மன்."

அதிர்ந்தார்கள் சகாக்கள்.

"இது மிகவும் மோசம் தலைவரே! விழாவிற்கு வராவிட்டால் கைது செய்து சிறையில் அடைப்பது தான் நடைமுறையா? இது முறையா?" என்று கேட்டார்கள்.

"இதில் நடைமுறை என்று இருக்க வேண்டியதில்லை. மன்னனின் ஆணை தான் நடைமுறை. ஏதோ ஒரு சில கோட்டத் தலைவர்கள் வராதிருந்தால் சந்தேகிக்க இடமில்லை. பதின்மூன்று பேர் வராமல் இருந்தால் சந்தேகம் வராதா? அப்படியென்ன அவர்களுக்குக் குடிமுழுகக் கூடிய வேலை என்ற கேள்வி எழாதா? பதின்மூன்று பேர்கள் தாங்கள் வராமல் போனதற்கு எந்த விதமான காரணத்தையும் மன்னனுக்குத் தெரிவிக்கவில்லை. மன்னனுக்கு வராதா கோபம்? அவர்கள் வராததை அலட்சியமாகக் கருதிய மன்னன் திடீரென அவர்களைக் கைது செய்து விட்டான்."

"இனிமேல் விசாரணை நடக்குமல்லவா?"

"நிச்சயமாக நடக்கும். இந்தக் கோட்டைத் தலைவர்கள் வெறும் கொட்டைப் புளியாக இருந்திருக்கிறார்கள். பகைமையை உள்ளே வைத்துக் கொண்டு நல்லவர்களைப் போலக் குடமுழுக்கிற்குப் போயிருக்க வேண்டும். போயிருந்தால் மன்னனுக்குச் சந்தேகம் வந்திருக்காது. அரிச்சுவடி விஷயத்தைக் கூட இந்தக் கோட்டான்களுக்கு நான்தான் கற்றுக் கொடுக்க வேண்டுமா? அவர்களென்ன விரலைச் சூப்பும் விவரமறியாத குழந்தைகளா?"

"தலைவரே! மன்னருக்கு அவர்கள்மீது சந்தேகம் என்றால் விசாரணையானது சாதாரணமாக இருக்காது அல்லவா?"

"ம்."

"விசாரிக்கும் விதத்தில் விசாரித்தால் நீங்கள்தான் காரணம் என்று சொல்லி விடுவார்கள் அல்லவா?"

"ம்."

"சொல்லிவிட்டால் தங்களைக் கைது செய்ய முற்படு வார்கள் அல்லவா?"

"ம்."

"தங்களைக் கைது செய்து விட்டால் எல்லாம் முடிந்து விடும். இதற்காகவா பல மாதங்கள் கஷ்டப்பட்டோம்? கீழே விழுந்தவனை குதிரை குழியையும் பறித்துத் தள்ளிவிட்ட கதையாகி விட்டது நம் நிலை. பரமேச்சுர விண்ணகர விஷயம் தோல்வியுற்ற கையோடு கோட்டைத் தலைவர்கள், விவகாரமும் அடியற்றுப் போய் விட்டதால் நாம் இனிமேல் திட்டம் தீட்ட முடியாது. சிறையில் இருந்து கொண்டு கம்பிகளைத் தான் காலமெல்லாம் எண்ண வேண்டும்."

"முதுகெலும்பில்லாத முட்டாள்களே! புலம்பியே தீர்க்கும் பயங்கொள்ளிகளே! என்னவோ நீங்களெல்லாம் படாதபாடு பட்டு உழைத்த மாதரி பேசுகிறீர்களே! நீங்களெல்லாம் என்னோடு இருந்து வெறுமனே வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் என்பது நினைவில் இருக்கட்டும். உங்களுக்கு உறுத்தலாகவும் உதறலாகவும் இருந்தால் ஓடிப் போய் ஒளிந்து கொள்ளுங்கள். மன்னனிடம் நான் சிக்க மாட்டேன். தப்பித்துக் கொள்ள எனக்குத் தெரியும். எழுந்து ஓடுங்கள்" என்று கடுகடுத்தான் புருஷோத்தமன்.

சகாக்களுக்கு ஒரு கணம் என்ன பேசுவது என்பது புரிய வில்லை. புருஷோத்தமனோடு இருக்கும் வரை அவர்களுக்கு உணவுக்குக் குறைவில்லாமல் இருந்தது. அவ்வப்போது ஏதாவது பொருள் கிட்டி வந்தது. அவனை விட்டுவிட்டு ஓடி விட்டால் எதுவும் கிடைக்காது.

புருஷோத்தமன் அடுத்தடுத்து இரண்டு திட்டங்களில் தோற்றவன் தான். ஆனால் அவன் சாமர்த்தியம் நிறைந்தவன். இழந்ததை ஈடுகட்டக் கூடிய திறமை வாய்ந்தவன். தற்போதைய தோல்விகளை வெற்றியாக மாற்றும் திறன் அவனுக்கு உண்டு. எனவே அவனோடு இருப்பது தான் பயனுள்ளது என்பதை உணர்ந்த சகாக்கள் "எங்களை மன்னித்து விடுங்கள் தலைவரே. அடுத்தடுத்துத் தோல்விகள் வந்து விட்டதால் கலங்கிப் போய் புலம்பி விட்டோம். இப்போது தோற்றாலும் வெற்றியை ஈட்டும் திறமை தங்களுக்கு உண்டு. நாங்கள் நம்புகிறோம். உங்களை விட்டுவிட்டு ஓடிவிட நாங்கள் விரும்பவில்லை" என்றார்கள்.

"அப்படியானால் விசாரணை முடியும்வரை நீங்கள் ஐவரும் இங்கே இருக்க வேண்டாம். திருவேங்கட மலைக்குச் சென்று

விடுங்கள். விசாரணை முடிந்தபின் உங்களை அழைத்துக் கொள்கிறேன்" என்றான் புருஷோத்தமன்.

"தலைவரே! கோட்டத்தலைவர்களில் ஒருவர் தப்பி விட்டதாகச் சொன்னீர்களே அவர் யார்?" என்று கேட்டார்கள் சகாக்கள்.

"வேலூர்க் கோட்டத்துத் தலைவன் கொடுமுடி" என்றான் புருஷோத்தமன்.

★

கடல் மல்லையில் கடலோரம் இருந்த காதலர்கள் குடில் களில் ஒன்றைத் தவிர மற்ற அனைத்துமே காலியாக இருந்தன. அந்த ஒரு குடிலுக்குள் வேலூர்க் கோட்டத்துத் தலைவனான கொடு முடியும் கணிகை மயிலழகியும் குடியிருந்தார்கள்.

அங்கே இருந்த காதலர்கள் குடில்கள் அனைத்தையும் வாடகைக்கு எடுத்திருந்த கோட்டத் தலைவன் அவற்றுக்கான வாடகைத் தொகையை தனது கோட்டத்தில் தவறான வழிகளில் சேர்த்து வைத்திருந்த செல்வத்திலிருந்து கொடுத்திருந்தான். ஆகவே பிற குடில்களைக் காலியாக வைத்துவிட்டு எந்தவிதத் தொல்லையும் வராமலிருக்க வழி செய்து கொண்டான். குடில்கள் காப்பாளனிடம் தான் இருப்பதை ஒருவருக்கும் சொல்ல வேண்டாம் என்று கூறி அதற்கும் கையூட்டு கொடுத்திருந்தான்.

காதலர்கள் குடில்கள் கடல்மல்லைத் துறைமுகத்தின் தெற்கே இரண்டு காத தூரத்தில் இருந்தது. காதலர்களும், கள்ளக் காதலர்களும், கணிகைகளும் சுகமாக இருப்பதற்காக அக் குடில்கள் கட்டப்பட்டிருந்தன. நகரத்தின் ஆரவாரத்தைத் தவிர்க்க விரும்பிய மேற்படி வகையினர் தனிமையை விரும்பியபடியால் அவர்களுக்கென்று குடில்களைக் கட்டிக் கூடுதலான வாடகையை வசூலித்து சிறப்பாகவும் செழிப்பாகவும் காலத்தைக் கடத்திவந்தான் குடில்களின் காப்பாளன்.

கோட்டத் தலைவனும் கணிகை மயிலழகியும் குடியிருந்த குடிலானது கடலலைகள் தரையைத் தொடும் இடத்திற்குப் பத்தடி தள்ளியிருந்தது. ஆகவே கடலலைகளின் ஆரவாரம் குடிலுக்குள் எப்போதும் எதிரொலித்து "எச்சரிக்கை. நான் எப்போது வேண்டுமானாலும் குடிலுக்குள் பிரவேசித்து விடுவேன்" என்று மிரட்டுவது போலிருந்தது.

இரவு நேரம் முகிழ்த்து இரண்டு நாழிகைகள் ஆகியிருந்தது. பகலிலேயே வந்து விட்ட அவர்கள் பரதவர் இருவரைத்

துணையாகக் கொண்டு வேண்டிய உணவு வகைகளை வரவழைத்து அருந்தி விட்டுக் களியாட்டத்தில் ஈடுபட்டு வந்தார்கள். குடிலுக்குள் இருந்தபடி கடலைப் பார்த்த நிலையில் உடலை இன்பக்கடலுக்குள் ஆழ்த்திக் கொண்டிருந்தார்கள்.

இரவு நேரம் முகிழ்த்தபோது இடைவேளை விட்ட அவர்கள் குடிலைவிட்டு வெளியே வந்து கடல்நீரில் காலை வைத்தபடி கடலை நோக்கினார்கள். அங்கிருந்து வடக்கே பல புள்ளிகள் தெரிந்தன. அவை துறைமுகத்தில் ஏற்றப்பட்டிருக்கும் விளக்குகள் தான் என்பதை அறிந்த அவர்கள் ஆழ்கடலிலும் அத்தகைய புள்ளிகள் தெரிவதைப் பார்த்தார்கள். அவை துறைமுகத்திற்குள் காத்திருக்கும் மரக்கலங்களில் காணப்படும் விளக்குகள் என்பதை அறிந்து கொள்ள அவர்களுக்குச் சிரமம் ஏதுமில்லை.

கீழைநாடுகளின் கடல்வாணிபம் நாகையை விடக் கடல் மல்லையில் அதிகமாக இருந்தது. பல்லவர்கள் பேரரசாக இருந்த தாலும், கடலில் ஆதிக்கம் செலுத்தியதாலும், அவர்களது தலைநகர் கடல்மல்லையிலிருந்து அருகில் இருந்ததாலும், அக்கடல் மல்லையிலிருந்து சரக்குகளைக் கொண்டு செல்ல இரு நகரத்திற்கும் இடையே சீரான சாலை வசதி இருந்ததாலும் வணிகக் கப்பல்கள் பகல் இரவு என்ற வித்தியாசம் இல்லாமலும் இடைவெளிகள் இல்லாமலும் துறைமுகத்திற்கு வந்து கொண்டிருந்தன. எனவே நாள் முழுதும் துறைமுகமானது ஆரவாரமாகவே இருந்த காரணத்தாலும், நகரத்தில் இருந்தால் தன்னைக் கண்டுபிடித்து விடுவார்கள் என்பதாலும், தலைமறைவாக இருக்க காதலர் குடில்களே ஏற்றது என்பதாலும் அங்கே வந்திருந்த கோட்டத் தலைவனான கொடுமுடி மயிலழகியை அழைத்துக் கொண்டு கடலுக்குச் சென்று நீராடினான்.

அதுவரை மயிலழகி கடல்பக்கமே வந்ததில்லை. ஆகவே கடல் நீராட்டம் அவளுக்குப் புதியதாக இருந்தது. அதோடு அவளை அணைத்த படி கடலுக்குள் சென்ற கோட்டத் தலைவன் அவளது உடலோடு விளையாடிய காரணத்தால் ஆனந்தமாக இருந்தது அவளுக்கு.

நீராடி விட்டு வந்தது அவர்களுக்குப் போராடி வெற்றி பெற்ற மாதிரி இருந்தது. குடிலுக்குள் வேற்றாடை அணிந்து, பரதவர் மூலம் வந்த கள்ளையும் புலால் உணவையும் உண்டு திருப்தியடைந்த நிலையில் கேட்டாள் மயிலழகி.

"கோட்டத் தலைவர்கள் எல்லோரும் கைதான போது நீங்கள் மட்டும் எப்படித் தப்பினீர்கள்?"

"மன்னர் கைது செய்வதற்கான ஆணையைப் பிறப்பித்த போது நான் காஞ்சியில் தான் இருந்தேன். கைதானையைக் கேள்விப்பட்டதும் நான் வணிகர் வேடத்தில் காஞ்சியை விட்டு வெளியேறி கடல்மல்லைக்கு வந்தேன். காவலர்கள் என்னைத் தேடிக்கொண்டு வேலூர்க் கோட்டத்திற்குப் போயிருப்பார்கள். ஏமாந்திருப்பார்கள். நான் கடல் மல்லைக்கு வந்துபோது என் அதிருஷ்டம் நீ இங்கேயே இருந்தாய். நகரத்தில் இருந்தால் பிடிபட்டு விடுவோம் என்பதால் காதலர் குடிலுக்கு உன்னையும் அழைத்து வந்தேன்" என்றான் கோட்டத்தலைவன்.

"நீங்கள் மட்டும் தப்பியதால் என்ன பயன்? மற்றவர்கள் பிடிபட்டு விட்டார்களே?" என்று கேட்டாள் மயிலழகி.

"மற்றவர்களைப் பற்றி நான் ஏன் கவலைப்பட வேண்டும்? அந்த வேலை எனக்கெதற்கு? என்னைக் காப்பாற்றிக் கொள்ள நினைத்தேன். காப்பாற்றிக் கொண்டு விட்டேன். அவ்வளவு தான்."

"அப்படியானால் கைதானவர்களின் கதி?"

"எதுவானால் தான் எனக்கென்ன?"

"புருஷோத்தமர் கவலைப்படுவார் அல்லவா?"

"அவர் தானே தலைவர்! அவர்தான் கவலைப்பட வேண்டும். எனக்கென்ன?"

"பிடிபட்டவர்களை வைத்துக் கொண்டு புருஷோத்த மரையும் பிடிக்கலாம் அல்லவா?"

"புருஷோத்தமர் அவ்வளவு எளிதில் சிக்கிக் கொள்கிறவர் அல்ல. அப்படிச் சிக்கிக் கொண்டால் நான் செய்யக் கூடியது ஒன்றுமல்ல."

"உங்கள் உத்தேசம் தான் என்ன?"

"உன் உடைகளைக் களைந்து விடு. உத்தேசத்தைச் சொல்கிறேன்."

"நான் அந்த உத்தேசத்தைக் கேட்கவில்லை."

"நீ கேட்காவிட்டாலும் என் உத்தேசம் அதுதான்."

"பகலெல்லாம் ஆட்டம் போட்டது போதாதா? அதோடு நான் உங்களோடு தானே இருக்கிறேன்! நான் கேட்டது இதையல்ல. அரசியலில் உங்கள் உத்தேசம் என்ன?"

"நான் சரியாகத்தான் சொல்கிறேன் மயிலழகி. என் உத்தேசம் உன்னோடு களியாட்டம் போட்டு ஆனந்தமாக இருப்பது தான்."

"கோட்டத்தலைவர் பதவி?"

"அது போய் விட்டது. மீண்டும் கிடைக்காது. ஆனால் நான் சம்பாதித்து விட்டேன். சாகும் வரை கவலையில்லை."

"உங்களைக் கண்டுபிடித்துக் கைது செய்து விட்டால்?"

"காலன் கூட என்னைக் கைது செய்ய முடியாது. நான் அறிவாளி. பாதுகாப்பானவன். இனி எனக்குச் சந்தோஷமே இலக்கு. ஆனந்தமே வாழ்க்கை. நான் சொன்னதைச் செய். ஆனந்தத்தில் பங்கு கொள்."

அவனது வார்த்தைகள் சப்பென்று இருந்தது மயிலழகிக்கு.

பதவி இல்லாதவனிடமும் பதவியை வேண்டாம் என்று சொல்பவனிடமும் நாட்டம் காட்ட விரும்பவில்லை.

"எனக்கு உடம்பு வலிக்கிறது" என்றாள்.

"எல்லாம் சரியாகி விடும்" என்று சொன்ன கோட்டத் தலைவன் அவளது ஆடையை அகற்ற முயன்றான்.

அப்போது காவலர்கள் உள்ளே பிரவேசித்தார்கள். அவர்களுக்குப் பின்னால் குடில்கள் காப்பாளன் நின்றிருந்தான்.

★★★



பறவைகள் மாயம்

மன்னனின் ஞானகுரு எதையும் நுட்பமாகப் பார்ப்பவர். அதே சமயம் அளவோடு பேசுபவர்.

அவரிடம் பணிபுரிபவர்கள் சிலர் அவரிடம் வந்து ஒருமாத காலமாக பரமேச்சுர விண்ணகரத்தின் மேலே செந்நிறப் பறவைகள் சில பறப்பதாகச் சொன்னார்கள். செந்நிறப் பழங்களை கௌவிக் கொண்டு வந்து போடுவதாகவும் மக்கள் அதைத் தெய்வீகப் பிரசாதமாகக் கருதி உண்பதாகச் சொன்னார்கள். அவற்றின்மீது அன்புகாட்டிப் பழகுவதாகவும் தினமும் அவற்றைக் காண நிறைய பேர் ஆலயத்தில் கூடுவ தாகவும் சொன்னார்கள்.

அந்தப் பறவை கொண்டு வந்து போடும் பழம் ஒன்று கிடைத்தால் கொண்டு வரும்படிச் சொன்னார் ஞானகுரு.

அவர்களும் ஒருநாள் கழித்து ஒரு பழத்தைக் கொண்டு வந்து கொடுத்தார்கள்.

பழத்தை வாங்கிப் பரிசோதிப்பது போல் பார்த்துவிட்டு "எத்தனைப் பறவைகள் வருகின்றன?" என்று கேட்டார்.

"இருபது பறவைகள் சுவாமி."

"ஆரம்பத்திலிருந்தே இருபது பறவைகள் வருகின்றனவா?"

"முதலில் ஒன்று. பிறகு இரண்டு. பிறகு ஐந்து. பிறகு பத்திற்கு மேல். கடைசியாக இருபது."

"பழங்களை எத்தனை முறை கொண்டு வருகின்றன?"

"ஒரே ஒரு முறை தான்."

"ஆக இருபது பழங்கள். இல்லையா?"

"ஆம் சுவாமி. அதைப் பெற மக்கள் போட்டி போடு கிறார்கள்."

"பழங்களைப் போட்டு விட்டு என்ன செய்கின்றன?"

"விதானத்தைச் சுற்றிப் பறக்கின்றன. மதில்கள் மீது உட்காருகின்றன. மக்கள் இருக்கும் பக்கத்தில் சென்று அமர்ந்து மெல்லிய குரலை எழுப்புகின்றன. யாரையும் தொல்லைப் படுத்துவதில்லை."

"மக்கள் அவற்றுக்கு ஏதாவது தின்பண்டம் தருகி றார்களா?"

"முதலில் தரவில்லை. பிறகு தந்தார்கள். அப்பறவைகளோ ஏற்பதில்லை."

"காலையில் எப்போது வருகின்றன?"

"பொழுது விடியும் போது."

"எப்போது செல்கின்றன?"

"பொழுது சாயும் போது."

"கூட்டமாக வருகிறதா? ஒவ்வொன்றாக வருகிறதா?"

"கூட்டமாகத் தான் சுவாமி."

"இரவில் என்றாவது வருகிறதா?"

"இல்லை. அதோடு இன்னொரு விஷயம்."

"என்ன?"

"இரண்டு முறை கருடப் பறவை ஆலயத்தின் விதானத்தின் மீது பறந்தது. அதன்மீது ஒரு காக்கை அமர்ந்திருந்தது."

"சரி. நீங்கள் போகலாம்."

பணியாளர்கள் வந்து போனதற்குப் பிறகு இரண்டு நாள் கழித்து மன்னன் வந்து ஞானகுருவைச் சந்தித்தபோது "விண்ணகரத்தின்மீது செந்நிறப் பறவைகள் இருபது ஒருமாத காலமாகப் பறக்கிறதாமே! இதை ஏன் என்னிடம் கூறவில்லை?" என்று கேட்டார்.

"சாதாரணமான விஷயம் தானே குருநாதரே! ஆகவே தான் சொல்லவில்லை" என்றான் மன்னன்.

"நீ போரில் தோற்று கோட்டைக்குத் திரும்பும்போது உனக்குக் குடை பிடிப்பதுபோல் வானத்தில் நாரைகள் பறப்பது தான் உனக்கு அசாதாரணமானதா?"

"நான் அதையே கூட அசாதாரணமானதாக நினைக்க வில்லை. மற்றவர்கள் தான் பரவசப்பட்டார்கள். தாங்கள் கூட அதற்கு ஒரு காரணத்தைச் சொன்னீர்கள்."

"நந்திவர்மா! நான் உன்னிடம் தவறாகச் சொல்வேன் என்று நினைக்கிறாயா? நான் கூறியது சரிதான் என்பதை விரைவிலேயே

காஞ்சிக்கு வரப்போகும் மகான் உறுதிப்படுத்துவார். அதைவிடு. தற்போது விண்ணகரத்தின் மேலே பறக்கும் பறவைகள் பறப்பது பரவசத்தைத் தரக்கூடியது அல்ல. அவற்றின் வரவும் போக்கும் எனக்கும் பரவசத்தைத் தரவில்லை. சந்தேகத்தைத் தான் தருகிறது. மக்களைப் போலிருந்து நீயும் ஏமாந்துவிடக் கூடாது. தயாமுகனை அனுப்பி விசாரிக்கச் சொல்" என்றார் ஞானகுரு.

அவரது குரலில் சற்றே கலக்கம் இருந்ததைக் கவனித்தான் மன்னன்.

அவர் கூறியபடியே தயாமுகனை வரவழைத்து ஞானகுரு கூறியதைச் சொன்னான்.

மணிமங்கலத்தைச் சேர்ந்தவனான தயாமுகன் பட்சி சாஸ்திரம் அறிந்தவன். பறவைகளின் குரல்களிலிருந்து அவை தெரிவிக்கும் செய்தியை அறியக் கூடியவன்.

அவன் வந்து விண்ணகரப் பகுதியில் பறக்கும் பறவை களைக் கண்டான். அவை செம்போத்துப் பறவைகள் என்பதை அறிந்தான். அவை மந்திரப் பறவைகள் என்று கருதப்படுவதையும் அறிந்தான். அவை கொண்டு வந்து போட்ட பழத்தையும் பார்த்தான்.

அப்பழங்கள் கிடைக்கக் கூடிய இடத்தை ஆராய்ந்தான். காஞ்சிக்குத் தென்மேற்கில் இருந்த புள்ளலூரில் அந்தப் பழமரங்கள் இருப்பதைக் கண்டறிந்து அம்மரங்கள் இருந்த அடர்ந்த காட்டுப் பகுதிக்குச் சென்றான்.

அக்காட்டுப் பகுதிக்குக் கொஞ்சமும் சம்பந்தமில்லாத செம்போத்து பறவைகள் அங்கே வந்திருப்பதை அக்காட்டில் நிரந்தரமாக வசித்து வந்த பேய்ப் பறவைகள் தங்கள் குரல்களால் தயாமுகனுக்குத் தெரிவித்தன.

அன்றிரவு அவன் காட்டிற்குள் செல்லவில்லை. மறுநாள் காலைப்பொழுது கண்திறக்கும் முன்பாகவே காட்டில் வந்து பதுங்கியிருந்தான். சிறிதுநேரம் கழித்து காட்டின் உட்பகுதியிலிருந்து மேலே பறந்து வந்த செம்போத்துப் பறவைகளைப் பார்த்தான். அவற்றின் அலகுகளில் செந்நிறப் பழங்கள் இருந்தன. காட்டிலிருந்து காஞ்சியை நோக்கி அவை பறந்து சென்றதைக் கண்டான் தயாமுகன்.

ஒரு நாழிகை நேரம் கழித்து காட்டின் உட்பகுதியில் சென்றான். அங்கே மனிதர்கள் யாரும் காணப்படவில்லை. தனது தோளில் இருந்த சீனக் கிளியை எடுத்துப் பறக்கவிட்டான். அது

மரத்திற்கு மரமாகப் பறந்தும் அமர்ந்துமாகச் சென்று ஓரிடத்தில் வினோதமான சப்தத்தை எழுப்பியது.

அங்கே சென்றான் தாயமுகன். அங்கே பறவைகளை அடைத்து வைக்கும் கூண்டுகள் இருந்தன. காஞ்சிக்குச் சென்ற பறவைகள் இரவுநேரத்தில் அந்தக் கூண்டுகளுக்குள் தான் அடைக்கப்பட்டிருக்க வேண்டும் என்று கருதினான். கூண்டுகளைத் தவிர வேறு யாரும் அங்கில்லை. அங்கேயே வேறு ஏதாவது தடயம் கிடைக்குமா என்று பார்த்தான். எதுவும் கிடைக்கவில்லை. சீனத்துக் கிளியிடம் ஏதோ பேசி அனுப்பி விட்டுக் காட்டின் பலபகுதிகளிலும் அலைந்தான்.

நரிகள் சில உலவின. மரநாய்கள் சில உலவின. காட்டுப் பன்றிகள் சில உலவின. ஏறக்குறைய மாமிசப் பட்சிணிகள் மட்டுமே உலவியதைக் கண்டான் தயாமுகன். அதே சமயம் இனம் கண்டுபிடிக்க முடியாத அமானுஷ்ய குரல்கள் கேட்டபடி இருந்தன.

பட்சி சாஸ்திரம் அறிந்திருந்த தயாமுகன் யட்சிணி புராணங்களையும் அறிந்திருந்தானாதலால் அங்கே எழுந்த அமானுஷ்யக் குரல்கள் யாருடயவை என்பது புரிந்தது. யட்சிணி உபாசகனுக்கு உரிய தகுதிகள் அவனுக்கு இருந்ததால் யட்சிணி சுலோகங்களை உச்சரித்தான். அப்போது -

ஹ்ஹஹீஹஹீஹஹீ... என்ற அமானுஷ்யக் குரலை எழுப்பியபடி அவனுக்கு முன்னால் வெள்ளை நிறத்தில் அருவம் ஒன்று நிற்பதும் கலைவதுமாய் இருந்தது. தயாமுகன் தனக்குத் தெரிந்த சூட்சும ஸ்லோகங்களை உச்சரித்தான். அருவங்கள் கொஞ்சம் கொஞ்சமாய் அதிகரித்து பல அவனைச் சூழ்ந்து கொண்டு ஏதேதோ சப்தங்களை எழுப்பி அச்சுறுத்தின. சில அருவங்கள் மரங்களில் தொங்கியபடிக் கூக்குரலிட்டன. தயாமுகன் சுலோகங்களை உச்சரித்த காரணத்தினால் அவனைத் தொட அவ்வருவங்களால் முடியவில்லை. அவனைப் பீடிக்கவும் இயலாமல் அலைந்தன.

பைசாச மொழியில் அவற்றோடு பேசிப் பார்த்தான். அவை அவனோடு பேசத் துடித்த மாதிரி இருந்தனவே தவிர பேசமுடியவில்லை. அவற்றுக்கு யாரோ கட்டுப் போட்டிருப்பதாகக் கருதிய தயாமுகன் அருவமாய்த் திரியும் பேய் பிசாச கணங்களுக்குக் கட்டுப்போட்டு கட்டுப்பாட்டில் வைத்திருக்கக் கூடியவன் சாதாரணமானவனாக இருக்க முடியாது என்றும் நினைத்தான்.

அவன் எப்படிப்பட்டவனாக இருந்தாலும் பேய்க்கணங்களைத் திரட்டிப் புள்ளலூர் காட்டில் எதற்காக வைத்திருக்க வேண்டும் என்பது தயாமுகனுக்கு விளங்குவதாக இல்லை. ஒருசில கொடுமையான மாந்தரீகர்கள் தங்கள் வசம் ஓரிரு பேய்க்கணங்களை மந்திரக்கட்டுப் போட்டு தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்து அப்பாவிகள் மீதோ அல்லது செல்வந்தர்கள் மீதோ அல்லது பெண்கள் மீதோ பணத்திற்காக ஏவி விட்டு பணத்தைக் கறந்தபின் விடுவிப்பதுண்டு. ஓலைக்கூர் மாந்தரீகன் ரணசயன் என்பவன் அப்படிப்பட்டவர்களில் ஒருவனாகப் புலியூர்க் கோட்டத்தில் வசித்து வருவதை அவன் அறிந்திருந்தான்.

ஆனால் கணக்கற்ற அருவங்களைக் கட்டிப்போட்டு வைப்பவனைப் பற்றி அவன் கேள்விப்பட்டதில்லை. அந்த மனிதனுக்குக் கெட்ட விஷயங்களில் ஆற்றல் அதிகம் இருக்க வேண்டும் என்று தோன்றியது தயாமுகனுக்கு.

செம்போத்துப் பறவைகளைப் பற்றி அறிய வந்த அவனுக்கு எதிர்பாராமல் இந்த அருவங்கள் விஷயம் தெரிந்ததால் ஏதோ நடப்பதற்குத் தான் இதெல்லாம் என்று நினைத்தான். அது எதுவாக இருக்கக் கூடும் என்பதை ஊகிக்க முடியவில்லை. பறவைகள் மாலை நேரத்தில் கூண்டுகள் இருக்கும் பகுதிக்கு நிச்சயமாக வரும் என்று எதிர்பார்த்த தயாமுகன் காட்டில் மேற்கொண்டு அலைவதை விட்டு விட்டு கூண்டுகள் இருந்த பகுதிக்கு வந்தான். அவனது சீனக்கிளி அவனிடம் வந்து ஏதோ பேசியது. காட்டில் வேறு மனிதர்கள் இல்லை என்று அது பேசிய மொழியில் இருந்து அறிந்து கொண்ட தயாமுகன் "மனிதர்கள் இல்லை கிளியே. மர்மங்கள் நிரம்ப உலவுகின்றன" என்று அதற்குப் பதில் சொன்ன தயாமுகன் மேற்கொண்டு அது எந்தச் சத்தத்தையும் எழுப்பாவண்ணம் கழுத்தில் தடவிக் கொடுத்து ஏதோ சொன்னான். கிளி அமைதியாகி அவனது தோளில் அமர்ந்தது.

மாலைப் பொழுது துவங்கிய கொஞ்ச நேரத்தில் ஏதோ ஒரு அரவம் கேட்கவே மறைவிடத்திற்குச் சென்று பதுங்கிக் கொண்டான் தயாமுகன், அப்போது ஒரு மனிதன் அக்கூண்டை நோக்கி மெல்ல மெல்ல வந்தான். முகமூடியை அணிந்திருந்ததால் அவன் யாரென்பதை அறிய முடியவில்லை. அவன் அங்கிருந்த ஐந்து கூண்டுகளையும் திறந்தான். அடுத்த சில கணங்களில் செம்போத்துப் பறவைகளின் இரைச்சல்கள் கேட்டன. அதையடுத்து ஒவ்வொன்றாக வந்தன. ஒரு கூண்டிற்குள் நான்கு

பறவைகள் வீதம் இருபது பறவைகளும் கூண்டிற்குள் சென்றன. முகமூடி மனிதன் அவற்றுக்குண்டான தீனி மற்றும் தண்ணீர் ஆகியவற்றைக் கூண்டுக்குள் போட்டான். அவற்றோடு ஏதோ பேசி விட்டு அகன்றான்.

தயாமுகன் மறைவிடத்திலேயே மேலும் ஒரு நாழிகை நேரம் வரை இருந்தான். பிறகு சென்று பறவைகளை நெருக்கத்தில் பார்க்க விரும்பி சுள்ளிகளைப் போட்டுக் கொளுத்தினான். அது தந்த வெளிச்சத்தில் செந்நிறப் பறவைகள் பயங்கரமாகக் காட்சியளித்தன.

மறுநாளும் வந்தான். முகமூடியும் வந்தான். முதல்நாள் போலவே அனைத்தும் நடந்தன.

அதற்கடுத்த நாள் முகமூடி மனிதனுடன் வேறொரு மனிதனும் வந்தான். அவனிடம் சிறு மூட்டை இருந்தது.

அவற்றைச் சுட்டிக்காட்டி "இதில் நான் கூறியபடி இருபது கந்தகக் கட்டிகள் இருக்கின்றன. நாளைக்கு இப்பறவைகள் பழங்களைக் கொண்டு போகக் கூடாது. இந்தக் கட்டிகளைக் கொண்டு போக வேண்டும். விண்ணகரத்தில் இருக்கும் யாகக் குண்டங்களில் போட வேண்டும். அவை வெடிக்க வேண்டும். விண்ணகரம் சிதைந்து போய் மண்மேடாக வேண்டும். நாளைக்குத் தான் குடமுழுக்கு விழா. நீ பொழுது விடிவதற்குக் கொஞ்ச நேரம் முன்பாகவே வந்து ஒவ்வொரு பறவையின் அலகிலும் கட்டியை வைத்து விட்டுப் பறக்க விடு. மற்றதை அவை பார்த்துக் கொள்ளும். பறவைகள் போனபின் நீ இந்தப் பகுதியிலேயே இருக்க வேண்டாம். விண்ணகரம் மண்மேடாகிவிட்ட விவரம் காஞ்சியில் பரபரப்பாகப் பேசப்படும். வெடிக்கும் போது யார் சாவார்கள் என்று தெரியாது. மன்னர் இறப்பதற்கு நிறைய வாய்ப்பிருக்கிறது. பல செய்திகள் வரும். காஞ்சியில் அமங்கலக் குரல்களும் அழுகுரல்களும் கேட்கும். அதற்குப் பிறகு நாம் சந்திப்போம்" என்றான்.

இருவரும் அங்கிருந்து அகன்றார்கள்.

மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கை அந்த இருவரைத் துரத்திப் பிடிப்பதல்ல என்று நினைத்த தயாமுகன் எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து மன்னனிடம் ஒரு வார்த்தை கேட்பது நல்லது என்று தோன்றியது.

அதே சமயம் மறுநாள் நடக்கவிருந்த குடமுழுக்கு விழாவை யொட்டி ஆலோசிப்பதிலும் செயல்படுத்துவதிலும் தீவிரமாக

மன்னன் இருந்ததால் அவனைச் சந்திக்க முடியவில்லை. ஆகவே ஞானகுரு நாதரிடமே சென்று அதுபற்றி விளக்கினான்.

"நான் நினைத்தது சரியாகி விட்டது. இந்த நேரத்தில் நீ கிடைத்தது கடவுள் அருள் தான். இப்போதைக்கு நீ செய்யக் கூடிய காரியம் காட்டிற்குச் சென்று அப்பறவைகளை கூண்டோடு கொண்டு வந்து என் இல்லத்திலேயே வைத்து விடு. நாளைக்கு குடமுழுக்கு நல்லபடியாக நடந்தால் போதும். மற்ற வற்றைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்" என்றார் ஞானகுரு.

தயாமுகன் நினைத்ததும் அதுதான். எனவே அன்று நள்ளிரவு பத்துப் பேர்களுடன் சென்று புள்ளலூர்க் காட்டிலிருந்து ஐந்து கூண்டுகளையும் பறவைகளோடு கொண்டு வந்து ஞானகுருவின் இல்லத்தில் வைத்தான்.

முகமூடி மனிதன் பொழுதுவிடிவதற்கு ஒரு நாழிகைக்கு முன் கந்தகக் கட்டிகளோடு வந்தபோது பறவைகளைக் காணாததைக் கண்டு அதிர்ந்தான். கூண்டுகளும் காணாததால் யாரோ கூண்டோடு தூக்கிச் சென்றிருக்க வேண்டும் என்று நினைத்தான். தூக்கிச் சென்றவர்களுக்குத் தனது சதி பற்றித் தெரிந்திருக்க வேண்டும் என்றே தோன்றியது. பறவைகளை வைத்தே தன்னைக் கண்டுபிடிப்பது சாத்தியமானது என்பதை உணர்ந்தபின், தான் பிடிபட்டால் தனக்குச் சித்திரவதையே நடக்கும் என்றும் அந்தச் சித்திரவதையில் தன் எஜமானனைக் காட்டிக் கொடுக்க வேண்டி வரும் என்பதையும் ஊகித்தான். அதற்கெல்லாம் அவன் தயாராக இல்லை.

அப்பகுதியில் இருந்த மரங்களில் ஒன்றில் தூக்கு மாட்டிக் கொண்டு இறந்தான்.

இந்தச் சம்பவத்தை அறியாத மக்கள் மறுநாள் பறவை களைக் காணாமல் ஏமாற்ற மடைந்தார்கள்.

★★★



மன்னனின் மனநிலை

குடமுழுக்கு விழா முடிந்து மூன்று நாட்கள் கழித்து பறவைகள் விஷயத்தைப் பற்றி மன்னனை அழைத்துச் சொன்னார் ஞானகுரு. அப்போது தயாமுகனும் கூட இருந்தான்.

"தாங்கள் மட்டும் என்னை எச்சரிக்காது விட்டிருந்தால்? நினைத்துப் பார்க்கவே அதிர்ச்சியாக இருக்கிறது ஐயா. போரில் தோற்றபோதுகூட நான் அதிர்ச்சி அடைந்ததில்லை. ஒரு போரில் தோற்றால் இன்னொரு போரில் ஈடுசெய்து கொள்ளலாம் என்று எண்ணிக் கொள்ள முடியும். என் ஆட்சியே போனால் கூட இன்னொரு நேரத்தில் மீட்டுக் கொள்ளலாம் என்று ஆறுதல் அடைய முடியும். பரமேச்சுர விண்ணகரத்தை இழந்திருந்தால் ஆயுட் காலத்தில் அப்படியொரு விண்ணகரத்தை என்னால் கட்ட முடியுமா குருநாதரே?" என்று கேட்டான் மன்னன்.

"அது மட்டுமல்ல மன்னா. பறவைகள் திட்டமிட்டபடி கந்தகக் கட்டிகளை யாக குண்டத்தில் போட்டிருந்தால் விண்ணகரம் மட்டுமல்ல உன் உயிர் விண்ணுலகத்திற்குப் போயிருக்கும். உனது ராணி, மகன், மகாமந்திரி முதலானவர்களும் உயிரை இழந்திருப்பார்கள். அல்லது மூடமாகியிருப்பார்கள். மோசமான விளைவை இப்பல்லவ நாடு சந்தித்திருக்கும்" என்றார் ஞானகுரு.

"காஞ்சியிலேயே எனக்குப் பகைவன் இருப்பதைத் தானே இது காட்டுகிறது குருநாதரே?" என்று கேட்டான் மன்னன்.

"நந்திவர்மா! நீ அரியணையில் அமர்ந்ததிலிருந்தே உனக்குப் பகைவர்கள் உண்டாகி விட்டார்கள். இப்போதும் அவர்கள் இல்லாமல் போகவில்லை. ஆனால் இந்தப் பகைவன் மிகவும் மோசமானவன். உன்னை அழிப்பதுகூட அவனுக்கு இரண்டாம் பட்சம்தான். அவன் நீ நிர்மாணித்த காலத்தால் அழிக்க முடியாத பொக்கிஷமான பிரமேச்சுர விண்ணகரத்தை அழிக்க முயன்றிருக்கிறான். சாளுக்கியர்களோ, ராஷ்டிரகூடர்களோ, கங்கர்களோ, பாண்டியர்களோ இப்படிச் செய்ய விரும்பாததை இவன் செய்ய முயன்றிருக்கிறான். உன்னை விட உனக்கு

வரக் கூடிய புகழை அழிக்க விரும்பியிருக்கிறான். இதற்கு வெறும் பகைமை காரணமாக இருக்க முடியாது. நீ மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்" என்றார் குரு.

"நான் என்னையும் என் பலத்தையும் நம்பியிருக்கவில்லை குருநாதரே. எம் பெருமானைத்தான் நம்பியிருக்கிறேன். அவனைத் தான் சரணடைந்திருக்கிறேன்" என்றான் மன்னன்.

"அது உண்மைதான். என்றாலும் எச்சரிப்பது என் கடமை" என்றார் ஞானகுரு.

"காரணகர்த்தாக்களைத் தப்ப விட்டு விட்டோமே ஐயா?"

"முதலில் நமது வேலை பறவைகள் மூலம் நடக்கவிருந்த நாசத்தைத் தடுப்பது தான். அதை அவர்களால் செய்ய முடியாததால் தான் பறவைகளைப் பழக்கியிருக்கிறார்கள். காரணகர்த்தாக்களைத் தேடிக்கொண்டு தயாமுகன் சென்றிருந்தால் வேறு ஒருவன் மூலம் பறவைகள் ஏவி விடப்பட்டிருக்கும். ஆகவே பறவைகளை அகற்றுவது தான் முதல் முக்கியம் என்பதால் தயாமுகனுக்கு நான் தான் கட்டளை யிட்டேன். பறவைகள் மூலம் நாசம் செய்யவிருந்தவர்களில் ஒருவன் தற்கொலை செய்து கொண்டு மற்றவர்களைக் காப்பாற்றியிருக்கிறான். அவர்களைக் கண்டுபிடிப்பது பெரிய வேலையல்ல."

தயாமுகன் குறுக்கிட்டு "இப் பறவைகளைக் கொண்டே அவர்களைப் பிடிக்க முடியும் ஐயா" என்றான்.

"வேண்டாம். பறவைகள் மிருதுவானவை. அதுவும் இந்த செம்போத்துப் பறவையினம் சூதுவாது அறியாதவை. இவற்றை அப்பாவிகள் தீயகாரியத்திற்குப் பழக்கியிருக்கிறார்கள். அது அவர்களின் பலவீனத்தின் அடையாளம். இரக்கமற்ற தன்மையின் அடையாளம். நாமும் அவற்றைப் பயன்படுத்துவது சரியல்ல. அவற்றின் சுதந்திரத்தைப் பறிக்க வேண்டாம். அவை இப்பகுதியிலேயே இருக்க வேண்டியதில்லை. அது ஆபத்தானதும் கூட. எனவே அவற்றை அகற்றி தணிகைமலைக் காடுகளில் விட்டு விடுங்கள். அங்கே அவை சுதந்திரமாக இருக்கட்டும்" என்று சொல்லித் தயாமுகனை அனுப்பி வைத்த ஞானகுரு "நந்திவர்மா! தீய காரியங்களில் இரக்கமின்றி இறங்கியவர்கள் தோற்றுப் போய் விட்டால் சோர்ந்து விட மாட்டார்கள். வேறு விதத்தில் ஈடுபடுவார்கள். நீ மிகவும் எச்சரிக்கையாக இரு. மண்டலாபிஷேகம் முடியும் வரை பரமேச்சுர விண்ணகரத்திற்குக் கூடுதல் பாதுகாப்பை ஏற்பாடு செய். நாசவேலை செய்யவிருந்த

நபர்கள் குறித்து நீ கவலைப்பட வேண்டாம். அதையே எண்ணிக் கொண்டிருக்க வேண்டாம். எனக்குச் சில தகவல்கள் தேவையாக இருக்கிறது. அவை கிடைக்கும் பட்சத்தில் நாசவேலைக்காரர்களின் விவரமும் தெரிய வரலாம்" என்றார்.

★

அரண்மனைக்குத் திரும்பிய மன்னனை மகாமந்திரி முதலானவர்கள் சந்தித்து கோட்டத் தலைவர்கள் கைது செய்யப்பட்டது குறித்துப் பேச முற்பட்டார்கள்.

"மன்னவா! கைது செய்யப்பட்ட பதின்மூன்று கோட்டத் தலைவர்களை முறையான விசாரணைக்கு உட்படுத்த வேண்டும்" என்றார்கள்.

"அந்தப் பதின்மூன்று கோட்டங்களுக்கும் புதிய தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும்படிக் கூறியிருந்தேனே அந்தப் பட்டியலைத் தயாரித்து விட்டீர்களா?" என்று கேட்டான் மன்னன்.

தனது கேள்விக்குப் பதிலைக் கூறாமல் மன்னன் வேறொரு கேள்வியைக் கேட்டதைக் கண்டு சற்றே வியந்த மகாமந்திரி பிரம்மஸ்ரீராஜர் பட்டியலை எடுத்து மன்னனிடம் காட்டினார்.

பட்டியலை ஊன்றிப் பார்த்த மன்னன் "இவர்களை எந்த அடிப்படையில் தேர்ந்தெடுத்தீர்கள் அமைச்சர் பெருமானே?" என்று கேட்டான்.

"எல்லா அடிப்படையிலும் தான் மன்னவா. விசுவாசம், தலைமைக்குக் கட்டுப்படும் பண்பு, தியாக உணர்வு, வீரம், நிர்வாக ஆற்றல், க டந்தகால வாழ்க்கை, கடந்த கால அனுபவங்கள், மக்கள் தொடர்பு, குற்றப் பின்னணி ஆகியவற்றை வைத்து நான், கடிகைக் கல்லூரியின் தலைவர், காடக முத்தரையர், காரியஸ்தர், பல்லவடி அரையர் ஆகிய ஐவருமாக இணைந்து தேர்ந்தெடுத்தோம்."

"ராஜகுருவை ஏன் இந்தக் குழுவில் சேர்க்கவில்லை?"

"சாதாரணமாக அரசு நியமனங்களுக்கு ராஜகுருவைக் குழுவில் சேர்ப்பதில்லை. இருப்பினும் அவரிடம் சம்மதம் கேட்டோம். அவர் நடைமுறையைப் பின்பற்றுங்கள். அதை மீற வேண்டாம் என்று கூறிவிட்டார்."

மன்னன் ராஜகுருவைப் பார்த்து "நல்ல விஷயங்களில் நீங்கள் பங்கேற்பது நல்லது தானே குருநாதரே?" என்று கேட்டான்.

"யோசனை கூறுவது வேறு. நிர்வாகத்தில் பங்கேற்பது வேறு. தேர்வுக் குழுவில் யார் யார் இருக்க வேண்டும் என்று இருக்கிறதோ அவர்கள் இடம்பெறுவது தான் நிர்வாகம். அதில் மற்றவர்கள் நுழையக் கூடாது. நுழைக்கக் கூடாது. அதோடு நான் உனக்குத் தான் குருவே தவிர நிர்வாகிகளுக்கோ இந்த நாட்டிற்கோ அல்ல" என்றார் ராஜகுரு.

"எல்லா விஷயங்களிலும் தெளிவாக இருக்கிறீர்கள். மகிழ்ச்சி குருநாதரே" என்று சொன்ன மன்னன் அமைச்சரைப் பார்த்து "இந்தப் பட்டியலை தந்திவர்மனிடம் காட்டி விவரங்களைச் சொல்லுங்கள் அமைச்சர் பெருமானே. அவன்தான் வருங்கால மன்னன். அவன் மன்னனாகும் போது இவர்கள் தான் கோட்டத் தலைவர்களாக இருக்கப் போகிறார்கள்" என்றான்.

"மிகவும் சரி மகாராஜா" என்றார் மகாமந்திரி.

"பதின்மூன்று கோட்டத் தலைவர்களை விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்றீர்களே - எனக்கென்னவோ அவர்களை விசாரிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றே தோன்றுகிறது. மிகவும் முக்கியமாக நான் கருதிய விண்ணகரக் குடமுழுக்கு விழா அவர்களுக்கு முக்கியமில்லாமல் போய் விட்டது. தாங்கள் வராமல் போனதற்கான காரணத்தை எனக்குத் தெரிவிக்கவும் அவர்களுக்கு அவசியம் இல்லாமல் போய்விட்டது. இவர்களை நான் ஏன் விசாரிக்க வேண்டும்?" என்றான் மன்னன்.

ராஜகுரு குறுக்கிட்டு "மன்னவா! சற்று முன்பு தான் நடைமுறையைப் பின்பற்றுவது பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். தற்போதும் அதே நடைமுறை தான் குறுக்கிடுகிறது. குற்றவாளிகள் யாராக இருந்தாலும் விசாரிப்பது தான் நடைமுறை. அதை நீ மீறக் கூடாது" என்றார்.

"அப்படியானால் ஒன்ற செய்யலாம். நான் இப்போது விசாரணை செய்தால் கோபத்தில் நிதானத்தை இழக்க வாய்ப்பிருக்கிறது. எனக்குப் பதிலாக நீங்கள் விரும்பும் இந்த விசாரணையை இளவரசன் தந்திவர்மன் செய்தால் உங்களுக் கொன்றும் ஆட்சேபணை இல்லையே! புதிய கோட்டத் தலைவர்களை நியமனம் செய்வதில் அவனுக்கு நாம் கொடுக்கும் பொறுப்பை பழைய கோட்டத் தலைவர்களை விசாரிப்பதிலும் கொடுக்கலாம் அல்லவா?"

"இளவரசர் பக்திமானாக வலம் வருகிறார். நிர்வாக அனுபவம் குறைவு" என்றார் காரியஸ்தர்.

"இப்போது அனுபவத்தைப் பெறட்டும். அதோடு அவன் பக்திமானாக இருப்பது சிறப்பு தானே தவிர குறைபாடு இல்லை.

பக்தியுடையவன் நடுநிலையோடு இருப்பான் அவனுக்கு ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுங்கள்" என்று சொன்ன மன்னன் "நீங்கள் புறப்படுங்கள். ராஜகுருநாதர் என்னிடம் ஏதோ பேச வேண்டும் என்று நேற்றே சொன்னார். அவரிடம் பேசிவிட்டு வருகிறேன்" என்றான்.

ஐவரும் அகன்றார்கள்.

"என்னை மன்னியுங்கள் குருநாதரே! குடமுழுக்கு விழா முடிந்தபின் மகிழ்ச்சியாக இருக்க வேண்டிய நான் வருத்தத்தில் இருந்தேன். திருப்தி அடைய வேண்டிய நான் அசதியில் இருந்தேன். எனவே தான் நேற்று உங்களைச் சந்தித்துப் பேச முடியவில்லை. நேற்றைக்கே பேசியிருக்க வேண்டும். தவறு தான்" என்றான் மன்னன்.

"மன்னா! வருத்தமாக இருந்தாலும் சரி மகிழ்ச்சியாக இருந்தாலும் சரி. அவை அந்தக் கணத்தோடு முடிந்து விட வேண்டும். நீடித்துக் கொண்டிருக்கக் கூடாது. நிலையில்லாத விஷயங்களை நாம் நீட்டித்துக் கொள்வது தான் கோளாறுகளைத் தந்து விடுகிறது." என்று சொன்ன குருநாதர் "மன்னா! தில்லை நடராஜர் கோயிலுக்குள் பெருமாள் கோயிலைக் கட்டும்படி உனக்கு நான் அழுத்தம் கொடுத்தது தவறா?" என்று கேட்டார்.

"இதென்ன இப்படிக் கேட்கிறீர்கள்? அங்கே ஆலயம் கட்டப்படுவதற்கான பணிகள் தொடங்கி விட்டபின் எதற்காக இந்தக் கேள்வி? அந்த விவகாரத்திற்கு நீங்கள் அழுத்தம் கொடுத்தது உண்மைதான் என்றாலும் அந்த ஆசை எனக்கே இருந்தது என்று நானே உங்களுக்குக் கூறியிருக்கிறேனே?" என்றான் மன்னன்.

"தில்லையில் இருக்கும் வீரசைவர்கள் கடும் கோபத்தில் இருக்கிறார்கள். கலவரத்தில் ஈடுபட்டுத் தமிழகத்தையே ரணகளையில் ஆழ்த்தச் சதி செய்து கொண்டிருக்கிறார்கள்."

"அது எதிர்பார்க்கப்பட்டது தானே? அவர்கள் கலவரத்தை உண்டாக்கினால் நான் வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பேனா? இரும்புக் கரம் கொண்டு ஒடுக்குவேன். நடராஜர் கோயிலையே இடித்து விட்டு அதே இடத்தில் பெருமாள் கோயிலைக் கட்டுவேன்."

"சாந்தமாக இரு மன்னா. மதவிஷயம் மிகவும் ஆபத்தானது. அது காட்டுத் தீயைப் போன்றது. சட்டென்று பற்றிக் கொண்டு விடும். எளிதில் அணையாது."

"எனக்கும் அது தெரியும் ஐயா. தில்லையில் இருக்கும் சோழ சிற்றரசர் பராங்குசர் மிகவும் கவனமாகவும் விழிப்போடும்

தில்லை நகர நிலைமையைக் கையாளுகிறார். நீங்கள் கூறுவது போல் அங்கே வீர சைவர்கள் வறட்டு வீரத்தைக் காட்ட மாட்டார்கள். விவேகமாக நடது கொள்வார்கள்."

"எம்மதமும் சம்மதம் என்ற கொள்கையை ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்று சொன்னவன் நீ. புதுப்புது மதங்கள் தோன்றுவதே புதுப்புது கொள்கைகளை உருவாக்குவதற்காகத் தான் என்று கூறியவன் நீ. புதுப்புது மதங்களும் கொள்கைகளும் உருவாவது மக்களின் நன்மைக்காகத் தான் என்று கருதுபவன் நீ. மக்களுக்கு மதச் சுதந்திரம் இருக்க வேண்டும் என்றும் மதப்பிடிவாதம் இருக்க வேண்டும் என்று கருதுபவன் நீ. ஆகவே தான் எம்மதமும் சம்மதம் என்ற கொள்கையை நீ ஏற்றுக் கொள்ளவில்லை. தில்லை வாழ் அந்தணர்களும் ஏற்றுக் கொள்ளவில்லை. உன் பிடிவாதம் உனக்கு. அவர்கள் பிடிவாதம் அவர்களுக்கு. ஆனால் நீ மன்னன் என்பதையும் அதிகாரப் பீடத்தில் இருப்பவன் என்பதையும், உனக்கு ஆணையிடும் உரிமை இருக்கிறது என்பதையும் அவர்கள் உணரவில்லை. அவர்கள் தான் உணரவில்லை என்றால் திருப்பருத்திக் குன்றத்துச் சமணர்களும் உணராமல் இருப்பது கவலையாக இருக்கிறது. தங்கள் பிடிவாதம் காரணமாக அவர்கள் எந்த எல்லைவரைக்கும் செல்வார்கள் என்பதைக் கண்டபோது அதிர்ச்சியாக இருக்கிறது. உனது ஆட்சி நல்லாட்சி. உனது ஆட்சி சொல்லாட்சி. சொல் தவறாத ஆட்சி. ஆனால் அவர்கள் மாட்டிற்குப் பல்லைப் பிடித்துப் பார்ப்பது போல் செயல்பட்டு கீழ்மைப் படுவது உன் ஆட்சிக்குக் களங்கத்தை உருவாக்கும். இதைப் பற்றிப் பேசவே உன்னை நேற்று அழைத்தேன்."

"சமணர்களின் வாலை நறுக்கித் தானே வைத்திருந்தேன்? மறுபடியும் ஆரம்பித்து விட்டார்களா?"

"நந்திவர்மா! சமணர்களுக்கு உரிய சுதந்திரத்தைத் தந்து விடு. சலுகைகளைத் தந்துவிடு. செழிப்பையும் செல்வாக்கையும் தந்து விடு. பிரச்சனை தீர்ந்து விடும்."

"நீங்கள் கூறும் அம்சங்களைத் தில்லைவாழ் வீர சைவர்களுக்கே நான் தரவில்லை. சமணர்களுக்கு எப்படித் தரமுடியும்? என் பிடிவாதம் எப்படிப்பட்டது என்பது உங்களுக்குத் தெரியாதா?"

"பிடிவாதத்தைத் தளர்த்திக் கொள் மன்னா. பிடிவாதம் என்பது ஒரு கட்டத்தில் விடக் கூடியது தான். அதுவும் நல்லது நடக்கும் என்றால் அதை உடனடியாக விட்டு விடலாம்."

"அது இருக்கட்டும். சமணர்கள் செய்தது என்ன? அதைச் சொல்லுங்கள்."

"திருப்பருத்திக் குன்றத்துச் சமணர் தலைவர் துலாபாரர் உனக்குத் தெரியுமல்லவா?"

"தெரியும்."

"சமணர்களை ஒரங்கட்டிய காரணத்தால் உன்மீது அவர் அதிருப்தியாக இருக்கிறார் என்பது தெரியுமா?"

"தெரியும்."

"அவரது ஆசைநாயகிகள் பவானி, மற்றும் சங்கவியைத் தெரியுமா?"

"ஆசை நாயகிகளா? துறவிக்கா? அதுவும் தலைமைத் துறவியான துலாபாரருக்கா?"

"அவர் தற்போது துறவியல்ல. திருப்பருத்திக் குன்றத்தில் சரிந்து கிடக்கும் சமணத்தைத் தூக்கி நிறுத்த வேண்டும் என்பது அவரது லட்சியம். அது நிறைவேறச் சிறிதுகாலம் ஆகலாம். அதுவரை துறவை விட்டு விட்டு ஆசைநாயகிகளோடு ஆனந்த மாக இருக்க முடிவு செய்து அவ்வாறே இருந்து வருகிறார்."

"இது என்ன முட்டாள் தனமாக இருக்கிறது?" என்று கேட்டான் மன்னன்.

★★★



இளவரசனும் கோட்டத் தலைவர்களும்

"துறவு, துறவி ஆகிய சொற்களுக்குப் புதுமையான அர்த்தங்களைத் தருகிறாரா துலாபாரர்? துறவு என்பது மலர்ந்தது முதல் மரணம் வரையில் நீடிக்கக் கூடியது. இடையில் சிலகாலம் ஒதுக்கி வைப்பது அல்ல. அதோடு துலாபாரர் துறவை ஒதுக்கி வைப்பதோடு மட்டுமின்றி ஆசைநாயகிகளை வைத்துக்கொண்டு ஆனந்தமாய் இருக்கிறார் என்கிறீர்கள். இவர் துறவியா? இவருக்கும் இவரைச் சேர்ந்தவர்களுக்கும் நான் சுதந்திரத்தை அளிக்க வேண்டும். செல்வத்தை அளிக்க வேண்டும். சலுகைகளையும் உரிமைகளையும் அளிக்க வேண்டும். என்ன சொல்கிறீர்கள் குருநாதரே? முட்டாள் தனத்திற்கு வெகுமதி வழங்க வேண்டுமா நான்?" என்று கேட்டான் மன்னன்.

"நந்திவர்மா! சமணர்களை நீ முடமாக்கி நடமாட முடியாதவாறு செய்து விட்டாய். பூத்துக் குலுங்கும் செடிகள் நிறைந்த பூஞ்சோலையைப் போன்றிருந்த சமண மதத்தைப் பாலைவனமாக்கி விட்டாய். சமணர்களுக்கு வருத்தம் இருக்காதா? வேதனை இருக்காதா?" என்று கேட்டார் ராஜகுரு.

"உங்கள் உவமை சரியில்லை. நான் சோலை வனத்தை அழித்துப் பாலைவனமாக மாற்றவில்லை. சமணர்களிடம் ஒழுங்கீனம் உண்டாயிற்று. அவர்கள் திருந்துவதாக இல்லை. ஆகவே அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த பள்ளிச் சந்தங்களையும் சலுகைகளையும் பறித்தேன். அரசாங்கத்திலிருந்து நிதிவுதவி செய்வதை நிறுத்தினேன். திருப்பருத்திக் குன்றத்தைப் புறக்கணித்தேன். அங்குச் செல்வதைத் தவிர்த்தேன். அதற்குத் துலாபாரர் என்ன செய்திருக்க வேண்டும்? ஒழுங்கீனங்களைக் களைந்து விட்டுத் தங்களைத் தகுதியுள்ளவர்களாக மாற்றிக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் நீங்கள் தெரிவிக்கும் மாற்றம் விபரீதமானதாக இருக்கிறது. வெட்கக் கேடாக இருக்கிறது. துறவிகள் இப்படி இருக்கலாம் என்று சமண சாஸ்திரம் எங்காவது கூறியிருக்கிறதா?" என்று கேட்டான் மன்னன்.

"மன்னவா! உயர்நிலையில் இருந்தவர்கள் நலிவடையும் போது தவித்துப் போய் தாறுமாறாக நடந்து கொள்கிறார்கள். புத்தி பேதலித்துப் போவதின் விளைவு இது. அவர் ஆனந்தத்திற்காக ஆசை நாயகிகளை வைத்துக் கொண்டார். பிறகு புத்தி பேதலித்துப் போனதால் அவர்களில் ஒருத்தியை உளவாளியாக மாற்றி என்னிடம் அனுப்பினார். என்னை மயக்கி அவளது வலையில் நான் சிக்க வேண்டும் என்பதும் என் மூலம் உன் மனத்தை மாற்றி சமணம் தழைக்க ஆணைகளைப் பெறவேண்டுமெ என்பது தலைமைத் துறவி துலாபாரரின் நோக்கம். என்னிடம் வந்து சேர்ந்த பெண்ணான சங்கவி இச்சை மிகவும் மிகுந்த காமுகி. அவள் வலையில் நான் விழவில்லை. என் வலையில் அவள் விழுந்தாள். விசாரிக்கும் விதத்தில் விசாரித்தேன். உண்மையைச் சொல்லி விட்டாள்."

"குருநாதரே! இதுதான் துறவியின் பண்பா? அரசியல் பகைவர்களைப் போலக் கீழ்த்தரமான சதிச் செயல்களில் இறங்கிய இவருக்கும் இவரைச் சேர்ந்தவர்களுக்கும் ஏற்றம் தர வேண்டுமா நான்? ஏணியில் ஏற்ற வேண்டுமா நான்? உங்களுக்குப் பதிலாக வேறு ஒருவரிடம் அந்தப் பெண் வலையை வீசி வெற்றி பெற்றிருந்தால் நிலைமை ஆபத்தாக அல்லவா ஆகியிருக்கும்? துறவியின் வழி நேர்வழி. துறவி துலாபாரரின் வழியோ குறுக்கு வழியாக இருக்கிறது. கிறுக்கு வழி என்று கூடச் சொல்லலாம். அவருக்கும் அவரது சமணத்திற்கும் நான் தரக்கூடியது தண்டனை தானே?" என்று கேட்ட மன்னன் "சங்கவி இருக்கிறாளா ஐயா? அவளைச் சாட்சியாக்கி துறவியைத் தண்டிக்கலாம்" என்றான்.

"சங்கவி உயிரோடு இல்லை மன்னா, உண்மை தெரிந்தபின் வெள்ளைக் குளக்கரையில் சடலமாகக் கிடந்தாள். தற்கொலை செய்து கொண்டிருக்க வேண்டும்."

"நீங்கள் சாட்சியாக இருக்கிறீர்கள். அது போதும். நான் பார்த்துக் கொள்கிறேன்."

"நந்திவர்மா! ஒரு பக்கம் சைவர்களையும் பகைத்துக் கொண்டு சமணர்களையும் பகைத்துக் கொள்ள வேண்டுமா? அரசியல் பகையை விட மதப் பகை அபாயகரமானது. கூடவே இருந்து கறுவறுக்கும் தீயசக்தியாக மாறக் கூடியது. மக்களை எளிதில் ஈர்த்துக் கொண்டு பெரும் சக்தியாக உருவெடுக்கக் கூடியது. அஷ்டபுயகரப் பெருமாளைப் போல ஒரே நேரத்தில் பல ஆயுதங்களை ஏந்திப் போர் புரிவதற்கு முயலவேண்டாம். ஒன்றுக்குப் பின் ஒன்று என்று போவதே நல்லது."

"நான் பார்த்துக் கொள்கிறேன் குருநாதரே. நீங்கள் கவலையை விடுங்கள்."

"நந்திவர்மா! சங்கவி தனது உண்மை விளக்கப் பேச்சின் போது ஒரு விஷயத்தைக் கசிய விட்டாள். அது உண்மையாக இருக்குமா என்று தோன்றவில்லை."

"என்ன விஷயம் ஐயா?"

சொன்னார் குருநாதர்.

"அப்படி ஒரு சந்தேகம் எனக்கு இருந்தது. தற்போது அது உறுதிப் படுகிறது" என்று சொன்ன மன்னன் "இது விஷயம் உண்மையாகுமானால் சமண மதத்தைப் பூண்டோடு அழிக்கவும் நான் தயங்க மாட்டேன்" என்றான்.

★

அடுத்த இரண்டு நாள் கழித்து கோட்டத் தலைவர்கள் பேரிலான விசாரணை நண்பகலில் துவங்கியது.

இளவரசனும் நந்திவர்மனின் மகனுமான தந்திவர்மனின் அணுகுமுறை வித்தியாசமாக இருந்தது.

மன்னனின் கட்டளையை மகாமந்திரி அவனிடம் தெரிவித்த போது எல்லாவிவரங்களையும் நிதானமாகக் கேட்டு அறிந்து கொண்டான்.

அவனது அணுகுமுறை வித்தியாசமாக இருந்தது.

சிறையில் இருக்கும் பதின்மூன்று கோட்டத் தலைவர்களை மட்டுமின்றி அவர்களுக்குப் பதிலாக புதியதாக நியமனமாக விருந்த பதின்மூன்று பேர்களையும் ஏற்கனவே பதினோரு கோட்டங்களில் தலைவர்களாக இருந்தவர்களையும் விசாரணையின் போது அவன் வரச் சொன்னபோது ஏதோ ஒரு புதிய ஒளி உதயமாவதை உணர்ந்தார் மகாமந்திரியான பிரம்மஸ்ரீராஜர்.

விசாரணையின் போது இளைய சூரியனைப் போல் வருகை தந்த இளவரசன் ஆசனத்தில் அமர்ந்து கைகளைக் கூப்பித் தொழுது,

'வசுதேவ ஸுதம் தேவம் கம்ச சாணூர மர்த்தனம்
தேவகீ பரமானந்தம் கிருஷ்ணம் வந்தே ஜகத்குரும்.'*

இளவரசன் இவ்வாறு ஸ்லோகத்தைச் சொல்லிக் கிருஷ்ண பகவானை வழிபட்டதைக் கண்ட பதவி நீக்கம் செய்யப்பட்ட கோட்டத் தலைவர்களில் சிலர் கேலியாக நினைத்தார்கள். இந்தப் பக்திப் பழமா எதிர்காலத்தில் பல்லவ ராஜ்யத்தை ஆளப் போகிறது என்று முணுமுணுத்துக் கொண்டார்கள்.

மகாமந்திரி முதலானவர்கள் நந்திவர்மனிடம் கூட கண்டிராத அணுகுமுறை மற்றும் தெய்வ வணக்கத்தைத் தந்திவர்மனிடம் கண்டு பூரித்தார்கள். புலிக்குப் பிறந்திருப்பது பொருத்தமான புலிதான் என்று நினைத்தார்கள்.

விசாரணையைத் தொடங்குவதற்கு முன் களத்தூர் கோட்டத் தலைவன் எழுந்து "எங்கள் மீதான விசாரணையின் போது இதற்குச் சம்பந்தமே இல்லாத பதினோறு கோட்டத் தலைவர்களையும் புதியதாக நியமிக்கப் போகும் பதின்மூன்று நபர்களையும் அழைத்து இங்கே அமரவைத்திருக்கிறது. இது சரியான நடைமுறையன்று" என்றான்.

"நான் துவங்கும் புதிய நடைமுறை என்று வைத்துக் கொள்ளுங்களேன்" என்று சொல்லி அவனது ஆட்சேபணையை முளையிலேயே கிள்ளி எறிந்த இளவரசன் "இங்கே விசாரணை எதுவும் நடக்கப் போவதில்லை. குடமுழுக்கு விழாவிற்கு மாமன்னர் அழைப்பு விடுத்து நீங்கள் வரவில்லை. வராததற்கான காரணத்தை யாரும் இதுவரை சொல்லவில்லை. மாமன்னர் அதற்காக உங்களைக் கைது செய்து சிறையில் அடைத்து விட்டார். இதில் விசாரிப்பதற்கு என்ன இருக்கிறது? கைப் புண்ணிற்கு கண்ணாடி எதற்கு?" என்றதும் பதின்மூன்று கோட்டத் தலைவர்களும் முனை மழுங்கிய ஆயுதங்களாகித் தளர்ந்து போனார்கள்.

தொடர்ந்து பேசிய தந்திவர்மன் "உங்களையெல்லாம் இன்றைக்கு இங்கே வரச் சொன்னது விசாரணை செய்வதற்காக அல்ல. உங்களிடமிருந்து சில தகவல்களைப் பெறுவதற் காகத்தான். அந்தத் தகவல்களை நீங்கள் தரமறுத்தால் நான் விரும்பும் சித்திரவதையைச் செய்வதற்கு மன்னர் எனக்கு உரிமையை வழங்கியுள்ளார்" என்று அதிரடியாக ஒரு குண்டைப் போட்டான்.

"இளவரசர் இவ்வாறு பேசுவது தகாது" என்றான் புலியூர் கோட்டத் தலைவன்.

"குற்றவாளிகளுக்கு இளவரசனின் தகுதிகளை நிர்ணயம் செய்யும் உரிமை கிடையாது. அருகதையும் கிடையாது. இங்கே நடக்கும் அரசு அலுவல்களைத் தாமதம் செய்யும் விதமாகவோ திசை மாற்றும் விதமாகவோ யாராவது வீண் பேச்சு பேச முற்பட்டால் கடுமையான அபராதம் விதிக்கப்படும்" என்றான் இளவரசன்.

கோட்டத் தலைவர்களை இளவரசன் அனாயாசமாகக் கையாளும் விதத்தைக் கண்டு மகாமந்திரியும் மற்றவர்களும் அசந்து போனார்கள்.

இளவரசன் தனது கைகளில் ஓலை நறுக்குகளை ஏந்திக் கொண்டு சிறையில் இருந்த பதின்மூன்று கோட்டத் தலைவர்களைப் பார்த்துப் பேசலானான்.

"நமது மாண்புமிகு மகாமந்திரி அவர்களும் காரியஸ்தர் அவர்களும் என்னிடம் சில முக்கிய தகவல்களைத் தந்திருக்கிறார்கள். கடந்த ஓராண்டுக் காலத்தில் தொண்டை மண்டலத்தின் இருபத்துநான்கு கோட்டங்களின் வருவாய் பற்றியும், அக்கோட்டங்களில் நடைபெற்ற பொதுப் பணிகள் பற்றியும், சிறப்புப் பணிகள் பற்றியும் புள்ளி விவரங்களைத் தந்திருக்கிறார்கள். அதன்படி இப்போது பதவியில் இருக்கும் பதினொரு கோட்டங்களின் வருவாயை விட உங்களுடைய பதின்மூன்று கோட்டங்களின் வருவாய் மிகவும் குறைந்திருக்கிறது. மூன்றில் ஒரு பங்காகக் குறைந்திருக்கிறது. தொண்டை மண்டலத்தைப் பொறுத்தவரை கடந்த நான்கு ஆண்டுகளாக மழை தவறாமல் பெய்து வருகிறது. இங்கே உள்ள அனைத்து ஏரிகளும் தண்ணீரால் நிரம்பி வழிகிறது. அதே சமயம் வறட்சியோ வெள்ளமோ நிகழவில்லை. விவசாயம் குறைவின்றி நடைபெறுவதற்கான காரணிகள் அனைத்தும் நிறைவாக இருக்கும்போது உங்களது பதின்மூன்று கோட்டங்களில் மட்டும் வருவாய் மூன்றில் ஒரு பகுதியாகக் குறைந்தது ஏன்? தலைநகர் கருவூலத்திற்கு உங்கள் கோட்டங்களிலிருந்து வரவேண்டிய செல்வமும் களஞ்சியத்திற்கு வரவேண்டிய தானிய வகையறாக்களும் அதே விகிதத்தில் குறைந்துள்ளன. இந்தக் குறைபாடு கடந்த ஆண்டிலிருந்து உண்டாகி யிருப்பது தான் சந்தேகத்தை அளிக்கிறது."

இளவரசன் இவ்வாறு கூறி நிறுத்தியதும் களத்தூர் கோட்டத் தலைவன் எழுந்து "எங்கள் கோட்டத்தில் இயங்கும் கிராம சபைகள் செலுத்தும் தொகையைத் தான் கோட்டத்தின் வருவாயாகக் கணக்கு வைக்கப்படுகிறது. இதில் பிரச்சனை எங்கே இருக்கிறது?" என்று கேட்டான்.

"இதே நடைமுறை தானே மற்ற பதினோரு கோட்டங் களிலும் உள்ளது? அங்கே மட்டும் அதிக வருவாய் வந்தது எப்படி? மூன்றில் ஒரு பகுதியாக வருவாய் சுருங்கியபோது ஏன் என்று சிந்திக்க உங்களுக்குத் தோன்றவில்லையா? வறுமையில் இருப்பவர்கள் பொன் வைக்கும் இடத்தில் பூவை வைப்பார்கள். உங்கள் நிலைமை அப்படியில்லையே! உங்கள் மண்டலங்களில் நீர் வளமும் நில வளமும் நிறைவாகத் தானே இருந்தது? பூசனிக்காய்க்குப் பதிலாகச் சுண்டைக்காய் வந்தால் ஏன் எப்படி

என்று கேட்க மாட்டீர்களா? உங்களது சொந்த நிலங்களில் சாகுபடியானது இப்படிச் சரிந்து போனால் தலையைச் சொறிந்து கொண்டு அமர்ந்திருப்பீர்களா? காரணத்தை ஆராயமாட்டீர்களா?" என்று கேட்டான் இளவரசன்.

"கிராமச் சபையிடம் தான் விசாரணை செய்ய வேண்டும்" என்றான் வேலூர்க் கோட்டத்துத் தலைவன் கொடுமுடி.

"விசாரணையை யார் செய்ய வேண்டும்? மாமன்னரா? இல்லை. நீங்கள் செய்ய வேண்டும். கிராம சபைகளை விசாரிக்கும் உரிமை கோட்டத் தலைவர்களுக்கு இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியாதா?" என்று கேட்ட இளவரசன் "குடமுழுக்கு விழாவிற்கு வராத கோட்டத் தலைவர்கள் மாமன்னர் கைது செய்ய முற்பட்டபோது தப்பிச் சென்றது நீங்கள் தானே? தப்பிச் செல்லும் வழிமுறைகளை அறிந்த உங்களுக்கு கோட்டத் தலைவர்களின் உரிமைகள் என்னென்ன என்பது தெரியவில்லையா?" என்று கேட்டான். "நீங்கள் எங்கே இருந்தீர்கள், எந்த நிலையில் இருந்தீர்கள் என்பதெல்லாம் எனக்குத் தெரியும். தொண்டை மண்டலத்தின் அவமானச் சின்னம் நீங்கள். இங்கே அமரும் தகுதி உங்களுக்கு இல்லை என்றே நினைக்கிறேன் நான். சிறை கூட உங்களால் கறைப் பட்டு விட்டது. அமருங்கள் பேசாமல்" என்றான்.

கோட்டத் தலைவர்கள் தவித்தார்கள்.

"அது போகட்டும். வருவாய் குறைந்ததற்கான காரணத்தை காரியஸ்தரே விளக்கியிருக்கிறார். உங்கள் கோட்டங்களில் கடந்த ஆண்டில் பொதுப் பணிகளும், சிறப்புப் பணிகளும், ஆலயத் திருப்பணிகளும் நடக்கவில்லையே ஏன்? வருவாய் இல்லையா? மக்கள் நன்கொடை தர விரும்பவில்லையா? மக்கள் ஒத்துழைக்க வில்லையா? உழைக்கும் மக்கள் கோட்டங்களை விட்டு ஓடிவிட்டார்களா? அல்லது எதுவுமே வேண்டாம் என்று நீங்களே முடிவெடுத்து ஒதுங்கிக் கொண்டீர்களா?" என்று கேட்டான் இளவரசன்.

கோட்டத் தலைவர்கள் யாரும் பதில் கூற முன்வரவில்லை.

"அதுவும் போகட்டும். உங்களையெல்லாம் இயக்குவது யார்?" என்று கேட்டான் இளவரசன்.

அதிர்ந்து போன தலைவர்கள் சிலையாக இருந்தார்கள்.

அதையடுத்து இளவரசன் போட்ட உத்தரவு தலைவர்களுக்குக் கிலியை உண்டாக்கியது.

★★★



கண்டிப்பும் கலக்கமும்

இளவரசன் தந்திவர்மன் இட்ட கட்டளை மகாமந்திரி முதலான ஐந்து பிரமுகர்களுக்கும் அதிர்ச்சியாகத் தான் இருந்தது. ஆனாலும் ஆரம்பத்திலிருந்து அவனது அணுகுமுறை வித்தியாசமாக இருந்ததால் 'என்ன நடக்கிறது பார்ப்போம்' என்று பொறுமையாக இருந்தார்கள்.

சேவகர்களை அழைத்த இளவரசன் "இந்தப் பதின்மூன்று கோட்டத் தலைவர்களையும் இதே கூடத்தில் கயிற்றால் கட்டித் தொங்க விடுங்கள்" என்றான்.

சேவகர்கள் அதற்குத் தேவையான உபகரணங்களைக் கொண்டு வருவதற்காகச் சென்றார்கள்.

எதிர்பாராத இக்கட்டளையால் திகிலடைந்த கோட்டத் தலைவர்கள் ஆட்சேபணைக் குரலெழுப்பினார்கள்.

"இது அநீதி. தகாத கட்டளை. எங்களை அவமதிப்பது குற்றம்" என்றார்கள்.

"நாங்கள் ராஜதுரோகச் செயல்களில் ஈடுபடவில்லை. அப்படி ஈடுபட்டவர்களைக் கூட இப்படிக் கட்டித் தலைகீழாகத் தொங்கவிட்டதில்லை. நாங்கள் செய்த பிழை மிகவும் சிறியது" என்றார்கள்.

"எங்களை இப்படியெல்லாம் செய்வதற்கு நாங்கள் அடிமைகள் அல்ல. கோட்டத் தலைவர்கள். கௌரவமான வர்கள்" என்றார்கள்.

"இது பாரத நாடு, புண்ணிய பூமி. இங்கே இப்படியெல்லாம் நடப்பது கிடையாது. ரோமா புரியிலும் அரேபியாவிலும் நடக்கக் கூடிய கொடுமைகள் இவை" என்றார்கள்.

"நீங்கள் மிகவும் முறைதவறி நடக்கிறீர்கள். குடமுழுக்கு விழாவுக்கு வராத விவகாரத்திற்காக விசாரணை செய்யப் போவதாக அறிவித்து விட்டு வேறு எதையோ விசாரிப்பதும், எந்த அரசாங்கமும் கடைப்பிடிக்காத கொடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதும் கௌரவக் குறைவான

காரியங்கள். இதற்கு மன்னர் அனுமதிக்க மாட்டார்" என்றார்கள்.

"எங்களை யாரும் இயக்கவில்லை. இயக்குவதற்கு நாங்கள் ஒன்றும் குழந்தைகள் அல்ல" என்றார்கள்.

"பக்திமானாக இருந்துகொண்டு பாவச் செயலில் ஈடுபடு கிறீர்கள். சுலோகங்களை யெல்லாம் சொல்லிவிட்டு அதற்கு நேர்மாறாகச் சித்திரவதையான கட்டளைகளை இடுவது அநீதி" என்றார்கள்.

"மாமன்னரை அழையுங்கள். அவர் கருணைமான். நாகரீகம் தெரிந்தவர். நடைமுறைகளை அறிந்தவர்" என்றார்கள்.

இளவரசனோ எதற்கும் மசியவில்லை. அவர்களுக்குப் பதில் கூறவும் முற்படவில்லை.

இதற்கிடையில் சேவகர்கள் கயிறுகளோடு வந்தார்கள். கோட்டத் தலைவர்களைக் கட்டித் தொங்கவிடுவதற்குப் பெரிய தண்டு ஒன்றைக் கொண்டு வந்து கூடத்திற்கு குறுக்கே போடுவதற்கு அளவிட்டார்கள்.

"இளவரசே! இந்தத் தண்டில் ஆறு நபர்களைத் தான் தொங்கவிட முடியும்" என்றார்கள்.

"இன்னொரு தண்டைக் கொண்டு வாருங்கள். எல்லோரையும் ஒரே நேரத்தில் தொங்க விடுவது தான் சரி" என்றான் இளவரசன் உறுதியான குரலில்.

சேவகர்கள் மற்றொரு தண்டைக் கொண்டு வரச் சென்றார்கள்.

இளவரசனின் உறுதியைக் கண்டு கதி கலங்கினார்கள் கோட்டைத் தலைவர்கள்.

'இவன் நம்மை ஒரு வழி செய்யாமல் விட மாட்டான்' என்பதை உணர்ந்தார்கள்.

தலைகீழாகத் தொங்கவிட்டால் ரத்தம் தலைக்கேறி மண்டை புடைத்து விடும் என்பதையும் உயிரோடு மீள்வது சிரமம் என்பதையும் உணர்ந்தார்கள்.

சேவகர்களும் இரண்டாவது தண்டைக் கொண்டு வந்தபின் இரண்டையும் கூடத்தில் பொருத்த ஆரம்பித்தார்கள்.

கோட்டத் தலைவர்களுக்கு என்ன செய்வது என்று விளங்கவில்லை.

"அமைச்சர் பெருமானே! தரணிகொண்ட போசரே! காரியஸ்தரே! சேனாதிபதியாரே! இக்கொடுமையிலிருந்து எங்களைக் காப்பாற்றுங்கள்" என்று குரல் கொடுத்தார்கள்.

ஆனால் அவர்களோ வாயைத் திறக்கவில்லை.

இளவரசன் சேவகர்களைப் பார்த்து: "தண்டைப் பொறுத்துபவர்கள் போக மீதமிருப்பவர்கள் கோட்டத் தலைவர்களைக் கயிற்றால் கட்டுங்கள்" என்று உத்தரவிட்டான்.

இனி தப்ப முடியாது என்று புரிந்தது கோட்டத் தலை வர்களுக்கு.

அவர்கள் சித்திரவதைக்கு உள்ளாகவோ மரணத்தைத் தழுவவோ தயாராக இல்லை.

லாபத்திற்காகப் புருஷோத்தமனுக்குப் பணிந்த அவர்களைக் காப்பாற்ற அங்கே புருஷோத்தமன் வரவில்லை.

லாபமும் போய் உயிரும் போவது அர்த்தமற்ற விஷயம் என்பது அவர்களுக்குப் புரிந்தது.

அதற்கு மேலும் மௌனமாக இருக்க விரும்பவில்லை.

"நாங்கள் உண்மையைச் சொல்லி விடுகிறோம் இளவரசே. இந்த நடவடிக்கையை நிறுத்துங்கள்" என்றார்கள்.

இளவரசன் நடவடிக்கையை நிறுத்தினான்.

களத்தூர் கோட்டத் தலைவன் அனைவர் சார்பாகவும் உண்மையைச் சொன்னான்.

"புருஷோத்தமன் யார்?" என்று கேட்டான் இளவரசன்.

"எங்களுக்கு அவரைப் பற்றி எதுவும் தெரியாது" என்றார்கள் கோட்டத் தலைவர்கள்.

"எதுவுமே தெரியாது என்றால் விலாசமில்லாத ஒரு நபருக்கு இத்தனைக் கோட்டத் தலைவர்கள் எப்படி அடங்கினீர்கள்? அவர் கூறியதை ஏற்றீர்கள். பல்லவர் ஆட்சிக்கு எதிராக உளழல் புரிந்தீர்கள்?" என்று கேட்டான் இளவரசன்.

"பணத்திற்கும் பதவிக்கும் ஆசைப்பட்டுத் தான் அவருக்குப் பணிந்தோம்."

"பண ஆசையையும் பதவி ஆசையையும் இங்கே இருக்கும் மாண்புமிகு மகாமந்திரிக்கும் மற்றுமுள்ள நால்வரும் காட்டியிருந்தால் அவர்கள் சொற்படி நடப்பதில் பொருளிருக்கிறது. யாரென்றே தெரியாத ஒரு நபர் - எந்தப் பதவியிலும் இல்லாத ஒரு நபர் - தன்னை யாரென்றே காட்டிக் கொள்ளாத ஒரு நபரை எப்படி நம்பினீர்கள்?"

"அவர் நமது மாமன்னருக்கு எதிரி என்றும் மாமன்னருக்கு

எதிராகப் பேரணியை உருவாக்குவதாகவும் அதில் சேர்ந்து அவருக்கு ஆதரவாகச் செயல்பட்டால் உயர் பதவிகளும் பெருஞ் செல்வமும் கிடைக்கும் என்று திருமால்புரத்து பைரவர் மூலம் சத்தியம் செய்தார். ஆகவே தான் நம்பினோம்."

"அந்த மனிதரை விடுங்கள். நீங்கள் எல்லாம் யார்? தொண்டை மண்டலத்தின் கோட்டத் தலைவர்கள் மட்டுமல்ல. அதன் தூண்கள். பல்லவ ராஜ்யத்தில் கோட்டத் தலைவர்களாக இருப்பதென்பது சிற்றரசர்களாக இருப்பதைப் போல் சிறப்பானது. உங்கள் தோள்களின் மீதுதான் பல்லவ சாம்ராஜ்யம் இருக்கிறது. உங்களுக்கு மாமன்னர் எந்த விதத்தில் குறை வைத்தார்கள்? சிறப்பான கோட்டாட்சி செய்யும் தலைவர்களைத் தனது பிரதான படைக்கு அழைத்துச் சென்று உபதளபதிகளாகவும் பிறகு தளபதிகளாகவும் மாமன்னர் உயர்த்துவது உங்களுக்குத் தெரியாதா? எயிற் கோட்டத்துத் தலைவராக இருந்து திறம்பட நிர்வகித்த உதயசந்திரன் அவர்களை உபதலைவராக்கி பிறகு படைத்தலைவராக்க வில்லையா? இதை விடவா உயர் பவியையும் கௌரவத்தையும் அந்த மனிதன் உங்களுக்கு வழங்கிவிட முடியும்? தியாக உணர்வும், உழைப்பும் தான் உங்களுக்கு உண்மையான உயர்வைத் தரும். சதியும் ஊழலும் சகதியில் தான் தள்ளும்" என்று சொன்ன இளவரசன் கோட்டத் தலைவரைப் பார்த்து "நான் கொடுங்கோலன் அல்ல. கடுமையானவனும் அல்ல. எனக்கு அரசாங்க நிர்வாகத்தை விட பாற்கடலில் அரவணையில் துயில் கொள்ளும் பரந்தாமனுக்குத் தொண்டு செய்வதே பிடித்தமான காரியம். உங்களையெல்லாம் சித்திரவதை செய்ய ஒருபோதும் முனைய மாட்டேன். இதெல்லாம் வெறும் நாடகம் தான். உண்மையை நீங்கள் ஆரம்பத்திலேயே சொல்லியிருந்தால் இப்படியொரு ரசாபாசம் நடந்திருக்காது. புருஷோத்தமனின் கூடாநட்பு காரணமாக ஓராண்டுக் காலமாக நீங்கள் நிலைகுலைந்து போயிருந்தாலும் அதற்கு முன்பாக விசுவாசமாகவும் திறமையானவர்களாகவும் இருந்திருக்கிறீர்கள். அதை மறக்க முடியாது. உங்களைக் கௌரவக் குறைவாக நடத்தியதற்காக மன்னித்துக் கொள்ளுங்கள். அதோடு உண்மை மட்டும் தான் உங்களைக் காப்பாற்றும். பொய் நட்டாற்றில் விட்டுவிடும். உங்கள் அனைவருக்கும் நன்றி. சிறைக்குச் செல்லுங்கள்."

"நாங்கள் முழுவதும் சிறையில் தான் இருக்க வேண்டுமா இளவரசே?" என்று கேட்டார்கள் பதின்மூன்று கோட்டத் தலைவர்கள்.

"அதை முடிவு செய்ய வேண்டியது மாமன்னர் தான்" என்றான் இளவரசன்.

பதின்மூன்று கோட்டத் தலைவர்கள் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். உபகரணங்கள் அகற்றப்பட்டன.

புதியதாக நியமனமாகவிருந்த பதின்மூன்று பேரைப் பார்த்த இளவரசன் "உங்களையெல்லாம் இந்த விசாரணையின் போது அழைத்ததற்குக் காரணம் நீங்கள் எப்படியெல்லாம் நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் எப்படியெல்லாம் நடந்து கொள்ளக் கூடாது என்பதையும் அறிந்து கொள்வதற்காகத் தான். நீங்கள் கோட்டத் தலைவர்கள் என்பதை விட பல்லவ சாம்ராஜ்யத்தின் தூண்கள் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்குரிய கோட்டங்களை நீங்கள் சரியாக வைத்துக் கொள்ளவில்லை என்றால் சாம்ராஜ்யம் சரியாக இருக்காது. சரியாக வைத்துக் கொள்ள உங்களுக்கெல்லாம் அதிகாரமும், செல்வமும் இருக்கிறது. இவர்களைப் போல் அவற்றைத் தவறாகப் பயன்படுத்தாதீர்கள். ஊழலில் எந்த நேரத்திலும் இறங்காதீர்கள். ஊழல் என்பது தன்னையும் நோயாளியாக்கி மற்றவர்களையும் நோயாளிகளாக்கி என்றைக்கும் குணமடைய முடியாத அவலத்தைத் தந்துவிடும். பதவி நீக்கம் செய்யப்பட்ட பதின்மூன்று தலைவர்களும் தங்கள் கோட்டத்தில் படைகளை உருவாக்கியிருக்கிறார்கள் நமது மாமன்னரை எதிர்க்க. நீங்கள் பதவி ஏற்றவுடன் அந்தப் படைகளை மாமன்னரின் விசுவாசப் படையாக மாற்ற வேண்டும். ஓராண்டுக் காலமாக அக்கோட்டங்களில் வளர்ந்திருக்கும் ஊழலை அடையாளமின்றி அழிக்க வேண்டும். நீங்கள் செல்லலாம்" என்றான்.

அவர்கள் சென்ற பின் பதவியில் இருந்த பதினொரு கோட்டத் தலைவர்களைப் பார்த்து "நீங்களெல்லாம் அந்த அற்பப் பதர் புருஷோத்தமனின் பக்கம் சாயாமல் மாமன்னர் பக்கம் இருந்து கோட்டங்களைத் திறம்பட நிர்வகித்து வந்ததற்கு எனது பாராட்டுகள். புருஷோத்தமன் மீண்டும் வரலாம். அல்லது அவனைப் போன்று வேறு யாரேனும் வரலாம். ஏமாந்து விடாதீர்கள். உங்களது உயர்வு உங்கள் நடத்தையில் இருக்கிறது. 'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்று ஆன்றோர்கள் கூறியுள்ளதை நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் செல்லலாம்" என்றான் இளவரசன்.

அவர்கள் சென்ற பின் எழுந்து சென்று ஐவர் குழுவை வணங்கி "சான்றோர்களே! பெருமக்களே! தாங்கள் வீற்றிருக்கும்

போது தங்களை ஒரு வார்த்தையும் கேட்காமல் நானே எல்லா அலுவல்களையும் கவனித்து விட்டேன். நான் பேசியதும் செய்ததும் சரியா தவறா என்று தெரியவில்லை. தவறாக இருந்தால் என்னை மன்னித்து நல்வழி காட்ட வேண்டும்" என்றார்.

மகாமந்திரி பிரம்மஸ்ரீராஜர் அவனைக் கட்டிப்பிடித்து "தந்திவர்மா! நீ நந்திவர்மனையும் மிஞ்சி விட்டாய். உனது அணுகுமுறை சிறப்பாக இருந்தது. இப்படியொரு அணுகுமுறையை நாங்கள் கண்டதில்லை. பல்லவ சாம்ராஜ்யத்தின் எதிர்காலம் நிகழ்காலத்தை விடப் பிரகாசமாக இருக்கும்" என்றார்.

"தாங்கள் அப்படிக் கூறலாகாது அமைச்சர் பெருமானே! தந்தையார் மாட்சிமையோடு ஆட்சி புரியும் நிகழ்காலம் மகத்தானது. அதைவிட மகத்துவமான ஆட்சியை நான் தந்து விட முடியாது. நான் மாமன்னர் அன்பு நிழலிலும் எம்பெருமானின் அருள் நிழலிலும் நடக்கிறேன். என் செயலாவது யாதொன்று மில்லை" என்றான் இளவரசன்.

★

நேரம் இரவு நேரமாகி இரண்டு நாழிகைகள் கடந்திருந்தன.

திருப்பருத்திக் குன்றத்தையடுத்த கணிகையர் வீதியில் வேகமாக நடந்த தலைமைத் துறவி துலாபாரர் பவானியின் இல்லத்தை அடைந்து கதவைத் தட்டினார்.

கதவைத் திறந்த பவானி அவரோடு பேசவில்லை.

துறவியோ உள்ளே நுழைந்து கட்டிலிலே அமர்ந்து கொண்டு "உண்பதற்கு உணவு கொடு பவானி" என்றார்.

"எதுவும் இல்லை" என்றாள் பவானி.

"பழரசம் ஏதாவது கொடு பவானி."

"அதுவும் இல்லை."

"பருகுவதற்குத் தண்ணீராவது கொடு பவானி."

"இல்லை."

"என்மீது உனக்குக் கோபமிருப்பது நியாயம் தான்."

"உங்கள் மீது எனக்குக் கோபமில்லை. ஏனென்றால் உங்களோடு எனக்கு ஒட்டு இல்லை. உறவு இல்லை."

"உனது அங்கங்களைக் கேட்டுச் சொல் பவானி. என் ஒட்டும் உறவும் இல்லாத அங்கங்கள் உன்னிட.ம் ஏதாவது இருக்கிறதா?"

துறவியின் பேச்சு சரிதான் என்பது அவளுக்குப் புரிந்தது. சற்றுக் கிளுகிளுப்பாகவும் இருந்தது.

இருந்தாலும் அதையெல்லாம் மறைத்துக் கொண்டு "அவற்றை நான் மறந்து விட்டேன். நீங்கள் ஞாபகப் படுத்த வேண்டாம்" என்றாள்.

"மறக்கக் கூடிய உறவையா பவானி நாம் வைத்திருந்தோம்? நீ பேசுவது பொய். நாம் நினைக்க விரும்புவது மறந்து போவதும் மறக்க நினைப்பது நினைவிலேயே இருப்பதும் தான் எல்லோருக்கும் இயல்பாக இருக்கிறது. நமது உறவு உன்னை விட்டு நீங்கவே இல்லை."

"என் நினைவு பற்றி உங்களுக்கென்ன கவலை?"

"இருப்பதால் தான் வந்தேன்."

"சங்கவியின் வீட்டிற்குச் சென்ற போது இந்தக் கவலை வரவில்லையா?"

இதற்குத் துறவியளித்த பதில் பவானியை அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

★★★



துலாபாரரின் துலாபாரக் கணிப்பு

"இது உண்மையா அடிகளே?" என்று அதிர்ந்து போய்க் கேட்டாள் பவானி.

"ஆம் பவானி. மனம் ஆறவில்லை. தேறவில்லை. உடம்பெல்லாம் எரிகிறது. மனமெல்லாம் குழம்புகிறது. எல்லோரையும் கண்டதுண்டமாக வெட்டிவிடலாம் போல் இருக்கிறது. இந்த ராஜகுரு காலனையே உதைக்கக் கூடிய கோலனாக இருப்பான் போலிருக்கிறது. அவனை வலையில் வீழ்த்தப் போன சங்கவியைத் தன் மடியில் வளைத்துப் போட்டு எல்லாச் சல்லாபங்களையும் நிறைவேற்றிக் கொண்டு கொன்றுவிட்டான் பவானி. என் ஆற்றொணாத் துயரத்தை எங்கே போய் சொல்லி ஆற்றிக் கொள்வது என்பது தெரியாமல் உன் வீட்டிற்கு வந்தால் பிணக்குக் காட்டுகிறாய். இது கூத்தியர் இல்லமா கூற்றுவன் இல்லமா என்றே தெரியவில்லை. ஐயோ! உலகமே! நீ அழியக் கூடாதா? வெடித்துச் சிதறக் கூடாதா? பேதையான இளம்பெண்ணைக் காவு கொடுத்து விட்டு ஏன் எதற்காக இயங்குகிறாய்?" என்று கேட்டுத் தலையில் அடித்துக் கொண்டு புலம்பினார் துறவி.

அவரை அப்படிப் பார்ப்பதற்கு கஷ்டமாக இருந்தது பவானிக்கு. அவர் தன்னை மீறி சங்கவி வீட்டிற்குப் போனது தான் அவளுக்குப் பிடிக்கவில்லையே தவிர மற்றபடி அவரிடம் இருந்த எல்லாமும் விரும்பத் தக்கதாகவே இருந்தன. அவர் காட்டிய காமத்தையெல்லாம் எண்ணிப் பார்த்தாள். சங்கவியையும் கூடவே வைத்துக் கொண்டு அவர் போட்ட களியாட்டம் நினைக்க நினைக்க ஆனந்தமாக இருந்தது.

அப்படித் தன்னை ஆனந்தமயமாக ஆக்கிய துறவி இப்படிப் புலம்புவதை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

"நீங்கள் வருந்தலாமா அடிகளே? பிறருக்கு ஆனந்தத்தை அளித்து வருத்தத்தை வருந்தும்படிச் செய்பவர் நீங்கள். அதுவும் பலருக்கு நீங்கள் ஆனந்தத்தையும் அதையும் தாண்டிய நிலையையும் அளிப்பவர் நீங்கள். கட்டிளம் காளைகள் காட்ட முடியாதது

காமங்களைக் கண்டபடி காட்டும் காமச் சக்கிரவர்த்தி நீங்கள். சங்கவி விஷயத்தின் மீது எந்தத் தவறுமில்லை. மிகப்பெரிய நோக்கம் உங்களுடையது. அதில் உதவப் போன சங்கவி உரிய விதத்தில் நடந்து கொண்டிருக்க மாட்டாள். காஞ்சிக்குள் போவதென்பது காலன் கோட்டைக்குள் போவதென்பதை உணராமல் காமக் கோட்டைக்குள் செல்வதுபோல் என்றெண்ணி மயங்கிப் போயிருப்பாள். அதனால் மரணத்தைச் சந்தித்து விட்டாள். இதில் உங்கள் தவறு என்ன?" என்று கூறி அவரது கால்களைப் பிடித்து விட்டாள் பவானி.

"எது எப்படியானாலும் அவளை அனுப்பியது நான் தானே பவானி?" என்று கேட்டார் துறவி.

"வில்லிலிருந்து செலுத்தப்படும் எல்லா அம்புகளும் இலக்கைத் தொடுவதில்லை அடிகளே. சங்கவியைப் போன்ற அம்புகள் தவறிவிடுகின்றன. அவளது தலைவிதி அது. நெருப்புக் குண்டத்திற்குள் நுழைவதற்கு மிகுந்த எச்சரிக்கையும் பாதுகாப்பும் தேவை. அப்படிப்பட்ட காரியம் தான் அவள் இறங்கிய காரியம். அலட்சியமாக இருந்திருப்பாள். அழிந்து விட்டாள். நீங்கள் என்ன செய்ய முடியும்? அவளுக்குப் பக்கத்திலேயே இருந்து கொண்டு அறிவுரை சொல்லிக் கொண்டா இருக்க முடியும்?"

"இதெல்லாம் தெரிந்து தான் இந்த வேலைக்கு உன்னைப் பணித்த போது நீ மறுத்து விட்டாயே!"

"அப்படியில்லை அடிகளே. எனது தொழில் எதுவோ அது எனக்குத் தவம். அது தான் என் விதி. என் வாழ்க்கை என் எதிர்காலம். கையில் கிடைத்த முயலை விட்டு விட்டு வானத்தில் பறக்கும் பறவையைப் பிடிக்க முயன்றால் முயலும் கிடைக்காது. பறவையும் கிடைக்காது. எல்லைகளைத் தாண்டிப் போய் என் இருப்பிடத்தை இல்லை என்று ஆக்கிக் கொள்ள நான் விரும்பவில்லை. அதுவும் நீங்கள் இங்கே வந்து நான் கண்டறியாத உலகங்களைக் காட்டியபின் வேறு உலகத்தை நான் பார்க்க ஆசைப்படவில்லை. சங்கவியிடமும் சென்று நான் அறிவுரை சொன்னேன். அரசியலில் போய் சிக்கிக் கொள்ளாதே என்றேன். முதலையின்மீது பயணம் செய்வது ஆபத்து என்றேன். அலட்சியமும் பேராசையும் அவளை ஆட்கொண்டன. வீழ்ந்து விட்டாள்" என்று சொன்ன பவானி "இருங்கள். நான் போய் உணவைக் கொண்டு வருகிறேன்" என்று கூறிவிட்டு உள்ளே சென்றாள்.

துறவிக்குத் தற்போது தான் நிம்மதிப் பெருமூச்சு வந்தது.

எங்கே பவானி தன்னை நிராகரித்து விடுவாளோ என்று கவலையோடு இருந்தார். சங்கவி மீது வேதனைப்படுபவரைப் போலப் புலம்பி நாடகமாடினார்.

அவரைப் பொறுத்தவரை சங்கவியும் முக்கியமல்ல. பவானியும் முக்கியமல்ல. அவர்கள் வெறும் ஆயுதங்கள். அவ்வளவு தான். அவருக்குத் திருப்பருத்திக் குன்றத்தில் சமண மதத்தை உயிர்ப்பித்து உயர்வுக்குக் கொண்டு வருவதே இன்றியமையாததாக இருந்தது. அதற்காக யாரையும் பலிகொடுக்க அவர் தயாராக இருந்தார்.

சங்கவியின் விஷயத்தில் அவள் இறந்து போனது அவருக்குக் கவலையைத் தரவில்லை. இறக்கும் தருவாயில் ராஜகுருவிடம் தன்னைப் பற்றிய உண்மையினைச் சொல்லி யிருப்பாளோ என்ற கவலை தான் இருந்தது. அப்படிக் கூறியிருந்தால் அதை ராஜகுரு மன்னனுக்குச் சொல்லாமல் இருக்க மாட்டார். அப்படிச் சொல்லியிருந்தால் சமணத்தின் மீது ஏற்கனவே வெறுப்பில் இருக்கும் மன்னன் ஒரு வழி செய்யாமல் போக மாட்டான். தன்னைக் கைது செய்து சிறையில் தள்ளவும் தயங்க மாட்டான். சிறைக்குப் போய் விட்டால் தான் மட்டுமின்றிச் சமணமும் சிறைப்பட்டு விடும் என்று கருதினார். ஆகவே எது நடந்தாலும் தான் சிறைப்படுவது மட்டும் நடக்கக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தார். திருப்பருத்திக் குன்றத்தை விட்டு அகன்று மேல்சித்தாமூருக்குச்* சென்று கொஞ்ச காலம் இருக்கத் தீர்மானித்தார். தனியாகச் செல்லாமல் பவானியையும் அழைத்துக் கொண்டு போய்விடலாம் என்ற எண்ணத்துடனேயே அவள் இல்லத்திற்கு வந்து புலம்பல் நாடகத்தைப் போட்டார். அது வென்று விடவே அவருக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

ஆயினும் மகிழ்ச்சியை உடனடியாகக் காட்டிக் கொள்ளாமல் பவானி உணவு வகைகளைக் கொண்டு வந்து வைத்தபோது "வேண்டாம் பவானி. உடல் முழுதும் வேதனை வியாபித்து விட்டது. பசி இல்லை. உணவைக் கொண்டு போய் விடு" என்றார்.

"நீங்கள் மிகவும் விரும்பி உணவுண்ணும் இடமும் இதுதான். மிகவும் விரும்பி எனக்குத் திருப்தியைத் தரும் இடமும் இதுதான். பசியோடு தானே வந்தீர்கள்? எனது தவறான கோபத்தினால் நீரைக்கூட நான் கொடுக்கவில்லை. தயவு செய்து உண்ணுங்கள். உங்கள் லட்சியம் நிறைவேற உடம்பும் நன்றாக இருக்க வேண்டும்" என்றாள் பவானி.

---

* விழுப்புரம் மாவட்டத்தில் திண்டிவனம் – செஞ்சி சாலையில் செஞ்சியிலிருந்து கிழக்கே 10 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள ஓர் ஊர். சமணர் தலம்.

"உண்மைதான் கண்ணே. சங்கவி மரணமடைந்தது என் மகிழ்ச்சியைப் பறித்து விட்டாலும் லட்சியத்தை நான் பறிகொடுத்து விடவில்லை. என் உயிர் உள்ளளவும் அதற்கான முயற்சியில் தான் நான் இருப்பேன்" என்றார் உண்மையான லட்சியவாதியைப் போல.

பவானி உணவைத் தன் கையாலேயே எடுத்துக் கொடுத்த போது பரமானந்தத்துடன் உண்டார். உணவையடுத்து பழங்களையும் பாலையும் குறைவில்லாமல் அருந்தினார்.

கைகளையும் வாயையும் சுத்தம் செய்து கொண்ட அவர் "பவானி! ஒரு நாழிகை நேரம் நான் மௌனவிரதம் இருக்கிறேன். நீயும் முடிந்தால் இரு" என்று சொல்லி எழுந்தார்.

"எதற்கு அடிகளே விரதம்?"

"இளம்பெண் சங்கவி அகால மரணமடைந்து விட்டாள். அதற்கு நான் அஞ்சலி செலுத்த வேண்டும்" என்று சொல்லி நின்றபடியே கண்களை மூடினார்.

பவானியும் எழுந்து கண்களை மூடிக்கொண்டு நின்றாள். ஒரு கணநேரம் தான் அவளால் அப்படி இருக்க முடிந்தது. எனவே கண்களைத் திறந்தாள். துறவியோ சிற்பத்தைப் போல் அசையாமல் நின்றிருந்ததைக் கண்டாள். அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. மெதுவாக அவரருகே சென்றாள். லேசாக அவரது முதுகைத் தொட்டாள். அவர் அசையவில்லை. மார்பைத் தொட்டாள். அசையவில்லை.

கல்லாகி விட்டாரோ என்ற நினைப்போடு அவரது காவி ஆடையை லேசாகப் பற்றி உருவினாள். காவி ஆடை கீழே விழுந்தது. ஆனால் எதிர்பாராத விதமாக துறவி உள்ளாடை ஒன்றை அணிந்திருந்தார். துறவிகள் உள்ளாடை அணியமாட்டார்களே என்று எண்ணியபடி அவளது கரங்கள் அவரது உடலில் வேறிடத்தில் தொட்ட போது அசந்து போனாள் அவள். துறவிக்குள் இருந்த மிருகம் சட்டென விழித்துக் கொண்டதும் "துறவி" என்று மெல்ல அழைத்தாள்.

துறவியின் கைகள் அவளைப்பற்றின.

மீண்டும் அவள் "துறவி" என்றாள்.

"நான் துறவியல்ல" என்றார் துறவி. அவரது கண்களும் திறந்தன.

"பவானி! இப்படி வா. இப்படி திரும்பு" என்று சொன்னார் துறவி.

அவர் சொன்னபடிச் செய்தாள் அவள்.

அவரோ புதுமை ஒன்றைச் செய்தார்.

மகிழ்ச்சியில் "திருடா! திருடா" என்று முணுமுணுத்தாள் பவானி.

அவர் திருடனாகவே நடந்து கொண்டார். திருடன் செய்யும் கள்ளத்தனங்களைச் செய்தார்.

அவள் தடுக்கவில்லை. அவர் சளைக்கவில்லை.

பிறகென்ன?

பலநாழிகைகள் வரை இருவரும் பரமானந்தத்தில் ஈடுபட்டார்கள்.

"அடிகளே! அடுத்த பிறவியிலும் நீங்கள் துறவியாக இருக்க வேண்டும். நானும் நானாகப் பிறக்க வேண்டும். இது நமக்குள் பிறவி தோறும் நடக்க வேண்டும்" என்றாள் கிறக்கத்துடன்.

அவளை விடுவித்து ஆசனத்தில் அமர்ந்த துறவி "பவானி! நாங்கள் துறவறம் பூண்டது மீண்டும் பிறவாமல் இருக்கத் தான்" என்றாள்.

"நீங்கள் இப்போது துறவியாகத்தான் நடந்து கொண்டீர்களா?" என்று கேட்டாள் பவானி.

"இது வெறும் அங்கி மாதிரி. அணிந்து விடலாம். அகற்றி விடலாம். துறவற உணர்வு என்பது இதயத்தைப் போன்றது. உயிர் இருக்கும் வரை அது இருக்கும்" என்றார் துறவி.

"அடிகளே! நீங்கள் அயோக்கியர். உங்களைப் போலவே எல்லாத் துறவிகளும் இருந்து விட்டால் துறவறம் என்ற வார்த்தைக்கு அர்த்தமில்லாமல் போய் விடும்" என்றாள் பவானி.

துறவி சிரித்தார்.

"எதற்காகச் சிரிக்கிறீர்கள்?"

"என்னைச் சிரிக்க வைப்பது நீதான் பவானி. என்னைச் சிந்திக்க வைப்பதும் நீதான். செயல்பட வைத்ததும் நீதான். இங்கே வந்த போது எந்த நிலையில் இருந்தேன்! இப்போது எந்த நிலையில் இருக்கிறேன் பார்! என்னைச் சமணர்கள் அழ வைத்தார்கள். மன்னன் அழ வைத்தான். சற்று முன்புவரை சங்கவியும் எனக்கு அழுகையைத் தான் தந்தாள். என் உடலுக்கும் உள்ளத்திற்கும் மகிழ்ச்சியை எப்போதும் தருவது நீதான்" என்றார் துறவி.

"எனக்கும் அப்படித்தான் அடிகளே. உங்களைப் பார்த்தால் என் முகம் மட்டுமின்றி அனைத்து அங்கங்களும் மலர்கின்றன. உங்களது நெருக்கத்தில்தான் மனம் குளிர்கிறது. உடல் சூடாகிறது. உங்களோடு இணையும்போது தான் இன்பத்தின் அர்த்தமும் அருமையும் புரிகிறது."

"பவானி! நான் ஒரு மாத காலத்திற்குப் பிரிந்து வாழும் படி இருக்கும்."

"ஐயோ! அது எப்படி? எனக்கு நீங்கள் தினமும் வேண்டும். அல்லது இரண்டு நாட்களுக்கு ஒரு முறையாவது வேண்டும்."

"தெரியும் பவானி. ஆனால் எனக்கு வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை. சங்கவி ராஜகுருவிடம் சிக்கி மரணமடைந்து விட்டாலும் மரணத்திற்கு முன் என்னைப் பற்றிய உண்மைகளைச் சொல்லியிருப்பாள் என்றே தோன்றுகிறது. சமணத்தைப் பழிவாங்கும் எண்ணத்திலேயே மூழ்கியிருக்கும் மன்னனுக்கு இது தெரிந்தால் என்னைச் சிறை செய்துவிட்டுத் தான் மறுவேலையைப் பார்ப்பான். எனது லட்சியம் நிறைவேறும் வரை நான் சிறை செல்லக் கூடாது பவானி. ஒருமாத காலமாவது நான் தலைமறைவாக இருப்பது தான் நல்லது. எனவே மேல்சித்தாமூருக்குச் செல்லத் தீர்மானித்திருக்கிறேன். எனக்கு விடைகொடு."

"முடியாது அடிகளே முடியாது. உங்களை விடவே முடியாது."

"எனக்கும் முடியாது தான். என்னை மன்னன் சிறையில் அடைத்து விட்டால் என்ன செய்வாய்?"

"நீங்கள் எங்கே போகிறீர்களோ நானும் அங்கே வந்து விடுகிறேன்."

தனது நோக்கம் நிறைவேறிவிட்டதைக் கண்டு மகிழ்ச்சி யடைந்த துறவி "உன் முடிவுக்கு மகிழ்ச்சி பவானி. விடிவதற்குள் புறப்பட்டு விடுவோம். இருவரும் வணிகர்களாக வேடம் தரித்துக் கொள்ளலாம்" என்றார்.

"அப்படியே ஆகட்டும்" என்றாள் பவானி.

★

"என்ன சுவாமி நீண்ட நேரமாக யோசனையில் இருக்கிறீர்கள்? என்ன ஆயிற்று?" என்று வினவினாள் மகாமந்திரி பிரம்மஸ்ரீராஜரின் தர்மபத்தினி.

"குழப்பமாக இருக்கிறது" என்றார் மகாமந்திரி.

"மகாமந்திரியான தங்களுக்கே குழப்பம் என்றால் தெளிவு யாரிடம் இருக்கும்?"

"மந்திரிகளுக்கும் தெரியாத விஷயங்கள் உண்டு. அவர்களால் தீர்க்க முடியாத பிரச்சனைகளும் உண்டு."

"தங்களுக்கு இப்போது என்ன பிரச்சனை?"

"தவறு செய்து கொண்டிருக்கிறோமா என்ற உறுத்தல்."

"தாங்கள் தவறு செப்ய மாட்டீர்களே?"

"தவறு செய்பவர்களை அனுமதிப்பதும் தவறுதான்."

"அப்படி நீங்கள் செய்ய மாட்டீர்களே? தவறு செய்பவர்களைத் தட்டிக் கேட்பவராயிற்றே நீங்கள்?"

"தட்டிக் கேட்க முடியாத சந்தர்ப்பமாக இருந்தால்?"

"எந்தச் சந்தர்ப்பமானால் என்ன? தவறு என்று தெரிந்து விட்டால் தவறு என்று சொல்லி விடவேண்டும்? அது நடவாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதுதானே மகாமந்திரியின் கடமை?"

"கடமையை ஆற்றமுடியாத நேரங்கள் எல்லோரது வாழ்விலும் வரும்" என்று கூறிய மகாமந்திரி தேரில் ஏறிப் புறப்பட்டார்.

★★★



சிம்மவிஷ்ணு சதுர்வேதி மங்கலம்

காஞ்சிக்கு வடக்கே இருந்த சிம்மவிஷ்ணு சதுர்வேதி மங்கலத்தை* அடைந்தது தேர்.

மகாமந்திரியைக் கண்டதும் சதுர்வேதி அந்தணர்கள் வரவேற்று உபசரித்தார்கள். உணவு எதுவும் வேண்டாம் என்றார் மகாமந்திரி. தண்ணீரைக் கூட அருந்தவில்லை.

சதுர்வேதி பிராமணர்களின் ஷேம லாபங்களை விசாரித்த மகாமந்திரி "இங்கே இயங்கி வரும் வேதபாடசாலைகளை யெல்லாம் காணவந்தேன். நான் சிறு வயதில் வேத சாஸ்திரங் களைப் பயின்றது இங்கே உள்ள வேதபாட சாலைகளில் தான்" என்றார்.

"வாருங்கள் மகாமந்திரி" என்று கூறி அவரை அழைத்துச் சென்றார்கள் அந்தணர்கள்.

ஒவ்வொரு இடமாகக் காட்டி "இது சதுர்வேதங்கள் கற்பிக்கப்படும் பாடசாலை, இது; உபநிஷத்துக்களின் பாடசாலை. இது உபவேதங்களின் கல்விக் கூடம். இது வேதாந்தப் பாடசாலை. இது புராணங்களைக் கற்பிக்கும் கூடம். இது தமிழ் இலக்கிய நூல்களின் கலாசாலை" என்று சொல்லிக் கொண்டு வந்தார்கள் அந்தணர்கள்.

சதுர்வேதி மங்கலம் முழுவதையும் சுற்றிப் பார்த்த மகாமந்திரி "குரங்கின் கையில் பூமாலை கிடைத்தால் அது பிய்த்துப் போட்டுவிடும். அதே மாலை அந்தணர்களிடம் கிடைத்தால் தெய்வ விக்கிரகங்களுக்குச் சூட்டுவார்கள். கோட்டத் தலைவர்கள் பலர் வசம் இருக்கும் மண்டலங்கள் பொட்டல் காடுகளாக உள்ளன. சதுர்வதி மங்கலமோ உங்களது பராமரிப்பில் பசுமையாகவும் பவித்திரமானதாகவும் இருக்கிறது. தகுதியானவர்களிடம் எது இருந்தாலும் சிறப்பாக இருக்கும் என்பதற்கு இந்த ஊர் எடுத்துக்காட்டு" என்று சொல்லிவிட்டு

---

* தற்போது சென்னைப் புறநகர் பகுதியான மணலி.

"இங்கே எத்தனை மாணவர்கள் படிக்கிறார்கள்?" என்று வினவினார்.

"வருடா வருடம் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே வருகிறது மகாமந்திரி. தற்போது ஆயிரம் வித்யார்த்திகள் பயில்கிறார்கள். அவர்களுக்கு உணவு, உடை, இருப்பிடம் ஆகியவற்றை இலவசமாக அளிக்கிறோம்" என்றார்கள் அந்தணர்கள்.

"சிம்மவிஷ்ணு மகாராஜா தீர்க்கதரிசி. அவர் காஞ்சியை ஆண்டபோது சர்வகலாசாலையான கடிகை இருந்தது. அங்கே வேதங்கள் கற்பிக்கப்பட்டன. என்றாலும் வேதம் பயில்பவர்கள் குறைவாக இருந்தார்கள். உலகத்தை வழிநடத்தும் வேதங்களைப் பயில்பவர் நிரம்ப இருக்க வேண்டும் என்றும், நாடு முழுதும் வேதகோஷங்கள் கேட்க வேண்டும் என்று விரும்பினார். அதற்குத் தனியாகவும் விசாலமானதாகவும் ஓரிடம் இருக்க வேண்டும் என்று விரும்பினார்.

இந்த இடத்தைத் தேர்வு செய்தார். சதுர்வேதி பிராமணர்களை அழைத்து அவர்களுக்கு இந்த இடத்தை இறையிலி நிலமாக வழங்கினார். தன் பெயரையே சூட்டும் வகையில் இதற்குச் சிம்மவிஷ்ணு சதுர்வேதி மங்கலம் என்று அழைத்தார். ஆரம்பத்தில் வேதபாடசாலைகளைக் கட்ட நிதி வழங்கினார். சதுர்வேதிகள் திறம்பட விவசாயத்தை நடத்தி தங்களுக்கும் பாடசாலைகளுக்கும் வேண்டிய நிதியை அதன் மூலம் ஈடுசெய்து கொண்டார்கள். தற்போது இங்கே ஆயிரம் மாணவர்கள் பயில்வது மகிழ்ச்சி தான். ஆனாலும் இந்த ஆண்டு இந்த எண்ணிக்கை ஆயிரத்து ஐந்நூறாக உயர வேண்டும். அதனால் உண்டாகும் கூடுதல் செலவுக்கான நிதியை அளிப்பதற்கு மகாராஜாவிடம் சொல்கிறேன். நீங்கள் செல்லலாம்" என்றார் மகாமந்திரி.

எல்லா அந்தணர்களும் சென்று விட, ஒருவர் மட்டும் தனித்து நின்றார்.

அவரோடு நடந்தார் மகாமந்திரி.

"நாராயணா! உன்மீது நான் வைத்திருக்கும் நம்பிக்கை மிகவும் பெரியது. அதை நீ காப்பாற்றி வருவதில் எனக்கு மகிழ்ச்சி. திருப்தி. வேறு எங்கே வைத்தாலும் கசிந்து விடும் என்பதால் தான் அந்தணர்கள் மட்டுமே இருக்கும் இந்தச் சதுர்வேதி மங்கலத்தில் வைத்தேன். யாராவது சந்தேகக் கண்ணோட்டத்துடன் இங்கே வந்தார்களா?" என்று கேட்டார்.

"யாருக்கும் சந்தேகம் வரக் கூடாது என்று தானே இங்கே வைத்தீர்கள் அமைச்சர் பெருமானே! இதுவரை யாரும் அப்படி வரவில்லை" என்றார் அந்தணர்.

"சொர்ணமுகி எப்படி இருக்கிறாள்?"

"வெளி உலகத்தைப் பார்ப்பதற்கான அனுமதி மட்டு மில்லை. மற்றபடி அவளுக்கு எல்லா வசதிகளும் இருக்கின்றன. அவள் பறவையினங்களோடு பழகி அவற்றோடு பொழுதைப் போக்குகிறாள். என்னிடமும் பணிப்பெண்களுடனும் சகஜமாகப் பேசுகிறாள்."

"மன்னரைப் பற்றி விசாரிக்கிறாளா?"

"யாரைப் பற்றியும் விசாரிப்பதில்லை. அரசியலைப் பற்றிப் பேசுவதில்லை."

"தன் நிலையைக் குறித்துப் பேசுவதுண்டா?"

"சில நேரங்களில் பேசுவாள்."

"யாரோடு?"

"என்னோடு தான்."

"என்ன பேசுவாள்?"

"காலம் தான் மகத்தானது என்பாள். மனிதன் பயப்பட வேண்டிய ஒரே தலைவன் காலம் தான் என்பாள். காலம் எல்லா விஷயங்களுக்கும் சாட்சியாக இருக்கும் என்பாள். அதற்கு முன் வரும் காட்சிகள் மாறினாலும் காலம் மாறுவதில்லை என்பாள். என்னை இங்கே கொண்டு வைத்தது காலம் தான் என்றும் அந்தக் காலமே தன்னை இங்கிருந்து கொண்டு செல்லும் என்பாள். அக்காலம் வரும்வரை காத்திருப்பது தான் எனது தற்போதைய வாழ்க்கை என்பாள்."

"தன் நிலைக்கு யார் காரணம் என்று சொல்லி யார் மீதாவது கோபப் பட்டிருக்கிறாளா?"

"இல்லை. அப்படி எந்தச் சமயத்திலும் பேசியதில்லை. கோபம் அவளை அண்டி நான் பார்த்ததில்லை. நான் தினமும் அவளுக்கு என்ன வகையான உணவு வேண்டும் என்று கேட்பேன். அவள் இயல்பாகத் தனக்கு வேண்டிய உணவு வகைகளைச் சொல்வாள். நானும் அவ்வாறே செய்யச் சொல்லி அனுப்புவேன். நான் எவ்வளவு பாவங்களைச் செய்திருக்கிறேன் என்பது தெரியாது. ஆனால் கொஞ்சமாவது புண்ணியத்தைச் செய்திருக்கிறேன். அதுதான் உங்கள் ஆதரவில் என்னைச் சேர்த்திருக்கிறது. போட்டதைச் சாப்பிடு என்றில்லாமல் கேட்டதைக் கொடுக்கும்

நீங்கள் உத்தம அந்தணர். அடுத்த ஜென்மத்தில் உங்களுக்கு மகளாகப் பிறந்து சேவை செய்வேன் என்பாள்.”

“தெளிவாகத் தான் பேசுகிறாள் நாராயணா.”

“ஒரு விஷயம் மட்டும் ஒரு மாதரியாக இருக்கிறது.”

“அது என்ன?”

“வாருங்கள் நேரிலேயே பார்க்கலாம்.”

இருவரும் கணிசமான தூரத்திற்குச் சென்றார்கள். வழியெல்லாம் வயல் வெளியாகப் பசுமையாக இருந்தது. ஆங்காங்கே கிணறுகள் இருந்தன. கிணறுகளில் தண்ணீர் நிரம்பியிருந்தது. அத்தண்ணீரைக் கிணற்றிலிருந்து இழுத்து அண்டை வயல்களுக்குக் கொண்டு செல்ல நந்திவர்மன் காலத்தில் நீர் எந்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன.* அவை சிம்மவிஷ்ணு சதுர்வதேி மங்கலத்தில் விவசாயம் செய்து வந்த மறையோர்களுக்கு நிரம்பவே அளிக்கப்பட்டிருந்ததால் கிணற்றுநீர் இலகுவாக எடுக்கப்பட்டு வயல்களுக்குச் சென்று கொண்டிருந்தது.

அதையெல்லாம் பார்த்தபோது மகாமந்திரியின் உள்ளம் குளிர்ந்தது. அந்தநிலை அதிக நேரம் நீடிக்கப் போவதில்லை என்பதும் அவருக்குப் புரிந்தது. ஒருவிதமான இறுக்கம் அவருக்கு உண்டாயிற்று. பேசாமல் நடந்தார்.

நெல் வயில்களையடுத்திருந்த மலர் வயல்களுக்கு அருகில் பாழடைந்த மண்டபம் ஒன்றிருந்தது. அங்கே மனிதர்கள் யாரும் இல்லை. யார் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நாங்கள் நிச்சயம் இருப்போம் என்று பறைசாற்றுவது போல் நான்கு ஆந்தைகள் திசைக்கு ஒன்று என்று கணக்குக் காட்டும் விதமாகப் பொந்துகளில் அடைந்து கிடந்தன. இருவரைப் பார்த்ததும் பொந்துகளை விட்டு வெளியே வந்து முறைத்துப் பார்த்தன. ‘கிறீச்’ என்று சத்தமிட்டபடி பறந்து சென்றன.

அந்தணர் இடிந்த மண்டபத்திற்குள் சென்று வினோதமான குரலெழுப்பினார். அதையடுத்து அங்கே சுரங்கம் ஒன்று வெளிப்பட்டது. அதிலிருந்து வந்தாள் ஒரு பணிப்பெண்.

“பெண்ணே! மகாமந்திரி வந்திருக்கிறார். வணங்கு” என்றார் அந்தணர்.

பணிப்பெண் இருவரையும் வணங்கி விட்டுச் சுரங்கத்திற்குள் அழைத்துச் சென்றாள். பத்துப் படிக்கட்டுகள் இறங்கியபி

* பக்கம் 186 ‘பல்லவர் வரலாறு’ By. ராசமாணிக்கனார்.

பின் சுரங்கவாசல் மூடிக் கொண்டது. அங்கே சுவற்றில் மாட்டப்பட்டிருந்த பந்தத்தைப் பிடித்துக் கொண்டு வழி காட்டியபடி சென்றாள்.

எல்லோரும் பாதாள அரண்மனையினை அடைந்தார்கள். அறுநூறாண்டுகளுக்கு முன்னால் அங்கே வாழ்ந்த தனநந்தன் ஒருவன் தனக்காகப் பெரியதோர் அரண்மனையைக் கட்டி வாழ்ந்து வந்தான். அவன் நாகர் குலத்தவனாதலால் அவனோடு பாம்புகள் வசித்து வந்தன. அவன் தனது மனைவியோடும் ஒரே மகனோடும் அங்கே இருந்து வந்தான். அந்த அரண்மனையை விட்டு அவர்கள் அதிகமாக வெளியே வருவதில்லை. யாரோடும் பேச்சு வைத்துக் கொள்வதில்லை. யாருக்கும் ஒரு நாணயத்தைக் கூடத் தானமாக வழங்கியதில்லை. மக்கள் அவனை வெறுத்தார்கள். கேவலம் பாம்புகளுக்குக் காட்டும் அன்பைக் கூடத் தங்கள் மீது காட்டுவதில்லையே என்று அலுத்துக் கொண்டார்கள். ஒருநாள் அந்த அரண்மனையிலிருந்து பாம்புகள் வெளிப்பட்டன. தனநந்தன் தங்களையெல்லாம் கொல்வதற்காகத் தான் பாம்புகளை ஏவி விடுகிறான் என்று நினைத்துப் பாம்புகளையெல்லாம் அடித்துக் கொன்றார்கள்.

உண்மையில் தனநந்தன் பாம்புகளை அனுப்பவில்லை. அவன், அவன் மனைவி, அவன் மகன் மூவரும் என்ன காரணத்தாலோ ஒரே சமயத்தில் மயங்கி விழுந்தார்கள். நீண்ட நேரமாகியும் அவர்கள் மயக்கத்திலிருந்து விடுபடாததால் வருத்தமடைந்த பாம்புகள் செய்வதறியாமல் தவித்தன. மூவரது நிலையை மக்களுக்குத் தெரிவிக்க எண்ணிய பாம்புகள் ஒட்டு மொத்தமாக வெளியேறி வந்தன.

மக்களோ அவற்றின் வரவைத் தவறாகப் புரிந்து கொண்டு அடித்துக் கொன்றார்கள். இதற்கிடையில் மயக்கமான மூன்று பேரும் தெளிவு பெறாமல் இறந்து போனதால் இரண்டு நாட்களுக்குப் பிறகு அரண்மனையிலிருந்து துர்நாற்றம் வீசியது.

மக்கள் உள்ளே சென்றபோது மூவரும் சடலங்களாகக் கிடந்ததைக் கண்டதும் ஏதோ தீயசக்தி ஒன்று தான் அவர்களது உயிரைப் பறித்திருக்கிறது என்று எண்ணிக்கொண்டு உள்ளே மேற்கொண்டு செல்ல விரும்பாமல் சடலங்கள் மீதும் அரண்மனையின் மீதும் மண்ணையும் கல்லையும் வாரி இறைத்து மண்மேடாக ஆக்கினார்கள்.

காலவெள்ளத்தில் அரண்மனை மண்ணில் அழிந்து போயிற்று. நந்திவர்மன் முடிசூடிய பிறகு அந்த ஊர் சிம்மவிஷ்ணு சதுர்வேதி மங்கலமாக மாறியிருந்தது. அங்கே ஒரு முறை விஜயம் செய்த

நந்திவர்மன் அங்கேயொரு பெருமாள் கோயிலைக் கட்ட ஆய்வு செய்தபோது மண்ணில் மூழ்கியிருந்த அரண்மனை கிடைத்தது. அதைப் பற்றிய கதைகள் பல சொல்லப்பட்டன.

மன்னன் அதைப்பற்றிக் கவலைப்படாமல் அந்த அரண்மனையைச் சுத்தப்படுத்தி முன்பிருந்தது போன்று எழிலோவியமாக மாற்றினான். அங்கிருந்தப் பொழிலையும் மறுநிர்மாணம் செய்தான். அந்த அரண்மனை பூமிக்கடியில் இருந்ததால் அங்கு வருவதற்குச் சுரங்கப்பாதையை அமைத்து முகப்பு மண்டபம் ஒன்றையும் அமைத்தான். குளிர்காலங்களில் ஓரிரு நாட்கள் ராணியுடன் அந்த அரண்மனைக்கு வந்து தங்கியிருந்து விட்டுச் சென்றான்.

மற்ற நாட்களில் அரண்மனை மூடியே இருந்தது. சில ஆண்டுகள் கழித்துப் புயல் வீசிய போது கடலுக்கு அருகே இருந்த அச்சதுர்வேதி மங்கலம் மிகவும் பாதிக்கப்பட்டது. அப்போது நுழைவாயில் மண்டபம் இடிந்து விழுந்தது. அதற்குப் பின் மன்னன் அங்கு வருவதில்லை. பெருமாள் கோயிலைக் கட்டும் திட்டத்தையும் கைவிட்டான்.

★

அந்த அரண்மனைக்கு வந்த மகாமந்திரி உள்ளே இருந்த சிறப்பான கூடத்தைக் கண்டார். நான்கைந்து முறை அவர் அங்கு வந்திருந்தாலும் ஒவ்வொரு முறை வரும்போதும் முதன்முறையாக வரும்போது வரும் உணர்வே அவருக்கு வரும். அறுநூறு ஆண்டுகளுக்கு முன் அங்கே வாழ்ந்த தனஞ்சயன் நல்லவனோ - கெட்டவனோ! நல்ல ரசிகனாக இருந்திருக்கிறான். அதனால் தான் இந்த அரண்மனையை இத்தனை அழகோடு அமைத்திருக்கிறான் என்று நினைத்துக் கொண்டார்.

"அமைச்சர் பெருமானே! அங்கே பாருங்கள்" என்றார் அந்தணர்.

கூடத்தின் ஒரு பகுதியில் இளம்பெண் ஒருத்தி சுவற்றில் கரியால் சித்திரம் ஒன்றை வரைந்திருந்தாள். அந்தச் சித்திரம் நந்திவர்மனின் வடிவமாக இருந்தது. தத்ரூபமாக இருந்தது.

"தினமும் மன்னரின் உருவத்தை வரைகிறாள்" என்று மெல்லச் சொன்னார் அந்தணர்.

"தினமும் வரைகிறாளா? அப்படியென்றால் நேற்று வரைந்த ஓவியம் வேறு இடத்தில் இருக்கிறதா?" என்று மகாமந்திரியும் மெல்லக் கேட்டார்.

"பாருங்கள்" என்றார் அந்தணர்.

அந்த இளம்பெண் திடீரென நீரை வாரி ஓவியத்தின் மீது இரைத்தாள். ஓவியம் கலைந்து கரையும் வரை இரைத்தாள். பணிப்பெண்ணை அழைத்துச் சுத்தம் செய்யச் சொல்லிவிட்டு உள்ளே சென்றாள்.

அந்தணர் மகாமந்திரியை அழைத்துக் கொண்டு பணிப் பெண்ணின் உதவியோடு சுரங்கத்தை விட்டு வெளியே வந்தார்.

"சொர்ணமுகி தினமும் தவறாமல் செய்கிற காரியம் இது அமைச்சர் பெருமானே. இதைச் செய்யும் போது அமைதியாகவே செய்கிறாள். கோபமோ ஆவேசமோ அடைவதில்லை. எதற்காக இப்படிச் செய்கிறாள் என்பது விளங்கவில்லை" என்றார் அந்தணர்.

"எனக்கு விளங்குகிறது நாராயணா" என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்ட மகாமந்திரி "காஞ்சிக்குச் சென்றதும் மன்னனின் மூலம் இதற்கொரு முடிவு கட்ட வேண்டும்" என்ற தீர்மானத்துடன் சதுர்வேதி மங்கலத்தை விட்டுப் புறப்பட்டார்.

★★★



பிரச்சனைகளும் முடிவுகளும்

தன் பொறுப்பிற்கு உரிய கடமைகளைச் செய்ய முடியாமல் போவது மிகவும் துரதிருஷ்ட வசமானது என்றும் அதுதான் சொர்ணமுகி விஷயத்திலும் நடந்திருக்கிறது என்றும் கருதிய மகாமந்திரி பிரம்மஸ்ரீராஜர் காஞ்சிக்குச் சென்றதும் மன்னனிடம் கலந்து பேசி விஷயமாகப் பேசி ஒரு முடிவுக்கு வந்து விடவேண்டும் என்று நினைத்தார்.

காஞ்சிக்குச் சென்ற போது மன்னனின் ஞானகுரு மரண மடைந்து விட்ட செய்திதான் அவரை வரவேற்றது.

பேச்சாளர்கள் நிறையப் பேசிப் பாராட்டுதல்களைப் பெறு வார்கள். ஞானிகளோ குறைவாகப் பேசிப் பாராட்டுகளைப் பெறுவார்கள். மன்னனின் ஞானகுரு அதிகமான நேரங்களில் மௌனமாகவே இருப்பாராதலால் மக்களைக் கவர்ந்திருந் தார். மௌனத்தைப் பற்றி அவரிடம் மக்கள் யாராவது கேட்கும் போது "ஞானிகளுக்கு மௌனம் என்பது இடைவிடாதப் பேச்சாகும். இதை அனுபவம் மூலம் தான் உணர முடியும். பேச்சுகள் தவறாக உணரப்படலாம். பலருக்குப் பிடிக் காமல் போகலாம். மௌனத்திற்கு அந்தப் பிரச்சனைகள் இல்லை" என்பார் அவர்.

காஞ்சி மாநகரின் காவல் தெய்வங்களில் ஒன்றாகவே கருதப்பட்டு வந்த அவர் மரணமடைந்து விட்டதால் காஞ்சிக்கு உரிய பாதுகாப்பு சற்று அசைந்து விட்டது போல் இருந்தது மக்களுக்கு. அவரது பூதவுடலுக்கு மக்கள் மரியாதை செய்வதற்கு மன்னன் ஏற்பாடு செய்திருந்தானாதலால் நிறைய பேர் வந்து அஞ்சலி செலுத்தினார்கள்.

"தனது மரணம் எப்போது நிகழும் என்பதை ஞானகுரு அறிந்து வைத்திருந்தார் மகாமந்திரி அவர்களே! என்னிடம் சொல்லவும் செய்தார். அப்படியே நடந்தும் இருக்கிறது. ஞானகுரு மறைந்தது ஞான உலகிற்குச் சூன்யம் விழுந்த மாதிரி தோன்றுகிறது. இவரைப் போன்றவர்கள் அடிக்கடி தோன்றுவதில்லை. அரிதாக

மலரும் குறிஞ்சிப் பூவைப் போலத் தான் தோன்றுகிறார்கள். எனது ஆயுட் காலத்தில் அவர் வாழ்ந்ததே நமது பாக்கியம் தான்" என்றான் மன்னன்.

"தங்களுக்கு வடநாட்டிலிருந்து மகான் ஒருவர் வருவார் என்று ஞானகுரு சொல்லியிருக்கிறார் அல்லவா?" என்று கேட்டார் மகாமந்திரி.

"ஆம். மகாமந்திரியாரே. ஏதோ எனக்குத் தொடர்ச்சியாக ஒரு மகான் இருக்க வேண்டும் என்பது அவரது திருவுள்ளம் போலும். இவரது மறைவு வடநாட்டிலிருந்து வரும் மகானின் வரவு அதிக தூரத்தில் இல்லை என்பதை உணர்த்துவதாக நினைக்கிறேன்" என்றான் மன்னன்.

ஞானகுருவின் மறைவு குறித்து மூன்று நாட்களுக்கு த்துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது. ராஜகுருவும் தரணி கொண்ட போசரும் மூன்று நாட்களுக்கு உபவாசம் இருந்து ஞானகுருவுக்கு அஞ்சலி செலுத்தினார்கள்.

ஐந்தாவது நாள் மன்னனை அவனது இல்லத்தில் சந்தித்தார் மகாமந்திரி. நீண்ட காலமாக நீடிக்கும் பிரச்சனைகளுக்கும் முக்கியமான பிரச்சனைகளுக்கும் தீர்வு காண்பதற்குப் பூர்வாங்கமாக மன்னனை அவனது இல்லத்தில் சந்திப்பது மகாமந்திரிக்கு வழக்கமாக இருந்தது. அந்த வகையில் மன்னனைச் சந்தித்த அவர் "ஆலோசனை அவையில் முடிவெடுப்பதற்கு முன் சில விஷயங்களை உன்னிடம் பரிசீலிக்க வேண்டும் மகாராஜா. முதலாவது சிறையில் அடைக்கப்பட்ட பதின்மூன்று கோட்டத்தலைவர்களைப் பற்றியது. அவர்களுக்குத் தண்டனை வழங்குவது பற்றியது" என்றார்.

"தந்திவர்மனே தண்டனையை வழங்கியிருக்கலாமே?" என்றான் மன்னன்.

"மன்னவா! தந்திவர்மன் அதிகாரத்தைப் பொறுத்தவரை தன் வரம்பு எது மகாராஜாவின் வரம்பு எது என்று தெரிந்து வைத்துக்கொண்டு தெளிவாக நடந்து கொள்கிறான். நான் ஏற்கனவே உன்னிடம் சொன்னது போல அன்றைக்கு அவன் விாரணை நடத்தவில்லை. பாடம் நடத்தினான். அது எங்களுக்குக் கூட உபயோகமாக இருந்தது" என்றார் மகாமர் ிரி.

"கோட்டத் தலைவர்கள் தன்னை இயக்கியது புருஷோத்தமன் என்று சொன்னார்களே அவன் யாராக இருக்கக் கூடும்? உங்கள் ஊகம் என்ன?"

"சரியாகத் தெரியவில்லை மன்னவா! உங்களை அழிக்கவும் ராஜ்யத்தைப் பிடிக்கவும் நேர்வழியில் செயல்பட முடியாத ஒரு கோழை தான் இப்படி நடந்து கொள்ள முடியும். இது நிச்சயமாகக் குறுக்கு வழி தான். இதில் ஈடுபடக் கோட்டத் தலைவர்களுக்குத் தான் ஆசை காட்ட முடியும். என்னையோ, கடிகைத் தலைவரையோ, காடக முத்தரையரையோ ஆசை காட்டிக் தன் வசப்படுத்த முடியாது. தனது தகுதிக்கு மேல் ஆசைப்படுகிற ஒருவன் தான் அவனாக இருக்க வேண்டும்."

"மகாமந்திரி! அவன் நம் கைகளில் கிடைக்கும் வரை இந்தப் பதின்மூன்று கோட்டத் தலைவர்களும் சிறையிலேயே இருக்கட்டுமே?"

"நானும் அப்படித் தான் நினைக்கிறேன் மன்னா" என்று சொன்ன மகாமந்திரி "ராஜகுரு தெரிவித்த சமணர் தலைவர் துலாபாரர் விஷயம். அவர் ஒரு விஷம். அவருக்கும் குறுக்கு வழிதான் பிடித்திருக்கிறது. அதற்குக் கணிகை ஒருத்தியை அனுப்பி வைத்திருக்கிறார் என்றால் அவரது துறவும் ஒழுங்கும் இன்னும் சீரழிந்திருக்கிறது என்றே தோன்றுகிறது. அவரைக் கைது செய்து விட்டால் என்ன?" என்று கேட்டார்.

"சமணர்களின் செல்வாக்கை நான் மிகவும் குறைத்து விட்டேன். திருப்பருத்திக் குன்றத்தில் அது தற்போது பெயரளவிற்குத் தான் இருக்கிறது. அதோடு அங்கே துலாபாரர் தனித்துவிடப் பட்டிருக்கிறார். அங்கிருக்கும் சமணர்கள் அவரை ஆதரிக்கவில்லை. அவருக்கு உதவவும் இல்லை. அதுவே அவருக்குப் பின்னடைவு தான். தண்டனை தான். அவரைக் கைது செய்து விஷயத்தை நாமே எதற்காகப் பெரிது படுத்த வேண்டும்? நாம் கவனிக்காமல் விட்டு விட்டாலே போதும் அது தானாக அழியும்."

"ராஜகுரு நாம் நடவடிக்கை எதையும் எடுக்காவிட்டால் வருத்தப்படுவார்."

"ஒருவரது வருத்தத்திற்காகவோ சந்தோஷத்திற்காகவோ நடவடிக்கை எடுக்க முடியாது மகாமந்திரி. இந்த விஷயத்தில் பேசாமல் இருப்பதுகூட ஒரு நடவடிக்கை தான். இதை அவருக்குச் சொல்லுங்கள் புரிந்து கொள்வார்."

"மூன்றாவது விஷயம் தில்லை நடராஜர் கோயிலைப் பற்றியது. பரமேச்சுர விண்ணகரத்தைப் போலக் கலையழகு மிகுந்த பெருமாள் கோயிலை தில்லையில் நாம் அமைக்கவில்லை. மதிலைச் சற்றே இடித்து சித்திரக் கூடம் ஒன்றைக் கட்டி அதில் பெருமாள் மூர்த்தத்தைப் பிரதிஷ்டை செய்யப் போகிறோம்.

அவ்வளவு தான். சென்றவார நிலவரத்தின்படி சித்திரக் கூடமும் வாயிற்படியும், மணிக்கதவும், தயாராகி விட்டன. ஓவியங்கள் தீட்டும் பணி நடந்து கொண்டிருக்கிறது. அதைப் பார்வையிட்டு முடித்து வைப்பதற்காகக் கோட்டைத் தலைவர் பல்லவடி அரையர் தில்லைக்குச் சென்றிருக்கிறார். அங்கே பிரதிஷ்டை செய்ய வேண்டிய பெருமாள் மூர்த்தம் கடல்மல்லையில் தயாராகிக் கொண்டிருக்கிறது. அந்தத் திருப்பணியும் ஒருவார காலத்தில் முடிவடைந்து விடும். சிலையைத் தில்லைக்குக் கொண்டு செல்ல ஒரு வாரமாகும்."

"மகிழ்ச்சியான தகவல் தான்."

"மன்னா! தில்லையில் இருக்கும் சோழச் சிற்றரசர் பராங்குசரின் திறமை மட்டுமல்ல அங்கு இருக்கும் வீரசைவர்கள் மனநிலை மாற்றமும் தில்லையில் மதக் கலவரம் எதுவும் நடக்காத சூழ்நிலையை உண்டாக்கியிருக்கிறது. அவர்கள் ஒத்துழைப்பு நல்கி வருகிறார்கள். எந்த இடையூறும் செய்யாமல் அமைதி காக்கிறார்கள். அவர்கள் நமக்கு தற்போது வைத்திருக்கும் கோரிக்கை ஒன்று மட்டும் தான்."

"சொல்லுங்கள்."

"சித்திரக் கூடத்தில் நாம் பிரதிஷ்டை செய்யும் பெரு மாளுக்குத் தில்லை மூவாயிரவர் வழிபாடுகளை நடத்த வேண்டுமாம்.* அதற்கு அனுமதி கேட்கிறார்கள்."

"நமக்கு முக்கியம் பெருமாள் தான். அவருக்கான பூஜைகளைத் தில்லை மூவாயிரவர் செய்ய விரும்பினால் அது நல்லது தான். நடராஜர் கோயிலுக்குள் பெருமாள் இருக்க வேண்டும் என்பதுதான் என் லட்சியம். அவரை வைஷ்ணவர்கள் தான் பூஜை செய்ய வேண்டும் என்று நான் கருதவில்லை. சொல்லப் போனால் பெருமாளுக்கு வைஷ்ணவர்கள் பூஜை செய்ய ஆரம்பித்தால் வைஷ்ணவர்களுக்கும் சைவர்களுக்கும் ஏதாவது பூசல் உண்டாகிக் கொண்டே இருக்கும். அது மக்களுக்கு இடையூறாக இருக்கும். ஆகவே அவர்களது கோரிக்கை ஏற்புடையது தான்."

"சைவர்கள் பூஜை செய்தால் அது முறையாக இருக்காது என்றும் அரைகுறையாக இருக்கும் என்றும் தில்லை வைஷ்ணவர்கள் கருதுகிறார்கள்."

---

* 'மூவாயிர நான் மறையாளர் நாளும்
முறையால் வணங்க அணங்காய சோதி
தேவாதி தேவன் திகழ்கின்ற தில்லைத்
திருசித்ர கூடம் சென்று சேர்மின்களே'
- திருமங்கை ஆழ்வாரின் பெரியதிருமொழி 3-2-8

"நான் அப்படிக் கருதவில்லை. சைவ - வைணவ மதத்தவர் களுக்கிடையே மத வித்தியாசங்களும் காழ்ப்புணர்ச்சிகளும் இருக்கலாம். ஆனால் பூஜைகளைச் செய்யும் விஷயத்தில் வேதம் பயின்ற வேதியர்கள் தவறு செய்ய மாட்டார்கள். அவர்கள் வைஷ்ணவர்களாக இருந்தாலும் சரி. சைவர்களாக இருந்தாலும் சரி. இந்தச் செய்தியைச் சிற்றரசர் பராங்குசருக்கு அனுப்புங்கள். தில்லைவாழ் வைஷ்ணவர்களை அழைத்து இதை அறிவிக்கச் சொல்லுங்கள். தில்லை மூவாயிரவர் கோரிக்கையை நான் ஏற்றது போல அந்த வைஷ்ணவர்களும் ஏற்கும் படி அவரை எடுத்துரைக்கச் சொல்லுங்கள். கலவரம் மட்டும் நடக்கக் கூடாது. அதைச் சைவர்கள் செய்தாலும் சரி, வைஷ்ணவர்கள் செய்தாலும் சரி. அதை நான் ஒடுக்குவேன் என்பதையும் தெரிவித்து விடுங்கள். பெருமாள் மூர்த்தத்தைப் பிரதிஷ்டை செய்து நாள் குறிக்கச் சொல்லுங்கள். தாங்களே சென்று சம்ப்ரோக்ஷணத்தை நடத்திவிட்டு வாருங்கள்."

"நீங்கள் வரமாட்டீர்களா மன்னவா?"

"கொள்கைகள் என்பது வளையக் கூடியது அல்ல மகாமந்திரி. அப்படி வளைந்தால் அது கொள்கையல்ல. புரட்டு. முகுந்தனின் திருவடிகளை மட்டுமே தொழும் நான் சிவாலயங்களில் கால் பதிக்க மாட்டேன்."

"பெருமாள் கோயிலை அமைக்க உத்தேசித்த போது தில்லை நடராஜர் கோயிலுக்குள் சென்றாய் அல்லவா?"

"கோயிலை எந்த இடத்தில் அமைக்க வேண்டும் என்பதைத் தெரிவு செய்வதற்காக அரசனாகச் சென்றேன். ஓர் அரசனாக எங்கேயும் செல்வேன். அது கடமை. ஒரு வைஷ்ணவாகச் செல்லும் போது என் கொள்கை வழி தான் முக்கியம்."

"நல்லது மன்னவா. இப்போது நான் கூறப்போவது நாலாவது விஷயம். கடைசி விஷயம். முக்கியமான விஷயம். உடனே தீர்க்க வேண்டிய விஷயம். ஆரம்பத்திலேயே தான் தடுத்திருக்க வேண்டிய விஷயம். தடுக்காமல் போனதால் பாவகரமாக மாறிவிட்ட விஷயம். பாவத்தைத் தொடரக் கூடாது என்று தீர்மானித்து அதைக் களைய உன்னிடம் வந்திருக்கிறேன்."

"என்னிடம் உங்களுக்கு இத்தனைப் பீடிகைகள் தேவை யில்லை மகாமந்திரி."

"மன்னவா! நேற்று சிம்ம விஷ்ணு சதுர்வேதி மங்கலத்திற்குச் சென்றேன். சொர்ணமுகியைச் பார்த்தேன்" என்று சொன்ன மகாமந்திரி தான் பார்த்தற்றைச் சொன்னார்.

"சொர்ணமுகியை விடுவித்து விடலாம் மன்னவா!" என்றார்.

"அதற்கு நேரம் வரவில்லை மந்திரியாரே!" என்று சொன்னான் மன்னன்.

மகாமந்திரி இதைச் சற்றும் எதிர்பார்க்காததால் ஏமாற்ற மடைந்தார்.

பேசவேண்டிய பேச்சு முடிந்து விடவே இருவரும் அரண் மனைக்குச் சென்றார்கள்.

அரண்மனை வாயிலில் சங்கு ஒன்று கட்டித் தொங்கவிடப் பட்டிருந்தது.

அதைச் சுட்டிக்காட்டி "ஏதோ விபரீதம் நடந்திருக்கிறது மன்னா" என்றார் மகாமந்திரி.

இருவரும் உள்ளே சென்றார்கள்.

உள்ளே அவர்களுக்காகக் காரியஸ்தரும் கோட்டையின் உபதளபதிகளும் காத்திருந்தார்கள்.

"என்ன விஷயம்?" என்று கேட்டான் மன்னன்.

"சமுத்ர கோஷம் கிழிக்கப்பட்டிருக்கிறது மகாராஜா" என்றான் உபதளபதி.

மன்னனின் முகம் ஒருகணம் சிவந்தது. அடங்கியது.

"கோட்டைத் தளபதி பல்லவடி அரையர் எங்கே?" என்று கேட்டான்.

"அவரைத் தாங்கள் தில்லைக்கு அனுப்பி யிருக்கிறீர்கள்."

"காரியஸ்தரே! அமருங்கள். உபதளபதி! நீயும் உட்கார்" என்றான் மன்னன்.

அவன் நிதானத்திற்கு வந்து விட்டதை அனைவரும் உணர்ந்தார்கள்.

அனைவரையும் பார்த்த மன்னன் "சமுத்ர கோஷம் பல்லவர்களின் கௌரவச் சின்னம். நான் இங்கே முடிசூடிய போது பலருமாக ஆலோசித்து நிர்மாணிக்கப் பட்ட போர் முரசு அது. சமுத்திரம் எழுப்பும் பேரோசையை அது எழுப்பியதாலேயே அதற்குச் சமுத்ர கோஷம் என்ற பெயர் சூட்டப்பட்டது. பல்லவர் படைகள் போருக்குப் புறப்படும்போது அந்த முரசு முழங்கும். போரை அறிவிக்கும் முரசு அது. பல்லவரது பேராண்மையை அறிவிக்கும் முரசு அது. முரசுகளுக்கெல்லாம் தலையாய முரசு அது. அத்தகைய மகத்தான போர் முரசு கிழிக்கப்பட்டிருக்கிறது. இது நமக்குப் பேரவமானம்" என்றான்.

யாரும் எதுவும் பேசவில்லை.

மன்னனே தொடர்ந்தான்.

"சமுத்ர கோஷம் வைக்கப்பட்டிருக்கும் இடத்தை யோசித்துப் பாருங்கள். கோட்டையின் மையப்பகுதியில் மதில்களை விட உயரமாக எழுப்பப்பட்ட தூணின்மீது அது வைக்கப்பட்டிருக்கிறது.அதை அடைய வேண்டுமானால் தூணின் உட்புறமாக அமைக்கப்பட்டுள்ள படிகள் வழியாக மேலே வர வேண்டும். வேறு வழியில்லை. ஒரு யானை எடையுள்ள போர் முரசு அது. அதை எப்படி யார் கிழித்துச் சேதப்படுத்த முடியும்? படிக்கட்டுகளில் ஏற வேண்டும் என்றால் அடிப்பாகத்தில் உள்ள கதவு திறக்கப்பட வேண்டும். அது எப்போதும் பூட்டிய நிலையிலேயே இருக்கும்.நான் ஆணையிட்டாலொழிய அக்கதவு திறக்கப்பட மாட்டாது."

"மகாராஜா! கதவு பூட்டப்பட்ட நிலையிலேயே இருக்கிறது. சமுத்ர கோஷத்தைச் சேதப்படுத்த விரும்பியவர்கள் தூணின் வெளிப்புறத்தில் கயிற்றை வீசி மேலே போயிருக்க வேண்டும். நள்ளிரவுக்குப் பின் ஊரெங்கும் உள்ள எண்ணெய் விளக்குகள் அணையத் தொடங்கும். இருட்டானது நகரைச் சூழும். அந்த நேரத்தில் தான் இக்காரியம் நடந்திருக்க வேண்டும்" என்றான் உபதளபதி.

"அப்படியானால் விவரம் தெரிந்த நபர்தான் இதைச் செய்திருக்க வேண்டும்" என்று சொன்ன மன்னன் "வாருங்கள். போய் பார்ப்போம்" என்று சொல்லித் தூண இருந்த இடத்திற்குப் போய்ப் பூட்டைத் திறந்து, கதவுகளைத் திறந்து, படிகளில் ஏறி மேலே சென்றான்.

தூணுக்கு மேலே இருந்த வட்ட வடிவமான மேடையில் வைக்கப்பட்டிருந்த சமுத்ர கோஷத்தின் தோல் பகுதியில் வாளொன்று பாய்ந்திருந்தது. தோல் கிழிந்து தொங்கியது.

முரசின் கீழ்ப்பகுதியில் ஓர் ஓலை கிடந்தது.

★★★



உதயசந்திரன்

ஓலையைப் படித்தான் மன்னன்.

“நந்திவர்மா! கங்கநாட்டுச் சக்கரவர்த்தியான ஸ்ரீபுருஷரது ஆக்ஞையின்படி விடுக்கப்படும் ஓலை. கங்கநாட்டின் பொக்கிஷங்களான யானைகளைக் கடந்த இரண்டு ஆண்டுகால மாகவே பல்லவர்கள் களவாடி வருகிறார்கள். அந்தவகையில் இதுவரை இருநூறு யானைகள் களவாடப்பட்டுள்ளன. யானை இருந்தாலும் ஆயிரம் பொன் இறந்தாலும் ஆயிரம் பொன் என்பார்கள். கங்கநாடு அதை ஏற்கவில்லை. இந்நாட்டின் ஒவ்வொரு யானையும் பத்தாயிரம் பொன் பெறும். அவை உயிரோடு இருப்பது தான் எங்களுக்கு ஆதாயம். யானைக் களவை நிறுத்தும்படியும் களவாடிய யானைகளைத் திரும்பித் தந்துவிடும்படியும் எங்கள் சக்ரவர்த்தி ஸ்ரீபுருஷர் பலமுறை உங்களிடம் செய்தியனுப்பினார். பலனில்லை. எனவேதான் உங்கள் கௌரவ அடையாளமான சமுத்திர கோஷத்தைக் கிழித் தெறிந்தோம். இது ஆரம்பம் மட்டும் தான். யானைக் களவை நிறுத்தும்வரை - களவாடிய யானைகள் திருப்பி அளிக்கப்படும் வரை - இது போன்ற - இதைவிட மோசமான அதிரடிகள் தொடரும். அபாயங்கள் தொடங்கும். அலட்சியம் தொடர்ந்தால் அதற்கான விளைவுகளைப் பல்லவ வம்சம் சந்திக்கும். பல்லவர் ஆட்சி சந்திக்கும். பல்லவ மக்கள் சந்திப்பார்கள்.”

- கங்கநாட்டு மகாசேனாதிபதி

புவியரசன்.

ஓலையைப் படித்துவிட்டு மற்ற மூவரிடமும் காட்டினான் மன்னன்.

மூவரும் படித்தார்கள்.

“உபதளபதி! பத்து நாட்களுக்குள் சமுத்திர கோஷம் சரி செய்யப்பட வேண்டும். பதினோராவது நாள் சமுத்ர கோஷம் ஒலிக்க வேண்டும். கோட்டைத் தலைவர் பல்லவடி அரையர்

வந்ததும் ஆலோசனை அவை கூடும்" என்று அறிவித்துவிட்டு அகன்றான் மன்னன்.

கோட்டைத் தலைவர் பல்லவடி அரையர் மறுநாளே தில்லையிலிருந்து திரும்பினார். தில்லையில் பிரச்சனைகள் எதுவும் இல்லை என்றும் எல்லாம் நல்லபடியாக நடந்து வருவதாகவும், இரண்டு நாட்களுக்குள் பெருமாளைப் பிரதிஷ்டை செய்யவிருக்கும் சித்ர கூடத்தில் வரையப்படும் ஓவியங்கள் முற்றுப் பெற்றுவிடும் என்றார்.

மறுநாள் சம்பிரதாய முறையில் ஆலோசனை அவை கூட்டப்பட்டது. ராஜகுருவைத் தவிர மற்ற எல்லோரும் கலந்து கொண்டார்கள்.

காரியஸ்தர் எழுந்து "கங்கமன்னன் கயமைத் தனத்தைக் காட்டியிருக்கிறான். அவனைத் தண்டித்துப் பாடம் கற்பிப்பதைத் தவிர வேறு எதுவும் தகுந்த நடவடிக்கையாக இருக்காது" என்றார்.

"கங்கமன்னர் நம்மீது சுமத்தியிருக்கும் குற்றச்சாட்டு பொய்யானது என்பது இங்கே உள்ள அனைவருக்கும் தெரியும். இந்தக் குற்றச்சாட்டையும் சுமத்தி சமுத்ர கோஷத்தையும் சிதைத்தால் நாம் படை நடத்திப் போர்தொடுப்போம் என்பது அவனுக்கு நன்றாகத் தெரியும். எந்தத் தைரியத்தில் போருக்கு அறை கூவல் விடுகிறான் என்பதுதான் விளங்கவில்லை" என்றார் காடகமுத்தரையர்.

"பல்லவர்களின் பகைவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர் களில் சிலரது ஆதரவு கங்க மன்னனுக்குக் கிடைத்திருக்கலாம். அந்தத் தைரியத்தில் அறைகூவல் விடுத்திருக்கிறான்" என்றார் பல்லவடி அரையர்.

"நமக்கும் கங்கர்களுக்கும் இருந்த பகை சாளுக்கியர் படையெடுப்பு நடந்து முடிந்ததற்குப் பிறகு இல்லாமல் போய்விட்டது. பல ஆண்டுகளாக அவர்களுக்கும் நமக்கும் பிணக்குகள் இல்லை. ஆழ்ந்த நட்பு இல்லை என்றாலும் பகைவர்களாக நடந்து கொள்ளவில்லை. நமக்கும் கங்கநாட்டிற்கும் இடையே வியாபாரம் சீராக நடந்து வருகிறது. வெளிநாடுகளிலிருந்து வரும் சரக்குகள் கடல் மல்லையிலிருந்து கங்கநாட்டிற்குச் செல்லும்போது நாம் சுங்கவரி விதிக்காமல் அவர்களுக்குச் சலுகை காட்டியிருக்கிறோம். இப்படிப்பட்ட சாதகமான நிலையில் கங்க மன்னன் போருக்கான அறைகூவலை மறைமுகமாக விடுப்பானா என்பதை யோசிக்க வேண்டும்" என்றார் தரணிகண்ட போசர்.

மகாமந்திரி பேசமுற்பட்டு "தரணிகண்ட போசர் தெரிவிக்கும் கருத்து சரியானது. நமது கௌரவச் சின்னமான சமுத்ர கோஷத்தைச் சிதைத்தது கங்கநாட்டவர் தானா என்பதை உறுதி செய்ய வேண்டும். சமுத்ர கோஷத்திற்குக் கீழே நாம் கண்டெடுத்த ஓலை கங்கமன்னனது ஓலை தானா என்பதை உறுதியிட்டுச் சொல்ல முடியாது. அதில் கங்கநாட்டுச் சேனாதிபதியான புவியரசனின் பெயர்தான் இருக்கிறதே தவிர கங்கமன்னனின் ஓலைதான் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை" என்றார்.

பல்லவடி அரையர் பேசமுற்பட்டு "சமுத்ர கோஷத்தைச் சிதைத்தது கங்கநாட்டவரல்ல; அவர்களது பெயரைப் பயன் படுத்தி வேறு சதிகாரர்கள் தான் அக்காரியத்தைச் செய்திருக்க வேண்டும் என்று மகாமந்திரி கருதுகிறாரா?" என்று கேட்டார்.

"ஆம். என் எண்ணம் அதுதான். சதிகாரர்கள் காஞ்சியிலேயே இருக்கிறார்கள் என்று சந்தேகிக்க இடமிருக்கிறது. பரமேச்சுர விண்ணகரத்தைக் குடமுழுக்கு வைபவத்தின் போது தகர்ப்பதற்குச் சதி நடந்திருக்கிறது. அது நடைபெறாததால் அவர்கள் சமுத்திர கோஷத்தைச் சிதைத்து பழியைக் கங்கர்கள் மீது போட்டிருக் கலாம். நமக்கும் கங்கர்களுக்கும் பகைமையை உருவாக்கி அதில் குளிர்காய விரும்பியிருக்கலாம்" என்றார் மகாமந்திரி.

"குளிர்காய்தல் என்றீர்களே - அதைச் சற்று விளக்க முடியுமா?" என்று கேட்டார் பல்லவடி அரையர்.

தரணிகண்ட போசர் குறுக்கிட்டு "இதில் விளக்குவதற்கு என்ன இருக்கிறது? போர் நடந்தால் பல்லவர் தரப்பிலும் நஷ்டம் உண்டாகும். அதைக் கண்டு சந்தோஷப்படுவது கூட குளிர்காய்வது தான். போர் வரும்போது கங்க மன்னனோடு சேர்ந்து கொண்டு காட்டிக் கொடுக்கும் செயல்களில் ஈடுபட்டு நம்மைத் தோல்வியடைய வைக்கலாம். அதுவும் குளிர்காய்தல் தான். இப்படி நிறையச் சொல்லலாம்" என்றார்.

"அப்படிப்பட்ட சதிகாரன் ஒருவன் காஞ்சியில் இருந்து கொண்டு நடமாட முடியும் என்பதை நம்ப முடியவில்லை" என்றார் பல்லவடி அரையர்.

"பரமேச்சுர விண்ணகரத்தைத் தகர்க்க முயற்சி நடக்கும் என்று நீங்கள் நம்பினீர்களா?" என்று கேட்ட மகாமந்திரி மன்னனைப் பார்த்து "சமுத்ர கோஷத்தைச் சிதைத்தது கங்க நாட்டவர் தான் என்பதை உறுதி செய்துகொண்டு அதற்குப் பிறகு போரைப் பற்றிப் பேசுவதே உகந்தது. கங்க மன்னனுக்குச் சிறப்புத் தூதுவரை அனுப்பி உறுதி செய்து கொள்ளலாம்" என்றார்.

மன்னன் காரியஸ்தரைப் பார்த்து "மகாமந்திரி கூறியது போல் தகுந்த தூதுவரைக் கங்க மன்னனிடம் அனுப்ப ஏற்பாடு செய்யுங்கள்" என்றான்.

காடக முத்தரையரைப் பார்த்து "சேனாதிபதி! நமது படைபலம் பற்றி முழுத்தகவலை எனக்குக் கொடுங்கள். நமது காஞ்சிமண்டலம் நீங்கலாக உள்ள இருபத்து மூன்று கோட்டத்தலைவர்களிடம் உள்ள படைகளைப் பற்றியும் அவற்றின் ஆயத்தங்கள் பற்றியும் தகவல் சேகரியுங்கள். வாண நாட்டுச் சிற்றரசன் ஜெயந்தி வர்மனை நான் அழைத்ததாகத் தகவல் அனுப்புங்கள்" என்றான்.

அவை கலைந்தது.

மன்னன் தேரில் ஏறி வேகவதியாற்றங்கரையில் இருந்தத் தனி மாளிகைக்குச் சென்றான்.

மாளிகைக் காவலர்கள் அவனை வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றார்கள்.

அங்கே ஐம்பது வயது மதிக்கத்தக்க மனிதன் ஒருவன் வாட்களை வைத்துக் கொண்டு தீட்டிக் கொண்டிருந்தான்.

"என்ன உதயசந்திரா? உன்னால் சும்மா இருக்கவே முடியாதா?" என்று மன்னன் வினவியதும் அவனது குரலால் அதிர்ந்து போன உதயசந்திரன் "மகாராஜா! தாங்களா?" என்று வியந்துபோய் எழுந்து கொள்ள முயற்சித்தபோது "அவசரப் படாதே" என்று சொல்லி அவனை எழுந்து நிற்பதற்கு உதவிய மன்னன் அவனை உட்காரவைத்துவிட்டுத் தானும் அமர்ந்தான்.

உதயசந்திரனிடம் மன்னன் காட்டிய நேசத்தைக் கண்ட காவலர்கள் பரவசப்பட்டார்கள்.

நந்திவர்மன் வரலாற்றில் உதயசந்திரன் என்ற பெயர் மறைக்க முடியாத பெயர். இன்றியமையாத பெயர். மன்னன் பல்லவ அரியணையில் அமர்ந்த சிலநாட்களிலேயே பல்லவ நாட்டின் தெற்குப்புறப் பகுதியில் பாண்டியர் படை போர் தொடுக்கவே அங்குப் படைகளுடன் சென்றான். அவனுக்கு அது கன்னிப் போர். ஆதலால் மிகவும் சிரமப்பட வேண்டியதாயிற்று. பாண்டியப் படைகள் பல ஊர்களை வென்று நந்திவர்மன் இருந்த நந்திபுரத்தைத் தாக்கின. நந்திவர்மன் பாண்டியப் படைகளால் சிறைப்படுவான் என்ற சூழ்நிலை நிலவிய போது இருளை விலக்க வந்த கதிரவனைப் போல வந்தான் உதயசந்திரன். பாண்டியப் படைகளை முறியடித்து நந்திவர்மனை மீட்டான். பிறகு இருவருமாகச் சேர்ந்து பாண்டியர் படை [illegible]

பாண்டியநாட்டிற்கு விரட்டியடித்தார்கள். அந்தப் போர் நந்திவர்மனின் உயிர்காத்தப் போர். எனவே போர் முடிந்து காஞ்சிக்குத் திரும்பியதும் மன்னன் உதயசந்திரனைப் படைத் தலைவனாக நியமித்தான். மன்னனின் நண்பனாகவும் ஆனான் உதயசந்திரன்.

அவனுக்கு மன்னன் பல கௌரவப் பட்டங்களையும், சலுகைகளையும், உரிமைகளையும் வழங்கியிருந்தான். ஒருமுறை உதயசந்திரன் தற்போது செய்யாறு என்று அழைக்கப்படும் திருவத்திபுரத்தைச் சேர்ந்த ஆற்றங்கரைக் கிராமங்களான குமாரமங்கலத்தையும் கொற்றத்தையும் இணைத்து அதற்கு உதயசந்திர மங்கலம் என்று பெயரிட்டு அதை 108 பிராமணர்களுக்குத் தானமாக வழங்குவதற்கு விரும்பி மன்னனிடம் கோரிக்கை வைத்தபோது உடனடியாக நிறைவேற்றினான் நந்திவர்மன்.*

அந்த நிகழ்ச்சி பலருக்குப் பொறாமையாக இருந்தாலும் உதயசந்திரனுக்கு இருந்த உரிமையையும் நந்திவர்மனுக்கு அவன்பால் இருந்த நேசத்தையும் காட்டுவதாக அமைந்தது.

(வரலாற்று அறிஞரான டி.வி. மகாலிங்கம் அவர்கள் தனது 'Kanchipuram in early South Indian History' என்னும் நூலில் உதயசந்திரன் பல்லவ மன்னன் ராஜசிம்மன் காலத்திலிருந்தே இருந்தவன் என்றும் அவனே நந்திவர்மனுக்கும் படைத்தலைவனாக இருந்தான் என்றும் குறிப்பிடுகிறார். இதை அடிப்படையாக வைத்து ராஜசிம்மப் பல்லவனையும் உதயசந்திரனையும் இணைத்துக் 'கடல் கோட்டை' என்ற நாவலை முன்னர் நான் எழுதியிருக்கிறேன்.)

நந்திவர்மனுக்கு உறுதுணையாக இருந்த உதயசந்திரன் சாளுக்கிய இளவரசனான கீர்த்திவர்மனுடன் நிகழ்த்திய போரில் காலில் முறிவு ஏற்பட்டு சிகிச்சையில் இருந்தானாதலால் வீரச் செயல்களில் ஈடுபட முடியாமல் இல்லத்திலேயே முடங்கி, சிகிச்சை பெற்று வரவேண்டியதாயிற்று. அவனுக்கு ராஜ வைத்தியத்தை ஏற்பாடு செய்த மன்னன் அடிக்கடி நேரில் வந்து ஆறுதல் கூறிவிட்டுச் செல்வான். அவன் குணமடைய வேண்டும் என்றும் தன்னோடு நின்று போரிட வேண்டும் என்றும் மன்னன் விரும்பினாலும் உதயசந்திரன் பூரண குணமடையாமல் இருந்தான்.

---

* இச்செய்தியை உதயேந்திரம் செப்பேடுகள் தெரிவிக்கின்றன. பக்கம 179 - 'பல்லவர் காலச் செப்பேடுகள்' By. டாக்டர். மு. ராஜேந்திரன்.

தற்போது அவனது தேகநலத்தை விசாரிக்க வந்தபோது உதயசந்திரன் வாட்களைத் தீட்டிக் கொண்டிருந்ததைக் கண்டு சும்மா இருக்கவே மாட்டாயா என்று வினவியபோது "மூளையைச் சும்மா வைத்திருந்தால் மந்தமாகி விடும். ஆயுதங்களைச் சும்மா வைத்திருந்தால் துருப்பிடித்து விடும். ஆகவே தான் தீட்டிக் கொண்டிருக்கிறேன்" என்றான் உதயசந்திரன்.

"மகிழ்ச்சியான விஷயம் தான். ஆனால் இன்னமும் நீ குணமடையாமல் இருப்பது கஷ்டமாக இருக்கிறது" என்றான் மன்னன்.

"இன்னும் இரண்டு மாதங்களில் பூரண குணமாகி விடுவேன் மகாராஜா. அதற்குப் பிறகு கணநேரம் கூட இங்கே உட்கார மாட்டேன். உட்கார்ந்தால் அது புரவி மீதுதான். செயல்பட்டால் அது போரில்தான்" என்றான் உதயசந்திரன்.

"நீ என்னோடு இல்லாத காரணத்தால்தான் போர்களில் எனக்கு தொடர்ச்சியாகத் தோல்வி வந்திருக்கிறது. நந்திபுரத்தில் கூட நீ வாராதிருந்தால் நான் தேறாது போயிருப்பேன்."

"அப்படியெல்லாம் இல்லை மகாராஜா. தாங்கள் பல்லவ மல்லர். பன்னிரண்டு வயதில் அரியணையில் அமர்ந்தவர். அப்படியொரு நிகழ்ச்சி எந்த வரலாற்றிலும் நடந்ததில்லை. பல்லவ மன்னர்களிலேயே ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக அரியணையில் இருந்து மாட்சியோடு ஆட்சி புரியும் மன்னர் தாங்கள் ஒருவர்தான். தங்கள் வீரம் பகைவரும் பாராட்டும் வீரம். நான் தங்கள் வீரவாட்களில் ஒருவன் மட்டுமே."

"உதயசந்திரா! மறுபடியும் ஒரு போர் வரப்போகிறது. அதையும் நீ இல்லாமல் தான் நடத்தப் போகிறேன்."

"மீண்டும் போரா? யாருடன் மகாராஜா?"

சொன்னான் மன்னன்.

"அநேகமாக இந்தப் போர் நடக்கும் என்று தான் தோன்றுகிறது" என்றான் உதயசந்திரன்.

"என் உள்ளத்தை அறிந்தவன் நீ மட்டும் தான். இந்தப் போர் நிச்சயமாக நடக்கும். முடிவு. என்னாகும் என்று தான் சொல்ல முடியாது."

"என்னால் சொல்ல முடியும் மகாராஜா. தாங்கள் இந்தப் போரில் நிச்சயமாக வெற்றி பெறுவீர்கள்."

"நீ இல்லாத போரில் நான் வெற்றி பெற்றதில்லையே உதயசந்திரா?"

"இந்தப் போரில் அந்த நிலை மாறும். என்னோடு ஆற்றங் கரைக்குச் சற்று வாருங்கள்" என்றான் உதயசந்திரன்.

பணியாட்கள் அவனைத் தாங்கிப்பிடித்து வேகவதியாற்றங் கரைக்கு அழைத்துச் சென்றார்கள். மன்னனும் உடன் சென்றான்.

ஆற்றங்கரையை ஒட்டிப் பசுமையான பொழில் ஒன்றிருந்தது.

அங்கே இருந்த செடிகள் சிலவற்றில் பூத்திருந்த மலர்களைச் சுட்டிக்காட்டிய உதயசந்திரன் "மகாராஜா! அங்கே பூத்திருக்கும் மலர்களைப் பாருங்கள். அவை தெய்வீக மலர்கள். கிருஷ்ண கமலம் என்று பெயர்" என்றான்.

"அதற்கென்ன உதயசந்திரா?"

ஒரு மலரைப் பறித்த உதயசந்திரன் "மகாராஜா! இதில் ஊதா நிற இதழ்கள் நூறு இருக்கின்றன. அதற்குக் கௌரவா என்று பெயர். கௌரவர்களைக் குறிக்கும். அதையடுத்து உள்ளே பச்சை நிறத்தில் ஐந்து மொட்டுகள் உள்ளன. அதற்குப் பாண்டவா என்று பெயர். பாண்டவர்களைக் குறிக்கும். அவற்றுக்கு இடையே இருக்கும் மூன்று மொட்டுகள் மும்மூர்த்திகளைக் குறிக்கும். நடுவே இருக்கும் மொட்டு சுதர்சனக் கிருஷ்ணர் என்று அழைக்கப்படுகிறது. இம்மலர்கள் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறையே பூக்கின்றன. இந்தச் செடிகள் வேகவதி நதி தீரத்தில் மட்டுமே இருக்கின்றன" என்றான்.

"விசித்திரமாக இருக்கிறது" என்றான் மன்னன்.

"இந்த ஆண்டு அதுவும் இந்த மாதத்தில் இவை பூத்திருக்கின்றன."

"அதனால்?"

சொன்னான் உதயசந்திரன். வியந்தான் மன்னன்.

★★★



மன்னனின் சந்தேகங்கள்

"இந்த மலர்கள் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு இந்த மாதத்தில் பூத்திருப்பது நல்ல சகுனம் மகாராஜா. ஆட்சியில் இருப்பவர்களுக்கு மங்கலத்தைக் கொடுக்கக் கூடியது. இம்மலர்கள் வேகவதி நதி தீரத்தில் மட்டுமே செடிகளில் பூப்பதால் இந்த மண்டலாதிபதியான தங்களுக்கு ஏற்றத்தை வழங்கக் கூடியது. வெற்றியை ஈட்டக் கூடியது. இந்த மலர்களை வழிபடுங்கள் மகாராஜா. போருக்குப் புறப்படும் இந்த மலர்களில் இரண்டைக் கிரீடத்தில் சூடிக் கொள்ளுங்கள். வெற்றி நிச்சயம்" என்றான் உதயசந்திரன்.

"உலகத்தில் என்னென்னவோ இருக்கிறது உதயசந்திரா. மனிதன் தன் வாழ் நாட்களுக்குள் அவற்றில் ஒரு தூசு அளவு கூடத் தெரிந்து கொள்ள முடிவதில்லை. உனக்கும் உன் மலர்களுக்கும் நன்றி. வருகிறேன்" என்று கூறிவிட்டு அகன்றான் மன்னன்.

சமுத்ர கோஷத்திற்குப் புதிய தோல்மூடி அமைப்பதற்கான ஏற்பாடுகளைக் கவனித்தான். பத்துநாட்களில் அது பொருத்தப்பட்டு முழங்குவதற்குத் தயாராக இருந்தது. சேனாதிபதி காடகமுத்தரையர் சேனைகளின் எண்ணிக்கையைப் பற்றிச் சொன்னார். பாண நாட்டுச் சிற்றரசன் ஜெயந்திவர்மனும், முத்தரையர் தரப்பிலிருந்து சுவரன் மாறனும், கொடும்பாளூரிலிருந்து வேளிர் சிற்றரசன் பூதி விக்கிரம கேசரியும் வந்தார்கள். பத்து நாட்கள் ஆகியும் காஞ்சியிலிருந்து கங்கநாட்டிற்கு அனுப்பப்பட்ட தூதுவன் திரும்பவில்லை. அவனைக் கங்க நாட்டு மன்னன் சிறைப்படுத்தியிருப்பான் என்று எல்லோருமே சொன்னார்கள்.

"இன்னும் காத்துக் கொண்டிருக்க வேண்டுமா?" என்று கேட்டான் மன்னன்.

தேவையில்லை என்றார்கள் அவையோர்.

ஆலோசனை அவை கூட்டப்பட்டது.

போர்த்திட்டம் பற்றி அவரவர்களும் தங்கள் யோசனை களைச் சொன்னார்கள்.

"என் முடிவை நாளைக்குச் சொல்கிறேன்" என்று கூறிவிட்டு அந்தப்புரத்திற்குச் சென்றான் மன்னன்.

"வாருங்கள் பிரபு. போர்த் திட்டங்களை முடிவு செய்து விட்டீர்களா?" என்று கேட்டார் ராணி ரேவாதேவி.

மன்னன் அதற்குப் பதில் சொல்லாமல் "தேவி! சமுத்திர கோஷத்தைக் கங்க நாட்டவர் தான் அழித்திருப்பார்கள் என்று நம்புகிறாயா?" என்று கேட்டான்.

"இல்லை" என்றாள் ராணி.

"எப்படிச் சொல்கிறாய்?"

"பல்லவரது கௌரவச்சின்னமான சமுத்ர கோஷத்தை அழிப்பதென்பது பெரிய விஷயம் தான். அதைக் கங்கமன்னர் மட்டுமல்ல பாண்டிய மன்னரும் விரும்பலாம். மற்ற மன்னர்களும் விரும்பலாம். ஆனால் அவர்கள் அனைவரும் தங்களோடு போரிட்டு காஞ்சியை வீழ்த்திவிட்டு வீரச்செயலாக அதை அழிப்பார்களே தவிர கோழைத்தனமாகச் சதியின் மூலம் அழிக்க மாட்டார்கள்."

"என் அபிப்ராயமும் அதுதான். மகாமந்திரியின் அபிப்ராயமும் அதுதான். அதே சமயம் அதை உறுதிப்படுத்திக் கொள்ள கங்கநாட்டிற்குத் தூதுவரை அனுப்பிவைக்கும்படிப் பெரியோர்கள் யோசனை சொன்னார்கள். தூதுவர் சென்றால் சமுத்ர கோஷ நாசத்திற்கும் கங்கநாட்டிற்கும் சம்பந்தம் இல்லை என்பது உறுதியாகி விடும். அதை நான் விரும்பவில்லை."

"ஏன்?"

"சொல்கிறேன் கேள். நான் கங்கர்களோடு போரிட விரும்பினேன். அதற்குச் சமுத்ர கோஷமும், யானைக் களவு என்ற குற்றச்சாட்டும் சாக்குகளாக அமைந்தன. எனவே மகாமந்திரி அனுப்பி வைத்த தூதுவனை அவருக்குத் தெரியாமல் நான் அழைத்துக் கொண்டேன். தூதுவன் கங்கநாட்டிற்குப் போகவில்லை. பத்து நாட்களாக சமுத்ர கோஷத்தைச் சரி செய்வதில் முயன்றேன். அதுவும் சரியாகி விட்டது. தூதுவன் திரும்பவில்லை என்பதைச் சொல்லி போரை அறிவித்து விட்டேன்."

"அப்படியென்றால் இது காரணமில்லாத போரா?"

"காரணம் இருக்கிறது. ஆனால் அது பழைய காரணம். முக்கிய காரணம்."

"எதைச் சொல்கிறீர்கள்?"

"மறந்து விட்டாயா ரேவா? சொன்னதே நீ தானே?"

"ஓ! அதைச் சொல்கிறீர்களா?"

"ஆம். அதை மீட்க வேண்டும். அதற்குச் சதிச் செயல்கள் கூடாது. போர் மூலமே செய்ய வேண்டும். ஆகவே இந்த வாய்ப்பை நான் போருக்காகப் பயன்படுத்திக் கொண்டேன்."

"தங்களுக்கு இருக்கும் அவப்பெயரை இந்தப் போர் நீக்கும். மகேஸ்வரன் அருள் புரிவான்."

"ஆம் ரேவா. இந்தப் போரை வென்றுதான் நான் திரும்புவேன். தோற்றுவிட்டால் முன்புபோல் திரும்ப மாட்டேன். கோட்டைக்கு என் சடலம் தான் திரும்பும்."

"அந்த அவலநிலை தற்போது நடக்காது மகாராஜா. முழுநம்பிக்கையோடு புறப்படுங்கள்."

அந்தப்புரத்திலிருந்து அரண்மனைக்கு வந்தபோது ராஜகுரு அழைப்பதாகச் சேவகன் கூறினான். அநேகதந்தாவதத் தோப்பில் இருக்கும் யோகினியின் ஆசிரமத்திற்கு அவர் செல்வதாகவும் அங்கே வந்துவிடும்படிச் சொன்னதாகவும் சேவகன் சொன்னான்.

அப்போது தான் போரைக் குறித்து ராஜகுருவிடம் ஆலோசனை செய்யவில்லை என்பது நினைவிற்கு வந்தது மன்னனுக்கு.

தோப்பிற்குச் சென்றான் மன்னன்.

தோப்பும் ஆசிரமும் என்றும் போலவே அமைதியாக இருந்தது.

அங்கே ஒரு ஓரத்தில் தாலிப் பனையின் கீழே நிஷ்டையில் இருந்தார் ராஜகுரு.

யோகினி தன் இருப்பிடத்தில் அமர்ந்திருந்தாள். அவளுக்கு முன்பாக நான்கு அந்தணர்கள் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்களது பேச்சைத் தடை செய்ய விரும்பாத மன்னன் ஓலை தயாரிக்கும் பெண்களிடம் பேச்சுக் கொடுத்தான்.

அந்தணர்களில் ஒருவர் கேட்டார்.

"தாயே! பிரம்மச்சர்யம் என்பது என்ன? உண்மையான பிரம்மச்சரியம் என்பது என்ன?"

"பெரும்பாலனவர்கள் பெண்ணோடு சேராமல் காம விகாரங்களில் ஈடுபடாமல் வாழ்வது தான் பிரம்மச்சரியம் என்று கருதுகிறார்கள். அது பிரம்மச்சரியத்திற்கான வாயில் மட்டும் தான். பிரும்ம ஸ்வரூபத்தில் எப்போதும் நிலைபெற்று நிற்பதுதான் உண்மையான பிரம்மச்சரியம்."

"உறக்கத்தின் தன்மை என்ன? சிறப்பு என்ன?"

"தேனானது பல்வேறு மலர்களிலிருந்து திரட்டப்பட்டு வந்திருந்தாலும் தேனடைக்கு வந்தபின் வித்தியாசங்களை இழந்து தேன் என்ற ஒரு அடையாளத்தை மட்டுமே கொண்டிருக்கிறது. உறக்கம் அப்படித்தான். இங்கே உறங்க வருபவர்கள் யார் யாரோவாக இருக்கலாம். ஆனால் உறக்கத்தின் போது எல்லா வித்தியாசங்களும் போய் விடுகின்றன. உயிரினம் என்ற ஒரு அடையாளம் தான் இருக்கிறது." என்று சொன்ன யோகினி சற்று நிறுத்திவிட்டுப் பிறகு சொன்னாள்.

"உறக்கம் கற்பிக்கும் இந்த அபேதம்* தற்காலிகமானது. தேனடைக்குப் பல்வேறு மலர்களிலிருந்து வந்த தேன் பிறகு அந்தந்த மலர்களுக்குத் திரும்புவதில்லை. ஆனால் உறக்கத்தில் அபேதமில்லாமல் கிடக்கும் மனிதர்கள் உறக்கம் நீங்கியதும் அவரவர் நிலைக்குத் திரும்பி விடுகிறார்கள். உறக்கத்தில் எண்ணங்கள் இல்லாமல் நாம் உண்மையான சந்தோஷத்தில் இருந்தது அது தற்காலிகமானது என்பதால் தான் ஞானிகள் உண்மையான சந்தோஷத்தை விழிப்பு நிலையிலேயே மேற்கொள்கிறார்கள்."

"அது எப்படி, தாயே?"

"இந்த உலகத்தை மெய் என்று நம்புகிறோம். இந்த அறிவை உண்மை என்று நம்புகிறோம். இந்த உடலை மெய் என்று நம்புகிறோம். பொய்களை நம்புகிறோமே தவிர மெய்யை நாடுவதில்லை. அதுதான் காரணம். சீதா தேவியின் கற்புச் சிறப்பைச் சோதிக்க விரும்பிய ரிஷிபத்தினிகள் பலர் சடைமுடி தரித்த ராமனையும் வைத்துக் கொண்டு தங்களையும் ராமனைப் போலவே மாற்றிக் கொண்டு வரிசையாக நின்றார்கள். சீதை வந்தாள். முதல் ரிஷியைப் பார்த்தாள். ராமனைப் போலவே இருந்தார் ரிஷி. ஆனால் நீங்கள் ராமரில்லை என்றாள். அடுத்தவரைப் பார்த்தாள். அவரும் ராமரைப் போலவே இருந்தார். நீங்களும் ராமரில்லை என்றாள் சீதை. இப்படியாகப் பத்திற்கும் மேற்பட்டவர்களைப் பார்த்து இல்லை இல்லை என்று மறுத்துக்

---

* பேதமற்ற தன்மை.

கொண்ட வந்த சீதை உண்மையான ராமனுக்கு முன்னால் வந்தபோது பேச்சில்லாமல் நின்றாள். வேதங்கள் தத்துவங்களை ஆராய்ந்து அல்ல அல்ல என்று புறக்கணித்துக் கொண்டே சென்றால் ஓரிடத்தில் சொல்வதற்கு எதுவுமின்றி நிற்கும். அந்த இடம் தான் சத்யம். நான் யார் என்று நமக்குள்ளேயே ஆத்ம விசாரணை செய்து பொய்யானவற்றை இல்லை இல்லை என்று ஒதுக்கிக் கொண்டே போனால் உண்மையில் நான் யார் என்ற இடத்தில் நின்று விடுவோம். அதுவே சத்ய நிலை. ஞான முடிவு. முக்தி. மோட்சம் எல்லாமும். அந்த நிலையை எட்டிவிட்டால் விழிப்புநிலையிலேயே எண்ணங்கள் இல்லாமல் நிலையான சந்தோஷத்தை உணரலாம். துய்க்கலாம்."*

"தாயே! தாங்கள் சொல்லும் ஆத்ம விசாரணையின் மூலம் இருப்பது ஒரு பொருள் தான் என்றும் அது ஆத்மா மட்டுமே என்பதை உணரலாம் தான். அது உணரப்படும் வரை எல்லா தெய்வங்களையும் வணங்கும் துவைத பக்தி தேவைதானா?"

"குழந்தை வளர்கிற வரை எப்படி பெற்றோர்களின் உதவி அவசியமோ அப்படித்தான் இதுவும். ஞானநிலை பெற பக்தியும் வழிபாடும் ஆரம்ப அவசியங்கள் தான்."

யோகினி இப்படிக் கூறியதும் அந்தணர்கள் வணக்கம் செய்து விட்டு அகன்றார்கள்.

ஆசிரமத்திற்குள் மன்னன் நுழைந்த போதே அவனைக் கவனித்து விட்ட யோகினி அந்தணர்கள் தனக்கு முன்னால் அமர்ந்திருந்ததால் அவர்களது கேள்விகளுக்குப் பதில் சொல்லிவிட்டு மன்னன் இருந்த இடத்திற்குச் சென்று "வந்தனம் மகாராஜா. வந்து அமருங்கள்" என்றாள்.

"தேடி வந்தவர்களின் சந்தேகங்களைப் போக்கி விட்டாயா யோகினி?" என்று கேட்டான் மன்னன்.

"வெட்ட வெட்ட முளைவிடும் பால் மரங்களைப் போலத் தீர்க்கத் தீர்க்கச் சந்தேகங்கள் வந்து கொண்டே தான் இருக்கும் மகாராஜா. இந்த உலகம் தோன்றிய போதே உண்டானது சந்தேகம். இந்த உலகம் அழியும் வரை இருக்கப் போவது சந்தேகம்" என்றாள் யோகினி.

"இருக்கட்டுமே! தீர்த்து வைப்பவர்கள் உன்னைப் போல் இருக்கும் வரை கவலை என்ன? நீ கொடுத்து வைத்தவள் யோகினி. ஐயங்களைப் போக்கும் இடத்தல் இருக்கிறாய். நானோ கேட்கும் நிலையில் தான் இருக்கிறேன்" என்றான் மன்னன்.

---

* இது பகவான் ரமணரின் தத்துவ (ஆன்ம) விளக்கம்.

"என்னை நினைத்து நான் பெருமைப்பட்டுக் கொள்ள வில்லை. தங்களை நினைத்துத் தாங்கள் குறைபட்டுக் கொள்ள எதுவும் இல்லை. என்னைப் போன்றவர்கள் எங்கும் இருக்கிறார்கள். தங்களைப் போன்ற மாமன்னர்கள் எங்கேயோ தான் இருக்கிறார்கள்."

"அதை விடு யோகினி. எனக்கொரு சந்தேகம். நீ இங்கே தாலிப் பனைகளிலிருந்து ஓலைகளைத் தயாரிக்கிறாய். இதுபோல எங்கெல்லாம் தயாரிக்கிறார்கள்?"

"பிரதான இடங்களான மதுரை, உறையூர், தஞ்சை, வாதாபி, மானியகேடகம், கங்கநாடு, கருவூர் போன்ற பல இடங்களில் தயாரிக்கிறார்கள் மகாராஜா."

"அவற்றுக்குள் வித்தியாசங்கள் இருக்கிறதா? பார்த்தாலே தெரிந்து கொள்ள முடியுமா?"

"வித்தியாசங்கள் இருக்கின்றன மகாராஜா. காஞ்சியில் மட்டுமே தாலிப் பனையில் ஓலைச் சுவடிகள் தயாரிக்கப் படுகின்றன. அவை சற்றுப் பழுப்பு நிறத்தில் இருக்கும். பிற இடங்களில் நெடும் பனை மரங்களிலிருந்து ஓலைச் சுவடிகள் தயாரிக்கப்படுகின்றன. அவை சற்று வெளிறிய நிறத்தில் இருக்கும்."

"இங்கே தயாரிக்கும் ஓலைச்சுவடிகள் எங்கெல்லாம் செல்கின்றன?"

"இங்கே தயாரிக்கப்படும் ஓலைகளின் எண்ணிக்கை அதிகமில்லை மகாராஜா. ஆகவே அவை பல்லவ அரசாங்கத்திற்கு மட்டுமே அனுப்பப்படுகின்றன. கோட்டத்தலைவர்கள் கூட அங்கிருந்து தான் பெற்றுக் கொள்கிறார்கள்."

மன்னன் சமுத்ர கோஷத்தின் கீழே கண்டெடுக்கப்பட்ட ஓலையைக் காட்டி "இதைப் பார் யோகினி. இது இந்த ஆசிரமத்தில் தயாரிக்கப்பட்டதா? வேறு இடத்தில் தயாரிக்கப் பட்டதா?" என்று கேட்டான்.

யோகினி அதை வாங்கிப் பார்த்துவிட்டு "இது இங்கு தயாரிக்கப்பட்ட ஓலைதான் மகாராஜா" என்றாள்.

"ஆனால் இது கங்க நாட்டிலிருந்து வந்ததாகச் சொல்லப் படுகிறது."

"அதற்கு வாய்ப்பில்லை மகாராஜா. நாங்கள் இங்கிருந்து ஓலைகளை வெளிநாட்டிற்கு அனுப்புவதில்லை. தங்கள் அரசாங்கத்திலிருந்து கங்கநாட்டிற்கு அனுப்பியிருக்கிறார்களா என்பது எனக்குத் தெரியாது"

மேற்கொண்டு அவளிடம் எதுவும் பேசமுற்படாத மன்னன் ராஜகுருவைச் சந்திக்கத் திரும்பினான். நல்ல வேளையாக அவர் நிஷ்டையிலிருந்து நீங்கி எழுந்து நின்றார். மன்னன் அவரிடம் சென்றான்.

"நீங்கள் நிஷ்டையில் இருந்ததால் அதைக் கலைக்க விரும்பவில்லை" என்றான் மன்னன்.

"அதென்னவோ தெரியவில்லை நந்திவர்மா. இங்கே கிடைக்கும் அமைதி எங்கும் கிடைப்பதில்லை. இங்கே நிஷ்டை கூடுவது போல் எங்கும் கூடுவதில்லை. என் உடலையும் இந்த உலகையும் நான் மறந்து நித்யானந்தத்தில் மூழ்குவது இங்கே தான். தினமும் இங்கே நான் வந்து கொண்டிருந்தால் விரைவிலேயே யோகினியைப் போல் ஆகிவிடுவேன்" என்றார் ராஜகுரு.

யோகினியைப் பார்த்து "மகாராஜாவுக்கு ஆசி வழங்கினாயா அம்மா? இந்தப் போரிலாவது மகாராஜா வெற்றி வாகை சூடவேண்டும். அதோடு இது கௌரவத்திற்காக நடைபெறப் போகும் போர்" என்றார்.

"நான் என்ன கூறுவது ஐயா? அத்வைதியின் கண்களில் எதுவுமே பொய்யாகத் தானே தெரிகிறது?" என்றாள் யோகினி.

"எல்லோரும் அத்வைதிகளாக இருந்துவிட்டால் நாட்டில் பிரச்சனையே இருக்காது" என்ற சொல்லிவிட்டு மன்னனைப் பார்த்த ராஜகுரு "போர்த்திட்டத்தைத் தீட்டி விட்டாயா?" என்று கேட்டார்.

சேனாதிபதி முதலானோர் கூறிய திட்டங்களைக் கூறினான் மன்னன்.

"உனக்குத் தோல்வி நிச்சயம்" என்றார் ராஜகுரு.

★★★



குருநாதர் திட்டமும் திருமகனின் திட்டமும்

"நான் தோற்க வேண்டும் என்பது தான் உங்கள் விருப்பமா குருநாதரே?" என்று கேட்டான் மன்னன்.

"வெறும் விருப்பம் வெற்றி தோல்வியைத் தந்துவிடாது மன்னா. போர்த் திட்டங்கள் தான் அவற்றை நிர்ணயம் செய்கின்றன" என்றார் ராஜகுரு.

"சேனாதிபதியும் உபதளபதிகளும் தெரிவித்த போர்த் திட்டம் தோல்வியைத் தான் தரும் என்று எப்படிச் சொல்கிறீர்கள்?"

"நந்திவர்மா! பெண்ணாகடப் போருக்கு நீ போன போது இதே சேனாதிபதி வர்க்கங்கள் போர்த்திட்டத்தைச் சொன்னார்கள். நான் மாற்றுத் திட்டத்தைச் சொன்னேன். அதை நீ ஏற்றாயே தவிர செயல்படுத்தவில்லை. செயல்படுத்தியிருந்தால் வெற்றி உடனே கிடைத்திருக்கும் என்பது உனக்கே தெரியும். இங்கேயும் அப்படித்தான். உனது சேனாதிபதியும் உபதளபதிகளும் கங்கர்கள் தலைநகரமான தழைக் காட்டையே குறி வைத்துத் திட்டங்களைக் கூறியிருக்கிறார்கள். இதற்குச் சேனாதிபதிகள் தேவையில்லை. வீரர்களே போதும்."

"குருநாதரே! நமது போரை கங்கமன்னன் எதிர்பார்க்க வில்லை. நம்மைப் பற்றி அவன் அறிந்து கொள்வதற்குள் நாம் தழைக்காட்டை அடைந்து முற்றுகையிட்டுத் தாக்கலாம் அல்லவா?"

"தவறான அனுமானம். தழைக்காடு காஞ்சியிலிருந்து தொலைவில் இருக்கிறது. நீ அங்குச் செல்வதற்குள் கங்கர்கள் தெரிந்து கொண்டு உன் படையை முன்னேறி வந்து தாக்குவார்கள். ஒருவேளை உனது படை தழைக்காட்டை நெருங்கினாலும் உன்னால் முற்றுகையிட முடியாது. காவிரி ஆறு ஏற்கனவே அதை முப்புரங்களிலும் சுற்றியிருக்கிறது. அதைத் தாண்டி உன்படை செல்வதற்குள் கங்கர் படை உங்களை வீழ்த்திவிடும்."

"தாங்கள் வேறு திட்டம் ஏதாவது வைத்திருக்கிறீர்களா குருநாதரே?"

"என்னை அலட்சியப்படுத்தும் உனக்கு நான் எப்படி மாற்றுத் திட்டத்தைச் சொல்ல முடியும்? என்னை ஏன் நீ ஆலோசிக்கவில்லை? சமுத்ரகோஷம் நாசப்படுத்தப்பட்டது முதல் என்னிடம் எதுவும் சொல்லவில்லை" என்றார் ராஜகுரு குரலில் தன் கோபத்தைக் காட்டி.

உண்மையிலேயே குருநாதரிடம் போர் விஷயமாக ஆலோசிக்க மறந்து விட்டிருந்தானாதலால் தற்போது சற்றே சங்கடப்பட்டு "உங்களை ஆலோசிக்காமல் போரைத் துவங்குவேனா குருநாதரே? உங்களைச் சந்திப்பதற்குள் நீங்களே அழைத்து விட்டீர்கள்" என்று சொல்லிவிட்டு சமுத்ரகோஷத்தைப் பற்றிச் சொல்ல முற்பட்ட போது "எல்லாம் எனக்குத் தெரியும். நீயும் சொல்லி எதற்காக நேரத்தை வீணடிக்கிறாய்?" என்றார் ராஜகுரு.

"குருநாதரே! சமுத்ர கோஷத்தின் கீழேயிருந்து எடுக்கப்பட்ட ஓலை கங்கநாட்டு ஓலை இல்லை என்றும் இந்த ஆசிரமத்தில் தயாரிக்கப்பட்ட ஓலை என்றும் யோகினி சொல்கிறாள்" என்றான் மன்னன்.

"இதெல்லாம் ஒரு விஷயமா மன்னா? இங்கே தயாரிக்கப் படும் ஓலைகளைக் கங்கநாட்டு உளவாளிகள் களவாடியிருக்கக் கூடாதா? உன் அரசாங்கத்தில் பொறுப்பில் இருக்கும் யாராவது ஓலைகளைக் கங்கநாட்டவருக்குத் தந்திருக்க முடியாதா? இதையெல்லாம் நீ கவனித்துக் கொண்டிருக்க முடியுமா? இந்த இடத்தைவிட்டு வெளியே வராத யோகினிக்குத் தான் தெரியுமா? அதை விடு. ஓலை எந்த நாட்டு ஓலையாக இருந்தாலென்ன? செய்தி தான் முக்கியம்."

"அப்படிப் பார்த்தால் கூட. அந்த ஓலையில் தெரிவிக்கப் பட்டிருக்கும் செய்தி பொய்யல்லவா? கங்கநாட்டு யானைகளை நான் களவாடவில்லையே!"

"போரிடுபவனுக்கு ஒரு சாக்கு வேண்டும். அது உண்மை யாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. பெரும்பாலானப் போர்கள் ஆதிக்க ஆசையில் நடைபெறுகின்றன. அதற்குப் பொய்யான காரணங்கள் கூறப்படுகின்றன. நந்திபுரத்தில் உனக்கும் பாண்டியனுக்கும் போர் மூண்டதே எதற்காக? அதே பாண்டியனோடு சமீபத்தில் பெண்ணாடகத்தில் நீ போர் புரிந்தாயே அதற்கென்ன காரணம்? உனக்கும் சாளுக்கியக் கீர்த்தி வர்மனுக்கும் நடந்த போருக்குக் காரணம் உண்டா? எல்லாம் பொய்க்காரணங்கள். ஆதிக்க ஆசை தான் உண்மையான காரணம்."

"குருநாதரே! நம் பல்லவ நாட்டோடு ஒப்பிடும்போது கங்கநாடு மிகவும் சிறியது. பல்லவர் படை யானை என்றால் கங்கர் படை பூனை. ஒரு பூனை யானைக்குச் சவாலிட முடியுமா?"

"பல்லவப் பேரரசர் ராஜசிம்மரது தந்தை பரமேஸ்வர வர்மர் கங்கமன்னனோடு நடந்த போரில் தோற்றுப் போனார். மறந்து விட்டதா உனக்குப் பல்லவ வரலாறு?"

"அந்தச் சூழ்நிலை வேறு. அப்போது பரமேஸ்வர வர்மர் பல்லவ மன்னராக இல்லை. நாடும் இல்லாமல் பெரும் படையும் இல்லாத நிர்க்கதியில் இருந்தார். ஆகவே அந்தப் போரில் அவர் தோல்வியடைந்தார்."

"நீ இப்போது என்ன சொல்கிறாய் மன்னா?"

"கங்கமன்னன் தற்போதைய நிலையில் நம்மைப் போருக்குச் சீண்டுவது செயற்கையாக இருக்கிறது. வேலியில் இருக்கும் ஓணானை எடுத்து மடியில் கட்டிக்கொள்ளும் முட்டாளல்ல கங்கமன்னன்."

"அப்படியானால் போரைக் கைவிட்டுவிட வேண்டியது தானே?"

"சமுத்ர கோஷம் சிதைக்கப்பட்டது. அதை விட்டுவிட முடியாது அல்லவா?"

"சமுத்ர கோஷத்தைச் சிதைத்த கங்கர்கள்மீது போர் தொடுப்பது முறைதானே? அதை விட்டுவிட்டு எதற்காகத் தேவையில்லாதவற்றையெல்லாம் பேசுகிறாய்? நந்திவர்மா! கங்க மன்னன் நிச்சயமாக முட்டாள் அல்ல. உன்னைப் போருக்குத் தூண்டுகிறான் என்றால் உன்னைச் சந்திக்கும் அளவிற்கு அவன் தன்னைப் பல!ப்படுத்திக் கொண்டிருக்கிறான் என்று தான் கொள்ள வேண்டும். பாண்டியனுக்கு காஞ்சியின் மீதுள்ள காதல் ஆறவும் இல்லை. தீரவும் இல்லை. அப்பாண்டியனின் உதவி கங்கமன்னனுக்குக் கிட்டியிருக்கலாம். அப்படிக் கிட்டியிருந்தால் அவன் தரப்பு பலமாகி விடுகிறது."

"தங்கள் திட்டத்தைக் கூறுங்கள் குருநாதரே."

"மன்னா! நீங்கள் எல்லோரும் கங்கர்கள் தலைநகர் தழைக்காட்டையே கணக்கில் வைத்துக்கொண்டு திட்டத்தைத் தீட்டுங்கள். காஞ்சியிலிருந்து தென்கிழக்கே இருக்கும் தழைக்காடு தூரத்தில் இருக்கிறது. அதே சமயம் அவர்களது துணைத் தலைநகரமான குவலாலபுரம்* காஞ்சிக்கு வடமேற்கே அருகில்

* இன்றைய கோலார் (கர்நாடக மாநிலம்)

இருக்கிறது. அதை நம்மால் விரைவில் அடைய முடியும். நாம் நமது படைகளை உடனடியாக நகர்த்தி கங்க மன்னன் எதிர்பாராத விதத்தில் குவலாலபுரத்தைத் தாக்கிப் பிடித்துக் கொள்வோம். அங்கே படையெண்ணிக்கை அவ்வளவாக இருக்காது. அதை நாம் வசப்படுத்திக் கொண்டால் தழைக்காட்டில் இருக்கும் கங்கர் படைகளைக் குவலாலபுரத்திற்கு இழுக்கலாம். அப்படி இழுக்கப்படும் படைகளை நாம் குவலாலபுரத்தில் இருந்தபடி எதிர்கொள்ளலாம். வெற்றியடையலாம்" என்று கூறி முடித்தார் ராஜகுரு.

"கச்சிதமாக இருக்கிறது குருநாதரே! சேனாதிபதியிடம் கூறி விடுகிறேன்" என்று சொல்லி விடைபெற்றுக் கொண்ட மன்னன் அரண்மனைக்குச் சென்றான். சேவகர்களை அழைத்து இளவரசன் தந்திவர்மனை அழைத்து வரும்படிக் கட்டளை யிட்டான்.

இளவரசனை அழைத்து வரச் சென்ற சேவகர்கள் "மகாராஜா! இளவரசர் அவரது இல்லத்தில் இல்லை. பரமேச்சுர விண்ணகரத்தில் இருக்கும் மடைப்பள்ளியில்* நீண்ட நேரமாக அமர்ந்திருக்கிறாராம். என்ன செய்கிறார் என்று தெரியவில்லையாம்" என்றார்கள்.

"விசித்திரமாக இருக்கிறது" என்று சொல்லிக் கொண்டே மன்னன் விண்ணகர மடைப்பள்ளிக்குச் சென்றான்.

அங்கே ஒட்டடைகள் நிறைந்த இருட்டுப்பகுதியில் அமர்ந்திருந்த மகனைப் பார்த்த நந்திவர்மன் "தந்திவர்மா!" என்று குரல் கொடுத்தான்.

குரலைக் கேட்டு எழுந்த தந்திவர்மன் "வாருங்கள் தந்தையே" என்றான்.

"இந்த இருட்டில் என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டான் நந்திவர்மன்.

"இருட்டில் தான் சில விஷயங்கள் புரிகின்றன. இருட்டில் தான் சில விசித்திரங்கள் இருக்கின்றன."

"நீ என்ன சொல்கிறாய்?"

"அதோ பாருங்கள் தந்தையே. ஒரு பூச்சி ஒட்டடைகளால் வலையைப் பின்னியிருக்கிறது. அதற்கு வளைவான எட்டுக் கால்கள் இருக்கின்றன. அக்கால்களால் அது பின்னும் ஒட்டடை வலையில் சிறு பூச்சிகள் சிக்கிக் கொள்கின்றன. அவற்றை

அது கால்களாலேயே நகர்த்தி உண்டு விடுகிறது. இருந்த இடத்திலிருந்தே அது எவ்வளவு சாமர்த்தியமாகப் பிழைக்கிறது பார்த்தீர்களா?"

"அதற்கு எட்டுக்கால் பூச்சி என்றே பெயர். அதையா இவ்வளவு நேரமாகப் பார்த்துக் கொண்டிருந்தாய்?"

"ஆமாம் தந்தையே."

"உன் சிந்தனையில் ஏதாவது உதித்ததா?"

"ஆம் தந்தையே."

"என்ன அது?"

"நாம் கங்கநாட்டுடன் போரிடப் போகிறோம் அல்லவா?"

"ஆமாம்."

"கங்கர்களை முறியடிக்க நாம் எட்டுக்கால் பூச்சியாக மாறினால் என்ன?"

"புரியும்படிச் சொல் மகனே."

"கொஞ்சம் மாற்றிக் கொள்ள வேண்டும். அவ்வளவுதான்."

"சொல்."

சொன்னான் தந்திவர்மன்.

நந்திவர்மன் பிரமித்துப் போனான்.

"ஆகா! இதுவல்லவா திட்டம்? இதுபோன்ற ஒரு வியூகத்தை இதுவரை யாருமே அமைத்ததாகத் தெரியவில்லையே! இது மிகவும் சரியாக அல்லவா இருக்கிறது?" என்று நினைத்துக் கொண்ட நந்திவர்மன் தன் மகனை மார்புறத் தழுவி "உனக்கு இந்த வயதில் அபாரமான யோசனைகள் வருவது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது தந்திவர்மா. எதிர்காலமானது உன் கைகளில் பிரகாசமாக மிளிரும்" என்று பாராட்டி விட்டு அவனையும் அழைத்துக் கொண்டு ஆலயத்திற்குள் சென்று பெருமாளை வழிபட்டான்.

"எம்பெருமானே! அறிவினால் நாங்கள் ஆயிரமாயிரம் திட்டங்களைத் தீட்டினாலும் அவை வெற்றி பெறுவது உன் அருளினால்தான். நடக்கவிருக்கும் போரில் உனது அருள் மிகவும் முக்கியம். அது கிடைக்கும் என்ற நம்பிக்கையில்தான் போரைத் துவக்க இருக்கிறேன். இப் போரிலாவது நான் வெற்றி பெற வேண்டும்" என்று வேண்டிக் கொண்டு புறப்பட்டான்.

அன்றிரவு சேனாதிபதி காடகமுத்தரையரை அழைத்துத் திட்டத்தைக் கூறியபோது முத்தரையர் அசந்து போனார்.

"இப்படியொரு திட்டத்தை நான் கேள்விப்பட்டதே இல்லை. மிகவும் புதுமையானதாகவும் சிறப்பானதாகவும் இருக்கிறது மகாராஜா" என்றார்.

"இந்தத் திட்டத்தை தந்திவர்மன் கொடுத்தான் என்றால் என்ன சொல்வீர்கள்?" என்று கேட்டான் மன்னன்.

"வேறு யாராலும் இப்படியொரு திட்டத்தைத் தீட்ட முடியாது மகாராஜா. தந்திவர்மரால் தான் முடியும். கோட்டைத் தலைவர்கள் விசாரணையின் போதே வித்தியாசமான இளவரசரைக் கண்டேன். அது தற்போது உறுதியாகி விட்டது."

"சேனாதிபதி! இந்தத் திட்டம் மிகவும் ரகசியமாக இருக்க வேண்டும். கங்கநாட்டை அடையும்வரை நமது தளபதிகளுக்குக் கூடத் தெரியவேண்டாம். படைநகர்வும் காட்டுவழிகளில் ரகசியமாக நகர்வது நல்லது. பகைநாட்டு ஒற்றர்கள் யாராக இருந்தாலும் வெட்டிக் கொன்றுவிட வேண்டும்" என்றான் மன்னன்.

அதையடுத்துப் போர் ஆயத்தங்கள் துவங்கின.

காஞ்சி நகர் முழுவதும் பல்லவரது பாம்புக்கொடிகள் சீறின. நகர் முழுவதும் நிறைந்திருந்த காஞ்சி மரங்கள் போர் ஆயத்தங்களைக் கண்டு பூரித்தது போல் பூக்களைப் பூக்க வைத்திருந்த காட்சி காஞ்சியில் மட்டுமே காணக் கூடிய மாட்சியாக இருந்தது. வீரர்கள் வீதிகளில் குறுமுரசுகளை ஒலித்து பல்லவர் படை கங்கநாட்டை நோக்கிச் செல்லப் போவதை அறிவித்ததால் மக்கள் எழுச்சியடைந்து மன்னனை வாழ்த்திக் கோஷமிட்டபடி சென்றார்கள்.

வீரர்களின் குடும்பத்தினர் போரின் வெற்றிக்காக காஞ்சியில் இருந்த அனைத்து ஆலயங்களிலும் பூஜைகளை நடத்தினார்கள். ஆலய அந்தணர்களும் யாகங்களை நடத்தி நவதான்யங்களை ஆகுதியாகக் கொடுத்து வேண்டிக் கொண்டார்கள்.

யானைகளை இயக்குவதில் வல்லவனான* பல்லவ மன்னன் நந்திவர்மன் ஐநூறு யானைகளை வைத்து நகரில் அணிவகுப்பு நடத்தியபோது காஞ்சி குலுங்கியது. வானத்தில் தழைக்க வேண்டிய கார்மேகக் கூட்டங்கள் தரையில் இறங்கி வந்து பிளிறியபடி நடைபோட்டது போல் இருந்தது அக்காட்சி. மலை போலிருந்த யானைகளின் மீது முரசுகள் வைத்து அடிக்கப்பட்ட போது இடிமுழக்கங்களையெல்லாம் ஒன்று சேர்த்தது போல் சேர்ந்து வானத்தை அதிரவைத்தன. அடுத்த நாள் பிரளயகாலக் கலக்கத்தைப் போலச் சமுத்ரகோஷம் முழங்கியது.

* பக்கம் 374 தமிழ்நாட்டு வரலாறு (பல்லவ – பாண்டியர் காலம்) தமிழ் வளர்ச்சித்துறை வெளியீடு.

உதயசந்திரன் கூறிய தெய்வீக மலர்களைக் கிரீடத்தில் சூடியபடி யானைப்படையுடன் காஞ்சிக் கோட்டையின் மேற்கு வாயிலில் இருந்து புறப்பட்டான் நந்திவர்மன்.

★

கங்கநாட்டின் தலைநகரான தழைக்காட்டின் கோட்டைக்கு அருகே ஓடிய காவிரி நதியில் இறங்கி நீராடினான் கங்கநாட்டு மன்னனான ஸ்ரீபுருஷன்.

"காவிரிக் கரையில் வாழ்வதும் காவிரியில் நீராடுவதும் பூர்வஜென்மப் புண்ணியம் என்று புராணங்கள் கூறுகின்றன" என்று சொல்லிக்கொண்டு அடிக்கடி காவிரிநதியில் நீராடுவது அவனது வழக்கம். அரண்மனையில் எழிலார்ந்த செய்குளத்தை அமைத்து, அதில் வாசனை திரவியங்களைச் சேர்த்து, நீராட்டுவிப்பதற்குப் பணிப்பெண்களும் ஜலக்கிரீடை செய்து மகிழ்விக்க அப்சரஸ் போன்ற அணங்குகளும் காத்திருக்க, ஒருமுறைகூட அதைப் பயன்படுத்திக் கொள்ளாமல் தனது பட்டத்து யானை பட்டவர்த்தனத்தின் ஏறி, கோட்டை வாயிலைக் கடந்து சென்று காவிரியில் நீராடுவதைத் தான் பரமசுகமாகக் கருதிவந்தான் கங்கமன்னன். காவிரியானது மழைக் காலங்களில் இருகரைகளையும் தொட்டுக் கொண்டு ஓடும். மற்ற காலங்களில் கரைகளைத் தொட முடியாமல் அரைகுறை ஆடையை அணிந்த பெண் வெட்கப்பட்டு ஓடுவது போல ஓடும். தழைக்காட்டுக் காவிரியில் மணல் வெள்ளம் அதிகமானதால் ஆழம் குறைவு. நதிதீரம் முழுவதும் மணற்பரப்பினால் சீராக இருந்த காரணத்தாலும் இடைஇடையே மரங்களோ பாறைகளோ இல்லாததாலும் ஆற்றின் அழகு அலாதியாக இருந்தது. தற்போது மழைக்காலம் இல்லாததால் மந்தமாக ஓடிய தண்ணீரில் மந்தகாசத்துடன் நீராடி, அப்படி நீராடும்போது தன்னையே மறப்பவனான கங்கமன்னன் தற்போதும் பரவச நிலையில் தான் இருந்தான்.

.அவனது பரவசத்தைக் கலைக்கும் விதமாகத் திடீரென்று கோட்டை மதிலில் இருந்த அபாயச் சங்கு ஒலித்தது.

அதைக் கேட்டதும் கரைக்கு வந்து பரியின் மீது ஏறி, கோட்டைக்கு வந்து, அரண்மனையில் பிரவேசித்த போது சேவகர்கள் அவனை வணங்கினார்கள்.

"கங்க நாட்டை நோக்கிப் பல்லவர் படை வருகிறது மகாராஜா" என்றார்கள்.

★★★



கங்கமன்னன் ஸ்ரீபுருஷன்

கங்கமன்னன் பதற்றமடையவில்லை.

"செய்தியைக் கொண்டு வந்தவர் யார்?" என்று நிதான மாகவே கேட்டான்.

"ஒற்றர்தான் மகாராஜா."

"அவன் இப்போது எங்கே?"

"உயிரோடு இல்லை மகாராஜா."

"ஏன்?"

"அவர் குற்றுயிரும் கொலையுயிருமாய்த் தான் வந்தார். செய்தியைப் போரமைச்சரிடம் சொல்லிவிட்டுச் சில கணங்களிலேயே உயிரை விட்டு விட்டார்."

"போரமைச்சரையும் சேனாதிபதியையும், ஒற்றர் தலைவனையும் அவைக்கு வரச்சொல். நான் சிறிது நேரத்தில் வந்து விடுகிறேன்" என்று கூறிவிட்டுத் தன் இருப்பிடத்திற்குச் சென்றான் கங்கமன்னன்.

மன்னன் அவைக்கு வந்தபோது அவனது முகத்தில் மகிழ்ச்சியில்லாததால் இறுக்கமாக இருந்தது.

வந்து அமர்ந்ததும் ஒற்றர் தலைவனைப் பார்த்து "எதற்காக இந்தப் போர்?" என்று கேட்டான்.

"நண்டு கொழுத்தால் வளையில் தங்காது மகாராஜா" என்றான் ஒற்றர் தலைவன்.

கங்கமன்னன் அவனது பதிலை ரசிக்கவில்லை. அவன்மீது ஒரு வெறுப்புப் பார்வையை வீசிவிட்டுப் போரமைச்சரைப் பார்த்தான்.

"போரமைச்சரே! நமக்கும் பல்லவ நாட்டிற்கும் பிணக்கு எதுவும் இல்லையே! எல்லாம் இயல்பாகத் தானே நடந்துகொண்டிருக்கின்றன! எதற்காகப் பல்லவர்கள் நம்மீது படையெடுக்க வேண்டும்?" என்று கேட்டான்.

"மகாராஜா! ஒற்றர் தலைவன் கூறியதுபோல் ஆதிக்க ஆசைகாரணமாகவும் ஆணவம் காரணமாகவும், படைப்பலம் அதிகமாக இருக்கும் காரணமாகவும் பல்லவர்கள் நம்மீது படையெடுக்க விரும்பியிருக்கலாம். ஆனால் இது வெறும் ஊகம் தான்" என்றார் போரமைச்சர்.

"ஆதிக்க ஆசையில் படையெடுப்பதானால் பாண்டிய நாட்டின் மீது நடக்கவேண்டியது தானே?" என்று கேட்டான் சேனாதிபதி புவியரசன்.

"அதுவும் நடக்கலாம் தான். கங்கநாடு பல்லவ நாட்டிற்கு அருகில் இருப்பதால் முதலில் இங்கே காலை வைத்துப் பார்க்கலாம் என்று பல்லவ மன்னர் விரும்பியிருக்கலாம்" என்றார் போரமைச்சர்.

"எனக்கு இந்தப் போர் அறவே பிடிக்கவில்லை. என் அருமைப் புதல்வியைப் பல்லவ இளவரசனுக்கு மணம் முடிக்க உத்தேசித்திருந்தேன். கங்கநாடும் பல்லவ நாடும் மணவினையால் நட்பு நாடுகளாக மாறும். இந்தப் பிராந்தியத்தில் அமைதி நிலவும் கனவு கண்டேன். அது பொய்த்து விட்டது. வடக்கிலிருந்து சாளுக்கியர்களும் தெற்கிலிருந்து பாண்டியர்களும் படையெடுக்கும் போதெல்லாம் கங்கநாட்டோடு கூட்டணி அமைப்பார்கள். உதவியைப் பெறுவார்கள். போருக்குப்பின் கறிவேப்பிலையைப் போல நம்மை அகற்றிவிட்டுப் போய் விடுவார்கள். அந்த நிலைமை நீடிக்கக் கூடாது என்பதால் தான் பேரரசான பல்லவ நாட்டுடன் மணவினை மூலம் கூட்டணி அமைத்து நாட்டை அமைதியில் வைத்திருக்கலாம் என்று நினைத்தேன். இது நல்ல நினைப்பு தானே போரமைச்சரே?" என்று கேட்டான் கங்கமன்னன்.

"மனம் வருந்த வேண்டாம் மகாராஜா. பல்லவர்கள் எக்காரணம் கொண்டு படையெடுத்தாலும் சரி அல்லது காரணமே இல்லாமல் படையெடுத்தாலும் பதிலடி கொடுக்க நம்மால் முடியும். எப்போது போர் நடந்தாலும் எதிர்கொள்ளும் நிலையில் தான் கங்கநாடு இருக்கிறது" என்றார் போரமைச்சர்.

கங்க மன்னன் ஒற்றர் தலைவனைப் பார்த்தான்.

"நான் கேட்ட கேள்விக்கு நீ என்ன பதிலைச் சொன்னாய் தெரியுமா? ஒற்றர் தலைவனின் பதிலா அது? நடப்பதை அறிந்து மிகவும் சரியான தகவலைச் சொல்பவன் தான் ஒற்றன். அதுதான் ஒற்றன் பணி. நீயோ புலவனைப் போலப் பேசுகிறாய். நாட்டைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதைத் தெரியாதவன் தான் ஒற்றனா?" என்று சற்றுக் கடுமையாகக் கேட்டான்.

"மகாராஜா! நமது ஒற்றர்கள் யாருமே காஞ்சியை அணுகமுடியவில்லை.எந்த வழியில் சென்றாலும்.பல்லவர்களிடம் சிக்கிக் கொல்லப்படுகிறார்கள். அவர்களில் தப்பிப் பிழைத்து முதுகில் குறுவாள் குத்தப்பட்ட நிலையில் வந்த ஒற்றன்தான் படையெடுப்புப் பற்றிப் போரமைச்சரிடம் தெரிவித்துவிட்டு இறந்து போனான்" என்றான் ஒற்றர் தலைவன்.

"இது எத்தனை நாட்களாக நடக்கிறது?"

"ஒரு வார காலமாக நடக்கிறது."

"என்னிடம் ஏன் தெரிவிக்கவில்லை?"

"சாதாரண விஷயம் தானே என்று சொல்லாமல் இருந்து விட்டேன்."

"உனக்குச் சாதாரணம் எது அசாதாரணம் எது என்று நான் சொல்லிக் கொடுக்க வேண்டுமா? ஒரு வார காலமாக நமது ஒற்றர்கள் ஊடுறுவ முயலாமல் பல்லவர்களால் கொல்லப்படுகிறார்கள் என்றால் அது விபரீதத்தின் அறிகுறி என்பது உன் மூளைக்கு உறைக்கவில்லையா? உடனடியாக இதை என்னிடமோ போரமைச்சரிடமோ தெரிவித்திருந்தால் நான் எச்சரிக்கை அடைந்து உரிய நடவடிக்கையில் இறங்கி இருப்பேன் அல்லவா?"

ஒற்றர் தலைவன் மௌனமாக இருந்தான்.

"நமது ஒற்றர்களால் காஞ்சிக்குப் போக முடியவில்லை என்றால் காஞ்சி ஒற்றர்களால் கங்கநாட்டிற்கு வரமுடியுமா?" என்று கேட்டான் கங்கமன்னன்.

"நமது ஒற்றர்களைப் பல்லவர்கள் கொல்லத் தொடங்கியதுமே பல்லவ ஒற்றர்களை நாம் கொல்ல ஆரம்பித்தோம். ஆகவே பல்லவ ஒற்றர்கள் கங்க நாட்டிற்கு வரமுடியாது. குறிப்பாகத் தலைநகர் தழைக் காட்டிற்குள் ஈ எறும்பு கூட பிரவேசிக்க முடியாது" என்றான் ஒற்றர் தலைவன்.

"மீண்டும் மீண்டும் நீ புலவனாகப் பேசுகிறாயே தவிர ஒற்றர் தலைவனாகப் பேசவில்லை. நீ கூறுவதெல்லாம் உன் கனவு. உன் உலகம். ஆனால் உண்மை அதுவல்ல. காஞ்சி ஒற்றன் தழைக்காட்டிற்கு வந்திருக்கிறான்."

"இருக்க முடியாது மகாராஜா."

"அப்படியானால் ஓலை பறந்து வருமா காஞ்சியிலிருந்து இங்கு?"

"ஓலைகள் பறந்து வராது மகாராஜா. ஓலையைச் சுமந்து கொண்டு புறாக்கள் வரும். சில நேரங்களில் குரங்குகள் கூடச் சுமந்து வருவதுண்டு. ஆனால் இவ்வளவு தூரத்திற்குக் குரங்குகள் வராது."

"இப்போது தான் நீ உருப்படியாகப் பேசுகிறாய்" என்று ஒற்றர் தலைவனைப் பார்த்துச் சொன்ன கங்கமன்னன் போரமைச்சரைப் பார்த்து "இப் போர் எதற்காகப் பல்லவர்களால் நடக்கவிருக்கிறது தெரியுா? காஞ்சியில் உள்ள அவர்களது கௌரவச் சின்னமான சமுத்ரகோஷத்தைச் சேதப்படுத்தி விட்டோமாம்" என்றான்.

"யார் சொன்னது மகாராஜா?"

"இதோ பாரும். காஞ்சியிலிருந்து வந்த ஓலை. அரண்மனை வாயிலில் இருந்ததாம். நான் என் இல்லத்திற்குச் செல்லும் போது சேவகன் கொண்டு வந்து கொடுத்தான். படியுங்கள்" என்ற மன்னன் ஓலையைப் போரமைச்சரிடம் கொடுத்தான்.

அதை வாங்கிப் படித்த போரமைச்சர் "இதில் நிறைய விஷயங்கள் இருக்கின்றன மகாராஜா" என்றார்.

"மற்ற விஷயங்களை விடுங்கள். சமுத்ர கோஷத்தை மட்டும் பேசுங்கள். எனக்குத் தெரியாமல் யாராவது அதைச் சிதைத்தார்களா?" என்று கேட்டான் மன்னன்.

"யாருமில்லை மகாராஜா. அதோடு முரசுகளை அழிப்பது போர் நடவடிக்கையே தவிரச் சதி நடவடிக்கை அல்ல."

"ஆகவே செய்தி பொய் என்பது உறுதியாகி விட்டது. பல்லவ மன்னனுக்கு நம் மீது போர் தொடுக்க வேண்டும் என்ற எண்ணம் வந்துவிட்டது. அதற்குச் சமுத்ர கோஷத்தைக் காரணமாகச் சொல்லியிருக்கிறான்."

"மகாராஜா! சமுத்ர கோஷத்தை நாம் அழிக்கவில்லை. வேறு யாரும் முயல மாட்டார்கள். பல்லவ மன்னனே அதை அழித்துக் கொண்டு நம்மீது பழியைப் போட மாட்டான். பிறகு வேறு யார் அதை அழித்திருப்பார்கள்?"

"போரமைச்சரே! இந்த ஓலையை நமக்கு அனுப்பி யிருப்பவருக்கு அது தெரியும் என்று நினைக்கிறேன். என்ன சொல்கிறீர்கள்?"

"இருக்கலாம். ஆனால் அவர் யார் என்ற விவரம் ஓலையில் இல்லை."

"இந்த இக்கெட்டான நிலையில் ஓலையை அனுப்பியவர்கள் தன்னை யார் என்று விவரமாகச் சொல்ல மாட்டார்கள்

என்பது உங்களுக்குத் தெரியாதா? ஓலையை அனுப்பியவர் என்னை வெற்றி விழாவில் சந்திப்பதாகச் சொல்லியிருக்கிறார். வெற்றிக்கான திட்டத்தைச் சொல்லியிருக்கிறார்."

"மகாராஜா! தங்களுக்குப் போர்த் திட்டத்தைச் சொல்லக் கூடிய ஒருவர் காஞ்சியில் இருக்கிறார் என்றால் அவர் சாமானியராக இருக்க முடியாது. அதே சமயம் அவர் பல்லவ மன்னரின் எதிரியாக இருக்க வேண்டும். அவர் யார் என்பதை அறியாமல் அவரது திட்டத்தை ஏற்பது சரியாக இருக்காது."

"போரமைச்சரே! திட்டத்தைச் சொல்கிறவனை வைத்து அவரை நாம் யாரென்று எடை போட முடியும். அவர் கூறியுள்ள திட்டம் மகத்தானதாக இருக்கிறது. வெற்றித் திட்டமாக இருக்கிறது. சமயோசிதமாக இருக்கிறது. எதிர்பாராத செயல்பாடாகவும் இருக்கிறது. இத்திட்டத்தை ஒரு சோம்பேறி உருவாக்க முடியாது. ஒரு கோழை உருவாக்க முடியாது. ஒரு வாய்ச்சொல் வீரன் உருவாக்க முடியாது. அரசியலிலும் போர்களிலும் அனுபவம் வாய்ந்த சாமர்த்தியசாலி ஒருவனால் தான் முடியும். இதை ஒப்புக் கொள்கிறீர்களா?"

"மகாராஜா! இந்த ஓலை வராமல் இருந்திருந்தால் உங்கள் போர்த்திட்டம் என்னவாக இருக்கும்?"

"அது இப்போது எதற்கு? கண்முன்னே தெரியும் காட்சியை விட்டுவிட்டுக் கண்ணுக்குத் தெரியாத காட்சியைப் பற்றிய பேச்சு எதற்கு?" என்று சொன்ன மன்னன் ஓலையைச் சேனாதிபதி புவியரசனிடம் கொடுத்து "இதைப் படித்துவிட்டு உன் கருத்தைச் சொல்" என்றான்.

சேனாதிபதி அதைப் படித்து விட்டு "தற்போதைய சந்தர்ப்பத்திற்கு ஏற்ற ஏற்றமான திட்டம். நிச்சயமாக இது வெற்றியைத் தரும். அதோடு நாம் போருக்கு முழுமையாகத் தயாராக இல்லாதபோது இந்தத் திட்டம் நிச்சயமாகக் கைகொடுக்கும்" என்றான்.

"நமது படை எண்ணிக்கை என்ன? இனம் வாரியாகச் சொல்" என்றான் மன்னன்.

சொன்னான் சேனாதிபதி.

"நமது படைபலம் குறைவு தான். நம்மீது போரைத் திணிக்கும் பல்லவர் படை அதிகமாகவே இருக்கும். அப் படையை வெற்றி கொள்ள இந்தத் திட்டம் சரியாக இருக்கும் என்று தான் தோன்றுகிறது" என்றான் மன்னன்.

"தங்கள் யானைப் படை மகத்தானது. தாங்கள் யானைப் படைப் போரில் நிகரற்றவர். கஜசாஸ்திரம் அறிந்தவர்.* தாங்கள் ஓலையில் கூறியபடி தாக்கினால் எதிரிப்படை துவம்சம் ஆகும்" என்றான் சேனாதிபதி.

"சேனாதிபதி! நந்திவர்மனும் யானைப்படையை நிர்வகிப்பதில் வல்லவன் தான். அதனால் தான் அவனுக்குப் பல்லவ மல்லன் என்ற பெயரே ஏற்பட்டது" என்று சொன்ன கங்கமன்னன் போரமைச்சரைப் பார்த்து "உங்கள் கருத்தைச் சொல்லவே இல்லையே" என்றான்.

"ஓலையில் வந்திருக்கும் திட்டம் நம்மை ஏமாற்றும் திட்டமாக இருந்தால், நம்கதி அதோ கதியாகி விடும்" என்றார் போரமைச்சர்.

"என்ன செய்யலாம் என்கிறீர்கள்?"

"நம்மிடமும் பறவைகள் மூலம் தூதனுப்பும் சாமர்த்திய சாலிகள் உள்ளார்கள். பறவை நாடன் என்பவன் மகாசாமர்த்தியசாலி. இக்கெட்டான நேரங்களில் பறவைகளை அனுப்பிச் செய்திகளை அறிவதில் கெட்டிக்காரன். நமது ஒற்றர்கள் காஞ்சியை நெருங்க முடியாத நேரத்தில் அவன் பறவைகளால் நெருங்குவான். காஞ்சியில் கங்கநாட்டு வணிகக் குழுமத்தின் அமைப்பு இருக்கிறது. அவர்கள் நமக்குத் தகவல் அனுப்ப முடியாத நிலையில் இருப்பார்கள். பறவை நாடன் மூலம் செய்தியனுப்பி காஞ்சியில் உள்ள நிலைமைகளை ஓரளவிற் காவது அறிந்து கொள்ள வேண்டும். இந்த ஓலையை எழுதிய மாமனிதர் யார் என்பதையும் அறிந்து கொள்வது நல்லது."

"அதற்குக் கால அவகாசம் இல்லை போரமைச்சரே! பல்லவர் படை புறப்பட்டு விட்டது. அதை எதிர்கொள்ளும் முயற்சியில் தான் நாம் ஈடுபட வேண்டுமே தவிர பறவைத் தூதில் இறங்க முடியாது. காஞ்சியில் இருந்துகொண்டு ஓலையை அனுப்பிய மனிதரை பல்லவ மன்னனாலேயே அறியமுடியாத போது அங்கே இருக்கும் கங்கநாட்டு வணிகக் குழுத் தலைவனால் அறியமுடியுமா? தங்கள் யோசனையை நிராகரிப்பதற்காக என்னை மன்னியுங்கள். மூன்று நாட்களுக்குள் நமது படை புறப்பட்டாக வேண்டும். நீங்களும் சேனாதிபதியுமாகப் படையைச் சீர்ப்படுத்துங்கள்" என்றான் மன்னன்.

ஒற்றர் தலைவனைப் பார்த்து "இன்றிலிருந்தாவது நீங்களெல்லாம் ஒற்றர்களாகச் செயல்படுங்கள் நமது நாட்டிற்கு வரும் பல்லவ ஒற்றர்களைக் கொல்ல வேண்டாம். கைது

---

* பக்கம் 81, தமிழக வரலாறு By. புலவர். குழந்தை.

செய்து கொண்டு வாருங்கள். தலைநகரில் மக்களிடம் அறிவிப்புச் செய்யுங்கள் பல்லவனின் போரைப்பற்றி. வெறும் ஆணவத்தாலும் ஆதிக்க ஆசையாலும் படையெடுத்து வரும் பல்லவர்களை கங்கநாடு முறியடித்து வெற்றி பெறும் என்று பிரச்சாரம் செய்யச் சொல்லுங்கள். இந்தப் பிரச்சாரம் படை முகாமிலும் நடைபெறவேண்டும்" என்றான்.

சேனாதிபதியைப் பார்த்து "போர்க் கருவிகள், பொறிகள் மற்றும் உணவுப் பொருட்கள் ஆகியவற்றை ஆயத்தப் படுத்துங்கள். தலைநகருக்குள் யாரையும் அனுமதிக்க வேண்டாம். வருபவர்களில் மிகவும் முக்கியமானவர்களை மட்டும் சோதித்தபின் அனுமதியுங்கள். கோட்டையை விட்டு யாரும் செல்ல வேண்டாம்" என்றான்.

அப்போது மணியடித்தது.

சேவகன் வந்தான்.

"மகாராஜா! தங்களைச் சந்திக்கத் துறவி ஒருவர் வந்திருக்கிறார்" என்றான்.

"துறவிகளைச் சந்திக்கும் நேரம் இதுவல்ல. போகச் சொல் அவரை" என்றான் மன்னன்.

"காஞ்சியிலிருந்து வந்திருக்கிறாராம். அவசரச் செய்தியாம்" என்றான் சேவகன்.

"வரச் சொல்" என்றான் மன்னன்.

★★★



மீண்டும் துலாபாரர்

"காஞ்சியிலிருந்து துறவி எதற்காக இந்த நிலையில் வந்திருக்கிறார்?" என்று வினவினான் கங்கமன்னன்.

"காஞ்சியில் நிலவும் மர்மம் பற்றி எதுவும் அறியாமல் திணறிக் கொண்டிருக்கிறோம். இந்த நேரத்தில் அந்த விவரங்களைச் சொல்வதற்காகவே இறைவனால் அனுப்பப்பட்டு இங்கே வந்திருக்கிறார் இந்தத் துறவி" என்றார் போரமைச்சர்.

இதற்கிடையில் உள்ளே பிரவேசித்தார் துறவி.

"வாருங்கள் அடிகளே. உங்களுக்கு வந்தனம். இந்த ஆசனத்தில் அமருங்கள்" என்றான் கங்கமன்னன்.

"உனது நற்சொற்களுக்கு நன்றி மகாராஜா" என்று சொல்லி விட்டு ஆசனத்தில் அமர்ந்தார் துறவி.

"தாங்கள் யார் என்பதைச் சொல்லலாமா?" என்று கேட்டான் கங்கமன்னன்.

"நான் திருப்பருத்திக் குன்றத்துச் சமணர்களின் தலைமைத் துறவி துலாபாரர்" என்றார் காவி உடையில் கச்சிதமாக வந்திருந்த துலாபாரர்.

"ஆகா! பாரத நாட்டில் இருக்கும் தலைசிறந்த நான்கு சமண கலைப்பீடங்களில் ஒன்று தானே திருப்பருத்திக் குன்றம்! அதன் தலைவர் கங்கநாட்டிற்கு வந்திருப்பது பெருமையாக இருக்கிறது" என்றான் கங்கமன்னன்.

"இல்லை மகாராஜா. பெருமைக்குரிய மகாபீடமாக இருந்த திருப்பருத்திக் குன்றம் இப்போது வெறும் மண் மேடாக இருக்கிறது. சமணர்கள் பட்டினி கிடக்கிறார்கள். சிலர் சல்லேகனை புரிந்து உயிரை விட்டு விட்டார்கள். சமண நிகழ்ச்சிகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. வானுயர்ந்தசோலையாக இருந்த திருப்பருத்திக் குன்றத்துச் சமணம் வானத்தைப் பார்க்கும் பாலைவனமாக ஆகிவிட்டது. அங்கே இருக்கும் நாய்கள் கூட அச்சத்தால் குரைப்பதில்லை.

நீங்கள்தான் எங்களுக்கு உதவ வேண்டும்" என்று உருக்கமான குரலில் சொன்னார் துலாபாரர்.

"கங்கநாட்டின் பாடே திண்டாட்டமாக இருக்கிறது. இப்போது போய் உதவி கேட்டு வந்திருக்கிறீர்களா? நல்ல வேடிக்கை" என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்ட கங்கமன்னன் "நீங்கள் கூறுவது வியப்பாக இருக்கிறது அடிகளே. புராதனக் கலைகளையும் சமயங்களையும் மதிப்பவனாயிற்றே நந்திவர்மன்! அவன் இருக்கும் போதா உங்களுக்கு இந்த நிலைமை?" என்று கேட்டான்.

"அவன் இருப்பதால் தான் இந்த நிலைமை மகாராஜா. நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கும் நந்திவர்மன் வேறு. இப்போதைய நந்திவர்மன் வேறு. அவனுக்கு வைணவ மதத்தின் பால் பற்றுதல் வந்த பிறகு மதவெறியனாகி விட்டான். சமத்துவ மத நெறி என்பது சாகடிக்கப்பட்டு விட்டது. வைணவத்தைத் தவிர இதர மதங்கள் ஏற்றமடையக் கூடாது என்று தீர்மானமாக நினைத்து ஒவ்வொரு மதத்தையும் கூற்றுவனின் வாயிலுக்கு அனுப்பி வைக்கிறான். முதன் முதலாக அவன் ஒடுக்கி ஓரங் கட்டிய மதம் சமணம் தான். அடுத்ததாகச் சைவ மதத்தை அசைக்கும் விதமாகத் தில்லை நடராஜர் கோயிலுக்குள் பெருமாள் கோயிலைக் கட்டுகிறான்."

"இது என்ன வேண்டாத வேலை?"

"நாம் அப்படி நினைக்கிறோம். அவனோ அதையெல்லாம் அவசியமான வேலைகளாக நினைக்கிறான். சைவத்தை ஒடுக்க இதுபோன்ற காரியங்கள் உதவும் என்று கருதுகிறான். மகாராஜா! நந்திவர்மனைப் பற்றிப் பேசுவதால் ஒரு பயனும் இல்லை. மன்னன் தனக்குரிய அதிகாரங்களைத் தவறாகப் பயன்படுத்துகிறான். அவனைச் சுற்றியிருக்கும் பெரியோர்களின் அறிவுரையை ஏற்பதில்லை. ராஜகுருவின் அறவுரையை விரும்புவதில்லை. மன்னனின் தடம் தவறிய போக்கைக் காணச் சகிக்காமலும் மாற்ற முடியாமலும் மனம் நொந்து, பின் வெந்து போன ஞானகுரு மரணத்தைத் தழுவி விட்டார்."

"நந்திவர்மன் கொடுங்கோலன் ஆகிவிட்டானா?"

"கொடுங்கோலர்களிடம் சற்று ஈரமிருக்கும். நந்தி வர்மனிடம் காரமும் அதிகாரமும் தான் இருக்கிறது மகாராஜா! சமணமானது செழிப்பாக இருந்தபோது வடநாட்டிலிருந்து முதன்முதலாக வந்தது கர்நாடகத்தில் தான். கர்நாடகத்திலிருந்து கங்கநாட்டிற்கு வந்து கங்கநாட்டிலிருந்து காஞ்சிக்கு வந்தது. அது பயணம் செய்த இடத்தில் எல்லாம் சிறப்படைந்தது. செழிப்பான நாடு தற்போது காஞ்சியில் மட்டும் அது சிறப்பையும் செழிப்பையும்

இழந்து சிறுத்து சீரழிந்து கிடக்கிறது. தாங்கள் தான் அதற்கு ஏற்றம் தரவேண்டும். தாங்கள் சமணர் என்பதால் இந்த வேண்டுகோளை விடுக்கவில்லை. கங்கமன்னர் கருணையுள்ளவர் என்பதால் கேட்கிறேன். பழைமையான மதம் சமண மதம். அது நமது கண்களுக்கு முன்னாலேயே மடிவதைக் கண்டு என் மனம் பொறுக்கவில்லை மகாராஜா."

போரமைச்சருக்குத் துலாபாரர் பேச்சு அறவே பிடிக்க வில்லை. பேசவேண்டிய விஷயத்தை விட்டு விட்டு எதை எதையோ பேசிக் கொண்டிருந்த அவரது கவனத்தைத் திருப்பும் விதமாக "அடிகளே! நீங்கள் காஞ்சியிலிருந்து தானே வருகிறீர்கள்?" என்று கேட்டார்.

"ஆமாம்."

"காஞ்சி மன்னன் கங்கநாட்டின்மீது படையெடுத்து வருவது உங்களுக்குத் தெரியுமா?"

"ஆகா! ஊருக்கே தெரிந்த விஷயம் எனக்குத் தெரியாமல் போய் விடுமா?"

"அப்படியானால் இந்தப் போருக்குக் காரணம் என்பது உங்களுக்குத் தெரியுமா?"

"ஏன்? அது உங்களுக்குத் தெரியாதா?"

"அடிகளே! காஞ்சியிலிருந்து வரும் உங்களுக்கு - அதுவும் பிரதான சமணத் தலைவருக்குத் தெரியாமல் இருக்காது என்பதால் உங்களைக் கேட்கிறோம். எங்களுக்கு வந்த செய்தியை உறுதிப்படுத்திக் கொள்ளவே கேட்கிறோம். தயவுசெய்து பதிலைக் கூறுங்கள். எங்களைக் கேள்வி கேட்க வேண்டாம்" என்றார்.

"எனக்குப் பல தகவல்கள் தெரியும். அவற்றை உங்களுக்குத் தெரிவிக்கத்தான் வந்தேன். நான் துறவியாக வந்ததால் ஒற்றர்கள் என்னைக் கைது செய்யவில்லை. தடுக்கவில்லை. தகவல்களை நான் சொல்கிறேன். ஆனால் மகாராஜா எனக்கொரு உறுதிமொழி கொடுக்க வேண்டும்" என்றார் துலாபாரர்.

"என்ன உறுதிமொழி?" என்று கேட்டான் கங்கமன்னன்.

"காஞ்சியில் எங்கள் மதம் தழைக்க நிதிஉதவி செய்ய வேண்டும். அனேகமாக இந்தப் போர் உங்களுக்குச் சாதகமாக முடியும். காஞ்சியைக் கைப்பற்றுவதற்கும் வாய்ப்பிருக்கிறது."

"அடிகளே! உங்களுக்கு உதவுவது பெரிய காரியமல்ல. ஆனால் தற்போது இயலாது. போர் முடிந்த பிறகு தான் உதவ முடியும்.

அதற்கு நான் உறுதியளிக்கிறேன். உங்களுக்கு நம்பிக்கை வர வேண்டுமென்றால் நாளைக்கே இரண்டாயிரம் பொற்காசுகளை உங்களுக்கு வழங்குகிறேன். உங்கள் தகவல்கள் இப்போது முக்கியம். அதையொட்டித்தான் நாங்கள் போர்த்திட்டத்தைத் தீட்ட முடியும்."

"மிக்க மகிழ்ச்சி மகாராஜா. இப்போது நான் தகவல்களைச் சொல்கிறேன். சமுத்ர கோஷம் சிதைக்கப்பட்டதால் பல்லவ மன்னன் இந்தப் படையெடுப்பை துவங்கியிருப்பது உண்மை. ஆனால் சமுத்ர கோஷத்தைச் சிதைத்தது வேறு ஒரு நபர். அவர் காஞ்சியிலேயே மறைந்து வாழ்கிறார். நந்திவர்மனை வீழ்த்துவதற்குத் தீவிரமாக முயன்று வருகிறார். சமுத்ர கோஷத்தைச் சிதைத்து விட்டு அந்தப் பழியை உங்கள் மீது போட்டவரும் அவர்தான்."

"யார் அவர்?"

"சொன்னால் நம்பமாட்டீர்கள்."

"சொல்லுங்கள்."

"அந்த மனிதர் வேறு யாருமில்லை. பாண்டிய இளவரசர்."

துலாபாரர் கூறிய செய்தியைக் கேட்டுவிட்டு கங்கமன்னன் சற்றே அதிர்ந்து போனான்.

அவனும் சரி அங்கே இருந்தவர்களும் சரி - அதை எதிர்பார்க்கவில்லை. நம்பவில்லை.

"நீங்கள் சொல்வது உண்மையா?" என்று கேட்டான் கங்கமன்னன்.

"துறவிகள் பொய் சொல்ல மாட்டார்கள் மகாராஜா. வர்த்தமான மகாவீரர் ஆணையாகச் சொல்கிறேன். நான் கூறுவது உண்மை" என்றார் துலாபாரர்.

"நம்ப முடியவில்லை அடிகளே."

"ஏன்?"

"சமீபத்தில் தான் பெண்ணாகடத்தில் பாண்டியனுக்கும் பல்லவனுக்கும் போர் நடந்தது. அந்தப் போரில் வெற்றி பெற்றவன் பாண்டியன். வெற்றி பெற்ற பாண்டியர்கள் நடந்து கொள்ளும் விதம் இப்படி இருக்காது."

"வேறு எப்படி இருக்கும்?"

"வீரச் செயலாக இருக்கும். போர்ச்செயலாக இருக்கும்."

"மகாராஜா! பெண்ணாகடத்தில் பல்லவருக்கும் பாண்டியருக்கும் போர் நடந்தது. பாண்டியர்கள் வெற்றி பெற்றார்கள். அதனால் அவன் அடைந்த ஆதாயம் என்ன? பல்லவர் ஆதிக்கத்தில் இருந்த பெண்ணாகடம் பாண்டியர் வசம் போய் விட்டதா? பல்லவ மன்னன் பெரும் செல்வத்தைப் பாண்டியருக்குக் கொடுத்தானா? இல்லை. போர் என்றால் ஒரு விளைவு வேண்டும். பெண்ணாகடப் போரில் ஒரு விளைவும் இல்லை. ஏன்? அந்தப் போர் ஒரு பெண்ணுக்காக நடந்த போர். அந்தப் பெண் யாருக்குச் சொந்தம் என்று இருவரும் அடித்துக் கொண்டார்கள். பாண்டியனை விரும்பிய பெண் பாண்டியனோடு சேர்ந்தாள். பாண்டியன் வெற்றியின் விளைவு இதுதான்."

துலாபாரர் சற்று விலாவாரியாகப் பேசுவதைக் கவனித்த கங்க மன்னன் "மேலே சொல்லுங்கள்" என்றான்.

"ஆக பெண்ணாகடப் போர் வெற்றுப் போர். அதே சமயம் பாண்டியர்களின் வேட்கையானது வெற்று வேட்கையல்ல. உண்மையான வேட்கை. அவர்களுக்குக் காஞ்சி அவசியமாக இருக்கிறது. காஞ்சியைப் பிடித்துவிட்டால் பல்லவர்கள் ஆதிக்கத்தில் இருக்கும் சோழநாடும் பாண்டியர் வசம் வந்துவிடும். ஏறக்குறைய தமிழகமானது பாண்டிய ராஜ்யமாகி விடும். அந்த நிலையை அடையப் போர்முறை தான் ஏற்புடையது என்று பாண்டியர்கள் கருதவில்லை. காஞ்சியை அடைவதென்பது அவர்களுக்குக் கைலாயத்தை அடைவதைப் போன்றது. சிரமமானது. சிக்கலானது. நேர்வழியானது பலனைத் தர நீண்ட காலமாகும். குறுக்குவழி தான் சீக்கிரத்தில் பயனைத்தரும். ஆகவே தான் பாண்டிய மன்னன் தனது இளவரசனை காஞ்சிக்கு அனுப்பியிருக்கிறான். இளவரசனும் மாறுவேடத்தில் காஞ்சியில் இருந்து கொண்டு சதி வேலைகளில் ஈடுபடுகிறான். அதன் உச்சகட்டம் தான் இந்தப் போர். பல்லவரையும் கங்கர்களையும் மோதவிட்டு அந்த நேரத்தில் அனாதரவாக இருக்கும் காஞ்சியைப் பாண்டியர்கள் கைப்பற்றுவார்கள். அதற்கேற்ப ஆயிரக் கணக்கான பாண்டிய வீரர்கள் தொண்டை மண்டலத்தில் மாறு வேடங்களில் உலவுகிறார்கள். இங்கே போர் நடக்கும்போது பாண்டிய வீரர்கள் படைகளாக மாறிக் காஞ்சியைக் கைப்பற்றுவார்கள்."

"இப்போதும் எனக்கு நம்பிக்கை வரவில்லை அடிகளே. பாண்டியர்கள் வீர மறவர்கள். தமிழர்கள். இதுபோன்ற வழிகளில் ஈடுபடமாட்டார்கள்" என்றான் கங்கமன்னன்.

"மகாராஜா! பாண்டிய நாட்டை ஆண்டு கொண்டிருந்த களப்பிரர்களைப் பாண்டியன் நேரடிப் போரில் ஈடுபட்டுத் தோல்வியடையச் செய்யவில்லை. சதி பாதி விதி பாதி. நேர்வழி பாதி குறுக்கு வழி பாதி. தஞ்சம் பாதி வஞ்சம் பாதி என்று செயல்பட்டுத் தான் களப்பிரர்களை வென்றார்கள். நேர்வழி என்பது கத்திமேல் நடப்பது போன்றது. குறுக்குவழி என்பது கத்தியோடு நடப்பது போன்றது.ஏறக்குறைய எல்லாமன்னர்களும் குறுக்கு பாதி நெடுக்கு பாதி என்று தான் ஈடுபடுகிறார்கள்."

சேனாதிபதி குறுக்கிட்டு "அடிகளே! பல்லவ மன்னனும் பல்லவ மல்லனுமான நந்திவர்மன் லேசுப்பட்டவன் அல்ல. ஐம்பது ஆண்டுகளாக அசைக்க முடியாத சக்தியாக இருந்து கொண்டு காஞ்சியை ஆண்டு வருகிறான். காஞ்சியில் இருந்து சதிகளைச் செய்து கொண்டிருக்கும் பாண்டிய இளவரசனை அவனால் கண்டு கொள்ள முடியவில்லை. உங்களால் கண்டு பிடித்து விட முடிந்ததா? அது எப்படி?" என்று கேட்டான்.

"என்னால் கண்டு பிடிக்க முடிந்தது என்பதைக் கேட்டு எங்களை நீங்கள் பாராட்ட வேண்டுமே தவிர குறை கூறலாகாது. மன்னனின் செயல்பாடுகளில் குறையே இருக்காது என்று சொல்ல முடியுமா உங்களால். நாங்கள் துறவிகள். எங்களால் எங்கேயும் சகஜமாக உலவ முடியும். பலரும் எங்களுடன் பேசுவார்கள். தகவல் சொல்வார்கள்."

"அடிகளே! காஞ்சியில் பாண்டிய இளவரசன் இருந்து கொண்டு சதி செய்வது உங்களுக்குத் தெரிந்துவிட்ட பட்சத்தில் அதை ஏன் நீங்கள் பல்லவ மன்னனிடம் தெரிவிக்காமல் இப்போது எங்களிடம் தெரிவிக்கிறீர்கள்?" என்று கேட்டான் சேனாதிபதி.

"நன்றாகக் கேட்டீர்கள். ஆரம்பத்தில் நான் சொன்ன விவரங்களை மறந்து விட்டீர்களா? காஞ்சிபுரத்தில் சமண மதத்தை வேரறுத்தவன் நந்திவர்மன். பசுஞ்செடிகளை வெட்டி வீழ்த்தியது போல் உரிமைகளையும் சலுகைகளையும் பறித்தவன் நந்திவர்மன். வளர்வதற்கு வழியில்லாமல் வாடி வதங்குவதற்கு நடவடிக்கை எடுத்தவன் நந்திவர்மன். சமணர்களின் விரோதி நந்திவர்மன். எங்களின் காலன் அவன். அவனிடம் எதற்காகச் சொல்ல வேண்டும். ஆகவே தான் சமணத்தை வாழ்விக்கும் கங்கமன்னரிடம் சொன்னேன்."

கங்கமன்னன் குறுக்கிட்டு "பிற தகவல்கள் என்ன அடிகளே?" என்று கேட்டான்.

"ஒரே தகவல் தான் மகாராஜா. பல்லவர் சேனையின் எண்ணிக்கை ஒரு லட்சம். ஏறக்குறைய எல்லாப் படைகளுமே காஞ்சியை விட்டுக் கிளம்பி விட்டன. காஞ்சியைச் சொற்பப் படைகளோடு பாதுகாத்து வருபவன் நந்திவர்மனின் மகன் தந்திவர்மன். லட்சம் படைகளோடு வரும் நந்திவர்மனோடு காடக முத்தரையர், பல்லவடி அரையர், பாண நாட்டு ஜெயந்தி வர்மன், சுவரன் மாறன், பூதிவிக்கிரம கேசரி, உதயசந்திரன் ஆகிய தளபதிகள் வருகிறார்கள். தழைக்காட்டை துவம்சம் செய்வதே அவனது நோக்கம்" என்று முடித்தார் துலாபாரர்.

"நல்லது அடிகளே. நீங்கள் போய் ஓய்வெடுங்கள். நாளை சந்திப்போம்" என்று சொன்ன மன்னன் துறவி தங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படிச் சேவகர்களுக்குக் கட்டளை யிட்டான்.

துறவி அங்கிருந்து வெளியேறினார்.

மன்னன் போரமைச்சரையும் பார்த்தான். சேனாதி பதியையும் பார்த்தான்.

அவனது முகத்தில் சற்றே அசதி தெரிந்தது.

"இப்போது என்ன சொல்கிறீர்கள் போரமைச்சரே?" என்று வினவினான்.

★★★



மேல் சீயமங்கலம்

"ஒரு லட்சம் படைகளுடன் பிரதான தளபதிகளோடு பல்லவர் படை வருகிறதென்றால் நமது தலைநகர் தழைக் காட்டைத் துவம்சம் செய்து கைப்பற்றுவது தான் சரியான போர்த்திட்டம். துறவி கூறியது சரி" என்றார் போரமைச்சர்.

"ஆனால் நமக்கு வந்த ஓலைச் செய்தியில் நேர்மாறான போர்த்திட்டம் கூறப்பட்டிருக்கிறது. ஒருவரே இருவிதமான திட்டங்களை நமக்கு எப்படித் தரமுடியும்?" என்று கேட்டான் சேனாதிபதி புவியரசன்.

"துறவி காஞ்சியில் இருக்கும் பாண்டிய இளவரசனின் பிரதிநிதியாகவோ, தூதராகவோ வரவில்லை. அவராக வந்திருக் கிறார். பல்லவர் படையின் திட்டத்தை அறிந்து வந்திருக்கிறார். இதை அறியாமல் பாண்டிய இளவரசன் நமக்குப் போர்த் திட்டத்தை அனுப்பியிருக்கிறான்" என்றார் போரமைச்சர்.

"பல்லவரது திட்டம் தலைக்காட்டைத் தாக்குவது தான் என்றால் அங்கே இருக்கும் பாண்டிய இளவரசன் அதற்கு நேர்மாறான திட்டத்தை எப்படி அனுப்ப முடியும்? எங்கோ இடிக்கிறதே!" என்றான் சேனாதிபதி.

கங்கமன்னன் குறுக்கிட்டு "நமக்கு ஓலை அனுப்பிய மனிதனும் துறவி கூறிய நபரும் ஒருவர் தானா? வேறு வேறானவர்களா?" என்று கேட்டான்.

"ஒரே மனிதனாகத் தான் இருக்க வேண்டும்" என்று இழுத்தார் போரமைச்சர்.

"எனக்கென்னவோ துறவி கூறிய விஷயங்கள் நம்புகிற மாதரி இல்லை. அங்கே இருப்பவன் பாண்டிய இளவரசன் தான் என்பதை என்னால் ஏற்க முடியவில்லை. ஜீரணம் பண்ண முடியவில்லை. அவன் பாண்டிய இளவரசன் என்பது உண்மை என்றே வைத்துக் கொண்டாலும் பல்லவர் படை தழைக் காட்டை நோக்கி வரும்போது நமது படையைக் குவலாலபுரத்திற்குச் செல்லுமாறு

சொல்வானா?" என்று கேட்ட கங்கமன்னன் "துறவியின் வரவால் நமக்குத் தெளிவு கிடைக்கும் என்று நினைத்தோம். ஆனால் குழப்பம் தான் மிஞ்சுகிறது. தழைக்காட்டைக் கைப்பற்றுவதற்கு ஒரு லட்சம் படைகளும் பத்துத் தளபதிகளும் தேவையில்லை. ஆகவே துறவி கூறிய விஷயங்களை ஏற்பதற்கு மனம் ஒப்பவில்லை. இருவரும் யோசியுங்கள். நாளை முடிவிற்கு வருவோம்" என்று சொல்லி விட்டு எழுந்து சென்றான் கங்கமன்னன்.

★

மன்னனைச் சந்தித்துவிட்டு துறவி துலாபாரர் அரண்மனையை விட்டு வெளியே வந்தபோது அங்கிருந்த சீடனையும் அழைத்துக் கொண்டு சேவகர்களுடன் சென்றார்.

தங்குமிடம் தனிவளாகத்தில் சிறப்பானதாக இருந்தது. இருவரையும் அங்கே கொண்டு போய்விட்ட சேவகர்கள் "என்ன உணவு வேண்டும் ஐயா?" என்று கேட்டனர்.

"சொற்ப ஆகாரம் போதும்" என்று ரொம்பவும் பவ்யமாகச் சொல்லிக் கொண்டார் துலாபாரர்.

உணவு வந்ததும் சேவகர்களுக்கு நன்றி தெரிவித்த துறவி "அன்பர்களே! உண்டு முடித்தபின் நான் நிஷ்டையில் அமர்வேன். இரவுப் பொழுது முகிழ்க்கும் வரை யாரும் தொந்தரவு செய்ய வேண்டாம்" என்றார்.

உணவை உண்டபிறகு கதவைச் சாத்திவிட்டு ஆசனத்தில் அமர்ந்தார் துறவி.

அவரது கால்களைப் பிடித்து விட்ட சீடன் "அரண்மனையில் எல்லாம் சுபமாக முடிந்ததா குருவே?" என்று கேட்டான்.

"இங்கே நம்மைத்தவிர யார் இருக்கிறார்கள்? எதற்காக ஆண் குரலில் பேசுகிறாய்? உன் குரலிலேயே பேசு பவானி. உன் தேன்குரல் என்னைத் தாலாட்டுவது போல இருக்கும் என்று எத்தனை முறை கூறியிருக்கிறேன்? ஒரு வேளை நான் இறந்து விட்டால் என் சடலத்தின் மீது உனது இனிமையான இசைதான் விழவேண்டும். கழுவ வேண்டும். அதுவே எனக்குத் திருப்தி" என்றார் துறவி.

"வேடத்தையும் கலைத்து விடட்டுமா அடிகளே?" என்று கேட்டாள் பவானி.

"அது வேண்டாம். இங்கேயிருந்து போகும்வரை வேடத்தைக் கலைக்காதே. அடிக்கடி கலைத்துப் போட்டுக் கொண்டிருக்க முடியாது" என்றார் துறவி.

"என் கேள்விக்குப் பதில் சொல்லவே இல்லையே சுவாமி! அரண்மனையில் என்ன நடந்தது?"

"ஆரம்பம் முதல் கடைசி வரை பச்சைப் பொய்களை எடுத்து வீசியிருக்கிறேன். என்னைப் பொறுத்தவரை சமீப காலங்களில் உண்மையைப் பேசுவது தான் கஷ்டமாக இருக்கிறது. அந்தக் கஷ்டம் பொய் பேசும் போது இல்லை. மிகவும் லகுவாக இருக்கிறது. பலர் குறுக்குக் கேள்விகளைக் கேட்ட போதும் பொய்களை உறுதியாகச் சொல்லிச் சமாளித் தேன். பவானி உண்மையைத் தயங்கித் தயங்கிப் பேசினால் நம்புவதற்குத் தயங்குவார்கள். பொய்களை உறுதியாகவும் தங்கு தடை இல்லாமலும் பேசினால் நம்பாதவர்கள் கூட நம்புவார்கள். போர் முடிந்தபின் நமது திருப்பருத்திக் குன்றத்தில் சமணம் ஏற்றம் பெற நிதி உதவிகளை நிரம்பத் தருவதாகச் சொல்லியிருக்கிறான் கங்கமன்னன். அதற்கு அச்சாரமாக நாளைக்கு இரண்டாயிரம் பொன் தருவதாகச் சொல்லியிருக்கிறான். தருவான்" என்றார் துறவி.

"நடக்கப்போகும் போரில் கங்கமன்னர் வெற்றி பெறுவார் என்று நினைக்கிறீர்களா?"

"என் கணக்குப்படிப் பார்த்தால் கங்க மன்னன் வெற்றி பெற வாய்ப்பில்லை."

"தோற்றுப் போய் விட்டால் அவரால் நமக்கு எப்படி உதவி செய்ய முடியும்?"

"அதை நானும் எதிர்பார்த்துக் கொண்டிருக்சவில்லை. நாளைக்கு நமக்கு இரண்டாயிரம் பொன் வந்து விட்டால் கங்க நாட்டை விட்டு ஓடிப்போய் விடுவோம்."

"சுவாமி! கங்கநாட்டிற்கு வரும் உத்தேசம் உங்களுக்கு எப்படி வந்தது,"

துறவி துலாபாரர் காஞ்சியை விட்டு மேல்சித்தாமூருக்கு வந்ததற்கு முக்கிய காரணம் காஞ்சியில் இருந்தால் மன்னன் கைது செய்து விடுவான் என்பதால்தான்.

அதோடு மேல்சீயமங்கலத்தில் சமணர்கள் அதிகமாக இருந்தார்கள். திருப்பருத்திக் குன்றத்தை விட அது புனிதமான பூமியாகக் கருதப்பட்டது. சைவ மதத்தவர்களுக்குக் காசி எவ்வளவு புனிதமானதாக இருந்து வந்ததோ அப்படி சமணர்களுக்கு மேல்சீயமங்கலத்தில் இருந்து வந்தது. அதைச் சமணக் காசி என்று கூட அழைத்து வந்தார்கள்.

அங்கே சென்றால் தனக்கு கௌரவம் கிடைக்கும் என்றும் கொஞ்ச காலத்தை அங்கே தள்ளலாம் என்றும் நினைத்தார் துலாபாரர். ஆனால் அவர் பவானியைக் கூடவே வைத்துக் கொண்டிருந்ததால் எதிர்பார்த்த மரியாதை கிடைக்கவில்லை. பலரும் பவானி யார் என்று விசாரித்தார்களே தவிர அவரைப் பற்றிக் கூட விசாரிக்கவில்லை.

"உங்களுக்குத் தான் அவள் பெண்ணாகத் தெரிகிறாள். எனக்கு அவள் எலும்புக் கூடாகத் தெரிகிறாள்" என்று அவர் சொன்ன பதிலை யாரும் ஏற்கவில்லை.

ஒரு சிலர் "அந்த எலும்புக் கூட்டை எங்களிடம் கொடுத்து விடுங்கள் நாங்கள் பாதுகாத்துக் கொள்கிறோம்" என்றார்கள் கிண்டலாக.

"துறவிகளாக எண்ணுங்கள். துறவிகளாகப் பாருங்கள். துறவிகளாகப் பேசுங்கள். துறவிகளாகச் செயல்படுங்கள். அதுதான் சமணவழி. மகாவீர வர்த்தமானர் வகுத்துக் கொடுத்த வழி. ஒரு சமணன் மற்றொரு சமணனை இகழமாட்டான். ஒரு சமணன் இன்னொரு சமணன் மீது அவநம்பிக்கை கொள்ள மாட்டான். ஒரு சமணன் வேறொரு சமணனின் மனதை நோகடிக்க மாட்டான். உங்கள் பேச்சும் சந்தேகமும் உங்களையே போகப் போக வாட்டும்" என்று உண்மைத் துறவி போல் பேசிய துலாபாரர் துறவிகளிடம் பேசுவதையே விட்டுவிட்டு போதி மரத்தடியில் குடிசையைக் கட்டிக்கொண்டு பகலில் துறவியாகவும் இரவில் மன்மதனாகவும் வாழ்ந்தார்.

ஒருநாள் மேல்சீயமங்கலம் விஹாரத்தின் தலைமைத் துறவி துலாபாரரை அழைத்தார்.

"துலாபாரரே! மேல்சீயமங்கலத்தில் பெண்கள் குடியிருக்கவில்லை. பெண் துறவிகளைக் கூட நாங்கள் அனுமதிக்கவில்லை. பெண்களின் வாசம் ஆண்களை நாசம் செய்து விடும். துறவிகளைத் துவம்சம் செய்துவிடும். நீங்களோ திருப்பருத்திக்குன்றத்தின் தலைமைத் துறவியாக இருந்து கொண்டு இளம்பெண் ஒருத்தியை அழைத்து வந்துள்ளீர்கள். அந்தப் பெண் உங்களுக்கு எலும்புக் கூடாகத் தெரிகிறாள் என்பதை நான் நம்புகிறேன். நிஜத் துறவிகளுக்கு அப்படித் தெரியும்தான். ஆனால் இங்கே இருக்கும் பலருக்கு அவள் பெண்ணாகத் தெரிகிறாள். அவர்களது மனம் கிலேசமடைகிறது. ஆகவே அந்த இளம்பெண்ணை அவளது இருப்பிடத்திற்கு அனுப்பிவிட்டு நீங்கள் மட்டும் இருப்பதென்றால் எவ்வளவு காலமானாலும் இருங்கள். இல்லையென்றாள் அவளை

அழைத்துக் கொண்டு நீங்களும் மேல்சீயமங்கலத்தை விட்டு வெளியேறி விடுங்கள். இரண்டு நாட்கள் அவகாசம் தருகிறேன்" என்றார்.

துலாபாரரால் உடனடியாக எதுவும் பேசமுடியவில்லை. சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு "ஐயா! திருப்பருத்திக் குன்றத்தின் நிலை என்ன என்பது உங்களுக்குத் தெரியுமா? பல்லவ மன்னன் எங்களுக்குப் பல்லவ வில்லனாக மாறிவிட்டான். வில்லங்கங்களை விட்டு விட்டுச் செய்கிறான். போராடும் சமணர்களைக் கழுவேற்றுகிறான். சமண மதத்திற்கு அங்கே சமாதி கட்டப்பட்டு வருகிறது" என்றார் பேச்சை திசை திருப்ப விரும்பி.

"துலாபாரரே! திருப்பருத்திக் குன்றத்தின் நிலைமை எங்களுக்குத் தெரியும். அதேசமயம் பல்லவரது தொண்டை மண்டலத்தில் இருக்கும் மேல்சீயமங்கலம் சமணம் எப்போதும் போல் ஒரே நிலையில்தான் இருக்கிறது. டல்லவ மாமன்னர் இங்கே வழங்கும் சலுகைகளும் உரிமைகளும் அப்படியே தான் உள்ளன. பல்லவ மாமன்னரைக் குறை கூறுவதும் அநாகரீக வார்த்தைகளை வீசுவதும் மிகவும் தவறு. அதை நான் கண்டிக்கிறேன். திருப்பருத்திக் குன்றத்தின் தற்போதைய நிலைமைக்குக் காரணம் மாமன்னர் அல்ல. நீங்கள் தான். வேறெதுவும் பேச வேண்டாம். புறப்படுங்கள்."

தன் பேச்சு அங்கே செல்லுபடி ஆகாது என்பதை உணர்ந்தார் துலாபாரர்.

இருப்பிடத்திற்கு வந்தார். அவருக்கு ஏதேதோ யோசனைகள் வந்தன. தான் காஞ்சியை விட்டுப் போன பிறகு பல்லவர் படை கங்கநாட்டை நோக்கிச் செல்வதை அறிந்தார். அவருக்குள் ஒரு திட்டம் உருவாயிற்று. கங்க நாட்டிற்குச் செல்வது என்று நீர்மானித்தார். சீயமங்கல விஹாரத்துத் தலைவரது கால்களில் விழுந்து தனக்குப் பயணத்திற்காக ஒரு புரவியை ஏற்பாடு செய்து தரும்படிக் கண்ணீருடன் வேண்டிக் கொண்டார்.

"நான் அனாதையாகி விட்டேன் தலைவரே. என் கைவசம் ஒரு காசு கூட இல்லை. ஒவ்வொரு வேளை உணவிற்கும் பிட்சை தான் எடுக்கிறேன். பிட்சை எடுக்காத போது உபவாசம் இருக்கிறேன். அந்தப் பெண்ணும் அப்படித் தான் இருக்கிறாள். ஆணும் பெண்ணும் ஒன்றாக இருப்பது பஞ்சும் தீயும் பக்கத்துப் பக்கத்தில் இருக்கும் விஷயம் என்றும் தாமாகவே பற்றிக் கொள்ளும் என்று தான் உலகத்தவர் சொல்லிக் கொள்கிறார்கள். அதை மறுப்பதற்காகவே நான் அவளோடு வாழ்கிறேன். அதை

உலகம் புரிந்து கொள்ளும்போது புரிந்து கொள்ளட்டும். துறவி உலகைக் கண்டும் உலகியலைக் கண்டும் பயப்பட மாட்டான். நானும் அப்படித்தான். காஞ்சியில் வசிக்கப் பிடிக்காமல் இங்கே வந்தோம். இங்கே வசிப்பது உங்களுக்கப் பிடிக்காமல் போய் விட்டது. ஆகவே நான் கங்கநாட்டிற்குச் செல்கிறேன். அந்நாட்டில் சமணம் செழித்தோங்குகிறது. கங்க மன்னன் சமண சமயத்தைச் சேர்ந்தவன். அவனிடம் போய் ஆதரவு கேட்க முடிவு செய்திருக்கிறேன். தழைக்காடு இங்கிருந்து தொலைவில் இருக்கிறது எனக்குப் புரவி ஏற்றம் தெரியும். ஒரு புரவியை மட்டும் எனக்குத் தந்து உதவுங்கள். கங்க நாட்டிற்குச் சென்று மன்னனிடமிருந்து நிதியைப் பெற்று புரவிக்குரிய விலைத் தொகையை நிச்சயமாகத் தருகிறேன். இது வர்த்தமான தீர்த்தங்கரர் மேல் ஆணை" என்று நெஞ்சுருகக் கேட்டார்.

வர்த்தமானர் மீது அவர் ஆணையிட்டு விட்டதால் விஹாரத்துத் தலைவர் மறுபேச்சு பேசவில்லை.

புரவியொன்றைக் கொடுத்து "உங்கள் விஜயம் வெற்றி பெறட்டும்" என்று கூறி அனுப்பி வைத்தார்.

குடிசைக்கு வந்த துலாபாரர் "புறப்படு பவானி. உடனடியாகச் செல்ல வேண்டும். நீ என் சீடனைப் போல வேடமிட்டுக் கொள்" என்றார்.

விரைவிலேயே இருவரும் புறப்பட்டார்கள்.

துறவிக்குப் புரவியேற்றம் தெரியும் என்பது பவானிக்குத் தெரியாது.

தற்போது அவர் தன்னை முன்னே வைத்துக் கொண்டு லாவகமாகப் புரவிச் சவாரி செய்ததைக் கண்டபோது ஆனந்தமாக இருந்தது. பலநேரங்களில் அவர் புரவியைப் புயல்போல் இயக்கிய போது அவரது மார்பில் சாய்ந்து கொண்டு 'ஆகா' என்றிருந்தாள்.

எங்கே செல்கிறோம் என்ற இடத்தை அவர் கூறவில்லை. ஆனால் தேவையான இடங்களில் புரவியை நிறுத்தி புரவிக்கும் ஓய்வு கொடுத்து தனக்கும் ஓய்வு கொடுத்தார். ஆற்றோரங்களிலும் அருவிகளுக்கு அருகிலும் இறங்கி பவானியை நீராட்டிய அவர் புரவியையும் நீராட்டினார்.

அதையெல்லாம் கண்டு வியந்த பவானி "உங்களுக்குத் தெரியாத விஷயமே கிடையாதா?" என்று கேட்டாள்.

"ஆவல் இருந்தால் விஷயங்கள் ஓடி வந்து நம்மிடம் சரணடையும்" என்ற சொன்ன துலாபாரர் தழைக்காட்டிற்குச்

செல்லும் வழியில் பவானியிடம் தனது காமாந்தகத்தையும் காட்டினார். அறைக்குள் நடந்த காமலீலைகளை விட இயற்கைச் சூழலில் நடந்த காமலீலைகள் கடலனைய ஆனந்தத்தைத் தந்தது பவானிக்கு.

கங்கநாட்டு அரண்மனை வாசலில் அவளைக் காத்திருக்கும் படிக் கூறிவிட்டு, உள்ளே சென்று மன்னனிடம் பேசிவிட்டு, தங்குமிடத்திற்கு வந்து உணவை உண்டு விட்டு ஆசனத்தில் அமர்ந்த போது "கங்க நாட்டிற்குச் செல்லும் உத்தேசம் உங்களுக்கு எப்படி வந்தது?" என்று கேட்டாள் பவானி.

"மேல்சீயமங்கலம் விஹாரத் தலைவர் முக்கிய செய்தி ஒன்றை கங்கமன்னரிடம் சொல்லும்படிச் சொல்லிப் புரவியையும் அளித்தார்" என்ற பொய்யைச் சொன்னார் துறவி.

"தற்போது என்ன செய்யப் போகிறீர்கள்?" என்றாள் பவானி.

அப்போது அந்த மாளிகையை நோக்கி வந்து கொண்டிருந்தான் சேனாதிபதியான புவியரசன்.

★★★



சேனாதிபதி புவியரசன்

"நான் சற்று சென்று இங்கிருக்கும் சமணர்களை நோட்டமிட்டு வருகிறேன். அவர்களால் ஏதாவது ஆதாயம் இருக்குமா என்பதை அறிந்து கொண்டு வருகிறேன். கங்க மன்னன் தோற்றுப் போனால் நமக்கு எதுவும் கிடைக்காது. இங்கே உள்ள சமணர்களிடம் ஏதாவது கிடைக்கும். எனக்குத் தெரிந்த விஹாரவாசிகள் சிலர் இருக்கிறார்கள். விவரமானவர்கள் சிலர் இருக்கிறார்கள். மதவியாபாரிகள் சிலரும் இருக்கிறார்கள். அவர்களை யெல்லாம் பார்த்துவிட்டு வந்தால் நமக்கு ஏதாவது வழி கிடைக்கும்" என்றார் துலாபாரர்.

இதே நேரத்தில் அவரது மாளிகைக்கு வந்த சேனாதிபதி புவியரசன் சேவகர்களிடம் விசாரித்தான்.

"தான் நிஷ்டையில் அமரப் போவதாகவும் இரவு வரை யாரும் தொல்லை தர வேண்டாம் என்றார் ஐயா அத்துறவி. ஆனால்..." என்று இழுத்தான் சேவகன்.

"ஆனால் என்ன? சொல்" என்றான் சேனாதிபதி.

"உள்ளே பெண்குரல் கேட்கிறது ஐயா."

"பெண் குரலா? நீங்கள் யாராவது பெண்ணை அனுப்பி வைத்தீர்களா?"

"என்ன ஐயா இது? துறவிக்குப் போய் அப்படிச் செய்வோமா?"

"பிறகு எப்படி வருகிறது பெண் குரல்?"

"தெரியவில்லை."

"உள்ளே இருப்பது யார்?"

"துறவியும் அவரது சீடரும்."

சேனாதிபதி சற்று யோசித்து விட்டு "நான் பிறகு வருகிறேன். உள்ளே இருந்து யார் வெளியே வந்தாலும் எங்கே போகிறார்கள் என்ன செய்கிறார்கள் என்பதைக் கண்காணியுங்கள்" என்று கூறிவிட்டு அகன்றான்.

வெளியே நடந்ததை அறியாத பவானி "வெளியே சென்றால் எப்போது வருவீர்கள் அடிகளே," என்று கேட்டாள்.

"இரவில் வந்து விடுகிறேன்."

"என்னையும் அழைத்துப் போங்களேன்."

"நீ பெண் என்பதை நினைவில் வைத்துக் கொள் பவானி. உன் வேடம் கலைந்து விட்டால் ஆபத்தாகி விடும்."

"இங்கே யாராவது வந்தால்?"

"எவனும் வரமாட்டான். துறவிகளுக்கு இங்கே மரியாதை இருக்கிறது."

"சுவாமி!"

"என்ன?"

"போவதற்கு முன் ஏதாவது இன்ப அதிர்ச்சியைத் தந்து விட்டுப் போங்களேன்."

"மேல்சீயமங்கலத்திலிருந்து புறப்பட்டது முதல் இன்ப அதிர்ச்சிகளைக் கொடுத்துக் கொண்டு தானே வந்தேன்?"

"அதற்கெல்லாம் ஒரு முடிவு உண்டா சுவாமி? அளவு உண்டா சுவாமி? நேரகாலம் உண்டா சுவாமி?"

"இப்போது என்ன வேண்டும் உனக்கு?"

"ஏதாவது..."

"உன் பேச்சை நிறுத்த வேண்டும். அதுதான் சரி" என்று சொல்லி அவர் அவளது பேச்சை நிறுத்தச் செய்த விதம் அவளைக் கிறுகிறுக்க வைத்தது.

"காமப் பிசாசு" என்று அவளைச் செல்லமாகக் கடிந்து கொண்ட துறவி கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தார்.

"தழைக்காட்டின் பிரதான சமண விஹாரத்திற்குச் சென்றுவிட்டு வருகிறேன். இரவுக்கு ஆகாரமாக ஒருசில பழங்களை வைத்தால் போதும். சீடனைத் தொல்லைப் படுத்தாதீர்கள். கோபம் வந்தால் அவன் பூநாகத்தை எடுத்து வீசி விடுவான்" என்றார்.

"பூ நாகமா? பாம்பா?" என்று கேட்டான் சேவகன்.

"பாம்பல்ல. பூநாகம் என்னும் சிறிய பாம்வு வடிவில் இருக்கும் குறுவாள். அதில் விஷம் தடவப்பட்டு உறை போடப் பட்டிருக்கும். அதையெடுத்து வீசினால் உடலில் பாய்ந்து நஞ்சானது பரவி ஓரிரு கணங்களில் உயிர் போய் விடும். என்னைப் பாதுகாப்பதற்காக அவன் அக்குறுவாட்களை வைத்திருக்கிறான்.

தொல்லை கொடுக்காமல் இருங்கள்" என்று சொல்லி விட்டு வெளியேறினார் துறவி.

சேவகர்கள் உள்ளே போகவும் இல்லை. பவானியுடன் பேசவும் இல்லை.

இரவு முகிழ்த்துச் சிறிது நேரத்தில் சேனாதிபதி புவியரசன் வந்தான்.

"துறவி மட்டும் வெளியே சென்றிருக்கிறார் ஐயா. அவரைக் கண்காணிக்க நம்மவர் ஐவர் சென்றிருக்கிறார்கள். உள்ளே சீடன் மட்டும் தான் இருக்கிறான். எச்சரிக்கையுடன் இருங்கள். அவனுக்குக் கோபம் வந்தால் பூநாகம் என்கிற குறுவாளை எய்து கொன்று விடுவானாம். துறவி சொன்னார்" என்றான் சேவகன்.

"அப்படியா? நல்லது. நான் உள்ளே சென்று விசாரிக்கிறேன். அதற்கிடையில் துறவி வந்தால் அவரை உள்ளே அனுப்ப வேண்டாம். தகராறு செய்ய முற்பட்டால் கைது செய்து இங்கேயே வைத்திருங்கள்" என்று கூறிவிட்டு உள்ளே நுழைந்தான் சேனாதிபதி.

உள்ளே கட்டிலில் படுத்திருந்தாள் பவானி. கண்கள் அரைவாசி மூடியிருந்தன.

திடும்பென்ற பிரவேசித்த சேனாதிபதி "என்ன சீடரே! என்ன படுத்து விட்டீர்? துறவியார் எங்கே?" என்று கேட்டதும் அவசரம் அவசரமாக எழுந்த பவானி "யார் நீங்கள்? எதற்காக வந்தீர்கள்?" என்றாள் ஆடவன் குரலில்.

"நான் கங்கநாட்டு மகாசேனாதிபதி. பெயர் புவியரசன் வயது நாற்பது. கிரகஸ்தன். மனைவிகள் நான்கு. பிள்ளைகள் நான்கு. போதுமா? இன்னும் சொல்ல வேண்டுமா?" என்று சாவதானமாகக் கேட்டுவிட்டு ஆசனத்தில் அமர்ந்தான் சேனாதிபதி.

சேனாதிபதியை அவள் சிறிதும் எதிர்பார்க்காததால் வெலவெலத்துப் போன அவள் "குருநாதர் வெளியே சென்றிருக்கிறார்" என்றாள்.

"வெளியே சென்றிருக்கிறாரா? இரவு வரை நிஷ்டையில் அமர்ந்திருக்கப் போவதாகச் சொன்னாராமே?"

"சொல்லியிருக்கலாம். ஆனால் நிஷ்டையில் அமர்வதும் கலைவதும் அவரது விருப்பம். நான் எதுவும் கேட்க முடியாது."

"சரி. உன் சகோதரியைக் கூப்பிடு அவளை நான் பார்க்க வேண்டும்."

"சகோதரியா! எனக்கா? அப்படியாரும் இல்லை" என்றாள் பவானி லேசான நடுக்கத்துடன்.

"இங்கே பெண்குரல் கேட்டதாகச் சேவகர்கள் சொன்னார்களே?"

"இங்கே இருப்பது நாங்கள் இருவர் தான் ஐயா. வேறு யாரும் இல்லை. நீங்கள் வேண்டுமானால் சோதனை செய்து பாருங்கள்."

"ஒரு வேளை நீ பெண்குரலில் பேசினாயா?"

"இல்லை" என்றாள் பவானி ஆண்குரலில்.

"சேவகர்களின் பிரமையாக இருக்குமோ?"

"அப்படித்தான் இருக்கும்."

"இங்கே வா."

"எதற்கு?"

"உன்னை எனக்குப் பிடித்திருக்கிறது. மடியில் அமர்த்திக் கொள்ளலாம் போல் ஆசையாக இருக்கிறது."

"ஐயோ! அதெல்லாம் வேண்டாம் ஐயா."

"இது சேனாதிபதியின் கட்டளை. வா இப்படி" மிரட்டினான் சேனாதிபதி.

"இது என்ன சங்கடம்?" என்றெண்ணி நெளிந்தபடி அவனிடம் வந்தாள் பவானி.

"மடியில் உட்கார்" என்றான் சேனாதிபதி.

தன் குட்டு வெளிப்பட்டு விடும் என்பதை உணர்ந்தாலும் மறுக்க முடியாத நிலையில் மடியில் லேசாக அமர்ந்தாள்.

சேனாதிபதி அவளை அப்படியே கட்டிப்பிடித்து இறுக்கியபோது "சேனாதிபதி! என்னை விட்டு விடுங்கள்" என்று அதிர்ச்சியில் பெண் குரலில் அலறினாள்.

சேனாதிபதி விடவில்லை.

பல இடங்களில் தடவிப் பார்த்துவிட்டு அதன் பிறகே அவளை விடுவித்த அவன் "உன் பெயர் என்ன?" என்று கேட்டான்.

"பவானி" என்றாள் பவானி.

"எதற்காகச் சீடன் வேடம் போட்டாய்?"

"அவர் கூறினார் போட்டேன்."

"அவருக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்?"

"ஒரு சம்பந்தமும் இல்லை."

"ஒரு சம்பந்தமும் இல்லாமல் தான் அவரோடு வந்தாயா? ஒரு துறவியோடு ஒரு பெண் தனியாக வருவாளா? உண்மையைச் சொல்."

"அவருக்கு என்னைப் பிடிக்கும். அவ்வளவுதான்."

"எனக்கும் கூட உன்னைப் பிடித்திருக்கிறது. நான் அழைத்தால் என்னுடன் வந்து விடுவாயா?"

"அவர் மகாதுறவி. பெண்களை மதிப்பவர். ஆகவே தான் அவரோடு வந்தேன்."

"துறவிக்குப் பெண் துணை எதற்கு? அதுவும் நீ இளம் பெண்ணாக இருக்கிறாய்."

"ஐயா! மகாதுறவிகளுக்கு ஆண் பெண் என்ற வித்தியாசம் இல்லை. பெண்களிடம் கூட அவர்கள் சதையைப் பார்ப்பதில்லை. அவர்களை எலும்புக் கூடுகளாகத் தான் பார்க்கிறார்கள்."

"இதைச் சொன்னது யார்?"

"துறவியார் தான்"

"பேசாமல் எலும்புக் கூட்டையே அவர் அழைத்துச் செல்லலாமே?"

"அவை பணிவிடைகள் செய்யாது ஐயா."

"ஆக நீ துறவியாருக்குப் பணிமகளாக இருந்து பணிவிடைகள் செய்கிறாய். அதுவும் வெளியூர் செல்லும்போதும் செய்கிறாய். ஆனால் சீடன் வேடம் போட வேண்டிய அவசியம் என்ன?"

"துறவியோடு இளம்பெண் பகிரங்கமாகச் செல்ல முடியுமா சேனாதிபதி? தவறாக நினைக்க மாட்டார்களா?"

"துறவிகள் பெண்ணை அழைத்துச் செல்வது தவறு தான்."

"இதற்கு நான் பதில் கூற முடியாது ஐயா. அவர் எதையும் யோசித்து விட்டுத்தான் செய்வார்."

"நீங்கள் இருவம எங்கிருந்து வருகிறீர்கள்?"

"மேல் சித்தாமூரிலிருந்து."

"காஞ்சியிலிருந்து வருவதாகத் தானே துறவி சொன்னார்?"

சற்றே தடுமாறிய பவானி "காஞ்சியிலிருந்து மேல் சித்தாமூருக்கு வந்து அங்கிருந்து இங்கே வருகிறோம்."

"நீண்ட நெடிய தூரமாயிற்றே! இருவரும் எப்படி வந்தீர்கள்?"

"புரவியில் வந்தோம்" என்று சொல்வதற்கு நாக்கு தயாரானது. சட்டென்று அடக்கிக் கொண்ட அவள் "கால் நடையாக

வந்தோம். சில இடங்களில் மாட்டு வண்டிகளில் வந்தோம்" என்றாள்.

"காஞ்சியை விட்டு எப்போது புறப்பட்டீர்கள்?"

"சரியாக நினைவில்லை சேனாதிபதி. காஞ்சியிலிருந்து மேல்சித்தாமூருக்கு வந்து அங்கே சில நாட்கள் தங்கிவிட்டுப் பிறகு இங்கே வந்தோம்."

"சரி. அதையெல்லாம் விடு. நீங்கள் இருவரும் எதற்காக கங்கநாட்டிற்கு வந்தீர்கள்?"

"அது அவருக்குத் தான் தெரியும் ஐயா."

"அவர் எங்கள் மன்னரிடம் கூறிய எதையும் நாங்கள் நம்பத் தயாராக இல்லை. ஆகவேதான் கேட்கிறேன். உண்மையைச் சொல். எதற்காக இங்கே வந்தீர்கள்?"

"எனக்குத் தெரியாது ஐயா."

அடுத்து அதிரடியானக் காரியத்தைச் செய்தான் சேனாதிபதி.

"மயிலிடம் வேண்டிக் கொண்டிருந்தால் இறகைப் போடாது. பிடுங்கத்தான் வேண்டும்" என்று சொல்லியபடி அவளைத் தூக்கி கட்டிலில் போட்டான். சேவகர்களை அழைத்து கயிறுகளைக் கொண்டு வரும்படிச் சொன்னான். கயிறுகள் வந்ததும் அவளது இரு கைகளையும் இருபக்கமாக இழுத்துக் கட்டிலில் கட்டினான். கால்களை அகற்றி அவற்றையும் கட்டிலில் கட்டினான்.

சேவகர்களைப் பார்த்து "இரும்புத் தண்டுகளை நன்றாகக் காய்ச்சுங்கள். நான் மணியடிக்கும் போது கொண்டு வாருங்கள்" என்று சொல்லி அவர்களை அனுப்பி விட்டு அவளைப் பார்த்து "உளவாளி நாயே! நீ இதுவரை சொன்னது எல்லாம் கடைந்தெடுத்தப் பொய். உண்மையைச் சொல். நீ யார்? அந்தத் துறவி யார்? எதற்காக இங்கே வந்தீர்கள்? ம்" என்று மிரட்டினான்.

இப்படியொரு திருப்பம் வரும் என்று அவள் எதிர்பார்க்கவே இல்லை. கைகளும் கால்களும் விரித்துக் கட்டப்பட்ட நிலையில் தன்னால் செய்யக் கூடியது எதுவுமில்லை என்பதை உணர்ந்தாள். உடம்பெல்லாம் வலித்தது. மாரடைப்பு வந்தது போலிருந்தது. பேசவும் முடியவில்லை. உதடுகளை அசைத்தாள். பேச்சு வரவில்லை.

அவளது கன்னத்தில் பளாரென்று அறைந்தான் சேனாதிபதி.

அவளுக்குப் பேச்சு வந்தது.

"ஐயா. கட்டுகளை அவிழ்த்து விடுங்கள். இது பாவம்" என்றாள் நடுங்கும் குரலில்.

அவன் அவளது ஆடையைக் கொஞ்சம் கிழித்தான்.

"ஐயோ! ஐயோ!" என்று அலறினாள் அவள்.

"கத்துவதையும் புலம்பலையும் விடு. தொடர்ந்தால் உன் உடம்பில் ஒட்டுத் துணி கூட இருக்காது" என்று கர்ஜித்தான் சேனாதிபதி.

"ஐயா! எனக்கெதுவும் தெரியாது. துறவிக்குத் தான் தெரியும்" என்றாள் அச்சக் குரலில்.

"தேவையற்ற பேச்சுகளைப் பேசாதே.எதையாவது பேசி காலம் கடத்த நினைத்தால் உன்னை நிர்வாணப்படுத்தி கதறக் கதறக் கற்பழிப்பேன். இத் தழைக்காடு கங்கர்களின் தலைநகரமல்ல. தலை நரகம். உன்னைப் போன்ற உளவாளிகளுக்கு இங்கே உய்வு கிடையாது. நீ பிடிவாதம் பிடித்தால் காய்ச்சிய இரும்புத் தண்டுகள் உன் அல்குலில் பாய்ச்சப்படும். காலம் தாழ்த்தாமல் உண்மையைச் சொல்" என்று காலனைப் போலவே பயங்கரமாகப் பேசினான் சேனாதிபதி.

பவானிக்குத் தன் எதிர்வீட்டுத் தோழி சங்கவியின் ஞாபகம் வந்தது. அவளும் தன்னைப் போலவே ராஜகுருவிடம் சிக்கி உண்மையைச் சொல்ல மறுத்தோ அல்லது உண்மையைச் சொல்லியோ சித்திரவதைக்கு ஆளாகியிருப்பாள் என்று தோன்றியது.

கற்பு போவது பற்றிய கவலை பவானிக்கு இல்லை.ஏனென்றால் அது போய்ப் பலகாலம் ஆகிவிட்டது.துறவியோடு காலாகாலமும் காம வெள்ளத்தில் நீந்தத்தான் தயாராக இருந்தாளே தவிர சேனாதிபதியின் சித்திரவதைகளுக்குத் தயாராக இல்லை. உயிரைக் காத்துக் கொள்வதைத் தவிர வேறு எதுவும் அவளுக்குப் பிரதானமாக இல்லை.

"கட்டுகளை அவிழுங்கள் ஐயா. உண்மையைச் சொல்கிறேன்" என்றாள்.

"முடியாது. முதலில் உண்மையைச் சொல். அது உண்மைதானா என்று முடிவு செய்து பிறகு தான் கட்டுக்களை அவிழ்ப்பேன்" என்றாள் சேனாதிபதி.

சித்திரவதையைத் தாங்க முடியவில்லை.

உண்மையைச் சொன்னாள் பவானி.

★★★



பவானியும் சேனாதிபதியும்

சேவகர்களை அழைத்துக் கட்டுகளை அவிழ்த்து விடச் சொன்ன சேனாதிபதி பணிப்பெண்களை அழைத்து பவானியை நீராட்டிச் சீராட்டி, ஒப்பனைகளையும் அலங்காரங்களையும் செய்து அழைத்து வரச் சொன்னான். அந்த மாளிகையைச் சாத்திப் பூட்டச் சொன்னான். துறவி துலாபாரரைத் தேடிப் பிடித்து வரவும் கட்டளையிட்டான்.

உண்மையைச் சொன்னதால் கட்டுகள் அவிழ்க்கப் பட்டாலும் தன்னைச் சிங்காரிப்பது தன் தலையைச் சீவுவதற் காகத் தான் என்று கருதினாள் பவானி.

அவளுக்கு அந்த ஒரு கணத்தில் வாழ்க்கை கசந்தது.

திருப்பருத்திக் குன்றத்தில் சுதந்திரக் கணிகையாக வாழ்ந்த நாட்களை எண்ணிப் பார்த்தாள். தனது சந்தோஷமான வாழ்க்கை என்றால் அது அந்த வாழ்க்கை தான் என்று கருதினாள்.

துறவி துலாபாரர் நுழைந்தபோது அந்தச் சந்தோஷம் அதிகமாகி விட்டதையும் பிறகு அந்தச் சந்தோஷம் ஒரு நோயாக மாறிவிட்டதையும், அதன் காரணமாகவே துறவியைப் பிரிய முடியாமல் அவரோடு பயணம் செய்ய வேண்டி வந்ததையும் அந்தப் பயணமே தன்னை அவலநிலைக்குக் கொண்டு வந்து தள்ளிவிட்டதையும் உணர்ந்தாள்.

எங்கோ பிறந்து வளர்ந்து சந்தோஷப்பட்ட தனது உயிர் கங்கநாட்டில் போகப் போவதை எண்ணிய போது அவளது கண்கள் கலங்கின.

துள்ளித் திரிந்த காலம் போய் துயரப்பட வேண்டிய காலம் வந்து விட்டதை அவளால் ஜீரணிக்க முடியவில்லை.

இந்தத் துறவி ஒரு ஆண். அதோடு கள்ளத் துறவி. எந்த வேடத்தையும் எப்போது வேண்டுமானாலும் போட்டு நடிக்கக் கூடிய திறமை படைத்தவர். எந்த ஆபத்திலிருந்தும் தப்பிக்

கூடிவயவர்.

ஆனால் பெண்ணாகிய தனக்கு அப்படியெல்லாம் முடியாது. தன்னிடம் உள்ள அங்கங்களை ஆயுதமாக்கி ஆடவர்களைக் காமத்தில் ஆழ்த்தும் ஆற்றல் மட்டுமே அவளிடம் இருந்தது.

அந்த ஆற்றல் கூடச் சேனாதிபதி புவியரசனிடம் சிக்கிய பின் தோற்று விட்டதையும் இனி கூற்றுவன் வாசலுக்குப் போக வேண்டியது தான் பாக்கி என்று நினைத்தாள்.

துறவியைப் பற்றி அவள் நினைக்கவில்லை. அவர் கூடத் தன்னை நினைக்கமாட்டார் என்றும் நிலைமை தெரிந்தபின் எங்காவது தப்பி ஓடிவிடுவார் என்றும் நினைத்தாள்.

இதற்கிடையில் எல்லாம் நடந்தன. கல்யாணப் பெண்ணைப் போலச் சிங்காரிக்கப்பட்டாள். கடைசியாக கண்கள் கட்டப் பட்டன.

"என்னை எங்கே அழைத்துச் செல்லப் போகிறீர்கள்?" என்று கேட்டாள்.

"சேனாதிபதியார் சொன்ன இடத்திற்கு."

"அது என்ன இடம்?"

"வெட்டுப்பாறை மேடு."

"அங்கே என்னை வெட்டி விடுவார்களா?"

"ஆமாம்."

"சாகப் போகும் எனக்கேன் அலங்காரம்?"

"நீண்டகாலச் சம்பிரதாயம்."

"நான் என்ன தவறு செய்தேன்?"

"எங்களுக்குத் தெரியாது."

"விசாரணை எதுவும் கிடையாதா?"

"விசாரணை செய்வதாக இருந்தால் வெட்டுப் பாறைக்கு அனுப்பமாட்டார்கள். வெட்டுப் பாறைக்கு அனுப்புகிறார்கள் என்றால் விசாரணை இல்லை என்று அர்த்தம்."

பவானி அதற்கு மேல் எதுவும் பேசவில்லை.

உண்மையிலேயே அவள் எந்தத் தவறும் செய்யவில்லை. துறவியோடு இருந்தாள். அவ்வளவுதான். மற்றபடி திட்டங்களைத் தீட்டிச் செயல்பட்டது துறவிதான்.

ஆகவே தவறு செய்யாத தன்னைக் காப்பாற்றுமாறு

வர்த்தமான தீர்த்தங்கரரை வேண்டிக் கொண்டாள்.

பணிப்பெண்கள் அவளைப் பல்லக்கில் ஏற்றினார்கள்.

சிறிது நேரத்தில் பல்லக்கிலிருந்து இறக்கப் பட்டாள்.

"சீக்கிரம். வெட்டுப்பாறைக்குக் கொண்டு செல்லுங்கள். இரவு நேரத்தில் வெட்டப் படக்கூடாது என்பது விதி" - சேனாதிபதியின் குரல் உறுதியாக ஒலித்தது.

"இதுதான் முடிவா? நாளை காலைப் பொழுது விடிவதை நான் காண மாட்டேனா?" என்று நினைத்தாள் பவானி. குடல் எழுந்து தொண்டைக்கு வருவது போல் இருந்தது. மயங்கி விழுந்தாள்.

மயக்கம் தெளிந்த போது மிருதுவான மெத்தையில் கிடப்பதை உணர்ந்தாள். வெட்டுப் பாறையில் சடலமாகக் கிடக்க வேண்டிய நான் எப்படி மெத்தையில் வந்திருக்கிறோம் என்பது புரியவில்லை.

அணு அணுவாகச் சித்திரவதை எண்ணங்களால் செத்துப் போய்க் கொண்டிருந்த அவள் மெதுமெதுவாய் சந்தோஷ எண்ணங்களால் புனர் ஜென்மம் எடுத்துக் கொண்டிருந்தாள்.

தன்னை ஏன் வெட்டவில்லை என்று ஒரு கணம் நினைத்த அவள் அதை ஏன் எண்ண வேண்டும் என்று நினைத்தாள். இனிமேல் தண்டனை என்பது இருக்காது என்று தோன்றியது.

அந்த நிலையில் உள்ளே நுழைந்தான் சேனாதிபதி.

"உனக்கான தண்டனையை நாளைக்கு மாற்றி விட்டேன்" என்றான்.

மீண்டும் இடியா?

"ஏன் ஐயா?" என்று கேட்டாள்.

"நீ மயங்கி விழுந்து விட்டாய். மன உறுதியோடு இருக்கும் போதுதான் வெட்டுப் பாறைக்கு அனுப்ப வேண்டும். அதோடு இரவு நேரத்தில் வெட்டுப் பாறைக்குக் கொண்டு போகக் கூடாது. அதோடு..." என்று சொல்லி நிறுத்தினான் சேனாதிபதி.

"வேறென்ன சேனாதிபதியாரே?" என்று கேட்டாள் பவானி.

"வெட்டுப் பாறையில் வெட்டுப்பட்டுத் தலைவேறு முண்டம் வேறு என்று ஆகப் போகிறவள் நீ. நீ மிகவும் அழகாக இருக்கிறாய். வெட்டுப் பாறைக்கு அனுப்புவதற்கு முன் உன்னைச் சுவைத்தால் என்ன என்பதால் தான் தண்டனையை நாளைக்குத் தள்ளிப் போட்டேன்" என்றான் சேனாதிபதி.

துறவியோடு உறவு வைத்துக் கொண்டதாக அவள்

சேனாதிபதியிடம் கூறவில்லை என்றாலும் தான் ஒரு கணிகை என்பதைக் கூறியிருந்தாள் பவானி. தற்போது தன்னைச் சுவைக்கப் போவதாகச் சேனாதிபதி கூறியபோது இது' அநியாயம், அக்கிரமம், அதர்மம் என்று கூவுவதற்கு அவள் தயாராக இல்லை.

மாறாக-

"ஐயா! தாங்கள் சேனாதிபதி. நானோ கணிகை" என்றாள்.

"அதனால் என்ன? நாங்கள் போரின் போது பல பெண்களைப் பிடிப்போம். அவள் கன்னிப் பெண்ணா, கணிகையா என்று பார்ப்பதில்லை. இஷ்டப்படிச் சுவைப்போம். இது எங்களுக்கு வாடிக்கை. அதோடு..."

"அதோடு என்ன ஐயா?"

"நான் அனுபவித்த அழகிகளிலேயே நீ தான் பேரழகி. உன் அங்கங்கள் அனைத்துமே ரதி தேவிக்கு உரிய அங்கங்கள். உன்னைப் படைத்த பிரமன் தான் சந்தோஷமாக இருக்கும் போது உன்னைப் படைத்திருக்க வேண்டும். ஆடை, அலங்காரம், ஒப்பனை ஆகியவற்றில் நீ எவ்வளவு அழகாக இருக்கிறாய் தெரியுமா? ரதி தேவியே வந்தால் கூட உன்னை ரசிப்பாள். மன்மதனிடம் அனுப்பி வைப்பாள்."

"என் அழகு அப்படிப்பட்டது என்று நான் நினைத்ததில்லை சேனாதிபதியாரே?"

"மலரின் அழகு மலருக்கத் தெரியாது. வண்டுகளுக்குத் தான் தெரியும். பவானி! நான் அழகிகளைத் தேடிச் செல்பவன். ஆனால் இப்போது தான் உண்மையான அழகியைக் காண்கிறேன். இணையில்லாத அழகியைக் காண்கிறேன். இயற்கையான அழகியைக் காண்கிறேன். நீ அழகுகளின் இலக்கணம். நீ அழகுகளின் இமயம். நீ அழகுகளின் பேரடையாளம். உன்னைக் கண்டது என் அதிருஷ்டம். உன்னைக் கண்டது என் பாக்கியம். உன்னைக் கண்டது என் வாழ்வின் ஆனந்தம்."

"இப்படிச் சொல்கிற தாங்கள் நாளைக்கு என்னை வெட்டுப் பாறைக்கு அனுப்பிவிட்டால் எல்லாம் போய் விடுமே ஐயா?"

"தண்டனை தண்டனை தான். அதை மாற்றவே முடியாது."

"நான் என்ன தவறு செய்தேன்?"

"போயும் போயும் காவி உடையும் மொட்டைத் தலையும் கொண்ட துறவியுடன் போய் சேர்ந்து கொண்டாயே! அது தான் பெரிய தவறு. என்னால் சகித்துக் கொள்ளவே முடியாது. உனக்கென்ன வாலிபர்கள் கிடைக்காமலா போய் விட்டார்கள்?

கட்டிளம் காளைகள் கிடைக்காமலா போய் விட்டார்கள்? அரசச குமாரர்களே உன்னைக் கண்டு அசந்து போகும் அழகிற்குச் சொந்தக்காரியான நீ மொட்டைத் தலையனும் காமமென்றால் என்னவென்று அறியாதவனுமான சமண சன்னியாசி தானா உனக்குக் கிடைத்தான்! நாடி நரம்புகள் தளர்ந்து போன வயதானவன் தானா உனக்குக் கிடைத்தான்? சுட்டுப் போட்டாலும் உணர்ச்சிகளை எழுப்ப முடியாத இயலாதவன் தானா உனக்குக் கிடைத்தான்? உன் அழகை நீ அவமானப்படுத்தி விட்டாய் பவானி. உன் அழகை நீ தவறாகப் பயன்படுத்திவிட்டாய் பவானி. உன் அழகு உள்ளுக்குள் அழுது கொண்டிருக்கும்."

"துறவியின் காமத்தைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? அவர் அறியாத காமக் கலை உலகில் கிடையாது. ஊக்க மருந்து உண்டு ஒரே நேரத்தில் இரண்டு இளம் பெண்களைக் கலங்கடித்தவர் அவர்" என்று உள்ளுக்குள் சொல்லிச் சிரித்துக் கொண்ட பவானி "இதற்காகவா ஐயா எனக்குத் தண்டனை?" என்றாள்.

"ஆமாம்.உனக்குமட்டுமல்ல.அந்தவீணாய்ப்போன துறவிக்கும் இதே தண்டனை தான். இந் நேரம் பிடிபட்டிருப்பான். நாளை காலை நீங்கள் இருவரும் அடுத்தடுத்த வெட்டுப் பாறைகளில் வெட்டப்படுவீர்கள். அதுவும் அந்தத் துறவியின் உடல் துண்டு துண்டாக வெட்டப்படும். துண்டுகள் தூளாக்கப்படும். அவனது எலும்புகூட மிஞ்சாது. எப்படிப்பட்ட பேராசைப் பிசாசு அவன்? அவனுக்கு எதற்குப் பணிப்பெண் அதுவும் இத்தனை அழகாக? அழகிகள் பணிவிடை செய்தால்தான் அவனுக்கு இனிப்பாக இருக்குமா? அதுவும் அவன் செல்லுமிடமெல்லாம் செல்ல வேண்டுமா நீ? பவானி! நாளைக்கு நீ பார்க்கத்தான் போகிறாய். அந்தத் துறவியை நானே துண்டு துண்டாக வெட்டுவேன். பட்டாக் கத்தியை கூராக்கும்படிச் சேவகர்களுக்கு உத்தர விட்டிருக்கிறேன்" என்றான் சேனாதிபதி.

பொறாமை காரணமாகத் துறவியின்மீது சேனாதிபதி ஆத்திரமாக இருப்பதாக நினைத்தாள் பவானி.

சேனாதிபதியே பேச்சைத் தொடர்ந்து "அந்தத் துறவி எங்கள் மன்னரிடம் சொன்ன அத்தனை விஷயங்களும் பொய். புரட்டு. அவன் துறவியாக இருப்பதற்கு அருகதையற்றவன். அவன் துறவியே அல்ல. இந்த லட்சணத்தில் மதத்தை வளர்க்க நிதி வேண்டுமாம். நாளைக்கு அவனுக்கு இரண்டாயிரம் பொன் தருவதாகச் சொன்ன மன்னர் தான் அவனை வெட்டுப் பாறையில்

வெட்டிப் போட எனக்கு அதிகாரம் அளித்திருக்கிறார். மோசடியும் பேராசையும் நிறைந்த நிர்மூடனான அவனுக்கு நாளைக்கு நிறைவு நாள். வாழ்க்கை நிறைவடையும் நாள்" என்று சொன்ன சேனாதிபதி "பவானி! நாம் இருவரும் பேசிப் பேசியே இரவுப் பொழுதைக் கழித்துக் கொண்டிருக்கிறோம். அதுவும் பேரழகியான நீ இரவுப் பொழுதைப் பேசிக் கழிக்கக் கூடாது. நான் கூசிப் போகும் அளவிற்குக் கூடி மகிழ வேண்டும். எனது ஆசைகளையெல்லாம் தீர்த்துக் கொள்ளப்போகும் இரவு இது. ஒத்துழைப்பாய் அல்லவா?" என்று கேட்டான்.

அவளுக்குத் துறவியின் கதி அவ்வளவு தான் என்று தோன்றியது. "அவரைச் சந்திக்கும் வாய்ப்போ, பேசிப் பழகும் வாய்ப்போ, கூடிக் களிக்கும் வாய்ப்போ தனக்குக் கிடைக்கப் போவதில்லை. அவரைக் கண்டுபிடிக்காமல் கங்க வீரர்கள் விட மாட்டார்கள். அவர் கதை முடிந்தது. எனவே அவரைப் பற்றி நினைக்கவோ பேசவோ எதுவுமில்லை. தனக்கு முன்னே இருப்பது கங்கநாட்டுச் சேனாதிபதி யல்ல. தன் வாழ்வு. தன் எதிர்காலம். அவன் மனது வைத்தால்தன் உயிரைக் காப்பாற்றலாம். காமத்தில் அவனைக் கதி கலங்க வைத்தால் அவன் தன்னை உயிரோடு விட்டாலும் விடுவான்" என்றெல்லாம் கணிகைக்கே உரிய விதத்தில் கணக்குப் போட்ட பவானி "தங்கள் விருப்பம் எதுவோ அதுவே என் விருப்பம் ஐயா" என்றாள் உருக்கமாக.

"என் ஆசைகள் அபாரமானவை. அட்டகாசமானவை. அளவற்றவை. முதலில் உன் அழகான உதடுகளுக்குள் சொர்க்கத்தைப் பார்க்கப் போகிறேன்" என்றான் சேனாதிபதி.

துறவி தன்னை விட்டுப் போவதற்கு முன் எதில் ஈடுபட்டாரோ அதையே சேனாதிபதியும் விரும்பியதை அறிந்த பவானி அதற்கு முழு ஒத்துழைப்பு அளித்ததால் பரமானந்தத்தில் மூழ்கினான் சேனாதிபதி. முதல் கலையிலேயே முழு இன்பம் ஆட்கொண்டதால் அதிலேயே அவன் தொடர்ந்து ஈடுபட்டான்.

"போதும் சேனாதிபதி" என்றாள் பவானி.

"போதாது பவானி" என்றான் சேனாதிபதி.

அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

ஒரே விஷயத்தை இரவு முழுவதுமாகச் சேனாதிபதி விதவிதமாக நடத்தியதைக் கண்ட அவள் "இவன் துறவியின் மறுபிறவியாக இருப்பானோ?" என்று நினைத்தாள்.

சேனாதிபதியோ அவளது அழகில் தன்னைப் பூரணமாகப் பறிகொடுத்திருந்ததால் அந்த அழகை அனுபவிப்பதில் பத்து

சொர்க்கங்களுக்கு இணையான பேரானந்தம் கிடைத்து விட்டதாகக் கருதினான்.

பொழுது விடிந்தபோது ஏன் விடிந்தது என்றிருந்தது அவனுக்கு.

ஆலோசனை அவைக்குப் போக வேண்டியிருந்ததால் அவளது உதடுகளை விடுவித்த சேனாதிபதி "பவானி! இன்று முதல் நீதான் என் அந்தப்புரத்தின் பிரதான ராணி. இது போன்ற சொர்க்கத்தை நீ எனக்கு அடுத்தடுத்துக் கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும்" என்று சொல்லிவிட்டு அகன்றான்.

பவானியின் மகிழ்ச்சிக்கு எல்லை இல்லாமல் போயிற்று.

★

அரசவையில் மன்னன் கேட்டான்!

"துறவி கிடைத்தாரா?"

"இல்லை மகாராஜா."

"யாருக்குக் கிடைக்கிறாரோ அவரே அத்துறவியைக் கொன்று சடலத்தைக் கொண்டு வரவேண்டும். ஆயிரம் பொன் பரிசு. அறிவித்து விடுங்கள்."

"ஆகட்டும் மகாராஜா."

"துறவி அப்பட்டமான பொய்யைக் கூறியிருப்பது நிரூபணம் ஆகிவிட்டதால் நாம் நமக்கு வந்த ஓலையில் வந்த போர்த்திட்டப்படிச் செயல்படுவோம். நாளைக்கே படை புறப்படலாம்."

"நாளைக்கு அஷ்டமி" என்றார் நிமித்தகர்.

"நாளும் கோளும் கோழைகளுக்கு" என்று சொல்லி மறுநாளே படையை நகர்த்தினான் கங்கமன்னன்.

ஐந்து நாட்கள் கடந்தன.

கங்கமன்னன் எதிர்பார்த்தபடி போர் நடக்கவில்லை.

எதிர்பாராத விதமாக நடந்தது போர்.

பிரமித்தான் கங்கமன்னன்.

★★★



கங்கநாட்டுப் போர்

பல்லவர் படை கங்கநாட்டுத் தலைநகரான தழைக்காட்டை நோக்கி வரப்போவதில்லை என்றும் தழைக்காட்டின் வட கிழக்கே இருக்கும் துணைத் தலைநகரமான குவலாலபுரத்திற்கு வரப் போவதாகவும், அதைப் பிடித்துக்கொண்டு கங்கநாட்டுப் படைகளை ஈர்த்துப் போரிடப் போவதாகவும் ஓலையில் குறிப்பிட்டிருந்தான் காஞ்சியில் இருந்த மர்ம மனிதன்.

அதேசமயம் பல்லவர் படைகளுக்கு அவ்வாறு இடம் கொடுக்காமல் அவர்கள் அங்கு வருவதற்கு முன்பாகவே கங்கர்களின் பிரதானப் படை குவலால புரத்திற்குச் சென்று பெரும் பலத்தோடு இருக்க வேண்டும் என்றும் பல்லவர் படை குவலாலபுரத்தை நோக்கி வரும்போது அதை முன்னும் பின்னும் தாக்கினால் எதிரிகள் நாசமடைவர் என்றும் ஓலையில் குறிப்பிடப் பட்டிருந்தது.

அத்திட்டம் சரியாகவும் சமயோசிதமாகவும் இருந்ததால் கங்கமன்னன் தனது பிரதானப் படையைச் சேனாதிபதியின் தலைமையின் கீழ் குவலாலபுரத்திற்கு அனுப்பினான். பின்னாலேயே மற்றொரு பிரிவை கங்கமன்னன் நடத்திச் சென்றான்.

அந்தப் பிரிவில் அவனது தலைமையில் ஐநூறு யானைகளும் போரமைச்சரின் தலைமையில் பத்தாயிரம் புரவிகளும் இருந்தன.

தழைக்காட்டைக் காக்க ஐந்தாயிரம் வீரர்கள் கோட்டைத் தலைவன் அதிரசன் வசம் இருந்தார்கள்.

எதிர்பார்த்தபடி பல்லவர் படை நந்திவர்மனின் தலைமையில் குவலாலபுரத்திற்குச் செல்லும் மார்க்கத்தில் வந்து விட்டதை அறிந்தான் கங்கமன்னன். அந்தப் படைகளைத் தாக்கும்படி குவலாலபுரத்தில் இருந்த சேனாதிபதிக்குத் தகவல் அனுப்பி விட்டுப் பல்லவர் படைகளைப் பின்புறத்தில் தாக்க கங்கமன்னனும் போரமைச்சரும் விரைந்தார்கள்.

ஆனால் அதற்குப்பின் ஓலைச் செய்திப்படி சம்பவங்கள் நடக்கவில்லை. குவலாலபுரத்தை நோக்கி வந்தப் பல்லவர் படை இரண்டாகப் பிரிந்தது. ஒரு பிரிவு குவலாலபுரத்தை நோக்கிச் சென்றது. அதற்குப் பல்லவடி அரையர் தலைமை வகித்துச் சென்றார். மற்றொரு பிரிவு நந்திவர்மனின் தலைமையின் கீழ் கங்கமன்னனை நோக்கி நகர்ந்தது. பல்லவர் படையை முன்னும் பின்னும் தாக்கி அழித்து விடலாம் என்று நினைத்திருந்த கங்கவர்மனுக்குத் தனது படை பல்லவரது படைப் பிரிவுகளால் தாக்கப்படுவது எதிர்பாராததாக இருந்தது.

இருப்பினும் யோசிப்பதற்கு அவகாசம் இல்லாததால் போர் முரசுகளை முழங்கச் செய்தான் கங்க மன்னன். குவலாலபுரத்திலிருந்து வெளிப்பட்ட சேனாதிபதியின் தலைமையிலான பிரதானப் படை பல்லவடி அரையரின் தலைமையிலான படையுடன் மோதின. நந்திவர்மனின் யானைப் படை கங்கமன்னனின் யானைப்படையோடு மோதியது. போரமைச்சரின் புரவிப் படை பல்லவச் சிற்றரசனான சுவரன் மாறனின் புரவி படையோடு மோதியது.

யானைகள் முகில்களைப் போல இருதரப்பிலும் மோதின. பல்லவ மன்னனும் கங்க மன்னனும் யானைப் போரில் வல்லவர்களாதலால் யானைகளைத் திறம்பட நடத்திப் போரிட்டார்கள்.

கங்கமன்னனுக்குக் கஜசாஸ்திரம் தெரிந்திருந்ததால் அவற்றுக்கு மூர்க்கத்தனத்தை உண்டாக்கும் கலை தெரிந்திருந்தது. எனவே அதற்கான சங்கேத ஒலியை அவன் எழுப்பியதும் அவனது யானைகள் மதம்பிடித்த யானைகளாய் மாறின. சுழலும் யந்திரங்களைப் போல் செயல்பட்டு எதிர்த்தரப்பில் இருந்த யானைப் பாகர்களையும் அவற்றின் மீதிருந்த வீரர்களையும் துதிக்கையால் தூக்கி வீசின. எதிரி யானைகளின் நெற்றியில் மோதி அவற்றைப் பின்வாங்கவும் செய்தன. அதைக் கவனித்த நந்திவர்மன் கொம்புகளை ஊதி யானைகளைப் பின்வாங்கச் செய்தான். இருபுறங்களிலும் விரியும்படிச் செய்தான்.

அச்சமயத்தில் பக்கவாட்டுப் பகுதிகளில் முரசங்கள் அதிர்ந்தன. அதையடுத்து இருபுறங்களில் இருந்தும் இரு பல்லவர் படைப் பிரிவுகள் முன்னேறி வந்தன. அவற்றை உபதளபதிகள் தலைமையேற்று வந்தார்கள்.

அவர்கள் காலட்படைகளாக இருந்ததால் கங்கமன்னனின் யானைகள் மீதும் புரவிகள் மீதும் அம்புகளை எய்ததால் கங்கர் படை கலகலத்தது.

அதே சமயம் குவலாலபுரத்திலும் இதே போல் இரு பல்லவ படைப் பிரிவுகள் காடக முத்தரையர் தலைமையிலும் உபதலைவன் தலைமையிலும் முரசொலித்து வந்து பக்கங்களில் தாக்கியபடியால் சேனாதிபதியின் படை திணறியது.

இப்படி கங்கர் படை இரு இடங்களிலும் திணறியதால் இக்கெட்டான சூழ்நிலை நிலவியது. அப்போது போரமைச்சர் "மகாராஜா! நாம் சற்றுக் கிழக்கே பின் வாங்கி மானபுரத்திற்குச் சென்றால் அங்கே மலைக்குன்றுகள் உள்ளன. அவற்றை மறைப்புகளாகக் கொண்டு எதிரிகளை வீழ்த்தலாம்" என்றான்.

கங்க மன்னனுக்கு அது சரியென்று படவே போரிட்டபடியே நகர்ந்தான் மானபுரத்தை நோக்கி. ஆனால் மானபுரத்திற்குச் சென்ற போது அங்கே பாணநாட்டு அரசன் ஜெயந்தி வர்மன் படைகளோடு தயாராக இருந்ததால் போரமைச்சரின் கனவு தகர்ந்தது.

மானபுரத்திற்கு வந்ததுமே வரவேற்பது போல் ஜெயந்தி வர்மனின் படை கங்கர் படையை உக்கிரமாகத் தாக்கியது. அதோடு நந்திவர்மனின் படையும் உபதளபதிகளின் படைகளும் மானபுரத்திற்கு வந்தபடியால் மானபுரம் குருஷேத்திரம் ஆயிற்று.

இனி நேரடிப் போருக்கு மட்டுமே இடம் என்பதை உணர்ந்த கங்கவர்மன் தீவிர தாக்குதலுக்கான கொம்பை ஊதியதால் சொடுமையான யுத்தம் துவங்கியது. ஒருவரையொருவர் வெட்டி வீழ்த்துவது முக்கியத்துவம் பெற்றது. பெருங் கூச்சலோடு வீரர்கள் போரிட்டார்கள்.

நந்திவர்மன் தனது யானையைக் கங்க மன்னனுக்கு முன்னால் செலுத்தச் சொன்னான். எதிரிகள் இருவரும் நேருக்கு நேர் சந்தித்துக் கொண்டார்கள். இருவரும் கதைகளாலும், வாட்களாலும் மாறி மாறிப் போரிட்டார்கள். கங்க வர்மன் தான் அமர்ந்திருந்த பட்டத்து யானையான பட்டவர்த்தனத்தைத் தூண்டி நந்திவர்மனை வீழ்த்த முயன்றான்.

அவன் யானையைத் தூண்டிய போதே எச்சரிக்கை அடைந்த நந்திவர்மன் கதாயுதத்தால் யானையின் தும்பிக்கையின் மீது ஓங்கி அடிக்கவே அது வலியால் பேரொலி எழுப்பிப் பிளிறியது. அதே நேரத்தில் போருக்கான உண்மைக் காரணத்தைக் கங்கமன்னனின் மார்பிலே கண்ட நந்திவர்மன் கதையைப் போட்டுவிட்டு ஈட்டியை எடுத்து கங்கமன்னனின் மார்பில் ஒளிவீசிக் கொண்டிருந்த உக்ரோதயம் என்ற பதக்கத்தைப் பற்றி இழுத்தான். அது தன் கைக்கு வந்ததும் போர் நிறுத்தத் தாரைகளை

ஊதுவதற்குச் சமிக்ஞை செய்ததும் தாரைகள் ஆங்காங்கே ஊதப்பட்டன. எதிரிப் படைகள் தனித்தனியாகப் பிரிந்தன. பற்பல போர்க்காயங்களுடன் யானை மீது அமர்ந்திருந்த கங்கமன்னன் தனது படையின் நிலைமையைக் கண்டான். எங்குப் பார்த்தாலும் பல்லவரது பாம்புக் கொடிகள் தான் பறந்தன. கங்கமன்னனின் கருடக் கொடிகளைக் காணவில்லை. போரில் தான் தோற்றுப் போனதை உணர்ந்தான்.*

இருப்பினும் நந்திவர்மனைப் பார்த்து "எதற்காகப் போரை நிறுத்தினீர்கள்? என்னால் இன்னமும் போர் செய்ய முடியும்" என்றான்.

"போருக்கான காரணம் நிறைவேறிவிட்ட பிறகு ஒரு கணம் கூடப் போர் தொடரக் கூடாது" என்றான் நந்திவர்மன்.

"காரணம் நிறைவேறிவிட்டதா?" வியப்புடன் கேட்டான் கங்க மன்னன்.

"உங்கள் மார்பில் அலங்கரித்ததே உக்ரோதயம் என்னும் பதக்கம் - அது எங்கள் மாமன்னர் பரமேஸ்வர வர்மருடையது. இதே கங்கநாட்டுப் போரில் அப்போதைய கங்கமன்னரான பூவிக்கிரமர் கைப்பற்றினார். அதை மீண்டும் கைப்பற்றுவதற்காகத் தான் இந்தப் போர். கைப்பற்றிவிட்டேன். போரை நிறுத்தி விட்டேன்."

"உக்ரோதயத்தை நீங்கள் கேட்டிருந்தால் தந்திருப்பேனே?"

"போரின் மூலம் இழந்ததைப் போரின் மூலம் பெறுவதே சிறப்பு. அது நடந்து விட்டது. அதற்கு மேலும் போரிட விரும்பினால் அதற்கு நான் தயார்."

தொடர்ந்து போரிட்டால் இருக்கும் வீரர்களையும் இழக்கத்தான் நேரிடும் என்பது கங்க மன்னனுக்கு சந்தேகமில்லாமல் புரிந்தது. பல்லவரது படை எங்கு பார்த்தாலும் முளைத்து வருவது அவனது மனஉறுதியைக் குலைத்தது. மேலும் போரைத் தொடர்ந்தால் தானும் வீரமரணம் அடைவது உறுதி என்பதை உணர்ந்த அவன் தேவையில்லாமல் உயிரை இழக்க விரும்பவில்லை. வீரர்களையும் காவு கொடுக்க விரும்பவில்லை.

எனவே பல்லவ மன்னனிடம் தனது தோல்வியை ஒப்புக் கொண்டான் கங்கமன்னன். அது அந்தப் போர்களத்தின் எல்லா பகுதிகளிலும் அறிவிக்கப்பட்டது. நந்திவர்மன் அங்கேயே இருவருக்கும் கூடாரங்களை அமைக்க உத்தரவிட்டான்.

---

* பக்கம் 81 தமிழ்நாட்டு வரலாறு (பல்லவர் - பாண்டியர்காலம்) தமிழ் வளர்ச்சித்துறை வெளியீடு.

தனக்காக அமைக்கப்பட்ட கூடாரத்தில் கங்கமன்னன் அமர்ந்ததும் வந்தது முதல் செய்தி.

குவலாலபுரத்தைப் பல்லவர்கள் கைப்பற்றி விட்டார்கள் என்றும் அங்கே கங்கர் படை படுதோல்வி அடைந்துவிட்டது என்றும் சேனாதிபதி புவியரசன் வீரமரணம் அடைந்து விட்டான் என்றும் சொன்னான் ஒற்றன்.

கங்கமன்னன் அவனிடம் எதுவும் கேட்கவில்லை.

அன்று மாலை தழைக்காட்டிலிருந்து வந்தான் ஒற்றன்.

"தழைக்காட்டைப் பல்லவர் படை பிடித்துவிட்டது மகாராஜா" என்றான்.

"எப்படி?" என்று கேட்டான் கங்கமன்னன்.

"தாங்கள் படையுடன் புறப்பட்ட அன்றே அது நடந்து விட்டது" என்றான் ஒற்றன்.

"அதுதான் எப்படி நடந்தது?"

"தழைக்காட்டைச் சுற்றி வடக்கு, கிழக்கு, தெற்கு ஆகிய மூன்று திசைகளிலும் காவிரி ஓடுவதால் அது தழைக்காட்டுக்குப் பாதுகாப்பாக இருக்கும் என்றும் அங்கே எதிரிகள் வரமாட்டார்கள் என்றும் நினைத்தீர்கள். ஆனால் எதிரிகள் வந்தார்கள். முப்புறங்களிலும் முறையே சுவரன் மாற முத்தரையன், வேளிர் தலைவனான பூதிவிக்கிரம கேசரி மற்றும் உபதளபதி ஆகியோர் படையோடு வந்து காவிரியில் இறங்கி கோட்டையை முப்புறம் தாக்கினார்கள். காவிரி பாயாத மேற்குப் புறத்தில் கூட நர்சிபுரத்திலிருந்து வந்த பல்லவர் படைப் பிரிவு ஒன்று வந்து தாக்கியது. கோட்டையில் நமது வீரர்கள் ஐந்தாயிரம் தான். ஒரு நாழிகையில் எல்லாம் முடிந்து விட்டது. தழைக்காட்டுக் கோட்டையில் பல்லவர்களின் பாம்புக் கொடிகள் பறக்கின்றன. அதைக் கண்டதும் உடனடியாகப் புரவியில் புறப்பட்டு வாயு வேகத்தில் இங்கு வந்தேன்."

போரமைச்சர் குறுக்கிட்டு "நாம் இங்கே போரைத் துவக்குவதற்கு முன்பாகவே நம் தலைநகரை இழந்து விட்டோம். அதாவது நம் ஆட்சியை இழந்து விட்டோம்" என்றார்.

அவரை எரித்து விடுவது போல் பார்த்த கங்கமன்னன் "நீர் என்ன சொல்ல வருகிறீர்?" என்று கேட்டான்.

"ஓலைத் திட்டத்தை நம்ப வேண்டாம் என்று சொன்னேன். நீங்கள் ஏற்கவில்லை. உண்மை நிலையை அறியலாம் என்றேன்.

துறவி வந்தார். சொன்னார். அவர் சொன்னபடிதான் நடந்திருக்கிறது. ஒரு லட்சம் வீரர்கள் நான்கு பிரிவாக வந்து தழைக் காட்டை வளைத்துக் கொண்டு வசப்படுத்தி விட்டார்கள். தலைநகர் நம்மைவிட்டுப் போய்விட்டது" என்றார் போரமைச்சர் குற்றம் சாட்டுவது போல்.

"அந்தத் துறவி உண்மையை அறிந்து சொல்லவில்லை. கற்பனையாக வாய்க்கு வந்தபடிச் சொல்லியிருக்கிறான். அது மெய்யாகி விட்டது" என்றான் கங்கமன்னன்.

"இருக்கலாம். ஆனாலும் தலைநகரை நாம் இந்த அளவிற்கு நிர்க்கதியாக விட்டிருக்கக் கூடாது."

"நம்மிடம் இருக்கும் படையைத் தானே பயன்படுத்த முடியும்? குவலாலபுரத்தில் எதிரியை முறியடிக்கும் முயற்சியாக நமது படையின் பெரும்பகுதியை இங்கே கொண்டு வந்து விட்டோம். தழைக்காட்டைக் காப்பதற்கு ஐந்தாயிரம் வீரர்கள் தானே மிஞ்சினார்கள்?"

"பெரும் பகுதிப் படையைக் கொண்டு வந்த நாம் குவலாலபுரத்தையும் இழந்தல்லவா நிற்கிறோம்?"

"இங்க என்ன நடந்ததென்று பார்த்தீர்கள் அல்லவா? பல்லவர் படைப் பிரிவுகள் நமது வலது இடது பக்கங்களில் திடீரென முளைத்தன. நாம் இடையில் சிக்கிக் கொண்டோம். உமது பேச்சைக் கேட்டு மானபுரத்திற்குப் பின்வாங்கினோம். அங்கே மானத்தை வாங்கத் தயாராக இருந்தான் பாண நாட்டு ஜெயந்தி வர்மன். என்ன செய்ய முடியும் நாம்?"

போரமைச்சரால் பதில் கூற முடியவில்லை.

"சேனாதிபதி புவியரசனும் வீரமரணம் எய்தி விட்டான்" என்றான்.

"நானும் வீரமரணம் எய்தியிருந்தால் உமக்குப் பதில் சொல்லிக் கொண்டிருக்க வேண்டிய துர்ப்பாக்கியம் எனக்கு நேர்ந்திருக்காது" என்றான் கங்கமன்னன்.

போரமைச்சர் கோபத்துடன் எழுந்து சென்றுவிட்டார்.

மறுநாள் குவலாலபுரத்திலிருந்து காடக முத்தரையரும் பல்லவடி அரையரும் வந்து சேர்ந்தார்கள்.

அவர்கள் வந்து சேர்ந்தபின் கங்கமன்னனைத் தன் கூடாரத்திற்கு அழைத்தான் நந்திவர்மன்.

"உன் உத்தேசத்தைச் சொல்லலாம" என்றான்.

"என் உத்தேசத்தைச் சொல்லும் நிலையில் நானில்லை" என்றான் கங்கமன்னன்.

"அப்படியானால் நானே சொல்லி விடுகிறேன். எதைக் கைப்பற்றப் படையெடுத்து வந்தேனோ அது கிடைத்துவிட்டது. உக்ரோதயத்தோடு உனது பட்டத்து யானை பட்டவர்த்தனத்தையும் கைப்பற்றி விட்டேன். அதோடு என் வேலை முடிந்தது. உனது தலைநகரத்தையும் துணை நகரத்தையும் உன்னிடமே ஒப்படைக்கிறேன்" என்றான் நந்திவர்மன்.

கங்கமன்னனோ "நீங்கள் வகுத்தப் போர் வியூகம் என்ன?" என்று கேட்டான்.

சொன்னான் பல்லவன்.

அதிர்ந்தான் கங்கன்.

★★★



விசித்திர வியூகம்

"இந்த வியூகத்தை வகுத்தது நானோ என் தளபதிகளோ அல்ல. தந்திவர்மன்" என்றான் நந்திவர்மன்.

"யார்? உங்கள் புதல்வரா? பல்லவ இளவரசரா? அவர் மிகவும் இளையவராயிற்றே! வயது கூடக் குறைவு அல்லவா?" என்றான் கங்க மன்னன்.

அப்போது காடக முத்தரையர் குறுக்கிட்டு "எங்கள் மாமன்னர் நந்திவர்மர் அரியணையில் அமர்ந்தபோது அவருக்கு வயது பன்னிரண்டு தான் கங்க அரசே. புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? தந்தைக்குத் தகுந்த தனயனாகத் தந்திவர்மர் பிறந்திருக்கிறார். அவர் பல்லவ நாட்டிற்குக் கிடைத்தது எங்கள் அதிருஷ்டம். அவர் வகுத்துக் கொடுத்தது தான் எட்டுக்கால் பூச்சித் திட்டம்" என்றார்.

"என்னது, எட்டுக்கால் பூச்சி வியூகமா? புராணங்களில் கூட நான் கேள்விப்பட்டதில்லயே?" என்று சூழ்நிலைகளை மறந்துவிட்டு வியப்போடு கேட்டான் கங்கமன்னன்.

"எட்டுக்கால் பூச்சியைப் பற்றியாவது கேள்விப் பட்டிருக்கிறாயா ஸ்ரீபுருஷா?" என்று கேட்டான் நந்திவர்மன்.

"பழைய கட்டடங்களில் மூலைக்கு மூலை ஒட்டடையால் வலையைக் கட்டியிருக்குமே அந்தச் சிறு பூச்சியையா சொல்கிறீர்கள்?" என்று அதே வியப்போடு வினவினான் கங்கமன்னன்.

"ஆம்! நம் கண்களுக்குச் சாதாரணமாகப் புலப்படாத அற்ப ஜந்துக்களில் ஒன்று அது. ஆனால் அதைத் தந்திவர்மன் நீண்ட நேரமாக அமர்ந்து கவனித்திருக்கிறான். அதன் விளைவுதான் எட்டுக்கால் பூச்சி வியூகம்" என்று சொன்ன நந்திவர்மனின் மனக்கண்களில் தந்திவர்மன் பேசியது அப்படியே நிழலாடியது.

பரமேச்சுர விண்ணகரத்தின் மடைப்பள்ளியில் அமர்ந்து எட்டுக்கால் பூச்சியைக் கவனித்த தந்திவர்மன் "கங்கநாட் டுப்

போரில் நாம் எட்டுக்கால் பூச்சி வியூகத்தை அமைக்கலாம் தந்தையே ஒரு மாற்றத்துடன்" என்றான்.

"சொல் தந்தி வர்மா."

"இங்கே நாம் எட்டுக்கால் பூச்சி வலையைப் பின்னி அதில் வந்து விழும் சிறு பூச்சிகளை இழுத்து விழுங்குகிறது. எட்டுக் கால்களே அதற்குப் பிரதானம். இல்லையா தந்தையே?"

"உண்மைதான் மகனே."

"நாம் சற்று மாற்றுகிறோம். எட்டுக்கால் பூச்சி வலையைப் பின்னுவதற்குப் பதிலாக எட்டுப் பூச்சிகள் அதற்கு வலையைப் பின்னுவதாக வைத்துக் கொள்வோம். அதாவது கங்கநாடு தான் எட்டுக்கால் பூச்சி. அந்த நாட்டைச் சுற்றி நாம் பல படைப் பிரிவுகளை அனுப்புவோம். அவை பின்னும் வலையில் எட்டுக்கால் பூச்சியான கங்கநாடு சிக்கும். எந்தப் பக்கத்திலும் தப்ப முடியாது."

நந்திவர்மனுக்குத் தந்திவர்மனின் திட்டம் புரிந்தாலும் அதை விளக்கிக் கொள்ளும் விதமாக "தந்திவர்மா! குருநாதரின் திட்டப்படி நான் கங்கநாட்டுத் தலைநகர் தழைக்காட்டைப் போய் தாக்கப் போவதில்லை. அது காஞ்சிக்குத் தென்மேற்கில் தூரத்தில் இருக்கிறது. எனவே காஞ்சிக்கு வடமேற்கே இருக்கும் - அருகில் இருக்கும் அவர்களது இரண்டாவது தலைநகரமான குவலாலபுரத்தைப் பிடித்துக்கொண்டு தழைக்காட்டில் இருக்கும் கங்கர் படையை இழுக்கப் போகிறேன். அது நமக்குச் சாதகம். கங்கர்களுக்குப் பாதகம்" என்றான்.

"தந்தையே! தழைக்காட்டில் பெரும் படையுடன் இருக்கும் கங்கமன்னன் குவலாலபுரம் போனால் போகிறதென்று நினைத்து தழைக்காட்டை விட்டு வெளியே வர மறுத்தால் என்ன செய்வீர்கள்? நீங்கள் குவலாலபுரத்திலிருந்து தழைக்காட்டிற்குச் செல்ல வேண்டும். பயணதூரமும் காலமும் இரட்டிப்பாகிறது. இது நமக்குப் பாதகம். கங்கர்களுக்குச் சாதகம்."

"உண்மைதான்."

"நாம் குருநாதர் திட்டப்படி அருகில் இருக்கும் குவலாலபுரத்தைத் தாக்கிப் பிடிக்கலாம் என்கிறீர்கள். இப்படியொரு முயற்சியில் நாம் இறங்குவோம் என்று கங்கமன்னரால் ஊகிக்க முடியாதா? அப்படி ஊகித்து உங்களுக்கு முன்பாகவே குவலாலபுரத்தைப் பலப்படுத்தி விட்டு உங்களைப் பின்புறத்தில் தாக்கினால் என்ன செய்வீர்கள்?"

"சிக்கல் தான்."

"நான் சொன்னது போல் நாம் செல்வதற்கு முன்பாகவே கங்கமன்னர் குவலாலபுரத்தைப் பலப்படுத்திவிட்டு நம்மைத் தாக்க தயாராக இருப்பதாகவே கொள்வோம்."

"சரி."

"நமது இலக்கு தழைக்காடு மற்றும் குவலாலபுரம் ஆகிய இரண்டும் தான் என்று வைத்துக் கொள்வோம்."

"அதாவது தழைக்காடும் குவலாலபுரமும் எட்டுக்கால் பூச்சி. அதை ஆடவிடாதபடி அவற்றுக்கு இப்புறமும் அப்புறமும் படைப் பிரிவுகளைப் பூச்சிகளாக வியூகம் அமைப்போம். இப்பூச்சிகளை கங்கநாடு என்றும் பூச்சியால் விழுங்க முடியாது. இப்பூச்சிகள்தான் கங்கநாடு என்னும் பூச்சியை விழுங்கும்."

"புரிந்து விட்டது தந்திவர்மா. தழைக்காட்டைச் சுற்றி நான்கு படைப்பிரிவுகள் அமைப்போம். மூன்று படைப்பிரிவுகள் காவிரியின் மூன்று கரைகளில் இருக்கும். நான்காவது பிரிவு மேற்குப் புறத்தில் நர்சிபூரில் இருக்கும். போர் துவங்கும் நேரத்தில் அவை நாற்புரத்திலும் முன்னேறித் தழைக்காட்டைத் தாக்கிப் பிடிக்கும். அதே போல தழைக்காடு - குவலாலபுரம் மார்க்கத்தில் இருபுறமும் படைப்பிரிவுகளை வைத்தால் கங்கர் படையை அந்த மார்க்கத்தில் வரும் படை நெருக்கி மானபுரத்திற்கு இழுத்தால் வந்த படையையும் தோற்கடிக்கலாம். மிக்க மகிழ்ச்சி மகனே. வரலாற்றில் யாரும் படைக்காத வியூகத்தைப் படைத்திருக்கிறாய். உதயசந்திரன் இல்லாத குறை உன்னால் தீர்ந்தது. இதுவரையில் போர்களில் தோல்வியை தழுவிய நான் இப்போரில் உன்னால் வெற்றி பெறுவேன்" என்று சொன்ன நந்திவர்மன் காடக முத்தரையர், பல்லவடி அரையர், ஜெயந்திவர்மன், சுவரன் மாறன், பூதிவிக்கிரம கேசரி ஆகியோர் தலைமையில் படைகளைப் பிரித்து கங்கநாட்டின் பகுதிகளில் இருக்க வேண்டிய இடங்களைத் தேர்ந்தெடுத்து அங்கெல்லாம் ரகசியமாக அனுப்பி வைத்தான். கங்கநாட்டு ஒற்றர்கள் கண்ணில் பட்டால் உடனே கொல்லப்பட்டார்கள். எனவே படைகளின் நகர்வு கங்கமன்னனுக்குத் துல்லியமாகத் தெரியாமல் போயிற்று. தன்னுடைய யானைப் படையை மட்டும் குவலாலபுரத்தை நோக்கி நகர்வதை வெளிப்படையாக அறிவித்துக் கொண்டு புறப்பட்டான் நந்திவர்மன்.

★

தந்திவர்மனின் விசித்திர வியூகத்தைப் பற்றி எடுத்துரைத்த நந்திவர்மன் "ஸ்ரீபுருஷா! அனைத்து நிகழ்வுகளும்

தந்திவர்மன் கூறியபடியே நடந்தது ஒன்றைத் தவிர உனது படைகளை மானபுரத்தை நோக்கி இழுக்கும்படிச் சொன்னான். ஆனால் அதை நாங்கள் செய்யவில்லை. நீ செய்துவிட்டாய்" என்றான்.

பிறகு அவனே தொடர்ந்து "தழைக்காட்டிற்குச் செய்தி யனுப்பி விட்டேன். அங்கேயுள்ள பல்லவர் படைகள் காஞ்சிக்குத் திரும்பிவிடும். குவலாலபுரத்தை வென்ற படைகளும் வெளியேறிவிடும். பழையபடி கங்கநாடு உனக்கே சேரும். நீ எஞ்சிய படைகளோடு புறப்படலாம். நாங்கள் நாளைக்குக் காஞ்சிக்குப் புறப்படுகிறோம்" என்றான்.

"ஒரு ஆபரணத்திற்காகத் தேவையில்லாத போரை நிகழ்த்தி விட்டீர்கள் நந்திவர்மரே" என்றான் கங்கமன்னன்.

"உனக்குக் கங்கநாட்டைத் திருப்பிக் கொடுத்து விட்டதால் போர் தேவையற்றதாகத் தோன்றுகிறதா? கங்கநாட்டைப் பல்லவநாட்டோடு இணைத்துக் கொண்டு உன்னைக் கைது செய்து காஞ்சிக்குக் கொண்டு போனால் இந்தப் போர் அர்த்தமுள்ளதாக ஆகிவிடுமா? சாளுக்கியர்கள் எங்களைத் தாக்கிய போது அவர்களோடு சேர்ந்து கொண்டு போரிட்டீர்களே, அதற்கு அர்த்தம் இருக்கிறதா? அந்தப் போரில் நான் அடைந்த தோல்விக்குப் பரிகாரம் தேடுவதற்குத் தான் இந்தப் போரை நடத்தினேன் என்று சொன்னால் தேவையில்லாத போர் என்று சொல்வாயா? எனக்குப் பழிவாங்கும் எண்ணமெல்லாம் கிடையாது ஸ்ரீபுருஷா. எங்கள் பல்லவ மாமன்னர் பரமேஸ்வரவர்மரின் கௌரவப் பதக்கமான உக்ரோதயத்தை உன்னிடமிருந்து மீட்க நினைத்தேன். என் ராணி ரேவா தேவியும் நீண்ட காலமாகச் சொல்லி வந்தாள். அதைச் சதிச் செயல் மூலம் களவாட முடியும் என்றாலும் வீரச்செயல் மூலமே பெற நினைத்துப் போர் புரிந்தேன். இப்போரில் தோற்றுவிடக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தேன். அதற்குத் தந்திவர்மனின் வியூகம் கச்சிதமாக உதவியது. மொத்தத்தில் போருக்கான உண்மைக் காரணத்தைச் சொன்னேன். உனக்கது தேவையில்லாததாக இருக்கலாம். எனக்குத் தேவையாக இருந்தது" என்றான் நந்திவர்மன்.

"இப்போரால் ஏராளமான வீரர்கள் மடிந்திருக்கிறார்கள்" என்றான் கங்கமன்னன்.

"நீங்களும் சாளுக்கியர்களுமாக நடத்திய போரில் வீரர்கள் மடியவில்லையா? அப்போது இல்லாத கரிசனம் இப்போது எப்படி வந்தது? போரில் வீரமரணமடையும் வீரர்கள்

சொர்க்கத்தைச் சென்று சேருகிறார்கள் என்பது பண்டைக் காலத்திலிருந்து இருந்து வரும் நம்பிக்கை. நம்மைப் போன்ற மன்னர்கள் இருக்கும் வரை போர்கள் இருக்கும். வீரமரணங்கள் இருக்கும்" என்று சொன்ன நந்திவர்மன் "ஸ்ரீபுருஷா! இனி நாம் நண்பர்களாக இருப்போம். நம் நாடுகள் நட்பு நாடுகளாக இருக்கும். நமக்குள் இனிப் போர் வராது. இழப்புகள் வராது" என்றான்.

"நந்திவர்மரே! உங்களை மிகவும் மதிக்கிறேன். பாராட்டு கிறேன். நேசிக்கிறேன். தழைக்காட்டிற்கு வந்து எங்கள் மக்களுக்குக் காட்சி தர வேண்டும். மக்களும் தங்களை நேசிப்பார்கள்" என்று வேண்டிக் கொண்டான் கங்கமன்னன்.

"இப்போது வரமுடியாது ஸ்ரீபுருஷா. காஞ்சிக்கு உடனே சென்றாக வேண்டும். நாம் நண்பர்கள் ஆவோம். அதற்குப் பிறகு ஒரு நாள் நான் ராணியோடும் இளவரசனோடும் தழைக்காட்டிற்கு வருகிறோம். இப்போது விடை பெற்றுக் கொள்கிறோம்" என்றான் நந்திவர்மன்.

★

கங்கநாட்டுப் போர் முடிந்து படைகளைத் திரட்டிக் கொண்டு உக்ரோதயத்துடன் மண்கலங்க - விண்கலங்க - வித்யாதரர்களின் பண் துலங்க - எதிரிகளின் கண் கலங்க - வீரர்களின் வீரப்புண் துலங்க பல்லவ மன்னன் காஞ்சிக் கோட்டைக்குள் நுழைந்த போது அவனுக்குக் குடைபிடிப்பது போல் நாரைகள் அவனுக்கு மேலே வட்டமாகப் பறந்தன.

அதைக் கண்ட மகாமந்திரி தரணிகண்ட போசரிடம் "மன்னர் தோல்வியுற்று வரும்போது தான் நாரைகள் பறக்கும் என்று நினைத்தோம். அவர் வெற்றி பெற்று வரும் இந்த நேரத்திலும் அவை பறக்கின்றன. மன்னரிடம் ஏதோ இருக்கிறது" என்றார்.

கோட்டை மீது இருந்த முரசுகள் மன்னனின் வெற்றிக்காக முழங்கின. கொம்புகள் ஒலித்தன. மக்கள் ஆரவாரம் செய்தார்கள்.

கோட்டை வாயிலில் மாலையோடு நின்று வரவேற்ற தந்திவர்மனின் மாலையைக் கழுத்தில் வாங்கிக் கொண்டு அவனைக் கட்டிப்பிடித்த நந்திவர்மன் "உனது திட்டம் அபார வெற்றியைத் தந்து விட்டது தந்திவர்மா. எல்லாப் புகழும் உன்னையே சேரும்" என்றான்.

"இல்லை தந்தையே. எல்லாப் புகழும் எம் பெருமானையே சேரும்" என்றான் தந்திவர்மன்.

"ஒன்று சொன்னாலும் நன்கு சொன்னாய் மகனே. உனது இந்த உயர்ந்த எண்ணம் எப்போதும் இருக்க வேண்டும்" என்றான் நந்திவர்மன்.

தந்திவர்மனையடுத்து மன்னனுக்கு மாலை அணிவித்த ராணி "தாங்கள் வெற்றி பெற்று உக்ரோதயத்துடன் வருவீர்கள் என்று எனக்குத் தெரியும் பிரபு. அது இன்னொருவருக்கும் தெரிந்திருக்கிறது. உங்களைக் காண்பதற்காக நேரில் வந்திருக்கிறார்" என்றாள்.

"அப்படியா? யார் அவர்?" என்று கேட்டான் நந்திவர்மன்.

"ராஷ்டிர கூடப் பேரரசர்" என்றார் மகாமந்திரி.

"அவரா?" என்று வியப்புடன் கேட்ட நந்திவர்மன் அங்கே இருந்த பிரமுகர்கள் மற்றும் கோட்டத் தலைவர்களது மரியாதைகளை ஏற்றுக் கொண்டான். அதுவரை வானத்தில் பறந்து கொண்டிருந்த நாரைகள் கலைந்து சென்றதைக் கண்டு அவற்றையும் வணங்கிவிட்டு மக்களைப் பார்த்துக் கைகளை ஆட்டியபடி அரண்மனைக்குச் சென்றான்.

அங்கே அவனது மாமனாரும் ராஷ்டிரக் கூட மன்னனுமான தந்திதுர்கர் அவனைக் கட்டித் தழுவி வரவேற்றார். "இன்று தான் என் மனம் நிறைவடைந்தது. உன் வெற்றிக்கு என் வாழ்த்துக்கள்" என்றார்.

"வாழ்த்துகளை உங்கள் பேரனுக்குச் சொல்லுங்கள் மாமன்னரே. அவன் திட்டமே வெற்றியை ஈட்டியது" என்றான் நந்திவர்மன்.

அன்றுமுழுதும் அவனும் ராணியும் ராஷ்டிரகூட மன்னனோடு உரையாடி மகிழ்ந்தார்கள்.

மறுநாள் வந்த மகாமந்திரி. "மகாராஜா! நீங்கள் கங்கநாட்டிற்குப் பயணம் மேற்கொண்ட போது நீங்கள் கூறியபடியே என்னளவில் சிதம்பரம் நடராஜர் கோயிலில் கட்டப்பட்ட பெருமாள் கோயிலின் சம்ப்ரோக்ஷணத்தை முடித்து விட்டேன்" என்றார்.

"மிகப்பெரிய காரியம் மகாமந்திரி. மிகவும் சவாலாக இருக்கும் என்று கருதப்பட்ட காரியம். தடைகளின்றி அமைதியாக நிறைவேறியிருக்கிறது. என் சார்பில் வரலாற்றுச் சிறப்புமிக்க சம்ப்ரோக்ஷணத்தை நடத்தி முடித்திருக்கிறீர்கள். மக்கள் என்ன சொல்கிறார்கள்?" என்றுகேட்டான் மன்னன்.

"அவர்களுக்கு மகிழ்ச்சி. ஒரே இடத்தில் நின்றபடி பெருமாளையும் நடராஜரையும் சேவிக்க முடிந்ததில்

அவர்கள் மகிழ்ச்சியடைகிறார்கள். மிகவும் பொருத்தமான இடத்தில் பெருமாள் கோயிலை அமைத்ததற்காகத் தங்களைப் பாராட்டுகிறார்கள்."

"தீட்சிதர்கள்?"

"பெருமாளுக்குப் பூஜை செய்யும் உரிமையைத் தில்லை மூவாயிரவருக்குத் தாங்கள் வழங்கி விட்டதால் அவர்கள் ஆறுதல் அடைந்திருக்கிறார்கள்."

"வைஷ்ணவர்கள்?"

"அமைதியாக இருக்கிறார்கள்."

"எனது ஆட்சிக்காலம் வரையிலாவது அங்கே அமைதி நிலவ வேண்டும் மகாமந்திரி. எந்தக் காரணத்திற்காகவும் பூசல்கள் வரக் கூடாது."

"எல்லோரும் அப்படித்தான் வேண்டிக் கொள்கிறோம்" என்று சொன்ன மகாமந்திரி "மகாராஜா! வடநாடு முழுவதும் யாத்திரை செய்து பெருமாள் ஆலயங்களுக்கு விஜயம் செய்து எம்பெருமானைத் தீந்தமிழ்ப் பாசுரங்களால் மங்களாசாசனம் செய்து வந்த வைஷ்ணவ மகான் கடல்மல்லைக்கு வந்து விட்டாராம். அவரைக் காஞ்சிக்குச் சிறப்பாக வரவேற்று இங்குள்ள பெருமாள் தலங்களையெல்லாம் மங்களாசாசனம் செய்யும்படி கேட்டுக் கொள்ள வேண்டும்" என்றார்.

"யார் அவர்?"

"மங்கை வேந்தன் என்னும் திருமங்கை ஆழ்வார்" என்றார் மகாமந்திரி.

★★★



திருமங்கை ஆழ்வார்

உறையூரை ஆண்ட நந்திசோழனின் சேனாதிபதியாக இருந்து, திருவாலி நாட்டின் மன்னனாக மாறி, பின் ஆட்சிப் பொறுப்பை விட்டுவிட்டு அரங்கன் கோயில் திருப்பணியில் ஈடுபட்டு, அதற்காகச் செய்யத் தகாதனவற்றையெல்லாம் செய்து, எடுத்த காரியத்தை முடிக்க வேண்டும் என்ற உறுதியுடன் இருந்து திருப்பணியைச் செவ்வனே முடித்த மங்கை வேந்தன் என்னும் திருமங்கை ஆழ்வார் அரங்கனின் ஆத்ம கட்டளை காரணமாகப் பெருமாள் உறையும் ஆலயங்களுக்கு விஜயம் செய்ய ஆரம்பித்தார்.

அரங்கனின் கட்டளை அவரை வடநாட்டிற்குச் செல்லும் படிப் பணித்தது. திருவரங்கத்திலிருந்து புறப்பட்ட திருமங்கை ஆழ்வார் லட்சிய புருஷனாய் பரம வைஷ்ணவராய் காடு, மலை, ஆறு என இயற்கையின் பயங்கர அழகுகளைக் கடந்து பயணம் செய்தார். புனித கங்கைக்கு வந்து நீராடினார். இதற்கே இரண்டு வருடங்கள் பிடித்தன.

அரங்கன் 'இமாலயத்திற்குப் போ' என்றான். திருமங்கை ஆழ்வாருக்குத் திகைப்பாக இருந்தது. அவரது அத்திகைப்பு இமாலயத்தை விடப் பெரிதாக இருந்ததால் எப்படி அங்கே பயணம் செய்வது என்று தவித்தார்.

அயோத்தியில் ராமபிரான் கைங்கர்ய மகாசபை ஒன்று இருந்தது. அது வடநாட்டில் ஒரு இயக்கமாக இருந்தது. நிரம்பத் தொண்டர்களைக் கொண்ட அந்த இயக்கம், வட பாரதத்தில் அயோத்தி, மதுரா, துவாரகை, குருஷேத்திரம், காசி, ஹரித்துவாரம் போன்ற இடங்களில் கூடும் பக்தர்களுக்குப் பலவித சேவைகளைச் செய்து வந்தது.

அக்காலத்தில் கங்கைக் கரையில் இருந்த ஹரித்துவாரம் வரை மக்கள் வருவார்கள். அதற்கு அப்பால் இமாலயத்திற்குச் சென்று அங்குள்ள ஆலயங்களுக்கு மக்கள் அவ்வளவாகச்

செல்வதில்லை. மேலே செல்வதற்கு மலைப் பாதைகள் இல்லை. (இப்போது கூட பாதுகாப்பான மலைப் பாதைகள் கிடையாது) அடர்ந்தகாடு, பனிக்காற்று, கடுங்குளிர் ஆகியவற்றின் வழியாக வழிகாட்டிகளோடுதான் செல்ல வேண்டியிருந்தது. வழிகாட்டிகள் இல்லாமல் மேலே சென்றவர்கள் வழிதெரியாமல் காணாமல் போனபடியால் வழிகாட்டிகள் இல்லாமல் யாரும் செல்வதில்லை.

அப்படிச் சென்றாலும் இமாலயப் பகுதிகளில் வினோதமான விலங்குகள் பல இருப்பதாகவும் அவற்றின் கண்களில் பட்டால் பக்தர்களின் கண் பார்வையும் பேசும் திறமையும் போய்விடும் என்றும் வதந்தி நிலவி வந்தது. புராணகாலத்தில் இருந்த யாளிகளும் அன்னங்களும் அடர்ந்த பனிமலைக் காடுகளில் விரவி இருக்கிறதென்றும் அவை தெய்வீக உயிரினங்கள் ஆதலால் அவற்றைப் பார்க்க நேருவது மிகப்பெரிய பாக்கியம் என்றும் சொல்லப்பட்டு வந்தது. உண்மை பாதியும் பொய்மை பாதியுமாய்த் தகவல்கள் நிலவி வந்ததால் மக்களுக்கு இமாலயமலை மீது சென்று தெய்வங்களைத் தரிசிக்கத் தயக்கமாகவே இருந்தது.

திருமங்கை ஆழ்வாரும் அந்தத் தகவல்களை அறிந்தாலும் அரங்கன் தன்னை இமாலயத்தில் உள்ள திருப்பிரிதி ஆலயத்திற்குச் செல்லும்படிப் பணித்திருந்ததால் அங்கே செல்வது என்று தீர்மானித்தார். அவருக்கு ராமபிரான் கைங்கர்ய பக்த மகா சபையின் உதவி கிடைத்தது. சபையைச் சேர்ந்த நூறு பக்தர்கள் அவருக்கு வழிகாட்டி உதவ முன்வந்தார்கள்.

மங்கைவேந்தன் ஆழ்வாராக ஆனபிறகு அவரது தோழர்களான தோலா வழக்கர், நிழலில் ஒதுங்குவான், நீர்மேல் நடப்பான், சாயை பிடிப்பான், தாளுதுவான் ஆகியோர் அவரது சீடர்களாகி காவி யணிந்து அவருக்குப் பாதுகாப்புக் கவசமாக இருந்து வந்தார்கள்.

அவர்களோடும் பக்த சபையைச் சேர்ந்த வழி காட்டுபவர்கள் மற்றும் கைங்கர பரர்களோடு இமாலயத்திற்குப் புறப்பட்டார் திருமங்கை ஆழ்வார். இமாலயப் பயணமானது திருவரங்கத்திலிருந்து ஹரித்துவாரத்திற்கு வந்த பயணத்தை விடக் கொடுமையாக இருந்தது. மேலே செல்லச் செல்ல குளிர் அதிகமாகிக் கொண்டே வந்தது. வழியில் உண்பதற்கு உணவுச் சாலைகளோ உறைவிடங்களோ இல்லை பக்தர்கள் அதிகமாக வராத காரணத்தால் - குடிக்கவும் நீராடவும் தண்ணீர் நிரம்ப இருந்தது. ஆனால் அத்தண்ணீர் உடம்பை உறையவைக்கும் குளிர்ச்சியாக இருந்தது. இமாலயம் என்னும் பெரும் பனிமலைகள்

ஆங்காங்கே உருகி ஆறுகளையும், ஓடைகளையும், குளங்களையும் உண்டாக்கியிருந்தன. அந்த நீர் இமாலயத்தின் அடிவாரத்திற்கு வந்து கங்கைப் பெருநதியாக ஓடிக் கொண்டிருந்தது. இமாலயம் மட்டும் பனிமலையாக இல்லா விட்டால் கங்கையில்லை. யமுனை இல்லை. இதர உபநதிகள் இல்லை.

எம்பெருமானின் கருணையே இமயமலையை உருவாக்குகிறது. அல்லது எம்பெருமானே இமாலயமாக இருக்கிறார் என்றெண்ணி அம்மலையை ஆங்காங்கே கடந்து சென்றார்கள் பயணிகள். ஆழ்வாரோடு வந்த பக்த மகா சபையினர் தங்களோடு உணவுப் பொருட்களைக் கொண்டு வந்திருந்த படியால் ஒருநாளைக்கு ஒருமுறை உணவு தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டது. பல நேரங்களில் நீரும் உலர்ந்த பழங்களும் ஆகாரமாக இருந்தன. திருமங்கை ஆழ்வாரும் சரி அவரது சீடர்களும் சரி யோகப் பயிற்சி மூலம் தங்கள் தேகத்தைச் சமன்படுத்திச் சீராக்கிக் கொண்டிருந்ததால் உணவு அவர்களுக்குப் பிரச்சனையாக இல்லை. பல நேரங்களில் உணவில்லாமலும் அவர்களால் பயணிக்க முடிந்தது.

பயணமானது உயரத்தை நோக்கிச் சென்றபடி இருந்தாலும் தனது செயல்கள் எந்த அளவிற்குத் தாழ்ந்து போயிருந்தன என்பதை நினைத்து ஆழ்வார் உள்ளுக்குள் வருந்தியபடி இருந்தார்.* செய்யத் தகாதனவற்றை யெல்லாம் செய்து - நினைத்தாலே வெட்கப் படத்தக்க வினைகளில் ஈடுபட்டு அவற்றுக்கெல்லாம் முத்தாய்ப்பாக எம்பெருமானையே திருமணங் கொல்லையில் வழிமறித்துக் கொள்ளையில் ஈடுபட்டதை நினைவு கூர்ந்து குறுகிப் போனார். அதே சமயம் அக்கொள்ளையின் போது எம்பெருமான் காட்சி தந்து திருமந்திரமான 'ஓம் நமோ நாராயணா' என்ற அட்சாட்சரத்தை உபதேசித்த போது ஆழ்வாரது உடலில் ஒளி ஊடுறுவியதே தவிர மனம் மாறுபடவில்லை. ஏனென்றால் அரங்கன் கோயில் திருப்பணி நிறைவடையாமல் இருந்தது. அது நிறைவேற வேண்டுமானால் இழிவான கொள்ளை முதலிய காரியங்களில் தொடர்ந்து ஈடுபட்டுத்தான் ஆகவேண்டும். ஆகவே மனதை மாற்றிக் கொள்ள விரும்பாமல் தேற்றிக் கொண்டார் ஆழ்வார்.

திருப்பணிகள் முடிந்ததும் அவரது மனத்தை மூடியிருந்த மாசுகள் மறைந்தொழிந்தன. தெள்ளிய வானம் போல் உடலும்

---

* இவரது இந்த வருத்தங்கள் இவரது வாயிலாகவே பாசுரங்களாக வெளிவந்தன. அவற்றை ஆழ்வாரது பெரிய திருமொழியில் முதல் பத்தில் உள்ள ஆரம்பப் பாசுரங்கள் பத்தில் காணலாம்.

மனமும் நிர்மல நிலைக்கு வந்தன. தனது செயல்களைக் குறித்து வருந்தி, வருத்தங்களை விருத்தங்களாய்ப் பாடிக் கண்ணீர் விட்டபடி படுத்தார்.

கனவிலே தோன்றிய எம்பெருமான் அருள் மொழியை உதிர்த்தான்.

"பரகாலா! வருந்துவதை விடு. நல்ல காரியத்திற்காகவே தீயகாரியங்களைச் செய்தாய். அவை முடிந்துவிட்டன. எந்தத் திருப்பணிக்காக நீ மன உறுதியோடு செயல்பட்டாயோ அந்த உறுதியை நீ என் மீதான பக்தியில் காட்டு. பக்தியில் ஆழ்ந்து ஆழ்ந்து போ. அனைவரும் உன்னை ஆழ்வார் என்று அழைக்கும் படியான நிலைக்குப் போ. திருமங்கை மன்னன் திருமங்கை ஆழ்வாராகினான் என்று அகிலம் உன்னைக் கூறவேண்டும். அதற்கு வழி எனக்காக அன்பர்களும் அரசர்களும் கட்டி வைத்த ஸ்தலங்களுக்குச் செல். உனது அன்பு நிறைந்த வார்த்தைகளால் பாடு. போற்று. நீ பாடிப் போற்றும் தலங்கள் திவ்ய தேசங்கள் என்று சிறப்பாகப் போற்றப்படும். புறப்படு. தாழ்ந்த செயல்பாடுகளை நினைத்து தாழ்ந்திருக்கும் நீ உயர்ந்த இடத்தில் நானிருக்கும் இமாலயத்திற்குச் செல். அங்கே உன் உள்ளமும் உயரும். உள்ளத்தில் உள்ளவையும் உயரும்."

அரங்கன் ஆழ்வாருக்குத் தெம்பை ஊட்டினான். தெளிவை ஊட்டினான். செல்லும் திசையைக் காட்டினான். வழித் துணையாக ராம பக்த மகா சபைக் கைங்கர்யர்களையும் அமைத்துக் கொடுத்தான். அவையெல்லாம் இமாலயத்தில் உயர உயர ஏறுவதற்கும், உறைய வைக்கும் கடுங்குளிரைச் சமாளிப்பதற்கும் பேருதவியாய் இருந்தன. அரங்கன் உள்ளொளியாக ஒளிர்ந்து ஆழ்வார் விஜயம் செய்ய வேண்டிய இடங்களைக் காட்டிய படியால் அந்த வழியே உய்யும் வழி என்று உணர்ந்தவராய் பயணம் செய்தார் திருமங்கையாழ்வார்.

இமயமலைப் பகுதிகளில் விநோதமான விலங்குகளும், புராணகாலத்துப் பிராணிகளும் உலவுவது பற்றி அடிவாரத்தில் உலவிய செய்திகளை அவர் கேட்டிருந்தாலும் பக்த சபையினரிடம் அது பற்றி எதுவும் விசாரிக்கவில்லை.

ஆனால் இமாலயத்தின் உயரப் பகுதிகளுக்கும் உள்ளார்ந்தப் பகுதிகளுக்கும் சென்ற போது அவரது கண்களுக்கு மட்டும் அந்த வினோத விலங்கினங்கள் புலப்படவே செய்தன. வேதங்களிலும் புராணங்களிலும் கூறப்பட்டுள்ள விலங்குகளும் உயிரினங்களும் உண்மையே என்பதை அவர் உணர்ந்து கொண்டார். துன்மார்க்கத்தை வளர்க்கும் கலியுகம் பிறந்து

விட்டபடியால் அவை மக்களின் பார்வைக்குப் புலப்படாமல் இருக்கின்றன என்றும் அரங்கனின் பேரருளால் தனக்கு அவை புலப்படுகின்றன என்பதையும் உணர்ந்து எம் பெருமானைத் துதித்தபடிச் சென்றார்.

இமாலயத்தில் உயரமான இடமும் இமயமலையின் வட எல்லையுமான மானசரோவர் என்று தற்போது வழங்கப்படும் இடத்தில் அமைந்திருந்த திருப்பிரிதி என்னும் பெருமாள் ஆலயத்தை அடைந்து அங்கே ஆதிசேஷனின் மீது சயனித்த கோலத்தில் அர்ச்சாவதார மூர்த்தியாகப் பெருமானைக் கண்டபோது அவரது கண்கள் பனித்தன. பாசுரங்கள் அவரது திருவாயிலிருந்து வந்து கொட்டின.

"பணங்கள் ஆயிரம் உடைய நல்அரவு - அணைப்
பள்ளிகொள் பரமா என்று
இணங்கி வானவர் மணிமுடி பணிதர
இருந்த நல் இமயத்துள்
மணங்கொள் மாதவி நெடுங்கொடி விசும்புற
நிமிர்ந்து அவை முகில் பற்றிப்
பிணங்கு பூம்பொழில் நுழைந்து வண்டு இசை சொலும்
பிரிதி சென்று அடை நெஞ்சே"*

நெஞ்சிற்கு அறிவுரை கூறும் விதமாக ஆழ்வார் பாசுரங்கள் பத்தைப் பாடினார். சீடர்கள் அவற்றை ஓலை நறுக்குகளில் எழுதிக் கொண்டார்கள்.

திருமங்கையாழ்வார் நேரில் சென்று மங்களாசாசனம் செய்த திருப்பிரிதி இதுதான் என்பது பெரியோர் வாக்கு.

ஆனால் தற்போது பக்தர்கள் 108 திவ்ய தேசங்களில் ஒன்றாகக் கருதி வழிபடும் திருப்பிரிதி வேறு.

ஹரித்துவாரத்திலிருந்து மேல்நோக்கி பத்ரிநாத் செல்லும் வழியில் 200 கி.மீ. தொலைவில் 6150 அடி உயரத்தில் இது அமைந்துள்ளது. இதை ஜோஷிமடம் என்றும் நந்தப் பிரயாகை என்றும் அழைக்கிறார்கள். இங்கே எம்பெருமான் நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கிறார். ஆதிசங்கரருக்கு இங்கே ஞானஒளி ஏற்பட்டதால் இங்கே அவர் நரசிம்மர் திருஉருவத்தைப் பிரதிஷ்டை செய்ததாகக் கூறப்படுகிறது.**

திருப்பிரிதியிலேயே சிலநாட்கள் தங்கியிருக்க விரும்பினார் ஆழ்வார். ஆனால் மகாசபை பக்தர்கள் வனவிலங்குகள்

---

* திருமங்கை ஆழ்வாரின் பெரிய திருமொழி பாசுரம் எண் 963

** பக்கம் 695 முதல் 702 வரை. 'வைணவ திவ்ய தேசங்கள் 108' By. தேவராஜன்

அதிகமாக உலவும் பகுதியாதலால் அங்குத் தங்க வேண்டாம் என்றும் உடனே புறப்படலாம் என்றும் தெரிவித்தார்கள்.

"நாம் அடுத்து செல்ல வேண்டியது வதரிகாசிரமம்"* என்றார் ஆழ்வார்.

மலைவழியாகவே கடும் பயணம் தொடர்ந்தது. நெடும் பயணத்திற்குப் பிறகு அனைவரும் வதரிகாசிரமத்தை அடைந்தார்கள். அலகநந்தா என்னும் நதிக்கரையில் அமைந்திருந்த பத்ரிநாராயணர் கோயிலை அடைந்து அமர்ந்த நிலையில் காட்சி தந்து கொண்டிருந்த எம்பெருமானை மங்களா சாசனம் செய்து பாடியருளினார் ஆழ்வார்.

அங்கே இரண்டு நாட்கள் அனைவரும் தங்கி உணவுப் பொருட்களைச் சேகரித்துக் கொண்டார்கள்.

"அவந்தி தேசத்திற்குச் செல்லலாம்**" என்றார் ஆழ்வார்.

மீண்டும் கடும்பயணம் தொடர்ந்தது.

கடும் வைராக்கியம் இருந்தாலன்றி பனி மலைகளிலும் அடர்ந்த காடுகளிலும் அக்காலக் கட்டத்தில் பயணம் செய்ய முடியாது. ஆழ்வாரும் சரி - அவர்களது சீடர்களும் சரி - அவர்களோடு வந்த கைங்கர்யபரர்களும் சரி தளராத நெஞ்சுரம் கொண்டவர்களாக இருந்ததால் கல்லும் முள்ளும் மலர்த் தடங்களாக இருந்தன. குளிர் அவர்களைக் கண்டு நடுங்கியது.

கண்டகீ நதிக்கரையிலிருந்த சாளக்கிராம எம்பெருமானை வணங்கி ஆழ்வார் பாசுரங்களை இசைத்த போது "தாங்கள் எந்த மொழியில் பாடுகிறீர்கள்?" என்று கேட்டார்கள் பக்த சபையினர்.

"தமிழ்நாட்டிற்கு உரிய மொழி தமிழ். அதில் பாடுகிறேன்" என்றார் ஆழ்வார்.

"எங்கள் வடமொழியில் பாடினால் என்ன?" என்று கேட்டார்கள் அவர்கள்.

"தீந்தமிழில் பாடுக என்றான் அரங்கன். அதுதான் காரணம்" என்றார் ஆழ்வார்.

"அரங்கன் என்று நீங்கள் குறிப்பிடுவது ஸ்ரீரங்க நாதரைத்தானே?"

"ஆமாம்"

---

* இது தற்போது பத்ரிநாத் என்று அழைக்கப்படுகிறது. ஹரித்துவாரத்திலிருந்து 300 கி.மீ. தொலைவிலும் 10404 அடி உயரத்திலும் உள்ளது. இக்கோயில் வருடத்தில் கோடைக்காலத்தில் மட்டுமே திறந்திருக்கும். அடர்ப்பனி காரணமாக ஆறுமாதங்கள் மூடியே இருக்கும்.

** தற்போதைய நேபாளநாடு அக்காலத்தில் அவந்தி நாடு என்று அழைக்கப்பட்டது. காட்மாண்டுவிலிருந்து 250 கி.மீ. தூரத்தில் உள்ள இந்தத் தலம் சாலிக்கிராமம் என்றும் முக்தி நாத் என்றும் அழைக்கப்படுகிறது. சாளக்கிராமக் கல்லால் உருவான மூர்த்தி இங்கே இருக்கிறார். பிறரால் உருவாக்கப்படாமல் தானாகவே உருவானவர்.

"வடநாட்டில் ஆலயங்கள் இருந்தாலும் ஸ்ரீரங்கநாதர் ஆலயத்திற்கு ஈடாகாது."

"சுவாமி தான் அரங்கன் ஆலயத்தில் நான்காவது மதில்களையும் கோபுரங்களையும் கட்டுவித்தார்" என்றார் தோலாவழக்கர்.

"மதில்களையும் கோபுரங்களையும் கட்டுவதென்றால் மகாராஜாக்களால் தானே இயலும்? இவர் எப்படி?"

"இவரும் மன்னராக இருந்தவர் தான். ஆனால் பதவியை விட்டு விட்டுத்தான் திருப்பணியில் ஈடுபட்டார்."

"அதிசயமாக இருக்கிறது."

"அதிசயம் எதுவுமில்லை அன்பர்களே. அனைத்தும் அரங்கனின் சங்கல்பம். யான் எனது என்று சொல்ல நாம் யார்?" என்றார் ஆழ்வார்.

"ஆகா! ஆகா!" என்று பரவசமடைந்த பக்த சபையினர் அவரை கண்டகீ நதி தீரத்திற்கு அழைத்துச் சென்றார்கள்.

ஆற்றின் மடியில் ஏராளமான சாளக்கிராமக் கற்கள் இருந்தன.

அவற்றை எடுத்துக்காட்டி அவற்றில் பல்வேறு விதமான கற்கள் இருந்ததையும் அவற்றின் பலாபலன்களையும் கூறி தேர்ந்தெடுத்த கற்களை ஆழ்வாரிடமும் சீடர்களிடமும் கொடுத்தார்கள்.

அவற்றின் புனிதம் கருதி அவரவர்களும் தனியான வஸ்திரத்தில் முடிந்து கொண்டார்கள்.

அரங்கன் அவர்களை இமாலயத்திலிருந்து இறங்கும்படிக் கட்டளையிட்டான்.

அனைவரும் ஹரித்துவாரத்திற்கு வந்ததும் ராமபிரான் பக்த மகா சபையினர் விடைபெற்றுக் கொள்ள முனைந்த போது "உங்கள் சேவை மிக உயர்ந்த சேவை. இன்றியமையாத சேவை. ஈடு இணையற்ற சேவை. உங்கள் உதவி இல்லாவிட்டால் இமாலயத்து இறைவனைச் சேவித்திருக்க முடியாது. ஸ்ரீராமபிரானுக்குக் கிடைத்த ஆஞ்சநேயனைப் போல எங்களுக்குக் கிடைத்த துணைவர்கள் நீங்கள். எம்பெருமானைச் சேவிப்பவர்களை விட சேவிப்பதற்கு வழிகாட்டுபவர்களே பாக்கியவான்கள். உங்களுக்கெல்லாம் எம்பெருமானின் அருள் நிச்சயமாகக் கிடைக்கும்" என்று நன்றி சொன்னார் ஆழ்வார்.

வடபாரதத்துத் தலயாத்திரை முடிந்து தென்னகத்திற்கு மீண்ட ஆழ்வார் அஹோபிலம் என்று தற்போது வழங்கப்படும்

சிங்கவேள் குன்றத்திற்கு வந்தார். இமயமலையில் வீசிய கடுங்குளிருக்கு நேர் மாறாக சிங்கவேள் குன்றத்தில் கடும் வெப்பம் வீசியது. ஆந்திர நாட்டில் இருந்த நரசிம்மர் தலத்தில் மங்களாசாசனம் செய்துவிட்டு அனைவரும் திருவேங்கடத்தை அடைந்தார்கள்.

வேங்கடத்தில் கடும்குளிரும் இல்லை. கொடும் வெப்பமும் இல்லை. இதமான சீதோஷ்ணம் நிலவியது. அதைவிட வேங்கடவனின் தரிசனம் பரம இதமாக இருந்தது. அங்கே ஒருமாத காலம் தங்கி எம்பெருமானின் மீது பாசுர மழையைப் பொழிந்த ஆழ்வார் "நம்மைவிடப் பாக்கியவான் ஒருவனைச் சந்திக்கப் போகிறோம்" என்றார்.

"யார் சுவாமி அவர்?"

"நந்திவர்மன்" என்றார் ஆழ்வார்.

★★★



தொண்டை மண்டலத்தில் ஆழ்வார்

இதமான சூழ்நிலை உடம்பிற்கு ஆறுதலாக இருந்தது போல் திருவேங்கடத்தானின் இதமான தரிசனம் மனதிற்கு ஆறுதலாக இருந்ததால் வேங்கடவனைப் பரவசத்தோடு மங்களாசாசனம் செய்து மகிழ்ந்தார்.

"தாயே தந்தை என்றும் தாரமே கிளைமக்கள் என்றும்
நோயே பட்டொழிந்தேன் உன்னைக் காண்பது ஓர் ஆசையினால்
வேய் ஏய் பூம்பொழில் சூழ் விரையார் திருவேங்கடவா!
நாயேன் வந்து அடந்தேன் நல்கி ஆள் என்னைக் கொண்டருளே!"*

வேங்கடத்தில் ஒரு மாதகாலம் தங்கியிருந்து திருவேங்கடவன் மீது நாற்பது பாசுரங்களைப் பாடியருளினார் ஆழ்வார். சீடர்கள் அவற்றை ஓலை நறுக்குகளில் பதித்துக் கொண்டார்கள்.

அங்கே தங்கியிருந்த காலத்தில் சீடர்களுடன் பேசிய ஆழ்வார் "நம்மை விடப் பாக்கியவான் ஒருவனை விரைவிலேயே சந்திக்கப் போகிறோம் என்றும் அவன் நந்திவர்மன்" என்றும் கூறினார்.

"பல்லவப் பேரரசரையா குறிப்பிடுகிறீர்கள்?" என்று கேட்டார் நிழலில் ஒதுங்குவான்.

"ஆம்" என்று சொன்ன ஆழ்வார் "அவனை மறந்து விட்டீர்களா? நம்மைச் சந்திக்க வில்லையே தவிர அரங்கன் ஆலயத் திருப்பணிக்கு அவன் தனது பங்காக நன்கொடையை அனுப்பியிருந்தான். தெரியுமல்லவா?" என்று கேட்டார்.

"அது தெரியும் சுவாமி. ஆனால் நம்மைவிட அவன் பாக்கியவான் என்றீர்களே அது தான் விளங்கவில்லை."

"நிழலில் ஒதுங்குவான்! திருமணங்கொல்லையில் பெருமான் என்பதை அறியாமல் அவனிடமே நகைகளை நான் கொள்ளையிட்ட போது திவ்ய மந்திரத்தை ஒரு கணம் மட்டுமே என் செவிகளில் ஓதிவிட்டு மறைந்தான். ஆனால் அந்த

---

* பெரிய திருமொழி எண் 1028 (நாலாயிர திவ்யப் பிரபந்தம்)

எம்பெருமான் நந்திவர்மன் நந்திபுர விண்ணகரத்தை நிர்மாணித்த போது அவனோடு ஏழு நாழிகை உடனிருந்து திருமந்திரத்தையும் அதன் பொருளையும் உபதேசித்தான் என்றால் அவன் நம்மைவிட பாக்கியவான் தானே?"*

"உண்மைதான் சுவாமி. வியப்பாக உள்ளது. பரவசமாக உள்ளது" என்றார் நிழலில் ஒதுங்குவான்.

"பெருமான் அவனிடம் காட்டிய அன்பு அபூர்வமானது. தன் வாழ்நாளில் முகுந்தனைத் தவிர இதர தெய்வங்களைத் தொழுவதில்லை என்ற மன உறுதியோடு பல்வேறு இடங்களில் விண்ணகரங்களை எழுப்பியவன் நந்திவர்மன். அவனது மனஉறுதியே எம்பெருமானின் அன்பிற்குக் காரணமாயிற்று" என்று சொன்ன ஆழ்வார் "இந்த வேங்கடத்திலிருந்து அவனது ஆட்சியில் இருக்கும் தொண்டை மண்டலம் தொடங்குகிறது. அதையடுத்து இருக்கும் சோழ மண்டலமும் அவனது ஆட்சியின் கீழ்தான் இருக்கிறது. இரண்டு மண்டலத்திலும் எம்பெருமானின் ஆலயங்கள் ஏராளமாக உள்ளன. காஞ்சியில் மட்டும் பதின்மூன்று ஆலயங்கள் உண்டு. சமீபமாக அங்கே பரமேச்சுர விண்ணகரம் என்ற புதிய ஆலயத்தை அவன் எழுப்பியிருக்கிறான். நாம் எந்தெந்த ஆலயங்களுக்குச் சென்று மங்களாசாசனம் செய்யப் போகிறோமோ என்று தெரியவில்லை" என்றார்.

ஒருமாதம் கழித்து திருவேங்கடத்தை விட்டுப் புறப்பட்ட ஆழ்வார் திருவிடவெந்தைக்கு வந்து பூவராகப் பெருமாளைத் தரிசித்து மங்களாசாசனம் செய்துவிட்டுக் கடல்மல்லைக்கு வந்தார்.

கடல்மல்லை கலங்கள் பல இயங்கும் துறைமுகப்பட்டின மாக கலகலப்புடன் இருந்தது. அங்கே கடலலைகள் தொட்டுத் தழுவும் விதமாக அழகான ஆலயங்கள் அமைந்திருந்தன.

அங்கே இருந்த வைணவ அடியார்கள் ஒருங்கே கூடி ஆழ்வாரிடம் வந்து "சுவாமி! தங்களைப் பற்றி நாங்கள் கேள்விப் பட்டிருக்கிறோம். இமாலயம் வரை சென்று வந்த தங்களைத்

---

* 'துளங்கு நீள்முடி அரசர் தம்குரிசில்
தொண்டை மன்னவன் திண்திறல் ஒருவற்கு
உளம்கொள் அன்பினொடு இன்னருள் சுரந்துஅங்கு
ஒடுநாழிகை ஏழுடன் இருப்ப
வளங்கொள் மந்திரம் மற்றுஅவற்கு அருளிச்
செய்தவாறு அடியேன் அறிந்து உலகம்
அளந்தபொன் அடியே அடைந்து உய்ந்தேன்
அணிபொழில் திருவரங்கத்து அம்மானே'

திருமங்கையாழ்வாரின் பெரியதிருமொழி. பாசுரம் எண் 1426

தரிசிக்க நேர்ந்தது எங்கள் பாக்கியம் என்றே சொல்ல வேண்டும். தாங்கள் இங்கே வரவேண்டும் இங்கே எழுந்தருளியுள்ள தலசயனப் பெருமாளை மங்களாசாசனம் செய்ய வேண்டும் என்று பிரார்த்தனை செய்து கொண்டே இருந்தோம். எங்கள் பிரார்த்தனை வீண் போகவில்லை. தாங்கள் உண்மையாகவே இங்கு வந்திருக்கிறீர்கள். எங்கள் கோரிக்கையை ஏற்றுப் பெருமானைப் பாடியருள வேண்டும்" என்றார்கள்.

"தலசயனப் பெருமாள் என்று பெயர் வந்தது எப்படி?" என்று கேட்டார் ஆழ்வார்.

"பெருமான் பாறையில் குடையப் பெற்றவர். அவர் பாம்பணையில் சயனம் செய்யவில்லை. தரையிலேயே சயனித்த வண்ணம் காட்சி தருகிறார். ஆகவே அவருக்குத் தலசயனப் பெருமாள் என்று திருநாமம். ஆனால்..."

"ஆனால் என்ன?"

"கடற்கரையில் முதலில் கட்டப்பட்டது பெருமாள் ஆலயம் தான்.* ஆனால் பின்னால் வந்த ராஜசிம்மப் பல்லவர் சைவசிரோன்மணியாக இருந்த காரணத்தால் காஞ்சியில் கைலாச நாதர் கோயிலைக் கட்டியதோடு இங்கேயும் வந்து பெருமாள் கோயிலுக்கு முன்னும் பின்னுமாகச் சிவாலயங்களைக் கட்டிவிட்டார்"

"அதனால் என்ன? நான் இங்கிருந்தே பெருமானை மனக் கண்களால் கண்டு மங்களாசாசனம் செய்கிறேன். போதுமல்லவா?"

"ஆகா!"

ஆழ்வார் கண்களை மூடினார் அவரது மனக் கண்களில் தலசயனப் பெருமாள் காட்சி கொடுத்தார். அதையடுத்துப் பாசுரங்கள் அவரது திருவாயிலிருந்து புறப்பட்டன.

'பிணங்கள் இடுகாடு அதனுள் நடம்ஆடும் பிஞ்ஞுசகனோடு*...
இணங்கு திருச்சக்கரத்து எம்பெருமானார்க்கு இடம் விசும்பில்
கணங்கள் இயங்கும் மல்லைக் கடல் மல்லைத் தலசனம்
வணங்கும் மனத்தார் அவரை வணங்கு என்தன் மடநெஞ்சே!'***

இருபது பாசுரங்களைப் பாடி வைணவ அடியார்களை மகிழ்வித்தார் ஆழ்வார்.

---

* பக்கம் 218 'ஆழவார்கள் காலநிலை' By. மு. ராகவையங்கார்.

* பிஞ்ஞுகன் என்றால் சிவபெருமான். சிவாலயத்திற்கிடையே பெருமாள் ஆலயம் இருந்ததையே பாசுர வரிகளில் குறிப்பிடுகிறார் திருமங்கை ஆழ்வார்.

*** திருமங்கை ஆழ்வாரின் பெரியதிருமொழி. பாசுரம் எண் 1106.

அப்போது காஞ்சியிலிருந்து மகாமந்திரி பிரம்மஸ்ரீராஜர் பரிவாரங்களோடு வந்து பணிந்து ஆழ்வாரைக் காஞ்சி மாநகருக்கு விஜயம் செய்ய வேண்டும் என்று பல்லவ மன்னன் நந்திவர்மன் விடுத்த அன்பு வேண்டுகோளைத் தெரிவித்தார்.

★

காஞ்சியின் கைலாசநாதப் கோயிலை யடுத்த அநேகதங்கா வதத்தின் பின்னால் இருந்த யோகினியின் ஆசிரமத்திற்கு வந்த ராஜகுரு யோகினிக்கு முன்னால் அமர்ந்து "மரணமடையும் மனிதனுக்கும் ஞானிக்கும் பிராணன் எப்படிப் போகிறது?" என்று கேட்டார்.

"குருநாதரே! இந்தக் கேள்வி இப்போது எதற்காக? தாங்கள் நீடுழி வாழ வேண்டும் என்று அனைவரும பிரார்த்தனை செய்து கொண்டிருக்கும் போது மரணத்தைப் பற்றி எதற்காகப் பேசுகிறீர்கள்? அது வரும்போது வரட்டுமே!" என்றாள் யோகினி.

"இந்த உடலோடு வாழ்வதென்பது ஆத்மாவுக்கு ஒரு சுமை என்று நீயே கூறியிருக்கிறாய். நான் அதை இப்போது உணர்கிறேன். பிராணனை விட்டு விட மனம் விரும்புகிறது. அதோடு நமது வாழ்வும் சாவும் பிறரது பிரார்த்தனைகளில் இல்லை. விதியின் கைகளில்தான் இருக்கிறது" என்றார் ராஜகுரு.

"விதியில் உங்களுக்கு நம்பிக்கை இருக்குமானால் மரணத்தை எப்படி விரும்புகிறீர்கள்? விரும்பினால் அது வந்து விடுமா?"

"உன்னிடம் கோடிக் கணக்கில் கேள்விகள் இருக்கின்றன. லட்சக் கணக்கில் தத்துவங்கள் இருக்கின்றன. ஆயிரக் கணக்கில் விளக்கங்கள் இருக்கின்றன. நூற்றுக் கணக்கில் வியாக்யானங்கள் இருக்கின்றன. எனக்கு அவை திருப்தியும் தரவில்லை. தீர்வையும் தரவில்லை. நான் கேட்ட கேள்விக்கான பதிலை மட்டும் சொல் யோகினி."

"குருநாதரே! சாதாரண மக்களைப் பொறுத்தவரை பிராண னானது அவர்களது உடல்களில் இருக்கும் நவத்துவாரங்களில் ஏதாவது ஒன்றின் வழியாக வெளியேறும். ஞானிகளுக்கு பிராணனானது புருவ மத்திக்கு வந்து சகஸ்ரஹாரம் என்னும் மண்டைக்குச் சென்று அதைப் பிளந்து கொண்டு வெளியேறும்."

"நல்லது யோகினி. ஒருவனுக்கு குரு என்பவன் அவசியமா?"

"அத்வைதத்தில் இருப்பது ஒரு பொருள் தான். குருசீடன் என்றெல்லாம் இல்லை."

"அத்வைதத்தை விடு. துவைதத்தில் சொல்."

"தெளிவைப் பெறவும் உயரவும் விரும்புவனுக்கு வழிகாட்டி அவசியம். அவனே குரு. தரையில் கிடக்கும் கொடி கோபுரத்தில் படர வேண்டுமானால் கொடிக் கொம்பு அவசியம். அந்தக் கொம்பே குரு. கொம்பனே குரு."

"நமது மாமன்னருக்கு?"

"அவர் தரையில் கிடக்கும் கொடியல்ல. ஊன்றுகோல் தேவைப்படும் முடவருமல்ல. இருப்பினும் குரு வேண்டும் என்று விரும்புகிறார். தங்களைக் குருநாதராக ஏற்றுக் கொண்டார்."

"சமீபகாலமாக மாமன்னர் என்னைத் தன் குருநாதராகக் கருதவில்லை."

"தாங்கள் அப்படிக் கூறலாகாது. கங்கநாட்டுப் போரைக் கூடத் தங்கள் ஆலோசனைப்படித் தானே செய்தார்?"

"யோகினி! சீடனானவன் எல்லா விஷயங்களிலும் குரு நாதனைப் பின்பற்ற வேண்டும். ஒரு விஷயத்தில் பின்பற்றுவது மறுவிஷயத்தில் புறக்கணிப்பது என்றிருக்கக் கூடாது. குரு-சீடன் உறவு என்பது எப்போதும் சீராக இருக்க வேண்டும்."

"மாமன்னரைத் தாங்கள் குறை கூறுவது எனக்கு உகந்ததாகப் படவில்லை."

"நீ விவரமறியாமல் பேசுகிறாய் யோகினி. மன்னருக்கு ஞான குரு என்று ஒருவர் இருந்து இறந்து விட்டார். தெரியுமல்லவா?"

"தெரியும்."

"குரு என்றால் ஒருவனுக்கு ஒருவன்தான் இருக்க முடியும். துறைக்கு ஒரு அதிகாரி இருப்பது போல் ஞானத்திற்கு ஒரு குரு, மோனத்திற்கு ஒரு குரு, மௌனத்திற்கு ஒரு குரு, ராஜரீகத்திற்கும் ராஜாங்கத்திற்குமெல்லாம் பல குருமார்கள் இருக்கலாகாது. குரு என்பவன் சகலமும் அறிந்தவன். சீடனானவன் அவர் மூலமே சகலத்தையும் அறிய முடியும். ஞான குரு இறந்தபிறகு வேறு ஞான குரு வேண்டியதில்லை என்றேன் நான். அவர் கேட்கவில்லை. புதிய ஞானகுரு ஒருவர் வருவார் என்று அவரே சொன்னாராம். அவர் இப்போது வந்து கொண்டிருக்கிறாராம். அவரை வரவேற்று ஞான குருவாக்கிக் கொள்ள வழிமேல் விழி வைத்துக் காத்திருக்கிறார் மன்னர். என்னத்தைச் சொல்ல?"

"குருநாதரே! மாமன்னருக்கு அதிகாரம் உண்டு. சுதந்திரம் உண்டு. உரிமை உண்டு. அதில் யார் தலையிட முடியும்?"

"நீ கூறும் விஷயங்கள் மன்னனுக்கு இருக்கலாம். சீடனுக்கு இருக்கக் கூடாது."

"ஐயா! அவர் தங்கள் சீடனாக மட்டுமே இருக்க முடியுமா? அவரென்ன குருகுலமா பயின்ற கொண்டிருக்கிறார்? மன்னராக ஆட்சி புரிந்து கொண்டிருக்கிறார்."

"ஜனக மகாராஜா தெரியுமல்லவா? சீதையின் தந்தை. அவர் நந்திவர்மனை விடப் பெரிய அரசர். அரசர் மட்டுமல்ல. ராஜ ரிஷியாகவே இருந்தார். ஆனாலும் அவர் தன் குலகுரு வசிஷ்டர் வாக்கைத் தவறியதில்லை."

"தாங்கள் மாமன்னரின் குல குரு அல்லவே?"

"அவசியமில்லை. எந்தக் காலகட்டத்தில் அமைந்தாலும் குரு குருதான். சீடன் சீடன் தான். குருவுக்கும் சீடனுக்கும் இடையில் எதுவும் தடையில்லை."

"தாங்கள் வருந்த வேண்டாம் ஐயா. குருவின் மேன்மையை மாமன்னர் உணரும் காலம் வரும்."

"அதற்கு முன் என் காலம் முடியவேண்டும் என்பதே என் விருப்பம்."

"புதியதாக வரும் ஞானகுரு யார்?"

"தெரியாது. தெரிந்து கொள்ளவும் விரும்பவில்லை."

★

திருப்பருத்திக் குன்றத்தில் தர்மகுரா மரத்தடியில் நூற்றுக் கணக்கான சமணர்கள் அமர்ந்திருந்தார்கள். அவர்களில் துறவிகளும் இருந்தார்கள். துறவறம் பூணாத சமணர்களும் இருந்தார்கள்.

அவர்களுக்கு முன்னால் அமர்ந்திருந்த தலைமைச் சமணத் துறவி துலாபாரர் நீண்ட நேரமாகக் கண்களை மூடிய நிலையிலேயே இருந்தார்.

தங்களை வரச் சொல்லிவிட்டு அவர் எதற்காகக் கண்களை மூடிக் கொண்டிருக்க வேண்டும் என்று நினைத்தார்கள் சமணர்கள்.

"கண்களைத் திறவுங்கள் அடிகளே" என்று சிலர் குரல் கொடுக்கவும் செய்தார்கள்.

கண்ணைத் திறந்தார் துலாபாரர்.

சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு "நான் மட்டும் சிவனாக இருந்திருந்தால் நெற்றிக் கண்ணைத் திறந்திருப்பேன். எல்லோரையும் எரித்திருப்பேன்" என்றார்.

எல்லோரும் சிரித்தார்கள்.

"எதற்காகச் சிரிக்கிறீர்கள்?" என்று கோபத்தோடு கேட்டார் துறவி.

"சமணத் துறவியான உங்களுக்குச் சிவனின் மீது இவ்வளவு கரிசனம் இருக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை" என்றார்கள் சமணர்கள்.

அப்போது பணியாளன் ஒருவன் வந்து ஓலை நறுக்கு ஒன்றைக் கொடுத்தான்.

"இல்லத்திற்கு உடனே வரவும். பவானி" என்றிருந்தது ஓலையில்.

"நான் வரமுடியாது என்று சொல்" என்று கூறி ஓலையை அவனிடமே கொடுத்த துலாபாரர் "தன்னிலை மறந்து பேசுகிறீர்கள். எனக்குச் சிவன் மீதும் பெருமாள் மீதும் கரிசனமில்லை என்ன செய்வது! மகாவீரர் வர்த்தமானருக்கு நெற்றிக்கண் இல்லையே!" என்று கூறி வார்த்தைகளை இறைத்தார்.

அப்போது பணியாளன் மீண்டும் வந்து வேறொரு ஓலையைக் கொடுத்தான்.

அதைப் படித்ததும் பதறிப்போன துறவி "வருகிறேன் போ" என்றார்.

அவருக்கு இருப்புக் கொள்ளவில்லை.

★★★



கேள்வியும் பதிலும்

"புத்தருக்கும் முன்னால் பூத்த மதமான சமணம் சமாதியாவதைக் கண்டுச் சகிக்க முடியாமல் நான் தகித்துக் கொண்டிருப்பதை உணராமல் சிரிப்பை வெளிப்படுத்திச் சரிந்து போகிறீர்களே. இது நமக்குப் பெருமையா? சிறுமையா?" என்று மனமுருகித் துலாபாரர் பேசி முடித்ததபோது -

"தாங்கள் இவ்வளவு உருகிப் பேசுகிறீர்களே! உங்கள் நடவடிக்கை மட்டும் சரியா?" என்று கேட்டார் ஒரு சமணர்.

"என் நடவடிக்கைக்கு என்ன?"

"தாங்கள் இந்தச் சமண பீடத்தின் தலைமைத் துறவி. தங்களுக்கும் ஒரு கணிகைக்கும் தொடர்பு இருப்பதாகச் சொல்கிறார்களே, அது சரியா?"

"இப்படியொரு கேள்வியைக் கேட்பதற்கு முன் உங்களுக்குள் எத்தனை பேர் உண்மைத் துறவிகளாகவும் உண்மைச் சமணர்களாகவும் இருக்கிறீர்கள் என்று சொல்ல முடியுமா? மதத்திற்கு விபத்து வந்தபோது என்னோடு ஒத்துழைக்க மறுத்த நீங்கள் சமணர்களே அல்ல. தன் தகுதியை இழந்தவன் பிறர் தகுதியைப் பற்றி கேள்வி கேட்கும் உரிமையை இழக்கிறான்" என்று துலாபாரர் கூறியபோது -

பணியாளன் ஒருவன் வந்து ஓலையைக் கொடுத்தான்.

"உடனே வராவிட்டால் நானே அங்கு வந்து பிறந்த மேனியோடு நிற்பேன் - பவானி" என்றிருந்தது ஓலையில்.

பதறிப் போனார் துறவி.

அவள் வெட்கங் கெட்டவள்தான்.

ஆனால் அவ்வாறு வந்து நின்றால் தன் சாயம் வெளுத்து விடும் என்று அஞ்சிய அவர் அதற்கு இடம் கொடுக்க விரும்பாமல் "வருகிறேன் போ" என்றார் பணியாளனிடம்.

பிறகு முன்னால் அமர்ந்திருந்தவர்களைப் பார்த்து "பொது வாழ்க்கையில் செய்யும் காரியங்களுக்கு முன்னால் தனிமனித ஒழுக்கம் முக்கியமல்ல. மதம் அழிய நேரும்போது அதைக் காப்பாற்றுவதற்கு எப்படியாவது முயல்வது தான் மதவாதியின் லட்சியமாக இருக்க வேண்டும். லட்சியம் என்னும் ஊருக்குச் செல்லும் வழியில் சேற்றில் இறங்க நேரிடலாம். சேற்றில் இறங்கியாவது பயணத்தைத் தொடர வேண்டுமேயன்றி சேற்றை நினைத்துக் கொண்டு தயங்கியபடி நின்றுவிடக் கூடாது. சேறு என்பது கழுவிவிடக் கூடியது. சேறு பட்டுவிட்டதால் உடல் கூறுகள் அழிந்து விடாது. அது நிலையாகவே இருக்கும்" என்றார்.

அவருக்குப் பவானி வந்து நிர்வாணமாய் நிற்பது போலப் பிரமையாக இருந்தது. இருப்புக் கொள்ளவில்லை.

"இரவு நேரம் முகிழ்க்கப் போகிறது. எல்லோரும் கலைந்து சென்று கருமங்களைக் கவனியுங்கள்" என்றார்.

"ஓலை ஒன்று வந்ததே அதில் என்ன இருந்தது அடிகளே?" என்று வினவினார் ஒருவர்.

"என் தலைவிதி எழுதியிருந்தது. போங்கள் எல்லோரும்" என்று எரிந்து விழுந்தார் துலாபாரர்.

"துறவிக்குக் கணிகையிடமிருந்து அழைப்பு வந்துவிட்டது" என்று சொல்லிக் கொண்டு கலைந்தார்கள் சமணர்கள்.

துலாபாரர் மகா கடுப்புடன் பவானியின் இல்லத்திற்குச் சென்றார்.

கதவு திறந்தே இருந்தது.

"வெட்கங் கெட்டவளுக்குக் கதவு திறந்து கிடந்தால் என்ன? மூடியிருந்தால் என்ன?" என்று உள்ளுக்குள் கூறிக்கொண்டு உள்ளே சென்ற அவருக்கு உள்ளே விரிந்த காட்சி அள்ளிக்கொண்டு சென்றது.

அறையில் தாமரைப் பூ இதழ்களும், மல்லிகைப் பூக்களுமாய் பரவிக் கிடக்க - அதற்குள் கிடந்தாள் பவானி. அவளது முகம் மட்டுமே வெளியே தெரிந்தது.

"ஆகா! இவளுக்குத் தான் என்ன விதமான ஆசை? நமக்குக் கூடத் தோன்றவில்லையே! மலருக்கும் அவளுக்கும் வித்தியாசமே இல்லாமல் அல்லவா இருக்கிறது! நானும் போய் அவளோடு கலந்து விட்டால் என்ன?" என்று நினைத்தது அவர் மனம்.

அதற்குள் அவள் "அங்கேயே அமருங்கள். வந்து விடுகிறேன்" என்று குரல் கொடுக்கவே கூடத்தில் இருந்த ஆசனத்தில் அமர்ந்தார்.

அவள் வருவதற்கு நேரமாகவே அவருக்குள் என்னென்னவோ எண்ணங்கள் ஓடின.

அவள் ஒருவாறாக வந்து அமர்ந்ததும் அவர் பழையநிலைக்கு வந்து "துரோகி! என்னைக் காட்டிக் கொடுத்த வஞ்சகி. எப்படி இங்கு வந்தாய்? எதற்காக வந்தாய்?" என்று கோபமாகக் கேட்டார்.

"நான் துரோகி என்றால் - வஞ்சகி என்றால் என் ஓலையைப் பார்த்ததும் ஏன் ஓடி வந்தீர்கள்?" என்று கேட்டாள் பவானி.

"நீ அங்கு வந்து அதில் உள்ளபடி நின்றிருந்தால்? அதைத் தடுக்கவே வந்தேன்" என்றார் துறவி.

"துரோகி எப்படி வந்தால் என்ன? வஞ்சகி எப்படி இருந்தால் என்ன? எதற்கு உங்களுக்குக் கவலை?"

"இதோ பார் பவானி. பேச்சைத் திசை திருப்பாதே. தழைக்காட்டு மாளிகையில் சேனாதிபதி புவியரசனுக்கு என்னை நீ காட்டிக் கொடுத்தது பொய்யா? அது துரோகம் இல்லையா? வஞ்சகம் இல்லையா?"

"அங்கு நிலவிய சூழ்நிலை என்ன என்பது உங்களுக்குத் தெரியுமா? அந்தச் சேனாதிபதி என்னைச் சித்திரவதை செய்தான். மானபங்கம் செய்தான். நான் உண்மையைச் சொன்னேன். சொல்லாவிட்டால் சித்திரவதை நடந்திருக்கும். உயிர் போயிருக்கும். எனக்கு என் உயிர் மேல் ஆசை இருக்கக் கூடாதா? வெளிநாட்டில் எதுவும் தெரியாத நிலையில் தனியாக என்னை விட்டுவிட்டுப் போனீர்களே அது நியாயமா?"

"உனக்கு அப்படி நேரும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. மன்னன் என்னை நம்பிவிட்டான் என்று நினைத்தேன். நமக்கு இரண்டாயிரம் பொற்காசுகள் வந்து சேரும் என்று தான் நினைத்தேனே தவிர இக்கெட்டுகள் வந்து இடிக்கும் என்று நினைக்கவில்லை."

"நினைத்திருக்க வேண்டும் அடிகளே. இரண்டு விதமாகவும் நினைத்திருக்கவேண்டும்.அதற்கேற்பவழிகளையும்யோசித்திருக்க வேண்டும். கங்கமன்னரிடம் நீங்கள் கூறியதெல்லாம் வடிகட்டிய பொய்கள் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். பொய்களை எல்லோருமே நம்ப மாட்டார்கள் என்பதும் தெரிந்திருக்க வேண்டும். தவறு உங்கள் மீதுதான். என்மீது இல்லை. அந்தச் சேனாதிபதி ஓர் அரக்கன். நரகத்தில் இருக்க வேண்டியவன். அவன் முனைந்த சித்திரவதையை உங்களிடம் காட்டியிருந்தால் நீங்களும் உண்மையைச் சொல்லியிருப்பீர்கள்."

"பெரிய கனவுகளோடு கங்கநாட்டிற்கு வந்தேன் பவானி. பல்லவ நாட்டில் புதைந்து போன சமணத்தை கங்கநாட்டில் வெளிக் கொணர நினைத்தேன். உன்னை மாளிகையில் விட்டு விட்டு கங்கநாட்டுச் சமண விஹாரங்களுக்கு நான் சென்றது உண்மை. சமண ஆச்சார்யர்களைச் சந்தித்தது உண்மை. சாதகமான பதில்கள் கிடைத்தது உண்மை. எல்லாம் நீ சொன்ன உண்மையால் சிதறி விட்டன. நீ பிடிபட்டதும் என்னைத் தேடி கங்கர்கள் அலைவது எனக்கு உடனடியாகத் தெரிந்தது. தலைமறைவானேன். படாதபாடு பட்டு இங்கு வந்து சேர்ந்தேன். நீ எப்படி வந்தாய்?"

"உங்களுக்கு ஆபத்து என்றதும் தப்பி விட்டீர்களே தவிர என்னைப் பற்றிக் கவலைப் பட்டீர்களா? நான் பெண். எப்படித் தப்ப முடியும் என்று யோசித்தீர்களா? அந்தப் பாவி சேனாதிபதி என்னை அந்தப் புரத்தில் சேர்த்தான். நல்ல வேளையாகப் போர் வந்தது. அவனும் போய்ச் சேர்ந்தான். படாதபாடு பட்டு, தப்பித் தத்தளித்து இங்கு வந்து சேர்ந்தேன். பத்து நாட்களுக்கு சிகிச்சை நடந்தது. இரண்டு நாட்களாகத் தான் சுமாராக இருக்கிறது. நீங்களோ தப்பியது மட்டுமில்லாமல் இங்கு வந்து சேர்ந்ததையும் சொல்லவில்லை. இன்றைக்குச் சமணர்களைக் கூட்டிக் கூட்டம் போட்டபோதுதான் நீங்கள் இங்கு வந்திருப்பது தெரிந்தது. உடனே வரச் சொன்னேன். வர முடியாது என்றீர்களாமே ஏன்?"

துறவிக்குச் சேனாதிபதி பவானியை அனுபவிக்காமலா விட்டிருப்பான் என்ற கேள்வியே உள்ளுக்குள் ஓடியது. உயிருக்குப் பயந்து உண்மையைச் சொன்னவள் அதே உயிருக்காக உடலையும் கொடுக்காமலா இருந்திருப்பாள் என்று நினைத்தார். என்ன இருந்தாலும் கணிகை புத்தி தானே இவளுக்கு இருந்திருக்கும் என்று அவள்மீதுதான் குறை கண்டாரே தவிர தான் புரையோடி விட்ட பெருங்குறையை - குற்றத்தை எண்ணிப்பார்க்கவில்லை.

அவரது மௌனத்தைக் கண்டு "என்ன? பதில் சொல்ல மாட்டீர்களா?" என்று அவள் கேட்டபோது தான் தெளிந்தார் அவர்.

"எனக்கு முன்னால் திரண்டிருந்த சமணர்களை வசப்படுத்த முயன்று கொண்டிருந்தபோது உன் ஓலை வந்ததால் அப்படிச் சொல்லிவிட்டேன் பவானி. அதற்காக நீ அனுப்பிய இரண்டாவது ஓலை மிகவும் மோசம். இப்படியுமா எழுதுவாய்?" என்று கேட்டார்.

"ஓலை எழுதாமல் நான் அந்தக் கோலத்தில் வந்திருந்தால் என்ன செய்திருப்பீர்கள்?" என்று கேட்டாள் பவானி.

"இது என்ன வெட்கங் கெட்ட பேச்சு? நான் மட்டுமே பார்க்கக் கூடியதை மற்றவர்கள் பார்ப்பதா? இப்படியொரு எண்ணம் உனக்குக் கனவிலும் வரக் கூடாது" என்றார்.

"வெற்றுக் கோபம். கங்கநாட்டில் தனியாக விட்டு விட்டுப் போன போது இந்த நினைப்பு வரவில்லையா? அந்தச் சேனாதிபதி தான் பார்த்து, ரசித்து, ருசித்து, புசித்து முடித்து விட்டானே?" என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்ட அவள் "எல்லாம் பொய். என்மீது உங்களுக்கு ஆசையும் இல்லை. அக்கறையும் இல்லை" என்றாள்.

"அப்படிச் சொல்லாதே பவானி. சற்றுமுன் மலர்களோடு மலராக உன்னைப் பார்த்தபோது நான் என்ன நினைத்தேன் தெரியுமா? மலர்களோடு நானும் சேர்ந்திருக்கக் கூடாதா என்று நினைத்தேன்."

"அது ஆசையாக இருக்கலாம். அக்கறையாக இருக்க முடியாது."

"எதற்காக என்னை வறுத்தெடுக்கிறாய்? இரண்டு பேருமே கஷ்டப்பட்டிருக்கிறோம். கஷ்டப்படுத்த வேண்டும் என்று நானும் முயலவில்லை. நீயும் முயலவில்லை. மகான் வர்த்தமானர் அருளால் நாம் இருவரும் ஒன்று சேர்ந்து விட்டோம். நான் அடி எடுத்து வைப்பதும் மடி விரித்து யாசிப்பதும் சுயநலத்திற்காக அல்ல. சமணத்திற்காகத் தான். உயிர் போகும் வரை என் முயற்சி மதத்திற்காகவே தொடரும்."

"அடிகளே! நான் ஒன்று சொன்னால் கேட்பீர்களா?"

"சொல்"

"வீணாகச் சமணத்தைக் கட்டிக் கொண்டு அழுகிறீர்கள்? அது வாழ்வதற்கான அறிகுறிகள் எதுவும் இல்லாதபோது எதற்காக அலைகிறீர்கள்? மொட்டைத் தலையால் மொட்டைப் பாறையில் மோதினால் மண்டை தான் உடையும். பாறை நகராது. உடையாது."

"பவானி! எனக்கு இங்கே உள்ள சமணர்களின் ஒத்துழைப்பு அறவே இல்லை. என்மீது அவர்களுக்கு மரியாதையில்லை. சற்றுமுன் நடந்த கூட்டத்தின்போது நான் உன்னோடு வைத்திருக்கும் தொடர்பு பற்றிக் கேட்டார்கள். நான் உன்னோடு உறவாடுகிறேன் என்பது அவர்களுக்குத் தெரிந்துவிட்டது. நீ அனுப்பிய ஓலையில் என்ன எழுதியிருந்தது என்று கூடக் கேட்டார்கள். இதெல்லாம் என்னை அவர்கள் தலைமைத்

துறவியாக மதிக்கவில்லை என்றே தெரிகிறது. ஆனாலும் இது தற்காலிக நிலைதான். நான் சற்றே மாறி தர்மகுரா மரத்தடியில் நான்கு நாட்களுக்கு உபவாசம் இருந்து என் பேச்சு வன்மையைக் காட்டினால் வளையாத இரும்பும் வளைவதுபோல், விளையாத பயிர்கள் விளைவது போல் மாறுவார்கள் மயங்குவார்கள்."

"அது நடக்கலாம். ஆனால் உங்களுக்குத் தடையாக இருப்பது பல்லவ மன்னர் நந்திவர்மர். சங்கலி கொலை சம்பந்தமாக உங்களை இதுவரைக் கைது செய்யாமல் இருப்பது புரியாத புதிர். உங்கள் விஷயத்தில் அவர் நகராத மலை. மூட்டாத உலை. அவர் இருக்கும்வரை உங்கள் மதம் முடக்கப்பட்டுத்தான் இருக்கும். உடைக்கப்படுவதற்கும் சாத்தியம் உண்டு. தலைமைத் துறவியாக மதிப்போடும் மரியாதையோடும் இருந்த நீங்கள் மதம் ஆட்டப்பட்டபோது நீங்கள் ஆடி விட்டீர்கள். அடியறுந்து விட்டீர்கள். இக்கெட்டான நேரத்தில் இரும்பு இதயத்தோடு கல்தூணாக நின்றிருக்க வேண்டிய நீங்கள் கரும்பாய் மாறி வளைந்து நசுங்கி வெறும் சக்கையாக இருக்கிறீர்கள். என்னைத் தேடி வந்து குப்பையாகி விட்டீர்கள். உங்களால் சமணத்தை ஒருபோதும் உயிர்பிக்க முடியாது. துறவியின் லட்சணங்களைப் பூரணமாக இழந்துவிட்டு காமத்தின் லட்சணங்களை மிதமிஞ்சி ஏற்றுக் கொண்டீர்கள். இது அழியாத கறை, அதிகபட்சமான குறை. இவற்றை அகற்றி நீங்கள் துறவி என்னும் புனித நிலையை - ஒரு போதும் அடைய முடியாது. உங்கள் மனட்சாட்சியே கூட உங்களை அனுமதிக்காது. மகாவீரர் உங்களை ஏற்கமாட்டார். ஆகவே உங்கள் பதவியைத் துறந்து விடுங்கள். இங்கே உள்ள துறவிகளில் உண்மையான ஒருவரை நீங்களே தலைமைத் துறவியாக நியமனம் செய்யுங்கள். அவரை எல்லோரும் ஏற்பார்கள். ஒரு பிரச்சனையும் இருக்காது. எல்லோரும் ஒன்று சேர்ந்து சமணத்தைக் காலவட்டத்தில் தூக்கி நிறுத்துவார்கள். உங்களைப் பொறுத்தவரை நீங்கள் சமணர் இல்லை. உங்களால் உண்மைத் துறவிகளைப் போல் நிர்வாணம் எய்த முடியாது. நிர்வாணமாக நிற்கத்தான் முடியும். ஆகவே நீங்கள் துறவி என்பதை மறந்துவிட்டு மனிதப் பிறவி என்று மட்டுமே கருதி என்னோடு கடைசிவரை ஆனந்தமாக வாழுங்கள். அதைவிட என்ன வேண்டும் உங்களுக்கு?"

யோசித்தார் துலாபாரர். பவானி கூறுவது தான் நடக்குமே தவிர தனது வறட்டு வைராக்கியம் வெற்றி ெபறாது என்பது அவருக்குப் புரிந்தது.

"மலருக்குள் போவோமா பவானி?" என்று கேட்டார்.

"இதுதான் சரி. சற்று இருங்கள். அறைக்குள் இன்னும் கொஞ்சம் மலர்களைக் கொட்டிவிட்டு உங்களை அழைக்கிறேன்" என்று கூறிவிட்டு பவானி உள்ளே சென்றாள்.

சிறிது நேரம் கழித்து மலர் அறையிலிருந்து அழைத்தாள்.

அங்கே சென்ற போது அவள் மலருக்குள் மறைத்துக் கொண்டு படுத்திருப்பது அவருக்குத் தெரிந்தது.

மலர்த்திட்டில் அவரும் நுழைந்தபோது தான் அவள் ஆடையில்லாமல் மலருக்குள் இருக்கிறாள் என்று தெரிந்தது.

அவரது காமாக்னி மூண்டது.

மலர்களுக்குள்ளேயே அவளைப் புரட்டினார் துறவி.

மலர்களின் நறுமணம் இருவரையும் பரவசப்படுத்தியது.

பட்டு மெத்தையை விட மலர்மெத்தை இதமாக இருந்ததால் பதமாக தனது கலைகளைக் காட்டினார் துறவி.

துறவியின் மீது இந்த ஒரு விஷயத்தில் அவளுக்குத் தனி ஈடுபாடு இருந்ததால் அவரோடு பாம்பாக இணைந்தாள் பவானி.

காமம் எல்லைகளைக் கடந்து புது எல்லைகளைச் சிருஷ்டித்துக் கொண்டிருந்தது.

இதற்கிடையில் திருமங்கையாழ்வார் காஞ்சியில் பட்டினப் பிரவேசம் செய்தார்.

அந்தப் பிரவேசம் பல மாறுதல்களை உண்டாக்கப் போகிறதென்று யாரும் அறியவில்லை.

★★★



நகரப்பிரவேசம்

திருமங்கையாழ்வார் காஞ்சி நகரப் பிரவேசம் செய்த போது வானத்தில் நாரைகள் குடைபிடிப்பது போல் பறந்தன.

சீடர்களைப் பார்த்து "நந்திவர்மனை நம்மைவிட பாக்கியவான் என்று சொன்னேனே நினைவிருக்கிறதா? அவன் எப்படிப் பாக்கியவான் என்றும் உங்களுக்குச் சொன்னேன். ஆனபடியினால் தான் அவன் கோட்டைப் பிரவேசம் செய்யும் போது அவனது உயர்வைக் குறிக்கும் விதமாக நாரைப் பட்சிகள் குடை பிடிக்கின்றன" என்றார் ஆழ்வார்.

அவர் கோட்டையின் உட்புறம் வந்ததும் பரிவாரத்துடன் நின்றிருந்த நந்திவர்மன் நெடுஞ்சாண் கிடையாக விழுந்து வணங்கினான்.

"நீடூழி வாழ்வாயாக. எழுந்திரு நந்திவர்மா" என்றார் ஆழ்வார்.

மன்னன் எழுந்து நின்று வணங்கினான்.

"மாமன்னன் நீ. எதற்காக இப்படித் தரையில் விழுந்து வணங்கினாய்?" என்று கேட்டார் ஆழ்வார்.

"துறவிக்கு வேந்தன் துரும்பு என்பது மூதுரை. அதோடு நான் மன்னனாக வணங்கவில்லை. வைஷ்ணவனாக வணங்கினேன்" என்றான் நந்திவர்மன்.

"இல்லை. உனக்கு மண்மேல் ஆசை. ஆகவே தான் மண்ணில் விழுந்து வணங்கினாய்" என்றார் ஆழ்வார்.

"இந்த மண்ணில் தாங்கள் நிற்கும் பட்சத்தில் இது புனிதமாயிற்று. ஆகவே அதை வணங்குவதில் எங்களுக்குப் பெருமை" என்றான் நந்திவர்மன்.

ஆழ்வார் லேசாகச் சிரித்தார்.

மங்கள வாத்தியங்கள் முழங்க -

மக்கள் வழியெல்லாம் ஆரத்தி எடுக்க -

வேதியர்கள் வேதமந்திரங்களை ஓத -

நடனமாதர்கள் நர்த்தனங்கள் புரிய -

காஞ்சியின் ராஜவீதிகளில் ஆழ்வாரும் அவரது சீடர்களும் அழைத்துச் செல்லமாட்டார்கள்.

ஆழ்வார் அரண்மனையில் தங்கமாட்டார் என்பதால் பொய்கையாழ்வார் மடத்திற்கு அழைத்துச் சென்று அங்கே தங்கும்படிக் கேட்டுக் கொண்டான் மன்னன்.

"குறிப்பறிந்து நடந்து கொள்கிறாய். அதுவும் மகான் பொய்கையாழ்வார் மடத்தில் தங்குவது எனக்கு மனநிறைவைத் தருகிறது" என்றார் ஆழ்வார்.

"சுவாமி! தாங்கள் காஞ்சியில் தங்கியிருந்து இங்கே எழுந்தருளியிருக்கும் எம்பெருமானையெல்லாம் மங்களாசாசனம் செய்தருள வேண்டும்" என்று வேண்டிக் கொண்டான் மன்னன்.

"அவன் சங்கல்பம்ப் படி அனைத்தும் நடக்கும்" என்றார் ஆழ்வார்.

அதோடு "நாளைக்கு பரமேச்சுர விண்ணகரத்திற்கு விஜயம் செய்ய உத்தேசம்" என்றார்.

"காத்திருக்கிறோம் சுவாமி" என்றான் மன்னன்.

ஆழ்வாரும் சீடர்களும் மடத்திற்கு அருகேயிருந்த பொய்கையிலேயே நீராடினார்கள். பணிவிடைகள் செய்யப் பணியாளர்கள் வேண்டாம் என்று சொல்லி சீடர்களையே பயன்படுத்திக் கொண்டார் ஆழ்வார். எனினும் அவருக்கும் சீடர்களுக்கும் உரிய உணவை மடத்தில் இருந்த மடைப்பள்ளியர்கள் கவனித்துக் கொண்டார்கள்.

மறுநாள் மடத்திற்கு ராணியையும் மகன் தந்திவர்மனையும் அழைத்து வந்து அறிமுகப்படுத்தினான் மன்னன்.

"சௌபாக்கியவதியாக இருப்பாய் மகளே" என்று ராணியை வாழ்த்தினார் ஆழ்வார்.

மகனை அறிமுகப்படுத்திய மன்னன் "இவன் என் மகன் தந்திவர்மன் சுவாமி. இவனது சேவை நிர்வாகத்தில் குறைவாகவும் பகவானிடம் நிறைவாகவும் இருக்கிறது" என்றான்.

"உனது பெருமைகளை இவன் கட்டிக் காப்பான். இவன் காலத்திலும் வைணவம் சிறப்பாக இருக்கும். இவன் உனக்கு

மகனாகப் பிறந்தது பூர்வ ஜன்மப் புண்ணியம்" என்று கூறிய ஆழ்வார் "வெற்றிகளோடு வாழ்வாய்" என்று ஆசிர்வதித்தார்.

பிறகு அனைவரும் பரமேச்சுர விண்ணகரத்திற்குச் சென்றார்கள்.

ஆலயத்தின் எழிலைக் கண்டு அப்படியே அசந்து போய் நின்றார் ஆழ்வார்.

சீடர்களைப் பார்த்து "அரங்கன் கோயிலுக்கு நெடுமதில் களையும் வானளாவிய கோபுரங்களையும் கட்டியபோது பிரம்மாண்டத்தை உணர்ந்தேன். இங்கேயோ பிரம்மாண்டம் இல்லை.பிரமிப்பு இருக்கிறது.பரவசம் இருக்கிறது.பரமபதத்திற்கு வந்த மாதிரி இருக்கிறது. உள்ளே எழுந்தருளி இருப்பதும் வைகுண்ட நாதன்தான். இது போன்றத் தலங்கள் பெருமானே பெருமைபட்டுக் கொள்ளக் கூடிய தலங்கள். எல்லோராலும் எப்போதும் கட்டிவிட முடியாது. நந்திவர்மனுக்கு மட்டுமே அந்த ஆற்றல் இருக்கிறது. அவனுக்கு அருளும் இருக்கிறது" என்று சொல்லிவிட்டு மன்னனைப் பார்த்து "இக்கோயிலுக்குப் பரமேச்சுர விண்ணகரம் என்று எப்படித் திருநாமம் சூட்டினாய்?" என்று கேட்டார்.

"எம் பெருமானே தலையாய தேவன். விண்ணகரத்தில் அவன் இருப்பது போலவே மண்ணகத்திலும் இருக்கிறான் அப் பரமேஸ்வரன். ஆகவே தான் பரமேச்சுர விண்ணகரம் என்ற திருநாமத்தைச் சூட்டினேன் சுவாமி" என்றான் மன்னன்.

அர்ச்சகர்கள் வேதங்களை ஓதி ஆழ்வாருக்குப் பூரணகும்ப மரியாதையைச் செய்து உள்ளே அழைத்துச் சென்றார்கள்.

கோயிலின் தரைத் தளத்தில் வீற்றிருந்த திருக்கோலத்தில் இருந்த எம்பெருமானைக் கண்டார்.பரவசத்தோடு வணங்கினார். மன்னன் அவரை முதல் தளத்திற்கு அழைத்துச் சென்றான். அங்கே ஸ்ரீதேவி பூதேவி சமேதராய் பெருமாள் சயனநிலையில் எழுந்தருளியிருந்ததை தரிசனம் செய்தார் ஆழ்வார். அதையடுத்து இரண்டாம் தளத்திற்கு அழைத்துச் சென்றான் மன்னன். அங்கே எம்பெருமான் நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிப்பதைக் கன்னடு கண்கள் பனிக்கச் சேவித்தார் ஆழ்வார். மன்னன் அவரை மூன்றாம் தளத்திற்கு அழைத்துச் சென்றான். அங்கே கருவறை காலியாக இருந்தது.

"என்ன?" என்பது போல் கண்களால் வினவினார் ஆழ்வார்.

"சுவாமி! இதுவரை மூன்று நிலைகளில் எழுந்தருளியிருந்த எம்பெருமான் இங்கே உருவம் இல்லாதவனாக - உருவங்களுக்கு



அப்பாற்பட்டவனாக - ஒளி வடிவினனாக - உணரக் கூடியவனாக இருக்கிறான்" என்றான் மன்னன்.

"பகவத் கீதையில் பகவான் சொன்னது இங்கே விளங்கக் கூடியதாக இருக்கிறது"* என்றார் ஆழ்வார்.

அஷ்டாங்க விமானத்தை விட்டுக் கீழே இறங்கினார்கள்.

தரைத் தளத்திற்கு வந்த ஆழ்வார் கண்களை மூடினார். உதடுகள் பாசுரங்களை உதிர்த்தன.

'சொல்லுவன் சொல் பொருள்தான் அவை ஆய்ச்
சுவை ஊறு ஒலி நாற்றமும் தோற்றமும் ஆய்
நல்அரண் நாரணற்கு நான்முகன்
இடம் தான் தடம் சூழ்ந்து அகழாது கச்சி
பல்லவன் வில்லவன் என்று உலகில்
பலராய்ப் பலவேந்தர் வணங்கு கழல்
பல்லவன் மல்லையர் கோன்பணிந்த
பரமேச்சுர விண்ணகரம் அதுவே'**

பத்துப் பாசுரங்களைப் பாடியருளினார் ஆழ்வார். ஒவ்வொரு பாசுரத்திலும் எம்பெருமானோடு தன்னையும் சேர்த்துச் சேர்த்து அவர் மங்களாசாசனம் செய்ததைக் கேட்ட போது மன்னனின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகியது.

"விண்ணகரத்தை நிர்மாணித்த போது கூட நான் திருப்தியடைய வில்லை. தாங்கள் மங்களாசாசனம் செய்த பிறகு தான் நிறைவாக இருக்கிறது சுவாமி" என்றான் மன்னன்.

பிறகு அவரை உட்சுற்றுக்கு அழைத்துச் சென்றான். அங்கே சுவற்றில் செதுக்கப்பட்டிருந்த எழில் கொஞ்சும் சிற்பங்களை அவருக்குச் சுட்டிக் காட்டினான்.

"பரமநாதனின் திருவுருவச் சிற்பத்தோடு தொடங்குகிறது. இது பல்லவர்கள் தோன்றிய பரத்வாஜ குல குருவைக் குறிக்கிறது. இது பல்லவ முன்னோர்களது திருவுருவங்கள். அவர்களது ஆட்சிக்காலக் காட்சிகள்" என்றான் மன்னன்.

குடை பிடித்தபடி காட்சியளிக்கும் சிற்பம் ஒன்றைக் கண்டக் ஆழ்வார் "இது யார்?" என்று கேட்டார்.

---

* பக்கம் 19 'The Vaikunta Perumal Temple at Kanchipuram' By. D. Dennis Hadson

தற்போது காஞ்சியில் உள்ள இக்கோயிலில் தரைத்தளத்திலும் முதல் தளத்திலும் உள்ள பெருமானை மட்டுமே காணமுடியும். அதற்கு மேலே விமானம் பலவீன நிலையில் இருப்பதால் யாரையும் அனுமதிப்பதில்லை.

** திருமங்கை ஆழ்வாரின் பெரியதிருமொழி. பாசுரம் எண் 1128.

"யுவான் சுவாங். நரசிம்ம பல்லவர் காலத்தில் இங்கு பயணம் செய்த சீன யாத்தரீகர்" என்று சொன்ன மன்னன் அடுத்து வெளிநாட்டில் தன் தந்தையோடும் சகோதரர்களோடு இருந்ததையும், காஞ்சிப் பிரமுகர்கள் வந்து காஞ்சியை ஆள அழைப்பு விடுத்ததையும், தனது தந்தை நால்வரிடமும் சம்மதம் கேட்டதையும், மற்ற சகோதரர்கள் அதை மறுத்தபோது தான் முன்வந்ததையும், பிரமுகர்கள் தன்னை அழைத்துச் சென்றதையும், காஞ்சியில் பிரவேசித்ததையும், பிறகு முடி சூடியதையும், அதையொட்டி நடந்த சம்பவங்களையும் சிற்பவடிவில் அமைத்திருந்ததை விளக்கிச் சொன்னான்.*



சுற்றுச் சுவர்களில் வரலாற்றுச் சிற்பங்களைச் சுட்டிக் காட்டிய மன்னன் மூல விமானத்தில் நாற்புரமும் செதுக்கி யிருந்த சிற்பங்களைக் காட்டி அவை ஒவ்வொன்றும் பெருமானின்

---

* இச்சிற்பங்கள் யாவும் வைகுண்ட பெருமாள் கோயிலில் தற்போதும் உள்ளன. சற்றே சிதைந்த நிலையில் இருந்தாலும் வழிகாட்டிகள் மூலம் அடையாளம் கண்டு கொள்ளலாம். இச் சிற்பங்களைப் பற்றிய விவரங்களை முனைவர் சி. மீனாட்சி அவர்கள் 'The Historical Sculputures of the Vaikunta Natha Perumal Temple, Kanchi' என்ற நூலில் படங்களுடன் விளக்கியுள்ளார்.





பல்வேறு அவதார லீலைகளை வெளிப்படுத்தும் விதமாக இருந்ததை விளக்கினான்.*

"மிகவும் வித்தியாசமான பாராட்டத் தகுந்த பணியாக இதை நான் பார்க்கிறேன் மன்னா. பெரும்பாலான ஆலயங்களில் புராணக் கதைகளைச் சுட்டிக் காட்டும் சிற்பங்களும் தெய்வத் திருவுருவங்களும் இருக்கும். சில இடங்களில் மன்னர்களின் உருவங்கள் செதுக்கப் பட்டிருக்கும். கடல் மல்லை அதற்கு உதாரணம். இதே காஞ்சியில் உனக்கு முன்னால் ஆண்ட இராஜசிம்மர் நிர்மாணித்த கைலாச நாதர் கோயிலில் கூட புராண சம்பந்தமான சிற்பங்களையே வடித்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். நீ மட்டும் தான் பல்லவர் வரலாற்றைச் சிற்பங்களில் பதிவு செய்திருக்கிறாய். எந்த மன்னரும் இதுவரை செய்யாத அரிய பணி இது. ஓலையிலும், செப்பேடுகளிலும் வரலாறுகள் பதிவு செய்யப் பட்டாலும் அவற்றில் எழுத்துகள் மட்டுமே இருக்கும். அவற்றில் உருவங்கள் இருக்காது. உருவங்களை ஊகிக்க வேண்டியதாக இருக்கும். நீயோ வரலாற்று மாந்தர்களைச் சிற்பங்களாக வடித்திருக்கிறாய். நீ அரியணைக்கு வந்ததையும் விவரமாகச் சிற்பச் சாசனம் செய்திருக்கிறாய். இந்த முறையை எல்லா மன்னர்களும் கடைப்பிடித்தால் வரலாற்றுக் குழப்பங்கள் வராது. நானும் கூட எனது பாசுரங்களில் வரலாற்றுச் செய்திகளைக் கூறிவருவது இந்த நோக்கத்திற்காகத்தான். என் பாசுரங்களைச் சீடர்கள் ஓலைகளில் பதிவு செய்து வருகிறார்கள். அந்த ஓலைகள் கால வெள்ளத்தில் அழியக் கூடும். நீ வடித்த சிற்பங்கள் காலத்தைக் கடந்து நின்று வரலாற்றைச் சொல்லும்" என்றார் ஆழ்வார்.

அப்போது ராஷ்டிர கூட மன்னனான தந்திதுர்க்கன் ஆழ்வாரை வணங்கினான்.

"சுவாமி! இவர் ராஷ்டிர கூடப் பேரரசர். பெயர் தந்தி துர்க்கர். வைரமேகன் என்றும் அழைப்பர். எனது மரியாதைக்குரிய மாமனார். சிலகாலம் நான் அரியணையிழந்து நின்றபோது இவரிடம் தான் தஞ்சம் அடைந்திருந்தேன். அதற்குக் கௌரவம் தரும் விதமாக இங்கேயுள்ள ஏரி ஒன்றும், தடாகம் ஒன்றும், வாய்க்கால் ஒன்றும் இவரது பெயரால் அழைக்கப்பட்டு வருகின்றன.** மக்களையும் மக்கள் சார்ந்த விவசாயத்தையும் காப்பது நீர்நிலைகளே ஆதலால் அவற்றுக்கு அவரது திருநாமத்தையே சூட்டினேன்" என்றான் மன்னன்.

---

* வைகுண்ட பெருமாள் கோயில் விமானத்தில் உள்ள புராணச் சிற்பங்களை படங்களோடு விவரமாகக் கீழ்கண்ட நூலில் காணலாம். 'The Vaikunta Perumal Temple at Kanchipuram' By. D. Dennis Hudson.

** வைரமேகன் ஏரி, வைரமேகன் தடாகம், வைரமேகன் வாய்க்கால்

"பொருத்தமான விதத்திலேயே காரியமாற்றுகிறாய்" என்று மன்னனைப் பாராட்டிய ஆழ்வார் ராஷ்டிர கூட மன்னனைப் பார்த்து "நீடுழி வாழி" என்று ஆசிர்வதித்தார்.

ராஷ்டிர கூட மன்னன் கேட்டான்.

"சுவாமி! நாடுகள் போர்கள் இல்லாமல் இருக்கக் கூடாதா? இருக்க முடியாதா?"

"நீ போர்களைச் செய்திருக்கிறாயா?" என்று கேட்டார் ஆழ்வார்.

"செய்திருக்கிறேன் சுவாமி."

"எதற்காகப் போர்?"

"பல்வேறு காரணங்களுக்காக."

"காரணங்கள் இருக்கும்போது போர்கள் எப்படி நடக்காமல் இருக்கும்?"

"தவிர்க்க முடியாதா என்ற ஏக்கத்தில் தான் கேட்டேன் சுவாமி."

"தவிர்க்க வேண்டும் என்று நீ நினைத்தால் மட்டும் முடியாது. எல்லோரும் அவ்வாறு நடக்க வேண்டும். முடியுமா?"

"முடியாது."

"எல்லாக் காரணங்களுக்கும் பின்னால் ஒளிந்திருப்பது ஆசை தான். எல்லோரிடமும் அது இல்லாது போனால் போர்கள் வராது."

பிறகு எல்லோரும் அட்டபுயகரம் என்னும் அஷ்டபுஜப் பெருமாள் கோயிலுக்குச் சென்றார்கள்.

ராஷ்டிர கூட மன்னன் வைரமேகன் அர்ச்சகர் அளித்த மாலையுடன் விளங்க, மாமனார் என்ற முறையில் நந்திவர்மன் வணங்கி நிற்க, அதைக் கண்ட ஆழ்வார் பாடினார் -

'மன்னவன் தொண்டையர் கோன் வணங்கும்
நீள்முடி மாலை வயிரமேகன்
தன்வலி தன்புகழ் சூழ்ந்த கச்சி
அட்டபுயகரத்து ஆதி தன்னை
கன்னிநல் மாமதிள் மங்கை வேந்தன்
காமரு சீர்க் களகன்றி குன்றா
இன்இசையால் சொன்ன செஞ்சொல் மாலை
ஏத்த வல்லார்க்கு இடம் வைகுந்தமே'*

* திருமங்கையாழ்வாரின் பெரியதிருமொழி. பாசுரம் எண் 1127.

பத்துப் பாசுரங்களைப் பாடி மங்களாசாசனம் செய்தார் ஆழ்வார்.

ஆலய விஜயத்தை அத்துடன் நிறுத்திக் கொண்டு மடத்திற்குத் திரும்பினார்.

அன்று மாலை மக்கள் அவரைச் சந்தித்து ஆசி பெற விரும்பினார்கள்.

எல்லோரையும் வரச் சொல்லி ஆசி வழங்கினார்.

"உய்யும் வழியைக் கூறியருள வேண்டும்" என்றார்கள் சிலர்.

"ஓம் நமோ நாராயணா என்று எம்பெருமானிடம் சரணாகதி அடைவது ஒன்றே வழி. வேறு வழி இருக்கிறதா என்று ஆராய்ச்சி கூடாது. மனதை அலைபாய விடக் கூடாது. எம்பெருமான் ஒருவனே என்று கருதி அவனிடம் ஒப்படைத்து விடுங்கள். என்னைச் சரணடைபவர்களைக் காப்பேன் என்றும் பிறவிகளிலிருந்தும் கர்மங்களிலிருந்தும் மீட்பேன் என்றும் பகவான் கீதையில் கூறியதை ஏற்று நடவுங்கள்" என்றார்.

"நான் சிவபெருமானை வணங்கலாமா?"

"இதற்குக் கீதையிலேயே பதில் இருக்கிறது. மழை நீர் கீழே விழுந்து பல ஆறுகளுக்குப் போனாலும் அனைத்தும் கடலில் வந்து சேர்வது போல யார் எந்த தெய்வத்தைத் தொழுதாலும் அது கேசவனான எம்பெருமானிடமே வந்து சேர்கிறது என்கிறார் பகவான்."

மறுநாள் அரண்மனையில் அவரது திருவடிகள் படவேண்டும் என்று கேட்டுக்கொண்டு அங்கே அழைத்துச் சென்ற மன்னன் பிரமுகர்களை ஆழ்வாருக்கு அறிமுகம் செய்து வைத்தான். ராஜகுருவை அறிமுகப் படுத்தியபோது ஆழ்வாரின் கூர்மையான கண்கள் அவரைச் சந்தித்தன.

ராஜகுருவிற்கு வியர்த்தது. முகம் இருண்டது.

அதைச் சீடர்கள் கவனித்தார்கள். காடக முத்தரையரும் கவனித்தார்.

★★★



மங்களாசாசனங்கள்

திருமங்கையாழ்வாருக்கு அரண்மனைப் பிரமுகர் களை அறிமுகம் செய்து வைத்த மன்னன் ராஜகுருவைச் சுட்டிக் காட்டி "இவர்தான் என் ராஜகுரு நாதர். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்தான் இவரை ராஜகுருவாக ஏற்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. கடலில் கிடைத்த அரிய வலம்புரிச் சங்கைப் போன்றவர். அவரது அறிமுகம் கிடைத்ததிலிருந்து அவரது ஆலோசனையை நான் கேட்காமல் இருந்ததில்லை. அவரது வழிகாட்டுதலில் நான் பயனடைந்தது அதிகம். மகாமந்திரியின் ஆலோசனைகளைக் கூடப் புறந்தள்ளி இவரது ஆலோசனைகளை ஏற்றிருக்கிறேன். மகாமதியுகி" என்றான்.

"அப்படியா?" என்று கேட்டுத் தன் தீட்சண்யமான கண்களால் ராஜகுருவைப் பார்த்தார் ஆழ்வார்.

அவரது பார்வையை ராஜகுருவால் தாங்க முடியவில்லை. முகம் கறுத்தது. உடல் வியர்த்தது.

ஆழ்வார் அடுத்தவரை நோக்கினார்.

அதே சமயம் ராஜகுருவின் முகம் கறுத்ததையும் உடல் வேர்த்ததையும் ஆழ்வாரின் சீடர்கள் கவனித்தார்கள். காட்டக முத்தரையரும் கவனித்தார்.

தான் அங்கே இருப்பது நல்லதல்ல என்பதை உணர்ந்த ராஜகுரு மெல்ல நழுவினார்.

மன்னன் மற்றவர்களை அறிமுகப்படுத்தி முடித்தபின் "இதர ஆலயங்களுக்குச் செல்லலாம்" என்றார் ஆழ்வார்.

திருவெஃகா, திருத்தண்கா, திருவேளுக்கை, திருவூரகம், திருநீரகம், திருக்காரகம், திருக்கார்வானம், திருப்பவளவண்ணம், திருநிலாத்திங்கள் துண்டம், திருக்கள்வர் ஆகிய ஆலயங்களுக்குச் சென்று தரிசனம் செய்தார் ஆழ்வார்.*

---

* திருவூரகம், திருநீரகம், திருக்காரகம், திருக்கார்வானம் ஆகியவை தற்போது உலகளந்த பெருமாள் ஆலயத்தில் இருக்கின்றன. நிலாத்திங்கள் துண்டப் பெருமாள் ஏகாம்பரநாதர் ஆலயத்தில் இருக்கிறார். திருகள்வர் காமாட்சியம்மன் கோயிலில் இருக்கிறார். கதை நடந்த காலத்தில் அவை அனைத்தும் தனித்தனி கோயில்களாக இருந்து பிற்காலத்தில் பல்வேறு காரணங்களால் மேற்கண்ட ஆலயங்களுக்குள் வர நேர்ந்தன என்று கருத இடமுண்டு.

அந்த ஆலயங்களையெல்லாம் ஒற்றை வார்த்தையில் மங்களாசாசனம் செய்த ஆழ்வார். கடைசியாகப் பாண்டவ தூதப் பெருமாள் ஆலயத்திற்கு வந்தார். பெருமாளின் மாபெரும் திருவுருவத்தைக் கண்டதும் மெய்ச்சிலிர்த்துப் போனார். "இவரை விட்டு அகலவே மனமில்லை" என்றார்.

"இப்பெருமானை பேயார், பூதத்தார், திருமழிசை பிரான் ஆகியோர் மங்களாசாசனம் செய்திருக்கிறார்கள்" என்றான் நந்திவர்மன்.

"ஆஹா" என்று ஒற்றை வார்த்தையை மட்டுமே உதிர்த்த ஆழ்வார் அங்கே இருந்த மத்ஸய தீர்த்தக் கரையில் அனைவரோடும் அமர்ந்தார்.

"பகவான் கிருஷ்ணர் தனது மகா சொரூபத்தை - விஸ்வ ரூபத்தை - தெய்வத் தன்மையை முதன்முதலாக திருதராஷ்டிர சபையில் தான் காட்டியருளினார். பாண்டவர்களின் சார்பில் தூதுவராக வந்த அவரைக் கௌரவர்கள் விரும்பவில்லை. பலம் இருந்த காரணத்தால் போரை விரும்பினார்களே தவிர சமாதானத்தை விரும்பவில்லை. பாண்டவர்களுக்கு உரிய பங்கைத் தரவும் மனம் வரவில்லை. அது மட்டுமின்றி பாண்டவர்களுக்குக் கவசம் போல் இருந்து வரும் பகவான் கிருஷ்ணரை அழித்து விடவும் தலைப்பட்டு பொய்யாசனம் ஒன்றை அமைத்து அதன் கீழ் மல்லர்களை ஆயுதபாணிகளாக வைத்தார்கள். பகவான் கிருஷ்ணர் தனது விஸ்வரூபத்தை அனைவருக்கும் காட்டுவதற்காக அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டார். பொய்யாசனத்தின் மீது அமர்ந்து விஸ்வரூபத்தை எடுத்தார்."

இவ்வாறு சொல்லி அந்த விஸ்வரூப காட்சியைப் பாசுரமாகப் பாடினார் ஆழ்வார்.

'அரவநீள் கொடியோன் அவையுள் ஆசனத்தை
அஞ்சிடாதே யிட அதற்குப்
பெரிய மாமேனி யண்டமூடுருவப்
பெருந்திசை யடங்கிட நிமிர்ந்தோன்
வரையின் மாமணியும் மரகதத் திரளும்
வயிரமும் வெதிருதிர் முத்தும்
திரைகொணர் துந்தி வயல்தொறும் குவிக்கும்
திருக்கண்ணங் குடியுள் நின்றானே'*

அதைப் பாடி முடித்து விட்டு உலகம் அதிர விஸ்வரூபம் எடுத்து அனைவரையும் அதிர வைத்த அவர் பிறகு சாந்த

* திருமங்கை ஆழ்வாரின் பெரிய திருமொழி. பாசுரம் எண் 1755.

சொரூபியாகக் காட்சியளித்தார். அந்தச் சொரூபம் தான் இந்த ஸ்தலத்தில் உள்ளது. வேறு எங்கும் காண முடியாத காட்சி இங்கே கிடைத்ததினால் தான் பெருமையுடைய இடம் என்று கருதி இத்தலத்தைத் திருப்பாடகம் என்றே பேயாரும், பூதத்தாரும், திருமழிசைபிரானும் மங்களாசாசனம் செய்தார்கள்.

"அந்த மகான்கள் பாடிப்பரந்த பெருமாளைச் சிறியவனான நான் என்ன பாடுவது? போற்றுவது?" என்று சொன்ன போது ஆழ்வாரின் நினைவுகள் பழையகாலத்தை நோக்கிச் சென்றன. திருநறையூருக்கு தான் சென்றதையும் அங்கே எம்பெருமான் நறையூர் நம்பியாக வந்து வைஷ்ணவனாக மாற்றியதையும் திருமந்திரமான நமோ நாராயணா என்ற அஷ்டாட்சரத்தை உபதேசத்தையும் நினைவு கூர்ந்த ஆழ்வாரின் உதடுகள் திருநறையூர் எம்பெருமானைப் போற்றி பாசுரங்கள் உதிர்ந்தன. இடையே திருப்பாடகத்துப் பெருமானையும் மங்களாசாசனம் செய்தார்.

'கல்லார் மதில்சூழ் கச்சிநகருள் நச்சிப் பாடகத்துள்
எல்லா உலகும் வணங்கவிருந்த எம்மான் இலங்கைகோன்
வல்லாள் அகம் வில்லால் முனிந்த எந்தை விபீடணற்கு
நல்லானுடைய நாமம் சொல்லில் நமோ நாராயணமே'*

மங்களாசாசனம் செய்து முடித்தபோது அங்கே வர வழைக்கப்பட்ட யோகினியை ஆழ்வாருக்கு அறிமுகப்படுத்திய மன்னன் "சுவாமி. இவள் யோகினி. அத்வைதி. மௌனத்தின் இருப்பிடம். அமைதியின் உறைவிடம். இவளது அத்வைதம் எனக்கு ஏற்புடைய தல்ல என்றாலும் இவளது பேச்சுத் திறன் எல்லோரையும் போல என்னையும் கட்டிப் போட்டு விடும்" என்றான்.

"என்னையும் கட்டிப் போட நினைத்தவள் தான்" என்று சொல்லிக் கொண்ட ஆழ்வார் "அத்வைதம் சரியல்ல என்பதை விசிட்டாத்வைதம் உறுதி செய்து விட்டது" என்றார்.

யோகினிக்குத் தலையைச் சுற்றியது.

கீழே விழுந்து மயக்கமானாள்.

★

இரண்டு வாரங்கள் வரை காஞ்சியில் தங்கியிருந்த ஆழ்வார் மக்களுக்கு முன்னால் உபன்யாசங்களை நிகழ்த்தி திருமாலின் பெருமைகளை மெய்யுருகப் பேசினார். நாராயணன் நாமமும் சரணாகதியும் தான் உண்மையான சந்தோஷத்தையும்

* திருமங்கை ஆழ்வாரின் பெரியதிருமொழி. பாசுரம் எண் 1541.

மோட்சத்தையும் அளிக்கும் என்பதை வலியுறுத்தினார். அவரது உபதேசத்தில் பெரும்பாலான மக்கள் ஈர்க்கப்பட்டார்கள்.

மடத்தில் தங்கியிருந்த அவரை ஒரு நாள் தனிமையில் சந்தித்த மன்னன் "சுவாமி! நான் செய்த ஒரு காரியம் சரிதானா என்று நினைக்கத் தோன்றுகிறது. தாங்கள் தான் தெளிவு படுத்த வேண்டும்" என்றான்.

"என்ன விஷயம்?" என்று கேட்டார் ஆழ்வார்.

"பெருமாளுக்கான விண்ணகரங்களை நான் பல இடங்களில் எழுப்பியிருந்தாலும் பலரும் புழங்கும் தில்லை நடராஜர் ஆலயத்திற்குள் பெருமாள் கோயில் ஒன்றைக் கட்டி சம்ப்ரோக்ஷணமும் செய்து விட்டேன். தில்லைவாழ் மூவாயிரவரும் தீட்சிதர்களும் எதிர்த்தார்கள். எதிர்ப்புகளைப் புறக்கணித்துவிட்டு ஆலயப் பணியை முடித்தேன். பெருமாளுக்குப் பூஜை செய்யும் உரிமையைத் தங்களுக்குத் தரும்படி மூவாயிரவர் கேட்டுக் கொண்டார்கள். அவ்வாறே அளித்தேன். இப்போது பூஜைகள் நடக்கின்றன. பிரச்சனைகள் தற்போது இல்லை. ஆனாலும்..." என்று நிறுத்தினான் மன்னன்.

ஆழ்வார் அவனுக்குப் பதில் கூறவில்லை.

"பெருமாளின் திருநாமம் என்ன?" என்று கேட்டார்.

"கோவிந்த ராஜப் பெருமாள்."

"எம்பெருமான் எந்தக் கோலத்தில் இருக்கிறார்?"

"சயனக் கோலத்தில்."

"ஆலய அமைப்பு எப்படி?"

"சித்திரக் கூடம்."

ஆழ்வார் கண்களை மூடினார். மனக்கண்ணில் பெருமான் காட்சி தந்தார்.

'மாவாயின் அங்கம் மதியாது கீறி
மழை மாமுது குன்றெடுத்து ஆயர்தங்கள்
கோ ஆய் நிரை மேய்த்து உலகுண்ட மாயன்
குரை மாகழல் கூடும்குறிப்பு உடையீர்
மூவாயிரம் நான்மறையாளர் நாளும்
முறையால் வணங்க அணங்கு ஆய சோதித்
தேவாதி தேவன் திகழ்கின்ற தில்லைத்
திருச்சித்ரகூடம் சென்று சேர்மின்களே.'*

பாசுரம் பாடி மங்களாசாசனம் செய்த ஆழ்வார் மன்னனின் கேள்விக்குப் பதில் கூறவில்லை. அவருக்குப் பதில் அவரது சீடரான தோலா வழக்கர் பதில் கூறினார்.

"மன்னவா! பெருமாளுக்கு ஆழ்வார் மங்களாசாசனம் செய்ததே அங்கீகாரம் தான். குழப்பமடைய வேண்டாம்" என்று சொன்ன தோலாவழக்கர் "இன்னொரு விஷயம். நீங்கள் அறிமுகப்படுத்திய ராஜகுரு உண்மையான குரு அல்ல. வேடதாரி. சபரர் குலத் தலைவன் உதயணனே அவன். ஆழ்வார் திருமங்கை மன்னராக இருந்தபோது சேனாதிபதியாகக் கூடவே இருந்து குழிபறிக்க முயன்று தோற்றோடியவன். அதே போல் யோகினி அத்வைதியும் அல்ல. ஞானியும் அல்ல. உதயணனுக்கு வேண்டியவள். பெயர் தேவ தேவி. திருமங்கை மன்னரை மயக்கி வீழ்த்த முயன்று தோற்றுப் போனவள். அவ்விருவரும் இதுநாள் வரை உங்களோடு இருந்தது நல்லதற்கல்ல. எச்சரிக்கையோடு இருங்கள்" என்றார்.

மன்னனின் கண்கள் சிவந்தன.

வானத்தில் இடியோசை கேட்டது.

★

இடியோசையை விட மன்னனின் கர்ஜனை பலமாக இருந்தது. அரண்மனை வளாகம் அதிர்ந்தது. செடியில் பூத்திருந்த மலர்கள் உதிர்ந்தன. விவரம் புரியாத பறவையினங்கள் சத்தமின்றி வானில் பறந்தன.

அரண்மனையில் இருந்த மன்னன் அரக்கனாக மாறி விட்டிருந்தானாதலால் அவனை அண்டுவதற்கு அனைவரும் அஞ்சினார்கள். அண்டிய மகாமந்திரியைக் கூட மரியாதை குறைவாக மன்னன் பேசிவிட்ட பிறகு ஒருவரும் அவனது இருப்பிடத்திற்குச் செல்ல முயலவில்லை. பணியாளர்கள் உணவைக் கொண்டு சென்றபோது "இங்கே சாப்பாட்டு ராமன் யாரும் இல்லை. யாரும் சோறு சோறு என்று கூப்பாடு போட்டுக் கொண்டு வராதீர்கள். வந்தால் உயிரோடு திரும்ப மாட்டீர்கள்" என்று அடித்து விரட்டாத குறையாக இடிபோல் மன்னன் முழங்கியதால் பணியாளர்கள் கூட அவனிடம் செல்லவில்லை.

நாட்கள் இரண்டு ஆகியும் இதே நிலை நீடித்ததாலும் மன்னன் நீராடாமலும் போஜனம் செய்யாமலும் இருந்ததால் அந்த நிலை நீடிக்கக் கூடாது என்று கருதிக் கவலைப்பட்டார்கள். மன்னனின் மனம் ரணமாகி இருப்பதையும் அதற்குக் காரணம் என்ன என்பது தெரிந்திருந்தாலும் அது சரிசெய்யப்பட வேண்டும் என்றும்

ஆறுதலும் தேறுதலும் நடக்க வேண்டும் என்றும் எல்லோரும் நினைத்தார்களே தவிர அதை எப்படிச் செய்வது என்பது புரியாமல் தவித்தார்கள்.

"தங்களையே சுடுசொற்களால் மன்னர் பேசி விட்டா ரென்றால் நாங்கள் என்ன செய்ய முடியும் மகாமந்திரி?" என்று கேட்டார்கள் மற்றவர்கள்.

"சுடுசொற்களைப் பற்றி நானும் கவலைப்படவில்லை. நீங்களும் கவலைப்பட வேண்டாம். மனம் ரணமாய் இருக்கும் போது இதமான வார்த்தைகளை யாரும் எதிர்பார்க்க முடியாது. சுடுசொற்களுக்குப் பயந்து நாம் செயல்படாமல் தாமதித்துக் கொண்டிருந்தால் நிலைமை மோசமாகி விடும். ஆகவே நாம் எல்லோருமாக அவரை அணுகுவோம். அப்போதும் அவர் அடங்க மறுத்தால் சிறைசெய்து நமது கண்காணிப்பில் வைத்துக் கொண்டு உணவும் மருந்தும் அளித்துச் சாந்தப்படுத்துவோம். இப்போதைக்கு இதை தவிர வேறு உபாயம் எதுவும் எனக்குத் தோன்றவில்லை" என்றார் மகாமந்திரி.

"வேண்டாம் மகாமந்திரி. தந்தையை நான் சந்திக்கிறேன்" என்று சொல்லிக் கொண்டு அங்கே வந்தான் தந்திவர்மன்.

அவன் வரவு எல்லோருக்கும் ஆறுதலாக இருந்தது.

அவனை அனுப்பி வைத்தார்கள்.

அவனைக் கண்டதும் மன்னன் சீறவில்லை. பாயவில்லை.

"நானே அழைக்க வேண்டும் என்றிருந்தேன். நீயே வந்து விட்டாய். வா மகனே. வந்து உட்கார். உன்னிடம் ஒரு கோரிக்கையை வைக்கவே உன்னை எதிர்பார்த்திருந்தேன். கட்டளையாகவே இட முடியும். என்றாலும் முதல்படி கோரிக்கையாக இருப்பதையே நான் விரும்புகிறேன்" என்றான் மன்னன்.

மன்னன் தெளிவாக இருப்பதைக் கண்டு ஆறுதலடைந்த தந்திவர்மன் "சொல்லுங்கள் தந்தையே" என்றான்.

"ஆட்சிப் பொறுப்பை நீ ஏற்றுக் கொண்டு என்னை விடுவிக்க வேண்டும் தந்திவர்மா."

"எதற்காகத் தந்தையே?"

"பன்னிரண்டு வயதில் அரியணை ஏறியவன் நான். எனது பிராயம் எழுபதை நெருங்கிக் கொண்டிருக்கிறது. ஆண்டது போதும்."

"பிராயம் நூறை நெருங்குபவர்கள் கூடப் பதவியில் தொடர ஆசைப்படும்போது தங்களுக்கென்ன தயக்கம்?"

"இறப்பு என்று மற்றவர்கள் கூறும் வரை காத்திராமல் தாமாகவே இறங்கி விடுவதே சிறப்பானது."

"அப்படிச் சொல்வதற்கு இங்கே ஒருவரும் இல்லை. திருமங்கை ஆழ்வார் அவர்களும் இங்கு விஜயம் செய்து தங்களை வாழ்த்தியிருக்கிறார். தங்களுக்குக் குருவாக இருப்பார் என்று அவரது சீடர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இதெல்லாம் தாங்கள் ஆட்சியில் தொடரவேண்டியதற்கான நற்சகுனங்கள். அப்படியிருக்கும் போது தாங்கள் ஆட்சியைத் துறக்க நினைப்பது சரியல்லவே!"

"தந்திவர்மா! என் மனத்தில் உண்டான ரணம் என்னை ஆளத் தகுதியற்றவன் என்று இடித்துரைக்கிறது. ராஜகுருவும் யோகினியும் வேடம் தரித்துப் பல ஆண்டுகளாக என்னை ஏமாற்றியிருக்கிறார்கள். உளவாளிகளை அறிந்து கொள்ளமுடியாமல் இருந்த நான் மன்னனாக இருக்கத் தகுதியற்றவன். என்னை வீரத்தில் பெரியவன் என்றார்கள். பக்தியில் பெரியவன் என்றார்கள். ஆட்சியில் பெரியவன் என்றார்கள் நானோ பெரிய ஏமாளியாக இத்தனை ஆண்டுகளாக இருந்திருக்கிறேன். வெட்கம்."

"இல்லை தந்தையே. அரசியலில் இது போன்ற நிகழ்வுகள் இயல்பு தான். தான வீரனான கர்ணன் அந்தணனாக நடித்துப் பரசுராமரை ஏமாற்றவில்லையா? அவன் ஏமாற்றி வந்ததை அறிந்தபோது பரசுராமர் தங்களைப் போல் கோபப்பட்டார். சாபமிட்டாரே தவிர தளரவில்லை. தங்களால் சபரகுலத் தலைவன் உதயணனைச் சடிக்க முடியாது. அவன் மீது போர் தொடுத்து அழிக்க முடியும் அல்லவா?"

"சரியாகத் தான் சொன்னாய் தந்திவர்மா. என்னை மட்டுமின்றி மங்கை வேந்தரையும் ஏமாற்றிய உதயணனை அழிப்பது தான் என் ரணத்தை ஆற்றும். கறையை நீக்கும். குறையைப் போக்கும். நாளையே ஆலோசனையைக் கூட்டு மகனே. முடிவு செய்வோம்" என்றான் மன்னன்.

இடியோசை நின்று, மழை பொழிந்து, பின் மழையும் நின்று வானம் வெளுத்தது போல் கோபமும் வேகமும் நீங்கப் பெற்று சாந்த நிலைக்கு மாறிய மன்னன் மறுநாள் ஆலோசனை அவையைக் கூட்டியபோது ஓலை ஒன்று வந்தது.

அந்த ஓலை பல முடிச்சுகளை அவிழ்த்தது.

★★★



ஓலை விவரணம்

"பேரரசர் நந்திவர்ம மகாராஜா அவர்களுக்கு நென்மேலிக் கோமான் - சபர குலத்துச் சீமான் - இனமானக் காவலன் - சிற்றரசுக் கோவலன் - ஸ்வதிஸ்ரீ உதயணன் எழுதிக் கொள்ளும் விவர ஓலை."

"இந்த ஓலை உங்களுக்கு எல்லாக் குழப்பங்களையும் விலக்கும். உங்கள் ஏமாளித் தனத்தை விளக்கும். உங்கள் நிலை கண்டு சிரிக்கிறேன். அச்சிரிப்பிற்குள் இருக்கும் என் குமுறலைக் கண்டு சிவக்கிறேன்.

"நந்திவர்மா! நீ பேரரசன் என்று கூறிக் கொள்கிறாயே தவிர உனது மண்டலம் காஞ்சி மண்டலம் மட்டுமே. நீ இதுவரை வென்றது அற்பமான கங்கமன்னனை மட்டுமே. தொட்டதெல்லாம் துலங்கும் என்றிருக்க வேண்டிய நீ தோல்விகளையே இதுவரைத் தொட்டிருக்கிறாய். உதயசந்திரன் மட்டும் சமயத்தில் வந்து நந்திபுரத்தில் உன்னைக் காத்திராவிட்டால் இந்த ஓலையை எழுதவேண்டிய அவசியம் வந்திருக்காது. மரணம் உன்னைத் தேடி வந்திருக்கும்.

உனது பள்ளிப்படை எங்காவது அமைக்கப்பட்டிருக்கும். அதில் புல் பூண்டு கூட முளைத்திருக்கும். இதையெல்லாம் நான் ஏன் சொல்கிறேன் என்றால் நீ உண்மையில் பேரரசன் அல்ல. பேரரசன் என்ற பதாகையின் கீழ் வீற்றிருக்கும் பெரிய சிற்றரசன். அவ்வளவுதான்.

"ஆனால் உன்னைப் பேரரசனாகக் கருதிய ஒரு பெண் பிரமையிலிருந்து விடுபடாமல் உன் மீதான பிரேமையில் வீழ்ந்தாள். யார் சொல்லியும் கேட்கவில்லை. ஊர் சொல்லியும் கேட்கவில்லை. கேட்கக் கூடாது என்று முடிவுகட்டிவிட்டவர்கள் கண்கண்ட தெய்வம் சொன்னாலும் கேட்கமாட்டார்கள்.

விதி வந்து விளையாடினால் மதி வேலை செய்வதில்லை. விதியும் மதியும் விளையாடினால் கதி அதோகதி தான். அந்தப்

பெண் உன்னை விரும்பினாள். உன்னை மட்டுமே விரும்பினாள். உன்னைத் தவிர விருப்பம் என்பது எங்குமே இல்லை என்று கருதினாள். உன்னையே சுற்றிச் சுற்றி வந்தாள் ராமனைச் சுற்றி வந்த சூர்ப்பனகையைப் போல.

அந்த ராமனைப் போலவே அவளை நீ நிராகரித்தாய். நல்ல வேளை - அந்த ராமன் சூர்ப்பனகையை இலட்சுமணனிடம் அனுப்பியது போல நீ அவளை உன் மகன் தந்திவர்மனிடம் அனுப்பவில்லை. அவள் அங்கஹீனத்திற்கு ஆளாகவில்லை.

"இத்தனைக்கும் அவள் அரக்ககுலமல்ல. அரசர் குலம். சூர்ப்பனகையைப் போலத் தன் கோர உருவத்தை மாற்றிக் கொண்டு மாய உருவில் வரவில்லை. அவள் இயற்கையாகவே அழகியாதலால் அழகியாகவே வந்தாள். ஆசையைத் தெரிவித்தாள். நீ மறுத்தாய். இரக்கமின்றி மறுத்தாய்.

வெறுத்தாய். இரக்கமின்றி வெறுத்தாய். அறுத்தாய். பேசுவதையே அறுத்தாய். சிறுத்தாய். குணவியல்புகளில் சிறுத்தாய். ஏக பத்தினி விரதன் என்றாய். அவள் அதைப் பொருட்படுத்தவில்லை. மீண்டும் மீண்டும் நீயே கதி என்று உன்னை மறக்க முடியாமலும் துறக்க முடியாமலும் தவித்தாள்.

"நந்திவர்மா! ஏக பத்தினி விரதனாய் இருப்பது சிறப்புதான். அதே சமயம் ஒன்றுக்கு மேல் மனைவிகளைக் கொண்டவர்கள் மரியாதையற்றவர்கள் அல்ல. ராமனின் தந்தை பலதாரங்களை மணந்தவர். ராமனே கிருஷ்ணனாக அவதரித்த போது பலதாரங்களை ஏற்றார். அவர்களை இந்த நாடு குற்றம் கூறவில்லை. ஏகடியம் பேசித் தூற்றவில்லை.

போற்றவே செய்தார்கள். நீ சாதாரண மன்னன். உனக்குப் பல தாரங்கள் இருந்தால் அது மரபு வழியே தவிர மட்டமான வழியோ இகழத்தக்க வழியோ அல்ல. அதுவும் ஒரு பெண் தன்னை உனக்கு அர்ப்பணிக்கத் தயாராக இருந்தபோது ஏற்பது தான் சிறப்பே தவிர புறக்கணிப்பது அல்ல. நீ வெறும் பெண்ணைப் புறக்கணிக்கவில்லை. தூய அன்பைப் புறக்கணித்தாய். வெள்ளை உள்ளத்தைப் புறக்கணித்தாய்.

மனிதப் பண்பையும் நேசத்தையும் புறக்கணித்தாய். உனது மறுப்புகளைப் பொருட்படுத்தாமல் அவள் வளைய வளைய வந்தாள். விரும்பி விரும்பி வந்தாள். நீயோ அவளைப் பெருந் தொல்லையாகக் கருதினாய். நோயாகக் கருதினாய். பேயாகக் கருதினாய். ஒழித்துக் கட்டினால் தான் தொல்லை அகலும் என்று கருதினாய். கொன்று விட்டாய்.

“நந்திவர்மா! உன்னைப் போன்ற இரக்கமற்றவன் இனிமேல் தான் பிறக்க வேண்டும். உன்னைப் போன்ற குரூரன் இனிமேல் தான் பிறக்க வேண்டும். உன்னைப் போன்ற அரக்கன் புராண அரக்கர்களுக்குப் பிறகு நீயாகத் தான் இருக்க வேண்டும். ஒரு பெண்ணின் உள்ளத்தைப் புரிந்து கொள்ளாத நீயா மக்களின் உள்ளத்தைப் புரிந்துகொண்டு ஆட்சி செய்யப் போகிறாய்? ஒரு நாளுமில்லை. நீ ஆட்சியில் இருப்பது நரகாட்சி. நரகத்தில் இருக்க வேண்டிய ஆட்சி. அது அகற்றப்பட்டு நகராட்சி சீர்ப்பட வேண்டும். அதற்கு உன்னோடு போர் புரிய முடியாது. சதி செய்து தான் அகற்ற வேண்டும். அழிக்க வேண்டும்.

“அப்பெண் அநியாயமாகக் கொல்லப்பட்டதற்குக் காரண கர்த்தாவான உன்னை வஞ்சம் தீர்ப்பதற்கு எந்த தர்மகர்த்தாவுக்கும் உரிமை உண்டு என்பதால் நான் காலெடுத்து வைத்தேன் உனக்கு ராஜகுருவாக. எனக்குடையவளான தேவதேவி யோகினியாக அடியெடுத்து வைத்தாள் காஞ்சியில்.

நல்லவர்களாக நடிப்பது அப்படியொன்றும் சிரமமானதல்ல. அதே போல் நல்லவர்களை விரும்புவதும் ஏற்பதும் சாதாரணமானதல்ல. என்னை ராஜகுருவாக நீ ஏற்றாய். தேவதேவியை நீ மட்டுமின்றி மக்களும் யோகினியாக ஏற்றார்கள். இருவரும் எல்லோராலும் வணங்கத் தகுந்தவர்களாக ஆனது எங்கள் முதல் வெற்றி. முதல் படி. முதல் இடியும் கூட.

“கூடவே இருந்து ஆலோசகர் என்ற பெயரில் உனக்குத் தவறான வழிகளைச் சொல்லி உன்னை அழிப்பதற்கு நான் ராஜகுருவானேன். எனக்கு உதவவும் உளவாளியாகவும் இருந்து செய்திகளைப் பல இடங்களுக்கும் பரிமாறிக்கொள்ள தேவதேவி ஆசிரமப் பகுதியில் ஓலைகளைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டாள். அவளோடு இருந்த பணிப்பெண்களும் அவளது உளவாளிகளாகவே செயல்பட்டார்கள்.

தேவதேவிக்கு ஓலைகள் மூலமாக அத்வைதத் தத்துவங்களைப் போதித்து வந்தது நான் தான். போதிக்கும் முறை சிறப்பாக இருந்தால் கற்பவன் கற்பிப்பவனை விடச் சிறப்பாக இருப்பான் என்பதற்குத் தேவதேவியே உதாரணம். அடையாளம். எல்லா நகரங்களிலும் பக்தியும், வழிபாடும், விழாக்களும், உருவ வழிபாடுகளும் ஓங்கியிருக்கும்போது - மக்கள் அவற்றில் ஆழ்ந்து இருக்கும்போது அவர்களை இழுக்க அவற்றிலிருந்து மாறுபட்ட அணுகுமுறை தேவை என்பதால் நான் அத்வைதத்தைத் தேர்ந்தெடுத்தேன். அதோடு எனக்கு அத்வைதமே மதமாகவும், மனமாகவும் இருந்தது. பக்தி முதலான

அனைத்தும் அத்வைதத்தையே மறைமுக அடிப்படையாகக் கொண்டிருப்பதாக நான் உணர்ந்தேன். எனவே அதைத் தேவதேவிக்குக் கற்பித்தேன். கற்றாள். கற்றதை மற்றவர்களுக்குக் கற்பித்தாள். பலரும் அவளை நாடினார்கள். அவள் முன் கூடினார்கள்.

அமைதியை அடைந்தார்கள். உள்ளத்திற்குள் ஒளிந்திருப்பது ஒன்று மட்டுமே என்பதை உணர்ந்து உள்ளத்திற்குள் ஆடிப்பாடினார்கள். நீயும் அவளை நாடி வந்தாய். அவளது அத்வைதத்தை வெளிப்படையாக ஏற்க மறுத்தாலும் நீ அவளது பேச்சுக்களை விரும்பி அடிக்கடி அவளைச் சந்தித்தாய். ஆலோசனைகளைக் கேட்டாய். அவளோ ஆலோசனை கூறுவதில்லை. அரசியலைப் பேசுவதில்லை. அத்வைதத்தை மட்டுமே பேசி எல்லோரையும் ஈர்த்தாள். நானும் அடிக்கடி அங்கே வந்து கவனித்து வந்தேன். ரகசிய பரிபாஷைகளைப் பரிமாறிக் கொண்டு வந்தேன். ஓலைச் செய்திகளை அனுப்பி வந்தேன். இது எனது இரண்டாவது வெற்றி.

“நாங்கள் இருவரும் உனது நம்பிக்கைக்கும் மரியாதைக்கும் பாத்திரமாகி விட்ட நிலையில் தான் உனக்கும் பாண்டியனுக்கும் பெண்ணாகடத்தில் போர் வந்தது. அதில் உனக்குத் தவறான வழியைச் சொல்லி போரில் உன்னைத் தோற்கச் செய்து பாண்டியனை காஞ்சிக்குக் கொண்டு வர சதி செய்தேன். ஆனால் எனது யோசனையைக் கடைப்பிடிக்காமலேயே அந்தப் போரில் நீ தோற்றுப் போனாய். அதோடு பாண்டியனும் அந்தப் போர் வெற்றியை மட்டுமே விரும்பினானே தவிர காஞ்சி வரை வர விரும்பவில்லை. எனவே எனது சதி முயற்சி தோற்றுப் போய் அதிர்ச்சியைத் தந்தது.

“பல்லவ ராஜ்யத்திற்கு வெளியே உள்ள எதிரிகள் மூலம் உன்னை அழிப்பதென்பது கார்மேகங்களை உருவாக்கி மழையைப் பொழிவிப்பது போன்றது என்பதை உணர்ந்தேன். உடலுக்குள்ளேயே உருவாகும் கிருமிகளால் உடல் அழிவது போல் காஞ்சி மண்டலத்திற்குள்ளேயே எதிரிகளை உருவாக்கி உன்னை அழிக்க நினைத்தேன். அதை ராஜகுருவாக இருந்து செய்ய முடியாது என்று இரண்டாவது வேடத்தையும் புனைந்தேன். அந்த வேடத்தில் தோன்றியவன் தான் புருஷோத்தமன். அதாவது ராஜகுருவும் நானே. புருஷோத்தமனும் நானே.

“புருஷோத்தமனாக இருந்து அசடன், அலசன், அதமன், அவயன், அபயன் என்னும் எனது ஐந்து சகாக்களைக் கொண்டு

பணபலத்தாலும் பெண் பலத்தாலும் தொண்டை மண்டலத்தில் இருந்த இருபத்துநான்கு கோட்டத் தலைவர்களில் பதின்மூன்று கோட்டத் தலைவர்களை என் பக்கம் வளைத்தேன். அவர்களது கோட்ட ஆட்சியை என் வசப்படுத்தினேன். என் சொற்படி கேட்கும் பொம்மைகளாக அவர்களை மாற்றினேன்.

பதின்மூன்று கோட்டங்களில் ஊழல்களை அரங்கேற்றி அந்த வருமானத்தில் கோட்டத் தலைவர்களுக்கும் எனக்கும் பங்கு போடப் பட்டது. கோட்டத் தலைவர்களுக்கு உயர்பதவியும் சுதந்திரமும் கிடைப்பதற்கு வழிவகைகளைச் செய்ய முடியும் என்று கூறி ஆசைகாட்டியதால் பதின்மூன்று கோட்டத் தலைவர்கள் நான் கூறியபடி நடந்தார்கள். அவர்கள் வசம் இருந்த படை நான் கூறும் வழியில் இயங்கவும் தயாராகியது. மீதமுள்ள பதினொரு கோட்டங்களையும் என் வசப்படுத்தும் முயற்சியில் இறங்கினேன். இது எனது மூன்றாவது வெற்றி.

"அந்த முயற்சி நடந்து கொண்டிருக்கும் நிலையில் ராஜகுருவாக இருந்த நான் எனது அடுத்த ஆயுதத்தைக் கையில் எடுத்தேன். அது தான் மதவெறி. நீ வைஷ்ணவ மதவெறியன் என்பது எனக்குத் தெரியும். வைஷ்ணவ மத வளர்ச்சிக்காக எதுவும் செய்வாய் என்பது தெரியும். பிற மதங்களை மதிக்க மாட்டாய் என்பது தெரியும். மத நல்லிணக்கம் உன்னிடம் இல்லை என்பது தெரியும். சமண மதத்தவருக்கு வழங்கியிருந்த நிலத்தைப் பறித்து வைஷ்ணவர்களுக்குக் கொடுத்ததும் திருப்பருத்திக் குன்றத்து சமணர்களைக் காயடித்து விட்டதும் தெரியும். ஆனால் சமணர்கள் சிறுபான்மையினராக இருந்ததால் அவர்களால் உன்னை எதிர்க்க முடியவில்லை.

வைஷ்ணவத்திற்கு ஈடு கொடுக்கச் சைவத்தால் மட்டுமே முடியும் என்ற நிலை. அதுவும் தில்லைவாழ் அந்தணர்களும் தீட்சிதர்களும் வீர சைவர்கள் என்பதால் அவர்களைச் சீண்டிவிட்டால் மதக் கலவரம் நடக்கும் என்றும் அதில் உனக்குப் பெரும் சேதாரம் வரும் என்று கணக்கிட்டேன். அதில் மற்றவர்களும் சேர்ந்து கொண்டால் பல்லவ மண்டலம் கொந்தளிக்கும் என்றும் அதன் விளைவாக நீ தூக்கி எறியப்படுவாய் என்றும் நினைத்தேன்.

"அதன் காரணமாகவே தில்லை நடராஜர் ஆலயத்தில் பெருமாளுக்கு ஒரு கோயிலைக் கட்ட வேண்டும் என்று உனக்குத் தூபம் போட்டேன். அது உன் உரிமை என்று எடுத்துரைத்தேன். வைஷ்ணவனான நீ கட்டாமல் வேறு யார் கட்ட முடியும் என்றும் அதற்கு உனக்குப் பூரண அதிகாரம் உண்டு என்பதையும் சுட்டிக்காட்டினேன். மகாமந்திரி

முதலானவர்கள் எதிர்த்தபோதும் ராஜகுரு என்ற முறையில் உன் மனதை மாற்றினேன். உன் மதவெறியை மும்முரமாகத் தூண்டித் துளைத்தேன். மத விஷயத்தில் நீ பிடிவாதக்காரன் என்பதால் என் பேச்சை ஏற்றாய். நீயும் கோயிலைக் கட்டும்படிக் கட்டளையிட்டாய். ஆனால் நான் ஆசைப்பட்ட மாதிரியும் எதிர்பார்த்த மாதிரியும் மதக் கலவரம் உண்டாகவில்லை.

நீ கையாண்ட விதமும் உனது சாமர்த்தியமும் தில்லைவாழ் அந்தணர்களையும் கட்டிப்போட்டன. அவர்களை வைத்து தில்லையில் உன்னைக் கொல்ல முனைந்த காரியங்களும் தோற்றன. நீ கோயிலைக் கட்டி முடித்து, சம்ப்ரோக்ஷணம் செய்து, பெருமாள் பூஜைகளைத் தில்லைவாழ் அந்தணர்கள் செய்ய உரிமையை வழங்கி எல்லா விஷயங்களையும் சுமூகமாகத் தீர்த்து விட்டாய். இது எனக்கு முதல் தோல்வி.

"இதற்கிடையில் நீ கோட்டைப் பிரவேசம் செய்யும்போது தலைக்கு மேலே பட்சிகள் வட்ட மிடுவதைக் கண்ட எனக்குப் புது யோசனை தோன்றியது. என்னிடம் செந்நிறம் கொண்டச் செம்போத்துப் பறவைகள் இருந்தன. அவை மந்திரப் பறவைகள். புருஷோத்தமனாக இருந்து அவற்றைப் புள்ளலூருக்குக் கொண்டுவந்து பழக்கினேன். பறவைகளைக் கொண்டு பரமேச்சுர விண்ணகரப் பகுதியில் ஜால வித்தைகளைச் செய்யச் சொல்லி மக்களைக் கவர்ந்தேன்.

குடமுழுக்கு விழாவன்று அவற்றைக் கொண்டு ஆலயத்தையும் ஆலயத்தோடு சேர்ந்து உங்கள் எல்லோரையும் அழிக்கத் துல்லியமாகத் திட்டமிட்டேன். அது எப்படித் தகர்ந்தது என்பது இன்றுவரை எனக்குத் தெரியவில்லை. நான் மிகவும் எதிர்பார்த்துத் தோற்றுப் போனேன். இதில் எனக்கு இரண்டாவது அடியும் விழுந்தது. அதை இடி என்றும் சொல்லலாம்.

"பரமேச்சுர விண்ணகரத்தின் குடமுழுக்கு விழாவின் போது நான் மெச்சுவேன் என்பதற்காக முட்டாள்களான பதின்மூன்று கோட்டைத் தலைவர்கள் விழாவிற்கு வராமல் புறக்கணித்து விட்டார்கள். காரணம் ஏதுமின்றி மிகவும் முக்கியமான விழாவிற்கு அவர்கள் வராததால் நீ சந்தேகப்பட்டுக் கைது செய்தாய்.

உனது உத்தம புத்திரனான தந்திவர்மன் விசாரணை என்ற பெயரில் மிரட்டியதில் கோட்டத் தலைவர்கள் என்னோடு இணைந்து செய்த சதிச் செயக்ளை வெளிப்படுத்தி விட்டார்கள். கோட்டத் தலைவர்களைத் திரட்டி உனக்குச் சமாதி கட்ட

நினைத்த எனது முயற்சி தோற்றது. இது எனக்கு மிகவும் மோசமான இரண்டாவது தோல்வி.

“சைவர்களைத் தூண்டி மதக்கலவரத்தை உண்டாக்க முயன்று தோற்றுப் போன நான் திருப்பருத்திக் குன்றத்தில் இருந்த சமணர்களை புருஷோத்தமனாக இருந்து தூண்டினேன். தலைமைத் துறவி துலாபாரரிடம் கிளர்ச்சியை உண்டாக்கும் படி கொம்பு சீவி விட்டேன். அந்த முட்டாள் சரி என்று சொன்னானே தவிர எதுவும் செய்யவில்லை. அவனுக்கு உதவ திருப்பருத்திக் குன்றத்துச் சமணர்கள் தயாராக இல்லை.

இந்த நிலையில் பரம முட்டாளான கணிகைப் பெண் ஒருத்தியை ராஜகுருவான என்னிடம் அனுப்பி என் மூலம் உன்னை என் கைப்பாவையாக்கி தனது கோரிக்கைகளை நிறைவேற்ற முயன்றான். அவனது அதிகப் பிரசங்கித் தனத்தையும் அந்தப் பெண்ணின் வஞ்சகத்தையும் சகிக்க முடியாது நான் அவளைக் கழுத்தை நெறித்துக் கொன்றேன். உன்னிடம் அது பற்றிப் பேசி நடவடிக்கை எடுக்கும் படிக் கேட்டுக் கொண்டேன். நீ நடவடிக்கை எடுத்தால் சமணர்கள் உனக்கெதிராகத் திரள்வார்கள் என்று எதிர்பார்த்தேன். நீயோ நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு முக்கியத்துவம் தரவேண்டாம் என்று பேசாமல் இருந்து விட்டாய். இது என் மூன்றாவது தோல்வி.

“கடைசியாக உன்னைக் கங்கநாட்டிற்கு எதிரியாக்கி அழிக்க வேண்டும் என்று முடிவு கட்டினேன். பல்லவர்களின் கௌரவச் சின்னமான சமுத்ர கோஷத்தைச் சிதைத்து அந்தப் பழியைக் கங்கர்கள் மீது போட்டேன். நீயும் போருக்குத் தயாரானாய். உனக்கு ஒரு போர்த் திட்டத்தை வகுத்துக் கொடுத்து அதை கங்க மன்னனுக்கும் செய்தியாக அனுப்பி உன்னை அழிக்கும் வழியைக் காட்டினேன்.

எனக்கதில் வெற்றி கிட்டியிருக்க வேண்டும். ஆனால் உனது சிரஞ்சீவி புத்திரன் தந்திவர்மன் வினோதமான வியூகத்தை வகுத்துக் கொடுத்து என் திட்டத்தில் மண்ணைப் போட்டான். போரில் நீ முதன் முறையாக வெற்றி பெற்று பெயர் பெற்றதுடன் விலைமதிப்பில்லாத ஆபரணமான உக்ரோதத்தையும் கங்க மன்னனிடமிருந்து கைப்பற்றினாய். இது எனது நான்காவது தோல்வி.

“தோல்விக்கு மேல் தோல்வி. ஏமாற்றத்திற்கு மேல் ஏமாற்றம். வேதனைக்கு மேல் வேதனை. இனி என்ன செய்வது என்று யோசித்த போது தான் பெருஞ்சோதனை வந்தது. ஆழ்வாராக

மாறிய திருமங்கை மன்னன் காஞ்சிக்கு வந்தான். அவன் என்னைப் பார்த்த பார்வை எனது சப்த நாடிகளையும் ஒடுக்கிவிட்டது. இனி அங்கிருந்தால் எனக்குச் சிக்கல் வரும். சித்திரவதை வரும் என்பதால் நானும் யோகினியான தேவ தேவியும் தப்பி ஓடினோம். என்னைத் தொடர்ந்து வந்த காடக முத்தரையர் வழிமறித்து என்னைத் தாக்கினார். நான் என் ஆத்திரத்தையெல்லாம் ஒன்று திரட்டி அவரது தோளை வெட்டி விட்டு ஓடினேன்.

"இப்போது நாம் ஆரம்பத்திற்கு வருவோம். நீ மணக்க மறுத்த பெண் வேறு யாருமல்ல. என் சகோதரி. இரக்கமில்லாமல் கொன்று போட்டாயே - அவள் பெயர் சொர்ணமுகி. அவளுக்காகப் பழிதீர்க்க முற்பட்டுச் சதிச் செயல்களில் இறங்கினேன். இராஜகுருவாகவும் புருஷோத்தமனாகவும் வேடம் தாங்கி முயன்றேன். மொட்டைப் பாறையில் முட்டிய மொட்டைத் தலையைப் போல் மண்டை ஓடிந்த நிலையில் இருக்கிறேன். இது இடைவேளை தான். என் முயற்சி மீண்டும் தொடரும்."

- என்று கூறியிருந்த உதயணன் கடைசியாகச் சில வரிகளை எழுதியிருந்தான்.

அது நந்திவர்மனுக்கு விளங்கவில்லை.

★★★



சொர்ணமுகியின் மனஉறுதி

பல விஷயங்களையும் ஓலை நறுக்குகளில் மிகத் தெளிவாகக் கூறியிருந்த சபர மன்னன் உதயணன் கடைசியாக ஒன்றும் புரியாத விதமாக எழுத்துக்களின் அணிவகுப்பை அமைத்திருந்தான்.

-‘ன்ன்ம்ஞ்ம்க்ப்ள்ல்ய்ப்ன்க்க்ன்ண்ல்ஞ்க்ம்ர்ர்ள்க்ப்ய்க்ம்ஞ்ய்ம்

நாஉனையுகாசியையுஅழிகபுளல்லூரிபேபடைஒறைஉருவாகியிருகிறேஅது இரடொஃருநாளிகாசிசிகு வருபலமடிவாகபலருகு பேபிடிகுகாசி பேநகரமாகு’-

எப்படிப் படித்தாலும் பொருள் விளங்கவில்லை யாதலால் அந்த ஓலையை மட்டும் கடிகையின் தலைவர் தரணிகண்ட போசரிடம் கொடுத்தான் மன்னன்.

அதை வாங்கிப் பார்த்த கடிகையின் தலைவர் “இதை என் மாணாக்கர்களிடம் காட்டுகிறேன் மகாராஜா. அவர்கள் கண்டுபிடித்து விடுவார்கள்” என்றார்.

“அப்படியே ஆகட்டும்” என்றான் மன்னன்.

பிறகு மகாமந்திரியைத் தவிர மற்றவர்களை அனுப்பிவிட்டு ஓலையை அவரிடம் கொடுத்தான்.

மகாமந்திரி ஓலையை ஆழ்ந்து படித்துவிட்டு “மிகவும் துரதிருஷ்டவசமானது மகாராஜா” என்றார்.

“என்னைத் திருமணம் செய்து கொள்ள விரும்பியவள் உதயணனின் சகோதரி என்பது இந்த ஓலையின் மூலமாகத் தான் தெரிகிறது. நீ யார் என்று அவளிடம் நான் கேட்ட போது சொல்ல மறுத்தாள். ஏன் என்று கேட்டேன். அதற்கு அவள் என்ன சொன்னாள் தெரியுமா மகாமந்திரி?” என்று கேட்டான் மன்னன்.

“தெரியாது மகாராஜா” என்றார் மகாமந்திரி.

"அன்புதான் முக்கியம். நான் யார் என்பது முக்கியம் அல்ல. தாமரை மலர் தான் முக்கியமே தவிர அது எங்கே முளைத்தது என்பது முக்கியமல்ல" என்றாள் சொர்ணமுகி.

"நீ கூறுவது மலர்களுக்கும் செடிகளுக்கும் சரி. மனிதர் களுக்கு அல்ல. அவர்களது பிறப்பு முக்கியம். வளர்ப்பு முக்கியம். குலம் முக்கியம்" என்றான் நந்திவர்மன்.

"நீங்கள் குல வித்தியாசம் பார்க்கும் குதர்க்கமான மன்னராக இருப்பீர்கள் என்று நான் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. இது பாவம் என்று உங்களுக்குத் தோன்றவில்லையா?"

"நான் வித்தியாசத்தைப் பற்றிப் பேசவில்லை. குலம் பற்றிய விவரங்களையே கேட்டேன். அதை அறிவது பாவமாகாது."

"அந்தப்புரத்தில் அழகிகளைக் கொண்டு வந்து குவிக்கிறீர்களே - அவர்களது குலம் என்ன கோத்திரம் என்ன என்றெல்லாம் பார்க்கிறீர்களா?"

"என் அந்தப்புரத்தில் அழகிகள் இல்லை. மனைவி மட்டுமே இருக்கிறாள். அதோடு நீ அந்தப்புர அழகியாக இருக்க வரவில்லை. திருமணம் செய்து கொள்ள விரும்புகிறாய். ஆகவே குலம் பற்றிய கேள்விகள் அவசியம்."

"நான் யார் என்பதைக் கூறிவிட்டால் என்னை மணந்து கொள்ளத் தயாராக இருக்கிறீர்களா?"

"இயலாது."

"ஏன்?"

"எனக்கு இந்தப் பிறவியில் மனைவி ஒருத்தி மட்டும் தான்."

"அது ஒன்றும் மாற்றிக் கொள்ள முடியாத விஷயமல்ல."

"என்னால் மாற்றிக் கொள்ள முடியாது. மாற்றிக் கொள்ளும் எண்ணம் இல்லை."

"நான் உங்களை உயிராக மதிக்கிறேன். நாளும் பொழுதும் உருகுகிறேன். உண்மையான அன்பிற்கு மரியாதை கிடையாதா?"

"அன்பு என்பது உண்மையாக இருந்தால் போதாது. தரமான விதை கல்லில் விதைக்கப்பட்டால் முளைக்காது. பொருந்தாத இடத்தில் அன்பு விதைக்கப்பட்டாலும் அப்படித்தான். அழியுமே தவிர வளராது."

"என் அன்பில் என்ன குறை கண்டீர்கள்?"

"மேலே சொன்னதுதான். கல்லில் விதைத்தால் முளைக்காது. விரும்பாதவனிடம் அன்பு செலுத்தினால் மலராது."

"உங்களிடம் மனிதாபிமானமே கிடையாதா மகாராஜா?"

"நேசிப்பவர்களையெல்லாம் திருமணம் செய்து கொள்வதற்குப் பெயர் மனிதாபிமானமல்ல. அதோடு எனக்கு வயது அறுபது. இருபது வயதில் ஒரு மகன் இருக்கிறான். இந்த நிலையில் நான் யாரையும் திருமணம் செய்து கொள்ள இயலாது. மனதை மாற்றிக் கொள். நீ பயணித்து வந்த பாதையும் தவறு. பாதையையும் மாற்றிக் கொள். நீ வந்த பாதை முட்பாதை என்பதை உணர்ந்து ராஜபாட்டையை நோக்கிப் பயணப்படு. நீ புதுமலர். இந்தக் கிழவனிடம் சேர வேண்டாம். உனக்கான இடம் வேறு. அது எங்கேயோ நிச்சயமாக இருக்கும்."

"அந்த இடம் நிச்சயமாக இது தான். உங்களை மணக்காமல் என் வாழ்க்கை நகராது."

"நான் இதமாகப் பேசிக் கொண்டிருக்கிறேன் என்றால் அதற்குக் காரணம் பக்குவமில்லாத இளம் பெண்ணாக இருந்து கொண்டு நீ பேசுவது தான். உன் இருப்பிடம் எங்கே என்று சொல். அங்கே உன்னைப் பத்திரமாகக் கொண்டு போய் விடுகிறேன்."

"என் இருப்பிடம் இதுதான். நான் போக வேண்டிய இடம் வேறு இல்லை."

"பிடிவாதம் வெறுக்கத்தக்கது பெண்ணே. விட்டுவிடு."

"நான் பொருளாசைக்காகப் பிடிவாதம் பிடிக்கவில்லை. பணத்தாசைக்காகப் பிடிவாதம் பிடிக்கவில்லை. பதவியாசைக்காகப் பிடிவாதம் பிடிக்கவில்லை. மண்ணாசைக்காகவோ பொன்னாசைக்காகவோ பிடிவாதம் பிடிக்கவில்லை. பேராசைக்காகப் பிடிவாதம் பிடிக்கவில்லை. வாழ்க்கைக்காகப் பிடிவாதம் பிடிக்கிறேன். அன்புக்காகப் பிடிவாதம் பிடிக்கிறேன்."

"எதற்கு இடமில்லையோ அதற்காக அடம்பிடிக்கிறாய். அது அழகுமல்ல. நடக்கக் கூடியதுமல்ல."

"நீங்கள் தான் மகாராஜா பிடிவாதம் பிடிக்கிறீர்கள். சாதாரணமான விஷயத்திற்காகப் பிடிவாதம் பிடிக்கிறீர்கள். நடக்கக் கூடிய காரியத்தில் பிடிவாதம் பிடிக்கிறீர்கள்."

"அளவற்ற பேச்சு வெறுப்பையே தரும் சொர்ணமுகி. வாதங்கள் நீளலாம். பிடிவாதங்கள் நீளக் கூடாது. போய் வா."

"போகமாட்டேன்" என்று சொன்ன சொர்ணமுகி மன்னனைக் கூசும் வார்த்தைகளால் ஏசினாள். அன்பு புறக்கணிக்கப்பட்டதால் அவமானமும் அசதியும் அடைந்த அவள் ஆற்றமுடியாமல் தூற்றினாள்.

"நீங்கள் தான் என் கணவர். எனது இருப்பிடம் இதுதான். என் வாழ்விடம் இதுதான். நீங்கள் என்னைத் திருமணம் செய்து கொள்ள மறுத்து விட்டதால் நான் வெறுத்து விடவில்லை. வேறிடம் செல்லப் போவதில்லை. இங்கேயே தான் இருப்பேன். இங்கேயே தான் இறப்பேன்" என்று கூறினாள்.

மன்னன் மேற்கொண்டு அவளிடம் பேசவில்லை. ராணியிடமும் விவாதிக்க வில்லை. மகாமந்திரியிடம் மட்டும் தெரிவித்தான்.

"எனக்கென்னவோ நீங்கள் தான் பிடிவாதம் பிடிக்கிற மாதிரி தோன்றுகிறது. அன்புக்கு ஏங்குகிறாள் சொர்ணமுகி. இதுபோல் ஏங்கி நிற்பவர்கள் மிகவும் குறைவு. அவளை நீங்கள் ஏற்கலாம்" என்றார் மகாமந்திரி.

"சொர்ணமுகியைப் போல அன்புக்காக ஏங்கி இன்னொருத்தி வந்தால் அவளையும் ஏற்றுக் கொள்ளச் சொல்வீர்களா? அதையடுத்து மற்றொருத்தி, மற்றொருத்தி என்று வந்து கொண்டிருந்தால் என்ன சொல்வீர்கள்? எல்லோரையும் நான் மணந்து கொண்டிருக்க முடியுமா? சில விஷயங்களில் வைராக்கியமான பிடிவாதம் தேவை மகாமந்திரி. ஒட்டகத்திற்கு தலையை மட்டும் நுழைத்துக் கொள்ள கூடாரத்தில் இடம் கொடுத்து முடிவில் ஒட்டகம் கூடாரத்திலும் கூடாரத்தில் இருந்தவர்கள் வெளியிலும் இருக்க நேர்வதைப் போல இந்த மாதிரி விஷயங்களில் அசைந்து கொடுத்தால் நாம் ஆட்டம் கண்டு விடுவோம். ஆகவே என் பிடிவாதம் சரி. அவள் பல்லவ மண்டலத்தில் எங்கே இருக்க விரும்புகிறாளோ அங்கே இருக்கட்டும். அவளுக்குப் பாதுகாப்பு கொடுங்கள். வசதிகளைச் செய்து கொடுங்கள். உணவளியுங்கள். சிகிச்சை அளியுங்கள். அவள் எப்போது போக விரும்புகிறாளோ அப்போது அனுப்பி விடலாம். காலமானது எல்லோரையும் மாற்றும்" என்றான் மன்னன்.

மகாமந்திரி வாதம் செய்யவில்லை.

சொர்ணமுகியைக் காஞ்சியில் வைத்திருக்க வேண்டாம் என்று கருதி அவளுக்கு மயக்கம் கொடுத்து பல்லக்கில் ஏற்றி சிம்மவிஷ்ணு சதுர்வேதி மங்கலத்திற்குக்* கொண்டு சென்றார். அங்கிருந்த நிலவறை மாளிகையில் விட்டார்.

மயக்கம் தெளிந்த அவள் "நீங்கள் யார்?" என்று கேட்டார்.

"மகாமந்திரி."

---

* வடசென்னையில் தற்போது உள்ள மணலி.

"இது என்ன இடம்?"

சொன்னார்.

"இங்கே எதற்குக் கொண்டு வந்தீர்கள்?"

"உன் சொந்த ஊருக்குச் செல்ல மறுத்து விட்டதால்"

"இந்த இடம் காஞ்சியில் இருக்கும் இடமா?"

"இல்லை. வெளியில்."

"எவ்வளவு தூரம்?"

சொன்னார்.

"நான் மகாராஜாவைப் பார்க்க முடியாதா?"

"விரும்பினால் பார்க்கலாம்."

"என்னைக் காஞ்சியிலேயே வைத்திருக்கலாம் அல்லவா?"

"பிரச்சனை எழாமல் இருக்க முன்னெச்சரிக்கையாக இருப்பது நல்லது."

"ஐயா! நீங்கள் நீதிமானா?"

"அதை மற்றவர்கள் தான் சொல்ல வேண்டும்."

"நீதிமானாக இருப்பதால்தான் மகா மந்திரியாக இருக்கிறீர்கள்."

"நீ கேட்க விரும்புவது என்ன?"

"மகாராஜா என்னை நிராகரித்தது நியாயமா?"

"நியாயம்தான்."

"எப்படி?"

"அவரது கொள்கையில் அவர் பிடிவாதமான வைராக்கியத்துடன் இருப்பது நியாயம் தான்."

"எனக்கும் அப்படியொரு பிடிவாதம் இருப்பது நியாயமில்லையா?"

"நியாயம் தான்."

"பிரச்சனை எங்கே இருக்கிறது?"

"உங்கள் இருவரது நியாயங்களும் இணை கோடுகள். ஒன்று சேராது."

"மகா மந்திரியாரே! உங்கள் மகாராஜாவுடன் மானசீகமாக வாழ என்னால் முடியும். வாழ்நாள் முழுவதும் முடியும்."

"மீண்டும் மீண்டும் சிந்தி. தெளிவு வரும்."

"நான் தெளிவாகத் தான் இருக்கிறேன் ஐயா."

மகாமந்திரி எதுவும் பேசவில்லை.

பணியாளர்களுக்குக் கடுமையான உத்தரவுகளை இட்டார்.

"இவள் இங்கு இருப்பது யாருக்கும் தெரியக் கூடாது. ஒரு ராணியை நடத்துவது போல் நடத்த வேண்டும். கண்களைப் போலப் பாதுகாக்க வேண்டும். இந்த மாளிகையை விட்டு அவள் எந்தக் காரணத்திற்காகவும் வெளியேறக் கூடாது. அவளோடு பேசுவதற்கு யாரும் முற்பட வேண்டாம். யாருடனாவது அவள் பேச விரும்பினால் அளவோடு பேசுங்கள். அரசியலைப் பற்றிப் பேசாதீர்கள். இங்கிருந்து வெளியேற விரும்பினால் என்னிடம் தெரிவியுங்கள்."

இவ்வாறு கட்டளையிட்ட மகாமந்திரி சதுர்வேதி மங்கலத்தில் இருந்த தன் நம்பிக்கைக்குப் பாத்திரமான அந்தணர் நாராயணனிடம் சொர்ணமுகி பற்றித் தெரிவித்து கண்காணிக்கும் படிச் சொன்னார்.

அவரைப் பொறுத்தவரை சொர்ணமுகியின் பிடிவாதம் பருவக் கோளாறு என்றும் காலப்போக்கில் மறைந்து விடும் என்றும் மன்னன் மீதான மோகத்தை விட்டுவிட்டுத் தனது ஊருக்குப் போய் விடுவாள் என்றும் நினைத்தார்.

ஒரு மாதம் கழித்து வந்தார்.

பணியாளர்களை விசாரித்தார்.

சொர்ணமுகி தேவையான நேரங்களில் மட்டும் தங்களோடு பேசுவதாகவும் அப்பேச்சுகூட அவளது தேவைகளைப் பற்றிய தாக மட்டும் இருப்பதாகச் சொன்னார்கள் பணியாளர்கள். மகாராஜாவைப் பற்றி எதுவும் பேசுவதில்லை என்றும் தன்னைப்பற்றி எதுவும் சொல்வதில்லை என்று கூறினார்கள். வருத்தமும் இல்லாமல் சந்தோஷமும் இல்லாமல் சாதாரணமாக இருப்பதாகவும் கடந்த ஒரு மாதத்தில் சிகிச்சை எதுவும் தேவைப்படவில்லை என்றும் தெரிவித்தார்கள்.

ஓவியங்கள் வரைவதில் ஆர்வம் காட்டிய சொர்ணமுகி கண்ட இடங்களில் ஓவியங்களை வரைவதாகவும் சிலநேரங் களில் மகாராஜாவின் உருவத்தை வரைந்து அதன் முன்பு நின்று திட்டுவதாகவும் பணியாளர்கள் சொன்னார்கள். அவள் வரைந்த சுவர் ஓவியங்களை அழிக்கும்படி அவளே கூறுவதும் பின்னர் அதே இடங்களில் மீண்டும் மீண்டும் ஓவியங்களை வரைவதும் அவளது வாடிக்கையாக இருப்பதாகவும் தெரிவித்தார்கள்.

மகாமந்திரி அவளைச் சந்திக்காமலேயே திரும்பினார்.

ஏதோ ஒருவித வேகம் அவளை இயக்குகிறது. என்றும் விரைவில் அது மறைந்து இயல்பு நிலைக்குத் திரும்பி வெளியேறி விடுவாள் என்று நினைத்தார்.

ஆறு மாதங்கள் ஆகியும் எதுவும் நடக்கவில்லை.

மகாமந்திரி சிம்மவிஷ்ணு சதுர்வேதி மங்கலத்திற்கு வந்தார். அவளைச் சந்தித்தார்.

"எதற்காக வந்தீர்கள்? மகாராஜா ஏதாவது கட்டளை யிட்டிருக்கிறாரா?" என்று கேட்டாள் அவள்.

"இல்லை சொர்ணமுகி."

"பிறகு எதற்காக வந்தீர்கள்? இருக்கிறேனா இறந்து விட்டேனா என்று பார்ப்பதற்காக வந்தீர்களா?"

"இல்லை. உன்னிடம் ஏதாவது மாற்றம் வந்திருக்கிறதா என்று பார்க்க வந்தேன்."

"என்ன மாற்றத்தை எதிர்பார்க்கிறீர்கள்?"

"மகாராஜாவை மறந்து விட்டு நீ உன் சொந்த ஊருக்குத் திரும்ப வேண்டும்."

"இந்த ஜென்மத்தில் அது நடக்காது."

"மகாராஜாவின் உருவத்தை வரைந்து திட்டுகிறாயாமே! ஏன்?"

"மகாராஜா இல்லாத போது ஓவியம் வரைந்து தான் திட்ட முடியும் என்னால்."

"காலம் உன்னை மாற்றும் சொர்ணமுகி. நீடுழி வாழ்வாயாக" என்று கூறிவிட்டு அகன்றார் மகாமந்திரி.

ஆனால் காலம் அவளை மாற்றவில்லை.

சிம்மவிஷ்ணு சதுர்வேதி மங்கலத்திற்கு வந்து ஐந்து ஆண்டுகள் ஆகியும் அவள் அப்படியே தான் இருந்தாள்.

மன்னனிடம் தெரிவித்தார் மகாமந்திரி.

"அதற்கென்ன?" என்று கேட்டான் மன்னன்.

"அவளது மனஉறுதி மகத்தானதாக இருக்கிறது" என்றார் மகாமந்திரி.

"நானும் அப்படித்தான் இருக்கிறேன்" என்றான் மன்னன்.

"மன்னர்கள் கருணை வடிவமானவர்கள். நீங்களோ கல் வடிவமாக இருக்கிறீர்கள். கரைய மறுக்கிறீர்கள்."

"ஆலயங்களில் வீற்றிருக்கும் எம்பெருமான் கற்சிலையாகத் தான் இருக்கிறான். அதனால் அவனுக்குக் கருணையில்லை என்று சொல்லிவிட முடியுமா?"

"சொர்ணமுகியை நாம் வீட்டுச் சிறையில் வைத்திருப்பது மனத்திற்கு உறுத்தலாக இருக்கிறது."

"இது அவளாகக் கட்டிக் கொண்ட சிறை. அவளது சொந்த ஊரைச் சொன்னால் அங்கே கொண்டு போய் விட்டு விடலாம்."

அவளோ மன்னனின் இருப்பிடம் தான் சொந்த இடம் என்று அடம்பிடித்தாள்.

★

உதயணனின் ஓலையைப் படித்த மகாமந்திரி "இது துரதிருஷ்டமானது மகாராஜா. இவளைத் தாங்கள் கொன்று விட்டதாக நம்பி உதயணன் உங்களுக்கு எதிராக ஏதேதோ செய்து விட்டான். சொர்ணமுகி உதயணனின் சகோதரி என்று தெரிந்திருந்தால் ஆரம்பத்திலேயே அவளை அவனிடம் கொண்டு போய் விட்டிருக்கலாம். இவ்வளவு பிரச்சனைகள் நடந்திருக்காது" என்றார்.

"இப்போது தெரிந்து விட்டதல்லவா? இனியும் அவள் இங்கே இருக்கக் கூடாது. அவளைப் பத்திரமாக நெல்வேலிக்கே கொண்டு போய் விட்டுவிட ஏற்பாடு செய்யுங்கள்" என்றான் மன்னன்.

சிம்மவிஷ்ணு சதுர்வேதி மங்கலத்திற்குச் சென்றார் மகாமந்திரி.

ஆனால் அங்கிருந்து வெளியேற மறுத்தாள் சொர்ணமுகி.

★★★



நெல்வேலி

"சொர்ணமுகி! உன்னை இவ்வளவு காலமாக இங்கே வைத்திருந்ததற்குக் காரணம் நீ யார் என்பது எங்களுக்குத் தெரியாமல் இருந்தது தான். இப்போது நீ உதயணனின் சகோதரி என்பது தெரிந்து விட்டது. ஆகவே உன் சகோதரனிடம் உன்னை அனுப்பி வைக்கும்படி மகாராஜா கட்டளையிட்டிருக்கிறார். புறப்படு" என்றார் மகாமந்திரி.

"ஐயா! நான் யார் என்பது உங்களுக்கு வேண்டுமானால் இன்றைக்குத் தெரிந்திருக்கலாம். எனக்கு அன்றைக்கே தெரியு மல்லவா? உதயணனின் சகோதரியாகத் தானே நான் வந்தேன். ஆகவே நீங்கள் கூறும் செய்தி எனக்கு வியப்பளிக்கவில்லை. எனது இருப்பிடம் மகாராஜாவின் இதயம் தான். அதை விட்டு விட்டு நான் எங்கேயும் போக முடியாது" என்றாள் சொர்ணமுகி.

"நீ உதயணனின் சகோதரி என்பதை ஆரம்பத்திலேயே ஏன் கூறவில்லை?"

"மகாராஜா கூடக் கேட்டார். நான் சொல்லவில்லை. ஏனென்றால் அன்புக்கு அன்பு தான் அடையாளம். இனமோ குலமோ இல்லை. ஆகவே தான் நான் அப்போதும் சொல்ல வில்லை. இப்போதும் சொல்லவில்லை."

"நீ எப்படி வேண்டுமானாலும் சொல்லிக் கொள். தற்போது நீ யார் என்பது தெரிந்து விட்டதால் உரிய இடத்திற்கு உன்னை அனுப்பி வைப்பது எங்கள் கடமை."

"உங்களிடம் கடமை தான் இருக்கிறது. கருணை இல்லை. இருந்திருந்தால் மகாராஜா என்னை ஏற்றிருக்கலாம். கருணையைக் காட்டும் கடமையை விட்டுவிட்டுக் கருணையற்ற கடமையைக் காட்ட வந்திருக்கிறீர்களே - இதுதான் பல்லவர் பண்பா?"

"பல்லவர் பண்பு மகத்தானதாகத் தான் இருக்கிறது. சபரர் பண்பு தான் செத்துவிட்டது."

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"

"உனது அன்புச் சகோதரன் - சபரர் குலத்துக் கோமான் உதயணன் என்ன சொல்கிறான் தெரியுமா? உன் காதலை நிராகரித்த மகாராஜா உன் தொல்லையைப் பொறுக்க முடியாமல் கொலை செய்து புதைத்து விட்டாராம். அவரைப் பழிவாங்குவதற்காகத் தான் ராஜகுருவாகவும் புருஷோத்தமனாகவும் நடித்துப் பலவிதமான இழிசெயல்களைச் செய்திருக்கிறான் உதயணன். தேவதேவி என்பவள் அவனுக்கு உதவியாக வந்து யோகினியாக நடித்திருக்கிறாள்."

"இது வெறும் கட்டுக்கதை. நான் நம்ப முடியாது."

"கதையல்ல உண்மை என்று உன் சகோதரனே வாக்கு மூலம் தந்திருக்கிறான். ஓலையனுப்பியிருக்கிறான்" என்று சொன்ன மகாமந்திரி ஓலை விஷயங்களை விவரித்தார்.

சொர்ணமுகி அதைக் கேட்டு அதிர்ந்து போனாள்.

"இது உண்மையா?" என்று கேட்டாள்.

"உதயணன் கைப்பட எழுதிய ஓலை மகாராஜாவிடம் இருக்கிறது. விருப்பப்பட்டால் பார்த்துக் கொள்ளலாம்."

"உதயணன் இப்போது எங்கே?"

"இங்கேயா இருப்பான்? குட்டு வெளிப்பட்டதும் காஞ்சியிலிருந்து தேவதேவியுடன் தப்பிவிட்டான். நெல்வேலிக்குச் சென்று அங்கிருந்து ஓலை அனுப்பி இருக்கிறான். நீ இறந்து விட்டதாகவே நினைத்துக் கொண்டிருக்கிறான்."

ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக எதற்கும் கலங்காதிருந்தவள் முதல் முறையாகக் கலங்கினாள்.

"நான் உதயணனை உடனடியாகச் சந்திக்க வேண்டும் மந்திரியாரே" என்றாள்.

"அதற்கு ஏற்பாடு செய்யவே நான் வந்தேன்."

"எனக்கு எந்த ஏற்பாடும் வேண்டாம். ஒரு புரவி மட்டும் இருந்தால் போதும்."

★

"சொர்ணமுகியை அவள் விருப்பப்படி புரவியில் அனுப்பி விட்டேன். அவளுக்குத் தெரியாமல் பாதுகாப்பு வீரர்களையும் அனுப்பி விட்டேன். அவளுக்கு எந்த ஆபத்தும் நேராமல் அவளைக் காப்பார்கள். அவள் நெல்வேலிக்குப் பத்திரமாகப் போய்ச் சேருவாள் மகாராஜா" என்றாள் மகாமந்திரி.

"அவளை நான் கொலைசெய்து விட்டேன் என்று நினைத்திருக்கிறானே உதயணன்? அவனென்ன மூடனா? அவள் இறந்து விட்டாள் என்பதற்கு என்ன ஆதாரத்தைக் கண்டான் அவன்?" என்று வினவினான் மன்னன்.

"மகாராஜா! காஞ்சிக்கு முதலில் வந்தவள் சொர்ண முகியாக இருக்க வேண்டும். இங்கே வந்து இருந்து உங்கள் மீது அன்பு செலுத்தி அதை வைராக்கியமாக மாற்றியிருக்கிறாள். உங்களை விட்டுப் போக மறுத்திருக்கிறாள். நீங்கள் அவளை சிம்மவிஷ்ணு சதுர்வேதி மங்கலத்திற்கு அனுப்பி விட்டீர்கள். அதை அறியாமல் அவளை நீங்கள் கொலை செய்து விட்டதாக யாரோ உதயணனுக்குத் தகவல் தெரிவித்திருக்க வேண்டும். அதன் பிறகே உதயணனும் தேவதேவியும் காஞ்சிக்கு வந்திருக்க வேண்டும். இங்கு வந்த கொஞ்ச காலத்திலேயே உங்கள் ராஜகுருவாகி விட்டான். ஓரிரு முறை அவன் திருப்பருத்திக் குன்றத்திற்குச் சென்று அங்கே ஒரு சமாதிக்கு அஞ்சலி செலுத்திவிட்டு வந்து கொண்டிருந்தான். ராஜகுரு அஞ்சலி செலுத்தும் அளவிற்கு அந்தச் சமாதியாருடையதாக இருக்கும் என்று நான் சந்தேகித்ததுண்டு. அநேகமாக அதைச் சொர்ணமுகியின் சமாதி என்று நினைத்தே அவன் அஞ்சலி செலுத்தியிருக்க வேண்டும். அந்த விஷயத்திலும் யாரோ தான் அவனுக்குத் தவறான தகவலைச் சொல்லியிருக்க வேண்டும். தவறான தகவலைச் சொன்னவர் அவனது நம்பிக்கைக்குப் பாத்திரமானவனாக இருக்க வேண்டும். நம்பிவிட்டான். வேறு ஆதாரங்களைத் தேடவில்லை. ஆராய்ச்சிகளைச் செய்யவில்லை. பழிவாங்கும் நடவடிக்கையில் இறங்கிவிட்டான்" என்றார் மகாமந்திரி.

"மகாமந்திரி! நமது ஞானகுருவுக்கு ராஜகுரு மீது சந்தேகம் வந்திருக்கிறது. அதோடு பறவைகள் விஷயத்திலும் சந்தேகம் வந்திருக்கிறது. அதை என்னிடம் கூறியதால் பரமேச்சுர விண்ணகரமும் நாமும் காப்பாற்றப்பட்டோம். அவர் ராஜகுரு மீதான சந்தேகம் உறுதியாகததால் என்னிடம் கூறவில்லை. ஆதாரங்கள் உறுதியான பின் என்னிடம் கூறுவதாகச் சொன்னார். அதற்குள் முக்தியடைந்து விட்டார்" என்றான் மன்னன்.

"உதயணன் விஷயத்தில் உங்கள் தீர்மானம் என்ன?" என்று கேட்டார் மகாமந்திரி.

அப்போது கடிகையின் தலைவர் தரணி கொண்ட போசர் வந்தார்.

"உதயணன் வேண்டுமென்றே சாதாரண வாக்கியத்தைக் குழப்பியிருக்கிறான் மகாராஜா. கடிகை மாணவர்கள்

கண்டுபிடித்து விட்டார்கள். அச் செய்தியில் மொத்தம் ஐந்து வாக்கியங்கள் உள்ளன. அவற்றில் உள்ள புள்ளி எழுத்துக்களையெல்லாம் எடுத்து வரிசையாகப் போட்டு ஒரு வாக்கியமாகவும் புள்ளியில்லாத எழுத்துக்களையெல்லாம் வரிசையாகவும் வைத்து இரண்டாவது வாக்கியத்தையும் அமைத்திருக்கிறான். புள்ளி எழுத்துக்களை உரிய இடத்தில் சேர்த்தால் கீழ்கண்ட செய்தி வருகிறது" என்று சொல்லி மாணவர்கள் எழுதியச் செய்தியைப் படித்தார்.

-'நான் உன்னையும் காஞ்சியையும் அழிக்கப் புள்ளலூரில் பேய்ப்படை ஒன்றை உருவாக்கியிருக்கிறேன். அது இரண்டொரு நாளில் காஞ்சிக்கு வரும். பலர் மடிவார்கள். பலருக்குப் பேய் பிடிக்கும். காஞ்சி பேய் நகரமாகும்'-

செய்தியைப் படித்த தரணி கொண்ட போசர் "இந்தச் செய்தியை நம்மால் புரிந்து கொள்ள முடியாது என்றும் புரிவதற்குள் பேய்ப்படை காஞ்சியைத் தாக்கிவிடும் என்பதும் உதயணனின் அனுமானம். ஆனால் கடிகை மாணவர்கள் அவனை விடப் புத்திசாலிகள்" என்றார்.

"அவனுக்குத் தன்மீது நம்பிக்கையில்லை போலிருக்கிறது. பகை மன்னர்களை நம்புகிறான். சைவர்களை நம்புகிறான். சமணர்களை நம்புகிறான். சதிகாரர்களை நம்புகிறான். பறவைகளை நம்புகிறான். பேய்களை நம்புகிறான். விசித்திரமான வீணன். காஞ்சி என்பது சுடுகாடு என்று நினைத்து விட்டானா? இங்கே திரும்பும் இடமெல்லாம் எம்பெருமான் எழுந்தருளி மக்களை ரட்சித்து வருவதை மறந்து விட்டானா? இங்கே பேய்கள் எப்படிக் காட்சி தர முடியும்? ஆட்சி செய்ய முடியும்? மகாமந்திரி! சிம்மவிஷ்ணு சதுர்வேதி மங்கலத்தில் உள்ள வேதமாணாக்கர்களையும் அந்தணர்களையும் புள்ளலூருக்கு அனுப்பி வேத முழக்கத்தை எழுப்பச் சொல்லுங்கள். பேய்ப்படை அங்கேயே அழியும்" என்றான் மன்னன்.

★

உதயணனின் இருப்பிடமான நெல்வேலி எங்கே இருந்தது என்பதில் வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் இன்னும் ஒரு முடிவிற்கு வரவில்லை. உதயணன் வடநாட்டான் என்றும் அவனது இருப்பிடம் கோதாவரி ஆற்றங்கரையில் இருந்தது என்கிறார்கள் சிலர். வேறு சிலரோ தென்பாண்டி நாட்டில் இருக்கும் திருநெல்வேலிதான் உதயணனின் நெல்வேலி என்றும்

கூறுகிறார்கள். சிலர் நென்மேலி என்று சுட்டுகிறார்கள். இந்த நாவலின் முதல் பாகத்தில் கூறியுள்ளபடி இக்கதையைப் பொறுத்தவரை சிற்சில வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடும் புதுக்கோட்டையில் இருக்கும் நெல்வேலி தான் உதயணனின் இருப்பிடம் என்று கொள்ளப்படுகிறது.

அந்த நெல்வேலியில் கோட்டைப் பகுதியும் நகரப் பகுதியும் பரபரப்பாகக் காணப்பட்டது. நெல்வேலியில் போர் நடக்கப் போகிறது என்று மக்கள் பேசிக்கொண்டார்கள். அதற்கேற்ப கோட்டைப் பகுதியில் போருக்கான ஆயத்தங்கள் முழுவீச்சில் நடந்து கொண்டிருந்தன. மதில்களில் விதவிதமான பொறிகள் அமைக்கப்படுவதைக் கண்டு மக்கள் அதிசயப்பட்டார்கள். அதுவரை அவர்கள் பார்த்திராத பொறிகளை மதில்கள் மீது கண்டபோது நடக்கப் போகிற போர் பயங்கரமாக இருக்கும் என்று தோன்றியது அவர்களுக்கு. படை வீரர்கள் கோட்டைச் சுவற்றுக்கு உட்புறமும் வெளிப்புறமுமாகக் குவிக்கப்பட்டார்கள்.

கொஞ்சகாலமாக கோட்டைச் சுவர்களும் வாயிற்கதவுகளும் பழுது பார்க்கப்பட்டு வந்த படியால் அவை புதுப் பொலிவைப் பெற்றிருந்தன. வாயிற்கதவுகளில் கூர்முனைகளைக் கொண்ட மொட்டுகள் அமைக்கப்பட்ட விதமானது எதிரிகளைக் குத்திக் கிழிக்கத் தயாராக இருப்பது போல் தோன்றின. மதில் மீதும் நகரப் பகுதிகளிலும் ஏராளமான முரசுகள் கட்டப்பட்டு அவ்வப்போது அடிக்கப்பட்டன. கோட்டைச் சுவர்களிலும் நகரத்தின் விதானங்களிலும் சிவப்புக் கொடிகள் பறந்து "உள்ளே பயங்கரம் குடி கொண்டிருக்கிறது. யாரும் நுழைய வேண்டாம்" என்று எச்சரிப்பது போல் இருந்தது.

கோட்டைக்கு வெளியே நாற்புரமும் இருந்த காவற்காடுகள் முழுவதுமாக அழிக்கப்பட்டு அங்கெல்லாம் இரும்புத் தண்டுகளால் ஆன தடுப்புகள் போடப் பட்டிருந்தன. தடுப்புகள் நெருக்கமாகவும் வளைவாகவும் போடப் பட்டிருந்ததால் வியூகங்களைப் போலக் காட்சி யளித்தன. அகழிக்குப் பதிலாக உதயணன் தான் இரும்பு வேலிகளைப் போட்டு 'இது நெல்வேலி அல்ல இரும்பு வேலி' என்று பலரையும் பேச வைத்திருந்தான். எதிரிகள் அந்த வேலிகளுக்குள் புகுந்தால் மதில் மீது இருப்பவர்கள் உக்கிரமான தாக்குதலை நடத்தி வேலைதீர்த்து விடுவார்கள் என்பது எல்லோருக்கும் புரியக் கூடியதாக இருந்தது.

உதயணன் எல்லா நாட்டவருடனும் நட்பு வளர்த்து நல்லவனைப் போல் நாடகமாடி வந்தபடியால் அவனை எதிர்த்து

யாரும் வரவில்லை. கடந்த ஒருமாதகாலமாக அன்னியர்கள் நுழைவது அடியோடு தடுக்கப்பட்டிருந்தது. வணிகர்கள் கூடக் கோட்டைச் சுவற்றுக்கு வெளியிலேயே சந்தைகளை அமைத்துக் கொள்ளும்படி அறிவுறுத்தப்பட்டிருந்தார்கள். நெல்வேலியைச் சேர்ந்தவர்களைத் தவிர மற்றவர்கள் வெளியேற்றப்பட்டதால் கோட்டைக்குள் என்ன மர்மம் நடக்கிறது என்பது அயலாருக்குத் தெரியாமலிருந்தது.

நெல்வேலி மீது படையெடுப்பது யார் என்பதில் மக்களிடம் குழப்பமே நிலவியது. பெரும்பாலோர் பாண்டியன் படையெடுப்பதாகவே நினைத்தார்கள். ஒருசிலர் கொடும்பாளூர் வேளிர்படை படையெடுப்பதாகச் சொன்னார்கள். வேறு சிலர் முத்தரையர்கள் படையெடுப்பதாகப் பேசினார்கள். போருக்கான நாள் நெருங்கியபோது தான் படையெடுத்து வருவது பல்லவர் படை என்று தெரிந்தது. அது தெரிந்தபின் அவர்களுக்குள் அச்சமும் திகிலும் உண்டாகத் தொடங்கியது.

"பல்லவர் படையென்றால் பெரும்படையாக இருக்குமே! அவற்றை எப்படி எதிர்கொள்வார்?" என்று கேட்டார்கள் சிலர்.

"சமீபத்தில் பல்லவர் பேரரசர் கங்கநாட்டில் போர் செய்து மிகப் பெரிய வெற்றியைப் பெற்றிருக்கிறார். அவருக்கு முன்னால் நெல்வேலி சிறியது. இதைக் கைப்பற்ற அவருக்கு சிரமமிருக்காது" என்றார்கள் சிலர்.

"பல்லவப் பேரரசர் கங்கநாட்டுப் போரில் வென்றது தற்செயலானது. மற்றபடி வெற்றிக்கும் அவருக்கும் ராசி இல்லை. இங்கே அவர் தோற்பது உறுதி" என்றார்கள் வேறு சிலர்.

"உதயண மகாராஜாவைப் பற்றி உங்களுக்குத் தெரியாது. வேடர் குலத் தலைவரான அவர் வில்லாதி வீரர். அவரிடமிருந்து அம்புகள் மின்னல் வேகத்தில் எதிரிகளின் மீது பாயும். எதிரிகள் அம்பை எதிர்கொள்வதற்கு முன் மாண்டு போவார்கள். அவருக்குத் தெரியாத போர்த் தந்திரம் இல்லை. எதிரி யாராக இருந்தாலும் தாக்குப் பிடிக்க மாட்டாமல் கதறி ஓடுவார்கள்" என்றார்கள் இன்னும் சிலர்.

மக்கள் இரண்டு விதமாகப் பேசிக் கொண்டாலும் பொதுவாக எல்லோருக்கும் போர் குறித்து அச்சமாகவே இருந்தது. பெரும்பாலான போர்கள் மன்னருக்கும் மன்னருக்கும் என்று நின்று விடுவதில்லை. படைகளுக்கும் படைகளுக்கும் என்று இருந்து விடுவதில்லை. வெற்றி பெற்றவர்கள் வெற்றியோடு

நின்று விடாமல் வெறியைக் கட்டவிழ்த்து விடுவார்கள். அப்பாவி மக்களை வெட்டிக் கொண்டாடுவார்கள். இளம்பெண்களை இழுத்துச் சென்று இம்சிப்பார்கள். இச்சிப்பார்கள். இல்லங்களில் புகுந்து கொள்ளையடிப்பார்கள்.

நீர்நிலைகளைப் பாழடிப்பார்கள். போர் முடிந்த சிலநாட்கள் கழித்துப் பார்த்தால் வெற்றி பெறப்பட்ட நகரமானது பல்வேறு சேதங்களால் கதறிக் கொண்டிருக்கும். தேற்றுவதற்கு ஆளில்லாமல் திணறிக் கொண்டிருக்கும். நீருக்கும் உணவிற்குமாக மக்கள் திண்டாடிக் கொண்டிருப்பர். எங்கு பார்த்தாலும் பிணநாற்றமும் ரத்த வாடையுமே வீசும். கழுகுகளும் நரிகளும் சுற்றித் திரியும் சுடுகாடு போல இருக்கும். இயல்பு நிலைக்கு நகரம் திரும்புவதற்கு நீண்டகாலம் ஆகும்.

உதயணன் நெல்வேலியில் அதிகமாக இருந்தது இல்லை. அவன் ராஜகுருவாகவும் புருஷோத்தமானாகவும் வேடம் போட்டுக் காஞ்சியில் சதி செய்து கொண்டிருந்தது மக்களுக்குத் தெரியாது. பல்வேறு அரசர்களை அணுகி நட்புகரம் நீட்டுவதற்காகவே அவன் செல்வதாக மக்களும் நினைத்தார்கள். மற்றவர்களும் நினைத்தார்கள்.

ஆனால் உதயணனின் சேனாதிபதியான மன்மதன் மட்டும் அவ்வாறு நினைக்கவில்லை. பாம்பின் கால் பாம்புக்குத் தெரியும் என்பது போல் அயோக்கியனான சேனாதிபதி மன்மதனுக்கு உதயணனின் மீது சந்தேகம் தான் பூரணமாக இருந்தது. உதயணன் நெல்வேலியை விட்டு அடிக்கடி காணாமல் போவது நல்லதிற்காக அல்ல என்று கருதினான். ஆதாயம் கருதி அபாயகரமான காரியம் எதிலோ இறங்கியிருக்கிறான் என்றே நினைத்தான். அதை உறுதி செய்வது போலப் பல்லவர் படை நெல்வேலியை நோக்கிப் படையெடுப்பதாக வதந்தி வந்தது.

உதயணன் அதுகுறித்துத் தன்னிடம் எதுவும் பேசவில்லை என்றாலும் போர் வதந்தியை உண்மை என்றே நம்பினான். உதயணன் காஞ்சிக்குச் சென்று பல்லவர் ஆட்சிக்கு எதிராகச் சகிக்க முடியாத சதியினைச் செய்திருக்க வேண்டும் என்றும் அதன் விளைவாகத் தான் பல்லவப் படைகள் திரண்டு வருகின்றன என்றும் நினைத்தான்.

நெல்வேலியில் உதயணன் நீண்ட காலமாக இல்லாமல் பொறுப்புகளைத் தன்வசம் ஒப்படைத்து விட்டுக் காஞ்சிக்குச் சென்றுவிட்டபடியால் மன்மதன் ஏறக்குறைய தன்னை நெல்வேலியின் மன்னனாகவே நினைத்துக் கொண்டு

மன்னனாகவே நடந்து கொண்டு வந்தான். பதவி என்பது வேசியைப் போன்றது. அதோடு தொடர்பு கொண்டு விட்டால் எளிதில் பிரிந்துவிட்டு வரமுடியாது. அப்படித்தான் இருந்தான் மன்மதன். உதயணன் காஞ்சியை விட்டுத் தப்பி நெல்வேலிக்கு வந்து பலநாட்களாக அங்கேயே இருந்ததாலும், போர் ஆயத்தங்களைச் செய்ததாலும் அவன் தன் பதவிக்கு வந்து விட்டதாகக் கருதிய மன்மதன் மிகவும் வருந்தினான். பதவிச் சுகம் போனது அவனை உறுத்தியது. சேனாதிபதிப் பதவியை விட மன்னன் பதவிதான் தனக்குப் பொறுத்தமானது என்று நினைத்தான்.

"தனது அந்தரங்கப் பணியாளனை அழைத்து மைவிழிக் கண்ணியைக் காட்டு மாளிகைக்கு வரச்சொல்" என்றான்.

★★★



அவனும் அவளும்

"அன்னமே வா! மயிலே வா. குயிலே வா" என்றான் மன்மதன்.

"ஏன் மூன்றோடு நிறுத்தி விட்டீர்கள்?" என்று கேட்டாள் மைவிழிக்கண்ணி.

"அன்னம் போல் நடக்கிறாய். மயிலைப் போய் ஆடுகிறாய். குயிலைப் போல் பாடுகிறாய். ஆகவே நான் முக்கியமான மூன்றைச் சொன்னேன்" என்றான் மன்னன்.

"ஒவ்வோர் அங்கத்திற்கும் ஓர் உவமையைச் சொல்லக் கூடாதா?"

"கிணற்று நீரை அள்ளலாம். கடல் நீரை அள்ள முடியுமா? கல்லை அசைக்கலாம். கல்மலையை அசைக்க முடியுமா? உன் அங்கங்களை வர்ணிப்பதும் அப்படித்தான். ஆரம்பித்தால் முடிப்பதற்கு மூன்று நாட்கள் ஆகும். எதற்கு அது? வர்ணனை அளவோடு இருப்பதுதான் வளமானது."

"நீங்கள் செய்யும் சேட்டைகளுக்கும் அது பொருந்துமா?"

"இது என்ன இப்படிக் கேட்கிறாய்? அதற்கு ஏது அளவு? நானும் சரி நீயும் சரி - அந்த விஷயத்தில் அளவோடு இருந்ததுண்டா? அளவைக் கடப்பதுதான் அந்த விஷயத்தில் ஆனந்தமானது. நியாயமானது. பொருத்தமானது. இது உனக்குத் தெரியதா கண்ணி? வா, வந்து கட்டிலில் உட்கார். வாள் விழியும், மதுர மொழி சிந்தும் உதடுகளும், அதர பானத்தை மதுபானமாக மாற்றும் செவ்வாயும், வேல் விழியால் உண்டாகும் எங்கள் புண்ணிற்கு ஒத்தடம் கொடுக்கும் தனங்களும், என்னை வாட்டி வதைப்பதை அறியாமல் எதற்காக வர்ணனைகளை விரும்புகிறாய்? நான் வர்ணிக்காத அங்கங்களா? பார்க்காத தங்கங்களா? பார்த்து அனுபவிக்காத இடங்களா? கண்ணி! உனக்கின்று உள்ளம் மகிழ்ந்துவக்கும் செய்தியைச் சொல்லப் போகிறேன்."

கட்டிலில் வந்து அமர்ந்த மைவிழிக் கண்ணி தற்செயலாக நடந்தது போல மேலாடையைஅகற்றி "இப்படித் தான் ஒவ்வொரு முறையும் ஒவ்வொன்றைச் சொல்கிறீர்கள். சொல்லிவிட்டு என்னைக் கனவுக் கடலில் தள்ளி விட்டுக் காமச் செல்வத்தை அள்ளிச் செல்கிறீர்கள். ஆடவர்கள் எப்போதுமே காமத்திற்கு முன்னால் கள்ளர்கள். உள்ளம் கவரும் கள்வர்கள்" என்று சொல்லி மேலாடையை மேலேற்ற முயன்ற போது.

"அது எதற்கு இப்போது? கண்களுக்கு விருந்தளிக்கும் தனங்களை எதற்காக மறைக்க முற்படுகிறாய்? என்னைக் கட்டிப்போடுவதே உன்னிடம் இருக்கும் தனங்கள் தானே? அவற்றால் தானே நீங்களெல்லாம் தனநந்திகளாக இருக்கிறீர்கள்? தனங்களைக் குவிக்கும் தனங்கள் தானே உங்கள் சொத்து?" என்றான் மன்மதன்.

அப்படிச் சொல்லிவிட்டுத் தனது கரங்களால் அவளது தனங்களை அணுகினான்.

அவனது கைகளைத் தடுத்த அவள் "இன்றைக்கு என்ன பொய்யைச் சொல்லப் போகிறீர்கள்?" என்றாள்.

"பொய் சொல்லி வந்த காலம் புரையோடி விட்டது கண்ணி. மெய்யானது நுரையைத் தள்ளிவரும் அலை போல வந்து விட்டது" என்று சொல்லி அவளது கைகளை நீக்கி தனங்களில் ஒன்றில் தன் விரல்களைப் பதித்தான்.

அந்த விஷயத்தில் அவன் முன்னேறினால் முன்னேறியபடி தான் இருப்பான் என்பதை உணர்ந்த அவள் தடுப்பதை விட்டு விட்டு "பீடிகை போடாமல் விஷயத்தைச் சொல்லுங்கள்" என்றான்.

தனங்களில் விரல்கள் பதிந்ததால் தன் உடலில் காம உணர்வுகள் விஷம் போலப் பரவுவதை உணர்ந்த மன்மதன் அவ்வுணர்வைச் சற்றே அனுபவித்து விட்டு "நீ ராணியாகப் போகும் நாள் நெருங்கி விட்டது கண்ணி. நெருங்கி விட்டது" என்றான் விரல்களை ஓடவிட்டு.

"நீங்கள் சேனாதிபதி தானே?" என்று கேட்டாள் கண்ணி. அவளது மார்புக் கச்சு 'தற்செயலாக' அவிழ்ந்து விழுந்தது.

மேகத்தால் மறைந்திருந்த சந்திரன் முழுதாக வெளிப்பட்டது போல் திரண்டெழுந்து காட்சி தந்த அவளது அபாரமான தனங்களைப் புதிதாகக் கண்டவனைப் போல கண்டு, மிரண்ட சேனாதிபதி மன்மதன் "தனங்கள் என்றால் இப்படியல்லவா இருக்க வேண்டும்? என்ன திரட்சி? என்ன அழகு? என்ன

செழிப்பு? என்ன வழுவழுப்பு? இவற்றை எப்படி இவளது இடை தாங்குகிறது?" என்று எண்ணிக் கொண்டவனாய் "நான் சேனாதிபதியாக இருக்கப் போவது சில நாட்களுக்குத் தான். அதற்குப் பிறகு பல ஆண்டுகளுக்கு நெல்வேலிக்கு நான் தான் ராஜா. நான் ராஜா என்றால் நீ தான் ராணி" என்றான்.

அவள் கட்டிலில் மல்லாந்து படுத்துக் கொண்டாள்.

அவளது அந்த நிலை அவனது நரம்புகளை முறுக்கேற்றிய தால் தனங்களின் மீது உதடுகளைக் கொண்டு "எதற்காகச் சிரிக்கிறாய்?" என்று கேட்டு உதடுகளைப் பதித்துப் புரட்டினான்.

"மன்னர் உதயணன் இங்கே பல ஆண்டுகளாக வராமலேயே இருந்தார். அப்போதெல்லாம் ராஜாவாக வாய்ப்பிருந்த போது வீணாக இருந்து விட்டீர்கள். உதயணன் இப்போது நிரந்தரமாகவே இங்கு வந்து விட்டார். இந்த நிலையில் மன்னராகப் போவதாகச் சொல்கிறீர்களே - இதைக் கேட்டுச் சிரிக்காமல் என்ன செய்ய முடியும்?" என்று கேட்டாள் மைவிழிக் கண்ணி.

அவளது வார்த்தைகள் அவனைப் பொசுக்கி விடவே கோபமும் தாபமும் அவனிடம் கிளர்ந்தன. அதுவரைத் தொட்டும் தடவியும் இதமாக இயங்கி வந்த அவன் முரடனானான். அதற்கேற்ப அவனது இந்திரியங்கள் சிங்கத்தைப் போலச் சீறின. சிங்கம் மானை வேட்டையாடியது.

அவனது வேட்டை சீராகவும் சிறப்பாகவும் இருந்ததாலும், அது அவளுக்கு மிகவும் தேவைப்பட்டதாலும், பெண்களின் அங்கங்கள் ஆடவர்களின் முரட்டுத் தனங்களில் தான் திருப்தியடைகின்றன என்பதை உணர்ந்திருந்ததாலும் பேச்சையும் சிரிப்பையும் அறவே விட்டு விட்டு உறவே கதி, உணர்ச்சியே உயர்வு என்று கண்ணியும் தீர்மானித்ததால் காமம் கடலளவு விரிந்து காட்டுத் தீயைப் போல எரிந்தது.

இன்னும் கொஞ்சம் நீடிக்கட்டும் என்று இருவருமே அடுத்தடுத்து எண்ணிய காரணத்தால் காமப் புயல் கண்டபடிச் சுழன்றது. மனித உணர்வுகளைக் கடந்து, மிருக உணர்வில் ஆழ்ந்து, இடம், பொருள் என்ற நிலைகளை மறந்து இருப்பது காமம் மட்டுமே என்பதை உணர்ந்தவர்களைப் போல இரண்டு பேரும் செயல்பட்டார்கள்.

மைவிழிக் கண்ணியின் தனங்கள் படாதபாடு பட்டன. பாறைக் கற்களைப் பொடிப்பவனான சேனாதிபதி காமக் கலையில்

பெயருக்கேற்ப மன்மதனாகவே நடந்து கொண்டபடியால் அவளது தனங்களும் கனங்களும் இன்பகரமாகச் சிதைந்தன. அவளிடம் ஊறிக் கிடந்த இன்ப ஊற்றுக்களையெல்லாம் கள்ளைக் குடிக்கும் கள்ளப் பூனையைப் போல அவன் நுகர்ந்ததால் அவள் சக்கை போல் ஆனாள். காமத்தின் இன்ப முடிவு அதுதான் என்பதை உணர்ந்த அவள் ஆனந்தத்தில் ஆழ்ந்தாள். அவளைச் சக்கையாக்குவது தான் தனது வெற்றி என்பதை உணர்ந்து அனுபவித்த சேனாதிபதி மன்மதனும் பேரானந்தத்தில் ஆழ்ந்து போனான்.

எது சிற்றின்பமோ அதுதான் பெரும்பாலான மனிதர் களுக்குப் பேரின்பமாக இருக்கிறது. சிற்றின்பம் என்று உபதேசிப்பவன் கூட அதை ரகசியமாக அனுபவித்துப் பேரின்பமாகக் கருதுகிறான். இந்த விஷயத்தில் எச்சரிக்கையை விடுத்தாலும் தடைகளைப் போட்டாலும் மனிதமனம் அலட்சியமே செய்கிறது. இந்த விஷயத்தில் உடல் சொல்வதைத் தான் மனம் கேட்கிறதே தவிர மனம் சொல்வதை உடல் கேட்பதில்லை. உடல் புண்ணாகிச் சிதைந்தாலும் கூட மனத்தில் இருக்கும் காம எண்ணங்கள் புண்ணாவதில்லை.

இந்த நிலை ஊழிக் காலத்திலிருந்து இருந்து வரும் நிலை. இந்த நிலை புராண காலத்து மாந்தர்களையும் விட்டு வைத்ததில்லை. நெறிகள் வகுக்கப்பட்ட காலத்திலிருந்தே அவை மீறப்பட்டு வந்தது வாடிக்கையானது. காலப்போக்கில் அதுவே வாழ்க்கையானது. நெறிகள் வீணாகின. மூன்று பிள்ளைகளுக்குத் தகப்பனும் இரண்டு பெண்களுக்குக் கணவனுமான சேனாதிபதிக்கு மைவிழிக் கண்ணியும் அவளது மட்டற்ற காமமும் தேவைப்படுகிறதென்றால் சிற்றின்பத்தைப் பற்றி சொல்ல என்ன இருக்கிறது?

காமக் கடலின் ஆழத்தில் இருந்த அவர்களை முரசொலிகள் எழுப்பின. மேலே கொண்டு வந்தன.

"முரசொலிகள் கேட்கின்றன" என்று முணுமுணுத்தாள் கண்ணி.

"ஆம், போர் ஆயத்தங்களை உணர்த்துகின்றன" என்றான் மன்மதன்.

"போர் நிச்சயம் தானா?" என்று கேட்டாள் கண்ணி.

"இதென்ன கேள்வி? போர் நிச்சயமாகாமலா முரசுகள் ஒலிக்கின்றன?" என்று கேட்டான் மன்மதன்.

"படையெடுப்பது பல்லவர்களா?" என்று கேட்டாள் கண்ணி.

"பல்லவர்களே தான்."

"அவர்கள் வல்லவர்கள் அல்லவா?"

"நல்லவர்களும் கூட."

"அவர்களிடம் இருப்பது பெரும்படையல்லவா?"

"பேரரசிற்கு உரிய மாபெரும் படை."

"அப்படியானால் நம் கதி?"

"அதோ கதி என்று சொல்ல முடியாது. மன்னர் உதயணன் சிங்கம் போன்றவர். யானை போன்றவர். நரியைப் போன்றவர். இவற்றின் மூன்று குணங்களும் அவரிடம் உண்டு."

"அப்படியானால் அவர் போரில் வெற்றி பெறுவார் என்கிறீர்களா?"

"கணக்கு அப்படித்தான் காட்டுகிறது."

"அவர் வென்று விட்டால் அவர்தானே மன்னராகத் தொடர்வார்? நீங்கள் எப்படி அரியணையில் அமர முடியும்? என்னை ராணியாக்க முடியும்?"

"அவரை வெற்றியடையாமல் செய்துவிட்டால்!"

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"

"மன்னருக்கும் பல்லவர் படைகளுக்கும் இடையில் நானிருக்கிறேன்."

"அதனால்?"

"மன்னர் வெற்றி பெற விடமாட்டேன்."

"அதாவது..."

"அதுவே தான்."

"அது துரோகமாகாதா?"

"மன்னர் காஞ்சியில் இருந்து கொண்டு நடத்தி வந்தது வீரதீர பராக்கிரமமல்ல. துரோகம். பச்சைத் துரோகம்."

"அது பல்லவர்களுக்கு எதிரானது. சரியானது. நீங்கள் செய்யும் துரோகம் நமது மன்னருக்கு எதிரானது. தவறானது."

"யார் யாருக்கு எதிராகத் துரோகம் செய்தாலும் நோக்கம் ஒன்று தான்."

"மன்னரை நீங்கள் தோற்கச் செய்து விட்டால் நெல்வேலியைப் பல்லவர்கள் அல்லவா ஆள்வார்கள்?"

"அரசியலைப் பற்றி உனக்கு அதிகம் தெரியாது கண்ணி."

"சொல்லுங்களேன். தெரிந்து கொள்கிறேன். ராணியாகப் போகும் எனக்கு அரசியல் தெரிந்திருப்பது நல்லது தானே?"

"சொல்கிறேன். நீ உடைகளை அணிந்து கொண்டு உள்ளே செல். பால் இருக்கும். காய்ச்சு. பழம் இருக்கும். நறுக்கு. இருவருக்கும் கொண்டு வா. உண்டுவிட்டுப் பேசுவோம்."

பாலும் பழமும் உண்டு இருவரும் தெம்படைந்தனர்.

இரவின் பெரும் பொழுது களியாட்டத்தில் கழிந்து விட்டதால் விடிவதற்கு ஆறுநாழிகைகளே இருந்தன.

கட்டிலை விட்டு ஆசனத்தில் அமர்ந்த மன்மதன் பேசத் தொடங்கி "கண்ணி! நீ கேட்ட கேள்வி சரிதான். பல்லவர்கள் போரில் வென்றால் அவர்கள் தான் நெல்வேலியை ஆள்வார்கள். ஆனால் அவர்கள் வெல்வதற்கு நான் காரணமாக இருந்தால் அரியணையில் என்னை அமர்த்துவார்கள் அல்லவா?" என்றான்.

"புரியவில்லை" என்றாள் கண்ணி.

"என்ன புரியவில்லை என்கிறாய்? எதிரிக்கு உதவி செய்து அவர்களது வெற்றிக்கு வழி வகுப்பது ஒரு விதமான அரசியல்."

"உங்கள் உதவி பல்லவர்களுக்குத் தேவைப்படுமா?"

"ஏன் அப்படிக் கேட்கிறாய்? வேறு நாட்டை நோக்கிப் படையெடுக்கும் போது உள்ளூரார் உதவி கட்டாயமாகத் தேவைப்படும். அந்த உதவியைச் செய்வது சேனாதிபதியாக இருக்கும் போது கசக்கவா போகிறது? நோகாமல் வேகாமல் வெற்றி பெறுவதற்கு நான் உதவினால் அது அவர்களுக்கு பிடிக்காமலா போய் விடும்? வெற்றிக்கு உதவி விட்டு நெல்வேலியின் அரியணையைக் கேட்டால் தரமுடியாது என்றா சொல்வார்கள்?"

"மன்னர் மீதான பகை காரணமாகத்தானே பல்லவர்கள் படையெடுத்து வருகிறார்கள்? அப்படி இருக்கும் போது நீங்களும் எதிரிதானே? உங்களுக்கு எப்படி அரியணையைக் கொடுப்பார்கள்?"

"எனக்குத் தெரிந்த வரை நமது மன்னர் காஞ்சியில் இருந்து செய்த துரோகத்திற்குப் பழிவாங்கவே பல்லவர்கள்

படையெடுத்து வருகிறார்கள்? அவர்களுக்கு நமது மன்னர் தான் எதிரியே தவிர நானல்ல. மன்னர் எப்படிப்பட்ட வஞ்சகர் என்பது அவர்களுக்குத் தெரியும். எப்படிப்பட்ட தந்திரசாலி என்பதும் தெரியும். வெற்றிக்காக எதையும் செய்யக் கூடியவர் என்பதும் தெரியும். அவரை முறியடிப்பது எளிதல்ல என்பதும் தெரியும். இந்த நிலையில் அரியணைக்கு உரிமை கோரி நான் உதவ வந்தால் மறுப்பார்களா? அவர்களுக்குத் தேவை வெற்றி. அவர்களுக்குத் தேவை உதயணனின் அழிவு. அது நடந்துவிட்டால் அவர்களுக்குப் போதும். நெல்வேலியைக் கட்டி ஆள அவர்கள் விரும்பமாட்டார்கள். என் கோரிக்கையை நிறைவேற்றுவார்கள். ஆதிக்க உரிமையைத் தங்களிடம் வைத்துக் கொள்வார்கள்."

"உங்கள் திட்டம் தான் என்ன?"

"இப்போதைக்குப் பாதித் திட்டத்தைத் தான் தீட்டியிருக்கிறேன். நாளை இரவு வா. முழுதிட்டத்தையும் சொல்கிறேன்."

"பொழுது விடியும் நேரமாகிறது. வெளியே செல்லத் தயக்கமாக இருக்கிறது."

"கணிகைகள் வெளியேறும் நேரம் தான். எதற்காக உனக்குத் தயக்கம்? உன்னை யார் என்ன கேட்பார்கள். யாராவது கேட்டால் சேனாதிபதியின் ஆசை நாயகி என்ற தயங்காமல் சொல். எவன் என்ன கேட்கிறான் என்று பார்க்கிறேன். நெல்வேலியின் ராணியாகப் போகிற உனக்கு இப்படியெல்லாம் தயக்கமும் அதைரியமும் இருக்கக் கூடாது."

"சேனாதிபதி! நான் உங்கள் மனைவியல்ல. உங்கள் ஆசைநாயகி. நான் எப்படி ராணியாக முடியும்?"

"உன்னை ராணியாக்க வேண்டுமானால் சட்டத்தை மாற்றுகிறேன். புதுச் சட்டத்தை இயற்றுகிறேன். நான் யார் என்பதை உனக்கு நிரூபிக்கிறேன். இந்த மக்களுக்கு நிரூபிக்கிறேன். இந்தத் தமிழ்நாட்டிற்கும் அதன் மன்னர்களுக்கும் நிரூபிக்கிறேன். என்னைப் பார்த்து அவரவர்களும் சட்டங்களை மாற்றியமைப்பார்கள். கணிகைகளுக்குப் பொற்காலம் வரப்போகிறது. கவலையில்லாமல் போய் வா."

கவலையில்லாமல் சென்ற மைவிழிக்கண்ணி மறுநாள் இரவு வந்தாள்.

"திட்டத்தைத் தீட்டி விட்டீர்களா?" என்று கேட்டாள்.

"முதலில் அது. அப்புறம் இது" என்றான் மன்மதன்.

அவள் படுத்தாள்.

அவனுக்குப் பாயானாள்.

அவன் பேயானான்.

"இப்போதைக்கு முக்கால் வாசித் திட்டத்தைத் தீட்டி யிருக்கிறேன். நாளைக்கு வா. முழு திட்டமும் தயாராகி விடும்" என்றான்.

மறுநாள் வந்தாள்.

அதே பேச்சு. அதே செயல்.

அடுத்த நாள் வந்தாள்.

அவளைக் கசக்கிப் பிழிந்த சேனாதிபதி "திட்டம் தயாராகி விட்டது" என்றான்.

"அப்படியா? சொல்லுங்கள்" என்றாள் மைவிழிக் கண்ணி.

அப்போது கதவு தட்டப்பட்டது.

"எனது மாளிகைக் கதவைத் தட்டக் கூடியவன் யார்?" என்று எரிச்சலோடு கேட்டபடி கதவைத் திறந்தான் சேனாதிபதி.

வெளியே நின்றிருந்தது மன்னன் உதயணன்.

★★★



பெருமாள் பட்டர்

உதயணன் அறையில் இருந்த சேனாதிபதியையும் மைவிழிக் கண்ணியையும் பார்த்தான்.

கண்கள் சிவந்தன.

"சேனாதிபதி! உன்னை இப்பதவியிலிருந்து உடனடியாக நீக்குகிறேன்" என்றான் உதயணன்.

சேனாதிபதி அசரவில்லை.

"என்னைப் பதவி நீக்கம் செய்யும் அதிகாரம் உங்களுக்கு இல்லை" என்றான் உறுதியான குரலில்.

"வேறு யாருக்கு அதிகாரம்?" கேட்டான் உதயணன்.

"நெல்வேலி நியாயஸ்தர் குழு ஒன்றிருக்கிறது. அது ஒன்று கூடி ஒப்புக் கொண்டால்தான் உங்களால் என்னைப் பதவி நீக்கம் செய்ய முடியும்?" என்றான் சேனாதிபதி.

"நியாயஸ்தர் குழுவையே நேற்று நீக்கி விட்டேன். தெரியுமா உனக்கு?"

சேனாதிபதி சற்றே அதிர்ந்தான்.

அப்போது மைவிழிக் கண்ணி மன்னன் காலில் விழுந்தாள்.

"அவரை மன்னியுங்கள் பிரபு. ஆத்திரத்தில் மதியிழந்து விட்டார். அவர் தங்களை மறுத்துப் பேசியது பெரும் தவறு. காமம் கண்ணை மறைத்து விட்டது. தயவு செய்து மன்னித்தருளுங்கள். மன்னருக்கு இல்லாத அதிகாரம் யாருக்கும் இல்லை. தங்களை விட்டால் இவரை மன்னிப்பதற்கும் யாருமில்லை" என்று வேண்டினாள்.

மன்னன் எதுவும் பேசவில்லை.

அங்கிருந்து அகன்றான்.

மன்னன் அகன்றபின் மன்மதனைப் பார்த்த மைவிழிக் கண்ணி "உங்களுக்குக் கொஞ்சமாவது புத்தியிருக்கிறதா?

யாரிடம் பேசுகிறோம் என்று உணர்ந்து தான் பேசினீர்களா? அவர் மன்னர். சர்வாதிகாரி. அவர் நினைத்தால் எதுவும் செய்யலாம். விசாரணையில்லாமல் உங்களைக் கழுவில் ஏற்ற அவரால் முடியும். அவருக்கு மிஞ்சிய அதிகாரங்களோ அதிகார அமைப்புகளோ கிடையாது. இது தான் என்னை ராணியாக்கும் லட்சணமா?" என்று பொரிந்தாள்.

"என்னை எப்படி மன்னர் அவமானப்படுத்தலாம்? உனக்கு முன்னால் என்னைப் பதவியிலிருந்து நீக்கி விட்டதாகச் சொன்னது என்னை அவமானப்படுத்துவதாக ஆகாதா?" என்று கேட்டான் சேனாதிபதி.

"அர்த்தமில்லாமல் பேசாதீர்கள். உங்களை அவமானப் படுத்துவதற்குக் கூட அவருக்கு அதிகாரம் உண்டு. உங்கள் மீதான குற்றச்சாட்டு என்ன என்பதை அறிந்து கொள்ளாமல் அவரை எதிர்த்துப் பேச உங்களுக்கு ஏது உரிமை?"

"குற்றம் எது என்று சொல்லாமல் அவர் என்னைப் பதவி நீக்கம் செய்யலாமா?"

"இருப்பதால் தான் அப்படிச் சொன்னார். நீங்கள் சென்று தான் அது என்ன என்பதை விசாரிக்க வேண்டும். அவராக விவரமாகச் சொல்வாரா உங்களிடம்?"

"கண்ணி! ஐந்து வருடங்களுக்கு மேலாக நான் தான் இங்கே அரசருக்குரிய பொறுப்புகளைக் கவனித்து வந்தேன். திறம்பட நிர்வகித்து வந்தேன். அது தெரியாமல் என்னிடம் அவர் அவ்வாறு பேசலாமா?"

"தனது பொறுப்பை மன்னர் உங்களிடம் ஒப்படைத்து விட்டா போனார்? உங்களை மாற்று அரசராக நியமித்து விட்டா சென்ற.ார்? இல்லையே! அவர் அரசராக இருந்தார். நீங்கள் சேனாதிபதியாக இருந்தீர்கள். அவர் இல்லாத காலத்தில் நிர்வாகத்தை நீங்களாகக் கையில் எடுத்துக் கொண்டீர்களே தவிர சேனாதிபதியாகத் தான் இருந்தீர்கள். என்னவாக இருந்தீர்கள் என்ன செய்தீர்கள் என்பதெல்லாம் இப்போது பெரிய விஷயங்கள் அல்ல. உங்களைப் பதவி நீக்கம் செய்யும் அளவிற்கு நீங்கள் செய்த குற்றம் என்ன என்பது தான் முக்கியம். பொழுது விடிந்ததுமே மன்னரிடம் செல்லுங்கள். உங்கள் நடத்தைக்காக முதலில் மன்னிப்பு கேளுங்கள். அதற்குப் பிறகு உங்கள் மீதான குற்றச்சாட்டு என்ன என்பதைக் கேளுங்கள். குற்றச்சாட்டிற்குத் தக்க மறுமொழி கூறுங்கள். அவரைச் சமாதானப் படுத்துங்கள். பதவியைத் தக்க வைத்துக் கொள்ளுங்கள். பதவி இருந்தால் தான்

நீங்கள் மேற்கொண்டு செயல்பட முடியும்" என்று கூறிவிட்டு அகன்றாள் மைவிழிக்கண்ணி.

பொழுது விடிந்த பின் நீராடி விட்டுச் சேனாதிபதிக்குரிய ஆபரணங்களையும் அடையாளங்களையும் அணிந்து கொண்ட மன்மதன் மன்னனைச் சந்திப்பதற்கு முன்னால் மன்னனுக்கு மந்திரி போல இருந்து வந்த மகாஅந்தணரான பெருமாள் பட்டரைச் சந்திப்பது உகந்தது என்று கருதி அவரது இல்லத்திற்குச் சென்றான்.

பெருமாள் பட்டர் பெரும் வைதீகர். காலையில் சந்தியா வந்தனத்தில் ஆரம்பித்து அனைத்து வைதீக சம்பிரதாயங் களையும் முடித்து விட்டுத் தான் பிறரைச் சந்திப்பார். இல்லத்தை விட்டு வெளியேறுவார்.

எனவே அவரைச் சந்திப்பதற்கு மன்மதன் இரண்டு நாழிகை நேரம் காத்திருக்க வேண்டியதாக இருந்தது. "இதையெல்லாம் இவர் எதற்காகச் செய்கிறார். இவரது மரணத்தை இவை தடுத்து விடுமா?" என்று அலுத்துக் கொண்ட சேனாதிபதி அதே சமயம் "இவர் இதையெல்லாம் கிரமமாகச் செய்து வருவதால் தான் மன்னர் இவரை மதிக்கிறார். மந்திரியைப் போலக் கருதுகிறார். மக்களும் மதித்துப் போற்றுகிறார்கள்" என்று சொல்லிக் கொள்ளவும் செய்தான்.

நியமங்களையும் பூஜைகளையும் முடித்துக் கொண்டு 'இனி வரலாம்' என்பதற்கு அறிகுறியாக உள்ளேயிருந்து அவர் மணியோசை எழுப்பிய பின்னரே உள்ளே சென்று அவரை வணங்கினான் சேனாதிபதி. மந்திரி போல் மதிக்கப்பட்ட அவர் மிகவும் எளிமையாக இருந்தார். தரையில் மணையைப் போட்டு அதில் அமர்ந்திருந்தார்.

சேனாதிபதி வணங்கி எழுந்ததும் "என்ன விசேஷம் சேனாதிபதி? எனக்குத் தெரிந்து என் இல்லத்து வாயிற் படியை மிதித்ததில்லையே?" என்று அமைதியாகக் கேட்டார் பெருமாள் பட்டர்.

"இவ்வளவு காலமாகத் தங்கள் இல்லத்து வாசலை அணுகாதது பிழைதான் சுவாமி. என்னை மன்னித்து விடுங்கள்" என்றான் சேனாதிபதி உண்மையான பணிவோடு.

"மன்மதா! இந்த வீட்டு வாசல் வைகுண்ட வாசல் அல்ல எல்லோரும் அணுகுவதற்கு. இதுவரை வந்ததில்லையே என்பதற்காகவும் என்ன விஷயம் என்பதை அறிவதற்காகவும் கேட்டேன். மன்னிப்பு கோருவதற்கோ, மன்னிப்பை

அளிப்பதற்கோ இங்கே எதுவும் நடக்கவில்லை. விஷயத்தைச் சொல்" என்றார் பட்டர்.

"மன்னர் தங்களிடம் ஏதாவது சொன்னாரா சுவாமி?"

"மன்னர் என்னிடம் என்னவெல்லாம் சொன்னார் என்ற விவரம் உனக்கெதற்கு? உன் பிரச்சனை என்ன?"

சொன்னான் சேனாதிபதி.

சொல்லிவிட்டு "இது விஷயமாக மன்னர் தங்களிடம் ஏதாவது சொன்னாரா?" என்று கேட்டான்.

"என்னிடம் எதற்காகச் சொல்ல வேண்டும்?"

"முக்கியமான விஷயங்களை உங்களிடம் ஆலோசிக்காமல் மன்னர் முற்பட மாட்டார்."

"இது உன் கற்பனை. உன் போன்ற பலரது கற்பனை. அப்படி எதுவும் இல்லை. மன்னர் என்னைக் கேட்டுச் செய்ய வேண்டிய அவசியமில்லை. இதுவரை என்னை ஆலோசித்து விட்டுத்தான் செய்கிறார் என்று நீ நினைத்துக் கொள்ள வேண்டியதில்லை. மன்னர் ஒரு மலை. நான் ஒரு எலி. மலை எலியிடம் கேட்பதற்கு என்ன இருக்கிறது?"

"அப்படியானால் என்னைப் பதவி நீக்கம் செய்தது குறித்து தங்களிடம் எதுவும் பேசவில்லையா?"

"இல்லை."

"நியாயஸ்தர்கள் குழுவைக் கலைத்து விட்டதாகச் சொன்னாரே - அது விஷயமாகக் கூடத் தங்களிடம் பேச வில்லையா?"

"இல்லை."

"இது எதை உணர்த்துகிறது சுவாமி?"

"மன்னரது அதிகாரத்தை உணர்த்துகிறது. அதிகாரத்தைச் செயல்படுத்தும் சுதந்திரத்தை உணர்த்துகிறது. அதிகாரம் அவரை நகர்த்தவில்லை. அதிகாரத்தை அவர் நகர்த்துகிறார் என்பதை உணர்த்துகிறது."

"அவர் சர்வாதிகாரி என்பதை உணர்த்த வில்லையா சுவாமி?"

"அதில் மூடுமந்திரம் எதுவும் இல்லை. அவர் சர்வாதிகாரி என்பது எல்லோருக்கும் வெளிப்படையாகத் தெரியும்."

"போர் விரைவில் மூளப்போவது தங்களுக்குத் தெரியுமா?"

"உறுதியாகத் தெரியாது. உத்தேசமாகத் தான் தெரியும்."

"போர் நடக்கப் போவது உறுதி சுவாமி."

"போர் நடப்பது வியப்பிற்குரிய விஷயமல்ல. போர் அரச லட்சணம். நாட்டு நடப்பு."

"போர் உறுதியாகி விட்ட நிலையில் சேனாதிபதியைப் பதவி நீக்கம் செய்வது உசிதமா சுவாமி?"

"இதை நீ மன்னரிடப் தான் கேட்க வேண்டும்."

"தங்கள் கருத்தென்ன ஐயா?"

"என் கருத்து தேவையில்லாதது. உன் பதவி விஷயமாகத் தான் பேச வந்தாய் என்றால் என்னிடம் பேசி நேரத்தை வீணடிக்காதே. உடனடியாக மன்னரிடம் சென்று முறையிடு. மீன் காய்ந்து போனால் அதற்குப் பெயர் மாறிவிடுகிறது. மன்னர் சம்பந்தப்பட்ட விஷயங்களும் அப்படித்தான். தாமதமாகி விட்டால் நிறம் மாறிவிடும். பிறகு ஒன்றும் செய்யமுடியாது."

பெருமாள் பட்டர் இவ்வாறு தீர்மானமாகக் கூறிவிட்ட பின் அவரிடமிருந்து விடை பெற்றுக் கொண்டான் சேனாதிபதி.

மன்னன் அவரிடம் ஆலோசிப்பதில்லை என்று கூறியது அவனுக்கு நம்பும்படியாக இல்லை. பல நேரங்களில் பல விஷயங்களில் எல்லோரும் முடிவு செய்துவிட்ட பிறகு "பட்டரைக் கேட்டு விட்டுச் சொல்கிறேன்" என்று மன்னன் கூறுவது வழக்கமாதலால் பட்டர் அதை மறுத்துப் பேசியது வியப்பாக இருந்தது மன்மதனுக்கு. பட்டர் அழுத்தமான மனிதர். எந்த விஷயத்தையும் அவர் வெளியிட மாட்டார். அதுவும் மன்னன் சம்பந்தப்பட்ட விஷயத்தைச் சித்திரவதை செய்து கேட்டாலும் மற்றவர்களுக்குச் சொல்லமாட்டார். எனவே தன் விஷயத்தில் அவர் அந்த அடிப்படையிலேயே நடந்து கொண்டதாகக் கருதிய சேனாதிபதி மன்னனைச் சந்திக்க அரண்மனைக்குச் சென்றான்.

அங்கே மன்னனைச் சந்திக்கப் பிரமுகர்கள் பலர் காத்திருந்தனர்.

அது வழக்கம்தான்.

பிரமுகர்கள் பலர் காத்திருந்தாலும் நேராக உள்ளே செல்வதும் சேனாதிபதிக்கு வழக்கம் தான்.

ஆனால் தற்போது அவனைச் சேவகர்கள் தடுத்தார்கள்.

"அனுமதியின்றி யாரையும் உள்ளே விடக்கூடாது என்பது அரசர் உத்தரவு" என்றார்கள்.

"நான் யார் தெரியுமல்லவா?" என்று விறைப்பாகக் கேட்டான் சேனாதிபதி.

"தெரியும் ஐயா. எனினும் அரசரின் ஆணையை நாங்கள் மீற முடியாது" என்றார்கள் சேவகர்கள்.

"உத்தரவு கேட்டுவிட்டு வாருங்கள்" என்றான் சேனாதிபதி.

சேனாதிபதி யாருக்கு அஞ்சுவது என்று தெரியாமல் திணறினான். மூத்த சேவகன் மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டு உள்ளே போய் வெளிறிய முகத்தோடு வெளியே வந்து "உங்களை நான்கு நாழிகை கழித்து வரச் சொல்லிவிட்டார் மன்னன்" என்றான்.

பெருத்த அவமானமாக இருந்தது சேனாதிபதிக்கு.

நான்கு நாழிகை வரை பிரமுகர்களோடு ஒருவராய் அமர்ந்திருக்க அவன் தயாராக இல்லை.

அப்போது அங்கே அமர்ந்திருந்த பிரமுகர்களில் ஒருவர் எழுந்து அவனிடம் வந்து "என்ன சேனாதிபதியாரே! உங்கள் பதவி பறிக்கப்பட்டு விட்டதாமே! புதிய சேனாதிபதி யார்?" என்று கேட்டார்.

அவரை அங்கேயே வெட்டி வீழ்த்த வேண்டும் போல் இருந்தது சேனாதிபதிக்கு.

இருப்பினும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயத்தில் இருந்த சேனாதிபதி "ஐயா! வீரனுக்கு வீரம் தான் முக்கியமே தவிர பதவியல்ல. அவன் நாட்டிற்காக இன்னுயிரை விடுபவனேயன்றி பதவிக்காகப் பெருமூச்சு விடுபவன் அல்ல. பதவியானது மன்னர் இடும் பிச்சை. பிச்சையிடுவதும் மறுப்பதும் அவர் உரிமை. அதைக் கேட்க நாம் யார்? என்னைப் பற்றிக் கவலைப் படாமல் வந்த வேலையைப் பாருங்கள்" என்று கூறிவிட்டு அங்கிருந்து வெளியேறி அவன் வழக்கமாகச் செல்லும் அங்காடிப் பகுதிக்குச் சென்றான்.

போரைக் காரணமும் காட்டி வணிகர்களை வெளியிலிருந்து கோட்டைக்குள் வருவதற்கு மன்னன் ஆணையிட்டிருந்த படியால் அங்காடிப் பகுதியில் எப்போதும் மொய்க்கும் கூட்டம் இல்லை. அங்காடிகளுக்குத் தலைவனான கூலவாணிகனின் மாளிகையும் வெறிச்சோடிக் கிடந்தது.

அவனது மாளிகைக்குச் சென்று இதர வணிகர்களை வைத்துக் கொண்டு மது அருந்தி விட்டு உலக விஷயங்களைத் தாறுமாறாகப்

பேசிவிட்டு வருவது மன்மதனின் வாடிக்கையாக இருந்தது. அவனது தலையைக் கண்டாலே வணிகர்கள் காக்கைகள் பறந்து வருவது போல் வந்து அவனை உள்ளே அழைத்துச் செல்வார்கள்.

தற்போது அவனைச் சீந்துவதற்கு ஒருவரும் இல்லை. தனியாக உள்ளே சென்றபோது அங்கிருந்த கூல வாணிகனும் வரவேற்கவில்லை.

"என்ன கூலவணிகரே! வா என்று சொல்வதற்குக் கூட வாய் வரவில்லையா?" என்று கேட்டான் சேனாதிபதி.

"நீங்கள் இன்னும் பழைய நினைவிலேயே இருக்கிறீர்கள் போலிருக்கிறது" என்றான் கூலவணிகன்.

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? எது பழைய ஞாபகம்? எது புது ஞாபகம்?"

"தாங்கள் இப்போது சேனாதிபதி இல்லை அல்லவா?"

"யார் அப்படிச் சொன்னது?"

"கிழக்கு வெளுத்துப் பலநாழிகை ஆகி விட்டது. நீங்கள் இன்னமும் இருட்டு என்றால் எப்படி? கண்களைத் திறவுங்கள்."

"பதவிக்கு அப்பாற்பட்டு எதுவும் இல்லையா கூல வணிகரே?"

"இதுவரை பதவியை வைத்துக் கொண்டுதானே இங்கே வந்தீர்கள்? போனீர்கள்."

அவமானம் தொடர்ந்ததால் அங்காடிப் பகுதியை விட்டு அகன்ற சேனாதிபதி கோட்டை மதில் பகுதிக்குச் சென்றான்.

அங்கே வீரர்கள் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தார்கள்.

பலர் அவனை கவனித்தார்கள். ஆனால் பொருட் படுத்தவில்லை.

சிலர் அவனைக் கவனிக்கவே இல்லை.

சேனாதிபதி வலுவில் சென்று சில வீரர்களைப் பிடித்து நிறுத்தி "நான் வந்ததைக் கூட கவனிக்காமல் அப்படி என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?" என்று மிரட்டினான்.

"உங்களை யாரும் கவனிக்காமல் இல்லை. அதே சமயம் உங்களோடு பேச வேண்டிய அவசியம் இல்லாததால் பேச முற்படவில்லை" என்றார்கள் வீரர்கள்.

"சேனாதிபதியிடம் பேசுவது உங்களுக்கு அவசியமில்லாத ஒன்றா?" - சீறினான் சேனாதிபதி.

"நீங்கள் சேனாதிபதிப் பதவியிலிருந்து விலக்கப்பட்டு விட்டது எங்களுக்குத் தெரிந்திருக்கிறது. உங்களுக்குத் தெரிய வில்லையா? வியப்பாக இருக்கிறது. அரண்மனைக்குச் சென்று கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்" என்றார்கள் வீரர்கள்.

பேரவமானமாக இருந்தது சேனாதிபதிக்கு.

பொழுது விடிவதற்குச் சில நாழிகைக்கு முன் தன்னைப் பதவி நீக்கம் செய்யப்பட்டதாக மன்னன் கூறியது அதற்குள் எல்லா இடங்களுக்கும் பரவியது எப்படி என்று வியந்தான்.

"என்ன மன்மதா? இங்கே எதற்காக வந்தாய்? இங்கே உனக்கென்ன வேலை?" என்ற குரல் கேட்டது.

திரும்பினான் சேனாதிபதி.

அங்கே மன்னனும் பெருமாள் பட்டரும் நின்று கொண்டிருந்தார்கள்.

★★★



போர்த்தளபதி

பதறிப் போனான் சேனாதிபதி.

“மன்னவா! தாங்களா? தங்களைச் சந்திக்கத்தான் அரண்மனைக்கு வந்திருந்தேன்” என்றான்.

“நான் உன்னிடம் வந்திருக்கிறேன். அதைப் பற்றிப் பேசாமல் என்னிடம் நீ வந்தது பற்றிச் சொல்கிறாய்” என்றான் மன்னன்.

“தவறை உணர்ந்த சேனாதிபதி மகா தவறிழைத்து விட்டேன். என்னை மன்னித்தருள வேண்டும்” என்றான் பரிதவித்தவனாய்.

மன்னன் தன் பக்கத்தில் இருந்த பெருமாள் பட்டரைப் பார்த்து “பட்டரே! மகா தவறிழைத்தவர்களுக்கு மன்னிப்பு வழங்குவதுண்டா?” என்று கேட்டான்.

“இல்லை” என்றார் பட்டர். அவர் முகத்தில் சலனமில்லை.

மன்னன் நடந்தபடியே மன்மதனிடம் கேட்டான் “ஏன் மன்மதா! நெல்வேலியின் மீது எதிரிகள் படையெடுத்து வருகிறார்களாமே! உனக்கு ஏதாவது தெரியுமா?”

மன்னன் தன்னை வேண்டுமென்றே சீண்டுகிறான் என்பதை உணர்ந்தாலும் பொறுமையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு “கேள்விப்பட்டேன் மன்னவா” என்றான் அடுத்து என்ன கேள்வி வருமோ என்ற அச்சத்துடன்.

“எப்போது கேள்விப்பட்டாய்?”

“ஒரு வாரமிருக்கும்.”

“அப்போது நீ சேனாதிபதியாகத் தானே இருந்தாய்?”

“ஆ..மாம்.”

“சேனாதிபதியாய் இருந்தாய். எதிரி படையெடுப்பதாகக் கேள்விப்பட்டாய். என்னிடம் சொன்னாயா?”

“இல்லை.”

“ஏன்?”

“உறுதிசெய்து கொண்டபின் சொல்லலாம் என்று இருந்தேன்.”

"உறுதிசெய்து கொண்டு நான் வந்து உன்னிடம் சொல்வேன் என்று காத்திருந்தாயா? சற்று மதிலைப் பார். ஆயத்தங்கள் வேகமாக நடக்கின்றன. இந்த வேகமான ஆயத்தம் எப்போது நடக்கும்? போர் உறுதியான நிலையில் தானே? வீரர்களுக்குத் தெரிந்த விஷயம் வீர சேனாதிபதியாக இருந்த உனக்கு எப்படித் தெரியாமல் போயிற்று?" என்று கேட்ட மன்னன் பெருமாள் பட்டரைப் பார்த்து "இவனைப் பதவிநீக்கம் செய்தது சரிதானே பட்டரே?" என்று கேட்டான்.

அவர் பதிலேதும் சொல்லவில்லை.

"மன்னவா! என்ன பதில் கூறுவதென்றே தெரியவில்லை. தவிக்கிறேன். தத்தளிக்கிறேன். என்னை மன்னித்தருளுங்கள்" என்று கெஞ்சினான் மன்மதன்.

மன்னன் பட்டரைப் பார்த்து "பதில் சொல்வதற்கே இவனால் முடியவில்லையாம். தவிக்கிறானாம். தத்தளிக்கிறானாம். போர் வந்தால் இவன் என்ன செய்யப் போகிறான். எதுவும் செய்ய முடியாமல் தவிப்பானா?" என்று கேட்டான்.

பட்டர் எதுவும் பேசவில்லை.

"நான் போரில் வெற்றியைத் தேடித் தருகிறேன் மன்னவா. எனக்கு வாய்ப்புக் கொடுங்கள். உயிரைத் தந்தாவது வெற்றியை ஈட்டுகிறேன்" என்றான் மன்மதன்.

"ஆகா! வீரனாக இருந்து போரில் கலந்து கொள். வெற்றியை ஈட்டு" என்றான் மன்னன்.

மன்மதனுக்கு என்ன பதில் கூறுவதென்று தெரியவில்லை.

"உன்மீது எனக்கு எள்ளளவும் நம்பிக்கையில்லை மன்மதா. ஆகவே தான் உன்னைப் பதவி நீக்கம் செய்தேன். கொஞ்சம் யோசித்துப் பார். எதிரி படையெடுத்து வரும் தகவல் வந்து விட்டது. அதை அறிந்து நீ என்னிடம் ஆலோசித்து ஆயத்தங்களைச் செய்ய வேண்டும். நீ இருக்க வேண்டிய இடம் எங்கே? இருந்த இடம் எங்கே? காமம் உன் தனிப்பட்ட விஷயம். அதில் தலையிட நான் விரும்பவில்லை. ஆனால் நீ காமமே கதி என்று இருப்பதாக உபதளபதிகள் சொன்னார்கள். நான் நம்பவில்லை. நானே உன் இருப்பிடத்திற்கு வந்தேன். நேரிலேயே கண்டேன். உடனடியாகப் பதவிநீக்கம் செய்தேன். நீ அங்கே பேசியது என்ன என்பது நினைவில் இருக்கிறதா? என்னை எதிர்த்துப் பேசி உயிரோடு இருப்பவன் நீ மட்டும் தான்."

"நான் தவறிழைத்து விட்டேன் மன்னவா. காம மோகம் என்னைக் கலைத்து விட்டது உண்மைதான். ஆனால் கடந்த சில வருடங்களாக தாங்கள் நெல்வேலியில் இல்லாத பட்சத்தில்

இந்தக் கோட்டையையும் நானே முன்வந்து கவனித்தேன். காத்தேன்" என்றான் மன்மதன்.

"மலைக்குப் பக்கத்திலேயே பள்ளத்தாக்கு இருக்கும். நீ மலையைப் பற்றிப் பேசுகிறாய். பள்ளத்தாக்கைப் பற்றி யார் பேசுவது? மன்மதா! நீ நெல்வேலி நிர்வாகத்தைக் கவனித்ததாகச் சொல்கிறாய். அது மலை. உயர்வு. ஆனால் நிர்வாகத்தைக் கவனித்துக் கொண்டு நீ போட்ட ஆட்டம் இருக்கிறதே - அது பள்ளத்தாக்கு. தாழ்வு. நானில்லாத காலத்தில் நீ நெல்வேலியில் பலவிதமான சுயநலக் காரியங்களைச் செய்து செல்வம் ஈட்டியிருக்கிறாய். இங்கே காலம் காலமாக இல்லாத ஊழல் என்ற மாபாதகத்தைப் பல இடங்களில் உண்டாக்கியிருக்கிறாய். உயர்வு என்றும் சிறப்பு என்றும் நீ கூறிக்கொண்டதெல்லாம் அடிப்பட்டுப் போய் விட்டன உன் பாதகமான காரியங்களால். உன்னைப் பதவி நீக்கம் செய்தால் மட்டும் போதாது. தண்டனையை வழங்கியிருக்க வேண்டும். சிறையில் இருக்கவேண்டியவன் நீ என்பதை நினைவில் கொள்."

எதைச் சொன்னால் சாதகமாக இருக்கும் என்று நினைத்துச் சொன்னானோ அதுவே பாதகமாக அமைந்து விட்டதால் கலக்கமடைந்தான் மன்மதன். மன்னனிடம் என்ன பேசுவதென்றே தெரியாமல் குழம்பினான்.

மன்னனே தொடர்ந்து "மன்மதா! நீ கடந்த காலத்தில் தவறாகச் சம்பாதித்துச் சேர்த்த செல்வங்களையெல்லாம் அரசாங்கத்திடம் ஒப்படைத்து விடு. இல்லையென்றால் உனக்குச் சிறை வாசம் தான்" என்றான்.

"அப்படியே ஆகட்டும் மன்னவா. பதவி நீக்கத்தை ரத்து செய்து என்னைப் பழையபடி சேனாதிபதியாக நியமனம் செய்யுங்கள். போரில் தங்களுக்கு வெற்றியைத் தேடித் தருகிறேன். இது சத்தியம்" என்றான் மன்மதன். எப்படியாவது பதவியைப் பிடித்துவிட வேண்டும் என்ற துடிப்பில்.

"என்னை என்ன பைத்தியக்காரன் என்று நினைத்துக் கொண்டாயா? பதவி நீக்கம் செய்வதும் உடனே அதை ரத்து செய்வதும் விளையாட்டுத்தனமான விஷயங்கள் என்பது தான் உன் நினைப்பா? பதவிநீக்கம் செய்தது செய்தது தான். அதை மாற்ற முடியாது" என்று சொன்ன மன்னன் பெருமாள் பட்டரைப் பார்த்து "நான் கூறியது சரிதானா பட்டரே?" என்று கேட்டான்.

"சரி" என்றார் பட்டர்.

பட்டரது இந்தப் பதில் மன்மதனுக்குப் பேரிடியாக இருந்தது.

"சுவாமி! என்னைப் பற்றித் தங்களுக்குத் தெரியாதா? என் வீரத்தில் தங்களுக்குச் சந்தேகம் உண்டா? மன்னர் பெருமானிடம் தயவுகூர்ந்து பரிந்துரை செய்யுங்கள்" என்று மன்றாடினான்.

"இழந்த பதவி இழந்தது தான். அந்தப் பதவியை மன்னரே ஏற்றுக் கொண்டு விட்டார். அது முடிந்துவிட்ட கதை. மன்னர் விரும்பினால் உனக்கு வேறு பதவியைத் தரலாம்" என்றார் பட்டர்.

"மன்மதா! போர் முடியும் வரை உனக்குப் 'போர்த்தளபதி' என்ற பதவியை அளிக்கிறேன். போரில் வெற்றியைச் சம்பாதித்துத் தரவேண்டியது உன் பொறுப்பு. போராயத்தங்களைக் கவனித்துவிட்டு நாளைக்கு ஆலோசனை அவைக்கு வா" என்று கூறிவிட்டு தேரை வரச் சொல்லி பட்டரோடு அதில் ஏறிச் சென்றான் சபர குலத் தலைவனான நெல்வேலி மன்னன் உதயணன்.

தன் இல்லத்திற்குச் சென்ற மன்மதன் நீண்ட நேரமாக யோசனையில் ஆழ்ந்தான்.

மைவிழிக் கண்ணியிடம் நெல்வேலியின் மன்னனாக அமருவேன் என்றும் அவளை ராணியாக அமர்த்துவேன் என்றும் அதற்குத் தடைவந்தால் புதுச் சட்டத்தையே கொண்டு வருவேன் என்றும் பெருமையாகக் கூறிக் கொண்டது மன்னனின் பதவி நீக்க ஆணையினால் அடிபட்டு ஆடிப் போய் விட்டதை நினைத்துப் பதறிய மன்மதன் நீண்டநேர போராட்டத்திற்குப் பிறகு 'போர்த்தளபதி' என்ற பதவியைப் பெற்றதால் சற்றே ஆறுதல் அடைந்தான். புதிய பதவியானது பெயரில் வேறாக இருந்தாலும் சேனாதிபதி பதவியைப் போலத் தான் என்பது அவனுக்குப் புரியாமலில்லை.

தன்னைப் பதவி நீக்கம் செய்தாலும் தன்னைப் புறக்கணித்து விட முடியாத காரணத்தாலேயே புதுப் பதவியை மன்னன் தந்திருக்கிறான் என்றும் சேனாதிபதி பதவியைத் தராதது வெறும் வறட்டுக் கௌரவத்தால் தான் என்று கருதிய மன்மதன் இனி மிகவும் எச்சரிக்கையாக இருந்தாலன்றி தனது லட்சியம் நிறைவேறாது என்பதை உணர்ந்தான். எக்காரணம் கொண்டு மன்னனை எதிர்த்து ஒரு வார்த்தையைக் கூடச் சொல்லக் கூடாது என்றும் தீர்மானித்துக் கொண்டான்.

போர் முடியும் வரை காமக் களியாட்டங்களில் ஈடுபடாமல் இருப்பதும் மைவிழிக் கண்ணியை நெருங்காமல் இருப்பதும் தான் உகந்ததாக இருக்கும் என்று முடிவு செய்தான்.

அந்த நிலையில் உபதளபதிகள் அவனிடம் வந்து வணக்கம் தெரிவித்தார்கள்.

"போர்த்தளபதியின் கட்டளைகளுக்காகக் காத்திருக் கிறோம்" என்றார்கள்.

உள்ளுக்குள் சிரித்துக் கொண்ட மன்மதன் "எல்லோரும் என் கதை முடிந்து விட்டது என்று நினைத்திருப்பீர்கள். என் சாமர்த்தியம் எப்படிப்பட்டது என்பது உங்களுக்கு ஒரு போதும் புரியப் போவதில்லை. சாம்பலிலிருந்து எழுந்து வரக் கூடியவன் நான். என் இருப்பிடத்திற்கு வரும் கூற்றுவனை எனது இல்லத்திலேயே கட்டிப்போடக் கூடியவன் தான். இல்லை என்று என்னை நினைத்தால் இருந்து காட்டுவேன். அழிந்தான் என்று நினைப்பவர்களை ஒழித்துக் கட்டுவேன். எல்லோரும் செல்லுங்கள் கோட்டைப் பகுதிக்கு நானே வந்து ஆயத்தங்களைப் பார்வையிட்டு விட்டு வேண்டியவற்றைச் சொல்கிறேன்" என்றான்.

"தாங்கள் தான் நிரந்தரச் சேனாதிபதி. எங்களை மன்னிக்க வேண்டும்" என்றார்கள் உபதளபதிகள்.

"நான் சேனாதிபதியுமல்ல. போர்த்தளபதியுமல்ல. விரைவிலேயே மன்னனாகப் போகிறவன். அரியணையில் அமர்ந்ததும் உங்கள் தலைகளையெல்லாம் தங்க அரிவாளால் அறுத்துப் போடப் போகிறேன். அதுவரை பிழைத்திருந்தால் இருங்கள்" என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்ட மன்மதன் "நான் நின்றால் மலை. படுத்தால் ஆறு. என் நிலை மாறலாம். நிறம் மாறலாம். குணம் மாறாது. என்றைக்குமே நான் நான் தான். சென்று வாருங்கள்" என்று கூறி அனுப்பி வைத்தான்.

உபதளபதிகள் சென்றதும் வணிகர்களும் வணிகர்களின் தலைவனான கூலவணிகனும் வந்தார்கள்.

"என்னை மன்னிக்க வேண்டும் போர்த்தளபதி. போய்விட்ட பதவி வராது என்று நினைத்து அவமானப்படுத்தி விட்டோம்" என்றான் கூலவணிகன்.

"நீங்கள் என்ன என்னை அவமானப் படுத்துவது? நான் மன்னனாக அமர்ந்ததும் முதலில் அவமானப்படப் போவது நீங்கள் தான். உங்கள் வணிகத்தில் மண்ணை அள்ளிப் போடப் போவது நான் தான். உங்களைப் பிச்சைக்காரர்களாக்கா விட்டால் என் பெயர் மன்மதன் இல்லை" என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்ட மன்மதன் "உங்கள் மீது எந்தத் தவறும் இல்லை. நானும்கூட பதவியில் உள்ளவர்களைத்தான் மதிப்பேன். பதவி போனவர்களை அவமதிப்பேன். இது எங்கும் நடப்பதுதான். இதில் வேடிக்கை என்னவென்றால் நான் ஆழ்ந்து போய் அழிந்து விடுவேன் என்று பலரும் கருதியது தான். என்னைக் கடலில்

ஆழ்த்தினால் மீனாகி விடுவேன். வீசி யெறிந்தால் காற்றாகி விடுவேன். கட்டிப் போட்டால் மலையாகி விடுவேன். என் உருவம் மாறுமே தவிர உயிர் போகாது. போய் வாருங்கள். வணிகத்தில் கவனம் செலுத்துங்கள்" என்றான்.

பலரது நடவடிக்கைகளும் திடீர் திடீரென மாறுவதற்குக் காரணம் மன்னனின் ஆணை மட்டுமே காரணம் என்பதையும் அவனது அறிவிப்பு உடனுக்குடன் மாற்றங்களை விளைவிப்பதையும் கண்ட மன்மதனுக்கு மன்னன் மிகவும் அபத்தானவன் என்பதையும் அவனிடம் கூடுதல் கவனத்துடன் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதையும் உணர்ந்து கொண்டான்.

அன்று மாலையிலேயே தான் தவறான வழியில் சேர்த்துக் குவித்த செல்வங்களை அரசாங்கக் கருவூலத்தில் ஒப்படைத்தான்.

"இதுவும் நல்லதுதான். போர் நடக்கும் போது நமது செல்வம் பாதுகாப்பற்று இருக்கும். தற்போதோ பாதுகாப்பான கருவூலத்திற்கு வந்து விட்டது. நான் மன்னனானதும் கருவூலத்தில் இருக்கும் மொத்தத்தையும் எடுத்துக் கொள்ளலாம்" என்று நினைத்தான்.

அன்று இரவெல்லாம் கோட்டைப் பகுதியில் இருந்த பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பார்வையிட்டு உபதளபதிகளிடம் ஆலோசனை செய்தான்.

★

கோட்டைப் பகுதியிலிருந்து அரண்மனைக்கு வந்த மன்னன் உதயணன் பெருமாள் பட்டரை வழியனுப்பிவிட்டு அந்தப்புரத்திற்குச் சென்றான்.

அந்தப்புரத் தாதியைப் பார்த்து "தேவதேவி உள்ளே தானே இருக்கிறாள்?" என்று கேட்டான்.

"ஆமாம் மகாராஜா."

"அவளுக்கு எந்தக் குறையும் இல்லையே?"

"இல்லை மகாராஜா."

"இருப்பதாக அவள் சொன்னால் உங்கள் எல்லோரையும் கழுவில் ஏற்றுவேன்" என்று கூறிவிட்டு உள்ளே சென்றான் உதயணன்.

அவன் பறவைப் பிரியன் ஆதலால் அந்தப்புரத்தில் எந்தப்புறம் திரும்பினாலும் பறவைகளே காணப்பட்டன. அழகிய மயில் முதல் கோரக் கோட்டான் வரை எல்லாப் பறவைகளும் அங்கே

இருந்தன. அவனைக் கண்டதும் மொய்த்தன. அவற்றை விலக்கிக் கொண்டு உள்ளே சென்ற போது தேவதேவியும் பறவையைப் போலவே வீற்றிருந்தாள்.

வெண்ணிற மயிலைப் போல வெண்ணாடையில் இருந்த அவளைச் சுற்றிப் பலவித நிறங்களைத் தாங்கிய வண்ணமயில்கள் உலவின.

கண்ணுக்கு விருந்தளிக்கும் அக்காட்சியைக் கண்டு கனிந்து களிப்படைந்த உதயணன் "காஞ்சியிலிருந்து இங்கே வந்ததற்குப் பிறகு இப்போது தான் உன்னைப் பார்க்கிறேன் தேவதேவி. நீ அழகு தேவதை. ஆனால் காஞ்சியில் இருந்தபோது யோகினியைத் தான் பார்க்க முடிந்ததே தவிர அளப்பறிய உன் அழகைக் காணமுடியவில்லை. நீ பேச்சில் வல்லபி. ஆனால் காஞ்சியில் உன் பேச்சில் தத்துவங்களைத் தான் கேட்க முடிந்ததே தவிர மயக்கும் மென்மொழியைக் கேட்க முடியவில்லை. அவற்றை இப்போது காண விரும்புகிறேன் தேவதேவி. ஆலி நாட்டில் இருந்து கொண்டு மங்கை வேந்தனை அழிக்க தீட்டிய திட்டத்தில் நான் தோற்றேன். அப்போது நான் கூறியது உனக்கு நினைவிருக்கிறதா? விரைவிலேயே உன்னை மணந்து ராணியாக்குகிறேன் என்று வாக்கு கொடுத்தேன். காஞ்சியிலும் நம் திட்டங்கள் தோற்றன. இந்த நிலையில் மேலும் தாமதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை உணர்கிறேன். கொடுத்த வாக்கை நிறைவேற்றலாம் என்று நினைக்கிறேன். உனக்கிங்கே குறை இருக்கிறதா?" என்று கேட்டான்.

"இருக்கிறது ஐயா. இருக்கிறது" என்றாள் தேவதேவி.

"குறையா? உனக்கா? அந்தப்புரத் தாதிகள் உனக்குக் குறை வைத்து விட்டார்களா? எனக்குத் தெரியும். இரு. அனைவரையும் கழுவில் ஏற்றிவிட்டு வருகிறேன்."

"என் குறைக்கும் அவர்களுக்கும் எந்தவிதமானச் சம்பந்தமும் இல்லை."

"பிறகு என்ன குறை?"

"காஞ்சியில் எனக்கு நிம்மதி இருந்தது. இங்கே அது இல்லை."

"அந்த நிம்மதி பொய்யான நிம்மதி. காஞ்சியோடு அது முடிந்தது."

"நான் அப்படி நினைக்கவில்லை."

"வேறு எப்படி நினைக்கிறாய்?"

★★★



நான்கு சக்திகள்

"காஞ்சிபுரத்திற்கே சென்று விடலாம் போலிருக்கிறது."

"இது என்ன அபத்தமான பேச்சு? காஞ்சிக்கு எதற்காகச் செல்ல வேண்டும்?"

"அங்கே இருந்த அமைதி இங்கே இல்லை. அங்கே இருந்த மகிழ்ச்சி இல்லை."

"அவை பொய் என்று சொல்லிவிட்டேன் தேவதேவி! புரியவில்லையா உனக்கு? அங்கே நாம் நாமாக வாழவில்லை. வேடங்களைத் தரித்தோம். வேடங்களுக்கு ஏற்ப நடித்தோம். கூத்து நடக்கும்போது ராஜா வேடம் போட்டவனுக்கு மகிழ்ச்சியாக இருக்கும். அந்த மகிழ்ச்சி கூத்து முடிந்ததும் கலைந்து விடும். அப்படித்தான் உன் விஷயமும்."

"எனக்கு வேடம் கலையவில்லை மன்னவா."

"கலைத்து விடு. பிரமை அகன்றுவிடும்."

"நான் பிரமையில் பேசவில்லை. உண்மையாகப் பேசுகிறேன்."

"என்ன சொல்கிறாய்?"

"என்னை யோகினியாக வேடம் போடச் சொன்னீர்கள். எனக்கு அத்வைதத்தைக் கற்றுக் கொடுத்தீர்கள். நான் அதைப் பேசி நடித்தேன். தற்போது அது நடிப்பாகவே தோன்றவில்லை. உண்மையான யோகினியாகவே ஆகிவிட்டதாகத் தோன்றுகிறது."

"காண்பவர்கள் ரசிக்கிறார்கள் என்பதால் நடிப்பவனின் பாத்திரம் உண்மையாகி விடாது. உண்மை என்று நினைப்பது அறிவீனம். எது உண்மையோ அதுதான் உகந்தது. நான் ராஜகுருவாக நடித்தேன். தோற்றேன். வேடத்தைக் களைந்தேன். எனது உண்மை நிலை நெல்வேலியின் மன்னன் என்பது தான்.

அந்த நிலைக்கு வந்து விட்டேன். நீ இளம்பெண். நீ தரித்த வேடம் அரிதான ஒன்று. வயதிற்கு ஒவ்வாத பாத்திரத்தை ஏற்றத் திறம்பட நடித்ததால் மோகத்திரை உன்னை விட்டு விலகவில்லை. நீ விரும்பினாலும் அது நீடிக்காது. நான் கேட்க வந்தது வேறு. நமது திருமணத்தை எப்போது வைத்துக் கொள்ளலாம்? போருக்கு முன்பா? போருக்குப் பிறகா?"

"எனக்குத் திருமணமே வேண்டாம் மன்னவா?"

"என்ன பேச்சு உன் பேச்சு சாரமற்ற பேச்சு? எதற்காகத் திருமணம் வேண்டாம் என்கிறாய்? வேண்டாம் என்று சொல்கிற வயதா இது? வேண்டாம் என்று மறுக்கும் பருவமா இது?"

"வயதிற்கு ஒவ்வாத வேடத்தைப் போட்ட போது திருமணத்தை வேண்டாம் என்று சொல்ல முடியாதா?"

"பேதைப் பெண்ணே! வேடம் வேறு. உண்மை வேறு. நாடகத்தில் இளம்பெண் கிழவியாக நடிக்கலாம். நிஜ வாழ்க்கையில் அப்படி நடந்து கொள்ள முடியாது."

"மன்னவா! நான் போட்ட வேடம் என்னைப் பக்குவப் படுத்திவிட்டது. மனத்தை மாற்றி விட்டது. உலகம் பொய் என்ற அத்வைதம் உண்மை என்பதை உணர்த்திவிட்டது. இந்த வயது, இந்த இளமை, இந்த உடம்பு எல்லாமே பொய் என்பதை நான் வேடம் போட்ட போது சந்தேகமில்லாமல் தெரிந்து கொண்டேன். யோகினியாக நடித்ததுதான் உண்மை என்பதையும் தேவதேவியாக இருப்பது தான் பொய் என்பதையும் அறிந்து கொண்டேன்."

"என்னால் நம்ப முடியவில்லை தேவதேவி. நிச்சயமாக நம்ப முடியவில்லை. உன் பேச்சுக்களுக்குப் பின்னால் ஏதோ இருக்கிறது என்று நினைக்கிறேன். அப்படி ஏதாவது இருந்தால் சொல்லிவிடு. நானாகக் கண்டுபிடித்தால் விளைவுகள் பயங்கரமாக இருக்கும். நான் எப்படிப்பட்டவன் என்பதை உனக்கு மற்றவர்கள் சொல்ல வேண்டியதில்லை."

"உங்கள் சந்தேகம் தவறு மன்னவா. என்னை நம்ப முடியவில்லை என்றால் என்னைக் கொன்று விடுங்கள். இந்த உடம்பு நிலையானது அல்ல."

"நிலையானது அல்ல தான். அதே சமயம் வயதிற்கும் பருவத்திற்கும் உரியவற்றை அனுபவிப்பது தவறானது அல்லவே! இல்லறத்தில் ஈடுபட்டு வாழ்ந்து வாழ்க்கை முடியும் போது

யாரைக் கேட்டுக் கொண்டு போகப் போகிறோம்? முடிவு வருட்போது வரட்டும். வாழ்க்கையை ஏன் வெறுக்க வேண்டும்?"

"யோகினியாக வாழ்வதும் வாழ்க்கை தான். துறவிகள் இல்லையா? அவர்கள் துறந்துவிட்டுத் தானே வாழ்கிறார்கள்?"

"தேவதேவி! என்னைத் திருமணம் செய்து கொள்ள விருப்பமில்லாமல் இருக்கலாம். வேறு யாரையாவது மணக்கும் விருப்பம் இருந்தாலும் இருக்கலாம். அப்படி ஏதாவது இருந்தால் தயங்காமல் சொல். நிறைவேற்றி வைக்கிறேன்."

"உங்களை வெறுக்கிறேன் என்பதும் யாரையோ விரும்புகிறேன் என்பதும் இந்த ஜென்மத்தில் இல்லை. தாங்கள் மன்னர். தங்களை நிராகரிப்பது என் ஆணவமாகும். என்னைத் தவறாக எண்ணாதீர்கள். இல்லற வாழ்க்கையை நான் விரும்பவில்லை. யோகினியாகவே வாழ விரும்புகிறேன்."

"பெண்ணிடம் இருக்கும் வைராக்கியம் இளம் வயதில் சகிக்க முடிவதாக இருக்கும். வயது ஏற ஏற - உடல் தளர தளர - தனிமையில் இருக்க முடியாத வேதனை வாட்டி எடுக்கும். இளம்வயது வைராக்கியம் வறட்டு வைராக்கியம் என்பது புரியும். ஆனால் நிவர்த்தி செய்ய முடியாது."

"நான் காட்டிற்குச் சென்று தனியாகத் தவம் செய்யப் போவதில்லை அரசே. யோகினியாக எல்லோருக்கும் இடையில் வாழ்வேன். அத்வைதத்தைப் பரப்பி யோகினியாகவே வாழ்வேன். அந்த நம்பிக்கையைக் காஞ்சி வாழ்க்கை எனக்குத் தந்திருக்கிறது."

"ஆகா! நான்தான் எத்தனை கற்பனைகளில் இருந்தேன்? எல்லாவற்றையும் அழித்து விட்டாயே பெண்ணே! நான் நினைத்திருந்தால் எத்தனையோ பெண்களை மணந்திருக்க முடியும்? உன்னை மங்கை வேந்தனிடம் மயக்கும் பாவையாக அனுப்பி வைத்தவன் நான். அப்போதே நான் உன்னை மணந்து ராணியாக்கிக் கொள்வது தான் என் பாவத்திற்கான பரிகாரம் என்று நினைத்தேன். வேறு பெண்களின் மீது என் பார்வை செல்லவில்லை. நீயோ இப்போது என்னை மணக்க மறுக்கிறாய். என் விதியோ இது?"

"மன்னவா! தங்கள் மனதை நோகடிப்பது என் நோக்கமல்ல. வேதனை உண்டாகியிருந்தால் தங்களிடம் மன்னிப்பைக் கோருவதைத் தவிரவேறு என்ன செய்ய முடியும் நான்? தங்களுக்கு நான் இணை இல்லை. தங்களுக்குப் பல அரசகுமாரிகள் மண மாலைசூடக் காத்திருப்பார்கள்."

"வீண் பேச்சு எதற்கு? உன் முடிவுதான் என்ன?"

"யோகினியாகவே வாழ விரும்புகிறேன் அரசே!"

மன்னன் சிறிது நேரம் யோசித்தபடி நடந்தான் - பிறகு -

"பல்லவர்கள் நம்மீது படையெடுத்து வருகிறீர்கள் தேவதேவி" என்றான்.

"எதிர்பார்த்தது தானே அரசே?"

"நினைத்தது ஒன்று. நடப்பது ஒன்று. திருமணத்தில் மட்டுமல்ல. அரசியலிலும் தான்."

"எதிர்கொள்ளுங்கள் மன்னவா."

"தேவதேவி! என் விருப்பம் ஒன்றை நிறைவேற்றுவாயா?"

"திருமணத்தைத் தவிர எதுவாக இருந்தாலும் நிறை வேற்றுகிறேன்."

"போர் முடியும் வரை நீ இங்கேயே இருக்க வேண்டும். தேவதேவியாகவே இருக்க வேண்டும். உன் முடிவு யாருக்கும் தெரியக் கூடாது. போருக்குப் பின் நீ யோகினியாக எங்கே வேண்டுமானாலும் செல்."

"அப்படியே ஆகட்டும் மன்னவா."

★

மறுநாள் போர் ஆலோசனை அவை கூடியது.

போர்த்தளபதியான மன்மதன், உபதளபதிகள், கோட்டை தலைவன், ஒற்றர்படைத் தலைவன், ஆகியோர் வந்திருந்தார்கள். பெருமாள் பட்டர் வந்திருந்தார். மன்னன் உதயணன் கடைசியாக வந்தான்.

தேவதேவியின் முடிவு அவனைச் சற்று அசதிக்கு ஆளாக்கி யிருந்தாலும் அதையெல்லாம் களைந்துவிட்டுத் தெளிவான வனாகவே அவன் வந்திருந்தான்.

மன்மதனைப் பார்த்து "கோட்டை மதில்களில் எண்ணெய்க் கொப்பரைகள் எப்படி வைக்கப்பட்டுள்ளன? எண்ணிக்கை எவ்வளவு?" என்று கேட்டான்.

"எண்ணிக்கை இருநூறு. பத்தடிக்கு ஒன்று என்ற விதத்தில் வைக்கப்பட்டுள்ளன" என்றான் போர்த்தளபதியான மன்மதன்.

"அம்புகளை எய்யும் பொறிகள்?"

"எண்ணைக் கொப்பரைகளுக்கிடையில் அமைக்கப் பட்டுள்ளன."

"தானியங்கிகளா? நாம் இயக்க வேண்டுமா?"

"நாம்தான் இயக்க வேண்டும்."

"அம்புகள் மதிலிலிருந்து எவ்வளவு தூரத்திற்குச் செல்லும்."

"நூறடி தூரத்திற்குச் செல்லும்."

"மதில்களுக்கு வெளியே நாம் அமைத்திருக்கும் இரும்புத் தடுப்புகள் ஐம்பதடி வரை இருக்குமல்லவா?"

"ஆம். மன்னவா."

"எதிரிகள் இரும்புத் தடுப்புகளை நெருங்க விடாமலிருக்க அம்புகள் தாக்கும். இல்லையா?"

"ஆம்."

"அந்தத் தாக்குதலை மீறி இரும்பு வளையத்திற்குள் வந்தால்?"

"முன்னேற முடியாது. முன்னேற முயன்றால் இரும்புக் கொப்பரைகள் கொதிக்கும் எண்ணெயைக் கொட்டும்."

"கோட்டைக் கதவுகளுக்கு என்ன பாதுகாப்பு?"

"மேலே சொன்னவை தான் பாதுகாப்பு. அவற்றை மீறி எதிரிகள் கோட்டைக் கதவுகளை நெருங்கமுடியாது."

"நம்மிடம் உள்ள வீரர்கள் எவ்வளவு?"

"முப்பதாயிரம்."

"கோட்டைக்குள் இருக்கிறார்களா? வெளியில் இருக் கிறார்களா?"

"இருபதாயிரம் பேர் உள்ளே இருக்கிறார்கள். பத்தாயிரம் பேர் வெளியில் மறைவாக இருக்கிறார்கள்?"

"எதற்கு?"

"எதிரிகளைப் பின்னாலிருந்து தாக்குவதற்கு."

"கோட்டைக்குள்ளே இருக்கும் வீரர்களுக்கு உணவு இருக்கிறதா?"

"இருக்கிறது."

"எத்தனை நாளைக்கு?"

“முப்பது நாளைக்கு.”

“முப்பத்தோராவது நாள்?”

“இரு தினங்களுக்குச் சமாளிக்கலாம்.”

“பிறகு?”

“உணவு கிடைக்காது.”

“எதிரி முப்பது நாட்கள் வரை காத்திருந்து விட்டுத் தாக்கினால் நமது வீரர்களால் ஈடு கொடுக்க முடியுமா?”

“முப்பது நாட்களுக்குள் எதிரிகள் முறியடிக்கப்படுவார்கள்.”

“எப்படி?”

“பலதந்திரங்கள் உள்ளன.”

“சிலவற்றைச் சொல்.”

சொன்னான் மன்மதன்.

“இதெல்லாம் உன் கணக்கு. எதிரியின் கணக்கை ஊகிக்க முடியுமா?”

“இப்போது முடியாது. கோட்டையை நெருங்கியபின் ஊகிக்க முடியும்.”

மன்னன் ஒற்றர் தலைவனைப் பார்த்து “எதிரிப் படை எந்த மார்க்கத்தில் வருகிறது?” என்று கேட்டான்.

“சோழநாட்டில் இருக்கும் நமது ஒற்றர்கள் கண்களில் எதிரிப்படை இதுவரை படவில்லை” என்றான் ஒற்றர் படைத்தலைவன்.

“எதிரிகளின் மார்க்கம் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம் அல்லவா?”

“ஆம்.”

“உனது ஒற்றர்கள் சோழநாட்டில் மட்டும் தொற்றிக் கொண்டிருந்தால் எதிரிப் படையின் மார்க்கத்தை எப்படி அறியமுடியும்?”

“காஞ்சியிலிருந்து வரும் படை சோழநாட்டின் மூலமாகத்தான் நெல்வேலிக்கு வர முடியும். மாற்று மார்க்கம் காலதாமதமாகும்.”

“எதற்கும் கண்காணிப்பு அதிகமாக இருக்கட்டும்” என்று சொன்ன மன்னன் மன்மதனைப் பார்த்து “எதிரியை முறியடித்து விடுவோம் என்ற நம்பிக்கை உனக்கு இருக்கிறதா?” என்று கேட்டான்.

"இருக்கிறது மகாராஜா."

"எப்படிச் சொல்கிறாய்?"

"கோட்டைக்குள் பல மர்மங்கள் உள்ளதாக வதந்திகளைப் பரப்பியிருக்கிறேன். இது எதிரிகளை யோசிக்க வைக்கும். அந்த நேரத்தில் நாம் தாக்கினால் வெற்றி பெறுவது எளிது."

"வதந்திகள் வதந்திகளாகவே இருக்காது. உண்மை வெளிப்பட்டு விடும். அப்படி வெளிப்பட்டு விட்டால் எதிரிகளிடம் தயக்கம், தடுமாற்றம், அச்சம் ஆகியவை நீங்கிவிடும் அல்லவா?"

"உண்மை வெளிப்படுவதற்கு முன் போர் முடிந்துவிடும். வெற்றி கிட்டிவிடும்."

"நீங்களெல்லாம் செல்லுங்கள்."

எல்லோரும் சென்றார்கள். பெருமாள் பட்டர் மட்டும் இருந்தார்.

அவரைப் பார்த்த மன்னன் "பட்டரே! எனக்கு மன்மதனின் மீது நம்பிக்கை வரவில்லை. அவன் மண்குதிரை" என்றான்.

"பிறகு எதற்காக அவனைப் போர்த்தளபதியாக நியமித்தாய்?" என்று கேட்டார் பட்டர்.

"மன்மதன் ஒரு விஷப் பாம்பு. பதவி தராவிட்டால் கடித்து விடுவான்" என்றான் மன்னன்.

"பிறகு எதற்காக அவனைப் பதவி நீக்கம் செய்தாய்?" என்று கேட்டார் பட்டர்.

"கோட்டைப் பகுதியில் இருக்க வேண்டியவன் கணிகையின் இல்லத்தில் இருந்தால் கோபம் வராதா? பதவிநீக்கம் செய்யாமல் என்ன செய்வது?"

"அவனை விஷப்பாம்பாகக் கருதும் நீ அவனைப் பதவி நீக்கம் செய்த கையோடு சிறையில் அடைத்திருக்க வேண்டும். தண்டனை என்ற பெயரில் கொன்றிருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால் விஷப் பாம்பு அழிந்திருக்கும். அதை நீ செய்யவில்லை. உன்னிடம் ஆத்திரம் இருந்தது. விவேகம் இல்லை. அதிகாரம் இருந்தது. பரிகாரம் இல்லை. சாமர்த்தியம் இருந்தது. சமயோசிதம் இல்லை."

"பட்டரே! வருகிற போரில் வெற்றி பெறுவதற்கு என்ன வழி?"

"நான் போர் விஷயத்தில் அறிவுரை கூறுவதில்லை மன்னா."

"நான் கேட்கும்போது கூறலாம் அல்லவா?"

"அப்படியானால் என் கேள்விக்குப் பதில் சொல்."

"கேளுங்கள்."

"பல்லவர்களின் இந்தப் படையெடுப்பிற்குக் காரணம் என்ன?"

"அது... அது எதுவாக இருந்தால் என்ன பட்டரே! போர் நிச்சயமாகி விட்டதே!"

"போருக்கான காரணம் தெரியாமல் நான் எதையும் கூறமுடியாது மன்னா."

அப்போது போருக்கான காரணம் நான் தான் என்பதை அறிவிப்பது போல் அங்கே பிரவேசித்தாள் உதயணனின் சகோதரியான சொர்ணாதேவி.

திடுக்கிட்டான் உதயணன்.

★★★



சீர்காழி

சொர்ணமுகியின் கோலம் காளியின் கோலமாய் இருந்தது.

அவளது கோலத்தை விட அவள் உயிரோடு இருந்தது தான் உதயணனைத் திடுக்கிட வைத்தது.

"சொர்ணமுகி!" என்று உணர்ச்சி பொங்க உச்சரித்த உதயணன் "நீ உயிரோடுதான் இருக்கிறாயா?" என்று கேட்டான்.

"இல்லை. நான் இறந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன" என்றாள் சொர்ணமுகி ஆவேசத்துடன்.

"முதலில் இங்கே வந்து உட்கார் சொர்ணமுகி. பிறகு பேசலாம்" என்றான் உதயணன்.

"மாட்டேன். நான் உட்கார்ந்தால் என்னைச் சுற்றிச் சமாதியைக் கட்டினாலும் கட்டி விடுவீர்கள்" என்றாள் சொர்ணமுகி.

"நீயா இப்படிப் பேசுகிறாய்? உன்னை நான் என் உயிராக நேசிப்பவன் சொர்ணமுகி. மறந்து விட்டாயா?"

"அதனால்தான் நான் உயிரோடு இருக்கும் போதே செத்து விட்டதாகக் கருதி காரியங்களைச் செய்தீர்களா?"

"விசித்திரமான விஷயம். வினோதமான விஷயம். வியப்பான விஷயம். விவரம் தான் தெரியும். நீ எப்படி உயிரோடு இருந்தாய்? எப்படி இருந்தாய்? எங்கே இருந்தாய்?"

"ஒரு மன்னராக இருந்து பேசுங்கள் சகோதரரே! போரில் வீரமரணமடைந்தவர்களுக்குக் கூட பெயர், ஊர் விவரங்களை குறித்துக் கொண்டுதான் தகனம் செய்வார்கள் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். நீங்களோ உங்கள் சகோதரி மரணமடைந்து விட்டாள் என்ற செய்தியைக் கேட்டதுமே எல்லாவற்றையும் முடித்து வீட்டீர்கள். என் சடலத்தைக் காண்பதற்குக் கூட முயற்சிக்கவில்லை. உங்களைப் போன்றச் சகோதரரையோ மன்னரையோ இதுவரை எந்த நாடும் சந்தித்திருக்காது."

"எனதுமுட்டாள்தனம்இப்போதுதான்புரிகிறதுசொர்ணமுகி. நம்பிக்கையானவர்கள் சொன்னதால் நம்பினேன். விசுவாசமானவர்கள் கூறியதால் நம்பினேன். என்னை மதித்தவர்கள் உரைத்ததால் நம்பினேன். மோசம் போனது இப்போதுதான் புரிகிறது. நான் வெட்கப்படுகிறேன். வேதனைப் படுகிறேன்."

"நான் இறந்து விட்டதாக எண்ணித் தலை மூழ்கியிருந்தால் கூட நான் சந்தோஷப்பட்டிருப்பேன். ஆறுதலடைந்திருப்பேன். நிம்மதியும் அடைந்திருப்பேன். ஆனால் நீங்கள் அதையடுத்துச் செய்தீர்களே அடுக்கடுக்கான காரியங்கள். அதை நினைத்து நான் வெட்கப்படுகிறேன். வேதனைப் படுகிறேன். உங்கள் அருகில் அமர்ந்திருக்கும் பட்டர் பெருமானும் வெட்கப்படுவார். இந்தச் சபரர் குலம் வெட்கப்படும்."

உதயணன் பேச்சற்றுப் போனதால் பெருமாள் பட்டர் குறுக்கிட்டு "ஆவேசத்தை விட்டுவிட்டு வந்து அமர்ந்து கொள் மகளே. என்ன நடந்தது என்பதைக் கூறு. மன்னரின் பாசம் அவரது கண்களை மறைத்துவிட்டது என்று கருது. நம்பிக்கைக்கு உரியவர்கள் துரோகம் செய்துவிட்டால் அவரென்ன செய்ய முடியும்? கூடவே இருந்தவர்கள் தவறான செய்தியைச் சொல்லி விட்டால் அவர் என்ன செய்வார்? உனது உடலைத் தேடி அவர் எப்படி அலைய முடியும்? சொல்" என்றார் இதமான குரலில்.

சொர்ணமுகி சற்றே ஆவேசம் குறைந்த நிலையில் ஆசனத்தில் அமர்ந்தாள்.

"பட்டர் பெருமானே! என்னைப் பற்றிய விஷயத்தை விடுங்கள். எனது மரணத்தை உறுதி செய்யாமல் எனக்காகப் பழிவாங்க முற்பட்டிருக்கிறார் உங்கள் மன்னர் நெல்வேலியிலிருந்து இவரும் தேவதேவியும் காஞ்சிக்கு வந்திருக்கிறார்கள். பல்லவ மாமன்னருக்கு இவர் ராஜகுருவாக வேடம் போட்டிருக்கிறார். தேவதேவி யோகினி வேடத்தைப் போட்டிருக்கிறாள். இருவருமாகச் சேர்ந்து அவரை அழிப்பதற்குச் செய்த சதிச்செயல்கள் வெட்கப்படத் தக்கவை. சபரர் குலத்திற்கு அழியாத களங்கத்தை உண்டாக்கியிருக்கிறார். மறுக்க முடியாத அவப்பெயரை உருவாக்கியிருக்கிறார். அவரது செயல் எங்கள் குலத்திற்கு நிரந்தரமான கறையாகவும் வடுவாகவும் அமைந்துவிட்டது. வரலாற்று ஏடுகளில் எங்கள் பக்கம் வெட்கங்கெட்ட பக்கங்களாக இருக்கும்" என்று கூறிய சொர்ணமுகி பல்லவ மகாமந்திரி தெரிவித்த விவரங்களையெல்லாம் எடுத்துரைத்தாள்.

உதயணன் எதுவும் பேசவில்லை. சிற்பம் போலவும் ஓவியம் போலவும் மௌனமாய் இருந்தான்.

பெருமாள் பட்டரே பேசமுற்பட்டு "மகளே! நீ கூறிய விஷயங்கள் நீ இறந்து விட்டாய் என்ற மன்னரின் தவறான முடிவால் நடந்தவை. அதற்கு முன் என்ன நடந்தது? நீ பல்லவப் பேரரசரை விரும்பினாய் என்பதுவரை எனக்குத் தெரியும். பிறகு?" என்று கேட்டார்.

அந்த விவரத்தையும் சொன்ன சொர்ணமுகி "மாமன்னர் நந்திவர்மனின் பேச்சை நான் ஏற்கவில்லை. அவர் சொன்ன சமாதானங்களையும் ஏற்கவில்லை. அவர் பிடிவாதம் பிடிப்பதாகக் கருதி நான்தான் பிடிவாதம் பிடித்தேன். நான்தான் பிரதிவாதம் செய்தேன். அதோடு ஆத்திரத்தில் அவரை அவமதித்து அவதூறுகளை அள்ளி வீசினேன். நாக் கூசும் வார்த்தைகளை மாரி போல் பொழிந்தேன். அவர் இடத்தில் வேறு எவர் இருந்தாலும் என் தலையைக் கொய்திருப்பார்கள். அவரோ அலைகள் மோதிய பாறைபோல் பொறுமையாக இருந்தார். அவரை விட்டுப் போக மாட்டேன் என்று அடம்பிடித்தேன். நான் யார் என்று சொல்ல மறுத்தேன். என் இருப்பிடம் எது என்று சொல்ல மறுத்தேன்.

எனது இருப்பிடம் தெரியும்வரை என்னைப் பாதுகாத்து வைக்க விரும்பிய அவர் சிம்மவிஷ்ணு சதுர்வேதி மங்கலம் என்ற இடத்தில் பாதாள அரண்மனையில் வைத்துப் பாதுகாத்தார். அவர் தந்த பாதுகாப்பை என் சகோதரர் கூட அளித்திருக்க முடியாது. இவர் யார் என்ற உண்மை தெரிந்து இவர் காஞ்சியிலிருந்து தப்பி இங்கு வந்தபின் நான் யார் என்ற விவரத்தை ஓலை எழுதி தெரிவித்திருக்கிறார். அதற்குப் பிறகு என்னை அங்கே வைத்திருக்க விரும்பாத நந்திவர்மர் இங்கே அனுப்பி வைக்க ஏற்பாடுகளைச் செய்தார். இப்போது சொல்லுங்கள் பட்டர் பெருமானே! மதியிழந்து நான் அவமதித்தபோதும் பேரரசர் என்னைப் பாதுகாத்து வைத்திருந்து என் இருப்பிடம் தெரிந்ததும் அனுப்பி வைத்தார். மதியிழந்த உங்கள் மன்னரான இவர் எனக்காகப் பழிவாங்க முனைந்து இழி செயல்களில் இறங்கினார். என் மதியீனம் என்னோடு நின்றது. இவரது மதியீனமோ நாட்டைப் பாதித்து விட்டது. இப்போது நெல்வேலிக்கும் பாதிப்பு வரப்போகிறது" என்றாள்.

உதயணன் தன் மௌனத்தைக் கலைத்து "பல்லவ மன்னன் உனக்கு அளித்த பாதுகாப்பும் உபச்சாரமும் உன்னை வெகு வாகவே பாதித்துவிட்டது சொர்ணமுகி. நீ பல்லவ மன்னனை உண்மையாகவே காதலித்திருந்தால் உன்னை அவன் மறுத்த மறுகணமே நீ உன் உயிரை விட்டிருக்க வேண்டும். எப்போது அதை நீ செய்யவில்லையோ நீயும் பொய். உன் காதலும் பொய்.

நீ இறந்து விட்டாய் என்று கேட்டபோது நான் வாடினேன். வருந்தினேன். இப்போதும் வருந்துகிறேன் நீ இன்னும் இறக்கவில்லையே என்பதால்" என்றான் கடுமையான குரலில்.

"நான் நீண்ட நெடுங்காலம் வாழ்வதற்காக உயிர் வாழ வில்லை சகோதரரே. உங்கள் மதியீனத்தையும் மகாபாவத்தையும் சுட்டிக் காட்டவே உயிரோடு வந்தேன். பல்லவப் போரரசர் பண்புகளின் உறைவிடம். அவருக்கு நீங்கள் இழைத்த துரோகம் கொடுமையானவை. மன்னிக்க முடியாதவை. அவரிடம் மன்னிப்பைக் கோரி நாட்டையும் நாட்டு மக்களையும் காப்பாற்றிக் கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொள்வதற்காகவே இங்கு வந்தேன். உயிரோடு வாழ அல்ல. நீங்கள் உய்வதற்கு அதுவே வழி."

"நீ சொல்லும் வழி மானங்கெட்டவர்கள் செல்லும் வழி. நம்பிக்கையைத் தொலைத்தவர்கள் செல்லும் வழி. மானத்தை விட்டு விட்டு வாழும் வாழ்க்கையை உன் சகோதரன் ஒருபோதும் ஏற்க மாட்டான். பல்லவர் படை வந்தால் அதன் மீது இடியாய் இறங்க நான் சித்தமாக இருக்கிறேன். இந்த மலையை எந்த மலையும் தகர்க்க முடியாது. உனக்குப் பயமாக இருந்தால் சொல். ஒளிவதற்கு இடம் பார்த்துத் தருகிறேன்" என்றான் மன்னன்.

சொர்ணமுகி எழுந்து கொண்டாள்.

"உங்களுக்குச் சகோதரியாகப் பிறந்ததற்கு நான் மிகவும் வெட்கப்படுகிறேன். வருத்தப்படுகிறேன். உங்களது அழிவுகாலம் நீங்கள் காஞ்சிக்கு வந்த அன்றே தொடங்கிவிட்டது. அதை நீங்கள் அறியாமல் மாமன்னருக்கு அழிவைத் தேடிக் கொண்டிருந்தீர்கள். அவரை அழிக்க உங்களால் மட்டுமல்ல உங்கள் இனத்தால்கூட முடியாது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

திருந்துங்கள். பெருங்குற்றம் புரிந்தவர்களுக்குத் திருந்தும் வாய்ப்பு பெரும்பாலும் வராது. ஆனால் உங்களுக்கு வந்திருக்கிறது. மன்னிப்பைக் கோருவது மனிதப் பண்புகளில் ஒன்றே தவிர மதிப்பைக் குறைக்கும் விஷயமல்ல. மன்னிப்பு கேட்டால் மாமன்னர் நிராகரிக்க மாட்டார். இது இறைவன் உங்களுக்கு வழங்கியுள்ள சந்தர்ப்பம். புறக்கணித்து விடாதீர்கள்" என்றாள்.

"உன் பேச்சைக் கேட்பதற்கு எனக்கு வெறுப்பாக இருக்கிறது. வெறுப்பு வெறியாக மாறி வெறி கொலையாக மாறுவதற்குள் இங்கிருந்து போய் விடு. நான் ராவணன். நான் சூரபத்மன். நான் துரியோதனன். மன்னிப்புக் கோருவது என்ற வார்த்தை எங்கள் வாழ்க்கை அகராதியில் கிடையவே கிடையாது. வீழ்ந்து

போனாலும் வீரனாக வீழ்வோமே அன்றி மன்னிப்பைக கோரி வாழ்வதற்கு வாய்ப்பைத் தேட மாட்டோம். எனது கண்முன் நிற்காதே போய் விடு" என்று இரைந்தான் மன்னன்.

சொர்ணமுகி சிலை அலையில் அடித்துச் செல்வது போல் வேகமாக அகன்றாள்.

மன்னன் பெருமாள் பட்டரைப் பார்த்து "இவளுக்குப் புத்தி பேதலித்து விட்டது பட்டரே. இனமானம் என்றால் இன்னதெனத் தெரியாமல் எனக்கு அறிவுரை கூற வந்து விட்டாள்" என்றான்.

"மன்னா! சபரர் குல கௌரவச் சின்னமான மயில் இறகாலும் தந்தத்தாலும் சீனக் கண்ணாடியாலும் செய்யப்பட்டத் தோரண வாயிலுக்குப் பாதுகாப்பை பலப்படுத்து" என்றார் பட்டர்.

அவர் குரலில் கவலை அதிகம் இருந்தது.

★

கடற்கரையை ஒட்டியிருந்த படியால் கழாஅர் என்றும், கழுமலப் பூக்கள் நிறைந்திருந்த படியால் கழுமலம் என்றும், பிரம்புகள் விளைந்த இடமான படியால் பிரம்மபுரம் என்றும், மூங்கில் அடர்ந்து வளர்ந்த படியால் வேணுபுரம் என்றும், கடல்நீர் உள்ளே புகுந்த இடமான படியால் புகலி என்றும், வெண்குருகுப் பறவைகள் காணுமிடமெல்லாம் காட்சி தந்த படியால் வெங்குருகு என்றும், நீர்ப்பறவைகள் நீர்ப்பரப்புகளில் நிறைந்து காணப்பட்டதால் பூந்தராய் என்றும், படகுத்துறையைச் சார்ந்த இடமாக அமைந்தபடியால் தோணிபுரம் என்றும், புறாக்களின் புகலிடமாக இருந்தபடியால் புறவம் என்றும், கோரைகள் தழைத்திருந்த காரணத்தால் சண்மை என்றும், காளிக் கோயிலொன்று ஒரு காலத்தில் பிரசித்தமாய் இருந்த காரணத்தால் காளிபுரம் என்றும், மீன் கொத்திப் பறவைகள் நீக்கமற நிறைந்திருந்த காரணத்தால் சிரல்புரம் என்றும், எதற்கும் பயன்படாத களர் பூமி பெரும்பகுதியாக அமைந்திருந்ததால் கொச்சை வயல் என்றும் பல்வேறு பெயர்களால் பல்வேறு காலங்களில் அழைக்கப்பட்டதுமான சீர்காழி தலத்திற்கு வந்தார் மங்கை வேந்தரான திருமங்கையாழ்வார்.

அங்கே அவரை வரவேற்பது போல் புறாக்கள் பறந்தன. வெண்குருகுப் பறவைகள் பறந்தன. மீன் கொத்திகள் பறந்தன. கடல் காற்றும் விசிறுவது போல் வீசின.

"இந்த ஊருக்கு இருக்கும் பெயர்களைப் போல எந்த ஊருக்கும் இருக்காது" என்றார் திருமங்கை யாழ்வார்.

அவரோடு சீடர்கள் வந்தார்கள். ஆரம்ப காலத்தில் இருந்தவந்த தோலா வழக்கர், நீர்மேல் நடப்பான், நிழலில் ஒதுங்குவான், சாயை பிடிப்பான், தாளுதுவான் ஆகியவர்களோடு ஆழ்வார் விஜயம் செய்த ஊர்களில் இருந்து சேர்ந்திருந்த புதுச் சீடர்களும் அவரோடு வந்தார்கள்.

அவர்கள் ஆழ்வாரின் விருதுப் பெயர்களைச் சொல்லிப் பெருங்குரல் கொடுத்தார்கள்.

"நாலு கவிப் பெருமாள் வந்தார்!"

"கலியன் வந்தார்!"

"ஆலி நாடர் வந்தார்!"

"அருள்மார் வந்தார்!"

"கொங்குமலர் குழலியர் வேள் வந்தார்!"

"மங்கை வேந்தர் வந்தார்!"

"பரகாலர் வந்தார்!"

திருமங்கை ஆழ்வார் சித்திரக் கவி, மதுர கவி, வித்தாரக் கவி, ஆசு கவி என்று நான்குவிதக் கவிகளைப் பாடும் வல்லமை இருந்ததால் அவர் நாலுகவி பெருமாள் என்று அழைக்கப்பட்டார். "மின் உருவாய்" என்று தொடங்கும் இவரது திருநெடுந் தாண்டகம் என்னும் பாசுரம் இந்த நான்கு வகை கவிகளுக்கும் எடுத்துக்காட்டாய் அமைந்திருந்தது.

மின், பின், பொன் என மூப்பொருளை அடிதொறும் அமைந்ததால் சித்திரக் கவியாயிற்று.

மின், விளக்கு, திங்கள், பொன், மணி, புனல், அனல், ஜோதி, எந்தை, தளிர், திரு என்ற இனிய சொற்கள் விரவி வந்ததால் மதுர கவியாயிற்று.

இறைவன் செய்த உபகாரங்களை விரிவாக வரிசைப்படுத்திக் கூறுதலால் வித்தாரக் கவியாயிற்று.

இவர் மற்ற ஆழ்வார்களை விட மிகுதியாகப் பாசுரங்களைப் பாடியதால் ஆசு கவியானார்.*

("மின் உருவாய் முன் உருவில் வேதம் நான்காய்
விளக்கு ஒளியாய் முளைத்து எழுந்த திங்கள் தானாய்)
பின் உருவாய் முன் உருவில் பிணி மூப்பு இல்லாப்
பிறப்பிலி ஆய் இறப்பதற்கே எண்ணாது எண்ணும்
பொன் உருவாய் மணி உருவில் பூதம் ஐந்தாய்ப்

* பக்கம் 386 'வைணவ திவ்ய தேசங்கள் 108' பாகம் 1 By. தேவராஜன்.

புனல் உருவாய் அனல் உருவில் திகழும் சோதி
தன் உருவாய் என்உருவில் நின்ற எந்தை
தளிர் புரையும் திருவடி என்தலை மேலவே”*

சீடர்கள் இவ்வாறு விருதுப் பெயர்களை முழக்கமிட்டபடி நகர வீதியில் சென்றபோது ஞானசம்பந்தர் மடம் இருந்த பகுதியிலிருந்து சிவனடியார்கள் கூட்டமாக வந்து “நிறுத்துங்கள். நிறுத்துங்கள்” என்றார்கள்.

“எதை நிறுத்த வேண்டும்?” என்று கேட்டார்கள் ஆழ்வாரின் சீடர்கள்.

“விருதுகளைச் சொல்லிக் குரல் கொடுத்து வருகிறீர்களே - அதை” என்றார்கள் சிவனடியார்கள்.

“ஏன்?”

“எங்கள் குருநாதர் சம்பந்தர் ஒப்புக் கொண்டாலன்றி நாலுகவி பெருமாள் என்று நீங்கள் போற்றுவதை ஏற்க முடியாது.”

“யாரது சம்பந்தர்?”

“மகா வித்வான். சிவபக்த சிரோன்மணி. சிவமே பெரிது என்று கருதும் சிவரோத்தமர். சதா சதாவென்று நினைந்து நினைந்து என்றும் சிவமாய் ஒளிரும் எங்கள் குருநாதர்.”

சிவனடியார்கள் இப்படிக் கூறிக் கொண்டிருந்த போது மடத்திலிருந்து வெளியே வந்தார் சம்பந்தர்.

அவரிடம் தங்கவேல் ஒன்றிருந்தது!

★★★

* நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தில் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த திருநெடுந்தாண்டகம். பாசுரம் எண் 2052.



நாலுகவி பெருமாள்

"இந்த வைஷ்ணவர்கள் தங்கள் தலைவரை நாலுகவிப் பெருமாள் என்று போற்றிக் குரல் கொடுத்து வந்தார்கள். எங்கள் குருநாதராகிய தாங்கள் ஒப்புக் கொள்ளாமல் அந்தப் பட்டத்தை இவருக்குச் சூட்டக் கூடாது என்றோம். தாங்கள் வந்து விட்டீர்கள்" என்றார்கள் சிவனடியார்கள்.

அதைக் கேட்டதும் உடம்பெல்லாம் நீறுபூசி சிவப் பழமாகக் காட்சியளித்த சம்பந்தர் "ஆகா! இது என்ன? இப்படியொரு அநாகரீகம் எப்படி வந்தது உங்களுக்கு? இந்த வைஷ்ணவப் பெரியாரை நாலுகவிப் பெருமாள் என்று அழைப்பதற்கு நான் எதற்காக ஒப்புதல் தரவேண்டும்? இது என்ன கூத்து?" என்று வினவினார்.

"குருநாதரே! தாங்கள் பெரும்புலவர். இலக்கணங்களைக் குறைவறக் கற்றுணர்ந்த மகாவித்துவான். தங்களுக்குத் தெரியாத கவிகள் இல்லை. தாங்கள் அறியாத கவித்துவம் இல்லை. தங்களிடம் கவிகள் கொஞ்சும். கெஞ்சும். அனைத்து கவிகளும் கற்ற தாங்களே நாற்கவி நாவலர். தங்களுக்கு முன் அந்தப் பட்டத்தை மற்றவர் எப்படி ஏற்க முடியும்?" என்று கேட்டார்கள் சிவனடியார்கள்.

"இதெல்லாம் மிகையான பேச்சு. மிகையான செயல். நாற்கவிகளைக் கற்றவர்களும் நான்கிற்கு மேலாகக் கவிகளைக் கற்றோரும் நாநிலத்தில் நிரம்ப பேர் இருக்கிறார்கள் என்பதை எப்படி மறந்தீர்கள்? சிவனடியார்களின் லட்சணம் இது அல்லவே! சிவமாய் இருக்க வேண்டிய நீங்கள் சலசலப்புகளை உண்டாக்குவது சிறுமையல்லவா? சைவத்திற்குக் களங்கம் அல்லவா?" என்று கடிந்து கொண்ட சம்பந்தர் திருமங்கை ஆழ்வாரை வணங்கி "சுவாமி! தாங்கள் யார் என்பதை நான் அறியலாமா?" என்று வினவினார்.

அதற்குத் தோலா வழக்கர் பதில் கூற முற்பட்டு "இவர் எங்கள் குரு ஆலிநாட்டவர். அரங்கன் கோயிலில் திருப்பணிகளைச்

செய்துவிட்டு அவனது அந்தரங்க ஆணையின் பேரில் தலயா.த்திரை மேற்கொண்டார். இமாலயத்திலிருந்து பற்பல பெருமாள் கோயில்களுக்கு விஜயம் செய்து மங்களாசாசனம் செய்து வருகிறார். வடநாடு யாத்திரை நிறைவுற்றது. தொண்டை நாடு மற்றும் நடுநாடு யாத்திரையும் முடிந்து சோழநாட்டில் திருவடி வைத்திருக்கிறார். திருமங்கை ஆழ்வார் என்பது திருநாமம்" என்றார்.

"தாங்கள் தான் மங்கை வேந்தனாக இருக்க வேண்டும். தங்களைக் குறித்து நிரம்பக் கேள்விப்பட்டிருக்கிறேன். நேரில் கண்டதில்லை. மங்கை வேந்தரே! தாங்கள் ஞானசம்பந்தர் மடத்திற்கு வருகை தந்து ஆசுகவி பாடவேண்டும்" என்றார் சம்பந்தர்.

"ஐயா! எங்கள் ஆழ்வார் பெருமாளுக்கு முன்பு தான் கவி பாடுவார்" என்றார் தோலா வழக்கர்.

"அதுவும் சரிதான். இந்த ஊர் பெருமாள் கோயிலுக்கு உரிய உற்சவ விக்கிரத்தை மூதாட்டியொருத்தி தவிட்டுப் பானையில் வைத்துப் பாதுகாத்து வருகிறாள். பரம வைஷ்ணவர் வந்து கேட்டாலன்றி அதைத் தர மறுக்கிறாள். தங்கள் வரவைத் தெரிவித்து பெருமாள் விக்கிரகத்தைக் கொண்டு வரச் சொல்கிறேன். அதுவரையில் தாங்கள் இவ்வூர்ப் பெருமாள் கோயிலில் இருங்கள்" என்றார்.

"உற்சவர் கோயிலில் அல்லவா இருக்க வேண்டும்? எதற்காகத் தவிட்டுப் பானையில் இருக்கிறார்?" என்று கேட்டார் ஆழ்வார்.

"இருக்கும் கோயிலில் பாதுகாப்பு இல்லை. மிலேச்சர்கள் தொல்லை அதிகமாய் இருக்கிறது. ஆகவே விக்ரகத்தை எடுத்து அர்ச்சகரே அந்த மூதாட்டியிடம் கொடுத்திருப்பார் போலிருக்கிறது. அவள் அதற்குப் பாதுகாப்பான இடம் தவிட்டுப் பானை தான் என்று கருதியிருக்கிறாள். அதனால் அந்த விக்ரகத்தை யாரும் சந்தேகப்படாத விதமாக அதற்குள் வைத்திருக்கிறாள்" என்றார் சம்பந்தர்.

ஆழ்வாரும் சீடர்களும் பிறகு அங்கிருந்த பெருமாள் கோயிலுக்குச் சென்றார்கள். கோயிலுக்குக் கோபுரமும் இல்லை. மதில் சுவர்களும் இல்லை. ஆனால் இருந்ததற்கான தடயங்கள் இருந்தன. கோயில் பகுதியில் புதர்கள் மண்டிக் கிடந்தன. புதர்களுக்கு இடையில் ஒரு உயரமான பாறையில் படுத்திருந்தார் அர்ச்சகர்.

இரைச்சல் கேட்டதும் எழுந்தடித்துக் கொண்டு வந்தார். ஆழ்வாரையும் அவரோடு வந்த சீடர்களையும் கண்டபோது "ஆகா! நல்ல காலம் பிறந்துவிட்டது போல் இருக்கிறதே!" என்று நினைத்துக்கொண்டு 'வரவேண்டும் வரவேண்டும். இக் கோயிலுக்குப் பாம்புகள் தான் வரும். பக்தர்கள் வருவதில்லை. வைஷ்ணவர்களான உங்களையெல்லாம் கண்ட பிறகு எனக்குக் கைகால் ஓடவில்லை' என்று சொல்லிக் கொண்டே போனார்.

"அது இருக்கட்டும். ஆலயம் ஏன் அனாதையைப் போல் இருக்கிறது? கோயில் கோயிலாக இருந்தால் அல்லவா பக்தர்கள் வருவார்கள்? புதர்கள் மண்டிக் கிடந்தால் பாம்புகள் தான் வரும்" என்று கேட்டார் ஆழ்வார்.

"சுவாமி! கோயிலுக்கு ஒரு சொத்தும் கிடையாது. பெருமாள் தான் ஒரே சொத்து. இங்கே வரும் பக்தாள் போடும் தட்சிணை தான் வருமானம். அந்த வருமானமும் யாராவது வந்தால்தான். வந்து தட்சிணை போட்டால் தான். தட்சிணை கணிசமாக இருந்தால் தான். எப்போதோ ஒரு சிலர் வருகிறார்கள். சொற்ப தட்சிணையைப் போடுகிறார்கள். அதை வைத்துக் கொண்டு பெருமாளுக்கு விளக்கு கூட எரிக்க முடியாது. ஒரு மூதாட்டி. அவளுக்குப் பெருமாளின் மீது ஏகப் பிரியம். பெருமாளுக்கும் அவளுக்கும் பூர்வ ஜென்ம பந்தம் இருக்க வேண்டும். இங்கே விளக்கிற்கு எண்ணெய் வாங்கவும் பெருமாளுக்கு நிவேத்தியம் செய்யவும் பொருள் தந்து உதவுகிறாள். அவள் என்ன நினைத்தாளோ என்னவோ! பெருமாள் என்னிடம் பத்திரமாக இருக்க மாட்டார் என்று சொல்லி உற்சவரைக் கொண்டு போய் விட்டாள். தன் இல்லத்திலும் பாதுகாப்பு இருக்காது என்று நினைத்தாளோ என்னவோ! விக்ரகத்தைத் தவிட்டுப் பானையில் போட்டு வைத்திருக்கிறாள்" என்றார் அர்ச்சகர்.

அவர் ஒட்டடைக் குச்சி போல் மெலிந்து கிடந்தார். நெற்றியில் திருமண் காப்பு மட்டும் பளிச்சென்று இருந்தது. அவரைக் கடிந்து கொள்வதில் பயனில்லை என்று கருதிய ஆழ்வார் மூலவரைச் சேவிக்க உள்ளே சென்றார். அங்கே விளக்கொன்று உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு கிடக்கும் நோயாளியைப் போல் அணையும் நிலையில் எரிந்து கொண்டிருந்தது. அந்த மங்கிய விளக்கொளியில் மங்காத விளக்காகவும் நந்தா விளக்காகவும் காட்சியளித்தார் எம்பெருமான்.

"திரி விக்ரமர், காலால் உலகை அளந்ததால் தாடாளன் என்று திருநாமம்" என்று சொல்லி இருந்த ஒரே ஒரு கற்பூரக் கட்டியைக் கொளுத்திக் காட்டி தீர்த்தப் பிரசாதத்தை அளித்தார் அர்ச்சகர்.

காணத் திகட்டாத எம்பெருமானின் திருமேனியைக் கண்டு பரவசப்பட்ட ஆழ்வாருக்கு மனம் நொந்தது.

"எம்பெருமானே! உலகை அளந்த உத்தமன் நீ. உன் ஆலயத்திற்கா இந்த நிலை. பனிமலைச் சிகரங்களுக்கிடையே இருக்கும் உனது ஆலயங்கள் கூடச் சிறப்பாக இருக்கும்போது செல்வம் கொழிக்கும் சோழநாட்டில் உனக்கா இந்த நிலை?" என்று தனக்குள் கேட்டுக் கொண்டார்.

அவரது முகக் குறிப்பறிந்த சீடர்கள் உடனடியாகக் காரியங்களில் இறங்கினார்கள். பாம்புகளைப் பற்றிக் கவலைப்படாமல் புதர்களை நீக்கத் தொடங்கினார்கள். அவர்களையும் அவர்களது வேகத்தையும் கண்டு பாம்புகள் அரண்டு ஓடின. சீடர் ஒருவர் கடைப்புறத்திற்குச் சென்று விளக்கும் எண்ணெயும் வாங்கி வந்து ஒளி விளக்கேற்றினார். ஆழ்வார் மூலவரைச் சுற்றியிருந்த கருவறையைப் பகுதியை தன் கைப்பட சுத்தம் செய்தார். சில நாழிகை நேரத்தில் ஆலயப் பகுதி பளிச்சென்று ஆயிற்று.

அதையடுத்து ஊர்மக்கள் அங்கே திரண்டார்கள்.

அவர்களுக்குத் திருமங்கை ஆழ்வார் பற்றியும் அவர் தலயாத்திரை செய்து வருவது பற்றியும் சீடர்கள் எடுத்துச் சொன்னார்கள். அக்காலத்தில் பாரத நாட்டில் உள்ள புண்ணிய சேத்திரங்களுக்குச் செல்ல இயலாதவர்கள் அங்கே சென்று வந்தவர்களைத் தரிசித்தால் புண்ணியம் என்று கருதினார்கள். அந்த வகையில் ஆழ்வாரைக் கண்டதும் அவரவர்களும் தத்தம் கன்னங்களில் போட்டுக் கொண்டு வாழ்த்து கோஷம் போட்டார்கள். ஆழ்வாரது முகத்தில் விரவிக் கிடந்த பொலிவு அவர்களை மிகவும் ஈர்த்தது. பலரும் வணங்கினார்கள்.

அனைவரையும் அமைதிப் படுத்திய ஆழ்வார் "நான் உங்களைப் போன்றவன். உங்களைப் போன்ற மனிதன். நான் எனது சீடர்களோடு புண்ணிய ஷேத்திரங்களுக்குச் சென்று தரிசித்து விட்டு வந்தேன் என்றால் அது எம்பெருமானின் கருணை. அவனது கருணை எல்லையற்றது. அவனது கடாட்சம் எல்லையற்றது. அவனது பரிவு எல்லையற்றது. அவனே எல்லைகளைக் கடந்தவன் என்பதால் கடவுள் எனப்படுகிறான். எல்லையற்ற அவன் எங்கும் இருக்கிறான். எங்கும் இருப்பவனை ஊனக்கண்கள் காணாது என்பதால் தான் நமது முன்னோர்கள் அவனை அர்ச்சை வடிவத்தில் (சிலை வடிவத்தில்) அமைத்துக் கோயிலையும் கட்டினார்கள் நாம் எளிமையாக வழிபடுவதற்காக.

நீங்களோ என்னைப் போற்றுகிறீர்கள். வணங்குகிறீர்கள். ஊர் மக்களாகிய நீங்கள் போற்றி வணங்கவேண்டிய பெருமாளை என்ன கதியில் வைத்திருக்கிறீர்கள் என்பதைக் காணும் போது நான் வேதனையை அடைகிறேன்.

யாரோ ஒரு மன்னன் இந்தப் பெருமாளுக்குக் கோயிலைக் கட்டியிருக்கிறான். கோபுரத்தையும் மதில்களையும் கட்டியிருக் கிறான். காலமும் உங்கள் கவனமின்மையும் சேர்ந்து மூல விமானத்தைத் தவிர மற்ற கட்டுமானங்களை அழித்துவிட்டன. பாம்பணையில் வாசம் செய்யும் பெருமாள் கோயில் பாம்புகள் குடியிருக்கும் அளவிற்குக் காடாக மாற்றியிருக்கிறீர்கள். உங்களுக்கெல்லாம் படியளக்கும் பெருமாளின் கோயிலைப் புனருத்தாரணம் செய்ய நீங்கள் ஓரடிகூட எடுத்து வைக்கவில்லை. ஆலயத்தைக் கட்டுவதும் பராமரிப்பதும் மன்னர்கள் வேலை என்று நினைத்து ஒதுக்கி விட்டீர்கள். ஒதுங்கி விட்டீர்கள்.

மன்னனோடு மக்களும் சேர்ந்தால்தான் ஆலயங்களைப் பராமரிக்க முடியும். பாதுகாக்க முடியும். கோயிலுக்குள் விளக்கு எரிந்தால் தான் உங்கள் இல்லங்களில் விளக்குகள் எரியும். எம்பெருமான் நம்மை ரட்சிக்க வந்தவன். அதற்காகவே அவன் சிலா ரூபமாக ஒவ்வோர் ஊரிலும் ஆலயங்களுக்குள் உறைகிறான். அதை நீங்கள் உணர்ந்தால் உங்களுக்கு நல்ல காலம் அமையும். நீங்கள் உங்கள் வேலையை மட்டுப் கவனித்துக் கொண்டிருந்தால் இன்றைக்கு உற்சவ விக்ரகம் இல்லாமல் போனது போல் விரைவில் மூல விக்ரகமும் காணாமல் போய்விடும். ஆலயம் இருந்ததற்கான அடிச்சுவடுகளும் அகன்று போய்விடும். திருவாழ்ந்த இடம் திருவும் இன்றி உருவும் இன்றிச் சூன்யமாகப் போய் விடும். கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்றார்கள் ஆன்றோர்கள்.

அதுவே தேவலாம். ஊரில் இருக்கும் கோயிலைப் பாம்புகளின் கூடாரமாக்கிப் புறக்கணிப்பது பாவமான காரியமாகும். வீட்டிற்கு ஒருவர் என்று ஒரு நாணயம் அளித்து வந்தால் மதில்களைக் கட்டலாம். செல்வந்தர் ஒவ்வொருவரும் ஒரு நாள் செலவை விட்டுக் கொடுத்தால் கோபுரத்தைக் கட்டலாம். பெருமாளைச் சேவிக்க வரும் பக்தர்கள் ஒவ்வொருவரும் தவறாமல் தட்சிணையைப் போட்டால் நித்ய பூஜையைத் தவறாமல் செய்யலாம். அதற்கு இதுவே காலம். அதுவே உங்களுக்குப் புண்ணியம். இன்றிலிருந்து நன்கொடையைக் கொடுக்க ஆரம்பியுங்கள். எம்பெருமானின் பெயரைச் சொல்லி ஆரம்பியுங்கள். இங்கே ஆலயம் எழும்போது உங்கள் நிலையும்

உயரும்" என்று சொல்லி விட்டுச் சீடர்களிடம் இருந்த நாணயங்களையெல்லாம் கோயில் அர்ச்சகரிடம் கொடுத்தார்.

அதையடுத்து மக்களும் நன்கொடைகளைக் கொடுத்துக் குவித்தார்கள்.

ஆழ்வார் அந்த ஊரில் இருந்த மண்டபத்தில் தங்கினார்.

அவரது வரவையும் முயற்சியையும் கண்டு பூரித்துப் போன மக்கள் அவரை ஆதரித்து உபசரித்தார்கள்.

இதற்கிடையில் அவரைப் பற்றிக் கேள்விப்பட்ட தவிட்டுப் பானை மூதாட்டியும் உற்சவ விக்ரகத்தைக் கொண்டு வந்து ஆழ்வாரிடம் கொடுத்து "உரியவரிடம் கொடுத்து விட்டேன் சுவாமி. எனது நீண்ட கால வருத்தம் நீங்கியது" என்றாள்.

ஆழ்வார் அந்த உற்சவ விக்கிரகத்தை அர்ச்சகரிடம் கொடுத்து "இவருக்குத் திருமஞ்சனம் செய்து கருவறையில் எழுந்தருளச் செய்யுங்கள். கருவறைக்குப் புரோக்ஷணம் செய்யுங்கள். காலம் வரும் போது - கோயில் கட்டி முடிக்கப்படும் போது சம்ப்ரோக்ஷணம் செய்து கொள்ளலாம்" என்றார்.

மூதாட்டியோடு அங்கே வந்த சிவனருட் செல்வரான சம்பந்தர் ஆழ்வாரைப் பார்த்து "எது எது எப்போது யாரால் நடக்க வேண்டுமோ அப்படி நடக்கிறது." என்று கூறிவிட்டு "தாங்கள் ஒரு குறள் சொல்ல முடியுமா?" என்றார்.

திருமங்கையாழ்வாருக்குக் கோயிலில் தரிசித்த த்ரி விக்ரமனின் காட்சி கண்முன்னே வந்தது.

-'ஒருகுறளாய் இருநிலம் மூவடி மண்வேண்டி
உலகனைத்தும் ஈரடியால் ஒடுக்கி ஒன்றும்
தருகவெனா மாவலியைச் சிறையில் வைத்த
தாடாளன் தாளனைவீர் தக்க கீர்த்தி
அருமறையின் திறன் நான்கும் வேள்வி ஐந்தும்
அங்கங்கள வைகளாறும் இசைகளேழும்
தெருவில் மலிவிழா வளம்சிறக்கும் காழிச்
சீராம விண்ணகரே சேர்மினீ ரே'-*

சம்பந்தர் குறள் ஒன்றைப் பாடும்படிச் சொல்ல குறள் என்ற வார்த்தையைக் கொண்டே கவியைத் தொடங்கி ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு என்று எண்களை வரிசையாகப் பயன்படுத்தி ஒன்று என்பதற்கு ஒரு குறளனாய் (வாமனன்)

* சீர்காழிப் பெருமாள் கோயிலைக் 'காழிச் சீராம விண்ணகரம்' என்றுப் பெயரிட்டுப் பாடினார் திருமங்கை ஆழ்வார். பெரிய திருமொழி பாசுரம் எண் 1178.

வந்ததையும் இரண்டு என்பதற்கு இரண்டு திருவடிகளையும், மூன்று என்பதற்கு மூன்றாவது அடியை மகாபலிமீது வைத்ததற்கும், நான்கு என்பதற்கு நான்கு வேதங்களையும், ஐந்து என்பதற்கு ஐந்துவிதமான வேள்விகளையும், ஆறு என்பதற்கு வேதங்களின் ஆறு அங்கங்களையும், ஏழு என்பதற்கு ஏழு இசைகளையும்* உணர்த்தித் திறம்படப் பாசுரம் பாடிப் பெருமாளை ஆழ்வார் மங்களாசாசனம் செய்ததை மனமாறப் பாராட்டிய சம்பந்தர் -

"தாங்கள் நாலுகவி பெருமாள் என்பதில் எந்தவிதமான ஐயமும் இல்லை. சுவாமி! இது வேல். தங்கவேல். ஞான வேல். திருஞானசம்பந்தர் பெருமானுக்கு ஞானப் பாலைத் தந்து ஊட்டிய பார்வதி தேவி மனம் உவந்து வழங்கியருளிய அரிய வேல். திருஞான சம்பந்தர் பதினாறு வயதிலேயே இறைவனடி சேர்ந்தார். அவர் ஜீவித்திருந்தாலும் தங்களின் அபாரக் கவியைக் கேட்டதும் இந்த வேலை வழங்கியிருப்பார். அவரது பரம சீடனான சம்பந்தர் என்னும் குருநாதரின் திருநாமத்தையே தாங்கிய நான் இந்த வேலைக் குருநாதரின் சார்பில் அவர் திருநாமத்தில் அளிக்கிறேன். மறுக்காது பெற்றுக் கொள்ள வேண்டும்" என்றார்.

ஆழ்வாருக்கு திருஞானசம்பந்தரைப் பற்றித் தெரிந்திருந்தது. பதினாறு பிராயங்கள் மட்டுமே ஜீவித்திருந்து அந்த பாலகப் பருவத்திலேயே சிவபெருமானைப் போற்றிப்பாடும் விதமாக பல்வேறு கவிகளைப் பாடிய பெருங்கவி என்பதை அறிந்திருந்தார். அருளாளர்களை அருளாளர்கள் நன்கு அறிவர். எனவே தங்கவேல் என்ற காரணத்தால் அல்லாமல் திருஞானசம்பந்தர் தாங்கியிருந்த வேல் என்பதால் ஏற்றுக்கொண்ட ஆழ்வார் அங்கேயே சிலகாலம் தங்கியிருந்து எம்பெருமானின் மீது மேலும் பல பாசுரங்களைப் பாடியருளினார்.

ஊர் மக்களும் தனநந்தர்களும் ஆர்வத்துடன் முன் வந்து நன்கொடைகளைத் தந்து ஆலயக் கட்டுமான வேலைகளையும் தொடங்கினார்கள்.

"சுவாமி! பல்லவ மாமன்னர் நந்திவர்மரிடம் தெரிவித்தால் இந்த ஆலயத்தை உடனடியாகச் செப்பனிட்டு விடுவாரே?" என்று கேட்டார் தோலா வழக்கர்.

---

* 4 வேதங்கள் : ரிக், யஜுர், சாமம், அதர்வணம்

5 வேள்விகள் : பிரம்ம வேள்வி, தேவ வேள்வி, பூத வேள்வி பித்ரு வேள்வி, மனுஷ்ய வேள்வி

6 வேதாங்கங்கள் : சிட்சை, வியாகரணம், சந்தஸ், நிருக்தம், சோதிடம், கல்பம்

7 இசை : நிஷாதம், ரிஷபம், காந்தாரம், ஷட்ஜம், மத்யமம், தைவதம், பஞ்சமம்.

"நந்திவர்மன் தனது சக்திக்கு மீறிப் பல புதிய விண்ணகரங்களை நிர்மாணித்திருக்கிறான். அவனைப் போல இத்தகைய சிற்ப விசித்திரம் நிறைந்த ஆலயங்களை எந்த மன்னனும் தன் வாழ்நாளில் செய்து முடித்ததில்லை. நந்திவர்மனுக்கு எம்பெருமானின் அருள்பூரணமாக இருப்பதால் அவனால் இது முடிந்திருக்கிறது. அவனுக்கு மேலும் சுமையை நாம் தரக் கூடாது. அதோடு அவன் போர் முகத்தில் இருக்கிறான். இப்போது தொந்திரவு செய்யக் கூடாது" என்றார் ஆழ்வார்.

"யாருடன் போர் சுவாமி?"

"சபரன் உதயணனோடு தான்."

"அவனுக்கு ஒரு முடிவு தேவைதான் சுவாமி."

கோயில் விரைவில் உயர்வு பெற்றுவிடும் என்ற நம்பிக்கை ஏற்பட்டதும் ஆழ்வாரும் சீடர்களும் சீர்காழியை விட்டுப் புறப்பட்டு திருவெள்ளக் குளத்தை அடைந்தார்கள்.

திருவெள்ளக்குள மண்ணை மிதித்தபோது ஆழ்வாரின் உடல் சிலிர்த்தது.

★★★



கதாநாயகியும் கதாநாயகனும்

மறக்க முடியுமா?

குமுதவல்லியை மறக்க முடியுமா?

இக் கதையின் நாயகியை மறக்க முடியுமா?

அவளது பெயரை நினைத்தாலே பரவசமாக அல்லவா இருக்கிறது!

ஆழ்வாருக்கும் அப்படித்தான் இருந்தது.

குமுதவல்லி -

அவள் இல்லையென்றால் திருமங்கை மன்னன் ஏது? திருமங்கை ஆழ்வார் ஏது?

ஆழ்வாரும் அப்படித்தான் நினைத்தார்.

அவளை மறந்து விட்டோமே!

எத்தனை ஆண்டுகளாக மறந்து விட்டோம்!

இது நியாயம் தானா!

தாயே!

மகத்தானவளே!

எங்களுக்கு ஆழ்வாரைத் தந்த திருமகளே!

நீ எங்கிருக்கிறாய்?

என்ன ஆனாய்?

நெஞ்சம் பதறுகிறதே!

கண்கள் கலங்கி பார்வையை மறைக்கிறதே!

ஆழ்வாருக்கும் அப்படித்தான் இருந்தது.

வெள்ளக் குளத்தில் காலடி எடுத்து வைத்ததும் சீடர்களை நிறுத்திவிட்டுத் தாமரைப் பொய்கைக்குப் போனார்.

ஆகா! இந்தப் பொய்கையில் தானே குமுதவல்லி நீராடி விட்டு தேவதையைப் போல் வருவாள்?

அவளுக்காக நான் நாட்டை மறந்து காத்திருப்பேனே! அது எப்படிப்பட்ட நாட்கள்!

இப்போது வருமா?

எத்தனைப் பெண்கள் சித்தத்திற்கு வந்தாலும் தைத்தது இவள் மட்டும் தானே?

அவளுக்காக எதையும் செய்த நான் -

எதை எதையோ எல்லாம் செய்து முடித்தேனே!

அரங்கன் ஆலயத் திருப்பணிகளுக்காக நான் பெருமை பட்டுக் கொள்ள முடியுமா?

அந்தப் பெருமை குமுதவல்லிக்கல்லவா உரியது!

அவளுக்கு மட்டுமல்லவா அப்பெருமை சேர வேண்டும்?

அவள் என்னை அசைத்திராவிட்டால் நான் எங்கிருப்பேன்? எப்படி இருப்பேன்?

குளக்கரையில் இருந்த என்னை அரங்கனிடம் சேர்த்தவள் அவள் தானே?

எதையும் அவள் தனக்காகச் செய்யவில்லை.

தனக்காகச் செய்வது போல் -

எல்லாவற்றையும் எனக்காகச் செய்தாள்.

அரங்கனின் அருள்நிழலில் என்னைத் தள்ளிவிட்டு அவள் தனித்து நின்றுவிட்டாள்.

ஆண்டுகள் பலப்பல கழிந்துவிட்டன.

ஆலயங்கள் பலப்பல பார்த்தாகி விட்டது.

பாசுரங்கள் பலபல பாடிவிட்டேன்.

ஆசுகவி நாலுகவி என்றாகி விட்டேன்.

ஆனால் குமுதவல்லி!

அவள் என்ன ஆனாள்?

இங்கே தானே இருப்பாள்? போய்ப் பார்க்கலாமா?

வேண்டாம் என்று எதுவோ தடுத்தது.

சீடர்களை வரச்சொல்லி அண்ணன் கோயிலுக்குச் சென்றார்.

அங்கே -

ஆலய மண்டபத்தில் ஒரு சிலை.

சிலையல்ல. சிலையல்ல.

குமுதவல்லி. அவளே தான்.

ஆனால் அவளது கோலம் தவக்கோலமாய் இருந்தது. முகத்தில் தேஜஸ் பிரகாசித்தது. கண்கள் மூடியிருந்தன. உடலில் அசைவில்லை. அவள் இந்த மண்டபத்தில் இருந்தாள். ஆனால் இல்லை.

"யாரும் சப்தம் செய்யாதீர்கள்" என்று சைகை செய்தார் ஆழ்வார்.

சப்தம் செய்தால் கூட அவளது தவம் கலையாது. அவள் இந்த உலகில் நின்றால் தானே!

நின்ற திருக்கோலத்தில் இருந்த பெருமாளைச் சேவித்தார்.

அவரை அடையாளம் தெரிந்து கொண்ட அர்ச்சகர் "தாங்களா? தாங்களே தானா?" என்று கேட்டுவிட்டு அர்ச்சனையைச் செய்து பிரசாதத்தைக் கொடுத்தார்.

கருவறையை விட்டு வெளியே வந்த ஆழ்வார் அர்ச்சகரிடம் விசாரித்தார்.

"சுவாமி! தாங்கள் தல யாத்திரைக்குப் புறப்பட்டதிலிருந்து அவர் தவ நிலையை மேற்கொண்டு விட்டார். காலை நேரங்களில் இங்கே வந்து தவநிலையில் அமர்வார். உலக நினைப்பு இல்லாமல் இருப்பார். நண்பகலில் மங்கை மடத்திற்குச் செல்வார். அங்கே நடக்கும் அன்னதானத்தில் கடைசி நபராக அமர்ந்து ஒரு கவளம் மட்டுமே உண்பார். பிறகு திருவாலி கோயிலுக்குச் சென்று தவநிலையை மேற்கொள்வார். இரவு இல்லத்திற்குச் செல்வார். பொழுது விடிந்ததுமே இங்கு வந்துவிடுவார். அதாவது காலையில் இங்கே மாலையில் அங்கே. இரண்டு இடங்களிலும் தவம் தவம் தான். யாரிடமும் பேசுவதில்லை. பலரும் அவரை வணங்குவதுண்டு குமுதவல்லி நாச்சியார் பதிவிரதை. பக்தி யோகி. அவளது சித்தத்தில் பெருமானைத் தவிர யாரும் இல்லை என்று கருதவேண்டும்" என்றார் அர்ச்சகர்.

"அர்ச்சகரே! நாங்கள் புறப்படுகிறோம். குமுதவல்லி கண் விழித்தால் நாங்கள் இங்கே வந்து போனதைப் பற்றி எதுவும் கூற வேண்டாம்" என்றார் ஆழ்வார்.

"கூறினால் கூட அவரது சித்தத்தில் ஏறுமா என்று தெரியவில்லை. தீர்த்தப் பிரசாதம் வழங்கும்போது நான் ஓரிரு வார்த்தைகள் கூறுவதுண்டு. காதில் வாங்காதது போல் சென்று விடுவார். ஒரு வார்த்தையும் கூறுவதில்லை."

"அவளது தாய் தந்தையர் இருக்கிறார்களா?"

"அவர்கள் திருநாடு அலங்கரித்து விட்டார்கள் சுவாமி."

மேற்கொண்டு எதுவும் பேசாமல் ஆலயத்தின் குளக் கரையில் அமர்ந்தார் ஆழ்வார்.

அவரது மனம் ஏனோ கலக்கமாக இருந்தது. அது குமுத வல்லியைப் பற்றியதாகவும் இருக்கலாம்.

பாசாரம் பாடினார்.

-'கண்ணார் கடல் போல் திருமேனி கரியாய்
நண்ணார் முனைவென்றி கொள்வார் மன்னு நாங்கூர்
திண்ணார் மதிள்சூழ் திருவெள்ளக் குளத்துள்
அண்ணா! அடியேன் இடரைக் களையாயே'-*

பிறகு அங்கிருந்து சீடர்களுடன் புறப்பட்டு தான் ஆட்சி செய்த ஆலி நாட்டிற்குச் சென்றார். அந்த ஊர் பெருமாள் கோயிலுக்குச் சென்று மங்களாசாசனம் செய்தார். ஆலி நாடு தற்போது பல்லவ மன்னனின் நேரடி ஆதிக்கத்திற்கு வந்து விட்டதை அறிந்தார். ஆட்சி மாறினாலும் மக்கள் அப்படியே இருந்தார்கள். அவரை அன்போடு விசாரித்தார்கள். சோழ நாட்டில் பெருமாள் திருப்பதிகள் நிறைய இருந்ததால் அவை எல்லாவற்றும் விஜயம் செய்து தரிசனம் செய்து பாசுரம் பாடிச் சிறப்பித்தார். செல்லுமிடமெல்லாம் பலர் அவருக்குக் காணிக்கைகளைக் கொடுத்தார்கள். அவற்றை ஆங்காங்கே சிதிலமான ஆலயங்களுக்குத் திருப்பணி செய்வதற்காகக் கொடுத்துவிட்டு ஒரு பகுதியை மட்டும் சீடர் சாயைப்பிடிப்பானிடம் கொடுத்து பத்திரமாக வைத்துக் கொள்ளும் படிச் சொன்னார். திருநறையூருக்குச் சென்ற போது எம்பெருமான் திருநறையூர் நம்பி மீது அவருக்கு பக்தியும் பிரேமையும் உண்டாயின. நூற்றுக்கும் மேற்பட்ட பாசுரங்களைப் பாடிப் பரவசப்பட்டார். ஒரு மாதகாலம் அங்கே தங்கியிருந்து குடந்தைக்கு வந்து ஆராஅமுதன் என்னும் சாரங்கபாணி சுவாமி ஆலயத்திற்கு விஜயம் செய்தார்.

அங்கே எம்பெருமான் வித்தியாசமான சயன கோலத்தில் இருப்பதைக் கண்டு தங்கள் சீடர்களைப் பார்த்து "எம்பெமானை நன்றாகக் கவனியுங்கள். பெருமாள் நன்றாக சயனித்த நிலையில் இல்லை. சயன கோலத்திலிருந்து சற்றே எழுந்தவர் போல் இருக்கிறார். ஏன் தெரியுமா? சொல்கிறேன். கேளுங்கள்" என்று சொல்லிவிட்டுத் தொடர்ந்தார்.

திருமழிசை பிரான்* வைரநெஞ்சம் கொண்ட மகா ஞானி. வைஷ்ணவர் என்றால் அவர்தான் வைஷ்ணவர். பிறமதங்களைப் புறந்தள்ளும் துணிச்சல் அவருக்குப் பூரணமாக இருந்தது. வைஷ்ணவர்களை மறந்தும் புறந்தொழா மாந்தர் என்று சிறப்பித்துச் சொன்னவர். அவரிங்கே விஜயம் செய்த போது எம்பெருமான் சயனகோலத்தில் நிம்மதியாகப் பள்ளி கொண்டிருந்தார். திருமழிசையாருக்கு எம்பெருமானின் மீது பக்தி மட்டுமல்ல. உரிமையும் கூட இருந்தது. நடந்து நடந்து உனது கால்கள் நொந்து போனதோ? வராகரூபம் கொண்டு பூமியைக் குத்தி எடுத்துக் கொணர்ந்ததால் களைப்பு வந்துவிட்டதோ? அரியபெரிய மலைகளையும் பாலைவனங்களையும் கடந்து வந்து அசதியுற்றதால் குடந்தையில் வந்து சயனித்து விட்டாயோ? எழுந்து பேசு கேசவனே என்றார்.

–'நடந்தகால்கள் நொந்ததோ நடுங்கு ஞால மேனமாய
கிடந்மெய் குலுங்கவோ விலங்குமால் வரைச்சுரம்
கடந்தகால் பரப்பிக் காவிரிக் கரைக் குடந்தையுள்
கிடந்தவா றெழுந்திருந்து பேசுவாழி கேசவனே'–**

திருமழிசை பிரான் இவ்வாறு பாடியதும் எம்பெருமான் சற்றே எழ முற்பட்டார். அதைக் கண்டு அதிர்ந்தார். ஆனந்தித்தார் திருமழிசை பிரான். "கேசவா! நீ. வாழி. என்பொருட்டு எழ வேண்டாம் என்றார். ஆராவமுதனான எம்பெருமான் சயனத்திலிருந்து சற்றெழுந்த நிலையிலேயே இருந்து விட்டார். அந்தத் திருக்கோலத்தைத் தான் இப்போது நாம் சேவிக்கிறோம். இங்கே எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் கர்ப்பக்கிருகம் சித்திரத் தேர்வடிவில் இருக்கிறது. எவ்வளவு நுணுக்கம்! எவ்வளவு அழகு! எம்பெருமான் தேரில் அமர்ந்து நகர்உலா வந்தால் எவ்வளவு சிறப்பாக இருக்கும்! சாயைப் பிடிப்பான்! நமக்கு வந்த காணிக்கையில் ஒரு பகுதியைப் பாதுகாப்பாக வைத்திருக்கச் சொன்னேன் அல்லவா! அதை மரச் சிற்பிகளிடம் கொடுத்துச் சித்திரத்தேர் ஒன்றைச் செய்யச் சொல்" என்றார்.


---

* திருமழிசை ஆழ்வார்.

** திருமழிசையாழ்வாரின் திருச்சந்த விருத்தம். பாசுரம் எண் 812.

*பெருமானின் மீது பல பாசுரங்களைப் பாடினார். அவருக்குத் திருப்தியாக இல்லை. சித்திரக் கவி பாட விரும்பினார். அமையப் போகும் சித்திரத் தேர் வடிவிலேயே பாசுர வரிகளை அமைத்தார்.**

ஒருபேர் உந்தி இரு மலர்த் தவிசில்
ஒருமுறை அயனை ஈன்றனை; ஒருமுறை
இருசுடர் மீதினில் இயங்கா மும்மதில்
இலங்கை இருகால் வளைய ஒருசிலை
ஒன்றிய ஈர்எயிற்று அழல்வாய் வாளியில்
அட்டனை; மூவடி நானிலம் வேண்டி
முப்புரி நூலொடு மான் உரி இலங்கும்
மார்வினில் இருபிறப்பு ஒருமாண் ஆகி
ஒரு முறை ஈரடி மூவுலகு அளந்தனை:
நால் திசை நடுங்க அஞ்சிறைப் பறவை
ஏறி, நால்வாய் மும்மதத்து இருசெவி
ஒருதனி வேழத்து அரந்தையை ஒருநாள்
இருநீர் மடுவுள் கீர்த்தனை; முத்தீ
நான்மறை, ஐவகை வேள்வி அறுதொழில்
அந்தணர் வணங்கும் தன்மையை ஐம்புலன்
அகத்தினுள் செறுத்து, நான்கு உடன் அடக்கி
முக்குணத்து இரண்டு அவை அகற்றி ஒன்றினில்
ஒன்றி நின்று ஆங்கு இருபிறப்பு அறுப்போர்
அறியும் தன்மையை! முக்கண், நால் தோள்
ஐவாய் அரவொடு ஆறுபொதி சடையோன்
அறிவுதரும் தன்மைப் பெருமையுள் நின்றனை;
ஏழ் உலகு எயிற்றினில் கொண்டனை; கூறிய
அறுசுவைப் பயனும் ஆயினை; சுடர்விடும்
ஐம்படை அங்கையுள் அமர்ந்தனை; சுந்தர
நால்தோள் முந்நீர் வண்ண! நின் ஈரடி
ஒன்றிய மனத்தால் ஒருமதி முகத்து
மங்கையர் இருவரும் மலர் அன அங்கையில்
முப்பொழுதும் வருட, அறிதுயில் அமர்ந்தனை;
நெறிமுறை நால்வகை வருணமும் ஆயின;
மேதகு ஐம்பெரும் பூதமும் நீயே!
அறுபதம் முரலும் கூந்தல் காரணம்
ஏழ்விடை அடங்கச் செற்றனை;
அறுவகைச் சமயமும் அறிவு அருநிலையினை



ஐம்பால் ஓதியை ஆகத்து இருத்தினை;
அறம் முதல் நான்கு அவை ஆய்,
மூர்த்தி மூன்று ஆய் இருவகைப் பயன் ஆய்,
ஒன்று ஆய் விரிந்து நின்றனை;*

★

நெல்வேலி மன்னன் தன் அரண்மனையில் இருந்த ரகசிய நிலவறைக்குச் சென்றான். அங்கே பத்து வீரர்களும் பதினைந்து வேட்டை நாய்களும் இருந்தன. மன்னனைக் கண்டதும் வீரர்கள் வணங்கினார்கள். வேட்டை நாய்கள் மண்டியிட்டன.

அவர்கள் வழிவிட்டு நிற்க, உள்ளே சென்ற மன்னன் உதயணன் உன் அறையில் வைக்கப்பட்டிருந்த தோரண வாயிலைக் கண்டான். அது ஆறு அடி உயரம் இருந்தது. நான்கடி அகலம் இருந்தது. சீன தேசத்துக் கண்ணாடிகளாலும், சேரநாட்டுத் தந்தங்களாலும், பழனிமலை மயில் தோகைகளாலும் செய்யப்பட்ட அந்த நகரும் தோரண வாயிலைக் கண்டான். யாரோ ஒரு முனிவர் கூறியதை வைத்து வடிவமைக்கப்பட்டத் தோரண வாயில் அது. முனிவரே நேரில் வந்து அதை அங்கீகரித்து ஆசிர்வதித்தார்.

"உதயணா! இந்தத் தோரணவாயில் சபரர்களின் கௌரவச் சின்னமாகத் திகழும். இதைப் பாதுகாக்க வேண்டியது உன் கடமை. எதிரிகள் உன்னை வென்றாலும் அது வெற்றி யாகாது. இந்தத் தோரண வாயிலைக் கைப்பற்றினால் தான் வெற்றியாகும். இதை எல்லா மன்னர்களுக்கும் தெரிவித்து விடு. ஒருவேளை நீ போரில் மரணமடைய நேர்ந்தால் எதிரிகள் வருவதற்கு முன் இதை அழிக்கச் சொல்லிவிடு. இது இருக்கும் வரைச் சபரர்களுக்குத் தோல்வி என்பதே இல்லை" என்று சொல்லவும் செய்தார்.

பத்து ஆண்டுகளுக்கு முன் ஐந்தாயிரம் பொன்னுக்குச் செய்யப்பட்டது அத்தோரணவாயில். கட்டி முடித்ததும் முனிவர் அதற்குள் நுழைந்தார். மன்னன் அதற்குப் பிறகு நுழைந்தான். அதற்குப் பிறகு யாரும் நுழையவில்லை. தோரண வாயிலைப் பார்வையிட்ட மன்னனுக்குப் பழைய நினைவுகள் நிழலாடின.

வீரர்களைப் பார்த்து "இந்தத் தோரணவாயிலை உங்களால் பாதுகாக்க முடியுமா?" என்று வினவினான்.

---

* இந்தச் சித்திரக் கவியானது மிகவும் அரியவகைக் கவியாகும். அக்காலக் கட்டத்தில் திருமங்கை ஆழ்வாரும் திருஞான சம்பந்தரும் தான் இச்சித்திரக் கவியைப் படைத்தனர். இந்தக் கவியை ரத வடிவத்தில் அமைக்கலாம் என்பதைப் பட விளக்கம் மூலம் காணலாம். சித்திரக் கவிகள் பற்பல வடிவங்களில் உண்டு. இது ரத வடிவத்தில் அமைந்ததால் ரதபந்தம் என்று அழைக்கப்பட்டது.

"பத்து ஆண்டுகளாகப் பாதுகாத்து வருகிறோம் மன்னவா" என்றார்கள் காவல் வீரர்கள்.

"பதினோறாம் ஆண்டிலும் பாதுகாப்பீர்களா?" என்று கேட்டான் மன்னன்.

"பதினோரு யுகங்களானாலும் பாதுகாப்போம் மன்னவா" என்றார்கள் வீரர்கள்.

"வெறும் வாய்ப்பந்தல். உங்களை நம்பிப் பயனில்லை" என்று கூறிவிட்டு வெளியேறினான் மன்னன்.

வெளியே காத்திருந்தான் ஒருவன்.

"சங்கா! நீ எப்போது வந்தாய்?" என்று கேட்டான் மன்னன்.

"இன்றைக்குத்தான் வந்தேன் மன்னவா" என்றான் சங்கன்.

"இவ்வளவு நாட்களாக எங்கே இருந்தாய்?"

"குடுமியான் மலையில்."

"குடுமியான் நலமாக இருக்கிறாரா?"

"இறைவன் என்றும் போல் நலமாக இருக்கிறார்."

"சங்கா! நாம் நலமாக இல்லை."

"நம் நலம் நம் வினையில் இருக்கிறது மன்னவா."

"தத்துவம் பேச உன்னை அழைக்கவில்லை சங்கா. அப்படி ஏதாவது அபிப்ராயம் இருந்தால் குடுமியான் மலைக்கே போய்விடு."

"எந்தப் பணிக்காக அழைத்தீர்களோ அதைச் செய்து முடிக்காமல் போக மாட்டேன் மன்னவா."

"இதைத் தான் நான் எதிர்பார்த்தேன். நாளைக்கு நகரத்தார் மாளிகைக்கு வா. வருவதற்கு முன் கோட்டையைப் பார்வை யிட்டு வா."

"அப்படியே ஆகட்டும் மன்னவா"

சங்கனை அனுப்பிவிட்டு நெல்வேலியின் தெற்குக் கோடியில் இருந்த சங்கு தீர்த்தம் என்ற தடாகத்திற்குச் சென்றான் மன்னன்.

அங்கே இருந்த குடிலைத் திறந்தான்.

★★★



முனிவர் - சங்கன்

குடிலுக்குள் யாரும் இல்லாததால் உதயணன் வெளியே வந்தான்.

அங்கே முனிவர் ஈரம் சொட்டச் சொட்ட நின்றிருந்தார்.

"முனிவரே! தாங்கள் இதுவரை எங்கே இருந்தீர்கள்?" என்று கேட்டான் உதயணன்.

"நீருக்குள் இருந்தேன்."

"நீருக்குள்ளா? எப்படி?"

"அது சொன்னால் புரியாது. அனுபவத்திலேயே விளங்கும்."

"என்ன அனுபவம்?"

"சுருங்கச் சொன்னால் ஞான அனுபவம்."

"ஞானிகளால் மூச்சடைக்க முடியும். சரீரம் விட்டு வேறு சரீரத்திற்குப் போக முடியும். சமாதி நிலையில் நீண்ட காலம் இருக்க முடியும். உடல் போனாலும் ஆத்ம சொரூபமாக வாழ முடியும். அப்படித் தானே முனிவரே?"

"ஆம். ஆம். உனக்குத் தெரியாதா?"

"முனிவரே! வந்தனம்."

"அது உனக்குள் எப்போதும் இருக்கிறது. இரு. துடைத்துக் கொண்டு வருகிறேன்" என்று கூறிவிட்டு குடிலுக்குள் சென்ற முனிவர் உலர்ந்த ஆடையை அணிந்து வந்தார்.

"தங்கள் அணிகலன் காவியுடை மட்டும் தானா?" என்று கேட்டான் உதயணன்.

"அது கூட மற்றவர்களுக்காகத் தான். எனக்கு வேண்டிய தில்லை" என்று கூறிய முனிவர் தடாகக் கரையில் அமர்ந்தார். அவனையும் அமரச் சொன்னார்.

கீழே அமர்ந்த உதயணன் "போர் வந்து விட்டது முனிவரே" என்றான்.

"பத்து வருடங்கள் கழித்து நீ இங்கே வந்திருப்பதிலிருந்தே அது தெரிகிறது" என்றார் முனிவர்.

"போர் குறித்துப் பெருமாள் பட்டரிடம் ஆலோசனை கேட்டேன். தோரண வாயிலின் பாதுகாப்பை பலப்படுத்து என்று கவலையுடன் சொன்னார்."

"அதன் அர்த்தம் உனக்குப் புரியவில்லையா?"

"புரிந்தது முனிவரே. பட்டர் கவலைப்படுகிறார் என்றால் அது சரியாகத்தான் இருக்கும்."

"அவர் கவலைப்படுவது இருக்கட்டும். நீ எதற்காகக் கவலைப்படுகிறாய்?"

"எனக்கு உதவக் கூடியவர்கள் பட்டராகவும் முனிவராகவும் இருக்கிறார்கள். உதவாக்கரைகள் சேனாதிபதிகளாக இருக்கிறார்கள்."

"சேனாதிபதி யார்?"

"மன்மதன். அவன் மன்மதக் கலையில் மகத்தானவனாக இருக்கிறான். போர்க்கலையில் இல்லை."

"எதை வைத்துக் கொண்டு அப்படிச் சொல்கிறாய்?"

"எதைச் சொல்வது எப்படிச் சொல்வது என்பது விளங்கவில்லை முனிவரே. அவன்மீது எனக்கு நம்பிக்கை இல்லை."

"போரை அவன் மட்டுமா நடத்தப் போகிறான்? நீயும் தானே?"

பெருமூச்செறிந்தான் உதயணன்.

"என்ன விஷயமாக என்னிடம் வந்தாய்? அதைச் சொல்லலாமே!" என்றார் முனிவர்.

"தோரணவாயில் பத்து வீரர்கள் மற்றும் பதினைந்து வேட்டைநாய்களின் பாதுகாப்பில் உள்ளது. எனக்கு அவர்கள் மீது நம்பிக்கை இல்லை."

"அனைவர் மீதும் நம்பிக்கை இல்லை என்றால் எப்படி? சிலரையாவது நம்பித்தானே ஆக வேண்டும்?"

"நான் தங்களை நம்புகிறேன் முனிவரே. பூரணமாக நம்புகிறேன்."

"அது தெரிந்த விஷயம் தான்."

"நீங்கள்தான் தோரண வாயிலைப் பாதுகாக்க வேண்டும்."

"மன்னா! முனிவர்களுக்கென்று சில நியமங்கள் உண்டு. தோரண வாயிலைப் பாதுகாப்பது அதில் ஒன்று அல்ல."

"பாதுகாக்க முடியாது என்கிறீர்களா?"

"அந்த வேலை முனிவரது வேலை அல்ல என்கிறேன்."

உதயணன் சற்றே அசதி அடைந்தான்.

"முனிவரே! அந்தத் தோரண வாயிலை அமைக்கச் சொன்னது நீங்கள். அது முனிவரின் நியமங்களில் ஒன்றா?"

"முனிவன் வழிகாட்டுவான். அவனே வழியாக இருக்க முடியாது. பரிசைத் தருபவனே அதைப் பாதுகாப்பவனாக வரமுடியாது. தோரணவாயிலைப் பாதுகாக்க வேண்டியது மன்னனான உன் கடமை."

"தோரணவாயில் மீது உங்களுக்கு மரியாதை இல்லையா?"

"எனக்கென்ன இருக்கிறது? எல்லாம் உனக்குத்தான். உனக்குத்தான் அது கௌரவச் சின்னம்."

"மன்னனுக்கு உதவுவது மக்கள் கடமையில்லையா? தாங்கள் மக்களில் ஒருவர் இல்லையா?"

"மக்களில் ஒருவன் தான். ஆனால் மக்களோடு வாழவில்லை. மக்களுக்குச் சந்தோஷங்களைச் சொல்கிறேன். ஆனால் அந்த சந்தோஷத்தை நான் அனுபவிப்பதில்லை. நான் துறந்து வாழ்கிறவன்."

உதயணன் சிறிது நேரம் மௌனமாக இருந்தான்.

பிறகு கேட்டான்.

"புராண இதிகாசங்களில் நாடாளும் மன்னர்களுக்கு முனிவர்கள் உதவியிருக்கிறார்களே?"

"முனிவர்களின் வாழ்க்கையை மற்றவர்கள் நிர்ணயிக்கக் கூடாது மன்னா. ஒவ்வொரு முனிவருக்கும் ஒவ்வொரு வாழ்க்கை. அதை அவர்கள் நிர்ணயித்துக் கொள்கிறார்கள். அதில் தலையிடும் உரிமை மன்னர்களுக்குக் கூட கிடையாது."

வறட்சியாகச் சிரித்த மன்னன் "தவிப்பதற்கு உதவாத முனிவர்களை வரலாறு தூற்றாதா?" என்று கேட்டான்.

"தூற்றாது. அதர்மிகளுக்கு உதவும் முனிவர்களையே தூற்றும்."

"எல்லோரும் இப்படித்தான் பேசுகிறீர்கள். கோபுரத்தில் இருக்கும் செடியைத் தான் கவனிக்கிறீர்களே தவிர கோபுரத்தைக் கவனிப்பதில்லை."

"கோபுரத்தில் முளைக்கும் செடியால கோபுரத்திற்கு ஆபத்து என்பதால் தான் செடியைக் கவனிக்கிறார்கள். சுட்டிக் காட்டுகிறார்கள்."

"முனிவரே! எனக்கு யார்மீது நம்பிக்கை யில்லாது போனாலும் என் வீரத்தின்மீது நம்பிக்கை இருக்கிறது. எதிரிகளை வெல்வேன்."

"பாண்டவர்கள் குருசேத்திரத்தில் வென்றது அவர்களது வீரத்தால் அல்ல. தர்மத்தால்."

."போரில் அவர்கள் கையாண்ட அதர்மங்கள் எனக்குத் தெரியாதா?" என்று முணுமுணுத்துக் கொண்ட மன்னன் "நன்றி முனிவரே! வெற்றி மாலையுடன் உங்களைச் சந்திக்கிறேன்" என்று கூறிவிட்டு அகன்றான்.

மறுநாள் சங்கன் வந்து மன்னனை அரண்மனையில் சந்தித்தான்.

"சங்கா! நீ இவ்வளவு நாட்களாக குடுமியான் மலையில் இருந்தாயே, அந்தப் பெயர் எப்படி வந்தது?" என்று கேட்டான் மன்னன்.

போர் விஷயத்தைப் பற்றிப் பேசவேண்டிய மன்னர் எதற்கு உப்புசப்பில்லாத விஷயத்தைப் பற்றிக் கேட்கிறார் என்று குழம்பிய சங்கன் ஏன் எதற்கு என்று கேட்டால் மன்னன் தலையை வாங்கத் தயங்க மாட்டார் என்பது தெரிந்திருந்த காரணத்தால் பதில் கூறமுற்பட்டு "மன்னவா! அந்த ஊரில் உள்ள ஒரு மலைச் சிகரத்தில் சிவபெருமான் கோயிலுள்ளது. சிகரத்தில் உள்ள சிவபெருமான் ஆதலால் குடுமியான் என்ற பெயர் அவருக்கும் குடுமியான் மலை என்ற பெயர் அந்த ஊருக்கும் வந்தது" என்றான்.

"நீ அந்த மலைக்குப் போயிருக்கிறாயா? சுவாமி தரிசனம் செய்திருக்கிறாயா?" என்று கேட்டான் மன்னன்.

"செய்திருக்கிறேன் மன்னவா?"

"அங்குள்ள சிவலிங்கத்திற்குக் குடுமி இருப்பதைக் கண்டாயா?"

"குடுமியா? இல்லை வேந்தே."

"நீ தரிசனம் செய்த லட்சணம் இதுதான். லிங்கத்திற்குக் குடுமி இருக்கிறது. குடுமி எப்படி வந்தது தெரியுமா?"

"தெரியாது."

"அக்கோயிலின் அர்ச்சகர் மன்னனின் வருகைக்காகக் காத்திருந்தார். மன்னர் வரவில்லை. மாறாக அவரது ஆசைநாயகி வந்தாள். லிங்கத்திற்குச் சூட்டியிருந்த மாலையை எடுத்து ஆசைநாயகிக்குப் போட்டார். அந்த நேரத்தில் மன்னர் வந்து

கொண்டிருக்கவே அர்ச்சகர் ஆசைநாயகிக்குப் போட்ட மாலையை அவசரம் அவசரமாக எடுத்துச் சிவலிங்கத்திற்கு அணிவித்தார். மன்னன் வந்ததும் பூஜைகளைச் செய்து அந்த மாலையை எடுத்து மன்னனின் கழுத்தில் போட்டார். இல்லம் திரும்பிய மன்னனுக்கு மாலையில் நீண்ட தலைமுடி இருப்பது தற்செயலாகத் தெரிந்தது. மறுநாள் அர்ச்சகரை அழைத்து மாலையில் நீண்ட தலைமுடி எப்படி வந்தது என்று வினவினார். தடுமாறிப் போன அர்ச்சகர் லிங்கத்திற்குக் குடுமி இருக்கிறது மகாராஜா. அந்த முடியாகத்தான் இருக்கும் என்றார். மன்னன் நம்பவில்லை. நேரில் பார்க்க வேண்டும் என்றான். மலைக் கோயிலுக்கு வந்து லிங்கத்தைப் பார்த்தான். லிங்கத்திற்கு உண்மையாகவே குடுமி இருந்தது. அர்ச்சகர் பொய்தான் சொன்னார். ஆனால் அவர் தன் பரமபக்தர் என்பதால் குடுமியை வரவழைத்துக் கொண்டான் பெருமான். அதை அறிவிக்கும் விதமாகத்தான் அந்த லிங்கத்திற்கு முடிச்சுப் போட்ட குடுமி போன்ற அமைப்பு உள்ளது. அதனாலேயே அப்பெருமானுக்குக் குடுமியான் என்றும் அந்த மலைப் பகுதிக்குக் குடுமியான் மலை என்றும் பெயர் வந்தது."*

இவ்வாறு சொல்லிவிட்டுச் சற்றே மௌனமாக இருந்த மன்னன் "சாதாரணமான விஷயம் இது. நீ சிலகாலமாக அங்கே இருந்திருக்கிறாய். ஆனாலும் இந்த விஷயம் உனக்குத் தெரியவில்லை. உனது கவனம் மிகச்சரியாக இருந்திருந்தால் சிவலிங்கத்திற்கு இருந்த குடுமியைப் பார்த்திருப்பாய். எங்கேயும் இல்லாத குடுமி இவருக்கு மட்டும் எப்படி வந்தது என்று கேட்டிருப்பாய். நான் கேட்டபோது சொல்லியிருப்பாய். இப்படிச் சாதாரண விஷயத்திலேயே உன் கவனம் சரியில்லை என்றால் போர் விஷயத்தில் எப்படி இருக்கும்? கோட்டை விஷயமாகப் பார்த்துவிட்டு வரச் சொன்னேனே! என்ன பார்த்தாய்? கோட்டை இருக்கிறது. மதில்கள் இருக்கின்றன. அதன்மீது எண்ணெய் கொப்பரைகளும் விற்கூடங்களும் இருக்கின்றன என்றுதானே சொல்லப் போகிறாய்?" என்றான்.

அசந்து போனான் சங்கன்.

எங்கேயோ ஆரம்பித்த பேச்சை சரியான விஷயத்தோடு இணைத்து வகையாகத் திணறடித்து விட்ட மன்னனை எண்ணி வியந்த சங்கன் "தங்கள் திறமையை எண்ணிப் பரவசமடைகிறேன் மன்னவா! தங்கள் பேச்சு சாமர்த்தியத்தை எண்ணி வியக்கிறேன் மன்னவா! தாங்கள் விஷயங்களை அணுகும் முறையை எண்ணி

---

* பக்கம் 207 "புதுக்கோட்டை மாவட்ட வரலாறு" By. ஜெ. ராஜாமுகமது.

அசந்து போகிறேன் மன்னவா. தங்களிடம் பணிபுரிவது எனக்குப் பெருமையாக இருக்கிறது மன்னவா" என்றான்.

"புகழ்ச் சொற்களைக் கூறிப் புதைத்து விடாதே சங்கா. பாராட்டிக் கொள்ளும் காலகட்டத்தில் நாம் இல்லை. அபாயமான நிலைமையில் இருக்கிறோம். அதைவிடு. மதில்புறங் களையெல்லாம் பார்த்தாய் அல்லவா? அங்கே போர்த்தளபதி மன்மதன் இருந்தானா?" என்று கேட்டான் மன்னன்.

"பார்த்தேன் மன்னவா. வீரர்களிடமும் விசாரித்தேன். போர்த்தளபதி இல்லத்திற்குச் செல்வதில்லையாம். இரவும் பகலும் கோட்டைப் பகுதியிலேயே இருக்கிறாராம். வீரர்களோடு சேர்ந்து உண்ணுகிறாராம். ஆலோசனை செய்தபடி இருக்கிறாராம்" என்றான் சங்கன்.

"மன்மதனின் அர்ப்பணிப்பு அல்லவா இது?" என்று வினவினான் மன்னன்.

"எனக்கப்படித் தெரியவில்லை அல்லவா?"

"ஏன்?"

"போர்த்தளபதியானவர் இரவும் பகலுமாக அங்கேயே இருக்க வேண்டியதில்லை. அவ்வப்போது வந்து கண்காணித்தால் போதும். எதிரிப்படைகள் இன்னமும் வராத நிலையில் அவர் அங்கே இருந்து கொண்டு செய்யப் போவது ஒன்றுமில்லை. கோட்டைக்குள் இருக்கும் சூழ்நிலையை ஆராய வேண்டும். கோட்டைக்குள் இருக்கும் படை எண்ணிக்கை பற்றியும் மக்கள் எண்ணிக்கை பற்றியும் கவனிக்க வேண்டும். கோட்டைக்குள் மக்கள் எண்ணிக்கை அதிகமாக இருந்தால் அவர்களைத் தற்காலிகமாக அகற்றத் தங்களிடம் யோசனை கேட்க வேண்டும். மக்களிடம் போர் குறித்துப் பேசி அவர்களது அபிப்ராயங்களை அறிய வேண்டும். அவர்களிடம் தவறான எண்ணங்கள் இருந்தால் அகற்ற வேண்டும். கோட்டைக்குள் இருக்கும் நீர்நிலைகளைப் பாதுகாக்க வேண்டும். உணவுப் பண்டாரத்தின் பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டும். அவற்றின் திருப்திகரமான நிலைகளைச் சொல்லி மக்களுக்கு நம்பிக்கையை உண்டாக்க வேண்டும். இல்லையென்றால் மக்கள் நமக்கு எதிராகப் புரட்சி செய்ய முற்படலாம். அது சிக்கலாகிவிடும்."

"இதைத்தான் உன்னிடம் எதிர்பார்த்தேன். குடுமியான் மலையைப் பற்றித் தெரிந்துகொள்ளவில்லை என்றாலும் போர் நிலையைப் பற்றி நன்றாகவே அறிந்திருக்கிறாய். உன்னை அழைத்தது வீண் போகவில்லை. சங்கா! உனக்குப் பதவி என்று

எதுவும் தரப் போவதில்லை. நீதான் சேனாதிபதி. நீ தான் போர்த்தளபதி. நீதான் கோட்டைத் தலைவன். நீதான் அமைச்சன். நீதான் ஆலோசகன். மன்னன் பதவியை மட்டும் என்னோடு விட்டு விடு" என்று கூறிச் சிரித்தான் மன்னன்.

சொல்லிவிட்டுத் தன் கையில் இருந்த மோதிரத்தைக் கழற்றி "இது முத்திரை மோதிரம். இதை அணிந்து நீ எங்கேயும் செல்லலாம். என்ன கேள்வி வேண்டுமானாலும் கேட்கலாம். இந்த மோதிரம் எல்லோரையும் பணிய வைக்கும். மன்மதன் உட்பட." என்று சொல்லி மோதிரத்தைக் கொடுத்த மன்னன் "கோட்டை ஏற்பாடுகளில் உனக்கு ஏதாவது குறை தென்படுகிறதா?" என்று கேட்டான்.

"ஆம் மன்னவா. கோட்டையைச் சுற்றி நாற்புரங்களிலும் இரும்புத் தடுப்புகளைப் போட்டிருக்கிறார்கள். போரில்லாத காலங்களில் அவை பயன்படலாம். போர் நடக்கும்போது பயன்படாது. போரின்போது நடப்புகள் சூழ்நிலைக்கேற்ப மாறலாம். நம் படைகள் வெளியேறித் தாக்க வேண்டிய நிலைமை வரலாம். அப்போது இந்தத் தடுப்புகள் நமக்கு இடைஞ்சலாக இருக்கும். மதில்மீது எண்ணைக் கொப்பரைகளும் வில்பொறிகளும் இருக்கும்போது இரும்புத் தடுப்புகள் தேவையில்லை."

"அப்படியானால் அவற்றை அகற்றி விடு சங்கா" என்றான் மன்னன்.

பிறகு அவனே தொடர்ந்து "மிகவும் நம்பகரமான உளவாளிகள் நான்கைந்து பேர் வேண்டும். அவர்கள் நான் சொல்வதைச் செய்ய வேண்டும். ஏன் எதற்கு என்றெல்லாம் கேட்கக் கூடாது" என்றான்.

"இருக்கிறார். மன்னவா. அழைத்து வரவா?"

"அழைத்து வர வேண்டாம். நான் கூறுவதைச் செய்தால் போதும்."

"அப்படியே."

"மூன்று நபர்களை அவர்கள் கண்காணிக்க வேண்டும். ஒருவர் முனிவர். அடுத்தவர் பெருமாள் பட்டர். இன்னொருவர் மன்மதன். அவர்களைக் கண்காணித்து தினமும் எனக்குத் தகவல் அனுப்ப வேண்டும். என்னால் பழக்கப்பட்ட வெண்புறாக்கள் இருக்கின்றன. அவற்றுக்கு வானமலர்கள் என்று பெயர். உனது உளவாளிகள் மேற்கண்ட மூன்று நபர்களை உளவுபார்த்து உரிய செய்திகளை இப் புறாக்கள் மூலம் அனுப்ப வேண்டும். நான் எங்கிருந்தாலும் செய்தி எனக்கு வந்து விடவேண்டும்."

"அப்படியே ஏற்பாடு செய்கிறேன் மன்னவா. நான் போய்த் தடுப்புகளை அகற்றுகிறேன்."

இவ்வாறு சொல்லிவிட்டு வீரர்களை அழைத்து கோட்டைச் சுவர்களுக்கு வெளியே இருந்த இரும்புத் தடுப்புகளை அகற்றும்படி சங்கன் கூறியபோது வீரர்கள் மறுத்தார்கள். முத்திரை மோதிரத்தைக் காட்டினான் சங்கன். வீரர்கள் மோதிரத்தை வணங்கிவிட்டுத் தடுப்புகளை அகற்றுவதில் ஈடுபட்டார்கள்.

போர்த்தளபதி மன்மதன் வந்தான்.

"யாரைக் கேட்டு இதைச் செய்கிறாய்?" என்று சங்கனிடம் கேட்டான்.

சங்கன் முத்திரை மோதிரத்தைக் காட்டினான்.

மன்மதன் அவனிடம் எதுவும் பேசாமல் நேராக மன்னனிடம் சென்றான்.

"மன்னவா! இது என்ன விபரீதம்? என் கட்டுப்பாட்டில் இருக்கும் கோட்டைப் பகுதியில் சங்கன் எப்படித் தடுப்புகளை அகற்றலாம்?" என்று கேட்டான்.

"அவனிடம் முத்திரை மோதிரம் இருந்ததைக் கண்டாய் அல்லவா?"

"கண்டேன்."

"அதற்கென்ன அர்த்தம்? என் ஆணைப்படி வேலை நடக்கிறது என்பதுதானே?"

"ஏன் என்று தான் புரியவில்லை."

"போகப் போகப் புரியும்."

"சங்கன் வேறு ஏதாவது மாற்றம் செய்வானா?"

"அதை அவனிடம் தான் கேட்க வேண்டும்."

"மன்னா! என்னிடமா விளையாடுகிறாய். ஆடு. ஆடு. ஆட்டம் முடியும் நேரம் நெருங்கிவிட்டது என்பது உனக்கெப்படித் தெரியும். அணையும் நேரத்தில்தான் தீபம் பெரிதாக எரியும். உன்நிலையும் அதுதான்" என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்ட மன்மதன் அகன்றான்.

மன்னன் உதயணன் தேரில் ஏறிச் சென்று மக்களைச் சந்தித்தான்.

"போர் வரப்போகிறதே உங்களுக்கெல்லாம் தெரியுமா?" என்று கேட்டான்.

"தெரியும் மகாராஜா. ஆனால் கவலையாக இருக்கிறது" என்றார்கள் மக்கள்.

"எதற்காகக் கவலை?"

"படையெடுத்து வருவது பல்லவர் படை. அதனால்தான்."

"பல்லவர் படை நந்திபுரத்தில் தோற்றது. பெண்ணாகடத்தில் தோற்றது. காஞ்சியிலேயே கூடத் தோற்றது. தோல்விதான் அவர்களது வரலாறு. அஞ்சாதீர்கள். பல்லவப் பாம்புகளை சபரக் கழுகுகள் கொத்தி அழிக்கும். அனைவரும் கருடக் கொடிகளை ஏந்தி வீதி வீதியாகக் கோஷம் போடுங்கள்" என்றான் மன்னன்.

கோட்டைத் தளபதி வந்து "பல்லவர் படை வந்து விட்டது மன்னவா" என்றான்.

அதை உறுதி செய்வது போல முரசங்கள் பல ஆர்த்தன.

★★★



மன்னன் கேட்ட உதவி

"இந்தச் செய்தி அம்பு மூலம் வந்தது மன்னவா?" என்றுகூறி ஓலை ஒன்றைக் கொடுத்தான் கோட்டைத் தளபதி கொடியோன்.

"வாழ்த்துகள் - உதயசந்திரன்" என்றிருந்தது ஓலையில்.

"இவனா? இவனா படை நடத்தி வந்திருக்கிறான். தோல்வி என்பதை அறியாதவனாயிற்றே! போரில் கால் உடைந்து முடமாகியிருப்பதாக அல்லவா கேள்விப்பட்டேன்? குணமாகி விட்டானா? நடமாடத் தொடங்கி விட்டானா? போர் கடுமையாக இருக்கப் போகிறது" என்று தனக்குள் தெரிவித்துக் கொண்ட உதயணன் "நானும் வாழ்த்து அனுப்புவதாக அம்பு மூலம் கோட்டையின் நாற்புரமும் அனுப்பு. அங்கிருந்து செய்தி வந்தால் உடனுக்குடன் அனுப்பி வை. போர்த்தளபதியை உடனே அரண்மனைக்கு வரச்சொல். கோட்டை மதில்கள் மீது அனைத்தும் தயாராக இருக்கட்டும். எதிரித் தரப்பில் நாய் நரி என்று எது முன்னேறினாலும் அம்பெய்து கொன்றுவிடு. கோட்டைக்குள் இருக்கும் முரசுகளை முழங்கவை. போ சீக்கிரம்" என்று கட்டளைகளை விடுவிடுவென்று விடுத்தான்.

"மன்னவா! கோட்டை மதில்களுக்கு வெளியே இருந்த பலமான தடுப்புகள் நீக்கப்பட்டு விட்டன" என்றான் கோட்டைத் தலைவன் கொடியோன்.

"அகற்றாமல் விட்டிருந்தால் போரில் நீ வெற்றி பெற்று விடுவாயோ?" என்று கேட்டான் மன்னன் மூர்க்கமாக.

"அதற்கில்லை. தடுப்புகளை ஏற்படுத்தியது தாங்கள்..."

"ஆமாம். இப்போது நானே தான் அகற்றியிருக்கிறேன். அதற்கு உன் அனுமதி வேண்டுமா?"

"இல்லை மன்னவா இல்லை. உங்களுக்குத் தெரியும். எல்லாம் தெரியும்" என்று கூறிவிட்டு விட்டால் போதும் என்று அகன்று விட்டான் கோட்டைத் தலைவன்.

அவன் செல்வதற்கும் போர்த்தளபதி மன்மதன் வருவதற்கும் சரியாக இருந்தது.

"வா மன்மதா. உன்னைத்தான் எதிர்பார்த்திருந்தேன். புதிய செய்தி ஏதாவது உண்டா?" என்று கேட்டான் மன்னன்.

"பல்லவப் படைகளுக்கு உதயசந்திரன் தலைமை வகித்து வந்திருக்கிறான்."

"அது பழைய செய்தி. உதயசந்திரன் வந்திருப்பதில் விசேஷம் ஏதாவது உண்டா?"

"பயன்பட மாட்டான் என்று கருதப்பட்டவன் படை நடத்தி வந்திருப்பது விசேஷம்."

"வந்தால் என்ன? அவனும் ஒரு படைத்தலைவன் தானே!"

"ஆமாம். ஆனாலும் அவனுக்கு ராசியானவன் என்று ஒரு பெயர் உண்டு."

"நான் ராசியில்லாதவனா?"

"அந்தப் பேச்சிற்கு இங்கே இடமில்லை மன்னவா. உங்களுக்கு அதிலெல்லாம் நம்பிக்கையில்லை என்பது எனக்குத் தெரியும். ஆனால் உதயசந்திரனுக்கு இருக்கிறது. அவனோடு இருப்பவர்களுக்கு இருக்கிறது. அவனுக்குத் தோல்வியே கிடையாது என்ற பேச்சும் நம்பிக்கையும் பரவலாக இருக்கிறது."

"ராசி இருக்கட்டும். லக்னம் இருக்கட்டும். போருக்கு அது போதுமா? வெற்றி வந்து கால்களில் பணியுமா?"

"பணியாது."

"அவனைக் கண்டு நீ அஞ்சுகிறாயா?"

"அவனைக் கண்டு அஞ்சவில்லை. யமனைக் கண்டு அஞ்சவில்லை. உங்களைக் கண்டுதான் அஞ்சுகிறேன்."

"ஏன் அப்படி?"

"தாங்கள் நினைத்து நினைத்து ஏதேதோ காரியங்களைச் செய்கிறீர்கள். என்னிடம் ஒரு செய்தியாகக் கூடச் சொல்வ தில்லை."

"இரும்புத் தண்டுத் தடைகளை நீக்கினேனே, அதைச் சொல்கிறாயா?"

"ஆமாம்."

"மன்மதா! நான் எதைச் செய்தாலும் நாட்டு நலனுக்காகத்தான் செய்வேன் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள். அப்படி

வைத்துக் கொண்டால் குழப்பம் இருக்காது. அச்சம் இருக்காது" என்று சொன்ன மன்னன் "உன்மீது எனக்குப் பூரண நம்பிக்கை இருக்கிறது மன்மதா. ஆகவேதான் பதவி நீக்கம் செய்த பிறகும் மறுபதவி கொடுத்து உன்னைத் தக்க வைத்துக் கொண்டேன். நீ இப்போது எனக்கொரு உதவி செய்ய வேண்டும்" என்றான்.

"சொல்லுங்கள் மன்னவா. செய்யக் காத்திருக்கிறேன்" என்றான் மன்மதன்.

"மன்மதா! எனது மகத்தான தோரண வாயிலைப் பற்றி உனக்குத் தெரியுமல்லவா. அது என் கௌரவம். இந்த நாட்டின் கௌரவம். இந்த நாட்டு மக்களின் கௌரவம். சபர இனத்தின் கௌரவம். நான் அழிந்தாலும் அது அழியக் கூடாது. அது அழியும்வரை என் அழிவு ஏற்கப்படாது. தற்போதைய இக்கெட்டான நிலையில் அது இருக்குமிடம் பாதுகாப்பற்றதாக இருக்கிறது. ஆகவே இப்போர் முடியும்வரை அதை நீதான் சரியான இடத்திற்குக் கொண்டு சென்று பாதுகாக்க வேண்டும். அது இருக்குமிடம் எதிரிகளுக்குக் கூடத் தெரியக் கூடாது" என்றான் மன்னன் இதமான குரலில்.

"அப்படியே ஆகட்டும் மன்னவா."

"மகிழ்ச்சி. அதை எங்கே கொண்டு போய் மறைத்து வைப்பாய்?"

"என் ஆசைநாயகியின் இல்லத்தில் வைப்பேன் மன்னவா. யாரும் சந்தேகிக்க மாட்டார்கள்."

"அருமையான யோசனை. மன்மதா! இன்று நீ என்னை வென்று விட்டாய். இந்தா பெற்றுக் கொள்" என்று சொன்ன மன்னன் தன் கழுத்தில் இருந்த மணிமாலையைக் கழற்றி அவனிடம் கொடுத்து "இன்று இரவு அந்த வேலையை முடித்து விடு" என்றான்.

மன்னனுக்கு என்ன காரணத்தினாலோ இருப்புக் கொள்ள வில்லை. அந்தப்புரத்திற்குச் சென்றான். அங்கே தேவதேவி நிஷ்டையில் இருந்தாள். அவனைக் கவனிக்கவுமில்லை.

அந்தப்புரத் தாதி வந்தாள்.

"யாரையாவது அனுப்பட்டுமா? ரோமா புரியிலிருந்தும் அரபு நாட்டிலிருந்தும் ஆறு பேரழகிகள் வந்திருக்கிறார்கள். கைப்படாத செவ்வல்லிப் பூக்கள்" என்றாள்.

"வேண்டாம்" என்று சொன்ன மன்னன் "இரு இரு. அந்தப்புரத்தில் இதுவரை அதிகமாக அனுமதித்த அழகி யாராவது இருக்கிறாளா?" என்று கேட்டான்.

“அவள் எதற்கு மன்னவா?”

“முட்டாள். கேட்டதற்குப் பதில் சொல்.”

“இருக்கிறாள்.”

“அவளைச் சயன அறைக்கு இப்போதே அனுப்பு.”

சயன அறைக்குச் சென்றான் மன்னன்.

சிறிது நேரத்தில் அவன் கேட்ட அந்தப் பெண் வந்தாள்.

“உன் ஊரென்ன? பெயரென்ன?”

“மறந்து விட்டது மகாராஜா.”

“உன்னிடம் மறக்காமல் இருப்பது எது?”

“நான் மறக்க விரும்பினாலும் மறக்க விடாமல் இருக்கும் ஒரே விஷயம். காமம். காமம். காமம்.”

“காமம் கசந்து விட்டதா?”

“அளவிற்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு மகாராஜா.”

“அளவை நீ தானே நிர்ணயம் செய்து கொள்ள வேண்டும்!”

“முடியவில்லை மகாராஜா. என்னைப் பெண்ணாக நினைப்பவர்கள் யாருமில்லை. பொன்னாக நினைக்கிறார்கள். பொன் முட்டையிடும் வாத்தாக நினைக்கிறார்கள். என் ஒவ்வொரு கணத்தையும் அவர்கள் தான் நிர்ணயிக்கிறார்கள். ஒரு நாளைக்குப் பத்து ஆடவர்கள் என்னிடம் அனுப்பப் படுகிறார்கள். முடியவில்லை மகாராஜா.”

“முடியவில்லை என்று நீ சொல்லியும் ஏற்க முடியாது என்று சொல்லும் நபர் யார்?”

“கணிகை விடுதியின் காப்பாளினி க. சுந்தரி”

“அது என்ன க. சுந்தரி?”

“நாங்கள் வைத்த பெயர். கசப்பு சுந்தரி. கசாப்பு சுந்தரி. கழிசடை சுந்தரி. கருணையற்ற சுந்தரி.”

மன்னன் மணியை அடித்தான்.

சேவகன் வந்தான்.

“கணிகை சுந்தரியைக் கழுவில் ஏற்ற நான் கட்டளையிட்ட தாகச் சிறைக் காவல் அதிகாரியிடம் சொல். அவளது சடலத்தை நான் காணவேண்டும்” என்றான் மன்னன்.

"மகாராஜா! அவள் அழிந்தால் எனக்கொன்றும் ஆகப் போவதில்லை. நான் மோசமாகி விட்டேன். என் உடல் மோசமாகி விட்டது. நோய்கள் தலைகாட்டத் தொடங்கிவிட்டன. என் ரத்தம் விஷமாகி விட்டது. நான் எனது மரண நாட்களை எண்ணிக் கொண்டிருக்கிறேன்" என்றாள் அவள்.

"அதற்காகத் தான் உன்னை அழைத்தேன்."

"விளங்கவில்லை மகாராஜா."

"இவ்வளவு காலமாக எண்ணற்ற ஆடவர்களின் சுகத்திற்காக உன் உடம்பு பயன்பட்டது. இந்த உடம்பு சில நாட்களுக்கு சில ஆடவர்களைக் கொல்லப் பயன்படட்டுமே!"

"இப்போதும் விளங்கவில்லை மகாராஜா."

"உன்னைப் போன்ற நிலையில் இன்னும் எத்தனை பேர் இருப்பார்கள்?"

"பலர் இருக்கிறார்கள்."

"பத்து பேர் இருப்பார்களா?"

"நூறு பேர் இருப்பார்கள்."

"உன் உடல்நிலை தானா அவர்களுக்கு?"

"ஆமாம் மகாராஜா."

"மரணத்திற்குக் காத்திருக்கிறார்களா?"

"ஆமாம்."

"எல்லோரையும் கோட்டைக்கு வெளியே அனுப்புகிறேன். பகை நாட்டு வீரர்கள் அங்கே குழுமியிருக்கிறார்கள். அவர்களோடு உறவாடுங்கள். உங்கள் விஷம் அவர்களுக்கு ஏறி அவர்கள் சாகட்டும். இந்த நாட்டிற்காக நீங்கள் செய்த தியாகமாக இது இருக்கட்டும். இங்கேயே இருந்து வெதும்பி வெதும்பி அற்ப உயிர்களாக மரணமடைவதை விட நாட்டிற்காக உயிர் விடுங்கள். அது ஒரு வகையில் வீரமரணம் தான்."

"விசித்திரமான யோசனை மகாராஜா. எங்கேயும் கேட்டதில்லை. கேள்விப்பட்டதில்லை" என்றாள் அவள்.

"என்னை மன்னித்து விடு பெண்ணே. எதிரிகளை அழிக்கப் பல வழிகளிலும் நான் இறங்குகிறேன். என்னைப் போல் எல்லா மன்னர்களும் இருக்க மாட்டார்கள். இந்த யோசனையைக் கூட உங்களது உடல்நிலையை உணர்ந்த பிறகே உனக்குச்

சொல்கிறேன். உனக்கு விருப்பமில்லை என்றால் விட்டுவிடு. கட்டாயம் இல்லை. நீங்கள் இதை விரும்பிச் செய்தால் உங்கள் குடும்பத்திற்கு இந்த அரசாங்கம் எல்லா உதவிகளையும் செய்யும். உங்கள் தியாகங்களைக் கற்களில் பொறிப்பேன்."

"தியாகத்திற்குக் கைம்மாறு வேண்டியதில்லை மகாராஜா. நாங்கள் உங்கள் யோசனையை ஏற்கிறோம்."

"பெண்ணே! நான் மன்னனே தவிர இதுவரை மணம் செய்து கொள்ளவில்லை. பெண் சுகத்தை நாடிச் சென்றதில்லை. காதலைப் பற்றியும் காமத்தைப் பற்றியும் எனக்குத் தெரியாது. கடுகளவு அனுபவமும் அவற்றில் எனக்கில்லை. ஆகவே அதுபற்றி உன்னிடம் பேசுவதற்கு நான் தகுதியற்றவன். நீயோ அவற்றில் கரை கண்டவள். கரையைத் தாண்டியவள். அதன் தாக்கம் உனக்குத் தான் தெரியும். நீங்கள் இக்காரியத்தைச் செய்வீர்களானால் எதிர்காலத்தில் இங்கே கணிகைகளுக்கு கௌரவம் கிடைக்கும். கருணை கிடைக்கும்."

"மிக்க மகிழ்ச்சி மகாராஜா. எங்களுக்கு இந்நாள் திருநாள். எப்போது செல்ல வேண்டும் என்று சொல்கிறீர்களோ அப்போது செல்லத் தயாராக இருக்கிறோம்."

"போய் வா பெண்ணே! போய் வா! மறுபிறப்பில் நீங்களெல்லாம் ராஜகுமாரிகளாகப் பிறப்பீர்கள். ராஜ்யங்களைக் கட்டி ஆள்வீர்கள்" என்றான் மன்னன்.

★

அன்றிரவு மன்னன் சொன்னபடி பாதாள அறைக்குச் சென்ற மன்மதன் தோரணவாயிலை நன்றாகத் துணியால் மூடி கயிற்றால் கட்டி குண்டோதரர்களை வைத்துத் தூக்கச் செய்து தனது ஆசைநாயகியான மைவிழிக் கண்ணியின் இல்லத்தில் கொண்டு போய் வைத்தான்.

"இது என்ன? இதற்குள் என்ன இருக்கிறது?" என்று கேட்டாள் கண்ணி.

"அதிருஷ்டம் இருக்கிறது கண்ணே. அதிருஷ்டம் இருக்கிறது" என்றான் மன்மதன்.

"அதிருஷ்டத்தை எதற்காக மறைத்துக் கட்டியிருக் கிறீர்கள்?" என்று கேட்டாள் கண்ணி.

"பாதுகாப்பாக இருக்க வேண்டுமல்லவா? அதற்காகத்தான்."

"அதற்கு எதற்கு என் இல்லத்திற்குக் கொண்டு வந்தீர்கள்?"

"எங்கே சந்தேகப்பட முடியாதோ அங்கே தான் முக்கிய பொருட்களை வைக்க வேண்டும். பாதுகாப்பு அதிகம் இருக்கும் இடங்களில் வைக்கப்படும் முக்கியப் பொருட்களுக்கு ஆபத்து அதிகம்."

"துணியை அகற்றி என்னவென்று காட்டுங்களேன்."

"வேண்டாம் கண்ணி. இப்போது இது எதுவென்று தெரிய வேண்டாம். இதன் மதிப்பு ஐயாயிரம் பொன் என்பதை மட்டும் தெரிந்து கொள்."

"அவ்வளவு மதிப்பா இதற்கு? இது எப்படி உங்கள் வசம் வந்தது?"

"உனக்கொன்று தெரியுமா? அதிருஷ்டத்தைத் தேடிப் பலர் நடக்கிறார்கள். ஓடுகிறார்கள். சிலர் அழுகிறார்கள். அதிருஷ்டமோ அவர்களைச் சீந்துவதில்லை. அதேசமயம் அதிருஷ்டமானது சிலரைத் தேடித் தென்றலாகவும் வரும். புயலாகவும் வரும். என்னைத் தேடி அது புயலாக வந்திருக்கிறது. அரியணை என்னைத் தேடி சிலத் தினங்களில் வரும்போது இதுவும் சேர்ந்தால் எப்படி இருக்கும்? யோசித்துப்பார்."

"பிரமிப்பாக இருக்கிறது. மன்னர் உங்களைப் பதவி நீக்கம் செய்த போது எல்லாம் முடிந்துவிட்டது என்றே நினைத்தேன். பயந்து போனேன்."

"எனக்கு இப்போது நல்லநேரம் கண்ணி. குரு பெயர்ச்சி எனக்கு விபரீத ராஜ யோகத்தைத் தரும் என்று ஆஸ்தான ஜோதிடர்கள் கூறியிருக்கிறார்கள். அதைத் தான் நீ பார்க்கிறாய். எனக்கு ஒரு யோகம் உண்டு. என்னை யாராவது அழிக்க நினைத்தால் வேகமாக வளருவேன். யாராவது ஏமாற்ற நினைத்தால் ஏமாற்றுபவர்களை ஏமாளிகளாக்குவேன். இது தெரியாமல் மன்னர் என்னிடம் விளையாடி விட்டார். இப்போது புரிந்து கொண்டிருப்பார்."

"படைகள் வந்து கோட்டையைச் சூழ்ந்து விட்டனவே! என்ன செய்யப் போகிறீர்கள்?"

"பார்க்கத்தானே போகிறாய்!"

"சற்று உள்ளே வாருங்கள்."

"எதற்கு?"

"வாருங்கள் சொல்கிறேன்."

இருவரும் உள்ளே சென்றார்கள்.

உள்ளே வந்தவனைக் கட்டிலில் தள்ளினாள் மைவிழிக் கண்ணி.

"கண்ணி! என்னைத் தொடாதே! நான் சபதம் செய்திருக்கிறேன்" என்றான் மன்மதன்.

"சபதமா? என்ன சபதம்?"

"போர் முடியும் வரைப் பெண்ணைத் தொடுவதில்லை என்று."

"மன்மதனாக இருந்துகொண்டு போடக் கூடியச் சபதமா இது?" என்று கேட்டுவிட்டு எதையோ தொட்டாள் கண்ணி.

அவனுக்கு உடலுக்குள் அதிர்வுகள் உண்டாவது புரிந்தது.

"வேண்டாம் கண்ணி வேண்டாம்" என்றான் உணர்ச்சிக் கொந்தளிப்பைத் தாங்க முடியாமல்.

"மகிழ்ச்சியான நேரம் இது. உணர்ச்சிப் பூர்வமான நேரம் இது. இதை வீணடிப்பவன் மனிதனே அல்ல."

"கிணற்று நீரை வெள்ளமா கொண்டு போய் விடும்? பொறு."

"முடியாது."

"இது என்ன பிடிவாதம்?"

"அப்படித்தான்."

"எப்படித்தான்?"

"இப்படித்தான்" என்று சொல்லி அவள் செய்த ஒரு காரியம் அவனுக்குள் காமாக்கனியை உண்டு பண்ணியது.

"சபதமாவது! மண்ணாவது!"

"பெண்ணே இப்படியாக இருக்கும்போது நான் எதற்குத் தயங்க வேண்டும்?"

"நான் மன்மதன். பெயருக்கேற்ப நடந்து கொள்வதே முறை" என்று நினைத்தான்.

பிறகென்ன?

மனிதர்கள் மிருகமான கதைதான்.

எங்கேயும் நடக்கும் காமவெறியாட்டம் தான்.

காமக் களிப்பின்போது இருக்கக் கூடாதது இரண்டு விஷயங்கள். ஒன்று வெட்கம். மற்றொன்று பிறசிந்தனை.

இதை இருவரும் நன்றாக உணர்ந்திருந்ததால் இருவரும் இன்பங்களை அள்ளித் துள்ளினார்கள். துள்ளி அள்ளினார்கள். இன்பங்களைக் கொள்ளையடித்தார்கள்.

சந்தோஷங்களும் கனவில் கூட கிடைக்காத பதவிகளும் கிடைக்கப் போகின்றன என்ற நினைப்பு அவர்களைக் காமக் கடலில் புயலாகச் சுழல வைத்தது.

போதும் என்று சொல்வதற்கு இருவருக்குமே மனம் வரவில்லை.

போர் தொடங்கிவிட்டால் பல நாட்களுக்குப் பிரிந்திருக்க வேண்டும்.

எனவே இன்னும் பலநாட்கள் அனுபவிக்க வேண்டிய இன்பச் சுவைகளைத் தற்போதே கணக்கிட்டு அனுபவிப்பது போல் செயல்பட்டார்கள்.

வக்கிரகாமம் உக்கிரமாக நடந்தது.

இரவுப் பொழுதுக்கு இனிமை தட்டினார்கள்.

அதற்காக இரவு அவர்களுக்கு நன்றி கூறியது.

பொழுது விடியவிருந்த போது அவனை விட்டு விலகிய கண்ணி அவனது காதருகில் ஏதோ சொன்னாள்.

அதிர்ந்தான் மன்மதன்.

அவள் மேன்மேலும் பலதகவல்களைச் சொன்னாள்.

மன்மதன் ஆடிப்போனான்.

திகைத்துத் திணறினான்.

★★★



சேதமும் சரிகட்டலும்

நெல்வேலிக் கோட்டையின் வடக்கு மதிள் சுவற்றுக்கு முன்னால் தன் படைப் பிரிவுடன் பாசறை அமைத்திருந்த பல்லவர் படைத் தலைவனான உதயசந்திரன் மன்னன் நந்திவர்மனின் சமவயதினன்.

அறுபது வயதாகியிருந்தாலும் அசதியோ அயற்சியோ அவனிடம் இல்லை. வயதிற்கு ஏற்ற தளர்ச்சி அவனிடம் வர மறுத்தது. அல்லது அது வருவதற்கு அவன் அனுமதிக்கவில்லை. இரை தேடும் வேங்கையைப் போல அமர்ந்திருந்தான். முகத்தில் வீரக்களை சொட்டியது. கண்களில் தீட்சண்யம் இருந்தது.

அவன் போருக்கு வரும்போது இரண்டு பேர் கட்டாயம் வருவார்கள்.

ஒருவர் சதுர்வேதி அந்தணர். நான்கு வேதங்களையும் குறைவறக் கற்றவர். வாழ்வில் வழு எதுவும் இல்லாமல் வாழ்பவர்.

மற்றவர் நிமித்தகர். நிமித்தங்களைச் சரியாகக் கூறுவதில் நிபுணர்.

பல்லவர் படை வந்து முற்றுகையிட்டதுமே "உதயணனுக்கு வாழ்த்து அனுப்பு உதயசந்திரா. அதுவே தோஷபரிகாரம்" என்றார் அந்தணர்.

ஏனென்று கேட்காமல் அனுப்பி வைத்தான் உதயசந்திரன்.

பதில் வாழ்த்து உதயணனிடமிருந்து வந்தது.

"உதயணனின் அகங்காரம் அப்படியே இருக்கிறது" என்றார் அந்தணர்.

"சரணடையும்படி உதயணனுக்கு ஓலை அனுப்பு" என்றார் அந்தணர்.

ஒருநாள் அவகாசம் கொடுத்து ஓலை அனுப்பினான் உதயசந்திரன்.

"சம்பிரதாயங்கள் முடிந்து விட்டன உதயசந்திரா. இன்று இரவு எரியம்புகளை நாற்புரங்களிலிருந்தும் கோட்டைக்குள் செலுத்துங்கள். அநேகமாக நமது எரியம்புகள் மக்கள் இல்லாத பகுதியில் எய்யப்படுவது நல்லது" என்றார் அந்தணர்.

"மக்கள் இல்லாத பகுதியை இரவில் கண்டுபிடிப்பது சிரமம் அந்தணரே" என்றான் உதயசந்திரன்.

"இப்போது பகல்நேரம் தானே! வீரர்களை மரத்தின் மீது ஏறி கோட்டைக்குள் பார்க்கச் சொல். மரங்கள் இருக்கும் பகுதியில் மக்கள் இருக்க மாட்டார்கள். அந்தப் பகுதியை நினைவில் வைத்துக் கொண்டு இரவில் எரியம்புகளை எய்யுங்கள். அந்தப் பகுதிகள் பற்றி எரியும். இதை நாம் செய்வது உதயணனுக்கு விடுக்கும் மறு எச்சரிக்கை. இதையும் அவன் புறக்கணித்தால் அனைத்துப் பகுதியிலும் எரியம்புகளை எய்யலாம். விவேகம் உள்ளவனாக இருந்தால் உதயணன் பணிவான்" என்றார் அந்தணர்.

"எந்த நேரத்தில் அம்புகளை எய்யலாம்?" என்று நிமித்தகரைக் கேட்டான் உதயசந்திரன்.

சொன்னார் நிமித்தகர்.

★

கோட்டைக்குள் பல பகுதிகளில் நட்சத்திரங்களைப் போல எரியம்புகள் விழுந்து தீப்பற்றி எரிந்தன. எரிந்த இடங்கள் மக்கள் இல்லாத பகுதியாக இருந்தாலும் அப்பகுதிகளுக்கு அருகில் இருந்த மக்கள் கலவரமடைந்தனர். எரியம்புகள் வந்த திசை நோக்கி விஷஅம்புகளை எய்யும் படி உத்தரவிட்டான் சங்கன். உபதளபதிகள் போர்த் தளபதியைத் தேடினார்கள்.

அவனோ மைவிழிக் கண்ணியின் மையலில் கட்டுண்டு கிடந்தான். மன்னனோ அரண்மனையில் நிஷ்டையில் அமர்ந்திருந்தான். அவனது கோலத்தைக் கலைக்க அஞ்சிய மக்கள் பெருமாள் பட்டரை அழைத்து வந்தார்கள்.

பெருமாள் பட்டர் வந்தார். மன்னன் நிஷ்டையில் அமரவில்லை என்பதையும் நிஷ்டையில் அமர்வதுபோல் அமர்ந்து ஏதோ மந்திரங்களை மெல்ல உச்சரித்துக் கொண்டிருந்ததை அறிந்தார். அவனது செய்கை நல்லதிற்காக இருக்கும் என்று தோன்றவில்லை அவருக்கு.

அதை உறுதி செய்வது போல் பல்லவர் படை இருந்த பக்கத்தில் "ஐயோ! ஐயோ" என்று மரண ஓலங்கள் எழுந்தன.

மக்களையும் உபதளபதிகளையும் போகச் சொன்ன பட்டர் மன்னனைக் குரல் கொடுத்து எழுப்பினார்.

கோபத்தோடு கண்களைத் திறந்த மன்னன் அந்த கோபத்துடன் "என்ன?" என்று கேட்டான்.

"மன்னா! வெளியே நகரம் பற்றி எரிகிறது. இங்கே நீ என்ன செய்கிறாய்? ஏதோ மந்திரங்களை ஜெபிப்பது போல் தெரிகிறதே! என்ன விஷயம்?" என்று கேட்டார் பட்டர்.

"அது எதுவாக இருந்தால் உங்களுக்கென்ன?" என்றான் மன்னன் முரட்டுக் குரலில்.

"மக்களும் உபதளபதிகளும் தவிக்கிறார்கள். உன்னை எழுப்புவதற்கோ உன்னிடம் பேசுவதற்கோ அஞ்சுகிறார்கள். என்னை அழைத்து வந்தார்கள்" என்றார் பட்டர்.

"யார் எப்படிப் போனால் உங்களுக்கென்ன?" என்று கேட்டான் மன்னன்.

"அப்படி இருந்துவிட என்னால் முடியாது."

"உங்களுக்கு நாட்டின்மீது அக்கறை உண்டா?"

'அதில் எந்தச் சந்தேகமும் வேண்டாம்."

"அப்படியென்றால் போர் விஷயமாக ஆலோசனை கூறாமல் ஒதுங்கியது ஏன்?"

"நான் அதர்மிகளுக்கு உதவியது கிடையாது. நீ காஞ்சியில் செய்தது அதர்மம். அதை உணர்ந்த பிறகு நீ செய்து வருவதும் அதர்மம். ஆகவே தான் நான் யோசனை ஏதும் கூறவில்லை."

"நீங்கள் எனக்கு யோசனை சொல்வதும் உதவிசெய்வதும் மக்களுக்கு உதவுவது மாதிரி தானே! நாட்டிற்கு உதவுவது மாதிரி தானே! நாட்டைக் காப்பாற்றுவது மாதிரி தானே!"

"அதற்கு வழி நீ போரைக் கைவிட்டு விட்டுச் சரணடைவது தான்."

"விபீஷணனும் அப்படித்தான் சொன்னான். ராவணன் கேட்கவில்லை. கும்பகர்ணனும் அப்படித்தான் சொன்னான். ராவணன் கேட்கவில்லை."

"கேட்காததால் அவனுக்குக் கிட்டியது மரணம்."

"இன்றுளார் நாளை போவார். புகழுக்கு இறுதியுண்டோ?"

"நீ கூறுவது புகழ் அல்ல. இகழ். ராவணனை மக்கள் இகழ்கிறார்களே தவிரப் புகழவில்லை."

"அவனது வைராக்கியத்தைப் பாராட்டுகிறார்கள் அல்லவா?"

"அதற்குப் பெயர் வைராக்கியமல்ல. சுயநலம். அண்ணன், தம்பி, பிள்ளை என்று சுற்றங்களையும் இலட்சக் கணக்கான மக்களையும் பலிகொடுத்த சுயநலம். அதெல்லாம் இப்போது எதற்கு மன்னா? இப்போது என்ன செய்கிறாய்? அதைச் சொல்."

"கடமையைச் செய்கிறேன்."

"என்ன கடமை?"

"எதிரியை அழைக்கும் கடமை. பட்டரே! காஞ்சியில் இருந்தபோது காஞ்சி நகர மக்களை அழிக்க காஞ்சியை அடுத்த புள்ளலூர் காட்டில் பேய்ப்படை* ஒன்றை அமைத்தேன். அதைப் பயன்படுத்துவதற்கு முன்பாக நான் அங்கிருந்து தப்ப வேண்டியதாயிற்று. ஆகவே பேய்ப்படையை அங்கிருந்து நகர்த்தி நெல்வேலியை அடுத்த பொற்பனைக் காட்டிற்கு அழைத்து வந்துவிட்டேன். பைசாச மொழிகளையும் மந்திரங்களையும் கூறி அவற்றை எதிரிகளின் மீது ஏவிவிட்டு வருகிறேன். பேய்களின் பிடியில் மரண ஓலங்களை எழுப்புகிறார்கள். எனது பேய்கள் கொடூரமானவை. அவை பீடித்தால் தப்புவது கடினம்."

"தொடர்ந்து பிழைகளையே செய்கிறாய் மன்னா. தன் வினை தன்னைச் சுடும். பாவ காரியங்கள் பாழ்வினைகளையே உருவாக்கும். மந்திரப் பிரயோகத்தை நிறுத்து."

"எதிரிகள் இரவு நேரத்தில் கோட்டைக்குள் எரியம்புகளை ஏவுகிறார்களே அது மட்டும் சரியா?"

"அவர்கள் மக்கள் இல்லாத பகுதியில் தான் வீசுகிறார்கள். அதுவும் உன்னை எச்சரிக்கத்தான். உனக்கு எதிரி தரும் வாய்ப்பு இது. வீணாக்கி விடாதே."

"உங்கள் அறிவுரை நான் சரணடைவது தான் என்றால் அதை ஏற்க நான் தயாராக இல்லை. போய் வாருங்கள்."

"தோரண வாயில் பாதுகாப்பாக இருக்கிறதா?"

"அது குறித்தும் நீங்கள் கவலைப்படத் தேவையில்லை."

பட்டர் சென்றார்.

---

* திருச்சானூரில் எழுந்தருளியுள்ள அலர்மேல் மங்கைத் தாயார் பேய்ப் படை ஒன்றை வைத்திருந்ததாகக் கூறப்படுகிறது. பக்கம் : 19 'திருமலை வாசன் யார்?' By. சுப. வெங்கட்ராமன்.

மன்னன் சங்கனையும் மன்மதனையும் வரச் சொல்லிச் சேவகர்களிடம் கட்டளையிட்டான்.

சங்கன் வந்தான்.

மன்மதன் வரவில்லை. தோரண வாயிலைக் கணிகையின் வீட்டில் மறைக்கும் பணியில் ஈடுபட்டிருப்பான் என்று கருதிக் கொண்ட மன்னன் சங்கனைப் பார்த்து "நிலவரம் எப்படி இருக்கிறது?" என்று கேட்டான்.

"எதிரிகளின் அம்புகளால் நம்மவர்கள் யாரும் இறக்க வில்லை. ஆனால் கலவரப் படுகிறார்கள். அச்சப்படுகிறார்கள்" என்றான் சங்கன்.

"அது இயற்கைதான். எரியம்புகள் இன்னமும் வந்து கொண்டிருக்கின்றனவா? நின்றுவிட்டதா?"

"அவர்களை நோக்கி விஷஅம்புகளை எய்யச் சொன்னேன். ஆகவே எரியம்புகள் நின்றுவிட்டன."

"சேதம் எவ்வளவு?"

"பழைய கட்டடங்கள், மரங்கள், குப்பைகள் என்று பலஇடங்கள் எரிந்து சாம்பலாகி யிருக்கின்றன. தீயைத் தடுக்க எண்ணெயை ஊற்றினால் புகை உண்டாகி விடும் என்பதால் அக்காரியத்தைச் செய்யவில்லை."

"நல்லது. தற்போது எதிரிகள் குழப்பத்தில் இருக்கிறார்கள். இரவுப் பொழுது இன்னமும் இருக்கிறது. நமது படைகளை கிழக்கு வாசலைத் திறந்து கொண்டு புயல் வேகத்தில் சென்று எதிரிகளைக் கண்மூடித் தனமாக வெட்டிச் சாய்த்துவிட்டு அதே வேகத்தில் கோட்டைக்குள் திரும்பச் சொல். கணிகை ஒருத்தியிடம் ஒரு காரியத்தைச் சொல்லியிருக்கிறேன். அவர்களையும் நாற்புரங்களிலும் ரகசியமாக வெளியேறச் சொல். அமாவாசைக்கு முன்னாள் ஆதலால் இருட்டு நமக்குச் சாதகமாக இருக்கும்."

நெல்வேலி மன்னன் சொன்னதெல்லாம் பிசகில்லாமல் நடந்ததால் முதல் நாள் போர் அவனுக்கு வெற்றியாக அமைந்தது. தனது வீரர்கள் உதயணனது பேய்ப்படையால் அழிவதை நேரில் கண்டு விவரமறிந்த சதுர்வேதி அந்தணர் உடனடியாகப் பாசறையில் ஹோமம் ஒன்றை நிகழ்த்தியதால் பேய்ப்படைகள் அதில் வந்து விழுந்து அழிந்து போயின. உதயணனின் பேய்ப்படை பலமும் அழிந்தது.

கணிகைப் பெண்கள் பல்லவ வீரர்களோடு உறவுகொண்டு உயிரை வாங்கினார்கள். அந்த விவரத்தை உதயசந்திரன் அறிந்தாலும் அது குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பெண்களைக் கொல்ல முற்படவில்லை. நள்ளிரவின்போது கிழக்கு வாயிலைத் திறந்து கொண்டு உதயணனின் வீரர்கள் திடீர் தாக்குதலில் ஈடுபட்டபோது சற்று சேதம் உண்டாகவே செய்தது. அதைத் தடுக்க முடியவில்லை அவனால்.

முதல்நாள் இரவு நடவடிக்கை உதயணனுக்குச் சாதகமாக அமைந்தாலும் மறுநாள் பகல் நடவடிக்கையில் அவற்றுக்குப் பதில் நடவடிக்கை எடுத்துச் சரிகட்டினான் உதயசந்திரன்.

★

கணிகை மைவிழிக் கண்ணி கடலளவு காமத்தை வலிய அழைத்து விட்டுக் காதோடு முணுமுணுத்த வார்த்தைகள் ஏழு கடலளவு வியப்பைத் தந்தது போர்த்தளபதி மன்மதனுக்கு.

தன்னைவிடக் கெட்டிக்காரியாக இருப்பதாகவும் தன்னை விடப் பயங்கரமானவளாக இருப்பதாகவும், தன்னை விடப் பெரிய தந்திரசாலியாகவும் கைகாரியாகவும் கண்ணி இருப்பதாகத் தோன்றியது அவனுக்கு.

"என்ன சொன்னாய்? இன்னொரு முறை சொல்" என்று கேட்டான் படுக்கையிலிருந்து எழுந்து.

அவனை மீண்டும் படுக்கையிலேயே தள்ளிய கண்ணி "என்ன அவசரம்?" என்று கேட்டு அவன் மீதே படுத்தாள்.

அவளப்படிப் படுத்தது மலர்மாலைகள் ஒத்தடம் கொடுப்பது போல் இருந்தாலும் அவளைப் பிடித்து பக்கத்தில் தள்ளிய மன்மதன் "முன்பு போல் மன்னர் வந்து விட்டால் பதவியும் போகும். உயிரும் போகும்" என்றான்.

அவள் தன் கால்களை அவன் மீது போட்டுக் கொண்டு "உங்களுக்கு எப்போதும் மன்னர் நினைவு தானா?" என்று கேட்டாள்.

அவனோ அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் "பொழுது விடியப் போகிறது கண்ணி" என்றான்.

"அதைப் பற்றி நமக்கென்ன? நமது காரியங்களுக்கு இரவு பகல் என்ற வித்தியாசங்கள் உண்டா என்ன?" என்று கேட்டு அவள் தன் கைகளை முக்கியமான இடத்திற்கு நகர்த்தியதும் மீண்டுமொரு காமப் புயலில் சிக்கவிரும்பாத மன்னன் அவளை உதறிவிட்டு

எழுந்து ஆசனத்தில் அமர்ந்து கொண்டு "உனக்கு இந்த யோசனை எப்படித் தோன்றியது கண்ணி?" என்று கேட்டான்.

"நீங்கள் இங்கே கொண்டு வந்தது என்ன என்பதும் தெரியும். அதன் மதிப்பு என்ன என்பதும் எனக்குத் தெரியும்" என்றாள் கண்ணி எழுந்து ஆடைகளைச் சீர்த்திருத்திக் கொண்டு.

"எப்படித் தெரியும்?"

"என் தந்தை சொன்னார்."

"தந்தையா? யாரவர்?"

"சொல்ல முடியாது."

"சொல்ல முடியாதா? என்ன சொல்கிறாய்?"

"ரகசியமாயிற்றே! எப்படிச் சொல்ல முடியும்?"

"என்னிடம் கூடவா சொல்ல முடியாது? நாளைக்கு நான் மன்னன். நீ ராணியாக எனக்குப் பக்கத்தில் அமரப் போகிறவள்"

"அதெல்லாம் உங்கள் ஆசைகள். நிறைவேறும் என்று என்ன நிச்சயம்?"

"நிச்சயமில்லாத விஷயத்தில் நான் இறங்குவதில்லை என்பது உனக்குத் தெரியாதா? என்னிடம் இந்த அரிய பொருள் வந்திருக்கிறதே! இன்னமுமா நீ நம்பவில்லை?"

"நான் உண்மையைச் சொன்னால் நீங்கள் நம்பமாட்டீர்கள்."

"உனக்குத் தான் என்மீது நம்பிக்கை இல்லையே தவிர எனக்கு உன்மீது நம்பிக்கை இருக்கிறது."

"இந்த ஊரில் ஒரு முனிவர் இருக்கிறாரே தெரியுமா?"

"கேள்விப்பட்டிருக்கிறேன். மன்னரின் குருநாதர் என்றும் கேள்விப்பட்டிருக்கிறேன்"

"அவர் தான் தோரணவாயிலைப் பற்றிச் சொன்னார்."

"அவரா? அவர் எதற்காக உன்னிடம் சொன்னார்?"

"நான் அவர் மகள்."

"இது பொய். வடிகட்டிய பொய். நம்ப மாட்டேன்."

"நம்ப மாட்டீர்கள் என்று ஆரம்பத்திலேயே சொன்னேனே?"

"அதற்கில்லை கண்ணி. அவர் முனிவர். அவருக்கெப்படி மகள் இருக்க முடியும்?"

"முனிவர்கள் பிரம்மச்சரியம் பூண்டவர்கள் என்று யார் சொன்னது? வசிஸ்டர், விஸ்வாமித்ரர், கௌதமர் ஆகிய முனிவர்கள் இல்லறம் நடத்தவில்லையா? பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ளவில்லையா?"

"அது சரி கண்ணி. அவரது மகள் என்று சொல்லும் நீ எப்படி.."

"கணிகையாக இருக்கிறாய் என்றுதானே கேட்கிறீர்கள்?"

"ஆமாம்."

"தாயைப் போல மகள். நூலைப் போல மேகலை."

"என்ன சொல்கிறாய் நீ?"

"என் தாய் ஒரு கணிகை. அது தெரியாமல் என் தந்தை அவளை மணந்து கொண்டார். தாய் வயிற்றில் நான் குழந்தையாக இருந்த போது தான் இந்த உண்மை அவருக்குத் தெரிந்தது. அவளைக் கைகழுவி விட்டு முனிவராகி விட்டார். தாய் என்னைத் தன் வழியிலேயே வளர்த்து விட்டாள்."

"உனக்கும் முனிவருக்கும் இருந்த மகள் - தந்தை உறவு உனக்கெப்படித் தெரிந்தது?"

"தாய் சொன்னாள். சொல்லிவிட்டு நோய்வாய்ப் பட்டாள். மரணமடைந்தாள். நான் தந்தையான முனிவரைச் சந்தித்தேன். அவர் என் தாயைப் பேய் என்று தூற்றினார். அவளுக்கு நரகம் தான் கிடைக்கும் என்று சபித்தார். எனக்கென்ன கிடைக்கும் என்று கேட்டேன். நீ வாழ்வதே நரக வாழ்க்கைதான் என்றார். இல்லை சொர்க்க வாழ்ககை என்றேன். போகப் போகப் புரியும் என்றார். கணிகைத் தொழிலை விட்டுவிடும்படிச் சொன்னார். அது முதற்கொண்டு தொழிலாக நடத்துவதை விட்டு விட்டு உங்களைத் தேர்ந்தெடுத்தேன். உங்களை மட்டுமே சொந்தமாகக் கருதினேன். அவரும் ஏற்றுக் கொண்டார்."

"தோரணவாயிலைப் பற்றிய பேச்சு எப்படி வந்தது?"

"இங்கே போர் நடக்கக்கூடும் என்ற பேச்சு எழுந்த போது அவரை நான் சந்தித்தேன். அப்போது எல்லோரையும் பற்றிய பேச்சு வந்தது. அப்போதுதான் தோரணவாயிலைப் பற்றித் தெரிவித்தார். நான் என் எதிர்காலம் என்னாகும் என்று கேட்டேன். போரில் நீங்கள் மாண்டு விட்டால் என் கதி என்ன என்று வினவினேன். நான் சொன்னபோதே அசலூர்க்காரனை மணந்து அசலூருக்குச் சென்றிருக்கலாம். அதை விட்டுவிட்டு இங்கேயே இருந்தாய். அதன் பலனை அனுபவிக்கப் போகிறாய்

என்றார். தந்தையாக இருந்து இப்படிப் பேசலாமா என்றேன். நீ என் மகளாக நடந்து கொள்ளவில்லை என்றார். போரின் முடிவு என்ன ஆகும் என்று கேட்டேன். தனக்குத் தெரியாது என்றார். ஆனால் அவருக்கு நிச்சயமாகத் தெரியும். ஆனால் சொல்ல மாட்டார்."

"அவர் சொல்வது சொல்லாதது இருக்கட்டும். இந்தத் தோரணவாயிலைப் பற்றி என்ன சொன்னார்?"

"இது சபர குலத்தின் கௌரவ அடையாளம். மன்னனை வென்றால் கூட இதைக் கைப்பற்றினால் தான் வெற்றி என்று ஒப்புக் கொள்ள முடியும் என்றார். இது உங்களுக்குத் தெரியாதா?"

"தெரியாது கண்ணி. இது எனக்குப் புதிய தகவல்."

"நீங்கள் என்னென்னவோ செய்து மன்னரைத் தோற் கடித்தாலும் இந்தத் தோரண வாயில் எதிரியின் கைகளில் கிடைக்க வேண்டும். அதுபற்றி யோசித்துக் கொண்டிருந்தேன். நீங்களே அதை இங்கே கொண்டு வந்து விட்டீர்கள்."

"இப்போது புரிகிறது."

"என்ன புரிகிறது?"

"இந்தத் தோரணவாயிலை எதிரியிடம் சிக்கவைத்து விட்டால் போரே தேவையில்லை. மன்னன் எதிரியின் கால்களில் விழ வேண்டியது தான். இதுதானே உன் யோசனை?"

"ஆமாம்."

"இதை எப்படி எதிரிகளிடம் சிக்கவைப்பது? அது நடக்காத காரியமாயிற்றே!"

"உங்களுக்கு அதிருஷ்டம் அடிக்கிறது."

"அது உண்மைதான். ஆனால் -"

"இப்போது தான் உண்மையான அதிருஷ்டம் அடிக்கிறது."

"எப்படி?"

சொன்னாள் அவள்.

"நீ பேரரசியாக இருக்கத் தகுந்தவள்" என்று கூறி அவளைக் கட்டிப்பிடித்த மன்மதன் "நீ அசட்டையாக இரு. இங்கே தோரணவாயில் இருப்பதாகவே தெரியக் கூடாது. நான் ஏற்பாடுகளைச் செய்துவிட்டு வருகிறேன்" என்று கூறிவிட்டு அகன்றான்.

மறுநாள் மன்னனைச் சந்தித்துத் தோரணவாயிலைப் பாதுகாப்பாக வைத்துவிட்டது பற்றித் தெரிவித்தான்.

எதிரியின் முற்றுகையை நீடிக்க வேண்டாம் என்றும் கோட்டைக் கதவுகளைத் திறந்து கொண்டு போய் தாக்கலாம் என்றான்.

"ஒருநாள் பொறு" என்றான் மன்னன்.

அன்றிரவு மன்னனிடம் சங்கன் நியமித்த உளவாளிகள் வந்தார்கள்.

"முனிவரைப் பற்றிய தகவலில் விசேஷமில்லை" என்றார்கள்.

"பெருமாள் பட்டர் இருப்பிடத்தை விட்டு எங்கேயும் செல்லவில்லை" என்றார்கள்.

மூன்றாவது உளவாளி மட்டும் "போர்த்தளபதி நள்ளிரவில் திட்டி வாசலைத் திறந்து கொண்டு ரகசியமாக வெளியே செல்கிறார் மன்னவா" என்றான்.

★★★



எதிரிப்பாசறையும் முதியவரும்

"நன்றாகப் பார்த்தாயா? அது மன்மதன் தானா?" என்று கேட்டான் உதயணன்.

"நன்றாகத் தெரியும் மன்னவா. கிழவர் வேடம் போட்டுக் கொண்டதையும் பார்த்தேன். திட்டிவாசல் வழியாக நள்ளிரவில் வெளியேறியதையும் எதிரிப்படைத் தலைவன் உதயசந்திரனின் பாசறையை நோக்கிப் போனதையும் பார்த்தேன்" என்றான் உளவாளி.

"அவனைக் கோட்டைக் காவல் வீரர்கள் எதுவும் கேட்க வில்லையா?"

"கேட்டார்கள். நான்தான் போர்த்தளபதி. மன்னரின் ரகசிய செய்திகளைக் கொண்டு செல்கிறேன். யாரும் இதைப்பற்றிப் பிரஸ்தாபிக்க வேண்டாம்" என்றார் போர்த்தளபதி.

"சரி. நீ போகலாம்" என்று உளவாளியை அனுப்பி வைத்த மன்னன் சேவகன் ஒருவனை அழைத்து "போர்த் தளபதி எங்கே இருந்தாலும் உடனே அழைத்து வா" என்றான்.

பெருத்த சந்தேகப் பேர்வழியான மன்னனுக்கு நெஞ்சம் கொதித்தது. "இந்த மன்மதனைச் சந்தேகித்து சரியாகப் போய் விட்டது. இவனுக்கு வீரம் மழுங்கிவிட்டது. அதைத் தவிர மற்ற எல்லாவற்றிலும் கூர் தீட்டப்பட்டிருக்கிறது. போருக்கு முன்பாக யாரையும் கொல்லக் கூடாது என்று தான் நினைத்திருந்தேன். அது நிறைவேறாது போலிருக்கிறது. மன்மதனைக் களப்பலியாகக் கொடுத்து விட வேண்டியது தான்" என்று கறுவிக் கொண்டான்.

என்ன செய்தியை எதிரிக்குக் கொண்டு போயிருப்பான்?

என்னை வஞ்சகமாகக் காட்டிக் கொடுத்து தலையை வாங்கிவிட, திட்டமிடுகிறானா?

போரின் போது எதிரியோடு சேர்ந்து கொள்ள முடிவு செய்திருப்பானோ?

கோட்டைக் கதவுகளை ரகசியமாகத் திறந்து எதிரிப் படைகளை உள்ளே பிரவேசிப்பதற்கு வழிவகுப்பானா?

இப்படியெல்லாம் மனம் போன வழியில் எண்ணிக் கொண்டிருந்தான் மன்னன்.

ஆனால் சேவகன் மன்மதனோடு வந்தபோது குழம்பினான்.

மன்மதன் வணக்கம் தெரிவித்தபோது மேலும் குழம்பினான்.

"எங்கிருந்தாய் போர்த்தளபதி?" என்று கேட்டான்.

"தெற்கு மதில் பகுதியில் மன்னவா."

"வடக்கு மதில் பகுதியில் இருந்தது யார்?"

"உபதளபதி இருந்திருப்பான்."

மன்னன் சேவகனை அழைத்து உபதளபதியை வரச் சொன்னான்.

"மன்மதா! நீ மறைந்திரு."

உபதளபதி வந்தான்.

"உப தளபதி! நீ வடக்கு மதிலில் தானே இருக்கிறாய்?"

"ஆம் மன்னவா."

"சற்று முன் திட்டி வாசல் வழியாக ரகசியமாக நம் போர்த்தளபதி வெளியேறினாரா?"

"ஆம் மன்னவா."

"உன்னிடம் பேசினாரா?"

"ஆம் மன்னவா."

"என்ன பேசினார்?"

"ரகசியச் செய்தி ஒன்றைத் தாங்கள் அளித்துள்ளதாகவும் அதை எதிரிப் பாசறைக்குக் கொண்டு செல்வதாகவும் சொன்னார்."

"அதை நீ எப்படி நம்பினாய்?"

"போர்த்தளபதி கூறுகிறார். நம்பாமல் இருக்க என்ன உள்ளது மன்னவா?"

"அவரை எப்படித் தனியாக அனுப்பினாய்?"

"துணைக்கு யாரும் வேண்டியதில்லை என்று சொல்லி விட்டார்."

"அவர் சென்றதை என்னிடம் ஏன் சொல்லவில்லை?"

"தங்கள் செய்தியைக் கொண்டு போவதாகச் சொன்னார். ஆகவே தங்களிடம் எதுவும் சொல்லவில்லை."

"மன்மதனைத் தவிர வேறு யார் இப்படிச் செய்திருந்தாலும் இப்படித்தான் நடந்து கொண்டிருப்பீர்களா?"

"வேறு யாராக இருந்தாலும் அனுமதித்திருக்க மாட்டோம். போர்த்தளபதியிடமோ தங்களிடமோ கொண்டு வந்திருப்போம்."

"வெளியே சென்றது போர்த்தளபதி மன்மதன் தான் என்பதை எப்படிச் சொல்கிறாய்? நீ பார்த்தது முதியவரைத் தானே?"

"வேடம் முதியவராக இருந்தாலும் குரல் அவருடையது தான் மன்னவா."

"அது ஏன் ஏமாற்று வேலையாக இருக்கக்கூடாது?"

"தாங்கள் அப்படிக் கருதுகிறீர்களா?"

"நான் கேட்டது உன்னை."

"நான் சொன்னது சரிதான் மன்னவா. முதியவர் வேடத்தில் வெளியே போனது போர்த்தளபதியேதான்."

மன்னன் மன்மதனை வரச் சொன்னான்.

"அப்படியென்றால் இது யார்?"

உபதளபதி மன்மதனைப் பார்த்து அதிர்ந்தான்.

"சொல் உபதளபதி. இது யார்?" - கேட்டான் மன்னன்.

"போர்த்தளபதி."

"கோட்டையை விட்டுப் போனவர்?"

விழித்தான் உபதளபதி.

மன்னன் மன்மதனைப் பார்த்து "என்ன சொல்கிறாய் மன்மதா? நீங்கள் ஒருவரா? இருவரா?" என்று கேட்டான்.

"மன்னவா! வடக்கு வாசலில் இருந்தவர்கள் ஏமாந்து போயிருக்கிறார்கள். அவர்கள் பார்த்த முதியவர் கோட்டைக்குள் இருந்த எதிரியின் உளவாளியாகவும் இருக்கலாம்" என்றான் மன்மதன்.

"கேட்டாயா உபதளபதி? போர்த்தளபதியின் ஊகம் உனக்கும் வந்திருக்க வேண்டும். எனக்கும் அப்படித்தான் தோன்றியது. இனிமேலாவது எச்சரிக்கையாக இரு. ஒருவனையும் வெளியே விடாதே. போ" என்றான் மன்னன்.

உபதளபதி குழப்பத்துடன் அகன்றான்.

மன்னன் போர்த்தளபதியைப் பார்த்து "தோரண வாயில் பத்திரமாக இருக்கிறதல்லவா?" என்று கேட்டான்.

"இருக்கிறது மன்னவா."

"பார்த்துவிட்டு வரலாமா?"

"வாருங்சள் மன்னவா."

இருவரும் தேரில் ஏறி மைவிழிக் கண்ணியின் இல்லத்திற்குச் சென்றார்கள்.

துணியால் கட்டி வைக்கப்பட்டிருந்த தோரண வாயிலைக் கண்டான் மன்னன்.

"துணியை அகற்று மன்மதா" என்றான் மன்னன்.

மன்மதன் மிகவும் ஜாக்கிரதையாகத் துணியை அகற்றினான்.

மன்னன் தோரணவாயிலைப் பார்த்தான்.

"மிகவும் மகிழ்ச்சி மன்மதா. உன்னை நம்பித்தான் இந்தப் போரை நடத்துகிறேன். உன் மீதான நம்பிக்கை எனக்கு அதிகரித்திருக்கிறது" என்றான்.

"என் மீது நம்பிக்கை வைத்திருப்பதில் எனக்கும் மகிழ்ச்சி தான். ஆனாலும் சங்கன் என்பவனுக்கு முத்திரை மோதிரத்தையும் அளித்து காரியங்களில் இறக்கியிருக்கிறீர்கள். அது ஏன் என்பது எனக்குத் தெரியவில்லை" என்றான் மன்மதன்.

"அதையெல்லாம் நீ பொருட்படுத்த வேண்டியதில்லை. போர்த்தளபதியான நீதான் போரை உன் வழியில் நடத்தப் போகிறாய். அதில் எந்த விதமான சந்தேகமும் உனக்கு வேண்டாம். நீ இத்தோரணவாயிலை முன்போலவே துணியால் கட்டி மறைத்துக் கட்டிவிடு. நாளை காலை நாம் சந்திக்கலாம், அநேகமாக நாளைக்கு நாம் போரைத் தொடங்கி விடலாம் என்று தோன்றுகிறது. இந்த முற்றுகையும் கோட்டைக்குள் முடங்கியிருப்பதும் எனக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. எங்கே உன் ஆசைநாயகி?"

"உள்ளே இருக்கிறாள். அழைக்கட்டுமா மன்னவா?"

"வேண்டாம். அவளால் நீ பிழைத்தாய். உன்னால் இந்த நாடு பிழைக்கும்" என்று கூறிவிட்டுப் புறப்பட்டான் மன்னன்.

மன்மதன் தோரணவாயிலைத் துணியால் மறைத்துக் கட்டினான்.

★

இதே நேரத்தில் முதியவர் வேடத்தில் எதிரிப்படையை நோக்கிச் சென்ற நபர் படைவீரர்களால் உதயசந்திரனிடம் அழைத்துச் செல்லப்பட்டார்.

"மகாசேனாதிபதி உதயசந்திரர் அவர்களைச் சந்திக்க வேண்டும்" என்றார் முதியவர்.

"அது முடியாது முதியவரே" என்றான் உதயசந்திரன்.

"அவர்தானே படையைத் தலைமை வகிக்கிறார்?" என்று கேட்டார் முதியவர்.

"இல்லை. உதயசந்திரன் இங்கே வரவே இல்லை. வந்திருப்பது போல் அறிவிக்கப்பட்டிருக்கிறது" என்றான் உதயசந்திரன்.

"அவரைத் தானே சந்திக்கும்படி எனக்கு உத்தரவு?"

"யார் உத்தரவு?"

"போர்த்தளபதி மன்மதரின் உத்தரவு."

"உதயசந்திரன் இங்கே வந்திருப்பதாகப் போர்த்தளபதி நம்பி ஏமாந்திருக்கிறார். அதனால் என்ன? அவரது ஸ்தானத்தில் நான் இருக்கிறேன். பேச வேண்டியதை என்னிடம் பேசலாம். என்னிடம் தான் பேச வேண்டும்."

"செய்தி மிகவும் ரகசியமானது. அதிமுக்கியமானது. வெளிப்படையாக எல்லோர் முன்பும் பேச முடியாது."

"அவ்வளவு தானே? எல்லோரையும் அனுப்பி விடுகிறேன்" என்று சொல்லி அந்தணர் உட்பட அனைவரையும் அனுப்பி விட்டு முதியவரை அமரச் சொன்னான் உதயசந்திரன்.

முதியவர் அமர்ந்ததுமே "இனி நீங்கள் முதியவர் குரலில் சிரமப்பட்டுப் பேச வேண்டியதில்லை. பெண்குரலிலே நன்றாகப் பேசலாம்" என்றான் உதயசந்திரன்.

"நான்...நான்" என்று முதியவர் தடுமாறினார்.

"தடுமாற வேண்டியதில்லை. உளவாளிகள் வேடம் தரிப்பது இயல்பு தான். அதேசமயம் கவனமாக வேடம் போட வேண்டும். முதியவரின் கால்களில் சலங்கைகள் இருக்கக் கூடாது. அதோடு எனக்கு ஆயிரம் கண்கள். என் உள்ளங்கையைக் கூடச் சந்தேகிப்பவன் நான். அதைவிடு. வந்த விஷயத்தைச் சொல்."

"வேடத்தைக் களைந்து விடவா படைத்தலைவரே?"

"வேண்டாம். சலங்கையை மட்டும் அகற்றிவிடு."

முதியவர் வேடத்தில் வந்திருந்த மைவிழிக்கண்ணி சலங்கைகளைக் கழற்றி உதயசந்திரனிடமே கொடுத்து "ஐயா உங்கள் எச்சரிக்கைக்கும் அணுகுமுறைக்கும் என் நன்றி. நான் போர்த்தளபதி மன்மதனின் ஆசைநாயகி. நெல்வேலி மன்னர் உதயணர் எங்கள் போர்த்தளபதியை பலவிதங்களில் அவமானப்படுத்தியவர். கொடுமைப் படுத்தியவர். வாழ்க்கையைப் பாழ்படுத்தியவர். மன்னர் பல ஆண்டுகளாகக் காஞ்சியில் இருந்த போது நெல்வேலியைக் கட்டிக் காத்தவர் எங்கள் போர்த்தளபதி தான். இவர் மட்டுமல்ல உபதளபதிகள் பலரும் மன்னர்மீது வெறுப்படைந்திருக்கிறார்கள். இங்கே மன்னர் கொடுங்கோல் புரிவதால் மக்களும் அசதியடைந்திருக்கிறார்கள். அமைதியில்லாமல் இருக்கிறார்கள். இப்போரில் மன்னர் மாள வேண்டும் என்பது பெரும்பாலோரது விருப்பமாக இருக்கிறது. அதற்காக அவரவர்களும் அவரவர் அளவில் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள். போர் தொடங்கியபின் பலரும் அவருக்கு எதிராகத் திரும்பவும் முன்வருவார்கள். மன்னர் தோற்பது உறுதி. நிலைமை இதுவாக இருக்கும்போது நான் உங்களிடம் வரவேண்டிய அவசியம் என்ன என்று நினைக்கலாம். அதற்கு முக்கியக் காரணம் இருக்கிறது. நெல்வேலியைப் பொறுத்தவரை நீங்கள் மன்னரைத் தோற்கடித்துக் கோட்டையைப் பிடித்து விட்டாலும் அது வெற்றியாகக் கருதமுடியாது. கோட்டைக்குள் இருக்கும் விலை மதிக்க முடியாத அரிதான தோரணவாயில் ஒன்று இருக்கிறது. பழனிமலை மயில் இறகுகளாலும் சீனநாட்டுக் கண்ணாடிகளாலும், சேர நாட்டு யானைத் தந்தங்களாலும் வடிவமைக்கப்பட்டது அத்தோரணவாயில். அதைக் கைப்பற்றினால் தான் வெற்றி ஏற்கப்படும். வெற்றி பூரணமாகும். அத்தோரண வாயில் இருக்கும் இடத்தைப் போர்த்தளபதி கண்டுபிடித்து விட்டார். அதைத் தங்கள் தரப்பிலிருந்து வீரர்கள் வந்து கைப்பற்றி விட்டால் போரே நடக்க வேண்டியதில்லை. மன்னர் உங்களிடம் வந்து சரணடைவார். போர்ச் சேதமும் படைச் சேதமும் தவிர்க்கப்படும். போர் நடக்காமல், போரில் வெற்றி பெறாமல் தோரண வாயிலை எப்படிக் கைப்பற்ற முடியும் என்று நீங்கள் கேட்கலாம். அதற்கும் வழி சொல்லியிருக்கிறார் போர்த்தளபதி. அதை அதிருஷ்ட வழி என்றும் கூறலாம். தோரணவாயில் வைக்கப்பட்டிருக்கும் இடத்திலிருந்து சுரங்கப்பாதை செல்கிறது. அது கோட்டைக்கு வெளியே ஒரு கல் தொலைவில் நாக மரத்தோப்பில் முடிகிறது. தோப்பில் இருக்கும் பெரிய நாகப் புற்றை அகற்றிவிட்டால் கீழே இருக்கிறது சுரங்கப்பாதை. நான் வழி காட்டுகிறேன். உங்கள் வீரர்கள்

என்னோடு வந்தால் தோரணவாயிலைக் கைப்பற்றலாம். அதைக் கொண்டு வந்து கோட்டைக்கு வெளியே வைத்தாலே போதும். போர் தன்னாலேயே நின்றுவிடும். மன்னர் சரணடைவார். அவரை நீங்கள் என்ன செய்கிறீர்களோ அது உங்கள் விருப்பம். தோரணவாயிலைக் கைப்பற்றுவது தான் பூரணமான வெற்றி என்ற நிலை இருக்கும்போது அதைக் கைப்பற்றும் வழிகளைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்க வேண்டாம் என்று சொல்லச் சொன்னார் போர்த்தளபதி. போரில் வெற்றி பெற்ற பின்பு தோரணவாயிலைக் கைப்பற்றுவதுதான் வீரச் செயல் என்று நீங்கள் நினைப்பீர்களானால் அதற்குள் மன்னர் தோரணவாயிலை வேறு ரகசிய இடத்திற்கு மாற்றினாலும் மாற்றி விடலாம். இதுதான் விஷயம். இதை ஓலையிலும் எழுதித் தந்திருக்கிறார் போர்த்தளபதி. படித்துப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று கூறி ஓலையைக் கொடுத்தாள்.

அவள் பேச்சை முடிக்கும் வரை குறுக்கிடாதிருந்த உதயசந்திரன் தற்போது பேசமுற்பட்ட "இந்தத் திட்டத்தை போர்த்தளபதி மன்மதன் எங்களிடம் சொல்ல வேண்டிய அவசியம் என்ன?" என்று கேட்டான்.

"நெல்வேலி அரியணையில் அவரை நீங்கள் அமர்த்த வேண்டும். அவர் எதிர்பார்ப்பது அதுதான். பல்லவர் ஆதிக்கத்திற்கு உட்பட்டு ஆட்சி புரிய சம்மதிக்கிறார். அவர் ஆட்சிக்கு வந்தால் மக்கள் விரும்புவார்கள். மக்களது பேராதரவு அவருக்குத் தான் இருக்கிறது" என்றாள் மைவிழிக்கண்ணி.

"மன்னனது சகோதரி சொர்ணமுகி மன்னனை ஆதரிக்கிறாளா?"

"மன்னரின் போக்குப் பிடிக்காமல் அவரை விட்டுப் பிரிந்து விட்டார்"

"காஞ்சிக்கு வந்து யோகினியாக நடித்த தேவதேவியின் நிலை?"

"அவள் யோகினியாகவே மாறிவிட்டாள். அவளும் மன்னரை ஆதரிக்கவில்லை."

"நல்லது. நீ இங்கேயே இரு. நான் ஆலோசித்து விட்டு வருகிறேன்" என்று சொன்ன உதயசந்திரன் அவளுக்கு உணவளிக்கச் சொல்லிவிட்டு அகன்றான்.

அந்தணரையும் நிமித்திகனையும் வரச்சொல்லி மைவிழிக் கண்ணி கூறியதை அப்படியே சொன்னான்.

"போர்க்காலங்களில் இப்படியெல்லாம் ஏமாற்ற முயல்வது

"அவளது பேச்சில் பிசிறு இல்லை. ஓட்டைகள் இல்லை. காரணகாரியங்கள் இயல்பாகவே இருக்கின்றன" என்றான் உதயசந்திரன்.

"அந்தப் பெண் கூறிய மற்ற விஷயங்கள் பொய்யா மெய்யா என்று அறுதியிட்டு என்னால் கூற முடியாது. ஆனால் தோரண வாயிலைப் பற்றி அவர் கூறியதை நான் கேள்விப் பட்டிருக்கிறேன். இப்போதுதான் நினைவுக்கு வருகிறது. போரில் வெற்றி பெற்று தோரணவாயிலைக் கைப்பற்றாமல் போனால் ஒரு பயனுமில்லை. அதைக் கைப்பற்றத்தான் நாம் முதலில் திட்டமிட்டிருக்க வேண்டும். நல்ல வேளையாக நெல்வேலி போர்த்தளபதியே திட்மிட்டுத் தந்திருக்கிறான். இதைக் கௌரவக் குறைவாகக் கருதாமல் நமக்குக் கிடைத்த நல்ல வாய்ப்பாகவே கருதி கைப்பற்றி வரலாம்" என்றார் சதுர்வேதி அந்தணர்.

சுரங்கவழியில் நம்மை அழைத்துச் சென்று கொல்வதற்கான ஏற்பாடாக இருந்தால் என்ன செய்வது? என்று கேட்டான் உபதளபதி.

"நாமென்ன படைகள் முழுவதையும் அனுப்பப் போவ தில்லை. அதிகபட்சமாக இருபது பேர். அவ்வளவுதான். அவர்கள் அழிந்தால் அழியட்டும். மற்றபடி வேறொன்றும் நடக்காது" என்றான் உதயசந்திரன்.

உதயசந்திரன் சில வீரர்களை அழைத்துக் கொண்டு தோரணவாயிலைக் கைப்பற்றி வருவதாகக் கூறியபோது யாரும் அதை ஏற்கவில்லை.

"நீ இல்லாமல் போர் இல்லை. தோரண வாயில் இல்லாவிட்டால் பரவாயில்லை. ஆகவே உனது வீரர்கள் இருபது பேரை மட்டும் அனுப்பு" என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார் அந்தணர்.

இருபது வீரர்களோடு முதியவர் வேடத்தில் இருந்த மைவிழிக் கண்ணியையும் அந்தணரையும், நிமித்தகரையும் அழைத்துக் கொண்டு சுரங்கப்பாதை இருப்பதாகச் சொல்லப்பட்ட நாக மரத்தோப்பிற்குச் சென்றான் உதயசந்திரன். தோப்பின் மையப்பகுதியில் ஐந்தடி உயரப் பாம்புப் புற்று ஒன்று இருந்தது.

"இந்தப் புற்றின் கீழே தான் சுரங்கப்பாதை இருக்கிறது" என்றாள் மைவிழிக்கண்ணி.

புற்றுக்குள் பாம்பு இருக்கும் என்று உதயசந்திரனுக்குத் தோன்றவில்லை. நிமித்தகனும் அவ்வாறே நினைத்தான்.

அதை இடிக்கும்படி வீரர்களுக்கு உத்தரவிட்டான்.

அப்போது உடலை உலுக்கும் படியான அமானுஷ்யக் குரலொன்று கேட்டது.

"அதைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். புற்றை இடியுங்கள்" என்றார் அந்தணர். அவரது உதடுகள் ஏதோ மந்திரத்தை உச்சரித்தபடி இருந்தன.

புற்று அகற்றப்பட்டுச் சுத்தம் செய்யப்பட்டது. சுரங்கப் பாதைக்கான அடையாளம் எதுவுமில்லை.

அதே சமயம் பக்கத்தில் ஐந்தடி தூரத்தில் பாம்பு படையெடுப்பது போன்ற அமைப்பு ஒன்றைக் கண்டவீரர்கள் அதைச் சுத்தப்படுத்திச் சுழற்றினார்கள். புற்று இருந்த பகுதியில் மண்பரப்பு அதிர்ந்தது. மண் துகள்கள் மேலெழுந்து விழுந்தன. அதற்குக் கீழ் இருந்த இரும்பாலான மூடியொன்று மேலெழுந்தது. அதற்குக்கீழ் பத்தடிக்குப் பத்தடி சதுரத்தில் சுரங்கப்பாதையும் அதில் இறங்குவதற்கான படிகளும் தென்பட்டன. பந்தங்களைத் தயார் செய்து படிகளில் வீரர்களை இறக்கினான் உதயசந்திரன்.

மைவிழிக் கண்ணிக்கு அந்த அனுபவம் புதியதாக இருந்ததால் பயந்தாள். அவளுக்குத் தைரியம் கூறி அனுப்பி வைத்தான் உதயசந்திரன்.

அவள் கூறிய கணக்கு சரியாகவே இருந்தது. அவளும் வீரர்களும் சுரங்கப்பாதையில் நடந்து அவள் இல்லத்தை அடைந்தார்கள். இல்லத்தில் யாரும் இல்லை. எந்தப் பிரச்சனையும் எழவில்லை.

"இதுதான் தோரணவாயில். அப்படியே எடுத்துச் செல்லுங்கள்" என்றாள் கண்ணி.

வீரர்கள் அவ்வாறே தூக்கிச் சென்றார்கள். அனைத்தும் பகல் நேரத்திலேயே நடந்தன.

அன்றிரவு மன்னன் மன்மதனை அழைத்தான்.

"தோரண வாயிலைப் பார்த்துவிட்டு வருவோம் வா" என்றான்.

திகைத்தான் மன்மதன்.

★★★



நெல்வேலிப் போர்

தோரணவாயில் சேர வேண்டிய இடத்திற்குப் போய்ச் சேர்ந்துவிட்ட நிலையில் அதைப் பார்க்கவேண்டும் என்று மன்னன் கேட்டது மன்மதனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. மன்னன் அது பற்றித் தெரிந்தே கேட்கிறானோ என்று சந்தேகமாகவும் இருந்தது.

சற்றே சுதாரித்துக் கொண்டு "நேற்றுதான் பார்த்தோமே மன்னவா!" என்றான்.

"நேற்று பார்த்தால் இன்று பார்க்கக் கூடாது என்று தடை இருக்கிறதா? நான் பார்ப்பதற்கு காலதேச வர்த்தமானங்கள் உண்டா?" என்று கேட்டான் மன்னன்.

"தோரணவாயில் பத்திரமாக இருக்கிறது மன்னவா."

"பிறகென்ன? பார்த்துவிட்டு வருவதில் உனக்கென்ன கஷ்டம்?"

"எனக்குக் கஷ்டம் எதுவுமில்லை மன்னவா. பத்திரமாக இருக்க வேண்டும் என்றுதானே என்னிடம் ஒப்படைத்தீர்கள்? அப்படி ஒப்படைத்துவிட்டு நேற்று இன்று நாளை என்று தினமும் அதைச் சரிபார்க்க முற்படுவது என்மீது தங்களுக்கு நம்பிக்கையில்லை என்பதையே புலப்படுத்துகிறது. தங்களின் சந்தேகம் எனக்கு வேதனையைத் தருகிறது."

"நீ ரொம்பவும் கவலைப்படுகிறாய். சரி விடு. நாளைக்குப் பார்த்துக் கொள்வோம்" என்றான் மன்னன்.

மன்மதன் சற்றே ஆறுதலடைந்தான்.

"தோரணவாயில் எதிரியிடம் போய்ச் சேர்ந்திருக்கும். நாளைக்கு அதைக் கோட்டைக்கு முன்னால் கொண்டுவந்து வைத்து விடுவார்கள். மன்னன் அதைப் பார்த்ததும் அதிர்ச்சியும் அவமானமும் அடைவான். போரினால் பயனில்லை என்பதை உணர்வான். எதிரியிடம் போய்ச் சரணடைவான். பிறகு எல்லாமே திட்டமிட்டபடி நடக்கும். நான் அரியணையில் அமர்வேன்" என்று தனக்குள் கூறிக்கொண்டான்.

ஆனால் மறுநாள் அவன் எதிர்பார்த்தபடி தோரண வாயிலை எதிரிகள் கோட்டைக்கு முன்னால் கொண்டு வந்து வைக்காததால் குழம்பினான். சேவகர்கள் வந்து மன்னன் அழைப்பதாகக் கூறினார்கள்.

சென்றான்.

"போர்த்தளபதி! நாம் நாளை எதற்குக் கடத்திக் கொண்டிருக்கிறோம் என்பது விளங்கவில்லை. அப்பி வைத்த மண்ணைப் போல் இருப்பதால் எந்தப் பயனும் இல்லை. நமது படையில் பத்தாயிரம் பேர் கோட்டைக்கு வெளியே இருக்கிறார்கள் அல்லவா? அவர்களை வரச் சொல்லிப் புறாக்கள் மூலம் செய்தியனுப்பி விட்டேன். அவர்கள் நான்காகப் பிரிந்து கோட்டையின் நான்கு பக்கங்களிலும் எதிரிக்குப் பின்புறத்தில் வந்து விடுவார்கள். நாம் உள்ளேயிருந்து நான்கு வாசல்கள் வழியாக வெளியேறி எதிரியைத் தாக்குவோம். எதிரி நம் படைகளுக்குள் சிக்கிக் கொண்டு அழிவான்" என்றான் மன்னன்.

தான் எதிர்பார்த்த தோரணவாயில் கண்ணில் படாததால் அதற்கான காரணத்தை அறியாத போர்த் தளபதி "மன்னவா! தங்கள் திட்டம் ஆபத்தான திட்டம் எதிரியின் படைபலம் அறியாமல் மோதுவது சரியல்ல" என்றான்.

"வேறு திட்டம் எதையாவது வைத்திருக்கிறாயா?" என்று கேட்டான் மன்னன்.

"இன்று இரவு தாக்குதலை மேற்கொண்டால் அனுகூலமாய் இருக்கும்" என்றான் மன்மதன்.

"அப்படியானால் அதற்கு நிரம்ப நேரமிருக்கிறது. நாம் போய் தோரணவாயிலைப் போய் பார்த்துவிட்டு வந்து விடுவோம்" என்றான் மன்னன்.

மன்மதனுக்குத் தலையைப் பிய்த்துக் கொள்ளலாம் போலிருந்தது.

"இந்த மன்னன் என்னை எதற்காகச் சீண்டிக் கொண் டிருக்கிறான்? தொல்லை தாங்க முடியவில்லையே!" என்று எரிச்சலடைந்தான்.

அப்போது அங்கே வந்த சங்கன் "மன்னவா! மைவிழிக் கண்ணியின் இல்லத்தில் இருந்த தோரண வாயிலைக் காணவில்லை" என்றான்.

"நன்றாகப் பார்த்தாயா சங்கா? நீ கூறுவது மிகப் பெரிய விஷயம்" என்றான் மன்னன்.

"நன்றாகப் பார்த்துவிட்டுத் தான் சொல்கிறேன் மன்னவா."

மன்னன் மன்மதனைப் பார்த்தான்.

"தோரணவாயில் காணவில்லையாம். என்ன சொல்கிறாய் மன்மதா?" என்று கேட்டான்.

"இது அபாண்டம். சங்கன் கூறுவது பொய்" என்றான் மன்மதன்.

"போய்ப் பார்த்து விடலாம் வா. பொய்யா மெய்யா என்பது தெரிந்துவிடும்" என்று கூறி மன்னன் இருவரையும் மைவிழிக் கண்ணியின் இல்லத்திற்கு அழைத்துச் சென்றான்.

அங்கே தோரணவாயில் இல்லை.

"இப்போது என்ன சொல்கிறாய் மன்மதா?" என்று கேட்டான் மன்னன்.

"எனக்கொன்றும் புரியவில்லை மன்னவா" என்றான் மன்மதன்.

"மன்மதா! என்ன பேசுகிறோம் எதைப் பற்றிப் பேசுகிறோம் என்பதை யோசித்து விட்டுப் பேசு. சபர குலத்தின் கௌரவ அடையாளமான தோரணவாயில் காணவில்லை என்றால் அது மிகப்பெரிய விஷயம். பாதுகாப்பாக இருக்கும் என்றுதான் அதை உன்வசம் ஒப்படைத்தேன். அது இங்கே பத்திரமாக இருப்பதாக நேற்று கூட என்னிடம் சொன்னாய். இப்போது காணவில்லை. என்ன ஆயிற்று?"

"மர்மமாக இருக்கிறது மன்னவா! தோரணவாயிலை இங்கே வைத்துவிட்டுப் பாதுகாப்பிற்காக மைவிழிக் கண்ணியை நியமித்திருந்தேன்."

"அவளையா? அவளையா பாதுகாப்பிற்கு வைத்திருந்தாய்?"

"அவள் மட்டுமல்ல. என் அந்தரங்க வீரர்கள் பத்துப் பேரையும் நியமித்திருந்தேன்."

"இப்போது யாரையும் காணோமே!"

"எனக்கு அவர்கள் மீது தான் சந்தேகம் வருகிறது."

"என்ன சொல்கிறாய் மன்மதா? ஆசைநாயகி மீதும் உன் அந்தரங்க வீரர்கள் மீது சந்தேகமாக இருக்கிறதா?"

"ஆம் மன்னவா. ஆசை அவர்களைத் துரோகிகளாக மாற்றி யிருக்கலாம்."

"அதனால்? தோரண வாயிலை அவர்கள் தூக்கிச் சென்றிருப்பார்கள் என்கிறாயா? அது எப்படி முடியும்? எங்கே கொண்டு செல்ல முடியும்?"

"தெரியவில்லை மன்னவா."

"தெரிய வேண்டும் மன்மதா. தோரணவாயில் உன் பாதுகாப்பில் இருந்தது. அது காணவில்லை என்றால் நீ தான் பதில் கூற வேண்டும். அத்தோரணவாயில் பறிபோய் விட்டதென்றால் நமது கௌரவம் பறிபோய் விட்டது என்று அர்த்தம். இனி நாம் போரை நடத்தி வெற்றி பெற்றாலும் பயனில்லை. தெரியுமல்லவா?"

"நான் தேடிக் கண்டு பிடிக்கிறேன் மன்னவா?"

"காணாமல் போனது எப்படி என்பதே தெரியாத நீ அதை எப்படிக் கண்டுபிடிப்பாய்? போர் தொடங்கப் போகிற நேரத்தில் தோரணவாயிலைத் தேடிக் கொண்டு திரியப் போகிறாயா? போரை யார் நடத்துவது?"

"ஒருநாள் சந்தர்ப்பம் கொடுங்கள் மன்னவா."

"சந்தர்ப்பம் கொடுப்பதற்கு இனி இடமில்லை. உண்மையைச் சொல்லிவிடு. போர்த்தளபதியான உன்னைச் சித்திரவதை செய்யும் நிலைக்கு என்னை ஆளாக்கி விடாதே."

"மன்னவா! எனக்கு ஒன்றும் தெரியாது."

"ஆனால் எனக்கு எல்லாம் தெரியும்."

"தெரியுமா?"

"ஆம். தோரணவாயில் இப்போது இருப்பது எதிரியின் பாசறையில்."

"ஐயோ!"

"அதைப்பற்றி எதிரிகளிடம் சொல்லியது உன் ஆசைநாயகி."

"ஐயோ."

"சொல்லச் சொன்னவன் நீ."

"இல்லை."

"தோரணவாயிலை இங்கே உள்ள சுரங்கப்பாதை மூலம் எதிரிகளிடம் கொண்டு போய்ச் சேர்த்தது உன் ஆசைநாயகி. தோரணவாயில் எதிரிகளிடம் சிக்கிவிட்டால் போர் நின்றுவிடும் என்றும் நான் சரணடைந்து விடுவேன் என்றும் கணக்குப் போட்டவன் நீ. அரியணை ஏறும் துராசையால் துரோகியானவன் நீ."

"இல்லை. இல்லை. இல்லவே இல்லை. இது கட்டுக் கதை."

"கதையல்ல மன்மதா. உண்மை. அதை உன் ஆசைநாயகியே சொல்லிவிட்டாள். இந்த இடம் எனது பழைய இல்லம். இங்கே

இருக்கும் சுரங்கம் எனக்குத் தெரியும். உன்னைச் சோதிப்ப தற்காகவே தோரணவாயிலை உன்னிடம் ஒப்படைத்தேன். இங்கே உள்ள சுரங்கத்தை நீ அவள் மூலம் அறிந்து தோரண வாயிலை எதிரியிடம் ஒப்படைத்து விட்டாய். இனி உன் கனவுகள் நிறைவேற வேண்டும். சரிதானே?"

"இல்லை மன்னவா. மைவிழிக் கண்ணி உங்களிடம் என்னைப் பற்றித் தவறாகச் சொல்லியிருக்கிறாள். இங்கே சுரங்கம் இருப்பது எனக்குத் தெரியாது. அவளுக்குத் தெரிந் திருக்கிறது. அவள் கைகாரி. கொடிய நோக்கம் கொண்டவள். காமத்தால் காரியத்தைச் சாதிக்கக் கூடிய கீழ்த் தரமானவள். மோசமானவள். நாசக்காரி. நேசம் கொண்டவள் நடித்து மோசம் செய்யும் சதிகாரி. வஞ்சகி. தீய நோக்கத்தில் அவள்தான் இந்த காரியத்தைச் செய்திருக்கிறாள். அவளைப் பிடித்து விசாரித்தால் உண்மை தெரிந்து விடும்."

"அப்படியே செய்து விடுவோம்" என்று சொன்ன மன்னன் சங்கனிடம் சைகை காட்டினான்.

அதையடுத்து சங்கன் வெளியே சென்று மைவிழிக் கண்ணியோடு வந்தான்.

அவளைக் கண்ட மறுகணமே மன்மதன் இமைக்கும் நேரத்தில் தன் இடையில் இருந்த குறுவாட்கள் இரண்டை எடுத்து அவள்மீது வீசினான். ஒன்று அவள் மார்பிலும் மற்றொன்று வயிற்றுக்குக் கீழும் தைத்துவிட்டதால் கண்ணி கீழே விழுந்தாள். உடல் துடித்து இறந்தாள்.

இதற்கிடையில் சங்கன் பாய்ந்து போய் தனது இரும்புக் கரங்களால் மன்மதனின் கழுத்தை வளைத்தான். வீரர்கள் வந்து கைது செய்தார்கள்.

கண்ணியின் சடலத்தை அப்புறப்படுத்த உத்தரவிட்ட மன்னன் "இந்தத் துரோகி ஒரு கணம் கூட உயிரோடு இருக்கக் கூடாது. எதை வேண்டுமானாலும் செய்யக்கூடிய வஞ்சகன். இவனது துரோகத்தை மக்களுக்கு அறிவித்துவிட்டுக் கழுவில் ஏற்றுங்கள்" என்றான்.

மன்மதன் அன்றே கழுவில் ஏற்றப்பட்டான்.

அவனது ஆசை, வஞ்சகம், துரோகம் ஆகியவை அவனோது கழுவில் ஏறின.

"மன்னவா! தோரணவாயில் எதிரிகளிடம் போய் விட்டதே! என்ன செய்வது?" என்று கேட்டான் சங்கன்.

"மன்மதனை நம்பித் தோரணவாயிலை நான் ஒப்படைப்பேன் என்றா நினைக்கிறாய்? அவனிடம் ஒப்படைக்கப்பட்டது போலியான தோரணவாயில். போலி தான் எதிரிகளிடம் சென்றிருக்கிறது. உண்மையான வாயில் இருக்க வேண்டிய இடத்தில் பத்திரமாக இருக்கிறது" என்றான் மன்னன்.

சுரங்கம் மூலம் கைப்பற்றப்பட்ட தோரணவாயில் போலி என்பதைச் சதுர்வேதி அந்தணர் கண்டுபிடித்தார்.

"இதில் பதிக்கப்பட்டுள்ள தந்தங்கள் உண்மையானவை யல்ல. உண்மையான தந்தங்கள் லேசாகப் பழுப்பேறி இருக்கும். இவையோ வெள்ளை வெளேரென இருக்கிறது. கீறினால் உடைகிறது. இது போலியானது. போலியான தோரணவாயிலை வைத்து உதயணன் ஏமாற்றியிருக்கிறான். போர்த்தளபதி மன்மதனும் அவனது ஆசைநாயகியும் ஏமாந்திருக்கிறார்கள்" என்றார் அந்தணர்.

உதயசந்திரனின் முகம் சிவந்தது.

"இன்றே கோட்டையைத் தாக்கலாம்" என்றான்.

"வேண்டாம் தளபதி. இரண்டு நாட்களுக்கு உங்களுக்குச் சந்திராஷ்டமம். எந்த அலுவலிலும் இறங்க வேண்டாம்" என்றான் நிமித்திகன்.

இரண்டு நாட்கள் கழிந்தன.

உதயணனிடமிருந்து அம்புச் செய்தி வந்தது.

"உதயசந்திரா! கோட்டைப் போரின் மூலம் மக்களை அழிக்க வேண்டாம். நீ வீரனாக இருந்தால் பொன்பனைப் பெருவெளியில் நேருக்கு நேர் படைகளோடு சந்திப்போம். தயாரா?" - உதயணன்

- என்றிருந்தது ஓலையில்.

★

நெல்வேலியிலிருந்து கிழக்கே ஒருகாத தூரத்தில் இருந்த பொன்பறைப் பெருவெளியில் உதயசந்திரன் தலைமையிலான பல்லவர் படைகளும் உதயணன் தலைமையிலான சபரர் படைகளும் அணிவகுத்து நின்றன.

சபரர் படை அணிவகுப்பு மாறிக் கொண்டே இருந்ததைக் கண்ட உபதலைவன் உதயசந்திரனிடம் "எதிரிப்படைகள் ஏதோ வியூகம் அமைக்கிறார்கள் போலிருக்கிறது படைத்தலைவரே" என்றான்.

"உதயணனுக்கு வடநாட்டுச் சம்பந்தம் உண்டு. வடநாட்டில் தான் படை வியூகங்கள் பிரசித்தம். அந்த வகையில் அங்கிருந்து

கற்ற வியூகங்களில் எதையாவது இங்கே அமைக்கிறான் போலிருக்கிறது. அவன் விருப்பப்படி எந்த வியூகத்தையாவது அமைத்துக் கொள்ளட்டும்" என்றான் உதயசந்திரன்.

"நாம் பதில் வியூகம் அமைக்க வேண்டாமா?" என்று கேட்டான் உபதலைவன்.

"அதெல்லாம் வேண்டியதில்லை உப தலைவரே. இங்கே இருக்கும் எண்ணிக்கை அதிகமல்ல. இந்தப் போர் ஒன்றும் குருசேத்திரப் போரைப் போலப் பலநாட்களுக்கு நடைபெறப் போகும் போரும் அல்ல. அநேகமாக நாளையே கூட இந்தப் போர் முடிந்து விடலாம். எச்சரிக்கையாக இருந்தால் போதும்" என்றான் உதயசந்திரன்.

"எதிரி வியூகம் அமைக்க முற்படுவதைப் பார்த்தால் போர் நாளை விடியற்காலையில் தான் துவங்கும் என்று தெரிகிறது. இப்போது மாலை வேளையாக இருப்பதாலும் இரவுநேரம் நெருங்குவதாலும் வீரர்கள் அணிவகுத்துவிட்டு போருக்கு ஆயத்தமாவார்கள் என்று நினைக்கிறேன்" என்றான் உபதலைவன்.

"எதுவானாலும் நமக்குத் தேவை எச்சரிக்கை" என்றான் உதயசந்திரன்.

பிறகு அந்தணரிடமும் நிமித்தகனிடமும் பேசினான் உதயசந்திரன்.

"உன் போர்த் திட்டம் என்ன உதயசந்திரா?" என்று கேட்டார் சதுர்வேதி அந்தணர்.

"திட்டம் எதுவுமில்லை அந்தணரே."

"திட்டம் எதுவும் இல்லாமல் எப்படிப் போரிடப் போகிறாய்?"

"இது நேருக்கு நேர் நடைபெறப் போகும் நேர்வழிப் போர். வீரத் தாக்குதல் தான் நடைபெறப் போகிறது. அவரவர் தன் ஆயுதங்களைக் கொண்டு போரிடப் போகிறார்கள். இதற்கு என்ன திட்டம் தீட்ட வேண்டியிருக்கிறது?"

உதயசந்திரன் பல போர்களைக் கண்டவனாதலால் இந்தப் போரைப் பற்றிப் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.

அது தவறு என்பதை அன்றிரவு உணர்த்தினான் உதயணன்.

அன்று இரவுப் பொழுது தொடங்கியதும் பல்லவ வீரர்கள் உணவருந்தத் தொடங்கினார்கள். அதை உணர்த்தும் வகையில் வானத்தில் ஒரு எரியம்பு விடப்பட்டது. அதைக் காணும் எதிரிகள்

உணவு வேளை என்பதை அறிந்து தாக்குதல் எதையும் நடத்தாமல் இருக்க வேண்டும்.

உதயணன் தரப்பிலும் அதுபோலவே வானத்தில் ஒரு எரியம்பு விடப்பட்டது.

ஆனால் மறுகணம் நிலைமாறியது.

உதயணனின் படைத்தரப்பிலிருந்து எரியம்புகள் சரமாரியாக வந்து பல்லவர் படைமீது விழுந்தன. உணவருந்திக் கொண்டிருக்கும்போது தாக்குதல் தொடுக்கக் கூடாது என்பது போர்விதியாக இருந்தாலும் உதயணன் படைகள் அச்சட்டத்தை அறவே கைவிட்டுவிட்டு பல்லவர் படையை நோக்கி வேகமாகவும் சத்தமில்லாமலும் நெருங்கி எரியம்புகளைச் சரமாரியாக வீசியதால் அவை ஆயுதம் தரிக்காமல் உணவருந்திக் கொண்டிருந்தப் பல்லவ வீரர்கள் மீது விழுந்ததால் அவர்கள் தீக்காயம் பட்டு அலறினார்கள். அதோடு உதயணனின் படைகள் வாண உருண்டைகளையும் இடை இடையே கொளுத்தி வீசியதால் தீ உண்டாகி பல்லவர் படை சற்றே சிதறியது. உதயசந்திரன் கொம்புகளை ஊதிப் படையைப் பின்வாங்கச் செய்தான். அப்போது பல்லவர் படையின் பின்புறம் பெரும் ஆரவாரம் எழுந்தது.

உதயணன் தனது படையின் ஒரு பிரிவை முற்றுகைக்கு முன்பாகவே கோட்டைக்கு வெளியே அனுப்பியிருந்தான். அந்தப் படை பல்லவர் படைக்குப் பின்புறம் வந்து கோரத் தாக்குதல் நடத்தியது. முன்னே இருந்த படைகள் எரியம்புகளையும், வாணங்களையும், ஈட்டிகளையும் வீசிய படியும், சரளைக் கற்களை வீசியபடியும் பல்லவர் படையை நோக்கி முன்னேறியது. இத்தாக்குதல் திடீரென நடந்ததாலும் போர் நெறிக்குப் புறம்பாக உணவு வேளையில் நடந்ததாலும் பல்லவர் படை நொறுங்கியது.

உதயசந்திரன் இருமுரசுகளை ஒலிக்கச் செய்தான். தனது படைகளை இரண்டாகப் பிரித்து உதயணன் படைகளை முன்னும் பின்னுமாக எதிர்க்கச் சொன்னான். இரவு நேரமாக இருந்ததால் எதிரிகளை இனம் கண்டு தாக்குவது சிரமமாக இருந்தது பல்லவர் படைகளுக்கு. உதயணன் படைகளுக்கோ தங்களுக்கு இடையில் சிக்கியிருப்பது பல்லவர் படை என்பதால் கண்மூடித்தனமாகத் தாக்கியது.

தனது தரப்பில் எதிர்பாராத விதமாக சேதம் அதிகமாகி விட்டதை அறிந்த உதயசந்திரன் அதற்குக் காரணம் எதிரியின் அதர்மப் போர் மட்டும் காரணமல்ல என்பதையும் தனது அலட்சியமும் ஒரு காரணம் என்பதை உணர்ந்தான். இரவுப்

போர் இதே விதமாக நீடித்தால் சேதாரம் அதிகமாகும் என்பதை உணர்ந்து சங்கேத ஒலிகளை எழுப்பினான். தனது படைகளைக் கோட்டையை நோக்கி ஓடும்படிக் கட்டளையிட்டான்.

இரவில் போரிடுவதை விட கோட்டையை நோக்கி ஓடுவது வீரர்களுக்கு எளிதாக இருந்தது தாறுமாறாக ஓடினார்கள். எதிரி யார் என்று புரியாத குழப்பம். யார் யாரைத் துரத்துவது என்று குழப்பம். எங்கும் ஆரவாரம். உதயணனுக்குத் தற்போது என்ன செய்வதென்று விளங்கவில்லை. தாக்குங்கள் தாக்குங்கள் என்று குரல் மட்டும் கொடுத்தானே தவிர வேறெதுவும் செய்ய முடியவில்லை.எல்லோருமே கோட்டையை நோக்கி ஓடினார்கள்.

பெருவெளியில் பல்லவர் படையை இழுத்து தனது தந்திரங்களால் தோற்கடித்து விடலாம் என்பதில் உதயணன் உறுதியாக இருந்ததால் கோட்டையில் பாதுகாப்பு வீரர்களை அகற்றித் தன்னோடு கொண்டு வந்திருந்தான். பல்லவர் படை கோட்டையை அடைந்தால் அங்கே எதிர்ப்பதற்குச் சொற்ப வீரர்களே இருப்பார்களாதலால் என்ன செய்வது என்பது அவனுக்கு விளங்கவில்லை.

இதற்கிடையில் கோட்டையை நெருங்கிய பல்லவர் படை உதயணனை வாழ்த்திக் கோஷமிட்ட படியால் கோட்டைக் கதவுகள் திறந்தன. ஏறக்குறைய பொழுது விடியும் நேரத்தில் பல்லவர் படை கோட்டைக்குள் நுழைந்து கதவுகளைச் சாத்தின. கோட்டைக்குள் இருக்கும் முரசுகளை இடைவிடாமல் முழக்கின. கோட்டையை நோக்கி வந்த உதயணன் படைமீது மதிலிலிருந்து பொறிகள் மூலம் அம்புகளை எய்தன. அங்கே வைக்கப்பட்டிருந்த பாறைகள் உருட்டி விடப்பட்டன. பாதி சூட்டில் இருந்த எண்ணெய்க் கொப்பரைகள் கவிழ்க்கப்பட்டன. பொழுது விடிந்துவிட்டதால் எதிரிகளைத் தாக்குவதற்கு இலகுவாக இருந்தது. தனது படைகள் தற்போது நாசமாகி வருவதை உணர்ந்த உதயணன் போர்நிறுத்தத் தாரைகளை ஊதினான்.

★★★



திருக்குறுங்குடி

எந்த நாட்டிலும் -

எந்தப் போரிலும் -

நடைபெறாத திருப்பம் நெல்வேலிப் போரில் நடந்தது.

போர் முடிவு பெறாத நிலையில் எதிரிகள் கோட்டைக் குள்ளும் கோட்டைக்குரியவர்கள் கோட்டைக்கு வெளியேயும் நிற்கும் சூழ்நிலை.

உதயணன் இதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

தன்னையும் தன் படைகளையும் அழிக்காமல் பல்லவர் படை கோட்டைக்குள் போய்விட்டது.

உள்ளே போன உதயசந்திரன் இந்நேரம் அரியணையைக் கைப்பற்றியிருப்பான்.

எதிர்த்தவர்களை வெட்டி வீழ்த்தியிருப்பான்.

ஆகா!

எத்தனை ஏமாற்றம்! எத்தனை இகழ்ச்சி!

பொழுது விடிவதற்குள் பல்லவர் படையை அதாஹதம் செய்து அழித்து விடலாம் என்றல்லவா இரவிலேயே அவர்கள் எதிர்பாராத விதமாகப் போர் நெறிகளுக்கு மாறுபட்ட தாக்குதலை ஆரம்பித்தேன்? நல்லபடியாகத் தானே தாக்குதலும் நடந்தது? பல்லவர் தரப்பில் சேதாரமும் அதிகமாகத் தானே விழுந்தது.

நமது தாக்குதலை எதிர்கொள்ள முடியாமல் பல்லவர் படை தோற்று ஓடும் என்றல்லவா எதிர்பார்த்தேன்!

ஆனால் உதயசந்திரன் இப்படிச் செய்துவிட்டானே!

இப்படியொரு யோசனை எப்படித் தோன்றியது அவனுக்கு?

என்ன இது விசித்திரமான நிலை!

அவர்களைப் பெருவெளிக்கு அழைக்காமல் கோட்டை யிலிருந்தே போர்தொடுத்திருக்கலாமே!

எல்லாம் பைத்தியக்கரத் தனமாக போய் விட்டதே!

கோட்டைக்கு வெளியே வெட்ட வெளியில் கிடப்பது எவ்வளவு அவமானம் என்று நினைத்தானே தவிர தன் வினை தான் தன்னைச் சுடுகிறது என்பதை உதயணன் உணரவில்லை.

தன்னைச் சுற்றியிருந்த வீரர்களைப் பார்க்கவே கூசியது அவனுக்கு.

பொழுது நன்றாக விடிந்து விட்ட நிலையில் வீரர்கள் சிலர் வந்து "மன்னவா! தளபதி சங்கன் வீரமரணம் எய்தி விட்டார்" என்றார்கள்.

"சடலத்தைத் தூக்கிக் கொண்டு ஆனந்தக் கூத்தாடுங்கள்" என்றான் உதயணன் வெறுப்போடு.

உபதளபதி வந்தான் "நமது தரப்பில் பத்தாயிரம் வீரர்கள் இல்லை" என்றான்.

"செத்து விட்டார்கள் என்று சொல்" என்றான் மன்னன்.

"இல்லை மன்னவா! வீரமரணம் எய்தியவர்கள் கொஞ்சம் பேர் தான். எட்டாயிரத்திற்கு மேற்பட்டவர்கள் காணவில்லை" என்றான் உபதளபதி.

"காணவில்லை என்றால்?"

"ஓடிப் போயிருப்பார்கள் என்று கொள்ளலாம்."

"எதற்காக ஓடிப் போக வேண்டும்?"

"தங்களைப் பிடிக்காமல் போனதால்."

"இது என்ன வினோதமான காரணம்?"

"வீரர்கள் பலருக்குத் தங்களது அதர்மப் போர் முறை பிடிக்கவில்லை."

"போர் முறையை வகுக்க வேண்டியவன் நான். பின்பற்ற வேண்டியவர்கள் வீரர்கள். இதுதானே நடைமுறை! இதுதானே சட்டம்! என் முடிவைப் பற்றிப் பேச இவர்களுக்கென்ன உரிமை இருக்கிறது?"

"அதோடு மன்னவா! போர்த்தளபதி மன்மதனை நீங்கள் கழுவில் ஏற்றியது நிறைய வீரர்களுக்குப் பிடிக்கவில்லை. அவர் தண்டிக்கப்பட்ட விதம் அவர்களைப் பாதித்திருக்கிறது."

"மன்மதன் என்னவெல்லாம் செய்தான் தெரியுமா? அவன் பெருந் துரோகி. அவனது துரோகங்களை மக்களுக்கு அறிவித்து விட்டுத்தான் தண்டனையை நிறைவேற்றினேன்."

"இருந்தாலும் போர் நடக்கவிருந்த நிலையில் தண்டனை யளித்ததை அவர்களால் ஜீரணிக்க முடியவில்லை. தளபதிக்கே இந்த கதி என்றால் தங்கள் நிலை என்ன என்று அஞ்சுகிறார்கள்."

"நீ செய்தியைச் சொல்கிறாயா? என்னை மிரட்டுகிறாயா?"

"தங்களை நான் ஏன் மிரட்ட வேண்டும் மன்னவா! சாட்சி தான் கண்முன் விரிந்திருக்கிறதே!"

"என்ன சொல்கிறாய்?"

"உள்ளே இருக்க வேண்டிய நாம் வெளியே இருக்கிறோம். வெளியே இருந்தவர்கள் உள்ளே போய் விட்டார்கள். அரியணையைக் கைப்பற்றியிருப்பார்கள். நமது இந்த நிலை எல்லோருக்கும் கண்கூடாகத் தெரியும்போது தங்களை மிரட்டி என்ன ஆகப் போகிறது?"

"இப்போது நமது வீரர்கள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள்?"

"இருபதாயிரம் இருக்கலாம். ஆனால்.."

"ஆனால் என்ன?"

"இந்த எண்ணிக்கை நிலைக்குமா என்பது தெரியவில்லை."

"ஏன்? இவர்களும் ஓடத் தயாராகி விட்டார்களா?"

"ஆம்."

"ஓடுபவர்கள் ஓடட்டும். மிஞ்சியவர்களைக் கொண்டு நான் போரிடுவேன். வீரர்கள் எல்லோரையும் கோட்டைச் சுவர்களை இடிக்கச் சொல்லுங்கள். நமக்கு இல்லாத கோட்டை எதிரிக்கு எதற்கு?"

"மன்னவா! இந்தக் கோட்டை தங்களுடையது என்றாலும் உள்ளே இருப்பது மக்கள். அவர்களைப் பாதுகாக்க கோட்டை அவசியம்."

"மக்கள்! எதிரி உள்ளே இருக்கிறான். அவனை அடித்து விரட்டாமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் இவர்கள் என் மக்களே அல்ல. சாகட்டும்."

மன்னன் மதிகெட்டவனாய் - ஆத்திரக்காரனாய் - தன்னிலை உணராமல் இப்படிப் பேசியபோது கோட்டை மதில் மீது ஒற்றை முரசு ஒன்று பெரிதாக முழங்கியது. காஞ்சியின் சமுத்ர கோஷத்தை நினைத்துக் கொண்டான் உதயணன். அந்த முரசுக்கு ஈடான முரசு ஒலித்ததைக் கண்டதுமே அதை எதிரிகள் கைப்பற்றி விட்டதை உணர்ந்து வேதனையடைந்தான் உதயணன்.

கோட்டை வாயில் திறந்தது.

பெருமாள் பட்டரும் முனிவரும் வந்தார்கள்.

மன்னனைப் பார்த்து "உங்கள் உத்தேசம் என்ன? என்று கேட்டுவரச் சொன்னான் உதயசந்திரன்" என்றார் பட்டர்.

"என் உத்தேசம் இருக்கட்டும். அவன் உத்தேசம் என்ன?" என்று கேட்டான் உதயணன்.

"கோட்டை தன் வசம் வந்து விட்டதால் போர் முடிந்து விட்டதாகக் கருதச் சொன்னான். நீங்கள் போரிட விரும்பினாலும் தயாராக இருப்பதாகக் கூறினான்."

"கோட்டையைக் கைப்பற்றிய விதம் வீரச் செயலா?"

"நான் கேட்டேன். உங்களது தாக்குதல் சரியான போர்முறை என்றால் தனது செயலும் சரி என்கிறான்."

"பட்டரே! கோட்டையைக் கைப்பற்றிவிட்டால் அது வெற்றியாகி விடாது. தோரணவாயிலைக் கைப்பற்ற வேண்டும். உங்களுக்கு இது தெரியாதா?"

முனிவர் குறுக்கிட்டு "தோரண வாயிலை நான் உதயச்சந்திரனிடம் ஒப்படைத்து விட்டேன்" என்றார்.

"அது இருக்கும் இடம் உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"எனக்கு எல்லாம் தெரியும்."

"எல்லாம் தெரிந்த முனிவர் துரோகம் செய்யலாமா?"

"உன் நன்மைக்குத் தான் செய்தேன். நீ வாழ வேண்டும். நெல்வேலிக்கு மன்னனாக வேண்டும்." என்றார் முனிவர்.

"நான் கெட்டவன் தான். ஆனால் மானங்கெட்டவன் அல்ல. உயிரை நேசிப்பவன் தான். ஆனால் யாசிப்பவன் அல்ல. நான் துரோகங்களைச் செய்ததால் என்னைச் சுற்றி துரோகிகளே இருந்தார்கள். என் உயிரை எமனாலும் பறிக்க முடியாது. என்னால் தான் முடியும்" என்று சொன்ன உதயணன் சற்றும் எதிர்பாராத விதத்தில் உடைவாளை உருவி கழுத்தில் வீசிக் கொண்டான்.

ஏமாற்றம், அவமானம், வேதனை, வெறுப்பு ஆகிய உணர்ச்சிகள் அவனது கைகளுக்கு அசுர பலத்தைக் கொடுத்த தால் அந்த பலம் வாளுக்கும் வந்தது. தலை அறுபட்டது. மண்ணிலே விழுந்தான் உதயணன். அவனது மண்ணில் அவனது உடல் துடித்தது. அடுத்த சில கணங்களில் அந்த உடல் மண்ணோடு மண்ணாகியது.

"மன்னரது பூதவுடலை கோட்டைக்குள் எடுத்துச் செல்லுங்கள்" என்றார் பட்டர்.

சோழநாட்டுத் திருப்பதிகளுக்கெல்லாம் விஜயம் செய்து பெருமான் தரிசனம் செய்து மங்களாசாசனம் செய்த மங்கை வேந்தனாகிய திருமங்கையாழ்வார் திருவரங்கத்திற்கு வந்தபோது கண்கள் பனித்தன.

"அரங்கா! உன்னைத் தரிசித்து எவ்வளவு காலம் ஓடிவிட்டது! முரடனாயும் மூர்க்கனாயும் இருந்தபோது உன்னைத் தரிசித்தேன். தரிசிக்கவில்லை. பார்த்தேன். அவ்வளவு தான். அதற்குப் பின் நீ தானே என் நினைவுகளை மாற்றினாய்? திருப்பணி திருப்பணி என்று என்னைப் பாராயணம் செய்யும்படி அல்லவா மாற்றி விட்டாய்? உன் சங்கல்பத்தின் படி திருப்பணியை முடித்தபிறகு தரிசிக்க வந்தேன். நீயோ என்னை வடநாட்டிற்கு அனுப்பினாய். இமாலயத்திற்கு அனுப்பினாய். நீ காட்டிய திசையில் சென்றேன். நீ காட்டிய வழியில் சென்றேன். நீ காட்டிய காட்சியைக் கண்டேன். நீ என் நாவில் வந்து பாடினாய். படாதபாடு படுத்தினாய். என்னை நாயகியாக்கினாய். பரகாலனை பரகால நாயகியாக்கி உன்மீது பரபக்தி கொண்டு உருக வைத்தாய். மடலேறுவேன் என்று என்னைக் கொண்டே உன்னை பயமுறுத்திக் கொண்டாய். இருப்பினும் நீ என்னை அலைய விட்டுக் கொண்டிருக்கிறாயே தவிர ஆட்கொள்ளவில்லை. எம் பெருமானே! என் பிராயம் தொண்ணூரைத் தாண்டி விட்டதை அறியவில்லையா? தேகம் தளர்ந்து விட்டதை உணரவில்லையா?" என்று கலங்கியவாறு பாசுரம் பாடினார் ஆழ்வார்.

"பண்டை நான்மறையும் வேள்வியும் கேள்விப்
பதங்களும் பதங்களின் பொருளும்
பிண்டமாய் விரிந்த பிறங்குஒளி அனலும்
பெருகிய புனலோடு நிலனும்
கொண்டல் மாருதமும் குரைகடல் ஏழும்
ஏழு மாமலைகளும் விசும்பும்
அண்டமும் தானாய் நின்ற எம்பெருமான்
அரங்கமா நகர் அமர்ந்தானே!"*

அரங்கன் அவரை ஆட்கொள்ளவில்லை.

"செல் பரகலா. செல். சென்று கொண்டே இரு. கலியனான நீ கலங்கலாமா? உன் அதரங்களால் போற்றப்படுவதற்கு இன்னும் எத்தனை பேர் காத்திருக்கிறார்கள் தெரியுமா? போய்ப் பாசுரங்களைப் பாடு. விண்ணகரங்களைத் திவ்ய தேசங்களாக்கு" என்றான் அரங்கன் அவரது அந்தராத்மாவில்.

அரங்கனின் ஆணையை என்றும் தட்டாத ஆழ்வார் தன் ஸ்தல யாத்திரையைத் தொடர்ந்தார். மதுரைக் கூடலழகர், திருமாலிருஞ்சோலைக் கள்ளழகர் என்று பாண்டிய நாட்டுத் திருப்பதிகளையெல்லாம் மங்களாசாசனம் செய்துவிட்டு மலைநாட்டிற்கும் (கேரள மாநிலம்) சென்றார். மேற்கு மலைத் தொடருக்கு அப்பாலிருந்த தலங்கள் சிலவற்றுக்கும் கடுமையான பயணத்திற்குப் பிறகு சென்று தரிசனம் செய்து பாசுர மழையினைப் பொழிந்தார்.

உடல் சோர்வு அதிகமாகிக் கொண்டே வந்ததால் மேலேமேலே தல விஜயம் செய்ய அவரால் இயலவில்லை. காதல் செய்து கடிமணம் செய்து கொண்ட மனைவி முதல் சுற்றம் அனைத்தையும் நீண்டகாலமாகவே அவர் துறந்திருந்தார். உறவல்லாத அந்த உறவுகளை அறுத்து எம்பெருமானுடனான உறவே உறவு என்றிருந்தார்.* நினைவெல்லாம் எம்பெருமானின் நினைவாகவே இருந்தது. அவனது திருவடிகளை எப்போது அடைவோம் என்று ஏங்கினாரேயன்றி எப்படியாவது அடைந்து விட வேண்டும் என்று அவர் எண்ணியதில்லை. அப்படி எண்ணியது செயல் பட்டதெல்லாம் இளமைக் காலத்தோடு முடிவடைந்து விட்டது.

மலைநாட்டு விஜயத்தை முடித்துவிட்டு மிகவும் தளர்ந்திருந்த போது அவரைத் திருக்குறுங்குடிக்கு வரும்படி அழைத்தான் எம்பெருமான். அதுவே எனது கடைசி விஜயமாக இருக்கட்டும் என்று கேட்டுக் கொண்டு திருக்குறுங்குடிக்குச் சென்றார் திருமங்கையாழ்வார்.

நாங்கு நேரியிலிருந்து களக்காடு வழியாகச் சென்றால் அடையக் கூடிய வைஷ்ணவ திருப்பதியை அடைந்தார் ஆழ்வார். பாண்டிய நாட்டுத் திருப்பதிகளுக்கு விஜயம் செய்த போது திருக்குறுங்குடிக்கு வந்து மங்களாசாசனம் செய்திருந்த அவர் தற்போது இரண்டாவது முறையாக வந்திருந்தார்.

வராக அவதாரம் கொண்ட பெருமாள் தன் பிராட்டியோடு இங்கே உள்ள குடிலில் தங்கிய காரணத்தால் குறுங்குடி என்று அழைக்கப்பட்ட இந்தத் திருக்குறுங்குடியில் இருந்த எம்பெருமான் ஆலயத்திற்கு அருகே வான்வெளியில் எமப் பட்டிணம் இருந்ததாகவும் அங்கே பேசுபவர்களின் உரையாடல்கள் அவ்வூர் மக்களுக்குக் கேட்டு வந்ததாம். ஒருமுறை

---

* 'தாயே தந்தை என்றும் தாரமே கிளை மக்கள் என்றும்
நோயே பட்டொழிந்தேன் உன்னைக் காண்பது ஓர் ஆசையினால்
வேய் ஏய் பூம் பொழில் சூழ் விரையார்.ர் திரு வேங்கடவா!
நாயேன் வந்து அடந்தேன்; நல்கிஆள் என்னைக் கொண்டருளே'

பெண்ணொருத்தியின் ஆயுள் முடியவிருந்ததால் எமதர்மன் கிங்கரனைத் திருக்குறுங்குடிக்கு அனுப்பி வைத்தானாம். அந்த உரையாடலைக் கேட்ட மக்கள் சம்பந்தப்பட்ட பெண்ணைப் பாதுகாத்து வந்தார்களாம். ஆனால் கிங்கரனான யமதூதன் பாம்பின் வடிவம் கொண்டு அப்பெண்ணின் உயிரைப் பறித்துச் சென்றானாம். இச்சம்பவத்திற்குப் பிறகு எமலோகத்தில் பேசப்படும் பேச்சுக்கள் எதுவும் பூலோக வாசிகளுக்கு கேட்கக் கூடாது என்று யமதர்மன் வேண்டிக் கொண்டதின் பேரில் யமலோக உரையாடல்கள் திருக்குறுங்குடியில் மக்களுக்கு கேட்காமல் போனதாம்.*

அக்கதையை நினைவூட்டிக் கொண்ட ஆழ்வார் தனது சீடர் தோலாவழக்கரைப் பார்த்து "நான் பூவுலகை விட்டுச் செல்லும் நாள் பற்றி யமப்பட்டினத்திலிருந்து ஏதாவது பேச்சு வருகிறதா என்று கேட்டுச் சொல்" என்றார்.

"சுவாமி! அதையேன் கேட்க வேண்டும்? எம்பெருமான் இருக்கிறாரே! அவரைக் கேட்டால் போதுமல்லவா?" என்றார் தோலாவழக்கர்.

"அவன் தான் திருவாய் மலர்ந்தருளாமல் இருக்கிறானே தோலாவழக்கா? மௌன விரதம் இருப்பவனிடம் என்ன கேட்க முடியும்?" என்று சொன்ன ஆழ்வார் "நடப்பது நடக்கட்டும்" என்று தீர்மானித்தவராய் பெருமாள் ஆலயத்திலேயே தியானத்தில் அமர்ந்தார். தியான நேரமானது நாளுக்கு நாள் அதிகமாயிற்று. அவர் பேசுவது மிகவும் குறைந்தது. ஆலயத்திற்கு வந்த மக்கள் அவரையும் வணங்கினார்கள்.

"என்னை வணங்காதீர்கள். என்னிடம் கொள்வதற்கும் கொடுப்பதற்கும் எதுவும் இல்லை. எம்பெருமான் ஒருவனே கொடுப்பவன். அதற்கு நாம் செய்ய வேண்டியது சரணாகதி மட்டும்தான். நிபந்தனையற்ற சரணாகதியைத் தவிர எம்பெருமானுக்கு வேண்டியது எதுவுமில்லை. இதை உணருங்கள். இதுவே உய்யும் வழி" என்று உபதேசம் செய்தார்.

திருக்குறுங்குடியிலேயே பல ஆண்டுகள் இருந்தார் ஆழ்வார். பேச்சைக் குறைத்துத் தியானத்தைக் கூட்டி இறைவனுடனான ஆத்ம பந்தத்தை உண்டாக்கிக் கொண்டார். அவர் மங்களாசாசனம் செய்த அறுபத்து ஒன்பது ஆலயங்களுக்கு உரிய பாசுரங்களை ஓலையில் படியெடுத்து வைத்திருந்த அவரது உத்தமச் சீடர்கள் அவற்றைத் தினமும் எம் பெருமானுக்கு முன் பாடினார்கள்.

ஆழ்வார் அதுவரை மங்களாசாசனம் செய்த இடங்கள் யாவும் அவர் நேரில் சென்று தரிசித்தவை.

ஒருநாள் அவர் நேரில் யாரும் கண்டறியமுடியாத எம்பெருமான் பள்ளிகொண்டிருக்கும் திருப்பாற்கடலையும், வீற்றிருக்கும் பரமபதத்தையும் பாடியருளினார்.

உலக வாழ்வில் இருக்கும் வரைக் காணமுடியாததும், உலக வாழ்வை நீங்கி எம்பெருமானின் திருவடிகளை அடையும் போது மட்டுமே காணக்கூடிய திருப்பாற்கடலையும் பரமபதத்தையும் ஆழ்வார் பாடியதால் அவர் திருநாட்டிற்கு எழுந்தருளும் நாள் நெருங்கிவிட்டதாகக் கருதிய சீடர்கள் கலங்கினார்கள்.

ஆழ்வாரைப் பிரிய மனமில்லாத காரணத்தால் அவரது சம்மதத்துடன் அவரது திருமேனி போன்று விக்கிரகம் ஒன்றைச் செய்தார்கள்.*

ஆழ்வாருக்குப் பிராயம் நூற்று ஐந்தாகியது.

திருக்குறுங்குடி ஆலயத்தை விட்டு அதற்கு கிழக்கே ஆற்றங்கரையில் இருந்த அரசமரத்தடிக்குச் சென்று அங்கே அமர்ந்தார் ஆழ்வார்.

சீடர்களும் பக்தர்களுமாய் நிறைய பேர் அவருக்கு முன்னால் கலங்கிய கண்களோடு அமர்ந்திருந்தார்கள்.

அரச மரத்திலும் ஆல மரத்திலும், விளா மரத்திலும், வேல மரத்திலும் அமர்ந்திருந்த பட்சிகள் கூட சப்தம் செய்வதை விட்டுவிட்டு அவரையே நோக்கிய வண்ணம் அமைதியாக இருந்தன.

வானத்திலே இருந்த வெண்ணிற மேகங்கள் மிகவேகமாக மறைந்து போய் வானத்தின் அடிப்பகுதியில் கருமேகங்கள் எழலாயின.

ஆழ்வார் தன் சீடர்களையும் பக்தர்களையும் கனிவோடு பார்த்தார். பிராயம் நூற்றுஐந்து ஆனாலும் அவரது கண்களில் மகான்களுக்கு உரிய ஞான ஒளி தீட்சண்யமாய் இருந்தது.

"யாரும் கலங்கக் கூடாது. பூமிக்கு வந்தவர்கள் எல்லோருமே ஒருநாள் தாம் வந்த வழியே செல்ல வேண்டியது தான். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நாள் என்று எம்பெருமான் நிர்ணயம் செய்திருக்கிறான். அதுதான் ஊழிக் காலத்திலிருந்து தவறாமல் நடந்து வருகிறது. நான் நூறாண்டுகள் வாழ்ந்ததே

---

* திருக்குறுங்குடியில் செய்யப்பட்ட இந்த விக்ரகம் பின்னாளில் இராமானுஜரால் திருநகரிக்குக் கொண்டு வரப்பட்டது. சோழநாட்டுத் திருப்பதிகளில் ஒன்றான திருவாலி – திருநகரியில் அந்த விக்ரகத்தை இன்னும் கண்டு தரிசிக்கலாம்.

சுமைதான். இந்தச் சரீரம் இனியும் சுமையைத் தாங்காது. அது விழும். விழ வேண்டும். அது விழுந்தாலும் நீங்களெல்லாம் அழாமல் இருந்து விழாமல் இருந்து எம்பெருமானின் அடியார்களாக ஆயுள் உள்ளவரை அவனை வழிபட வேண்டும்" என்றார் மங்கைவேந்தனான திருமங்கையாழ்வார்.

வானம் முழுவதும் கருமேகங்கள் சூழ்ந்த விதமானது அவரை வரவேற்று அழைத்துச் செல்வது போல் இருந்தது.

"நமோ நாராயணா" என்று ஆழ்வாரின் உதடுகள் கடைசியாக உச்சரித்தன. பிராணன் விடைபெற்றுக் கொண்டது. பரமாத்மாவை நோக்கி ஜீவாத்மா பயணப்பட்டது.

அடியார்கள் அழுதார்கள்.

அழமுடியாத பட்சிகள் கீச்கீச்சென்று கத்தின.

மங்கை வேந்தன் இல்லாத மேதினியில் இருக்க விரும்பாமல் பறந்து சென்றன.

அனைத்தையும் கண்டு அழுவது போல் மேகங்கள் மழையைப் பொழிந்தன.

மங்கை வேந்தனே!

மனிதவர்க்கத்தை உய்விக்க வந்த கலியனே! கருணாகரனே!

பரகாலனே!

பரந்தாமனின் பரந்த அன்பிற்கும் அருளுக்கும் ஆளானவனே!

ஆசு கவியே!

மாசில்லாத மாணிக்கமே!

ஞாலம் உள்ளவும் உன் புகழ் இருக்கும். இனிக்கும்.

நிறைந்தது

★★★

இந்த நாவலை எழுதுவதற்குத் துணைபுரிந்த நூல்கள்

1. ஆறாயிரப்படி குரு பரம்பராபாவம் - பின்பழகிய பெருமாள் ஜியர்
2. ஞானப் பரம்பரை (தொகுதி 3) - டாக்டர். அமுதன்
3. சோழர் வரலாறு - மா. ராசமாணிக்கனார்
4. காஞ்சி மாவட்டக் கலைகள் தொகுதி 2 - நடனகாசிநாதன் மா. சந்திரமூர்த்தி
5. தென்னிந்திய கோயில் சாசனங்கள் - தங்கைய நாயார்
6. காஞ்சிபுரம் மாவட்டத் தடயங்கள் - நடனகாசிநாதன்
7. தொண்டை மண்டலத்தில் பௌத்தம் - மூ. நீலகண்டன்
8. உலகக் கடல்கள் - சம்பந்தம்
9. காலந்தோறும் தமிழகம் - கா. கோவிந்தன்
10. நாகப்பட்டின மாவட்டத் தடயங்கள் - மா. சந்திரமூர்த்தி முத்து எதிராசன்
11. புதிய கல்வெட்டுத் துணைவன் - புலவர். வே. மகாதேவன்
12. வரலாற்றுத் திருகோணமலை - கனகசபாபதி சரவணபவன்
13. 108 வைஷ்ணவ திவ்ய தேச வரலாறு - ஆ. எதிராசன்
14. தென்னிந்திய வரலாறு - K.A. நீலகண்ட சாஸ்திரி
15. இலக்கிய சாசன வழக்காறுகள் - மு. ராகவய்யங்கார்
16. பன்னிரு ஆழ்வார்கள் - லிப்கோ
17. பன்னிரு ஆழ்வார்கள் - ஞான வைத்தியநாதன்
18. தில்லைப் பெருங்கோயில் - ச. மெய்யப்பன்
19. தில்லைப் பெருங்கோயில் வரலாறு - க. வெள்ளை வாரணன்
20. பல்லவர் வரலாறு - மா. ராசமாணிக்கனார்
21. ஆழ்வார்கள் காலநிலை - மு. ராகவையங்கார்
22. தமிழக வரலாறு - புலவர். குழந்தை
23. வரலாற்றில் பெண்ணாகடம் - ச. கிருஷ்ணமூர்த்தி
24. நாகப்பட்டிணம் - கோவை. இளந்தேவன்
25. பன்னிரு ஆழ்வார்களின் திவ்ய வரலாறு - மாருதி தாசன்
26. ஆழ்வார்கள் அருளமுதம் - ரெங்கநாயகி கள்ளபிரான்
27. ஊர்ப் பெயர்கள் உருவான வரலாறு - முத்து எத்திராசன்
28. தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் - கே. கே. பிள்ளை

29.	தமிழ்நாட்டு வரலாறு (பல்லவர் - பாண்டியர் காலம்)	-	தமிழ் வளர்ச்சித்துறை
30.	பௌத்தமும் தமிழும்	-	மயிலை. சீனி. வேங்கடசாமி
31.	மாமல்லை	-	ஆர். நாகசாமி
32.	திருமங்கை மன்னர்	-	பூ. ஜெயராமன்
33.	முத்தில் முகிழ்த்த முத்தரையர்	-	நடன காசிநாதன்
34.	வைணவ திவ்ய தேசங்கள் 108	-	தேவராஜன்
35.	தமிழ் இலக்கியம் சொல்லும் கதைகள்	-	மு. அருணாசலம்
36.	பல்லவர் காலத் தமிழ் இலக்கிய வரலாறு	-	ரா. மு. கோவிந்தராசன்.
37.	புதுக்கோட்டை மாவட்ட வரலாறு	-	ஜெ. ராசா முகமது
38.	அருள்மிகு லட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயில் வரலாறு (சோளிங்கர்)	-	
39.	திருமால்புரம்	-	ப. பூபாலன்
40.	தமிழகத்தில் தேவதாசிகள்	-	D.K. சதாசிவன்
41.	தேரிகாதை	-	அ. மங்கை
42.	வைணவமும் ஆழ்வார்களும்		தேவராஜன்
43.	சிறியதிருமடல் - பெரிய திருமடல் அகல உரை	-	கோக்கலைராஜன்
44.	ஆழ்வார்கள் போற்றிய ஸ்ரீரங்க நம்பெருமாளின் பாசுரங்கள்	-	க. ஸ்ரீதரன்
45.	நாலாயிர திவ்யப் பிரபந்தம் (உரை)	-	முனைவர். இரா. வ. கமலக் கண்ணன்
46.	பன்முக நோக்கில் நாலாயிர திவ்யப்பிரபந்தம்	-	-do -
47.	சைந்தமிழும் வைணவமும்	-	- do -
48.	கர்நாடகப் பயணம்	-	பரணிதரன்
49.	The Cholas	-	N.A. NilaKanta Sastri
50.	Administration an Social Life under Pallavar	-	Dr. Minakshi
51.	Pallavar of Kanchi	-	R. Gopalan
52.	Kanchipuram in early South Indian History	-	T.V. Mahalingam
53.	The Vaikunta Perumal Temple at Kanchipuram	-	D. Dennis Hudson
54.	The Body of God	-	- do -
55.	Vaikunta Perumal Temple and its Sculptures	-	Dr. Meenakshi

★★★

இந்நூலாசிரியரின் பிறநூல்கள்

		சரித்திர நாவல்
1.	பாண்டிய முரசு	do
2.	சிங்களப் புயல்	do
3.	வேள்வித்தூண்	do
4.	மயில்நிற மங்கை	do
5.	பல்லவ முரசு	do
6.	சோழ குலாந்தகன்	do
7.	மயில்கோட்டை	do
8.	ஆபுத்திரன்	do
9.	ஸ்ரீமுகன்	do
10.	வெற்றி வேந்தன்	do
11.	மானவர்மன்	do
12.	ரோமராஜ்யம்	do
13.	விஷ்ணுபல்லவன்	do
14.	பரிமேலழகன்	do
15.	கடல்கோட்டை	do
16.	மகாவம்சம்	do
17.	பராந்தகன் கனவு	do
18.	வேங்கை வாசல்	do
19.	கடம்ப வனத்துக் குயில்	do
20.	அராபியச் சேரமான்	do
21.	மேல் கோட்டை	do
22.	விஹாரமகாதேவி	do
23.	மௌரியப் புயல்	do
24.	நான்	சமூக நாவல்
25.	மனவிலங்கு	do
26.	வேத விலாசம்	do
27.	பொன் மொழிகள் 1000	do
28.	ஒளிரும் உண்மைகள்	do
29.	வேததத்துளி	do

★★★

மங்கை சிவத்தின்

உதயணன்

சாரதா அம்மையாரின் தொடர்கதை வெளியீடு





